No: 109141

முன்னுரை

ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்புதான் அமெரிக்கா இருள் நிலையிலிருந்து வெளியேறி உலக சரித்திரத்தில் ஒரு இடம் பெற்றது. வல்லரசுகளில் அது மிகப் புதியது; எனினும் பல அம்சங்களில் அதன் கதை மிக சுவாரசியமானது. முழு மனித வர்க்கத்தின் சமுதாய, பொருளாதார, அரசியல் நிறுவனங்களின் வளர்ச்சியை, இடைவெளிக் காலத்தைச் சுருக்கி, சிற்றடக்கமாக, நாம் அமெரிக்கச் சரித்திரத்தில் காண்கிறோம்; அது ஒரு ரசமான அனுபவம். தற்கால உலகத்திற்கு உருவளித்திருக்கும் பெரிய சக்திகள்—சாம்ராஜ்ஜிய வாதம், தேசியம், குடியிறக்கம், தொழில் யுக வாழ்வு, விஞ்ஞானம், சமயம், குடிநல வாழ்வு, சுதந்திர பாவம் முதலியன—அமெரிக்க சமுதாயத்தின் மேல் அலை மோதியிருக்கின்றன; அவற்றின் கிரியை பிரதிக் கிரியைகளை இதர தேச சரித்திரங்களைக்காட்டிலும் அமெரிக்கச்சரித்திரத்தில் குறிப்பாக கவனிக்க முடிகிறது. அமெரிக்கா யௌவன நாடாக இருந்தாலும் உலகத்தின் ஜனநாயக நாடுகளில் மிகப் புராதனமானது. மேலும்எழுத்தில் பதியப்பட்ட நிர்மாணச்சட்டமுள்ளவற்றில் அது மிகப் பழைய நாடு. இவையும் ரசமான விஷயங்கள். மேலும், ஆதியிலிருந்தே அதன் மக்களுக்கு—தாம் தனிச் சிறப்பு பெற்றவர், உலகத்தின் எதிர்கால வாழ்வை அமைப்பதில் தமக்கு ஒரு தனிக் கடமை காத்திருக்கிறது, மனித வர்க்கம் தம்மை நம்பி வாழ்கிறது, அந்த ஆசைகளையும் நம்பிக்கைகளையும் தாம் பூர்த்தி செய்யத் தவறியதில்லை—என்ற விழிப்பறிவு உண்டு.

பழைய நாகரிகமொன்று ஆதிகாலை இயற்கை நிலையிலிருக்கும் வனந்தரச் சூழ்நிலையை மோதுவதால் ஏற்படக் கூடிய நிகழ்ச்சித் தொடரே அமெரிக்காவின் கதை. இதர நாகரிகங்களின் வரலாற்றில் ஐயாயிர ஆறுயிர வருஷத்து ஆசாபாசங்களையும், வெற்றிகளையும், தோல்விகளையும் பால்ய கால நோய்களையும் காணலாம்; அமெரிக்க நாகரிகத்திலோ சிசுப் பருவமில்லாமல் நேரடியாக யௌவனத்தில் உதித்த ஒரு சமுதாயத்தைக் காண்கிறோம்; புது நாட்டிற்கு ஆதியில் வந்தவர்கள் காட்டுமிராண்டிகள் அல்ல, பல நூற்றாண்டு நாகரிகத்தின் வாரிசுதார்கள். ஆனால், பழைய உலகத்தின் தொடர்ந்த விஸ்தாரமே புது உலகம். பெரிய பழைய நூலின் ஒரு புது அத்தியாயம் மாத்திரமே அது எனக் கொள்ளலாகாது. குடியேறிய ஐரோப்பியர் எதிர்பார்த்தது, திட்டமிட்டது போலவே

அது ஒரு புது நூல். அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து பசிஃபிக் சமுத்திரம் வரைப்பரவி, புதிதாய் வருவோரைத் திடுக்கிடச் செய்து துன்பப்படுத்தும் வனப் பிரதேசம், அதுவரை மனிதனுக்கடங்க ஒப்பாத நதிகள், மலைகள், பொட்டல்கள், எல்லாம் அங்கு தங்கி வாழ்ந்த மனிதர்களைப் புது வழிகளில் இழுத்துச் சென்றன; பல ஜாதியாரும், பல நாட்டாரும் அங்கு கலந்ததால், அவர்களுடைய பண்பு திருத்தங்கள் பெற்றது. ஜாதிக்கலப்பு, சமயச் சகிப்புத்தன்மை, சமூக சமத்துவம், பொருளாதார வாய்ப்பு, குடி நலத்திற்கான அரசியல்—என்ற குறிக்கோள்களுடன் நிகழ்ந்த பல சோதனைகளில் அமெரிக்க ஆராய்ச்சி பெருமை பெற்றது.

ஐரோப்பிய சரித்திர ஆசிரியர்களும், யாத்திரிகர்களும் அமெரிக்க மக்களின் சிறப்புகளை ஒப்புக்கொண்ட போதிலும் அமெரிக்க சரித்திரம் விசேஷத் தன்மையற்றது, ரசமற்றது என்று அபிப்பிராயம் ஏற்பட்டு அங்கு மாறுதலோ, மென்மையான அழகோ, பண்புவளமோ இல்லையென வெகு காலம் கூறியதுண்டு. உண்மையில், நேர் எதிரிடையான நிலைதான் தென்படுகிறது; வீர வாழ்வு, சுவாரசியமான பின்னணி, உள்ளத்தை மகிழ்விக்கும் நிகழ்ச்சிகள் அங்கு மலிந்திருக்கின்றன. அதிகப் பலமற்ற ஒரு சிறு சமுதாயம் பெரிய கண்டம் முழுதும் வேகமாகப் பரவி விருத்தியடைதல், பல இன்னல்களுக்கிடையே தவித்த சில மனிதக் கூட்டங்கள் உலக வல்லரசுகளில் முதல் இடம் பெறுதல்—நம்ப முடியாத இவ்வற்புத நிகழ்ச்சிகளுக்கு உலக சரித்திரத்தில் இணை ஏது? அமெரிக்க மக்கள் கணவாய்கள் பழங்கால ஐரோப்பியக் கோட்டைமதில்கள் போல் கவிதை மயமானவை; அமெரிக்க ஊர்ப் பொதுக் கூட்டங்கள் மன்னர்களின் கொலு மண்டபங்கள் போல் கம்பீரமானவை; பழங்கால **நார்மன்**, **ஸாரஸன்** சூரர்களின் படையெழுச்சிக்கு எவ்வகையிலும் குறைந்ததல்ல கரையோர அமெரிக்கக் கூட்டங்கள் உள் நாட்டில் பரவிச் சென்று இயற்கையளித்த எதிர்ப்புகளை வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொண்டது; எந்நாட்டுப் பெரியார்களுடனும் ஒப்பிடக் கூடியவர்களே அமெரிக்க மாபெரும் தலைவர்கள்—**வாஷிங்டன்**, **ஜெ:பொஸன்**, **லிங்கன்** முதலியோர் என்று **ஆலன் நெவின்ஸ்**, **ஹென்ரி ஸ்டீல் கம்மாகர்** என்னும் இந்நூலின் நூலாசிரியர்கள் இதற்கு எழுதிய முகவுரையில் கூறியுள்ளனர். புதுச் சூழ்நிலையில் பழைய மக்கட் பிரதிநிதிகள் ஒரு புது நாகரிகத்தைச் சிருஷ்டித்த இவ்வினாங்கில வரலாற்றுச் சுருக்கத்தை மூல நூலின் கூறை சிறிதுகூடச் குன்றாமல், எளிய, தெளிவான, இனிய தமிழில் **திரு. எம். எஸ். கல்யாணசுந்தரம், B.A.** மொழி பெயர்த்துக் கொடுத்துள்ளார்.

—பதிப்பாசிரியர் :

அட்டவணை

அத்தியாயம்		பக்கம்
	முன்னுரை	3
1.	குடியேற்ற ஸ்தலங்களின் ஆரம்பம்	7
2.	காலனி யுகத்தின் சொத்து	31
3.	சாம்ராஜ்யப் பிரச்னை	59
4.	புரட்சி : ராஜ்யங்களின் ஐக்கியம்	82
5.	அரசியல் நிர்ணயத் திட்டம் அமைத்தல்	106
6.	ஜனநாயகம் உருவெடுக்கிறது	124
7.	தேச ஒற்றுமை எழுச்சி	137
8.	ஜான்ஸனின் ஜனநாயக முறை	151
9.	மேற்குப் பிரதேசமும் ஜனநாயகமும்	164
10.	வர்க்கபேதப் போராட்டம்	184
11.	சகோதர யுத்தம்	207
12.	தற்கால அமெரிக்காவின் பிறப்பு	222
13.	பெருவாரி வர்த்தகத்தின் வளர்ச்சி	242
14.	பாட்டாளிகளும் குடியிறக்கமும்	264
15.	மேற்கு நாடுகளின் முழு வளர்ச்சி	281
16.	குடியானவனும் அவன் பிரச்னைகளும்	292
17.	சீர்திருத்த யுகம்	310
18.	அகில உலக சக்தியாக உயர்தல்	332
19.	வுட்ரோ வில்ஸனும் உலக யுத்தமும்	352
20.	ஒரு போரிலிருந்து இன்னொரு போருக்கு	372
21.	இரண்டாம் உலக மகா யுத்தம்	406
22.	கெடுப்பிடிப் போர்	437
23.	போருக்குப் பிற்கால பிரச்னைகள் 1946-1952	470
24.	கொரியா யுத்தம்: ஐஸன்ஹோவர் ஜனாதிபதி	481
25.	ஐஸன்ஹோவர் நிர்வாகம்	498

தேசப் படங்கள்

படம்		பக்கம்
1.	வட அமெரிக்கக் கிழக்குப் பகுதி— ஆதி முன்னோடிகள் அடைந்த ஸ்தலங்கள்	... 21
2.	அமெரிக்காவில் குடியேற்றப் பிரதேசங்கள்	... 49
3.	அமெரிக்கப் புரட்சி	... 99
4.	மேற்கு முன்னேற்றத்தின் சாலைகள்— நீர்வழிகள்	... 147
5.	மேற்கு ஐக்கிய நாடு— அமெரிக்க முன்னோடிகள்	... 181
6.	ஐக்கிய ராஜ்யங்களின் அரசியல் விஸ்தாரம்	... 182
7.	அடிமை நிலையும் சமூகப் பிரிவுகளும்	... 203
8.	உள்நாட்டுக் கலகம்	... 215
9.	1920-ல் ஐக்ய ராஜ்யங்களில் அயல் நாட்டாரின் சதவிகிதம்	... 277
10.	முக்கியமான ரெயில் பாதைகள்	... 287
11.	இரண்டாவது உலக மகா யுத்தத்தில் முக்கிய ராஜ்யங்கள்	402—3
12.	கொரியாப் போர்	... 482

தேசப் படங்களிலுள்ள சுருக்கு வார்த்தைகளின் விளக்கங்கள்

[illegible]	அலபாமா	MO.	மிஸ்ஸௌரி
ARK.	ஆர்கன்ஸாஸ்	N.C., N.CAR.	வட கரோலினு
CONN.	கனெக்டிகட்	NH	வட ஹாம்ப்ஷயர்
DEL.	[illegible]வேர்	NJ.	நியூஜெர்ஸி
GA.	ஜ்யார்ஜியா	NY.	நியூ யார்க்
ILL.	இலினுய்	PENN.	பென்ஸில்வேனியா
IND.	இண்டியானு	RI.	ரோட் ஐலண்ட்
KY.	கெண்டகி	S. C., S.CAR.	தென் கரோலினு
LA.	லூஸியானு	TENN.	டென்னெஸி
MASS.	மாஸசுஸெட்ஸ்	VA.	வர்ஜீனியா
MCH.	மிச்சிகன்	VT.	வெர்மாண்ட்
MD.	மேரிலண்ட்	WISC.	விஸ்கான்ஸின்
ME.	மேய்ன்	WVA.	மேற்கு வர்ஜீனியா
MISS.	மிஸிஸிபி		

அத்தியாயம் 1

குடியேற்ற ஸ்தலங்களின் ஆரம்பம்

வட அமெரிக்காவின் இயற்கையமைப்பு: 1607-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் மனோகரமாகத் துவங்கியது— அன்றுதான் அமெரிக்க நாட்டில் ஆங்கிலேயக் குடியேற்றத்தின் வரலாறு ஆரம்பமாயிற்று. காப்டன் கிறிஸ்டோபர் நியூபோர்ட் புயலில் அடிபட்ட தன் மூன்று சுப்பல்களுடன செஸாபீக் விரிகுடாவை வந்தடைந்தான். கரைக்கு அனுப்பப் பட்ட அவனது ஆட்கள் "வனப்பு மிகக புல் வெளிகளையும், வளமிக்க வான் மரங்களையும் மலைப்புண்டாக்கும் தெள்ளிய நீர்ப் பிரவாகங்களையும்" கண்டு அதிசயித்தனர். இளமையும் எழிலும் ஊக்கமும் நிறைந்த நார்த்தம்பர்லண்டுக் கோமானது மகன் ஜ்யார்ஜ் பெர்ஸியும், காப்டன் ஜான் ஸ்மித்தும் கம்பீரமான காடுகளையும் புஷ்பக் கம்பளங்கள் விரித்த தரைகளையும் தம் தாய் நாட்டிலிருப்பதைக் காட்டிலும் நான்கு மடங்குப் பெரிதான ஸ்ட்ரா-பெர்ரி பழவகைகளையும், மிகச்சுவையுள்ள பருத்த சிப்பி மீன்களையும் வேட்டைக்கான சிறு பிராணிகளையும் கும்பல் கும்பலாக வான்கோழிக் கூடுகளையும் ஏராளமான முட்டைகளையும். இவைகளுடன், சிவப்பிந்தியரின் ஒரு ஊரையும், அவர்கள் அளித்த சோள ரொட்டியையும், செப்புக் கிண்ணிகளில் வைத்து களிமண் குழல்கள் மூலம் புகைக்கக் கூடிய ஓரிலையையும் கண்டனர். சிறிது காலத்திற்கு அப்புது நாட்டின் முதலனுபவங்கள் பரவசப்படுத்தின. (இங்கிலாந்தின் முதல் எலிஸபெத் ராணி விவாகம் செய்து கொள்ளாததால் அக்கன்னியைப் பாராட்டி அந்தப் பிரதேசம் கன்னி-நாடு என்ற கருத்துடன் 'வர்ஜீனியா'—Virginia—என்று பெயரிடப்பட்டது). வண்ண வண்ணப் பறவைகள், மரக்கனிகள், பெர்ரி பழக்கொடிகள், மினு மினுத் தசை மீன்கள், கண் கவரும் இயற்கைக் காட்சிகள்—முதலியவற்றை அந்நியராகிய தம்மவர் கண்டு ஆரம்பத்தில் களித்ததை பெர்ஸி "கவனக் குறிப்புகள்" (Observations) என்னும் தம் நூலில் எழுதியிருக்கிறார். ஆனால் கம்பீரமான கவிதை போன்ற அவரது வர்ணனைக் கடைசியில் கிறீச்சிடும் துன்பக் கூச்சலாக முடிவடைகிறது. ஏனெனில் சிவப்பிந்தியப் பூர்வ குடிகள் வாயில் வில்லைக் கௌவியவர்களாய், மலை முகடுகளி

லிருந்து கரடிகளைப்போல் நான்கு கால்களில் ஊர்ந்து வந்து புதிதாகக் குடியேறியவர்களைத் தாக்கியதையும், கடுமை மிக்க வீக்கங்கள், வெல வெலப்புகள், எரிக்காய்ச்சல்கள், எனப் பல கொடிய நோய்கள் தம்மவரைப் பீடித்ததையும், வெறும் பஞ்சத்தாலேயே பலர் மடிந்ததையும், அவர்களது உடல்கள் இறந்த நாயைப்போல் குடில்களிலிருந்து இழுத்தெறியப்பட்டதையும் கூட அவர் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவில் ஒரு புதிய சமுதாயத்தை வேரூன்றச் செய்வது வெறும் விடுமுறைக்கால விளையாட்டல்ல; கோரப் பிடிவாதமான, அசஹ்யமான, ஓய்வொழிச்சலற்ற, ஆபத்துக்கள் நிறைந்த ஒரு வேலை அது. கண் எதிரே கரடு முரடான தோர் மகா கண்டம்; மொத்தப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கான கிழக்குப் பகுதி சாலையறியாத ஒரு காட்டுப் பிரதேசம்; மலைகள், நதிகள், ஏரிகள் எல்லாமே மிக மிகப் பெரியவை; அதன் வட பகுதியில் குளிர்காலத்தில் கொல்லும் பனி; தெற்கே வேனிற்காலத்தில் தாங்க முடியாத வெப்பம்; காடுகள் குரூரமான விலங்குகள் நிறைந்தவை; கொடுமையும் வஞ்சமும் மிகளின் இருப்பிடங்கள். பல வகைகளில் அது முன் செல்லும் மனிதனைத் தடுத்து நிறுத்தும் பூமி; அங்கு வந்து சேருவதற்கான ஆபத்தான யாத்திரையில் பாதிப்பேர் இறந்துபோனால் ஆச்சரியமில்லை. எனினும், குறைகள் எவ்வளவிருந்தாலும், துணிந்து சுறுசுறுப்போடு முன்னேற விரும்பும் ஒரு சமுதாயத்திற்கு அது இயற்கை வசதிகளுள்ள தக்க குடியேற்ற ஸ்தலமே.

வட அமெரிக்கா ஏறக்குறைய முக்கோண வடிவமான ஒரு மகா கண்டம்; அதன் அகன்ற வட பகுதி நீர் வளமும் பலவகை நில வளமும் பெற்று, 26-வது முதல 55-வது அட்சரேகை வரை விரிந்து கிடக்கிறது. பல இடங்களில் ஆரோக்கியத்திற்கான பருவ நிலை திகழ்கிறது; வேனிற்கால வெப்பத்தில் நல்ல சாகுபடியுண்டு; குளிர்காலம் மக்களுக்கு சுறுசுறுப்பும் புது ஜீவனும் தரும். பழக்கமற்ற சூழ்நிலை என்ற சிரமம் அனுபவிக்காமல் ஐரோப்பியர் அங்கு குடியேற முடியும். கோதுமை, ரை, ஓட், மொச்சை வகைகள், கேரட் கிழங்கு, வெங்காயம் போன்ற தங்களது வழிவழி வந்த முக்கிய உணவுப் பொருள்களை அவர்கள் சுலபமாகப் பயிராக்கிக் கொள்ளலாம். அப்புது நாட்டில் மதிப்பு மிக்க சிறப்பு வாய்ந்த இரு உணவுப் பொருள்களை அவர்கள் கண்டனர்—மக்காச் சோளமும் உருளைக் கிழங்கும்! செவ்விந்தியத் தானியமான மக்காச் சோளத்தை மே மாதத்தில் விதைத்தால் ஜூலை மாதத்தில் பலன் தரும்—கதிர்களைச் சுட்டுத் தின்னலாம்; சோளத் தட்டு கால்நடைகளுக்கு உணவாகும்; அதன் செத்தை மக்களுக்குப்

படுக்கையாகும். எங்கும் வேட்டை மிக்க காடுகள்—லக்ஷக் கணக்கில் மான் வகைகள், காட்டெருமைகள்; வானத்தைக் கருமையாக்கும் யாத்திரைப் புறுக் கூட்டங்கள்; மீன் வகைகள் நிறைந்த கடலோரங்கள்; காலக் கிரமத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் பயனாக வேறெந்த நாட்டிலும் இல்லாத அளவு இரும்பும் நிலக்கரியும் பெட்ரோலியமும் வட அமெரிக்காவில் இருப்பது தெரிய வந்தது. எல்லையற்றவை எனக்கூடிய பெருங்காடுகள் அங்கு நிரம்பியிருந்தன. தாழ்ந்த கீழ்க்கரைப் பிரதேசத்தில் வளைகுடாக்களும் துறைமுகங்களும் வசதியான பல தங்குமிடங்களாயின; லெயின்ட் லாரென்ஸ், கனெக்டிகட், ஹட்ஸன், டெலாவேர், ஸஸ்கி ஹான்னு, படோமக, ஜேம்ஸ், பீ டீ, ஸவான்னு போன்ற அகன்ற நதிகள் உள் நாட்டுப் பிரயாணத்திற்கு வசதியளித்தன. அதிகப் பிரயாசையின்றி அந்நாட்டில் புதிய குடியேற்றத்திற்கு இடம்பெற்று எல்லையை விரிவாக்கிக்கொள்ள முடியும்.

அமெரிக்க நாட்டு வரலாற்றின் வருங்காலத்தை அதன் சிற்சில இயற்கை யமைப்புகள் வெகுவாக நிர்ணயித்தன. அட்லாண்டிக் கடற்கரையின் பற்பல குடாக்களும், உள்முகக் கழிகளு சிலச் சில பெரு நகரங்களுக்குப் பதிலாகப் பலப்பல சிறு குடியேற்ற ஸ்தலங்கள் அமைவதற்குக் காரணமாயின; நோவோஸ்கோஷியா, க்விபெக் உட்பட அத்தகைய 15 காலனிகள் வெகு சீக்கிரத்திலேயே ஏற்பட்டன; இவற்றினடியாகப் பல தரமான ராஜ்ய அமைப்புகளும் தோன்றின. ஒவ்வொரு ராஜ்யமும் அதனதன் தனிப்பட்ட குண விசேஷங்களைக் கட்டாயப் பிடியாகப் பற்றிக் கொண்டது. சுதந்திரம் வந்ததும், நாடு மேற் சொன்னவற்றில் 13 ராஜ்யங்கள் இணைந்த சமஷ்டியாகவே (ஐக்கியமான ஒற்றைத் தேசமாகவல்லாமல்) உருவெடுக்க வேண்டி வந்தது. கடலோரச் சமவெளிக்கப்பால் மேற்கே அகண்ட அபலாச்சியன் (Appalachian) மலைத்தொடர் வரியிட்டுத் தடையாக நின்றது. அம்மலைத் தொடரைக் கடப்பது மிகக் கடினமாக இருந்தமையால் மக்களில் பெரும் பாலோர் ஆதியில் சமவெளியிலேயே வாழ்ந்து வேரூன்றி வளம் பெற்றனர். பிற்காலத்தில்தான் வலுத்த முயற்சியுடன் அவர்கள் அம்மலைத் தொடரைக் கடந்து மேற்கே சென்றனர். அப்பொழுது அவர்கள் தம்முன் அகன்று கிடந்த மிஸிஸிபி நதியின் பாசன நிலமாகிய பெரிய மத்திய சமவெளியைக் கண்டனர். அதன் பரப்பு அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் சுமார் பாதியாகும்; மொத்த விவசாய விளைபொருள்களில் பாதிக்கு மேல் அவ்வெளியில்தான் உண்டாகிறது. அது அதிக ஏற்றத் தாழ்வில்லாத நிலப் பரப்பாகையால் போக்குவரத்து வசதி பெருகியது. தவிர, விஸ்கான்ஸின், அயோவா,

இல்லினுய், ஓஹியோ, கம்பர்லண்ட், டெனெஸி, ஆர்க்கன் ஸாஸ், ரெட் முதலிய நதிகள் கிழக்கு மேற்காகவும், மிஸி ஸிபி-மிஸௌரி நதிகளும், அவற்றின் உபநதிகளும் வடக்குத் தெற்காகவும் அச்சமவெளியில் பாய்வதால் பிரயாண சாத னங்கள் அங்கு மலிந்திருந்தன. அந்தச் செழிப்பான நிலத்தில் குடியேறியவர் வேகமாகவும் சுலபமாகவும் வேரூன்றினர். எனவே கடற்கரையோர மக்கள் யாவரும் அங்கு சரிசமான மாகக் கூடிப் பழகினர்; புது அமெரிக்கா, புதுக்குடிநல ஆட்சி முதலிய உணர்ச்சிகளுக்கு அதுவே இணைக்கும் சாதனமாக அமைந்தது; அவ்வுணர்ச்சிகள் கலந்து, வலுத்து, வளர்ந்தன.

மேற்கே, தொலைவில், உயரமான ராக்கி (Rocky) மலைத் தொடரை யொட்டி வளமற்ற பீடபூமி இருந்ததால் அப்பிர தேசத்தில் குடி முன்னேற்றம் அவ்வளவாக நடைபெற வில்லை: ஆனால் சமவெளிகளை முழுமையாகச் செவ்விந்தியர்களிட மிருந்து பறித்து ஆக்கிரமிப்பதற்கு நெடுங்கால முன்பே அதற்குமப்பால் பசிஃபிக் மலைச் சரிவில் கிடைக்கும் தங்கம் முதலான கனிப்பொருள்களை நாடிப் பல சாகஸ முன்னேடி கள் அங்கு சென்றனர். ஆரிகன் ராஜ்யமும், ஜன நெருக்கடி யும் வலிமையும் பெற்ற காலிஃபார்னியா ராஜ்யமும், வெறு மையான பெரும் நிலப் பரப்பால் ஆதிகால ஐக்கிய மாகா ணத்திலிருந்து பிரிக்கப்பட்டுக் கிடந்தன. ஆனால் வெறுமை யான அந்த இடைவெளி கவனிப்பாரற்று வெகுகாலம் கிடக்கவில்லை. காட்டெருமை வேட்டைக்காரர்களைப் பின் தொடர்ந்து ஆயர் மக்கள் அவ்விடை வெளியில் குடியேறினர். அத் துடன் ரயில் பாதைகளும் ஏற்பட்டு, மரங்களற்ற அந் நிலத்தை இவற்றி கொள்ளச் சாதனங்கள்—முள் வேலிக்கம்பி, விசைக் காற்றாடிகள், மரத்தூலங்கள், விவசாயக் கருவிகள் வகையரு—கிடைத்தும், ஜனத்தொகை அதிகரிக்கலாயிற்று. வேளாண்மை வானத்தை மாத்திரம் நம்பியிராமல், நீர்ப் பாசனக் கழனிகளும் தோட்டங்களும் அதிகரித்தன; 1890-ல் இடைவெளி எல்லைகள் மறைந்தன; மேலைக் காட்டுப் பகுதி இருந்த இடம் தெரியவில்லை.

ஆரம்ப முதலே அமெரிக்காவில் குடியேற்றம் கிழக்கி லிருந்து மேற்காகவே பரவியது: அது அவ்விடத்திற்கு இயற் கையாக ஏற்பட்டதொரு நிலை; அட்லாண்டிக் கரையிலிருந்து உள்நாடு செல்ல வசதியாயிருந்த ஸையிண்ட் லாரென்ஸ், க்ரேட் லேக் நீர்வழிகள் முதலியன சுமாராகக் கிழக்கு மேற் காகவே அமைந்தவை. வட அப்பலாச்சியன் மலைத்தொடரின் மோஹாக் பள்ளத்தாக்கும் கிழக்கு மேற்குப் பாதைக்கே உகந்திருந்தது. பிற்காலத்தில் அக்கணவாய் வழியாக வெட் டப்பட்ட ஈரி கால்வாய் கீழ் மேலாகவே வரியிட்டு நின்றது. குடியேற்ற வளர்ச்சிக்கு அனுகுணமான ஓஹியோ பள்ளத்

தாக்கும் பொதுவாக கீழ் மேலாகவே உள்ளது. ஆக, அட் லாண்டிக் சமுத்திரத்திலிருந்து ராக்கி மலைகள்வரை குடியேற் றப் பிரயாணிகள் நிரட்சரேகைக்கு இணையாக (கிழக்கு மேற் காக)ச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. லுஸியானுவி லிருந்து மீப்ரெஞ்சு ஆட்சியும், காலிஃபார்னியாவிலும் தென் மேற்குப் பிரதேசத்திலுமிருந்து மெக்ஸிகன் ஆட்சியும், ஆங் கிலம் பேசும் அமெரிக்கப் பிரவாகத்தின் முன் மண் கட்டி போல் கரைந்து மறைவதும் தவிர்க்க முடியாததே. ஆதிக் குடியேற்ற நாட்களிலேயே தீர்க்கதரிசிகள், "ஓஹியோ நதியை வசப்படுத்தியவரே மிஸிஸிபி பிரதேசத்தை வசப் படுத்துவர்" என்று ஊகித்தனர். அப்பிரதேசத்தை ஆக்கிர மித்தவர்கள் அதற்கும் மேற்கிலுள்ள நிலப் பகுதிகளையும் ஆக்கிரமிப்பார்கள் என்பதும் உண்மையே. அதிகப்படியான எண்ணிக்கையும் ஆற்றலுமுள்ள அமெரிக்கர் தங்கள் நாட்டின் இயற்கையமைப்பை வெகுவாகப் பயன்படுத்திக் கொண் டனர்.

வட அமெரிக்கச் செவ்விந்தியர் குறைந்த எண்ணிக்கை யும் பிற்போக்கான பண்பாடும் கூடியவர்களாக இருந்தது வெள்ளையர்களின் அதிர்ஷ்டமே; அவர்கள் பல இடையூறுகள் செய்தனர்; குடியேற்றத்தைத் தாமதப்படுத்தினர்; ஆனால் தடுத்து நிறுத்த முடியவில்லை. முதன்முதலாக ஐரோப்பியர் கள் வந்தபோது மிஸிஸிபியின் கிழக்குப் பகுதியில் இரண்டு லக்ஷம் செவ்விந்தியர்களுக்கதிகமாக இருந்திருக்க மாட்டார் களெனலாம். மெக்ஸிகோவுக்கு வடக்கே அமெரிக்கக் கண் டத்தில் எவ்வளவு அதிகமானலும் ஐந்து லக்ஷம் பேருக்கு மேலில்லை. வில்லும் அம்பும் டோமஹாக் என்னும் சிறு கோட ரியும் போர்க்கலையும் தவிர வேறு ஆயுதங்களின்றி, போர் முனையில் மறைந்திருந்து தாக்குதலைத் தவிர வேறொரு அணி வகுப்போ தந்திரமோ அறியாமல், செவ்விந்தியர்கள் பல ஆயுதங்கள் தாங்கிய பண்புள்ள வெள்ளை எதிரிகளிடம் தோல் வியுற்றதில் ஆச்சரியமில்லை. இயற்கை வசதிகளையும் வளங்க ளையும் அடக்கிப் பயன்படுத்திக்கொள்ள அவர்களுக்குத் தெரி யாது; வேட்டையும் மீன் பிடிப்புமே தொழில் ஆகையால், நிச்சயமற்ற சிரம ஜீவனமே அவர்கள் வாழ்க்கை முறை. மெக்ஸிகோவுக்கு வட பகுதியில் வாழ்ந்த 59 வம்ச பரம் பரைகளில் தோன்றிய நூற்றுக்கணக்கான உள் இனங்களைச் சேர்ந்த செவ்விந்தியர்களின் ஜனத்தொகை குறைவு; எனவே சக்தி வாய்ந்த பெரும் படைகளைத் திரட்ட அவர்கள் வசதி யற்றவர்கள். இரக்வாய் வம்சத்தைச் சேர்ந்த ஐந்து (பின் னர் ஆறு) இனங்கள் பலமான கூட்டு ஸ்தாபனத்தை அமைத் திருந்தன; அவற்றின் அரண் மேற்கு நியூயார்க் பிரதேசத்தி லிருந்தது; அவற்றினிடையே ஒரு பொது ஆலோசகர் குழுவு

மிருந்தது; அடுத்து வசித்த அல்கோன்கின் இனத்தார் அஞ்சும் வண்ணம் அவர்கள் அடாவடித்தனமாக நடந்து கொண்டனர். தென் கிழக்கில் உள் முகக் கழிகளில் வசித்த மஸ்கோகியன் வமிசத்தாரும் வலுவான சமஷ்டியைப் படைத்தனர்; வட மேற்கே வெகு தொலைவிலுள்ள மெஹிச் சம அரசியல் இணைப்பு அமைத்திருந்தனர்.

ஆரம்ப காலத்தில் வெள்ளையர்களுக்கும் செவ்விந்தியர்களுக்கும் இடையே நடந்த போராட்டங்கள் குறிப்பிடத்தக்க வகையில் படிப்படியாக பிரிக்கக்கூடியவை. என்று முதல் முதலாகக் குடியேற்றம் ஆரம்பமாயிற்றோ அன்றிலிருந்தே அங்கே ஆங்காங்கிருந்த பல சின்னஞ் சிறு சுதேச இந்திய இனங்களுடன் சச்சரவு தொடங்கிவிட்டது. நியூ இங்கிலாந்தில் பீக்வாட் இனத்தாருடன் நடந்த போர் ஒரு சிறந்த உதாரணமாகும்; 1637-ல் கனெக்டிகட் பள்ளத்தாக்கில் இருந்த அவ்வினத்தார் நிர்மூலமாக்கப்பட்டனர். 1622-ல் துவங்கி, வர்ஜீனியாவில் தங்கிய அமெரிக்கருக்கும் போவ்ஹாடன் இனத்தாருக்குமிடையே நடந்த சண்டை இன்னொரு உதாரணம். அதில் இந்தியர்கள் முழுத் தோல்வியடைந்தனர். ஆனால் புதுமையாக வந்த கொள்ளையர்கள் பெரும் நிலப் பகுதிகளைக் கைப்பற்றி முன்னேற முன்னேற அவர்களை எதிர்த்து நிற்பதற்காகப் பூர்வகுடிகள் தங்களுக்குள் நேச ஒப்பந்தங்கள் செய்து கொண்டு ஒன்று கூடினர். உதாரணமாக, பல முக்கியமான நியூ இங்கிலாந்து இனங்களின் இணைப்பு இரண்டு வருஷங்கள் வரை வீரத்தனமாகப் போர் புரிய முடிந்தது; கடைசியாக அவர்கள் நசித்தனர். வட கரோலினாவில் நடந்த டஸ்கரோரா சண்டையிலும் பல இந்திய இனத்தார் இணைந்து எதிர்த்தனர்; தென் கரோலினாவில் நடந்த யமாஸி எதிர்ப்பிலும் அவ்வாறே நிகழ்ந்தது. யுத்தங்கள் பெருவாரியாகவும் தீவிரமாகவும் தொடர்ந்து நடந்தன. வெள்ளையர்களுக்கேற்பட்ட ஆட்சேதமும் பொருள் நஷ்டமும் கொஞ்ச நஞ்சமல்ல.

கடைசியாக, வெள்ளையருடன் போராடச் செவ்விந்தியர்கள் வேறு வெள்ளையர்களையே துணைகொள்ளும்படியான நிலை வந்துவிட்டது. வட பகுதியினர் சிலர் ஃப்ரெஞ்சுக்காரர்களைத் துணைகொண்டனர்; தென்பகுதியினர் சிலர் ஸ்பானியர்களைத் துணைகொண்டனர். ஆனால், இவற்றிலெல்லாம் அதிர்ஷ்டகரமான விஷயம் என்னவெனில், இரக்வாய் இந்தியர்கள் ஆங்கிலம் பேசும் அமெரிக்கருடன் சிநேகமாக இருந்து ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு விரோதமாகப் பயன்படத்தக்க முறையில் உதவி புரிந்தனர். முடிவில் முன்னிரு நிலைகளைப்போலவே மூன்றும் கட்டத்திலும் விரோதிகளான பூர்வகுடிகள் முற்றிலும் முறியடிக்கப்பட்டனர்.

முதன் முதற் குடியேற்றம். பண்படுத்தப்படாத அப்புதிய கண்டத்திற்கு முதன் முதலாகக் குடியேற வந்த ஆங்கிலேயர்கள் துணிச்சலான கோஷ்டியினரே. 1607, மே 13-ம் தேதி க்றிஸ்டஃபர் நியூபோர்ட்டின் கப்பல்கள் ஹாம்ப்டன் துறையை அடைந்தபோது அவைகளிலிருந்தவர்கள் ஆண்கள் மட்டுமே. ஒரு கோட்டை, மாதர்கோயில், கிடங்கு, குடிசை வரிசைகள் முதலியவற்றுடன் அவர்கள் ஜேம்ஸ்டவுன் என்னும் ஒரு சிற்றூரை ஸ்தாபித்தனர். ஆபத்து நேர்ந்த சமயத்தில் உறுதியும், சமயோசித சாதுர்யமும், திறமையும் வெகுவாகக் காட்டிய காப்டன் ஜான் ஸ்மித், இரண்டாம் ஆண்டில் புதுக் காலனியின் ஜனாதிபதியாக—உண்மையில் சர்வாதிகாரியென்றே சொல்லலாம்—தேர்ந்தெடுக்கப்பட்டார். விவசாயம் மெதுவாக முன்னேறியது; 1612-ல் ஜான் ரால்ஃப் புகையிலைச் சாகுபடி ஆரம்பித்தார்; அது லண்டன் சந்தையில் அமித லாபத்திற்கு விலை போயிற்று; ஒவ்வொருவரும் புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டனர்; ஊர் சந்தைப் பேட்டையில்கூட புகையிலை பயிரிடப்பட்டது! பன்றிகளும் கால்நடைகளுங்கூட லாபகரமாய் வளர்க்கப்பட்டன. எனினும் முன்னேற்றம் மிக மெதுவாகவே நடைபெற்றது.

1619-ல் வர்ஜீனியாவில் 2,000 பேர்களுக்கும் குறைவாகவே வசித்தனர். அவ்வாண்டு மூன்று நிகழ்ச்சிகளால் சிறப்புப் பெற்றது. ஒன்று, இங்கிலாந்திலிருந்து 90 இளங்கன்னிகைகளை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் வந்தது; அவர்களது பிரயாணச் செலவுக்காக நூற்றிருபது பவுண்டு புகையிலை வீதம் தரக்கூடிய ஒவ்வொருவனும் ஒவ்வொரு பெண்ணை மனைவியாகப் பெறலாம். அக்கப்பலை மக்கள் வரவேற்ற களிப்பு மிருதியைக் கண்டு பின்னும் இத்தகைய பல கப்பல்கள் அனுப்பப்பட்டன. இரண்டாவது முக்கிய சம்பவம் அமெரிக்க மண்ணில் முதல் முதலாகப் பிரதிநிதித்துவ சபை ஏற்பட்டதே ஆகும். பல வருஷங்களுக்குமுன் போவ்ஹாடன் இனத் தலைவனின் பெண்ணான போகஹான்டாஸ் (Pocahontas) என்னும் வீராங்கனையை ஜான் ரால்ஃப் ஜேம்ஸ்டவுன் மாதா கோவிலில் மணந்து தற்காலிக சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தினர். (பெண்ணின் தகப்பனுல் மரண தண்டனை விதிக்கப் பெற்றிருந்த காப்டன் ஜான் ஸ்மித் அவ்விவாகத்தின் காரணமாக உயிர் தப்பினார்). அதே கோயிலில் ஜூலை மாதம் 30-ம் தேதி முதலாவது அமெரிக்க அரசியல் பிரதிநிதி சபை கூடிற்று. ஒரு கவர்னர், ஆறு ஆலோசகர்கள், பண்ணை ஒன்றுக்கு இரு நாட்டாண்மைக்காரர்கள் வீதம் பத்து விவசாயப் பண்ணைகளுக்கான ஆலோசகர்கள், ஆகியோர் குழுமினர். மூன்றாவது சம்பவம், ஆகஸ்ட் மாதத்தில் நீக்ரோ அடிமைகள்

ஏற்றிவந்த ஒரு டச்சுக் கப்பலே. அச்சமயம் இருபது அடிமைகள் குடியேற்ற மக்களுக்கு விற்கப்பட்டனர்.

வர்ஜீனியா இவ்வாறு முன்னேறும்போதே ஹாலந்தில் குடியேறிய இங்கிலீஷ் "கல்வின்" சம்பிரதாயத்தாரின் கூட்ட மொன்று புது உலகுக்கு வரத் தீர்மானித்தது அவர்கள் நாட்டிங்ஹாம் ஷயரிலுள்ள ஸ்க்ரூபி என்னும் கிராமத்தார். அரசரை சமயத் தலைவராக ஒப்புக்கொள்ளாத காரணத்திற் காக அவர்கள் விரட்டியடிக்கப்பட்டவர்கள்; ஒரு புதிய கிறிஸ் தவப் பிரிவு நிறுவ அவர்கள் விரும்பினார்கள். எவ்வகையிலும் அவர்கள் சிறந்த மனிதர்கள். அவர்களுக்குத் திறமை வாய்ந்த மூன்று தலைவர்கள் கிடைத்தார்கள். இவர்களைச் சார்ந்தவர்கள் யாவரும் ஊக்கமும் உறுதியும் ஒழுக்கமும் தைரியமும் தயையும் கூடியவர்கள்—இங்கிலாந்தின் பொது ஜன வெறுப்பை சகித்து சமாளித்தவர்கள்; ஹாலந்தில் தனி மையையும் ஓயா உழைப்பையும் தாங்கியவர்கள். இப்போது அமெரிக்காவில் குடியேற அரசாங்க அனுமதி பெற்றவர் களாய், எந்தத் துன்பத்திற்கும் தயாராகி, ப்லிமத் துறை முகத்திலிருந்து மேஃப்ளவர்—Mayflower—என்னும் கப்பலில் 102 பேர் புறப்பட்டார்கள். 1620-ல் (பழைய கணக்குப்படி) டிசம்பர் 11-ம் தேதி அக்கப்பல் மாஸசுஸெட்ஸ் கரையில் நங்கூரம் போட்டது. அந்த வருடம் பனி காலத்தில் கடுங் குளிராலும் இரத்த பித்தம் போன்ற நோயாலும் அவர்களுள் பாதிப்பேருக்கும் அதிகம் மடிந்தனர். அடுத்த வேனிற்காலத் தில் விவசாயம் நல்ல பலனளித்தது. அடுத்த மாதங்களில் மற்றொரு கப்பலில் அவர்களைச் சேர்ந்த பின்னும் பலர் வந்து கூடினர். பல இன்னல்களைக் கண்டும் அவர்களுடைய திட தீர்மானம் தளரவில்லை. ஒருமுறை கனெக்டிகஸ் என்னும் நாரகான்ஸெட் இனத் தலைவன் யுத்தத்திற்குச் சவாலாக பாம்புத் தோல் உறையில் அம்புக் கத்தையொன்று அனுப் பியபோது அவ்வுறையைத் துப்பாக்கிக் குண்டுகளால் நிரப்பி யுத்தத்திற்குத் தயார் என்ற எதிர்ச் செய்தியை அவர்கள் தைரியமாக அனுப்பினார்கள்.

அதன் பின்னர் அதிவேகத்தில் பல ஆங்கிலக் காலனிகள் கிளம்பின. 1629, மே மாதத்தில் ஒருநாள், யாவரும் சந்தோஷ ஆரவாரம் செய்ய, ஐந்து கப்பல்களில் 400 கால்நடைகள் லண்டனிலிருந்து மஸசுஸெட்ஸ் வளைகுடாவை நோக்கி வந்தன. வட அட்லாண்டிக் கடந்து அத்தனை மாடுகள் ஒரே தட வையில் அனுப்பப்பட்டதே கிடையாது. ஜான் எண்டிகாட்டும் அவனுடைய சில தோழர்களும் சேர்ந்து உண்டாக்கிய ஸேலெம் பட்டணத்தில் ஜூன் மாத இறுதியில் அவை வந்து சேர்ந்தன. அத்தோழர்கள் ப்யூரிடன் (Puritan) கிறிஸ்தவர்.

முதலில் அவர்கள் அரசாங்க ஆதரவு பெற்ற கிறிஸ்தவக் கொள்கைகளை சீர்திருத்திப் புனிதமாக்க விரும்பினர்கள்; பிறகு அவர்கள் முற்றிலும் தனி வழி சென்று வெளி நாடு களுக்குப் பெருவாரியாகக் கிளம்பினர்கள்.

1636-ன் வசந்தத்தில் ஜான் வின்த்ராப் 11 கப்பல்களில் 900 ஆட்களோடு ஸேலெம் பட்டணம் வந்தடைந்தார். அக் கூட்டத்தார் பாஸ்டன் உட்பட எட்டுப் புது நகரங்களை ஸ்தா பித்தனர். மாஸசுஸெட்ஸ் வளைகுடாக குடியேற்றம் வேகமாக வளர்ந்து தெற்கிலும் மேற்கிலுமாகக் கிளை விட்டு விரிந்தது. சமயத்தையும் அரசியலையும் பிரிக்கவேண்டுமென்றும் மற்றும் பல புரட்சிகரமான கருத்துக்களையும் பிரசாரம் செய்த ரோஜர் வில்லியம்ஸ் என்ற ஸேலெம் போதகர் வெறுங் காடான ரோட்ஸ் தீவுகளுக்குத் துரத்தப்பட்டார், அங்கு அவர் 1936-ல் சமயத்துறையில் தாராள மனப்பான்மை யுடைய ப்ராவிடென்ஸ் என்ற ஊரை உண்டாக்கினார். அதே ஆண்டில் ரெவரெண்ட் தாமஸ் ஹூக்கர் என்னும் திண்ணிய ரின் தலைமையில் கேம்ப்ரிட்ஜிலிருந்து கனெக்டிகட்டுக்கு முதன் முதலாகக் குடியேற்றக் கூட்டமொன்று சென்றது. 1634-ல் இரண்டாம் பால்டிமோர் கோமகனை ஸிஸிலியஸ் கால்வெர்ட் டின் தலைமையில் மேரிலண்டின் முதல் காலனி அமைக்கப்பட் டது. அங்கு சென்ற சீமான்கள் பெரும்பாலும் ஸ்தாபகரைப் போலவே கத்தோலிக்கர்கள்; பொது ஜனங்களோ பெரும் பாலும் சுவிசேஷமார்க்கத்தார்கள் அல்லது ப்ராடெஸ்டென் டுகள் (Protestants). எனவே சமயத்துறையில் தாராள மனப் பான்மை அவசியமாகியது. மேரிலண்டு சமய சகிப்புள்ள ராஜ்யமாயிற்று; பலமத சார்பினர்களை அது கவர்ந்தது. விரை விலேயே, 1650-க்குள், வர்ஜீனியக் குடிகள் ஆல்பி மார்லெ நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு வடகரோலினுவில் குடியேற லாயினர்.

ஒரு வளமான காலனியின் தலைமைப் படை வெற்றியா லேயே கிடைத்தது. 1609-ல் தேச ஆராய்ச்சிக்காக டச்சுக்கா ரர்கள் அனுப்பிய ஆங்கில மாலுமி ஹென்ரி ஹட்ஸன் இன்று அவர் பேரில் வழங்கும் அந்த நதிப்பிரதேசத்தை ஆராய்ந்தார். அவரைத் தொடர்ந்து டச்சு ரோம—சர்ம (Fur) வாணிபர்கள் அங்கு சென்றனர். 1624-ல் மான்ஹாட்டன் (Manhattan) தீவில் ஒரு சிறு டச்சுக் காலனி ஏற்பட்டது. நியூ நெதர்லண்ட் என்ற அந்த மாகாணம் நிதானமாகத்தான் வளர்ந்தது; அங்கு குடியாட்சி முறைகள் அமைக்கப் பெறவில்லை. இது இவ் வாறிருக்க, அமெரிக்கக் கடற்கரை முழுதும் தம்முடையது என்ற எண்ணத்தை ஆங்கிலேயர் மறக்க விரும்பவில்லை; கனெக்டிகட்காரர்கள் அக்கம்பக்க அந்நியர்களை வெறுத்தனர்.

பிரிட்டிஷ் அமெரிக்காவின் இதய ஸ்தானத்தில் அந்நியர் களுக்கு வேலை என்ன? மன்னர் இரண்டாம் சார்ல்ஸ் அப் பகுதிகளைத் தம் தம்பியான யார்க் கோமகனுக்கு அளித்தார். யார்க் பிரபு விறுவிறுப்புடன் எதிர்ப்பு நடவடிக்கை ஆரம் பித்தார். 1644-வேனிற் காலத்தில் மூன்று யுத்தக் கப்பல்கள் டச்சுக்காரரின் நியூ ஆம்ஸ்டர்டாமை அடைந்தன. அப்படை வீரரோடு கனெக்டிகட் படையும் சேர்ந்துகொண்டது. மாஸ சுஸெட்ஸும் லாங்க் ஐலண்டும் படைகள் உதவ வாக்களித் தன. கொடுங்கோன்மையினால் பரிதவித்த டச்சுக்காரர்களும் ஆட்சி மாற்றத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. எனவே, நியூ யார்க் என்ற புதுப் பெயர் பெற்ற அப்பிரதேசத்தின்மேல் பிரிட்டிஷ்கொடி பறக்கலாயிற்று. 1672-1674ல்நடந்தஆங்கிலோ டச்சுப் போராட்டத்தின்போது சிறிது காலம் தவிர மற்றப் படி அக்கொடி அங்கிருந்து அகலவேயில்லை: உண்மையில் கென்னெபெக்கிலிருந்து ஃப்ளாரிடா வரை எங்கும் பிரிட்டிஷ் கொடியே பறக்கலாயிற்று.

எனினும் 17-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில்தான் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்த ஒரு காலனி உருவாயிற்று. பிற் காலத்தில் பென்ஸில்வேனியா, டெலாவேர் என்ற பெயர்கள் பெற்ற பிரதேசங்களில் ஏற்கெனவே கூட்டங் கூட்டமாக ஆங்கிலேயர்களும் டச்சுக்காரர்களும் ஸ்வீடன்காரர்களும் குடி யேறியிருந்தனர். 1681-ல் வில்லியம் பென் (Penn) என்னும் பெரியார், தையும் முன் யோசனையும் உள்ளவர், ஃபிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த வால்டேரால் உண்மைக் கிறிஸ்தவர்கள் என்று பாராட் டப்பட்ட ''க்வேக்கர்'' (Quaker) சம்பிரதாயத்தார், அங்கு அதிகாரத்திற்கு வந்ததும் க்வேக்கர்களின் நெறிப் படியான ஒரு குடியரசு முறையை அமைத்தார். உதார மனப்பான்மை யுடனும் நேசபாவ ஒப்பந்தங்களாலும் அவர் செவ்விந்தியர் களைச் சமாதானப்படுத்தினார். போதிய நிலங்களும் வாழ்க்கை வசதிகளும் அந்நியோந்நிய பாவமும் கிடைக்குமென்று காட்டி அவர் பிற குடியேற்றக் குழுக்களை வகிகரித்தார். சமயச்சார் பில் பாரபட்சம் காட்டப்படமாட்டாது, பொது வாழ்வில் சட்டத் தொகுப்பே அரசன், அச்சட்டங்களை இயற்றுவதில் பொது மக்களுக்கும் பங்குண்டு என்றெல்லாம் அவர் தெரி வித்தார். அவரே பிலடெல்ஃபியா (Phil-adelphia) நகரை ஸ்தாபித்தவர்; அது ''சகோதர அன்பால் பிறந்து வளர்ந்த நகரம்''; ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் தோட்டமுண்டு; எனவே என்றும் அது ஆரோக்கியமளிக்கும் பசுமையான நக ரமாய் விளங்கும். 1682-ல் அவரே 100 குடியேற்ற மக்க ளுடன் வந்து பென்ஸில்வேனியாவை (Penn-sylvania) உரு வாக்கினார். அது அதிசயிக்கத் தக்க முறையில் வளர்ந்தது;

பல ஆங்கிலேயர்களையும் ஐரோப்பியர்களையும் தன்பால் ஈர்த் தது. அது 'க்வேக்கர்' லக்ஷியங்களைக் கைவிடாமல் நின்றது.

பொதுவாகச் சொல்லப் போனால் ஆங்கிலேயர்களையும் பிறரையும் குடியேற்றிப் புது ராஜ்யங்கள் அமைப்பதில் இரு பெரும் சாதனங்கள் உபயோகப்பட்டன. 1606-ல் லண்டன் வாசிகளைப் பங்குதார்களாகக் கொண்ட 'லண்டன் கம்பெனி' அமெரிக்காவில் 34°—41° அட்ச ரேகைகளுக்கிடையே குடி யேற அத்தாட்சி சாசனம் பெற்றது. வியாபார லாபத்திற் காக மட்டுமே ஏற்பட்டதாயினும் அதுவே 'வர்ஜீனியா', 'மாஸசுஸெட்ஸ்' காலனிகளை ஏற்படுத்தியது. அதே ஆண்டு ''ப்ளிமத் கம்பெனி'' 38°—45° அட்ச ரேகைகளுக்கிடையில் குடியேற்ற நாடுகள் ஸ்தாபிக்க அனுமதி பெற்றது. நிலங்களை விநியோகிப்பது, கனிப் பொருள்களைத் தோண்டியெடுப்பது, நாணயங்கள் அச்சிடுவது, தங்கள் பிரதேசங்களைப் படைப் பலம் கொண்டு காப்பது என்ற வகையில் அக் கம்பெனிகள் அதிகாரம் பெற்றிருந்தன. எனினும் சாசனமளித்த மன்ன ருக்கே அக்குடியேற்ற நாடுகள் சொந்தம். பெருத்த பண நஷ்டத்தின் காரணமாக 1624-ல் லண்டன் கம்பெனியின் சாச னம் ரத்து செய்யப்பட்டது. வர்ஜீனியா, அரசரின் நேரிடை யான ஆட்சியின்கீழ் வந்தது; ப்ளிமத் கம்பெனி வட பகுதி யில் பல சிறு காலனிகளையும், மீன் துறைகளையும் ஏற்படுத்தி யது; ஆனல் லாபமடையவில்லை. 1635-ல் அது தன் சாச னத்தை ரத்து செய்யும்படி கேட்டுக்கொண்டது.

லண்டன் கம்பெனி அல்லது ப்ளிமத் கம்பெனி லாப மடையா விட்டாலும் வெற்றிகரமாகக் காலனிகள் அமைப் பதில் அவை சிறந்த பணியாற்றின. வர்ஜீனியாவின் தாய் லண்ட ன் கம்பெனியே. ப்ளிமத் கம்பெனியும் அதைத் தொடர்ந்த நியூ இங்கிலாந்து கவுன்ஸிலும் மேயின், நியூ ஹாம்ப்ஷயர் மாஸசுஸெட்ஸ் பிரதேசங்களில் ஒன்றன் பின் ஒன்றுகப் பல ஊர்களை ஏற்படுத்தின. மூன்றுவதாக ''மாஸசுஸெட்ஸ் பே கம் பெனி'' என்ற ஒரு கூட்டுச் சங்கம் ஒரு தனித் தன்மை பெற் றிருந்தது; அமெரிக்க விகாசத்தில் அதற்கென ஒரு பணி காத் திருந்தது. அதன் பங்குதார்கள் பெரும்பாலும் ப்யூரிடன் கள்—(அதி தூய்மைக் கிறிஸ்தவர்கள் ப்யூரிடன்கள்) வியாபார லக்ஷ்யமும் தேசாபிமானமும் உள்ளவர்கள். முன்னிருந்த கம் பெனிகள் நஷ்டப்பட்டதைக் கண்டு ஊக்கம் குன்றுமல் சரியான கண்காணிப்பின்றியே அவை தோல்வியுற்றன என்று தீர்மானித்து அது தைரியமாக முன்னேறியது. 1629-ல் முதலா வது சார்ல்ஸ் மன்னர் அதற்குச் சாஸனம் வழங்கினர். ஆனல் ஆங்கில சமுதாயத்தைப் பாதிக்கும் எதிர்பாராத ஒரு நிலைமை இளம்பிற்று. ஆங்கில அரசரும் ஆர்ச்பிஷப் லாடும் அதிகார பூர்வக் கிறிஸ்தவ சம்பிரதாயத்தின் தலைவர்கள்

ஆனதும் பரதேசம் சென்றுவிட விரும்பினர். அவர்கள் வசம் சொத்திருந்தது, அந்தஸ்திருந்தது, சுதந்திர உணர்ச்சியிருந்தது; எனவே லண்டனிலுள்ள ஒரு கம்பெனிக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்ற நிலையில் மாஸசுஸெட்ஸ் போக விரும்பவில்லை. தவிர, பிறர் நிர்ப்பந்தமற்ற வகையில் தங்கள் மதக் கொள்கைப்படி கோயில் ஆட்சி நிறுவ அவர்கள் விரும்பினார்கள். அக்காரணங்களால் அக்கம்பெனியின் முக்கியமான பயூரிடன் பங்குதார்கள் கம்பெனியின் பங்குகள் யாவற்றையும் தாமே வாங்கி சாஸனத்துடன் அமெரிக்காவுக்குக் கிளம்பிவிட்டனர். இவ்வாறு வியாபாரக் குழுவாக ஆரம்பித்த கூட்டம் சுயஆட்சியுள்ள மாஸசுஸெட்ஸ் வனாகுடாக் காலனியாக மாறியது.

குடியேற்றத்திற்கு மற்றொரு தூண்டுதல் அரசாங்கத்தின் பூதான முறையே. செல்வர்களான பிரிட்டிஷ் கனவான்கள் இங்கிலாந்தில் போலவே அமெரிக்காவிலும் நிலம் பெற்றனர். பிறருக்குச் சொந்தமில்லாத நிலமனைத்தும் அரசனுக்குச் சொந்தம் என்ற பழைய ஆங்கிலச் சட்டம் இத்தகைய நில விநியோகத்திற்கு அனுமதியளித்தது. இவ்வகையில் மேரிலண்டு ராஜ்யம் இருக்கும் இடத்தை லார்ட் பால்டிமோர் பெற்றார்; பென் என்னும் ஒரு கடற்படை தளகர்த்தருக்கு அரசன் செலுத்த வேண்டிய ஒரு கடனுக்குப் பதிலாக அவர் மகன் அமெரிக்காவில் ஒரு இடம் பெற்றார். அங்குதான் பென்சில்வேனியா உருவாயிற்று; இரண்டாம் சார்ல்ஸுக்கு மிகவும் வேண்டிய சிலர் பெற்ற பிரதேசம் கரோலினா ஆயிற்று. இப்படி நிலம் பெற்ற சொந்தக்காரர்களுக்கு (Proprietors) அரசியலை நிர்ணயிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டது. ஸ்டூவர்ட் (Stuart) ராஜவம்ச யதேச்சாதிகாரத்தில் நம்பிக்கையுள்ள லார்டு பால்டிமோர் சட்டமியற்றும் பொறுப்பை மக்களுக்களிக்கத் தயாராயில்லை; எனினும், கடைசியாக, அவர் பொதுமக்கள் சபைக்கு அடிபணியவே நேர்ந்தது. பென் என்பவரோ அறிவாளி; 1682-ல் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதித்துவ சபையைக் கூட்டினார்; அரசியல் நிர்ணய உரிமையும் அதற்களித்தார். அச்சபையின் திட்டம் பெரும்பாலான அதிகாரங்களைப் பொது மக்களுக்கே அளித்தது; பென் அத்திட்டத்தை ஒப்புக்கொண்டார்.

அமெரிக்காவில் நம்பிக்கையுடன் வாழ்வில் முன்னேற முடியும் என்பதை அறிந்த பலர் தாமாகவே குடியேற்றத்திற்கு முன் வந்தனர். குடியேற்றங்கள் பல காரணங்களால் முன்னிட்டவை; தொடர்ந்து ஒரே நிதானமாயில்லாமல் நின்று நின்று நிகழ்பவை. முதலிரண்டு குடியேற்றப் பேரலைகள் மாஸசுஸெட்ஸுக்கும் வர்ஜீனியாவுக்கும் சென்றன. 1628 முதல் 1640 வரை இங்கிலாந்திலிருந்த பயூரிடன்கள் பல துன்


பங்களும், பயங்களும், மனத் தளர்ச்சியும் அனுபவித்தனர். அதிகாரிகள் மத விவகாரங்களைப் பழையபடி அரசனுக்கும் சர்ச் அதிகாரிகளுக்கும் கீழ் கொண்டுவர வேண்டியிருந்தது; சமயத் துறையிலும் அரசியல் துறையிலும் பெருங்குழப்பமாயிருந்தது. அரசர் பார்லிமெண்டைக் கலைத்துத் தம் முக்கியமான எதிரிகளைச் சிறைப்படுத்தினர். பத்து வருட காலம் பார்லிமெண்ட் இல்லாமலே அரசாங்கம் நடந்தது. பொதுமக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டன. எனவே பயூரிடன் சமயத்தார் இங்கிலாந்தை விட்டு அமெரிக்கா சென்று புது ராஜ்யம் ஸ்தாபித்தலே சிறந்த வழி என நினைத்தனர். 1628-40-க்கிடையில் வலிமை மிக்க 20,000 பேர் அமெரிக்காவை அடைந்தனர். ஆட்கள், கால்நடைகள், தட்டுமுட்டுச் சாமான்கள் முதலியன ஏற்றி குறைந்தது ஆயிரத்திருநூறு கப்பல்கள் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்தன. பாஸ்டன் உயிர்ப்புமிக்க ஆரவாரத்தோடு கூடிய சுற்றுப் புறங்களுடன் உலகத்தின் முக்கியத் துறைமுகங்களில் ஒன்றுயிற்று. ஹார்வர்டு கல்லூரி பிறந்தது. அன்று குடியேறியவர்களில் ஃப்ராங்க்லின், ஆடம்ஸ், எமர்ஸன், ஹாதார்ன், ஆப்ரஹாம் லிங்கன் முதலிய பிற்காலப் பிரமுகர்களின் மூதாதைகளும் இருந்தனர். பயூரிடன்கள் தனியாக அல்லது குடும்பங்களாக மட்டுமல்ல, பெரும் பெருங் குழுவினராகக் குடியேறினர் என்பது குறிப்பிடத் தக்கது. இங்கிலாந்தின் சில பட்டணங்கள் அரைவாசி காலியாயின. இவ்வாறு குடியேறியவர்கள் வியாபாரிகளும் குடியானவர்களும் மட்டுமல்ல—டாக்டர்கள், வக்கீல்கள், உபாத்தியாயர்கள், கடைக்காரர்கள், கலைஞர்கள், மத போதகர்கள் முதலிய யாவருமே. நியூ இங்கிலாந்து பழைய இங்கிலாந்தின் சிறிய, ஆனால் பூர்ணமான, உருவகமாகியது; அதில் பிற்கால முன்னேற்றத்திற்கான வித்துக்கள் நிரம்பியிருந்தது.

1642-ல் இங்கிலாந்தில் உள் நாட்டுக் கலகம் துவங்கியதும் பயூரிடன் வெளியேற்றம் குறைந்தது; ஆனால் "கேவலியர்" (Cavalier) வெளியேற்றம் சிக்கிரத்திலேயே துவங்கிற்று. சார்ல்ஸ் மன்னர் சிரச் சேதமடைந்த 1649-ல் அது உச்ச நிலையை எட்டி 1660-ல் இங்கிலாந்தின் அரசியல் உன்னமைப்பு வரை மும்முரமாகத் தொடர்ந்தது. பயூரிடன் குடியிறக்கம் நியூ இங்கிலாந்தின் ஜனத் தொகையை முப்பதினாயிரமாகப் பெருக்கிற்று. அது போலவே கேவலியர் குடியிறக்கம் 1670-ல் வர்ஜீனியாவின் ஜனத்தொகையை ஏறக்குறைய 40,000 ஆக்கிற்று. இக்காரணமாக நாட்டின் வளம் மிகவும் வளர்ந்தது. குடியிறங்கியவர்களில் சிறு பகுதியினரே கேவலியர்கள்; எனினும் அவர்களுள் பெரும்பான்மையோர் செல்வர்கள்; அவர்கள் விஸ்தாரமான நிலங்கள் வாங்கிச் சாகுபடி செய்தனர். முதலில் ஏழைகளின் ராஜ்யமாக இருந்த வர்ஜீனியா தனவந்தர்

ராஜ்யமாயிற்று. இக்கூட்டங்களில் அமெரிக்கச் சரித்திரத்தில் முக்கியத்துவம் பெற்ற பல குடும்பத்தினர் இருந்தனர். அவர்களுடன் ஏழைப் பணியாட்கள் பலர் சென்று தம் கடற் பிரயாணக் கட்டணத்திற்கு ஈடாகச் சிலகாலம் உழைக்கச் சம்மதித்தார்கள். அவர்களது உண்மையான செல்வம் சஞ் சலமற்ற யோக்கியதை, உழைப்பு, ஊக்கம், தன்னம்பிக்கை முதலியவைகளே.

சுய ஆட்சியின் உதயம்: எங்கு சென்றாலும் ஆங்கிலேயர் கள் தங்கள் பழமையான சுதந்திர தாகத்தை மறக்கவில்லை. இது வர்ஜீனியாவின் முதல் அரசியல் பிரகடனத்திலிருந்தே நன்கு தெளிவாயிற்று—குடியிறங்கியவர் யாவருக்கும் "நமது இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்தவர்களை போன்றே" சுதந்திர மும், வாக்குரிமையும், ரக்ஷணையும் உண்டு. மாக்ஞ கார்டா (Magna Charta) வின் பாதுகாப்பும், சாமான்ய சட்டங்களும் எல்லோருக்கும் பொதுவானவை; அடிப்படையான இக் கொள்கை மகத்தானதே. எனினும் இதை வற்புறுத்த மக்க ளின் தளராத கண்காணிப்புத் தேவையாயிற்று. சில சமயங் களில் கடுமையாகப் போரிடவும் நேர்ந்தது. ஆரம்பத்தி லிருந்தே அமெரிக்கர்கள் தனிப்பட்ட வகையில் அதிவன்மை யுடைய பிரதிநிதித்துவமும் பொருளாதாரப் பிணைப்பும் தனி மனித சுதந்திரமும் கூடிய ஒரு அரசியல் முறையை அமைக்க லாயினர்.

1619-ல் ஆரம்பமான வர்ஜீனிய சட்டசபை உடனடி யாகப் பல சட்டங்களை இயற்றியது. பிரிட்டிஷ் அரசர் வர்ஜீனி யக் கம்பெனியின் சாஸனத்தை ரத்து செய்தபோது, மேற் கூறிய சபை தொடர்ந்து ஆற்றலுடன் தன் காரியங்களைச் செய்தது. சில வருடங்களில் சுய உரிமையுடன் அது சில அடிப்படையான ஒழுங்கு முறைகளை வரையறுத்துக் கொண் டது. சபையின் அனுமதியின்றி கவர்னர் புது வரிகள் விதிக் கக் கூடாது, வரிப் பணத்தை சபையின் தீர்மானப்படியே செலவு செய்ய வேண்டும், சபையின் அங்கத்தினர்களை சிறை யிடக் கூடாது என்றெல்லாம் அது விதிகள் ஏற்படுத்தியது. சில காலம் கழித்து, சபை இயற்றும் சட்டங்களுக்கு விரோத மாக எக்காரியமும் நடைபெறக் கூடாது என்றும், நியாய ஸ்தல விவகாரங்களில் ஜூரர்களின் விசாரணைக்கு இடைஞ்சல் எதுவும் விளையக்கூடாது என்றும் அது தீர்மானித்தது. இங்கி லாந்தில் பொது மக்களாட்சி நடந்தவரை வர்ஜீனிய சட்ட சபையும் வலிமை பெற்றிருந்தது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இங்கிலாந்தில் ஸ்டுவர்டுகளின் ஆட்சி மறுபடி துவங்கியதும் அது பலஹீனமடைந்தது. அரசப் பிரதிநிதியான கவர்னருக்கு அடங்கியது சட்டசபை என்ற கொள்கைக்குப் பலமான எதிர்ப்பும் இருந்தது:



மாஸசுஸெட்ஸ் வளைகுடாப் பிரதேசத்திலும் பிரதிநிதித்துவ அரசியல் முறை வெகு சீக்கிரத்திலேயே ஏற்பட்டது. ஆனால் அதன் சாஸனப்படி ஜான் வின்த்ரோப்பும் அவரது பன்னிரு உதவியாளர்களுமே மக்களை ஆளும் உரிமை பெற்றிருந்தனர் என நினைக்க இடமிருந்தது. 1630-ல் குடியேற்றக் குழுவில் ஒரு பெரும் பகுதியினர் பொதுஜன அரசியல் சங்கத்தில் உரிமையாளராகத் தங்களையும் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினர். அவ்வேண்டுகோள் அடுத்த ஆண்டிலேயே அங்கீகரிக்கப்பட்டது; ஆனால் "பொது மக்கள் சபையில் நல்ல நாணயஸ்தர் மாத்திரமே இருக்கும் வண்ணம்" பிற்காலத்தில் "குறிப்பிட்ட சில சர்ச்சுகளில் தொடர்பு உள்ளவர்களே நிர்வாகக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவர்" என்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு அங்கு மத சார்புள்ள ஒரு அரசாங்கம் ஏற்பட்டது. அதே சமயத்தில், முற்கூறிய பன்னிரு வரும் சுதந்திர அங்கத்தினர்களின் விசேஷ வாக்காலன்றித் தம்மை எவரும் விலக்க முடியாதென்று ஒரு விதி ஏற்படுத்தினர். அவர்கள் கைக்குள் சட்டமியற்றுதல், நீதி வழங்கல், என எல்லா உரிமைகளும் சிக்கியிருந்ததால் அரசியலில் குறிப்பிட்ட சிறுபான்மையோரின் யதேச்சாதிகாரம் (Oligarchy) புகுந்து கொண்டது. கவர்னர், அவரது சகாயகர்கள், சமயக் குரவர்கள்—ஆகியோர் வசம் எல்லா அதிகாரமும் அடங்கியிருந்தது.

ஆனால், அதிர்ஷ்ட வசமாக, புரட்சி வரத் தாமதிக்கவில்லை. 1632-ல் வாடர்டவுன் வாசிகள் மீது தற்காப்பு வரி சுமத்தப்பட்டபோது பிரதிநிதித்துவமில்லாத குடிகள் வரி மறுப்புச் செய்தனர்—காரணம்: "தங்களையும் தங்கள் சந்ததிகளையும் அரசாங்கத்தின் அடிமைகளாக்க விரும்பாமையே." இந்நிலைமையைச் சமாளிக்கும் முயற்சியில் கவர்னர் ஒரு ஆலோசகர் குழுவை—நகரத்திற்கு இரு அங்கத்தினர் வீதம்—ஏற்க வேண்டி வந்தது; வரி விதித்தல் போன்ற காரியங்களில் அக்குழு கவர்னருக்கும், பன்னிரண்டு சகாயகர்களுக்கும் உதவியாக நிற்கும். இந்நிகழ்ச்சி உண்மையான ஒரு சட்டசபைக்கு அடிகோலிற்று. இப்பொழுது கவர்னரும், அவரது சகாக்களும் நகரப் பிரதிநிதிகளும் கூடிய ஒரு சட்டசபை உருப்பெற்றது. 1634-ல் இச்சட்டசபையே எல்லா அதிகாரங்களையும் ஸ்வீகரித்துக்கொண்டது; உரிமையாளர்களைச் சேர்த்துக் கொண்டது; ராஜ விசுவாசப்பிரமாணம் செய்வித்தது. இதுவே அமெரிக்காவின் இரண்டாவது பிரதிநிதி சபை. பின்னர் இச்சபை சரியானபடி வேலை செய்யாததால் பத்து வருடங்களுக்குப் பிறகு இதே மேல் சபை, கீழ் சபை என இரு சபைகளாகப் பிரிந்தது—கவர்னரும் பன்னிரு உதவியாளர்களும் மேல் சபையினராகவும், நகரப் பிரதிநிதிகள் கீழ் சபையினராகவும்

பிரிந்தனர். அரை நூற்றாண்டு வரை மாஸசுஸெட்ஸ் பகுதியில் சட்டசபையின் கீழ் ப்ளூடன் குடியாட்சி நடந்தது. 1691-ல் புதியதொரு சாசனப்படி அது அரசாங்கக் காலனியாக மாறியது; அப்போதும் சட்டசபையின் வலிமை குறைய வில்லை. அரசர் கவர்னரை நியமிப்பார்; மக்கள் சபையோரைத் தேர்ந்தெடுப்பார்கள்; பொக்கிஷம் சபையின் வசமிருந்தது.

இடையில் ரோட் ஐலண்டு, கனெக்டிகட் என்ற நிரந்தர மானக் குடியரசுகள் தோன்றின. முதன் முதலாக மாஸசுஸெட்ஸ் பேயிலிருந்து கனெக்டிகட் சென்ற மக்கள் அங்குள்ள மைதானங்களில் பல ஊர்கள் அமைத்தனர். 1639-ல் கனெக்டிகட் மகாஜனங்கள் ஹார்ட்ஃபர்டில் கூடி—அமெரிக்காவிலேயே—மேற்கு உலகத்திலேயே—முதல் முதலாக எழுத்து மூலமான அடிப்படை நிர்மாணப் பிரகடனம் இயற்றினர். அதன்படி ஒரு கவர்னரும் அவருடைய ஆலோசகர்களும் சேர்ந்து மேல் சபையாகவும், ஊர் ஒன்றுக்கு நால்வர் வீதம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர் கீழ் சபையாகவும் பணியாற்றுவதெனத் தீர்மானித்தனர். 1662-ல் ஸ்டுவர்ட் அரசாங்கம் மறுபடி அதிகாரம் பெற்றபின் கனெக்டிகட் அரசாங்க அத்தாட்சி பெற்றது. அதன் ஷரத்துக்கள் உதாரத்வத்தைக் காட்டின. அவற்றின்படி, தாய்நாட்டின் சட்டங்களுக்கு விரோதமில்லாதவரை அமெரிக்கப் பொது மக்கள் சகல ஆட்சி உரிமைகளும் பெற்றனர். ரோட் ஐலண்டும் இதே ஏற்பாட்டின் கீழ் வந்தது. அதன் ஊர்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்தபோது ரோஜர் வில்லியம்ஸ் பரிபூர்ண சுயாட்சி உரிமையளிக்கும் சாஸனம் அவற்றிற்கு வாங்கிக் கொடுத்தார். நியூ இங்கிலாந்தின் புனர் நிர்மாணத்தின்போது புதியதொரு சாஸனம் அவசியமாயிற்று. ஆனால் 1663-ல் அதற்குக் கிடைத்த சாஸனம் அதைக் கனெக்டிகட் போலவே. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட ஒரு குடியேற்ற நாடாக மாற்றிற்று; அமெரிக்கப் புரட்சிவரை அவ்விதமே அது இருந்தது. தனக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களைத் தானே தேர்ந்தெடுத்தும், தன் சட்டங்களைத் தானே நிர்ணயித்துக்கொண்டும் உலகத்திலேயே மிகவும் சுயேச்சை பெற்ற நாடோ என அது விளங்கிற்று.

1700-க்குள் பொதுவாக எங்கும் காலனி அரசியல் முறை உருவாகிவிட்டது; கனெக்டிகட்டும், ரோட் ஐலண்டும் தங்கள் உத்தியோகஸ்தர்களைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்த பூரண சுயேச்சையுள்ள குடியேற்ற நாடுகளாகத் திகழ்ந்தன. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அல்லது தனிப்பட்டவரது பொருளாகிய மற்றக் காலனிகளும் அநேகமாக மேற்சொன்ன அரசியல் திட்டத்துக்குள்ளாகவே தம்

காரியங்களை நடத்தின. கவர்னரை மன்னரோ பிரதேச நிலச் சுவான்தார்களோ நியமிப்பர். அவருக்கு ஒரு ஆலோசகர் குழு வுண்டு. மாஸசுஸெட்ஸைத் தவிர இதர இடங்களில் சபையின ரையும் மன்னரோ அல்லது நிலச் சுவான்தாரோ நியமிக்கும் வழக்கம் இருந்தது. கவர்னர் அநேகமாக எப்போதும் ஒரு பிரிட்டிஷ்காரரே. ஆனால் அவரது சகாயகர்கள் சாதாரணமாக அமெரிக்கப் பிரஜைகளே. பொதுவாக அவர்கள் செல்வர்கள் எனலாம்; இருந்தாலும் அவர்களுக்கும் கவர்னருக்குமிடையே அடிக்கடி அபிப்பிராய பேதம் ஏற்படுவதுண்டு. முதலில் சபையின் காரியக்கிரமம் அன்னூட நிர்வாகத்தையும், நியாய விசாரணையையும் பற்றியே இருந்தது; சிறிது சிறிதாக அதுவே மேல் சபையாக மாறிற்று. ஒவ்வொரு காலனியிலும் ஆஸ்தியுள்ள அல்லது வேறு வகையில் தகுதியுள்ள வயது வந் தோர்களது பிரதிநிதி சபைகள் தேர்தல் மூலம் ஏற்பட்டன. அந்தப் பொதுஜன சபைகளே சட்டமியற்றின, அரசாங்கச் செலவுகளையும் அனுமதித்தன, வரிகள் விதித்தன. 1689-க்குப் பிறகு பிரிட்டிஷ் பார்லிமெண்டை எந்த அம்சங்கள் வலுப் படுத்தினவோ அதே அம்சங்கள்—அதாவது, மக்களின் கருத் தைப் பிரதிபலிப்பது, நிதி நிலையை அடக்கி நிர்வகிப்பது— அமெரிக்கக் காலனிகளையும் வலிவுடையதாக்கின.

பிரதிநிதித்துவ சபைகளை நிறுவிக் கண்காணித்து வந்த தால் காலனிகள் தம் பிரஜைகளுக்கும் அவர்கள் வம்சத்தா ருக்கும் மிகப் பெரிய சேவை செய்தன. அவற்றின் அரசியல் திட்டத்து அடிப்படையான மூன்று திட்டங்கள் தனிச் சிறப் புப் பெற்றவை. முதலாவது, அமெரிக்கர் தங்கள் சுதந்திரங்க ளுக்கு உத்தரவாதமாக எழுத்துமூலமான சாஸனங்களுக்கு மிக உயரிய மதிப்பு அளித்தார்கள். இங்கிலாந்தில் அரசியல் அமைப்புவிதிகள் எழுத்தில் பதியப்படவில்லை. எனினும், ஆதியிலிருந்தே அமெரிக்கர் வியாபாரக் கம்பெனிக்கோ, நிலச் சுவான்தார்களுக்கோ, மக்களுக்கோ அரசாங்கம் அளித்த சாஸனங்களைப் புனிதமாகப் போற்றி வந்தனர். அடிப்படை யான லிகிதப் பத்திரங்கள் அமெரிக்க வரலாற்றில் மிகச் சிறப் பான இடம் பெற்றன. இரண்டாவது முக்கியமான விஷயம் கவர்னர்களுக்கும் சட்ட சபைகளுக்கும் இடையில் நேர்ந்த சச்சரவுகளே. இரு இனத்தாரும் எதிர்க் கட்சியினர் ஆகிவிட் டனர். கவர்னர் செல்வர்களின் உரிமைகளையும் அரசாங்க உரிமைகளையும் காத்து நின்றார்; சபைகள் பொது மக்களின் உரிமைகளையும் ஸ்தல உரிமைகளையும் காக்க விரும்பின. கடைசி யாகப் பிரதிநிதி சபைகளே வரவுசெலவுக் கணக்கை நிர்வகிக்க வேண்டும் என்று அவை வற்புறுத்தியதே குறிப்பிடத்தக்கது. அடிக்கடி தேர்தல் நடத்துதல், மன்னரின் அதிகாரிகளுக்கும் தமக்கும் சம்பந்தமில்லாமல் பார்த்துக் கொள்ளுதல்,

சபாநாயகர்களைத் தாமே தேர்ந்தெடுக்கும் உரிமை, அனைத்துக் கும் மேல் நிதி இலாக்காவில் பரிபூரண அதிகாரம்—எனப் பல உரிமைகளுக்காக அச்சபைகள் போராடின. விரோதம் பலமாக இருந்தது. எனினும் வழக்கமாகச் சபைகளே வெற்றியடைந் தன, வாய்ப்புக் கிடைத்ததும் தம் திறமையைக் காட்டின.

இதனால் பிரிட்டிஷ் காலனிகள் கொடுமைக்குட்பட்டிருந் தன என்று முடிவு கட்டுவது தவருகும். 17, 18ஆம் நூற்றாண்டு களில் உலகில் வேறெங்குமில்லாத அளவில் அவை அரசியல் சுதந்திரம் அனுபவித்தன எனப் பொதுப்படையாகக் கூறலாம். ஆனால் அங்கு வகுப்புவாரி அதிகாரங்களுக்கு எதிராக அவை போராட வேண்டியிருந்தது. நியூ இங்கிலாந்தில் சமயச் சார் பான சிலரின் ஓங்கிய கையைத் தாழ்த்த வேண்டியிருந்தது. தெற்கில் நிலச்சுவான்தார்களும் வியாபாரச் செல்வர்களும் அரசியல் யந்திரத்தை ஏகபோக உரிமையாகக் கைப்பற்ற முயன்றனர்.

அவ்வப்போது வகுப்புவாரிக் கொடுமைகள் சகிக்க முடி யாத முறையில் தலைவிரித்தாடின; காலனி மக்கள் அவற்றைத் தாக்கி அடக்கினர். 1676-ல் வர்ஜினியாவில் பேகன் புரட்சி மூலம் அத்தகைய முதல் தாக்குதல் நடந்தது. ஒப்பந்தப்படி வேலை செய்து முடித்த கூலியாட்கள், அயல் நாடுகளிலிருந்து குடியிறங்கி எல்லையோரக் கழனிகளில் சாகுபடி செய்யும் குடி யானவர், சிறுராசித் தோட்டக்காரர்கள், ஏராளமான பாட் டாளிகள், அடிமைக் கங்காணிகள், முதலியவர் தாம் துன்பப் படுத்தப்படுவதாகக் கருதினர். 1670-க்குப் பிறகு, நிலமற்றவ னுக்கு வோட்டுக் கிடையாது. இதர பல வழிகளிலும் அவர்கள் அரசியல் துறையில் வாயற்றிருந்தார்கள். பழக்கத்தினால், சபை கள் மாறுதலின்றி நீடித்த காலம் செயலாற்றினால் ஒரு சபை 1661-லிருந்து 1675-வரை பதினைந்து வருஷம் ஜீவித்திருந்தது. மன்னர் நியமித்த கவர்னருக்கும், பெரிய தோட்ட முதலாளி களுக்கும் அனுகூலமானவர்களுக்கே உத்தியோகங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. கல்வி பாமர மக்களுக்கு எட்டாப் பழ மாக இருந்தது. பூர்வகுடிகள் மூலம் ரோம—சர்ம வியா பாரத்தில் ஏகாதிபத்தியம் நிற்க கவர்னரும், அவருடைய சகாக்களும் அக்காட்டாட்சிகளுக்குத் துணை நின்றதால் சாதாரண மக்கள் செல்வந்தியத் தாக்குதல்களிலிருந்து தம்மைச் சரியாய்க் காத் துக்கொள்ள முடியவில்லை. வரிகள் அதிகப் பளுவாக இருந்தன. எல்லையோரத் தோட்டங்களிலிருந்து சந்தைப் பேட்டைகள் மிகவும் தள்ளியிருந்தன; புகையிலையின் விலை மிகவும் இறங்கிய போது விவசாயிகள் சொல்லொணாத் துன்பம் அனுபவித்தனர்.

கடைசியில், பாதுகாப்புக் குறைவான வாசஸ்தலங்களை இந்தியர் ஒரு முறை தாக்கியபோது மக்கள் திடுக்கிடும் விதத் தில் அரசாங்கத்தின் மேல் பாய்ந்தனர். அவர்கள் ரகுனைக்

காகக் கூக என்று முறையிட்டனர்; கவர்னர் பெர்க்கெலியும் கடலோரப் பணம் படைத்த முதலாளிகளும் நீட்டி வளைத்து நிதானமாகப் பதிலளிக்கவே அவர்கள் தம் வசமற்றுக் கோப மடைந்தனர். ஜேம்ஸ், யார்க் நதிகளின் மேல் பகுதிகளைச் சேர்ந்த சினங்கொண்ட ஆட்களுக்குத் தலைமை வகித்த நதான் யெல் பேகன் என்பவர் முக்கியமான ஒரு இந்திய அரணைத் தாக்கி 150 காட்டுமிராண்டிகளைக் கொன்றார். பிற்காலத்தில் அவர் வில்லியம்ஸ்பர்க் சபையில் அங்கத்தினராகச் சென்ற போது இறுமாப்படைந்த கவர்னர் அவரை சிறையிலிட்டான்; ஆனால் உடனேயே நதிக்கரை ஊர்களில் ஜனங்கள் கோபாவேசத்துடன் கிளம்பவே கவர்னர் அவரை விடுவிக்க வேண்டி வந்தது. உயிர்தப்பி ஓடிய பேகன் மறுமுறை அங்கு வந்தபோது, ஆயுதங்கள் ஒலிக்க 400 பேர் அவர் பின் நின்றனர். திடசித்த முள்ள அவ்விளம் தோட்டக்காரனைச் சந்திக்க பெர்கெலியும், ஆலோசகக் குழுவினரும் தலைமைக் காரியாலயத்திலிருந்து விரைந்து சென்றனர். பேகனை அணுகியதும் கவர்னர் தன் சொக்காயைத் திறந்து மார்பைக்காட்டி "இதோ சுடு! கடவுளறிய, குறி தவற முடியாது, சுடு" என்று கூவினான். ஆனால் பேகன், "கனம் பொருந்திய ஐயா, தங்களுக்கோ வேறெவருக்கோ இம்மியளவுக் கெடுதலும் செய்யமாட்டோம். இந்தியர்களிடமிருந்து எங்களைக் காக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டுக்காக நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்; பலமுறை வாக்களித்தீர்கள்; இம்முறை அதை அடைந்தே நாங்கள் திரும்புவோம்" என்றார். அவரைத் தொடர்ந்தவர் சட்டசபைக் கட்டடத்தின் பலகணிகளை நோக்கித் தம் துப்பாக்கிகளைக் குலுக்கி, "ஆம், நாங்கள் தற்காப்பு சாதனம் பெற்றே தீருவோம்" என்று ஒரு குரலாகக் கோஷித்தனர். அரை மணி நேரம் சபையை நோக்கிப் புயல் முழக்கத்துடன் சொற்பொழிவாற்றி, பேகன்—மக்களுக்குப் பாதுகாப்பும், பொது வரவு செலவுக் கணக்குகளின் முறையான தணிக்கையும், வரிக் குறைவும், இதர சீர்திருத்தங்களும் நடைபெற வேண்டுமெனக் கூறினார்.

ஆனால் அக்கிளர்ச்சி கோடைப் புயல்போல் வீசியைக்ளைப்பி விட்டுத் துரிதமாகப் புரண்டு நீங்கிற்று. கவி முக்கிபர்கெலியும் அவனுடைய சகாக்களும் திருப்திகரமாக வாக்களித்தார்கள்; ஆனால் அந்த வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றமாட்டார்கள் என்றே தீர்க்கதரிசிகள் கருதினார்கள். கவர்னர் உடனேயே அவசரகால மக்கட் படைகளைக் கூட்டி, 1200 பேரைத் திரட்டி, கலகக்கார பேகனை அடக்க உதவும்படி உத்தரவிட்டான். மக்கள் கோபத்துடன் முணு முணுவென்று பேசிக்கொண்டனர். படையினர் களத்திலிருந்து அருவருப்புடன் வெளியேறினர். பிரங்கமான சண்டை ஆரம்பமாயிற்று. பேகன் ஜேம்ஸ்டவுனைப் புயல்போல் தாக்கி அதை முற்றிலும் எரித்துச் சாம்பலாக்கினார்; ஜேம்ஸ் நதியிலிருந்த இருபது-பீரங்கிப் போர்க் கப்பலையும் அவர் கைப்பற்றினர். அந்நடவடிக்கை உக்கிரத்தை அடைந்தபோது அவர் மலேரியா ஜுரம் கண்டு இறந்தார்; கலகம் அதோடு படுத்துப்போயிற்று. அதன் ஆரம்பம் முற்றிலும் நியாயமானதே—சிறு குடியானவர்கள், பாட்டாளிகள், எல்லைப்புற வாசிகள் முதலியோர் காட்டு ஆட்களிடமிருந்து சமரக்ஷணையும், அரசியல் பொருளாதார அநீதிகளிலிருந்து விடுதலையும் கேட்டார்கள்; காலக் கிரமத்தில் அது அரசாங்கத்திற்கு எதிரான கலகமாக முடிந்தது. வஞ்சம் நிறைந்த பெர்க்கெலி, பேகனின் உதவி அதிகாரிகளுள் ஒருவனை ராணுவக் கைதியின்முன் ஏளனமாக வணங்கி, "மிஸ்டர் ட்ரம்மண்ட், தங்களுக்கு நல்வரவு, வர்ஜீனியவாசியாகிய வேறெவனைக் காட்டிலும் தங்களைத் தரிசித்ததில் எனக்குப் பரமானந்தம். மிஸ்டர் ட்ரம்மண்ட், இன்னும் அரைமணி நேரத்தில் தாங்கள் தூக்கிலிடப்படுவீர்கள்" என்று கொக்கரித்தான். கலகம் பிறக்கும்போதே இறந்துவிட்டது என்றாலும் எல்லைப்புற மனப்பான்மைக்கு—அமெரிக்க மனப்பான்மைக்கு—சுதந்திரபாவத்திற்கும் தம் கொள்கையில் தளராநம்பிக்கைக்கும்—அது என்றும் நினைவிருக்கக்கூடிய உதாரணமாயிற்று. அந்நிகழ்ச்சி மறக்கப்படவில்லை.

காலனிகளில் மதமும் அரசியலும்: அமெரிக்காவில் அரசியல் துறையில் சுதந்திர தாகம் அதிகரிக்கும்போதே சமயச் சிக்குத் தன்மையும் பெருகிற்று. ஆதி நாட்களிலிருந்தே பிரிட்டிஷ் காலனிகளில் பல சம்பிரதாயத்தினர் வசித்தனர்; அவர்கள் சமரஸமாக ஒத்து வாழக் கற்றனர்.

வர்ஜீனியாவில் குடியிறங்கிய முதல் கோஷ்டியோடு கூடவே ஆங்கில அரசாங்க ஆதரவு பெற்ற சமயாசார முறையும் அங்கு நடப்பட்டது. ஜேம்ஸ்டவுனில் கட்டப்பட்ட முதல் கட்டடங்களில் ஒன்று எளிமையான ஒரு மாதாகோவில்; நாடு வளர வளரப் புதுக்கோவில்களும் கோவில்பற்று (பாரிஷ்)களும் கிளம்பின; இங்கிலாந்தைப் போலவே அவை பொது மக்கள் செலுத்தும் வரியைக்கொண்டு நடத்தப்பட்டன. இது திரிர கோவில் பூசாரிகளுக்கு மான்யமாய் நிலம் கிடைப்பதாகவுமேற்பாடுண்டு; வேறு சில வரும்படிகளுக்கும் அவர்களுக்கு வாய்ப்புகள் இருந்தன. வர்ஜீனியா, மேரிலண்ட், தென் கரோலினா முதலான பல இடங்களில் மத ஸ்தாபனம் நன்கு நிலைத்திருந்தது.

இவ்வளவிருந்தும் வர்ஜீனிய சமய அமைப்புப் பொருளாதாரத் துறையிலோ, ஆத்மார்த்தமாகவோ, அறிவு மார்க்கத்திலோ செழித்துத் திருப்தியளிக்கவில்லை. சமுதாய, பொருளாதார நிலைமைகள் அதன் வளர்ச்சிக்குப் பிரதிகூலமாக இருந்தன. பல பாரிஷ்கள் சிற்றடக்கமாக இல்லாமல் மிகவும் பரவி

யிருந்தன; அங்கு ஜன நெருக்கமும் மிகக் குறைவாக இருந்தது. நெளிந்து நெளிந்து செல்லும் ஆற்றை எல்லையாகக் கொண்ட சிலவற்றின் மொத்தச் சுற்றளவு 30 முதல் 60 மைல் வரை இருந்தது. கோவில் செல்பவர்கள் பலர் படுமோசமான சாலைகளில் வெகு தூரம் பிரயாணம் செய்யவேண்டி யிருந்தது; அல்லது, நதிப்படகுகளில் மணிக்கணக்கில் பிரயாசைப் படவேண்டி யிருந்தது. இந்நிலையில் கோயிலில் ஆஜராதல் ஒழுங்கற்றிருப்பது சகஜமே; சர்ச் நிர்வாகக் கமிட்டியில் அங்கத்தினரான ஜ்யார்ஜ் வாஷிங்க்டன் கூடச் சௌகரியப்பட்ட போதுதான் கோயில் செல்ல முடிந்தது. கடுமையான பனிக் காலத்தில் போதகர் அநேகமாய் எல்லாப் பெஞ்சுகளும் காலியாய்க் கிடப்பதைக் கண்டு மனம் தளர்வார். 50 மைல் தூரம் பிரயாணம் செய்து சர்ச்சில் ஒரு சில பக்தர்களையே கண்டதாக ஒரு பூசாரி குறை கூறினார். ஜன அடர்த்தியற்ற பாரிஷ்களில் போதகரின் வசூலும் மிகக் குறைவு.

ஆதாயம் குறைவு, உத்தியோகம் நிரந்தரமில்லை, கடமையைச் செலுத்துவதில் பல இன்னல்கள்—இந்த ஸ்திதியில் திறமையும், தெய்வ பக்தியும், ஊக்கமுமுள்ள போதகர்களைப் பெறுவது எவ்வளவு கடினமான காரியம்! அதிகத் தகுதியுள்ளவர் இங்கிலாந்தை விட்டு வெளியேற மாட்டார்கள்; தாய் நாட்டிலேயே அவர்களுக்குக் கிராக்கி அதிகம். அப்படியாகக் காலனிகளுக்கு வெளியேறியவர்கள், அநேக சமயங்களில், மந்த புத்தியுள்ளவர்கள், சோம்பேறிகள், அல்லது சீலமற்றவர்கள் என்று தெரிய வந்தது. சீர்திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன; அவற்றுள் ஒன்று 1693-ல் துவக்கப்பட்ட "வில்லியும் அண்டு மேரி" என்ற பெயர் கொண்ட இரண்டாவது காலனிக் கல்லூரி; மதப்பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது அதன் முக்கிய நோக்கம்.

வர்ஜீனியாவிலும் தெற்கே இதர இடங்களிலும் ஆங்கில மத ஸ்தாபனம் பொது மக்களின் ஆதரவைப் பெற்றது; அது அரசியல் துறையில் தலையிடவில்லை. மாஸசுஸெட்ஸ், கனெக்டிகட் ஆகிய இடங்களில் பல பத்தாண்டுகளுக்கு ப்யூரிடன் மத ஸ்தாபனமும், ராஜ்ய நிர்வாகமும் ஒன்றே எனும்படி இருந்தன. அங்கு கடுமையான சமயக் கொடுங்கோலாட்சி நடந்து வந்தது என்றும் சொல்லலாம்.

ப்யூரிடன்கள் மாஸசுஸெட்ஸுக்கு வந்ததன் காரணமே சமயச் சார்புள்ள அரசாங்கம் அமைக்கத்தான்; சமயச் சுதந்தரம் காண்பதற்கல்ல. ப்யூரிடன்கள் மத விஷயத்தில் முற்போக்கானவர்கள் அல்ல. பழைய போக்கில் பற்றுள்ளவர்கள். இங்கிலாந்திலிருக்கும்போது அவர்களுக்கு ஆங்கில மதஸ்தாபனத்தில் நம்பிக்கை யிருந்தது; ஆனால் அதிகார வர்க்கத்தின் எல்லையற்ற சக்தியை மாற்றவும், கத்தோலிக ஆகம முறைகளை

நீக்கவும், ஞாயிறு விரதத்தை கண்டிப்பாய்ப் பூணும்படி செய்யவும், ஒழுக்க முறையைக் கறாராகக் கவனிக்கவும் அவர்கள் விரும்பினார்கள். தாய் நாட்டில் மதஸ்தாபனத்தை வசப்படுத்த முடியாமற் போனதும், அவர்கள் அமெரிக்க வனந்தரத்தில் தங்கள் தனி சமய முறையை நட்டு வளர்க்கத் தீர்மானித்தனர்; அந்த முறை பொது வரியால் வளரும், அரசியலுடன் இணைந்திருக்கும், எதிர்ப் பிரசாரத்தை சகியாது. அதன் அதிகாரம் எல்லாம் சில பிரமுகர்கள் கையில் இருந்தது; அவர்கள் இரும்பு மனம் படைத்தவர்கள், திறமைசாலிகள், தம் வழியே செல்லும் தர்ம மார்க்க மன்னர்கள்.

மாஸசுஸெட்ஸில் இவ்வாறு சமயச் சார்புள்ள அரசியல் உண்டானதில் நான்கு கட்டங்களுண்டு. ஒருவன் அந்தஸ்துடன் ஒரு ப்யூரிடன் சர்ச்சின் அங்கத்தினனாக இல்லாவிடில் அவனுக்கு வாக்குரிமையோ, உத்தியோகம் ஏற்கும் உரிமையோ கிடையாது என்பது அடிப்படையான முதல் நிபந்தனை. ஒவ்வொருவனும் கட்டாயம் ஆலயம் செல்ல வேண்டும் என்பது இரண்டாம் நிபந்தனை; காலனியில் நாஸ்திகர்களுக்கு இடம் கிடையாது என்பது நிச்சயமாயிற்று. ஒரு புது ஆலயத்தை அரசியல் ஸ்தாபனம், மதஸ்தாபனம் இரண்டும் அங்கீகரிக்க வேண்டும் என்பது மூன்றும் நிபந்தனை; மாஸசுஸெட்ஸில் ஓரிடத்திலும் நாஸ்திகர்களோ ஆட்சேபணைக்காரர்களோ போட்டிக்கான கோயில் ஆரம்பித்து விருத்தி செய்ய முடியாது; ப்யூரிடன் ரகத்திற்கு சிறிதளவும் முரணான ஆலயம் விரும்புவோர் அமெரிக்கக் கண்டத்தில் வேறெங்காவது செல்ல வேண்டும். கடைசியாக, அரசாங்கம் கோயில்களுக்குப் பண உதவி அளிப்பதால், கட்டுப்பாட்டுச் சிதைவு அல்லது கலக்கிளர்ச்சியை அரசாங்கம் மதத் தலைவர்களுடன் கலந்தாலோசித்துக் கடுமையாக அடக்கி தண்டிக்க முடியும். 1646-ல் ப்யூரிடன் சர்ச்சுகளின் உயர் சபை வெளியிட்ட ஒரு விதிப்படி ஏதேனும் ஒரு ஆலயத்தைச் சேர்ந்தவர் சபைக்கு அல்லது மதஸ்தாபன விதிகளுக்கு விரோதமாகக் கிளம்பினால் கோயிலின் குரு சம்பள நஷ்டத்துடன் நீக்கப்பட்டு அவன் ஸ்தானத்தில் வேறொரு குரு நியமிக்கப்படுவான்.

மாஸசுஸெட்ஸின் இந்தச் சமயச் சார்புள்ள அரசாங்கம் பூசாரிகளும் மாஜிஸ்டிரேட்டுகளும் சேர்ந்து நடத்திய ஆட்சியெனப் படிப்படியாக க்ஷீணித்துக்கொண்டே வந்து 1691 வரை அமுலிலிருந்தது; அப்பொழுது இங்கிலாந்தை ஆண்ட வில்லியம், மேரி இருவரும் சிறந்த ஷரத்துகள் கொண்ட ஒரு சாஸனம் அளித்து மாஸசுஸெட்ஸை மன்னரின் புது மாகாணமாக ஆக்கினார்கள். சமயச்சார்பு ஆட்சி தன் பெரிய சாதனையொன்றைப் பற்றிப் பெருமை கொள்ளலாம். அதாவது, தங்கள் கொள்கை-அரணுக்குள் இரண்டாம் சார்ல்ஸ் மன்னர் கால் வைக்க

முடியாமல் திடசங்கல்பமுள்ள ப்யூரிடன்கள் முரட்டுத் தீர்மானத்துடன் பார்த்துக் கொண்டார்கள். அதன் பலாபலன் அவர்களோடு நில்லாமல் புது உலகத்தில் அரசியல் சுதந்திரம் வளர்வதற்கும் மிகவும் உதவிற்று. அடுத்த நூற்றாண்டின் இறுதியில் கிடைத்த அரசியல் சுதந்திரத்திற்கு இந்த எதிர்ப்பு வழிகாட்டியாக அமைந்தது. ஆனால் கோயில் ஆட்சியில் பல தீமைகளும் இருந்தன. அது மிகவும் ஹிம்சிக்கும் கொடுங்கோன்மை; க்வேக்கர்களுக்கும் வேறு சிலருக்கும் அது வெட்கப்பட வேண்டிய முறையில் துன்பமும் நஷ்டமும் விளைவித்தது; சிந்தனையையும் பேச்சையும் அடக்கி அவற்றின் சுதந்திரத்தை எதிர்த்தது; "ஸேலெம் பட்டணத்துச் சூனியக்காரர்" என்ற புரளியின் காரணமாக ஆணும் பெண்ணுமாக 19 பேர் தூக்கிலிடப்பட்ட துக்ககரமான நிகழ்ச்சிக்கு ப்யூரிடன்களின் கோர ஆவேசம் ஒரு தூண்டுகோலாக இருந்தது; ஜனத்தொகை அடர்ந்து புதுச் சிந்தனைகள் வேரூன்றியதும் வலிமையுள்ள ஒரு உதாரக் கட்சி கிளம்பி பிற்போக்காளர்களை எதிர்த்துப் போராடிற்று. கோயிலாட்சி கூனிக்கத் தொடங்கி அமெரிக்காவுக்கு நல்ல காலம் பிறந்தது.

மாஸசுஸெட்ஸிலிருந்து வெளியேறிய ரோஜர் வில்லியம்ஸ் சமயசுதந்திரப் பிரசாரத்தில் முக்கியமான ஒருவர். வில்லியம்ஸ் இங்கிலாந்தின் கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலையில் உயர்தரப் படிப்புப் பெற்றவர், அதிகப் பக்தி சிரத்தையுள்ள கிறிஸ்தவர், கோவிலாட்சி என்னும் ப்யூரிடன் கொள்கையை அடியோடு எதிர்ப்பவர். மத விவகாரமும், அரசியல் விவகாரமும் கலக்கவே கூடாது, கோயிலில் ஆஜராகும்படி ஒருவரைக் கட்டாயப் படுத்துதல் மூடத்தனம், ஆட்சேபணைக்காரர்களையும் அமைதியுடன் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கை கொண்டவர். மாஸசுஸெட்ஸ் அதிகாரிகளால் இங்கிலாந்துக்குத் திரும்பிச் செல்லும்படி கட்டளையிடப்பட்ட வில்லியம்ஸ், பனி மலைகளைக் கடந்து ரோட் தீவுக்குத் தப்பியோடி விட்டார்; அவ்விடம் தம் கொள்கைகளுக்குகந்தது என்று அவருக்குத் தோன்றிற்று.

மத்திய நாட்டுக் காலனிகள் எல்லாவற்றிலும் ஆரம்பத்திலிருந்தே சமயாசாரச் சகிப்புத் தன்மை சகஜமாயிற்று. நியூ யார்க்கில் மாத்திரம் ஆங்கிலச் சர்ச் முறையை நிறுவ முயற்சி செய்யப்பட்டது; அங்கு அது அநேகமாகத் தோல்வியுற்றது எனலாம். மக்களில் பெரும்பாலோர் வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். "ப்ராடெஸ்டெண்டுகளைச் சமமாகவும் பரிபூர்ணமாகவும் சகித்துக்கொள்ளவேண்டும்" என்பதே மக்கள் நோக்கம் என்று அக்காலத்துச் சரித்திர ஆசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். யூதர்கள் தமக்கான கோயிலை (Synagogue) தம் செலவில் நடத்தினர். பென்ஸில்வேனியாவிலும், டெலவேரிலு

மிருந்த க்வேக்கர் காலனிகள் எல்லா சம்பிரதாயத்தாரையும் வரவேற்றன. கத்தோலிகர் துன்புறுத்தப்படவில்லை; ஸிலெடெல்ஃபியாவில் மாஸ் என்னும் முக்கியமான கத்தோலிக்க பூஜை பகிரங்கமாகக் கொண்டாடப்பட்டது. மேரிலண்டிலும், அவ்வாறே. 1649-ல் கத்தோலிக்கரும் ப்ராடெஸ்டெண்டுகளும் கலந்த ஒரு மகாநாடு "சகிப்பு விதி" என்ற தீர்மானத்தை நிறைவேற்றிற்று; மதாசார சுதந்திரத்தின் வரலாற்றில் அதற்கு முக்கியமான இடமுண்டு. கிறிஸ்தவர் அல்லாதவரையும் கிறிஸ்தவருள் ஏகேகக்கூர மத வாதிகளையும் அது கடுமையாக நடத்திற்று. ஆனால் கத்தோலிக்கரும் ப்ராடெஸ்டெண்டுகளும் பரிபூர்ண சமத்துவம் பெற்றவர். "மேரிலண்டு சகிப்பு விதி"யில் கருத்து நிறைந்த ஒரு வாக்கியம் காணலாம். "சகிப்பு மார்க்கமே ஞான மார்க்கம்" என்று அதில் எழுதப்பட்டிருந்தது; காலப்போக்கில் அவரவர் இஷ்டப்படித் தொழ விடுவதே நியாயவான்களும் அறிவாளிகளும் செய்யக்கூடிய காரியம் என்று பெரும்பாலோர் ஒப்புக் கொண்டனர்.

அத்தியாயம் 2

காலனி யுகத்தின் சொத்து

வளரும் அமெரிக்கத்துவம்: காலனி வாழ்க்கை நாட்களில் தனிச் சிறப்புள்ள அமெரிக்க தேசியம் வளர்ந்ததில் இரண்டு முக்கிய காரணங்கள் தூண்டுகோல்களாக விளங்கின; புரட்சியுத்தம் துவங்குவதற்குள் அந்தத் தேசிய குணம் நன்கு பக்குவமடைந்தது. பல தேசத்தாரின் கலப்பால் அமைந்த ஒரு புது ஜனத்திரள் ஒரு காரணமாகும். உழைப்பும் துணிவும் அர்ப்பணம் செய்து பதிலுக்கு செழிப்பாக வாழ், என்று கூவி அழைக்கும் வளமான, ஜன அடர்த்தியற்ற ஒரு புதிய நாடு மறு காரணம். 1775-க்குள் தன் சொந்த சமூக, பொருளாதார, அரசியல் குணச் சிறப்புகள் பெற்ற தனி அமெரிக்க சமுதாயம் உருவாகிக்கொண்டிருந்தது. சில அம்சங்களில் அது ஐரோப்பிய வாழ்க்கை மாதிரியை ஒத்தே இருந்தது: பாஸ்டனிலும் நியூ யார்க்கிலும் இருந்த வியாபாரிகளும், அறிவுத் துறையாளர்களும், ஆசாரிகளும் இங்கிலாந்திலிருந்த அவ்வினத்தாரைப்

போலவே தான் இருந்தார்கள். ஆனால் பெரும்பாலானவை அமெரிக்கர் தம் மூதாதையரின் ஐரோப்பியத் தாய் நாட்டின் வாழ்க்கை முறையிலிருந்து வேறுபட்ட வகையில் சிந்தித்தார்கள், பேசினார்கள், செயலாற்றினார்கள்.

ஆங்கில பாஷையும் ஆங்கில ஸ்தாபனங்களும் பிராதான்னியம் பெறும் முறையில் அமெரிக்கக் குடியிறக்கம் நடந்தது அந்நாட்டின் அதிர்ஷ்டமே; அக்காரணத்தால் நாட்டின் இணைப்பு சுலபமாயிற்று. ஜெர்மானியரோ, ஃபிரெஞ்சு ப்ராடெஸ்டெண்டுகளோ தனிக் காலனிகள் அமைத்துக்கொள்ளாமல் (அவ்வாறும் அவர்கள் செய்திருக்கலாம்), முதலில் வந்திறங்கிய பிரிட்டிஷாருடன் கலந்தனர்; அவர்களுடைய பாஷையையும் மனப்பான்மையையும் ஏற்றுக்கொண்டனர். ஹட்ஸன் பள்ளத்தாக்கில் இருந்த டச்சு அம்சத்தைப் பெருவாரியான ஆங்கில அம்சம் விழுங்கிவிட்டது. முன்னோர் அளித்துச் சென்ற பல ஜாதிய வேறுபாடுகளும், தற்காலத்தில் அடிப்படையான நிறுவனங்களிலும் மொழியிலுமுள்ள ஒற்றுமையும் சிரமமில்லாமல் நன்கு இணைந்தன.

அந்நாட்களில் பல இனத்தாரிடையே ஏற்பட்ட கலப்பின் பலாபலன்களை மிகைப்படுத்தியோ குறைப்படுத்தியோ நோக்கலாகாது என்பது முக்கியம். புரட்சி நடந்த சமயத்தில் காலனிகளைச் சேர்ந்த வெள்ளையருள் பத்தில் எட்டுப் பேர் அல்லது ஒன்பது பேர் பிரிட்டிஷ் ரத்தம் கொண்டவர். இருந்தபோதிலும் பத்தில் ஒன்று அல்லது ஒன்றரைப் பங்காகிய டச்சு, ஜெர்மன், ஃபிரெஞ்சு முதலான ஐரோப்பிய ரத்தத்தை அசட்டை செய்வதற்கில்லை; அதற்கு மூக்கியத் துன்மையுண்டு. குடியிறக்கத்தின் முதல் பேரலைகள் இங்கிலாந்திலிருந்து கிளம்பி, நியூ இங்கிலாந்திலும் தெற்கே தாழ்ந்த நிலங்களிலும் வந்து ஓய்ந்தன; அப்பிரதேசங்கள் அநேகமாய் ஆங்கிலப் பிராதான்னியம் பெற்றிருந்தன. ஆங்கிலப் பிரவாகம் தொடர்ந்து பாயும்போதே, ஐரோப்பாவிலிருந்து இரு பெரும் அலைகள், ஜெர்மன் அலை, ஸ்காட்ச்-ஐரிஷ் அலை, 18ஆம் நூற்றாண்டில் கிளம்பின.

ஜெர்மன் குடியிறக்கந்தான் முதலில் முக்கியமாக இருந்தது. மேற்கு ஜெர்மன் பிரதேசத்தில்—முக்கியமாக ரைன் லண்டில்—துன்பமும் அதிருப்தியும் மலிந்திருந்தன. 14ஆம் லூயியின் நாசகாரிச் சேனைகள் சொல்லொணாக் கொடுமைகள் நிகழ்த்தின. லூதெரன் கிறிஸ்தவரும் இதரப் பிரிவினரும் சமயக் குரவர்களால் மிகவும் துன்பப்படுத்தப்பட்டனர்; ஜெர்மன் சிற்றரசர்களின் அரசியல் கொடுங்கோன்மையும் சேர்ந்துகொண்டது. ஆன் (Anne) ராணியும் அவளுக்குப் பின் வந்த அரசர்களும் பிரிட்டிஷ் கொடியின்கீழ் ரக்ஷணையும் சமயச் சுதந்திரமும் அளித்தபோது பல்லாயிரக் கணக்கில்

ஜெர்மானியர் இங்கிலாந்திலும், பிரிட்டிஷ் காலனிகளிலும் சரண் புகுந்தனர். 1683-லேயே ஒரு வழிகாட்டி கோஷ்டி வில்லியம் பென்-னின் பிரதேசத்திற்கு வந்தது; அவர்கள் நிறுவிய ஜெர்மன்டவுன் ஒரு தொழில் ஸ்தலமாக வளர்ந்தது. அமெரிக்காவின் முதல் காகித சாலை அங்குதான் ரிட்டென் ஹௌஸ் குடும்பத்தாரால் அமைக்கப்பட்டது; பீர் (beer) காய்ச்சப்பட்டது; துணி நெய்யப்பட்டது. ஆனால் 1700-க்குப் பிறகு தான் உண்மையான பிரவாகம் ஆரம்பித்தது. சிலர் நியூயார்க்கில் மோஹாக் பள்ளத்தாக்கு சென்றனர். சிலர் நியூ ஜெர்ஸியில் நியூ ப்ரன்ஸ்விக் சென்றனர்; பெரும்பாலோர் பென்ஸில்வேனியா சென்றனர். காலக்ரமத்தில் ஒரே ஆண்டில் பல ஆயிர ஜெர்மானியரும், ஸ்விஸ் ஜாதியாரும் அமெரிக்காவுக்கு வந்தனர்.

அந்தப் பெருக்கத்தைக்கண்டு பென்ஜமின் ஃப்ராங்க்லின் பென்ஸில்வேனிய ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு ஜெர்மானியர் என்று மதிப்பிட்டார். பரவலான பல இடங்களில் ஆங்கிலம் பேசப்படவில்லை எனலாம்; 1739-ல் ஜெர்மன் டவுனில் ஒரு ஜெர்மன் செய்திப் பத்திரிகை வெளியாயிற்று. லூதரன், மொரேவியன், மென்னோட், யூனெடெட் ப்ரெத்ரன் போன்ற மதப்பிரிவினர் பல இடங்களில் வாசஸ்தலங்கள் அமைத்துக் கொண்டனர். பாரன் ஸ்டூகெலின் இரும்பு உலையும், கண்ணாடி ஆலையும் பிரசித்தி பெற்றன; ஸவ்ர் என்பவரின் அச்சாலையும் அவ்வாறே கியாதி அடைந்தது. ஆனால் ஜெர்மனியரில் பெரும்பாலோர் சிக்கனமறிந்த விவசாயிகள்; அவர்களுடைய கடினமான உழைப்பு பென்ஸில்வேனியாவின் சுக்கான் பிரதேசத்தைப் பெரிய கோதுமைக் களஞ்சியமாக மாற்றிற்று. அவர்கள் புது வழி செல்ல அவ்வளவாகத் தயாராக இல்லை; பண்படைந்து பாதுகாப்புள்ள இடத்திலேயே நிலம் வாங்க விரும்பினர்கள். காட்டை அழித்து நிலத்தை நன்றாய்ச் சுத்தம் செய்தார்கள்; வீடு கட்டுவதற்கு முன் பெரிய பண்டகசாலைகள் கட்டினர்கள்; உணவுக்கான அவர்களுடைய மிருகங்கள் கொழுகொழுமினுமினுவென்றும், அவர்களுடைய வேலிகள் உயர்ந்தும் திடமாயுமிருந்தன. சிக்கன வாழ்க்கை நடத்தி மிச்சம் பிடித்து அவர்கள் கூடியவரை தம் வீடுபொருள்களை விற்றார்கள். பெண்களும் வயல் வெளிகளில் உழைத்தார்கள். பல குழந்தைகள் பெற்றுப் பெருங் குடும்பங்களை வளர்க்கவும் செய்தார்கள்.

ஸ்காட்ச்-ஐரிஷ் (ஸ்காட்லாந்திய, அயர்லாந்திய) குடிகள் அதிகத் தென்பும் துணிச்சலுமுள்ளவர்கள்; பென்ஸில்வேனிய ஷெனண்டோவா பள்ளத்தாக்கு, கரோலினுவின் மேட்டுஸ்தலங்கள் ஆகிய இடங்களில் அவர்களே முன்னோடிகளாக விளங்கி

னர்கள். அவர்களும் தாய்நாட்டில் துன்பம் தாங்காமல் ஓடி வந்தவர்கள். அயர்லாந்தில் ஆங்கில சர்ச் அவர்களைத் தொல்லைப்படுத்திற்று; அயர்லாந்திய நெசவுத் தொழிலுக்கு விரோதமான ஆங்கிலச் சட்டங்களும் அவர்கள் வாழ்க்கையைப் பாழாக்கின. கப்பல் கப்பலாக வந்திறங்கிய அவர்கள் கடுமையான ஆங்கில விரோதிகள். அவர்களுள் ஐரிஷ் அம்சத்தைக் காட்டிலும் ஸ்காட்ச் அம்சம் அதிகம்; முன் ஒரு நூற்றாண்டில் அல்ஸ்டரில் வந்து குடியிறங்கிய ப்ரெஸ்பிடர் சம்பிரதாயத்தாரே பெரும்பாலோர். குடிநல ஆட்சி முறைகளில் அவர்களுக்கு விருப்பம் அதிகம். அவர்களுள் சிலர் வடக்கே நியூ ஹாம்ப்ஷயரிலும், சிலர் நியூயார்க் மாகாணத்திலும் தங்கினார்கள்; ஆனால் பெரும்பகுதியினர் பென்ஸில்வேனியாவிலும், தெற்கே வர்ஜீனியாவிலும் கரோலினாவிலும் உள்ள பள்ளத்தாக்குகளிலும் வசிக்கலானார்கள். கடுங்கானலில் புகுந்து அவர்கள் வேட்டையாடிப் பிழைத்தனர். காட்டை அழித்து நிலம் சாகுபடி செய்தனர், மரப்பலகையால் குடில்கள் கட்டினர். துணிச்சலுள்ள அந்த ஏழைகளுக்கு நில வாடகை, குத்தகை, சட்டாரீதியான விதிகள் என்றால் எரிச்சலாக இருந்தது. செவ்விந்தியர்களை துவேஷித்து அவர்களுடன் மல்லுக்கு நிற்கவும் அவர்கள் தயாராயிருந்தனர். பார்த்ததெல்லாம் கைப்பற்றும் அவர்களுடைய தன்மையைக் கண்டு "ஞாயிறு விரதத்தை விடாமல் அனுஷ்டிப்பதில் ஆச்சரியமென்ன? அவர்களுடைய கையில் கிடைத்த எதைத்தான் அவர்கள் விடத்தயாராஞர்கள்?" என்ற ஹாஸ்யத் துணுக்கு பிறந்தது. புது இடத்தில் ஆராய்ந்து வீடு வாசல் அமைத்துக் கொள்ளும் அவர்களுடைய திறமை அதிசயிக்கத் தக்கது. தெற்கிலும் மேற்கிலும் பரவிப் புரட்சிக்கு முன்பே ஜ்யார்ஜியாவின் மேட்டு ஸ்தலங்களிலும் கென்டக்கியிலும் புகுந்து, பாரிக் குடும்பங்களை வளர்த்து, அரசியலிலும் செவ்விந்தியப் போர்களிலும் அபாரத் திறமைகாட்டி, அவர்கள் அமெரிக்க வாழ்க்கை அமைப்பில் ஒரு முக்கியமான தொண்டு புரிந்தார்கள்.

ஷெனண்டோவாவிலும், இதர உள்நாட்டுப் பள்ளத்தாக்குகளிலும் ஸ்காட்ச்-ஐரிஷ், இங்கிலீஷ், ஜெர்மன், டச்சு மற்றும் பல நாட்டார் ஒரு மூசையில் பல உலோகங்கள் கலப்பது போலக் கலந்து புதிய அமெரிக்கப் பிரஜை என்னும் கலப்பு உலோகத்தை உண்டாக்கினர். கடைசிக் காலனியாகிய ஜ்யார்ஜியாவும் மக்களின் கலவைக்குச் சான்று. 1732-ல் ஜெனரல் ஜேம்ஸ் ஆகில்தார்பும், வேறு சில நல்ல மனம்படைத்த ஆங்கிலர்களும் அவ்விடத்திற்காக அரச சாஸனம் பெற்று, கடன்பட்ட ஏழைகளும், வேறு வகையில் துன்பப் பட்டவர்களும் அங்கு சரண் புக ஏற்பாடு செய்தனர்; ஸ்பானிய, இந்தியத் தாக்குதல்களைச் சமாளிக்க அம் மாகாணம் உதவும் என்று கருதப்பட்டது.

பெற்றோர்போல் பொறுப்பேற்ற அந்த டிரஸ்டிகள் ஜார்கிரதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கிலேயர், ஜெர்மன் ப்ராடெஸ்டெண்டுகள், ஸ்காட்லாந்திய மலை நாட்டார் ஆகியோரை அங்கு கொணர்ந்தனர். முதலில் அடிமைகளைக் கொண்டு வேலை வாங்குதல் தடுக்கப்பட்டிருந்தது. சுத்தோவிகர் அல்லாத கிறிஸ்தவர் அனைவரும் ஆதரவு பெற்றனர்; யூதர்கள் உட்பட பல இனத்தாரும் பேதமின்றித் தொழுதனர். ஸவன்னாவிலிருந்த ஆங்கிலச் சர்ச்சில் ஜான் வெஸ்லி, ஜ்யார்ஜ் ஒய்ட்ஃபீல்ட் என்ற இரு கியாதிபெற்ற உபதேசகர்கள் பணியாற்றினார்கள்.

ஆங்கிலேயரற்ற வேறு கோஷ்டிகள் சிறியவை. ஆனால் முக்கியமானவை. ஃப்ரான்ஸில் 'நான்டெஸ் ராஜ கட்டளை' ரத்து செய்யப்பட்டதும் நூற்றுக்கணக்கில் —ஆயிரக்கணக்கிலும் இருக்கலாம்.—ஃப்ரெஞ்சு ஹ்யூகெனாட்கள் (ப்ராடெஸ்டெண்டுகள்) ஆங்கிலக் காலனிகளுக்குச் சென்றனர். (1598-ல் ஃப்ரெஞ்சு மன்னன் நான்காம் ஹென்ரி, நான்டெஸ் பட்டணத்திலிருக்கையில் ஹ்யூகெனாட்டுகளுக்கு மதாசார சுதந்திரமளிக்கும் பிரகடனம் செய்தான்; 1685-ல் பதினான்காம் லூயி அதை ரத்துச் செய்தான்). சரித்திரப் பிரசித்திபெற்ற பல ஊர்ப் பெயர்களிலிருந்து அவர்கள் ஒன்றிரண்டு இடங்களில் திரளாமல் எவ்வளவு பரவலாக வசிக்கத் தொடங்கினர் என்பது தெரியவரும். ஜெர்மனியருடன் ஒரு சில ஸ்விஸ் மக்களும் வந்தனர். டெலாவேர் நதிக் கரையில் ஃபின்லாந்தியரும் முக்கியமாகப் பட்டணங்களில் இத்தாலியர்களும் போர்த்துகீசிய யூதர்களும் தங்கினர். சில ஊர்ப் பெயர்களிலிருந்தே வேல்ஸ் நாட்டாரும் அக்கூட்டங்களில் இருந்தார்கள் என்பது தெரியும். அந்தக் காலனி-யுகத்திலேயே அமெரிக்கா ஒரு 'மூசை'யாக உதவிற்று என்பது தெளிவு.

அமெரிக்க தேசியத்திற்குத் தனி உருவளித்த இரண்டாவது காரணம் நில அமைப்பு—முக்கியமாக எல்லைப்புறம். ஆரம்பத்தில் இருண்ட காட்டை ஒட்டிய கடலோரப் பிரதேசப் பகுதியே எல்லைப் பிரதேசமாக இருந்து வந்தது. ஆதியில் வந்தவர்கள் நம்ப முடியாத அளவு அனுபவ ஹீனர்கள். ஆனால் மனிதன் கைபடாத க்ரூரமான காட்டில் புதிதாக வந்தவர்கள் சாமர்த்தியமாகச் சமாளிக்க வேண்டும், அல்லது உயிரிழக்க வேண்டும் என்ற நிலைமையிருந்தது. அங்கு புதிதாய் வந்தவர்கள் பூர்வ குடிகளிடமிருந்து சோளம் பயிரிடவும், அப்பிரதேசத்துச் சமையல் முறைகளும், பட்டைகளால் படகு கட்டவும், பனித்தூளில் நடக்க ஜோடு செய்யவும், வேட்டை மிருகங்களைத் தந்திரமாய்த் தொடரவும், மான் தோலைப் பதனிடவும், காட்டு வாழ்க்கைக்கான இயலும் கற்றனர். கடுமையான அனுபவத்தால் அம் முன்னோடிகள் வேடராகவும்,

குடியானவர்களாகவும், போர் வீரராகவும் ஒருங்கே ஆயினர். புது விவசாயம், புது கிரக நிர்மாணம், புது இல்லறப் பொருளாதாரம் உருவாயின. பத்து வருஷத்திற்குள் தாய்நாட்டில் தங்கியிருந்த உற்றார் உறவினருக்கும் புது உலகம் வந்தவருக்கும் இடையே வாழ்க்கைப் பேதங்கள் பல கிளம்பின; அடுத்த தலை முறையில் அவை மேலும் அதிகரித்தன. காலனிக்காரர்கள் வாழ்க்கையை முரட்டு தைரியத்தோடும், நகாசு அற்ற விவகார முறையிலும் நோக்கினர்; மென்மையான யந்திர நெசவுக்கும் சாதாரணக் கதருக்கும் உள்ள வித்தியாசம் அங்கு தென்பட்டது. மனிதர்கள் முன்னேற முன்னேற எல்லைக் கோடு அப்பால் தள்ளப்பட்டதில், நதிகளில் படகு ஏற முடியாத மேட்டு ஸ்தலங்கள்தான் எல்லையைக் குறிப்பிட்டன; இது சுமார் 1700-ல் இருந்த நிலை. 1765-ல் எல்லை அல்லெகெனீஸ் மலைவரை தள்ளப்பட்டது; அமெரிக்கப் புரட்சி யுத்தத்திற்கு (Civil War) முன் அம்மலைகளும் எல்லைக்குள் அடங்கி விட்டன. தலைமுறை தலைமுறையாகப் பலர் வளமான நிலத்தைப் பெருக்குவதில் ஈடுபட்டிருந்தனர்; அவ்வனுபவத்தால் அவர்கள் பெரியதொரு புது வகை அச்சில் வார்க்கப்பட்டவர்கள் ஆனார்கள்.

எல்லைப் பிரதேசத்தில் சமத்துவமே சமுதாய விதி எனலாம். பெரிய பட்டணங்களுக்கு வெளியே அவ்விதியைக் காணலாம். அமெரிக்க சமுதாயம் என்னும் பணியாரத்தின் மேல் பாதாம், பிஸ்தா, சர்க்கரைப் பூச்சு கிடையாது. ஐந்து வருஷ உழைப்பால் கப்பல் யாத்திரையின் வாடகையை ஈடு கட்டி விடுதலை பெறும் ஆங்கிலப் பாட்டாளிகள், சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஏழைக் கடனாளிகள், கொடுங்கோன்மையிலிருந்து தப்பியோடி வந்த ஜெர்மனியர், ஆங்கில வர்த்தகச் சட்டங்களால் ஆண்டியாக்கித் துரத்தப்பட்ட அயர்லாந்தியர்—அனைவரும் தரித்திரர்கள். சொத்து சேகரிப்பதற்காக அவர்களெல்லாம் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. ஏராளமான நிலமானியம் பெற்ற பிரபுக்களையும், வர்த்தகத்தாலும் சூதாட்ட வியாபாரத்தாலும் நிதி சேர்ந்தவர்களையும் கண்டு பாமர மக்கள் பொறுமையுடன் வெறுத்தனர். ஆனால் எவ்வளவு ஏழையாக இருந்தாலும், பொதுவாக, அவர்கள் ஐரோப்பாவில் தென்படாத சுதந்திரத்தையும், முன்னுக்குவரக்கூடிய வாய்ப்பையும் அமெரிக்காவில் கண்டார்கள். விஸ்தாரமான வெளிகளையும் நாட்டின் ஏராளமான இயற்கை வளங்களையும் கண்டதுமே அவர்களுக்கு இவ்வுணர்ச்சி ஏற்பட்டது. 1759-வாக்கில் அமெரிக்காவுக்கு வந்த ஃப்ரெஞ்சு சீமான் ஒருவர் "தனவந்தர்கள் ஐரோப்பாவில் தங்குகிறார்கள்; நடுத்தர மனிதரும் ஏழைகளுமே வெளியேறுகிறார்கள்" என்று எழுதினார். "இங்குள்ள ஒவ்வொன்றும் அவர்களுக்குப்

புத்துயிர் அளிக்கிறது—புதுச் சட்டங்கள், புது வாழ்க்கை முறைகள், புதிய சமுதாயத் திட்டம், இங்கு வந்ததால் அவர்கள் மனிதர்கள் ஆகிவிட்டனர்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஏராளமான இயற்கை வளங்களுள்ள நாட்டில் சுதந்திரமான செயலாற்றலை ஆதாரமாகக்கொண்டு உருவாகி வரும் அமெரிக்கத்துவத்தை அவர் திறமையுடன் வர்ணித்திருக்கிறார்.

ஆனால் இவ்வாறு அமெரிக்கத்தன்மை உருவாதல் ஒருபுறமிருக்க, குறைந்தது 1730 வரை அதை விழிப்புடன் உணர்ந்த அமெரிக்கர் மிகக் குறைவே. முதலாவதாக அவர்கள் தம்மை விசுவாசமுள்ள பிரிட்டிஷ் பிரஜைகளாகவே கருதிக்கொண்டார்கள்; அடுத்தபடியாக அவர்கள் தம்மை வர்ஜீனியாக்காரன் என்றே, நியூயார்க்குக்காரன் என்றே, ரோட் ஐலண்டுக்காரன் என்றே கருதிக்கொண்டார்கள். அவ்வாண்டுக்குள் 13 காலனிகளும் நன்கு வேரூன்றிவிட்டன; அவற்றின் மொத்த ஜனத்தொகை 15 லட்சம். கிழக்குக் கரையோரம் முழுதும் அவை அமைந்திருந்தன. ஒவ்வொன்றிலும் தனிக் குணாதிசயங்கள் உண்டு; ஆனால் அவற்றை நான்கு பெரிய பிரிவுகளாகக் கருதலாம்.

நியூ இங்கிலாந்து ஒரு பகுதியாகும்—சிறிய, கற்பாங்கான நன்கு உழப்பட்ட தோட்டங்களும் வயல்களும்; மரத்தொழில்; கடல் சம்பந்தமான பல தொழில்கள்: கப்பல் கட்டுதல், மீன் பிடித்தல், கடல் யாத்திரை—இவற்றை அப்பிரதேசத்தில் காணலாம். நடு நாட்டுக் காலனிகள் இன்னொரு பகுதி—சிறிய தோட்டங்களும் பெரிய தோட்டங்களும் கூடியவை; பல சிறு வாரித் தொழில்கள்; நியூ யார்க்கிலும், ஃபிலடெல்ஃபியாவிலும் மும்முரமான கப்பல் தொழில்கள்—இவை அங்கு காணக்கூடியவை. மூன்றும் பகுதியான தெற்குக் காலனிகளில் நீக்ரோ அடிமைக் கூட்டங்களைக்கொண்டு நெல், அவுரி, புகையிலை வகையரு உற்பத்தி செய்யும் பெரிய பண்ணைகள் மிக முக்கியமானவை; ஆனால் அவைதான் அதிக சாமான்யம் என்பதல்ல. கடைசிப் பகுதி மற்றவைகளைக் காட்டிலும் அதிக அமெரிக்கத் தன்மை கொண்டது; நீண்ட மேற்கெல்லைப் பிரதேசம், மேய்ன் முதல் ஜ்யார்ஜியா வரையுள்ளது; அங்கு துணிந்த முன்னோடி வேடர்களையும், முரட்டு மரக்குடிசை வாசிகளையும் ஒரு சில நிலையான குடியானவர்களையும் மேலும் மேற்கு நோக்கி முன்னேறுவதைக் காணலாம். இந்த எல்லை நாடு வடக்கேயும் தெற்கேயும் சுமார் ஒரேவகையானது. மேற்கு மாஸசுஸெட்ஸ், மேற்கு பென்ஸில்வேனியா, மேற்கு கரோலினா, எங்கும் ஒரே ரகமான விசித்திர மனிதர்களைக் காணலாம்—முரடர்கள், சமயோசித புத்தியுள்ளவர்கள், புஸ்தகப் படிப்பை

அசட்டை செய்பவர்கள், கட்டுப்பாட்டை விரும்பாதவர்கள், அவநம்பிக்கை அல்லது மனத்தளர்ச்சி அறியாதவர்கள்.

நியூ இங்கிலாந்துக் காலனிகள்: நியூ இங்கிலாந்துக் கரையோர வாசஸ்தலங்கள் மிக விருத்தியடையும் வாய்ப்புப் பெற்றவை. மாஸசுஸெட்ஸிலிருந்து கிளம்பிய ஒரு கூட்டம் ரோட் ஐலண்டை உண்டாக்கியதையும், வேறொன்று கனெக்டிகட்டையும், நியூ ஹேவனையும் உண்டாக்கியதையும் ஏற்கெனவே அறிவோம். ப்யூரிடன்கள் சேர்ந்த மூன்றும் கூட்டம் வடக்கே மேய்னிலும் நியூ ஹாம்ப்ஷயரிலும் சிதறிப் பரவின—ஆதியில் அவை ப்யூரிடன் அல்லாதவர் கோரிய இடம்; பிரஸ்தாப காலத்தில் அங்கு ப்யூரிடன் ஆதிக்கம் ஏற்பட்டது. 1650-க்குள் நியூ ஹாம்ப்ஷயர், மேய்ன் ஆகிய பிரதேசங்கள்மேல் மாஸசுஸெட்ஸ் அரசியல் ஆதிக்கம் செலுத்திற்று; ஆனல் நூற்றாண்டு முடியும் சமயத்தில் நியூ ஹாம்ப்ஷயர் தனியாக அரசினின் மாகாணம் ஆகிவிட்டது. நியூ இங்கிலாந்தின் இந்த விஸ்தரிப்புக் குணம் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்திருந்து ப்யூரிடன்களின் சந்ததியாரை மேற்கு பசிஃபிக் சமுத்திரம் வரை அலை அலையாக அனுப்பிற்று.

காலனி வாழ்வு யுகம் முழுதும் நியூ இங்கிலாந்து குறிப்பிடத்தக்க முறையில் ஒரு வகைப்பட்ட ஜனத்திரள் கொண்டிருந்தது—புரட்சிக் காலத்து ஜனத்தொகையான ஏழு லக்ஷத்தில் பெரும்பாலோர் ஆங்கிலேயர். பாஷை, பாவனை, பக்தி, சிந்தனை அனைத்திலும் அவர்கள் ஏறக்குறைய ஒரே மாதிரி இருந்தார்கள். சிறிய ரோட் ஐலண்டு மாத்திரம் சற்று தனித்திருந்தது; அரசியல் முற்போக்காளர்களும் மதாசார ஆட்சேபகர்களும் அவ்விடத்திற்குத் தனித் தோற்றமளித்தனர். நியூ இங்கிலாந்து அல்லது பொதுவாக வட மாகாணங்களின் வாசிகளுக்கு யாங்கி (Yankee) என்ற புனைப் பெயர் உண்டு. யாங்கிகள் பெரும்பாலும் திடகாத்திரமும் சுதந்திர பாவமும் தெள்ளறிவுமுள்ள ஆங்கிலக் குடும்பங்களிலிருந்து பிறந்தவர்கள்; அவர்களுக்குத் தம் மூதாதையரிடம் சந்தேகத்திற்கிடமில்லாமல் பெருமையுண்டு—"காட்டில் விதைப்பதற்கான பொறுக்கு மணிகள்" என்று ஒரு தலைவன் கூறினன். நிலம் சாகுபடி செய்பவரும் கடல்களில் மீன் பிடிப்பவர்களும் சுகபோகம் இல்லாவிட்டாலும் சௌகரியமாய் வாழ்ந்தார்கள்: வர்த்தகர்கள், கப்பல் முதலாளிகள், சிறு தொழிலதிபர்கள் போன்றவர், சாதாரணமாக, செழித்த செல்வர்களானார்கள். 1770-ல் பாஸ்டனின் அயல் நாட்டு வாணிபத்தில் 600 கப்பல்கள் ஈடுபட்டிருந்தன: ஐரோப்பாவுக்கும் மேற்கு இந்தியத் தீவுகளுக்கும் ஏராளமாக ஏற்றுமதி செய்யும் மாஸசுஸெட்ஸ் மீன் துறைகளின் வருஷ வருமான மதிப்பு 12,50,000 டாலர். ஆகவே காட் (Cod) மீன் அரசாங்கச் சின்னமாகக் கொள்ளப்

பட்டது. நியூ இங்கிலாந்தின் பல குடும்பங்கள் தங்கள் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொண்டன—துணி நெய்து கொண்டன, உணவுப் பொருள் விளைவித்துக்கொண்டன, மரச் சாமான்களும் பாதரக்ஷைகளும் தாமே செய்துகொண்டன. சுறுசுறுப்பு, சிக்கனம், உலக ஞானமுள்ள துணிவு, குறுகலான மதபக்தி—இவை யாங்கிக் குணாதிசயங்கள். இதரப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு யாங்கிகளை ஓரளவு பிடியாமலிருக்கலாம்; ஆனல் அவர்கள் எங்கும் மரியாதை பெற்றனர்.

நியூ இங்கிலாந்தில் கோயில், பள்ளிக்கூடம் இரண்டுக்கும் விசேஷ கௌரவம் உண்டு. ப்யூரிடன் கோஷ்டிகளெல்லாம் தம் உபதேசகரை நல்ல அறிவாளியென்றும் நல்வழிகாட்டி என்றும் கருதினர்; அவற்றின் சமூக சல்லாபங்கள் பெரும்பாலும் பொதுச் சபைக்கூடத்தில் நடைபெற்றன. உபதேசகர்கள் ஆற்றலும் தெம்பும் உள்ளவர்கள், கல்வியில் போலவே சமூக நாயகத்திலும் வலிவுள்ளவர்கள், மக்களிடமிருந்து அச்சம் கலந்த மரியாதை பெறுபவர்கள். பாவிகளை ஏற்கக் காத்திருக்கும் நரகலோகத்தை அவர்கள் ஆவேசத்துடன் வர்ணித்தார்கள்; சில கோர வர்ணனைகள் மிகப் பிரசித்தியடைந்தன. ஆனல் சமயக்குரவர்கள் ஆற்றலும், யோக்கியதையும், ஆழ்ந்த அறிவும் உள்ளவர்களாயிருப்பது அவசியமாயிற்று. அவர்கள் வேத ஆகமமும் பண்டைக்கால பாஷைகளும் நன்கு கற்றவர்கள். ஹார்வர்ட் கல்லூரித் தலைவர் சான்னி காலேயில் ஹீப்ரு மொழியில் "பழைய ஏற்பாடு" படிக்கக் கேட்பார்; பிற்பகலில் கிரேக்க மொழியில் "புதிய ஏற்பாடு" படிக்கக் கேட்பார்; லத்தீன் பாஷையில் அவற்றின்மேல் விமர்சனம் செய்வார். வேறு பல உபதேசகர்களும் இக்காரியம் செய்திருக்க முடியும்... ஆதியிலிருந்தே பொதுக் கல்வி ஆதரவு பெற்றது. 1636-ல் ஹார்வர்ட் கல்லூரி நிறுவப்பட்டது; அதே பத்தாண்டில் பல இடங்களில் ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்பட்டன. மாஸசுஸெட்ஸ் சிசு நிலையிலிருக்கும்போதே ஐம்பது வீடுகளுக்கொண்ட ஒவ்வொரு ஊரிலும் பள்ளிக்கூடம் நடத்த வேண்டுமென்று சட்டம் கூறிற்று.

காலக்கிரமத்தில் நியூ இங்கிலாந்து வாழ்க்கையை ஆதியில் பாதித்த கடுமை சற்று தளர்ந்தது. கப்பல் போக்குவரத்தும் வியாபாரமும் செல்வத்தைக் கொண்டு கொட்டுவதோடு புதுச் சிந்தனைகளையும் கொண்டு சேர்த்தன. வக்கீல்கள், மருத்துவர்கள், இதர அறிவுத் தொழிலாளர்கள் எண்ணிக்கையில் வளர்ந்தனர். மாஸசுஸெட்ஸிலும், கனெக்டிகெட்டிலும் ஞாயிறு விரதம் சனி மாலை ஆறு மணி முதல் மறுநாள் அஸ்தமனம் வரை, கறாராக அனுஷ்டிக்கப்பட்டது. அப்போது பிரயாணம் கூடாது, மதுபான விடுதிகள் விருந்தாளிகளை உபசரிக்கக் கூடாது, விளையாட்டுகள் தடுக்கப்பட்டன, ஜனங்கள் தெருவில்

கூடிப் பேசிக்கொண்டிருந்தாலும் தண்டனைக்குள்ளாகலாம். ஆனால் செயற்கை கேசம் போன்ற புதிய ஃபாஷன்கள் தோன்றின. ஆங்கில சர்ச் கிறிஸ்துமஸ் பண்டிகையை உல்லாசமாக அனுஷ்டித்தது. அரசியல், பண சம்பாத்தியம், காதல், விருந்து முதலியன பாபச் செயல்கள் என்று கருதப்படாமல் வாழ்க்கையின் ரம்யமான அம்சங்கள் என்று வெளிப்படையாக ஏற்கப்பட்டன.

ஸாம்யுல் ஸுஅல் என்பவர் ஹார்வர்ட் பட்டதாரி; பிற்காலத்தில் அவர் முக்கிய நீதிபதியானார்; அவர் 1674-முதல் 1729 வரை தினசரிக் குறிப்பு எழுதினார். அதில் மாஸசூஸெட்ஸ் படிப்படியாகப் பழைய வழிகளைவிட்டுப் புது வழிகள் ஏற்றதை இணையற்ற சொல் சித்திரமாகக் காணலாம். கண்டிப்பான பழைய சம்பிரதாயப்பூரிடனை அவருக்கு மதுபானமும் கோச்வண்டி சவாரியும் இஷ்டம்; ஆனால் புதுமையைக் கண்டு அவர் வெகுண்டார். அவர் எழுதிவைத்த மூன்று வால்யூம்களைப் படித்தால் பலவண்ணக் காட்சிகள் நம் கண்முன் எழும்.

இதரக் காலனிகளைக் காட்டிலும் சிக்கனமும் ஒழுங்கும் ஊறிப்போன நியூ இங்கிலாந்தில் சட்ட விரோதக் குற்றங்களும், அதி தரித்திரமும் குறைவு. ஒப்பந்தப் பாட்டாளிகள் முதலில் இல்லாதிருந்தனர்; 18-ஆம் நூற்றாண்டில் மலிந்தனர்; ஆனால், அவர்கள் தம் ஒப்பந்தக் காலத்தை முடித்து, பணம் சேகரித்து, சுதந்திரமடைவது சாத்தியமாக இருந்தது; அடிமை முறை குறைந்தது; வாக்குரிமையுள்ளவர்கள் கூடி நகர நிர்வாகம் நடத்தியதால் தன்னம்பிக்கை வளர்ந்தது. பாஸ்டன், நியூ ஹேவன் முதலான பெரிய பட்டணங்களில் பிரபுத்துவச் சின்னங்களுடன் சிறந்த வீடுகளில் பெரிய மனிதர்கள் வசித்தார்கள்; செல்வம் வகுத்த ஜாதிப் பிரிவினை இருக்கத்தானிருந்தது; சந்தேகத்திற்கிடமில்லை. ஆனால் உலகில் வேறெங்கும் சாதாரண மக்கள் அமெரிக்காவில் இருக்கும் அளவு திடமான சுயமரியாதையுடன் வாழவில்லை.

நடுப்பிரதேசக் காலனிகள்: நடுப்பிரதேசக் காலனிகளின் சமுதாயத்தில், வேறுபாடு, பலரின் கலப்பு, சகிப்புத்தன்மை ஆகிய குணங்கள் அதிகமிருந்தன; பிரபுத்துவ உயர்வு அவ்வளவாக இல்லை; கூடவே வைராக்கியத் தன்மையும் மிதமாக இருந்தது. பென்ஸில்வேனியாவிலும். அதோடு சம்பந்தப்பட்ட டெலவேரிலும் புரட்சிக் காலத்தில் சுமார் 3,50,000 பிரஜைகள் இருந்தனர்; நியூ யார்க், நியூ ஜெர்ஸியின் மொத்த எண்ணிக்கையும் சுமார் அவ்வளவே எனக் கொள்ளலாம். அமெரிக்காவில் இதர இடங்களில் போலவே அங்கும் பெரும்பாலோர் ஜீவனத்திற்கு நிலத்தை நம்பியிருந்தார்கள். இம்மாகாணங்களின் வளமான இடங்களில் நிலச்சுவான்தார்கள் ஏக்கிரத்தில் செல்வர்களானார்கள். உதாரணமாக பென்ஸில்

வேனியாவின் க்வேக்கர்தோட்டங்களில் கெட்டியான செங்கல் வீடுகளிருந்தன. மேஜை, நாற்காலி முதலிய சாமான்கள் உறுதியாயிருந்தன. கண்ணாடி, பீங்கான் சாமான்களும் இருந்தன. குடியானவ எஜமானர்களும் வேலையாட்களும் சேர்ந்தே சாப்பிடுவார்கள்; உணவு எளியதாக இருந்தாலும் ஏராளமாக இருக்கும்; ஐரோப்பாவில் பல இடங்களில் அபூர்வ வஸ்துவாகிய மாமிசம் மூன்று வேளையும் கிடைத்து வந்தது. விவசாய யந்திர உபகரணங்கள் வேகமாய் அதிகரித்தன; 1765-ல் பென்ஸில்வேனியாவில் 9,000 பார வண்டிகள் இருந்தன. மற்றப் பகுதிகளைக் காட்டிலும் அங்கு விவசாயத்தில் ரசமான வேறுபாடு இருந்தது; பலவகை தானியங்கள் பயிரிடப்பட்டன. சிறந்த பழத் தோட்டங்களிருந்தன. ஆடு, மாடு, பன்றி, புள்ளினங்கள் முதலியன உணவுக்காக வளர்க்கப்பட்டன. பல தோட்டங்களில் தேன்கூடுகளும், மீன் குளங்களும் உண்டு. ஹட்ஸன் பள்ளத்தாக்கில் பல பெரிய ஜமீன்தார்கள் பகட்டான மனைகளில் வேலைக்காரப் பட்டாளங்களுடன் பெருமையோடு வாழ்ந்தனர்; நல்லுறவும் விசுவாசமுமுள்ள பண்ணைக் குத்தகைக்காரர்கள் வருஷக் கட்டணம் செலுத்தவரும் நாட்களில் கூட்டங்களின் அக்காட்சிப் பல நூற்றாண்டுகளுக்கு முந்திய ஆங்கில நாட்டு ஜமீன்தாரிக் காட்சிகளை நினைவூட்டும். லாங்க் ஐலண்டிலும், மேற்கு நியூ யார்க்கிலும் சுதந்திரமான சிறு பண்ணைகள் பல இருந்தன.

எல்லோரும் குடியானவர்களல்ல; சிறு கடைக்காரர்கள், மொத்த வியாபாரிகள், ஆசாரிகள் முதலியோரும் பென்ஸில்வேனியாவிலும் நியூயார்க்கிலும் இருந்தார்கள்; அவர்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வந்தது. போக்குவரத்துத் தொழில் வியாபகமாகவும் லாபகரமாகவும் இருந்தது. தோலங்கள், உரோமத் தோல்கள், தானிய வகைகள், வேறு இயற்கை (கச்சா)ப் பொருள்கள் ஏற்றுமதியாயின; தயாரிக்கப்பட்ட பொருள்கள், சர்க்கரை, சாராய வகைகள் முதலியன இறக்குமதியாயின. புரட்சியுத்தத்திற்குச் சற்று முன்பு 7,000 பணியாட்களுக்குமதிகமான பேரைக்கொண்ட சுமார் 500 கப்பல்கள் டெலவேர் குடாவிலிருந்து வெளியேறின; ஹட்ஸன் குடாவும் லாங்க் ஐலண்டுக் குடாவும் கப்பல்கள் நிரம்பியிருந்தன. ஃபிலடெல்ஃபியாவும் நியூ யார்க்கும் உள்நாட்டு வியாபாரத்திற்கு முக்கியமான விநியோகத் துறைகளாயின. மேற்கு இந்தியத் தீவுகளுக்கு தானியங்களும் மீன் வற்றலும் அனுப்பி அங்கிருந்து வெல்லப்பாகும் நீக்ரோ அடிமைகளும் கொணர்தல் மிக லாபமளிக்கும் வியாபாரம்; ஆல்பனியில் சடைத்தோல் ஏற்றி லண்டனில் நேர்த்தியான துணி வகை, பீங்கான், தட்டுமுட்டுச் சாமான்களைப் பண்டம் மாற்றிக்கொள்வதும் நல்ல லாபமளித்தது. சிறு கைத்தொழில்கள்

வளர ஆரம்பித்தன. பென்ஸில்வேனியாவிலும் நியூ ஜெர்ஸியிலும் இரும்பு உலைகள் அமைக்கப்பெற்றன; இருப்புச் சாமான்களின் இறக்குமதியைக் கண்டு திகிலடைந்த பிரிட்டிஷ் பார்லிமெண்டு தடைச் சட்டங்கள் விதித்தது. நியூயார்க்கில் கண்ணுடிச் சாமான்களும், உரோம அடைத்தொப்பிகளும் தயாரிக்கப்பட்டன. செல்வம் பெருகவே, அறிவுத் துறைத் தொழிலாளர்கள் பெருகினர். முக்கியமான பட்டணங்களில் வக்கீல்கள் அரசியல் நாயகர்கள் ஆனார்கள்; புரட்சி யுத்தத்திற்குப் பிறர் எவ்வளவு காரணமோ அவ்வளவு காரணம் அவர்களும்.

நியூ இங்கிலாந்தைக் காட்டிலும் பலரகம் கலந்த, மெருகேறிய சமுதாயத்தை நியூயார்க்கில் காணலாம்; நிதானமாய் முன்னேறும் ஃபிலடெல்ஃபியாவிலும் கூடக் காணலாம். ஐரோப்பாவுடன் நெருங்கிப் பழகிய வர்த்தகர்களும் கப்பல் முதலாளிகளும் பகட்டாகவும் புது மோஸ்தரிலும் விருந்துபசாரங்கள் நடத்தினர். உல்லாசக் கிளப்புகள், நடனசாலைகள், சங்கீத சபைகள், நந்தவனங்கள், காஃபி அருந்தும் பவனங்கள், தனியாரின் நாடகசாலைகள் முதலியன அந்நகருக்குப் பெருமையளித்தன. நியூயார்க்கில் தனவந்தரின் ஈமச்சடங்கில் பல்லாயிர டாலர் செலவாகலாம். டச்சுக்காரர்களுக்கு உல்லாச விடுமுறை நாட்களில் பிரியம் அதிகம்; ஆங்கிலேயரும் படிப்படியாக அதன் ருசி கண்டனர். செல்வர்கள் நேற்றைய லண்டன் ஃபாஷன்படி பட்டும் வெல்வெட்டும் தரித்தனர், பொய்க் கேசமணிந்து சிங்காரித்தனர், அலங்காரமாக உடை வாள்கள் அணிந்தனர்....அகலமான வீதிகளும் துப்புரவான நடைபாதைகளும் கொண்ட ஃபிலடெல்ஃபியாவின் நாகரிகத் தோற்றம் சாந்திமயமானது. அதன் பொது ஸ்தாபனங்கள் பெயர் பெற்றவை; விஞ்ஞான ஆராய்ச்சியில் அது அதிக கவனம் செலுத்திற்று; ஃப்ராங்க்லின், பென்ஜமின் ரஷ், தாவர சாஸ்திரி வில்லியம் பெர்ட்ரம் அவ்விடத்துச் சிறந்த விஞ்ஞானிகள். ஒழுங்கு, திடத்துவம், மங்களகரமான விருத்தி உள்ள அவ்வூர் லண்டன் அல்லது பாரிஸைக் காட்டிலும் அதிக பிரபாவமுள்ளதெனத் தாமஸ் ஜெஃபெர்ஸனுக்குத் தோன்றிற்று—அவருடைய விமர்சன சக்திக்கு மதிப்புண்டு. நியூயார்க்கில் சமயக் கொள்கைகள் தளர்ந்து தளர்ந்து, "கட்டுப்பாடற்ற சிந்தனை" பரவிவருவதைப் பற்றி மதாச்சாரியர்கள் குறைகூறும் நிலை ஏற்பட்டது; பிரிட்டிஷ் அமெரிக்காவில் வேறெந்த மாகாணத்தைக் காட்டிலும் அரசியல் பேச்சுகள் அங்கு ஆவேசம் பெற்றன. க்வேக்கர்களின் ஆதிக்கமுள்ள பென்ஸில்வேனியாவில் அபிப்பிராயங்கள் தணிந்து இருந்தன; ஆனால் புரட்சியின் சற்று முன்பு ஸ்காட்ச் ஐரிஷ்காரர்களும் ஜெர்மானியரும் க்வேக்கர்களின் அரசியல் ஆதிக்கத்தைத் திடீரெனக் கலைத்தார்கள்.

நடுப்பிரதேசக் காலனிகள் முழுதிலும் நீக்ரோக்கள் பெரிய எண்ணிக்கையில் இருந்ததால் வாழ்க்கையில் ரசமான மாறுபாடு இருந்தது. க்வேக்கர்கள் அடிமை முறையைக் கடுமையாக எதிர்த்தனர்; காலனி காலத்தின் பிற்பகுதியில் அவர்களிடையிருந்து உலகப் பிரசித்திபெற்ற அடிமை யெதிர்ப்புப் பிரசாரகர் ஒருவர், "ரம்யமான ஆத்மா", ஜான் உல்மன் தோன்றினர். ஜெர்மானியரும் ஸ்காட்ச்-ஐரிஷ்காரரும் இருந்த இடங்களிலும் அடிமை ஏற்பாடு வளரவில்லை—அவர்கள் தம் கையாலேயே கடுமையாக உழைப்பவர்கள். ஆனால் அடிமை முறை நகரங்களிலும் ஹட்ஸன் நதியோர ஜமீன்தாரி மனைகளிலும் சகஜமாக இருந்தது. நியூ இங்கிலாந்தைக் காட்டிலும் மத்திய மாகாணங்களில் வாழ்க்கை, பொதுவாக, அதிக சர்வாங்க பூர்ணமாகத் திகழ்ந்தது. சீதோஷ்ண நிலை, நிலத்தின் தன்மை, மனிதர்களின் தன்மை எல்லாமே அதிக ஹிதமாயிருந்தன. நியூயார்க்கின் வருஷப் பிறப்புக் கொண்டாட்டத்தைப் போல்—அதி காலையில் பீரங்கிகளின் ஸலாம், நல்ல ஆடைகளணிந்த நண்பர்களின் சந்திப்பு, மிட்டாய் விநியோகம், சாராய பானம் (விருந்துண்டவர்களை போதை நிலையில் வண்டியிலேற்றி வீடு சேர்க்கவேண்டி வருவதுமுண்டு!)—வடக்கே ஒரு விழாவும் கிடையாது. மன்னர் அனுப்பும் கவர்னருக்கு நியூயார்க்கு அளிக்கும் ஆடம்பர உபசார வரவேற்பைப்போல் வேறெங்கும் காண்பதரிது; ஜமீன் மாளிகைகளில் வாரிசு குமாரனுக்கு விவாகம் நடக்கும்போது நிகழும் கொண்டாட்டமும் அவ்வாறே.

தென்புறக் காலனிகள்: தென் காலனிகளின், முக்கியமாக அதிக ஐசுவரியமும் செல்வாக்குமுள்ள வர்ஜீனியா தென் கரோலினு ராஜ்யங்களின், தனிப்பட்ட சிறப்புக்கள் மூன்று. அவையாவன: கிராமாந்தர வாழ்க்கை, பெரிய ஜமீன்தாரிகளின் முக்கியத்தன்மை, குறிப்பான இன பேதம். கிராமீய வாழ்க்கையே அங்கு விதி எனலாம்; சிறிதளவு முக்கியத்துவமுள்ள நகரங்கள் சார்ல்ஸ்டனும் பால்டிமோருமே. பெரிய தோட்டங்களில் அடிமைப் பட்டாளங்களையும், கம்பீரமான கட்டடங்களையும், பகட்டான வாழ்க்கையையும் காணலாம். வெள்ளைக்காரர்களுள் உயர் வகுப்பார் சுக வாசிகளும், சில பிரபுக்களும் ஆவர்; அவர்கள் மிகத்திறமையுள்ள அரசியல் நாயகர்களாகத் திகழ்ந்தார்கள். நடுவகுப்பார் சிறு தோட்ட முதலாளிகள், குடியானவர்கள், வியாபாரிகள், ஏஜெண்டுகள், ஆசாரிகள். கீழ் வகுப்பார் "ஏழை வெள்ளையர்கள்". எல்லோருக்கும் கீழே அடிமைகள். 1770-ல் வர்ஜீனியாவில் மொத்த ஜனத் தொகையான 4,50,000-த்தில் பாதிக்குச் சற்றுக் குறை

வானவர் அடிமைகள்; மேரிலண்டின் சுமார் இரண்டு லக்ஷத்தில் மூன்றில் ஒருவன் நீக்ரோ அடிமை; தென் கரோலினுவில் ஒரு வெள்ளையனுக்கு இரண்டு நீக்ரோக்கள் என்ற விகிதம் ஏற்பட்டது.

மக்கள் நகரங்களில் திரளாமல் பரவியிருந்ததற்கு இரண்டு காரணங்களுண்டு: ஒவ்வொரு பெரிய தோட்டமும் கூடியவரைத் தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொண்டது; தென்னுட்டாருக்கு இயற்கையாகப் பட்டண வாசம் பிடிக்கவில்லை. பெரிய நிலச் சுவான்தார்கள் இங்கிலாந்தோடோ வட நகரங்களோடோ நேராக விற்பனைகள் நடத்தினர்; பெரிய மத்தியஸ்த வியாபார கோஷ்டிக்குத் தேவை யிருக்கவில்லை. முன்னுக்கு வரக்கூடிய கைத்தொழில் சுலை அடிமை முறை அநேகமாக வளரவொட்டாமல் தடுத்தது. பெரிய பட்டணங்களை உண்டாக்குவதற்காக வர்ஜீனியா எடுத்துக் கொண்ட முயற்சிகளும், இயற்றிய சட்டங்களும் வீணுயின. புரட்சி துவங்கியபோது காலனியின் மிகப்பெரிய ஊர் நார்ஃபக்—ஜனத்தொகை 7,000; வில்லியம்ஸ்பர்க்வில் (ஒழுங்காய் அமையாத) மொத்தம் இருநூறு வீடுகளே இருந்தன. 1732-ல் ஃப்ரெடெரிக்ஸ்பர்க்கைக் கண்ட ஒருவர் எழுதினர்—"ஊரின் முக்கியஸ்தனைத் தவிர அங்கு ஒரு கடைக்காரன், ஒரு தையற்காரன், ஒரு கொல்லன், ஒரு சாமான்ய ஓட்டல்காரன், டாக்டர் வேலையும் பார்த்துக்கொண்டு காஃபிக்கிளப் நடத்தும் ஒரு ஸ்திரீயும் இருந்தனர்." தென்னுட்டில் இதுவே விதியெனலாம். புரட்சிக்குச் சற்றுமுன் சார்ல்ஸ்டன் 15,000 பேர் கொண்ட ஒரு நாட்டுப்புற ஊர்; பாதிப்பேர் நீக்ரோக்கள்; கல் பாவாத மணற் பாங்கான தெருக்கள். பால்டிமோர் அநேகமாய் அதே பரப்புள்ள, நாகரிக வாழ்வுக்குதவாத, துறைமுகப் பட்டணம்; உள் நாட்டிலிருந்து விவசாயப் பொருள்கள் வந்தால்தான் அங்கு வியாபாரம் உண்டு. பட்டணங்களில்லாததால் சில துன்பங்கள் விளைந்தன. 1690-லேயே பாஸ்டனில் சமாசாரப் பத்திரிகை தோன்றி விட்டது; எனினும், "வர்ஜீனியா கெஜெட்டை" 1736-ல் தான் முதன் முதலாகப் பிரசுரிக்க முடிந்தது. மேலும் 15 வருஷங்கள் கழித்துத் தான் தொழில் முறையான நாடகக் கம்பெனி வர்ஜீனியாவில் ஒரு ஆட்டம் நடத்த முடிந்தது. தெற்கே கடலை மிகவும் ஒட்டி சேரிவாழ்க்கை வாழும் பாமர மக்களை நாடு மறந்து விட்டதென்றே சொல்லலாம்; தொலையிலுள்ள யாரோ ஒரு வர்த்தகன் ஊக்கத்துடன் முயற்சித்தாலொழிய அவர்களுக்கு சாதாரண வீட்டுச் சாமான்கள் கூடக் கிடைக்கவில்லை; முன் சிந்தனையுள்ள பல தலைவர்கள் அதைப்பற்றிக் குறை கூறியிருக்கின்றனர்.

மேரிலண்டு, வர்ஜீனியா, தென் கரோலினு, இவற்றின் பெரிய தோட்டங்கள் மைதானங்களில் சிதறிக் கிடந்தன; சாதாரணமாக அவை நதிக் கரையிலோ, நீண்டு குறுகிய குடாக்களின் அருகிலோ இருக்கும்; அப்பொழுதுதான் நீர் வழிப் போக்குவரத்து வசதி கிடைக்கும். ஒவ்வொரு தோட்டத்திலும் முதலாளியின் குடும்ப மாளிகையுண்டு, கல் அல்லது செங்கல்லால் கட்டப்பட்டிருக்கும், பண்டக சாலைகள், கொல்லன் பட்டறை, தச்சன் பட்டறை, முதலான வெளிக் கட்டிடங்களிருக்கும். நீக்ரோக் குடில்கள் ஒழுங்கற்றுப் பரவிக்கிடக்கும். சரித்திரப் பிரசித்தி பெற்ற பல ஜமீன்தார்களின் பெரிய மனைகள் அழகான கட்டிடங்கள். உள்ளே மென்மையான பலகை முகப்புகொண்ட சுவர்கள், பெரிய கூடங்கள், சித்திர வேலையுடன் கூடிய பெரிய மாடிப்படிகள் முதலியன உண்டு. அவற்றுள் சிறந்த வீடுகளில் கருங்காலி, தோதகத்தி போன்ற உயர்தர மரத்தாலான சாமான்களுண்டு; சில அமெரிக்காவில் செய்யப்பட்டவை, பெரும்பாலானவை இங்கிலாந்திலிருந்து வந்தவை. குடும்ப முக்கியஸ்தர்களின் படங்கள், வேறு பெயர் பெற்ற சித்திரங்கள், பெரிய புஸ்தகசாலைகள்—இவற்றை அங்கு காணலாம். பல ஜமீன்தார்களுக்கு வில்லியம்ஸ்பர்க், சார்ல்ஸ்டன் போன்ற ஊர்களில் நகர வீடுகள் உண்டு. இலையுதிர்காலத்தில் வருடந்தோறும் அவர்கள் அங்கு சென்று, நாட்டியம், நடனம், விருந்து, சீட்டாட்டம், குதிரைப் பந்தய ஓட்டம், சட்ட சபைக் காரியம் முதலியவற்றில் சில மாதங்கள் கழிப்பார்கள். பொதுவாக, ஜமீன்தார்கள் சோம்பேறிகள், சுகவாசிகள் என்ற குறை கூறப்படுவதுண்டு. ஆனல் பெரிய தோட்டத்தின் சரியான கண்காணிப்பும் சிரத்தையுமில்லாமல் நடைபெறுது. அதேபோல அறிவுத் துறையில் ஆர்வமற்றவர் என்றும் அத்தோட்ட முதலாளிகளைத் தூற்றுவதுண்டு. உண்மையில் அவர்கள் அரசியல் துறையில் ஆவேசத்துடன் புகுந்தனர்; தேர்வுப் பதவிகள் பல வகித்தனர். அரசாங்கப் பிரச்னைகளைப்பற்றி மிகத் திறமையோடு பேசவும் எழுதவும் செய்தனர். எதிர்பாராத எண்ணிக்கையில் அவர்களுள் பலர் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டனர், கிடைத்தற்கரிய ராயல் ஸொஸைடித் தேர்வும் பெற்றனர்.

தென்னுட்டின் சிறிய தோட்ட முதலாளிகளும் குடியானவர்களும்—தாமஸ் ஜெஃபெர்ஸனின் தகப்பனர், பீட்டர் ஜெஃபெர்ஸனைப் போல்—நல்ல உழைப்பாளிகள், அறிவாளிகள், சிக்கனத்தின் சிறப்பு உணர்ந்தவர்கள். காட்டை அழித்து, தேவைக்கான வீடுகள் கட்டிக்கொண்டு. அவர்கள் சொத்து சேகரித்தார்கள்; பலர் அடிமைகளின் உதவியைக் கொண்டு விஸ்தாரமான நிலத்தில் சாகுபடி செய்தார்கள்; சிலர், பீட்டர்

ஜெஃபெர்ஸனைப் போல், பிரபுக் குடும்பங்களில் விவாகம் செய்துகொண்டார்கள். அவர்கள் திடகாத்திரம் படைத்தவர்கள், தன்னம்பிக்கையும் பிரிட்டிஷ் பரம்பரையின் சுதந்திர மனப்பான்மையுமுள்ளவர்கள். கல்வியும் வெளி மெருகும் குறைவாக இருக்கலாம், ஆனால் அவர்களுடைய உள் அறிவும் உலக ஞானமும் வலிவுள்ளவை; ஜெஃபெர்ஸன், ஜேம்ஸ் மாடிஸன், பாட்ரிக் ஹென்ரி போன்ற குடிநல நோக்கமுள்ள மிகச் சிறந்த அரசியல் நாயகர்கள் அவர்களிடையே தோன்றினார்கள். கவனித்து நோக்குங்கால், தெற்கே உயர் வகுப்புக்கும் நடு வகுப்புக்கும் இடையே உள்ள வித்தியாசம், அநேக சமயங்களில், தெளிவற்றிருந்தது; அதோடு கலப்பு விவாகங்களும் நிகழ்ந்ததால் பேதம் மறைந்து இணைப்பு ஏற்பட்டது.

பல இடங்களில் குறிப்பாக மேரிலண்டில், அடக்கி ஆள முடியாத பெரிய எஸ்டேட்டுகளைத் திறமையுடன் நடத்தக் கூடிய சிறு பண்ணைகளாக உடைக்கும் மனப்பான்மை பலமாக இருந்தது. 1737-ல் இரண்டாம் வில்லியம் பர்ட் ஜேம்ஸ் நதியின் மேல் பகுதியில் ஒரு எஸ்டேட்டைத் துண்டுகள் போட்டு வீடு கட்டும் மனைகளாக்கி நல்ல லாபமடைந்தான்; அப்பொழுது உண்டானதே ரிச்மண்டுப் பட்டணம்.

தெற்கிலும், வடக்கிலும் நில விற்பனை சூதாட்டம், அல்லது சூழ்நிலையைத் தக்கதாக்கிக்கொண்டு அமித விலையில் விற்றுக் கொள்ளை லாபமடிப்பது, உயர்தர வகுப்பாராலும் கண்ணியமாகக் கருதப்பட்டது. வர்த்தகர்களும் ஏஜெண்டுகளும் நிலச் சூவான்தார்களுக்கு ஒரு படி மட்டமானவர்கள்; கடைக்காரர்கள், இங்கிலாந்தில் போலவே உயர் வகுப்பாரின் கடாக்ஷத்திற்குக் காத்திருக்க வேண்டியிருந்தது. பால்டிமோர், நார்ஃபக் போன்ற வர்த்தகப் பட்டணங்கள் காலனிகளின் தலை நகரங்களுக்கு மட்டமானவை.

தெற்கிலிருந்த வெள்ளையருள் மூன்றும் வகுப்பார் மிகவும் தாழ்ந்தவர்கள். குற்றவாளிகள், கடன் விடுதலை பெற்றவர்கள், ஒப்பந்தப் பணியாட்கள், இவர்களுள் சிலர் எல்லைப் புற வாசச் சூழ்நிலையில் மிகவும் கெட்டுப்போயினர்; எழுத்தறியாதவர், கொச்சைத் தன்மையுள்ளவர், கொள்கை அல்லது திட்டமற்றவர்—நீக்ரோக்கள் கூட அவர்களை இகழ்ந்தார்கள். ஒப்பந்த வேலைக்காரன் என்பது மாத்திரம் ஒரு தோஷமாகாது என்பதைக் குறிப்பிடவேண்டும். உயிரிய சிலவான்கள் பலர் கப்பல் யாத்திரைக் கட்டணத்திற்கு ஈடாகக் குறிப்பிட்ட காலம் உழைக்க ஒப்புக்கொண்டு வந்தார்கள்—உதாரணமாக, தச்சர்கள், தையற்காரர்கள், வெள்ளி பொன் ஆசாரிகள், துப்பாக்கி செய்பவர்கள் முதலியோர்—அடிமைத் தன்மை வேகமாய்ப் பரவி விரும்பத்தகாத வாழ்க்கை முறைகளை ஸ்தாபித்திராவிட்டால்—தென்னாட்டில் பல சிறந்த

தொழில்களை விருத்தி செய்திருப்பார்கள். லண்டன் நகரின் கடனாளிச் சிறையிலிருந்து, குடியேற்ற இலாகாவின் மறைமுக சாயத்துடன், வல்லமையுள்ள மனிதர்கள் அமெரிக்கா வந்து சேர்ந்தார்கள். சிறு குற்றங்கள் செய்தவர்கள்கூட சில சமயங்களில் நாடு கடத்தப்பட்டார்கள்; இன்னல்களைச் சமாளிக்க முடியாதபோது சில பிரிட்டானியர் நாடு கடத்தப்படுவதற்காகச் சட்ட விரோதமான சிறு குற்றங்கள் செய்தார்கள்! அவர்கள் அமெரிக்காவுக்கு வந்ததும் குறிப்பிட்ட கால உழைப்புக்காக ஏலத்தில் விற்கப்பட்டனர். இதெல்லாம் ஒரு புறமிருக்க, தெற்கில் உதவாக்கரைகள், நிலையற்றவர்கள், முயற்சியற்றவர்கள், கலகப்பிரியர்கள், முரடர்கள் முதலியோர் கணிசமாகக் கூடினர்; அவர்கள் சோம்பேறி உழவர்கள், ஊரில் ஒழுங்குமுறைக் கடங்காதவர்கள், பொறுப்பறியாதவர்கள். அவர்களுடைய அசமந்தத் தன்மைக்கு பிறவிக் குணத்தைக் காட்டிலும் சீதோஷ்ண நிலை, உணவுக் கொளாறு, கொக்கிப் புழு நோய் முதலியனவே பொறுப்பேற்க வேண்டுமென்று பிற்கால விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர். அடிமை ஏற்பாடும் கூலி வேலைக்கு இகழ்ச்சிப்பட்ட மனித்தது. நிலையற்ற அம்மனிதரை மிகைக் கூற்றுடன் ஹாஸ்யமாய் வர்ணிக்கையில் வில்லியம் பர்ட் குறிப்பிடுகிறார்—அவர்களுக்குக் கிடைத்த வசதி போதும், அதிகத்திற்காகச் சிறிதும் சிரமப்படமாட்டார்கள். சட்டம், வரி, ஆலயம் இவை அவர்களுக்கு ஆகாதவை, "சும்மா இருக்கும் ஆனந்தமே பேரானந்தம்" என்பர்.

நீக்ரோ அடிமைகள் பெரும்பாலும் ஆஃப்ரிக்காவின் மேற்குக் கரையில் வடக்கே ஸெனெகாம்பியா முதல் தெற்கே அங்கோலா வரையுள்ள பூபாகத்திலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள். 17ஆம் நூற்றாண்டு முடிவடைந்த பிறகு, "ராயல் ஆஃப்ரிகன் கம்பெனி"யின் ஏகபோக உரிமை தீர்ந்துபோனதும், அந்த வியாபாரம் பலரகப்பட்ட அமெரிக்க, பிரிட்டிஷ் வியாபார நிறுவனங்கள் கையிலும் தனிப்பட்டவர் கையிலும் சிக்கிக்கொண்டது. பாஸ்டன், நியூபோர்ட், நியூயார்க், மேலும் தென்னாட்டுத் துறைமுகங்களில் பலர் அந்த வியாபாரத்தால் லக்ஷாதிபதிகள் ஆனார்கள். சார்ல்ஸ்டனில் இருந்த அடிமை சந்தைப்பேட்டையே மிக சுறுசுறுப்பானது எனலாம்; தோட்டக்காரர்கள் தொலைவிலிருந்து வந்து சிறந்த யௌவன நீக்ரோக்களுக்காக 40 சவரன் வரை விலை கொடுப்பார்கள். வடக்கே அடிமை வர்த்தகனே தேவைப்பட்டவருக்கு ரொக்கத்திற்கு அடிமையை நேரில் விற்பது வழக்கம்; தெற்கேயோ, பல மத்தியஸ்தர்கள் புகையிலை, அரிசி, நீலி முதலியவற்றிற்குப் பதிலாக அடிமைகளைக் கூட்டம் கூட்டமாக வாங்குவார்கள். கடைசியில் வயலில் போய்ச் சேர்ந்த

பிறகு அவ்வடிமைகளுக்கு உடுக்க முரட்டுத் துணிகளும் வசிக்க மட்டமான குடில்களும் கிடைக்கும்; மிகவும் கண்டிப்பான கல் நெஞ்சுள்ள, கங்காணிகளின் கீழ் அவர்கள் சிரமப்பட்டு உழைக்கவேண்டும். பெரிய வீடுகளில் பணியாட்களாய் அமர்ந்தவர்கள் சற்று அதிர்ஷ்டசாலிகள். வடக்கேயும் தெற்கேயும் வெள்ளையர்-நீக்ரோ கலப்பகள் (Mulattoe) ஏற்பட்டன. தெற்கே அடிமை முறை அதிகரித்ததும் விசாலமான புகையிலைத் தோட்டங்களிலும், நெல் வயல்களிலும் ஒப்பந்த வேலைக்காரர்கள் அல்லது வேறு வெள்ளைக்காரப் பாட்டாளிகளைக் காண்பது அரிதாயிற்று.

நியூ இங்கிலாந்தும் தென் மைதானங்களும் மிகவும் மாறுபட்டவை, நடுக் காலனிகளில் இரண்டின் அம்சங்களும் கூடி விளங்கின என்பது தெளிவே. நியூ இங்கிலாந்து சிறு பண்ணைகள் தவிர வேறெதற்கும் உகந்ததில்லை; வர்ஜீனிய மைதானம், தென் கரோலினா, ஜ்யார்ஜியா, ஆகியவை பெரிய தோட்டங்களுக்கேற்றவை. நியூ இங்கிலாந்தில் ஊக்கமளிக்கும் வான நிலையில் குடியானவர்கள் தாங்களே உழைத்தார்கள். தெற்கே, சுட்டெரிக்கும் வெயிலில் அடிமைக் கூட்டங்கள் கங்காணிகளால் விரட்டப்பட்டுக் கடுமையான வேலை செய்தன. வடக்கே, காலி நிலம் நிறைய இருந்ததாலும், சிறு தோட்டமே சாத்தியமாகையாலும், பெற்றோர் மக்களுக்கு நிலங்களைச் சமமாகப் பிரித்துக் கொடுத்தார்கள்; தெற்கே அடிமைகள் கொண்ட பெரிய எஸ்டேட்டுகள் பிரிக்கப்பட்டால் நஷ்டமேற்படுமாகையால் 'முதல் மகனுக்கு முழுச் சொத்து' என்னும் ஆங்கிலச் சட்டம் மூலமும் (Law of primogeniture) அனுபவ பாத்தியதை மாத்திரமுள்ள உயில்கள் மூலமும் (Entail) அவை பூர்ணமாகக் காப்பாற்றப்பட்டன. வடக்கே, கோயில்களின் வெற்றிகரமான விருத்திக்காக ஜனங்கள் கிராமங்களில் கூடி வசித்தார்கள்; தெற்கே பெரும்பாலும் மதத்தின் பந்தனம் அவ்வளவாக இல்லாததோடு, பண்ணைத் தோட்டங்கள் பரவிச் சிதறலாக இருந்ததால் கிராம வாழ்க்கை சாத்தியமில்லை. வடக்கே (ஜில்லாக்கள் அமைக்கப்பட்ட போதிலும்) பட்டணங்களுக்கே அரசியல் முக்கியத்துவம் இருந்தது; தெற்கே முழு ஜில்லாதான் முக்கியமாக விளங்கிற்று. ஸ்தல உத்தியோகஸ்தர்களை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது நியூ இங்கிலாந்தில் பொதுவாக ஒரு விதி; தெற்கே, ஒரு கோஷ்டி சிலரைத் தேர்ந்தெடுத்தது. செல்வர்களின் தர்களைப் பாரிஷில் வசிக்கும் மக்கள் தேர்ந்தெடுக்கவில்லை; காரியஸ்தர்களே காலி இடங்களுக்குப் புதிய ஆட்களைப் பொறுக்கியெடுத்தனர். ப்யூரிடன்களை உல்லாசம், வேடிக்கை, சுகம் ஒன்றும் நாடாத 'உம்-மண்ணு மூஞ்சிகள்' என்று



வர்ணிப்பதுண்டு; அது மிகைக் கூற்றுஞலும், மனச்சாட்சியின் ஆதிக்கமும் சுயக் கட்டுப்பாடும் அவர்களிடம் அதிகம்; தென் ஞட்டார் சிரித்து விளையாடி சுகித்து இயற்கையாகக் காலம் கழிப்பவர்கள். பல அம்சங்களில் மத்தியக் காலனிகள் இவ் வீ ரண்டுக்கும் இடையே இருந்தன.

எனினும் 18ஆம் நூற்றாண்டு கழியக் கழிய, ஜன அடர்த் தியும் செல்வமும் வளர வளர, சமுதாயச் சிக்கல்கள் அதிகம் ஆக ஆக, சமூகப், பொருளாதார கோஷ்டிகள் வகுப்புத் தடுப்புக்களைப் பிளந்து கொண்டே சென்றன. தெற்கே சார் ல்ஸ்டன், நார்ஃபக், வடக்கே போர்ட் ஸ்மித், பாஸ்டன் போன்ற நகரங்களில் வியாபாரக் காரியாலயங்கள் ஒரே அச் சில் வார்த்தவை போலிருந்தன; தனவான்களின் வீடுகளும் அதிகவித்தியாசமின்றி இருந்தன. கரோலினுவிலிருந்து மாஸ சுஸெட்ஸ் வரை துறைமுகப் பட்டணத் தொழிலாளிகளின் பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருந்தனர்—அதே பண்பற்ற கூச்சல், கொச்சை ஹாஸ்யம், தம்-தொழில்-பெருமையால் ஏற்பட்ட புதுக் கருத்துக்கள், அல்ப காரணம் கிடைத்தாலும் சாராய விடுதிகளிலிருந்து ஈசல் புற்றுக் கிளம்பத் தயாரா தல்—இத்தியாதி. சிறு பண்ணையாளர்கள், சிக்கனமறிந்த உழைப்பாளிகள், பெரும்பாலும் தம் தேவையைத் தாமே பூர்த்தி செய்துகொள்பவர்கள்—அவர்களும் எல்லா இடங்களி லும் ஒரேமாதிரி இருந்தார்கள். எல்லைப்புற முன்னேடிகளும் வடக்கிலும் தெற்கிலும் அதிகபேதமின்றி இருந்தார்கள்.

எல்லைப்புறம்: நான்காவது பெரிய பகுதியாகிய எல்லைப் பிரதேசம் 18 ஆம் நூற்றாண்டில் தெளிவான உருவம் பெற்றது. அது வடக்கே வெர்மான்டின் ''பச்சைமலை''களிலிருந்து ...ஹாக் பள்ளத்தாக்கு, அல்லெகெனி மலையின் கீழ் ஓரம், ...ாவில் ஷெனண்டோவா பள்ளத்தாக்கு, கரோலினு ...ட் பிரதேசம் வரை நீண்டிருந்தது. அங்கு ...க்க மனப்பான்மையுள்ள எளிய பயமற்ற ...கள்.

...ிரண்டு ஷில்லிங்கு வீதம் மலிவாக, ...ன் தண்டல்காரன் என்ற முறை ...ர்கள் அவசியமான பாதைகள் ...ரித்து, அடிமரங்களுக்கிடையே ...ார்கள். அவர்கள் மரக்குடில் ...வெளிகளில் களிமண் அடைத்து ...ரை பாவி ஜன்னல் கண்ணுடிக் ...ி நனைத்த காகிதங்களை உப ...ல் நாற்று நெசவு செய்து ...க் கொண்டார்கள்; ஆண் ...ியால் தைக்கப்பட்டவை.

காலங்கிகள் மான் தோலாலானவை. முரட்டுப் பலகைகளா லேயே அவர்கள் தட்டுமுட்டுச் சாமான்களும், பைன் கட்டை களிலிருந்து சாப்பாட்டுத் தட்டுகளும் செய்து கொண்டார்கள்; தானியங்களை மாவாக இடிக்க மர உரல்கள் உதவின. அவர் கள் வெறுங்காலுடன் நடந்தார்கள் அல்லது செவ்விந்தியர் அணிவதைப்போன்ற ஜோடு (Moccasin) அணிந்தார்கள். அவர்கள் சோளக்குருணையுடன் வெந்த பன்றி இறைச்சியும், மான் இறைச்சி, காட்டு வான்கோழி, கவுதாரி, ஓடை மீன் முதலியவற்றைத் தின்றார்கள். சிதறிக் கிடக்கும் அவர் கள் இந்திய விரோதிகளிடமிருந்து தற்காப்புக்காக மையமான ஒரு நீர் ஊற்றைச் சுற்றி ஒரு சிறு கோட்டை கட்டிக் கொண் டார்கள். அளவு கடந்த உற்சாக முள்ள வேடிக்கைகளும் அவர்களுக்குண்டு—அரசியல் கட்சிக் கூட்டங்களில் உணவு கள் ஏராளமாகப் பரிமாறப்படும். முழு எருது, சலாகையில் ஏற்றி வறுக்கப்படும்; புதிதாய் மணந்தவர்களின் கிரகப் பிர வேசத்தின்போது குடியும், நாட்டியமும் பலமாக இருக்கும்; துப்பாக்கிக் குறிப் பந்தயங்கள் நடைபெறும். ஒரு பெண் துணி மெத்தை—தளிமம்—தைக்க வேண்டியிருந்தால், பல ஸ்திரீகள் கூடிச் சுறுசுறுப்பாக உதவி புரிந்து அந்தச் சந்தர்ப் பத்தை வீணுக்காமல் வம்பர் மகாசபையாக (விளையாட்டுப் பேச்சுவார்த்தைக்கு)ப் பயன்படுத்திக்கொள்வார்கள்; நாட்டி யத்திற்காக அவர்கள் கூடுவார்கள். விர்ஜீனியிலும் அயர்லண்டிலும் ஏற்பட்டது போல் இங்கும் இனங்களிடையே சண்டைகளும் திடீர்த்தாக்குதல்களும் நடைபெறுவதுண்டு; அப் பொழுது ஒரே கலவரமாக இருக்கும். பென்ஸில்வேனிய எல்லை யில் ஸ்காட்ச்-ஐரிஷ்காரர்கள் ஒரு புறமும் ஜெர்மானியர் ஒரு புறமுமாக மாறிமாறிப் பழி வாங்கும் சண்டைகள் பிடிப்பார் கள். வர்ஜீனியாவிலும் கரோலினுவிலும் தனிப்பட்டவரின் சண் டைகளுக்கு ஒரு விதியும் கிடையாது. சுட்டை விரலால் கண் விழி பிதுக்கப்பட்டவர்களைப் பார்ப்பது அரிதல்ல! எல்லைவாசி கள் எல்லோரும் இந்தியரைச் சந்துரு எனவே கருதினர்; சில இனத்தார் சிநேகமாக இருந்தார்கள் எனினும், பொதுவில் எல்லைவாசிகள் காட்டோடும் செவ்விந்தியனோடும் போர் புரிந்த வண்ணமிருந்தார்கள். ஆகவே எச்சரிக்கையாயிருத்தல், முரட்டு ஜீவனம், இன ஒற்றுமை ஆகிய குணங்கள் அவர்கள் உடலில் ஊறிப்போயின.

எல்லைப்புற வியாபாரி இன்னெரு விசித்திரமான, சுறு சுறுப்புள்ள சிருஷ்டி; அவன் இந்தியர்களிடம் சாமான்களை வாங்கி நாகரிகமான மார்க்கெட்டுகளில் விற்க உதவினன். வடக்கே ஜ்யார்ஜ் க்ரோகனும், தென்மேற்கே பல கலைகள் கற்ற, பண்படைந்த ஜேம்ஸ் அட்டேரும் நல்ல உதாரணங்கள்; இருவரும் பூர்வ குடிகளின் நண்பர்கள். வெகு தூரம் சென்று

நாட்டை ஆராய்ந்த சூரர்கள்; மேற்கு நாடுகள் கூடிய சீக்கிரம் விடுதலையடையும் என்று முன்கூட்டியே பார்த்தவர்கள். காலனி யுகத்தின் பிற்காலத்தில் க்ரோகன் நியூயார்க் மாகாணத்தில் இரக்வாய் இனத்தார் கலகம் செய்யாமல் அடக்கி வைத்திருந்தான்; ஓஹியோ நதியின் மேல் பகுதியில் குடிகள் வர ஏற்பாடு செய்தான்; இந்தியரின் கால் தடப் பாதையில் இரண்டாயிரம் மைல் தூரம் தனக்குப் பரிச்சயம் உண்டு என்பது அடேரின் பெருமை. எல்லைப்புறம் நிலச் சூதாடிகளையும் ஊக்குவித்தது—புரட்சிக்குச் சற்றுமுன் வடகரோலினுவைச் சேர்ந்த ரிச்சர்ட் ஹெண்டர்ஸன் தற்சமயம் கென்டக்கி எனப்படும் பிரதேசத்தின் பெரும் பாகத்தை செரோகீ இனத்தாரிடமிருந்து வாங்கி, நிலச்சுவான்தார் காலனிபோல அதை மாற்றத் தீர்மானித்தான். எல்லைப்புறம் ராபர்ட் ரோஜர்ஸ், ஜான் ஸெவியர் போன்ற துணிந்த போர் வீரர்களையும் உண்டாக்கிற்று. நியூ ஹாம்ப்ஷயரைச் சேர்ந்த ஸ்காட்ச்-ஐரிஷ்காரனான ரோஜர்ஸ் ஃப்ரெஞ்சு, இந்தியப் போரில் 'வட கிழக்கு எல்லைச் சூரன்' என்ற பெயர் பெற்றான். ஸெவியர், "டென்னெஸி பிரதேசத்தில் முப்பத்தைந்து சண்டைகள் பிடித்தேன், முப்பத்தைந்து வெற்றிகள் அடைந்தேன்" என்று தற்பெருமையுடன் கூறினான். . . . . அமைதி அறியாத முன்னோடிகளுக்கு டேனியல் பூன் மிகச் சிறந்த உதாரணம். அவன் வடகரோலினுவைச் சேர்ந்தவன். 1769-ல் கப்பர்லண்டுக் கணவாய் என்னும் மந்திர வாசல் வழியாக அவன் பயங்கரமான அப்பலாச்சியன் மலையை ஊடுருவிச் சென்று கென்டக்கியை அடைந்தான். அந்த வளமான இந்திய வேட்டைப் பிரதேசத்தில் தனியாகப் பல ஆராய்ச்சிகள் நடத்தி அவன் கென்டக்கியின் இயற்கைச் சிறப்புகளை உலகுக்கறிவிக்க மிகவும் உதவினான்; ஹெண்டர்ஸனுக்கும் அவன் போன்ற பல காலனி அமைக்கும் கோஷ்டிகளுக்கும் பூன் உபகாரமாக இருந்தான். எல்லாவற்றிலும் முக்கியமாக எல்லைப்புறத்தின் முன்னோடிக் குடியானவர்களைக் குறிப்பிடவேண்டும்; அவர்கள் வாசஸ்தலங்களின் பரப்பையும் நாகரிகத்தின் பிரசாரத்தையும் பெருக்கினார்கள்.

எல்லைப்புறம் ஆபத்தும் துன்பமும் நிறைந்தது என்றாலும் அதன் புதுமையையும் கவர்ச்சியையும் பலர் அசட்டை செய்ய முடியவில்லை. வில்லியம் பர்டின் நூலைப் படித்தால் அதன் இயற்கை சௌந்தரியம் சிலரை எப்படி மயக்கிற்று என்பது தெரியும். காட்டு வாசத்தின் ஆனந்தத்தை ஒரு முறை பருகியபின் பல முன்னோடிகள் அதையே மிகவும் விரும்பினர்.

கலாசாரம்: காலனி யுகத்தின் பிற்பகுதியில் அனுகூலமான சமுதாயங்களில் கலாசாரம் நன்கு வளர ஆரம்பித்தது. விசேஷமாக நியூ இங்கிலாந்தில் கல்வி மிக முக்கியமாகக் கருதப்பட்டது. அங்கு காலனிகள் இளமை நிலையிலிருக்கும் போதே ரோட் ஐலண்ட் தவிர பாக்கி இடங்களில் ஆரம்பக் கல்வி சிறிதளவேனும் கட்டாயமாக்கப்பட்டது. சில உயர் தரப் பள்ளிகளும் இருந்தன. ஹார்வர்ட், யேல் ஆகிய இரு கல்லூரிகளும் விருத்தியாகி வந்தன. டார்ட்மத், ரோட் ஐலண்டு இரு இடங்களிலும் கல்லூரிகள் ஆரம்பமாகிக்கொண்டிருந்தன.

விஸ்தாரமான செங்கல் கட்டடங்கள் உள்ள ஹார்வர்ட் கல்லூரியில் 5,000 நூல்களுள்ள புத்தகசாலையும், நல்ல விஞ்ஞான சாலையும் இருந்தன; கிறிஸ்தவ ஆகமத்திலும், தத்துவ ஞானத்திலும், க்ரீக் லத்தீன் போன்ற மொழிகளிலும் அங்கு அளிக்கப்பட்ட பயிற்சி சிறந்த ஐரோப்பிய சர்வகலாசாலைகளில் கிடைக்கும் கல்விக்கு மட்டமானதல்ல.

நடுக் காலனிகளில் மேரிலண்டு மாத்திரம் கல்விப் பிரசாரத்தில் அக்கறை காட்டிற்று; ஆனால் சாதனை திருப்திகரமாக இல்லை. க்வேக்கர்கள், ஜெர்மானியர் இருவரும் பள்ளிகள் நடத்தினார்கள்; அவை ஓரளவு மத ஸ்தாபனத்தின் கீழிருந்தன. பென்ஸில்வேனியாவில், முக்கியமாக ஃபிலடெல்ஃபியாவிலும் அதன் அருகாமையிலும், பல ப்ரைவேட் பள்ளிகள் இருந்தன. லாங்க் ஐலண்டில் சில நல்ல பள்ளிக் கூடங்களும் நியூயார்க் நகரில் சில உயர்தரக் கலாசாலைகளும் இருந்தன; ஆனால் கல்வித்திட்டம் என்று சொல்லும்படி ஒன்றுமில்லை. தெற்கே கல்வி பெரும்பாலும் தனிப்பட்டவர் கையிலிருந்தது. மத உபதேசகர்களும் இதரர்களும் அவற்றை நடத்தினார்கள். பணம் படைத்த தோட்ட முதலாளிகள் இங்கிலாந்திலிருந்தோ வடக்குக் காலனிகளிலிருந்தோ உபாத்தியாயர்களை வரவழைத்தார்கள்; எழுத்து, படிப்பு, விவகார கணிதம், லத்தீன், க்ரீக் முதலியன கற்பிக்கப்பட்டன. இலவச வித்தியாலயங்கள் வர்ஜீனியாவில் இரண்டும் தென் கரோலினுவில் இரண்டும் பணியாற்றின. மத்தியக் காலனிகளிலும் தென் காலனிகளிலும் பல கல்லூரிகள் நிறுவப்பட்டன. வர்ஜீனியாவில் வில்லியம் அண்டு மேரி கல்லூரி, ஃப்ராங்க்லினின் பெரும் முயற்சியால் உண்டான ஃபிலடெல்ஃபியா கல்லூரி (இப்பொழுது பென்ஸில்வேனியா சர்வகலாசாலை), ப்ரின்ஸ்டன் கல்லூரி, நியூயார்க்கில் கிங்க்ஸ் காலேஜ் (இப்பொழுது கொலம்பியா சர்வகலாசாலை). நியூ யார்க்கிலும் தெற்கிலும் இருந்த பல செல்வர்கள் தம் குமாரர்களைப் பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளுக்கோ லண்டனில் பாரிஸ்டர் கல்வி நிலையங்களுக்கோ அனுப்பினர்.

காலனிகளில் செய்தித் தாள்கள், பத்திரிகைகள், பஞ்சாங்கங்கள் முதலியவற்றோடு நீண்டகால மதிப்புள்ள நூல்களும் பிரசுரிக்கப்பட்டன. அமெரிக்காவின் மிகப் பழைய அச்சாலயம்

1639-ல் கேம்பரிஜில் அமைக்கப்பட்டது; அது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. புரட்சி துவங்குகையில் பாஸ்டனில் ஐந்து செய்தித் தாள்களும், ஃபிலடெல்ஃபியாவில் மூன்றும் இருந்தன. புஸ்தக வியாபாரிகளுக்கு சமூகத்தில் முக்கியமான இடம் கிடைத்தது; பல புஸ்தக நிலையங்கள் கிளம்பின; பாஸ்டன் நிலையம் 1656-ல் ஆரம்பமாயிற்று. இரு எழுத்தாளர்கள் ஐரோப்பாவிலும் கீர்த்தி பெற்றார்கள்—ஆகமங்களையும் தத்துவத்தையும் பற்றி எழுதிய ஜானதன் எட்வர்ட்ஸ்; விஞ்ஞானமும் பண்புள்ள இலக்கியமும் எழுதிய பென்ஜமின் ஃப்ராங்க்லின். முன் குறிப்பிட்ட ஸாம்யுல் ஸுஅல் (செல்வமுள்ள யாங்கி ஜஜ், சுறுசுறுப்பான நிர்வாகி, பழையதில் பிடிவாதமான பற்றுள்ளவர்), கர்னல் வில்லியம் பர்ட், (பண்புள்ள தோட்ட முதலாளி, ராயல் ஸொஸைடி அங்கத்தினர், வர்ஜீனியப் பிரதம்ப் பிரமுகர்) ஆகிய இருவரும் ஜான் உல்மன் போலத் தினசரிக் குறிப்பு எழுதினார்கள்; அவை மறக்கக் கூடியவை அல்ல. எளிய க்வேக்கர் குடியானவர், ஜான் பார்ட்ராம், விஞ்ஞான முறையில் நன்முய் கவனிப்பவர்; தாவர சாஸ்திரத்தில் மகாசிரேஷ்டராகிய லின்னேயஸ் அவரை உலகத்தின் மிகப் பெரிய ''இயற்கைத் தாவர சாஸ்திரி'' என்று பாராட்டினார். நியூ யார்க்கைச் சேர்ந்த கோல்டன் ''ஐந்து இந்திய ஜாதிகளின் சரித்திரம்'' எழுதிப் பிரசித்தி பெற்றார். பென்ஸில்வேனியாக்காரரான டேவிட் ரிட்டென்ஹௌஸ், வான சாஸ்திரத்திலும் கணிதத்திலும் சர்வதேசக் கீர்த்தி யடைந்தார். வர்ஜீனியாவாசி ஜான் மிச்செல் தாவர இயல், மருத்துவம், விவசாயம் ஆகியவற்றை ஆராய்ந்து ராயல் ஸொஸைடி அங்கத்தினராஞர். ''இலக்கிய யாஜி'' என்பது போன்ற பட்டம் பெற்ற காட்டன் மாதெர், நியூ இங்கிலாந்துக்காரர், பெரிது சிறிதுமாக 383 நூல்கள் வெளியிட்டார்; அவற்றுள் ''அமெரிக்க கிறிஸ்தவ அதிசயங்கள்'' என்னும் நூல்கள் மிக விஸ்தாரமானவை. சரித்திர ஆசிரியர், தாமஸ் ஹச்சின்ஸன் (மாஸசுஸெட்ஸ்), அவர்களின் நூல்கள் இன்றைக்கும் ஆவலோடும் லாபகரமாகவும் வாசிக்கப்படுகின்றன. காலனிகளில் நல்ல ஞெயர்களும் இருந்தார்கள்; புரட்சிக்குச் சிறிது முன் இங்கிலாந்து சென்ற பென்ஜமின் வெஸ்ட் என்பவர் ஸர் ஜாஷுவர் ரேனல்ட்ஸுக்குப் பிறகு ராயல் கலைச் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஃப்ராங்க்லினின் சுய சரித்திரத்தைப் படித்தால் கலாசார சாதனங்கள் எப்படி வளர்ந்தன என்பது தெளிவாகத் தெரியும். 1706-ல் பாஸ்டனில் பெரிய குடும்பத்தில் பிறந்தவர்; தம் வீட்டில் சாப்பாட்டு நேரத்தில் 13 குழந்தைகள் ஆஜராவதை அவர் குறிப்பிட்டிருக்கிறார்; அவர் பெரும்பாலும் சுயமாகக் கல்வி கற்றவர். இங்கிலாந்திலிருந்து வரும்போது

அவருடைய தகப்பனார் பல நல்ல புஸ்தகங்கள் கொண்டுவந்திருந்தார். இளைஞன் அவற்றைப் படித்தான். 12 வயதாயிருக்கும்போது அவன் ஒரு அச்சுக்கூடத்தில் வேலை கற்கப் போனான். அங்கு சில சிறந்த நூல்கள் கிடைத்தன. சொற்பப் பணத்திற்கு அவன் அடிஸன் எழுதிய ஸ்பெக்டேடர் (Spectator) கட்டுரைகள் வாங்கிப் படித்தபோது அவனுக்கும் கட்டுரைகள் எழுத வேண்டுமென்ற பேரவா உண்டாயிற்று. தன் அபிவிருத்திக்காக அவன் ஃபிலடெல்ஃபியா சென்றதும் அங்கு இலக்கியம் வேர் விட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தான். அங்கிருந்த அச்சுசாலை மிகவும் ஹீன நிலையில் இருந்தது. இங்கிலாந்து சென்ற அவ்விளைஞன் சிறிது காலத்திற்குப் பிறகு தான் பிறந்த நாடு திரும்பி ஓயாத ஊக்கத்துடன் தன் பட்டணத்தை விருத்தி செய்ய ஆரம்பித்தான்.

அவன் ஒன்பது அங்கத்தினர்களுடன் ''பரஸ்பர முன்னேற்ற க்ளப்'' ஆரம்பித்தான்; அதன் பல செல்வாக்குள்ள கிளைகள் உண்டாயின. அவன் சந்தா வசூலித்து புத்தக நிலையம் அமைத்து வீட்டிற்கு எடுத்துச்செல்ல நூல்கள் இரவல் கொடுத்தான். 1731-ல் துவங்கிய அதுவே முதல் அமெரிக்க சர்க்குலேடிங் லைப்ரரி. அது சீக்கிரம் வளர்ந்தது. அவன் ஆரம்பித்த கல்வி ஸ்தாபனம் அரசாங்கப் பதிவும், பென் போன்றவரிடமிருந்து நன்கொடைகளும் பெற்று ஒரு சர்வகலாசாலையாயிற்று. சச்சரவுகளைத் தவிர்த்து உண்மையான செய்திகளை தர அவன் ஒரு பத்திரிகை ஆரம்பித்தான்—அதுவே ''ஸாடர்டே ஈவனிங் போஸ்ட்.''

1743-ல் ஃப்ராங்க்லின் ''அமெரிக்க தத்துவஞான சங்கம்'' ஆரம்பித்தார். ஜ்யார்ஜ் வைட்ஃபீல்டின் அபாரப் பிரசங்க சக்தியை வர்ணித்து அவர் ''க்வேக்கர் கஞ்சர்களின் சட்டைப் பைகளிலிருந்துகூட நன்கொடைத் தொகை பெயர்ந்தது!'' என்கிறார். பல விவரங்களுக்கிடையே அவர் தன்னுடையது போன்ற சாமான்ய வீடுகளிலும் சிறந்த பீங்கானும் வெள்ளிச் சாமான்களும் புகுந்ததை வர்ணிக்கிறார். அப்பொழுது அமுலில் வந்து கொண்டிருந்த அம்மை குத்தும் முறையைப்பற்றிக் கூறுகையில் அவர் அவ்விஷயத்தில் அசட்டையாக இருந்து நன்முய் வளர்ந்த நான்கு வயது மகனை இழுந்ததற்காகத் தன்னைத் தானே கண்டித்துக் கொள்கிறார். விஞ்ஞானத்தில் எப்பொழுதுமே அவருக்கு ஆர்வம் உண்டு; கருமேகங்களுக்கிடையே ஒரு காற்முடியைப் பறக்கவிட்டு அதன் நூல் வழியாக அவர் மின்சக்தியை இறக்கியது உலகப் பிரசித்தியான ஆராய்ச்சி; மேகங்களிலிருந்து மின்னலைப் பிடுங்கியெடுத்தவர்—என்று ஒரு ஃப்ரெஞ்சு ஆசிரியன் அவரைப் பாராட்டினான். அதன் பிறகு அவர் ''கொடிய மன்னன் கையிலிருந்து ஆட்சிக்கோலையும் பிடுங்கினார்''—1754-ல் ஆல்பனி காங்கிரஸ் எனப்படும்

முதல் சர்வ-காலனி-மகாநாட்டில் அவர் பென்னில்வேனியாவின் பிரதிநிதியாகச் சென்றபோது அக்காரியம் ஆரம்பமாயிற்று. 1753 முதல் 1774 வரை அவர் காலனிகளுக்கு டிப்டி போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகப் பணியாற்றினார்; அப்பொழுது அவர் கடிதப் போக்குவரத்தில் செய்த சீரமைப்புகளால் அமெரிக்கக் கலாசாரம் வளர்வது துரிதப்பட்டது. மொத்தத்தில், காலனிகளின் கலாசார வசதிகளைக் கொண்டு எவ்வளவு செய்யமுடியும், திறமையுள்ள ஒரு நாயகன் அதை எவ்வாறு வலுப்படுத்த முடியும் என்பது தெரிகிறது.

நாட்டில் செல்வம் வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது; முன்னிலும் சிறந்த வீடுகள் கட்டப்பட்டு வந்தன; உணவிலும் உடையிலும் சுகபோகம் பெருகி வந்தது; புது நாகரிக பாவனைகள் சகஜமாகி வந்தன. 1750-க்குள் சிறந்த ஐரோப்பியச் சிந்தனையின் பரிச்சயம் பெற்றவர்களை கிழக்குக்கரைப் பட்டணங்களில் காண முடியும். லண்டன், பாரிஸ் தவிர மற்றெந்த பிரிட்டிஷ் அல்லது ஃப்ரெஞ்சு பட்டணத்திலுள்ள மென்மையையும் நாகரிகத்தையும் பாஸ்டன், நியூயார்க், ஃபிலடெல்ஃபியா, சார்ல்ஸ்டன் ஆகிய நகரங்களில் காணலாம். அதே சமயத்தில் நாடு விஸ்தாரமாகி, எல்லை மேலும் மேற்கே நகர்ந்துகொண்டிருந்தது; அப்பலாச்சியன் மலைகளின் கணவாய்கள் வழியாகச் சிறு மனித ஓடைகள் ஒஹியோப் பக்கமும், கென்டக்கி பக்கமும் பாய்ந்து கொண்டிருந்தன. முரட்டு எல்லைப்புற முன்னோடிகள் பெரு வாழ்வு, ஃபாஷன், உயரிய கருத்து என்றெல்லாம் ஏங்கவில்லை; காட்டை வசப்படுத்தி நாடாக்குவதே அவர்களுடைய ஜீவன லக்ஷியம், கடமை. ஒரு புறம் நல்ல நாகரிக தோட்டக்காரர்களும் வியாபாரிகளும், மறு புறம் இந்தியரை ஒழிக்கும் எல்லைப்புறத்தார், இரு இனங்களுக்குமிடையே பெரிய எண்ணிக்கையுள்ள சாதாரண மத்திய வகுப்பார்; அவர்களே 1775 ஆம் ஆண்டின் அமெரிக்கப் பிரதிநிதிகள். சுதந்திரக் குடியானவர்கள், சிறு தோட்ட முதலாளிகள், திட உடலுள்ள ஆசாரிகள், சுறுசுறுப்பான கடைக்காரர்கள்—இவர்களுக்கு அமெரிக்காவைத் தவிர வேறு இடம் தெரியாது, அமெரிக்க வாழ்வு முறையைத் தவிர வேறு ஒன்றும் ரூசிக்காது. அவர்கள் பிரிட்டிஷ் மன்னரின் விசுவாசமுள்ள பிரஜைகள், இங்கிலாந்தைப் போற்றுபவர்கள், தங்கள் பிரிட்டிஷ் உறவைப்பற்றிப் பெருமைப் படுபவர்கள். ஆனால் அடிமனத்திலேனும் அமெரிக்கா வேறுபட்டது, பிற்கால உலக சரித்திரத்தில் அமெரிக்கா செலுத்தவேண்டிய தனிக் கடமையுண்டு என்று உணர்ந்தவர்கள்.

காலனி யுக ஆஸ்தி: வளரும் நாட்டுக்குக் காலனிகள் அளிக்க இருக்கும் சொத்தில் ஒரு பகுதி யாவரும் அறிந்ததே. ஆங்கிலம் என்னும் பொது மொழி நாடு முழுதுக்கும் கிடைப்பது

கணக்கிடமுடியாத மதிப்புள்ளது. உண்மையில் ஒரு தேசத்தை இணைப்பதற்கான மிக முக்கியக் கயிறுகளில் அது ஒன்று. பிரதிநிதி ஆட்சி முறையில் கிடைத்த நீண்ட விஸ்தாரமான பயிற்சி இன்னொரு மதிப்பிட முடியாத செல்வம். இக்காலத்தவர் 'இதென்ன பிரமாதம்'—என்று நினைக்கலாம்; ஆனால் ஃபிரெஞ்சுக் காலனிகளிலும், ஸ்பானியக் காலனிகளிலும் அது சூன்யம் என்பதை அறிந்தாலே அதன் மகிமை தெரியும். வாக்காளர்கள், வாக்குப் பெற்றவர்கள் இருவருக்கும் உண்மையான அரசியல் பொறுப்புள்ள அரசாங்கமும் மக்கள் சபையும் அமைக்க பிரிட்டிஷார் மாத்திரமே தம் காலனிகளுக்கு அனுமதி யளித்தார்கள் என்பது நினைவிருக்கவேண்டும். அதன் பலனாக பிரிட்டிஷ் காலனிக்காரர்களுக்கு அரசியல் மனப்பான்மையும் அரசியல் அனுபவமும் இருந்தன. அதி அவசியமான சிவில் உரிமைகளுக்கு அளிக்கப்பட்ட மரியாதை இன்னொரு முக்கியமான செல்வமாகும்; தாய் நாட்டில் பிரிட்டிஷாருக்கு இருந்தது போலவே காலனிக்காரர்களுக்கும் பேச்சு சுதந்திரம், அச்சுப் பிரசார சுதந்திரம், சபை சுதந்திரம் ஆகியவற்றில் திடமான நம்பிக்கையிருந்தது. பொதுவாகக் காலனிகளில் தென்பட்ட மதாசார சகிப்புத் தன்மையும், பல பிரிவாரும் சமரஸமாக வாழமுடியும், வாழவேண்டும் என்ற அறிவும் இந்த ஜாப்தாவில் சேரவேண்டும். பிரிட்டிஷ் கொடியின்கீழ் ஒவ்வொரு சமயக் சொள்கைக்கும் பாதுகாப்புணடு; இங்கிலாந்தில் கத்தோலிகர்பால் விரோதம் மக்களின் ரத்தத்தில் ஊறியிருந்தாலும் அவ்வினத்தாருக்கு அரசாங்கம் அதிக சலுகை காட்டுவதாக 1763-க்குப் பிறகு சில காலனிக்காரர்கள் பார்லிமெண்டு மேல் குற்றம் சாட்டும் சந்தர்ப்பமும் இருந்தது. ஜாதிப் பிரிவினையை வளர்க்காத சகிப்புத்தன்மையும் அதேபோல பாராட்டத்தக்கது; ஏனென்றால் பல ரக ரத்தம் கொண்டவர் கலந்து வாழ்ந்தனர், விவாகம் செய்துகொண்டனர், பேதங்களை அடியோடு மறந்தனர்.

தனி யத்தனங்களுக்கான பேரவாவையும் நாம் அவசியம் குறிப்பிடவேண்டும்; அது பிரிட்டனின் குணாதிசயங்களில் ஒன்று; இந்த சந்தர்ப்பத்தில், வளங்கள் நிறைந்த ஆனால் அடங்காப்பிடாரி போன்ற புது நாட்டில் சதா எதிர் நீச்சு போட்டு முன்னேறவேண்டிய நிலையில், அக்குணத்தின் மகிமை உயர்கிறது. ஃப்ரெஞ்சு ஸ்பானிய ஆதிக்க நாடுகளில் தன்முயற்சியைக் கொன்ற ஏகபோக உரிமைகளை பிரிட்டிஷார் தம் காலனிகளில் அனுமதிக்கவேயில்லை. மொத்தத்தில் பார்த்தால், காலனி யுக ஆஸ்தியின் இந்த அம்சங்கள் கப்பல் கப்பலாகப் பொன் அல்லது ஏக்கர் கணக்கில் ரத்தினங்களைக் காட்டிலும் அதிக மதிப்புள்ளதாகும்.

அந்த யுகத்தில் இரண்டு அடிப்படையான அமெரிக்கக் கருத்துகளும் வேரூன்றின. ஒன்று: குடிநல வாழ்வு—எல்லோருக்கும் ஏறத்தாழ சம வாய்ப்புக்கு உரிமையுண்டு என்ற கொள்கை. கூட்டங் கூட்டமாக ஜனங்கள் புது உலகுக்கு வந்தது தங்களுக்கு வாய்ப்புகளும், அதைவிட முக்கியமாகத் தம் மக்களுக்கு வாய்ப்புகளும் தேடத்தான். ஒவ்வொருவனுக்கும் ஒரு சந்தர்ப்பம் மட்டுமல்ல, நல்ல சந்தர்ப்பம் அளிக்கும் சமுதாயத்தை நிறுவ முடியும். மேலும் அதில் ஏணியின் கீழ்ப் படியிலிருப்பவன் எல்லாவற்றிற்கும் மேல் படியை எட்டுவது முற்றிலும் அசாத்தியமல்ல—என அவர்கள் நம்பினார்கள். சமபில் மேலும் மாறுதல்கள் உண்டாக்க இருந்தது; தனிச் சலுகைகளை உடைத்தெறிய இருந்தது. கல்வி முறையிலும் அறிவுத் துறையிலும் குறிப்பான மாறுதல்கள் உண்டாக்கி, உலக முழுதிலும் அமெரிக்காதான் "அதிக பொதுப்பள்ளி முறை கொண்ட" நாடு என்றுக்கும் பணி அதனுடையது. அப்பேரவா மகத்தான அரசியல் மாற்றமைப்புகளுக்குக் காரணமாக நின்று, அரசாங்கத்தின் லகாமை நேர்முகமாக சாமான்ய மனிதனின் கையில் கொடுத்தது எனலாம்.

உலகத்தில் அமெரிக்க மக்களுக்காக ஒரு தனிப் பொறுப்பும் கடமையும் காத்திருந்தன. வேறு நாட்டாரால முடியாத சாதனைகள் அது செய்து காட்டும் என்ற நம்பிக்கையே இரண்டாவது அடிப்படைக் கருத்து. பொதுவான இந்த வளம், மக்களின் ஆற்றல், இரண்டையும் போர்த்தியிருந்த சுதந்திரச் சூழ்நிலை—இதெல்லாம் அமெரிக்கருக்கு புதிய, தளர்ந்து கனக்காத, க்ஷேம பாவனையும், தென்பான தன்னம்பிக்கையும் ஊட்டின. விசேஷ வெற்றிகரமான எதிர்காலம் தம்முடையது என்ற எண்ணமே மேற்குக் கடல்வரை அவர்கள் வேகமாய் முன்னேறுவதற்கு ஆற்றலளித்தது. சில சமயங்களில், 'தெய்வ இச்சையை நாம் நிறைவேற்றுகிறோம்' என்ற நம்பிக்கையால் தீமைகளும் வீழ்ந்தன; துன்ப காலத்தில் பொறுப்பைக் கடவுள்மேல் போடத் தோன்றிற்று; மனச்சாட்சியை ஆராயவேண்டிய சமயத்தில் கை கட்டி உட்கார்ந்திருக்கத் தோன்றிற்று. ஆனால் மொத்தத்தில் குடிநல வாழ்வு என்ற கருத்துடன் அது அமெரிக்க வாழ்க்கைக்குப் புதுமையும் விஸ்தாரமும் மலர்ச்சியும் அளித்தது; வேறெங்கும் அதைக் காண முடியாது. புதிய நாடு நற்காலத்தைச் சுட்டிக்காட்டி நம்பிக்கையளித்து படிப்படியாக அடிவானத்தை—பூகோள எல்லை, வாய்ப்பு எல்லை இரண்டையும்—விஸ்தரித்தது.

அத்தியாயம் 3

சாம்ராஜ்யப் பிரச்னை

ஃப்ரெஞ்சுப் போர்கள்: அமெரிக்காவில் பிரிட்டிஷ் காலனிகள் பலமடைந்து விஸ்தரித்தபோது அவை வடக்கேயும், மேற்கேயும், தெற்கேயுமுள்ள ஃப்ரெஞ்சு, ஸ்பானியக் காலனிகளுடன் பலமாய் மோதும், தகராறு ஏற்படும் என்பது திண்ணம்; பழைய உலகத்தில் பிரிட்டனும் ஃப்ரான்ஸும் ஸ்பெயினும் சண்டை பிடித்துக்கொண்டபோது புது உலகில் அந்நாட்டாரைச் சேர்ந்தவரையும் அது பாதிக்கும் என்பதும் நிச்சயம்; ஏனெனில் அக்காலத்திலோ பிற்காலத்திலோ அமெரிக்கா மேற்கு உலகின் இதர பாகங்களிலிருந்து தனித்திருக்க முடியவில்லை. 'லத்தீன்' (அதாவது ஃப்ரெஞ்சு, ஸ்பானிய) காலனிகளுக்கும் ஆங்கிலோ-சாக்ஸன் (பிரிட்டிஷ்) காலனிகளுக்கும் ஏற்பட்ட உக்கிரமான போர்த் தொடர்கள் வட அமெரிக்கச் சரித்திரத்தின் வீரக் காதைகளாகும்; அதில் மக்களின் உடல் மாத்திரம் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அவர்களுடைய கருத்துக்களும் கலாசாரங்களும் இடித்து மல்லுக்கு நின்றன என்பதும் கவனிக்கவேண்டிய விசேஷம். தனி ஆட்சிக்கும் குடியாட்சிக்கும், கடுமையாய்க் கட்டுப்படுத்தப்பட்ட கொடுங்கோன்மைக்கும் சுதந்திரஸ்தாபனங்களுக்கும், சகிப்புத் தன்மையற்ற ஒரு கொள்கைக்காரர்களுக்கும் பரஸ்பர சகிப்புள்ள பல இனத்தாரின் சமரஸ வாழ்வுக்கும் இடையே ஏற்பட்ட பூசல்கள் அவை. விஸ்தாரமான வளந்தரத்தைப் பின்னணியாகக் கொண்டு, இந்தியர்களைப் போர்-நேசர்களாகக் கொண்டு மிகத் திறமை வாய்ந்த வீரர்கள்—ஃப்ரான்டெனாக், மான்ட்காம், வல்ஃப், ஆம்ஹெர்ஸ்ட், வாஷிங்க்டன் முதலியோர் தலைமை வகிக்க நடந்த போர்களில் காட்டுமிராண்டித்தனமான குரூரச்செயல்களும், பாராட்டத்தக்க தீரச்செயல்களும் இணையற்ற யுத்த தந்திரமும் காணலாம். அமெரிக்கக் கண்டத்தை வசப்படுத்துவதே ஜயித்தவர் அடையும் பரிசு.

வட அமெரிக்காவில் முதலில் திடமாகக் காலூன்றிய ஐரோப்பியர் ஸ்பானியர் தான். கொலம்பஸ் புதிய உலகத்தைக் கண்டு பிடித்ததைத் தொடர்ந்து அவர்கள் மேற்கு இந்தியத் தீவுகளில் முக்கியமானவற்றைப் பலமாக ஆக்கிரமித்தனர். 1519-ல் அடக்குவாரற்ற வீரன், ஹெர்ணாண்டோ

கார்டெஸ் ஒரு சிறு படையுடன் மத்திய மெக்ஸிகோ வரை முன்னேறி, அங்கிருந்த ஆஸ்டெக் வம்சச் சக்கரவர்த்தி மான்டெ ஸூமாவைத் தோற்கடித்து நாட்டைக் கைப்பற்றினான். இருபது ஆண்டு கழித்து இரும்பு மனம் படைத்த இன்னொரு ஸ்பானியச் சீமான், ஹெர்னண்டோடி ஸோடோ, ஃப்ளாரிடாவில் கரையிறங்கி அங்கிருந்த இந்தியர்களைத்தாற்கடித்து, ஒருபடைப் பகுதியை அங்கு நிறுத்திவிட்டு, நான்கு வருஷம் ஓய்வின்றி அலைந்து தேச ஆராய்ச்சி செய்தான்; 16-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஸ்பானியச் சிப்பாய்களும் பூசாரிகளும் ரத்தமயமான போர்கள் புரிந்து நியூ மெக்ஸிகோவில் திடமாய் அமைந்தனர்; அங்கு சாந்தா ஃபே என்னும் ஊரிலிருந்து தொடர்ந்து பல ராணுவக் கவர்னர்கள் வெகுகாலம் அந்தத் தூங்குமூஞ்சிப் பிரதேசத்தின்மேல் ஆட்சி நடத்தினர். இதற்கிடையே, இன்னல்களுக்குப் பயப்படாத ஒரு இத்தாலியஜெஸூட் (யேசு சங்க) பாதிரி, யூஸேபியோ ஃப்ரான்ஸிஸ்கோகிஜே, தென் கலிஃபோர்னியாவையும் அரிஸோனாவையும் ஆராய்ந்து பிரார்த்தனை மடங்கள் கட்டி, வியந்து நின்ற செவ்விந்தியர்களுக்கு ஞான ஸ்நானம் செய்வித்தான். ஆனால் 1769-க்குப் பிறகுதான் ஸ்பானிஷ் படைகள் கலிஃபோர்னியாவை ஆக்கிரமித்தன; அவர்களுடன் வந்த ஃப்ரான்ஸிஸ்கன் மதப் பிரசாரகர்கள் ஸான் டீகோ, மான்டெரே ஆகிய ஊர்களை நிறுவினர்கள்.

வர்ஜீனியாவில் ஆங்கிலக் காலனிகள் ஏற்படும் காலம் வரை கானடாவில் வந்திறங்கியிருந்த ஃபிரெஞ்சுக்காரர் நன்கு காலூன்றவில்லை. 1535-லேயே ஃப்ரான்ஸில் பிரிட்டனி மாகாணத்தைச் சேர்ந்த ஜாக்ஸ் கார்டியர் ஸெயின்ட் லாரென்ஸ் நதியில் முன்னேறி மான்ட்ரீல் நகரம் இப்பொழுதிருக்கும் இடத்தை அடைந்து, தன் நாட்டுக் கொடியை நட்டு, ஐந்தாறு வருஷங்களுக்குப் பின் அங்கு காலனிகள் அமைக்க முயன்று தோல்வியுற்றான். இந்தியரின் துவேஷமும் கடுமையான குளிரும் அவனை ஆசாபங்கத்துடன் துரத்தியடித்தன. 1603-ல் தான் (இப்பொழுது கானடா எனப்படும்) ''நியூ ஃப்ரான்ஸி''ன் ஸ்தாபகன், ஸாம்யுல் டி ஷாம்ப்லேன் தோன்றினான். 36 வயதிலேயே சிறந்த அனுபவம் பெற்ற சிப்பாயும் மாலுமியுமான அவன் தான் ஸ்பானியக் கடல்களில் நிகழ்த்திய தீரச் செயல்களை வர்ணித்ததைக் கேட்டு மோகித்து ஃப்ரெஞ்சு மன்னன் அவனை அரசாங்க பூகோள சாஸ்திரியாக நியமித்தான். 1608-ல் அவன் க்விபெக் நகரின் அஸ்திவாரம் போட்டான்; அதுவே நியூஃப்ரான்ஸின் முதல் நிரந்தரமான ஐரோப்பீயப் பட்டணம். ஆராய்ச்சி உத்தேசத்துடன் அவன் பல தீரச் செயல்கள் நிகழ்த்தினான். 1628-ல் ரிஷெலோ-வின் ஆதரவில்

ஆரம்பமான ''கம்பெனி ஆஃப் நியூ ஃப்ரான்ஸ்'' காலனி அமைக்கும் முயற்சிக்கு ஊக்கமளித்தது.

தற்செயலாய் நேர்ந்தவை, திட்டமற்றவை என்ற அளவுக்கு ஸ்பானிய, ஃப்ரெஞ்சு, பிரிட்டிஷ் காலனியத்தனங்கள் ஒருவகைப்பட்டவை; இதர அம்சங்களில் அவை மிகவும் மாறியவை. ஸ்பானியர்கள் பேராசையுடன் துணிச்சலுள்ள சிப்பாய்களையும், வணிகர்களையும், புது வீர அனுபவம் தேடுவோரையும் கூட்டிச் சுறுசுறுப்புடன் தம் காரியங்களைக் கவனித்துக்கொண்டு ஊரில் அடங்கி வாழும் சுதேசிகளைப் போரில் வென்று வசப்படுத்தினர்கள்; ஸ்பானியர்களின் எண்ணிக்கை குறைவு, நாட்டாரின் எண்ணிக்கை அதிகம். ஆகவே பிரபு-அடிமை உறவின் பல அம்சங்களை ஸ்பெயின் அமெரிக்காவில் நடவேண்டி வந்தது. பிடிவாதம், கொடுமை, கலகப்பிரியம் உள்ள சில ஆயிரம் போர் லக்ஷக்கணக்கான இந்தியர் மேல் ஆதிக்கம் செலுத்தினர். லாஸ் காஸாஸ் போன்ற இரக்கமுள்ள சில பாதிரிகள் கொடுங்கோன்மையைச் சற்று குறைக்க முயன்றார்கள்; ஆனால் அதிக வெற்றியடையவில்லை. ஸ்பானியர்கள் புதுக் கனிகள் வெட்டுவித்துப் பல்லாயிர இந்தியர்களை வேலையில் கசக்கிப் பிழிந்து கொன்றார்கள். விஸ்தாரமான மாட்டுப் பண்ணைகள் அமைத்து, அங்கே அவர்கள் விவசாயமும் நடத்திச் சர்க்கரை, வானில்லா, கோகோ, நீலி முதலியனவும் தயாரித்தார்கள். ஸ்பானியர்கள் உயரிய எஜமானர்கள்; இந்தியர்களும் (பெரிய எண்ணிக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட) நீக்ரோக்களும் மூன்று ஜாதியாரின் கலப்புப் பிறப்புகளும் அடிமைகள். அம்முறையில் ஏராளமான செல்வம் குவிந்தது; ஆனால் அத்தனையும் ஒரு சில கைகளுக்கே சென்றது; பாமர மக்கள் தரித்திர நிலையில் தவித்தார்கள். இரண்டுக்கும் இடையே நடுத்தரம் என்று சொல்லக்கூடிய வகுப்பு ஒன்றும் ஏற்பட்டதாகச் சொல்வதற்கில்லை. பண்ணை முதலாளி, போதகன், சிப்பாய்—இம்மூன்றிலொன்று ஸ்பானியனுக்குப் பிடித்தமானது; வியாபாரமோ தொழிலே அவனுக்கிஷ்டமில்லை. அயலார், முக்கியமாக ப்ராடெஸ்டெண்டுகள், கண்டிப்பாக நீக்கப்பட்டனர். சமயச் சகிப்பு என்பது மருந்துக்கும் அங்கு கிடையாது; நகரசபைகளில் பிரதிநிதி அம்சம் கொஞ்சம் இருக்கலாம்; இதர இடங்களில் அது கிடையவே கிடையாது.

அதே சமயம் ஸ்பானியரும் போர்த்துகீயரும் லக்ஷக்கணக்கான பூர்வ குடிகளுக்குக் கிறிஸ்தவ போதனை செய்தார்கள்; அவர்களுக்குப் புதுத் தொழில்கள், சிறந்த விவசாய முறை, ஐரோப்பியக் கல்வி முறையில் கொஞ்சம் முதலியன கற்பித்தார்கள்; காலியாய்க் கிடந்த புல் தரைகளில் லக்ஷக்கணக்கான மாடுகள் வளர்க்கவும் அவர்கள் பழக்கினர்கள். பழைய பாஷைகள் கற்கவும் பிற்காலத்தில் பாதிரியாக வேண்டி

யவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் சர்வகலா சாலைகள் அமைக்கப்பட்டன. ஒழுங்கும் நிட்டமுமில்லாவிட்டாலும் ரியோ க்ராண்டி நதிக்குத் தெற்கே பரவலான இடங்களில் நாகரிகத்தைப் பரப்ப அவர்கள் முயன்றார்கள்.

ஃப்ரெஞ்சுக்காரர் சிறு எண்ணிக்கையில்தான் அமெரிக்காவுக்கு வந்தார்கள்; பூகோள, பொருளாதார நிலைகள், ஃப்ரெஞ்சு அரசாங்கத்தின் ஏகாதிபத்தியம், கதோலிக்க ஆதிக்கம்—இவற்றை அனுசரித்து அவர்களுடைய நாகரிகம் இருந்தது. அவர்கள் நாடியது பொன், வெள்ளி அல்லது மாட்டுப் பண்ணைகள் அல்ல, மீனும் சடைத்தோலும். அவர்கள் வழி வெட்டிக்கொண்டு சிரமத்துடன் முன்னேறிய இடம் மிகக் குளிர்ந்தது; வாழ்க்கை வசதியற்று, நிலையற்ற இந்தியர்கள் நீரம்பியது; அவர்களுள் பலர் சத்துருக்கள். புது இடத்தில் முன்னேற முன்னேற அவர்களுக்கு ஃபர் (கம்பளி) அதிகமாகக் கிடைக்கும். அரை மனதுடன் விவசாயஸ்தலங்களை ஆங்காங்கே அமைத்துக்கொண்டு அவர்கள் நீர்வழிகளைப் பயன்படுத்தி கடுங்கானல்களில் மேலும் சென்றனர்.

இங்கிலீஷ் காலனிக்காரர்கள் சுய ஆட்சி நிறுவனங்களுடன் ஏராளமான தன் முயற்சி காட்டினார்கள்; ஃப்ரெஞ்சு அரசாங்கமோ தானே எல்லாம் செய்து கொடுக்கும் தகப்பன் போலும் கொடுங்கோல் அரசாகவும் இருந்தது; துணிந்த தலைவர்கள் அவ்வப்போது தோன்றினாலும் மக்களிடம் தன் முயற்சியும் தன்னம்பிக்கையும் இல்லை, மத விஷயத்தில் பல சம்பிரதாயத்தாரையும் வெளியேற இங்கிலாந்து அனுமதித்தது; கத்தோலிகர் தவிர வேறு யாருக்கும் ஃப்ரான்ஸ் கானடாவில் இடமளிக்கவில்லை. இறுதிப்போர் மூண்டபோது ஜன எண்ணிக்கையில் ஃபிரெஞ்சுக்காரரைப்போல் இருபது மடங்கு ஆங்கிலர் இருந்தார்கள்; அவர்கள் நன்கு வேரூன்றி தேசப் பற்றுக் கொண்டிருந்தார்கள்; பழங்காலப் பிரபுக்களின் கீழிருந்த ஃபிரெஞ்சு நிலப் பாட்டாளிகள் ஆசையோ லட்சியமோ இல்லாதிருந்தனர்; ஆங்கிலேயருக்கு சமயோசித புத்தியும் செயல் திறமையும் உண்டு; ஃபிரெஞ்சு முறையில் மேல் அதிகாரிகள் சிந்தித்துக் கட்டளையிட்டால்தானுண்டு.

நியூ ஃப்ரான்ஸின் வரலாற்றில் ஐந்து தெளிவான கட்டங்களைக் காணலாம். 35-வருஷ ஆரம்ப காலம் முதல் கட்டம்; அதுவே ஷாம்ப்லேய்னின் யுகமும். 1603-ல் செய்ன்ட் லாரென்ஸ் நதியில் மூன்னேறி, இப்பொழுது நோடேவாஸ்கோஷியா எனப்படும் இடத்தில் போர்டராயல் (அன்னபோலிஸ்) என்னும் ஊரை அவர் 1604-ல் ஸ்தாபித்தார். 1635-ல் இறக்கும் வரை அவர் கானடாவை ஒரு ஃபிரெஞ்சுக் காலனியாக உருவாக்க மிகவும் பாடுபட்டார்; புது நாட்டு ஆராய்ச்சியில் ஊக்கமுண்டாக்க தாமே ஜ்யார்ஜ், ஆன்டோனியோ, ஹ்யூரான்

ஆகிய ஏரிகளை அடைந்தார். ஃபர் வியாபாரத்தை லாபகரமாக்கவும் அவர் உழைத்தார். மதப் பிரசாரம் இரண்டாவது கட்டத்தின் முக்கிய அம்சம். மிகச் சிரத்தையுள்ள சில பாதிரிகள் பல துன்பங்களுக்குள்ளாயினர்; இரக்வாய் இனத்தாரால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டபோதும் அவர்கள் தோல்வியறியாத வீரர்களாய் விளங்கினர்கள். தனிப்பட்டவரின் தர்மரண த்தைக் காட்டிலும் அவர்களுடைய யத்தனங்களின் அழிவு மிகவும் வருந்தத்தக்கது. இந்தக் காலத்தில் வியாபார முறையிலும் காலனி தோல்வியடைந்தது; 1660-ல் சில ஆயிரம் ஃபிரெஞ்சுக்காரரே தங்கி சிரம ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

மூன்றுவது கட்டம் அதிக பயனளித்தது. நியூ ஃப்ரான்ஸ் மன்னனின் மாகாணம் (Royal Province) ஆகிவிட்டது; தாய் நாட்டு மாகாணங்களைப் போலவே அங்கும் ஒரு கவர்னர், நிர்வாகஸ்தன் மற்றும் பல அதிகாரிகள் இருந்தார்கள். அதன் அபிவிருத்தியில் சொந்த அக்கறை கொண்ட 14ஆம் லூயி, கட்டளைகளும் ஆலோசனைகளும் கூறுவதோடு ஏராளமாகப் பண உதவியும் அளித்தான். கப்பல் கப்பலாகப் புது ஆட்கள் தாய் நாட்டினிருந்து அனுப்பப்பட்டனர். 1659-ல் க்விபெக்கில் முதல் பிஷப் வந்திறங்கினர். நியூ இங்கிலாந்தில் ப்யூரிடன் கோவிலாட்சி இருப்பது போலவே கானடாவில் கத்தோலிக் ஆட்சி கண்டிப்பாகவும் வைராக்கியமாகவும் நடைபெற வேண்டுமென அவர் தீர்மானித்தார். ஒவ்வொரு கவர்னரும் அவரை எதிர்த்தான்; ஆனால் பெரும்பாலும் அவரே ஜயித்தார்.

1672-லிருந்து நான்காம் கட்டம் எனக் கொள்ளலாம். திடத் தீர்மானமுள்ள காங்க்டி ஃப்ரான்டெனெக் அவ்வருடம் கவர்னராக வந்தார். அவர் மதாச்சாரியர்களின் அதிகார ஆசைக்கு முக்கட்டுட்டை போட்டு சிவில் அதிகாரிகளுக்கு அடங்கித்தான் சர்ச் இருக்க வேண்டும் என்று சாதித்தார். இராக்வாய்களின் பலத்தை அவர் தற்காலிகமாக முறித்தார். 1690-ல் "வில்லியம் மன்னர் போரி"ல் க்விபெக்கைத் தாக்குவதற்கு ஸர் வில்லியம் ஃபிப்ஸ் நடத்திய 34 கப்பல்களை ஃப்ரான்டெனெக் விரட்டியனுப்பினார். அந்தக் காலத்தில் ஃப்ரெஞ்சு தேச ஆராய்ச்சியாளரில் தலைசிறந்த இருவர் மேற்கே வெகு தூரம் சென்று ஸுபீரியர் ஏரியையும கடந்தனர்; வேறு இருவர் மிஸிஸிபி பள்ளத்தாக்கின் மேல் பாகத்தை அளந்து படம் வரைந்தனர்; இன்னொருவர் அதே நதியில் முகத்துவாரம் வரை சென்று ஆராய்ந்தார். நூற்றாண்டு முடியும்போது அந்தக் கவர்னர் இறந்தார்; அதற்கு முன்பே அமெரிக்காவில் பிரிட்டிஷ்காரருக்கும் ஃப்ரெஞ்சுக்காரருக்கும் இடையே நடந்தே தீரும் என்று பலராலும் கருதப்பட்ட

யுத்தத்திற்காக அவர் நியூ ஃப்ரான்ஸைத் தயாரித்தார். அது ஒரு நீடித்த போர். அதுவே ஐந்தாம் கட்டமாகும்.

இந்த நீடித்த போராட்டத்தில் ஆங்கிலேயருக்கில்லாத சில சௌகரியங்கள் ஃபிரெஞ்சுக்காரருக்குக் கிடைத்தன. அவர்கள் முன்கூட்டியே யுத்தத்திற்குகந்த ஸ்தலங்களைப் பலப்படுத்தியிருந்தார்கள். சிறுகச் சிறுக, கோட்டைக் கொத்தளங்கள், ஃபர் வியாபாரக் கிடங்குகள் என, வடக்கே க்விபெக்கிலிருந்து டெட்ராயிட், ஸெயின்டு லூயி வழியாக தெற்கே நியூ ஆர்லீன்ஸ் வரை பெரிய பிறைச் சந்திர வடிவமான எல்லையுடன் அவர்கள் தங்கள் சாம்ராஜ்யத்தைக் குறிப்பிட்டிருந்தார்கள். பிரிட்டிஷாரை அப்பலாச்சியன் மலைக்குக் கிழக்கேயுள்ள குறுகிய இடத்திலேயே நிறுத்தித் தம் விஸ்தாரமான இடத்தைப் பாதுகாத்து விருத்தி செய்வது என்பது அவர்களுடைய திட்டம். பிரிட்டனைக் காட்டிலும் ஃப்ரான்ஸின் ராணுவ பலம் அதிகம், அது சக்தி வாய்ந்த பெரும் படைகளை அனுப்ப முடியும். நியூ ஃப்ரான்ஸின் மத்திய அரசாங்கத்தின் கையிலேயே எல்லா அதிகாரமும் திரண்டிருந்ததால் போர் நடத்துவது சௌகரியம்; செயல்-ஒற்றுமையற்றதும் சரியான இணைப்பில்லாததுமான பிரிட்டிஷ் காலனிகளுக்கு அந்த வசதி கிடையாது.

ஆனால் பிரிட்டிஷார் இறுதியில் வெற்றியடைந்ததற்கு மூன்று பெரிய காரணங்கள் இருந்தன. முதலாவது, 1754-ல் பிரிட்டிஷ் காலனிகளின் மொத்த ஜனத்தொகை 15 லக்ஷம்; அது வேகமாய்ப் பெருகிக் கொண்டு மிருந்தது; ஆனால் நியூ ஃப்ரான்ஸின் ஜனத்தொகை ஒரு லக்ஷத்திற்கும் குறைவு; அவர்கள் ஸைனியசாலிகள் தான்; ஆனால் சிதறிக் கிடந்தார்கள். சொந்த முயற்சிக்கான பழக்கமும் கிடையாது. அடுத்தபடியாக, பத்திரமான இடங்களிலிருந்து கொண்டு எதிரியைத் தாக்கக் கூடிய நிலையில் அவர்கள் இருந்தார்கள். உள்ளடகமாக இருந்து கொண்டு அவர்கள் மேற்கே இப்பொழுது பிட்ஸ்பர்க் இருக்குமிடத்தையும், வட மேற்கே நயாகரா பிரதேசத்தையும், வடக்கே க்விபெக்கையும் மான்ட்ரீலையும் தாக்க முடியும். அவர்களுடைய கடற்படையும் திறமை மிக்கது; வேகமாய்ச் சென்று அது உதவிப் படைகளையோ தேவையான இடங்களில் கொண்டு சேர்க்க முடியும்; ஜலமார்க்கமாக க்விபெக்கை முற்றுகையுமிடலாம். கடைசியாக, சிறந்த நாயகர்களும் அவர்களுக்குக் கிடைத்தார்கள். சாதாம் (Chatham) போன்ற அரசியல் தலைவர்களும் வல்ஃப், ஆம்ஹெர்ஸ்ட், லார்ட் ஹவ் போன்ற சேனைத் தலைவர்களும் ஃபிரெஞ்சுக்காரருக்குக் கிடைக்கவில்லை. ஜ்யார்ஜ் வாஷிங்க்டன் போன்ற காலனி அதிகாரிகளும் உயரிய கீர்த்தி பெற்றனர்.

1763-ல் முடிவடைந்த எழுபது யுத்த வருடங்களில் பலவிறுவிறுப்பான செயல்கள் நிகழ்ந்தன. கவனத்திற்குரிய பலர் தோன்றினர்கள். 1759-ல் மான்ட்காம் காத்து நின்றக்விபெக்கை வல்ஃப் கைப்பற்ற முயன்றது சாதாரண யுத்தனங்களை வீணனதும் அவர், வேறு வழியின்றி நள்ளிரவில் உயர்ந்த கரடுகளை ஏறிக்கடந்து சத்துருவை மைதானத்திற் சிறைத்தார். கோரப் போரில் வல்ஃப் வெற்றியடைந்தார்; ஆனால் இரு புறத்துத் தளகர்த்தர்களும் பலியாயினர். அப்பொழுது வல்ஃபுக்கு 33 வயது கூட ஆகவில்லை. க்விபெக் பிடிபட்டதும் போர் முடிவடைந்தது. ஆங்கில பாஷை கானடாவிலும் பரவிற்று. அந்தப் பெருமை வல்ஃபைச் சேர்ந்தது எனலாம்.

1763-ல் நடந்த சமாதான உடன்படிக்கைப்படி ஃபிரான்ஸிடமிருந்து கானடா முழுவதையும் இங்கிலாந்து பெற்றது; யுத்தத்தில் ஸ்பெயின் எதிர்க் கட்சியில் இருந்ததால், அந்நாட்டின் வசமிருந்த ஃப்ளாரிடா இங்கிலாந்துக்குக் கிடைத்தது. நியூ ஆர்லீன்ஸ் தவிர அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து மிஸிஸிபி நதி வரையுள்ள வட அமெரிக்கா பிரிட்டிஷார் வசம் வந்தது, அதே சமயம் லூஸியானு ஃபிரெஞ்சுக்காரரிடமிருந்து ஸ்பானியர் கைக்கு மாறியது. கானடாவில் பிரிட்டிஷாருக்கு இறுதி வெற்றி கிடைத்த அதேசமயத்தில் இந்தியாவில் க்ளைவ் பெரிய வெற்றிகள் பெற்றுக் கொண்டிருந்தது கவனிக்கத் தக்கது; உலக சரித்திரத்தில் முக்கியமான யுத்தங்களில் ஒன்று இது; ஃபிரெஞ்சுக்காரர் இந்தியாவிலிருந்தும் வட அமெரிக்காவிலிருந்தும் வெளியேற்றப்பட்டனர்.

சாம்ராஜ்ய உறவுகள்: வெற்றிகரமான ஏழாண்டு யுத்தத்தின் காரணமாக அமெரிக்கர் பிரிட்டனைப் பற்றி மாறிய நோக்குடன் சிந்திக்கத் தொடங்கினர். வடக்கேயும் மேற்கேயும் ஒரு அரிவாள்போல் எல்லைவாக அமைந்து ராணுவ தளவாடச் சிறப்பால் பிரிட்டிஷ் காலனிகளைப் பயமுறுத்தி நின்ற ஃபிரெஞ்சுக்காரர் விலகி விட்டனர். அவ்வளவு பயங்கரமாக இல்லாவிட்டாலும் தெற்கே இருந்த ஸ்பானியர்களும் போய் விட்டனர். போரின்போது காலனி ராணுவ அதிகாரிகளும் சிப்பாய்களும் நல்ல பயிற்சியும் அனுபவமும் பெற்று அதிகத் தன்னம்பிக்கை அடைந்தனர். மாகாணங்களை ஒன்றுக இணைக்க வேண்டுமென்ற எண்ணமும் அப்பொழுது பலருக்கும் தோன்றிற்று. விவகார முறையில் பல யோசனைகள் கூறப்பட்டன; இறுதியில் ஏழு காலனிகளின் பிரதிநிதிகள் கலந்து நடத்திய ஆல்பனி காங்கிரஸின் தீர்மானம் அவற்றுள் முக்கியமானது. அது பெரும்பாலும் ஃப்ராங்க்ளின் வகுத்த திட்டம். அதன்படி எல்லாக் காலனிகளுக்கும் பொதுவாகச் சமஷ்டி ஆலோசனை சபையும் ஒரு பிரஸிடெண்டு-ஜெனரலும் இருக்க வேண்டும். பிரஸிடெண்டு-ஜெனரலை மன்னர் நியமிப்பார்; சபையின்

ஆலோசகர்களைக் காலனி சட்டசபைகள் குறிப்பிடும். சபையின் கடமைகளாவன: பொதுப்பாதுகாப்பு, இந்தியப் பிரச்னைகளைக் கவனித்தல், பொதுக் காரியங்களுக்காக வரி விதித்தல். பிரஸிடெண்டு-ஜெனரலுக்கு சபையின் முடிவை மறுக்கும் (Veto-வீடோ) உரிமையுண்டு. அந்தத் திட்டம் ஆதரவு பெருவிட்டாலும் ஐக்கிய நாடு என்ற கருத்தைப் பிரசாரம் செய்ய அது உதவிற்று. பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் ஒரே உத்தேசத்துடன் தோளுக்குத் தோள் நின்று போர் புரியும் காட்சியும் அந்தக் கருத்தை வளர்த்தது.

போரின் காரணமாக பிரிட்டனின் ஆதரவைத் தேடும் மனப்பான்மை குறைந்தது போலவே அந்நாட்டின்பால் இருந்த மரியாதையும் சற்றுத் தேய்ந்தது. காலனித் துருப்புகளுக்குப் பயிற்சி குறைவு, ஆயுதங்கள் மட்டமானவை என்றிருந்தும் பல களங்களில் அவர்கள் ராணுவமே தொழிலாகக் கொண்ட பிரிட்டிஷாருக்குச் சரி நிகராகப் போர் புரிந்தார்கள்; காட்டுச் சண்டையில் அவர்களைவிட நன்றாகப் புரிந்தார்கள் எனலாம். பிரிட்டிஷார் காலனி அதிகாரிகளைத் தகுதியற்றவர்கள் என்றும், இங்கிலீஷ் அதிகாரிகள் பெரும் பிழைகள் செய்ததையும் அமெரிக்கர் கண்டனர்.

கடைசியாக, போரின் வெற்றிகரமான முடிவும், பிரம்மாண்டமான சாம்ராஜ்ய விஸ்தாரமும் கிளப்பின பிரச்னைகள். காலனிகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குமிடையே பெரிய பிளவுகள் உண்டாக்குமெனத் தோன்றிற்று. தீர்மானமான கொடுங்கோலாட்சி என்று சொல்லும்படியாக ஒன்றுமிருக்கவில்லை. ஆனால் சாம்ராஜ்யத்தின் அங்கங்களின் நிர்வாகத்தை முடுக்கி ஒழுங்குபடுத்துவது அவசியமாயிற்று. பொறுமையுள்ள அக்கம்பக்கத்தாரிடமிருந்து அவற்றைக் காப்பாற்றியாக வேண்டும். அதன் நிர்வாகச் செலவுக்காக வரி விதித்தாக வேண்டும். கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள் அல்லது வியாபாரச் சட்டங்களின் கீழ் காலனிகளின் பொருளாதார அமைப்பை சீராக்கி வலுப்படுத்தவேண்டும்.

காலனிகள் மேல் பிரிட்டிஷ் நிர்வாக அதிகாரம் இதுவரை மிகவும் தளர்ந்தே இருந்தது. மன்னரின் பெயரில் அந்த நிர்வாகத்தை "வியாபார விவசாய கமிஷனர்களின் போர்டு" கவனித்து வந்தது; அந்த போர்டு 1696-க்குள் அநேகமாய்ப் பூர்ண உருவெடுத்திருந்தது. முக்கியமான மந்திரிகள் அதன் அதிகார பூர்வமான அங்கத்தினர்கள். ஆனால் பெரும்பாலான வேலையைத் திறமையும் உழைப்புமுள்ள சில நிரந்தர அதிகாரிகள் மாத்திரமே செய்து வந்தனர். தாய் நாடு, காலனிகள், இரு புறத்து வியாபார லாப நஷ்டங்களை போர்டு கவனித்துத் தக்கபாதுகாப்பளித்தது; காலனிகளின் நிதிநிலையும் நியாயஸ்தல முறைகளும் அதன் கண்காணிப்பில் வந்தன; காலனிகளின் முயற்சிகளில் ஆலோசனை கூறி வழி காட்டுவதும் அதன் ஒரு கடமை; புது சாம்ராஜ்யக் கொள்கைகளுக்கான யோசனைகளையும் அது கூறிற்று. குற்ற விசாரணை நடத்தும் உரிமை அதற்குண்டு; கவர்னர்களுக்கு அனுப்பப்படும் அவசரக் கட்டளைகள் போர்டு காரியாலயத்தில்தான் முதலில் உருவாகும்; காலனிகளுக்கு அனுப்பவேண்டிய அதிகாரிகளை போர்டு தீர்மானிக்கும். அவ்வதிகாரிகளிடமிருந்து ரிபோர்ட்டுகள் கேட்டு வாங்க அதற்கதிகாரமுண்டு. பார்லிமெண்டுக்கும் காலனிகள் விஷயத்தில் நிரம்ப அதிகாரமுண்டு. உண்மையில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் உள்ளேயும் வெளியிலும் வியாபார உறவுகளையும் இதர உறவுகளையும்பற்றிச் சர்ச்சை செய்து சமாளிக்கும் சக்தி பார்லிமெண்டுக்குத்தான் உண்டு. மன்னருக்கும் நிறைய அதிகாரங்களுண்டு. எட்டு மாகாணங்களுக்கும் கவர்னர்களை நியமிப்பதோடு, காலனி சட்டசபையின் சட்டங்களை மன்னர் நிராகரிக்க முடியும். (1760-ல் ரோட் ஐலண்டும் கனெக்டிகட்டும் மாத்திரம் சுய ஆட்சிக்கான சாசனம் பெற்ற காலனிகள்; பென்ஸில்வேனியா, டெலாவேர், மேரிலண்டு மாத்திரமே நிலச் சுவான்தாரிக் காலனிகள்; பாக்கி எட்டும் மன்னரின் காலனிகள்). அந்த நிராகரிப்பு சாதாரணமாக போர்டின் யோசனையின்பேரில் ப்ரிவி கவுன்ஸில் (Privy Council) மூலமாக வரும். காலனிகளிலிருந்து கிளம்பும் வழக்குகளில் ப்ரிவி கவுன்சில் அப்பீல் கோர்ட்டாகவும் செயலாற்றும்.

கடற் போக்குவரத்து சம்பந்தமான பல்வேறு சட்டங்கள் தான் ஏழாண்டுப்போர் முடியும்வரை பார்லிமெண்டு இயற்றிய முக்கியமான (காலனிகள் சம்பந்தப்பட்ட) சட்டங்கள்; பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் க்ஷேமத்திற்குகந்தவை என்று கருதப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளை ஆதாரமாகக்கொண்டவை அச்சட்டங்கள். அக்காலத்துக் கொள்கைப்படி, நாட்டின் செல்வ நிலை அதன் சொத்து, பொன் அல்லது வெள்ளியைப் பொறுத்திருந்தது; அந்தச் சக்தியை அதிகப்படுத்தும் முறையில் தனிப்பட்ட முயற்சி அல்லது கூட்டு முயற்சியை அரசாங்கம் பரிசீலித்துக் கட்டுப்படுத்தவேண்டும். சாம்ராஜ்யம் பல தனி தேசங்கள் சேர்ந்த ஒரு சமஷ்டியாகக் கருதப்படாமல், அனைத்தும் திரண்டு கூடிய ஒரு உடலாகப் பாவிக்கப்பட்டது. இந்த உடலின் அங்கங்களாகிய காலனிகளும் முண்டமாகிய தாய் நாடும் பரஸ்பர உதவி புரிந்து, இறுதியில் தாமும் நன்மையடையலாம். சாம்ராஜ்யக் கப்பல்களையே காலனிகள் உபயோகிப்பதால் நாட்டின் செல்வமும் சக்தியும் வளரும்; தாய் நாட்டிற்கு வேண்டிய சர்க்கரை, புகையிலை, அரிசி, கப்பல்களுக்கு வேண்டிய பொருள்கள், வேறு கச்சாப் பொருள்கள் அனைத்தும் கூடியவரை காலனிகள் விளைவித்தால் அயல் நாடுகளுக்குப் போகும் பணம் சாம்ராஜ்யம் என்னும் பெரிய நாட்

டுக்குள்ளேயே தங்கும். கச்சாப் பொருள்களை உபயோகத்திற் காகும் உருவில் தாய்நாடு தயாரித்துக் காலனிகளுக்கு அனுப்பும். சாம்ராஜ்யத்தின் இரு முக்கியப் பகுதிகளும் ஒன்றன் குறையை மற்றொன்று நீக்கிப் பயனடையும்.

1651-லேயே டச்சுக் கப்பல் வியாபாரத்தின் வளர்ச்சியைக் கண்டு திகிலடைந்த பார்லிமெண்டு ஒரு கப்பல் போக்குவரத்துச் சட்டம் இயற்றிக் காலனிகள் இங்கிலாந்துக்கு அனுப்பும் பொருள்கள் அனைத்தும் ஆங்கிலருக்குச் சொந்தமானதும் ஆங்கிலர் நடத்துவதுமான கப்பல்களில்தான் ஏற்றப்படவேண்டும் என்றது. பின் தோன்றிய சில சட்டங்கள் அதை விஸ்தரித்தன. அவை இங்கிலாந்துக்கும், கூடவே காலனிகளுக்கும், சாம்ராஜ்யத்தின் போக்குவரத்தில் ஏகபோக உரிமையளித்தன—டச்சுக் கப்பல்களின் போட்டியும் இதர அயல் நாடுகளின் போட்டியும். தடுக்கப்பட்டது; ஐரோப்பிய நாடுகளுக்கு (பிரிட்டன் தவிர) செல்லும் காலனிப் பொருள்களும் இங்கிலாந்தின் துறைமுகக் கப்பல்களில் மாற்றப்பட வேண்டுமென்றும் விதிக்கப்பட்டது; ஆங்கிலச் சரக்குகளுக்குப் பங்கமில்லாமலும் அனுகூலமான முறையிலும் ஐரோப்பியச் சரக்குகள் காலனிகளுக்குப் போவதற்கானப் பிரத்தியேக விதிகளும் இயற்றப்பட்டன. காலனிகளின் வியாபார முயற்சிகளை லண்டன் அரசாங்கம் சில துறைகளில் கட்டுப்படுத்திற்று; வேறு சிலவற்றில் ஊக்கு வித்தது.

முதலில் இந்தச் சட்டங்கள் பெரும்பாலும் புஸ்தகத்தோடு நின்றன. சரியாக அவை அமுலாக்கப்படவில்லை. ஆனால் 1763-ல் பிரிட்டன் காலனி விஷயங்களை முடுக்கிவிட ஆரம்பித்ததும் வியாபாரச் சட்டங்கள் மறுபடி பரிசீலிக்கப்பட்டன.

சாம்ராஜ்யத்தில் சமஷ்டி யமைப்பு என்னும் பிரச்னை: உண்மையில் சில சட்டங்கள் மாத்திரமல்ல, சாம்ராஜ்ய அமைப்பு முழுதுமே மறுபடி பரிசீலிக்கப்பட்டது; அச்செயலில் காலனிகள்-தாய்நாடு என்ற உறவும் பல வகைகளில் இணைந்திருந்ததால் அந்த வாத விவாதத்தில் கிளம்பிய உஷ்ணம் புரட்சியைத் தூண்டிவிட்டது. அடுத்த தலைமுறையின் தேச வரலாறு இக்கமானது, குழப்பமானது; சம்பந்தமற்றது போன்ற அபிப்ராயங்களில் ஒற்றுமையைக் கண்டு நன்கு புரிந்துகொள்ள சாம்ராஜ்ய அமைப்புப் பிரச்னையைத் தெளிவாய் அறிவது அவசியம். மத்திய அதிகாரம், ஸ்தல சுயேச்சாதிகாரம் இரண்டுக்கும் ஹானியில்லாமல் சாம்ராஜ்யத்தை எப்படி அமைத்து ஆளுவது என்பதே பிரச்னை. எந்தக் காலத்திலும் அரசியல் வாதிகளுக்கு அநுமிகக் கஷ்டமான சேவையாகவே இருக்கும். யுத்தம், சமாதானம், அயல் நாட்டு விவகாரங்கள், மேற்கத்தி நிலப் பிரச்னைகள், செவ்விந்தியப் பிரச்னைகள், தொலைதூர வர்த்தகம் முதலியன பொதுப் பிரச்னைகள், சாம்ராஜ்யத்தை பாதிப்பவை,

லண்டன் அரசாங்கம் நியாய சங்கதமான கட்டளைகள் இட வேண்டும்; எது நியாயம் என்று அறிய வழியுண்டா? பல்வேறு ஸ்தல அரசாங்கங்களுக்கு முற்றிலும் ஸ்தல விஷயங்களைக் கவனித்துக்கொள்ள அனுமதி இருக்கும். ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் ''இது பொது விஷயம், லண்டன் அரசாங்கம் கவனிக்கும்.... இது காலனி விஷயம், ஸ்தல அரசாங்கம் கவனிக்கும்'' என்று சந்தேகமின்றி வரையறுத்துக் கூறமுடியுமா? ஸ்தல அரசாங்கத்தின் உரிமைகள் பாதிக்கப்படாமல் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரங்கள் கொடுக்க முடியுமா?

இதுதான் சமஷ்டி வாதம் என்னும் பிரச்னை. பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில், சித்தாந்தமும் சட்டமும் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் உண்மையில், காரியத்தில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சமஷ்டி இணைப்பாகத்தானிருந்தது. அதில் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கும் ஸ்தல அரசாங்கங்களுக்குமிடையே பகிர்ந்துவிடப் பட்டிருந்தன. ஒன்றரை நூற்றாண்டுக் காலம் பார்லிமெண்டு பொது விஷயங்களைக் கவனித்து வந்தது; ஸ்தல சபைகள், ஆதியிலிருந்தே ஸ்தல நிர்வாகத்தை நடத்தி வந்தன.

ஆனால் சட்டப்படி சாம்ராஜ்யம் சமஷ்டியல்ல, மத்திய அதிகாரம் பெற்ற ஒற்றை உடல். சட்டப்படியும் சித்தாந்தப்படியும் பார்லிமெண்டின் கையில் எல்லா அதிகாரமும் இருந்தது. 1763-க்குப் பிறகு பிரிட்டிஷ் அரசியல் பெரியார்கள் சாம்ராஜ்யத்தின் மாற்றமைப்பில் ஈடுபட்டதும் பார்லிமெண்டின் சர்வோன்னத அதிகாரத்தை அவர்கள் முதல் படியாகக் கொண்டார்கள். 1766-ன் பிரகடனச் சட்டத்தில் அவர்கள் அதிகாரத்துடன் காலனிகள் ''கிரேட் பிரிட்டனின் சக்கரவர்த்திக்கும் பார்லிமெண்டுக்கும் கீழ்ப்பட்டவை, ஆச்ரய உறவு கொண்டவை, அப்படியே இருந்து வந்தன, அப்படியே இருக்கின்றன, அப்படியே இருப்பதுதான் சரி,'' என்று கூறி, ''எந்த மாதிரி சந்தர்ப்பத்திலும் அமெரிக்கப் பிரஜைகளையும் காலனிகளையும் கட்டுப்படுத்தவேண்டிய ஆற்றலும் நியாயமும் கொண்ட சட்டங்களை இயற்ற முழு சக்தியும் அதிகாரமும்'' பார்லிமெண்டுக்குண்டு என்றும் விளக்கினார்கள்.

உண்மையான சமஷ்டி முறையை உண்டாக்க நல்லவாய்ப்புப் பெற்ற பிரிட்டிஷ் ஆலோசகர்கள் யோசனைக் குறைவால் சந்தர்ப்பத்தை நழுவவிட்டார்கள். ஆனால் இந்தப் பிரச்னை 1776-லும் தீரவில்லை, காலனிகள் பிரிந்துபோன பிறகும் அது தீரவில்லை. அந்தப் பிரச்னையின் பொறுப்பு ஐக்கிய மாகாணங்களுக்கு மாற்றிவிடப்பட்டது. 1775 முதல் 1787 வரை அமெரிக்கருக்கு அதே தலைவேதனை ஏற்பட்டது—பொதுக் காரியங்களுக்கு ஒற்றை அரசாங்கமும் உள்ளூர்க் காரியங்களுக்கு சுய ஆதீனமான ஸ்டேட் அரசாங்கங்களும் முரண்பாடின்றி எப்படி

அமைப்பது? இதற்கு விடை கண்டு பிடிக்கும் முதல் அமெரிக்க யத்தனம் ராஜ்ய - சேர்க்கையின் விளக்கங்கள்—வ்ஞையிற்று. கசந்த அனுபவத்தால் அறிவு பெற்று அமெரிக்கர் மறுபடி முயன்று 1787-ன் ''சமஷ்டி நிர்மாண''த்தின் மூலம் திடமான சமஷ்டி முறையை அமைத்தார்கள்.

புரட்சியுகம் என்றதும் சிப்பாய்கள் யுத்தகளங்களுக்குச் செல்வதும், துப்பாக்கிகளும் பீரங்கிகளும் புகை கக்கி முழங்குவதும், மனக்கண்முன் தோன்றலாம்; சற்றுச் சிந்தனையுடன் பார்த்தால் நாடு குடிநல ஆட்சியை நோக்கிப் பவனி செல்வதும் தெரியலாம். ஆனல் அதே சமயத்தில் முன் கூறிய பிரச்னைகளுக்கு விடை கண்டு பிடிக்கப்பட்டது என்பதை மறந்து விடக்கூடாது. அதன் இறுதி ரூபத்தில் சமஷ்டி முறை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நூறு வருஷ அனுபவத்தையும், 1763-க்குப் பிறகு பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் நடந்த வாத விவாதங்களையும், போரின் இன்னல்களையும் தென் ராஜ்யக் கூட்டின் பிசகுகளையும், வேதனைகளையும் ஆதாரமாகக் கொண்டது. 1787-ன் நிர்மாணம்—சமஷ்டி வாதத்தின் இறுதி சாதனை—அக்காலத்தின் மிகப்பெரிய காரியங்களில் ஒன்று.

அதிருப்தியின் பொதுக்காரணங்கள்: புரட்சியின் பொருளாதார காரணங்களை ஆராயும்போது நாம் வெவ்வேறு பிரிவினரையும் வெவ்வேறு நோக்கத்தையும் அறிந்து பேதத்தை விளக்க வேண்டும். வட மாகாணத்து வர்த்தகனின் குறைகளும் தென் ராஜ்யத்தின் தோட்ட முதலாளியின் குறைகளும் வெவ்வேறு; மேற்கத்தி நில வியாபாரியின் குறைகள் இரண்டிலும் மாறுபட்டவை.

கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள் தென்னுட்டானைக் காட்டிலும் அதிகமாக வடநாட்டானைப் பாதித்தன. வட காலனிகளில் இங்கிலாந்துக்கு அனுப்பி, பதிலுக்கு தயாரித்த பொருளாகப் பெறக் கூடிய கச்சாப் பொருள்கள் அதிகமில்லை. சாதாரணமாக இங்கிலாந்திலிருந்து வரும் சரக்குகளுக்கு அவர்கள் ரொக்கப் பணமாகக் கொடுக்க வேண்டியிருந்தது; அந்தப் பணத்தைப் பெற அவர்கள் மேற்கு இந்தியத் தீவுகளுடன் வியாபாரம் செய்தார்கள். அவர்கள் அத்தீவுகளுக்குக் கோதுமை, இறைச்சி, மரக்கட்டைகள் முதலியன ஏற்றிச் சென்று, அங்கிருந்து பதிலுக்குப் பருத்தி, நீலி அல்லது சர்க்கரை பெற்றார்கள். அவர்கள் வெல்லப்பாகும் வரவழைத்து அதைக் கொண்டு ரம் என்னும் சாராயம் காய்ச்சி, அதை ஆஃப்ரிக்கா எடுத்துச் சென்று பண்டம் மாற்றல் முறையில் நீக்ரோக்களை வாங்கி, அவ்வடிமைகளை மேற்கு இந்தியத் தீவுகள் அல்லது தென் ராஜ்யங்களில் விற்றுப் பணம் பெற்றனர். 1733-ல் பார்லிமெண்டு வெல்லப் பாகுச் சட்டம் இயற்றியதும், மேற்கிந்தியத் தீவுகளில் பிரிட்டிஷ் தீவுகளோடு மாத்

திரமே நியூ இங்கிலாந்து வியாபாரம் செய்ய முடிந்தது, அல்லது பலத்த அபராதம் செலுத்த வேண்டியிருந்தது.

1764-ன் ''சர்க்கரைச் சட்டம்'' பழைய வெல்லப் பாகுச் சட்டத்தைப் போன்றதே; ஆனல் அது விவகார சம்மதமாக வரையப் பட்டிருந்தது. காலனுக்கு ஆறு பென்ஸ் என்றிருந்த அபராத விகிதம் மூன்று பென்ஸ் ஆக்கப்பட்டது; சட்டத்தை மீறுபவர்களின் கப்பல்களைக் கைப்பற்றவும் அதிகாரம் இருந்தது. நியூ இங்கிலாந்து வியாபாரிகளுக்குப் பெரிய நஷ்டம் விளைந்தது. ரோட் ஐலண்டுக்காரர்கள் ஆட்சேபித்து, மேற்கிந்தியத் தீவு வியாபாரத்தை ஆதாரமாகக் கொண்டுதான் தங்கள் காலனி இங்கிலாந்துடன் வியாபாரம் செய்ய முடியும் என்று விளக்கினர்கள். சர்க்கரைச் சட்டத்தின் ஒரு நிபந்தனைப்படி, வழக்குகளை அமெரிக்காவில் எந்த உப-அட்மிரல் கோர்ட்டும் விசாரிக்கலாம்; நாட்டின் தெற்குக் கோடியில் வசிக்கும் குற்றவாளியின் கப்பலை வடக்குக் கோடியிலிருக்கும் விசாரணைக் கச்சேரிக்கு இழுத்துச் சென்றுல் சட்டப்படி ஆட்சேபிப்பதற்கில்லை. தீர்ப்பு அவனுக்கு அனுகூலமாக இருந்தாலும்கூட அவன் நஷ்டஈடு கேட்பதற்கில்லை.

மனக் கசப்புண்டாக்கும் இன்னெரு விஷயம் ஏற்றுமதி வரியைப்பற்றியது. ஐரோப்பிய கண்டத்துச் சரக்குகள் காலனிகளுக்கு இங்கிலாந்து மூலம் அனுப்பப்படும்போது 2·5 சத வீதம் வரி விதிக்கப்பட்டு வந்தது. 1764-ல் வரி விகிதம் 5 சத வீதமாக்கப்பட்டது. சுங்க அதிகாரிகளுக்குக் கறாராக நடந்து கொள்ளும்படியும் உத்தரவிடப்பட்டது. அதற்காகப் பல வழிகள் அனுசரிக்கப்பட்டன—உதாரணமாக: தீர்வை செலுத்தாமல் ஏமாற்றுகிறவர்களைப் பிடிப்பதற்காக அமெரிக்கக் கடல் எல்லையில் பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டன; சந்தேகப்பட்ட இடங்களை சோதிக்க அதிகாரப் பத்திரங்களும் எழுதிக் கொடுக்கப்பட்டன.

தென்னுட்டின் சமாசாரம் முற்றிலும் மாறுனது. மேற்கிந்தியத் தீவுகளுடன் அவற்றிற்கு வியாபாரம் இல்லை யென்னலாம். அது புகையிலை, அவுரி, கப்பல் சாமான்கள், தூலங்கள், பதனிடாத தோல் முதலியவற்றை நேராக இங்கிலாந்துக்கு அனுப்பி தயாரித்த பொருள்களைப் பெற்றுக் கொண்டது. ஆனல் இந்த வியாபாரம் இங்கிலாந்துக்கு அனுகூலமாகவும் காலனிகளுக்குப் பிரதிகூலமாகவும் இருந்தது. வியாபாரம் பிரிட்டிஷ் வர்த்தக நிலையங்கள் அல்லது அவற்றின் ஏஜெண்டுகள் மூலம் நடைபெற்றது. அந்த ஏஜெண்டுகள் கச்சாப் பொருள்களுக்கு அநியாயமான குறைந்த விலை கொடுத்தார்கள். இறக்குமதியான துணிமணி, மரச் சாமான்கள், சாராயங்கள், வண்டிகள் முதலியவற்றை அதிக விலைக்கு விற்றார்கள். சுகஜீவிகள் கணக்குப் பாராமல் லண்ட

னுக்குத் தம் தேவையைத் தெரிவித்து விடுவார்கள்; கடன் பத்திரங்களில் கையொப்ப மிடுவார்கள்; கணக்கு ஏறிக் கொண்டு போய் அவர்களைத் திவாலாக ஆக்கிவிடும் பல கடன் கள் வம்ச பரம்பரையாக நீடித்திருந்தன. ''லண்டன் வியா பார ஸ்தாபனங்கள் சிலவற்றுடன் இணைக்கப்பட்ட ஐங்கம சொத்துக்கள் இந்தத் தோட்ட முதலாளிகள்'' என்று ஜெஃபெர்ஸன் புரட்சிப் போருக்குப்பின் எழுதினார்.

புரட்சிப் போரின் ஆரம்பத்தில் வர்ஜீனியாவிலிருந்து பிரிட்டிஷ் வியாபாரிகளுக்குச் செல்லாக வேண்டிய தொகை களைக் கணக்கிட்டு அவர் இரண்டு மில்லியன் (இருபது லக்ஷம்) சவரனுக்கும் அதிகமெனக் கண்டார். வர்ஜீனியாவில் நட மாட்டத்திலிருக்கும் மொத்தத் தொகையைப் போல் 20, 30 மடங்கு அதிகத் தொகை. பிற்காலத்தில் மேற்குப்புறத்துக் குடியானவர்கள் கிழக்குப் பிரதேச அடகுக்காரர்களை வெறுத் தது போலவே, தென்னாட்டார் கடன் கொடுத்த ஆங்கிலர் களை வெறுத்தனர். சண்டை போட்டுக்கொண்டு இங்கிலாந்தி லிருந்து பிரிந்து போனால் அந்தக் கடுமையான சுமையிலிருந்து சிறிது காலத்திற்கு அல்லது முற்றிலும் விடுதலை கிடைக்கும் என்பது அவர்களுக்கு நன்முகத் தெரியும். ஆனால் கடன் கொடுத்தவர்களையும் குற்றம் சொல்வதற்கில்லை. தோட்டக் காரர்களின் சௌகர்யத்திற்காக அவர்கள் துணிந்து கடன் கொடுத்தார்கள்; இரண்டு மில்லியன் சவரனை எப்படி இழப்பது?

1750-க்குப் பிறகு கால் நூற்றாண்டில் சில தென் ராஜ்ய சட்டசபைகள் கடன் பட்டவர்களுக்கு அனுகூலமான திவா லாச் சட்டங்களும், காலச்சலுகைச் சட்டங்களும் உண்டாக் கின; ஆனால் ப்ரிவி கவுன்சில் அவற்றை அநேகமாக 'வீடோ' செய்தது. அதன் விளைவாக, 'இங்கிலாந்திலுள்ள செல்வர்கள் ஏழை மக்களின் மேல் ஏறி மிதிக்கிறார்கள்' என்ற கோபமான பிரசாரம் பரவிற்று. காலனிகள் நோட்டு அச்சடிப்பதை நிறுத் தவும் பார்லிமெண்டு முயன்றது. 1730-க்குப் பிறகு பெரும் பாலான மாகாணங்கள் ஏராளமாக நோட்டுகள் அச்சடித்தன; சில மாகாணங்கள் அவற்றிற்கு சட்ட ஆதரவும் அளித்தன; ஆனால் லண்டனில் அவற்றிற்கு எதிர்ப்பு அதிகரித்தது. கடைசி யில் 1764-ல் கடனை அடைக்க அந்த நோட்டுகள் செல்லவே மாட்டா, சட்ட ஆதரவுக்கு மதிப்பில்லை, காலனிகள் அவ்வாறு ஆதரவளிக்கக்கூடாது என்று பார்லிமெண்டு உத்தரவிட்டது. அதனால் பிரிட்டிஷ் அமெரிக்கா முழுதிலும் கடன்பட்ட கோஷ்டிகளுக்குப் புதிய, நியாயமான வருத்தம் ஏற்பட்டது. மேற்கே பெருவாரி நில வியாபாரம் செய்து ஊரமைப் புக்கு வசதிகள் அளிக்கும் நிலத் தரகர்களுக்கும் லாப நஷ்டங் களைப் பற்றிய கவலையுண்டாயிற்று. மேற்கு நாட்டில் இருவித

வியாபாரங்களுண்டு: இந்தியர்களிடமிருந்து ஃபர் வாங்கி நக ரங்களில் விற்பது; சதுர மைல் கணக்கில் தரிசு நிலங்கள் சம் பாதித்து, துண்டு போட்டு, விற்பதற்குக் கம்பெனிகள் அமைப் பது. இக்காலத்தில் கனி எண்ணெய் தேடி ஆராய்பவனும் காடுகளில் மரம் வெட்டிப் பலகை அறுப்பவனும் நிர்ப்பந்தங் களில்லாமல் சலுகைகளுடன் வேலை செய்ய விரும்புவதுபோல அக்காலத்தில் ஃபர் வியாபாரிகளும் நில வியாபாரிகளும் சட்டங்களாலும் விதிகளாலும் ஹிம்சிக்கப்பட விரும்ப வில்லை. இவ்விரு கூட்டங்கள் தவிர, 1760-க்குப் பிறகு ஏழாண்டு யுத்தத்தில் பங்கு கொண்ட சிப்பாய்கள் மேற்கே ஜாகீர்களாக நிலம் பெற்றிருந்தனர். முக்கியமாக வர்ஜீனியா தன் சிப்பாய் களுக்கு இவ்வாறு இனாம் அளித்திருந்தது. மேலும், ஓஹியோ பள்ளத்தாக்கில் காலூன்றி நிறைய நிலம் வைத்திருந்த ஃபிரெஞ்சுக்காரர்களைத் துணிந்து விரட்டுபவர்களுக்கும் இனா மளிப்பதற்காக இரண்டு லக்ஷம ஏக்கர் நிலம் ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தது.

பென்ஸில்வேனியா, வர்ஜீனியா, வட, தென கரோலினைக் களிலிருந்த சாதாரண மக்கள நிலப்பசி கொண்டிருந்தனர். யுத்தம் முடியும்போது பெருங் கூட்டங்கள் மேற்கே பாய்ந்து செல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஒன்றன்பின் ஒன் முகச் சில விற்பனைக் கம்பெனிகள் உருவாயின. மிகமுக்கியமான வர்கள் பலர் இம்முயற்சியில் கிரத்தை கொண்டனர். உரிமைப் பதிவு, விலைக்கு வாங்குதல், நிலத்தின் சர்வே ஆகிய விஷயங் களில் ஒரே குழப்பமாக இருந்தது.

இவ்வாறு இந்தக் கூட்டங்கள் மேற்கத்தி பூமிகளைக் கைப் பற்றிக் கொண்டிருக்கும்போதே, பிரிட்டிஷ் அரசாங்கம் கரு ரான கட்டுப்பாட்டுக்கும் பாதுகாப்புக்குமான ஒரு புதுக் கொள்கையை உருவாக்கிக் கொண்டிருந்தது. இந்தியர்க ளுடன் வீண் சச்சரவு இல்லாதிருக்கும் பொருட்டும், காலனிக் காரர்கள் மேற்கே அதிக தூரம் பரவி பிரிட்டிஷ் கட்டுப் பாட்டை மீறுதிருக்கும் பொருட்டும், ஒரே நிலத்தில் பலர் உரிமை கொண்டாடும் குழப்பத்தைத் தவிர்க்கும்பொருட்டும் 1763-ல் ''அப்பலாச்சியன் மலைகளின் சிகர வரிக்கப்பால் எவ ரும் பரவக்கூடாது'' என்ற பிரகடனம் செய்யப்பட்டது. ''பிர கடனக் கோட்டி''ற்கப்பாலிருக்கும் நிலங்கள் அரசு நிலங்கள், விற்பனைக்கில்லை என்றும், எங்காளலும் இந்திய நிலங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத்தான் விற்கப்படலாம், தனிப் பட்டவருக்கல்ல என்றும் விளக்கப்பட்டது. 'வியாபார விவசாய போர்டு' ஒரு புதிய மேற்குக் காலனியமைப்புக்காகத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தது. ஆனால் அந்தப் பிரகடனம் கேட்டு ஃபர் வர்த்தகர்கள், நிலக் கம்பெனிகள், ஜாகீர் வாக்களிக்கப் பட்டவர்கள், பொதுவாக நில ஆசை கொண்டவர்கள்,

அனைவரும் கோபப்பட்டனர். ஃபிரெஞ்சுக்காரர் இத்தனை நாள் சாத்தி வைத்திருந்த கதவைப் போரிட்டுத் திறக்கும்படி செய்தும் அது படாரென்று மூடப்பட்டுவிட்டதே என்று நினைத்து அவர்கள் வருந்தினர்கள்.

சமய சம்பந்தமான முறையீடுகள் ஆங்கில சர்ச் சம்பந்தமானவை; டெலாவேர் காலனிக்குத் தெற்கே எங்கிலும், நியூயார்க்கில் ஒரு பகுதியிலும் அரசாங்கத்தின் ஆதரவு அதற்கிருந்தது. மூன்று காலனிகளில் ப்ராடெஸ்டெண்டு பக்த கோஷ்டி ஸ்தாபனங்கள் (Congregation) இருந்தன. அவற்றின் விதிகள் இன்னும் அதிக கண்டிப்பாக இருந்தாலும், மக்களின் அதிருப்தியை சம்பாதித்தது ஆங்கில சர்ச்சுதான்.

அந்த எதிர்ப்புக்கு இரண்டு காரணங்கள் உண்டு. அரசாங்க மத ஸ்தாபனத்திற்காக வரிகள் கட்டுவதைப் பல காலனிக்காரர்கள் தீவிரமாக எதிர்த்தனர்; அரசியல் பற்றுதலுள்ள சர்ச் அதிகார வர்க்கத்தை அவர்கள் விரும்பவில்லை. எதிர்க் கட்சியைச் சேர்ந்த பக்தியுள்ள கிறிஸ்தவனுக்கு தன் கட்சிப் புரோகிதனுக்கும் சம்பளம் கொடுத்து அரசாங்கப் புரோகிதனுக்காகவும் வரி செலுத்தப் பிடிக்கவில்லை.

அபிப்பிராய பேதத்திற்கான இன்னொரு விஷயம்—சாம்ராஜ்யப் பாதுகாப்பு. இந்தியரின் அக்கப்போர் இருந்து கொண்டுதானிருக்கும். ஃபிரெஞ்சுக்காரர் பழி வாங்க ஆவலாயிருந்தனர். மிஸிஸிபிக் கப்பாலிருந்த ஸ்பானியர்களை நம்புவதற்கில்லை. காலனிகள் தம்மைத் தாமே ரக்ஷித்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கில்லை. சமீப காலப் போரில் காலனிகள் படைகள் சேர்க்கும் விஷயத்தில் நிதானமாகவும் கஞ்சத்தனமாகவும் இருந்தன என்றும் சமரஸமான சர்வாங்க ஒத்துழைப்பு இருக்கவில்லையென்றும் பிரிட்டன் குறை கூறிற்று. மத்திய ஸ்தாபனம் லண்டனிலிருக்கும் அரசாங்கம் ஒன்றுதான். ஆகையால், காலனி வரிகளில் மூன்றில் ஒரு பங்கைப் பயன்படுத்தி 10,000 பிரிட்டிஷ் சிப்பாய்களை வட அமெரிக்காவில் நிறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. அத்தொகை வருஷத்திற்கு 3,60,000 சவரனுகும். பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு வருஷ எச்சரிக்கையளித்து, புது யோசனை ஏதேனுமிருந்தால் அதை ஏற்க சம்மதித்து, சமாசாரப் பத்திரிகைகள் மேலும், பத்திரங்கள் மேலும் ஸ்டாம்பு வரி விதிக்கச் சட்டம் இயற்றிற்று (1765). காலனிக்காரர்களுக்கு ஸ்டாம்பு வரி ஒரு பெரிய அக்கிரமமாகத் தோன்றிற்று. அரசாங்க சபையில் தம் பிரதிநிதிகளை ஏற்ருல்தான் வரி விதிக்கலாம் என்பது அடிப்படைக் கொள்கையாகக் கருதப்பட்டது.

கடைசியாக, ஜனநாயக அல்லது பாதிப் பாதி ஜனநாயகக் கொள்கைகள் வேர் விட்டு வளர அமெரிக்க மண் தகுதி பெற்றது. ஒன்றரை நூற்ருண்டாக ஜனங்கள் குடி நலம்

அல்லது குடி சமத்துவம் என்னும் சூழ்நிலையில் வசித்துப் பழகியவர்கள், பொருளாதார பேதங்கள் குறைவாகவே இருந்தன; பொருளாதார வாய்ப்பு எல்லோருக்கும் சமமாக இருந்தது. சிறிதளவான பிரபுத்துவமும் ஜனநாயகக் கருத்துக்களை ஊக்கப்படுத்துவதாகவே அமைந்தது. கடலோரத்துல் ஒரு சிறு வகுப்பார் அல்லது கோஷ்டியார் கையில் பெரும்பாலான செல்வம் சேர்ந்திருந்தது; வர்ஜீனியா, தென் கரோலினு போன்ற ராஜ்யங்களில் அரசியல் அதிகாரமும் சிலர் வசமே இருந்தது; உள் நாட்டில் எழுந்த குடிநலக் கருத்துக்கள் இந்த நிலைகளை எதிர்த்து வெகுகாலம் போரிட்டன. எல்லைப்புற சிறு விவசாயிகள், ஸ்காட்ச்-ஐரிஷ், ஜெர்மன் குடிகள், நகரங்களின் பாட்டாளிகள், ஆசாரி வர்க்கத்தார் முதலியோர் பழைய வியாபாரிகளையும் தோட்ட முதலாளிகளையும் விடாமல் எதிர்த்து வாதாடினர். புரட்சிக்கு முந்திய தலைமுறையில் அவர்களுடைய எதிர்ப்பின் ஆவேசம் உயர் வகுப்பாருக்கு ஆதிர்ச்சியளித்தது; ஆனல் அதே ஆவேசந்தான் தாய் நாட்டிற்கெதிராகக் கிளம்ப அவர்களுக்கு ஆற்றலளித்ததும்.

இங்கிலாந்துக்கு எதிராகக் கிளம்பிய அமெரிக்க நாயகர்களின் ஜாப்தாவில் நாம் இரு வர்க்கத்தாரைக் காணலாம். கல்விமான்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் சேர்ந்து ஒரு வர்க்கம்—ஸாம்யுல் ஆடம்ஸ், ஜான் ஆடம்ஸ், ஜான் ஜே, ஜேம்ஸ் ஓடிஸ், அலெக்ஸாண்டர் ஹாமில்டன், ஜ்யார்ஜ் க்ளின்டன், பெஞ்ஜமின் ஃப்ராங்க்லின், தாமஸ் ஜெஃபெர்ஸன், ரிசேர்ட் ஹென்ரி லீ, ஜ்யார்ஜ் மேஸன், ஜான் ரட்லெஜ் முதலியோர். அவர்களுக்கு உதவியவர்கள் சொற்பமாகப் படித்தவர் அல்லது படிப்பற்றவர்; ஆசாரிகள், எல்லைப்புறத்தார்—அலெக்ஸாண்டர் மாக்டுகல், ஐஸக் ஸியர்ஸ், ஜ்யாஜ் ப்ரையன், பாட்ரிக் ஹென்ரி, தாமஸ் ஸம்டர் போன்றவர்கள். இரண்டாம் வகையினர் முன் யோசனையற்றவர், ஆவேசக்காரர்கள், அரசாங்கத்தைப்பற்றி மிகப் புதிய நோக்கங்கள் கொண்டவர்கள். அவர்கள் விரும்பியது நூற்றுக்கு நூறு குடியரசு, அல்லது அநேகமாய் அதைப் போன்றது. ஜெஃபெர்ஸன், ஸாம்யுல் ஆடம்ஸ் போன்ற சிந்தனையாளர்கள் போட்ட விதைகளே அவர்கள் உள்ளத்தில் முளைத்தன; ஆனல் போர் ஆரம்பித்த பின்னர் அவர்கள்தான் அதற்கு மிருக சக்தியளித்தார்கள். ஆரம்பிப்பதில் முதல் இனத்தாரின் பொறுப்பு அதிகம். படித்தவர்கள் முழு மனத்துடன் தம் சொல் சக்தியையும் எழுத்து சக்தியையும் நாட்டிற்காக உபயோகித்தார்கள், சிறு அரசியல் புஸ்தகங்கள் பெரிய எண்ணிக்கையில் வெளியிட்டார்கள், செய்தித் தாள்களில் கட்டுரைகள் எழுதினார்கள், பொதுக் கூட்டங்களில் பேசிப் பிரசாரம் செய்தார்கள்.

பிரிட்டிஷ் சிந்தனையாளர்களில் இரு வகுப்பார் மேற்கூறிய அமெரிக்க எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார்கள்: ப்யூரிடன் குடியாட்சி என்னும் கருத்துக்களை ஆதரித்தெழுதின கோஷ்டி, 1688-ன் விக் (Whig) புரட்சியை ஆதரித்தெழுதின கோஷ்டி. லாக் (Locke) எழுதிய "அரசாங்கத்தைப் பற்றிய இரண்டு நூல்கள்" என்பதன் இரண்டாம் புஸ்தகத்தில் அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனத்தின் விதைகள் அடங்கி இருக்கின்றன. அரசாங்கத்தின் சர்வோன்னதக் கடமை ஒவ்வொருவனுக்கும் உரித்தான உயிர், சுதந்திரம், சொத்து ஆகியவற்றைக் காப்பாற்றுவதே—என்று லாக் கூறினார். அரசியல் அதிகாரம் மக்களின் நன்மைக்கான தர்ம ஒப்படைப்பு என்பது அவர் அபிப்பிராயம். மக்களின் இயற்கையான உரிமைகள் மிகவும் பாதிக்கப்படாமல் அரசாங்கத்தை மாற்றவோ ஒழிக்கவோ அவர்களுக்கு பாத்தியதை யுண்டு—அது அவர்கள் கடமையாகும். சுதந்திரப் பிரகடனத்தின் முன்னுரையில் இந்தச் சித்தாந்தம் பதியப்பட்டிருக்கிறது. "அதிகாரமற்ற சக்திப் பிரயோகத்திற்கு ஏற்ற உண்மையான பரிகாரம் சக்தியால் அதை எதிர்ப்பதே" என்பது அவருடைய திட நம்பிக்கை. "சகிப்புத் தன்மையைப் பற்றிய கடிதம்" என்பதில் அவர்—மதமும் அரசியலும் வெவ்வேறு விஷயங்கள், அவற்றைக் கலக்க விடக்கூடாது—என்னும் கருத்தை விஸ்தரித்திருந்தார்; அமெரிக்கப் புரட்சிக்கு அது இன்னொரு பெரிய அஸ்திவாரம் போலாயிற்று. ஆதர்ச நிலையில் ஆலயம் மக்களின் சொந்த முயற்சியை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும், அரசாங்கத்தின் வரி விதிக்கும் சக்தியை நம்பியிருக்கக் கூடாது என்று அவர் தெளிவாகக் கூறினார்.

அரசியல் பற்றுள்ள அமெரிக்கக் கல்விமான்கள் அனைவரும் லாக்-கையும் அவர் போன்றவர்களையும் மனப்பூர்வமாகப் பாராட்டினார்கள். உண்மையில், அரசியல் தத்துவத்திலிருந்து பிரிட்டிஷார் விலகிப் போகும் சமயத்தில்தான் அமெரிக்கர்கள் அதைத் தம் பிதுரார்ஜிதச் சொத்தாகக் கொண்டார்கள். 1688-க்குப் பிறகு பிரிட்டிஷ் நிர்மாண முறை உருவற்ற, குடிநல விரோதமான பிரதிநிதித்துவத்தை வளர்த்தது. செல்வாக்குள்ள ஒரு சிலரின் ஆட்சி உருவாயிற்று; அநேகமாய்க் காலியாய்ப்போன இடங்களும் பழைய வழக்கப்படி பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுதானிருந்தன. அப்பேர்ப்பட்டராட்டன் பரோக்கள்—Rotten-borough—1832 வரை அழுலில் இருந்தன; புதிதாய்க் கிளம்பி வளர்ந்த தொழில் பிரதான நகரங்களுக்குப் பார்லிமெண்டில் இடம் கிடையாது; பெரும் பகுதியினரின் வாக்குரிமை முன்னேற்பாட்டுடன் ரத்து செய்யப்பட்டு வந்தது. வாக்குரிமை ரத்தும் ராட்டன்-பரோ அல்லது அதற்குச் சமமான அக்கிரமமும்

அமெரிக்காவிலும் இருந்தது; ஆனால் அதே அளவுக்கில்லை. வாஸ்தவத்தில் 18-ஆம் நூற்றாண்டு முழுதிலும் வாக்காளர்களை அதிகரிக்கவும் புதிதாய் ஏறபட்ட ஜில்லாக்களும் மேற்குப் பிரதேசங்களும் பழையஸ்தலங்களைப்போலவே சார்பாளர்கள் பெறவும் அமெரிக்கா விடாமல் பாடுபட்டுக் கொண்டே இருந்தது. பிரதிநிதித்துவம் வளரும் முறை அமெரிக்காவில் இருந்தது; அது குறையும் முறையை இங்கிலாந்து அனுசரித்தது. இரு நாட்டாருக்கும் இயற்கை உரிமைகளில் நம்பிக்கை யுண்டு—"உரிமைகள் மசோதா" பிரிட்டிஷாரின் மகத்தான ஆஸ்தி; ஆனால் பிரிட்டிஷார் பலர் பார்லிமெண்டின் அதிகாரத்தை வேத மந்திரமாக ஏற்கப் பழகிவிட்டனர்; பெரும்பாலான அமெரிக்கரோ வெகுண்டு மறுத்தனர். 1765-ல் தாய் நாட்டுடன் மன வேறுபாடு ஆரம்பித்தபோது, தம் தேவையை முற்றிலும் பூர்த்தி செய்யும் அரசியல் தத்துவ முறை தம்மிடம் இருப்பதை அமெரிக்கர் அறிந்தனர்.

அபிப்பிராயபேதம்: புரட்சிக்கு முன் பத்து வருஷங்களில் அமெரிக்கரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் ஒருவரையொருவர் தவறுகப் புரிந்து கொண்ட அளவுக்கு வேறெங்கும் இரு எதிர்ாளிகள் மன வேறுபாடு கொள்வது அபூர்வமே. ஆதி பிரிட்டிஷ் நடவடிக்கைகள் ஒன்றும் அமெரிக்கரைத் துன்புறுத்துவதற்காக எடுக்கப்பட்டவில்லை என்பதை மறுபடியும் வற்புறுத்துவது நல்லது. இந்தியப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான யத்தனம், அமெரிக்கரின் ரகஷணைக்காகத் துருப்புக்களை நிறுத்துதல், இறக்குமதி, சுங்க இலாகாவின் தளர்ச்சியை நீக்குவது—இவையெல்லாம் லண்டனிலிருந்த மந்திரிகளுக்கு நியாயமாகவும் மிதமாகவுந்தான் தோன்றின. ஆனால் அமெரிக்காவில் பல பெரும் பகுதியினருக்கு அவை தம்மை நசுக்கிப் பிழிவதற்காக ஜாக்கிரதையாய் முடுக்கி விடப்பட்ட யந்திரங்கள் போலவே தோன்றின.

ஏழாண்டுப் போரைத் தொடர்ந்து வாழ்க்கை கடினமாக இருந்தது. வேலை கிடைக்காதவர்களும் பணம் இல்லாதவர்களும் மலைகளுக்கப்பால் புது வாசஸ்தலங்கள் தேடவிரும்பினர். ஆனால் "பிரகடன எல்லைக்கோடு" குறுக்கே நின்றது. வியாபாரம் மந்தமாயிருந்தது; ரொக்கப்பணம் குதிரைக் கொம்பாக இருந்தது; அப்படியிருந்தும், புதிய ஏற்றுமதி இறக்குமதி வரிகள் விதித்தும், அவற்றைக் கண்டிப்பாக வசூலித்தும் பிரிட்டன் அமெரிக்காவின் பொன்னையும், வெள்ளியையும் கடத்திக் கொண்டிருந்தது. இதற்கிடையே அமெரிக்கரின் அனுமதி இல்லாமல் பிரிட்டன் அவர்கள்மேல் வரி (ஸ்டாம்பு வரி) விதித்துக் கொண்டிருந்தது. அந்தப் பண மெல்லாம் அமெரிக்கர் பெரும்பாலோர் தேவை யென்று கருதாத நிலையான சேனைக்காக செலவழிக்கப்பட்டு வந்தது; அருவருப்

பளிக்கும் அச்சேனை நியாயமற்ற வரிகளையும் பெருஞ்சுமை யான சுங்க விகிதங்களையும் வசூலிப்பதில் பயன்படுத்தப்படும் போது மனக்கசப்பும் இன்னும் மேலிட்டது. தீர்வை செலுத் தாமல் சரக்குகளைக் கடத்தும் குற்றவாளிகளை சோதனை போட மன்னரின் சிப்பந்திகள் அமெரிக்கக் கோர்ட்டுகளிடம் ''அதிகாரப் பத்திரம்'' வழங்கும்படி கேட்டபோது அவர் களுக்கு அதில் பிசகொன்றும் தெரியவில்லை. ஆனால் அமெரிக் கருக்கோ, ஆதாரமற்ற சந்தேகத்துடன் பெற்ற ''வாரண்டு'' பத்திரத்தைக் கொண்டு பூர்ண அதிகாரத்துடன் யார் வீட்டி லும் கடையிலும் முரட்டுத்தனமாய்க் கிளறிப்பார்ப்பது அடியோடு பிடிக்கவில்லை. காலனிகளில் சில கைத்தொழில்களை மட்டுப்படுத்தவோ பூர்ணமாய் நிறுத்தவோ பிரிட்டிஷ் அரசாங் கம் விதித்த சட்டம் அதற்கு நியாயமாகவே பட்டது; கச்சாப் பொருள்களின் காலவிசனிலும், தயாரிப்புப் பொருள் களில் பிரிட்டனும் முழுக்கவனத்தைச் செலுத்தினால் இருவரு க்கும்சௌகர்யம், சாம்ராஜ்யத்திற்கும் க்ஷேமம் என்பது அதன் அபிப்ராயம். ஆனால் அது போன்ற தலையிடுதல் காலனிகளுக்கு ருசிக்கவில்லை.

இந்த விவகார விஷயங்களுக் கெல்லாம் பின்னல் சித் தாந்த மத பேதமொன்று இருந்து சச்சரவுக்கு ஆழமளித்து, பாலமிட முடியாத ஒரு நீர்ப்பரப்பை உண்டு பண்ணிற்று.

பார்லிமெண்டு ஒரு சாம்ராஜ்ய ஸ்தாபனம் என்றும், உள் நாட்டின் மேல் அது எவ்வளவு அதிகாரம் செலுத்த முடியுமோ அவ்வளவு காலனிகள் மேலும் செலுத்த முடியுமென்றும் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் பெரும்பாலோர் அபிப்பிராயப் பட்டனர்—இங்கிலாந்தின் பெர்க்ஷயருக்காக அது சட்டம் விதிப்பது போலவே மாஸசுஸெட்ஸுக்காகவும் விதிக்க முடியு மென்றனர். காலனிகளின் சொந்த அரசாங்கங்கள் இருப்பது உண்மையே. ஆனால் காலனிகள் வெறும் கூட்டு நிறுவனங் கள்—கார்ப்பொரேஷன்கள்; ஆகவே அவை ஆங்கிலச் சட்டத் திற்குட்பட்டவை; பார்லிமெண்டு விரும்பும்போது அவ்வர சாங்கங்களைக் கட்டுப்படுத்தலாம், பெருக்கலாம், ரத்து செய்ய லாம் என்பது அவர்கள் கட்சி. அமெரிக்கத் தலைவர்கள் சொன்னதாவது ''சாம்ராஜ்ய''ப் பார்லிமெண்டு என்று ஒன்று மில்லை. அமெரிக்கரின் சட்ட பூர்வமான உறவு மன்னரோடு தான். கடல் கடந்து குடியேற்ற நாடுகள் நிறுவ மன்னர்தான் சம்மதமளித்தார்; அவர்தான் அங்கு அரசாங்கங்கள் அமைத் தார். அவர் இங்கிலாந்துக்கும் அரசர், மாஸசுஸெட்ஸுக்கும் அரசர், அது ஒப்புக்கொள்ளக்கூடியது. ஆனால் எப்படி மாஸசு ஸெட்ஸ் சட்டசபை இங்கிலாந்துக்காகச் சட்டம் இயற்றமுடி யாதோ, அவ்வாறே லண்டனிலிருக்கும் பார்லிமெண்டு மாஸசு ஸெட்சுக்காக சட்டங்கள் விதிக்க முடியாது. ஏதோ ஒரு

காலனியிலிருந்து மன்னர் பணம் பெற விரும்பினால் அவர் நன் கொடையாகக் கேட்கலாம்; ஆனால் பார்லிமெண்டு வரிச்சட் டமோ வேறு வரிவசூல்சட்டமோ நிறைவேற்ற முடியாது-நிறை வேற்றினால் செல்லாது. சுருக்கமாக, இங்கிலாந்திலிருந்தாலும் அமெரிக்காவில் இருந்தாலும் ஒரு பிரிட்டிஷ் பிரஜை மேல் அவன் தேர்ந்தெடுத்த சார்பாளர்கள்தான் வர் விதிக்க முடியும்.

இவ்விவாதத்தில் பிரிட்டன் முழுதும் ஒரு கொள்கை கொண்டது, அமெரிக்கா முழுதும் ஒரே மாதிரி நினைத்தது என்று எண்ணுவது தவறாகும்; முக்கியமான பிரச்னைகளைப் பற்றி இரு நாடுகளிலும் இரு கட்சிகள் இருந்தன; காலனி களுக்கும் தாய் நாட்டுக்கும் சண்டை என்று நினைப்பதைக் காட்டிலும், காலனிகளில் கட்சிகளிடையே உள்நாட்டுச் சண்டை, பிரிட்டனிலும் அவ்வாறே என்றறிய வேண்டும். பார்லிமெண்டில் உயரியக் நாயகர்கள் சாதாம் (Chatham) பர்க் (Burke), ஃபாக்ஸ் (Fox) முதலியோர் அமெரிக்கத் தேசாபிமானிகள் பக்கம் அதிகம் சாய்ந்தனர்; காலனிகளில் ஒரு திடமான டோரி (Tory) கோஷ்டி பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஆதரித்தது. இருபுறத்திலும் சில அமிதவாதிகள் அந்தச் சச்சர வைத் தம் நோக்கங்களை வலுப்படுத்த உபயோகித்துக் கொண்டனர்.

கலகத்திற்கு ஏற்பாடு: பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதி ரான கிளர்ச்சி மிகப் பரவலானதோ திடீரென்று தானே உண்டானதோ அல்ல. கூரிய அறிவுள்ள சிலரால் அது ஜாக்கிரதையாகத் திட்டமிடப்பட்டது; அமெரிக்கக் கண்டத் தின் மிகச் சுறுசுறுப்பான சிலர்தான் அதை யோசனையுடன் நடத்தினர்கள். முறையாகத் திட்டமிடாதிருந்தால் வெற்றி கிட்டியிராது. தேசாபிமானிகள் ஒழுங்கு முறையுடன் தயாராயிருந்தார்கள்; டோரிகளும் ராஜவிசுவாசிகளும் அவ் வாறிருக்கவில்லை; ஆகையால்தான் தேசபக்தர்கள் வெற்றி யடைந்தார்கள்.

பிரிட்டிஷ் சட்டங்களை எதிர்த்து ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் தான்தோன்றியாக நிகழ்ந்த கலகங் களே அவ்வியக்கத்தின் ஆரம்பம். 1765-ன் ஸ்டாம்புச் சட்டம் பல காலனிகளில் இவ்வாறு எதிர்க்கப்பட்டது. சட்டசபைகள் ஆட்சேபித்தன. முக்கியமாக வர்ஜீனியா மிகுந்த செல்வாக்கு டன் சில தீர்மானங்களை நிறைவேற்றிற்று. கலகக் கூட்டங்கள் பல இடங்களில் ஸ்டாம்புகளையும் வேறு சொத்துக்களையும் அழித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ராஜினாமா செய்யவோ, ஒடிப்போகவோ கட்டாயப்படுத்தியதோடு கவர்னர்களின் உயிருக்கும் ஆபத்துண்டாக்கின; இந்தக் கலக நடவடிக்கை கள் நல்ல பயனளித்துள்ளன. முதலில் இக் கலகங்களை மக்கள் பாராட்டி ஆதரித்தனர்; ஆனால் ஒழுங்கு முறையில் பற்றுள்ள

செல்வர்கள் சிறிது காலத்திற்கெல்லாம் தங்கள் அருவருப்பைத் தெரிவித்தனர். பார்லிமெண்டின் கொடுமைக்கு மக்களின் எதிர்ப்புத் தளர்ந்து போகாதிருக்கும் வண்ணம் ''சுதந்திரப் புத்திரர்கள்'' போன்ற நிறுவனங்கள் கிளம்பின.

இரண்டாவது நடவடிக்கை பொருளாதார பகிஷ்காரம் (Boycott). வியாபார கோஷ்டிகள் இதை ஆரம்பித்தன; சில சட்டசபைகளும் ஆதரவளித்தன. 1767-ல் உண்டான டவுன்ஷெண்டுச் சட்டம் (Townshend Act) தான் அதற்குக் காரணம். அச்சட்டப்படி தேயிலை, காகிதம், கண்ணாடி, ஓவியர்களின் வர்ணப் பொருள்கள் ஆகியவற்றின்மேல் சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டது. பல சமுதாயங்களில் வியாபாரிகளும் செல்வாக்குள்ள நகரத்தார்களும் பிரிட்டிஷ் வரிகள் விதிக்கப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்வதில்லை, வாங்கி உபயோகிப்பதில்லை என்ற ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர். இந்த ஒப்பந்தம் பாஸ்டனில் 1768 மார்ச்சில் ஆரம்பித்து இரண்டு வருஷங்களில் மற்ற காலனிகளுக்கும் பரவிற்று. சில காலனிகளில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி ஏறக்குறையப் பாதியாகிவிட்டது; மற்றவைகளில் பகிஷ்காரம் சரியாக நடத்தப்படவில்லை. 1770-ல் தேயிலை தவிர பாக்கிப் பொருள்களின்மேலிருந்த தீர்வையைப் பார்லிமெண்டு ரத்து செய்ததும் அந்த இயக்கம் முடிவு பெற்றது.

மூன்றாவது நடவடிக்கை விநோதமானது; பிரசாரமே அதன் உத்தேசம். காலனிக்குள்ளும் காலனிகளுக்கிடையேயும் கடிதப் போக்குவரத்துக் கமிட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டன. இயற்கையாகப் பிரசார சக்தியும் சங்க ஸ்தாபன சக்தியுமுள்ள ஸாம்யுல் ஆடம்ஸ் (மாஸ்சூஸெட்ஸ்) அதன் முக்கியத் தலைவர். 1772 வேனிற் காலத்தில் கவர்னர்களைப்போலவே உயர்தர நீதிபதிகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் நிரந்தரமாகச் சம்பளம் கொடுக்கப்போவதாக மக்கள் அறிந்தனர்; அவ்வாறு செய்தால் நீதிபதிகள் மேல் மக்களுக்கு ஒரு பிடிப்புமிராது. நவம்பர் இரண்டாம் தேதி கூடிய நகரக் கூட்டம் நிறைவேற்றியிருந்தது. மாகாணத்தின் இதர பட்டணங்களுடன் செய்திகள் பரிமாறிக் கொள்ள ''கடிதப் போக்குவரத்துக் குழு'' அமைக்கப்பட்டது. சீக்கிரத்தில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு கமிட்டி இருந்தது. வேறு காலனிகளும் அதேபோல ஸ்நலக் கமிட்டிகள் அமைத்தன. 1773-ல் வர்ஜீனிய நகர ஆலோசகர்கள் காலனி இடைக் கமிட்டிகளில் முதல் கமிட்டியை நிறுவினர்கள்; அந்த இயக்கம் சீக்கிரம் கண்டமெங்கும் பரவிற்று.

புரட்சிக்கான சட்டசபைகள் ஸ்தாபித்தல் நான்காம்படி; மாகாண காங்கிரஸ் என்பது அவற்றின் சாமான்யப் பெயர். பழைய சபைகள் இரண்டு காரணங்களையொட்டி

முற்போக்காளர்களுக்கு உதவா. அவற்றில் இருந்தவர்கள் பெரும்பாலும் பழைய மார்க்கத்தில் பற்றுள்ளவரும்-கன்ஸெர்வடிவ்-சொத்துடையவருமாதலால் மாறுதல் விரும்பாதவர், நிதானச் செயலாளர்கள்; கவர்னர்கள் விரும்பினால் சபைகளை ஒத்திப் போடலாம் அல்லது கலைக்கலாம். ஆகவே சபையோர் பொதுவாக கவர்னருக்கு அடங்கியிருப்பார்கள். 1774-ல் பாஸ்டன் துறைமுகச்சட்டம் இயற்றப்பட்ட செய்தி கிடைத்ததும் முதல் மாகாணக் காங்கிரஸ்கள் தோன்றின. மிக எளிய முறையில் அவை உண்டாயின.

உதாரணமாக, பாஸ்டன் துறைமுகப் பட்டணத்தைப் பற்றிய செய்தி வர்ஜீனியாவில் 1774-மே மாதம் கிடைத்தது; மாகாணம் முழுதிலும் அதிர்ச்சியும் விறுவிறுப்பும் உண்டாயின. ஜஃபர்ஸன், பாட்ரிக் ஹென்ரி, ரிச்சர்ட் ஹென்ரி லீ முதலான ஏழெட்டுப் பேர் உடனே ஆலோசனை மன்றத்தில் சபை கூடினார்கள். உபவாசத்திற்கும் ஜபத்திற்கும் ஒரு நாளைக் குறிப்பிட்டு விளம்பரம் செய்வது என்று அவர்கள் தீர்மானித்தார்கள். வழக்கமில்லாத கம்பீரச் சூழ்நிலை ஏற்பட்டது; ஏழாண்டுப் போருக்குப்பின் ஜனங்கள் இவ்வளவு கவலையுடன் தோன்றியதில்லை. முன் உதாரணத்திற்காக க்ராம்வெல் (Cromwell) காலத்துப் பார்லிமெண்டு நிகழ்ச்சிகளைப் புரட்டிப் பார்த்து அவர்கள் நிர்வாக ஆலோசகர்களை ஜூன் முதல் தேதியை விரத தினமாக ஏற்கும்படி கேட்டுக்கொண்டு அவர்களுடைய சம்மதம் பெற்றார்கள். கவர்னர் டன்மோர் ஆலோசனை சபைமேல் கீழ்ப்படியாமை என்ற குற்றஞ்சாட்டி அதை உடனே கலைத்து விட்டான். அவர்கள் 89 பேராக வெளியேறிப் பெரிபதொரு கூடத்தில் கூடினார்கள். அதிக ஆவலுள்ள அங்கத்தினர்கள் இறக்குமதியின்மை ஒப்பந்தமொன்று புதிதாகப் பிரேரேபித்தார்கள். ரிச்சர்ட் ஹென்ரி லீ அதோடு நிற்கக்கூடாது என்று சொல்லி வேறு யோசனைகளும் அளித்தார். மே 29 ஆம் தேதி இதரக் காலனித் தலைநகரங்களிலிருந்து செய்திகள் திரட்டிய தூதர்கள் பாஸ்டனிலிருந்து குதிரையேறி வந்தார்கள். இங்கிலாந்துடன் எல்லா வியாபாரமும் நின்றுபோகவேண்டும் என்ற யோசனையை அச்செய்திகள் அறிவித்தன. கலைக்கப்பட்ட சபையின் அங்கத்தினர்களை ஆகஸ்டு முதல் தேதி ஒன்று கூடும்படி செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு காலனிகளின் முதல் மாகாணப் பேரவை அல்லது புரட்சிக் காலச் சபை பிறந்தது.

அத்தியாயம் 4

புரட்சி; ராஜ்யங்களின் ஐக்கியம்

ஆயுதம் தரித்தல்: சிறுகச் சிறுகக் குடியேற்ற நாடுகளில் கோபமூட்டும் நிகழ்ச்சிகளும், குழப்ப நிலையும் அதிகரித்தன. பல நகரங்களில் பிரிட்டிஷ் துருப்புக்கள் இருத்தல் தீவிர சீரமைப்புக் கட்சித் தலைவர்களுக்குக் குடிகளைத் தூண்டிவிடுவதற்கான வாய்ப்பு அளித்தது. 1770-ல் நியூ யார்க்கில் ''கோல்டன் ஹில்'' சண்டை நடைபெற இருந்தது. ராணுவ அதிகாரிகளும் மாஜிஸ்டிரேட்டுகளும் தலையிட்டிராவிட்டால் சண்டை மூண்டிருக்கும். பாஸ்டன் நகரில் இன்னும் ஆபத்தான தாக்குதல் நடந்தது. சில சிப்பாய்கள் உத்தரவில்லாமலே சுட்டார்கள். நகர மக்கள் மூவர் உடனே இறந்தனர்; இருவர் மரணகாயம் அடைந்தனர். எல்லாத் துருப்புக்களையும் அழைப்பதற்காக முரசு முழங்கும் சமயத்தில் கவர்னர் அங்கு ஆஜராகி அமைதியை நிலைநாட்டினார். பலருக்கு 'பாஸ்டன் படுகொலை' பிரிட்டிஷ் கொடுமையின் தலை சிறந்த உதாரணமாகத் தோன்றிற்று. அதன் ஆண்டு விழா சோக கும்பீரத்துடன் அனுஷ்டிக்கப்பட்டது. அது முன் இல்லாத அளவுக்கு மக்களை ஆவேசப்படுத்திற்று.

அதிகாரத்துக்கு வரும் இந்தச் சந்தேகத்திலும் வெறுப்பிலுமிருந்து நார்த் பிரபுவைத் தலைவராகக் கொண்ட பிரிட்டிஷ் மந்திரிக் குழு தான் கற்கவேண்டிய படிப்பினையைக் கற்கவில்லை. 1772-ல் இன்னொரு குறிப்பிடத்தக்க சம்பவம் நிகழ்ந்தது. காஸ்பீ என்னும் சிறு போர்க் கப்பல் ரோட் தீவுக்கருகாமையில் சுங்க நியமக் கடமைகளைச் செலுத்திக்கொண்டிருக்கும்போது அது, ஜூன் மாதத்தில், ப்ராவிடென்ஸ் என்னும் ஊருக்கருகே தரையேறிச் செயலற்றுப் போயிற்று. ஊரார் சிலர் அதைத் தாக்கி, மாலுமிகளை வசப்படுத்தி, (வரி செலுத்தப்படாத இறக்குமதிகளைக் கண்டிக்கும்) அந்த வெறுக்கத்தக்க சிறு கப்பலைக் கொளுத்திவிட்டார்கள். 'டெளன்ஷெண்டு சட்ட'ப்படி விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி வரி தேயிலை தவிரப் பாக்கிச் சரக்குகள் மீதிருந்து நீக்கப்பட்டிருந்தது; கொள்கையையும் உரிமையையும் விட்டுக்கொடுக்கக்கூடாது என்பதற்காகவே தேயிலை மீது வரி தொடர்ந்து விதிக்கப்பட்டிருந்தது. ஆகவே குடியேற்ற நாடுகளில் தேநீர்ப்

பானம் நின்றுபோயிற்று எனலாம்; அதனால் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நஷ்டம் ஏற்பட்டு வந்தது. அதற்காதரவு அளிப்பதற்காக பிரிட்டிஷ் மந்திரிக் குழு அக்கம்பெனி அமெரிக்காவில் தேயிலையை மிக மலிவாக விற்பதற்கான வசதிகள் செய்து கொடுத்தது; ஆனால் நார்த் பிரபு ராத்தலுக்கு மூன்று பென்ஸ் என்ற வரியை மாத்திரம் தள்ளிக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை: ஏனென்றால் அரசனின் அதிகாரம் எந்த அளவுக்கு ஏற்கப்படுகிறது என்று சோதிக்கும் கருவியாக அவ்வரி உபயோகப்படுத்தப்பட்டது. அந்தச் சோதனை அமெரிக்கப் புரட்சிக்கு நேரடியான காரணம் ஆயிற்று. இது அல்பத்தனமான தந்திரம் என்று கருதி அமெரிக்கர் மிகக் கோபமடைந்தனர். கம்பெனி தேயிலை ஏற்றிய பல கப்பல்களை அனுப்பிற்று. ஒவ்வொரு துறைமுகத்திலும் தீர்மானமான எதிர்ப்பு இருந்தது. சார்ல்ஸ்டனில் தேயிலை முழுதும் பண்டக சாலைகளில் பூட்டி வைக்கப்பட்டது. ஃபிலடல்ஃபியாவிலும், நியூ யார்க்கிலும் அது ஏற்றிவந்த கப்பல்களிலேயே திருப்பி யனுப்பப்பட்டது. பாஸ்டனில் ஆவேசம் எல்லை கடந்து போய்விட்டது. 1773-ஆம் ஆண்டு டிசம்பர் 16-ஆம் தேதி இரவு, ஐம்பது பேர் சேர்ந்த ஒரு கோஷ்டி இந்தியர் போன்று மாறு வேடம் பூண்டு ஸாம் ஆடம்ஸ் தலைமை தாங்க, கப்பல்களில் ஏறி, 343 தேயிலைப் பெட்டிகளை உடைத்து, எல்லாச் சரக்கையும் கடலில் கொட்டிற்று. நகர அதிகாரி எவரும் சொத்து நஷ்டத்தைத் தடுக்க முயலவில்லை. வடக்கே மேய்னிலிருந்து தெற்கே ஜ்யார்ஜியா வரை கிழக்குக் கரை நாடுகள் புகழ்ந்து பாராட்டிய இம்முரட்டுச் செய்கையால் பாஸ்டன் பிரிட்டிஷ் வல்லரசின் சத்துருவாயிற்று. பிரிட்டிஷ் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராயிற்று.

மூன்றாம் ஜ்யார்ஜ் மன்னரும் பார்லிமெண்டின் பெரும் பகுதியினரும் கலகம் செய்யும் பாஸ்டன் நகரைத் தண்டிக்கத் தீர்மானித்தனர். பர்க், சாதம் (Chatham) ஆகிய இரு அங்கத்தினர்களும் சமரஸ முறைக்காக மன்றாடினர். ஆனால் ஐந்து கடுமையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மாஸசூஸெட்ஸ் (Massachusetts) ஒப்பந்தம் என்பது மக்களின் மதிப்பைப் பெற்ற ஒப்பந்தம்; விரிந்த நோக்கமுள்ள அதன் சில அம்சங்கள் ஒரு புதுச்சட்டத்தால் ரத்து செய்யப்பட்டன; அதனால் அவ்வொப்பந்தத்தின் தன்மையே மாறிவிட்டது. இன்னொரு சட்டப்படி, அமெரிக்காவில் பிரிட்டிஷ் ராணுவத் தலைவராக இருந்த ஜெனரல் கேஜ், நான்கு ரெஜிமெண்டுகளின் உதவியுடன் மாஸசூஸெட்ஸுக்குக் கவர்னராக்கப்பட்டார். சிவிலியன் மக்களின் வீடுகளில் சிப்பாய்களைத் தங்க வைக்கவும் அவருக்கு அதிகாரமிருந்தது. மூன்றாவது சட்டப்படி, ஒரு ராணுவ அதிகாரி தன் கடமையைச் செலுத்தும்போது கொலைக்

குற்றத் திற்காளாஞல் அவஜை விசாரஜைக்காக, தக்க சாட்சிக ளுடன், இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டும். இன்ஞெரு சட் டப்படி, பாஸ்டன் நகரம் தேயிலே நஷ்டத்தை ஈடு கட்டி, ராஜ விசுவாசத்துடன் வரிகள் செலுத்த ஒப்புக்கொள்ளும்வரை, அந்நகரத்தின் துறைமுகம் வியாபாரம் நடத்த அனுமதி பெறுது. கடைசியாக, க்விபெக் (Quebec) சட்டத்தின்படி ஒஹியோ நதிக்கு வடக்கேயும் அலெகெனி மலேக்கு மேற்கே யும் உள்ளதெல்லாம் கானடாப் பிரதேசம் என்று நிர்ணயிக்கப் பட்டது. (தெற்கேயும் கிழக்கேயும் எஞ்சி நிற்பது எவ்வளவு சொற்பம் என்பது தேசப் படத்தைப் பார்த்தால் தெரியும்). இது தண்டஜைக்காக செய்யப்பட்ட காரியமல்ல; வெகுநாட் களாகவே நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட எல்லே நிர் ணயம் இது; இந்நடவடிக்கையால் வட மேற்குப் பிரதேச ரோம-சரும வியாபாரம் மிகவும் ஒழுங்காய் நடைபெறுமென் றும், மிஷிகன் (Michigan), இல்லினுஸ் (Illinois) வட்டாரத்தி லுள்ள கத்தோலிக ஃபிரெஞ்சு மக்கள் ஹிதமான அரசியல் தொடர்பு பெறுவார்களென்றும் அவர்கள் நம்பினுர்கள். ஆனல் காலம் பிரதிகூலமாக இருந்தது. கிழக்குக் கடற்கரை யோர மக்கள் வடமேற்குப் பிரதேசங்களே இழந்துவிட்ட தாகவே நினேத்தார்கள். அது இயற்கையே.

பார்லிமெண்டின் இக்கடுமையான சட்டங்கள் கோபத் தையும் திகிலையும் கிளப்பின. முன்கூறிய கடிதப் பிரசாரக் கமிட்டிகள் விறுவிறுப்புடன் தம் வேலேயைத் துவக்கின. சபை சாரக் குறுநூல்கள் வெளியாயின. வர்ஜீனியாவின் சட்டசபை அங்கத்தினர்கள் அமெரிக்காவின் மொத்த நலனேப் பற்றிப் பேசுவதற்காக வருடாந்தரக் காங்கிரஸ் கூடவேண்டும் என்ற யோசனே கூறியபோது அனேவரும் ஊக்கத்துடன் அதை ஒப்புக் கொண்டார்கள். வர்ஜீனிய மாகாண சபை பிரதிநிதிகளேத் தேர்ந்தெடுத்தது; இதர மாகாணங்களும் தொடர்ந்து அவ் வாறே செய்தன. 1774, செப்டம்பர் 5-ஆம் தேதி அமெரிக்கக் கண்ட காங்கிரஸ் ஃபிலடெல்ஃபியா நகரில் முதல் முறை கூடிற்று; ஜியார்ஜியா தவிர மற்றக் காலனிகளெல்லாம் பங் கெடுத்துக்கொண்டன. அதன் 51 பிரதிநிதிகளுள் வாஷிங்டன், பென்ஜமின் ஃப்ராங்க்லின், ஜான் ஆடம்ஸ் உட்படப் பல திறமை சாலிகள் இருந்தார்கள். வேண்டுமென்றே பிரிட்டிஷ் பார்லி மெண்டைப் புறக்கணித்து அவர்கள் மன்னரிடமும் பிரிட்டிஷ் மக்களிடமும் அமெரிக்க மக்களிடமும் தம் வேண்டுகோட் களேச் சமர்ப்பித்தார்கள். அவர்கள் காலனிகளின் உரிமை களேப்பற்றிக் கண்டிப்பான பிரகடனம் ஒன்று தயாரித்தார்கள். அதன்படி, மாகாணங்களுக்குத் தம்சொந்த விஷயங்களேப்பற்றி ட்டம் நிறுவத் "தனி உரிமை" உண்டு; ஆனல் விசேஷக்

காரணத்தை முன்னிட்டு அரசன் அதை அங்கீகரிக்க மறுக் கலாம். மேலும், சாம்ராஜ்யத்தின் உண்மையான பொது நன்மைக்காக பார்லிமெண்டு விதிக்கும் வெளி நாட்டு வியா பாரச் சட்டங்களே அமெரிக்கக் காலனிகள் ஏற்கும்.

இவற்றைக் காட்டிலும் முக்கியமாக, காங்கிரஸ் இரண்டு தீர்மானங்களால் பிரிட்டிஷ் மந்திரி சபையோடு தொடர்பே இல்லாமல் செய்யப் பார்த்தது. மூன்று மாதகாலத்திற்குள் பிரிட்டிஷ் சரக்குகளின் இறக்குமதியையும், ஒரு வருஷத்திற் குள், மேற்கு இந்தியத் தீவுகள் உட்பட, பிரிட்டிஷ் துறை முகங்களுக்கு ஏற்றுமதியையும் முற்றிலும் நிறுத்தி விடுவது என்பது ஒரு தீர்மானம். அத்தீர்மானத்தின் அச்சுப்பிர தி நாடெங்கும் பரவலாக அனுப்பப்படும். அத்தீர்மானத்தின்படி கையொப்பமிட்டவர்கள் அனேவரும் நடந்து கொண்டால், நஷ்டம் எதிரிக்கு மாத்திரமல்ல, அமெரிக்கருக்கும் உண்டு. அது கடுமையான தியாகமாம். வர்ஜீனியாவில் புகையிலேச் சாகுபடி செய்பவர்கள் தங்கள் சரக்கை ஆங்கிலக் கடைகளுக்கு அனுப்ப முடியாது. மாஸசுஸெட்ஸ் கப்பல் வியாபாரிகள் இனி மேற்கு இந்தியத் தீவுகளுடன் லாபகரமான வியா பாரம் நடத்த முடியாது. நியூ யார்க், ஜியார்ஜியா தவிர மற்ற பதினேரு காலனிகள் இத்தீர்மானத்தை ஒப்புக்கொண் டன. 13 காலனிகளிலுமே வலிமையுள்ள ஸ்தல கமிட்டிகள் அதைக் கொண்டு செலுத்த முன்வந்தன. அக்காரியக் குழுக் கள் நாட்டுப்பற்றுக்கான விசுவாசப் பிரமாணங்கள் எடுத்துக் கொண்டன. அவைகள் நிர்ணயித்த தீர்மானங்களுக்கு மாருக நடந்து கொண்டவர்கள் கருங்காலிகள் என அழைக்கப்பட்டு நாற்சந்தி மூலேகளில் நிறுத்திவைக்கப்பட்டு கரும் செம்புள்ளி குத்திக் கசையடியும் கொடுக்கப்பட்ட டாவது தீர்மானத்தின்படி, பார்லிமென்டி சட்டங்களே மாஸசுஸெட்ஸ் எதிர்ப்ப கொள்வதோடல்லாமல், அக்காலனி நடந்தால், முழு அமெரிக்காவும் அத டும்; இது போருக்கு அறைகூவுதல் போ

லகலப்பு தவிர்க்க முடியாததாயி மென்டின் சட்டங்கள் முற்றிலும் மதிப்ப அல்லது அவற்றைக் கொண்டு செலுத்த ர உபயோகப்படுத்த வேண்டும், மூன்ருவது வழ ஒரு கட்சியும் பின்வாங்குவதாக இல்லே. ட ஒரு எதிரி நாடு என்று பார்லிமென்டு விளம்பர அதை அடக்குவதில் சாம்ராஜ்யத்தின் முழுப் ப னுக்கு ஆதரவளிக்கும் என்று உறுதி கூறிற்று. போர்த் தளவாடங்கள் வாங்கப்பட்டன; ராணு பயிற்சி பெறலாயின. 1775-ன் ஆரம்ப மாதங்

துவங்கும் என்று பாஸ்டனிலிருந்த சேனைத்தலைவன் கேஜ் மதிப்பிட்டான். காண்காார்டு பட்டணத்திலுள்ள சட்ட விரோதமான தளவாடங்களைக் கைப்பற்றத் தீர்மானித்து அவன் ஏப்ரல் 18-ஆம் தேதி மாலை 800 சிப்பாய்கள் கொண்ட ஒரு பகுதியைக் கிளப்பினான். கவனித்துக் கொண்டே இருந்த தேசாபிமானிகள் அமெரிக்க சர்ச்சு கோபுரத்திலிருந்த ஒரு லாந்தரின் மூலம் சைகை காட்டி சார்ல்ஸ் நதிக்கப்பாலிருந்த பால் ரெவியர் (Paul Revere) என்னும் வீரனை எச்சரித்தனர். அவன் குதிரை மேலேறிப் பாய்ந்து கிராமம் கிராமமாய்ச் சென்று ஜனங்களைத் தயாராக்கினான். மறுநாள் அதிகாலையில் துப்பாக்கியும் கையுமாகக் குடியானவர்கள் கூடி (அறிஞர் எமர்ஸன் பிற்காலத்தில் வர்ணித்தது போல்) 'உலகெல்லாம் கேட்ட குண்டு' ஒன்று சுட்டார்கள். ஸாம் ஆடம்ஸ் துப்பாக்கிகளின் ஒலியைக் கேட்டு, "இன்னுள் இனிய நன்னுள்!" என்றார்.

புரட்சிப்போர்: தேசாபிமானித் துருப்புக்களுக்குக் கட்டுப்பாடான பயிற்சி கிடையாது; அவர்களிடம் போதுமான ஆயுதங்கள் கிடையாது; ஆனால் அவர்களுடைய மொத்த சக்தி பயங்கரமானது. அவர்கள் சில நாட்களுக்குள்ளாக கேஜையும் அவன் சேனையையும் பாஸ்டனில் முற்றுகையிட்டு விட்டார்கள். சில வாரங்களுக்குள் பிரிட்டிஷ் ஆட்சி நிலையங்கள் கலைக்கப்பட்டு வந்தன. மே 10-ஆம் தேதி இரண்டாம் அமெரிக்கக் கண்டக் காங்கிரஸ் ஃபிலடெல்ஃபியாவில் கூடிற்று. அது மன்னனுக்குக் கடைசி முறையாக சமரச [illegible] விண்ணப்பம் அனுப்பிற்று. எனினும் அது எதிரி ஸ்தாபத்தில் ஐயமில்லை. அக்காங்கிரஸ் பாஸ்டனைச் சூழ்ந்த [illegible] ''அமெரிக்கக் கண்ட சேனை'' என்ற [illegible] ஜியார்ஜ் வாஷிங்க்டனை சேனாதிபதி ஆக்கினர். [illegible] எனப்படும் முதல் பெரிய சண்டை துவங்கின.

[illegible] குன்று இரண்டின் மேலும், [illegible] இரவில் வந்து தங்கினர்கள்; [illegible] சிறு அளவில் கோட்டை கொத்தக் கொண்டார்கள். அதிகாலையில் அவர் [illegible] கவனிக்கப்பட்டன. கேஜ் தன் [illegible] கலந்து பேசி, அமெரிக்கர்களை முன்புற [illegible] தீர்மானித்தான்; பின்புறத் தாக்குதல் அந்த [illegible] யுத்த தந்திரமாக இருந்திருக்கும். காலாட்படை [illegible] திருந்த ஸ்தலத்திற்குக் கீழே அணிவகுக்கப்பட்டது; [illegible] டிருக்கும் பிற்பகல் மூன்றுமணிக்கு போர் துவங்க [illegible] விடப்பட்டது. முழு உடை, சாமான் பை, மூன்று [illegible] துப்பாக்கி, தோட்டா - எல்லாம் சேர்ந்து 125

பவுண்டு கனமிருக்கும். எல்லாவற்றையும் சுமந்து கொண்டு அவர்கள் அழகாகவும் நிதானமாகவும் முன்னேறினர்கள். அமெரிக்கரின் கொத்தளங்களுக்கு 40 கெஜ தூரத்தில் அவர்கள் இருக்கும்போது, எதிரித் துப்பாக்கிகள் பயங்கரமாகத் தீயைக் கக்கின. பிரிட்டிஷார் பின்வாங்கி, மறுபடி அணிவகுத்து இருபதுகெஜ தூரத்தில் கொலைகாரத் தீயைச் சந்திக்க முன்னேறினர்கள். சிதறிப்போனவர்கள் மறுபடி கூடி, ஒரே மூச்சில் கொத்தளங்களைத் தாண்டிப்பாய்ந்தார்கள்; அந்த சமயத்தில் அமெரிக்கர் கடைசி இரண்டுமுறை சுட்டார்கள். நடவடிக்கை யென்னமோ வீரத்தனமானது, மசத்தானது. ஆனால் முற்றிலும் அவசியமற்றது. அதே எண்ணிக்கையுள்ள சேனை, கப்பல் பீரங்கிகளின் ஆதரவைக்கொண்டு சார்ல்ஸ்டௌன் நெக் என்னுமிடத்தில் ஊன்றியிருந்தால், அமெரிக்கருக்கு உணவு கிடைக்காமல் தடுத்து சீக்கிரம் பணியும்படி செய்திருக்கலாம். மொத்தம் பிரிட்டிஷாரின் நஷ்டம் 1054 பேர்; அமெரிக்கரின் நஷ்டம் 444 தான்.

அமெரிக்கரின் தன்னம்பிக்கை வளர்ந்தது ஏனென்றால், நல்ல ஏற்பாடோ, தளவாடங்களோ இல்லாமல் அவர்கள் முறைப்படிப் பயிற்சிபெற்ற மிகச் சிறந்த ஐரோப்பியப் படையைத் தோற்கடிக்க முடியும் என்பது ருஜுவாயிற்று. ஹவ் (Howe) என்பவன் கேஜின் உத்தரவுப்படி நடவடிக்கையைக் கொண்டு செலுத்த வேண்டிய கீழ் அதிகாரி. அன்றைய அருவருப்பான படுகொலையை அவனால் மறக்கவே முடியவில்லை. கேஜ் அபகீர்த்தியுடன் இங்கிலாந்து திரும்பச் சேர்ந்தபோது ஹவ் அப்பதவியை வகித்தான், அவனுடைய பயந்த சுபாவமும் அமெரிக்கருடன் நேர்ச்சண்டை நேராமல் தவிர்க்கப்பார்க்கும் தன்மையும் யுத்தத்தை நீட்டிக்கொண்டே சென்றது; இறுதியில் இங்கிலாந்து தோல்வியும் அடைந்தது.

அமெரிக்கரின் அசௌகரியங்கள்: யுத்தம் ஆறு வருஷம் நீடித்தது; ஒவ்வொரு குடியேற்றப் பிரதேசத்திலும் சண்டை நடந்தது; ஓரிடத்தில் நிலைத்து நின்று நடத்திய போர்களில் முக்கியமானவை பன்னிரண்டு எனலாம். திரும்பத் திரும்ப தேசாபிமானிகள் சர்வ நாசத்தை எட்டிப்பார்த்தார்கள். பல கலப்பான பயிற்சியற்ற கூட்டங்களைக் கொண்டு ஒழுங்கான சேனை திரட்டுவது வாஷிங்க்டனுக்கு சிரமமான காரியம்; திரட்டியதைக் சுலபமாக பார்த்துக் கொள்வது மேலும் சிரமம். ராஜ விசுவாசம் முற்றிலும் மறையவில்லை; அது [illegible] தென்பட்டது: ஆனால் அசிரத்தைதான் அதிகம். நியூ இங்கிலாந்து, வர்ஜீனியா, கரோலினாவின் பகுதிகள் போன்ற இடங்களில் ஜனங்கள் ஆவேசத்தோடு போர் புரிந்தனர். ஆனால் நியூயார்க்கில் ராஜ விசுவாசம், தேச விசுவாசம், இரண்டும் சமமாகத் தென்பட்டன.

பென்ஸில்வேனியாவில் சாந்தமான க்வேக்கர் சம்பிரதாயத்தார் போரை எதிர்ப்பவர்கள்; ஜெர்மன் ஜாதியாரில் பெரும்பாலோர் தம் தோட்டம் துரவுகளை விட்டுச்செல்ல மறுத்தனர். வடகரோலினாவில் உயர்வான பிரதேசங்களில் வசிப்பவர்களுக்குத் தாழ்ந்த பிரதேசத்தாரிடம் வெறுப்புண்டு; பின்கூறியவர் கலகக் கட்சியில் பங்கெடுத்துக் கொண்டதால், உயர் நிலத்தார் மன்னர் கட்சியில் சேர்ந்தார்கள்; மன்னரிடமிருந்து விசேஷச் சலுகைகள் பெற்ற ஜ்யார்ஜியா தன் நன்றியைத் தெரிவிக்க இப்போரிலிருந்து விலகி நின்றது. மிகக் குறைவாகச் சொன்னாலும் 25,000 அமெரிக்கர்கள் அரசன் சார்பில் போரிட்டார்கள்; ராஜ விசுவாசம் காட்டியவர்களை ஆதரித்து, பழக்கி, நன்கு பயன்படுத்தியிருந்தால் போரின் முடிவு வேறு விதமாக இருந்திருக்கலாம்.

துவக்கத்தில் தேசாபிமானிகள் இடையே ஒழுங்கமைப்பும் பயிற்சியும் மிக மட்டமாக இருந்தன. 1778-ல், ப்ரஷ்ய மன்னன் மகாஃப்ரெடரிக் இடம் ராணுவ அதிகாரியாக இருந்த பாரன் வான் ஸ்டூபன் அவர்களுடைய நிலையைச் சீர்திருத்த முன் வந்தான். அக்காலத்தில் பார்ப்பதற்கு 'வாட்டசாட்டமாகவும்' பேச்சுத் திறமையும் உள்ள எவனும் சில பேரைத் தன் கீழ் சேர்த்துக் கொண்டு காப்டென் ஆகி விடலாம், அல்லது கள்ளும் பணமும் விநியோகம் செய்து அதைவிட உயர்ந்த பதவிக்கும் தேர்தல் பெறலாம். நியூ இங்கிலாந்திலும் இதர இடங்களிலும் 'குடியரசு நாட்டில் ஒருவன் இன்னொருவன் கட்டளைப்படி நடப்பதா?' என்ற எண்ணம் உலவி வந்தது. சமமாகப் பழகிய அண்டை வீட்டுக்காரன் திடீரென்று காப்டென் ஆகி விட்டதும் அவன் உத்தரவிட நாம் கீழ்ப்படிவதா என்ற எண்ணம் கிராமத்தாருக்கு சகஜம். வடப் பிரதேச அமெரிக்கர் தம் அதிகாரிகளை ''துடைப்பக் கட்டைக்குச் சமமாகக் கருதுகிறார்கள்'' என்று வாஷிங்க்டன் ஒருமுறை எழுத வேண்டியிருந்தது. குடிப்படையிலிருந்த சாதாரண சிப்பாய்களுக்குப் பொறுப்புணர்ச்சி அதிகம் இருக்கவில்லை. தம் சௌகரியப்படி பட்டாளத்தில் தங்கலாம், தம் சௌகரியப்படி விலகலாம், என்பது அவர்களுடைய எண்ணம்; பனிகாலம் கடுமையானாலோ, பழுத்து சாயும் பயிர்களை அறுவடை செய்ய ஆளில்லாமற்போனாலோ, வீட்டு நினைவு வந்து மனம் தளர்ந்திருந்தாலோ, அவர்கள் ராணுவ முகாமிலிருந்து நழுவி விடுவார்கள். சிப்பாய்களுடன் நீண்ட கால ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு காங்கிரஸிடம் வாஷிங்க்டன் அனுமதி கேட்டார்; 1776 செப்டெம்பரில் அது கிடைத்தது; ஆனால் நிலைமை முற்றிலும் சீரடையவில்லை. கட்டுப்பாட்டை மூடுக்குவதற்காக ராணுவக் கோர்ட்டுகளில் அதிகாரத்தை வலுப்படுத்தும்படி வாஷிங்க்டன் காங்கிரசிடம் கேட்டுக்

கொண்டார்; ராணுவக் குற்றவாளிகளுக்கு 500 கசையடிகள் வரை வழங்க அதிகாரம் வேண்டும் என்பது அவருடைய கருத்து.

திரும்பத் திரும்ப, சேனை இருந்த இடம் தெரியாமல் போயிற்று எனலாம். மார்ச்சு 1776-ல் தேசத் தொண்டர்கள் பாஸ்டனைக் கைப்பற்றியதையொட்டி வாஷிங்க்டன் தன் துருப்புக்களை நியூயார்க்கிற்கு அனுப்பியபோது வேலைக்கு லாயக்கான 8,000 ஆட்களே அவரிடம் இருந்தனர். அதே சமயத்தில் மொத்த பிரிட்டிஷ் படைகளின் எண்ணிக்கை 35,000. அது போதாதென்று, ஹவ் 25,000 ஆட்களுடன் லாங்க் ஐலண்டுத் தீவில் கரையிறங்கினார். வாஷிங்க்டன் பல தோல்விகள் அனுபவித்து, தம் படைகளைப் பலமுறை இழந்தார்; கடைசியில் அவர் ஃபோர்ஜ் பள்ளத்தாக்கில் க்ரூரமான பனிக்காலத்தைக் கழிக்க நேர்ந்தது.

பணமுடையும் போரை வெற்றிகரமாக நடத்த முடியாதபடி தேசத் தொண்டர்களை மிகவும் துன்பப்படுத்திற்று. அவர்கள் பாண்டுப் பத்திரங்கள் மூலம் பணம் திரட்ட முடியாது. வரி விதித்தலும் நடவாத காரியம் எனலாம். பதின்மூன்று ஸ்டேட்டுகளையும் வரி விதிக்கும்படி காங்கிரஸ் கேட்டுக் கொள்ளலாமே தவிர அமெரிக்க மத்திய அரசாங்கம் வரிவிதிக்க முடியாது; அதற்கு அதிகாரம் கிடையாது. ஆனால் ஸ்டேட்டுகளையோ பொருமையும் பூசலும், பிற்போக்கான சிக்கனமும், கெட்ட ஆட்சி முறையும் அரித்துக் கொண்டிருந்தன. போர் முயற்சிக்கு அவை அரை மனத்தோடு மிகக் குறைவான ஆதரவே அளித்தன. 1784ஆம் ஆண்டுவரை மொத்த தேசியக் காரியங்களுக்காக ஸ்டேட்டுகள் வசூலித்தவரிகளெல்லாம் சேர்ந்து தலைக்கு இரண்டு டாலர் வீதம்கூட இல்லை. கடன் மூலம் கிடைத்த தொகை போதவே போதாது. ஆகவே ஐக்கிய நாடுகள் புரட்சிப் போரைப் பெரும்பாலும் காகிதப் பணத்தை நம்பியே நடத்த வேண்டியிருந்தது—அதாவது அளவு கடந்து நோட்டுகள் அச்சிட வேண்டியிருந்தது.

நாட்டில் காகிதப் பணம் குவிந்து விட்டது. ஆகவே அவற்றின் மதிப்புக் குறைந்து விட்டது; பெயருக்கு 240 மில்லியன் டாலரைக் குறிப்பிடும் நோட்டுக்களின் உண்மையான மதிப்பு 38 மில்லியன் டாலரைவிடக் குறைவாக இருந்தது. 1781ஆம் ஆண்டின் துவக்கத்தில் பண மதிப்பு அநேகமாக பூஜ்ய நிலையை எட்டிற்று. மதிப்புக் குறைந்த நோட்டுக்கள் செலாவணியில் இருப்பதால் அநீதியும், அதிருப்தியும் ஒழுங்குச் சிதறலும் சகஜமாயின—அது இயற்கையே. அக்காலத்து அரசியல் வாதி, வெப்ஸ்டர் எழுதியதுபோல், ''காகிதப் பணம் சட்டங்களின் நியாயத் தன்மையைக் கெடுத்தது; சட்டங்கள் கொடுங்கோல் ஆட்சியின் சாதனங்கள் ஆயின; அவை நிர்வாகக்

காரியாலயங்களில் அதீதியைப் புகுத்தின; அப்பணத்தை நம்பி ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்டிகளானார்கள், நாட்டின் வியாபாரம், விவசாயம், தொழிலுற்பத்தி எல்லாம், வலிவிழந்தன; நம் மக்களின் நற்பண்பு அழிவதற்கு அப்பண நிலை ஹேது வாயிற்று.''

மேலும் காலனிகளில் பரஸ்பரப் பொருமையிலுலும் அவை தனித்தனியே காங்கிரஸின்பால் கொண்ட தீவிர அவ நம்பிக்கையாலும் தேசாபிமானக் கட்சி மிகவும் சிரமப்பட்டது. வலுவுள்ள அமெரிக்க கண்ட (மத்திய) அரசாங்கம் ஒன்று நிறுவுவது அசாத்தியமான காரியம். காலனிகள் ஸ்தல சுய ஆட்சியை ஆதரித்தன; அவை எவ்விதமத்திய அரசாங்கத்தையும் எதிர்த்து நின்றன. மேலும், தேசாபிமானத்தின் முதல் ஆவேசம் அடங்கியதும் அவற்றிடையே சகோதர மனப்பான்மை மறைந்தது. ஒற்றுமை உணர்ச்சி இல்லாத இந்நிலையின் காரணமாக காங்கிரஸ் ராணுவச் செலவுகளுக்காகவும் பொது நிதிக்காகவும் ராஜ்யங்களிடம் மண்டியிட்டுக் கெஞ்சவேண்டியிருந்தது. அவ்வேண்டுகோட்கள் அடிக்கடி வீணாவதும் உண்டு.

இது மட்டுமல்ல. அமெரிக்கரிடம் கப்பற்படை இல்லை யென்றே சொல்லலாம். பிரிட்டிஷார் வசமிருந்த கடல்களில் ஜான் பால் ஜோன்ஸ் என்னும் அமெரிக்கக் கடல் வீரன் துணிந்து நாக்கி சில தீரச்செயல்கள் நிகழ்த்தினன் என்பது உண்மையே; ஆனால் அது ஒரு தனி விஷயம். 1778-வரை பிரிட்டிஷார் சமுத்திரங்களில் முழு ஆதிக்கமும், அதன் பிறகு ஓரளவு ஆதிக்கமும் செலுத்தினார்கள். கடற்கரையில் 1,500 மைல் நீளத்திற்கு நிறைந்த இடத்தில் தாக்கும் சக்தி அவர்களுக்கிருந்தது. அவர்களிடம் பணமும் பண்டங்களும் ஏராளமாக இருந்தன; அவர்களுடைய அதிகாரிகளுக்கு ராணுவ விஷயங்களில் உயர்தரப் பயிற்சியுண்டு. ஆகவே ஆதியில் அவர்கள் வெற்றியை நம்பிக்கையுடன் எதிர்பார்த்ததில் ஆச்சரியமில்லை.

அமெரிக்கருக்கு இருந்த வசதிகள்: பிரதிகூல நிலைகளோடு கூடவே அமெரிக்கருக்குப் பெரிய சௌகரியங்களும் பல இருந்தன; கடைசியில் அவை அவர்களுக்கு வெற்றியளித்தன. முதலில் போர்க்களம் அவர்களுக்கு அனுகூலமானது. பிரிட்டனிலிருந்து 3,000 மைலுக்கப்பால், பெரும்பாலும் காடாகவும் அதிக மனித சஞ்சாரமற்றதுமான தம் சொந்த நாட்டில் அவர்கள் போர் புரிந்தார்கள். ஒரு சேனை ஓரிடத்தில் தோற்கும்; வேறொரு சேனை பல நூறு மைலுக்கப்பால் இன்னோரிடத்தில் கிளம்பும். அவ்வளவு விஸ்தாரமான பிரதேசத்தைப் பிரிட்டிஷார் வசப்படுத்துவது கடினம். ஆட்களையும் பண்டங்களையும் விரிந்த கடல் தாண்டி முறையாக

அனுப்பிவைப்பது எவ்வளவு சிரமம்; அதற்கு எவ்வளவு செலவாகும்! யுத்த தந்திரிகள் லண்டனிலிருந்து எல்லாப் போர் நிகழ்ச்சிகளையும் ஒழுங்காக நடத்துவது இயலாத காரியம். சில முக்கியமான சமயங்களில் அமெரிக்கத் துருப்புக்கள் மிகவும் பாராட்டத்தக்க போர் மனப்பான்மையைக் காட்டியது அவர்களுக்கு நன்மையளித்தது. இந்தக் குடியானவச் சிப்பாய்கள், வேட்டையையோ, உழுதலையோ பாதியில்விட்டு வந்தவர்கள், தனித்தன்மைப் படைத்தவர்கள், நிர்ணய நிலை அறியாதவர்கள். முக்கால் பங்குநேரம் அதிகாரிகளை 'அழவைப்பவர்கள்'— அதே மனிதர்கள் ஒவ்வொரு சமயம் தெய்வீக ஆவேசம் வந்தவர்கள்போல் போராடினார்கள். தேச விசுவாசமுள்ள, மண் வாசனை மறவாத சுயேச்சைப்படை என்றைக்கும் தோல்வியறியாதது, அஜாத சத்துரு, என்பது உண்மையே. 1778-க்குப் பிறகு இன்னொரு அனுகூல நிலை ஏற்பட்டது. அதுதான் பிரிட்டனுடன் பழிவாங்கத் துடிக்கும் ஃபிரான்சுடன் கிடைத்த நேச ஒப்பந்தம். அவ்வினைப்பால் ஆள் பலமும், செல்வமும், ஊக்கமும், முக்கியமான இறுதி நேரத்தில் கடற்கரையின் ஆதிக்கமும் அமெரிக்கருக்குக் கிடைத்தன. இவை தவிர பர்காய்ன், ஹவ், க்ளிண்டன் ஆகியோர் பிரிட்டிஷ் துருப்புக்களை முட்டாள்தனமாக வீணாக்கியதையும் அமெரிக்கரின் அதிர்ஷ்டங்களில் முக்கியமான ஒன்றாகக் கூற வேண்டும்.

ஜ்யார்ஜ் வாஷிங்க்டன் அமெரிக்கருக்கு சேனைத் தலைவராகக் கிடைத்த பாக்கியத்தை மேற்கூறிய அனுகூல நிலைகளின் சிகரமெனலாம். அவருடைய சிறப்புக்களை அறியாமலே காங்கிரஸ் அவரைத் தேர்ந்தெடுத்தது; அவர் தேசாபிமானக் கட்சியின் சிறந்த வழிகாட்டியாகவும் ஆதரவாகவும் இருந்து, முழுப்பொறுப்பையும் ஏற்றார். குறுகிய ராணுவக் காரணங்களைக்கொண்டு அவர்மீது குறை கூறலாம். தற்கால டிவிஷனைக் காட்டிலும் பெரியதான ஒரு படைக்கு அவர் தலைமை வகித்ததில்லை; அவர் பல தவறுகள் செய்தார்; பலமுறை தோல்வியுற்றார். அப்படியிருந்தும் 43 வயதில் முழுப்பொறுப்பு ஏற்று அவர் யுத்தத்தின் ஆத்மாவாக விளங்கினார். வர்ஜீனியாவில் நிலச்சுவான்தாராகவும், எல்லைப்புறத்தில் ராணுவ அதிகாரியாகவும் இருந்த ஒருவர் அவ்வுயர்ந்த நிலையையடைந்ததற்குக் காரணங்கள்: அவரது தளராத தேசாபிமானம், தெள்ளறிவு, கம்பீரமான ஆத்ம தைரியம், மிக இருண்ட நேரத்தில் தன் பெருந்தன்மையையும், சமநிலையையும், திடசித்தத்தையும் இழக்காதிருத்தல், துணிவு, ஜாக்கிரதை இரண்டையும் யுக்தியுடன் கலத்தல், முதலியன. அவருடைய நேர்மையும், மேன்மையும் உதாரகுணமும் அவரைவிட்டு விலகவே இல்லை; தைரியம் கூடின சகிப்புத்தன்மை வலிவிழந்து தடுமாறவே

யில்லை. தாக்கவேண்டிய க்ஷணத்திற்காகப் பலநாள் பொறுமையுடன காத்திருக்க அவருக்குத் தெரியும்.

எனினும் தவறு எல்லை கடந்து சென்றால் அவருக்கு மகா கோபம் வரும்; ஆனால் பொதுவாக, அவர் தன்னை மிகவும் அடக்கியே வைத்துக்கொள்பவர்;...கரூரான சுபாவத்தின் காரணமாக அவர் துருப்புக்களைக் கசக்கிப்பிழிந்து வேலை வாங்கினர்; ராணுவக் குற்றங்களை மிகக் கடுமையாகத் தண்டித்தார்; எனினும் அவருடைய நியாய முறையையும், சிப்பாய்கள் பால் அக்கறையையும் அறிந்த துருப்புக்கள் அவரிடம் பூர்ண விசுவாசம் கொண்டிருந்தனர். சம்பள பாக்கியின் காரணமாகச் சிப்பாய்கள் அதிருப்தி அடைந்தார்கள்; ஆனாலும் அவர்களைப் பார்த்துத் தலைவர், உணர்ச்சியுடன் பேசிய போது பலர் கண்ணீர் வடித்தனர். புரட்சிப் போர்களின்போது அவர் தம் செலவுத் தொகையைத் தவிர வேறு சம்பளம் ஏற்கவில்லை. அத்தொகைக்கும் அவர் கரூரான கணக்கு வைத்திருந்தார். ஸின்ஸினடஸ் என்னும் ரோமவீரன் வயலில் உழுது கொண்டிருக்கும்போது ராஜ கட்டளை பெற்றதாகவும், போரில் எதிரியைத் தோற்கடித்ததும் பதவி வேட்டையில் இறங்காமல் தன் வயலுக்குத் திரும்பினன் என்றும் சொல்வதுண்டு. வாஷிங்க்டனும் யுத்தம் முடிவடைந்ததும் தன் பிரியமான பண்ணைத் தோட்டத்திற்குப் போக விரும்பினர். அதை அமெரிக்காவில் மிகச்சிறந்த பண்ணையாக ஆக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். ஆனால் கடமை அவரை அழைக்கவே அவர் கீழ்ப்படிந்தார். நாட்டின் வேறு தீரர்களின் மனித-குணங்கள் அதிகக் கவர்ச்சியளிக்கலாம்; ஆனால், மலைபோன்ற நேர்மை, லட்சியங்களின் மாறுத உயர்வு ஞானம், மனத்தின் விரிவு, இவற்றில் அவர் முன்னணியிலேயே நிற்கிறார். ''புரட்சியில் வெளியான மூன்று சிறப்புக்களாவன: வாஷிங்க்டனின் நிறமையான குணம், ஃபோர்ஜ் பள்ளத்தாக்கில் அவருடைய படையின் வீரநடத்தை, தேச விசுவாசிகளில் மேலானவர்களின் உண்மையான தேசபக்தி,'' என்று கோல்ட்வின் ஸ்மித் கூறியது நியாயமே.

சுதந்திரம்: ''ஆங்கிலேயனின் உரிமைகளுக்'' காகவும் குறைகளைத் தீர்ப்பதற்காக மாத்திரமும் துவங்கிய சண்டை ஒரு வருஷத்தில் சுதந்திரப் போர் என்ற உருவம் பெற்று விட்டது. அது முற்றிலும் இயற்கையே. ஆதியில் காங்கிரஸ் தன் ராஜ விசுவாசத்தை வற்புறுத்திக்கொண்டே இருந்தது. ஆனால், இரத்தப் பெருக்காலும் நாச வேலையாலும் ஏற்பட்ட கசப்பு, மூன்றும் ஜியார்ஜ் மன்னரின் இரங்காத பிடிவாதத்தால் உண்டான மனக்கடுப்பு, தம் பிற்கால நிலையைத் தாமே தீர்மானிக்கவேண்டும் என்ற இயற்கையான உரிமையின் உணர்வு, இக்காரணங்களால்முற்றிலும் பிரிவதேஅமெரிக்கரின்

லட்சியம் ஆயிற்று. 1776-ன் துவக்கத்தில் வாஷிங்க்டனின் சேனை ஒரு தனி அமெரிக்கக்கொடியை அமைத்துக் கொண்டது. அதே சமயத்தில், இங்கிலாந்திலிருந்து சமீபத்தில் வந்த தாமஸ் பெய்ன் எழுதிய 'சாமான்ய அறிவு' என்னும் குறுநூல் (Common Sense by Thomas Paine) அமெரிக்க வாசகர்களை மிகவும் வசிகரித்தது. பெய்ன் ஒரு கீர்த்திவாய்ந்த இளம் முற்போக்குவாதி. அக்கால நோய்களுக்கு சுதந்திரம் ஒன்றுதான் மருந்தென்றும், தாமதம் ஆக ஆக சுதந்திரத்தைப் பெறுவதும் அதிகக் கடினமாகுமென்றும், அது ஒன்றுதான் அமெரிக்க ஐக்கியத்தை சாத்தியமாக்கும் என்றும் அவர் தர்க்க ரீதியில் எடுத்துரைத்தார். ஜூன் மாதம் பிறந்ததும் பல காங்கிரஸ் அங்கத்தினர்கள் பொறுமையிழந்தார்கள். வர்ஜீனியப் பிரதிநிதி, ரிச்சர்டு ஹென்ரி லீ, சுதந்திரத்திற்கான தீர்மானம் ஒன்று பிரேரேபித்தார்; ஜான் ஆடம்ஸ் அதை ஆமோதித்தார். தாமஸ் ஜெஃபெர்ஸன் பேனாபிடிக்க, ஐவர் குழு ஒன்று சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்தது; காங்கிரஸ் அதை ஜூலை இரண்டாம் தேதி அங்கீகரித்தது; நான்காம் தேதி-1776, ஜூலை 4-அதைப்பிரகடனப்படுத்திற்று.

சரித்திர முக்கியமான இந்தப் பத்திரத்தை உருவாக்கி அங்கீகரித்த மனிதர்கள் வெறும் சுதந்திரப் பிரகடனத்தோடு திருப்தியடையவில்லை. ''மனிதவர்க்கத்தின் அபிபிப்ராயங்கள் மரியாதைக்குத் தகுதியுள்ளன'' என்பது அவர்களுடைய அடிப்படைக் கருத்து; ''பிரிவை நாடும்படி தூண்டிய'' காரணங்களையும் நியாய சம்மதமான அவற்றின் தத்துவத்தையும் விவரமாய் விளக்க அவர்கள் முயன்றார்கள். அந்த இருபத்தைந்து முப்பது காரணங்கள் மாத்திரமே அந்தக் கடுமையான நடவடிக்கைக்குத் தக்க சமாதானம் என்று அவர்கள் கருதிவிடவில்லை. மூன்றும் ஜியார்ஜ் மன்னன் ''அவர்களைக் கொடுங்கோலாட்சியால் ஆண்மையற்றவர்களாக்கத் திட்டமிட்டிருக்கிறான்'' என்பதற்குச் சான்றாகவே அந்த ஜாபிதா பயன்படுகிறது. தங்கள் தேசிய சரித்திரத்தின் ஆதிகாலத்திலேயே அமெரிக்கர் கொள்கைகளை அஸ்திவாரமாகக் கொண்டு ஒரு தத்துவ மார்க்கத்தைப் பிரகடனம் செய்தது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு வார்த்தைகளால் சிரஞ்சீவியாக்கப்பட்ட அரசாங்கக் கொள்கைகள்தான் என்ன? ஜெஃபெர்ஸன் எழுதினர்:—

> ''எல்லா மனிதர்களும் பிறக்கும்போது சமமானவர்கள்; விலக்கமுடியாத சில உரிமைகளைக் கடவுள் அவர்களுக்கு அளித்திருக்கிறார்; வாழ்க்கை உரிமை, சுதந்திர உரிமை, சுகத்தை நாடும் உரிமை இவற்றுள் சில; இவ்வுரிமைகளைப் பெற்றுக் காப்பாற்ற மனிதர்க

லிடையே அரசாங்கங்கள் நிறுவப்படுகின்றன; அவ்வரசாங்கங்களின் சக்தி ஆளப்படுவோரின் சம்மதத்திலிருந்து எழுகிறது; எவ்வகையான அரசாங்கமும் இந்த லட்சியங்களை அழிக்க நேர்ந்தால் அவ்வரசாங்கத்தை மாற்றி யமைத்து அல்லது நிர்மூலமாக்கிப் புது அரசாங்கம் ஒன்று நிறுவ மக்களுக்கு உரிமையுண்டு; அதன் அடிப்படைக் கொள்கைகளும் நிர்வாக சக்திகளும் மக்களுக்கு க்ஷேமமும் ஆனந்த வாழ்க்கையும் அளிக்கக்கூடியனவாக இருக்கவேண்டும்.—இந்த உண்மைகளுக்கு நிரூபணம் தேவையில்லை என்பது எங்கள் நம்பிக்கை.''

இது குடியரசு வாழ்க்கையின் தத்துவம். இதை இது வரை இவ்வளவு ரத்தினச் சுருக்கமாகவோ சக்தி நிறைந்த சொற்களிலோ எவரும் கூறியதில்லை. சில விஷயங்கள் சுயநிரூபண உண்மைகள்-விவேகி எவனும் அவற்றைச் சந்தேகிக்க மாட்டான்—என்பது அமெரிக்காவின் நம்பிக்கை. சிருஷ்டிகர்த்தாவின் நோக்கில் அனைவரும் சமம்—கடவுள் முன்னிலையில், சட்டத்தின் முன்னிலையில் பேதங்கள் கிடையாது என்ற சுருத்தை எடுத்துக்கொள்ளுவோம். ஜஃபர்சன் அறியாத தல்ல, அமெரிக்காவில் பல பேதபாவங்கள் இருக்கத்தான் இருந்தன—ஏழை பணக்காரன், ஆண் பெண், சுறுத்தவன் வெளுத்தவன் என்ற வேற்றுமை நிலைகள். ஆனால் ஒரு சமூகம் தன் லட்சியப்படி வாழ முடியவில்லை என்பதற்காக லட்சியம் பொய்யாகிவிடாது. சமத்துவம் என்னும் சுருத்து விளம்பரப்படுத்தப்பட்டவுடன் அது அமெரிக்கச் சிந்தனையில் வியாபித்து ஜடப் பொருளை ஜீவப் பொருளாகச் செய்யும் பணியைத் தொடங்கிற்று.

விலக்க முடியாத சில உரிமைகளை ஜன்ம வரங்களாக எல்லோரும் பெற்றிருக்கிறார்கள் என்பது பிரகடனத்தில் இடம் பெற்ற இன்னொரு பெரிய உண்மை; ஆனந்த, சுதந்திர வாழ்க்கையை நாடும் உரிமை அவற்றுள் ஒன்று. நல்மனம் படைத்த அரசாங்கம் விரும்பும்போது அளிக்கவும் வேண்டாதபோது வாபஸ் பெறவும் கூடிய உரிமைகள் அல்ல இவை. பிறப்புடன் நாம் பெற்றவை, இழக்க முடியாதவை, இந்த உரிமைகள். இந்தக் கொள்கையும் அமெரிக்கர் உள்ளத்திலும் பிறர் உள்ளத்திலும் புத்தூயிருடன் வளர்ந்து அதிகார வர்க்கத்தாரின்பால் அவர்களுடைய மன நிலையை மாற்றிற்று; ஏனெனில், பிரகடனத்தில் கண்டிருந்தபடி, இவ்வுரிமைகளைப் பெறுவதற்காகவேதான் முதன்முதலில் ஆட்சி நிலையங்கள் நிறுவப்பட்டன. இது ''ஒப்பந்த'' அரசாங்கம் என்னும் வகையைச் சேர்ந்தது, மனிதர்கள் ஒரு காலத்தில் ''இயற்கை நிலையில்'' வசித்தார்கள் என்றும், அப்பொழுது அவர்கள் தொடர்ந்து

ஆபத்திலிருந்தார்களென்றும், தங்களைக் காத்துக்கொள்வதற்காக அவர்கள் ஒன்றுகூடி ஆட்சி முறைகளை நிறுவினர்கள் என்றும், அந்த ஆட்சி நிறுவனத்திற்கு ஜனங்களின் உயிரையும், சுதந்திரத்தையும் சொத்துக்களையும் காக்குமளவுக்கே அதிகாரங்கள் கொடுத்திருந்தார்கள் என்றும் அக் கொள்கை கூறுகிறது. சுருங்கச் சொன்னால், நன்மை செய்வதற்காக மக்கள் அரசாங்கங்களை உண்டாக்கினார்கள், தீமை செய்வதற்கல்ல; மக்களை ரக்ஷிப்பது ஆளுவோரின் கடமை, பக்ஷிப்பது அல்ல. ஸ்தாபனத்திற்குக் காரணமான லட்சியங்களிலிருந்து அரசாங்கம் வழுவினால் அது மக்களின் ஆதரவையும் விசுவாசத்தையும் இழக்கத் தகுந்தது.

அரசாங்கத்தை மக்கள் ஆக்க முடியுமானால் அழிக்கவும் முடியும்; கொடிய ஆட்சியை மாற்றியமைக்கவோ, களைந்தெறிந்துப் புதியதொன்றை நிலைநிறுத்தவோ அவர்களுக்குப் பாத்தியதை யுண்டு. இது வெறும் வறட்டுக் கொள்கையல்ல என்பதை அமெரிக்கர் செய்து காட்டினர். புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே, போரின் குழப்பத்திற்கும் இடுக்கண்களுக்கும் இடையிலேயே அவர்கள் இந்தக் கருத்துக்குக் காரிய உருவம் அளிக்க ஆரம்பித்தார்கள். மகாநாடுகளில் கூடிப் பேசி அவர்கள், சட்ட ரீதியாக, பழைய அரசாங்கங்களை நீக்கிப் புதியனவற்றை நிலைநிறுத்தினர்கள்; அரசியல் நிர்மாணத் திட்டங்களில் உயிருக்கும் சுதந்திரத்திற்கும் சுகவாழ்விற்கும் அபயமளித்து நிபந்தனைகள் எழுதினர்கள். நூற்றாண்டுகளாக ஞானிகளின் சிந்தனைப்பொருளாக இருந்த கருத்துக்கள் தினசரி வாழ்க்கையில் இடம் பெற்று சட்டமாயின.

படைப் பெயர்ச்சிகளும் சண்டைகளும்: யுத்தத்தின் போக்கைத் திருப்பி முடிவு இவ்வாறுதான் இருக்கும் என்று தீர்மானித்த போர் ஸாரடோகாவில் நிகழ்ந்தது. 1777-ன் ஆரம்பத்தில் கானடாவில் பெரிய பிரிட்டிஷ் படைகள் இருந்தன; நியூயார்க்கில் ஹவ்வின் அதிகாரத்தில் ஒரு வலுத்த சேனை இருந்தது. மன்னனின் எல்லாச் சேனைகளும் நியூயார்க்கிலேயே இருந்திருந்தால், வலுத்த ஆயுதங்கள் தாங்கிய 35,000 சிப்பாய்கள் களத்தில் இறங்கியிருந்திருக்கலாம். ஊக்கமும், சுறுசுறுப்புமுள்ள ஒரு சேனைத் தலைவன், 8,000 பேருடன் நியூஜெர்ஸியிலிருந்த வாஷிங்க்டனின் சிறிய சேனையைக் கருணையற்றுத் தாக்கியிருந்தால் கலகக் கட்சி அநேகமாய் நசுக்கப்பட்டிருக்கும் எனலாம். பிற்காலத்தில், 1864-ல், வர்ஜீனியாவிலிருந்த லீயை கிராண்ட் அவ்வாறுதான் தாக்கினான். வாஷிங்க்டன் மிகவும் பயந்தது தன்னை அழிப்பதற்காக எல்லா பிரிட்டிஷ் படைகளும் ஒன்று கூடுவதே. ஆனால் லண்டனிலிருந்த நிர்வாகிகள், விடுமுறை பெற்றுத் தாய்நாடு வந்திருந்த பர்காய்னின் துர்யோசனை கேட்டுத் தம் சக்திகளைப் பரவலாகப் பிரித்தே வைத்திருந்

தார்கள். பர்காய்னின தலைமையில் ஒரு படை கானடாவி லிருந்து தென்புறமாய் ஆல்பனியை நோக்கியும் ஹவ்வின் படை நியூ யார்க்கிலிருந்து வட புறமாய் ஹட்ஸன் நதி மூலம் பனியை நோக்கியும் செல்வதாகத் திட்டமிடப்பட்டது. ஆல் பனிக்குத் தெற்கேதான் ஹட்ஸன் நதி கப்பல் போக்குவரத் துக்குத் தகுந்தது. மன்னன் அதை அங்கீகரித்தான். கானடாவி லுள்ள அதிகாரிகளுக்கு விவரமான உத்தரவுகள் லண்டனி லிருந்து அனுப்பப்பட்டன. ஆனல் நிச்சயமான கட்டளை எதுவும் ஹவ்வுக்குப் போய்ச் சேரவில்லை. அந்நிலையில் அவன் ஆல்பனி பக்கம் போவதற்குப் பதிலாக ஃபிலடெல்ஃபி யாப் பக்கம் நகர்ந்தான்.

பிரிட்டிஷ் படைகள் ஒன்றுசூடியிருந்தால் அவற்றை எதிர்த்து நிற்கமுடியாது; பர்காய்னின் திட்டம் அதைத் தடுத்தது; அது ஒரு பெரிய பிழை. வடக்கத்திச் சேனை அமெ ரிக்காவில் வெகு தூரம் புகுந்துவிட்டால் அது மூலஸ்தானத்தி லிருந்து மிகவும் விலகியிருக்கும்; 'சப்ளை'ப் பிரச்னைகள் சிக்க லாகும் என்பதை சிந்திக்காதது இன்னெரு பெரிய பிழை.

இதற்கிடையே வேகமாய்ப் பெருகும ஒரு அமெரிக்க சேனை வட ஹட்ஸன் நதிப் பிரதேசத்தில் பர்காய்னின் மூலப் படையை எதிர்த்தது. 1777 செப்டம்பர் 19ஆம் தேதி ஃப்ரீ மன்ஸ் ஃபார்ம் என்னும் இடத்தில் கைகலந்தபோது அமெரிக் கரின் எண்ணிக்கை ஏறக்குறைய 9,000; பிரிட்டிஷாரின் எண்ணிக்கை ஏறக்குறைய 6,000; பல சண்டைகளில் பிரிட்டிஷ் சேனை சிதைவும் தோல்வியும் அனுபவித்தது. பர் காய்ன் அலுத்து, மிகவும் நஷ்டப்பட்டு, காட்டுப் பிரதேசத் தில் சிக்கித் தத்தளித்தான். அதேசமயம் அமெரிக்கரின் எண் ணிக்கை 20,000 ஆயிற்று. அக்டோபர் 17ஆம் தேதி, சுற்றி வளைக்கப்பட்ட அவனுடைய துருப்புக்கள் ஆயுதங்களைக் கீழே போட்டனர். அடித்தளத்திலிருந்து 200 மைல் தூரத்தில் விரோதிகள் மொய்த்திருந்த காட்டுப்பிரதேசத்திற்கு ஒரு சேனையை நடத்திச் செல்வதன் முட்டாள்தனம் நிரூபணம் பெற்றது.

பர்காய்னின் தோல்வி எத்தனையோ யுத்த சம்பவங்களில் ஒன்று என இராமல் முக்கியமான விளைவுகளுக்குக் காரணமா யிற்று. ஒரே அடியில் பிரிட்டிஷ் மன்னன் அமெரிக்காவிலிருந்த தன் சேனையில் கால் பங்கை இழந்தான். ஹட்ஸன் சாகவத மாக அமெரிக்கரின் வசமாயிற்று. தேசத் தொண்டர்களுக் குப் புது தைரியம் உண்டாயிற்று. பாரிஸ் நகரில் ஃப்ரெஞ்சு அயல் நாட்டுக் காரியதரிசியை அமெரிக்கருக்கு உதவியனுப் பும்படி செய்வதற்காக பென்ஜமின் ஃப்ராங்க்லின் மிகவும் பாடுபட்டுக்கொண்டிருந்தார். சில அமெரிக்கத் தோல்விகளைப் பற்றிய செய்தி கிடைத்ததும் ஃப்ரெஞ்சுக்காரர் கவின் ஊக்கம்

குறைந்துவிட்டது. ஆனல் ஸாரடோகா வெற்றியைப் பற்றித் தகவல் கிடைத்ததும் ஃப்ரான்ஸும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஒரு நட்பு ஒப்பந்தம் செய்து கொண்டன; அது யுத்தத்தின் போக்கையே புதுவிதத்தில் மாற்றிவிட்டது. இதற்கு முன்னரே, எந்தப் பதவியிலும் உழைக்க தம் சொந் தச் செலவில் ஐக்கிய நாட்டிற்கு வந்த லாஃபியத் (Lafayette) என்னும் ஃப்ரெஞ்சு தீரர் காங்கிரஸால் மேஜர் ஜெனரல் ஆக் கப்பட்டிருந்தார். ஏற்கெனவே, ஃப்ரான்ஸ், ஸ்பெய்ன் தேச அரசர்கள் அமெரிக்காவுக்கு ரகசியமாகக் கடன் கொடுத்திருந் தார்கள். அதைக் கொண்டு ஏராளமான தளவாடங்கள் வாங்கப்பட்டிருந்தன. இப்பொழுது ஃப்ரெஞ்சு அரசாங்கம் ரோஷாம்போ (Rochambeau)வின் தலைமையில் சிறந்த 6,000 சிப்பாய்களை அனுப்பத் தயாராயிற்று; முன்னிலும் அதிக மாகப் பணமும் பண்டங்களும் கொடுக்கப்பட்டன; ஃப்ரெஞ் சுக் கப்பற் படையின் நடவடிக்கைகள் பிரிட்டிஷ் சப்ளைப் போக்கு வரத்தின் இன்னல்களை அதிகரித்தன.

வடக்கே ஜெயிக்கத் தவறிய பிரிட்டிஷார் தென்புறம் திரும்பினர்கள். பலஹீனமானது என்று பெயர் பெற்ற ஜியார்ஜியாவைப் பிடித்துக் கொண்டு, எதிர்ப்புக்களை அடக் கிக் கொண்டு வடக்கே முன்னேறுவது, வழியில் ராஜ விசுவா சி களின் உதவியால் பயனடைவது—என்பது அவர்களுடைய திட்டம். 1778-ன் இறுதியில் அவர்கள் கடலோரத்தில் ஸவான்ன வைக் கைப்பற்றினர்கள்; 1779-ல் அவர்கள் ஜியார்ஜியாவி லும் தென் கரோலினாவிலும் உட்பகுதிகளை ஆக்கிரமித்தார் கள். சார்ல்ஸ்டன் என்னும் முக்கியமான துறைமுகமிபட்ட ணமும் அவர்கள் வசமாயிற்று. புரட்சிப் போரில் ஏற்பட்ட பெரிய நஷ்டங்களில் ஒன்று அது. தென் கரோலினா முழுதும் பிரிட்டிஷார் வசமாயிற்று. ரிகாம்டன் சண்டையிலும் அமெரிக் கருக்குப் பெருந் தோல்வியே கிடைத்தது.

ஆனல் இதற்கிடையே மேற்கு கரோலினாவிலிருந்து கிளம்பிய ஆயிரம் பேர் கொண்ட மன்னர் கட்சிப்படை ஒன்று அதைவிடப் பெரிய தேசத் தொண்டர் படையால் கிங்க்ஸ் மௌன்டன் என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டது. முன் னவர்களைக் காட்டிலும் அதிகத் திறமை வாய்ந்த நதானியேல் க்ரீன் மூன்றாவது தளகர்த்தனைத் தென்களத்தில் ஆஜரானன். 1781-ன் ஆரம்பத்தில் கில்ஃபோர்ட் கோர்ட்ஹௌசில் அவ னும் தோல்வியுற்றான்; ஆனல் நெடுந்தூரம் வேகமாய்ப் படையெழுப்பிச் செல்வதில் அவன் விசேஷத் திறமை காட்டி னன். ஒன்பது மாத கால அளவில் அவன் நான்கு முக்கியமான போர்களில் தோல்வியடைந்தான்; ஆனல் அவன் பிரிட்டிஷ் துருப்புகளைத் தங்கவிடாமல் இழுத்தடித்து அலுக்கும்படி செய்தான். அதுவும், உள்ளூர் மக்களின் விரோத மனப்

பான்மையும் அவர்களை முன்னேறவிடாமல் செய்து, தெற்கே விரட்டி, சார்ல்ஸ்டனிலும் ஸவானாவிலும் மறுபடி புகும்படி செய்தான். வாஷிங்க்டனைப் போலவே க்ரீனும் சில்லறைச் சண்டைகளில் தோல்வியும் முழு யுத்தத்தில் வெற்றியும் பெற்றான்.

க்ரீன் தென்னாட்டிலிருந்து சத்துருக்களை அப்புறப் படுத்திக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் இன்னொரு பிரிட்டிஷ் படை தன் அழிவை நெருங்கிக் கொண்டிருந்தது. முன்வேனிற் காலத்தில் கார்ன்வாலிஸ் கேப் ஃபியர் பிரதேசத்திலிருந்து திரும்பி, வடக்கே போனான். லாஃபியத்தின் கீழிருந்த அமெரிக்கப் படையை விரட்டும் முயற்சியில் ஏமாற்றமடைந்து, அவன் யார்க் நதியின் முகத்துவாரத்தில் உள்ள யார்க்டவுனுக்குச் சென்று அங்கு கோட்டை கொத்தளங்கள் அமைத்துக் கொண்டான். அந்த சமயத்தில் நியூயார்க்குக்கருகில் வாஷிங்க்டனிடம் சுமார் 6,000 பேரும் ரோட் (Rhode) தீவிலுள்ள நியூபோர்ட்டில் ரோஷாம்போவுடன் சுமார் 5,000 பேரும் இருந்தார்கள். அப்பொழுது மேற்கு இந்தியத் தீவுகளில் ஃப்ரென்சுக் கப்பற்படைத் தலைவனான டி க்ராஸே (De Grasse) யிடமிருந்து, "தான் ஒத்துழைக்கக் கூடும்" என்று வாஷிங்க்டனுக்குத் தகவல் கிடைத்தது. வாஷிங்க்டன் அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு, பாராட்டத்தக்க வேகத்துடன் படை நடத்தி 16,000 ஃப்ரென்சு, அமெரிக்கச் சிப்பாய்களடங்கிய சேனையை யார்க்டவுனுக்கு முன்னால் கொண்டு நிறுத்தினான். கார்ன்வாலிஸின் [illegible] துருப்புக்கள் கடல் மார்க்கமாகத் தப்பியோடுவதற்கில்லை; ஏனெனில் டி க்ராஸேயின் கடற்படை வழிமறித்து நின்றது. கோட்டையின் வெளிக் கொத்தளங்கள் கைப்பற்றப் பட்டன; பீரங்கிகுண்டுகள் உள் மதில்களைத் தகர்த்துத் தள்ளின. அக்டோபர் 19-ந் தேதி கார்ன்வாலிஸ் தோல்வியை ஒப்புக்கொண்டு தன் வாளை வாஷிங்க்டனிடம் அனுப்பினான்; அதைப் பெற்றுக் கொள்ளும்படி ஜெனரல் லிங்கனுக்கு உத்தரவு கிடைத்தது; பிரிட்டிஷ் துருப்புக்கள் தம் ஆயுதங்களை அமெரிக்கரிடம் ஒப்படைக்கும்போது அவர்களுடைய வாத்தியங்கள் "உலகம் தலைகீழாய்ப் போய்விட்டது" என்னும் பாட்டை முழங்கின.

போர் இப்பொழுது முடிவடைந்து விட்டது எனலாம். சில காலம்வரை ஜியார்ஜ் மன்னன் தோல்வியை ஒப்புக் கொள்ளப் பிடிவாதமாக மறுத்தான். ஆனால் 1782-ல் பிரிட்டிஷார் தென் துறைமுகங்களிலிருந்து விலகி விட்டார்கள்; நியூயார்க்கிலும் கோட்டையில் கொம்பு வாத்தியம் ஊதுவதோடு அவர்களுடைய அதிகாரம் நின்றிருந்தது.



சமாதான உடன்படிக்கை: 1783-ல் நடந்த உடன்படிக்கையில் பிரிட்டன் தாராள மனதுடன் நடந்து கொண்டது. அந்நாட்டு அரசாங்கம் விரும்பியிருந்தால் எல்லைகளை யொட்டிக் கடுமையாகப் பேரம் பேசியிருக்கலாம். வெஸ்ட் இண்டீஸ் தீவுகளில் ப்ரென்சுப் படையை ராட்னியின் பிரிட்டிஷ் கடற்படை சமீபத்தில் நையப் புடைத்திருந்தது; நியூயார்க்கிலிருந்த பிரிட்டிஷ் படைகளையும் நகற்ற முடியவில்லை. ஓஹியோ நதிக்கு வடக்கே இப்பொழுது இண்டியானு, இல்லினாய், மிஷிகன் என்று கூறப்படும் காட்டுப் பிரதேசத்தில் இருந்த பிரிட்டிஷ் ஸ்தலங்களை அமெரிக்க வீரர்கள் ஜியார்ஜ் ரோஜர்ஸ் க்ளார்கின் தலைமையில் கைப்பற்றினர்கள். அமெரிக்க மகா தூதர்களாகிய பென்ஜமின் ஃப்ராங்க்லின், ஜான் ஆடம்ஸ், ஜான் ஜே—ஆகியோருடன் நிபந்தனைகள் பேசிய பிரிட்டிஷ் மந்திரி ஷெல்பர்ன வெற்றியில் கிடைத்த ஸ்தலங்களை மாத்திரம் ஒட்டி எல்லை குறித்திருக்கலாம். அவ்வாறின்றி அவன் இந்தப் புதிய ஜனநாயக நாட்டிற்கு அலெகெனீஸ் மலைக்கும் மிஸிஸிபி நதிக்கும் இடையே உள்ள பிரதேசமெல்லாம் கொடுத்துவிட்டான்; வடக்கு எல்லை அநேகமாக இப்போதைய வடக்கு எல்லை போலவே இருந்தது; ஃப்ளாரிடா ஸ்பெயினுக்கு அளிக்கப்பட்டது; கானடாவை ஒட்டிய கடல்களில் அமெரிக்கர் மீன் பிடிக்கும் சலுகைகள் கணிசமாகப் பெற்றனர்.

அந்த உதார நடவடிக்கை நல்ல பயனளித்தது. பிரிட்டி
ார் வடமேற்குப்பிரதேசத்தில் தம் பிடியைத் தளர்த்தாமல்
ந்தால் பூசல்களும் மனக்கசப்பும்—அவற்றிற்கு எப்
குறைவு?—தொடர்ந்து இருந்து பேராபத்து
ம். நாடு இயற்கையாக மேற்குப்புறம் பரவிக்
இறுதியில் ஃப்ரென்சுக்காரர் லூயியானு
க்காரர்கள் ரீயோ க்ராண்டி (பெரிய
தசத்தையும் விட்டுக் கொடுக்கும்படி
15-க்குப் பிறகு இது போன்ற பிரச்னை
யத்திற்குக் கவலையளிக்கவில்லை. உண்
கிய நாடுகளும் பசிபிக் மகா சமுத்தி
டி விஸ்தரித்தல; இன்று, சிறந்த
ல் கூட்டாளிகளாகவும் இருந்து
அமெரிக்காவின் பெரும் பாகத்
ார்கள்.

நாட்டு உறவுகளில் அமெ
சாதித்துவிட்டது. உள்
கியமான ஒரு மாறுதல்
அறுபட்டது எவ்வளவு

V72
N62

முக்கியமோ அவ்வளவு முக்கியம் அமெரிக்க சமூகத்தில் சமீப ஆண்டுகளில் நிறைவேறிய ஆழ்ந்த மாற்றமைப்பு.

இங்கிலாந்தின் பிடியிலிருந்து விலகியதால் அரசியல் துறையில் உடனடியாகக் கிடைத்த லாபம் குடியாட்சியே இதுவரை மன்னன் நியமித்து வந்த கவர்னர்களை இப்பொழுது மக்களே தேர்ந்தெடுத்தார்கள்; அதேபோல் மேல் சபையில் நியமனமுறை விலகித் தேர்தல்முறை துவங்கிற்று; மக்கள் கோரி நிறைவேற்றிய சட்டங்கள் மறுப்புரிமை விதியிலிருந்து தப்பின. முன்பு வோட்டுரிமை இல்லாதவர்களெல்லாம் இப்பொழுது தேர்தலில் கலந்துகொள்ள முடிந்தது. பிரதிநிதித்துவத்தை அதிக நியாய சம்மதமாக்கிய சீர்திருத்தங்களும் மிக முக்கியமானவை. 1775-76-ல் இரண்டு ஜனரஞ்சகச் செயல்களுக்காக பென்ஸில்வேனியாவில் பெருங் கிளர்ச்சி உண்டாயிற்று — வெகு நாட்களாக அசட்டை செய்யப்பட்ட மேற்குப் பகுதிகளுக்கு ஜனத்தொகையின் விகிதப்படி சட்டசபையில் அங்கத்தினர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது ஒன்று; குறிப்பிட்ட ஒரு சிலருக்கே அனுகூலமாக இருந்த சொத்து யோக்கியதை, பிரஜா உரிமை யோக்கியதை போன்ற நிபந்தனைகளை விலக்க வேண்டுமென்பது மற்றொன்று. இரண்டு கோரிக்கைகளும் சந்தேகத்திற்கிடமில்லாமல் நிறைவேறின. மார்ச்சு 1776-ல் சட்டசபை 17 புது அங்கத்தினர்களை ஏற்றுக்கொண்டது; அவர்கள் பெரும்பாலும் மேற்குப் பிரதேசத்தார்கள்; சிறிது காலத்தில் வரி செலுத்தும் எந்த ஆண் மகனும் தேர்தலில் வாக்கு அளிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. வர்ஜீனியா போன்ற சில ஸ்டேட்டுகளில் அரசியலில் வேரூன்றிய சில கட்சிகள் நியாய விரோதமான முக்கியத்துவம் பெற்ற வண்ணம் இருந்தன. மாஸசுஸெட்ஸ் போன்ற வேறு சில ராஜ்யங்களில் சொத்து நிபந்தனை அமுலில் இருந்து வந்தது. ஆனல் பென்ஸில்வேனியா, டெலவேர், வடகரோலினு, ஜியார்ஜியா, வெர்மான்ட் ஆகிய இடங்களில் வோட்டுரிமை முன் கூறிய லட்சியப்படி இருந்தது; ஒரு பழமைப் பித்தன் அருவருப்புடன் சொன்னதுபோல், வரி மாத்திரம் செலுத்திவிட்டால் "இரண்டு காலுள்ள எந்த மிருகமும்" தேர்தலில் கலந்துகொள்ளலாம்.

ராஜ விசுவாசிகள் சிதறிப்போனதால் குடியரசு முறைக்குப் பெரும் நன்மையேற்பட்டது. மிதவாதிகளான செல்வவான்கள் அரசை எதிர்த்து நின்ற மூர்க்க ஜனங்களை வெறுத்தனர். பழமையில் தோய்ந்துலர்ந்த அவர்கள் துக்கமும் இகழ்ச்சியும் கலந்த ஆவேசத்துடன் வெளியேறினர். பிரிட்டிஷார் சார்ல்ஸ்டனைக் காலி செய்தபோது வெளியேறும் ராஜ விசுவாசிகளை ஏற்றிய நூறு கப்பல்கள் பாய் விரித்துப் பெரிய பிறைச்சந்திரன் போலப் புறப்பட்டன—மகத்தான காட்சி:

ARCHIVES
10914
MADRAS

சோகமயமான காட்சி. கானடாவின் வடபாகமும் கடலோர மாகாணங்களும் அறுபதினாயிரத்திற்கும் அதிகமான அகதிகளுக்கு இடமளித்தன; பல ஆயிரம் பேர் வெஸ்ட் இண்டீஸ் சென்றனர்; மனமுடைந்த பெருங்கூட்டம் இங்கிலாந்து சென்றது. அவர்கள் வெளியேறியதும் வெளிப்பகட்டற்ற அமெரிக்க உழைப்பாளிகள்—குடியானவர்கள், கடைக்காரர்கள், தொழிலாளர்கள்—தம் மனப் போக்கின்படி தடுப்பாரின்றி, ஒரு நாகரிகத்தை எழுப்பினர்கள். கண்ணியம், ஓய்வு, பண்பாடு ஆகியவை மதிப்பிழந்தன. ஊக்கம், உழைப்பு, முரட்டுத் தன்னம்பிக்கை, சுயப்பிரசாரம் முதலியவற்றிற்கு மதிப்பு ஏறிற்று. இடித்து முன்னேறும் வணிகனும், அதிர்ஷ்ட லாபத்தைத் தேடும் சாகச வியாபாரியும் அமெரிக்க சமூகத்தில் முக்கிய இடம் பெற்று வந்தார்கள். சகலரும் சமம்; அனைவருக்கும் வேலை அவசரம்; அநேகமாய் அனைவரும் டாலர் நாணயத்தை உபாசித்தார்கள். விசேஷ உரிமைகள் என்னும் மூன்று கோட்டைகள் வெற்றியுடன் தாக்கப்பட்டதாலும் குடியரசு வலிமையுடன் முன்னேறிற்று—அவையாவன: முதல் மகனுக்கே சொத்தில் பூர்ண உரிமை என்னும் சட்டமும் (Primogeniture) சொத்தை விற்க முடியாதபடி வாரிசு பரம்பரை நிச்சயித்து உயில் எழுதுதலும் (Entail) ரத்து செய்யப்பட்டன; பெரிய டோரி ஜமீன்தாரிகள் துண்டு துண்டாக்கப்பட்டன; பெரிய துரைத்தன சர்ச்சின் ஆதிக்கம் நீக்கப்பட்டது. வாரிசு உரிமை தோஷங்கள் இரண்டும் வர்ஜீனியாவில் அதிக ஆழம் வேரூன்றியிருந்தன. பெரிய குடும்ப ஆஸ்திகள் சிதறுண்டு இருந்ததே அவற்றின் விளைவு. ''வர்ஜீனியாவைப் பற்றிய குறிப்புகளி''ல் ஜெஃபெர்ஸன் சொன்னதுபோல் அங்கிருந்த ஜமீன்தார்கள் ராஜ போகத்துடன் வாழ்ந்தார்கள். அவர் வர்ஜீனிய சட்டசபையில் 'என்டெய்ல்' உரிமையை எதிர்த்தார்; 1776-ல் அநேகமாய் முதல் தாக்குதலிலேயே அவர் சந்தேக மற்ற வெற்றி பெற்றார். அதன் பிறகு எல்லா நிலங்களும் தடை நிபந்தனையற்ற விற்பனைக்கு வரத் தகுதிபெற்றன. 1785-ல் அவர் தலைப்பிள்ளை உரிமையை ஒழிப்பதிலும் வெற்றி பெற்றார். மூத்த மகனுக்கு இரட்டைப் பங்காவது கிடைக்க வேண்டும் என்று ஒருவன் சிபார்சு செய்தான். ''அவன் இரு மடங்கு உணவு உண்டு இரு மடங்கு வேலை செய்வானு?'' என்று ஜெஃபெர்ஸன் சட்டெனக் கேட்டார். பெரிய ஜமீன்கள் மக்களிடையே பங்கிடப்பட்டன, அல்லது புது மனிதர்களுக்குத் துண்டு துண்டாக விற்கப்பட்டன. விற்ற பணத்துடன் மக்கள் புது வாழ்க்கை ஆரம்பிக்க மேற்குப்புறம் சென்றார்கள். ஜ்யார்ஜியா, தென் கரோலினு, மேரிலண்டு ஆகிய தென் ராஜ்யங்களும் வேகமாக வர்ஜீனியா காட்டிய வழியைப் பின்பற்றின.

அதேபோல பெரிய இனாம் நிலங்களும், டோரிகள் விட்டுச் சென்ற நிலங்களும் சிறு பண்ணைகளாகப் பலருக்கு விற்கப்பட்டன; அந்நடவடிக்கை குடியரசு முறை வளர உதவிற்று. இரண்டு முக்கிய இனாம்தார்கள் பென்சில்வேனியாவின் பென் (Penn) குடும்பத்தாரும் மேரிலண்டின் லார்டு பால்டிமோர் குடும்பத்தாரும். பென்சில்வேனியா நன்றியுடன் பென் குடும்பத்தாருக்கு 1,30,000 சவரன் ஈடு பணம் கொடுத்தது; ஆனால் மேரிலண்டிலிருந்து ஹார்ஃபோர்டு பெற்றது 10,000 சவரன் தான். பறிமுதல் ஆன ஜமீன்களில் சிறு குடியானவர்கள் மகிழ்ச்சியுடன் சொந்த விவசாயம் நடத்தினர்கள்; அதற்கு முன் அவர்கள் அந்தச் செழிப்பான நிலங்களில் வாரம் அல்லது குத்தகை பேசித் தான் கால் வைத்திருக்க முடியும்.

முன்பு மூன்றுவகைப் பிரபுத்துவங்கள் இருந்தன—ஜமீன் பிரபுத்துவம், சர்க்கார் அதிகாரப் பிரபுத்துவம், மதஸ்தாபனப் பிரபுத்துவம்; முன்னிரண்டு சென்ற வழியே மூன்றுவதும் சென்றது. நியூ இங்கிலாந்தில் அரசாங்க ஆதரவு பெறுத 'பக்தஜன சர்ச்சு' (Congregational church) தான் முன் பெற்றிருந்த விசேஷச் சலுகைகளை இழக்கவில்லை. மாஸசுஸெட்ஸ் மேலும் சில சலுகைகள் அளித்தது. ஆனால் தெற்கே ஆங்கில சர்ச்சின் விசேஷ உரிமைகள் நசித்தன.

வட கரோலினாவில் துரைத்தனத்தின் ஆதரவு பெற்ற ஒரு கோவிலிலும் (Established church) மதப் பிரசங்கம் நடைபெறவில்லை; இதர ஸ்டேட்டுகளில் அரசியல் சீர்திருத்த ஆவேசக்காரர்களுக்கும் ஞான ஸ்னானத்தார், (Baptists), மூப்பர் சபையார் (Presbyterians) போன்ற சமயப் பிரிவினருக்கும் இது பொன்னான வாய்ப்பு ஆயிற்று. 1776-ல் வட கரோலினு ஒரு சட்டத்தின் மூலம் மத சுதந்திரம் அளித்தது; ஆனால் அரசாங்க ஆதரவு பெற்ற கோவில்களுக்கு இடம் தரவில்லை. மறுவருஷம் ஜியார்ஜியாவும் அதற்கடுத்த வருஷம் தென் கரோலினுவும் தம் அரசியல் நிர்மாணத் திட்டத்தில் அவ்வாறே செய்தன. ஆனால் வர்ஜீனியாவில் கடுமையான வாத விவாதம் நடந்தது. அங்கு துரைத்தன ஆதரவு பெற்ற கோவில் நன்கு வேரூன்றியிருந்தது. ஏனென்றால் அங்குள்ள பிரபுக் குடும்பங்கள் ஆங்லிகன் மதப் பண்பில் பிறந்து வளர்ந்தவர்கள். பாட்ரிக் ஹென்ரி போன்ற அரசியல் தீவிரவாதி கூடப் பக்திக்கும் சீலத்திற்கும் அரசாங்க ஆதரவு பெற்ற மதம் இன்றியமையாதது என்று நம்பினான். ஆனால் சமயப் பிரிவினைக் கட்சியாருக்கு ஆங்கிலச் சர்ச்சின் அணைப்பில் வளர்ந்த இரண்டு பெரிய மிதவாதிகள் தலைவர்களாகக் கிடைத்தார்கள். அவர்கள் தாமஸ் ஜெஃபெர்ஸனும், ஜேம்ஸ் மாடிஸனும் ஆவர்.

மத சம்பந்தமான சகிப்புத்தன்மையை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டதனால் இவ்விரு நாயகர்களுக்கு முதல்

வெற்றி கிடைத்தது. 1776-ன் நிர்மாணச் சட்டத்தில் மாடிஸன் "எல்லா மனிதர்களுக்கும் சமய வழிபாட்டில் சம உரிமை உண்டு" என்னும் எளிய பிரகடனத்தைப் பதிவு செய்வித்தான். ஆனால் துரைத்தனசமயசபை இருந்துகொண்டு தான் இருந்தது; அதைக் களைந்தெறியப் பத்து வருஷத் தீவிர முயற்சி தேவையாயிற்று. ஹென்ரிக்கும் மாடிஸனுக்கும் இடையே நிகழ்ந்த மகத்தான விவாதத்தில் மாடிஸன் பூர்ண வெற்றி பெற்றான். உதாரக்கட்சித் தலைவர்கள் பொது மக்களிடைபிரசாரம் செய்யஅவகாசம்பெற்றார்கள். ஜெஃபெர்ஸன் மத ஆசரணை சுதந்திரத்திற்காகப் பிரேரேபித்ததும் பிரசித்தமானதுமான மசோதா சட்டமாயிற்று—அதன்படி அரசாங்கம் கோவில் விஷயங்களிலோ, மனசாட்சி சம்பந்த மான விஷயங்களிலோ தலையிடக் கூடாது; மேலும் மதத்தைப் பற்றிய கொள்கைகளுக்காக எவனுக்கும் கஷ்ட நஷ்டம் உண்டாகக்கூடாது. சரித்திர முக்கியத்துவம் பெற்ற இந் நிகழ்ச்சி வர்ஜீனியாவில் மாத்திரமல்ல, மேற்கே பல ஸ்டேட் டுகளின் ஆதாரக்கல் ஆயிற்று.

பல்வேறு ராஜ்யங்களில் கல்வியின் அஸ்திவாரத்தை வலுப் படுத்தப் பல நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. முன்கூறிய சச்சரவு தனிப் பள்ளிக் கூடங்களையும் கல்லூரி களையும் மிகவும் பாதித்தது. யேல் கல்லூரியும் இப்போது கொலம்பியா எனப்படும் கிங்க்ஸ் காலேஜும் சிலகாலம் மூடிக்கிடந்தன.

ஆனால் புரட்சிப் போரின் காரணமாக ஜனங்களிடையே ஒரு விழிப்பு ஏற்பட்டது; அவர்கள் உயர்வான பொதுப் பள்ளிக் கூடங்கள் கோரினார்கள். குடியரசு முறையில் சுய ஆட்சி வெற்றிபெற வேண்டுமானால் கல்வி பயின்ற வோட்டர் கள் தேவை-என்பது தெளிவாயிற்று. ஸ்டேட்டுகளின் பண முடை ஆதியில் குறுக்கே நின்றது; ஆனால் செல்லச் செல்ல போருக்குமுன் இருந்ததைக் காட்டிலும் ஆரம்பக் கல்வி மிக அதிக வசதிகள் பெற்றது. 1785-ல் விதிக்கப்பட்ட நிலச் சட்டம் கல்விக்கு மிகவும்முக்கியமானதாயிற்று; அதன் ஷரத்து களின்படி, பல மிலியன் ஏக்கர் பொது நிலத்தைப் பொதுப் பள்ளிகளுக்கு மான்யமாக விடுவது சாத்தியமாயிற்று.

தேசிய அரசாங்கம் இல்லாத குறை: புதிதாய் அமைந்த பஞ் சாயத்து ராஜ்யத்தின் எதிர்காலம் நம்பிக்கை யளிப்பதாகவும் முன்னேறக் கூடியதாகவும் தோன்றிற்று. ஆனால் அடிவானத் தில் ஒரு புயல் மேகம் தென்பட்டது. 13 ஸ்டேட்டுகளும் உண் மையான தேச அரசாங்கமொன்றை இன்னும் நிறுவவில்லை. 1781-மார்ச்சில் அவை சமஷ்டிக்கான நிபந்தனைகள் சில ஒப்புக் கொண்டன; ஆனால் அந்தத் திட்டத்தை "நட்பு சமாஜ ஒப்பந் தம்" என்று வர்ணிக்கலாமே தவிர, வலிவுள்ளதோ போதுமா

னதோ என்று கூற முடியாது. உண்மையான அகில அமெரிக்க காரியக் குழு ஏற்படவில்லை. ஒற்றைச் சபையான அமெரிக்க காங்கிரசில் ஒவ்வொரு ஸ்டேட்டுக்கும் ஒவ்வொரு வோட்டு உண்டு; ஆனால் தீர்மானங்களைக்கொண்டு செலுத்தும் சக்தி அதற்கு அளிக்கப்படவில்லை. வரி விதிக்கவோ, துருப்புக்கள் சேர்க்கவோ, அதன் சட்டங்களை மீறியவர்களை தண்டிக் கவோ, அது இதர நாடுகளுடன் செய்து கொண்ட உடன் படிக்கைகளைக் கௌரவிக்கும்படி ஸ்டேட்டுகளைக் கட்டாயப் படுத்தவோ அதனால் முடியாது. அரசாங்கத்தை நடத்தவும், தேசக் கடன்மேல் வட்டி செலுத்தவும், நிதி திரட்டவும் அதற்கு அதிகாரமில்லை என்பது எல்லாவற்றிலும் கேடான நிலை.

புரட்சிப் போரின் காரணமாக இதரப் பல சுதந்திர நாடு களைப்போலவே அமெரிக்காவும் ஒரு சுதந்திர நாடாயிற்று; மாறிய சமூகநிலை ஒன்று ஏற்பட்டது; அதில் வமிசாவளி, ஆஸ்தி, அந்தஸ்து முதலியன குறைவான மதிப்பும் மனித சமத்துவம் அதிக மதிப்பும் பெற்றன; அதில் பண்பாடும் ஆசார உபசாரங்களும் தற்காலிகமாக மட்டநிலையடைந்தன. ஆனால் நியாயபாவம் உயர்ந்தது. அப்போர் அமெரிக்கரின் தேசாபி மானத்தை ஆழ ஊன்றவைக்கக் கூடிய ஆயிரம் ஆயிரம் நினைவுகளுக்கு வாய்ப்பளித்தது.

ஆனால் சுய ஆட்சி புரியத் தம்மிடம் உண்மையான தகுதி இருக்கிறது, தங்களுடைய ஜனநாயக அரசாங்கத்தை வெற்றியுடன் நடத்த முடியும் என்பதை அமெரிக்கர் அன்றுப் நிரூபித்தாகவில்லை; ஒழுங்கான சாம்ராஜ்ய அமைப் பின் பிரச்னைகளைத் தம்மால் தீர்க்க முடியும் என்று உலகுக்குக் காட்டுவது பாக்கி நின்றது. அவர்களுடைய 'நட்புச் சங்கம்' "அபிப்ராயபேதப் பிரிவினைச் சங்கமாக" மாறி வந்து கொண்டிருந்தது, உலகத்தாரின் இகழ்ச்சிக் குப் பாத்திரமாகி வந்தது; ஸ்டேட்டுகளிடையே கிளம்பிய பூசல்கள் ஆபத்துகரமாகி வந்தன. இந்தக் குழப்ப நிலை யால் சேனை மிகவும் துன்பப்பட்டது; சிப்பாய்களுக்கு உணவு, உடை, சம்பளம் ஒன்றும் ஒழுங்காகக் கிடைக்க வில்லை.

அத்தியாயம் 5

அரசியல் நிர்ணயத் திட்டம் அமைத்தல்

மிக முக்கியமான சாதனை: உலகத்தின் அரசியல் நிர்மாணங்களில் ஐக்கிய நாடுகளின் திட்டம் மிக முன்யோசனை கூடியதும் காரியசித்திக்கு உகந்ததுமாக இருக்கிறது; இது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. பிரிட்டனின் திட்டம் எழுத்தில்ப தியப்படாதது; அமெரிக்கன் திட்டம் லிகிதத் திட்டம். ஆனல் அது நெளிவு சுளிவுடன் தேசமக்களின் வளர்ச்சியுடன் வளர்ந்தது. அதன் பிறப்பின் கதை அபூர்வ சுவாரஸ்யம் பெற்றது. க்ளாட்ஸ்டன் சொன்னர்: "பிரிட்டிஷ் அரசியல் நிர்மாணம் தேச சரித்திரத்தின் வளர்ச்சியுடன் காலக்கிரமத்தில் மிக சூக்ஷ்மமான ஜீவ அமைப்புபோல் படிப்படியாக வளர்ந்ததாகும்; அமெரிக்க திட்டம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மனிதனுடைய லட்சியத்திலும் அறிவிலும் இருந்து பிறந்த மிக அற்புதமான சிருஷ்டியாகும்". உண்மையில் அதுவும் பெரும்பாலும் விகாச முறையில் வளர்ந்ததே. ஆனல் அதன் பொது வடிவம் தற்கால மனித சபைகளில் மிகவும் குறிப்பிடக்கூடிய சபை ஒன்றில் தீர்மானிக்கப் பட்டது.

புரட்சிக் காலம் முடிவடையும் சமயத்தில் ஸ்டேட்டுகள் அங்கீகரித்த சமஷ்டி நிபந்தனைகளில் பல பல குறைகள் இருந்தன. புதுத் திட்டம் தெளிவாகவும் கறாராகவும் மத்திய அரசாங்கத்தை வலுப்படுத்தக் கூடியதாகவும் தயாரிக்கப் பட்டது. நிலைமை கெட்டுக் கெட்டு 1786-ல் வியாபார உலகில் பயங்கரமான மந்த ஸ்திதி ஏற்பட்டது. சக்திவாய்ந்த தொரு மத்திய அரசாங்கமே லாபகரமான நடவடிக்கை எடுத்திருக்கமுடியும். ஆகவே சந்தேக நோக்கமுள்ள அமெரிக்கர்களும் புதிய, வலுவுள்ள, மத்திய அரசாங்கத்தையே வரவேற்றனர்.

சமஷ்டி அரசாங்கத்தின் பலஹீனம்: 1786-ல் எதிர்காலத் தோற்றம் நெஞ்சைக் கலக்கக்கூடியதாக இருந்தது. விறுவிறுப்பான தேச அரசாங்கம் இல்லையென்பது மட்டுமல்ல; 13 ஸ்டேட்டுகளின் ஒழுங்கின்மையைக் கண்டு அவற்றிடையே போர் கிளம்பிவிடுமோ என்றும் மக்கள் பயந்தனர். எல்லைக் கோடுகளைப் பற்றிச் சச்சரவுகள் இருந்து கொண்டே

இருந்தன; பென்ஸில்வேனியாவிலும் வெர்மாண்டிலும் மண்டைகள் உடைந்தன. மாகாணத்துக்கு மாகாணம் முரணுக நியாயஸ்தலங்கள் தீர்ப்புகள் வழங்கின. சுங்க வரிகள் வித்தியாசத்து வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கான சட்ட அனுமதி மத்திய அரசாங்கம் பெறவில்லை. அதேபோல தேசப் பொது நிர்வாகத்திற்காக வரி விதிக்கும் விஷயமும், அயல்நாட்டு விவகாரங்கள் முற்றிலும் மத்திய அரசாங்கத்தின் கைவசம் இருந்திருக்கவேண்டும்; ஆனல் பல ஸ்டேட்டுகள் அயல்நாடுகளுடன் தனிப்பட்ட ஒப்பந்தங்கள் செய்து கொள்ளத் தொடங்கிவிட்டன. (அமெரிக்க) இந்திய விஷயத்திலும் காப்பாற்றுதல், தண்டித்தல் முதலான கடமைகள் முற்றிலும் தேச சர்க்காரின் பொறுப்பாக இருக்கவேண்டும்; ஆனல் பல ஸ்டேட்டுகள் இக்கொள்கைக்கு முரணுக நடந்து கொண்டன; ஜ்யார்ஜியா ஒரு முழு இந்தியப் போரே நடத்திற்று.

உள்ளூர்க் குழப்பங்களால் பல இடங்களில் உணவுக்கே ஆபத்து நேரலாம் என்று தோன்றியபோது நிதானபுத்தியுள்ள நடுவகுப்பார் பயந்தார்கள். 1785-86-ல் வியாபார மந்தம் மிகவும் அதிகரித்தபோது அன்ருட வாழ்க்கை நடத்தும் மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். எல்லைப் புறங்களில் பணப் பஞ்சம் ஏற்பட்டது, கடைகள் படுத்துப்போயின, அறுவடைக்கு வசதியில்லாமல் விளைபொருள்கள் தரையில் அழிந்தன. பண்டம் மாற்றல் ஆரம்பமாயிற்று. கடன்பட்டவர்கள் ஸ்டேட்டு அரசாங்கங்களிடம் நோட்டு அச்சடிக்கும்படி மன்ருடினர்கள்; பண்ணைக் கூலியாட்களுக்கும் தாம் பணம் செலுத்தவேண்டிய இதர இடங்களிலும் நோட்டுகள் கொடுத்துத் தம் பொறுப்பைக் கழிக்க விரும்பினர்கள். மேலும் கடன் வசூலைச் சட்டரீதியாக நிறுத்தி வைக்கவேண்டுமென்றும் கால்நடை அல்லது தானியங்கள் மூலம் கடனைச் செலுத்தச் சட்டம் அனுமதிக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். தேர்தல்களில் கடன் கொடுத்தவன், கடன் பெற்றவன் என்ற பிரச்னை முக்கியத்துவம் பெற்றது. பல ஸ்டேட்களில் ஏழைக்கும் தனவந்தனுக்குமிடையே இருந்த மனத்தாங்கலும் எதிர்ப்பும் தீவிர ரூபம் ஏற்றன.

1786-ல் ஏழு ஸ்டேட்டு சட்டசபைகளில் நோட்டு அச்சடிக்கும் தீர்மானங்கள் நிறைவேறின. ரோட் ஐலண்டின் தீர்மானங்களின்படி அநேகமாய் உபயோகமற்றது என்னும் பணத்தைக் கொண்டே கடன்களை அடைத்த பெயராக்கலாம், அந்தக் காகிதப் பணத்தால் அயல் ஸ்டேட்டுகளிலும் கடன் அடைக்கலாம் என்ற நிலை இருந்ததால் கனெக்டிகட்டும் மாஸசூஸெட்ஸும் அதிகோபத்துடன் பழிவாங்கும் நடவடிக்கைகள்

ஆரம்பித்தன. வட நியூ இங்கிலாந்தில் அதிகசெல்வாக்குக் கொண்டிருந்த மாஸசுஸெட்ஸிலும், நியூ ஹாம்ப்ஷரிலும் சட்டசபைகள் காகிதப்பண வெறியர்களுக்கு இணங்கவில்லை; அங்கு ஆயுதம் தாங்கிய கலகங்கள் கிளம்பின. அமுலிலிருந்த மாஸசுஸெட்ஸ் நிர்மாணம் நிதானமானது, தொன்மையில் பற்றுள்ளது. தேர்தல் விதிகளிலும் உத்தியோக சம்பந்தமான விதிகளிலும் அங்கு சொத்து உடைமை ஒரு முக்கிய நிபந்தனையாக இருந்தது. புரட்சிப் போரின் கடன்களை அடைப்பதற்காகச் சட்டசபை கனத்த வரிகள் விதித்திருந்தது; கடன் கொடுத்தவர்கள் 'வந்தால் அளவு கடந்த லாபம்; போனால் முழுதும் நஷ்டம்' என்று அறிந்தவர்கள். ஆகவே விவசாயப் பகுதியில் கலகக்காரர்கள் கிளம்பியதில் ஆச்சரியமில்லை. ஜூலை 1786-ல் சட்டசபை தள்ளி வைக்கப்பட்டதும் கலகம் கிளம்புவதற்கு ஒரு குறியாக உதவிற்று; பங்கர் மலைப்போரில் அனுபவம் பெற்ற ஒருவன் தலைமையில் எழுந்த அந்தக் கிளர்ச்சி சரித்திரத்தில் டேனியல் ஷேயின் கலகம் என்ற பெயர் பெற்றிருக்கிறது.

கவர்னர் போடாய்ன், ஜெனரல் லிங்கன் ஆகியோரின் தலைமையில், ஆபத்து நேரத்தில் சில தனவந்தர்கள் கொடுத்த பண உதவியுடன், ஸ்டேட் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுத்தது; ஷே ஸ்பிரிங்ஃபீல்டிலுள்ள ஆயுதசாலையைக் கொள்ளையடித்துத் தன் படைகளைப் பரவலாக அணிவகுப்பதற்கு யத்தனிக்கையில் அவனுடைய படையெழுச்சியை நிறுத்துவது சுலபமாயிற்று. ஆனல் இந்தச் சிறிய கலவரம் நாடு முழுவதும் பழைமைப் பற்றுள்ள வட்டாரங்களில் திகிலை உண்டாக்கிற்று. இடதுசாரிப் புரட்சி மனப்பான்மையின் அறிகுறியாக அது தோன்றிற்று. நியூ இங்கிலாந்தில் சொத்தும் கொள்கையும் உள்ள ஒவ்வொருவனும் அதிர்ச்சியடைந்தான். குழப்பங்களை அடக்க உதவி புரிவதற்கான வலுவுள்ள மத்திய அரசாங்கம் தேவை என்பதே தர்க்க சம்மதமான முடிவு.

பல தொழில் துறைகளின் இணைப்பை ஒட்டி வாழ்க்கை நடத்திய மனிதர்கள் ஸ்டேட்டு அரசாங்கங்களின் சச்சரவுகளால் மிகவும் துன்பப்பட்டனர். ஒருவகைப்பட்ட நாணயத்திட்டம் இல்லாததால் வியாபாரிகள மிகவும் சிரமப்பட்டார்கள். பல வேறு தங்கசாலைகளில் முத்திரையிட்ட பல வகை நாணயங்களை உபயோகிக்கவேண்டிவந்தது; போலி நாணயும், தேய்ந்தது, வெட்டுண்டது—இவ்வாறு பல தோஷங்கள் இருந்தன; நோட்டுகளிலும் தேச நோட்டு, ராஜ்ய நோட்டு என்ற பேதங்கள் இருந்தன; அவற்றின் மதிப்பும் சீக்கிரம் குறைந்து வந்தது. நிர்ணயமான மத்திய அரசாங்க நாணயச் செலாவணி இல்லாமல் சாத்தியமில்லை என்பது தெளிவாயிற்று

வலுவற்ற அகில கண்ட காங்கிரஸுக்கு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தோடு—முக்கியமாக மேற்கு இந்தியத் தீவுகளோடு—முன்போன்ற வர்த்தக உறவுகளை மறுபடி ஸ்தாபிப்பது அசாத்தியமாயிற்று. அமெரிக்க வியாபாரம் மிஸிஸிபி நதியில் நுழையாவண்ணம் ஸ்பேய்ன் வீரூப்புடன் தடுத்தது. உள்நாட்டிலேயே, வணிகர்கள் தமக்குச் சேரவேண்டிய தனத்தைக் கவலையின்றி வசூலிப்பதற்கான மார்க்கம் இருக்கவில்லை. நியூ யார்க்குக் காரன் பென்ஸில்வேனியாவிலிருந்து வரவேண்டிய தொகைக்காக வழக்குத் தொடர வேண்டிவந்தால், அவன் பென்ஸில்வேனிய நியாய ஸ்தலத்திற்குத்தான் செல்ல வேண்டும்; அவ்விடத்து அதிகாரிகளும் ஜூரி பஞ்சாயத்தார்களும் உள்ளூர்க்காரனுக்கு அனுகூலமாக இருப்பது இயல்பே. துரிதமாய் வளர்ந்துவரும் அமெரிக்கத் தொழில் உற்பத்தி நிலையங்கள் விலையை குறைத்துக் கொண்டே போகும் ஐரோப்பியப் போட்டியின் முன் திணறின.

ஆனல் தீமைகளில் மிகக் கெட்டவை தாமாக சம்பாதித்துக் கொள்ளப்பட்டவை; ஸ்டேட்டுகள் வேண்டுமென்றே பரஸ்பர வியாபாரம் வளராமல் தடைகள் உண்டாக்கின. ஐரோப்பிய சாமான்கள் வந்து குவிந்து போகாமலும் இறக்குமதியால் வருமானம் கிடைக்கும் பொருட்டும் சில ராஜ்யங்கள் எல்லா இறக்குமதிப் பொருள்கள்மீதும் சுங்கத் தீர்வை விதித்தன. அச்செயலில் மூன்று படிகளைக் காணலாம். யுத்த காலத்தில் வர்ஜீனியா மாத்திரம் பல பொருள்கள் மேல் வரி விதித்தது; புகையிலை ஏற்றுமதியும் பலவகைப் பண்டங்களின் இறக்குமதியும் அது செய்துவந்ததால் அதிக வியாபாரமுள்ள அந்த ஸ்டேட் தைரியமாய் வரிவிதிக்கமுடியும். போர் முடிந்த முதல் மூன்று வருஷங்களில் நியூ ஜெர்ஸி தவிர மற்ற ஸ்டேட்டுகள் வரி விதித்தன; ஆனல் வருமானமே அவற்றின் நோக்கம். சொந்தத் தொழிலை ஆதரிப்பதல்ல. கடைசியாக, 1785-க்குள், நியூ இங்கிலாந்தும் பல மத்தியஸ்டேட்டுகளும் தொழில் அபிவிருத்தியடைந்து ஐரோப்பியப் போட்டியால் நஷ்டப்பட்டன; ஆகவே அவை பாதுகாப்புச் சுங்க வரி விதித்தன.

அப்பொழுது ராஜ்யங்களுக்கிடையே உண்டான பொறுமையால் பழிவாங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. தென் ராஜ்யங்களிலும் சில சிறிய வட ராஜ்யங்களிலும் தொழில் உற்பத்தி அதிகம் கிடையாது; அவற்றிற்கு இறக்குமதிப் பொருள்கள் தேவை. டிலாவேரும் நியூ ஜெர்ஸியும் ஐரோப்பியச் சரக்குகளை வரியின்றி ஏற்றுக்கொண்டன; கனெக்டிகட்டும் ஐரோப்பாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்ய சட்டங்கள் இயற்றிற்று. கப்பல் படகுப் போக்குவரத்திலும் தடைகள் ஏற்பட்டன; உதாரணமாக நியூ ஜெர்ஸிக்காரர்கள் ஹட்ஸன் நதியைத் தாண்டி நியூ யார்க்கில் காய்கறி விற்க

வேண்டுமானால் கடுமையான கட்டணங்கள் செலுத்த வேண்டும். இந்நிலையில் ராஜ்யங்களுக்கிடையே அசூயையும், எரிச்சலும் உண்டாவது இயல்பே.

ஏற்றத் தாழ்வுகளை 'சமப்படுத்த' முயலும் தீவிர சீர்திருத்த சட்டசபைகளை அடக்குவதற்கு வலுவுள்ள மத்திய அரசாங்கம் தேவை என்பதை வணிகர்களும் உற்பத்தியாளர்களும் மாத்திரமல்ல, கடன் கொடுத்த பல கூட்டத்தாரும் வற்புறுத்தினர். கடன் கொடுத்தவர்களும் அடைமானம் வைத்தவர்களும் ஸ்டேட்டுகளின் தடை உத்தரவுகளையும் விலை பெறுத நோட்டுகளையும் கண்டு மிரண்டார்கள்; இங்கிலாந்திலிருந்து கிடைக்கவேண்டிய பழைய கடன் தொகைகளை வசூலிப்பதற்கில்லை என்று சில சட்டசபைகள் விதித்துவிட்டதால் பிரிட்டிஷ் கடன் பத்திரங்கள் வைத்திருந்த அமெரிக்கர் அலறினார்கள். புரட்சி யுத்த காலத்தில் கிடைக்க இருந்த சம்பளத்தில் ஒரு பகுதியை நிலமாகப் பெற்ற ஆபீசர்களும், சிப்பாய்களும் அவற்றை லாபகரமாகப் பயன்படுத்த முடியவில்லை. பெரிய அளவில் சிப்பாய்களின் மான்ய நிலங்களும், பறிமுதலான அரசாங்க நிலங்களும் வாங்கிக் கூடுதலான விலையில் விற்கத் திட்டமிட்டவர்களும் ஏமாற்றமடைந்தார்கள். வலுவுள்ள தேச அரசாங்கத்தை நிலச்சுவான்தார்கள் விரும்பியதன் காரணம் செல்வந்திய எதிரிகளிடமிருந்து எல்லையைக் காக்கவும், புதுக் குடியேற்ற ஸ்தலங்களில் ஒழுங்கு முறை அமைக்கவும், பட்டா உரிமையைக் காக்கவும் ஸ்டேட்டுகளுக்கு ஆற்றல் போதாது என்பதே.

கடைசியாக, சமஷ்டி அரசாங்கக் கடன் பாண்டுகளையும் ஸ்டேட் அரசாங்கக் கடன் பாண்டுகளையும் பெட்டிகளில் பூட்டி வைத்திருந்த முக்கியஸ்தர்கள் பொருளாதாரக் குழப்பத்தையும் மக்களின் வரித் துவேஷத்தையும் கண்டு மனம் கலங்கினர். முன் சென்ற 14 மாதங்களில் தேசத்தின் உள் நாட்டுக் கடன் வட்டியும் வெளிநாட்டுக் கடன் வட்டியும் சேர்ந்து ஏறக்குறைய 14 மிலியன் (140 லட்சம்) டாலர் ஆகிற்று; தேசிய வருமானம் நான்கு லட்சம் டாலரே!

வடமேற்குச் சட்டம்: ஐக்கிய அரசாங்கம் ஒரு பெரிய வெற்றி பெற்றது. அல்லெகெனி மலைகளுக்கு மேற்கே ஸ்டேட்டுகளுக்குக் கிடைத்த நிலங்களை அவை ஒவ்வொன்றுக்குப் பொது அரசாங்கத்திற்கு விட்டுக் கொடுத்துவிட்டன; ஆள் நடமாட்டமில்லாத அந்த இடங்களை என்ன செய்வது என்பது பிரச்னை; பிற்காலத்தில் ஐக்கிய நாடுகளுக்கு வழிகாட்டியாக இருந்த ஒரு நல்ல திட்டத்தை அக்காலத்து ஐக்கிய அரசாங்கம் வகுத்தது. அப்பிரதேசத்தில் ஒழுங்காகவும் தொடர்ந்தும் ஜனங்கள் குடியேறுவதை அனுமதிக்க அது தீர்மானித்தது. அங்கு வசிப்பவர்கள் படிப்படியாகச் சுய ஆட்சி முறைகளில் பயிற்சி

பெறவேண்டும்; கடைசியாக, அப்பொழுதிருந்த பதின்மூன்றைப்போல புதிய, பூர்ணமான ஸ்டேட்டுகள் ஏற்படவேண்டும் என்பது நோக்கம். அந்தத் திட்டம் 1787-ஆம் ஆண்டின் வடமேற்குச் சட்டத்தில் அடங்கியிருந்தது; ஓஹியோ நதிக்கு வடக்கே இருந்த பிரதேசத்தைப் பற்றியது அது; அந்தப் பிரதேசம் கடைசியில் மூன்று, நான்கு அல்லது ஐந்து ஸ்டேட்டுகளாகப் பிரிக்கப்படும். நீக்ரோ அடிமைகளுக்கு அங்கு இடமிராது. அரசாங்கப் பயிற்சி மூன்று படிகளில் அளிப்பதாக ஏற்பாடு. காங்கிரஸ் முதலில் ஒரு பிரதேசத்தின் எல்லைகளைக் குறிப்பிட்டு ஒரு கவர்னரையும் நீதிபதிகளையும் நியமிக்கும்; அவர்கள் சட்டங்கள் தயாரிப்பார்கள்; அவசியமிருந்தால் காங்கிரஸ் அவற்றை மறுக்கலாம். ஜனத்தொகை 5,000 ஆகும் போது இரண்டு பகுதிகள் கொண்ட சட்டசபை அமைக்கப்படும்; கீழ் சபையின் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கடைசியாக, அந்தப் பிரதேசத்தின் ஜனத்தொகை 60,000 ஆனதும் அது பூர்ண ஸ்டேட் ஆகும். இவ்வாறு ஐக்கிய நாடுகள் தம் காலனிப் பிரச்னையைத் தீர்த்தன. அமெரிக்கர் பசிஃபிக் மகா சமுத்திரம்வரை பரவப்பரவ, இதே நமூனுப்படி காரியங்கள் நடந்தன; கடைசியில் ஸ்டேட்டுகளின் எண்ணிக்கை 48 ஆயிற்று. (சமீப காலத்தில் அலாஸ்கா, ஹவாய் இரு பிரதேசங்களும் ஸ்டேட்டுகள் ஆக்கப்பட்டதால் எண்ணிக்கை 50 ஆகிவிட்டது).

ஆனால் வேறு பல துறைகளில் ஐக்கிய ராஜ்யம் ஏமாற்றமளித்தது. ஸ்டேட்டுகள் மணல்கொண்டு திரித்த கயிற்றால் பிணைக்கப்பட்டிருக்கின்றன—என்று சொல்லி வாஷிங்க்டன் வருந்தினர். அதிருப்தி உள் நாட்டுக் கலகத்தில் கொண்டு விடுமோ—என்பது இன்னொரு அபிப்பிராயம். காங்கிரசில் திறமையுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைவு; அதன் கௌரவம் மிகவும் குறைந்திருந்தது; சிறந்த அரசாங்கம் அமைக்க அதற்கு சக்தியில்லை. நாடு முழுவதற்குமான திட்டம் வகுக்க எல்லா ராஜ்யங்களும் சபை கூடவேண்டும் என்று தாமஸ் பெய்ன் சொல்லி வெகு காலம் ஆகிவிட்டது. அரசியல் வாதிகள் அதற்கான முயற்சியொன்றும் செய்யவில்லை. ஆனால் அது, மறைமுகமாக, சில முன்னேக்கமுள்ள வியாபாரத் தலைவர்கள் வர்த்தக விஷயங்களைப் பற்றிப் பேசக் கூடியபோது நிறைவேறிற்று.

மகாநாடு கூட்டுதல்: தேசத்தின் பலஹீனத்தையும் ராஜ்யங்களின் சச்சரவுகளையும் பற்றிச் சிந்தனையுள்ளவர்கள் மனம் புழுங்குகையில் ஒரு விசேஷ வர்த்தகப் பிரச்னை கவனத்தைக் கவர்ந்தது. மேரிலண்டையும், தெற்கே வர்ஜீனியாவையும் பிரிக்கும் பொடோமாக் ஆறு மேரிலண்டின் ஆதிக்கத்தில் இருந்தது. தங்கள் படகுப்போக்கு வரத்தில் மேரிலண்டு

தலையிடுமென்று வர்ஜீனியர்கள் பயந்தார்கள். ஆகவே அந்நதியிலும் செஸாபீக் குடாவிலும் படகுப் போக்குவரத்து உரிமைகளை விவாதிக்க இரு ராஜ்யப் பிரதிநிதிகளும் வெர்னன் மலையில் ஜ்யார்ஜ் வாஷிங்க்டனின் முன்னிலையில் 1785-ல் கூடினார்கள். மாடிஸன் மேலே கூறியக் குழப்ப நிலையால் மிகவும் வருந்தி, எல்லா ராஜ்யங்களும் கூடிப்பேசி காங்கிரஸின் நிபந்தனைகளுக்கு உட்படுவதே க்ஷேமம் என்று நம்பினான். மற்றவர்களும் அதை ஆதரிக்க, 1786-ல் ஆன்னபொலிஸ் என்னுமூரில் பெரிய சபை கூடிற்று; ஆனல் ஐந்து ராஜ்யங்களின் பிரதிநிதிகளே ஆஜராக இருந்ததால், அது முற்றிலும் வீண் முயற்சி என்று தோன்றிற்று.

அதிர்ஷ்டவசமாக, தோல்விக்கஞ்சாத அலெக்ஸாண்டர் ஹாமில்டன் அச்சபையில் ஒரு பிரதிநிதி. ராஜ்யங்களை மறுபடி அணுகி, கமிஷனர்கள் நியமிக்கும்படி அவைகளை வேண்டி, அடுத்த மே மாதம் பிலடெல்ஃபியாவில் கூட வேண்டுமென்றும், ஐக்கிய நாடுகளின் நிலையைப் பரிசீலிக்க வேண்டுமென்றும், "அமெரிக்கப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான அதிகாரங்கள் சமஷ்டி அரசாங்கத்திற்கு அளிக்கும் பொருட்டு வழிகள் செய்யவேண்டும்" என்றும் அவன் யோசனை கூறினன். இந்தத் துணிச்சலைக்கண்டு காங்கிரஸ் முதலில் வெகுண்டது; 'தலையிருக்க வாலாடுவதா?' என்பது அதன் மதிகெட்ட ஆட்சேபம்; ஆனல் வாஷிங்க்டனை வர்ஜீனியா தன் கமிஷனராகத் தேர்ந்தெடுத்திருக்கிறது என்பதை அறிந்ததும் காங்கிரஸ் அந்த யோசனையை ஒப்புக் கொண்டது. வக்கிரபுத்தியுடன் அதிகார வர்க்கத்தை எதிர்க்கும் சிறு ரோட் ஐலண்டு தவிர எல்லா ராஜ்யங்களும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தன.

ராஜ்ய சட்ட சபைகள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தன. சில சபைகளில் தீவிர சீர்திருத்தம் கோரும் விவசாயக் கோஷ்டிகளின் கை மேலோங்கியிருந்தது; அச்சபைகளில் ராஜ்யமே பிரதானம் என்போரின் பலம் அதிகம். இருந்தபோதிலும் பெரும்பாலான சபைகள் வலுவுள்ள மத்திய அரசாங்கத்தை ஆதரிக்கும்படித் தம் பிரதிநிதிகளுக்கு யோசனை கூறியனுப்பினர்; ஆகவே, பொதுவாகப் பழமையில் பற்றுதலும் நிதான முன்னேற்றத்தில் நம்பிக்கையும் உள்ளவர்கள் தீவிர தேசியவாதிகள் என்ற ரூபத்தில் ஃபிலடெல்ஃபியா சென்றார்கள். இந்த விபரீத நிலைக்கு ஒரு காரணம்: தற்கால அர்த்தத்தில் அக்காலத்தவர் அரசியல் கட்சி என்னும் கருத்தைச் சரியாய்ப் புரிந்து கொண்டிருக்க வில்லை; மேலும், முக்கியப் பிரச்னை வர்த்தகப் பிரச்னையாக இருப்பதால் வர்த்தக நிபுணர்கள் பிரதிநிதிகளாகச் செல்வதே நலம்; அதுவும் தவிர, வர்ஜீனியா காலதாமதமின்றி ஜ்யார்ஜ் வாஷிங்க்டனைத் தேர்ந்தெடுத்து

செய்தி பரவிவிட்டதால் இதர ராஜ்யங்களும் தம் பெருமைக்காக வலுவும் தீர்க்க யோசனையும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பது அவசியமாயிற்று.

1787-மே மாதம் பிரதிநிதிகள் ஒருவர் இருவராக ஃபிலடெல்ஃபியாவுக்கு வர ஆரம்பித்தார்கள், 16-ம் தேதி பென்ஜமின் ஃப்ராங்க்லின் ஊரிலிருந்த பிரதிநிதிகளுக்கு மறக்க முடியாத ஒரு விருந்து அளித்தார். விருந்தாளிகளில் பல முக்கியஸ்தர்கள் இருந்தார்கள். அக்காலத்தில் உலகத்தில் எங்கும் ஒரு விருந்துக்கூடத்தில் அவ்வளவு மேதையும் சீலமும் படைத்த பிரமுகர்களைச் சேர்ப்பது கடினம்.

புரட்சிக்குக் காரணமாயிருந்து அதிகம் போராடிய சிலர் சபைக்குப் பிரதிநிதிகளாக வரவில்லை என்பது கவனிக்கத் தக்கது. ஜெஃபெர்ஸன் ஃப்ரான்சில் இருந்தான்; பாட்ரிக் ஹென்ரி தேர்தல் விரும்பவில்லை; ஜான் ஆடம்ஸ் இங்கிலாந்தில் மந்திரியாகச் சென்றிருந்தான்; டாம் பேய்ன், ஸாந்ஆடம்ஸ், க்றிஸ்டஃபர் காட்ஸ்டன் ஆகிய அதிதீவிரவாதிகள்—தேர்ந்தெடுக்கப்படவில்லை. சுருங்கச் சொன்னல் முன்னணி சீர்திருத்தவாதிகள் போதிய எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை; பிரதிநிதிகளில் அதிகம் பேர் சொத்துள்ளவர்கள், மத்திய அரசாங்கத்திற்கு அல்லது பிராந்திய அரசாங்கத்திற்குக் கடனுக்குப் பண உதவி செய்தவர்கள் என்பதைச் சில சரித்திர ஆசிரியர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆனல் அமெரிக்காவில் பெரும்பாலோர் சொத்துள்ள நடுவகுப்பாளர்கள் என்பது நினைவிருக்க வேண்டும். அந்நாட்டில் குபேரர்கள் மிகச் சிலரே ஆயினும்; தரித்திரர்கள் இல்லையென்றே கொள்ளலாம்.

மகாசபையின் காரியக்கிரமம்: சபை உண்ணாவதான ஆலோசனைக்குழு; அவ்வாறு அனை
ஒவ்வொரு ராஜ்யமும் எத்தனைப் பிரதி
மானலும் அனுப்பலாம் என்றிருந்தபோ
ஒரு அதிசயமே; ஆனல் ஒவ்வொன்றுக்
தான் உண்டு; பல ராஜ்யங்கள் சிக்கனத்தி
நிதிகளையே அனுப்பின. மொத்தம் வ
சிலநாள் தங்கவே வந்தார்கள்; ஆகவே
39 அங்கத்தினர்களே ஆஜராயிருந்த
போன்ற சிலர் காதால் கேட்பவரும் ஏ
வரும் ஆவர். பாதிப்பேர் கல்
அநேகர் வக்கீல்கள்—அவர்கள் எ
வும் பேசப் பயின்றவர்கள்.
வார்த்தையாகக் குறித்துக் கொ
னும் மற்றவர்களும் எழுதிவைத்
களில் அநாவசியமான வர்ண

அச் சுருக்கங்களைப் படிக்கும்போது பெரும்பாலான வாதங்களில் ஒழுங்கான தர்க்க முறை இருப்பதைக் கவனித்தே ஆக வேண்டும். சபையின் நடவடிக்கைகள் ரகசியமானவை, பிரசுரிப்பதற்கில்லை, என்ற விதி மிகவும் பயனளித்தது. உடனடியான விளம்பரம் அபிப்பிராயபேதங்களைப் பெரிதாக்கியிருக்கும்; தம் கட்சிக்காரர்களின் செவிகுளிரப் பேச வேண்டும் என்ற ஆசை பல அங்கத்தினர்களின் கம்பீரமான நடு நிலையைக் கலைத்திருக்கும்; கட்சிக்காரர்களும் தம் பிரதிநிதிகளை அவ்வப்போது முடுக்கிக்கொண்டே இருந்திருப்பார்கள்.

மகாநாட்டின் சாதனைகளை வர்ணிக்கும்போது பெரிய பொதுக் கருத்துக்கள் சிலவற்றை எடுத்துரைப்பது அவசியமாகும். இசைவுள்ள பல அங்கங்கள் கொண்ட ஒரு அரசியல் யந்திரம் நிறுவப்படவேண்டும், மேலோட்டமான எளிய விதிகள் கொண்ட அரசாங்கம் உதவாது என்பதைப் பிரதிநிதிகள் அறிந்தார்கள். முதல் காரியம், இருவகைப்பட்ட அதிகார வர்க்கங்களை பாரபட்சமில்லாமலும் நாசுக்காகவும் இணங்கச் செய்யவேண்டும்: ஓரளவு சுதந்திரமான 13 ஸ்டேட்டுகள் ஏற்கெனவே அனுபவித்து வரும் ஸ்தல ஆட்சி அதிகாரம் ஒன்று; புதிதாக நிறுவப்பட்ட மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் மற்றொன்று. அந்த சிரமமான காரியத்திற்கு முன் உதாரணமாக உதவக்கூடியது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சரித்திரம் ஒன்றுதான். 1763-க்கு முன் இருந்த நிலையில் சாம்ராஜ்யத்தின் நிர்வாகத்தில் சமஷ்டி ஏற்பாடு இருந்ததாகக் கொள்ள
அதாவது, ஆட்சி முறையின் அதிகாரங்கள் மத்திய
அதிகாரங்களாகவும் சாம்ராஜ்யத்தின் அங்கங்
வண்மை அதிகாரங்களாகவும் வகுக்கப்பட்டிருந்
னிருந்த இதர சமஷ்டி தேசங்கள் பரப்பில்
ன் பரஸ்பர உறவு மிகவும் தளர்ந்திருந்
வை நீடித்திருக்கவில்லை. ஜேம்ஸ் மாடி
பொதுவாக அரசாங்க முறைகளைப்பற்
ஸ், ஸ்விட்ஸர்லண்டு, உலாந்து ஆகிய
ளைப் பற்றியும் ஆழ்ந்து படித்தவர்கள்;
ரும்பாலோர் அரசு இயல் நன்கு கற்ற
அரசாங்கத்தின் கடமைகளும் செய்
ளும் தெளிவாய்க் குறிப்பிடவேண்டு
டங்காதப் பாக்கிக் கடமைகளும்
டுகளைச் சேர்ந்ததாகக் கொள்ள
ப்படைக் கொள்கை அங்கீகரிக்கட்
த்தின் ஆற்றல்கள் புதியதாக இரு
ரப்பது பரம அவசியமாயிற்று.

இறுதிச் சாதனை: இந்த விளக்கம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும்போதே தேசிய அரசாங்கம் என்னும் யந்திரமும் அமைக்கப்பட்டு வந்தது. இங்கும் ஒரு பொது அடிப்படைக் கொள்கை ஏற்கப்பட்டது. சமமானதும் பரஸ்பர இணைப்புள்ளதுமான மூன்று வெவ்வேறு அங்கங்கள் நிறுவப்படவேண்டுமென்பது கருத்து; சட்டம் விதித்தல், செயலாக்குதல், சட்டத்தை விளக்கி நியாயம் கூறுதல் ஆகியவையே அம் மூன்று பிரிவுகள்; சமரஸமாகச் செயல்படும் விதத்தில் அவை தக்க திருத்தத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்; அதே சமயத்தில் ஒரு அங்கமும் மற்றவைகளைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் பெறக்கூடாது. குடியேற்ற நாடுகளின் அனுபவங்களிலிருந்து பிறந்தது இந்தக் கொள்கை; லாக், மான்டெஸ்க்யு (Locke, Montesquieu) முதலியோரின் நூல்கள் இக்கொள்கையை வலுப்படுத்தின; அந்நூல்கள் அங்கத்தினர் பலருக்குப் பரிச்சயமானவை. கொடுங்கோல் அரசு என்பதன் அமெரிக்க இலக்கணம் விசித்திரமானது; முன்கூறிய மூன்று அங்கங்களில் ஒன்று அதிகச் செல்வாக்குப் பெற்றால், அது கொடுங்கோல் நிலையாகக் கருதப்பட்டது. பிரிட்டிஷ் பார்லிமெண்டையும் சாம்ராஜ்ய அங்கங்களின் சட்டசபைகளையும் போலவே அமெரிக்காவும் இரண்டு பிரிவுகள் விரும்புவது இயல்பே. செயற் குழுவிலும் மேற்குழு, கீழ்க் குழு என்ற பிரிவை ஒரு சிலர் விரும்பினர்; ஆனால் பிற இடங்களில் உதாரணங்களை எடுத்துக்காட்டி அந்த யோசனை நிராகரிக்கப்பட்டது.

சிறு ராஜ்யங்களின் அதிகாரங்கள், பெரிய ராஜ்யங்களின் அதிகாரங்கள் என்ற இரு வகையாக மகாநாட்டில் அடிப்படையான பேதம் இருந்தது; இரு அம்சங்கள் கொண்ட சபை என்ற தீர்மானம் அப்பிரச்னையைத் தீர்க்க ஓரளவு உதவிற்று. ராஜ்ய ஐக்கியத்தில் இருந்ததுபோலவே எல்லா ஸ்டேட்டுகளுக்கும் சமசக்தி இருக்கவேண்டுமென்பது சிறு ராஜ்யங்களின் வாதம்; அதாவது விஸ்தீர்ணம், குறைவான கனெக்டிகட் அல்லது மேரிலண்டு என்னும் குள்ளர்கள் அரக்கர்களாகிய நியூயார்க் அல்லது வர்ஜீனியாவின் முன் செயலற்றுப் போகக் கூடாது. பெரிய ராஜ்யங்களோ பரப்பு, ஜனத்தொகை, செல்வம் ஆகியவற்றுடன் ஒப்பிட்டே விகிதப்படி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று வாதாடின.

கடைசி சமரஸ ஒப்பந்தப்படி, ஸெனெட் சபையில் சிறு ஸ்டேட்டுகளும் பெரிய ஸ்டேட்டுகளும் சமமான பிரதிநிதித்துவம் பெற்றன; ஆனால் பிரதிநிதி சபையில் ஜனத் தொகையின் விகிதப்படி இடங்கள் அளிக்கப்பட்டன. அடுத்தபடியாக செயற்குழு விஷயத்தில் தேர்தல் முறையைப் பற்றி சிக்கலான பிரச்னைகள் கிளம்பின. ஜனாதிபதியைக் காங்கிரஸ் தேர்ந்

தெடுப்பதா? அப்படிச் செய்தால் அவர் சட்டசபைக்குக் க
மைப்பட்டவராக ஆகலாம்; அப்பொழுது முன் கூறிய ச
எடை நிலை பங்கப்படும். மக்களின் நேரிடை வோட்டினு
அவரைத் தேர்ந்தெடுப்பதா? ஐக்கிய நாட்டு மக்கள் மிக
பரவலாகச் சிதறிக் கிடந்தார்கள்; அப்பிரதேசம் பெருகி.
கொண்டும் வந்தது; போக்குவரத்து சாதனங்களும் திருப்தி
கரமாக இல்லை. அந்நிலையில் குறைவான எண்ணிக்கையில்
அபேட்சகர்கள் நிற்பது கடினமாகும்; பலர் நின்றால் எந்த
ஒரு அபேட்சகனும் பெரும்பாலான வோட்டர்களைச் சந்தித்துப்
பேச முடியாது. கடைசியாக, ஒரு தேர்தல் பரிசீலனைக் குழு
அமைக்கும் யோசனை அங்கீகரிக்கப்பட்டது. ஒவ்வொரு
ஸ்டேட்டிலும் எத்தனை ஸெனெட் அங்கத்தினர்களும், பிரதி
நிதி சபை அங்கத்தினர்களும் இருந்தார்களோ, மொத்தம்
அத்தனை நியமன அங்கத்தினர்கள் இருப்பது என்று தீர்மானிக்
கப்பட்டது. ஆனால் இந்தத் திட்டம் ஒரு தோஷத்துடன்
பிறந்தது; உடனே கிளம்பிய கட்சி-அரசியல் என்னும்
பூதத்தை அது எதிர்பார்க்கவில்லை. மூன்றாவது அங்கம் சம்பந்
தப்பட்டவரை, சமஷ்டி அரசாங்கத்தின் நீதிபதிகளை ஜனாதிபதி
செனெட்டின் அபிப்பிராயம் தெரிந்துகொண்டு நியமிப்பது
என்றும், நீதிபதிகள் முறையாக நடந்துகொண்டால் உத்தி
யோகம் அவர்களுடைய ஆயுட் காலத்திற்கு நீடித்திருக்கு
மென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நிர்மாணத் திட்டத்தை இயற்றியவரின் சமயோசித அறி
வையும் விவேகத்தையும் நாம் போற்றவேண்டும். மனிதன்
தன் யத்தனத்தால் அமைத்த மிகச் சிக்கலான ஆட்சி முறை
அது; ஆனால் மூன்று திசைகளிலிருந்து இழுக்கப்பட்ட அந்தத்
தூண் செங்குத்தாக நின்றது; அந்நிலைக்கு ஆபத்து ஏற்படாத
பாதுகாப்புக்களும் இருந்தன. மூன்று அங்கங்களும் சுவாதீனம்
பெற்றவை; கூடவே பரஸ்பர இணைப்புப் பெற்றவை. மேலும்
ஒன்றின் பிழையை மற்றொன்று கண்டிக்கும் சக்தி பெற்றவை.
காங்கிரஸின் தீர்மானங்கள் ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்றே
சட்டமாக முடியும்; அதற்கெதிராக, ஜனாதிபதி விரும்பும் பல
உத்தியோக நியமனங்களும் எல்லா உடன்படிக்கைகளும்
ஸெனெட்டின் சம்மதத்தைப் பெறவேண்டும்; மேலும், காங்
கிரஸ் ஜனாதிபதி மீது குறிப்பிட்ட குற்றம் சாட்டி, ருஜுப்
படுத்தி, அவரை விலக்கமுடியும். நீதிஸ்தலம் எல்லா வழக்கு
களையும் விசாரித்து, தொன்றுதொட்டு வரும் அடிப்படை நீதி
முறைகளையும் சட்டசபை இயற்றிய சட்டங்களையும் தெளிவுப்
படுத்தவேண்டும். நீதிபதிகள் ஜனாதிபதியின் நியமனமும்
ஸெனெட்டின் சம்மதமும் பெறவேண்டும்; ஆனால் காங்கிரஸ்
அவர்கள் மேல் குற்றம் சாட்டி விசாரித்து அவர்களை விலக்க
லாம். செனெட் அங்கத்தினர்கள் சட்டசபைகளால் ஆறு

வருஷ காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதாலும், ஜனாதிபதி
தேர்தல்-குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவதாலும், நீதிபதிகள்
அரசாங்க நியமனம் பெறுவதாலும், காங்கிரஸின் கீழ்ச் சபை
யைத் தவிர அரசாங்கத்தின் ஒரு அம்சத்திலும் பொது மக்கள்
தலையிடுவதற்கில்லை. அதுவும் தவிர, வெவ்வேறு சர்க்கார்
உத்தியோகஸ்தர்களின் பதவிக் காலம் இரண்டு வருஷம் முதல்
பூர்ண ஆயுள்வரை இருப்பதால், திடீரென்று பழையன எல்
லாம் அழிதல், முற்றும் புதியன வருதல் என்பதும் சாத்திய
மில்லை—பெரும் புரட்சி ஏற்பட்டால் தவிர.

சில அரசியல் ஆராய்ச்சியாளர்கள் மகாநாட்டின் முக்கிய
மான முடிவுகள் நிலச்சுவான்தார்களுக்கும், வணிகர்களுக்கும்,
லேவாதேவி செய்யும் வட்டிக்கடைக்காரர்களுக்கும் சலுகை
கள் காட்டுவதாகக்கூறி, அது அரசியல் மகாநாடல்ல, பொரு
ளாதார மகாநாடு என்று குறை கூறுவதுண்டு. ஆனால், முன்
கூறியபடி, அக்காலத்து அமெரிக்கர் பெரும்பாலும் குடியான
வர்கள், தோட்டக்காரர்கள், கடைக்காரர்கள், தொழில்களில்
ஈடுபட்டவர்கள், சௌகரியமாய் வாழ்பவர்கள், அவர்களி
டையே வகுப்புப் பிரிவினை அதிகமில்லை, அப்படியாக இருந்தா
லும் இலேசாக இருந்தது என்பதை நினைவுபடுத்திக்கொள்ள
வேண்டும். மேலும், ஆபத்துக்கிடமில்லாத க்ஷேமநிலையால்
அனைவருக்கும் நன்மையே. பொருளாதாரக்குழு என்னும்
வியாக்கியானம் சிறிதளவு ஏற்கக்கூடியது எனினும், அந்த அம்
சத்தை மிகைப்படுத்தலாகாது.

சமஷ்டி அரசாங்கத்திற்குச் சொத்து உரிமையையும் ஒழுங்கு
முறையையும் காக்கும் அளவுக்கு வலு அளித்த மகாநாட்டுத்
தீர்மானங்கள், வேறு சூழ்நிலையில், பேராபத்திற்குக் காரண
மாக இருந்திருக்கக்கூடும். ஆனால் பெரும்பாலான தீர்மானங்
கள் நிதானமாக யோசித்தே செய்யப்பட்டன. வெகுநாட்க
ளாகச் செலுத்தப்படாத தேசக் கடன்களைச் செலுத்தவும்,
சர்க்காரின் யோக்கியதையை (நாணயத்தை) மறுபடி நிலை
நிறுத்தவும், பொது நன்மைக்காக நிதி திரட்டுவதற்காகவும்
என்றே சமஷ்டி அரசாங்கத்திற்கு வரி விதிக்கும் சுவாதீனம்
பூரணமாக அளிக்கப்பட்டது. அது பணம் கடன் வாங்கலாம்,
ஒரே சீரான சுங்கவரிகள், கட்டணங்கள் முதலியன விதிக்க
லாம்; கடனடைக்க முடியாதோருக்கான 'திவாலா' சட்டங்கள்
ஒரு சீராக விதிக்கலாம்; நாணயம் முத்திரையிடவும், நிறுத்த
லளவை முகத்தலளவை முதலியவற்றிற்கான ஒருசீர் அளவு
கள் நிர்ணயிக்கவும், பேடென்டுகளும் பதிப்புரிமைகளும்
அளிக்கவும், அஞ்சல் நிலையங்கள், அஞ்சல்சாலைகள் முதலியன
அமைக்கவும் அதற்கதிகாரம் கொடுக்கப்பட்டது. தரைப்படை
யும் கடற்படையும் திரட்டி நடத்தும் ஆற்றல் அதற்குண்டு.
ஸ்டேட்டுகளுக்கிடையே நடைபெறும் வியாபாரத்தை அது

லாபகரமாய் மாற்றியமைக்கலாம். (அமெரிக்க) இந்தியருடன் நடவடிக்கைகள், சர்வதேச உறவுகள், யுத்த விஷயங்கள் ஆகியவற்றின் நிர்வாகம் முழுவதும் அதன் கையில் இருந்தன. எந்த ராஜ்யத்திலாவது உள்நாட்டுக் குழப்பம் உண்டாகி, சட்டசபையோ கவர்னரோ சமஷ்டி அரசாங்கத்தின் உதவியை நாடினால் அது ஒழுங்கமைப்புக்காகத் தலையிடலாம். அயல் நாட்டாருக்கு அமெரிக்கப் பிரஜை (Naturalization) என்ற உரிமையளிப்பதற்கான சட்டங்கள் அது விதிக்கலாம். பொதுவான பூ-பாகங்களை நிர்வகித்து, அது முற்றிலும் பழைய ஸ்டேட்டுகளுக்கு சமமாகவே புதிய ஸ்டேட்டுகளை சேர்த்துக்கொள்ளலாம். தேசிய அரசாங்கம் சக்தியுள்ளதாக அமைந்தது; நிர்மாணத் திட்டத்திற்கு ஸுப்ரீம் கோர்ட்டு அவ்வப்போது அளித்த விளக்கத் தீர்ப்புகளால் அரசாங்கத்தின் சக்தி மேலும் அதிகரித்தது. முன்பிருந்த ராஜ்யக்கூட்டின் பலஹீனத்தால் உண்டான அதிருப்தியே, எதிரிடையான இவ்வளவு அதிக சக்தியை மத்திய சர்க்காருக்கு அளித்தது.

அதேசமயத்தில், ராஜ்யங்களும் ஆற்றலுடன்வளர்ந்தன. ஸ்தல ஆட்சி அதிகாரங்கள் அனேகத்தும் அவற்றின் கையிலிருந்தன; மக்களின் தினசரி வாழ்க்கையைப் பெரும்பாலும் அவைதான் நிர்ணயித்தன. பள்ளிக்கூடங்கள், உள்ளூர் நியாயஸ்தலங்கள், போலீஸ் இலாகா, முனிசிபல் விவகாரங்கள், பாங்குகள், கம்பெனிகள் முதலியவற்றின் இணைப்பு, பாலம், சாலை, வாய்க்கால் முதலியவற்றிற்கான நிர்மாண இலாகா—இவையும் இன்னும் பலவும் ராஜ்ய அதிகாரத்தில் இருந்தன. தேர்தல் எவ்வாறு நடைபெறுவது, வாக்காளர் எவர் என்பதை ராஜ்யங்கள் தீர்மானிக்கும். தினசரி வாழ்க்கையில் மனிதனின் உரிமைகளைக் காப்பது அவற்றின் பொறுப்பு. வெகுகாலம் வரை பலர் தாம் அமெரிக்கப் பிரஜை என்பதை உணர்வதற்கு முன் தாம் ஜியார்ஜியர்கள், அல்லது பென்ஸில்வேனியர்கள் என்ற உணர்ச்சியைத்தான் பெற்றிருந்தார்கள்.

கடைசியாக, புதிய தேச அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களுக்குக் காரியரூபம் எவ்வாறு அளிப்பது என்ற பிரச்னையையும் மகாநாடு தர்க்கித்தது. பழைய ஐக்கிய ராஜ்யத்தினிடமும், போதுமான அளவில் இல்லாவிட்டாலும், பல அதிகாரங்கள், எழுத்தளவில் இருந்தன. ஆனால், பயன் என்ன? ஸ்டேட்டுகள் அவற்றை மதிக்காததால் அவை இருக்கவில்லையென்றே கொள்ளலாம். அதே எதிர்ப்பும் மறுபடி தலை தூக்காமலிருக்க என்ன செய்வது? துவக்கத்தில் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் தடியடி நியாயந்தான் சரி என்று விடையளித்தனர். ஐக்கிய அரசாங்கத்தின் படையைக்கொண்டு நிலைநிறுத்த முடியாத ஸ்டேட்டைத் தண்டிக்க காங்கிரசுக்கு அதிகாரம் வேண்டுமென்று வர்ஜீனியா யோசனை

கூறிற்று. அது அடிப்படையில் தவறு; ஏனெனில் படைபலம் சர்வதேச சட்டத்தின் சாதனங்களில் ஒன்றாகும்; நவீனமுறையிலும் அது ஆபத்தானது—உள்நாட்டுப்போரில் கொண்டுவிடும்.

பின், செய்யக்கூடியதுதான் என்ன? விவாதங்கள் நடக்க நடக்க புதியதும் முற்றிலும் சமரசமானதுமான வழி பிறந்தது. மத்திய அரசாங்கம் ஸ்டேட் அரசாங்கத்தைத் தாண்டி அப்பாலிருக்கும் ஸ்டேட் மக்களுடன் நேரடி விவகாரம் வைத்துக்கொள்வது நலம் என்ற தீர்மானமே அவ்வழி. நாட்டின் மக்கள் அனைவரின் சார்பிலும் சட்டம் இயற்ற வேண்டும் என்பது அதன் கருத்து. இவ்விஷயமாக மாடிஸன் ஜெஃபர்ஸனுக்கு எழுதியதாவது: "எல்லா அங்கத்தினர்களும் சமஷ்டி சர்க்காரின் சட்டத்திற்குத் தாமே கீழ்ப்படிவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. கட்டாயச் சட்டம் விவகாரத்திற்குதவாது; கட்டாயம் செய்தால் நல்லவர் கெட்டவர் அனைவருக்கும் சமமான துன்பம் விளையும்; பொதுவாக, உள்நாட்டுக் கலகந்தான் தினசரி நிகழ்ச்சியாக இருக்கும். ஆகவே, ஸ்டேட் அமைப்பைப் புறக்கணித்துத் தனி மக்களுடன் செயல் உறவு நிறுவுதல் என்ற யோசனை ஏற்கப்பட்டது..." நிர்மாணத் திட்டத்தின் மிக முக்கியப் பகுதியாவது

> "இந்த நிர்மாணத் திட்டமும், அதைத்தொடர்ந்து இயற்றப்படும் ஐக்கிய நாட்டுச் சட்டங்களும், ஐக்கிய நாட்டின் அதிகாரத்தின் கீழ் அங்கீகரிக்கப்படும் உடன்படிக்கைகளும் நாட்டின் இறுதிச் சட்டங்களாகும்; ஸ்டேட் அரசாங்கச் சட்டங்கள் முரணாக இருந்த நிலையிலும், ஸ்டேட்டுகளின் நீதிபதிகள் மேற்கூறிய சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர் ஆவார்கள்."

இந்த நிபந்தனைப்படி ஐக்கிய நாட்டின் சட்டங்கள் மத்திய அரசாங்க நீதிஸ்தலத்தில் செல்வதுபோல், ராஜ்ய நீதிஸ்தலங்களில் அங்குள்ள நீதிபதிகள் விசாரிக்கும் வழக்குகளிலும் செல்லும். இந்தத் தீர்மானத்தால் நிர்மாணத் திட்டம், அது வேறு வழியில் பெற்றிருக்க முடியாத, புது உயிர் பெற்றது; அதுமாத்திரமல்ல, திட்டம் அமைப்பதில் விவகார புத்தி கூர்மையும், தீர்க்க தரிசனமும், பொது அறிவும், அருள் அறிவும் கலந்திருக்கின்றன என்பதற்கு இது ஒரு சான்றுமாகும்.

அங்கத்தினர்களில் பெரும்பாலோர் சபையின் சாதனைகளைப்பற்றி மிகவும் திருப்தியடைந்தனர்; மூன்றுபேர் மாத்திரம் கையொப்பமிட மறுத்தார்கள். வயது முதிர்ந்த ஃப்ராங்க்லின் "திட்டத்தின் எல்லாப் பாகங்களையும் நான் பிரியப்படாவிட்டாலும், மொத்தத்தில் இந்த அளவுக்கு நம் லட்சியத்தை நெருங்கியதே ஆச்சரியம்" என்றார். குறை கூறுபவர்களிடம் "உங்களுடைய சொந்தக் குறைகளைச் சற்று ஆராய்ந்து

பாருங்கள்!'' என்று சொல்லி அப்பத்திரத்தை ஏற்குமாறு கோரினர். துணிச்சலான இளம் அலெக்ஸாண்டர் ஹாமில்டனின் அபிப்பிராயமும் சுமாராக அதுவே. உண்மையில் அவன் மத்திய அரசாங்கத்தின் வசம் இன்னும் அதிக அதிகாரங்கள் இருக்கவேண்டுமென்றும், அங்கத்தினர்களுள் பிரபுக்கள் அதிகம் இருக்கவேண்டுமென்றும் விரும்பினன்; ஆனல் ஒரு புறம் சீர்கேடும் குழப்பமும் பயமுறுத்துகின்றன, மறுபுறம் ஓரளவு ஒழுங்கும் முன்னேற்றமும் அழைக்கின்றன, அந்நிலையில் உண்மையான தேசாபிமானி தன் அபிப்பிராயங்களைச் சற்று தளர்த்தத்தான் வேண்டும்—எனபதையும் அவன் உணர்ந்தான். பன்னிரண்டு ராஜ்யங்களின் பிரதிநிதிகள் கையொப்பமிட முன்வந்தார்கள்.

சட்ட பூர்வமான உறுதிப்பாடு: ஆனல் புது நிர்மாணத் திட்டத்தை ராஜ்யங்கள் ஒப்புக்கொள்ளுமா? சாமான்ய மனிதர்களுக்குப் பல பயங்கள் தோன்றின—சக்திவாய்ந்த மத்திய அரசாங்கம் துன்பப்படுத்துமோ? அதிக வரிகள் விதித்துக் கொல்லுமோ? அயல்நாட்டுப் போர்களில் இழுத்துச் செல்லுமோ? பதின்மூன்று ராஜ்யங்களில் குறைந்தது ஒன்பது ராஜ்யங்கள் உறுதி கூறினல் திட்டம் அமுலுக்கு வரும் என்று மகாநாடு தீர்மானித்திருந்தது. 1787-ம் ஆண்டு முடிவதற்குள் டெலாவேர், பென்ஸில்வேனியா, நியூஜெர்ஸி ஆகிய மூன்றும் சம்மதித்தன; இன்னும் ஆறு பின் தொடருமா?...இவ்வாறு நினைத்துப் புதிய திட்டத்தை ஆக்கியவர்கள் கவலைப்பட்டனர்.

உறுதிப்பாடு பற்றிய சச்சரவில் இரண்டு கட்சிகள் பிறந்தன—சமஷ்டி வாதிகள், சமஷ்டி எதிரிகள், அதாவது வலுவுள்ள மத்திய அரசாங்கத்தை விரும்பியவர்களும், தளர்ச்சியான ராஜ்ய சங்கத்தை விரும்பியவர்களும். பத்திரிகைகளிலும், சட்ட சபைகளிலும், ஸ்டேட்டு மகாநாடுகளிலும், இந்த விவாதம் காரசாரமாய்த் தொடர்ந்து நடந்தது. இருதரப்பிலும் ஆவேசத்துடன் காரணங்கள் கூறப்பட்டன. இறுதியில் பத்து ராஜ்யங்கள் சம்மதித்தன.

1788 ஜூலை நான்காம் தேதி, புது அரசாங்கத்தின் வருகையைக் கொண்டாட ஃபிலடெல்ஃபியா ஒரு பெரிய ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தது. ஜனுதிபதியையும் காங்கிரஸ் அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்கவும் 1789-ன் வசந்த காலத்தில் புது அரசாங்கத்தைத் துவக்கி வைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தலைவன் யார் என்பதைப்பற்றி யாருக்கும் சந்தேகமில்லை; அனைவரும் ஒரு பெயரைத்தான் நினைத்தார்கள்; அதுதான் ஜ்யார்ஜ் வாஷிங்க்டன்.

இவ்வாறு, சமீப வருஷங்களின் இருளுக்குப்பின், உதய சூரிய ஜோதியை நாடு கண்டு களித்தது. படோமாக் நதிக்கரையிலுள்ள தம் அழகிய தோட்டத்திலிருந்து புறப்பட்டு அரசாங்கம்

என்னும் குதிரையின் லகானைப் பிடிப்பதற்காக வாஷிங்க்டன் நியூயார்க் சென்றது ஒரு கண்கொள்ளாக் காட்சி. எளிமையும் எழிலும் கலந்த உணர்ச்சி உள்ளத்தை உலுக்கும் அந்த ஊர்வலம் அமெரிக்கச் சரித்திரத்தின் மஞ்சுகரமான சம்பவங்களில் ஒன்று. ஏப்ரல் 30-ம் தேதி, பிரம்மாண்டமான கூட்டத்தின் முன்னிலையில் 'வால்' வீதியிலுள்ள சமஷ்டி மண்டபத்தின் மாடி முகப்பில் அவர் விசுவாசப் பிரமாணம் செய்வதற்காக நின்றார். நியூயார்க் சான்ஸலர் அச்சடங்கை நிறைவேற்றி, கீழே இருக்கும் மக்களை நோக்கி, ''ஐக்கிய நாடுகளின் ஜனுதிபதியாகிய ஜ்யார்ஜ் வாஷிங்க்டன் நீடூழி வாழ்க!'' என்று கோஷித்தார். அப் பெருங்கூட்டம் இடிமுழக்கம் போன்ற ஆரவாரம் கிளப்பிற்று.

1789-ல் அமெரிக்கா: தன் அரசியல் வாழ்க்கையை ஆரம்பிக்க இருந்த ஜனநாயக அமெரிக்கா ஆவலும் சக்தியும் நிரைந்த நாடு. வாஷிங்க்டன் பதவியேற்ற மறு வருஷம் எடுத்த கணக்குப்படி நாட்டின் ஜனத்தொகை சுமார் நான்கு மிலியன் (நாற்பது லட்சம்); அவர்களுள் சுமார் மூன்றரை மிலியன் பேர் வெள்ளையர்கள். பெரும்பாலானவர் கிராமங்களில் வசிப்பவர்கள். பட்டணம் என்று சொல்லக் கூடியவை ஐந்தே—ஃபிலடெல்ஃபியா (42,000); நியூயார்க் (33,000); பாஸ்டன் (18,000); சார்ல்ஸ்டன் (16,000); பால்டிமோர் (13,000). பெரும்பாலோர் தனிக் கழனிகளிலும் தோட்டங்களிலும் அல்லது சிறு கிராமங்களிலும் வசித்தார்கள். போக்குவரத்து வசதி மிகக் குறைவு; தாமதமும் அதிகம்; சாலைகள் மோசமானவை, அஞ்சல் வண்டிகள் அசௌகர்யமானவை, படகுகள் கால நிர்ணயமற்றவை. ஆனல், ஆங்காங்கே வரி வசூலிக்கும் நெடுஞ்சாலைகள் (Pikes) உண்டாகிக் கொண்டிருந்தன; ஃபிலடெல்ஃபியாவிலிருந்து லங்காஸ்டர் வரை ஒரு சிறந்த சாலை அமைக்கப்பட்டது; வாய்க்கால்களும் வெட்டப்பட்டன. பெரும்பாலான குடிகள் தனிமையில் காலம் கழித்தார்கள்—பள்ளிக்கூடங்கள் மட்டமானவை, புத்தகங்கள் குறைவு, பத்திரிகைகள் இல்லையெனலாம். ஐரோப்பிய யாத்திரிகர்கள் அக்காலத்தில் அமெரிக்காவைப் பார்வையிட்டிருந்தால் முரட்டுத்தனம், சௌகரியக் குறைவு, நாகரிகக் குறைவு முதலியன அவர்கள் கண்ணில் தென்பட்டிருக்கும்; கூடவே சுதந்திர உணர்ச்சி, பொருளாதார நிறைவு, எல்லையற்ற தன்னம்பிக்கை முதலியனவும் அவர்கள் கவனித்திருப்பார்கள். இருந்தபோதிலும் கலாசாரத்திலும் பொருள் நிலையிலும் அமெரிக்கரின் நிலை விருத்தியடைந்து வந்தது.

ஏனெனில் நாடு உரத்துடன் வளர்ந்து கொண்டிருந்தது. 'பழைய உலக'த்திலிருந்து ஜீவனோபாயத்திற்காகக் குடியிறங்கும் ஜனங்களின் எண்ணிக்கையைக் கண்டு அமெரிக்கர் மலைத்து

மேற்கு ஐரோப்பா பாதியளவுக்குக் காலியாகியிருக்குமோ என்று நினைத்தனர். சொற்ப விலைக்கு நல்ல பண்ணைகள் கிடைத்தன; கூலி வேலைக்கு நல்ல கிராக்கி இருந்ததால் கணிசமான ஆதாயம் கிடைத்தது. இவ்வாறு அயல் நாட்டார் வருவதை அரசாங்கம் விரும்பிற்று; அமெரிக்கருக்கு முன்னிலும் சிறந்த விவசாய முறைகளைக் கற்பிக்க திறமையுள்ள பிரிட்டிஷ் குடியானவர்களை வரவழைக்க வேண்டுமென்று வாஷிங்க்டன் குறிப்பாகப் பிரியப்பட்டார். நியூயார்க்கின் வடபகுதியில் உள்ள மோஹாக், ஜெனெஸி பள்ளத்தாக்குகள், வடக்கு பென்ஸில்வேனியாவில் ஸஸ்க்வி ஹான்ன, வர்ஜீனியாவில் ஷெனண்டோவா ஆகிய செழுமையான இடங்கள் சீக்கிரத்தில் விசாலமான கோதுமை வயல்களாக மாறின. நியூ இங்கிலாந்து வாசிகளும் பென்ஸில்வேனியர்களும் ஓஹியோப் பக்கம் நகர்ந்தார்கள்; வர்ஜீனியர்களும் கரோலினியர்களும் கென்டக்கியிலும் டெனெஸியிலும் பிரவேசித்தார்கள்.

கைத்தொழிற்சாலைகளும் வளர்ந்தன. அரசாங்கம் உதவி அளித்து அவற்றை ஊக்கப்படுத்திற்று. மாஸசுஸெட்ஸிலும் ரோட் ஐலண்டிலும் முக்கியமான நெசவுச்சாலைகள் கிளம்பின; அவை திருட்டுத்தனமாய் ஆங்கில நெசவு யந்திரங்களை வரவழைத்து நகல்கள் தயாரித்தன. கனெக்டிகட் தகர சாமான்களில் கவனம் செலுத்திற்று. நடுப்பிரதேச ஸ்டேட்டுகள் காகிதம், கண்ணாடி, இரும்பு, இம்மூன்றில் அதிக அக்கறை காட்டின. ஆனால் அமெரிக்காவில் தனிப்பட்ட தொழில் பட்டணங்கள் அக்காலத்தில் உண்டாகவில்லை; எவரும் மேற்கூறிய தொழில்களில் மாத்திரம் தம் முழு நேரத்தையும் கழிக்கவில்லை. உண்மையில் செயற்கைப் பொருள்கள் பெரும்பாலும் வீடுகளிலேயே தயாரிக்கப்பட்டன. விவசாய வேலை நடைபெறமுடியாத பனிக் காலத்தில், நீண்ட மாலை நேரத்தில் குடியானவர்கள் முரட்டுத் துணிகள் நெய்யலாம். தோல் சாமான்கள், மண்பாண்டங்கள், எளிய இரும்புக் கருவிகள், மரச்சாமான்கள். மேபிள் மரச்சாறிலிருந்து சர்க்கரை, முதலியன தயாரிக்கலாம். தனித் தொழிற் சாலைகள் ஏற்பட்டபோது, முதலாளி தன் ஆட்களோடுகூடத் தானும் வேலை செய்தான்.

கப்பல் தொழில் விருத்தியடையத் தொடங்கிற்று; இங்கிலாந்துக்கு அடுத்து, ஐக்கிய நாடு கடலில் இரண்டாம் இடம் வகிக்க ஆரம்பித்தது. கரையோரப் போக்குவரத்து, 'காட்' என்னும் மீன் பிடித்தல், திமிங்கில வேட்டை, ஐரோப்பாவுக்கு ரொட்டி வகைகள், புகையிலை, மரத்துண்டுகள், மற்றும் பல சரக்குகள் எடுத்துச் செல்லுதல், ஆகிய காரியங்களுக்காகப் பெரும் பெருந்தொகைகளில் கப்பல்கள் கட்டப்பட்டன. புரட்சிப் போர் முடிவடைந்த உடனேயே, "எம்ப்ரெஸ்"

என்னும் கப்பல் சைனுவில் கான்டன் நகர் வரை சென்று கிழக்கு தேச வியாபாரத்தைப் பற்றி நம்பிக்கையளிக்கும் செய்திகள் திரட்டிவந்து நியூ இங்கிலாந்து வாசிகளுக்கு உற்சாகமூட்டியது. ஒரு புது வியாபாரம் பிறந்து வளர்ந்தது. 1787-ல் நகூத்திரப்புள்ளிகளும் கோடுகளும் கொண்ட அமெரிக்கக் கொடி தாங்கிய ஐந்து கப்பல்கள் சைனுவுக்குச் செல்லும் அளவுக்கு வர்த்தகம் வளர்ந்திருந்தது. கிழக்கு தேசத்தார் ரோம சருமங்கள் வாங்க விரும்பினர்; பாஸ்டன் வணிகர்கள் சிலர் வட மேற்குக் கரைக்கு கப்பல்கள் அனுப்பி இந்தியர்களிடமிருந்து சருமங்கள் வாங்கி சைனுவில் கொண்டு விற்று, அங்கிருந்து தேயிலையும், பட்டுகளும் வாங்கிவரத் தீர்மானித்தனர். அம்முயற்சி வெற்றியளித்தது. அதுமாத்திரமல்ல; அம்முயற்சியில் 'கொலம்பியா' கப்பலின் தலைவன், ராபர்ட் க்ரே, வட பசிஃபிக் கரையில் ஒரு பெரியநதியில் தன் கப்பலைச் செலுத்தி, நாட்டை ஆராய்ந்து, அந்நதிக்கு 'கொலம்பியா' என்று பெயரிட்டான்; அக்காரணத்தால் அப்பிரதேசம், ஆரிகன் (Oregon), ஐக்கிய நாடுகளுக்குச் சொந்தமாயிற்று.

அமெரிக்கரின் ஆற்றலும் சஞ்சல சுபாவமும் அவர்களை மேலும் மேலும் மேற்கே இழுத்துச் சென்றன. ஒக் மரங்கள் நிறைந்த ஓஹியோவிலிருந்து பைன் மரக் காடுகள் போர்த்திய ஜ்யார்ஜியா வரை, கோடாரிகளின் ஒலிமுழங்க, துணிவுள்ள மக்கள் புது வாழ்க்கையை நோக்கி முன்னேறினர். அவர்களுடைய வெண் கூடுள்ள மாட்டு வண்டிகள் அல்லெகெனி மலைச்சரிவுகளில் ஊர்ந்து ஏறின; கம்பர்லண்டுக் கணவாய் வழியாகத் தோலாடை உடுத்திய வேடர்கள் சென்றார்கள்; குடியானவர்களும் வண்டிகளில் கலப்பை முதலான கருவிகளும், விதைகளும் வீட்டுச் சாமான்களும் ஏற்றிக்கொண்டு, கால்நடைகளை ஓட்டிக்கொண்டு சென்றனர். செழிப்பான நிலத்தில் ஹிக்கரி, வால்நட் முதலான மரங்களை அழித்து, அந்த எல்லைப்புறக் குடியானவர்கள் பலகை வீடுகள் எழுப்பி, இடைச்சந்துகளில் களிமண் அப்பி, ஒக் மர மிலாறுகளால் கூரை வேய்ந்தார்கள். காலப்போக்கில், அதிக எண்ணிக்கையில் அமெரிக்கப் பரிசல்களும், தட்டைப் படகுகளும் ஓஹியோ, மிஸிஸிபி நதிகளில் மிதந்து இறங்கி நியூ ஆர்லீன்ஸ் பட்டணத்திற்குச் சென்றன; அவை சுமந்து சென்ற சரக்குகள்: தானியங்கள், உப்பிட்ட இறைச்சிகள், பொடாஷ் (சாம்பல் காரம்). அதேபோல் காலப்போக்கில் ஓஹியோ நதியில் ஸின்ஸினடி, டெனெஸி ராஜ்யத்தில் நாக்ஸ்வில் (Knoxville), கென்டக்கியில் லெக்ஸிங்க்டன் ஆகிய மேற்கத்தியப் பட்டணங்கள் அதிக முக்கியத்தன்மை பெற்றன. ஆனால் அது இன்னலற்ற வெற்றியல்ல—ஆபத்துகள் பல இருந்தன. செவ்விந்தியரின் தாக்குதல்கள், குளிர் ஜ்வரம்,

காட்டு மிருகங்கள், எல்லைப்புறக் கொள்ளைக்காரர்கள், முதலான துன்பங்கள் பயங்கரமானவை; நோய்கள், தரித்திரம், கஷ்ட ஜீவனம் முதலியனவும் பலரைக் கொன்றன. அப்படியிருந்தும், பத்தாயிரம் சின்னஞ்சிறு ஓடைகள் போல குடியேற்றக் குடும்பங்கள் கசிந்துவடிந்து அக்காடுகளில் நிலையாயின. இன்னும் எல்லைக்கோடு ஸ்திரப்படாமல் மேற்கே நகர்ந்துகொண்டே சென்றது; ''அமெரிக்க சாம்ராஜ்யம் மேற்கு நோக்கி வளரும்'' என்று பிஷப் பெர்க்லி அடி நாட்களில் கூறியது உண்மையாகிக் கொண்டிருந்தது.

அத்தியாயம் 6

ஜனநாயகம் உருவெடுக்கிறது

வாஷிங்க்டன் கீழ் அரசாங்க அமைப்பு: 1789-ல் நியூயார்க் தற்காலிகத் தேசத் தலைநகராக உருவாகிக் கொண்டிருந்தது. வால் தெரு, 'ப்ராட்' தெருக்களிலமைந்த சமஷ்டி மண்டபத்தில் காங்கிரஸ் சபை கூடிற்று. பிற்காலத்தில் நாட்டின் செல்வத் தலைநகராக அமைய இருந்த வால் தெருவில்தான் நாட்டின் முதல் அரசியல் தலைமைக் காரியாலயம் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. தர்பார்களும் நாத்தனர் கொண்டாட்டங்களும் அங்கு நடத்தப்பட்டன. சபையில் விவாதம் நடக்கும்போது பொதுமக்கள் ஆஜராவதற்கு அனுமதி கிடையாது; ஆனால் அவர்கள் வெளியே தெருக்களில் கும்பல்களாகக் கூடி அன்றைய முக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசுவது உண்டு.

புது அரசாங்கத்திற்கு வாஷிங்க்டன் போன்ற ஒரு விவேகி தலைமை வழிகாட்டி நடத்துதல் இன்றியமையாதது. அரசியல் துறையில் சற்பனைச் சக்தியோ, மகத்தான புது யோசனைகள் கூறும் சக்தியோ அவரிடம் கிடையாது; அவர் எழுத்துநடை அலங்காரமற்று வறண்டிருக்கும், பேச்சிலும் அவர் வல்லவரல்ல; அரசாங்க நிர்வாக நுணுக்கங்களும் அவருக்குத் தெரியாதெனலாம். ஆனால் மக்கள் அவரிடம் கீழ்ப்படிந்தனர், பயபக்தியே கொண்டனர்; தேச ஐக்கியம் என்ற கருத்தின் உருவாகவே அவரை பாவித்தனர். எல்லாக் கட்சிகளிலும் பகுதிகளிலும் பொறுப்பறிந்தவர்கள் அவருடைய நியாயபாவத்திலும், பரந்த நோக்கத்திலும், தெள்ளறிவிலும் நம்பிக்கை கொண்டார்கள். எப்பொழுதும் கண்ணியமானவர்—அவருடைய கொலுமண்டபத்திலும் மரியாதையும் சடங்கொழுக்கமும் தென்பட்டன; காங்கிரஸ் அங்கத்தினர்களோடும் நிர்வாக அதிகாரிகளோடும் பழகும்போது அவர் சமஷ்டி வாதத்தில் பற்றிருந்தும் கட்சி அல்லது பகுதி மனப்பான்மையிலிருந்து எட்டி நின்று, தேசிய லட்சியத்தின் பிரதிநிதியாக இருக்க முயலுவார். எப்பொழுதும் விழிப்பும் உழைப்பும் உள்ள அவர் திட்டப்படி நெடுநேரம் வேலை செய்வார். அரசாங்கத்திற்கு மேன்மையும் ஆதர்ச அடிப்படையும் அளிக்கவும், ''ஐக்கியமாக வாழுங்கள், அமெரிக்கராக வாழுங்கள்'' என்னும் உபதேசத்தை மக்களின் மனதில் பதிய வைக்கவும் அவர் பாடுபட்டார்—வெற்றியுமடைந்தார்.

மறுபடி டிசம்பரில் ஃபிலடெல்ஃபியாவில் கூடுவதாகத் தீர்மானித்த காங்கிரஸ், ஆகஸ்டு மாதத்தில் அந்தக் கூட்டத்தை முடித்துக் கொண்டது. சுத்தமும் அமைதியும் சமூகப் பண்பாடுமுள்ள அந்நகரம் அடுத்த 10 வருஷங்களுக்குத் தலைநகராக உதவும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிடையே தேசக்காரியங்களில் ஒழுங்குபடுத்த வேண்டியவை ஏராளமாக இருந்தன.

அரசாங்கக் காரியாலய அமைப்பு இலேசான காரியமல்ல. காங்கிரஸ் தொடர்ந்து துரிதமாக உள்நாட்டு இலாகா, ராணுவ இலாகா, நிதி இலாகா ஆகியவற்றை ஸ்தாபித்தது. சட்ட இலாகா இன்னும் ஏற்படவில்லை, ஆனால் எட்மண்ட் ராண்டால்ஃப் அரசாங்கத்தின் சட்ட ஆலோசகராகப் பணியாற்றினார். காங்கிரஸ் அதே சமயத்தில் மத்திய நீதிஸ்தலங்கள் அமைக்க ஆரம்பித்தது. ஒரு பிரதம நீதிபதியும் ஐந்து உதவி நீதிபதிகளும் கொண்ட சுப்ரீம் கோர்ட்டு மாத்திரமல்ல, மூன்று சுற்றுக் கோர்ட்டுகளும் 13 ஜில்லாக் கோர்ட்டுகளும் கூட நிறுவப்பட்டன. சமஷ்டி இலாகாக்களின் தலைவர்கள் போல எல்லா நீதிபதிகளும் ஜனாதிபதியின் நியமன உத்தரவும் காங்கிரஸின் அங்கீகாரமும் பெறவேண்டும்.

அதற்குள்ளாகக் கட்சி-அரசியல் தோன்றிவிட்டது—அரசியல் என்ற மாசு ஒட்டாத ஜனநாயக முறை என்னும் கனவு கண்ட அமெரிக்கர்கள் ஏமாற்றமடைந்தார்கள். நிர்மாண திட்டத்தைத் திருத்தியமைக்கும் விவாதத்தின்போது அது முதலில் தலைகாட்டிற்று. பல ஸ்டேட்டுகள் திட்டத்தை ஒப்புக் கொள்ளும்போதே சில மாறுதல்களை ஆவலுடன் விரும்பின. முதலில் காங்கிரஸ் அந்த வேண்டுகோட்களை அசட்டை செய்யும் என்று தோன்றிற்று. ஆனால் பாட்ரிக் ஹென்ரியும் வேறு சிலரும் கூச்சலிட்டவே, காங்கிரஸ் அந்த யோசனைகளைக் கவனிக்க ஒரு குழு நிறுவிற்று. இறுதியில் காங்கிரஸ் அங்கத்தினர்களில்

பெரும்பான்மையோர் அரசாங்கத்தை மாற்றியமைக்கும் யோசனைகளை நிராகரித்து, உரிமை மசோதா எனக்கூடிய 12 திருத்தங்களை ராஜ்யங்களுக்கு அனுப்பினர்கள். மக்களின் சுதந்திரத்தைக்காக்கும் பத்து யோசனைகள் அங்கீகரிக்கப்பட்டன. ஆனல் செய்தது போதாது என்று சமஷ்டி விரோதிகள் கடுங்கோபம் அடைந்து வானம் ஒலிக்கக் கூவிக் கண்டித்தார்கள். இதற்குள் நாட்டுமக்கள் நிர்மாணத்திட்டத்தை சாசுவதமான ஏற்பாடாகக் கொண்டதால், ஆதியில் சமஷ்டிவாதிகள் சமஷ்டி எதிரிகள் இடையே இருந்த ஒற்றுமை மறைய ஆரம்பித்தது. புதுப்பிரச்னைகள் கிளம்பிக் கொண்டிருந்தன; சமஷ்டிவாதக் கட்சி வலுவுள்ள மத்திய அரசாங்கத்தையும் வளரும் வியாபாரத்தையும் விரும்பிற்று; சமஷ்டி-எதிர்ப்புக் கட்சி ராஜ்யங்களின் உரிமைகளுக்கும் விவசாய முன்னேற்றத்திற்கும் முக்கியத்தன்மை அளித்தது; இரு கட்சிகளிலும் புதுநாயகர்கள் தோன்றத் தொடங்கினர்கள்.

புரட்சி காலத்தில் அமெரிக்கா உலகப் பிரசித்திபெற்ற வாஷிங்க்டன், ஃப்ராங்க்ளின் என்னும் இரு பெரியார்களை உண்டாக்கியது போல், இளம் ஜனநாயகம் அலெக்ஸாண்டர் ஹாமில்டனையும், தாமஸ் ஜெஃபர்ஸனையும் கீர்த்திஸ்தம்பத்திற்கு உயர்த்திற்று—மிகத் திறமையுள்ள அவர்களின் கீர்த்தி உள்நாட்டுடன் தங்காமல் கடல் கடந்தது. அவர்களுடைய மேதை அசாதாரணமானது என்றாலும் அவர்களை உலகம் இன்று நினைப்பது அவர்களுடைய சொந்த குணுதிசயங்களுக்கல்ல. இரு முக்கிய அமெரிக்க வாழ்க்கை முறைகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றின் பிரதிநிதி போல நின்றார்கள்; அவை ஒன்றுக் கொன்று சற்று முரணானவை; ஆனல் அவை பெரும் ஆற்றல் பெற்றவை, புறக்கணிக்கக் கூடாதவை: சிற்றடக்கமான ஐக்கியத்தையும் இன்னும் வலுவுள்ள தேச அரசாங்கத்தையும் ஹாமில்டன் ஆதரித்தார்; இன்னும், விரிவான மத்தியக் கட்டுப்பாடுக் குறைந்த, தனி மனிதனுக்கு அதிக சுதந்திரமளிக்கும் குடியரசு ஜெஃபர்ஸனின் லட்சியம். 1790-க்கும் 1830-க்கும் இடையே, மேற்கு நோக்கி முன்னேறும் 'குடியெழுச்சி'க்கு அடுத்தபடியாக, அமெரிக்கச் சரித்திரத்தின் முக்கிய சம்பவங்கள் தேசியத்திற்கும் குடியரசுக்கும் அவ்வப்போது கிடைத்த வெற்றிகள் ஆகும்.

அலெக்ஸாண்டர் ஹாமில்டன்:— ஹாமில்டன் வெஸ்ட் இண்டீஸ் தீவுகளில் ஒரு சிறு தீவில் பிறந்தவர்; தகப்பனார் ஸ்காட்லண்டுக்காரர்; தாயார் ஃப்ரான்ஸ் தேசத்தவள், மதச் சீர்திருத்தத்திற்காகத் துன்பங்கள் அனுபவித்த பரம்பரையைச் சேர்ந்தவள். மகனிடம் ஸ்காட்லண்டிய குணங்கள் எனக்கூடியவை தென்பட்டன: முன்னுக்கு வரத் தீவிர ஆசை,

உதாரம், பக்தி விசுவாசம், தன்மானம், முன்கோபம், கூமிக்கும் தன்மை, கூரிய சிந்தனை, அலுக்காத ஆற்றல். இக்குணங்களின் சேர்க்கையே அவருடைய பெரும் சாதனைகளுக்குக் காரணம். மேல் படிப்புக்காக நியூயார்க்கில் கிங்க்ஸ் காலேஜில் ஹாமில்டன் வந்து சேர்ந்தது எதிர்பாராத நன்மையளித்தது; ஏனெனில், மன்னனுக்கு எதிராகக் கிளம்பும் தீவிரவாத நகரத்தாருடன் அவனுக்கு சுலபமாய் நட்பு ஏற்பட்டது. சுமார் 18 வயதில், ஸ்தானிக மதாச்சாரியரைக் கண்டித்து இலைஞன் இரு பிரசார நூல்கள் எழுதினன். இருபது வயதில் அவன் ஒரு பீரங்கிப் படைப்பகுதியின் காப்டென் ஆனன்; அப்பொழுதும், அவன் தன் புஸ்தகங்களை முகாமுக்கு எடுத்துச் சென்று, இரவில் வெகு நேரம் படிப்பான்.

தெள்ளறிவு, ஆற்றல், இவை தவிர, ஹாமில்டனின் வேறு குணங்களும் உதவின. அதன் காரணமாக அவர் நியூயார்க் தேச பக்தர்களின் தலைவரானர். வாஷிங்க்டனின் கவனத்திற்கு வந்து சேனுதிபதியின் முக்கிய ராணுவத் துணைவர் ஆனர்; நியூயார்க்கு நியாயவாதிகளுள் பிரமுகரானர்; வாஷிங்க்டனின் நிர்வாகத்தில் முக்கிய இடம் பெற்றார்; பெரியதொரு கட்சியின் தலைமை அவருக்குக் கிட்டிற்று. காரியசித்தி, ஒழுங்கமைப்பு, இவற்றில் அவருக்கு விசேஷ ஆற்றல் இருந்தது. பேச்சிலும் எழுத்திலும் போற்றத்தக்கத் துடிதுடிப்பு அவருடையது. அதே சமயத்தில் அவரிடம் பல குறைகளும் இருந்தன—பதட்டம், முன்கோபம், தோல்வியுற்றால் வெடுவெடுப்பு, அடக்க முடியாத ஆக்கிரோஷம், தவிர்க்கக் கூடிய சண்டையையும் வரவேற்றல், வெடுவெடுப்பான அகம்பாவம்—இவை தேவையற்றதும் அருவருப்புமான எதிர்ப்புக்களுக்குக் காரணமாயின. ஜெஃபர்ஸனோடு ஹாமில்டனுக்கு ஏற்பட்ட மனக்கசப்பால் வாஷிங்க்டனின் நிர்வாகம் சீர்குலைந்தது; ஆரன் பர் என்பவனுடன் தொந்த யுத்தமே ஏற்பட்டு, அதில் ஹாமில்டன் உயிரிழந்தார்.

வினைத்திறமை, ஒழுங்கு, சீரமைப்பு—இவற்றில் ஹாமில்டனுக்கு உள்ள ஆர்வமே அவருடைய பொதுப் பணியைச் சிறப்பித்து, வளரும் நாட்டிற்கு அவர் செய்த மறக்க முடியாத தொண்டாயிற்று. 1775 முதல் 1789 வரை அவர் எங்கு சென்றாலும் வினைத்தளர்ச்சியும், வலுவின்மையுந்தான் கண்டார். அதனல் விளையும் ஒழுங்கின்மையை அவர் முற்றிலும் வெறுத்தார். வாஷிங்க்டனின் செயலாளராக இருத்ததால், அவர் மூலமாகத்தான் எல்லாக் காரியங்களும் நடைபெற வேண்டும். புரட்சிகாலத்தில் சேனுதிபதி எழுதிய கடிதங்களைப் பார்த்தால் அரசாங்கத்தின் தளர்ச்சியும் தலைவரின் கிலேசமும் தெளிவாகும். இதனல் விளைந்த மனத் துன்பத்தையெல்லாம் ஹாமில்டனும் பகிர்ந்து கொண்டார்;

அதன் பிறகு, ஐக்கிய ராஜ்யத்தின் இருள் மூடிய நாட்களில் அவர், பிரபல வக்கீல் என்னும் முறையில் நியூயார்க் வியாபாரிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்; சொத்து உடைமையையும் வியாபார விருத்தியையும் பயமுறுத்தும் இயக்கங்களை அவர் நன்கு அறிந்தவர். அரசாங்க அமைப்பைப்பற்றி அமெரிக்க லட்சியத்தைக் காட்டிலும் ஐரோப்பிய முறை அவருக்கு அதிகம் பிடித்திருந்தது. ஆங்கில ஆட்சி முறைதான் மிகச் சிறந்தது என்று அவர் தம் வாழ்நாள் முழுதும் நம்பினார்.

தாமஸ் ஜெஃபர்சன்: ஹாமில்டன் ஒரு செயல் மனிதர்; ஜெஃபர்சன் ஒரு சிந்தனை மனிதர். அமைதியாக யோசிப்பதும், தத்துவ ஆராய்ச்சியும் அவருடைய வழிகள். எல்லோரையும் முடுக்கிவிட்டு வேலை வாங்குவதில் ஹாமில்டனுக்குச் சந்தோஷம்; இவரோ, திறமை இருந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லோரும் திருப்தியாக இருப்பதைக் கண்டு களிப்பவர். இவர் வர்ஜீனியாவில் கவர்னராக இருந்தபோதும் அயல்நாட்டுக் காரியதரிசியாக இருந்தபோதும் செயல்முறை தளர்ந்திருந்தது உண்மைதான்; ஆனால் பலர் அதை மிகைப்படுத்தியிருக்கிறார்கள். அது ஒரு புறமிருக்க அரசியல் சிந்தனையாளர், எழுத்தாளர், என்ற முறையில், பர்க்குக்கு (Burke) அடுத்தபடியாக, அக்காலத்தில் இவர் கத்தில் இணையற்றவர்.

வர்ஜீனியாவின் சுகவாசிகள் கடுமையான கட்டுப்பாடு இல்லாமல், மேலோட்டமான அறிவு வளர்ச்சியுடன், உல்லாசமாக வாழ்ந்தார்கள் எனலாம்; இளமையில் ஜெஃபர்சன் அந்தச் சூழ்நிலையிலே வளர்ந்தார்; ஆடிப்பாடி உண்டு குடித்துக் கொம்மாளமடித்தார்; குதிரை சவாரி, காட்டுப் பிராணிகளின் வாழ்க்கையைக் கவனித்தல், ஃபிடில் வாசித்தல், நாவல் படித்தல் முதலியன அவருக்கு இஷ்டம்; பிற்காலத்தில் இயற்கை உலகம், புத்தக உலகம், மனித உலகம், இவற்றில் சஞ்சாரம் செய்ததில் அவர் மனம் பல துறைகளில் மலர்ந்தது. ஐந்தாறு பாஷைகள், கணிதம், 'ஸர்வே' செய்தல், கட்டட நிர்மாணம், யந்திர இயல், சங்கீதம், சட்டம், அரசாங்க நிர்வாகம் முதலியன அவர் கற்றார். ஆவுடன் புத்தகங்களும் சித்திரங்களும் சேகரித்து அவர் பெரிய புத்தகசாலை உண்டாக்கிக் கொண்டார். அவர் பல விஷயங்களைப்பற்றி எழுதினார்—தாவரங்கள், பிராணிகள், தேச சரித்திரம், அரசியல், கல்வி முறை வகையறு. எடுத்ததெல்லாம் அவர் புதுமையோடும் உள் அறிவோடும் எழுதினார். மான்டிசெல்லோவிலுள்ள அவருடைய பிரசித்தி பெற்ற வீடும், வர்ஜீனியா விசுவ வித்தியாலயத்தின் கம்பீரமான மண்டபங்களும் அவருடைய கிருக நிர்மாணத் திறனுக்குச் சான்றுகள்.

பிறருடன் பேசிக் கொண்டிருப்பது அவருக்கு இஷ்டம்; பல விஷயங்களைப் பற்றிய அவர் பேச்சில் ஆழமும் காணலாம், விஸ்தாரமும் காணலாம்; அவருடன் சம்பாஷிப்பது ஒரு ஆனந்த அனுபவம். ஒவ்வொரு சமயம் எதிர்பாராமல் அவர் வீட்டில் இரவில் 50 விருந்தாளிகள் கூடிவிடுவது உண்டு; அவர் ஒரு ஐரோப்பியப் பிரபுவிடம் காட்டும் மரியாதையை அறிவாளியான ஒரு நீக்ரோவிடமும் காட்டுவார்; வாழ்நாள் முழுதும் அவருக்கு சுவாதீனமும், அவகாசமும், நண்பர்கள் பெருகுவதிலும் இஷ்டம்.

அரசியல் துறையில் ஜெஃபர்சனின் பிறவிக் குணங்கள் ஹாமில்டனின் குணங்களுக்கு எதிரானவை; அவருடைய வளர்ப்பும் அக்குணங்களை வலுப்படுத்தின. சட்டசபை நாயகராகவும் பிறகு கவர்னராகவும் இருந்து அவர் வர்ஜீனியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். ஆதிநாட்களில் வாஷிங்டனும் அவரைப் போன்ற அரசியல்வாதிகளும் எதைக் கண்டு பயந்து கவலைப்படுகிறார்கள் என்று அவருக்குப் புரியவில்லை. அதற்கெதிராக, மத்திய அரசாங்கத்தைத் திருப்பிப் படுத்துவது ஸ்டேட்டுகளுக்கு எவ்வளவு சிரமம் என்றே அவருக்குத் தோன்றிற்று. அவர் ஃப்ரான்சில் மந்திரியாக இருக்கையில், அமெரிக்கா கடன் தொகைகளைத் திருப்பித்தர வேண்டுமென்று ஃப்ரெஞ்சு அரசாங்கம் கட்டாயப் படுத்தியபோது, அயல்நாட்டு உறவுகளை உத்தேசித்து அமெரிக்க மத்திய சர்க்கார் வலுப்பெற வேண்டுமென்று அவர் நினைத்ததுண்டு; ஆனால் இதர விஷயங்களில் அவர் அவ்வாறு விரும்பவில்லை. "அதிக சுறுசுறுப்பான அரசாங்கம் எனக்கு வேண்டாம்" என்று அவர் வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார். ராஜ்ய ஐக்கியத்தின் நெளிவுத் தன்மையே அதன் சிறப்புக்குக் காரணம்—என்றும் அவர் கூறியதுண்டு. வலுவுள்ள சர்க்கார் மக்களை மிகவும் கட்டுப்படுத்தும் என்பது அவருடைய ஆட்சேபம். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை, சர்ச்சின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை, நிலச்சுவான்தார்களின் கொடுமையிலிருந்து விடுதலை, செல்வத்தின் விஷம—சமமற்ற— நிலையிலிருந்து விடுதலை— இவற்றிற்காக அவர் போராடினார். அவர் சமத் தன்மையை நாடும் ஜனநாயகவாதி. அவருக்குப் பிடியாதவை: நகரங்கள், பெரிய கைத்தொழிற்சாலைகள், பெரிய பாங்குகள், பெரிய வியாபார நிறுவனங்கள்; அவையெல்லாம் ஏற்றத் தாழ்வை அதிகரிப்பவை. பிற்காலத்தில் அவர் பொருளாதாரச் சுவாதீனத்திற்காகத் தொழில் வளர்ச்சி அவசியம் என்று ஒப்புக் கொண்டாலும், பெரும்பாலும் கிராமாந்திர நாடாக வளர்வதே அமெரிக்காவுக்கு க்ஷேமம் என்று அவர் நம்பினார்.

எடுத்த முயற்சி வீணாகாத காரியாலய அமைப்பை நாட்டுக்களிப்பது ஹாமில்டனின் பெரிய நோக்கம்; ஜெஃபெர்ஸனின் குறிக்கோள் தனி மனிதனுக்கு அதிக சுவாதீனம் அளிப்பதே. இரண்டும் ஐக்கிய நாட்டிற்குத் தேவையே. சக்தியுள்ள மத்திய அரசாங்கமும் வேண்டும்; பொது மனிதன் கட்டின்றி வாழ்வதும் அவசியம். ஹாமில்டன் மாத்திரமோ, ஜெஃபெர்ஸன் மாத்திரமோ இருந்திருந்தால் அது நாட்டிற்கு நஷ்டமாக இருந்திருக்கும். இருவரும் நாட்டின் சேவைக்காக ஆஜராயிருந்தார்கள், இருவரும் தம் கொள்கைகளை ஓரளவு விட்டுக் கொடுத்து ஒத்துழைக்க முடிந்தது என்பது தேசத்தின் மிக நல்ல அதிர்ஷ்டம்.

ஹாமில்டனின் நிதி சம்பந்தமான நடவடிக்கைகள்: நிதி இலாகாக் காரியதரிசியாக இருக்கையில் ஹாமில்டன் நிகழ்த்திய சாதனைகள் அவருக்கு மிகச் சிறந்த அமெரிக்க நிதி மந்திரி என்ற கீர்த்தியளித்தன. தேசத்தின் கடனுகிய 55 மிலியன் டாலரைத் திருப்பிச் செலுத்த மறுத்து விடவேண்டும்: அல்லது ஒரு பகுதியே செலுத்தவேண்டும் என்று பலர் விரும்பினார்கள்; அவர்களுடைய எதிர்ப்பையும் சமாளித்துக் கொண்டு அவர் போட்ட திட்டத்தின்படி பூராத்தொகையும் செலுத்தப்பட்டது. அது மாத்திரமல்ல—ஸ்டேட்டுகள் புரட்சிப் போருக்காக வாங்கிய கடனுகிய 18 மிலியன் டாலரையும் மத்திய அரசாங்கம் ஏற்றுச் செலுத்திற்று. பாங்க் ஆஃப் இங்க்லாந்தை மாதிரியாகக் கொண்டு அவர் பாங்க் ஆஃப் யூனைட்டெட் ஸ்டேட்ஸ் உண்டாக்கினார். மத்திய அரசாங்கத் தங்கசாலையும் அவர் அமைத்தார். அவர் எழுதிய "கைத்தொழில் யாதாஸ்து" பிரசித்தி பெற்றது. அதில் அவர் தேசியப் பொருள் உற்பத்தியை விருத்தி செய்வதற்காக மிதமான இறக்குமதிச் சுங்கவரி விதித்தல் நல்லது என்று காரணங்களுடன் கூறியிருந்தார். காங்கிரஸ் அதற்கான சட்டம் இயற்றிற்று. அதன்படி வரி விதிதம் குறைவாக இருந்தாலும் அமெரிக்க உற்பத்திக்கு சந்தேகமன்னியில் நன்மை ஏற்பட்டது. கடைசியாக, அவருடைய யோசனையின் பேரில் சாராய வகைகள் மேல் அக்காரிவரி விதிப்பதற்கான சட்டமும் இயற்றப்பட்டது.

இந்த நடவடிக்கைகள் உடனேயே மூன்று விதங்களில் நன்மையளித்தன. தேச அரசாங்கம் கோரிய வரும்படியெல்லாம் பெற்றதோடு அதன் பொருளாதார நிலையில் நல்ல அஸ்திவாரம் ஏற்பட்டது; அயல் நாடுகள் அதனிடம் நம்பிக்கை கொள்வது சாத்தியமாயிற்று. கைத்தொழிலும் வியாபாரமும் ஊக்கமடைந்தன; எல்லாவற்றிலும் முக்கியமானது, ஒவ்வொரு ஸ்டேட்டிலும் செல்வாக்குள்ளவர்கள் தேச அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கத் தொடங்கினார்கள். தேசக் கடனை அடைக்க

ஆரம்பித்து, ராஜ்யக் கடன்களுக்கு மத்திய அரசாங்கம் உறுதியளிக்கவே இருவிதக் கடன் பத்திரங்களும் கைவசம் வைத்துக்கொண்டு பயந்திருந்தவர்கள் புதுத் தேச அரசாங்கத்தின் பக்கம் தம் திருஷ்டியை நம்பிக்கையுடன் திருப்பினார்கள். இறக்குமதி வரியில் தம் கேஷமத்தைக்கண்ட தொழில் முதலாளிகளும் அவ்வாறே செய்தனர். தேசிய பாங்கு செல்வாக்குள்ள தனவந்தர்களின் ஆதரவைப் பெற்றது; ஏனெனில் அது கொடுக்கல் வாங்கலைச் சுலபமாகவும் பத்திரமாகவும் ஆக்கிற்று. அக்காரிவரி, வருமானம் அளிப்பதோடு, சாராயம் காய்ச்சி வடிக்கும் ஒவ்வொரு ஸ்தலத்திலும் வசூலிக்கப்படுவதால் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பொது மக்களுக்கு அது நினைவுபடுத்திக் கொண்டே இருந்தது. மொத்தத்தில் ஹாமில்டனின் யோசனைகள் தேச அரசாங்கம் என்னும் கோட்டையைக் காக்கும் படைகள்போல் செல்வவான்களைத் திரட்டி நிறுத்தின; அரசாங்கமும் முன்பு இருந்ததைக் காட்டிலும் மரியாதைக்குகந்ததாக ஆயிற்று.

நிர்மாணத் திட்டத்தின் விளக்கம்: "ஊகமான அதிகாரங்கள்." இது மாத்திரமல்ல; ஹாமில்டனின் யத்தனங்கள் கைகூடுவதற்கு நிர்மாணத் திட்டத்தையே புது வகையிலும் நீண்ட நோக்கோடும் விளக்குவது அவசியமாயிற்று. தேசிய பாங்கு என்னும் யோசனையை ஜெஃபெர்ஸன் எதிர்த்தார்; மத்திய அதிகாரத்தைக் கூடியவரை எதிர்த்து ஸ்டேட்டு அதிகாரத்தை ஆதரிக்க வேண்டும் என்று நம்புவோருக்காகவும். பெரிய கூட்டுக் கம்பெனிகளையும் பணத்திற்கு அளிக்கப்படும் மகிமையையும் கண்டு பயப்படுவோருக்காகவும் அவர் அவ்வாறு செய்தார். அவர் வாஷிங்டனிடம் வலுத்த காரணம் எடுத்துரைத்தார். திட்டத்தில் சமஷ்டி அரசாங்கத்தின் அதிகாரங்கள் எண்ணிட்டுக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன; ஆகவே மற்ற அதிகாரங்கள் எல்லாம் ராஜ்யங்களைச் சேர்ந்தவை; முன் கூறிய ஜாப்தாவில் பாங்கின் அமைப்பு இடம் பெறவில்லை; ஆகையால் மத்திய அரசாங்கம் பாங்கு அமைப்பதற்கில்லை—என்பது அக்காரணம். ஆனால் ஹாமில்டன் சமாதானக் காரணம் ஒன்று கூறினார். எல்லா அதிகாரங்களையும் முற்றிலும் விவரித்து எழுதுவது இயலாத காரியம் என்பதும், உள்ளடங்கிய கருத்தை ஊகிப்பதும் நிர்வாகியின் கடமை என்பதும் அவருடைய கட்சி. வாஷிங்டன் அதை ஒப்புக் கொண்டு மசோதாவில் கையொப்பமிட்டார்.

உஸ்கிக் கலகம்: ஜேயின் உடன்படிக்கை. 1791-ல் ஹாமில்டன் விதித்த அக்காரி வரி அருவருப்பானது என்பதோடு முன் யோசனையோடு கூடியது அல்ல என்பதும் ஜெஃபெர்ஸனின் அபிப்பிராயம். அவர், "எதிர்ப்பு அதிகமாகவும் அடக்கும் சக்தி குறைவாகவுமுள்ள ஸ்தலங்களில் அரசாங்கத்தின்

அதிகாரத்தை சோதனைக்குள்ளாக்கக்கூடாது'' என்று வாஷிங்க்டனுக்கு எழுதினர். அவர் குறிப்பிட்ட பிரதேசம் மேற்கு பென்னில்வேனியா. அங்கு ஸ்காட்லண்டு அயர்லண்டிலிருந்து குடியேறிய முரட்டு ஆட்கள் அதிகம். அவர்கள் விளைவிக்கும் ரை முதலான தானியங்களை மலைகள் பல கடந்து கிழக்கே சந்தைகளுக்கு அனுப்புவது முடியாத காரியம்; அவர்களுக்குப் பணமோ தேவை; ஸ்காட் தேசத்தாருக்கு அத்தானியங்களிலிருந்து விஸ்கி (ஒரு வகை மதுபானம்) தயாரிக்க நன்றாகத் தெரியும்; அளவில் குறைவானதும் விலை அதிகமானதுமான பொருளை கடத்திச்சென்று லாபத்துடன் விற்கலாம்; ஆகவே அநேகமாய் ஒவ்வொரு குடியானவன் வீட்டிலும் விஸ்கி வடிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அப்காரி வரி தானியவரி போல ஆயிற்று. தவிர, வரி வசூலிக்கும் சிப்பந்திகளின் விசாரணை முறை கேவலமாகவும் இருந்தது. பிட்ஸ்பர்க்குக்குத் தெற்கே நான்கு வட்டங்களில் கோபங்கொண்ட கலகக்காரர்கள் வரியை எதிர்க்கும்படி குடியானவர்களைத் தூண்டி விட்டார்கள். வாஷிங்டன் எச்சரிக்கை வெளியிட்டார்; ஆனால் அது மதிக்கப்படவில்லை; 1794-ல் அரசாங்கம் கலகக்காரர்களைக் கைது செய்ய முயன்றபோது தீவிரமான சண்டை கிளம்பிற்று. கவர்னர் குடிப்படையை உபயோகித்திருக்க வேண்டும்; ஆனால் அடுத்த தேர்தலில் வோட்டு நஷ்டத்திற்குப் பயந்து அவன் தன் கடமையில் தவறினான்.

அதன் பின் வாஷிங்டன் ஹாமில்டனின் யோசனையின் பேரில் கடுமையாக நடந்து கொள்ளத் தீர்மானித்தார். கலகக்காரர்கள் சீக்கிரம் அடக்கப்பட்டனர். ஹாமில்டன் படையுடன் சென்று 18 கலகக்காரர்களை ஃபிலடெல்ஃபியாவுக்கு விசாரணைக்காக அனுப்பினர். கோர்ட்டு இருவரைக் குற்றவாளிகள் என்று தீர்மானித்தது. வாஷிங்க்டன் அவர்களை மன்னித்துவிட்டார்.

இந்த உஸ்கிக் கலகம் பெரிய பரபரப்புக்குக் காரணமாயிற்று. சமஷ்டி வாதிகள் சர்க்காரின் கண்டிப்பான நடத்தையைப் பாராட்டினர்கள்; சமஷ்டி எதிரிகள் அதைப் பொறுப்பற்றது, ராணுவ சக்தியின் துர்-உபயோகம் என்று கண்டித்தனர். ஹாமில்டனின் யோசனையால் மத்திய அரசாங்கத்தின் கீர்த்தி உயர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது மக்களின் எதிர்ப்பையும் அவநம்பிக்கையையும் மிகவும் தூண்டிற்று என்பதிலும் சந்தேகமில்லை. அது தவருன காரியம். ஜெஃபெர்ஸனின் கட்சி அதிகாரமேற்றதும் அப்காரி வரி ரத்து செய்யப்பட்டது.

அயல்நாட்டு விவகாரங்களிலும் வாஷிங்க்டனின் நிர்வாகம் பல மக்களின் நல்லபிப்பிராயத்தைப் பெறவில்லை. 1793-ல் ஃப்ரான்ஸுக்கும் பிரிட்டனுக்குமிடையே போர் மூண்டது. வியாபார வ.... யினரும் மதப்பற்றுள்ளவர்களும் (முக்கியமாய்

நியூ இங்கிலாந்தில்) தீவிர சீர்திருத்த வாதிகள் கூடிய ரிபப்லிக் ஆட்சியை வெறுத்தனர்; ஏனெனில் சொத்துடைமையைக் கவிழ்த்தது முன் கூட்டத்தாருக்கும் பரம்பரை வழக்கத்திற்கெதிராக தர்க்க சம்மதமான சமய விசாரணை பின் கூட்டத்தாருக்கும் பிடிக்கவில்லை. தென் பிரதேச வேளாளர்களும் நகரங்களில் வசிக்கும் ஆசாரி, மேஸ்திரி போன்ற யந்திரத் தொழிலாளிகளும் ஃப்ரான்ஸிடம் அநுதாபம் காட்டினர். வாஷிங்க்டன் நிதானமாக நன்கு யோசித்து ''அமெரிக்கா இப்போரில் நடுநிலை வகிக்கும்'' என்று கோஷித்தார். மக்கள் இதைக் கடுமையாகக் கண்டித்ததிலிருந்து, ஸ்தானிக ஃபிரெஞ்சுமந்திரி ஷெனை அப்பிரகடனத்தை ஆபத்தின்றி அசட்டை செய்யலாம் என்று கருதினான். ஆகவே அவன் தன் தாயக அரசாங்கத்திற்கு ''வாஷிங்க்டன் ஒரு சக்தியற்ற கிழவன்; பிரிட்டிஷாரின் சைகைக்கு ஆடும் பொம்மை'' என்று எழுதி, அமெரிக்க மக்களின் அபிப்பிராயத்தை நேரில் கேட்டறிய எண்ணினான். போரின் காரணமாக வியாபாரக் கப்பல்களுக்கு எதிரிக் கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையிட அநுமதி கிடைப்பதுண்டு. அது போன்ற ஃபிரெஞ்சு 'ப்ரைவடீர்' கப்பல்கள் அமெரிக்கத்துறை முகங்களை உபயோகிக்கலாகாது என்று வாஷிங்க்டன் உத்தரவிட்டபோது, ஷெனை அதையும் புறக்கணித்தான். வாஷிங்க்டன் ''இவனுக்கு இவ்வளவு துணிச்சலா?'' என்று வெகுண்டு ஷெனையை நாடு திரும்பும்படிக் கட்டளையிட்டார். ஃப்ரான்ஸ் சென்றால் கழுத்துக்குக் கத்தி காத்திருக்கிறது என்று அறிந்த ஷெனை ஐக்கிய நாட்டிலேயே தங்கி, நியூயார்க் கவர்னரின் மகளை மணந்து, நீண்டகாலம் சுகமாய் வாழ்ந்தான்! அவனுடைய புத்திமட்டான நடத்தை ஃபிரான்ஸிடம் அனுதாபம் கொண்ட அமெரிக்கருக்கே இக்கட்டாக இருந்தது. எனினும் 1794-ல் அக்கட்சியே ஃப்ரெஞ்சு மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லும் அமெரிக்க வியாபாரக் கப்பல்களை பிரிட்டன் பறிமுதல் செய்கிறதென்றும், 1783-ம் ஆண்டின் உடன்படிக்கைக்கு விரோதமாக வடமேற்குப் பிராந்தியத்தில் பிரிட்டிஷ் வியாபார ஸ்தலங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன என்றும் குற்றம் சாட்டி அமெரிக்கா இங்கிலாந்துடன் போர்புரிய வேண்டும் என்று கரூராகக் கேட்டது.

அச்சமயத்தில் அதுபோன்ற சண்டையைவிடப் பெரிய வினை அமெரிக்காவுக்கு வேண்டாம். ஆகவே பல குற்றச்சாட்டுகளுக்கு முடிவுகாண ஜான் ஜே என்பவரை விசேஷ தூதராக வாஷிங்க்டன் லண்டனுக்கு அனுப்பினர்; ஜான் ஜே அனுபவம் பெற்ற ராஜதந்திரி; அச்சமயம் பிரதான நீதிபதியாகப் பதவி வகித்தவர். அவரைவிடச் சிறந்த தூதர் கிடைப்பதரிது. ''அரசியலில் நழுவலான தந்திரப் பேச்சுக்களைக் காட்டிலும் நல்ல மனமும் விவேகமும் அதிகப் பயனளிக்கும்,''

என்பது அவருடைய நம்பிக்கை. நிதானமாகவும் அறிவில் வளர்ந்த பண்போடும் அவர் முடித்துவைத்த உடன்படிக்கை ஐக்கிய நாடு நியாயமாய் எதிர்பார்க்கக் கூடியதெல்லாம் சம்பாதித்துக் கொடுத்தது. மேற்கே பிரிட்டிஷார் ஆக்கிரமித்திருந்த வியாபார ஸ்தலங்கள் இரண்டு வருஷங்களில் காலியாக்கப்படும்; கப்பல்கள் கைப்பற்றப்பட்ட விஷயத்தை ஒரு கமிஷன் தீர விசாரித்து நஷ்டஈடு செலுத்த ஏற்பாடு செய்யும்; கடைசியாக, பிரிட்டிஷ் கிழக்கிந்தியத் தீவுகளிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும் அமெரிக்கருக்கு விரும்பத்தக்க வியாபாரச் சலுகைகள் கிடைக்கும்—என்பன அவ்வுடன்படிக்கையின் நிபந்தனைகள். அவ்விவரங்கள் வெளியானதும் அமெரிக்க மக்கள் படுகோபமடைந்தனர். காட்டுமிராண்டிக் கூட்டங்கள் ஜே-யின் மரணச் சடங்கு நடத்தி ஒரு பொம்மையைக் கொளுத்தின. கோபக் கொதிப்புள்ள மேடைப் பிரசங்கிகளும் பத்திரிகை ஆசிரியர்களும் வாஷிங்க்டன்மீது வசைப் பாடல்கள் பாடினர். தத்துவ ஞானிகளாகிய வாஷிங்க்டனும் ஜேயும் சஞ்சலமடையவில்லை; தற்காலிக அரசியல் நோய் இது என்றிருந்து விட்டார்கள். சில திருத்தங்களுடன் செனெட் அவ்வுடன்படிக்கையை அங்கீகரித்தது; வியாபாரிகளும் கப்பல் முதலாளிகளும் மற்றும் ஒருமுறை மத்திய அரசாங்கத்தை நன்றியுடன் வாழ்த்தினார்கள்.

ஜான் ஆடம்ஸ்: வாஷிங்க்டன் பதவியிலிருந்து விலகியதும் ஜான் ஆடம்ஸ் சுக்காஸைப் பிடித்தார். அவர் திறமையும் உயர்ந்த நோக்கங்களும் கொண்டவர்; ஆனால் கண்டிப்பான வர், பிடிவாதக்காரர், விபரீதப் போக்குகள் நிறைந்தவர். இங்கிதமறியாத சொற்களும் செயல்களும், தான்தோன்றித் தனமும் அவருடைய பதவிக்காலத்தைக் குழப்பும் என்பது தெரிந்த விஷயம். அவருக்கும் ஹாமில்டனுக்கும் இடையே ஏற்கெனவே மனஸ்தாபம் மூண்டிருந்தது. கட்சிச் சண்டைகளில் இலாகாத் தலைவர்கள் ஹாமில்டனின் யோசனைகளை ஆதரித்தார்கள். ஆகவே ஆடம்ஸின் கட்சியிலும் பிளவு, மந்திரி சபையிலும் பிளவு. தென் நாட்டாருக்கு ஆடம்ஸ் நியூ இங்கிலாந்துக்காரன் என்ற வெறுப்பு. கட்சி உணர்ச்சி மிகக் கசப்படைந்தது. இது போதாதென்று சர்வதேசவானத்திலும் இருண்ட மேகங்கள் படர்ந்தன.

இம்முறை ஃப்ரான்ஸுடன் போர் மூள இருந்தது. ஜே-யின் உடன்படிக்கையால் கோபமடைந்த ஃப்ரெஞ்சு அரசாங்கம் ஆடம்ஸ் அனுப்பிய அயல்நாட்டு மந்திரியை ஏற்றுக்கொள்ளாமல், அவனைக் கைது செய்வதாகவும் பயமுறுத்திற்று. இந்த அவமதிப்பால் அமெரிக்கர் ஆவேசப் பட்டனர். நிலையைச் சீராக்க மூன்று கமிஷனர்களை ஆடம்ஸ் பாரிஸுக்கு அனுப்பியபோது அவர்களும் இறுமாப்

புடன் மிகவும் அவமதிக்கப்பட்டார்கள். ஃபிரெஞ்சு அயல் நாட்டுக் காரியதரிசியான டாலிரான் (Talleyrand) வெடுக்கென்று அவர்களுக்கும் பேட்டியளிக்க மறுத்தான். பிற்காலத்தில் X, Y, Z என்று குறிப்பிடப்பட்ட மூன்று ரகசிய ஏஜெண்டுகள் இரண்டரை லக்ஷம் டாலர் லஞ்சம் அளிக்கப்பட்டால் ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் மனத்தைக் குளிர வைக்க முடியும் என்று அறிவித்தார்கள். கடைசியில் டால்லிரான் அமெரிக்கரை இரு நாக்குப் படைத்த வஞ்சகர் என்று பழிகூறி அநாகரீகமாக அவமதித்து விடை யளித்தான். XYZ ஏடுகள் என்ற பெயர் பெற்ற அக்கடிதங்கள் பிரசுரமானபோது அமெரிக்கரின் கோபம் அக்கினிச் சுவாலையாகக் கிளம்பிற்று. படைகள் திரட்டப்பட்டன; கப்பல் படை வலுப்படுத்தப்பட்டது. 1798-ல் சில கடற்தாக்குதல்கள் நடந்தன. அவற்றில் தவறுமல் ஃபிரெஞ்சுக் கப்பல்கள் தோல்வியடைந்தன. பெரும்போர் நடந்தே தீரும் என்று ஒரு சமயத்தில் தோன்றிற்று.

இந்த ஆபத்தான சமயத்தில் ஆடம்ஸின் தன் வழி செல்லும் தன்மை நாட்டை நன்கு காத்தது. யுத்தத்தைக் கோரிய ஹாமில்டனை அசட்டை செய்து அவர் ஒரு புது மந்திரியை ஃப்ரான்ஸுக்கு அனுப்பினார்; அப்பொழுது அங்கு தலைமை வகித்த நெப்போலியன் அவனை மரியாதையுடன் ஏற்றுக் கொண்டான். யுத்தம் என்னும் ஆபத்து சீக்கிரம் மறைந்தது. இதற்கிடையே துரதிர்ஷ்டவசமாக உள்நாட்டு விஷயங்களில் ஆடம்ஸ் குறுகிய மனத்தோடும் இங்கிதமறியாமலும் நடந்துகொண்டு மக்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொண்டார். அவரும் காங்கிரஸும் இயற்றிய, மறக்கவும் மன்னிக்கவும் முடியாத, நான்கு தீய சட்டங்கள் அரசாங்கத்தைப் பெரிய அளவில் பாதித்தன. அவையாவன: அயல் நாட்டான் அமெரிக்கப் பிரஜை ஆவதற்கு முன்னர் ஐக்கிய நாட்டில் வசிக்கவேண்டிய காலம் ஐந்தாண்டிலிருந்து 14 ஆண்டு ஆக்கப்பட்டது; ஆபத்துகரமான வெளி நாட்டானை வெளியேற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இரண்டு வருஷத்திற்கு அளிக்கப்பட்டிருந்தது; போர்க்காலத்தில் அயல் நாட்டாரை ஜனாதிபதி கோரியகாலத்திற்கு நாடு கடத்தவோ சிறைப்படுத்தவோ முடியும்; அரசாங்கத்தின் சட்ட பூர்வமான நடவடிக்கைக்கு எதிராகச் சதி செய்தலோ அரசாங்க சிப்பந்தியைக் கண்டித்தலோ, அவன் வேலையைத் தடுத்து நிறுத்தினாலோ, அது ராஜத்துரோகமாகும்

இந்த அயல் நாட்டுச் சட்டங்களும், ராஜத்துரோகச் சட்டமும் மூர்க்கத்தனமான கொடுமையாகவும், தனி மனிதனின் சுதந்திரத்தைப் பொறுக்க முடியாத அளவு பாதிப்பதாகவும் தோன்றிற்று. ஃபெடரல் கட்சியார் மத்திய அரசாங்கத்தின்

சக்தியை ஆபத்தான அளவுக்கு அதிகப்படுத்துகிறார்கள் என்று நம்பிய ஜெஃபெர்ஸனும் மாடிஸனும் எதிர்த்து நிற்கத் தீர்மானித்தார்கள். அவர்கள் இரண்டு ஜதைத் தீர்மானங்கள் தயாரித்தார்கள்; ஜெஃபெர்ஸனின் தீர்மானங்களை கென்டக்கி சட்ட சபையும், மாடிஸனின் தீர்மானங்களை வர்ஜீனியா சட்ட சபையும் ஏற்றன. ராஜ்யங்களுக்கிடையே உண்டான ஒப்பந்தத்தால் மத்திய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது என்ற கொள்கையை விளக்கி, அதே அடிப்படையில் நிர்மாணத் திட்டத்திற்கு முரணான சட்டத்தை ஆட்சேபித்து ரத்து செய்ய ஸ்டேட்டுகளுக்கு அதிகாரமுண்டு என்று அத் தீர்மானங்கள் கோஷித்தன.

1800-ல் நாடு மாறுதலுக்குத் தயாராக இருந்தது. உண்மையில் அதைப் பெரிய அரசியல் கிளர்ச்சி ஆண்டு என வேண்டும். வாஷிங்டன், ஆடம்ஸ் ஆகிய இருவரின் தலைமையில், அரசாங்கத்தை ஸ்தாபித்து வலுப்படுத்தும் பெரிய தொண்டு ஃபெடரல் கட்சி ஆற்றியிருந்தது. நாடும் நிர்மாணமும் நிலைத்திருக்குமா என்று 1789-ல் தோன்றிய சந்தேகம் 1800-ல் யாருக்கும் தோன்றவில்லை. ஆனால் ஃபெடரல் கட்சி செய்த பெரிய பிசகு என்னவெனில் அமெரிக்க சர்க்கார் ஜனரஞ்சகமான சர்க்காராக இருக்கவேண்டுமென்பதை அவர்கள் புரிந்துகொள்ளத் தவறினார்கள். தனிப்பட்ட சிலவகுப்பாருக்கு லாபங்களும் அதிகாரங்களும் கொடுக்கக் கூடிய கொள்கைகளை அவர்கள் அனுசரித்தார்கள். ஜனங்களை வசப்படுத்தி நடத்தும் திறமையுடன் பிறந்த ஜெஃபெர்ஸன் சிறு குடியானவர்கள், ஆசாரிகள், கடைக்காரர்கள், இதரத் தொழிலாளர்கள் முதலியோரின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். அவர்கள், இனி அரசாங்கம் குறிப்பிட்ட சில கூட்டத்தாரின் நன்மைக்காக இருக்கக்கூடாது, மக்களின் ஆண்மையாக இருக்கவேண்டும், என்று தீர்மானித்தார்கள். 1800-ஆம் ஆண்டின் தேர்தலில் நியூ இங்கிலாந்து ஆடம்ஸை ஆதரித்தது; ஆனால் எதிர்க்கட்சி தென் ஸ்டேட்டுகளில் அநேக மாய்ப் பூர்ண வெற்றியும் நடு ஸ்டேட்டுகளில் நல்ல மெஜாரிடி வெற்றியும் அடைந்தது. ஆனால் தேர்தல் முறையின் தோஷங்களின் காரணமாக ஜெஃபெர்ஸனும் ஆரன் பர் (Aaron Burr) என்பவனும் சம நிலையில் இருந்தனர். அதே கட்சியைச் சேர்ந்த, நியூயார்க்குக்காரனுகிய ஆரன் பர் சுமாராக ஏற்றுக்கொள்ளக் கூடியவன் என்றாலும் நேர் நெறியற்றவன். ஜெஃபெர்ஸன் தலைமை வகிக்க வேண்டுமென்பதே மக்களின் விருப்பம்; அந்த சமயம் ஹாமில்டன் அவருக்கு இயற்கையாக ஏற்பட்ட பெருந்தன்மையுடன் தம் செல்வாக்கை உபயோகப்படுத்திப் பிரதிநிதி சபை ஜெஃபெர்ஸன் பட்சமாகத் தீர்மானிக்கும்படி செய்தார்.

அத்தியாயம் 7

தேச ஒற்றுமை எழுச்சி

ஜெ:பெர்ஸனின் நிர்வாகம்: 1801-ல் ஜெஃபெர்ஸன் ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக்கொண்ட விசித்திரமானமுறை ஜனநாயகம் அதிகாரத்திற்கு வந்துவிட்டது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு; அப்பொழுதுதான் தலை நகராக்கப்பட்டிருந்த வாஷிங்டனில் நிகழ்ந்த முதல் பதவியேற்புச் சடங்கு அதுதான். ஜெஃபெர்ஸன் அசிரத்தையுடன் உடைகள் அணிந்து, சில நண்பர்கள் தொடர, குன்றின் மேல் தான் தங்கியிருந்த எளிய உணவு விடுதியிலிருந்து புதுத் தலைநகரக் காரியாலயத்திற்கு நடந்து வந்தார். ஒருவிதச் சடங்கு முறை அல்லது படாடோபம் இல்லாமல் ஸெனெட் கூடத்தில் பிரவேசித்தும், சமீபகாலத்தில் தன் போட்டிக்காரனுக இருந்த, சீலமற்ற, பர் என்பவனுடன் கை குலுக்கினர்; பர் இப்பொழுது உப-ஜனாதிபதி. அவருடைய நம்பிக்கையைப்பெறுத இன்னொருவன் கூட அருகே இருந்தான்—வர்ஜீனியாவைச் சேர்ந்த ஜான் மார்ஷல், ஆடம்ஸ் மூலம் பிரதான நீதிபதியானவன். ஜெஃபெர்ஸன் விசுவாசப் பிரமாணம் செய்து பதவி யேற்று அமைதியாகத் தம் பிரசங்கத்தை நிகழ்த்தினர்; ஜனாதிபதிகளின் பதவியேற்றல் பிரசங்கங்களுள் மிகச் சிறந்தது அது.

ஒவ்வொருவரும் நல்ல மனதுடன் சற்று இடம் கொடுத்து சமரஸமாகப் போகவேண்டும் என்னும் மிக அவசியமான உபதேசம் அப்பிரசங்கத்தின் ஒரு பகுதி. அப்பொழுதுதான் முடிவடைந்த அரசியல் சித்திரத்தில் வெடுவெடுப்பான வசைக் காட்சிகள் அதிக இடம் பெற்றிருந்தன; ஜெஃபெர்ஸன் ஒரு நாஸ்திகன், எல்லோரையும் ஒரு சமமட்டத்திற்கு இழுப்பவன், அவன் சீரான ஆட்சியின் வைரி என்று பலர், முக்கியமாக நியூ இங்கிலாந்துக்காரர்கள், நினைக்கும்படியாகக்கூட அதுபிரசாரம் தீவிரமாக இருந்தது. மத விஷயத்தில் சகிப்பிலமை எவ்வளவு கெட்டதோ அவ்வளவு கெட்டது அரசியல் சகிப்பின்மையும் என்று மக்களுக்கு நினைவூட்டி, நாட்டின் வளங்களை விருத்தி செய்வதற்காகவும், சார்பாளர் ஆட்சியைப் பயனுள்ளதாகச் செய்யவும், ஐக்கிய நாட்டைக் காப்பாற்றவும் அனைவரும் தாம் அமெரிக்கர் என்றுணர்ந்து ஒன்று சேரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். பேச்சின்

எஞ்சிய பாகம் புது நிர்வாகத்தின் அரசியல் கொள்கைகளை விளக்கிற்று. ''முன் யோசனையுள்ளதும் சிக்கனமானதுமான ஆண்மை நாட்டுக்குத் தேவை; மக்கள் ஒழுங்காக வாழ்வது அரசாங்கத்தின் பொறுப்பு; ஆனால் மற்றப்படி இஷ்டமான தொழில் செய்யவும், முன்னேற யத்தனிக்கவும் மக்களுக்குச் சுவாதீனம் இருக்கவேண்டும். தொழிலாளி உழைத்துச் சம்பாதித்ததை அரசாங்கம் பிடுங்கிக்கொள்ளக்கூடாது,'' என்று அவர் கூறினார். மேலும், மத்திய அரசாங்கம் ஸ்டேட்டுகளின் உரிமைகளைக் காப்பாற்றவேண்டும் என்றும், எல்லா தேசங்களோடும் கண்ணியமான சிநேகத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறி, ''ஆனால் பொறியில் சிக்கவைக்கும் அரசியல் நட்புக்கள் கூடவே கூடாது'' என்று அவர் எச்சரித்தார். அந்த வாக்கியம் அரசியல் சூத்திரம் ஆகிவிட்டது. ஐக்கிய நாட்டை ''அதன் பூர்ண சட்ட ரீதியான யத்தனங்களில்'' ஆதரிப்பதாகவும், ''ராணுவ அதிகாரத்தின்மேல் சிவில் அதிகாரத்தின் உயர்வை'' நிலைநிறுத்துவதாகவும், புரட்சி மூலம் மக்கள் தம் அபிப்பிராயம் கூறுமல் தேர்தல்கள் மூலம் கூற உதவியளிப்பதாகவும் அவர் வாக்களித்தார்.

ஜெஃபெர்ஸன் இரு முறை ஜனாதிபதியாக இருந்ததால் நாடு முழுதும் ஜன நாயகச் செயல் முறைகள் மிகவும் வலுவடைந்தன. தலைமைப் பதவியை யொட்டி வாஷிங்க்டன் ஆதரித்த ஆடம்பர—பிரபுத்துவ—சடங்குகளை அவர் களைந்தெறிந்தார். வாரந்தோறும் நடக்கும் தர்பாரை அவர் நிறுத்தினார்; ஆட்சி மண்டப உபசார சம்பிரதாயங்களை அவர் குறைத்தார்; 'எக்ஸலென்ஸி' போன்ற விருதுகள் விட்டு விடப்பட்டன; மிகச் சாதாரண பிரஜையும் மிக உயரிய ஆபீசரும் சம மரியாதைக்கு உரியவர் என்பது ஜெஃபெர்ஸனின் நம்பிக்கை; காரியாலயச் சிப்பந்திகள் தம்மைக்குடிகளின் தர்ம கர்த்தாக்களாக—அவர்களுடைய கடமை-உரிமைகளின் பொறுப்பாளிகளாக—பாவித்துக்கொள்ள வேண்டுமென்று உபதேசித்தார். அவர் விவசாயத்திற்கு ஊக்கமளித்ததோடு, (அமெரிக்க) இந்தியர்களின் நில உரிமைகளை விலை கொடுத்து வாங்கி, அமெரிக்கர் அவற்றில் குடியேறி அவற்றை விருத்தி செய்ய உதவி, நாடு மேற்கு நோக்கி வளர உதவினார். பிற நாடுகளில் கஷ்டப்படுவோருக்கு அமெரிக்கா அடைக்கலமாக உதவவேண்டும் என்ற நம்பிக்கையில் அவர் தேசப் பிரஜை உரிமைச்சட்டங்களைத் தளர்த்தி குடியிறக்கத்தை வரவேற்றார். யுத்தம் மூண்டால் அரசியல் நடவடிக்கைகள் வளரும், வரிகள் ஏறும், மக்களின் சுவாதீனம் குறையும் என்பதை உத்தேசித்து இதர நாடுகளோடு அமைதியான உறவுகொள்ள அவர் மிகவும் முயன்றார். நிதி விஷயங்களில் நீண்ட நோக்கம் கொண்ட ஆல்பர்ட் கால்லடின் என்னும் ஸ்விட்ஸர்லண்டு நாட்டானை நிதிச்

செயலாளராக நியமித்து, செலவுகளைக் குறைக்கவும் தேசக் கடனை அடைக்கவும் அவர் முயன்றார்; அதன் காரணமாக 1806-ல் நாட்டின் வருமானம் பதினான்கரை மில்லியன் டாலரும் செலவு எட்டரை மில்லியன் டாலரும் கையிருப்பு ஆறு மில்லியன் டாலரும் ஆயிற்று. 1801 முடிவதற்குள் சிக்கனமறிந்த கால்லடின் தேசக் கடனை ஏழு மில்லியனுக்கும் குறைவாக ஆக்கி விட்டான். ஜெஃபெர்ஸனைப் பாராட்டி நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ந்தனர். தேர்தலுக்கும் அரசாங்கப் பதவி வகிப்பதற்கும் சொத்துடைமை நிபந்தனை தேவையில்லை யென்று ராஜ்யங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தீர்மானித்தன; கடன்பட்டவரையும் சட்டம் மீறிய குற்றவாளிகளையும் அனுதாபத்துடன் நோக்குவதற்கான சட்டங்கள் அமுலுக்கு வந்தன.

இவ்வளவிருந்தும் விதி தலைவரையும் நாட்டையும் அவர் விரும்பாத திசையில் இழுத்துச் சென்றது. நிர்மாணத்தின் ஆக்கக் காரியங்களையே லட்சியமாகக் கொண்ட அவர் இரண்டு நடவடிக்கைகளில் ஃபெடரல் அரசாங்கத்தின் அதிகாரங்களை எல்லைவரை—இனியும் நீட்டினால் தெறித்துப்போகும் என்ற அளவுக்கு—நீட்டிவிட்டார்; அவர் பதவியிலிருந்து விலகும் போது அவர் மிகவும் வெறுத்த யுத்தம் நெருங்கிக் கொண்டிருந்தது.

லூஸியானாவை விலைகு வாங்குதல்: பர் (Burr) சதி: ஒரு நடவடிக்கையால் தேசத்தின் விஸ்தீர்ணம் இருமடங்காயிற்று. மிஸிஸிபி நதியின் மேற்கேயுள்ள பிரதேசமும், அந்நதியின் முகத்துவாரத்திலுள்ள நியூ ஆர்லீன்ஸ் என்னும் நல்ல துறைமுகப் பட்டணமும் வெகு காலமாக ஸ்பெயின் நாட்டார் வசமிருந்தன. (1763-க்கு முன் அப்பிரதேசம் ஃப்ரான்ஸைச் சேர்ந்திருந்தது). ஜெஃபெர்ஸன் பதவியேற்ற புதிதில் நெப்போலியன் வலுக் குறைந்த ஸ்பெயின் அரசாங்கத்தினிடமிருந்து லூயிஸியானாவை மறுபடி பெற்றான். உடனே அரசியல் அறிவுள்ள அமெரிக்கர் பயத்தாலும் கோபத்தாலும் நடுங்கினர், ஏனெனில், மிஸிஸிபிப் படுகைப் பிரதேசங்களில் விளையும் அமெரிக்கப் பொருள்கள் கப்பலேறுவதற்கு நியூ ஆர்லீன்ஸ் இன்றியமையாத துறைமுகம். ஐக்கிய நாட்டிற்கு வடக்கே இருக்கும் ஆங்கில சாம்ராஜ்யத்திற்கு ஈடாக மேற்கே ஃப்ரெஞ்சுக் குடியேற்ற சாம்ராஜ்யம் நிறுவவேண்டுமென்பது நெப்போலியனின் பெரிய ஆசை; அது அமைந்தால், தேசத்தின் நடுப்பாகத்தில் சிதறலாக அமர்ந்திருக்கும் அமெரிக்க முன்னோடிகளின் வியாபார உரிமைகளும் பொது க்ஷேமமும் பாதிக்கப்படும். தென்மேற்குப் பிரதேசத்தில் வலுவற்ற ஸ்பெயின்கூடத் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருந்தது. அச்சமயம் மிகச் சக்தி வாய்ந்த தேசமாகிய ஃப்ரான்ஸ் என்னதான் செய்யமுடியாது?

ஃப்ரான்ஸ் லூஸியானுவைக் கைப்பற்றினால் "அக்கணமே நாம் பிரிட்டிஷ் நாட்டோடும் கடற்படையோடும் மணம்புரிந்து கொள்ளவேண்டும்" என்று அமெரிக்கத் தலைவர் தைரியமாய் விளம்பரம் செய்தார்; ஐரோப்பியப் போரில் முதல் பீரங்கி முழங்கியதும் ஆங்கில அமெரிக்கப் படை நியூ ஆர்லீன்ஸைத் தாக்கும் என்றும் அவர் கூறினர். நெப்போலியன் அவ்வார்த்தையை நம்பினான். ஆகவே அவன், தன் கஜானுவை நிரப்பவும் பிரிட்டிஷார் லூஸியானுவைத் தொடாமல் தடுக்கவும், அமெரிக்கரின் நட்பைப் பெறவும் விரும்பி, அப்பிரதேசத்தை ஐக்கிய நாட்டிற்கு விற்றுவிடத் தீர்மானித்தான். அதன் விலை 15 மிலியன் டாலர் என்று கூறப்பட்டது. அமெரிக்க அரசாங்கத்திற்கு அயல் ஆட்சியிலிருக்கும் தலத்தை வாங்க அனுமதி கிடையாது. ஜெஃபெர்ஸன் துணிவுடன் அதிகாரங்களை மீறி காங்கிரஸின் அனுமதியும் பெறுமல் அக்காரியம் செய்தார்.

பாராட்டத்தக்க அச்செயலால் ஐக்கிய நாட்டின் விஸ்தீர்ணம் ஒரு மிலியன் சதுர மைலுக்கும் அதிகமாகத் திடீரென்று பெருகிற்று; கூடவே இயற்கை அழகும் செயற்கை அழகும் கொண்ட மிக உபயோகமான நியூ ஆர்லீன்ஸ் துறைமுகம் கைவசமாயிற்று. ஐக்கிய நாடு பெற்ற செழிப்பான இடம் 80 வருஷங்களில் உலகத்தின் தானியக் களஞ்சியங்களுள் ஒன்றாக விளங்கிற்று. அமெரிக்கக் கண்டத்தின் நடுப்பிரதேசத்திலுள்ள பெரிய ஆறுகள் அதற்குக் கிடைத்தன. அயல் அரசாங்கங்கள் தலையிடுதலுக்கு இடமின்றி அந்நதிகள் ஒரு தலைமையின் கீழ் உபயோகப்பாயலாம், மக்களுக்குப் பயன்படலாம். நான்கு ஆண்டுகளுக்குள் ராபர்ட் ஃபுல்டன் என்பவன் ஹட்ஸன் நதியில் சிறு நீராவிக் கப்பலை ஓட்டி நதிகளை லகுவாகவும் அதிகச் செலவில்லாமலும் உபயோகிக்கும் வழியைக் காட்டினான். மேற்குப்புற நதிகளில் புகை கக்கும் சிறு கப்பல்கள் பல செல்ல ஆரம்பித்தன; புது இடங்களுக்கு வெளியேறும் மக்கள் அவற்றில் சென்றனர்; திரும்புகையில் அவை ரோம சருமங்கள், தானியங்கள், உப்பில் பக்குவமான இறைச்சி வகைகள் போன்ற நூற்றுக்கணக்கான பண்டங்களை சந்தைகளில் கொண்டு சேர்த்தன.

ஜெஃபெர்ஸனின் முதல் பதவிக்காலம் தீரும்போது, அவர் பெரும்பாலான மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார். லூஸியானு லாபகரமான நன்கொடை என்பது தெளிவாயிற்று. வியாபாரம் செழிப்பாக இருந்தது. ஜனுதி பதி எல்லாப் பகுதிகளிடமும் நியாயமாக நடந்துகொள்ள முயன்றார். மறுபடி அவர் தேர்ந்தெடுக்கப்படுவது நிச்சயம். 1804-ல் 176 நியமனப் பிரதிநிதிகளின் வோட்டுகளில் பதினொன்றுதான் அவருக்கு கிடைக்கவில்லை. கனெக்டிகட் தவிர இதர நியூ இங்கிலாந்துப் பிரதேசங்களெல்லாம் அவர் பக்கம் இருந்தன. தன்னுடைய கட்சியைத் திடமாக அடக்கியாள முடிந்ததால் அவர் அடிக்கடி சதியாலோசனை செய்யும் பேராசைக்கார ஆரன் பர்-ரை நசுக்கத் தொடங்கினர். பர்-ரும் அவனுடைய சதிக்கூட்டத்தாரும் நாட்டின் ஒற்றுமையைக் கலைக்க முயலுகிறார்கள் என்று சரியாகச் சந்தேகித்த ஹாமில்டன் எடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் காரணமாக அவன் மிகவும் வெட்கப்படக் கூடிய நிலைமையடைந்தான். அதன் பிறகு அந்த அயோக்கியன் பழிவாங்குவதற்காக ஹாமில்டனைத் தூண்டித் தூண்டி சண்டைக் கிழுத்ததில் இருவரும் தொந்த யுத்தம் நடத்த வேண்டி வந்தது. ஹட்ஸன் நதியின் ஜெர்ஸிக் கரையில் ஜூலை மாதக் காலை ஒரு நாள் அச்சண்டை நடைபெற்றது. ஹாமில்டன் உயிர் துறந்தார். அறிவு ஒளிவீசும் ஜனரஞ்சக நாயகனை இழந்த நாடு கோபம் தோய்ந்த துக்காவேசத்தில் மூழ்கிற்று. பர் தன் நலனுக்காகத் தலைமறைவாகச் செல்லவேண்டி வந்தது. இனிக் கிழக்கே அவன் அரசியல் வாழ்க்கை அஸ்தமித்து விட்டது; எனினும் அவன் அடங்காத இறுமாப்போடு புது யத்தனங்களுக்காக மேற்கே சென்றான்.

அயல் நாடுகளுடன் சிநேக லீலைகள் ஆரம்பித்து, லூஸியானுவில் தனக்கு ஒரு ராஜ்யம் அமைத்துக்கொள்ள அவன் தீர்மானித்தான் என்று கூறப்படுகிறது. மெக்ஸிகோ நாட்டை வசப்படுத்த வேண்டுமென்பதுதான் அவனுடைய உத்தேசம் என்று வேறு சில சரித்திராசிரியர்கள் கருதுகிறார்கள்.

அது எவ்வாறிருந்தாலும் பர் சைத்தானைப்போலவே முழு வீழ்ச்சியடைந்தான். தென் மேற்கே இருந்த தேசபக்தர்கள் அவனுடைய சதியாலோசனையை அறிந்து 1806-ல் அவன் மீது குற்றங்கள் சாட்டினர்கள். ராஜத்துரோகத்திற்காக அவன் விசாரணைக்கு அனுப்பப்பட்டான். சந்தேகமற்ற சாக்ஷிகள் கிடைக்காததால், அவனுக்கு விடுதலை கிடைத்தது. ஆனால் அவன் இனி அரசியல் உலகத்தில் தலைதூக்க முடியாமல் அழிந்தான்.

அமெரிக்கர் நடுநிலை வகித்தல்; கப்பல் மறியல் சட்டம். பிரிட்டனுக்கும் ஃப்ரான்ஸுக்கும் இடையே அரக்கப்போர் நடக்கையில் அமெரிக்கா நடுநிலை வகிப்பதற்காக ஃபெடரல் அதிகாரத்தை ஜெஃபெர்ஸன் இரண்டாம் தடவை விசேஷ முறையில் பிரயோகிக்க நேர்ந்தது. இன்னும் போதிய அனுபவம் பெறுத இளம் ஜனநாயக நாட்டிற்குப் போராற்ற வாழ்க்கை அவசியம் என்று அவர் அறிந்தார். தரையிலும் கடலிலும் நடக்கும் கடும்போரின் தீவட்டத்திற்கு வெளியே ஐக்கிய நாட்டை நிறுத்தமுடியும் என்று அவர் நம்பினர். ஐரோப்பா கண்டம் முழுதையும் ஒரு சக்தி—ஃப்ரான்ஸ்—ஜெயிப்பதைத் தடுக்கவே பிரிட்டன் போரில் ஈடுபட்டிருந்தது. அதன் கையில்

இருக்கும் பல ஆயுதங்களில் வியாபாரப் போர் ஒன்று என்பது தெரிந்த விஷயமே. அதன் மதிப்பை நன்கறிந்த பிரிட்டன் நெப்போலியனின் சாம்ராஜ்யத்தின் கப்பல் போக்குவரத்தைத் தடுக்க முயன்றது. நெப்போலியனும் அதே முறையில் பழி வாங்க நினைத்தான். அந்நடவடிக்கையில் அமெரிக்க வியாபாரம் பெருந்தாக்குதல்கள் பெற்றது. ஃப்ரெஞ்சு மேற்கு இந்தியத் தீவுகளின் விளைபொருள்களை அமெரிக்கக் கப்பல்கள் ஏற்றிச் சென்றுகொண்டிருந்தன; பிரிட்டிஷார் அதைத் தடுத்தார்கள்; மேலும் ஸ்பெயினிலிருந்து ஜெர்மனியில் எல்பெ நதி வரை அமெரிக்கா துறைமுக வசதிகளை இழந்தது. பிரிட்டிஷாரின் சோதனைக்கு இணங்கிய அமெரிக்கக் கப்பலையும் பிரிட்டிஷ் துறைமுகத்தில் தங்கிய கப்பலையும் கைப்பற்றும்படி ஃப்ரான்ஸ் உத்தரவிட்டது. அதாவது, ஃப்ரான்ஸின் வசமிருந்த விஸ்தாரமான இடங்களிலோ, பிரிட்டனுடனோ அமெரிக்கக் கப்பல்கள் தொடர்பு கொள்ள முடியாது. சோதனை, தண்டனை விஷயங்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் சுமாராக விதிப்படி நடந்து கொண்டது; ஃபிரெஞ்சுக்காரர் சிறு காரணம் கிடைத்தாலும் அமெரிக்கக் கலங்களைப் பறிமுதல் செய்தார்கள்.

பிரிட்டன்மீது அமெரிக்கருக்குக் கோபம் உண்டான தற்குக் குறிப்பான ஒரு உதாரணம், கட்டாயப்படுத்தி ஆட்களை வேலையில் எடுத்துக்கொள்ளும் வழக்கமேயாகும். போரில் வெல்லுவதற்காக பிரிட்டிஷார் தம் கப்பற்படையைப் பெருக்கிக்கொண்டேபோவது அவசியமாயிற்று; உபயோகத்திலிருந்த போர்க்கப்பல்கள் 700-க்கும் அதிகமாக இருந்தன; மாலுமிகளும் கடல் வீரர்களும் மொத்தம் சுமார் 1,50,000 பேர் இருந்தார்கள். இந்த மரக்கலக் கோட்டை அவர்களுடைய நாட்டையும், வியாபாரத்தையும் குடியேற்ற நாடுகளுக்குப் போக்குவரத்தையும் நன்கு காப்பாற்றிற்று. பிரிட்டனின் க்ஷேம வாழ்வுக்கு அது அத்தியாவசியமானது. அப்படியிருந்தும் ஆட்களின் சம்பளம் மிகக்குறைவாகவும், உணவு மட்டமாகவும், நடத்தப்படும் முறை கேவலமாகவும் இருந்ததால், மாலுமிகள் சுயேச்சையாகக் கப்பல் வேலைக்குப் போவதில்லை. பலர் வாய்ப்புக் கிடைத்ததும் சொல்லிக்கொள்ளாமல் ஓடிப்போவதுமுண்டு; அவர்கள் வாழ்க்கைக்கும் வேலைக்கும் ஹிதமாயிருந்த அமெரிக்கக் கப்பல்களில் சரண் புகுவதுமுண்டு. இந்தச் சூழ்நிலையில் அமெரிக்கக் கலங்களைச் சோதிக்கவும் பிரிட்டிஷ் பிரஜைகள் அவற்றில் இருந்தால் அவர்களைப்பற்றிக் கொள்ளவும் தமக்கு உரிமையுண்டு என்றும் பிரிட்டிஷ் அதிகாரிகள் கருதினார்கள். அமெரிக்க மாலுமிகளைத் தம் வேலையில் பலவந்தமாக சேர்த்துக்கொள்ள அவர்கள் உரிமை கொண்டாடவில்லை; ஆனால் பிரிட்டிஷ் பிரஜை இந்நிலையில் அமெரிக்கப் பிரஜை ஆக்கப்படுவதை அவர்கள்

கண்டிப்பாக மறுத்தார்கள். அமெரிக்க அபிப்பிராயம் இதற்கு முற்றிலும் மாறுனது. பிரிட்டிஷ் போர்க்கப்பலின் பீரங்கிகளுக்குப் பயந்து பணிவுடன் தம் கப்பல் நிற்பதும், பிரிட்டிஷ் அதிகாரி தம் கப்பலில் ஏறித் தம் ஆட்களை வரிசையாய் நிறுத்திச் சோதிப்பதும் அமெரிக்கருக்கு மிகவும் தாழ்மையாகத் தோன்றிற்று. மேலும், பல பிரிட்டிஷ் ஆபீசர்கள் இறுமாப்போடும் நியாயம் தவறியும் நடந்துகொண்டார்கள். இந்தக் குழப்பத்தில் அவர்கள் நூற்றுக்கணக்கான அமெரிக்க மாலுமிகளை பலவந்தமாகத் தம் வேலையில் சேர்த்துக்கொண்டார்கள். இறுதியில், அவ்வெண்ணிக்கைப் பல்லாயிரமாயிற்று என்றும் சிலர் கூறினர்.

போர் புரியாமல் பிரிட்டனையும் ஃபிரான்ஸையும் நியாயமான வழிக்குத் திருப்புவதற்காக, ஜெஃபெர்ஸனின் ஆலோசனைப்படி காங்கிரஸ் "கப்பல் மறியல் சட்டம்" (Embargo Act) விதித்தது. அதன்படி அயல்நாட்டு வியாபாரம் முற்றிலும் தடைப்பட்டது. அது மிகக்கடுமையான சோதனை. முதலில், கடல் வியாபார நிலையங்கள் அநேகமாக முழிந்தன; நியூ இங்கிலாந்திலும் நியூயார்க்கிலும் அதிக அதிருப்தி உண்டாயிற்று. அதன்பிறகு, குடியானவர்கள் தம் நஷ்டத்தைப்பற்றி முறையிட்டார்கள்; ஏனெனில், தெற்கேயும் மேற்கேயும் இருந்த நிலச்சுவான்தார்கள் அதிகப்படியான தானியம், புகையிலை முதலியவற்றை ஏற்றுமதி செய்ய இயலாத நிலையில் விலைகள் படுத்துப்போயின. அரசியல் விமர்சகர்கள் இச் செயலை ஒரு நோயாளியின் உயிரைக் காப்பாற்றும் நிமித்தம் ஒரு காலை மாத்திரம் வெட்டிவிலக்கும் ரணசிகிச்சை முறைக்கு ஒப்பிட்டார்கள். ஆனால் கப்பல் மறியல் பிரிட்டனின் உணவு நிலையைப் பாதித்து அதன் கொள்கையை மாற்றும் என்ற நம்பிக்கை தவறுயிற்று—பிரிட்டன் அசைவதாகத் தென்படவில்லை. உள் நாட்டில் நஷ்டமும் அதிருப்தியும் அதிகமாவதைக்கண்டு ஜெஃபெர்ஸன் தம் கொள்கையைச் சற்றுத் தளர்த்தினார். மறியல் சட்டத்திற்குப் பதிலாக "உறவின்மைச் சட்டம்" (Nonintercourse Law) விதிக்கப்பட்டது. அதன்படி, பிரிட்டனோடும், ஃபிரான்ஸோடும் அந்நாடுகளின் ஆதீனத்திலுள்ள நாடுகளோடும் வியாபாரம் கூடாது; ஆனால் அவ்விருநாடுகளில் ஏதேனும் நடுநிலையாரின் வியாபாரத்தைத் தாக்காதிருந்தால் அந்நாட்டுடன் உறவு மறுபடி துவக்கப்படும். 1810-ல் நெப்போலியன் விரோத நடவடிக்கைகளை நிறுத்தி விட்டதாக அதிகார பூர்வமாய் அறிவித்தான். அது ஒரு பொய். ஆனாலும் ஜக்கியநாடு அவன் சொல்லுக்கு மதிப்பளித்து, பிரிட்டனோடு மாத்திரம் உறவு கொள்ளாமல் இருந்தது.

1812-ஆம் ஆண்டுப் போர்:—இச்செய்கையால் பிரிட்டனின் விரோதம் அதிகமாயிற்று; இரண்டு நாடுகளும் போர்நிலையை நெருங்கின. பல நிகழ்ச்சிகள் மனக்கசப்பை வளர்த்தன. சென்ற மூன்று ஆண்டுகளில் அமெரிக்கப் பிரஜைகளை பிரிட்டிஷார் பலவந்தமாய் பிடித்துச்சென்ற 6057 உதாரணங்களைப் பற்றிய விவரமான ரிப்போர்ட்டை ஜனதிபதி காங்கிரஸின் முன் சமர்ப்பித்தார். மனத்தாங்கலுண்டாக்கும் வேறுநிகழ்ச்சிகளும் இருந்தன. வடமேற்குக் குடியேற்ற ஸ்தலங்களில் செவ்விந்தியர்கள், டெகும்ஸே என்னும் திறமையுள்ள தலைவனின் கீழ், அமெரிக்கக் குடிகளைத் தாக்கி நஷ்டப்படுத்தினர்கள்; கானடாவிலிருந்த பிரிட்டிஷ் ஏஜெண்டுகளின் தூண்டுதல் அதற்குக் காரணம் என்று கருதப்பட்டது.

இன்னொரு காரணமும் இருந்தது. அது முற்றிலும் சுயநலமானது. மேற்கே, நிலப்பேராசை கொண்ட பலர் கானடா முழுவதையும் கைப்பற்றிக் கொள்ள விரும்பினர்கள்; காங்கிரஸில் அவர்களுடைய பிரதிநிதி கென்டக்கியைச் சேர்ந்த ஹென்ரிக்லே; அவன் பேச்சுச் சாமர்த்தியமும், செயல்திறமையும் கொண்டவன். மேற்கு நாட்டாரின் கெட்ட யோசனையைத் தெற்கு சீமைக்காரர் ஆதரித்தார்கள்; அவர்களுடைய நாயகன் ஜான் ஸி. கால்ஹௌன் (Calhoun). அவன் பிரிட்டனின் நேச தேசமாகிய ஸ்பெயினிடமிருந்து ஃப்ளாரிடாவைக் கைப்பற்ற ஆசைப்பட்டான். இதையெல்லாம் காரணமாகக் கொண்டு 1812-ல் அமெரிக்கா பிரிட்டன்மீது போர் தொடுத்தது. அச்சமயம் மாடிஸன் ஜனதிபதி.

1812-ஆம் வருஷப்போர் அமெரிக்கச் சரித்திரத்திலேயே பல விதங்களிலும் மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சி. முதலாவது, அது தேவையற்றது; காங்கிரஸ் போர்ப்பிரகடனம் செய்து கொண்டிருக்கும் அதே சமயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் அமெரிக்கருக்கு மிக அதிக மனத்தாங்கல் உண்டாக்கிய உத்தரவுகளை ஒரு நிபந்தனையுமின்றி ரத்து செய்துகொண்டிருந்தது. இன்னொரு விஷயம், அமெரிக்காவில், மிக ஆபத்தான உள்நாட்டுப் பூசல்கள் வளர்ந்துகொண்டிருந்தன. தென்னும் மேற்குநாடும் போரை ஆதரிக்கையில் நியூயார்க்கும், நியூ இங்கிலாந்தும் பொதுவாக அதை எதிர்த்தன; போரின் இறுதி நாட்களில் சில முக்கியமான நியூ இங்கிலாந்து கட்சிகளின் எதிர்ப்பு அரசாங்கத் துரோகம் எனக்கூடிய அளவுக்கு வளர்ந்து விட்டது. மூன்றாவது காரணம்—ராணுவ நடவடிக்கை மிகவும் அபகீர்த்தியளிக்கக்கூடியதாயிற்று.

ஜெஃபெர்ஸனின் சிக்கனமுறையில், 1809-ல் அமெரிக்க சேனை மூவாயிரத்திற்கும் குறைவாக இருந்தது; குடிபடையோ (Militia) பயிற்சியற்ற, கட்டுப்பாடற்ற கும்பல்; படைகள் போர்புரிய லாயக்காகவே இல்லை. சிப்பாய்களில் பலர் சிறைச்சாலைகளிலும் கள்ளுக்கடைகளிலுமிருந்து விலக்கப்பட்டவர்கள். மேலதிகாரிகளும் பெரும்பாலும் தகுதியற்றவர்கள். ஒரு குண்டு சுடாமல் டெட்ராய்ட் நகரை இழந்ததே போரின் துவக்க நிகழ்ச்சி.


விபத்துக்கு மேல் விபத்து நிகழ்ந்தது. கானடாப் படையெடுப்பில் அமெரிக்கர் மொத்தத்தில் தோற்றனர். வடக்கு எல்லையில் நடந்த மிகக் கடுமையான போர் நயாகராவுக் கருகில் 1814, ஜூலையில் நிகழ்ந்தது; இருபுறத்தாரும் முடிவில் சமலாப நஷ்ட நிலையில் இருந்தார்கள்; ஆனால் இருபுறத்தாரும் வெற்றி கொண்டாடினர்கள். ஆனால் அது உண்மையில் தற்காலிகமாக அமெரிக்க முன்னேற்றத்தை நிறுத்தி வைத்ததால், பிரிட்டிஷாருக்கும் கனேடியர்களுக்கும் எக்களிக்க அதிக உரிமையுண்டு.

நெப்போலியனின் படைகள் ஸ்பெயினில் தோல்வியுற்றதன் பேரில், வெல்லிங்டனின் நீண்ட அனுபவம் பெற்ற படைகள் திரும்பி வந்து பிரிட்டிஷ் சேனையை மிகவும் வலுப்படுத்தின. யுத்தப் பயிற்சியில் ஊறிய ஒரு படை நியூயார்க்கில் பிரவேசித்தது; ஆனால் அதே சமயம் அருகாமையில் பிரிட்டிஷ் கடற்படை இருபத்தெட்டே வயதான தாமஸ் மக்டானு (Macdonough) என்னும் அதிகாரியால் கமுரூகத் தோற்கடிக்கப்பட்டது; போக்குவரத்துக்கு ஏற்பட்ட ஆபத்தைக் கண்டு பிரிட்டிஷ் படை பின்வாங்க வேண்டி வந்தது. ஐயாயிரத்துக்கும் குறைவான இன்னொரு பிரிட்டிஷ் படை வாஷிங்டனுக்கருகில் ப்ளாடென்ஸ்பர்க் என்னுமிடத்தில் அதைவிடப் பெரியதும் பயிற்சி பெறுததுமான அமெரிக்கச் சேனையைத் தோற்கடித்தது. நியூ ஆர்லீன்ஸில் செவ்விந்தியர்களை அடக்குவதில் தீரஞன ஆண்ட்ரூ ஜாக்ஸன் ஒரு சிறந்த பிரிட்டிஷ் படையைத் தோற்கடித்து மகத்தான தேசிய வீரன் என்ற பெயர் பெற்றான். ஆனால் போர் நின்ற பிறகு, உடன்படிக்கையில் கையொப்பங்கள் இடப்பட்ட செய்தி அமெரிக்காவில் பரவுவதற்கு முன்னர், அச்சண்டை நடைபெற்றது. (1815, ஜனவரி 8). கானடாவில் இப்பொழுது டரான்டோ எனப்படும் யார்க் பட்டணத்திலிருந்து பொதுக் கட்டடங்களை அமெரிக்கர் அழித்ததற்குப் பழிவாங்க பிரிட்டிஷ் துருப்புக்கள் ஜனதிபதியின் வீட்டின் மேலும், காரியாலயத்தின் மேலும் குண்டு வீசினர்கள்; ஆனால், பால்டிமோருக்கருகில் மக்ஹென்ரிக் கோட்டைமீது நடந்த கப்பல் பீரங்கித் தாக்குதல் வீணாயிற்று; ஏனென்றால் கரையோரத்து மணல் திட்டுகளின் காரணமாகக் கப்பல்கள் தொலைவில் நிற்கவேண்டி வந்தது. காலையில் பார்த்தபோது கோட்டைமேல் அமெரிக்கக் கொடி ஒரு பழுதுமில்லாமல் பறந்துகொண்டிருந்தது. ஃப்ரான்ஸிஸ் ஸ்காட் கீ என்னும் அமெரிகன் அக்கொடியைக் கண்டு "நட்சத்திரம் மின்னும்

கொடி'' (The Star-Spangled Banner) என்னும் கீதம் எழுதினான். அது அமெரிக்கருக்கு மிகப் பிரியமானதாயிற்று. மொத்தத்தில் தரைப் போர்கள் அமெரிக்கருக்கு அபகீர்த்தி யளித்தன.

கடலில் அமெரிக்கர்கள் ஓரளவு வெற்றி அடைந்தார்கள். வாஷிங்க்டன், ஆடம்ஸ் இருவரின் தலைமையில் அமெரிக்கக் கடற் படை முறையாக வளர்த்து வலுப்படுத்தப்பட்டது. ஃப்ரான்ஸுடன் நடந்த சிறுபோரிலும், 1803-1804-ல் அமெரிக்க வியாபாரக் கலங்களைத் தாக்கிக் கொள்ளையடிக்க முயன்ற ட்போலி நாட்டுக் கொள்ளைக் கப்பலை அழிப்பதிலும் அமெரிக் கப்படை பாராட்டத்தக்க வெற்றி பெற்றதோடு நல்ல பயிற்சி யும்பெற்றது. நிலப்படைசிரற்றுஇருந்ததற்குமாறுக, எட்வோர்டு ப்ரெபில் என்பவனின் தலைமையில் கடற்படை நல்ல அஸ்திவா ரத்துடன் கிளம்பிற்று. ப்ரெபில் அனுசரித்த பயிற்சிமுறை குரூரமாகத் தோன்றும்; ஆனால் அது செயல் திறமை யூட் டிற்று, சமயோசிதத் துணிச்சல், வீரத்தனம், கீழ்ப்படிதல் முதலான குணங்களை வளர்த்தது: ஸ்டீஃபன் டெகாடர் போன்ற பல இளம் ஆபீசர்கள் ப்ரெபிலின் சீடர்கள். மத்திய தரைக்கடல் பகுதியின் வெற்றிகளுக்கு ப்ரெபில் முக்கிய கார ணம். எண்ணிக்கையில் கப்பற்படை சிறியதே; ஜெஃபெர் ஸன் தவறான எண்ணத்துடன் கரையோர பீரங்கிப் படகுகளில் அதிக அக்கறை காட்டினார். 1810-ல் ஆற்றல் வாய்ந்த போர்க் கப்பல்கள் ஒரு டஜனே இருந்தன; ஆனால் ஒற்றைச் சண்டை களில் அமெரிக்கக் கப்பல் தலைவர்கள் சமனை அல்லது அதிக எடையுள்ள பிரிட்டிஷ் கலங்களை ஒவ்வொரு தடவையும் தோற் கடித்தார்கள். உள்நாட்டில் ''பெரிய ஏரிகளிலும்'' அமெரிக் கர் தம் வீர குணங்களைக் காட்டினர். உதாரணமாக 'இரி' ஏரி யில் முப்பது வயதை நெருங்காத காப்டென் ஆலிவர் ஹஸார்ட் பெர்ரி ஒரு சிறு படை திரட்டியிருந்தான்; அவன் ஒரு சிறு பிரிட்டிஷ் படையைத் தேடிப் பிடித்து விரட்டித் துன் பப்படுத்தித் தோற்கடித்தான். இவ்வளவிருந்தும் இறுதியில் எண்ணிக்கையிலும் ஆற்றலிலும் வலுத்திருந்த பிரிட்டிஷ் கடற் படை சமுத்திரங்களையெல்லாம் தன் வசமாக்கிக் கொண்டு, அமெரிக்க வியாபாரக் கப்பல்களை பதுங்கியிருக்கச் செய்து அமெரிக்கக் கடல் முழுதையும் காவல் காத்து நின்றது.

1814-ல் கென்ட் (Ghent) நகர உடன்படிக்கையுடன் போர் முடிந்தது. ஜான் க்வின்ஸி ஆடம்ஸ், ஹென்ரி க்ளே முதலான வர் சேர்ந்து எழுதின உடன்படிக்கை ஷரத்துக்களில் நடுநிலை உரிமைகளில் தலையிடுதல், பலவந்த வேலை நியமனம், போன்ற —துவக்கத்தில் முக்கியமானவை என்று கருதப்பட்ட— கார ணங்கள் இடம் பெறவே இல்லை.



தேச ஒற்றுமை: ஒரு வகையில் போர் நாட்டின் வளர்ச்சிக்குக் குறிப்பான உதவி புரிந்தது. அதிருப்தியிலும் சச்சரவுகளிலும் பிறந்து வளர்ந்தாலும் அது, அதே சமயத்தில், தேச ஒற்றுமை, தேச அபிமானம் என்னும் உணர்ச்சியை வலுப்படுத்திற்று. இதற்குப் பல காரணங்கள் கூறலாம். சிதறிக் கிடந்த சில வெற்றிகளும், முக்கியமாக நியூ ஆர்லீன்ஸில் பாகன் ஹாமின் அனுபவகாலிகளின் தோல்வியும், அமெரிக்கா பெருமிதமும் சுயநம்பிக்கையும் அடைவதற்கு உதவின. ஜெஃப் பெர்ஸனின் "தாழ்ந்துபோகும் கொள்கை", வளர்த்த தாழ்மை மனப்பான்மை மறைய ஆரம்பித்தது. அடுத்தபடியாக, பல ராஜ்ஜியத்தார் தோளுக்குத் தோள் நின்று போர்புரிந்ததும், வடக்கத்தித் துருப்புக்கள் வர்ஜீனியாக்காரனாகிய வின்ஃபீல்ட் ஸ்காட்டை சிறந்த தலைவன் என்று ஏற்றுக்கொண்டதும் தேச ஒற்றுமை யுணர்ச்சியை வளர்த்தன. மேற்குத்தித் துருப்புகள் சில வெற்றிகளினால் மிகவும் பெருமைப்பட்டார்கள்; அவர்களுக்குத் தம் ராஜ்யத்தைக் காட்டிலும் தம் தேசத்திடந்தான் அதிக பற்றுதலும் விசுவாசமும் உண்டு; அவ்விஷயத்தில் அவர்கள் ஆதியிலிருந்த 13 ராஜ்யத்தாரிடமிருந்து வேறுபட்டவர். இப்போருக்குப் பிறகு மேற்கு நாடு அமெரிக்க வாழ்க்கையில் அதிக முக்கிய இடம் பெற்றது; அது எப்பொழுதுமே தேசிய மனப்பான்மை கொண்டது. கடைசியாக, சுயநலமும் குறுகிய மனமும் உள்ள சில கோஷ்டியாரின் தேச அபிமானமற்ற நடத்தை மக்களுக்கு அருவருப்பை உண்டாக்கிற்று.

மொத்தத்தில் இந்தத் துரதிர்ஷ்டப் போரின் காரணமாக நாட்டு மக்களின் மனம் அதிகப் பக்குவமடைந்ததோடு சுதந்திர உணர்ச்சியும் வளர்ந்தது; அவர்களிடையே நெருங்கிய இணைப்பு உண்டாயிற்று; ரோலம், பெருந்தன்மை போன்ற குண விசேஷங்கள் வலுப்பட்டன. ஆல்பர்ட் கால்லடினின் அபிப்பிராயப்படி, "போருக்கு முன் அமெரிக்கர் சுயநலமாகவும், ஸ்தூல சுகத்தை நாடுவோராகவும், குறுகிய ஸ்தல நோக்க முள்ளவர்களாகவும் இருந்தார்கள். புரட்சிப் போர் ஊட்டிய தேசிய மனப்பான்மை மங்கிக் கொண்டிருந்தது; இப்போர் அதை மறுபடி தூண்டிவிடுகிறது. இப்பொழுது அதிகப் பரவலானப் பொது விஷயங்களில் பற்றுதலும் பெருமிதமும் அரசியல் அபிப்பிராயங்களும் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. முன்னிலும் அதிகமாக அவர்கள் 'அமெரிக்கர்களாக' ஒரு நாட்டாராக உணர்ந்து நடந்துகொள்கிறார்கள்; நாட்டின் ஐக்கியம் சாசுவதமாய் இருக்க அது உதவுமென்று நம்புகிறேன்." போர் நிகழ்ச்சிகளில் ஏற்றத்தாழ்வுகள் அதிகம் இல்லாததால் முடிவில் மனத்தாங்கலும் குறைவாகவே இருந்தது. நூறு வருஷங்களுக்குப் பிறகு பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் போர்க்களத்தில் சந்தித்தபோது அவர்கள் ஒரு பொது

எதிரியைத் தாக்கும் நேச தேசத்தார் என்ற நிலையில் இருந்தார்கள்.

சமஷ்டி வாதியோ சமஷ்டி எதிரியோ எந்தக் கட்சி அதிகாரம் வகித்தாலும் தேச ஒற்றுமையும் மத்திய அரசாங்கத்தின் சக்தியும் வளர்ந்தன என்று சரித்திரம் நிரூபித்துவிட்டது. தேச வளர்ச்சிக்கு அது மிகத் தேவையாக இருந்தது என்பதே அதற்குக் காரணம். லூஸியானாவைப் பெறுதல், ஃப்ரான்ஸோடும் பிரிட்டனோடும் வியாபாரப் போர் புரிதல், வட ஆஃப்ரிக்க கொள்ளைகாரப் படைகளை அழித்தல், பிரிட்டனோடு யுத்தம் நடத்துதல்—இதற்கெல்லாம் ஆற்றலும் விறுவிறுப்புமுள்ள மத்திய அரசாங்கம் தேவை.

சுப்ரீம் கோர்ட்டின் திடமான தீர்மானங்களும் மத்திய அரசாங்கத்தைத் திடப்படுத்தின என்பதும் குறிப்பிட வேண்டிய விஷயம். ஜெஃபர்ஸன் தலைமை வகிப்பதற்கு சற்று முன் பிரதான நீதிபதியாக்கப்பட்ட ஜான் மார்ஷல் 1835—ல் இறக்கும்வரை அப்பதவியை வகித்தார். அவர் தீவிர சமஷ்டிவாதி; கௌரவமும் செல்வாக்கும் இல்லாத வழக்குக்கச்சேரியை ஆற்றலும் மேன்மையும் படைத்த தர்ம ஆசனமாக உயர்த்திய கீர்த்தி அவருக்குண்டு; காங்கிரசுக்கும், ஜனாதிபதியின் காரியாலயத்திற்கும் சரி நிகராக அது கருதப்பட்டது. கூரிய புத்தியுடன் அவர் அளித்த 'மறக்க முடியாத' தீர்ப்புக்களில் இரண்டு கொள்கைகளைக் காணலாம்—சமஷ்டி அரசாங்கத்தின் சர்வ உன்னத நிலை; சொந்த சொத்தின் புனிதத்தன்மை.

மார்ஷல் ஒரு பெரிய நீதிபதி. தர்க்க சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட அவருடைய தீர்ப்புக்கள் அநேகமாய் எல்லோருடைய சம்மதத்தையும் பெறும்; நடை எளியதாக இருந்தாலும், கனமான படிப்பும் ஆழ்ந்த பூர்ணமான ஆராய்ச்சியும் அவற்றில் காணலாம். அவர் வழக்கமாகத் தன் முக்கியப் பிரஸ்தாவனையை நன்கு ஸ்தாபிப்பார்; பிறகு ஆட்சேபங்களைத் தகர்த்துக்கொண்டே அவர் அனுமானங்களுக்குச் செல்வார்; கடைசியில் ஏராளமான மேற்கோள்களோடும் உதாரணங்களோடும் தம் தீர்ப்பைக் கூறுவார். தலைமை வகிக்கும் அவர், சமரஸ உணர்ச்சியை வளர்த்து நீதிபதிகள் இடையே அபிப்பிராய பேதங்களுக்கோ விரசமான கருத்துக்களுக்கோ அதிக வாய்ப்புக் கிடைக்காமல் பார்த்துக்கொண்டார். மார்ஷல் பெரிய நீதிபதி மட்டுமல்ல, அவர் சிறந்த ராஜ்ய நீதி நிபுணர். பக்குவமான அரசியல் அறிவுடன் அவர் ராஜ்ய நீதி சம்பந்தப்பட்ட 40, 50 வழக்குகளில் தீர்ப்புக் கூறியிருக்கிறார். நிர்மாணத் திட்டத்தின் அநேகமாய் எல்லா அங்கங்களோடும் அவை சம்பந்தப்பட்டவை. ஆகவே, அவருடைய நீண்ட உத்தியோக காலம் முடிவடைந்தபோது, நாடு முழுதும் கோர்ட்டுகள் கையாண்ட நிர்மாணச் சட்டம்

பெரும்பாலும் மார்ஷலின் விளக்கம் பெற்ற சட்டமாகும். அவர் தம் தெள்ளறிவுடன் நிர்மாணத் திட்டத்தைப் புது அச்சில் வார்த்ததாகக் கொள்ளலாம்.

தேசியம் தடுக்க முடியாதபடி வளர்ந்து கொண்டிருந்தது. உல்லியம் ப்ரையன்ட், இர்விங், ஃபெனிமூர் கூபர் முதலியோர் வழிகாட்டத் தேசிய இலக்கியம் உருவாகிக் கொண்டிருந்தது. 1815-ல் அமெரிக்க வாழ்க்கையைச் சித்தரிக்கும் 'நார்த் அமெரிக்கன் ரெவ்யூ' என்னும் பத்திரிகை, ஆங்கில மும்மாதப் பத்திரிகைகளை மாதிரியாகக் கொண்டு, துவங்கிற்று. ஓவியர்களும் ஐரோப்பிய செயல் முறையையும் அமெரிக்க வாழ்க்கையையும் இணைத்து ஒரு புதுப் பரம்பரையை உண்டாக்கினார்கள். கட்டட நிர்மாண இயல் பயின்ற ஜெஃபெர்ஸன் இத்தாலிய முறையையும், புராதன (கிரேக்க உரோம) முறையையும் அமெரிக்கத் தேவைக்குத் தக்கபடி திருத்தியமைத்தார்; வர்ஜீனியா சர்வ கலாசாலைக் கட்டடங்கள் அவருடைய இப் பணிக்குச் சான்றாகும். முன்னேக்காட்டிலும் சிறந்த தேசிய நிலத் திட்டம் அமுலுக்கு வந்தது; 1820-ஆம் ஆண்டின் ஒரு சட்டப்படி சர்க்கார் நிலத்தின் விலை ஏக்கருக்கு இரண்டு டாலரிலிருந்து 1 டாலர் 25 சதம் ஆயிற்று. வியாபாரம் அமெரிக்க மக்களை ஒன்றுக இணைத்துக் கொண்டிருந்தது. போர்க்காலத்தில் உயர்த்தப்பட்ட இறக்குமதி வரி 1816-க்குப் பின்னரும், புதுச் சட்டப்படி, நடப்பில் இருந்ததால் அமெரிக்கக் கைத்தொழிலுக்கு உண்மையான பாதுகாப்பு கிடைத்தது. அதே வருஷம் இரண்டாம் ஐக்கிய நாட்டுப் பாங்கு அமைக்கப்பட்டது. (முதல் பாங்கு நஷ்டப்பட்டு முறிந்து கொண்டிருக்கும் போது எவரும் அதைக் காப்பாற்றவில்லை.) அரசாங்கத்தின் நிதிப் போக்குவரத்தில் உதவுதலும் பொருளாதார விஞ்ஞான முறையில் காகிதப் பணம் விநியோகித்தலும் அதன் பொறுப்பாயிற்று. கிழக்குப் பிரதேசத்தையும் மேற்குப் பிரதேசத்தையும் இணைப்பதற்குப் போக்குவரத்து வசதி வளர்தல் அவசியம் என்று எடுத்துரைத்து, க்லே, கால்ஹௌன் முதலிய தலைவர்கள் சாலைகளும் வாய்க்கால்களும் தேசிய அடிப்படையில் விருத்தி செய்யப்பட வேண்டும் என்று மன்றாடினார்கள். தேசிய ஐக்கியம் வளர வளர ஜனநாயக மனப்பான்மையும் வளர்ந்தது.

அத்தியாயம் 8

ஜாக்ஸனின் ஜனநாயக முறை

மன்ரோ (Monroe) கொள்கை: 1817-ல் ஜேம்ஸ் மாடிஸன் பதவியிலிருந்து விலக, ஜேம்ஸ் மன்ரோ தேசத்தலைவர் ஆனார். இயற்கையாக விசேஷ குணங்கள் இல்லாத போதிலும் உயர்ந்த பதவிகளை மிகச்சிறப்புடன் வகித்தவர் அவர். ஸெனெட் அங்கத்தினர், கவர்னர், ஃப்ரான்ஸிலும் இங்கிலாந்திலும் மந்திரி, உள்நாட்டுக் காரியதரிசி ஆகிய உத்தியோக அனுபவங்கள் பெற்றுக் கடைசியில் அவர் ஜனாதிபதி ஆனார். அச்சமயம் அரசியல் நிலை ஓரளவு பிரதிகூலமாக இருந்தாலும் அரசியல் கட்சிகள் தற்காலிகமாகச் செயலாற்றாமல் இருந்தன. ஆகவே, 1821-ல் மறுபடி தேசத்தலைவர் ஆனார்; நியூ ஹாம்ப்ஷைர் வோட்டு ஒன்று தவிரப் பாக்கியெல்லாம் பெற்ற பெருமை அவருக்குண்டு. சரித்திரத்தில் ஒருமனப்பாடான தேர்தல் என்னும் கௌரவம் வாஷிங்க்டன் ஒருவருக்குத்தான் கிடைக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன்தான் அந்த ஒரு வோட்டு அவருக்கு மறுக்கப்பட்டதாம்! மன்ரோ மக்களின் மனதை அதிகமாகக் கவரவில்லை; கூரிய விவேகமும் திடச்சித்தமும் மன்ரோவின் இரு விசேஷ குணங்கள்; ''திடமான தீர்மானமும் ஆணித்தரமான தீர்ப்புக்கள் அளிக்கும் மனமும் படைத்தவர்'' என்று ஜான் க்வின்ஸி ஆடம்ஸ் பாராட்டியிருக்கிறார்.

''மன்ரோ கொள்கை'' எனப்படும் அவரது வரையறுப்பு அவர் பெயரை சிரஞ்சீவியாக்கி விட்டது. 1823-ல் அவர் காங்கிரசுக்கு அளித்த வருடாந்தரப் பிரசங்கத்தில் ஒரு பகுதியாகிய இந்த வரையறுப்பில் இரண்டு கருத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன. இரண்டு அமெரிக்காக்கள் கொண்ட மேற்குப் பாதி உலகில் ஐரோப்பிய நாட்டார் இனி ஆதீனப்பிரதேசங்கள் உண்டாக்கலாகாது என்பது ஒன்று; புது உலக ராஜ்யங்களின் சுவாதீனம் பங்கப்படும் வகையில் ஐரோப்பிய அரசுகள் அவற்றின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடலாகாது என்பது இரண்டாவது கருத்து. இவ்விரண்டும் மாறுபட்ட இரண்டு சம்பவங்களிலிருந்து பிறந்தன.

முதலாவது, அலாஸ்காவுக்குத் தெற்கே 51 டிக்ரீ வட அட்சாம்ச ரேகை வரையுள்ள பிரதேசம் தன்னுடையது என்று ரஷ்யா கூறிற்று; பஸிஃபிக் கரையில் வடமேற்குப் பிரதேசத்தில்

அமெரிக்கரும் பிரிட்டிஷாரும் நாட்டுரிமை கொண்டாடிக் கொண்டிருந்த இடம் அது. இரண்டாவது, ஐரோப்பாவில் நான்கு நாடுகள் கூடிச் செய்து கொண்ட ஒரு நேச ஒப்பந்தம் பிற்போக்கானது. அக்கூட்டம் ஸ்பெயினிலும் இத்தாலியிலும் குடியரசு வளராமல் தடுக்க முயன்றது. தென் அமெரிக்காவில் சமீபத்தில் விடுதலை பெற்ற 'லத்தீன் அமெரிக்க' ராஜ்யங்களைப் பயமுறுத்தி அவற்றுள் சிலவற்றையாவது ஸ்பெயினின் ஆதீனத்தில் கொண்டு வர அது முயன்றது. அந்நடவடிக்கையில் ஃப்ரான்ஸ் தலைமைவகிக்கும்; அதன் விளைவாக அந்நாட்டுக்குச் சில குடியேற்றப் பிரதேசங்கள் கிடைத்திருக்கலாம்.

அச்செய்தியைக் கேட்டதும் கீர்த்திவாய்ந்த பிரிட்டிஷ் அயல் நாட்டுக் காரியதரிசி ஜ்யார்ஜ் கானிங் மிகவும் திகைத்தான். அது போன்ற தலையிடுதலைத் தடுக்க ஐக்கிய நாடும் பிரிட்டனும் சேர்ந்து முயலவேண்டும் என்று அவன் யோசனை கூறினான்; அமெரிக்க அரசாங்கம் சம்மதிக்கத் தயார் போல இருந்தது. ஜேம்ஸ் பெர்ஸனும் மாடிஸனும் கூட்டுத் தடுப்பு நடவடிக்கையை ஆதரித்தனர்; ஆனால் உள்நாட்டுக் காரியதரிசி ஜான் க்வின்ஸி ஆடம்ஸ் ஐக்கிய நாடு தனியாகவே அக்காரியத்தில் ஈடுபடவேண்டும் என்று உறுதியாக யோசனை கூறினான்; அது சரியான யோசனை; மன்ரோ கடைசியில் ஒப்புக் கொண்டார். காங்கிரசுக்கு விடுத்த செய்தியில் அவர் முதலில் "ஐரோப்பிய வல்லரசுகள் பிற்காலக் குடியேற்றத்திற்கு அமெரிக்கக் கண்டங்களை உபயோகிக்கக்கூடாது" என்றும், அடுத்ததாக "லத்தீன் அமெரிக்க ராஜ்யங்களை ஐரோப்பிய வல்லரசுகள் துன்பப்படுத்தினாலோ அல்லது வேறு விதத்தில் அவற்றின் வாழ்க்கையில் அக்கறை காட்டினாலோ ஐக்கிய நாடுகள் அச்செயலைத் தனக்குப் பிரதிகூலமான செயல் என்று கருதும்" என்றும் பிரகடனம் செய்தார். அமெரிக்க அயல் நாட்டுக் கொள்கையில் இது ஒரு முக்கியமான கட்டம். ஒரு நூற்றாண்டுக்கும் அதிகமாக அத்தீர்மானம் தன் ஆற்றலைக் காட்டி வந்திருக்கிறது.

மிஸௌரி சமரஸ ஒப்பந்தம்: இதுவரையில் பொது மக்களின் கவனத்தை அதிகமாய்க் கவராத போதிலும், அடிமைத் தொழில் முறை வேகமாக வலுவடைந்து வந்தது; 1819-ல் அது திடீரென்று ஒரு பயங்கரமான சமூகப் பிரச்னையாக உருவெடுத்தது. ஜனநாயகத்தின் அடிநாட்களில் வடபுற ஸ்டேட்டுகள் உடனடியாகவோ படிப்படியாகவோ அடிமை விடுதலைக்கு ஏற்பாடு செய்தபோது அடிமை முறை எல்லா இடங்களிலும் தானாக மறைந்துபோகும் என்று நாட்டுத் தலைவர்கள் நினைத்தார்கள். வாஷிங்க்டன் தம்முடைய உயில்படி தம் அடிமைகளுக்கு விடுதலை யளித்தார். விடுதலையளித்தல், நாடு கடத்துதல் ஆகிய இருவகைகளிலும் அடிமை முறைக்கு முற்றுப்புள்ளி

வைக்கவேண்டும் என்று ஜேம்ஸ் பெர்ஸன் எண்ணினார். பாட்ரிக் ஹென்ரி, மாடிஸன், மன்ரோ ஆகிய பலர் அதுபோன்ற அபிப்ராயங்கள் கொண்டனர்.

ஆனால் அடுத்த தலைமுறையில், அடிமை முறை நிலைத்திருக்க வேண்டும் என்று தென்பிரதேசம் நினைக்க ஆரம்பித்துவிட்டது; பெரும்பாலோர் அக்கொள்கையைத் தீவிரமாக ஆதரித்தார்கள். அந்த மாறுதல் எப்படி ஏற்பட்டது? அடிமைத்தன்மையை ஒழிக்கவேண்டும் என்ற விருப்பம் ஏன் அநேகமாக மறைந்து விட்டது? புரட்சி நாட்களில் வளர்ந்து வந்த உதார மனப்பான்மை செல்லச் செல்ல க்ஷீணித்து வந்தது என்பது ஒரு காரணம். தூயக் கொள்கைகள் கொண்டு அடிமைவிடுதலைப் பிரசாரம் செய்யும் நியூ இங்கிலாந்துக்கும் அடிமைகளால் லாபமடையும் தென்னுட்டாருக்கும் இடையே பொதுவாக விரோதபாவம் கிளம்பிக் கொண்டிருந்தது இன்னொரு காரணம்; 1812-ன் போர், இறக்குமதிவரி, முதலான பெரிய விஷயங்களில் இரு பிரதேசத்தாருக்கும் இடையே அபிப்பிராயபேதம் வளர்வது இயல்பு. எல்லாவற்றிற்கும் மேல், சில புதியப் பொருளாதாரச் சூழ்நிலைகளின் காரணமாக அடிமைகள் மூலம் முதலாளிகளுக்கு அதிக லாபம் கிடைக்க ஆரம்பித்துவிட்டது; நிலைமை 1790-க்கு முன் இருந்தது போலல்ல.

பருத்தி விவசாயம் வேகமாக அதிகரித்துவருவது ஒரு பொருளாதார மாறுதல். மேலும்மேலும் சிறந்த பருத்தி வகைகள் பயிரிடப்படுவதோடு, விதை வேறு, பஞ்சுவேருக அரைக்கப் புது யந்திரமொன்று கண்டுபிடிக்கப்பட்டது பருத்தி வேளாண்மையைப் பரப்பிற்று. கரோலினா ராஜ்யங்களிலும் ஜ்யார்ஜியாவிலுமிருந்து பருத்தி விவசாயம் மேற்கே பரவி மிஸிஸிபி நதியின் தென்படுகையிலும் டெக்ஸாஸ் ராஜ்யத்திலும் வேரூன்றிற்று. கரும்பு வேளாண்மையும் நீக்ரோக்களுக்கு சத்துருவாயிற்று. லூஸியானாவின் தெற்கிலுள்ள வளமான நதிமுகத்துவார நிலங்கள், தக்க ஈரத்தோடும், வெப்பத்தோடும், கரும்புக்காகவே ஏற்பட்டவை எனலாம். முதல் வருஷக் கரும்பை அறுவடை செய்து, ஆலைகளில் சாறு பிழிந்து, தொட்டிகளில் காய்ச்சி யந்திரங்களில் சுழற்றிப் படிக ரூபத்தில் முதல் சர்க்கரை எடுக்கப்பட்டதும், "சர்க்கரைப்படிகம் உறைகிறது!" என்ற மகிழ்ச்சிக் கூச்சல் பரவிற்று. உடனே லூஸியானாவில் ஒரு புது வாழ்க்கை முறை உதயமாயிற்று. எல்லோரும் அத்தொழிலில் இறங்கினர்; 1830-க்குள் ஐக்கிய நாட்டிற்குத் தேவையான சர்க்கரையில் பாதியளவு அந்த ராஜ்யத்திலிருந்து கிடைத்தது. ஈரத்திலும் வெப்பத்திலும் வேலை செய்ய நீக்ரோ அடிமைகள் தேவையாயினர்; கிழக்குக் கரைப்பிரதேசத்திலிருந்து ஆயிரக்கணக்கானவர் மேற்கே செல்லவேண்டி வந்தது.

கடைசியாக, புகையிலை வேளாண்மையும் மேற்கே பரவி, அடிமைகளை அங்கு கவர்ந்தது. விவசாய முறைகளைப் புறக்கணித்துப் பேராசையுடன் ஒய்வில்லாமல் சாகுபடி செய்யப்பட்டதால் உலகத்தில் மிகச்சிறந்த புகையிலைக் களமாக இருந்த வர்ஜீனியா தரிசு நிலம் போலாகி விட்டது; ஆகவே, குடியானவர்கள் தம் நீக்ரோக்களை அழைத்துக்கொண்டு கென்டக்கி, டெனெஸி ஆகிய இடங்களுக்குப் போகப் பிரியப்பட்டார்கள். அதன் பிறகு, தெற்கு ராஜ்யங்களின் வட பகுதிகளில் பெருகிவரும் அடிமைகள் தெற்கேயும் மேற்கேயும் இழுத்துச் செல்லப்பட்டார்கள். இப்பரவுதலால் பழைய இடங்களில் அடிமை ஜன நெருக்கம் குறைவது பலருக்கு ஆறுதல் அளித்தது. ஏனென்றால் அடிமைக் கலகம் கிளம்பக் கூடும் என்ற பயம் ஓரளவு குறைந்தது. 1831-ல் நாட் டர்னரின் தலைமையில் 60, 70 வர்ஜீனிய அடிமைகள் கூடிக் கலகம் செய்ததால் விளைந்த திகில் இது. தென் ராஜ்யத்தார் விடுதலைக் கொள்கையைக் கண்டு மிரளுவதற்கு நாட் டர்னரின் கலகமும் ஒரு காரணம்.

வடக்கே இருந்து 'விடுதலைச் சமூகமும்' தெற்கே இருந்து 'அடிமைச் சமூகமும்' மேற்கே பரவ, இரண்டையும் சுமாராகச் சமமாக வைத்திருப்பது நல்லது என்று தோன்றிற்று. 1818-ல் இல்லினாயி ஸ்டேட் ஐக்கியத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட போது 10 அடிமை ஸ்டேட்டுகளும் 11 விடுதலை ஸ்டேட்டுகளும் இருந்தன. 1819-ல் அலபாமாவும், மிஸௌரியும் ஐக்கியத்தில் சேர விரும்பின. ஆதியில் ஜ்யார்ஜியா இடம் கொடுத்து அலபாமா உண்டானபோது அந்த ராஜ்யம் அடிமை முறையை ஆதரிக்கவேண்டும் என்ற ஒரு ஒரத்து இருந்தது. அதன்படி, எண்ணிக்கை சமமாக 11, 11 ஆகும். ஆகவே பல வடக்குப் பிரதேசத்தார் விடுதலை ஸ்டேட் என்ற நிலையில் தான் மிஸௌரி ஐக்கியத்தில் இடம் பெறமுடியும், இல்லாவிட்டால் அதன் மனு நிராகரிக்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் நியூயார்க் பிரதிநிதி டால்மாட்ஜ் "மிஸௌரி படிப்படியாக விடுதலை முறையை அனுசரித்தால் போதும்" என்ற திருத்தத்தைக் கொண்டு வந்தான். இந்தச் சர்ச்சை நாடு முழுவதிலும் பெரும் புயலைக் கிளப்பிற்று. பிரதிநிதி சபை விடுதலைக் கட்சியின் கையிலும், ஸெனெட் அடிமைக் கட்சியின் கையிலுமாக இருந்ததால் காங்கிரஸ் செயலற்றுப்போயிற்று. அடிதடி சண்டை வருமோ என்றும் ஜனங்கள் பயந்தனர்.

அதன் பிறகு ஹென்ரி க்லேயின் சாந்திமயமான தலைமையில் ஒரு ஒப்பந்தம் நிறுவப்பட்டது. மிஸௌரி அடிமை ராஜ்யமாகவே சேர்த்துக் கொள்ளப்பட்டது; அதேசமயத்தில் மேய்ன் ராஜ்யம் விடுதலை ராஜ்யமாக ஐக்கியத்தில் சேர்ந்தது.

மேலும் ஃப்ரான்ஸிடமிருந்து வாங்கப்பட்ட லூக்ஸியானாப் பிராந்தியத்தில் அட்சாம்ச ரேகை 36° 30'க்கு வடக்கே என்றைக்கும் அடிமைமுறை வரக்கூடாது என்று காங்கிரஸ் விதித்தது. அந்தக் கற்பனைக்கோடு மிஸௌரியின் தென் எல்லையாகும். அரசியல் வானிலிருந்து கார்மேகங்கள் விலகின. ஆனால் நீண்ட நோக்கமுள்ளவர்கள் புயல் மறுபடி கிளம்பலாம் என்பதை அறிந்தார்கள். இந்தச் சச்சரவைத் தீயணைக்கும் வண்டியின் எச்சரிக்கை மணிக்கு ஒப்பிட்ட ஜெஃபர்ஸன், அது ஐக்கியத்தின் சாவு மணியாகவும் இருந்து விடுமோ என்று பயந்தார். "இந்த க்ஷணத்திற்கு அது அடங்கியிருக்கிறது. அது தற்கால சாந்திதான். ஜனங்களின் ஆவேசத்தில் பிறந்த அந்தப் பூகோளக் கற்பனைக்கோடு, கோபதாபங்களை வளரும்போது ஸ்தூல ரூபமெடுத்துத் தாண்டவமாடும்," என்றார் அவர்.

கையகலமான இரு மேகத் துண்டுகளைத் தென்னட்டார் கவனித்திருந்தால் வரும் புயலை அவர்கள் முன்கூட்டி அறிந்திருப்பார்கள். 1821-ல் க்வேக்கர் சம்பிரதாயத்தைச் சேர்ந்த பென்ஜமின் லண்டி ஒஹியோவில் அடிமைமுறை எதிர்ப்புப பத்திரிகை ஒன்று ஆரம்பித்தான். 1823-ல் வில்பெர்ஃபோர்ஸ் என்னும் ஆங்கிலேயச் சீர்திருத்தவாதி அடிமைமுறை எதிர்ப்புச் சங்கம் ஒன்று ஸ்தாபித்தான்; அதில் ஸாக்கரி மகாலேயும் இதர பிரமுகர்கள் சிலரும் சேர்ந்தார்கள்.

ஜாக்ஸன் முன்வருதல்: 1824-ன் ஜனாதிபதித் தேர்தலில் ஐந்து அபேட்சகர்கள் தோன்றினர்கள். அவர்களுள் ஜான் க்வின்ஸி ஆடம்ஸ், க்லே, கால்ஹௌன் ஆகிய மூவரும் சிறந்த திறமையுள்ளவர்கள். ஆனால் மக்கள் இருதயத்தில் அதிக இடம் பெற்றவன் ஆண்ட்ரூ ஜாக்ஸன். நியூ ஆர்லீன்ஸ் சூரன் என்ற ஹோதாவில் மேற்கு மாகாணத்தார் அவனை இணையற்ற போர்வீரன் எனக் கருதினர்.

மக்கள் வோட்டுப்படி ஜாக்ஸன் மிகவும் முன்னணியில் நின்றான். ஆனால் ராஜ்யப் பிரதிநிதிகள் அடங்கிய "தேர்தல் பரிசிலனைக் குழு"வில் ஒருவருக்கும் நிர்ணயமான மெஜாரிடி கிடைக்கவில்லை. பிரதிநிதி சபை சாதகபாதகங்களை ஆராய்ந்து ஆடம்ஸ் தகுதியுள்ளவர் என்று முடிவு செய்தது. அவர் படித்தவர், அனுபவம் பெற்றவர், ராஜநீதி அறிந்தவர், ஆனால் பிறருக்கு இணங்காத முரட்டுப் பிடிவாதக்காரர்.

ஆடம்ஸ் ஏற்கெனவே இரண்டு பெருங்கீர்த்திகள் பெற்றவர்—"மன்ரோ கொள்கை" முக்கியமாக அவருடைய திறமையால் உருவானது; 1819-ல் ஸ்பானிய சர்க்காரோடு ஒப்பந்தம் பேசி ஃப்ளாரிடாவை நன்கொடையாகப் பெற்றதும் அவர் தான். அபூர்வ அறிவாற்றலும், சீரிய சீலமும், பொது ஜனங்களுக்கு உழைக்கும் தன்மையும் பொருந்திய அவரிடம் குறை

களும் இருந்தன—கடுமையான வைராக்கியம், நிந்தனையும் மரியாதையுமில்லாமல் வெடுக்கெனப் பேசுதல், மாற்ற முடியாத விருப்பு வெறுப்புக்கள். ஜனாதிபதியான பிறகு அவர் அதிகம் சாதிக்க முடியவில்லை; ஜாக்ஸன் கட்சியின் விஷமயமான எதிர்ப்பு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே இருந்தது; அவரும் க்லேயும் நெறிதவறிய ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டதால்தான் அவர் தலைவர் ஆக முடிந்தது என்று அவர்கள் குற்றம் சாட்டினர்கள். நாட்டில் அப்பொழுதிருந்த கட்சி எதிர்ப்பைப்போல் வேறு எப்பொழுதும் இருந்ததில்லை எனலாம்.

அந்தக் காலத்தில் சில கட்சி மாறுதல்கள் நடந்தன. ஆடம்ஸ்,க்லே ஆகியோரைப் பின்பற்றுபவர் தம்மைத் தேசிய ரிபப்லிகன் (National Republicans) என்றழைத்துக்கொண்டார்கள்; பிற்பாடு அது விக் (Whig) கட்சி ஆயிற்று. ஜாக்ஸன் கட்சியார் டிமோக்ராடிக் (ஜனநாயக) கட்சிக்கு ஒரு புதுத்தோற்றம் அளித்தார்கள். ஆடம்ஸ் நாணயமாகவும் திறமையோடும் ஆட்சி நடத்தினார்; தேசிய அடிப்படையில் உள்நாட்டில் சீரமைப்புகள் செய்ய அவர் முயன்றார். அவருடைய தினசரிக் குறிப்பிலிருந்து அவருடைய அலுப்பறியாத உழைப்பை அறியலாம்.

1828—ஆம் ஆண்டுத்தேர்தல் பூகம்பம் போன்றது; ஜாக்ஸன் கட்சியார் ஆடம்ஸையும் அவர் கட்சிக்காரர்களையும் இருந்த இடம் தெரியாமல் செய்துவிட்டார்கள். மனக்கசப்பு உச்ச நிலையை அடைந்ததால் ஜனாதிபதி ஆகவேண்டிய ஜாக்ஸன் வாஷிங்க்டன் நகர் வந்து சேர்ந்ததும் சம்பிரதாயப்படி ஆடம்ஸைப் போய்ப் பார்க்கவில்லை; ஆடம்ஸும் உபசாரத்திற்காகத் தம் உத்தர அதிகாரியுடன் உட்கார்ந்து அரசாங்க வண்டியில் தலைமைக் காரியாலயம்வரை செல்ல மறுத்தார்.

ஜாக்ஸனின் ''பட்டாபிஷேகச் சடங்கு'' அமெரிக்க வாழ்க்கை முறையில் ஒரு புது யுகத்தின் ஆரம்பமாகக் கருதப்படுகிறது. அதைப்போன்ற பதவித் துவக்கம் அதற்குமுன் நாடு பார்த்ததில்லை. ஆரம்ப விழாவுக்குப் பலநாட்கள் முன்பே வெற்றிபெற்ற அரசியல்வாதிகள், உத்தியோக வேட்டைக்காரர்கள், ''அரசியல் சூதாட்டக்காரர்கள்'', மேற்கு நாடுகளிலும் தென்னாடுகளிலுமிருந்து வேடிக்கை பார்க்கவந்த சாதாரண ஜனங்கள் முதலானவர் கூடிவிட்டார்கள். தங்களுடைய வீரன் ஜனாதிபதி ஆவதைப் பார்க்க 500 மைல் தூரத்திலிருந்து மக்கள் வந்தார்கள்; பேராபத்திலிருந்து நாடு விடுவிக்கப்பட்டதுபோல அவர்கள் பேசிக்கொண்டார்கள். ''ஜாக்ஸன் வாழ்க!'' என்று எக்களித்துக்கொண்டு அவர்கள் தெருக்களில் அலைமோதிச் செல்லும்போது நற்பழக்க முள்ளவர்கள் அருவப்புடன் ஒடுங்கி ஒதுங்கினர்கள் என்று ஒரு கவனிப்பாளன் சித்தரிக்கிறான்.

பதவித் துவக்க விழா அன்று காலையில் தலைமைக் காரியாலயத்தின் அக்கம்பக்கம் அல்லோலகல்லோலப்படும் கடல்போல இருந்தது; எல்லாப் பாதைகளையும் ஜனத்திரள் அடைத்துன்றது: அரசாங்க ஊர்வலம் முறைப்படிக் கிழக்குத் தோரண வாயில் மண்டபத்தை அணுகுவதே மிகச் சிரமமாகிவிட்டது. ஜயகோஷ ஆரவாரத்தால் வானம் கிழிந்தது, தரை நடுங்குவதுபோலத் தோன்றிற்று.

ஜாக்ஸனின் உத்தேசங்கள்: சாதாரண மக்களின் இன்பதுன்பங்களில் மனப்பூர்வமான அனுதாபம் கொண்டவர் ஜாக்ஸன்; அக்குணம் படைத்த ராஷ்டிரபதிகள் சொற்பமே. அந்த அனுதாபத்திற்கும் நம்பிக்கைக்கும் ஒரு காரணம் அவருடைய பிறப்பும் வளர்ப்பும் ஆகும்; கேவலமான தரித்திரத்தை இளம் வயதில் அவர் அனுபவித்தார். வட கரோலினுவில் விவசாயம் செய்து வயிறு வளர்ப்பதற்காக வந்த ஒரு ஏழை பிரிட்டிஷ் துணி வியாபாரியின் மகன் அவர்; தகப்பன் இறந்தபின் பிறந்தவர். அவர் தாய் ஒரு உறவினன் வீட்டில் வேலைக்கமர்ந்தாள். நிச்சயமில்லாத கஷ்ட ஜீவனம், குளிர் காலத்திலும் நல்ல உடை கிடையாது, நரம்புநோய் வேறு—பையன் தாழ்மையும் இகழ்ச்சியும் அனுபவித்துக்கொண்டே வளர்ந்தான். பிற்காலத்தில் உண்டான படபடப்பான சுபாவத்திற்கும், 'தொட்டால் சுருங்கி' போன்ற சுபாவத்திற்கும், ஏழைகள்பால் அனுதாபத்திற்கும் பால்ய காலத் தாழ்மை உணர்ச்சி காரணமாக இருக்கலாம். வெறும் இளைஞனாக இருக்கும்போதே தன் இரு சகோதரர்களை விழுங்கிவிட்ட புரட்சிப்போரில் அவன் பங்கெடுத்துக் கொண்டான்.

மேற்கு எல்லைப்புறச் சூழ்நிலையிலிருந்தும் வருந்தத்தக்கச் சில அனுபவங்களிலிருந்தும் ஜாக்ஸனுக்குக் கிழக்குப் பிரதேசத்து வர்த்தக நிலையங்களிடம் நிவிர அவநம்பிக்கை உண்டாயிற்று. வக்கீல் படிப்புக்குப்பின் அவர் டெனெஸிக்குப்போய் உலகத்தில் நல்ல நிலைக்குவர முயன்றார். அந்தப் பிரதேசத்தில் வக்கீல் வேலைபார்ப்பவன் வியாபாரத்தொழிலும் செய்யவேண்டியிருந்தது; எனெனில் ககுடிக்காரர்கள் கட்டணங்களைப் பணமாகக் கொடுக்காமல் கரடித்தோல், தேன்மெழுகு, பருத்தி, நிலம் போன்ற பொருள் ரூபத்திலும் கொடுப்பதுண்டு. அவர் நில வியாபாரம், குதிரை வியாபாரம், அடிமை வியாபாரம் எல்லாம் செய்தார்; சிலகாலம் பலசரக்குக் கடையும் நடத்தினார். 1798—ல் அவர் பிலெடல்ஃபியாவில் சுமார் 7,000 டாலருக்குச் சரக்குகள் வாங்கிவிட்டு, சில நிலங்களை விற்று அப்பணத்தை அப்படியே சரக்கு விற்றவனுக்குக் கொடுத்தார்; நிலத்திற்காக அவர் பெற்றவை யெல்லாம் செல்லாத நோட்டுகள்; ஆனால்

அவற்றில் அவருடைய உறுதிக் கையொப்பம் இருந்ததால் பொறுப்பு அவருடையது என்று தீர்மானிக்கப்பட்டது; நிலம் கைவிட்டுப்போயிற்று; சரக்குக்குப் பணம்கொடுத்தாகவில்லை. அந்தப் பெரிய கடனைச் செலுத்தகையில் கிழக்குச் சீமை நிதி முறைக்கு தாம் பலியானதாக அவருக்குத் தோன்றிற்று, அவர் சூதாடவில்லை, தவறுன காரியம் செய்யவில்லை; அவ்வூரில் செலாவணியில் இருந்த பணத்தைத்தான் பெற்றுக்கொண்டார்; குழப்பம் தீர்ந்தபோது அவருடைய நிலங்களும் பணமும் கிழக்குச் சீமை வியாபாரிகள் கைக்குச் சென்றுவிட்டன.

அதுவும் தவிர, எல்லேப்புற வக்கீல், தோட்டக்காரன், வர்த்தகன் என்ற முறையில் மேற்கு நாட்டு வியாபாரத்தில் பெரும்பகுதி கிழக்கு நாட்டு வியாபாரிகளின் பிடியில் சிக்கித் தவித்தது என்பதை அவர் கவனித்தார். தம்முடைய பருத்தி, தானியம், பன்றி முதலியவற்றை மிஸ்ஸௌரி ஆற்று வழியே நியூ ஆர்லீன்ஸுக்கு எடுத்துச் சென்று அங்கு விற்கவேண்டியிருந்தது; தன் பலசரக்குக் கடைக்கு பிலடெல்ஃபியாவிலிருந்து 'ஸ்டோர்' சரக்குகள் வாங்கவேண்டியிருந்தது. இருபட்டணங்களிலும் மார்க்கெட் நிலவரம் மாறிக்கொண்டிருந்தது. அவர் 'ஆர்டர்' அனுப்பிச் சாமான் மாறிக்கொண்டிருந்வதற்குள் விலை ஒரேயடியாக ஏறி அவருக்கோ பெற்றுக்கொள்டாக்கலாம்; அவர் படகேற்றி அனுப்பின சரக்குகள் நியூ ஆர்லீன்ஸ் போய்ச் சேருவதற்குள் மந்த நிலை ஏற்பட்டு விலை விழுந்துபோய்ப் பெரும் நஷ்டம் உண்டாகலாம். இரண்டு கோடியிலும் தரகர்களும் கடன் பொறுப்பு ஏற்கும் பாங்குக் காரர்களும் கொழுத்திருந்தார்கள்; ஜாக்ஸன் போன்றவர்கள் வரவு செலவைஒடுகட்டமுடியாமல் தவித்தார்கள்; இதிலிருந்து அவருக்குப் பாங்குகளிடம் அவநம்பிக்கை வளர்ந்தது; மேற்கு நாட்டாருக்கே அந்த மனப்பான்மையுண்டு. பணத்திற்கு அதிக மகிமை அளிக்கப்பட்டு அது புரியும் தொண்டுக்காக அதிகக் கூலி—கமிஷன்—கொடுக்கப்பட்டு வந்தது என்று அவர் நினைத்தார். பிலடெல்ஃபியாவிலும் நியூயார்க்கிலும் சுகமாய் வசித்து செழிக்கும் பாங்கர்கள் கையில் டென்னெஸியில் நெஞ்சு தெறிக்க உழைப்பவர்களை அழிப்பதற்கான சக்தி இருப்பது பெரிய அக்கிரமமாக அவருக்குத் தோன்றிற்று.

மூன்றுவதாக, சாதாரண மனிதனிடமும் அசாதாரணக் காரியங்களைச்சாதிக்கும் சக்தி உண்டு என்பது அவருடைய நம்பிக்கை; மேற்கு நாட்டாருடைய நம்பிக்கையும் அது. விறைப்பாய் நின்று ஒரு பட்டாளத்தை நடத்தக்கூடியவன், தயாரிப்பு இல்லாமல் அரசியல் பிரசங்கம் செய்யக்கூடியவன், ஒரு தோட்டத்தை விருத்தி செய்யக்கூடியவன், அப்படிப்பட்டவன் எந்த உத்தியோகத்திற்கும் தகுதியுள்ளவன் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். செல்வர்கள், சிறப்புடன் பிறந்தவர்கள், பலூரிக் கல்வி பெற்றவர்கள்—இவர்களுக்குத்தான் பொது வாழ்க்கை அளிக்கும் பரிசுகள் சொந்தம் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவேயில்லை. அதற்கு முற்றிலும் காரணமில்லாமலில்லை. சாதாரண வார்த்தைகளையும் சரியாய் எழுத்துக் கூட்ட அறியாத டெனெஸிக்காரன் ஜாக்ஸன் பெரிய தேசத் தலைவன் ஆனான். இல்லினுயைச் சேர்ந்த ஒரு எளிய தச்சாசாரி, படிப்பற்றவன், ''பெரிய மனிதர்களுடன்'' பழகத் தெரியாதவன், ஆபத்தான சமயத்தில் நாட்டைக் காக்கும் பாக்கியம் பெற்றான். பிலிங்டனிலே வீரர்களை எல்லேப்புற வேடர்கள் போரில் திணறடித்ததை ஜாக்ஸன் நேரில் அறிவார். தன் முயற்சியால் முன்னுக்கு வந்த பெண்டன், க்ளே போன்றவர்கள் காங்கிரஸில் முக்கிய இடம் வகிப்பதையும் அவர் அறிவார். மேற்கு நாட்டின் எல்லையற்ற ஆற்றலையும் சீலத்தால் உண்டான மன வலிமையையும் அறிந்தார் அவர்.

மொத்தத்தில் ஜாக்ஸனின் அடிப்படைக கொள்கையை இவ்வாறு சுருக்கலாம்—பொது மனிதனிடம் நம்பிக்கை; அரசியல் துறையில் சமத்துவத்தில் நம்பிக்கை; பொருளாதார முன்னேற்றத்தில் அனைவருக்கும் சமவாய்ப்பு; ஆனால் தனி உரிமை, விசேஷச் சலுகை, பெரும் பண நடமாட்டத்தில் சிக்கலான செய் முறைகள்—இவற்றின்பால் துவேஷம்.

ஜாக்ஸனைத் தாங்கி நின்ற பல கலப்பான டிமோக்ராடிக் கட்சியில் இரண்டு முக்கிய அம்சங்களைக் காணலாம். பெரும்பாலான வோட்டர்கள் நகரங்களில் வசியாதவர்கள்—புது இடங்களைத் தேடி விருத்தி செய்பவர்கள், குடியானவர்கள், தோட்டக்காரர்கள், கிராமாந்தரக் கடைக்காரர்கள். 1830-ல் நாட்டு மக்களில் சுமார் மூன்றிலொருவர் அல்லெகெனி மலைக்கு மேற்கே வசித்தனர்; அம்மக்களிடம் சில குணவிசேஷங்கள் உண்டு. அவர்களிடம் தேசிய மனப்பான்மை சிறந்திருந்தது; ஆதியிலிருந்த 13 ஸ்டேட்டுகளைக் காட்டிலும் அவர்களிடம் தம் ராஜ்யப்பாசம் குறைவாகவும் பொது தேசப்பாசம் அதிகமாகவும் காணப்பட்டது. அரசியல் துறையில் சமத்துவம் இருக்கவேண்டும் என்பதைப் பற்றி சந்தேகமே கிடையாது அவர்களுக்கு. வெள்ளையர்களுள் மேஜரான ஒவ்வொருவனுக்கும் வோட்டுரிமையும் அதிகாரம் வகிக்கும் உரிமையும் உண்டு. இவ்விஷயத்தில் கிழக்கு நாட்டில் தடைகள் வெகுகாலம் நீடித்திருந்தன; அவற்றை விலக்கும் முயற்சியை வெப்ஸ்டர் மார்ஷல் போன்ற அறிவாளிகள்—புதுமையைச்சந்தேகித்துஎதிர்ப்பவர்கள்—பேராபத்தாகக் கருதி அடக்கினார்கள். அதே சமயத்தில் அலபாமா, மிஸ்ஸௌரி, இண்டியானா, இல்லினுய் ஆகிய ஸ்டேட்டுகளில் ஒவ்வொரு வெள்ளையனுக்கும் வாக்கு உண்டு.

அடுத்தபடியாக, மேற்கு நாட்டாருக்கு நேர்முகமான ஜனநாயகம் பிரியமாக இருந்தது: காங்கிரஸ் அங்கத்தினர்கள்

கூட்டம்கூடித் தேசத்தலைமைக்கு அபேட்சகர்களைக் குறிப்பிடுதல் பழைய வழியை ஜாக்ஸனின் கட்சியார் எதிர்த்தார்கள்; மக்களே சபை கூடி பெயர்களைக் குறிப்பிடும் புது முறையை அவர்கள் ஆதரித்தார்கள்; அம்முறை 1836-ல் ஸ்தாபிதமாயிற்று. நீதிபதிகளை நியமிப்பதைக்காட்டிலும் தேர்ந்தெடுப்பது நல்லதென அவர்கள் கருதினார்கள். கடையாக மேற்குநாட்டு விவசாயிகள் கிழக்கு நாட்டாரின் ஆதிக்கத்தில் பாங்குகள் இருப்பதை வெறுத்தார்கள்; கடன் கொடுத்தவனைக் காட்டிலும் கடன் பட்டவனுக்கு சலுகைகள் விரும்பினார்கள்; படகுக் கம்பெனி அனுமதி, பாங்கு நடத்தும் அனுமதி முதல் 'பதிப்புரிமைகள்' வரை தனி உரிமைகள் அனைத்தையும் அவர்கள் எதிர்த்தார்கள். சர்க்கார் நிலங்களை மலிவாகவும் சுலபமான நிபந்தனைகளோடும் வாங்க அவர்கள் விரும்பினார்கள்.

கிழக்குப் பிரதேசப் பட்டணங்களில் எண்ணிக்கையில் பெருகிவந்த தொழில் உழைப்பாளிகள் ஜாக்ஸன் கட்சியில் இன்னொரு முக்கியமான பகுதியினர் ஆவர். பழைய கப்பல் போக்குவரத்து மறியல், 1812-ல் நடந்த யுத்தம், இறக்குமதி வரி—இவற்றால் ஊக்குவிக்கப்பட்டு நியூ இங்கிலாந்திலும் மத்தியப் பிரதேச ஸ்டேட்டுகளிலும் பைத்தொழிற்சாலைகள் முக்கியத்தன்மை பெற்றுவந்தன. மெர்ரிமாக் பள்ளத்தாக்கிலும் ப்ராவிடென்ஸின் சுற்றுப்புறத்திலும் நெசவுத் தொழில் வேரூன்றி வளர்ந்து வந்தது. 1830-ல் மாஸசுஸெட்ஸில் லொவெல் என்னுமிடத்தில் சுமார் 5,000 சாலைத் தொழிலாளர்கள் இருந்தார்கள்; அதே காலத்தில், நியூயார்க்கின் ஜனத்தொகையாகிய இரண்டு லட்சத்தில் பெரும்பாலோர் தொழிற் சாலைகளிலும் கப்பல்கட்டும் நிலையங்களிலும் உழைப்பாளிகள். இங்கிலாந்து, அயர்லாந்து, ஜெர்மனி முதலான நாடுகளிலிருந்து குடியிறங்கியவர்களில் அநேகமாய் எல்லாருக்கும் விக் கட்சியைக் காட்டிலும் டிமோக்ராடிக் கட்சி அதிக ஹிதமாய் இருந்தது. புதிய தொழில் வகுப்பினர் ஃபெடரல் நகரமாக இருந்த நியூயார்க்கை சொற்பகாலத்தில் டிமோக்ராடிக் நகரமாக மாற்றிவிட்டார்கள்; பிலடெல்ஃபியாவும் பிட்ஸ்பர்க்கும் ஜாக்ஸன் கட்சியாரின் கேந்திரஸ்தானங்கள் ஆயின. ஜாக்ஸனின் பதவிக் காலத்தில் தொழிற்சங்கங்கள் பல அமைக்கப்பட்டன; வேலை நிறுத்தத்தை சட்டபூர்வமாகச் சட்டத்தின்கீழ் தண்டிக்கும் பிற்போக்கான நீதிஸ்தலங்களை அவை கடுமையாகக் கண்டித்தன. அக்காலத்தில் மாஸசுஸெட்ஸ் தொழிற்சாலைகளில் ஆட்கள் தினமும் 12 அல்லது 14 மணி நேரம் வேலை செய்தனர். ஆகவே, தேசக் கப்பல் நிலையங்களில் 10 மணித் திட்டம் கொண்டுவரப்பட்டதும் ஜாக்ஸன் மிகவும் பாராட்டப்பட்டார்.

ஜாக்ஸனின் சாதனைகள் : பதவி யேற்றதும், ஜாக்ஸன் தன் முக்கியமான கொள்கைகளுக்குக் காரிய உருவம் அளித்தார். ஸ்தல அதிகாரிகள் கவனிக்கவேண்டிய சாலைகளுக்கும், போக்குவரத்து வாய்க்கால்களுக்கும் காங்கிரஸ் பண உதவி அளிக்கும் முறையைக் கண்டித்து, கெண்டக்கியில் மேஸ்வில்—லெக்ஸிங்டன் சாலைக்கு சிபார்சு செய்யப்பட்ட உதவியை அங்கீகரிக்க மறுத்தார். 1828-ல் தென் கரோலினு இறக்குமதி வரிச் சட்டத்தைப் பயனற்றதாகச் செய்ய முயன்றபோது அவர் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டார். நல்ல வேளையாக, தென் கரோலினு இதர தென் ஸ்டேட்டுகளைத் தன் பக்கம் சேர்த்துக்கொள்ள முடியவில்லை; கூடவே, சமாதானப் பிரியரான க்லே இறக்குமதி விதியைக் குறைக்க ஒரு நடுவழியைக் கண்டுபிடித்தார் ஆகவே தென் கரோலினு தன் முரட்டுப் போக்கைக் கைவிட்டது.

ஐக்கிய நாடுகளின் இரண்டாவது பாங்கை மூடுவதற்காகவும் ஜாக்ஸன் கோர யத்தனம் செய்து வெற்றியடைந்தார்; அந்த பாங்கு அபாரமானத் தனி உரிமை பெற்றது. கிழக்குப் பிரதேசத்தாரின் நிதிக் கோட்டை போன்றது அது என்பதே ஜாக்ஸனின் குற்றச்சாட்டு. பாங்கின் தலைவன் சாமர்த்திய சாலி; செல்வாக்குள்ளவன்; மொத்தத்தில் பாங்கு நன்முகவே நடந்துகொண்டிருந்தது; மதிப்புக்குரிய சேவையும் நாட்டுக்கு புரிந்து வந்தது. ஆனால் ஜாக்ஸன் முன்கூறிய காரணங்களால் 1832-ல் அதற்கு மறுபடி அனுமதி அளிக்கவேண்டிய சமயத்தில் கண்டிப்பாக எதிர்த்து நின்றார். மறு வருஷம் பாங்கிலிருக்கும் கவர்ன்மெண்டு டிபாசிட்டுகளை வாபஸ்பெற்று ராஜ்யங்களிலுள்ள முக்கியமான பாங்குகளுக்கு அனுப்பினார்; மத்திய பாங்கு செய்து வந்த காரியங்களை அவை பகிர்ந்து கொண்டன. மத்திய பாங்கு அரசியல் விஷயங்களில் தலையிட்டது உண்மையே; தனி உரிமை பெற்று ஒரு சில உள் ஆட்களின் செல்வ நிலையை அது பெருக்கினதும் உண்மையே. ஆகையால், பொதுமக்கள் ஜாக்ஸனின் செய்கையைப் பாராட்டினர்.

வேறு விஷயங்களிலும் தலைவர் கறாரான நடவடிக்கை எடுத்துக்கொண்டார். ஃப்ரான்ஸ் அமெரிக்காவுக்குச் செலுத்தக் கடமைப்பட்ட சில தொகைகளை நிறுத்தி வைத்தபோது அவர் சில ஃபிரெஞ்சு சொத்துக்களைப் பறிமுதல் செய்யும்படி யோசனை கூறினார்; ஃப்ரான்ஸ் உடனே வழிக்கு வந்தது..... ஜியார்ஜியாவிலிருந்த இந்தியர்களை அவர் முரட்டு வழிகளில் வெளிக் கடத்தினார். ஆனால் மெக்ஸிகோவின் ஒரு பகுதியாக இருந்த டெக்ஸாஸ் கலகம் செய்து பிரிந்து ஐக்கிய நாடுகளில் ஒன்றுகச் சேர்த்துக் கொள்ளும்படி மனு அனுப்பியபோது அவர் பின்னால் யோசித்துக்கொள்ளலாம் என்று இருந்து

விட்டார்; அது அக்காலத்திற்கு நல்ல முடிவே. இரண்டாவது பதவி காலம் முடியும்வரை அவர் பொது மக்களுக்குவேண்டியவராகவே இருந்தார்.

இதர ஜனநாயகப் போக்குகள்: ஜெஃபெர்ஸன் காலத்திலும் ஜனநாயகமுறை இருந்தது; ஜாக்ஸன் காலத்திலும் இருந்தது; ஆனால் அவற்றுல் பாதிக்கப்பட்ட ஜனங்களின் எண்ணிக்கையில் எவ்வளவு வித்தியாசம்—குளத்துக்கும் கடலுக்கும் இடையே உள்ளதுபோல். நூற்றாண்டின் நான்காவது பத்தாண்டில் (1830–40) வோட்டுரிமை மேலும் பரவிற்று; சொத்து நிபந்தனைக்கு மதிப்பளித்து வந்த பல ஸ்டேட்டுகள் வயது நிபந்தனை போதுமென்று தீர்மானித்தன. ஆகவே அதிக எண்ணிக்கையில் மனிதர் அரசியலில் அக்கறை கொண்டனர். ஜனத்தொகை அதிகரித்ததால் எண்ணிக்கை அதிகமாயிற்று என்றாலும், தேர்தல் நிபந்தனைகள் தளர்த்தப்பட்டதும், மக்கள் அரசியலில் அதிக சிரத்தைகாட்டத் துவங்கியதும் முக்கியமான காரணங்கள். தென் கரோலினு தவிர இதர ராஜ்யங்களில் ஜனுதிபதியைத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளை சட்டசபைகள் குறிப்பிடாமல் மக்களின் வோட்டுகளே தேர்ந்தெடுத்தன. மத்திய நிர்வாகத்தில் அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்பட்டனர். இவ்விஷயத்தில் தம் நம்பிக்கையை வெளிப்படையாகக் கூறி ஜாக்ஸன் பல அரசியல் எதிரிகளை வேலையிலிருந் நீக்கினார்.

அவ்வாண்டுகளில் நடையுடைபாவனையில் ஒரு தளர்ச்சி ஏற்பட்டது; கட்டுப்பாட்டுக்கான விதிகளின் மதிப்புக் குறைந்தது. புகையிலை மென்று, கண்ட இடங்களில் துப்புதல், பரபரக்கச் சாப்பிடுதல், துடுக்காகப் பிறர் விஷயத்தில் தலையிடுதல், தன்னெடுப்பாக நடந்துகொள்ளுதல், சுயம் பிரதாபம் பேசுதல், வடநகரங்களில் நெஞ்சு தெறிக்கும் அவசரம்—இந்தக் குண விசேஷங்களை அந்நிய நாட்டார் கவனித்து அருவருப்படைந்தார்கள். முன் யோசனையற்ற அசிரத்தையும் குரூரமும் அமெரிக்கப் பண்பின் அம்சங்களாயின. மானிட உயிரைக் காட்டிலும் கை முன் இருந்த வேலைதான் முக்கியமாகத் தோன்றிற்று; வேகமாய் வளரும் நாட்டின் இயல்பு அது. நீராவிவண்டிகளும் படகுகளும் பிரயாணிகளின் க்ஷேமத்தில் கவனம் செலுத்தவில்லை. துவந்த (இரட்டை) யுத்தம் சாதாரண விஷயமாகி வந்தது; தெற்கு, மேற்குப் பிராந்தியங்களில் குடும்பச் சச்சரவுகளில் அடிக்கடி கத்தியும் துப்பாக்கியும் தோன்றின. நீதிஸ்தலங்களிலும் நியாய அதிகாரிகளிடமும் நம்பிக்கையற்றப் பிரதேசங்களில் விசாரணையில்லாமல் கோபாவேசந்துடன் பழிதீர்த்துக்கொள்ளுதல் வேரூன்றிக் கொண்டிருந்தது. இவ்வாறு முரட்டு குணங்களுக்கு மதிப்பு ஏற்பட்டதால், 1840-ல் விக் கட்சியைச் சேர்ந்த உல்வியம்

ஹென்ரி ஹாரிஸன் ஜனுதிபதியானதும், அக்கட்சியார் ''தலைவன் மகா முரட்டுப் பேர்வழியாக்கும்! மரக்குடிசையில் வசித்த முன்னேடி; மதுபானப் பிரியன்'' என்ற 'அனுகூல பிரசாரம்' செய்யவேண்டி வந்தது! உள்ளபடி ஹாரிஸன் படித்தவர், லின்னினுடிக்கருகில் 2,000 ஏக்கர் பூமியுடையவர், சுகவாசி. நிற்க, உண்மையில் மனிதரின் நடத்தை ஜனநாயகத்தின் ஆரம்ப காலத்தில் இருந்ததைக் காட்டிலும் மட்டமாக இல்லை; பிரபுவர்க்கத்தாரின் ஒப்பு ஆசார முறையிலிருந்து மாறுபட்டிருந்தது; எல்லைப்புறக் காடுகளில் பாதிப்பாதி மிருகங்கள்போல் வசிக்கும் அறிவிலிகளின் நடத்தையைக் காட்டிலும் நன்றாக இருந்தது. ஆதியில் 'உயர்குலத்தோருக்கும்' 'பாமர' மக்களுக்குமிடையே இருந்த பேதம் குறைந்து கொண்டுவந்தது.

வாழ்க்கைப் பல வகைகளில் சாதாரண மக்களின் நோக்கப்படி வளர்ந்தது. புஸ்தகங்களும் பத்திரிகைகளும் மலிந்து வந்தன. லண்டனில் ஒரு பென்னி (அணு)வுக்கு விற்கும் பத்திரிகைகளை மாதிரியாகக் கொண்டு 'நியூயார்க் ஸன்', 'நியூயார்க் ஹெரால்ட்' போன்ற தினசரிப் பத்திரிகைகள் குறைந்த விலையில் பிரசுரிக்கப்பட்டன. கல்வித்துறையில், வரிவசூலிலிருந்து குறிப்பான மத சம்பந்தமற்ற பொதுப் பள்ளிக்கூடங்கள் இலவசமாக நடத்தப்பட வேண்டும் என்ற பெரியதொரு கிளர்ச்சி நடந்தது. கடுமையான போராட்டத்திற்குப் பிறகு ஸ்டேட்டுகள் ஒவ்வொன்றாக இலவச, லௌகிகப் பொதுப் பள்ளிக்கூடங்களை நன்மையளிப்பவை என்று தீர்மானித்தன. ''இலவசப் பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்காக ஸ்தல நிறுவனங்கள் வரி விதிக்கலாம்'' என்ற சட்டம் மத்தியப் பிரதேசமேற்கு ராஜ்யங்களில் ''வரி கட்டாயம் விதிக்கவேண்டும்'' என்று மாறிற்று. மேற்கே செல்லச் செல்ல மதம்கூடப் பொது மக்களின் மதமாயிற்று. இலக்கியத்திலும் ஜனநாயகப் போக்குகள் பிரதிபலித்தன.

அத்தியாயம் 9

மேற்குப் பிரதேசமும் ஜனநாயகமும்

தொடர்ந்து நகரும் எல்லைப்புறம்: அமெரிக்க சமூக வளர்ச்சியில் எல்லை என்பது தேசப் படத்திலுள்ள ஒரு கோடு மாத்திரமல்ல; அது ஒரு வாழ்க்கை முறையைக் குறிப்பிடுகிறது. மேற்கு எல்லைப் பிரதேசத்தில் ஜனநெருக்கடி கிடையாது—சதுர மைலுக்கு ஆறு பேர் இருந்தால் அதிகம். அங்கு வசிப்பவர்கள் காட்டை அழித்து, நிலத்தைப் பதப்படுத்தி, வீடுகள் எழுப்புவதில் தம் ஆயுளைப் பெரும்பாலும் கழித்தார்கள். அட்லான்டிக் மகா சமுத்திரத்திலிருந்து மேற்கே ராக்கீஸ் மலையை நோக்கி அவர்கள் முன்னேறிச் செல்லுகையில் அவர்களுடைய குணங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. தன் முயற்சியும் சொந்த யோசனையில் திட்டங்கள் போடுவதும் அவசியமாயின; அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஜனநாயகக் கருத்து வளர்ந்தது; நடத்தையில் முரட்டுப்போக்கு—நாசுக்கின்மை—தென்பட்டது; பழமையில் நம்பிக்கை முறிந்தது; ஸ்தல விஷயங்களில் தான் இட்டது சட்டம் என்றுயிற்று; மத்திய அரசாங்கத்திடம் மரியாதை ஏற்பட்டது.

எல்லைப்புறம் என்னும்போது (அமெரிக்காவில்) மேற்கு எல்லைதான் மனதில் தோன்றுகிறது. ஆனல் அட்லாண்டிக் கரையோரப் பிரதேசம் முதலில் எல்லையாக இருந்தது. 1790-1800-ல் ஓரளவு வேருன்றிய நியூ இங்கிலாந்திலிருந்து 40,000 பேர் வடகிழக்கே குடியேறியபின், அவர்கள் வசித்த மேய்ன் திற்கு 'எல்லைப் பிரதேசமாக' இருந்தது. இரண்டாவது எல்லைப் பிரதேசம் கிழக்கு நோக்கிப் பாயும் நதிகளின் மேட்டுப் பகுதிப் பிராந்தியத்தில், அப்பலாச்சியன் மலைகளுக்கு வடக்கே, இருந்தது. புரட்சிப் போர் முடிவடையும்போது, மேற்கு நியூயார்க், பென்ஸில்வேனியாவில் வியோமிங் பள்ளத்தாக்கு, பிட்ஸ்பர்க்கின் சுற்றுப்புறம், டெனெஸியின் கிழக்குப் பகுதி, ஜியார்ஜியாவின் மேட்டு பூமி ஆகிய இடங்கள் எல்லைப் பிரதேசமாக விளங்கின. அவ்விடங்களில் மிலியன் ஏக்கர் கணக்கில் நிலம் வாங்குவது சகஜமாக இருந்தது. பலவிதத் தொழில்கள் தெரிந்த பல குடும்பங்கள் அங்கு பரவலாகப்புது வாழ்க்கையை ஆரம்பித்தன. 1800-ல் மிஸிஸிபி, ஒஹியோ

பாசனநாடு மூன்றுவது பெரிய எல்லை நாடாயிற்று. காங்கிரஸ் ஒஹியோக் கம்பெனிக்கு அளித்த இரண்டு மிலியன் ஏக்கரில் பலர் குடியேறினர். கென்டக்கியிலும் டெனெஸியிலும் திரள் திரளாகப் புது ஜனங்கள் வந்தார்கள்.

வடமேற்கேயும் தென்மேற்கேயும் ஜன ஓடை ஓய்வின்றிப் பாய்ந்தது. 1796-ல் கென்டக்கியும் டெனெஸியும் பூர்ண ஸ்டேட்டுகள் ஆயின; ஒஹியோ ஸ்டேட் ஆவதற்குத் தகுதி பெற்றுக் கொண்டிருந்தது. 1820-ல் தென்மேற்கே அலபாமாவும், மிஸிஸிபியும், வடமேற்கே இண்டியானவும் இல்லினயும் ராஜ்யங்களாயின. முதல் எல்லை நாட்டுக்கும் ஐரோப்பாவும் இணைப்பு அதிகமிருந்தது; இரண்டாவதும் கரையோர வாசஸ்தலங்களும் இணைக்கப்பட்டிருந்தன; ஆனல் மிஸிஸிபிப் படுகை தனியாய் நின்றது—அதன் மக்களின் நோக்கு கிழக்கே அதிகம் திரும்பாமல் மேற்கே சென்றது.

எல்லைப்புற வாசிகள்: குடியானவர்களையோ கடைக்காரர்களையோ போலல்லாமல் பலரக மனிதர்களை எல்லைப்புறங்களில் காணலாம்; இருந்தபோதிலும் அவர்களை மூன்று வகுப்பினராகப் பிரிக்கலாம்; ஆரம்பத்தில் சென்ற முன்னேடிகள் வேடர்கள் அல்லது கண்ணி, பொறி முதலியன வைத்து மிருகங்களைப் பிடிப்பவர்கள். அவர்கள் பெரும்பாலும் விவாகமாகாதவர்கள். அவர்களுள் அதிக முரட்டு வாழ்க்கை நடத்துபவர்களை ஒரு ஆங்கிலேயப் பிரயாணி வர்ணித்திருக்கிறுன்:—

துணிந்தவர்கள், முரட்டு ஆத்மாக்கள், பரிதபிக்கத் தக்க குடில்களில் வசிப்பவர்கள், செவ்விந்தியரோடு சண்டை ஏற்படும்போது குடிசையைக் கோட்டைக் கொத்தளம்போல் வலுவாக்குவார்கள். உடையிலும் நடத்தையிலும் செவ்விந்தியர் போன்றவர், ஆனல் இருவரிடையே பரஸ்பர துவேஷம் உண்டு. நாசூக்கற்றவர்கள், ஆனல் விருந்தளித்து உபசரிப்பவர்கள், புது மனிதரிடம் அன்புள்ளவர்கள், யோக்கியர்கள், நம்பக் கூடியவர்கள். சிறிதளவு சோளம், பூசனி முதலியன பயிர் செய்து, பன்றி, பசு, குதிரை முதலியன வளர்ப்பவர்கள்; பசு இருந்தாலும் இல்லாவிட்டாலும் குடும்பத்திற்கு இரண்டு மூன்று குதிரைகள் இருக்கும். அவர்களுக்கு முக்கிய வருமானமளிப்பது அவர்களுடைய துப்பாக்கி. கோடரி, துப்பாக்கி, பொறி, மீன் பிடிக்கும் கண்ணி—இவற்றை முன்னேடிகள் வெகு லாகவமாய் உபயோகிக்கக் கூடியவர்கள்; புதுப்பாதையைக் குறிப்பிட்டு அறிவதில் வல்லுநர்கள்; முதல் மர வீடுகள் கட்டினர்கள், செவ்விந்தியர்களை எட்டி நிற்கச் செய்தார்கள், அடுத்த கூட்டத்தாருக்கு முன்னேற வசதியளித்தார்கள்.

முன்னேடிகளில் இரண்டாவது வகையினர் வேட்டையும் ஆடினர்கள், விவசாயமும் செய்தார்கள். அவர்கள் கட்டின மர வீடுகளில் பல வாழ்க்கை வசதிகள் இருந்தன—

கண்ணுடி பதித்த பலகணி, புகைப்போக்கி, தனித்தனி அறைகள் வகையறு. ஓடை நீரைக் குடிக்காமல் அவர்கள் கிணறு வெட்டிக் கொண்டார்கள். சுறுசுறுப்பான மனிதன் காட்டை அழித்துச் சடுதியில் தோட்டம் உண்டாக்கிக்கொள்வான். தோட்டத்தில் தானியங்கள், காய்கறி பழம் முதலியன, காட்டில் மான் இறைச்சி, வான்கோழி போன்ற புள்ளினங்கள், மரக்கிளைகளில் தேன், ஓடைகளில் மீன், சொந்த வளர்ப்பில் மாடு, பன்றி முதலியன—இவற்றுல் அவன் சுகமடைவான்; தனிவாழ்க்கை அல்லது கஷ்ட ஜீவனம் என்ற மனக்குறை அவனைத் துன்புறுத்தாது. இன்னும் ஊக்கமும் துணிச்சலுமுள்ளவர்கள் மலிவான நிலத்தை ஏராளமாக வாங்கிப் போட்டு வைத்தார்கள்; பிறகு நில விலை உயர்ந்ததும், அவர்கள் விற்றுவிட்டு, மேலும் மேற்கே நகர்ந்தார்கள். இவ்வாறு அவர்கள் மிக முக்கியமானவர்களான மூன்றுவது பிரிவினருக்கு இடமளித்தார்கள்.

மூன்றும் கோஷ்டியினர் குடியானவர்கள் மட்டுமல்ல, டாக்டர்கள், வக்கீல்கள், கடைக்காரர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், மத போதகர்கள், யந்திர வேலையாட்கள், அரசியல்வாதிகள், நில வியாபாரிகள், சுறு சுறுப்பான சமூகத்திற்கு வேண்டிய அனைவரும் சேர்ந்த கூட்டங்கள் அவை. ஆயுள் முழுதும் அங்கேயே தங்குவதாகவும், அவர்களுக்குப் பின் அவர்களுடைய மக்கள் அங்கு தங்குவதாகவும் அவர்களுடைய உத்தேசம். அவர்கள் செங்கல்லால் கெட்டி வீடுகளும், பெரிய பண்டகசாலைகளும் வேலித்தடுப்புக்களும் கட்டிக் கொண்டார்கள். அவர்கள் உயர்தரப் பிராணிகளை (உணவுக்காக) வளர்த்தார்கள், நிலத்தை முறைப்படி உழுதார்கள், நல்ல விதைகளைக் கையாண்டார்கள். சிலர் மாவுமில், ரம்பமில், சாராயத் தயாரிப்புசாலை முதலியன அமைத்தார்கள். நல்ல ரஸ்தாக்கள் அமைத்து, கோவில், பள்ளிக்கூடம் முதலியனவும் அவர்கள் கட்டினார்கள். பட்டணங்களின் வளர்ச்சியோடு பாங்கு முதலாளிகளும் பெரிய வியாபாரிகளும் நில ஏஜண்டுகளும் தோன்றிச் செல்வர்கள் ஆனார்கள். சுருங்கச் சொன்னால், அமெரிக்க நாகரிகத்தின் பிரதிநிதிப்பகுதியாக அவர்கள் உருப்பெற்றார்கள். வளர்ச்சி மிகத் துரிதமாக இருந்ததால் சில வருஷங்களுக்குள் நம்ப முடியாத மாறுதல்கள் ஏற்பட்டு வந்தன. 1830-ல் கோட்டை யமைப்புள்ள ஷிகாகோ முன்னுக்கு வரும் என்று தோன்றுத சிறு கிராமமாக இருந்தது; ஆனல் ஆதியில் குடியேறிய சிலரின் ஆயுள் காலத்திலேயே அது உலகத்தின் மிகப்பெரியதும் வளமுள்ளதுமான பட்டணங்களில் ஒன்றாகி விட்டது.

புதிய மேற்கு நாட்டில் பலவகை மனிதர்கள் கலந்திருந்தார்கள். தெற்குச் சீமையின் மேட்டு பூமியிலிருந்து வந்த

குடியானவர்கள் முக்கியமானவர்கள். இதுபோன்ற குடும்பங்களில்தான் கென்டக்கியில் மரவீடுகளில் ஒரே ஆண்டில் ஆப்ரஹாம் லிங்கனும், ஜெஃபெர்ஸன் டேவிசும் பிறந்தார்கள். மற்றப்படி, அனுபவ சாத்தியமுள்ள ஸ்காட்லாந்திய-அயர்லாந்தியர், பென்ஸில்வேனியாவில வேரூன்றியச் சிக்கனப் புத்தியுள்ள ஜெர்மானியர், துணிந்த வடநாட்டு 'யாங்கி'கள், முதலானவர் வளரும் அந்நாட்டில் உழைப்பும் அறிவும் கொண்டு கொட்டினர்கள். இவர்கள் எல்லோரிடமும் இரண்டு குணங்கள் பொதுவாக இருந்தன—தனித்தன்மை, ஜனநாயகப் பற்றுதல். 1830 பிறப்பதற்குள் அமெரிக்காவில் பாதிக்குமேல் பழைய உலகத்தின் பழக்க வழக்கங்களில் இல்லாத—அல்லது பெயரளவுக்கே இருந்த—புதிய சூழ்நிலையில் வளர்ந்தார்கள், ஒரு புதிய சாயத்தில் தோய்ந்து எழுந்தார்கள். மேற்கே ஒவ்வொருவனும் தன் சக்தியால் முன்னுக்குவர வேண்டியிருந்தது. ஒருவனுடைய புகழ்பெற்ற குடும்பம், மிகுந்த செல்வம், அல்லது நீடித்த படிப்பு அவனுக்கு மதிப்பளிக்கவில்லை; அவன் தன் கையால் என்ன செய்ய முடியும் என்பதை அறிந்தே சமூகம் மதிப்பிட்டது. சிக்கனமான எவனும் சேமிக்கக் கூடிய தொகைக்குள் நல்ல தோட்டம் துரவு வாங்கலாம். முன் கூறியபடி 1820-க்குப் பிறகு சர்க்கார் நிலம் ஏக்கர் 1.25 டாலர் வீதம் கிடைத்துவந்தது; 1862-க்குப் பிறகு ஒருவன் ஆக்கிரமித்த பூமி அவனுக்குச் சொந்தமாயிற்று. விவசாயக் கருவிகள் அவர்களுக்கு சுலபமாகக் கிடைக்கும். அதன் பிறகு அவர்கள் ''நாட்டோடு வளரலாம்''. பொருளாதார வாய்ப்பில் கிடைத்த சமத்துவத்திலிருந்து சமூக சமத்துவம், அரசியல் சமத்துவம் ஆகிய எண்ணங்கள் பிறந்தன; இயற்கையாகத் தலைமை வகிக்கும் குணமுள்ளவர்களுக்கு சீக்கிரம் முன்னுக்குவரச் சந்தர்ப்பம் கிடைத்தது. கிழக்கு எல்லையாகிய கடலும் அமெரிக்கரின் குணத்தைப்பாதித்தது என்பதையும் குறிப்பிட வேண்டும். கப்பல்கள் சிறியவை; ஒவ்வொன்றின் மாலுமிகளின் எண்ணிக்கையும் சொற்பம்; பல மீன் பிடிக்கும் கப்பல்களும் திமிங்கில வேட்டையாடும் கப்பல்களும் பல பங்காளிகளின் பொதுச் சொத்து, தன் முயற்சி, தைரியம், சுறுசுறுப்பு, அனுபவஞானம், எல்லாம் இருந்தால்தான் முன்னேடிவேடன், எல்லைக் குடியானவன், கீழ் நாட்டுக் கப்பலோட்டி ஆகியோர் வெற்றியடைய முடிந்திருக்கும்.

எல்லைப்புறத்தில் நல்லதும், கெட்டதும்: ஒருவரைப்பார்த்து ஒருவராக அமெரிக்க நகர வாசிகளும் தனித்தன்மை, ஜனநாயக மனப்பான்மை என்னும் குணவிசேஷங்களைக் கிரகித்துக் கொண்டார்கள். கபடமற்ற, யோக்கியமான சுவாதீன உணர்ச்சியை அமெரிக்க நகரங்களுக்கு வந்த ஐரோப்பியர் உடனே உணர்ந்தனர். வேலையாட்கள் தொப்பியைத் தொட்டு

இனும் எதிர்பார்த்து 'ஸார்!' போடாததை அவர்கள் கவனித்தார்கள். கூலியாட்களும் ஏதோ அனுக்கிரகம் செய்பவர் போலத்தான் வேலை ஏற்றனர். ''வீட்டு வேலைக்காரர்கள் சேவகவில்லை அணியவில்லை, குடும்பத்தாருடன் உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள், 'உதவியாள்' என்று வர்ணிக்கப்படுகிறார்கள்'' என்பதை காப்பெட் பாராட்டிக் குறித்திருக்கிறார். அமெரிக்காவில் இரண்டு பிச்சைக்காரர்கள்தான் தென்பட்டார்களாம்; அவர்களிருவரும் அயல் நாட்டார்களாம். ரால்ஃப் வால்டோ எமர்ஸன் எழுதிய கட்டுரைகளில் அமெரிக்க மனப்பான்மைக்கு மிகப் பொருத்தமான கட்டுரையின் பெயர் ''தன் கையே தனக்குதவி'' என்பதாகும். அமெரிக்கவாசி ஒருவன், ஒன்றன்பின் ஒன்றாக, குடியானவன், கடைக்காரன், நிலத்தரகன், வக்கில், காங்கிரஸ் சபை அங்கத்தினன், நீதிபதி என்ற நிலைகளில் வெற்றிகரமாக வாழ்க்கை நடத்தியதை அந்த ஞானி வர்ணிக்கிறார்.

நல்லதைப்போலவே கெட்டவைகளுக்கும் எல்லைப்புறம் காரணமாயிற்று. அம்மக்களுக்குக் கட்டுப்பாடு கிடையாது; தன்னம்பிக்கை எல்லை கடந்து உக்கிரரூபம் பெறும். ராணுவப் பயிற்சியும் கீழ்ப்படிதலும் அவர்களுக்குப் பிடியாததால் 1812-ஆம் ஆண்டின் போரில் பல தோல்விகள் ஏற்பட்டன. எடுத்த காரியத்தை சீக்கிரம் முடிப்பதில்தான் அவர்கள் நினைவு; செய்த சாமான் பார்வைக்குக் கோரமாக இருந்தால் அவர்களுக்குப் பரவாயில்லை; செய்யவேண்டிய வேலை நிறைய இருக்கும்போது நகாசு வேலை செய்வது, வீண் காலவிரயம், என்பது அவர்கள் கருத்து. செங்கலாலும் கல்லாலும் கெட்டியான வீடுகள் கட்டுவதற்குப் பதிலாக அவர்கள் அவசர அவசரமாக மூரட்டுப் பலகை வீடுகள் எழுப்பினார்கள்; சாலைகளும் திருப்தியாக இல்லை; பாலங்கள் அந்த கூணத்திற்குப் போதுமானவையாய் இருந்தன; நிலத்தை முறைப்படி சாகுபடி செய்யாமல் பாழாக்கினார்கள். நியூ யார்க்கில் பலகை வீடுகள் பற்றியெரிவது மிகவும் சகஜம்; தீயணைக்கும் வண்டியின் மணி இரவெல்லாம் ஒலித்துக்கொண்டே இருக்கும்; 1836-ல் இரு பெரிய வியாபாரக் கட்டடங்கள் அப்படியே உட்கார்ந்துபோயின. ரெயில் வண்டிகள் மோதுக்கொள்வதும், நீராவிக்கப்பல்களில் கொதிக்கலங்கள் வெடிப்பதும் அடிக்கடி உண்டு. எதையும் சரியாய்க் கவனிக்க அவர்களுக்கு அவகாசம் கிடையாது. அந்நிலையில் பண்பையும் சமூக நடத்தையையும் கவனிக்க நேரம் ஏது? இதெல்லாம்போகட்டும்என்றால், பொய், வஞ்சகம், விபசாரம், களவு, கொலை முதலான அக்கிரமங்கள் எல்லைப்புறத்தில் மலிந்திருந்தன. சமூகத்தில் மிக மட்டமானவர்களெல்லாம் அங்கு கூடியிருந்தார்கள். அடக்கமுடியாத கோபம் புருஷ லக்ஷணமாகக் கருதப்பட்டது; சச்சரவு ஏற்பட்டால் குத்துச் சண்டை

அல்லது துப்பாக்கிச் சண்டைதான் நியாயம் வழங்கவேண்டும். நீதி இலாகா அதிகாரிகள் துணிந்தவர்களாகவும் கைத்துப்பாக்கி வீரர்களாகவும் இருக்கவேண்டும்; பெருந்தன்மைக்கோ சட்ட புத்தகத்திற்கோ அங்கு செலாவணி கிடையாது.

செவ்விந்தியப் போர்கள்: எல்லைப்புறத்தாரின் கட்டுக்கடங்காத சுபாவத்தால் அவர்களுக்கும் இந்தியர்களுக்கும் தகராறு ஏற்படும்போது வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன. உடன்படிக்கைகளை அவர்கள் நிராகரித்து இந்தியர்களின் நிலங்களில் அடிக்கடி புகுந்தார்கள்; உணவாகவும் உடையாகவும் இந்தியர்களுக்கு அவசியமாக இருந்த பிராணிகளை அவர்கள் அழித்தார்கள்; 'செந்தோலானை'க் கண்டதுமே கொல்வதற்குப் பலர் ஆவல் கொண்டிருந்தார்கள். இந்தியர்கள் தம்மைக்காத்துக்கொள்ள முயலும்போது போர்மூண்டது. பலசமயங்களில் அந்தக் காட்டாட்சிகளும் வலுச்சண்டை இழுப்பிக் கொண்டிருந்தார்கள்; ஆனால் வெள்ளையர்கள் தவிர்க்கமுடியாத விதி போல மேற்கே முன்னேறியதே கலகங்களின் ஒரு முக்கியமான காரணம். தெற்கே க்ரீக் இனத்தாரோடும், ஃப்ளாரிடாவில் ஸெமினோல் இனத்தாரோடும், இண்டியானாவில் டெகும்ஸேயின் ஆட்களோடும் மிகப் பயங்கரமான சண்டைகள் நடந்தன; க்ரீக்களை இரத்த மயமான போரில் ஆண்ட்ரூ ஜாக்ஸன் நேற்கடித்தான்.

இதரப் போர்களைக் காட்டிலும் அதிக மிருகத்தன்மை கொண்டது ''ப்லேக்ஹாக்'' போர். ப்லேக்ஹாக்(கறுப்பு வல்லூறு) ஒரு செவ்விந்திய இனத்தின் தலைவன்; அவனை பெயரில் சிலர் அமெரிக்க அரசாங்கத்திற்கு 50 மிலியன் ஏக்கர் பூமியைக் கொடுத்துவிட்டார்கள். தலைவனும் அவன் இனத்தாரில் பெரும்பாலோரும் அக்கொடையை அங்கீகரிக்கவில்லை. அமெரிக்கர் படைபலத்தைக்காட்டிப் பயமுறுத்தவே, ப்லேக் ஹாக் இல்லினயிலுள்ள தன் சோளக் கொல்லைகளிலிருந்து மிஸிஸிபியின்மேற்குக் கரைக்குப் பின்வாங்கினான். ஆனால் அவன் இனத்தார் பசியால் வருந்தி விஸ்கான்ஸினிலுள்ள தங்களுடைய நண்பர்களோடு சேர்ந்துகொண்டு அங்கு சோளம் பயிர் செய்வதற்காக வசந்த ருதுவில் நதியை மறுபடி கடந்தார்கள். அவர்களுடைய சிநேக உத்தேசம் சரியாகப் புரிந்துகொள்ளப்படும் என்று அவர்கள் குழந்தை உள்ளத்துடன் நம்பினார்கள். ஆனால் வெள்ளையர்கள் உடனே தாக்கினார்கள்; போர் நிறுத்தத்திற்கான சைகைகள் செய்துகொண்டே ப்லேக் ஹாக் பின்வாங்கினான்; ஆனால் இரண்டாயிரம் பேர்கொண்ட குடி படை அமைதிக் கோரிக்கைக்கு மதிப்பளிக்கவில்லை. நம்பிக்கையிழந்து திணறும் இந்தியர்கள் தென் விஸ்கான்ஸின் வழியாக மிஸிஸிபிப் பக்கம் விரட்டப்பட்டார்கள்; மேலும் அவர்கள் நதியைக் கடக்க முயலும்போது ஆண் பெண் குழந்தைகள்

அனைவரும் கருணையின்றித் துண்டு துண்டாக வெட்டப்பட்டனர். ஒரு துப்பாக்கி வீரன், ''அவர்கள் காட்டுமிராண்டிகளான சத்துருவாக இருந்தாலும், சிறு குழந்தைகள் காயப்பட்டு மிகக் கடுமையான வேதனையால் தவிக்கும் காட்சி மனத்தை மிகவும் கலக்குவது'' என்று எழுதி வைத்திருக்கிறான்.

கிழக்குப் பிரதேசத்திலிருந்த இந்தியர்களை மிஸிஸிபிக்கப்பால் வெள்ளையரின் வாசத்திற்குதவாதது என்று கருதப்பட்ட ''பெரிய மைதானங்களுக்கு'' மொத்தமாக அனுப்பி விடுவது என்ற உத்தேசம் மன்ரோ காலத்தில் அதிகார அங்கீகாரம் பெற்றது; ஜாக்ஸனும் சுறுசுறுப்புடன் தொடர்ந்து ஆவன செய்தார். பழைய இடங்களுக்குப் பதிலாக மேற்கே புதிய இடங்கள் கொடுக்கத் தலைவருக்கு காங்கிரஸ் அதிகாரமளித்தது. முதலில், கானடாவிலிருந்து டெக்ஸாஸ் வரை செல்லும் ஒரு பிரதேசம் ''இந்திய நாடு'' என்ற பெயரில் பிரிக்கப்பட்டது. வடக்கே இருந்த இந்தியர்கள் துன்பப்படுத்தாமல் புது இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஆனால் தெற்கே இருந்த இனங்கள் பெரியவை, வலுவுள்ளவை; அவ்வினத்தார் இடமாற்றத்தைப் பிடிவாதமாய் எதிர்க்கவே துக்ககரமான செய்திகள் நடந்தன. அவர்கள் ''ஐந்து நாகரிக வம்சங்கள்'' எனப்படுபவையைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு வீடுவாசல் என்ற பாசம் உண்டு. பெரும்பாலோர், முக்கியமாக க்ரீக், செரோக் இனத்தார்; சிக்கனமான குடியானவர்கள். நல்ல வீடுகள் கட்டிக் கொண்டவர்கள். கால்நடை வளர்ப்பவர்கள், மாவு மில் முதலாளிகள், தம் பிள்ளைகளை மிஷன் பள்ளிக்கூடத்தில் படிக்க வைத்தவர்கள், அவர்கள் வேறிடம் செல்ல சம்மதிக்கவே இல்லை; பலாத்காரமாகத்தான் அவர்கள் விரட்டப்பட்டார்கள். மாட்டு வண்டிகளிலும் கால் நடையாகவும் செல்லுகையில் அவர்கள் பசியாலும் நோயாலும் வான நிலைக் கொடுமைகளாலும் மிகவும் துன்பப்பட்டனர்; பலர் இறந்தனர். 1840-க்குள், மிஸிஸிபிக்குக் கிழக்கே இருந்த இந்தியர்களில் அநேகமாய் எல்லோரும் புது இடத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

மிஸிஸிபி பள்ளத்தாக்கு அமெரிக்காவில் மிக வளமானதும் தனிச்சிறப்பு வாய்ந்ததுமான பகுதி; இந்தியர்களை விலக்கிய பிறகு அப்பகுதியை அமெரிக்கா பூராவும் உபயோகிப்பது சாத்தியமாயிற்று. அந்நதிக்குக் கிழக்கே கடைசியாக ஐக்கியத்தில் சேர்ந்த ராஜ்யம் விஸ்கான்ஸின் (1848). நதிக்கு மேற்கே அடுக்காக மிட்டாய் வில்லைகள் போல பல ஸ்டேட்டுகள் அமைந்து விட்டன—மிஸௌரி, ஆர்கன்ஸாஸ், இயோவா, மினெஸோடா தயாராகிக் கொண்டு வந்தது. மேற்கே அபிவிருத்தி அளவு கடந்தும் வேகமாகவும் நடக்கிறது, நாடு தாங்காது—என்ற ஒருகிலி 1837-ல் கிளம்பிற்று; ஆனால் அது சொற்பகாலந்தான் மேற்கே செல்பவர்களைத் தடுத்து நிறுத்திற்று. மக்கார்மிக் என்னும் யந்திர நிபுணன் அறுவடை யந்திரம் ஒன்று கண்டு பிடித்து, 1847-ல் ஷிகாகோவில் ஒரு தொழிற்சாலை அமைத்து யந்திரங்கள் செய்வித்தான். அறுவடைக் காலத்தில் கூலியாட்கள் கிடைப்பதில்லை என்ற பிரச்னை தீர்ந்து விடவே, மேற்குச் சமவெளிப் பிரதேசம் தானியக்களஞ்சியமாயிற்று. ரெயில்வேப் பாதைகளும் பல அமைக்கப்பட்டன. 1854-ல் தினமும் 74 ரயில் வண்டிகள் ஷிகாகோவுக்கு வந்தன; அந்நகர் உலகத்திலேயே மிகப்பெரிய தானிய மார்க்கெட் ஆகிவிட்டது. அவ்வருஷம் வெளி நாடுகளிலிருந்து குடியிறங்கியவர்களை மாதம் 3,000 பேர் வீதம் ரயில் வண்டிகள் இயோவாவில் கொண்டு சேர்த்தன. ஆயிரக்கணக்கானவர் சாலை வழியாகவும் சென்றனர். ஜெர்மானியர், ஸ்காண்டிநேவியர், பிரிட்டானியர் ஆகியோர் டெக்ஸாஸிலும் ஆர்கன்ஸாஸிலும் வட ராஜ்யங்களிலும் வேலைகளில் அமர்ந்தனர். தொலையிலுள்ள மினெஸோடாவைச் சேர்ந்த ஸந்த் பால் என்ற ஊரில் 7,000, 8,000, ஜனங்களும் நான்கைந்து ஹோட்டல்களும் ஐந்தாறு நல்ல சர்ச்சுகளும் இருக்கக்கண்டு ஒரு ஆங்கிலேயப் பிரயாணி ஆச்சரியப்பட்டான். அங்கு நதித்துறைகளில் வருஷத்திற்கு முந்நூறு கப்பல்கள் வந்து சேர்ந்தன: தெருக்கள் விசாலமாகவும் நன்றாகவும் இருந்தன; செங்கல்லால் கட்டப்பட்ட பண்டக சாலைகள் உயரமாயிருந்தன; கடைகளில் பல விதச் சாமான்கள் நிறைந்திருந்தன.

1850-க்கு முன்பே மேற்கு நாட்டுத் தலைவர்கள் முக்கியத்துவம் பெற்றார்கள்; உதாரணமாக: இல்லினாயில் ஸ்டீஃபன் டக்லஸ், ஆப்ரஹாம் லிங்கன்; மிஸௌரியில் டேவிட் ஆட்சிஸன்; மிஸிஸிபியில் ஜெஃபர்ஸன் டேவிஸ்; 'லோன் ஸ்டார் ஸ்டேட்' ஆகிய டெக்ஸாஸ் ராஜ்யத்தில் அந்த ராஜ்யத்தின் சுதந்திரப்போர் வீரராகிய ஸாம் ஹௌஸ்டன்.

மேற்கின் அண்மையில் குடியேற்றம்: மிஸிஸிபி பள்ளத்தாக்கின் அபிவிருத்தியில் பலபெரிய போக்கு வரத்து சாதனங்களுக்கு முக்கியமான பங்குண்டு. மேற்கே செல்லும் பெரிய சாலைகளில் முதலாவது சும்பர்லண்டு சாலை; 1811-ல் வேலை துவங்கி, ஃபெடரல் பணத்தால் அது கட்டப்பட்டது. கும்பர்லண்டு—மேரிலண்டு—மலைகளைக் கடந்து ஜேன்ஸ்வில்—ஒஹியோவில் கொலம்பஸ்—இண்டியானாவில் டெர்ரெஹாய்ட்டே—கடைசியில் இல்லினாயில் வான்டேலியா—இவ்வாறு அதன் நீளம் சுமார் 600 மைல். மொத்த அகலமான 60 அடியில் நடு இருபது அடி சரளைக்கல் போட்ட கெட்டியான வண்டிப்பாதை.

இந்த தேசியப்பாதையில் தபால் எடுத்து செல்லப்பட்டது; அதற்குத் தனித் தபால் வில்லைக் கட்டணம் உண்டு. குடியேற்ற மக்களின் பிரவாகம் பெருகிற்று; கோடைகாலத்தில்

கண்ணெட்டும் தூரம் வரை சாலி காலியாயிருப்பது அரிது. நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வெகு சுகமாக மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்தன. மேற்கே இருக்கும் மாட்டுக்காரர்கள் பலவகைக் கலப்பான தங்கள் மாடுகளை ஓட்டிக்கொண்டு சந்தைகளைத் தேடிக் கிழக்கே சென்றார்கள். ஃவீலிங் என்னுமிடத்தில் சாலி ஒஹியோ நதியைத் தொடுவதால் ஒஹியோவும் ஒரு போக்குவரத்து சாதனமாயிற்று. முதலில் பலரகப் படகுகள் உபயோகிக்கப்பட்டன; அவற்றின் மூலம் தானியம், தானிய மாவு, மான் இறைச்சி, உரோம சருமங்கள், பன்றி இறைச்சி, முதலிய பொருள்கள் நியூ ஆர்லீன்ஸ் போய்ச்சேர்ந்தன. பிற்காலத்தில் ஒருவன் நீராவிப்படகு ஒன்று தயாரித்தான். 1811-ல் அது பிட்ஸ்பர்க்கிலிருந்து நியூ ஆர்லீன்ஸ் வரை சென்று திரும்பிற்று; உடனே பலர் அவ்வழியைப் பின் பற்றினர்.

ஆனால் இரீ வாய்க்கால் தான் மேற்கே செல்லும் போக்குவரத்துப் பாதைகளில் மிக முக்கியமானது; அது ஹட்ஸன் நதி அட்லான்டிக் சமுத்திரம், 'பெரிய ஏரிகள்', இம்மூன்றையும் இணைத்தது; அதன் மூலம் அமெரிக்க கண்டத்தின் மையம் வரை படகுப் பாதை கிடைத்து விட்டது. ஸுபீரியர், மிஷிகன், ஹ்யூரான், இரீ, ஆண்டேரியோ என்னும் மிகப் பெரிய ஏரிகள் ஐக்கிய நாடுகளுக்கும் கானடாவுக்கும் இடையே இருப்பவை; அவை ஒன்றோடொன்று நீர்த் தொடர்பு கொண்டவை. இனி ஜனங்கள் அப்பலாச்சியன் மலை மேல் ஏறுமல் ஒரு பக்கமாக மேற்கு நாட்டை அடையலாம். பதினெட்டாம் நூற்றாண்டிலேயே மக்கள் அக்கனவு கண்டார்கள்; ஆனால் 400 மைல் நீளத்திற்கு வாய்க்கால் வெட்டுவது அசாத்தியம் போல இருந்ததால் தலைவர்கள் பின்வாங்கினார்கள். கடைசியாக, தயக்கத்திற்கு மனதில் இடம் கொடாதடிவிட் க்லின்டன் என்னும் நியூ யார்க் வாசி கனவை நனவாக்குவதற்காக ஜனங்களைத் தூண்டிப் பிரசாரம் செய்தார். கவர்னர் ஆனதும் அவர் 1817ல் வேலை துவக்கி மிகப் பிரயாசையின் மேல் அதைப் பூர்த்தி செய்தார். 1825-ல் முதல் படகுத் தொடரை மக்கள் களிப்புடன் வரவேற்றுக் கொண்டாடினார்கள்; பாராட்டி ஆரவாரம் செய்யும் கூட்டத்தின் முன் க்லின்டன் இரீ ஏரியின் தண்ணீரை ஒரு ஏனத்தில் எடுத்துச் சடங்கு முறையில் அட்லான்டிக் சமுத்திரத்தில் ஊற்றினார். அவ்வாய்க்காலின் காரணமாக நியூயார்க் நகரம் முன்னுக்கு வரும் துறைமுகமாயிற்று; வேறு பட்டணங்களும் அதை யொட்டி எழுந்தன; அமெரிக்க வியாபாரத்திலும் நிதி நிலையிலும் நியூயார்க் தலைமை வகிக்கும் என்ற நம்பிக்கை ஊர்ஜித மாயிற்று.

மேற்குப்புற வளர்ச்சிக்கு அது சாதகமாக இருந்தது என்பது இன்னும் முக்கியமான விஷயம். நியூ இங்கிலாந்துக்காரர்களும் நியூயார்க்காரர்களும் தொடர்ந்து மேற்கு நோக்கிச் சென்றார்கள். வெள்ளப்பெருக்குபோல் அவர்கள் சென்று குடியேறின இடங்களில் க்லீவ்லண்டு, டெட்ராய்ட், ஷிகாகோ போன்ற சுறுசுறுப்பான பட்டணங்கள் எழுந்தன; அதன் காரணமாக வடமேற்கே பல இடங்களில் 'யாங்கி' ('வடக்கத்தியான்') மனப்பான்மை தென்பட்டது. அமெரிக்க மக்களைப் பெரிய அளவில் இடம் பெயர்த்த பெருமை அவ்வாய்க்காலுக்கு உண்டு; பிற்காலத்தில் அந்நிகழ்ச்சியால் ஒரு பெரிய அரசியல் நன்மை உண்டாயிற்று; அதாவது, உள்நாட்டுப் போர் (Civil war) உண்டாவதற்கு முன்பு மிஸிஸிபி பள்ளத்தாக்கின் வட பகுதிகளையும் வட அட்லாண்டிக் ஸ்டேட்டுகளையும் அது— அரசியல் கருத்தில்—இணைத்துவிட்டது; அச்சம்பவம் போரில் யூனியனைக் காப்பாற்ற உதவிற்று. தற்செயலாய் கிடைத்த இந்தப் பெருமையில் பென்ஸில்வேனியாவின் படகு வாய்க்கால்களுக்கும் ஒரு பங்குண்டு. 'க்லின்டனின் வாய்க்கால்'க்கண்டு ரோசமடைந்த பென்ஸில்வேனியாக்காரர்கள் 40 மிலியன் டாலர் செலவிட்டு 400 மைல் தூரத்திலிருந்த பில டெல்ஃபியாவையும் பிட்ஸ்பர்க்கையும் நீர்ப்பாதைகளால் இணைத்தார்கள். சில இடங்களில் ஏற்கனவே இருந்த ஆறுகளும் கால்வாய்களும் பயன்படுத்தப்பட்டன; உயரமான அல்லெகெனி மலைப்பகுதிகளில் தொடர்ந்து சரிவு தளங்கள் அமைக்கப்பட்டு, படகுகளும், சாமான்களும், பிரயாணிக் கூட்டங்களும் மேலே இழுக்கப்பட்டன. அது மிகத்துணிகரமான யத்தனம்; அதனால் ஸ்டேட்டின நிதி நிலை முறியும்போலானாலும், அந்த மிக உபயோகமான செயலால் பென்ஸில் வேனியா தொழில் முன்னேற்றம் அடைவது சாத்தியமாயிற்று.

புது வாழ்க்கை தேடி ஜனங்கள் நகரும்போது தென்வடலாகச் செல்வதைக் காட்டிலும் கிழக்கு மேற்காகச் செல்வது அமெரிக்காவின் வளர்ச்சியில் கவனிக்கத்தக்கது. அலபாமாவிலும் மிஸிஸிபியிலும் முக்கியமாகத் தென்னூட்டார் குடியேறினர்; மிஷிகனிலும் விஸ்கான்ஸினிலும் பெரும்பாலும் வடநாட்டார். ஒஹியோ, இண்டியானா, இல்லினாயி போன்ற இடங்களில் இரண்டு பிரவாகங்களும் சந்தித்தன. தெற்கே இருந்து வந்த மனித நதி ஒஹியோ ஆற்று மார்க்கமாகவும், வடக்கே இருந்துவந்தது இரீ வாய்க்கால், பெரிய ஏரிகள் வழியாகவும் பிரயாணம் செய்து அமைதியாக சங்கமமாயின. இரு இனத்தாரும் கூடிக் கொலம்பஸ், இண்டியானாபொலிஸ், ஸ்ப்ரிங்ஃபீல்ட் போன்ற நகரங்களை எழுப்பினர்கள்; அவர்கள் தங்களுக்குள்ளேயும், ஐரோப்பியக் குடியிறக்க மக்களுடனும் மணம் புரிந்து கொண்டார்கள். இவ்விதமாக உண்மையான 'ஜனநாயகப் பிரதேசம்'' உருவாயிற்று.

மிஸிஸிபிக்கு அப்பாலுள்ள மேற்குப் பிரதேசம்:— மிஸிஸிபிக்கு மேற்கேயுள்ள பரந்த நாட்டின் குடியேற்றத்தின் வர்ணனை இன்னும் சுவையான கதையாகும். பசிஃபிக் சமுத்திரம் வரையுள்ள நிலப்பிரதேசத்தை ஆராய்ந்து யாதாஸ்து சமர்ப்பிக்கும்படி ஜெஃபெர்ஸன் இளம் வர்ஜீனியாக்காரர் இருவரை அனுப்பியிருந்தார்; அவர்கள் நிறைய எல்லைப்புற அனுபவம் பெற்றவர்கள். அவ்விருவர் அளித்த வர்ணனைகளால்தான் அமெரிக்கர் அப்பிரதேசத்தின் தன்மையை ஓரளவு அறிந்தார்கள். அவர்கள் தயாரித்த யாதாஸ்து ஒரு அமர நூலாகும்; இருந்தபோதிலும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட செலவுத்தொகை 2500 டாலர்தான் என்றறிய வியப்பாக இருக்கிறது! ஜெஃபெர்ஸனுக்கு எப்பொழுதுமே மேற்கு நாட்டில் மோகமுண்டு. இந்தியர்கள்பால் அவருக்கு மதிப்புண்டு; அவர்களைப்பற்றி அவர் விரிவாக எழுதியிருக்கிறார். அவர் லூயி, க்லார்க் என்னும் இரு ஆராய்ச்சியாளர்களையும் அனுப்பியபோது அவருடைய உத்தேசங்கள் இரண்டு: விஞ்ஞான விசாரணை நடத்துவதோடு அமெரிக்க ரோமசரும வியாபாரிகள் மிஸூரிப் பிரதேசத்தில் முன்னேறுவதற்கான உதவி அவர்கள் புரியவேண்டும் என்பதும் தலைவரின் விருப்பம். அக்காலத்தில் அப்பிரதேசத்து இந்தியர்கள் தோல்களை கானடாவுக்கு எடுத்துச்சென்று அங்குள்ள பிரிட்டிஷ் தரகர்களுக்கு விற்றுவந்தார்கள். தெற்கு நோக்கிப் பாயும் நதி மார்க்கமாகத் தோல்களை அமெரிக்கத்தரகர்களுக்கு அனுப்புவது இந்தியர்களுக்கு அதிக லகுவாயிருக்கும் என்பது அவர் கருத்து.

இரு உத்தேசங்களும் நிறைவேறின. லூயி, க்லார்க் இருவரும் மிஸூரியின் மேற்புறமாகச் சென்று ராக்கீஸ் மலைகளைத் தாண்டி கொலம்பியா நதியின் கீழ்ப்புறமாக பசிஃபிக் சமுத்திரத்தை அடைந்து வீர காவியம் எழுதும்படியான ஆராய்ச்சிகள் நிகழ்த்தினார்கள்; சண்டையில் ஆர்வமுள்ள ஸூ (Sioux) இனத்தாரின் எல்லைக்கு வெளிப்புறமாகவே அவர்கள் சென்றார்கள். போகும்போது சுமார் 4000 மைல் தூரத்தை அவர்கள் 18 மாதத்தில் கடந்து, ஜாக்கிரதையாக தேசப்படங்கள் வரைந்துகொண்டும், வர்ணனைகள் எழுதிக்கொண்டும் சென்றார்கள். ஊர் திரும்பியதும் க்லார்க் "மிஸூரி ஃபர் கம்பெனி" ஸ்தாபிக்க உதவி செய்தான்; நதிகளின் ஓரத்தில் ஆங்காங்கே பல கோட்டைகள் கட்டுவதாக ஏற்பாடு. வியாபாரம் லாபமளித்து வளர்ந்தது. தொடர்ந்து, ஆஸ்டர் என்பவன் ஆரம்பித்த "அமெரிக்கன் ஃபர் கம்பெனி" விறுவிறுப்புடன் வடமேற்குப் பிரதேசத்தில் நுழைந்தது. இதுவரை முக்கியமாக பெரிய ஏரிகள் பிரதேசத்தில் வர்த்தகம் செய்த அக்கம்பெனி கொலம்பியா நதியின் முகத்துவாரத்தில் ஒரு வியாபார நிலையம் நிறுவத் தீர்மானித்தது. 1811-ல் ஆஸ்டரின்

கப்பல் "டான்க்வின்" (Tonquin) தெற்கே சென்று தென் அமெரிக்காவின் தெற்குக்கோடியிலுள்ள ஹார்ன் முனையைச் சுற்றி, வடக்கே திரும்பி, கோரிய இடத்தை அடைந்து ஆஸ்டோரியா என்னும் பட்டணத்திற்கு அஸ்திவாரம் போட்டது; தரை மார்க்கமாகப் புறப்பட்ட இன்னொரு கோஷ்டி அதே இடத்தை மறுவருஷம் எட்டிற்று.

இது நல்ல ஆரம்பம். 1820-ஐ அடுத்த சில ஆண்டுகளில் மூன்று விசித்திரமான நிகழ்ச்சிகளால் மேற்கு நாட்டு வாழ்க்கையும் வியாபாரமும் விருத்தியடைந்தன. தூரத்தென்மேற்குப் பிரதேசம் மெக்ஸிகோவின் கையில் இருந்தது. உல்லியம் பெக்னெல் என்னும் துணிந்த வர்ஜீனியாக்காரன் சுமார் எழுபதுபேர் அடங்கிய வர்த்தகக்கூட்டம் திரட்டி, குதிரைகள் மேலும், கோவேறுக் கழுதைகள்மேலும் சரக்குகள் ஏற்றி, கரடுமுரடான ஆபத்துமயமான தேசத்தில் 800 மைல் பிரயாணம் செய்து சாந்தாஃபே என்னும் மெக்ஸிக ஊரில் நல்ல லாபத்திற்கு விற்றான். அடுத்த வருஷம் அவன் கூண்டு வண்டிகள் ஓட்டிச்சென்றான். வேறு வர்த்தகர்களும் அவன் காட்டிய வழி சென்றனர். இவ்வாறு, பிரசித்திபெற்ற "சாந்தா ஃபே தடம்" (Santa Fe Trail) ஏற்பட்டது. வழியில் பல ஆபத்துகள் இருந்தன—இடை நாட்டின் பெரும்பாகம் பாலைவனம், ஒரே உஷ்ணம், வறட்சி; ஆறுகள் இருந்தால் அவற்றைக் கடப்பது கஷ்டம்; இந்தியர்கள் தாக்கக்கூடும் என்ற பயமும் உண்டு. 80, 100 பேர் அடங்கிய கூட்டமாக இருந்தால் அவ்வளவு ஆபத்தில்லை; பத்து இருபதுபேர் கொண்ட சிறு கூட்டம் சமாளிப்பது அரிது. காலக்கிரமத்தில் அமெரிக்க வழிகாட்டிகள் நல்ல சாலை அமைத்தார்கள். தென்மேற்கை ஐக்கியநாடுகளுடன் சேர்ப்பதில் அது மிகவும் உதவிற்று. இது முதல் நிகழ்ச்சி.

1822-ல் ராக்கி மலை ஃபர் கம்பெனியின் ஸ்தாபனம் இரண்டாவது விசேஷ நிகழ்ச்சி. இந்தியர்களிடமிருந்து சரும்ம் வாங்கி விற்காமல், தாங்களே பொறி வைத்துப் பிராணிகளைப் பிடிப்பதற்கான முதல் கம்பெனி அதுவே. தேச ஆராய்ச்சியில் மிகக் கீர்த்தி பெற்றவர்கள் அந்தக் கோஷ்டியில் இருந்தார்கள்.

1823-ல் சில குரூரமான இந்தியக் கூட்டங்களைப் பயமுறுத்தி அடக்குவதற்காக ஒரு ராணுவப்படை மேல் மிஸிஸிபிப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டது. அது மேற்கூறிய முக்கிய நிகழ்ச்சிகளில் மூன்றாவது, இந்த "மிஸூரிப்படை" தேச அரசாங்கத்தாலும், ஸந்த் லூயி ஃபர் வியாபாரிகளாலும் நிறுவப்பட்டது; ஐக்கிய அரசாங்கம் தன் ஃபர் வியாபாரிகளைக் காப்பாற்றும் என்பதை அது தெளிவாக்கிற்று.

தூர மேற்கு நாட்டில் அமெரிக்கர் பிரவேசிப்பதற்கு கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களும் மிகவும் உதவி புரிந்தார்கள். எல்லைப்புறத்தில் அவர்கள் வெகு காலமாக உழைத்து வந்தார்கள்; பல இந்தியர்கள் கிறிஸ்தவ மதம் ஏற்றனர். பிரசாரகர்கள் மாதிரிப் பண்ணைகள் நடத்தி மதம் மாறிய காட்டாட்களுக்கு வீடுகட்டவும் நல்ல முறையில் விவசாயம் செய்யவும் கற்பித்தார்கள். அவர்கள் தம் உற்றூர் உறவினருக்கு அனுப்பிய கடிதங்களில், அற்புதமான இயற்கைத் தோற்றத்தையும் ஹிதமான சீதோஷ்ண நிலையையும் உற்சாகத்துடன் வர்ணித்திருந்தார்கள்; அவற்றைப் படித்த பலர் கூட்டம் கூட்டமாக வண்டியேறி நாட்டையும் மலையையும் கடந்து ஆரிகன் ராஜ்யத்தில் வசிக்க வந்தார்கள்.

ஆரிகன் தடம்: மிஸௌரி நதியிலிருந்து கொலம்பியாவுக்கு ஆதியில் சென்ற ஆராய்ச்சியாளர்களும் தோல் வியாபாரிகளும் உத்தேசமாக உபயோகித்த பாதை கால் பட்டுப் பட்டு ஆரிகன் பாதையென உருவாயிற்று; நூற்றாண்டின் மத்தியில் அது பெரிய சாலையே ஆகிவிட்டது. அதன் நீளம் சுமார் 2000 மைல்; அது ஆபத்துகளும் துன்பங்களும் நிறைந்தது. மிஸௌரி நதிக்கரையில் இண்டிபெண்டென்ஸ் என்னும் ஊரிலிருந்து புறப்பட்டு, கரடுமுரடான மைதானங்களைக் கடந்து, ராக்கீஸ் மலையை சற்று உயரம் குறைவான தெற்குக் கணவாயில் தாண்டி, புல் பூண்டில்லாத மலைப் பிரதேசத்தில் சென்று, ஸ்நேக் நதிக்கரையில் ஹால் கோட்டை என்னும் ஊரை அடைந்து, கடக்க இயலாது என்னக் கூடிய நீலமலைகளை எப்படியோ சமாளித்து, உமாடில்லா நதியோரமாகக்கொலம்பியா நதியை அச்சாலே எட்டுகிறது. "பெரிய உப்பு ஏரி"க்கப்பால் ஒருபிரிவு கலிஃபோர்னியாவுக்குச்செல்கிறது. 1841-ல் ஆண், பெண், குழந்தைகள் அடங்கலாகச் சுமார் 80 பேர் மிகக் கடினமான யாத்திரையை வெற்றிகரமாக முடித்து ஆரிகான் போய்ச் சேர்ந்தார்கள்; அதுவே அவ்வழி சென்ற முதல் குடும்பக் கோஷ்டி. பிறகு அதிசயிக்கும் முறையில் வேறு கூட்டங்கள் சென்றன. இவ்வாறு புது வாழ்க்கையை நாடி, நற்காலிக இன்னல்களைச் சமாளித்துக்கொண்டு, முன்னேறும் சிறுமனித ஓடை 1845-க்குள் ஒரு மனித ஆறுகப் பெருகிவிட்டது. அந்த வருஷம் மூவாயிரத்திற்கும் அதிகமானவர் வில்லமெட் பள்ளத்தாக்கை அடைந்தனர்.

ஆரிகன் யாத்திரை பெரிய புராணமாகக் கொள்ளவேண்டிய சிறப்பை உடையது. கிழக்கு வெளுத்ததும், "பிடி, பிடி" (நின்றுபோன யாத்திரையை மறுபடி துவக்கு) என்ற கூச்சல் ஒலிக்கும்; ஒவ்வொரு தொடரிலும் முதல் வண்டியின் மாடுகளையும் சாரதிகளையும் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்தப்பட்டது; ஏனெனில் முதல் வண்டியின் பொறுப்பு அதிகம்.

வர்கள் கட்டளையிட்டதும் வண்டிகள் வரிசை வரிசையாக நகர்ந்தன. இரவில் வட்ட வடிவமான முகாம் போடப்பட்டது—வண்டிகள், சாமான்கள், ஆண்கள் வட்ட எல்லையிலும், பெண்களும் குழந்தைகளும் பிராணிகளும் உள்ளேயும் என்பது ஏற்பாடு. வழியில் வசதியான இடத்தில் உணவு சமைத்தல், துணி துவைத்தல் முதலிய காரியங்கள் நடந்தன. காதல் லீலைகள் நடந்தன, சிசுக்கள் பிறந்தன, வலிவற்றவர் இறந்தனர், அநாமதேயப் பள்ளங்களில் அடக்கமாயினர். கூடித்துப்போன எருதுகளும் கோவேறுக் கழுதைகளும் கனமான வண்டிகளை மேடுகளில் இழுக்க இயலாமற் போனபோது மிகவும் இஷ்டமான பொருள்களும் வண்டியுடன் பாதையோரத்தில் நின்று போயின. இந்திய சத்துருக்களோடோ, கரடிகளோடோ, காலரா அல்லது கெட்ட வானநிலையோடோ எதிர்ப்பு ஏற்பட்டால் நீடித்த வேதனையில் பிரயாணம் முடிவடையும். சூழ்நிலை அனுகூலமாக இருந்தபோது, எல்லாம் ஒரே சந்தோஷமும் கொண்டாட்டமுந்தான். "இயற்கைத் தோற்றத்தில் மாறுதல், விசாலமான—மரமற்ற—புல்தரைகளில் பிராணிகள் மேய்தல், இந்தியர்களின் தோற்றம், மலைநாட்டில் வியாபாரிகளும் வேட்டர்களும்,...இவ்வாறு பிரயாணம் ஒரு நீடித்த உல்லாச வன போஜனமாக இருந்தது" என்று ஒருவன் குறித்திருக்கிறான். பெரிய எண்ணிக்கையில் அமெரிக்கர் ஆரிகன் சென்றது ஒரு ராஜதந்திரச் செயலாயிற்று; அப்பிரதேசம் ஐக்கிய நாடுகளின் ஒரு அம்சமாகிவிட்டது. 1849-ல் அதன் நிர்வாகம் நன்கு அமைந்து, 10 வருஷத்தில் ஸ்டேட்டு ஆகிவிட்டது.

மார்மன் சம்பிரதாயங்கள்: தனித்தன்மை, அபிப்பிராயபேதத்தால் பிரியும் தன்மை, மதப் பிரசாரத்தில் பற்றுதல் ஆகிய குணங்கள் அமெரிக்கரைப் பலவித விசித்திரமான மத சோதனைகளில் இழுத்துச் சென்றிருக்கின்றன. அவற்றின் முடிவுகளைப் பெரும்பாலும் ஆதிமரத்தின் கிளைகள் எனலாம். ஆனால் மேற்கே, இப்பொழுது யூடா (Utah) எனப்படும் இடத்தில் ஸ்தாபிதமான மார்மன் சம்பிரதாயத்தை முற்றிலும் புதியது, கவனத்தைக் கவருவது என்றுதான் சொல்லவேண்டும். "பின்னுள் சிரேஷ்டர்களின் சர்ச்" (Church of Latter-Day Saints) எனப்படும் அந்த மதத்தை ஆரம்பித்தவன் ஜோஸஃப் ஸ்மித் என்னும் நியூயார்க் இளைஞன். அவன் தன்னைப்பற்றிக் கூறியது இவ்வாறு:—ஒரு நாள் அவன் முக்திக்காகப் பிரார்த்தனை செய்யக் காட்டுக்குச் சென்றான். அங்கு இரண்டு தேஜஸ்விகள் பிரசன்னமாகி, கிறிஸ்துவ வேதத்தின் சாராம்சத்தை (Gospel) எடுத்து விளக்கி அதன் பயனை மக்களுக்கு அளிக்கும்படி சொன்னார்கள். சிறிது காலம் கழித்து மாரோனி (Moroni) என்னும் தேவன் தோன்றி, வட அமெரிக்காவின் புராதன வாசிகளின் புனித சரித்திரம் பொறிக்கப்பட்ட

தங்கப் பாளங்கள் புதைபட்டிருப்பதாகக் கூறினான். தேவன் அளித்த சாதனங்களைக் கொண்டு ஸ்மித் அந்தச் சரித்திரத்தை மொழி பெயர்த்தான். 1830-ல் அது (Book of Mormon) மார்மன் நூல்—என்ற பெயரில் பிரசுரிக்கப்பட்டது. அவ் வருஷம் ஒரு மத ஸ்தாபனம் நிறுவப்பட்டு அது வேகமாய் விருத்தியடைந்தது. பல இன்னல்களுக்குப் பிறகு அதன் தலைமைக் காரியாலயம் இல்லினுயிக்கு மாற்றப்பட்டது. அங்கு மிஸிஸிபி நதிக் கரையில் மார்மன்கள் நாவூ என்னும் வளம் பொருந்திய பட்டணம் எழுப்பி, ஒரு சர்வ கலா சாலையைத் துவக்கி, பெரிய கோவிலும் கட்ட ஆரம்பித்தார்கள். (கிறிஸ்தவ விரோதமாக) ஒருவன் பல மனைவிகளை மணக்க அவர்கள் அனுமதித்தார்கள். பொது மனிதர்கள் அப் புது மதத்திடம் சந்தேகம் கொண்டனர்; புது மதத்தாரின் பொருளாதார முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப் பட்டார்கள்; எல்லாவற்றிற்கும் மேல் பல மனைவிமாரைக் கொள்ளலாம் என்ற கொள்கையைக் கேட்டு அவர்கள் வெகுண்டார்கள். அதன் விளைவாகத் தாக்குதல்களும் கலகங்களும் மூண்டன. ஸ்மித்தும் அவன் சகோதரனும் கைதியாக்கப்பட்டார்கள். ஒரு கலகக் கூட்டம் அவர்களை வெளியே இழுத்துச் சென்றுத் தூக்கிலிட்டுக் கொன்றது. தொடர்ந்து, மார்மன்கள் அந்த ஸ்டேட்டிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள். ப்ரிகாம் யங் என்னும் திறமைவாய்ந்த புதிய தலைவனுடன் அவர்கள் நதியைக் கடந்து அமைதியும் ஆபத்தற்ற சுபிக்ஷ வாசமும் தேடி தூர மேற்கு நாட்டிற்குப் புறப்பட்டார்கள்.

அதன் விளைவு விசேஷமானது; வாசத்திற்கு லாயக்கற்ற பாலைவனம் என்று கருதப்பட்ட இடத்தில் சிறந்த காலனி உண்டாயிற்று. சமவெளிகளைக் கடந்து "பெரிய உப்பு ஏரி" ப் பள்ளத்தாக்குக்கு ப்ரிகாம் யங் தன் மதத்தாரை அழைத்துச் சென்றான். அங்கு உயரமான மலைகளால் சூழப்பட்டு, பூமி செழிப்பாக இருந்தது; நீர்வளம் திருப்தியளித்தது; சீதோஷ்ண நிலை ஆரோக்கியமளிப்பதாக இருந்தது. தலைவன் பட்டணமும் வயல்களும் அமைப்பதற்கான யோசனைகள் கூறிக் கிழக்குப்புறப் போக்கு வரத்துக்கும் ஏற்பாடு செய்தான். முதல் வருஷம் ஓரளவு பஞ்ச வருஷமாயிற்று; அதன் பிறகு உடா அவர்களுக்கு வேண்டியதற்குமேல் அளித்தது. தோட்டங்களும் பாசன வாய்க்கால்களும் பள்ளத்தாக்குப் பிரதேசம் முழுதிலும் பரவின. ப்ரிகாம் யங் தன் இச்சைப்படி ஆண்டான்; ஆனால் அவனுடைய அறிவும் நல்லெண்ணமும் ஓரளவு ஈடு கட்டின. அவனும் அவன் சார்ச் அதிகாரிகளும் உடா விளை பொருள்களை விற்பதற்கான ஏற்பாடுகள் செய்தார்கள்; அவர்கள் புதுப் பட்டணங்களுக்கு இடங்கள் தேடிப்பிடித்து அவற்றிற்கு வேண்டிய சரியான தொழில் நிபுணர்களை அனுப்பி

வைத்தார்கள்; அகலமான சிறந்த தெருக்கள், பளிச்சிடும் நீர் ஊற்றுகள், கோவில், ஜப மண்டபம், முதலியன கொண்ட ஸால்ட் லேக் நகரம் அமெரிக்காவில் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்றுயிற்று. பொருளாதார விதிப்படி திட்டமிடப் பட்ட முதல் அமெரிக்கக் காலனி அது; அம் முயற்சி வெற்றி பெற்றது. பலதார மணம் சிறிது காலம் நீடித்திருந்தது; மார்மன் மதத்தைத் தழுவியவர்களில் ஸ்திரீகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததாலும், கன்னிகைகளுக்கும் மக்கட்பேறில்லாத ஸ்திரீகளுக்கும் எல்லைப்புறத்தில் இடமில்லாததாலும், அந்தக் காலனியின் விசேஷ நிலையில் அப்பழக்கம் பயனளிப்பதாகவே இருந்தது. 1850-ல் அது நல்ல நிர்வாக அமைப்புடன் ஸ்டேட் ஆவதற்குத் தகுதி பெற்று வந்தது.

டெக்ஸாஸ் ஐக்கிய மாகாணங்களுடன் சேர்தல்: டெக்ஸாஸ் ஐக்கிய நாட்டின் ஒரு பகுதியாக சேர்த்துக்கொள்ளப்படுதல், வலுவற்ற மெக்ஸிகோவின் கையிலிருந்து கலிஃபோர்னியாவும் தென்மேற்குப் பிரதேசமும் வெல்லப்படுதல்—இச்சம்பவங்களால் மேற்கே அமெரிக்க தேசம் இறுதி உருப்பெற்றது; 1840-லிருந்து 1850-க்குள்ளாக அமெரிக்கக் கண்டத்திலுள்ள அதிக வளமுள்ள பூமிகளும் அழகிய இயற்கைத் தோற்றமுள்ள இடங்களும் ஐக்கிய நாட்டின் எல்லைக்குள் வந்து சேர்ந்தன.


மெக்ஸிக ஜனநாயகத்தின் ஒரு பகுதியாகிய டெக்ஸாஸ் விஸ்தரணத்தில் ஜெர்மனியைப் போன்றது; ஆனால் இங்கு சில மாட்டுக்காரர்களும் அங்கு சில வேடர்களுமாக ஜனங்கள் மிகக் குறைவு. ஆதியிலேயே அது பல அமெரிக்கர்களையும் சில பிரிட்டிஷாரையும் கவர்ந்தது; முதல் ஆங்கில அமெரிக்கன் காலனி 1821-ல் அங்கு அமைந்தது. அண்மையில் இலவச திலம் கிடைப்பது தென் ஸ்டேட்டுகளின் ஆசையை மிகவும் தூண்டக் கூடியதே. திறமையின்மை, லஞ்சம் வாங்குதல், கொடுமையான ஆட்சி, மூன்று தீமைகளும் மெக்ஸிக அரசாங்கத்தை பலஹீனப் படுத்தின. 1835-ல் குடியேறிய மக்கள் சர்க்காரை எதிர்த்துக் கிளம்பிப் பல போர்களுக்குப் பின்னர் சுதந்திரம் பெற்றார்கள். டெக்ஸாஸ் ஜனநாயக நாடாக அமைந்த பிறகு, அது வளம்பெற்று வளர்ந்து, பல புது அமெரிக்கக் கூட்டங்களின் மனதைக் கவர்ந்தது. அது ஐக்கிய நாட்டுடன் சேர விரும்பியபோது ஐக்கிய நாடு சில காலம் மறுத்தது. ஆனால் பல காரணங்களுடன் சுயநலமும் வேலை செய்தது. வடக்கு நாட்டார் விவசாய விளைவுப் பொருள்களையும் கைத்தொழில் பொருள்களையும் டெக்ஸாஸில் விற்க விரும்பினர்கள்; கப்பல் முதலாளிகள் அங்குள்ள கால்வெஸ்டன் துறைமுகத்திற்கு லாபகரமாகப் பிரயாணம் செய்யலாமே, என்று நினைத்தார்கள்; யாங்கி நெசவு முதலாளிகள் அங்கு கிடைக்கும் மலிவான பருத்திக்காக ஏங்கினர்கள். தென்னுட்டார் பலர்


அங்கு குடியேற விரும்பினர்கள்; ஆனால் அமெரிக்கக் கொடியின் தொடர்பை விட இச்சிக்கவில்லை.

1844-ன் தேசத் தேர்தலின்போது, வாக்காளர்களில் பெரும்பாலோர் தம் சம்மதத்தைத் தெரிவித்தார்கள்; மறு வருஷம் டெக்ஸாஸ் ஐக்கிய நாடுகளில் ஒன்றுயிற்று.

மெக்ஸிகோப் போர்; கலிஃபோர்னியாவும் புது மெக்ஸிகோவும் பெறுதல்: இதற்கிடையே, அதே அமைதியான முறையில் கலிஃபோர்னியாவையும் வசப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று பல அமெரிக்கர்கள் விரும்பினர்கள். அதனுடைய விசித்திரமான நிலைமையினால் அது சாத்தியம் என்று தோன்றிற்று. அதன் ஜனத்தொகை மிகவும் குறைவு—11,000அல்லது12,000 பேர் கடற்கரையை யொட்டி வசித்தார்கள்; உள்நாடு அவர்களைக் கவரவில்லை. அவர்களிடம் பணமோ, சேனையோ, அரசியல் அனுபவமோ கிடையாது. பலஜாதியாரின் கலப்புச் சந்ததி என்றாலும் ஸ்பானிய அம்சம் அவர்களிடம் அதிகமிருந்தது. ஸ்பானிய ரத்தக் கலப்பு மெக்ஸிகோவிலும் உண்டென்றாலும் ஸ்பானிய அம்சம் அங்கு மிகக் குறைவு. கலிஃபோர்னியாக்காரர்கள் தம்மைப் பெயரளவுக்கு ஆளும் மெக்ஸிகோக் காரர்களைக் காட்டிலும் தாம் உடலிலும் அறிவிலும் சிறந்தவர்கள் என்று கருதினர்கள். அவர்களுடைய குடும்பப்பூசல்களும் உள்நாட்டு—வடக்கு, தெற்கு என்ற—பொறுமைகளும் இல்லாவிட்டால் எப்பொழுதோ சுதந்திரம் அடைந்திருப்பார்கள். மெக்ஸிகோ சர்க்கார் நீதிஸ்தலங்களோ, போலீஸ் இலாகாவோ, தபால் வசதிகளோ, பள்ளிக்கூடங்களோ அமைக்கவில்லை. கலிஃபோர்னியாவுக்கும் மெக்ஸிகோ நகருக்கும் போக்குவரத்து அபூர்வம்; நிச்சயமற்றதுங்கூட. தன்னுடைய ஆட்சி வெறும் நிழல் ஆட்சி என்று வெளிப்படையாக அறிந்த மெக்ஸிகோ கலிஃபோர்னியாப் பிரதேசத்தை பிரிட்டனுக்கு விற்றுவிட 1845-வாக்கில் ஒரளவு நினைத்தது. காலப்போக்கில அமெரிக்கரின் எண்ணிக்கையும் பலமும் கலிஃபோர்னியாவில் அதிகரித்து வந்தன. அமெரிக்கக் கப்பல்கள் வெகுசாலமாக அந்தக் கரையில் வியாபாரம் செய்ததுண்டு; அந்தச் சுகமான தேசத்தில் குடியேறி கால்நடை வளர்த்தும் கோதுமைப்பயிர் செய்தும் பணம் சம்பாதிக்க விரும்பின அமெரிக்கர் 1830—லேயே மலையைத் தாண்டி அங்கு செல்ல ஆரம்பித்து விட்டனர். 1846—ல் அங்கு 1200 அயல் நாட்டார் வசித்தார்கள்; பெரும்பாலோர் அமெரிக்கர்கள். ஆகவே, ஐக்கிய நாடு கையை நீட்டியதும் கலிஃபோர்னியா கனிந்த பழம்போல் உதிர்ந்துவிடும்—பலாத்காரம் வேண்டியிராது—என்று சிலர் நம்பியதில் ஆச்சரியமில்லை.

வேறு காரணத்தால் மெக்ஸிகோப் போர் கிளம்பியிராவிட்டால் அப்படி நடந்தும் இருக்கலாம். இரு நாடுகளுக்கும்





இடையே அவநம்பிக்கை வளர்ந்துகொண்டிருந்தது போருக்கு மிக எட்டிய காரணம்; டெக்ஸாஸ் எல்லையைப்பற்றிய விவாதம் உடனடியான காரணம். அது ஐக்கிய நாட்டுக்குப் பெரும் வெற்றியளித்து சீக்கிரம் முடிவடைந்தது. ஸாக்கரி டேலரின் தலைமையில் ஒரு படை வட மெக்ஸிகோவுக்குள் அனுப்பப்பட்டது. அது கோட்டைப் பாதுகாப்புள்ள மான்டெரே என்னும் பட்டணத்தைப் பிடித்து, புவென விஸ்டா பட்டணத்தருகில் விடாப்பிடியான போரில் பெரிய மெக்ஸிகப் படையைத் தோற்கடித்தது. 1812—ன் போரில் கீர்த்தி பெற்ற வின்ஃபீல்ட் ஸ்காட்டின் தலைமையில் இன்னொரு படை வீராக்ரூஸ் துறைமுகத்தில் இறங்கி மேற்கே முன்னேறி மலைகளைக் கடந்து கடுமையான போருக்குப் பிறகு மெக்ஸிகோப் பட்டணத்தைக் கைப்பற்றியது. அங்கு ஸ்காட் அமெரிக்கக் கொடியை ஆதி அரசர்களாகிய 'மான்டெஸூமா'க்களின் அரண்மனைமேல் பறக்கவிட்டான். (ஆஸ்டெக் வம்சத்தைச் சேர்ந்த இரண்டாவது மான்டெஸூமா சக்கரவர்த்தியைத் தோற்கடித்துத்தான் ஸ்பெயின் நாட்டார் மெக்ஸிகோவைக் கைப்பற்றினர்; அப்பொழுது நாடு நல்ல நாகரிகமடைந்திருந்தது). அமைதி நிலவியதும், ஐக்கிய நாடு கலிஃபோர்னியா மட்டுமின்றி, அதற்கும் மெக்ஸிகோவுக்கும் இடையேயுள்ள—புது மெக்ஸிகோ எனப்பட்ட—பெரிய பிரதேசமும் பெற்றது. தற்போதைய நெவாடா, உடா என்னும் ராஜ்யங்கள் அங்கு அடங்கியிருக்கின்றன. இவ்வாறு, டெக்ஸாஸ் உள்பட ஒன்பது லக்ஷச் சதுர மைலுக்கும் அதிகமான ஸ்தலம் ஐக்கிய நாட்டுக்குக் கிடைத்தது.

அது மாத்திரமல்ல, அதற்குப் பிரம்மாண்டமான ஒரு பொக்கிஷமும் கூடவே கிடைத்தது; எப்படியெனில், உடன்படிக்கைப் பக்குவமாகிக் கொண்டிருக்கையிலேயே கலிஃபோர்னியாவின் குன்றுகளில் தங்கச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. உடனே தரைமார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் அதிர்ஷ்ட தேவதையின் உபாசகர்கள் வெள்ளப் பெருக்காகப் பாய்ந்தோடி மலையோடைகளைத் தங்கக்கட்டிக்காகவும் தூளுக்காகவும் சலிக்கவும் புடைக்கவும் தொடங்கினர்கள். பேரிரைச்சலுடன் மலைச்சரிவுகளில் முகாம்கள் கிளம்பின. ஓரிரவில் ஸான் ஃப்ரான்ஸிஸ்கோ ஆவலும் ஆவேசமும் நிறைந்த சிறு பட்டணமாயிற்று—எங்கு பார்த்தாலும் உற்சாகம், ஊக்கம், போக வாழ்வு, தீய நடத்தை, கண்ணிமைக்கும் நேரத்தில் 'தூங்குமூஞ்சி' கலிஃபோர்னியா விழித்தெழுந்து சுறுசுறுப்படைந்தது; பரவலாக உல்லாச சோம்பேறிகளான ஸ்பானிய அமெரிக்க மாட்டு முதலாளிகள் இருந்த இடம் அவசரமும் துடிதுடிப்புமுள்ள ஆங்கிலக் கூட்டங்களின் குடிநல ராஜ்யமாயிற்று. ''கழிந்த அந்நாட்கள், பொன்கொழித்த அந்நாட்கள் '49—ன் அந்நாட்கள்!'' அமெரிக்க சரித்திரத்தில் மிக

ரசமானவை, நாடக நிகழ்ச்சிகள் நிறைந்தவை. கலிஃபோர்னியா மிகத் துரிதமாக வளர்ந்ததால் 1850-ல் அது ஐக்கிய நாடுகளின் ஒரு நாடாயிற்று.

மேற்கே இவ்வளவு விஸ்தாரமானப் புதிய பிரதேசங்கள் கிடைத்ததன் காரணமாகக் கவனிக்காமல் விட்டபல்வேறு பிரச்னைகளை அமெரிக்கர் இப்பொழுது கவனிப்பது அவசியமாயிற்று—கரீப்பியன் கடல் பிரச்னை; பசிஃபிக் மகா சமுத்திரப் பிரச்னை (இப்பொழுது பனமா வாய்க்காலாக உருவெடுத்திருக்கும்), பூசந்தி வாய்க்கால் பிரச்னை, எல்லாவற்றிற்கும் மேல் பூராப் பிரதேசத்தில் வியாபித்துவிடுமோ என்று பயப்பட வேண்டிய நீக்ரோ அடிமைப் பிரச்னை.

அத்தியாயம் 10

வர்க்கபேதப் போராட்டம்

அடிமைத்தன்மை என்ற ''தனிரகப்'' பிரச்னை: உள் நாட்டுக் கலகம் ஆரம்பிப்பதற்கு ஆறு வருஷங்களுக்கு முன் நியூயார்க்கைச் சேர்ந்த ஃப்ரெடெரிக் லா ஒல்ம்ஸ்டெட் என்னும் கூர்மையான கவனிப்பாளன் மிஸிஸிபியிலுள்ள முதல் தரமான தொரு பருத்திப் பண்ணைக்குச் சென்றான். அங்கு பெரிய, அழகிய வீடு ஒன்றிருந்தது; சுமார் 1,400 ஏக்கரில் பருத்தியும் சோளமும் இதரப் பயிர்களும் நடப்பட்டிருந்தன; அப்பண்ணைக்காரருக்குச் சொந்தமான 200 பன்றிகளும் இருந்தன; அங்கிருந்த 135 நீக்ரோ அடிமைகளில் சுமார் 70 பேர் வயல்களில் வேலை செய்தார்கள், மூன்று பேர் யந்திர ஆசாரிகள், ஒன்பது பேர் வீட்டிலும் குதிரை லாயத்திலும் வேலையிலிருந்தார்கள். அவர்கள் காலையிலிருந்து இருட்டும் வரை உழைத்தார்கள்; ஞாயிறு விடுமுறை நாள்; சிலசமயம் சனியும் விடுமுறை நாள். வேனிற் காலத்தில் வயல் ஊழியர்கள் 16 மணி நேரம் கடுமையான வேலை செய்வார்கள்; நடுப்பகலில் சிறிது நேரம் ஓய்வுண்டு. அவர்களுக்கு வாரந்தோறும் ஐந்து படி தானியமும் நான்கு ராத்தல் பன்றியிறைச்சியும் கொடுக்கப்பட்டன; காய்கறி, முட்டை, குஞ்சு முதலியன அவர்களுடைய தனி உழைப்பாலேயே கிடைத்தன. கிறிஸ்துமஸ் விழாக்காலத்தில் கரும்பாலைப் பாகு, காஃபி, புகையிலை, காலிகோத் துணி முதலியன தாராளமாக விநியோகிக்கப்பட்டன. சமையலுக்கும் கணப்புக்கும் தங்களுக்கு வேண்டிய விறகை அவர்கள் ஒரு காட்டிலிருந்து வெட்டிக் கொண்டார்கள். விடுமுறை நாட்களில் அவர்கள் கட்டைகள் வெட்டி அறுத்து விற்றுக்கொள்ளலாம்; அதில்லாமை கொண்டு தங்கள் சௌகரியத்திற்கான சிறு சாமான்களை வாங்கிக்கொள்ளலாம். வயல்களில் ஒரு வெள்ளை மேற்பார்வையாளன் சாட்டையைச் சடார் என்று உதறி அடிமைகளை துரிதப்படுத்தினான்; ஒவ்வொரு சமயம் தோல் சாட்டை ஒரு சோம்பேறியின் தோளையும் லேசாகத் தட்டும். அவன் தன் எஜமானனின் அடிமைகள் மொத்தத்தில் ஒழுங்காக நடந்துகொள்கிறார்கள் என்றும், ஆனால் சமீபத்தில் தன்னைக் குத்த முயன்ற ஒருவனை விற்றுவிட வேண்டி வந்ததென்றும் அறிவித்தான். ''நீக்ரோக்கள் அதிகமாய் ஓடிப்போக முயலுவதில்லை; முயன்றால் அவர்கள் பிடிபடுவது நிச்சயம்; ஒருவன் ஓடிப்போய்விட்டான் என்ற தகவல் கிடைத்தும் மோப்ப நாய்கள் அவன்மீது ஏவப்படுகின்றன'' என்றும் அவன் விவரித்தான்.

அது ஒரு நல்ல பண்ணைக்கு உதாரணமாகும். அடிமைகள் இன்னும் கடுமையாகவும் அதிக மிருகத்தன்மையோடும் நடத்தப்படும் பண்ணைகளை ஒல்ம்ஸ்டெடும் வேறு கவனிப்பாளர்களும் அறிவார்கள்; ஒன்றிரண்டு இடங்களில் முன்கூறியதைக்காட்டிலும் அன்பான நடத்தையுள்ள தோட்டங்களும் உண்டு. அடிமைகளின் எஜமானர்கள்மேல் சாட்டப்பட்ட குற்றங்களாவன: அதிக வேலை; சில சமயங்களில் பலத்த கசையடி; விற்பனைகளின் காரணமாக குடும்பங்கள் சிதறிப்போதல்; கல்வியும் நாகரிக முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களும் அளிக்கப்படாமை, அடிமை நிலையை ஆதரிப்பவர்கள் பாராட்டிக்கூறும் சமாதானங்களாவன: வேலையில்லாத போதும், நோய் நாட்களிலும், கிழத்தன்மையிலும் ஜீவனோபாயம் தடைபடுவதில்லை; தொழில் சச்சரவு ஏற்படாது; அவர்கள் கிறிஸ்தவர் ஆக்கப்பட்டு படிப்படியாக உயர்த்தப்படுகிறார்கள்; எஜமானர்களிடம் கண்ணிய நடத்தையும் அடிமைகளிடம் விசுவாச பாவமும் உண்டாகின்றன. பொருளாதார நோக்கில் அடிமை நிலையைத் தாக்குவோரும் உண்டு. ''வர இருக்கும் பேராபத்து'' (The Impending Crisis) என்னும் நூல் எழுதிய ஹின்டன் ரோவர் ஹெல்பர் போலவே ஒல்ம்ஸ்டெடும் தெற்கு நாட்டில் வளரும் தரித்திர நிலைக்கு அடிமை நிலையே காரணம் என்று கருதினான்; ஆனால், வடநாட்டாரின் பேராசைக்குப் பலியாகித் தென்னாடு பின்னடைகிறது என்று பல தென் தலைவர்கள் விளக்கினார்கள். சமூக நோக்கில், அடிமை நிலை வெள்ளையர், கறுப்பர் இருவருக்கும் தீங்கிழைக்கிறது என்று வடநாட்டார் கூறினார்கள்; தென்னாட்டாரோ,

வெள்ளையரின் மேன்மையைக் காப்பாற்றுவதற்கும் பெரிய எண்ணிக்கையில் இருக்கும் நீக்ரோக்களை வசத்தில் வைத்திருக்கவும் அது ஒன்றுதான் விவகாரமுறை என்று விடையளித்தார்கள்.

உண்மையில், ஒரு சாரார் கடுமையாகத் தாக்கிக்கொண்டும், இன்னொரு சாரார் ஆவேசத்துடன் ஆதரித்துக்கொண்டும் இருந்த அந்த அசாதாரணமான ஸ்தாபனத்தின் தன்மையை வடக்கு நாட்டாரோ தெற்கு நாட்டாரோ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை எனலாம். அமெரிக்க அடிமை என்னும்போது, அந்த அடிமை ஒரு நீக்ரோ என்பதுதான் முக்கியம்; அடிமை நிலை என்பதைக்காட்டிலும் நீக்ரோ நிலை என்பதுதான் வாதங்களின் முக்கியமான அம்சம். கறுப்பு ஜாதியானுக்கும் வெள்ளை ஜாதியானுக்கும் இடையே உள்ள உறவை ஒழுங்காயமைக்க அந்தப் பூரா ஸ்தாபனம் நிறுவப்பட்டதே தவிர, எஜமானன் அடிமை என்ற உறவுக்காக அல்ல; உள்நாட்டுப் போராலும் பதின்மூன்றும் திருத்தத்தால் நீக்ரோவின் அந்தஸ்து முழுதாக மாற்றப்பட்டாலும் பொருளாதாரசமூகத்துறைகளில் கறுப்பு-வெள்ளை உறவு அதிகமாக மாறவில்லை. போருக்குப் பிறகு, "வெள்ளையர் அதி சிரேஷ்டமானவர்" என்னும் சித்தாந்தத்தை ஆதரிப்பதற்கு முன் நாட்களில் அடிமைத் தன்மையை நியாயமானது என்று காட்டுவதற்கு உபயோகிக்கப்பட்ட தர்க்கங்களே போதுமானவை; அதே முறையில், அடிமைத் தன்மையை ஒழிப்பதற்காகக் கையாளப்பட்ட வாதங்களெல்லாம் போருக்குப்பின் இருந்த நிலைக்கும், சற்று மெருகிடப்பட்டபின், முற்றிலும் பொருந்தும். அடிமைத்தன்மை தென்னாடு முன்னேறுமல் குறுக்கிட்டது என்றும், விவசாயம், தொழில், கல்வி எல்லாம் ஹீனஸ்திதியில் இருப்பதற்கு அதுதான் பொறுப்பேற்கவேண்டும் என்றும், யாங்கிகள் வாதித்தபோது, தெற்கே மலிவாக அறிவற்ற கறுப்புக் கூலியாட்கள் உழைக்கிறார்கள் என்பதுதான் அவர்களுடைய பேச்சின் கருத்து; விடுதலைக்குப் பிறகு வெகுகாலம்வரை அந்நிலை நீடித்திருந்தது. தென்னாட்டார் சிலர் இதை அறிந்தார்கள். தர்க்க முறையிலல்ல, பண்படைந்த உள்ளறிவால்; ஜாதி உறவுகளின் விகாசத்தில் அடிமை நிலை ஒரு தற்காலிகக் கட்டம், என்பதை அவர்கள் தெளிவாக்க முடியவில்லை. வடக்கு நாட்டார் இம்முறையில் புரிந்துகொள்ளாததனால் விடுதலையின் உள்தன்மையை அவர்கள் அறியவில்லை; ஆகவே, போருக்குப் பிறகு அவர்கள் பெரும் ஏமாற்றமடைவது அவசியமாயிற்று.

1850-ல் நாட்டின் ஜனத்தொகை 23 மில்லியனுக்கு அதிகமாக இருந்தபோது அடிமைகளின் மொத்த எண்ணிக்கை 3,200,000. தென் கரோலினாவிலும் மிஸிஸிபியிலும் அவர்கள் எண்ணிக்கை வெள்ளையரின் எண்ணிக்கையைவிட அதிகமாக

இருந்தது. லூஸியானாவில் எண்ணிக்கை சுமார் பாதியாகவும், அலபாமாவில் ஏழில் மூன்று பங்காகவும் இருந்தது. தெற்கே பல பகுதிகளில் பத்தில் ஒருவன்கூட நீக்ரோ இல்லை; மேரிலண்டிலிருந்து அலபாமா வரை அப்பலாச்சியன் (Appalachians) மலைகளில் நீக்ரோ இல்லையென்றே கொள்ளலாம். வேறு சில இடங்களில் அவர்கள் பெரும் எண்ணிக்கையில் வசித்தார்கள்—சார்ல்ஸ்டனுக்கு அடுத்தாற்போல வடக்கே மொத்தத்தில் 88 சதவீதம்; ஜியார்ஜியா கடற்கரையோரத்தில் 80 சதவீதம்; மத்திய அலபாமாவில் சுமார் 70 சதவீதம்; மிஸிஸிபி நதியின் கீழ்ப்பகுதியில் ஒரு வட்டாரத்தில் 90-க்கும் அதிகம். வெப்பநிலை அதிகமாகவும் பூமி மைதானமாகவும் வளமாகவும் உள்ள இடங்களில் நீக்ரோ ஜனத்தொகை அதிகமாக இருந்தது; மலைப்பாங்காகவோ தரிசுப்பொட்டலாகவோ இருந்தால் அவ்விடங்களை அவர்கள் விரும்பவில்லை. தென்னாட்டாரில் ஒரு சிறிய பகுதியினரிடமே அடிமைகள் இருந்தார்கள். 1850-ன் ஜனசங்கியைப்படி, அங்கிருந்த ஆறுமில்லியன் (60 லக்ஷம்) வெள்ளையர்களுள் 3,47,725 பேரிடந்தான அடிமைகள் இருந்தார்கள். நீக்ரோக்களில் பெரும்பாலோர் தெற்குக் கோடியிலிருந்த சிறு பண்ணைகளில் சிறு சிறு எண்ணிக்கையில் வசித்தார்கள்; 3000, 4000 பண்ணை முதலாளிகள் மிகச்சிறந்த நிலங்களில் விவசாயம் செய்தார்கள்; ஒவ்வொருவரிடமும் அதிக எண்ணிக்கையில் அடிமைகள் இருந்தார்கள்; மொத்த நிலவருமானத்தில் முக்கால் பங்கு அவர்கள் கையில் இருந்தது. உதாரணமாக, ஜியார்ஜியாவில் ஹொவெல் காப் என்பவன் 1,000 நீக்ரோக்களை வைத்துக்கொண்டு 10,000 ஏக்கர் பூமியில் பருத்தி பயிர் செய்தான், நிலத்தில் பெரும் பகுதி ஒரு சில கைகளில் திரண்டிருந்ததைப்போல் அரசியல் ஆற்றலும் அறிவுத்துறையில் தலைமையும் சிலர் வசமே இருந்தது; பொது அவர்கள் 'பிரபு' பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

1830-க்குப் பின்னர் அடிமை ஸ்தாபனத்தை எதிர்க்கும் கட்சியும் ஆதரிக்கும் கட்சியும் தெளிவான உருப்பெற்றன. ஒழிக்க விரும்புவோரும், அதைவிட அதிகமாக, புது இடங்களில் பரவவிடக் கூடாது என்று நினைப்போரும் வடஸ்டேட்டுகளில் வலுவடைந்தார்கள். 1831-ல் பிரசாரத் தீ கக்கும் கானிஸன் "லிபரேடர்" (சுதந்திரம் அளிப்போன்) என்னும் பத்திரிகை ஆரம்பித்தான். ஓஹியோவில் ஒரு பலமான அடிமை எதிர்ப்புக் கோஷ்டியும் நியூயார்க்கில் ஒரு கோஷ்டியும் கிளம்பின. அடிமை நிலை அடியோடு ஒழியவேண்டும் என்பதற்காக அவர்கள் பாடுபட்டார்கள். எதிர்கட்சிக்காரர்கள் இடைஞ்சலும் துன்பமும் விளைவித்தபோது எதிரிடையான பலன்தான் கிடைத்தது. இல்லினாயில் ஒழிப்புப் பிரசாரத்திற்காகலவ்ஜாய் என்பவன் ஒரு அச்சுக்கூடம் வைத்திருந்தான்; 1837-ல் வெறிக்

கூட்டம் ஒன்று அதைத் தாக்கி, அதைக் காத்து நிற்கும் லவ்ஜாயைக் கொன்று விட்டது; உடனே ஒழிப்புக் கட்சி முன்னிலும் அதிகத் தீவிரமடைந்தது. பிரசாரகர்களின் தனி 'சிவில்' உரிமைகளும் பாதிக்கப்பட்டபோது, மனித சுதந்திரமே பாதிக்கப்படுவதாகப் பல அறிவாளிகள் நினைத்தார்கள். வெறிக் கூட்டங்கள் நடத்திய நாக்குதல்களால் அருவருப்படைந்து செல்வாக்குள்ள பிரசங்கிகளும் தனவந்தர்களும் அடிமை நிலைக்கு எதிரிகள் ஆனார்கள். அடியோடு ஒழியவேண்டும் என்னும் பிரசாரத்திற்கு எப்பொழுதுமே அதிகப் பொது ஆதரவு கிடையாது; ஆனால், ''சுவாதீன பூமி''க் கட்சிக்கு—புது இடங்களில் அடிமை நிலை பரவக் கூடாது என்று நினைத்த கட்சிக்கு—நல்ல ஆள் பலம் உண்டு; அது தொடர்ந்து வளர்ந்தது. இதற்கிடையே, தெற்கே பல தலைவர்கள் அடிமை நிலை மிக நல்லது என்ற பிரசாரம் செய்தார்கள். தாமஸ் ட்யூ அதன் சார்பில் ஒரு புஸ்தகம் எழுதினான்; தென் கரோலினுவின் கவர்னர் ஹாம்மண்ட் 1835-ல், ''ஜனநாயகம் என்னும் நம் கட்டடத்தின் அடிக்கல் அது'' என்று தீர்மானமாகக் கூறினான். கால்ஹௌன் புராதனக் கிரேக்க ஏதன்ஸ் நகரை உதாரணமாகக் காட்டி அடிமை வருப்பே சமூகத்தின் கலாசார வளர்ச்சிக்குச் சிறந்த அஸ்திவாரம் என்றான்.

இதுபோன்ற பகுதிச் சண்டைஜக்கியத்திற்கே விரோதமாக மூடியும் என்று கூர்மையான அரசியல் நோக்குள்ளவர்கள் ஆதியிலேயே அறிந்தார்கள். பிரதிநிதி சபையில் ஜான் க்வின்ஸி ஆடம்ஸ் தென்னுட்டை எச்சரிக்கை செய்து, ''பிரிந்து தனியாகப் போனால் சண்டை வரும்; அடிமைகளைக் கொண்ட ஸ்டேட்டுகள் போர்க்களமானால்—அது தொழிலாளி முதலாளிச் சண்டையோ, உள்நாட்டுக் கலகமோ, அயல்நாட்டுப் போரோ, எதுவானாலும் சரி—அமெரிக்க நிர்மாணம் யுத்த சம்பந்தமான சட்டப்படித் தலையிட வேண்டி வரும்; அப்பொழுது அடிமை ஸ்தாபனமும் தாக்கப்படும்'' என்று பல முறை கூறினார். லிங்கன் காலத்தில் அந்த முன்கூற்று உண்மையாயிற்று.

கிளம்பும் புயல்: மெக்ஸிகப் போரின் விளைவாகத் தென் மேற்கே பெரிய பூபாகங்களும், டெக்ஸாஸின் கோரிக்கையால் அந்நாடும் ஐக்கிய நாடுகளுடன் சேரும் என்று தெரிந்ததும் அடிமைப் பிரச்னை மறுபடி தலைவிரித்தாடியது. 1844 வரை, அடிமை நிலை முன்பு வேரூன்றிய இடங்களில் நிர்ப்பந்தமில்லாமல் நீடித்திருக்க வேண்டும் என்பதே தென்னுட்டார்களின் கோரிக்கையாக இருந்தது. மிஸௌரி ஒப்பந்தம் அளித்த எல்லைகளை அது கடக்கவில்லை. இப்பொழுது, நாடு வளரும் போது அதுவும் வளரவேண்டும் என்ற தர்க்கம் எழுந்ததும் வடக்கு நாட்டார் ஒரு படையாக ஆட்சேபித்துக் கிளம்பினர்.

கரூரான ஒரு எல்லைக்குள் அடங்கியிருந்தால் அடிமை ஸ்தாபனம் தானே அழிந்துபோகும் என்று அவர்கள் நம்பினார்கள்; வாஷிங்டன், ஜெஃபர்ஸன் போன்ற ஜனநாயக ஸ்தாபகர்களும் அதே கருத்துக் கொண்டிருந்ததாக அவர்கள் கூறினார்கள்; 1787-ன் அவசரச் சட்டத்தை எடுத்துரைத்து வடமேற்கே அடிமைகளுக்கு இடமில்லை என்று நினைவூட்டினார்கள். டெக்ஸாஸில் ஏற்கெனவே அடிமை நிலை இருந்ததால் அது ''அடிமை ஸ்டேட்''டாகவே ஐக்கியத்தில் சேர்ந்தது. கலிஃபோர்னியாவிலும், நியூ மெக்ஸிகோவிலும், யூட்டாவிலும் அடிமை முறை கிடையாது. மத்திய அரசாங்கம் இந்த ஸ்டேட்டுகளைச் சேர்த்துக்கொள்ள இருக்கும்போது டேவிட் வில்மாட் என்னும் பென்ஸில்வேனியா டிமோக்ராட் ''மெக்ஸிகோவிடமிருந்து கிடைக்கும் பிராந்தியத்தில் எக்காலத்திலும் அடிமை முறை பிரவேசிக்கக் கூடாது'' என்ற நிபந்தனையை மசோதாவில் சேர்த்தான்; சபை அந்த நிபந்தனையை ஏற்றது; ஸெனெட் அதை ஏறுகவில்லை.

தென்னுட்டாருக்கு நிலைமை நியாய விரோதமாகத் தோன்றிற்று; தங்கள் இனத்தாரின் முதல் முயற்சியால் கிடைத்த இடத்தில் தாங்கள் புகக் கூடாது என்றால் எப்படி ஒப்புக்கொள்வது? தென்னுட்டார் அடிமை பலத்தைக் கொண்டு முன்னேறட்டும்; வடநாட்டார் யந்திர பலத்தைக் கொண்டு முன்னேறட்டும் என்றார்கள் அவர்கள். அப்பேச்சு சுவாதீன பூமிக் கட்சியாருக்கு நாராசமாக இருந்தது; நியாய உணர்ச்சிக்கு விரோதமானதும் சுதந்திர யத்தனத்தை அழிப்பதுமான ஒரு கெட்ட முறையை மாசற்றப் புதுப் பிராந்தியத்திலும் கொண்டு புகுத்துவது அக்கிரமம் என்று அவர்கள் விடையளித்தார்கள். இந்த அரசியல் பிரச்னையுடன் ஒரு நிர்மாணப் பிரச்னையும் இணைந்திருந்தது. தேசிய இடத்தில் அடிமை முறையை நிபந்தனைப்படி அனுமதிக்கவோ முற்றிலும் தடுக்கவோ காங்கிரசுக்கு நிர்மாணத் திட்டம் அனுமதி அளித்ததா, இல்லையா? காங்கிரஸ் பலமுறை அவ்வாறு செய்திருந்தது; ஆனால் கட்டளை ஆட்டுக்கும் காவல், நாய்க்கும் நண்பன் என்பதுபோல் தெளிவற்றிருந்தது; கால்ஹௌனும் வேறு தென் தலைவர்களும் பொது இடங்களில் ''கொடி செல்லுமிடமெல்லாம் நாங்களும் செல்வோம்; எங்களுடன் எங்கள் சொத்தாகிய அடிமைகளும் வருவார்கள்'' என்று கருத்துப்பட வாதித்தார்கள். முதல் முறையாக, 1848-ன் தேர்தலில், சுவாதீன பூமிக்கட்சி வலுவுடன் தோன்றிற்று. அக்கட்சி ''எங்கள் கட்சிக் கொடியில் 'சுவாதீன பூமி, சுதந்திரப் பேச்சு, சுயேச்சையான உழைப்பு, சுதந்திர மக்கள்' என்று எழுதியிருக்கிறோம்; அக்கொடியின் கீழ் நாங்கள் போர்புரிவோம்; எங்கள் முயற்சி வெற்றியளிக்கும் வரை நாங்கள் போர்புரிந்து கொண்டே இருப்போம்,''

என்று அறைகூவிற்று. அக்கட்சி ஏராளமான வோட்டுகள் பெற்றது. முக்கியமாக அதன் பிரசாரத்தால் டிமோக் ராட் கட்சி தோற்றது; விக் கட்சியைச் சேர்ந்த போர்ஸூரன் ஸாக்கரி டேய்லர் ஜனாதிபதியானான்; அக்கட்சியின் கடைசி ஜனாதிபதி அவன்.

தேர்தல் நடவடிக்கையின் போதும், அதன் பிறகும் விஸ் மாட் நிபந்தனைக்கு உட்படுவதைக் காட்டிலும் தென்னாடு பிரிந்துபோகும் என்பது தெளிவாயிற்று. வடக்குப்புற அடிமை எதிர்ப்பாளர் புது இடங்களில் கால்ஹௌனின் கோரிக்கைக்கு இணங்கவே மாட்டார்கள் என்பதும் தெளிவு. ஒரு நடுநிலை ஒப்பந்தம் அவசியமாகத் தோன்றிற்று. 36°30' அட்சாம்ச ரேகையாகிய மிஸூரி ஒப்பந்தக் கோட்டைபசிஃபிக் சமுத்திரம் வரை நீட்டிவிடலாம், அதன் வடக்கே அடிமை கொள்ளாத ஸ்டேட்டுகளும், தெற்கே அடிமை ஏற்கும் ஸ்டேட்டுகளும் இருக்கட்டும் என்று ஒரு மிதவாதக் கட்சி கூறிற்று. இன்னொரு மிதவாத கோஷ்டி, ''ஜனங்களின் சுயத் தீர்மானத்திற்கு விட்டுவிடலாம்; முதலில் இருவகை மக்களும் குடியேறித் தம் தம் வழியில் விருத்தியாகட்டும்; பிற்காலத்தில் ஸ்டேட் பதவி அளிக்கப்படு முன்னர் மக்களே இப்பிரச்னையைத் தீர்த்துக் கொள்ளட்டும்'' என்று யோசனை கூறிற்று. இல்லினாயைச் சேர்ந்த ஸ்டீஃபன் ஏ. டக்லஸ் அக்கோஷ்டியைச் சேர்ந்தவன். 1849-ன் இறுதியில் காங்கிரஸ் சந்தித்தபோது, தென்னாட்டார் பிரிந்து போவதாகப் பகிரங்கமாய் பயமுறுத்தினர். வடநாட்டான் கொண்டுவரும் மசோதாவை ''இது ஏற்கப்பட்டால், நாங்கள் பிரிந்து போகிறோம்'' என்று கூறித் தென்னாட்டான் எதிர்க்கும் அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது.

1850-ன் ஒப்பந்தம்: பேராபத்தான இந்த சமயத்தில், ஹென்ரி க்லே, மூன்றாம் முறையாக, சமய உசிதமான ஒரு ஒப்பந்தத்தால் கட்சிச் சண்டையைத் தடுத்து நாடு அழியாமல் காப்பாற்றினார். அவர் திட்டமாவது: 'கலிஃபோர்னியா அடிமையேற்காத ஸ்டேட்டாகச் சேர்த்துக் கொள்ளப் படவேண்டும்'; நியூ மெக்ஸிகோவும் யூட்டாவும் ஒருபுறத் தீர்மானமும் இல்லாமல் வளரட்டும்; ஓடிப்போகும் அடிமைகளை எஜமானர்களிடம் வாபஸ் அனுப்பத் திறமையான நிர்வாகமுறை அமைக்கப் படவேண்டும்; கொலம்பியா ஜில்லாவில் அடிமை வியாபாரம் நிறுத்தப்பட வேண்டும்; நியூமெக்ஸிகோவுடன் சேர்க்கப்பட்ட கொஞ்ச இடத்திற்காக டெக்ஸாஸுக்கு ஈடுசெய்ய வேண்டும், இரு கட்சிகளும் கொஞ்சம் கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும்''... இந்த யோசனைகளில் பெரும்பாலானவை டக்லஸ் இடமிருந்து உதித்தவை; ஆனால் க்லே அவற்றிற்கு ஏற்கக்கூடிய உருவளித்தார்; மேலும் செல்வாக்குள்ள அவருடைய ஆதரவு இன்றியமையாதது. எல்லாக் கட்சிகளும் அவரிடம் கொண்ட

மரியாதை, அவருடைய பேச்சுத் திறமை, கபடமற்ற சத்தியத்தன்மை, கண்ணியமும் இனிமையும் கலந்த அவருடைய தனித்தன்மை, இவையெல்லாம் வெற்றிக்கான சாதனங்கள்.

அந்த ஒப்பந்தம் இறுதி உருப்பெறுவதற்கான வாக்குவாதங்கள் அமெரிக்கச் சரித்திரத்தில் மிக முக்கியமானவை. ஸெனெட்டில் மூன்று பெரியார்கள் இருந்தார்கள்—க்லே, வெப்ஸ்டர், கால்ஹௌன் மூவரும் விருத்தர்கள். இளம் வயதினர்களுள் நக்ஷத்திரப் பொறிகள் போன்ற ஸ்டீஃபன் ஏ. டக்லஸ், ஜெஃபர்ஸன் டேவிஸ், உல்லியம் எச். ஸெவார்ட், ஸாமன் பி. சேஸ் ஆகியோரின் திறமை உயர்தரமானது. இவர்களுள், கால்ஹௌன், டேவிஸ் ஆகிய இருவரும் ஒப்பந்தம் தென்னாட்டாருக்குத் தீமை விளைவிக்கும் என்றுரைத்து அதை எதிர்த்தனர். கால்ஹௌன் கவனத்தைக் கவரும் காரணங்கள் எழுதி, துக்காந்தமான சச்சரவைத் தடுக்க தென்னாட்டாரின் குறைகள் தீர்க்கப்பட்டவேண்டும் என்று வற்புறுத்தினான். வடக்கேயும் தெற்கேயும் இணைக்கும் கயிறுகள் ஒவ்வொன்றாக அறுந்து கொண்டிருக்கின்றன என்றும், மெதாடிஸ்டு, பேப்டிஸ்டு சர்ச்சுகளில் இரு பிளவுகள் ஏற்பட்டு விட்டன என்றும் ''கிளர்ச்சி தொடர்ந்து நடந்தால், பிரிக்கும் சக்திகள் வலுவடைந்து எல்லாக் கயிறுகளையும் துண்டித்து விடும்; அதன் பிறகு படைப் பலம் ஒன்றுதான் ராஜ்யங்களை இணைக்க முடியும்'' என்றும் அவர் எழுதியிருந்தார். அதைச் சபையில் படிப்பதற்கும் தேக பலமற்றவராய், ஒரு நண்பர் படிப்பதைக் கேட்பதற்காக அவர் தள்ளாடிக் கொண்டு ஸெனெட்டில் பிரவேசித்தார். ஒப்பந்தம் வடக்கு ராஜ்யத்தாருக்கு அநியாயம் வழங்குவதாகச் சொல்லி ஸெவார்டும் சேஸும் அதை எதிர்த்தார்கள், ஆனால் டேனியல் வெப்ஸ்டர் மிகச்சிறப்பாக க்லே-யை ஆதரித்தார். மார்ச்சு ஏழாம் தேதி, தம் வாழ்க்கையின் பெரிய சொற்பொழிவுகளில் கடைசியான, சக்திவாய்ந்த பிரசங்கத்தில் அவர், ஐக்கியத்திற்காக, ''மாஸசூஸட் லிப்ஸ்காரன் என்ற முறையிலல்ல, வடக்கு ஸ்டேட் காரன் என்ற முறையிலல்ல, ஒரு அமெரிக்காக்காரன் என்ற முறையில்'' மன்றாடினார். அமைதியாகப் பிரிதல் சாத்தியமில்லை என்றார் அவர். ஒப்பந்தத்தை அவர் ஆதரித்தது மிகத்துணிவான செயல், நியூ இங்கிலாந்தைச் சேர்ந்த தீவிர சீர்திருத்தவாதிகள் அவருடைய நடத்தையைக்கண்டு அதிர்ச்சியும் அருவருப்பும் அடைந்தனர். ஆனால் அது ஒரு அரசியல் விஞ்ஞானி மாத்திரமே செய்யக் கூடிய காரியம்—தம் நாட்டுக்கு அவர் இயற்றிய கடைசிப் பெரிய தொண்டு. இறுதியில், க்லே, டக்லஸ், வெப்ஸ்டர் ஆகியோரின் மிதமான போக்கு வெற்றி பெளித்தது. சமரஸ யுக்திகள் ஒப்புக்கொள்ளப்பட்டன; நாடு ஆபத்து நீங்கிற்று என்று மனப்பூர்வமான திருப்தியுடன் பெருமூச்சுவிட்டது. ஸாக்கரி டேலர் அத்தீர்மானங்களுக்கு ஒருவேளை

அங்கீகாரம் மறுத்திருக்கலாம்; ஆனல் சில மாதங்களுக்கு முன் இறந்து போய் விட்டான்; புதிய ஜனதிபதி மில்லார்ட் ஃபில்மோர் மகிழ்ச்சியுடன் அவற்றிற்குக் கையொப்பமிட்டான்.

மூன்று வருஷ காலம் இந்த ஒப்பந்தம் எல்லா அபிப்ராய பேதங்களையும் தீர்க்கக் கூடியதாகத் தோன்றிற்று. விக் கட்சி டிமோக்ராடிக் கட்சி இரண்டிலும் பெரும்பாலோர் அதை முழு மனத்துடன் ஆதரித்தார்கள். ஆனல் உள்ளுக்குள் புகைச்சல் இருந்து கொண்டுதான் இருந்தது; அது வளர்ந்து கொண்டு மிருந்தது. எஜமானனிடமிருந்து தப்பியோடும் நீக்ரோக்களைப் பற்றிய சட்டம் வடக்கு ஸ்டேட்காரர் பலருக்கு அருவருப்பாக இருந்தது. அடிமைகளைப் பிடித்துக் கொடுக்க அவர்கள் மறுத்தார்கள்; அதற்கெதிராக, நீக்ரோக்கள் தப்பியோட அவர்கள் உடந்தையாக இருந்தார்கள். ரெயில் பாதையில் இரவு நேரத்தில் சாமான் வண்டிகளில் பதுங்கிப் பலர் வெகு தூரம் சென்றனர். கடற்கரை யோரத்தில் வசிக்கும் சிலர் கப்பல்களில் தப்பி வெளியேறினர். சிலர் இரவு நேரத்தில் துருவ நக்ஷத்திரத்தைக் குறியாகக் கொண்டு வடக்குப் புறமாக நடந்து, ஒஹியோ நதியை அடைந்து, கானடா செல்ல உதவி பெற்றனர். சிலர் அப்பலாச்சியன் மலையோரமாக பென்ஸில் வேனியா அடைந்தார்கள். வடராஜ்ஜியங்களில் தப்பியோடிய அடிமைகளுக்காக சரண்புகும் ஸ்தலங்கள் பல ஏற்பட்டன. 1850-ல், தப்பியோடி வடக்கே பதுங்கிய சுமார் 20,000 அடிமைகள் சட்டப்படி குற்றவாளிகள்; எவரும் அவர்களைப் பிடித்துப் பழைய எஜமானனிடம் அனுப்பலாம்; ஆனல் அவர்களைப் பிடிக்க முயலும் போது அடிக்கடி கலகங்கள் மூண்டன.

1852-ல் Uncle Tom's Cabin (அங்கில் டாம்ஸ் கேபின்) என்னும் நாவல் புத்தக ரூபத்தில் தோன்றிற்று. அதை எழுதியவர் மிஸஸ் ஹாரியெட் பீசர் ஸ்டௌ என்பவர். தப்பியோடிய நீக்ரோக்களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது அது. அந்தத் துக்ககரமான வரலாறு வடக்கே, தெற்கே எல்லா இடங்களிலும் படித்தவர் உள்ளத்தை உலுக்கிற்று. கனெக்டிகட் வாசியாகிய மிஸஸ் ஸ்டௌ, கென்டக்கி பண்ணைகளுக்கு அடிக்கடி சென்று அடிமைப் பிரச்னையின் சாதக பாதகங்களை ஊன்றிக் கவனித்தவள். கதையில் பல நல்ல எஜமானர்களையும் அவள் மனமாரப் பாராட்டியிருக்கிறாள்; அடிமைகளைக் கொடுமையாய் நடத்தும் ஸைமன் லெக்ரி — கதையில் — வடபுறத்து யாங்கி குலத்தில் பிறந்தவன், என்பதும் கவனிக்கத் தக்கது. அடிமை முறையிலிருந்து குரூரத்தன்மையைப் பிரிக்க முடியாது என்றும், சுதந்திர சமூகமும் அடிமை சமூகமும் அடிப்படையாகவே முரணானவை, இயற்கையான இணைப்பு அசாத்தியம் என்றும் கதை விளக்குகிறது. அப்புத்தகம் இருபதுக்கும் அதிகமான பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது;

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் லட்சத்திற்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகி இருக்கின்றன; திரைப்பட ரூபத்தில் அது எண்ணிக்கையற்றவர்களின் உள்ளத்தைத் தொட்டிருக்கிறது. வடபுறத்து இளைஞர்கள், வருங்கால வோட்டர்கள், அதைப் படித்து மனக்கிளர்ச்சி பெற்றனர்.

1854-ல் (இன்னும் ஸ்டேட் ஆகாத) 'டெரிடரி'களில் அடிமை நிலை என்ற பழைய பிரச்னை மறுபடியும் கிளப்பப்பட்டது; சண்டை வலுக்க வலுக்க இரு கட்சிகளிலும் புது நாயகர்கள் தோன்றினர்கள். மிஸௌரி பிரதேசத்தின் வடபுறம் முழுதையும் தமக்கில்லாமல் செய்யும் மிஸௌரி ஒப்பந்தத்தை தீவிரமான தென்புறத்தார் ஒழிக்கத் தீர்மானித்தார்கள். அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமானதும், வடபுறத்தார் சினங் கொண்ட அரக்கன் போல் எழுந்தார்கள்.

மிஸௌரிக்கப்பால், இப்பொழுது கான்ஸாஸ், நெப்ராஸ்கா எனப்படும் செழிப்பான நிலம் குடியேற விரும்புவோரின் கவனத்தைக் கவர்ந்து கொண்டிருந்தது. இந்தியர்களை அப்புறப்படுத்தி, ஸ்திரமான அரசாங்கம் அமைக்கப்பட்டால் அது சீக்கிரம் விருத்தியடையக்கூடிய இடம். அது பாலைவனப் பிரதேசம் என்னும் பழைய எண்ணம் பொய்யாக்கப்பட்டுவிட்டது. அதை ஒரு 'டெரிடரி'யாக விருத்தி செய்தால், காலனிகள் சீக்கிரம் அமையும் என்றும், அப்பிரதேசத்தின் வழியாக ஷிகாகோவிலிருந்து பசிஃபிக்சமுத்திரம்வரை ரெயில் பாதை போடலாம் என்றும் வடபுறத்தார் பலர் நம்பினர்கள். நியூ ஆர்லீன்ஸிலிருந்து மேற்குப்புறமாக ஒரு ரெயில் பாதை போடத் தென்புறத்தார் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்; ஆகவே வடநாட்டார் முந்திக் கொள்வது நல்லது. அதை சீக்கிரம் செய்வதும் அவசியம்; ஏனென்றால் தென்பாதைக்குச் சௌகரியங்கள் அதிகம்—டெக்ஸாஸ், நியூ மெக்ஸிகோ பிரதேசங்கள், ஒழுங்காக அமைந்தவை; இந்தியரின் எதிர்ப்பு என்ற பயம் குறைவு; ரெயில் பாதைக் கம்பெனிகளுக்கு சர்க்கார் இடங்கள் இலவசமாகக் கிடைக்கும். டக்ளஸுக்கு இந்தத் திட்டத்தில் பிறரைக் காட்டிலும் அதிக ஆவலுண்டு. அவன் ஷிகாகோவாசி; ஊக்கமான நில வர்த்தகன்; லெனெட்டில் டெரிட்டரிக் கமிட்டியின் தலைவன். மிஸௌரி ஒப்பந்தப்படி அது அடிமை கொள்ளாத தேசம்; ஆற்றுக்கு இக்கரையில் மிஸௌரி, அக்கரையில் அடிமை வேண்டாத பிரதேசம் என்பது மிஸௌரிக்கு இஷ்டமில்லை. மிஸௌரியிலிருக்கும் அடிமைகள் தப்பியோடுவது மிகவும் சுலபமாகிவிடும். அது மாத்திரமல்ல, அண்மையில் மூன்று சுவாதீன ஸ்டேட்டுகள் இருந்தால், அதுவும் பலர் நிர்ப்பந்தத்தால் அடிமையற்ற ஸ்டேட்டாக மாறவேண்டி வரலாம். ஆகவே, சில காலம் வரை, வாஷிங்டனிலிருந்த

மிஸோரிக்காரர்கள், தென்புறத்தாரின் ஆதரவும் பெற்று மேற் கூறிய புது இடந்தை உருவாகாமல் தடுத்து வந்தார்கள்.

1854-ல் டக்லஸ், அடிமை யொழிப்புக் கட்சியினருக்கு மிகக் கோபம் உண்டாக்கிய ஒரு மசோதாவைக் கொண்டு எதிர்ப்பை முறித்தான். அது அவனுக்குப் பிடித்தமான கொள் கையைக் கொண்டிருந்த குடியரசுந் தத்துவத்தை அடிப்படை யாக உடையது.

'' 1850-ன் ஒப்பந்தப்படி யூட்டாவும் நியூமெக்ஸிகோவும் ம் நிலைமையைத் தாமே தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற முடிவிலிருந்து பழைய மிஸோரி ஒப்பந்தம் ரத்தாகிவிட்டது. ஆகையால் கான்ஸாஸ், நெப்ராஸ்கா இரண்டும் இஷ்டப்படி விருத்தியாகட்டும், யூனியனில் சேரும்போது தம் நிலையை நிர் ணயித்துக் கொள்ளட்டும்'' என்பது அந்த மசோதாவின் இறு திக் கருத்து. டக்லஸின் நோக்கங்கள் பல வகைப்பட்டன. 1856-ல் ஜனாதிபதி ஆரும்பொருட்டுத் தென்னாட்டாரின் நல்லபிப்ராயத்தை சம்பாதிக்கப் பார்க்கிறான் என்ற குற்றச் சாட்டுக்கு அவன் ஆளானான்; அந்த ஆசை அவனுக்குண்டா கையால் அதை மறுப்பதற்கில்லை. அவனுடைய அரசியல் நண்பர்கள் முக்கியமாகத் தென்புறத்தார்; அவன் மனைவியும் தென் ஸ்டேட்டிலிருந்து வந்தவள்; அடிமை முறையை அவள் வெறுக்கவில்லை; அதைப் பரப்புவதிலும் ஆட்சேபமில்லை. ஆனால் அவனுடைய முக்கியமான உத்தேசம் மேற்கூறிய பிர தேசத்தை விருத்தி செய்யவேண்டுமென்பதே; அவ்விடத்து சீதோஷ்ண நிலையை நீக்ரோக்கள் விரும்பமாட்டார்கள் என்ற எண்ணமும் அவனுக்குண்டு.

வட புறத்தார் அதிக எதிர்ப்பு இல்லாமல் அந்தத் திட் டத்தை அங்கீகரிப்பார்கள் என்று டக்லஸ் எதிர்பார்த்திருந் தால் அது பெரும் பிசகாகும். செழிப்பான மேற்கு மைதா னங்களில் நீக்ரோக்களை அடிமைகளாகப் புகவிடுவது என்பது மிலியன் கணக்கான மக்களுடைய மன்னிக்க முடியாத தவறு கத் தோன்றிற்று. கான்ஸாஸ்—நெப்ராஸ்கா மஸோதா வெகு காரசாரமாக விவாதிக்கப்பட்டது. அடிமை எதிர்ப்புப் பத் திரிகைகள் கோரமாக அதைக் கண்டித்தன. ஆயிரக்கணக்கான சர்ச்சு பிரசங்க மேடைகளிலிருந்து வடபுறத்துப் போதகர் கள் அதைத் தாக்கினார்கள். இதுவரை தென்னாட்டின் நட்பைக் கோரிய வியாபாரிகள் திடீரென்று முகத்தைத் திருப்பிக்கொண் டார்கள். டக்லஸையும் அவன் திட்டத்தையும் கண்டிப்பதற் காக முக்கிய வட நகரங்களிலெல்லாம் பெருங் கூட்டங்கள் திரட்டப்பட்டன. அனல் உத்தேசமாகக்கொண்டு செய்யப் பட்ட வைக்கோல் பொம்மைகள் கோபத்துடன் கொளுத்தப் பட்டன. தொடர்ந்த அவ்வெளிச்சத்தைக் கொண்டேதான் வாஷிங்டனிலிருந்து சிகாகோவரை இரவில் பிரயாணம் செய்

திருக்க முடியும் என்று அவனே சொன்னான். மார்ச்சு மாதத்தில் அந்த மசோதா ஸெனெட் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட் டது; தென்னாட்டார் பீரங்கி முழக்கத்தால் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். தலைமைக் காரியாலயத்தின் படிகள் இறங்கிக் கொண்டே சேஸ் தன் நண்பனிடம் ''இப்பொழுது அவர்கள் வெற்றி கொண்டாடுகிறார்கள்; ஆனால் அடிமை முறை சாகும் வரை, இப்பிரசங்கிகள் கிளப்பும் எதிரொலிகள் சாகா'' என் றான். தன் செயலுக்கு சமாதானம் கூறுவதற்காக டக்லஸ் சிகாகோ சென்றபோது, துறைமுகத்திலிருந்த கப்பல்களின் கொடிகள் தாழப் பறக்க விடப்பட்டுத் தம் துக்கத்தை அறி வித்தன; கோவில் மணிகள் ஆபத்து காலத்து எச்சரிக்கைபோல் ஒரு மணி நேரம் அடித்துக்கொண்டே இருந்தன; பிரசங்க ஸ்தலத்தில் இருந்த பத்தாயிரம்பேர் கூச்சல் போட்டு அவ மதித்தனர்; கடைசியில் அலுத்துப்போய் கடிகாரத்தில் மணி பார்த்துவிட்டு மேடையிலிருந்து இறங்கினான். மிகவும் அருகே இருந்த சிலர் அவன் கடைசியில் கூவிய வார்த்தைகளை 'ஞாயிறு காலை, பூஜை நேரம்; நான் கோவிலுக்குப் போகிறேன்; நீங்கள் நரக லோகத்துப் போங்கள்' என்று விளக்கினர்கள்.

டக்லஸின் துரதிர்ஷ்டவசமான சட்டத்தின் உடனடியான விளைவுகள் மிக முக்கியமானவை. அடிமைப்பிரச்னையில் பாலுக் குக் காவல் பூனைக்கும் தோழன் என்ற நீதியை அனுசரிக்க முயன்ற விக் கட்சி பாதாளத்திற்கு இறங்கிவிட்டது. அது இருந்த இடத்தில் ரிபப்லிகன் கட்சி என்ற வலுவுள்ள புதுக் கட்சி கிளம்பிற்று. நல்ல லட்சியங்களும் ஊக்கமும்கொண்டு அது அறிவும் ஆற்றலுமுள்ள யுவர்களைக் கவர்ந்தது; கிழக்குப் புற வர்த்தகர்களுக்கும் மேற்புற விவசாயிகளுக்கும் அதனிடம் நம்பிக்கை ஏற்பட்டது; ஆகவே பிறப்பிலிருந்தே அது எந்த எதிர்ப்பையும் சமாளிக்கக் கூடியதாகத் தோன்றிற்று. எல்லா டெரிடரிகளிலிருந்தும் அடிமை முறை நீக்கப்படவேண்டும் என்பது அதன் முக்கியமான கருத்து. 1856-ன் தேர்தலில், அக்கட்சி ஜான் ஸி ஃப்ரீமான்ட் என்னும் பிரபல தேச ஆராய்சி யாளனை ஜனாதிபதிப் பதவிக்கு ஆதரித்தது. அவன் ஐந்து முறை ஆபத்தான மேற்குப் பிரதேசங்களில் பிரயாணம் செய்து வெற்றிகரமாக ஆராய்ச்சிகள் நடத்திக் கீர்த்தி பெற் றவன். வடக்கே பெரும்பாகம் அவனுக்கு வோட்டளித்தது. அக்டோபர் தேர்தலில் பென்ஸில்வேனியாவில் ஜயம் கிடைத் திருந்தால், டிமொக்ராட் கட்சி அபேட்சகன் ஜேம்ஸ் புகா னனைத் தோற்கடித்திருக்கலாம். ஸெவார்ட், சேஸ் போன்ற அடிமை எதிர்ப்பாளர் முன்னிலும் அதிக செல்வாக்கடைந்த னர்; அவர்கள் கோஷ்டியில் உயரமாக ஒல்லியாக இல்லினாய் வக்கீல் ஒருவன் இருந்தான்; புதிய பிரச்னைகளைக் கூர்மையான

தர்க்கமுறையில் ஆராயும் அற்புத சக்தி அவனிடம் இருந்தது; அவன்தான் ஆப்ரஹாம் லிங்கன்.

1854, அக்டோபர் 16-ஆம் தேதி பியோரியாவில் ஆப்ரஹாம் லிங்கன் நிகழ்த்திய ஒரு பிரசங்கம் அடிமையற்ற நிலம் என்னும் கொள்கையை நிகரற்ற விதத்தில் சிறப்பாக விளக்கிற்று. அடிமை முறை புழக்கத்தில் இருக்கும் இடங்களில் தான் தலையிட விரும்பவில்லை என்று கூறி, ''உலகத்திலுள்ள சக்தியெல்லாம் எனக்குக் கிடைத்தாலும் ஸ்தாபிதமான அடிமை முறையைப்பற்றி என்ன செய்யப்போகிறேன் என்று எனக்கே தெரியவில்லை'' என்று சொல்லி மேலும் தெளிவாக்கினார். "மகத்தான கட்சி ஒப்பந்தமாகிய மிஸூரி உடன்படிக்கையை ரத்து செய்ய காங்கிரஸுக்கு நியாயமான உரிமை கிடையாது. இன்று இது செய்ய முடியுமானால் நாளை ஆஃரிக்காவிலிருந்து அடிமைகளை இறக்குமதி செய்யக்கூடாது என்ற சட்டத்தையும் ரத்து செய்து விடலாம் அல்லவா?'' என்று அவர் வற்புறுத்தினார். ஜனநாயகத்தின் பிதாக்கள் ஏற்ற கொள்கையை ஒட்டி— அதாவது, அடிமை முறையை முதலில் நிபந்தனைகளால் அடக்கி கடைசியாக ஒழிக்க வேண்டும் என்ற யோசனைப்படிதான்— எல்லா தேசியச் சட்டங்களும் இயற்றப்பட வேண்டும் என்று அவர் உறுதியுடன் கூறினார். ஜனங்களின் சுய இச்சைத் தீர்மானம் என்னும் கொள்கையும் தவறு என்றும் அவர் வாதாடினார்; ஏனென்றால் ஒரு ராஜ்யத்தில் அடிமைகள் இருப்பது அவர்களை மாத்திரம் பாதிக்கவில்லை, தேசம் முழுவதையும் பாதிக்கிறது. சுய இச்சை சலுகைபெற்ற ஒரு ராஜ்யத்தில் பாதித் தொகைக்கு அதிகமானவர் ஒரு முடிவுக்கு வந்து மைனரிடிக் கட்சியை அம்முடிவால் கட்டுப்படுத்த முடியுமானால் 31 ஸ்டேட்டுகள் சொல்லும் வார்த்தையை 32-வது ஸ்டேட் கேட்க வேண்டுமா வேண்டாமா?-என்று அவர் வினவினார்.

தெற்கே இருந்து அடிமைப்படை சூழ்ந்த தோட்டக்காரர்களும் வடக்கே இருந்து அடிமை எதிர்ப்புக் கட்சியினரும் கான்ஸாஸில் வந்து சேர்ந்ததும் சச்சரவு ஏற்பட்டது; நிலையற்ற சிறு சண்டையில் குரூர சம்பவங்கள் நிகழ்ந்தன. இரு கட்சிகளும் தற்காப்புடன் புது இடத்தில் தங்கக்கூடிய வர்களாகத் தேர்ந்தனுப்ப ஏற்பாடுகள் செய்தன; வடக்கே ''குடியேறுபவர் உதவிச் சங்கம்'' அதிக ஜாக்கிரதையாக இருந்தது. அவர்கள் நன்கு ஆயுதம் தரித்துச் சென்றார்கள். தெற்கு வடக்குப் போட்டியில் வடக்குப் புறத்தாருக்கு வசதி அதிகம் என்பது தெளிவாயிற்று. அருகாமையில், மிஸிஸிபி பிரதேசத்தின் மேல் புறத்தில் அடிமையற்ற கூட்டத்தார் அதிகமாக இருப்பதாலும், அடிமையற்றதாக மாறக்கூடிய இடத்தில் அடிமைகளை அழைத்துச் செல்வது நஷ்டத்தை உண்டாக்குவதாலும் ஆகையாலும் தென் புறத்தார் தயங்கினர். இருந்

போதிலும் பல ''எல்லைப்புற முரடர்கள்'' ஆற்றைக் கடந்து பொய் வோட்டுகள் போடவும் வடநாட்டாரை மிரட்டவும் செய்தார்கள்; அடிமை எஜமானர் கோஷ்டிக்கு புகானன் நிர்வாகம் அனுசரணையாக இருந்தது. ஆகவே, சச்சரவு முடிவின்றி நீடித்துக் கொண்டே சென்று நாடு முழுவதிலும் கவலையுண்டாக்கியது.

இதற்கிடையே, 1850-ன் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி தென்புறத்தார் நடந்து கொள்ளவில்லை என்ற காரணத்தால் வட நாட்டார் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகிய ''சரண் புகுந்த அடிமைச் சட்டத்தை'' அசட்டைசெய்யத் தீர்மானித்தார்கள். தப்பியோடும் நீக்ரோக்களைக் கூட்டங்கள் காப்பாற்ற முயலுவது சகஜமாயிற்று. ஃபெடரல் சட்டத்திற்கு முரணாகச் செல்லும் சட்டங்கள் பல வடக்கு ஸ்டேட்டுகளில் இயற்றப்பட்டன. பாஸ்டன் நகரில் ஒரு நீக்ரோ அடிமை பிடிக்கப்பட்டபோது நகரத்தின் மிக உயரிய தலைவர்கள் பலர் அவனைக் காப்பாற்ற விரைந்தார்கள். மாஸசூஸெட்ஸின் கிழக்குப் பகுதிகளிலிருந்து வெறிக் கோபத்துடன் மனிதர்கள் சாரி சாரியாக ஓடி வந்தார்கள்; ஆபத்து விளைவிக்கக் கூடிய கூட்டங்கள் தெருக்களில் குவிந்தன; நகரப் போலீஸ், ஸ்டேட் குடிப்படை, தேசியச் சேனை, கடற்படை எல்லாவற்றின் ஐக்கிய சக்தியும் வேண்டியிருந்தது ஏழைக்கறுப்புமனிதனை மறுபடி அடிமையாக்க!

போரில் இறங்குதல் : காலப் போக்கில் நாடு போரை அணுகிக்கொண்டே இருந்தது. போர் முரசு டம்...டம்...என்று முழங்குவதுபோல் தேசத்தில் பயங்கர நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1856-ல் ஸெனெட் சபையில் தென் கரோலினாவைச் சேர்ந்த முன் கோபக்கார அங்கத்தினன் ஒருவன் ஒரு மாஸசூஸெட்ஸ் அங்கத்தினனைத் தாக்கி கைத் தடியால் பலக்க அடித்துப்பெருங்கேடு விளைவித்தான்...1857-ல் பிரதான நீதிபதி டானே உள்பட பல சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் ட்ரெட் ஸ்காட் வழக்கு சம்பந்தமாகப் பேசுகையில், டெரிடரிகளில் அடிமைகள் வராமல் தடுக்க காங்கிரசுக்கு அதிகாரம் இல்லை என்று முடிவு கூறினார்கள். உடனே எதிர்க்கட்சிப் பத்திரிகைகளும் அரசியல் வாதிகளும் முன்பில்லாத அளவுக்குக் கோர்ட்டு நடவடிக்கையைத் தாக்கி அந்தத் தவறான விளக்கத்தை மாற்றுவதற்கான ஏற்பாடு செய்வதாக அறைகூவினார்கள். கவியும் பத்திரிகை ஆசிரியருமான ப்ரையன்ட் எழுதினான்: இந்தத் தீர்மானம் சட்டமாகுமானால், இனிமேல் அடிமை முறை ஸ்டேட்டுகளின் பிரத்தியேக ஸ்தாபனம் என்னும் இலக்கணம் பொய்யாகும். இனிமேல் சதா சர்வ காலத்திற்கும் எங்கெல்லாம் நம் அதிகாரம் பரவுகிறதோ அங்கெல்லாம் கைதியின் சங்கிலியும் தோல் பின்னல் சாட்டையும் கூடச் செல்லும்; எங்கு நம் கொடி வந்தாலும் அது அடிமைத் தன்மையைப் பரிபாலிக்கும்

கொடி. அந்நிலையில், அக்கொடியிலிருந்து நக்ஷத்திரங்களின் ஜோதியையும் உஷத்காலத்தின் செங்கிரணங்களையும் விலக்கி விடவேண்டும்; அதைக் கறுப்புச் சாயத்தில் முக்கியெடுத்து சிறைச்சாலையின் சின்னங்களான விலங்கும் சாட்டையும் அதில் அச்சிடவேண்டும். நிர்மாணத் திட்டத்தின் இந்தப் புது வியாக்கியானங்களை நாம் ஊமைகள்போல் ஒப்புக்கொள்வதா?... கூடவே கூடாது.

1858-ல் இல்லினுயில் ஸெனெட் சபைக்கு அபேட்சகர்களான லிங்கன், டக்லஸ் இருவரிடையே நிகழ்ந்த அரசியல் வாக்குவாதங்கள் சரித்திரப் பிரசித்தி பெற்றவை. வெளித் தோற்றத்திற்கு அன்றைய மேடைக்காட்சி அவ்வளவாகப் பிரபாவிக்கும் காட்சியல்ல. டக்லஸ் பெரிய தலையுடன் கட்டைகுட்டையாகச் சித்திரக் குள்ளன் போன்றவன். லிங்கன் மெலிந்து, நெட்டையாக, அந்தக்கேடான அறிஞன், அழகற்றமுகம்—தூலியில் ஒழுங்கற்ற கறுத்த கேசப்போர். ஒருவிசித்திரமான ஜோடிதான்! ஆனல் இருவரின் பேச்சுத்திறமைதான் என்னே! அவ்விருவர் பேச்சிலிருந்த நுட்பமான தர்க்கமும், அறிவு ஒளியும் எளிய தூய ஆங்கிலத்தின் சொல்சக்தியும்வேறு ஆங்கில விவாதங்களில் காண்பதரிது. பிரச்னைகளின் உட்கருத்துக்களை விளக்கி, பிடிவாதத் தூக்கத்திலிருந்து நாட்டுக்கு அறிவுவிழிப்பு உண்டாக்க அச்சொற்பொழிவுகள் உதவின. மேலும் ட்ரெட் ஸ்காட்வழக்கின் தீர்ப்பு டெரிடரிகளில் ஜன-இச்சைக் கொள்கையைக் கொன்றுவிட்டது என்ற கருத்தை டக்லஸ் ஆமோதித்துப் பலர்முன் அழுத்தமாகக் கூறும்படி லிங்கன் செய்தார். காங்கிரஸோ டெரிடரியின் சபையோ அங்குள்ள அடிமை நிலையை மாற்ற முடியாது என்று சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பளித்தது உண்மையே. ஆனல், எதிர்ப்புள்ள இடங்களில் நிரந்தரமான போலீஸ் ஆதரவு இல்லாமல் அடிமை முறை நிலைத்திருக்க முடியாதென்றும், போலீஸ் உதவிக்கான சட்டங்களை ஸ்தலசபைகள் விதிக்க மறுத்துவிட்டால் பிரச்னை மறைமுகமாக தானே அடங்கிவிடும் என்றும் டக்லஸ் யுக்தி கூறினர். இந்தத் நுணிவானத் தெளிவுரையைக் கேட்டதும் தென்னுட்டாரில் பலர் தலைவர் புகானனுடு சேர்ந்துகொண்டு டக்லஸை டிமோக்ராடிக் கட்சியிலிருந்து வெளியேற்றினர். அம்முறை டக்லசுக்கு ஸெனெட்டில் இடம் கிடைத்தது; லிங்கன் தோற்றார்; ஆனல் அடுத்த வருஷத்திலிருந்து லிங்கன் தேசிய முக்கியத்தன்மை பெற்றார்.

அடிமைப் பிரச்னை வெளிப்படையான பெரிய பிரச்னை; துன்பங்களுக்கு அடிப்படையான காரணம் பொருளாதார, சமூக, அரசியல் துறைகளில் வடக்குக்கும் தெற்குக்கும் இடையே வளர்ந்துவந்த ஏற்றத்தாழ்வுகளே. தென்னுடு அநேகமாகக் கிராமாந்தர நாடு; நியூ ஆர்லீன்ஸ் ஒன்றுதான் கணிசமான நகரம். வடக்கே பட்டணங்கள் அதிகம்; நியூயார்க்கின் ஜனத்தொகை வேகமாக 10 லக்ஷத்தை எட்டிக்கொண்டிருந்தது. ரிச்மண்டில் இருந்த இரும்புத் தொழிற்சாலை போன்ற சில தொழில் முயற்சிகள் விருத்தியடைந்திருந்தன என்றாலும் தெற்கே யந்திரக் காரியாலயங்கள் குறைவுதான்; அதனுடைய நெசவுசாலைகள் அனைத்தும் உபயோகித்த மொத்தப் பஞ்சைக் காட்டிலும் அதிகமாக வடக்கே ஒரே ஒரு ஊரின் நெசவாலைகளில் உபயோகமாயிற்று. அதற்கெதிராக, வடக்கே எங்கு பார்த்தாலும் யந்திரக் காரியாலயங்கள் வளர்ந்து வந்தன; அவற்றில் இரும்புச் சாமான்கள், துணி வகைகள், பாதரக்ஷை, கடிகாரம், விவசாயக் கருவிகள், முதலிய நூற்றுக்கணக்கான பொருள்கள் தயாரிக்கப்பட்டன; கப்பல்கள் கட்டப்பட்டன; இறைச்சி வகைகள் பக்குவப்படுத்தப்பட்டு டப்பாக்களில் அடைக்கப்பட்டன; பெரிய அளவில் மாவரைக்கப்பட்டது; அவ்வூர்களில் விஞ்ஞானச் செயல் திறமை பெருகி வந்தது. ஐரோப்பாவிலிருந்து குடியிறங்கியவர்களில் (1850—1860-ல் 24,52,000) பெரும்பாலோர் வடக்கேயும் மேற்கேயும் சென்று தங்கினர்கள்—அயர்லாந்துக்காரர் நகரங்களிலும், ஜெர்மானியரும், ஸ்காண்டினேவியரும் கிராமத்தோட்டங்களிலும், பிரிட்டிஷார் இருவகை இடங்களிலுமாக அவர்கள் பரவிச் சென்றார்கள். அதற்குள்ளாகவே இந்தப் பகுதியில் உழைப்பாளி நிர்வாகப் பிரச்னையும் ஆபாசமான 'சேரி' வாசஸ்தலப் பிரச்னையும் கிளம்பிவிட்டன. குடியிறங்கியவர்களைத் தென்னுடு வரவேற்றிருக்கும், ஆனல் வெள்ளையர்கள் நீக்ரோ அடிமைகளுடன் போட்டியிட விரும்பாததால் அதிகம் பேர் அங்கு போகவில்லை. ரெயில் பாதை யமைப்பும் தெற்கே இருந்ததைக் காட்டிலும் வடக்கே அதிகமாக இருந்தது. கிழக்கே இருந்து மூன்று நெடுந்தொலைப் பாதைகள் அப்பாலாச்சியன் மலைகளை வளைத்துக்கொண்டோ, மேலேஏறியோ சென்றன—இரீரெயில்வே நியூயார்க்கிலிருந்து பஃபலோவுக்கு, பென்ஸில்வேனியா ரெயில்வே ஃபிலடெல்ஃபியாவிலிருந்து பிட்ஸ் பர்க்குக்கு, பால்டிமோர்—ஓஹியோ ரெயில்வே பால்டிமோரிலிருந்து ஃவீலிங் வரை. மேற்குப் பாதைகளில் மிகப் பெரியது இல்லினுயி மத்திய ரெயில்வே; அது தொடர்ந்து தெற்கே கடல்வரைசெல்வதால் ஷிகாகோவையும் மெக்ஸிகோ வளைகுடாவையும் இணைக்கிறது; அதை அமைக்கும் செலவுக்காக 26 லக்ஷம் ஏக்கர் சர்க்கார் நிலம் மானியமாகக் கிடைத்தது. 1850-1860-ல் ஸ்தாபிக்கப்பட்ட 20,000 மைல் ரெயில் பாதைகளில் பெரும் பகுதி வடக்கே அமைந்தது.

வடக்கே இறக்குமதிச் சுங்கவரியை விரும்புவோரின் எண்ணிக்கை அதிகரித்தது; கிராம வாழ்க்கை நடத்தும் தென்னுட்டார் அயல் நாடுகளிலிருந்து வரும் மலிவான சாமான்

களைக் குறைந்த விலையிலேயே வாங்க விரும்பி வரியை வெறுத்தார்கள். பொது நிலங்களைச் சிறு பண்ணைகளாக சீக்கிரத்தில் விநியோகித்துவிட வடநாட்டார் விரும்பினர்கள். புது இடங்களில் தங்குபவர்களுக்கெல்லாம் இலவச நிலம் கிடைக்க வேண்டுமென்ற கிளர்ச்சி எழுந்தது—"உனக்குள்ள ஓட்டுரிமையைக் கொண்டே உனக்கான பண்ணையைப் பெறலாம்" என்பது அக்கிளர்ச்சியின் சூத்திரம். தேசிய நிலம் சமயம் பார்த்து நல்ல விலைக்கு விற்கப்பட வேண்டுமென்பது தென்னாட்டு அபிப்ராயம்; வடமேற்குப் புறத்தார் கோரிய ராஜ்யச் சீரமைப்புகள் தென்புறத்து அங்கத்தினர்களின் ஆதரவைப் பெறவில்லை. திறமையான தேசிய பாங்கு முறை வடநாட்டாரின் லட்சியம்; பெருந்தொகைகள் திரளாத தென்னாட்டில் அதற்கெதிர்ப்பு இருந்தது. வடக்கே பெரிய ஊர்களில் செல்வர்களுக்கும் ஏழைகளுக்கு மிடையே வித்தியாசம் அதிகரித்துக்கொண்டு போனாலும் சமத்துவ மனப்பான்மை தெற்கைக் காட்டிலும் அங்கே அதிகம் இருந்தது. தெற்கே பெரிய எண்ணிக்கையில் அடிமைகள் வைத்துப் பெரிய பண்ணைகள் நடத்தும் ஒரு சில குபேரர்கள் கையில் பெரும்பாலான ஐசுவரியமும் ஆற்றலும் தங்கியிருந்தது.

இவ்வளவிருந்த போதிலும், திகிலும் உண்மையறியாத துவேஷப் பிரசாரமும் நிலைமையை மிகைப்படுத்தி, செல்வாக்குள்ள பிரஜைத் தலைவர்கள் பொறுப்பற்று அந்நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டிராவிட்டால், மேற்கூறிய வித்தியாசங்கள், எவ்வளவு முக்கியமாக இருந்தாலும், இரு பகுதிகளையும் பிரித்திருக்க முடியாது. அடிமைப் பிரச்னையின் அடியில் தீர்க்கமுடியாத ஜாதிப் பிரச்னை பதுங்கியிருப்பதைத் தென்னாட்டார் குறிப்பாக அறிந்தார்கள். எதிர்ப்புக் கிளர்ச்சியால் அவர்களுக்குண்டான திகில் என்னவெனில், அடிமை முறை நிலைத்துப்போன இடத்திலும் வடபுறத்தார் அதைத்தாக்கி, முறித்துத்தள்ளி, இரு ஜாதிகளும் அழியும் அளவுக்கு ஜாதிச் சண்டையை கிளப்பிவிடுவார்கள் என்பதே. வடநாட்டாரின் குறைக்கூற்று சுயநலமானது, பாசாங்கானது, அழிக்கும் தன்மையுள்ளது, கலகத்தீ மூட்டக்கூடியது என்பது உண்மையே. அதற்கெதிராக, தீவிரத் தென்னாட்டார் தேசம் முழுதும் அடிமை முறை பரப்ப முயலுவார்கள் என்று நீதியறிந்த லிங்கன் போன்றவர்களும் பயப்பட்டார்கள். சில தென்னாட்டுத் தலைவர்கள் நீக்ரோ இறக்குமதியை மறுபடி ஆரம்பிக்க விரும்பியதுண்டு; விருப்பம் செயலாகிவிடுமோ என்று வடநாட்டார் பயப்படுவது நியாயமே. அடிமை உபயோகமும் அடிமை வியாபாரமும் விஸ்தாரம் பெற்றால், க்யூபா, மெக்ஸிகோ, மத்திய அமெரிக்கா ஆகிய இடங்களுடன் சச்சரவு ஏற்பட்டு, தேசம் போரில் இழுபடலாம். க்யூபாவை அமெரிக்காவுடன் சேர்த்துக் கொள்வதற்கு

அனுகூலமாக 1854-ல் ஆஸ்டெண்ட் பிரகடனம் என்ற ஒரு பொறுப்பற்ற அறிக்கை வெளியிடப்பட்டது; ஜூலதிபதி ஃப்ரான்ஸுக்கும் ஸ்பெயினுக்கும் அனுப்பியிருந்த மூன்று அயல்நாட்டு மந்திரிகள் அதில் கையொப்பமிட்டார்கள்; அது முதற்கொண்டு தென்னாட்டாரின் சாம்ராஜ்ய மனப்பான்மையைப் பற்றி சந்தேகங்கள் உண்டாயின. மத்திய அமெரிக்காவில் தேச ஆராய்ச்சிக்காகச் சென்ற உல்லியம் வாக்கரின் பொறுப்பற்ற, போரை விலைக்கு வாங்கும் நடத்தையும் சந்தேகங்களைக் கிளப்பின.

அடிமைத்தன்மையின் தீமைகளையும் அடிமை எஜமானர்களின் கெட்ட உத்தேசங்களையும் எல்லை மீறி மிகைப்படுத்திப் பல வடபுறப் பத்திரிகை ஆசிரியர்களும், மத போதகர்களும், அரசியல் வாதிகளும் துஷ்பிரசாரம் செய்தார்கள். யந்திரத் தொழில் வளர்ச்சி பெற்ற சமுதாயத்தின் தீமைகளையும், அடிமையொழிப்புக்கட்சியாரின் ஆபத்தான நோக்கங்களையும், அதே முறையில் பல தென்புறக்கல்லடி மங்கர் பெருக்கினார்கள். அறிவுள்ள நியூயார்க்குத் தலைவர் ஒருவர் "இருபுறத்துப் படு மோசமான கலகக்காரர்களையும் ஒரு கோச் வண்டியில் உட்கார்த்தி, அந்த வண்டியைப் பதினைந்து நிமிஷம் போடோமாக் நதியின் அடியில் அமுக்கி வைத்திருந்தால் கட்சிச் சண்டை அடங்கி சமாதானம் ஏற்படும்" என்றார். ஆனால் அவர், பாவம் அதிக நம்பிக்கையுடன் கூறிவிட்டார். வேறு மனிதர்கள் அந்த இடங்களில் அமர்வார்கள்.

லிங்கன் தேர்தல்—நாட்டுப் பிரிவினை. டிமொக்ராடிக் கட்சியில் ஏற்பட்ட பிளவால் 1860-ல் ரிபப்லிகன் கட்சிக்கு வெற்றியில் ஏற்பட்ட பிளவால் 1860-ல் ரிபப்லிகன் கட்சிக்கு வெற்றி ஏற்பட்டது; அதன் காரணமாக தென்னாட்டாரின் பிரிவு எதிர் பார்த்ததை விடச் சீக்கிரம் நடந்தது. அமெரிக்க அரசியல் சரித்திரத்தின் மிக உருக்கமான நிகழ்ச்சிகள் இப்பிளவுக்குக் காரணமாயின.


பலவருஷங்களாக தக்ஷிணதேசத் தீவிரவாதிகள் டெரிடரி களில் அடிமை முதலாளிகளைக் காப்பதற்கான சட்டங்கள் விதிக்கும்படி காங்கிரசைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தார்கள். ட்ரெட் ஸ்காட் வழக்குத் தீர்ப்பை ஸ்தல சபைகள் தந்திரமாகப் பயனற்றதாக்கலாம் என்று டக்ளஸ் வெளிப்படையாகக் கூறியதும் மேற் சொன்ன தொந்தரவு பலப்பட்டது. பருத்தி விளையும் பரந்த பிரதேசத்தின் மூன்று பிரமுகர்கள் இந்நடவடிக்கையில் முக்கியப் பங்கு கொண்டார்கள். 1859-ல் மிஸிஸிபி அங்கத்தினன், ப்ரௌன், ஸெனெட்டில் கோரிக்கையை மறுபடி கூறி, டக்ளஸைப் பார்த்துக் குறிப்பாக, "உன் கொள்கைதான் என்ன? டெரிடரியின் சபை தக்க நடவடிக்கை எடுக்க மறுத்தால் நீ எடுப்பாயா? அது அடிமை முறைக்கு முரணான சட்டம் இயற்றினால் நீ அதை ரத்து செய்வாயா? அடிமை முறைக்கு

அனுகூலமான சட்டங்கள் விதிப்பாயா? தென்னுடு 'பேசியது போதும், இனிச் காரியம் வேண்டும், ஷரத்துகளற்ற நேர் முறையான காரியத்" திட்டம்' என்றான். தெற்கத்தியார் பலர் எழுந்து அவன் பேச்சை ஆமோதித்தனர்.

டக்லஸ் பயந்து நடுங்கிவிடவில்லை. அவன் கூறியதாவது: ப்ரௌன் சொல்லும்படி நடந்து கொண்டால் டெரிடரிகளின் மக்களின் உரிமைகளை மீறிய குற்றம் ஏற்படும்; அமெரிக்க காங்கிரஸ் டெரிடரிகளுக்கான க்ரிமினல் சட்டம் ஒரு போதும் இயற்றியதில்லை; அவ்விடத்து சொத்துச் உடைமையைக் காப்பாற்றுவதற்காகவும் சட்டம் விதித்ததில்லை. 1789-லிருந்து அது போன்ற விஷயங்கள் ஸ்தல சபைக்கு விடப்பட்டிருக்கின்றன. அந்த நல்ல நியமத்தை முறிப்பானேன்? ஸ்தல ஆட்சியில் தலையிடுவதில்லை என்ற நல்ல கோட்பாட்டை இத்தனை வருஷங்களாக டிமோக்ராடிக் கட்சி ஆதரித்துவந்திருக்கிறது. அதை இப்பொழுது விடுவானேன்? தலையிடுதலில்லை என்ற தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு டெரிடரிகளின் இச்சைக்கு விரோதமாக ஒரு அடிமைச்சட்டம் இயற்றுவதானால், முதலில் நாம் டிமோக்ராடிக் கட்சியிலிருந்து விலக வேண்டும்... தக்ஷிண தேச அங்கத்தினர்களே: நான் உள்ளது உள்ளபடி சொல்லுகிறேன்— நீங்கள் டெரிடரியைக் கட்டாயப்படுத்தும் இது போன்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தால் வடக்கே இருக்கும் டிமோக்ராடிக் அங்கத்தினரே உம் சார்பில் வோட்டு செய்யமாட்டார்கள்; கட்சி இரண்டாகும்.

அதைக் கேட்ட ஜெஃபெர்ஸன் டேவிஸ்—அமெரிக்கப் பிரஜைகளின் உரிமைகளை காங்கிரஸ் நிலை நிறுத்துவதே கடமை; டெரிடரிசபை சொத்துப் பாதுகாப்புக்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளாவிட்டால் காங்கிரஸ் அக்காரியம் செய்தாக வேண்டும்—என்று விடையளித்தான். அது ஒப்புக் கொள்வதற்கில்லை, என்று டக்லஸ் அழுத்திக் கூறினான்.

இந்தப் பாறையில் மோதித்தான் 1860-ல் டிமோக்ராட் கட்சித் தேர்தல் மகாநாடு என்னும் கப்பல் முறிந்தது. அடிமைப் பட்சத்தாரின் கோட்டை போன்ற சார்ல்ஸ்டனில், மகாநாடு கூடிற்று. இரண்டாண்டுகளாக ஸெனெட்டில் டக்லஸுக்கும் டேவிஸுக்கும் இடையே நடைபெறும் பேச்சு யுத்தத்தின் முடிவைக்காண பிரதிநிதிகள் கூடினார்கள். டக்லஸ் ஜெயித்தால் டிமோக்ராட் கட்சி தொடர்ந்து தேசிய ஸ்தாபனமாக இருக்கும்—வடக்கேயும் மேற்கேயும் தெற்கிலும் கூட வலுவாக இருக்கும். டேவிஸ் ஜெயித்தால் டிமோக்ராட் கட்சி ஒரு பகுதியாரின் கட்சியாகி தெற்கே மாத்திரம் செல்வாக்குப் பெறும். ஆகவே நடுப்பாதை செல்லக்கூடிய ஒரு அபேட்சகனை நிறுத்தித் தீர்மானத்தை முடிவில்லாமல் விட்டு வைக்கலாமா என்ற எண்ணமும் சிறிது காலம் உலவிற்று. ஆனால் தீவிரவாதிகள்



இடம் கொடுக்கவில்லை; ''கட்சி ஆட்சி அல்லது கட்சி அழிவு'' —என்பது அவர்களுடைய கொள்கையாகத் தோன்றிற்று. தீவிரவாதிகள் பிடிவாதமாக வோட்டு எடுக்க யத்தனித்த போது பிரதிநிதிகளில் பெரும்பாலோர் டேவிஸுக்கு எதிராக இருந்தார்கள். அதைக்கண்ட அலபாமாப் பிரதிநிதிக் கூட்டம் எழுந்து வெளியே சென்றது. தென் கரோலினாக்காரர்களும் வேறு தென்கோடி ராஜ்யத்தாரும் பின் தொடர்ந்தனர். கட்சியில் பூராப்பிளவு ஏற்பட்டதால் சார்ல்ஸ்டன் கூட்டம் அபேட்சகரைக் குறிப்பிடாமலே ஒத்திப்போடப்பட்டது. பிளவுபட்ட இரு துண்டுகளும் தனித்தனியாகக் கூடியதில் தென் தீவிரவாதிகள் கென்டக்கி வாசியாகிய ப்ரெக்கின்ரிஜ் என்பவனையும் அவர்களுடைய எதிரிகள் டக்ளஸையும் அபேட்சகர்களாக்கக் குறிப்பிட்டனர். அக்காலத்தில் ஜனங்கள் மதிப்பிட்டதைக் காட்டிலும் மிக முக்கியமான நிகழ்ச்சி அப்பிளவு. டிமோக்ராட்டுகளின் தோல்வி நிச்சயமாயிற்று என்பது மாத்திரமல்ல, வடக்கையும் தெற்கையும் இணைத்த கயிறுகளில் மேலும் ஒரு பெரிய கயிறு அறுபட்டு விட்டது.

ரிபப்லிகன் கட்சி பரிபூர்ண ஒற்றுமையுடன் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. ஷிகாகோவில் நடந்த உற்சாகமான மகாநாடு மக்கள் மனத்தை மிகவும் கவர்ந்த லிங்கனை அபேட்சகனாக நிறுத்திற்று; தமக்கு அப்பெருமை கிடைக்கும் என்ற நம்பிக்கை கொண்டிருந்து ஏமாற்றமடைந்த ஸெவார்ட், சேஸ் இருவரும் 'நடுமத்தியப்பிரதேசத்தில் கட்டை பீளந்துகொண்டிருந்தவனுக்கு'—லிங்கனுக்கு—முழு விசுவாசத்தோடு சகாயம் புரிந்தனர். கட்சி மனப்பான்மை நன்கு முடுக்கி விடப்பட்டிருந்தது. அடிமை முறையைப் பரவவிடமாட்டோம் என்று கோஷணை செய்த மிலியன் கணக்கான வோட்டர்கள் இடையே மதப் பிரசாரகர்களின் ஆவேசமும் திடதீர்மானமும் தென்பட்டன. முதலாளி இனத்தாரின் ஆதரவையும் அக்கட்சி பலமாகப் பெற்றதால் நான்காண்டுகளுக்குமுன் இருந்ததைக் காட்டிலும் கட்சியின் நிதி நிலை திருப்தியளித்தது. வர்த்தக வட்டாரங்களில் 1857-ல் சிறிது காலத்திற்கு ஏற்பட்ட ஆபத்தான பீதி நிலை இறக்குமதி வரி இருக்கவேண்டுமென்றும், சீரான பாங்கு அமைப்புத் தேவையென்றும் தொழில் முதலாளிகள் கூறும்படி செய்தது. ரிபப்லிகன் கட்சி அக்கோரிக்கைகளை நிறுவேற்றுவதாக வாக்களித்தது. அதே சமயத்தில் புது நிலத்தில் தங்கி விவசாயம் செய்பவர்களுக்கு இலவச பூமி கொடுப்பதற்கான சட்டம் விதிப்பதாகவும் அக்கட்சி வாக்களித்ததால் நிலப்பசி கொண்ட வடநாட்டார் மகிழ்ந்தனர். இவ்வாறு, பொருளாதாரத் துறையில் முக்கியமான அமெரிக்க இனங்களுக்கு அக்கட்சி நல்ல ஆசைகள் காட்டிற்று. 1856-ன் தேர்தலில் பென்ஸில்வேனியாவில் கட்சி தோல்வியடைந்தது;

இப்பொழுது இறக்குமதி வரி நிபந்தனை வெற்றி தரக்கூடிய சைகை ஆயிற்று. முன்பு 'வட மேற்காக' இருந்த பிரதேசத்தில் உள்நாட்டுச் சீரமைப்புக்கான வாக்குறுதி ஆயிரக்கணக்கான வோட்டுகளை ரிபப்லிக் கட்சிக்களித்தது.

தேர்தலில் ஐந்து லக்ஷ அதிக வோட்டுகளுடன் வெற்றியடைந்த லிங்கனுக்கு மக்கள் வோட்டில் மைனாரிடியும் தேர்தல் பரிசிலனைக் குழு பிரதிநிதித்துவத்தில் நல்ல மெஜாரிடியும் கிடைத்தது. மக்கள் வோட்டு அடிமை முறைக்கு எல்லைபோடுதல் என்ற கொள்கைக்காக என்பதோடு, நாட்டின் ஒற்றுமைக்காகவும் அமைதிக்காகவும் போடப்பட்டது எனவும் கொள்ள வேண்டும்.

தெற்கே, நிலைமை தீவிர வாதிகளின் கையில் இருந்தது. ''ஜனங்களுக்கு வெறியே பிடித்துவிட்டது; கோபத்தாலும் ஆவேசத்தாலும் அவர்கள் தம் வசமற்றிருக்கிறார்கள்,'' என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தென்கரோலினா பிரிந்து போவதாகத் தீர்மானித்துவிட்டது. எதற்காக? தென்பிரதேசத்துக்கோ அடிமை முறைக்கோ உண்மையான ஆபத்து ஒன்றுமில்லை எனச் சொல்லலாம். தென்ராஜ்யங்கள் பிரியாமல் முன்போலவே இருந்தால் முதல் பதவிகாலத்தில் பெரும்பாகம் காங்கிரஸில் எதிர்க்கட்சி மெஜாரிடியில் இருக்கும்; சுப்ரீம் கோர்ட்டிலும் தென்னாட்டாரின் ஆதிக்கம் இருந்தது; லிங்கன் துணிந்து ஒன்றும் புதிதாகச் செய்யமுடியாது. அவ்வளவு தூரம் போவானேன்? அடிமைப்பழக்கம் நிலைத்திருந்த இடத்தில் அதை ஒன்றும் செய்வதில்லை என்று அவர் தெளிவாகக் கூறியிருந்தார். நிர்மாணத்திட்டத்தைத் திருத்தாமல் தாசத்துவத்தை ஒழிக்கமுடியாது; சட்டத்தைத் திருத்தியமைத்தல் பல வாண்டுக்கு இயலாத காரியம். அப்படி யிருந்தும், விளையும் ஆபத்து என்னவாக இருக்கும் என்று தெரிந்தும், பிரிவு என்ற தீர்மானம் செய்யப்பட்டுவிட்டது. ''சிறிது காலத்தில் மண்டைகள் உருளும்'' என்று ஸ்டீஃபன்ஸ் முன் கூற்றுக் கூறினார்.

செயல் என்னவோ நிகழ்ந்துவிட்டது; ஆனால் தென்கரோலினாவுக்கு வெளியே பெரும்பாலான ஜனங்கள் அச்செயலை ஆதரித்தார்கள் என்பதற்கு முடிவான அத்தாட்சி இல்லை. தக்ஷிண தேசம் முற்றிலும்—தென் கரோலினாவில் கூட—ஐக்கிய மனப்பான்மை வலுவாக இருந்தது; சாந்தி மனப்பான்மையும் அவ்வாறே. தென்கோடியில் சில ஸ்டேட்டுகளின் வாக்குப் பதிவைக் கவனமாக ஆராய்ந்தால், பிரிவுப் பிரச்னையை வெளிப்படையாக மக்களின் நியாயமான அபிப்ராயத்திற்கு விட்டிருந்தால் அது தோல்வியடைந்திருக்கும் என்று நினைக்க இடமிருக்கிறது. பிரிவு ஏற்பட்டுப் போர் மூண்ட பின்னரும் தென் ராஜ்யங்களின் ஐக்கியத்தைக் கடுமையாக எதிர்க்கும் வலுவுள்ள கோஷ்டிகள் தென்பிரதேசத்திலேயே இருந்

தன. மேற்கு வர்ஜீனியா வர்ஜீனியாவிலிருந்து ஒதுங்கிக்கொண்டுவிட்டது; வடகரோலினுவில் கட்டாயப் படைப் பதிவு முடியாமல் போய்விட்டது; கிழக்கு டெனெஸியின் சில ஜில்லாக்கள் ஐக்கிய சேனைக்கு தற்பதிவுச் சிப்பாய்களை அனுப்பின—வட நாட்டின் எந்த ஒரு ஜில்லாவைக் காட்டிலும் மேற்சொன்னவற்றில் சில ஜில்லாக்கள் அதிக ஆள்-தானம் செய்ததாக கூறப்படுகிறது. அதே சமயத்தில், புரட்சி சாதாரணமாகத் திட தீர்மானமுள்ள மைனாரிடிகளின் சாதனை என்பது நினைவிருக்கவேண்டும்; 1776-ல் மூன்றரும் ஜ்யார்ஜ் மன்னனின் ஆணைமைக்கெதிராகக் கிளம்பின கலகம் மக்களின் ஆதரவை எப்படிப் பெற்றிருந்ததோ, அப்படியே 1860-ன் தென்பிரிவும், என்பதையும் மறக்கக்கூடாது.

தென்கோடிப் பிரதேசத்தை ஊக்குவித்த நோக்கங்களும் பல: வட நாட்டின்பால் வெறுப்பு, தேர்தல் தோல்வியால் ரோசம், டெரிடரிகளைப் பற்றிய தீர்ப்பை ஏற்க இஷ்டமின்மை; 'தன் கொடியின்கீழ் நல்வாழ்வு' என்ற கனவு. எல்லாவற்றிற்கும்மேல் ஒரு திகில் பெருங் கலக்கம் உண்டாக்கிற்று—அதன் ஸ்தாபனங்களும் நலித் தன்மை கொண்ட அதன் பண்பாடும் ஒழிப்பு பாவனையுள்ள அரசாங்கத்தால் முரட்டுத்தனமாய் அழிக்கப்பட்டுவிடும் என்ற பயம். 1860 டிசம்பர் 20-ஆம் தேதி தென் கரோலினு "அபிப்ராயங்களும் லட்சியங்களும் அடிமை முறைக்கு விரோதமாயுள்ள" ஒரு மனிதனை வடதேசம் ஜனாதிபதி ஆக்கியிருக்கிறது, அவனோடு நமக்கு இனி என்ன உறவு—என்று கூறிப் பிரிவுக்கான வழி காட்டிற்று. மிஸிஸிபி பின் தொடர்ந்து "உத்தரப் பிரதேசத்தார் தக்ஷிண ராஜ்யங்களை புரட்சி மனப்பான்மையுடன் பார்க்கிறார்கள்" என்று சாதித்தது. வட நாடு போரில் இறங்கும் என்று நினையாத தென் தீவிரவாதிகள் 'இன்று தப்பினுல் நாளை இதே வாய்ப்பு வராது' என்று அறிந்தார்கள். சட்டத்தை தரத்து செய்வது என்னும் எண்ணத்தை ஜனாதிபதி ஜாக்ஸன் வேரறுத்துவிட்டார். ஒரு தனி ஸ்டேட் பிரிவது என்பது இயலாத முயற்சி. தெற்கைக் காட்டிலும் வடக்கு சிறுகச் சிறுக அதிக ஆற்றல் பெற்றுவந்தது. இந்த முக்கியமான சமயத்தைத் தவறவிட்டால் தென் பிரதேசம் சுதந்திரமடைய வேறு வாய்ப்புக் கிடைக்காது. தக்ஷிண ஐக்கிய நாடுகள் உலக தேசங்களில் ஒரு முக்கியமான இடம் பெறலாம்; காரியன் கடலைச் சுற்றித் தென்புறமாக அது வளரலாம்.....இவ்வாறு தென்மக்களின் மனம் வேலை செய்தது. பிரவனியின் ஆரம்பத்தில், பிரிந்துபோகத் தீர்மானித்த ஏழு ராஜ்யங்களின் பிரதிநிதிகள் அலபாமாவில் மான்ட்கோமெரி பட்டணத்தில் கூடி, அமெரிக்கத் தென் கூட்டு ராஜ்யங்களாக உருவெடுத்து, ஜெஃபெர்ஸன் டேவிஸைத் தற்காலிக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

தென் கூட்டு ராஜ்யங்கள்—Southern Confederacy—(ஸதர்ன் கான்ஃபெடெரஸி) என்னும் சொல்தொடரின் கருத்துத் தெளிவாகத் தெரிந்திருப்பது நல்லது. கான்ஃபெடெரஸியின் ராஜ்யங்களின் பரஸ்பர இணைப்பு 'நேச தேசங்களின்' பரஸ்பர இணைப்பைக் காட்டிலும் உறுதியாகவும், ஐக்கியநாடுகளின் பரஸ்பர இணைப்பைக் காட்டிலும் தளர்ந்தும் இருக்கும் எனக் கொள்ளலாம்.

தென் பிரதேசத்தின் வட புறத்தில் அரைகுறை மனதுள்ள நான்கு ஸ்டேட்டுகள் கட்சியிடம் விசுவாசம் காட்ட வேண்டுமே என்பதற்காகப் பின்தொடர்ந்தன. அப்பொழுதுங்கூட, சற்று விட்டுக் கொடுத்து நடுவழி செல்வதற்காகக் கடைசி நிமிஷ முயற்சிகள் செய்யப்பட்டன. 36°30' கோட்டைப் பற்றிய மிஸௌரி ஒப்பந்தம் தான் அவற்றுள் அதிகமாக ஏற்றுக்கொள்ளக்கூடியது; ஆனால் அடிப்படையான சுய ஆதீனக் கொள்கைக்கு முழு மதிப்பளித்த லிங்கன் அடிமை நிலையை ஒரு டெரிடரியிலும் பிரவேசிக்கக்கண்டிப்பாக மறுத்துவிட்டதால் அது பயனற்றதாயிற்று. 1861-ஏப்ரல் 12—ஆம் தேதி அதிகாலையில் தென் ஐக்கியத்தின் பீரங்கிகள் சார்ல்ஸ்டன் துறைமுகத்தில் ஃபெடரல் படை இருந்த ஸம்டேர் கோட்டை மீது குண்டு வீசி அமெரிக்க உள்நாட்டுப் போரைத் துவக்கின.

அத்தியாயம் 11

சகோதர யுத்தம்

ஆள்பலமும் பொருள் வசதிகளும்: — "தற்சமயம் உலவிவரும் அளவற்ற சாவையும் அழிவையும் பார்க்க உலகமே நடுங்கும். சென்ற இரண்டு மாதங்களாக ஒவ்வொரு நாளும் இதே காரியம் மேலும் மேலும் நடக்கிறது; ஒரு புறத்துச் சேனையோ இருபுறத்துச் சேனைகளோ அழியும்வரை இது ஓய்வதாகத்தெரியவில்லை," என்று தளகர்த்தர் ஷெர்மன் குறிப்பிட்டிருக்கிறார்.

ஸம்டேர் கோட்டை மீது குண்டு வீசப்பட்டதும் உத்தர தேசம் பல உடல்களும் ஒரு மனமும் கொண்டதாயிற்று; தக்ஷிணத்திலும் ஒற்றுமை ஏற்பட்டது. ஒரு கோபப்புயல் வர்ஜீனியாவை ஐக்கிய நாடுகளிலிருந்து பிரித்துத் தென் கூட்டத்துடன்

சேர்த்தது; அந்த ராஜ்யத்தின் தலை நகராகிய ரிச்மண்ட் தென் ராஜ்ய சேர்க்கையின் தலை நகராயிற்று; ஜூன் மாதத்தில் டேவிஸின் தலைமைக்காரியாலயம் அங்கு அமைந்தது; அந்த ராஜ்யத்தின் வீர புத்திரனாகிய ராபர்ட் ஈ. லீ, மெக்ஸிகப்போரின் சூரன், ராணுவக் கல்லூரியின் பிரதான நிர்வாகி, டெக்ஸாஸின் தலைவன், தக்ஷிண சைன்யத்தின் மிகத்திறமை வாய்ந்த தலைவன் ஆனான். லீ-க்குத் தன் தேசத்தின் அழைப்பைக் காட்டிலும் தன் ராஜ்யத்தின் அழைப்பு அதிக ஆற்றல் கொண்டதாகத் தென்பட்டது. டெனஸி தென் ஐக்கிய ஜாப்தாவில் இடம் பெற்றது. வடக்கே மிஸிஸிபியின் வடபகுதி தைரியமாக வட ஐக்கிய நாட்டுடன் சேர்ந்தது. மேற்குக் கோடியிலுள்ள கலிஃபோர்னியா அவ்வாறே செய்தது. இடையே சிக்கிய மேரிலண்ட், கென்டக்கி, மிஸௌரி ஆகிய மூன்று ராஜ்யங்களும் சுவரின் மேல் இருக்கும் பூனை போல் தயங்கின; மக்களில் ஒரு பாதி ஒரு கட்சியைத் தீவிரமாகவும் இன்னொரு பாதி மறு கட்சியைத் தீவிரமாகவும் ஆதரித்தனர். சில நாட்கள் பால்டிமோர் பிரிவுக் கட்சியின் கைவசம் இருந்தது. ஸந்த் லூயி-யின் கதியும் அவ்வாறே ஆகுமோ என்ற பயம் ஒரு சமயம் இருந்தது. ஆனால் அங்குக்கலே, பென்டன் போன்ற தீவிர ஐக்கியவாதிகளின் செல்வாக்கு இருந்து வந்தது. ஆகவே அந்த மூன்று ஸ்டேட்டுகளும் வடஐக்கியத்தில் சேர்ந்தன.

ஒவ்வொரு பக்கத்திலும் சில விசேஷ வசதிகள் இருந்தன. ஜனத்தொகை, தொழில் வசதிகள், ஐசுவரியம், எல்லாவற்றிலும் உத்தரதேசத்தின் பலம் அதிகம். வட ரெயில் பாதை அமைப்புக்களின் மொத்த நீளம் சுமார் 22,000 மைல்; தென் ரெயில் பாதைகளின் மொத்த நீளம் 9,000 தான்...தொழில் அபிவிருத்தியில் வடநாடு மிகவும் முன்னேறியிருந்தது; போரின் கடைசி மூன்றாண்டுகளில் தனக்குத் தேவையான ராணுவ தளவாடங்கள் அநேகமாய் எல்லாம் வடநாடு தானே தயாரித்துக் கொண்டது; தென் நாட்டுக்கோ துப்பாக்கிகளும் வைத்திய சாமான்களும் பூராவும் அயல் நாடுகளில் இருந்து வரவேண்டியிருந்தது; வெடிமருந்துவகைகளில் பெரும் பகுதி இறக்குமதிப் பொருளாக இருந்தது...கடற் படையும், அக்காரணத்தால் கடலின் ஆதிக்கமும் வடநாட்டார் வசமிருந்தது...வடநாட்டின் பொருளாதார நிலையில் நெளிவு சுளுவுக்கு அதிக இடமிருந்தது. குடியிறங்குவோரின் ஆள் பலமும் அவர்களுக்குக் கிடைத்தது; சற்று குறைய ஆரம்பித்த அவ்வெண்ணிக்கை கெட்டிஸ்பர்க்கில் கிடைத்த பெரும் வெற்றிக்குப் பிறகு வேகமாய் ஏறிற்று. தென்னாட்டின் வசமிருந்த அனுகூல அம்சங்களாவன: மக்களின் போர் ஆற்றல்; ஆரம்பத்தில் பல கோட்டைகளும் நுப்பாக்கி வெடிமருந்துக் கிடங்குகளும் சுலபமாய்க் கைப்பற்றப்பட்டன; உயர்தரமான விவசாய நிலை; சொந்த இடத்தில் தங்கி தற்காப்புப் போர் புரிதல்; கொத்தளங்களின் உள் இருந்து போர் புரிதல். எல்லாவற்றிலும் முக்கியமாக அது ராணுவ இலக்கணப்படிப் போரில் வெல்ல வேண்டுமென்ற அவசியமிலலை—வடக்கே படையெடுத்துச் சென்று புது நாட்டைக் கைப்பற்ற வேண்டிய நிலை இல்லை. நீண்டகாலம் உறுதியான மனத்துடன் போரை நடத்திக் கொண்டே போய் வடநாட்டாரின் மனத்தில் ''தென்னாட்டைக் கைப்பற்ற முடியாது'' என்ற எண்ணத்தை உண்டாக்கினால் போதும். சில்லறைத் தாக்குதல்களிலும், தொடர்ந்த போர் நடவடிக்கையிலும் அது தோல்விக்குப்பின் தோல்வி பெற்றாலும் பரவாயில்லை. ''இந்தப் போரில் நிச்சயமான இறுதி வெற்றி பெறக் கட்டுக்கடங்காத செலவு ஏற்படும்; மதியிழந்த சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டு எக்கேடு கெட்டாலும் கெடட்டும்; மொத்தத்தில் அதுவே நல்லது'' என்ற முடிவுக்கு வடக்கத்தியார் வரும்படி செய்து விட்டால் தென்னாட்டாருக்குத்தான் வெற்றி.

அயல் நாடுகளுக்கு வேண்டிய பருத்தியில் பெரும் பாகம் தென்னாட்டில் இருப்பது பெரிய சௌகரியம்—அதாவது, பிரிட்டிஷ் பஞ்சாலைகள் தொடர்ந்து வேலை செய்ய வேண்டுமானால், அமெரிக்கத் தென்னாட்டின் தயவு அதற்கு வேண்டும். ஆகவே தென்னாட்டிற்காக பிரிட்டன் சிபார்சு பேசும், என்று பலர் நினைத்து அந்தத் தர்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்தார்கள். ஆனால் அவ்வெண்ணத்தில் இருந்த பிழை சீக்கிரம் தெளிவாயிற்று. பிரிட்டனுக்கு, தென்னாட்டுப் பருத்தி எவ்வளவு தேவையோ அவ்வளவு தேவை வடநாட்டுக் கோதுமை. இந்நிலையில் போர் நீடித்து நடந்தது. பெரும் நஷ்டங்கள் ஏற்படும்போதும் தக்ஷிண தேசத்தார் அலட்சியமான சூரத்தனத்துடன் எதிர்த்து நின்றார்கள்; வடதேசத்தார் திடசித்தத்துடன் எதிரியின் பிடிவாதத்தை முறிக்க முயன்றார்கள். வடபுறத் தளகர்த்தர்களைக் காட்டிலும் தென் தளகர்த்தர்களிடம் துரிதமும் திறமையும் இருந்தன; ஆனால் டேவிஸைக் காட்டிலும் ஜனாதிபதி லிங்கன் ராஜநீதி நன்கு அறிந்தவர். டேவிஸ் சிறந்த அறிவாளி; கண்ணியமான நடத்தை, வைராக்கிய மிக்க சத்தியத்தன்மை ஆகிய குணங்கள் உண்டு; கூடவே, குறுகிய நோக்கம், சிடுசிடுப்பு, பொறுமையின்மை, விருப்பு வெறுப்பு ஆகிய தோஷங்கள் குறுக்கிட்டுத் தவறான தீர்மானங்களுக்கு இழுத்துச் செல்லும். மொத்தத்தில், உத்தர தேசத்தின் கை ஓங்கியிருந்தது; ஆனால் ஜனநெருக்கடியுள்ள பரந்த தேசத்தை வென்று, அதன்பின் தொடர்ந்து கைச்சுளுவைத்திருப்பது கஷ்டம் என்பதைத்தான் தக்ஷிண தேசத்தார் மிகவும் நம்பி வாழவேண்டியிருந்தது.

போர் நீடித்திராது என்று நினைத்த வட நாட்டார் சீக்கிரத்தில் தம் பிசகை அறிந்திருக்க வேண்டும். சண்டை நான்கு

வருஷகாலம் இழுத்துக் கொண்டே சென்றது; தென்னாடு முற்றிலும் அலுத்துப் படுத்தபோதுதான் அது முடிவாயிற்று, பணம் பொருள், உயிர் நஷ்டம் பயங்கரமானது. வடநாடு மொத்தத்தில் 20 லட்சம் சிப்பாய்களைப் பதிவு செய்ததாகக் கணக்கிடப்படுகிறது; சண்டை முடிவடையும்போது சுமார் பாதிப்பேர் களங்களில் இருந்தார்கள். தெற்கே பதிவானவரின் எண்ணிக்கை ஏழு லட்சத்திற்கும் பத்து லட்சத்திற்கும் இடையே என்று மதிப்பிடப்படுகிறது; சரியான எண்ணிக்கை யாருக்கும் தெரிவதற்கில்லை. வட நாட்டாரில் 3,60,000 பேர் போரில் காயங்களாலோ, நோய்களாலோ மரித்தனர்; தென்னாட்டாரில் இறந்தவரின் மொத்தம் எண்ணிக்கை 2,58,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தெற்கே பரந்த வெளிகள் பாழாக்கப்பட்டன. ஷேனண்டோவா பள்ளத்தாக்கு முற்றிலும் அழிக்கப்பட்டது; ஜ்யார்ஜியாவில் 50 மில்லியன் டாலர் மதிப்புள்ள பொதுக் கட்டடங்களையும் நூற்றுக்கணக்கான மிலியன் டாலர் மதிப்புள்ள தனியார்க் கட்டடங்களையும் ஷெர்மன் அழித்தான்; கொலம்பியா, ரிச்மண்ட், அட்லான்டா போன்ற பட்டணங்கள் முற்றிலும் தீக்கிரையாயின; ரெயில் பாதைகள் பிடுங்கி எறியப்பட்டன; கைத்தொழிற்சாலைகள் தரைமட்டமாக்கப்பட்டன. பழைய தெரழில் முறையும் போய் வீடு வாசல் தோட்டம் துரவு அழிக்கப்பட்டபின் அந்நாடு பொருளாதார முறையில் தலை தூக்க முடியாத நிலையை எட்டிற்று. அப்பகுதியில் போரின் காயவடுக்கள் இன்னமும் தென்படுகின்றன. போர் முடிவு பெறும்போது வடநாட்டில் தொழிற்சாலைகள் வெகு நல்ல நிலையில் இருந்தபோதிலும், அப்பகுதியின் கஷ்டமும் நஷ்டமும் முதலில் நினைத்ததை விட அதிகந்தான்.

யுத்த நடவடிக்கைகள்: நான்கு போர் முனைகள் அல்லது செயல் களங்களை நாம் தெளிவாகக் காணலாம். கடல் பிரதேசம்; மிஸிஸிபி படுகை; வர்ஜீனியாவும் கிழக்குக் கடற்கரை ஸ்டேட்டுகளும்; கடைசியாக, ராஜதந்திரக் காரியாலயம். கடலைப்பற்றி அதிகம் சொல்வதற்கில்லை. ஆரம்பத்தில் நாற்பது கப்பல்கள் கொண்ட கடற்படை முழுதும் யூனியனின் கையிலிருந்தது எனலாம்; ஆனால் அது அங்குமிங்கும் சிதறி, செயலற்றுத் தளர்ந்திருந்தது. கிடியன் வெல்ஸ் சீக்கிரமாக அதைச் சீர்படுத்தி வலுவளித்தான். தென் கரையோரத்தில் கப்பல் போக்குவரத்துத் தடுக்கப்படவேண்டும் என்று லிங்கன் உத்தரவிட்டார்; முதலில் கண்டிப்பான நடவடிக்கை சாத்தியப்படவில்லை; 1863-க்குப் பிறகு அவரது உத்தேசம் வெகு நன்முக நிறைவேறிற்று. பருத்தியேற்றிய கப்பல்கள் ஐரோப்பாவுக்குச் செல்லமுடியாமல் தடுக்கப்பட்டன; தென்னாட்டுக்கு வெகு அவசியமான யுத்த தளவாடங்கள், துணிமணி, மருந்து வகைகள் இறக்குமதியாவதும் தடுக்கப்பட்டது. அதற்கிடையே, மிஸிஸிபி நதியிலும் மோபீல் பே விரிகுடாவின் தலைவாசலிலும் யூனியன் கடற்படைக்கு நல்ல வெற்றிகள் கிடைத்தன. வாஷிங்க்டன் அல்லது நியூயார்க்குக்கு விரைய இருந்த ஆபத்தும் தவிர்க்கப்பட்டது. தென் சமஷ்டியின் சிறந்த கப்பல் 'அலபாமா' ஃப்ரான்ஸுக் கருகில் மூழ்கடிக்கப்பட்டது. தென்னாட்டுக் கப்பல்களைத் தடுப்பதிலும், முக்கியமான கடற்கரை ஸ்தலங்களைப் பிடிப்பதிலும், வட நாட்டாரின் வியாபாரத்தைக் கெடுக்கும் தென்னாட்டுக் கப்பல்களைப் பிடிப்பதிலும் அல்லது மூழ்கடிப்பதிலும் கடற்படை, ஐக்கிய அரசாங்கத்திற்கு நல்ல கடமையைச் செய்தது.

மிஸிஸிபி படுகையில், ஐக்கியத் தரைப் படைகள் ஒன்றிரண்டு விதி விலக்குடன் தொடர்தொடராக வெற்றிகள் அடைந்தன. பிற்கால அமெரிக்கரின் உள்ளத்தை ஊக்குவிக்க அல்லது நெகிழவைக்க அல்லது கற்பனையை முடுக்கிவிடக்கூடிய பல சம்பவங்களும்—கொல்லனின் பட்டறைக் கல்லில் இருந்து தெறிக்கும் பொறிகள்போல—அப்போரின் விளைவுகளே. ஸம்டேர் கோட்டையைத் தாக்கிய பொறுப்பற்ற முதல் குண்டு வீச்சு; 'மெர்ரிமாக்' 'மானிடர்' கப்பல்களின் துவந்த யுத்தம்; ஷேனண்டோ வாவை ஊடுருவி ''கல்மதில்'' ஜாக்ஸனின் எதிர்க்கமுடியாத முன்னேற்றம்; ஆகாச வாணத்தின் பொறிகள் போல் தோல்வியுற்ற யூனியன் படைகள் பின்தங்குதல்; விக்ஸ்பர்க்குக்குத் தெற்கே, துப்பாக்கி பீரங்கி கக்கும் மாரியையும் அசட்டை செய்து யூனியனின் பீரங்கிப் படகுகள் மிஸிஸிபியின் மேலேறுதல்; பிக்கெட், ஹான்காக் இருவரின் தீர்மானமான மரணப்பிடி; தளகர்த்தன் கிராண்டின் கட்டளையையும் மீறித் தடுக்க முடியாத அற்புத சாகஸத்துடன் சாட்டனூகா குன்றுகளில் புயல்-தாக்குதல்; ஃப்ராங்க்ளின் நகருக்கருகே ஹூட் என்பவனின் தலைமையில் தென்னாட்டுப் படைகள் உயிரைப்பணயம் வைத்து (இரண்டு மணி நேரத்தில் மரணத்தாலும் காயத்தாலும் 6,000 பேரைப் பலியிட்டு) தாக்குதல்; பரந்த கடலில் 'அலபாமா' மூழ்கும்வரை 'கியர்ஸார்ஜ்' அதை வட்டமிடுதல்; ரத்தனங்கள் பதித்த போர்வாளுடன் லீ, எளிய சிப்பாயின் உடையில் க்ராண்ட், இருவரும், முடிவான ஆப்பொமட்டாக்ஸ் போருக்குப் பின் (1865—ஏப்ரல், 9) கண்ணியமாகக் கைக்குலுக்குதல்; தென் கூட்டாளிகளின் தலை நகராயிருந்த ரிச்மண்ட் பட்டணத்தில், தீயால் கருகிய தெருக்கள் வழியே லிங்கன் 'சோகபவனி' செல்லுதல்; போரின் இறுதிக் காட்சியாக பென்ஸில் வேனியா சாலையில் கிழக்கு-மேற்குச் சேனைகளின் முடிவற்றது போன்ற கம்பீரமான ஊர்வலம்—ஆகியவையெல்லாம் ஒரு மகா காவியத்திற்குகந்த பேரம்சங்கள். தலை தலைமுறையாக அதை (அமெரிக்க) பாட்டன்மார் பேரன் பேத்திகளுக்கும்,

உபாத்திமார் மாணவ மாணவிகளுக்கும் சொல்லுமளவுக்கு நிலைத்துவிட்ட நிகழ்ச்சிகள்!

பிரிந்த ராஜ்யங்கள் நிச்சயம் வரவிருக்கும் தம் தோல்வியை உள்ளத்தில் ஒப்புக்கொண்டு பெருந்தன்மையுள்ள ஜனாதிபதியுடன் உடன்படிக்கை பேச யத்தனித்திருந்தால் எவ்வளவோ நன்மையாக இருந்திருக்கும். ஆனால் அளவுகடந்த மனக்கசப்பு அதற்கிடம் கொடுக்கவில்லை. மேலும் எதிர்ப்பு அசாத்தியமாகும்வரை தென் அரசாங்கம் தொடர்ந்து சண்டை பிடித்தது. பிரிட்டிஷாரும் ஃப்ரெஞ்சுக்காரரும் தலையிட்டு உதவி புரிவார்கள் என்ற நம்பிக்கையை அது 1863-ல் தான் பூராவும் இழந்தது. ராஜதந்திரத் துறையில் ஃபெடரல் அரசாங்கத்திற்கு செல்வாக்கு பலமாக இருந்தது; அதை அது நன்கு பயன்படுத்திக்கொண்டது; கெட்டிஸ்பர்க் வெற்றிக்குப் பிறகு எந்த ஐரோப்பிய அரசாங்கமும் தோற்கும் கட்சியுடன் நட்பு வளர்க்கத் தயாராயில்லை. மேலும், போரின் முக்கிய உத்தேசங்களில் ஒன்று, 'அடிமையொழிப்பு' என்பதை 1862-ல் லிங்கன் வெளியிட்ட விடுதலைப் பிரகடனம் ஊர்ஜிதப்படுத்திற்று; உடனே பிரிட்டிஷ் பொது மக்களின் நியாயபாவம் அவர்களை லிங்கனுக்கு அனுகூலமாக ஆக்கிற்று. ஃபெடரல் கடல் சேனை வெற்றியுடன் நடத்திய தடுப்பால் அமெரிக்கப் பருத்தி இங்கிலாந்துக்கு வந்து சேராததால் பல ஆலைகள் சரியாக வேலை செய்யவில்லை; அந்தச் சமயத்தில் போரால் தரித்திரர் ஆக்கப்பட்ட லாங்காஷயர் பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பாராட்டவேண்டும்; தங்கள் நஷ்ட நிலையிலும் அவர்கள் நல்ல கொள்கையைச் சஞ்சலமின்றி ஆதரித்தார்கள்.


உள்ளூற இருந்த சச்சரவுகள்:—பயங்கரமான யத்தனங்களில் ஈடுபட்டிருந்த அவ்வாண்டுகளில் வடக்கே, தெற்கே இரண்டிடங்களிலும் தென்பட்ட உள் பூசல்களைப்பற்றி நிறைய எழுதலாம். ஒருபுறத்திலும் அரசாங்கம் அதிக நிர்வாகத் திறமையுடன் நடந்துகொள்ளவில்லை. சரியாக உருவாக்கப் பெறுதல், தவறுகள், நீதியற்ற முறைகள் சேனைகளைப் பலஹீனப்படுத்தின. கட்டாய ராணுவச் சேவைக்கான சட்டங்கள் விதிக்கப்பட்டன; ஆனால் அவை நியாயமாகவோ மக்கள் மதிப்பிற்குகந்தோ அமையவில்லை; வடக்கே, ஈடுப் பணம் கட்டிப் பதில் ஆளை அனுப்ப அனுமதியிருந்த இடத்தில், பதிவு செய்யும் (லாவண) காரியாலயங்களில் கலகங்கள் மூண்டன. அரசியல் சச்சரவுகளும் இரு அரசாங்கங்களையும் துளைத்துத் துன்பப்படுத்தின. செல்வாக்குள்ள ரிபப்லிகன் தீவிரவாதிகள் லிங்கன் போர் நடத்துவதில் நிதானம் காட்டுவதாகவும், விடுதலைப் பிரகடனம் வெளியிடுவதில் தாமதப் படுத்துவதாகவும், லூஸியானு போன்ற வெல்லப்பட்ட நாடுகளில் விறுவிறுப்புடன் புனரமைப்பு வேலை துவங்கவில்லை யென்றும் குறை கூறினர்கள். தக்ஷிண தேசத்திலோ, ஜ்யார்ஜியா கவர்னர், வட கரோலினு கவர்னர் போன்றவர்கள் ராஜ்ய உரிமைகளுக்கு விடாப்பிடியாக முக்கியத் தன்மை யளித்து, கான்ஃபெடெரலியின் தேவைகளை இரண்டாம் பக்ஷமாகக் கருதி, ரிச்மண்ட் அதிகாரிகளுக்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே இருந்தார்கள். இருபுறத்திலும்—அதிலும் முக்கியமாக வடக்கே—ராணுவ அதிகாரிகளின் நியமனத்தில் சுயநல அரசியல் பிரச்னைகள் தலையிட்டு ஆபத்தாக்கின. இரு புறத்திலும் சிப்பாய்கள் படையை விட்டோடுதல் சகஜமாயிற்று; கடைசி நாட்களில் தென்படைகள் அந்நோயால் மிகவும் நஷ்டப்பட்டன.

ரிச்மண்டிலும் இதர இடங்களிலும் ராணுவக் கைதிகள் மிகக் கேவலமாக நடத்தப்படுவதாக வட அரசாங்கம் தென் அரசாங்கத்தின்மேல் குறை கூறிற்று; ஆனால் வடக்கேயும் நிலைமை மோசமாகத்தான் இருந்தது. இரு பகுதிகளிலும் பாரபக்ஷம், வஞ்சனை, லஞ்ச விவகாரம் மலிந்திருந்தன. அயோக்கிய கண்டிராக்டர்கள், சூதாட்ட வர்த்தகர்கள், கோள் சொல்லி அரசியல் வம்பர்கள், மனிதக் கழுகுகள் முதலியோர் வாஷிங்க்டனில் நிரம்பி இருந்தார்கள்; தென்னூட்டில் சில சூழ்ச்சிக்காரர்கள் நாட்டின் அவல நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கோடீசுவரர்கள் ஆனார்கள். தெற்கே காகிதப்பணம் மதிப்பிழந்ததால், விலைகள் வானுக்குயர்ந்து, பாட்டாளி மக்கள் பலர் தரித்திரர் ஆயினர். வடக்கே கணிசமான பண வீக்கம் சூதாடி வியாபாரிகளை ஊக்குவித்து மட்ட ரகமான பலரைக் கோடீசுவரர் ஆக்கிற்று. மொத்தத்தில் வெட்கி வருந்த வேண்டிய பல நிகழ்ச்சிகளுக்குப் போர் காரணமாயிற்று. அதே சமயத்தில், வீரத்தனம், தேசபக்தி, பரோபகாரம், தியாகம் முதலிய சிறந்த குணங்களும் பல நிகழ்ச்சிகளால் வெளியாயின.

ராபர்ட் ஈ. லீ: ஆப்ரஹாம் லிங்கன்: தக்ஷிணதேசத்திற்கு யுத்தம் அளித்த நன்கொடை ராபர்ட் ஈ லீ—அமரவீரன், தளகர்த்தர்களில் லட்சிய தீரன். உலகம் போற்றும் அத்தலைவரின் திறமை, அலுப்பறியாத உழைப்பு, யுத்த காலம் முழுதும் அவர் காட்டிய மனித இதயம், தோல்வியை ஒப்புக் கொண்டபின் 'நேற்றைய சத்துருவின் விசுவாசமுள்ள நண்பன் ஆகும்படி' தென்னூட்டாருக்கு உபதேசிக்கத் தோன்றிய பெருந்தன்மை—இச்சிறப்புக்களை என்றென்றும் பாராட்ட வேண்டும். அவரிடமிருந்த சிலகுறைகள் அவருடைய நற்குணங்களிலிருந்து பிறந்தவை; கட்டளைக்கடங்காத கீழ் அதிகாரிகளைப் பணிய வைக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் மரியாதை, கருணை என்ற பாவங்கள் குறுக்கிட்டன. நெருக்கடியில் சமயோசிதமான சில்லறை அணிவகுப்பு முறைகளைக் காட்டிலும் மொத்தமான யுத்த தந்திரத்தில் அவர் வல்லுநர்; எதிரிகளின் திட்டங்களை

ஊகிப்பதில் அவருக்குக் கூர்மையான உள் அறிவு உண்டு; 'ராணுவச் செய்திக் குப்பையிலிருந்து தானிய மணிகளைப் பொறுக்குவதில், அவர் திறமைசாலி; படைகள், அணி வகுக்கும் ஸ்தலங்கள், இவற்றின் செயலாற்றலை திட்டமாக மதிப்பிடும் சக்தி அவருக்குண்டு. ஒழுங்கமைப்புக்கான திறமை, எல்லா விவரங்களையும் மனச் சாட்சிக்குச் சம்மதமாகக் கவனித்தல், தம் சிப்பாய்களின் சௌகர்யங்களில் உணர்ச்சி மிக்க அக்கறை, சாகஸம், கம்பீரமான தோற்றம்—இக்குணங்களின் காரணமாக அவருடைய துருப்புக்கள் அவரிடம் தெய்வ விசுவாசம் கொண்டன. வாஷிங்க்டனைப்போல அவரும் தம் கோபத்தை அடக்கிக்கொள்வார்; எப்பொழுதேனும் தன்னை மீறிக் கோபம் வந்தாலும் அது நீடித்திராது. கிறிஸ்துவின் லட்சியச் சார்பினராகிய அவர் வெற்றியிலும் தோல்வியிலும், போரிலும் அமைதியிலும் பெரிய மனிதர். போருக்குப்பின் ஐந்தாண்டுகளே உயிர் வாழ்ந்த அவர் பொருளாதார, கலாசார, அரசியல் துறைகளில் தென் ராஜ்யங்களின் புனருத்தாரணத்தில் தம்மை மறந்தார்.

உத்தர தேசத்திற்கு யுத்த தேவன் அளித்த நன்கொடை போன்ற, மேலும் மகத்தான வீரர்—ஆப்ரஹாம் லிங்கன். 'நாட்டுப்புறத்தான்' போன்ற மேற்கத்தி வக்கீல், விகாரமானவன், முறையான பள்ளிப் படிப்பு பெறுதவன்—இப்பெரிய காரியத்தை இவன் எவ்வாறு கொண்டு செலுத்தப்போகிறான் என்று போரின் அடிநாட்களில் பலர் எண்ணினர்; அவருடைய உண்மையான பரிமாணத்தை, ஆத்ம சக்தியை, சிலரேனும் அறிந்தனரோ, சந்தேகம். பிரதிகூலமாக இருந்த பத்திரிகைகள் அவரை மூளை வளர்ச்சி பெறுத அசக்தன் என்று வர்ணித்தன. கவனமான படிப்பாலும் ஆராயும் சிந்தனையாலும் அவர் பெற்ற ஆழ்ந்த தெள்ளறிவு. தீவிரமாக உண்மையைத்தேடும் தன்மை, என்றும் குறையாத பொறுமை, எல்லையற்ற உதார குணம்—இவற்றைத் தேசம் சிறுகச் சிறுகப் புரிந்துகொண்டது. சில சமயங்களில் அவர் தயங்குவதாகவோ சஞ்சலப்படுவதாகவோ தோன்றினால் எதிர்காலம் எப்பொழுதும் அதற்கு நல்ல காரணம் காட்டிற்று—தேசத்தின் பெரும் நன்மைக்காகக் காத்திருக்க அவருக்குத் தெரியும், பலத்தையும் சமயோசித புத்தியையும் இணைக்க அவர் அறிவார் என்பதைப் பின் நிகழ்ச்சிகள் ரூபித்தன. அமெரிக்க மனத்தை அவர் அறிந்திருந்ததால், பொது அபிப்பிராயங்கள் உருப்பெறும்வரை திறமை தூளாயிராமல் நிர்ணயமான ஸ்படிகமாகத் திரளும்வரை, பொறுத்திருக்கவும், சரியான சமயத்தில் துணிந்து முன்னேறவும் அவருக்குத் தெரியும். தலைவர்களுக்குள் பரமயோக்கியர் அவர்; சாமர்த்தியமுள்ள அரசியல் வாதியாக இருந்தாலும் நியாயப் பிசகான முறைகளை அவர்—தற்காலிக வெற்றிக்காக—கையாண்டதே



கிடையாது. வாக்காளர்களின் பருத்தறிவை அவர் பயன்படுத்திக்கொண்டார், மூடத் தன்மையை அல்ல. எண்ணத்திலும் செயலிலும் அவர் உதாரசீலர்—போர் நிகழ்ச்சிகள் இருதயத்தைக் கசக்கிப் பிழியும்போதும் அவர் தென்மக்களின் மனம் நோகும்படி ஒரு வார்த்தைகூடச் சொன்னதில்லை. எல்லாவற்றிற்கும் மேல், நாட்டை ஒன்றுக இணைப்பது பலாத்காரமாக இருக்கக்கூடாது, மன ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பது அவரது பேரவா; யூனியன் படைகள் இறுதி வெற்றிகள் பெறும் தருவாயிலும் அவர் இழக்கப்படும் அடிமைகளுக்கு ஈடாகக் கணிசமான தொகைகள் கொடுப்பதாகத் தென்னுட்டாரிடம் சொன்னார். அவருடைய அயல் நாட்டுக் கொள்கையில் கண்ணியம், யோக்கியதை, திடசித்தம் மூன்றையும் காணலாம். முன்பு எக்காலத்திலும் இராத அதிகாரங்கள் அவருக்குக் கிடைத்தபோதும், அவர் பொது மக்களின் சுய ஆட்சியில்தான் பூர்ண நம்பிக்கை கொண்டிருந்தார்; ஜனங்களின் பக்தி உணர்ச்சியை சம்பாதிக்க அவருக்குத் தெரியும்: ஆகவே, இறுதியில் ரஷ்யச் சக்ரவர்த்திகளைப்போல் சர்வ அதிகாரம் செலுத்தும் சந்தர்ப்பத்திலும், மக்களின் பூர்ண சம்மதம் அவருக்குக் கிடைத்து வந்தது. அவருடைய பிரசங்கத் திறமை தேவையையொட்டி விகசித்தது; அவருடைய கெட்டிஸ்பர்க் சொற்பொழிவு, இரண்டாம் பதவித் துவக்கச் சொற்பொழிவு, அவருடைய சில கடிதங்கள்—இவையெல்லாம் ஆங்கில வசன இலக்கியப் பொக்கிஷத்தில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனல் விதியாரை விட்டது? இத்தனைச் சிறப்புக்களும் திடீரென்று நாட்டிற்கு உதவாமல் போயின. 1865 ஏப்ரல் 14-ஆம் தேதி, ஆப்போமாட்டாக்ஸில் போர் முடிவடைந்த ஒரு வாரத்திற்குள், லிங்கன் குடும்பத்தாருடன் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கையில் பூத்ஸ் என்னும் ஒரு நடிகனல் கொல்லப்பட்டார். நாட்டின் அதிர்ச்சியை - எவ்வாறு வர்ணிப்பது? "வென்றவன், தோற்றவன் இருவருக்கும் பெரும் துரதிர்ஷ்டம் அது." ஜேம்ஸ் ரஸ்ஸெல் லொவெல் எழுதியதுபோல்—

> அதற்கு முன்பு ஒருபொழுதும் கூட்டம் கூட்டமாக அத்தனை மனிதர்கள் நேரில் பாராத ஒருவனின் மரணத்திற்காகக் கண்ணீர் சிந்தியதில்லை; தம்முடைய சொந்த வாழ்க்கையிலிருந்து ஒரு சிநேக அம்சம் மறைந்துவிட்டது போல, பிற்காலம் இருள் மூடியது போல அவர்கள் துக்கப்பட்டார்கள். மயக்கும் வார்த்தைகள் நிறைந்த ஈமச் சொற்பொழிவுகளைக்காட்டிலும் அறிமுகமாகாத மனிதர்கள் அன்று தெருக்களில் சந்தித்தபோது முகத்தில் காட்டிக்கொண்ட மௌன அனுதாபம் அதிக சொல் சக்தி பெற்றிருந்தது. அவர்களுடைய பொது மனிதத்துவம் ஒரு உறவினை இழந்து தவித்தது.

யுத்தத்தின் விளைவுகள்: ஆண்ட்ரூ ஜாக்ஸன் அடுத்த ஜனதிபதி. அவர் புதியவர், திறமை எப்படியிருக்குமென்று தெரியாது, பதவிக்கு வேண்டிய முன் வசதிகளும் பயிற்சியும் குறைவே; தேசத்தின் புனருத்தாரணப் பிரச்னைகளோ கடினமானவை, நாசூக்கானவை. அது போதாதென்று, லிங்கன் கொலை செய்யப்பட்டதும், பலர் பழி நடவடிக்கைக்காகத் துடித்தனர்; சுயநலமான அரசியல் இச்சைகளும் பொருளாதார இச்சைகளும் புதிய சிக்கல்களைப் புகுத்தின. நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு ரிபப்லிகன் கட்சி சாசுவதமாக ஆட்சிபுரிய விரும்பிற்று; சுயநலமுள்ள வியாபார கோஷ்டிகள் சொந்த லாபங்களுக்காக அடிகோலின. கடுமையான இறக்குமதி வரி கோரும் பொருள் உற்பத்தியாளர்கள், அரசாங்கத்திற்குக் கொடுத்த கடனுக்காக (நோட்டாக இல்லாமல்) பொன்னை வட்டி வசூல் எதிர்பார்ப்பவர்கள், நில மானியம் கோரும் ரெயில் பாதை முதலாளிகள் அனைவரும் ஜனதிபதியின் நாற்காலியைச் சூழ்ந்து கொண்டனர்.

ஏனென்றால் நன்மை, தீமை இரண்டுக்கும் போர் காரணமாயிற்று. அது ஐக்கியத்தைக் காப்பாற்றி அதற்கு "அழிவற்ற" தன்மையைக் கொடுத்தது; ஆனல் போர் என்னும் கொதி கலத்திலிருந்து வெளியான ஐக்கியம் நாட்டின் தந்தைகள் கோரிய ஐக்கியமல்ல. அடிமைப் பழக்கம் எக்காலத்திற்கும் ஒழிக்கப்பட்டுவிட்டது; ஆனல் சக்திப் பிரயோகத்தால். மேலும், விடுதலை பெற்றவரின் க்ஷேமத்தைப்பற்றியோ, அவர்கள் கலந்து வாழவேண்டிய சமுதாயத்தின் க்ஷேமத்தைப்பற்றியோ, அவர்கள் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய பொருளாதார நிலையைப் பற்றியோ ஒருவரும் சிந்திக்கவில்லை. தெற்கே "குபேரர்"களின் ஆட்சிவிலக்கப்பட்டது; ஆனல் அவர்களுடைய தனி போகமாக இருந்த ஆண்மையைப் பொறுப்புடன் ஏற்க இன்னொரு கோஷ்டி பிறந்ததாகவில்லை; ஒரு தலைமுறை காலத்திற்குத் தென்னாடு இயற்கையான நாயகர்களின்றி சிரமப்பட்டது. "மக்களுக்காக மக்களே" ஆளவேண்டும் என்பது விங்கனின் கனவு; ஆனல் நேர் முறையாகவோ உடனடியாகவோ ஜனநாயக லட்சியத்தைப் போர் முன்னெடுத்துச் சென்றதாக நீதியறிந்தவன் எவனும் சொல்லமாட்டான்.

போரால் உண்டான வட-தென் துவேஷம் பல பத்தாண்டுகள் நீடித்திருந்தது—லிங்கன் விலக்க முயன்ற துவேஷம் அது. பலருடைய சகிப்புத்தன்மை—அதிலும் அரசியல் துறையில்—மாயமாய் மறைந்தது. வடக்கே ரிபப்லிக் கட்சியைச் சேர்ந்த பல கலகக்கார அரசியல் பிரசங்கிகள் அத்துவேஷத்தைத் தூண்டி வோட்டு சம்பாதித்தார்கள். எதிர்க்கட்சி டிமோக்ராட் கொடியின் கீழ் திடமாய் நின்று, ஒரு டிமோக்ராட்டை எங்கு வசித்தாலும் அவன் தென்னுட்டான் என்ற பாவனையை

வளர்த்தது. போர் முடிந்து இருபது வருஷங்கள்வரை ஒரு டிமோக்ராட் கூட வெளளை மாளிகையில் பிரவேசிக்கக்கூடிய பதவி பெறவில்லை; சுமார் 50 வருஷங்களுக்குப் பிறகுதான் தெற்கே பிறந்த ஒருவன், வுட்ரோ வில்ஸன் (Woodrow Wilson) ஜனாதிபதியானார். போரிலிருந்து வடக்கே பெரிய எண்ணிக்கையில் திரும்பிய சிப்பாய்களின் கையில் வோட்டு சம்பாதிக்கும் சக்தி மிகுந்திருந்தது. அவர்கள் பென்ஷன் கோரிக்கையை சர்க்காரிடம் சற்றும் தயங்காமல் கண்டிப்பாகக் கேட்டார்கள்; அவர்களுடைய தயவை நாடிய அரசியல்காரர்கள் பணிவுடன், கிறுதும் கவலையோ பொறுப்போ அறியாமல், பொதுப் பணத்தை அகன்ற அகப்பையால் அள்ளி அள்ளிப் பரிமாறினார்கள். நாட்டின் சமூக வாழ்க்கையையும் நியாயத் தன்மையையும் பாதிக்கும் ஒரு பழக்கமும் போருக்குப் பின் அதிகமாயிற்று. பண ஆசையும் அதிகார ஆசையும் மிகுந்த ஒரு 'பேய்' வர்க்கம் முன்னணிக்கு வந்தது; கொச்சைப் பேச்சும், நடத்தையும், நீதியற்ற செயல்களும் அவர்களுடைய அறிகுறிகள். அமெரிக்காவில் பெரும்பாலோர் எப்பொழுதும் போல உழைப்பாளிகளாகவும் மனச் சாட்சிப்படி நடப்பவராயும் தேசாபிமானம் உள்ளவராயும் இருந்தார்கள்; ஆனால் பண்பாடின்றி இரைந்து பேசும் தான்தோன்றிப் பேராசைக்காரர்கள் முன்னைக் காட்டிலும் அதிகமாகத் தென்பட்டார்கள்.

தென்னாட்டின் புனரமைப்பு : போரில் அழிந்து தோல்வியடைந்த பிரதேசத்தை மறுபடி தலைதூக்க உதவி புரியவேண்டியிருந்தது; அக்காரியத் திட்டத்தை நிறைவேற்ற 12 வருஷங்கள் பிடித்தன— 1865-1877. லிங்கன் உயிருடன் இருந்திருந்தால், தென்னாட்டாரின் மனம் நோகலாகாது என்று வற்புறுத்திக் கூறியிருப்பார்; பெரும்பாலான காங்கிரஸ் அங்கத்தினர்களும் ஒப்புக்கொண்டிருப்பார்கள் எனலாம். ஆனால் ஆண்ட்ரூ ஜான்ஸன் மொத்தத்தில் நல்ல எண்ணம் கொண்டிருந்தாலும், நிதானமற்றவர், சமயோசித புத்தியில்லாதவர் சிடுசிடுப்புள்ளவர். நீக்ரோக்களுக்கு உதவிபுரிவதற்காக "விடுவிக்கப்பட்டவர் காரியாலயம்" நிறுவவும், அவர்களுடைய சிவில் உரிமைகளைக் காப்பாற்றவும் சட்டங்கள் இயற்றப்பட இருந்தன; மசோதாக்களின் நிபந்தனைகள் தெற்கு ராஜ்யங்களின் சொந்த அதிகாரங்களைப் பாதிக்கக் கூடியவையாக இருந்தன. விவாதத்தின்போது அவர் காங்கிரசுடன் சண்டை பிடித்துக்கொண்டார். அந்த சபையின் தீவிர வாதிகள் அவரைத் தந்திரமாகப் பணிய வைத்து அவமானப்படுத்தியதும் அவர் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் தவித்தார். உண்மையில் அவர் பதவியே அப்பொழுது போயிருக்க வேண்டியது. அவருடைய மறுதலிப்பை அசட்டை செய்து, காங்கிரஸ் தன்னுடைய அனுமதி இல்லாமல் குறிப்பிட்ட உத்தியோகஸ்தர்

களை ஜனாதிபதி வேலையிலிருந்து விலக்கக் கூடாது என்று ஒரு சட்டம் நிறைவேற்றிற்று. அந்தச்சட்டம் ஒழுங்கானதா, செல்லுமா என்று கோர்ட்டு மூலம் சோதிப்பதற்காக ஜான்ஸன் தன்னுடைய (நம்பிக்கைக்குத் தகுதியற்ற) போர்க் காரியதரிசியாகிய ஸ்டான்டனை நீக்கினார். அதன்மேல் 1868 பிப்ரவரியில் தீவிர வாதிகள் அவர்மேல் "தகாத நடத்தை, சட்ட விரோதமான நடத்தை" என்ற குற்றம் சாட்டி, ஸெனெட் சபையின் முன் விசாரித்ததில் ஒரு வோட்டு வித்தியாசத்தில் அவர் பதவியிழக்காமல் தப்பினார். இதற்கிடையே, 1866-ன் காங்கிரஸ் தேர்தலில் வெற்றியடைந்து, தீவிர வாதிகள் புனரமைப்பு வேலையை ஏற்றுக்கொண்டு ஒரு திட்டம் தயாரித்தார்கள்; அது மிக யோசனையற்றதும் தென்னாட்டை மிகத் தாழ்த்துவதுமாக இருந்தது. அவற்றைக் கொண்டு செலுத்தியவர்களும் பழிவாங்கும் மனப்பான்மையுடன் மிகக் கடுமையாக நடந்து கொண்டார்கள்.

அதன் முக்கியமான அம்சங்கள் மூன்று. தென்னாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஐந்து ராணுவ அதிகாரிகளின் கீழ் வைக்கப்பட்டது; அதிகாரிகளிடம் வலுவான படைகள் இருந்தன. அடுத்ததாக, சட்டத்தின் 14-ஆம் திருத்தம், 15 ஆம் திருத்தம், இரண்டையும் வெள்ளையர்கள் ஏற்க வேண்டியிருந்தது; நீக்ரோவுக்குத் தினசரி வாழ்க்கையில் சரி நிகரான உரிமைகள் அளிப்பதற்கான விவரங்கள் 14-ஆம் திருத்தத்திலும், கறுப்பு மனிதர்களுக்கும் வாக்குரிமை உண்டு என்ற செய்தி 15-ஆம் திருத்தத்திலும் அடங்கியிருந்தன; நீக்ரோக்களில் பெரும்பாலோர் படிப்பு வாசனை யறியாதவர், அநேகமாய் எல்லோரும் பொது விஷயங்களில் மகா மூட நிலையில் அழுந்தியிருந்தார்கள் என்பது நினைவிருக்க வேண்டும். ஆஃப்பிரிக்காவில் காட்டுமிராண்டிகளாய் இருந்தவர்களின் பேரன்பால், ஒரு வரி படிக்கத் தெரியாதவர்கள், பருத்திக் காடுகளில் ஆயுளெல்லாம் உழைத்துக் கிடந்தவர்கள், நேற்றுவரை விலக்கு வாங்கப்பட்ட அடிமைகளாக இருந்தவர்கள் வாக்குரிமை பெற்றதும் பொது உத்தியோகஸ்தர்களை நியமிப்பதிலும் நீக்குவதிலும் சட்டங்கள் இயற்றுவதிலும் பங்கெடுத்துக்கொள்ளும் நிலைமை ஏற்படுகிறது. கடைசியாக, இந்தச் சிறுப்பு வாக்காளர்களையும், ஏழை வெள்ளையர்களையும் அதிர்ஷ்ட தேவதையை நீதியின்றி உபாசிக்க வடக்கே இருந்து வந்த சந்தர்ப்பவாதிகளையும் பயன்படுத்தித் தெற்கே புதுப் பொம்மை இராஜ்ய அரசாங்கங்கள் நிறுவப் பல அரசியல் சூத்திரதாரிகள் வடக்கே காத்திருந்தார்கள்.

ஆங்கிலம் பேசப்படும் நாடுகளின் அனுபவத்தில் வந்த மிகக் கேவலமான அரசாங்கங்களில் பொம்மலாட்டமான இந்த நீக்ரோ ஆட்சியையும், அயோக்கியதை நிறைந்த சந்தர்ப்ப

வாதிகளின் ஆட்சியையும் சேர்க்கவேண்டும். சிறிதுகாலம் நீக்ரோக்களின் வசம் பல ஸ்டேட் சட்டசபைகள் இருந்தன; நீக்ரோக்கள் காங்கிரசுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்; சிறு ஸ்டேட் உத்தியோகங்கள் வகித்தார்கள்; அதிக லாபமளிக்கும் காரியங்களை அரசியல் வேட்டை ஆடுவோர் செய்தார்கள். ரஸ்தாக்களும் பாலங்களும் கட்டுவதிலும் கல்விக்காகவும் தர்மங்களுக்காகவும் நல்ல சட்டங்கள் இயற்றுவதிலும் புனரமைப்பு அரசாங்கம் நல்ல அக்கறை காட்டிற்று. சில சிறந்த காரியங்கள் சாதித்தது என்பது உண்மையே. ஆனாலும் மொத்தத்தில் அவர்கள் திறமையற்றவர்கள், வசதிகளை அனுபவிக்குபவர்கள், லஞ்சப் பேய்கள். வாவி வாரியாகப் பணத்தை வாரி இறைத்துவிட்டு, ஏழையாகிவிட்ட வெள்ளையர்களால் தாங்க முடியாத அளவுக்கு அவர்கள் வரிகள் விதித்தார்கள். சிறிது காலம் தென்னாடு செயலற்றுத் திணறிக்கொண்டிருந்தது.

ஆனால் அது சிறிது காலமே. படிப்படியாகச் சுயமரியாதையுள்ள வெள்ளையர்கள் தம்மைத் தாமே ஆளும் சக்தியைச் சம்பாதித்துக்கொண்டார்கள். ஓரளவு இக்காரியம் முரட்டு வழிகளால் கைகூடிற்று. ''கூ க்ளக்ஸ் க்ளேன்'' (Ku Klux Klan) என்னும் பயங்கர சங்கத்தை உண்டாக்கி அவர்கள் அரசியல் வேடர்களை மிரட்டி வடக்கே திருப்பி யனுப்பியதுமல்லாமல் தேர்தல் நடக்கும் ஸ்தலங்களை அணுக நீக்ரோக்கள் பயப்படும்படி செய்தார்கள். பெரும்பாலும் பழைய அரசியல் ஸ்தாபனங்களைச் சாந்த முறையில் உபயோகித்து அவர்கள் இந்த மாறுதலை உண்டாக்கினார்கள். அநேக நீக்ரோக்கள் தந்திரமான வடநாட்டு அன்பர்களின் கையாளாக இருக்க வெறுத்து, வாக்குப் பதிவதைத் தாமே விட்டுவிட்டார்கள்; சிலர் தம் பழைய வெள்ளை எஜமானர்களிடமே வேலையில் அமர்ந்தார்கள். டிமோக்ராட் கட்சி ராஜ்யத்தின் பின் ராஜ்யமாக மறுபடி தனதாக்கிக்கொண்டது; 1876-ல் லூயியானு, ஃப்ளாரிடா, தென் கரோலினு ஆகிய மூன்றே ஸ்டேட்டுகள் ரிபப்லிகன் கட்சி வசம் இருந்தன. அந்த மூன்றிலும்கூட ஃபெடெரல் துருப்புக்களின் உதவியால்தான் நீக்ரோக்களும் அதிர்ஷ்ட வேட்டைக்காரர்களும் நிலைத்திருக்க முடிந்தது. 1876-ன் தேர்தலில், போட்டி மிகக்கடுமையாக இருந்தது; நடவடிக்கைகளும் முற்றிலும் ஒழுங்குற்றிருந்தன; துருப்புக்கள் வெளியேற்றப்படாவிட்டால் தென்னாடு அமைதியடையாது என்பதும் அப்பொழுது தெளிவாயிற்று. ஆகவே அடுத்தாண்டில் ஜனாதிபதி ரூதர்ஃபோர்ட் பி: ஹேஸ் துருப்புக்களை வாபஸ் பெற்றார். அதிலிருந்து தம்முடைய ''தீவிரமான'' புனரமைப்புக் கொள்கை தவறானது என்று ரிபப்லிகன் கட்சி ஒப்புக்கொண்டதாக ஆகிறது. அந்தக் கொள்கைக்கு இரண்டு காரணங்கள் கூறலாம்: கட்சியின் ஆதர்ச

வாதிகள் நீக்ரோவுக்கு நன்மை செய்ய விரும்பினார்கள்; கட்சியின் சுயநலவாதிகள் வோட்டுக்காகவும், உத்தியோகங்களுக்காகவும், அரசியல் ஆற்றலுக்காகவும் தென்னாட்டைத் தம் வசம் வைத்துக்கொள்ளலாம் என்று நம்பினர். உண்மையில் நீக்ரோக்கள் அசக்தர்கள் ஆனதும், முன்னேற்றத்தில் தடைப்பட்டதும், தென்னாடு முழுதிலும் டிமோக்ராட் கட்சி நன்கு வேரூன்றியதுமே, அந்த சூழ்ச்சிகளின் கைகண்ட பலன்.

1850-க்கும் 1877-க்கும் இடையே உள்நாட்டுக் கலகங்களையும் குழப்ப நிலையையும் நோக்குங்கால், அதைக் கலப்பற்ற சோகமயமான கதை எனலாம். லிங்கன் வெகுகாலமாக நினைத்தபடி அடிமை ஒழிப்பு நிதானமாகக் காலக்கிரமத்தில் நடைபெற்று, எஜமானர்களுக்குத் தக்க பணம் செலுத்தப்பட்டிருந்தால் தேசம் எவ்வளவோ ஆனந்தமாக இருந்திருக்கும். நீக்ரோக்கள் கல்வி கற்று சமுதாயத்தில் பொருத்தமாக அமர அவகாசம் இருந்திருக்கும். 31 மிலியன் (310 லக்ஷம) ஜனத் தொகையில் 6 லக்ஷம் இளம் காளைகள் வீணாக இறந்தமாபெரும் தஷ்டத்தைத் தவிர்த்திருக்கலாம்; ஆள்வளம் குறைவாக இருக்கும் நாட்டில் அவர்களுக்குப் பிறந்திருக்கக்கூடிய மிலியன் கணக்கான குழந்தைகளையும் நஷ்டமாகத்தான் கருதவேண்டும்! இன்றைக்கும் நாளைக்கும் நாட்டைப் பலஹீனப்படுத்திக்கொண்டிருக்கும் எல்லையற்ற நாசவேலை நடந்திருக்காது; அப்பொழுது தென்னாடு எவ்வளவு வளம் பொருந்தியிருக்கும்! போருக்குப் பிஞ்சு விஷப்பூண்டுபோல் படர்ந்த பணவேட்டை அக்கிரமங்களும், பண்பற்ற வாழ்க்கையும் இருபுறத்தாரின் குணத்தைக் கெடுத்திருக்காட்டா.

இருந்தபோதிலும், முன்கூறியதற்கும்அதிகமாக, பேரேட்டில் லாபங்களும் தென்படுகின்றன. புயல், தேசத்தை ஒன்றுக்கிற்று; அந்த இணைப்பு நிதானமான முறைகளில் நடைபெற்றிராது. சமூகத்துறையிலும் பொருளாதாரத் துறையிலும் தெற்கும் வடக்கும் நெருங்கி ஒருவகைப்பட்டன. ''அமெரிக்கத் தன்மை'' எனப்படும் பண்பு முதிர்ச்சியும் அழமும் பெற்றது. யுத்தம் உதவி புரிந்தது; இலக்கியமும் கல்வியுங்கூட இளம் பருவம் தாண்டி முதிர்ச்சி பெற்றன.

அத்தியாயம் 12

நற்கால அமெரிக்காவின் பிறப்பு

போர் அளித்த அதிர்ச்சி:—உள்நாட்டுப்போர் அமெரிக்க சமூகத்திலும் பொருளாதார நிலையிலும்—வடக்கேயும் தெற்கேயும்—ஒரு புரட்சியை உண்டாக்கிற்று. தற்கால அமெரிக்கா போருக்குப் பிறகுதான் ஜனித்தது என்பது தவறாகும்; பல ஆண்டுகளுக்கு முன்பே அந்த மரம் வேரூன்ற ஆரம்பித்தது; ஆனால் தேதி குறிப்பிட்டுப் பேசுவதானால் போரின் முடிவையே அது தோன்றிய காலமாகக் கொள்ளலாம். அந்தப் போர் யந்திரத் தொழிலை மிகவும் ஊக்குவித்தது; இயற்கை வளங்களின் லாபகரமான உபயோகத்தை துரிதப்படுத்திற்று; பெருவாரியான தொழில் உற்பத்தி விருத்தியாதல், சேமிப்பு பாங்குகளின் வளர்ச்சி, அயல்நாட்டு வியாபாரத்தின் விஸ்தாரம், எல்லாம் விறுவிறுப்படைந்தன. புதிய "தொழில் தலைவர்களும்" "மூலதன முதலாளிகளும்" முன்னுக்கு வந்தனர். ரெயில் பாதை அமைப்பும், தந்திக் கம்பி அமைப்பும் துரிதப்பட்டன; 'ரெயில் பாதை யுகம்' ஆரம்பமாயிற்று. கடினமான பொருள்கள் தயாரிக்கவும் தேக உழைப்பைக் குறைத்துக் கொள்ளவும் யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வந்தன; அவை விவசாயத்திலும் பெருவாரியாக உபயோகிக்கப்பட்டன. விவசாயம் நடத்தவும் மாடுகள் வளர்க்கவும் பரந்த மைதானங்கள் கிடைத்தன; விளைபொருள்களை விற்கப் புது இடங்கள் கிடைத்தன; விவசாயப் புரட்சியே ஏற்பட்டது; கூடவே விவசாயப் பிரச்னைகளும் பிறந்தன. போர் நகர அபிவிருத்திக்கு அனுகூலமாக இருந்தது; புது உலகத்திற்குப் பிழைப்புக்காக வரும் லக்ஷக் கணக்கானவர்களுக்கு வேலை கிடைத்துவந்தது. தெற்கே தோல்வியின் காரணமாகப் பெரிய பண்ணையார்கள் திக்கற்றுப் போனார்கள்; நீக்ரோக்கள் விடுதலை பெற்றனர்; தோட்டவரவு செலவு நிலை புது உருவம் பெற்றது; ஒரு புது நடத்தர வகுப்பு முன்னணிக்கு வந்தது; பிறக்கவிருக்கும் புதிய தென்னாட்டுக்கு அஸ்திவாரம் போடப்பட்டது. வடக்கே, பணத்தை லாபகரமாக முதலீடு செய்யவும், துணிந்த வியாபாரங்களில் இறங்கவும், புதிய வாய்ப்புக்கள் கிடைத்தன; யுத்தகாலக் கோடீசுவரர்கள் உண்டானார்கள்; தொழில் அபிவிருத்தி, பண நடமாட்டம் முதலியன பெரு நகரங்களில் திரள்வதற்கான காரியக்கிரமம்

துரிதமடைந்தது; தென் பிரதேசமும் மேற்குப் பிரதேசமும் வடகிழக்கு ராஜ்யங்களுக்குப் பணிந்து அவற்றின் தேவைக்குத் தக்கபடி வளரவேண்டிவந்தது; பழைய சமூக ஜனங்கள் போய் புதிய இனங்கள் உண்டாயின.

போர் முடிவான ஒரு தலைமுறை காலத்திற்குள் தற்கால சமூக நிலையும் பொருளாதார நிலையும் உருவெடுத்தன. யாவர் கவனத்தையும் கவர்ந்தது வளர்ச்சி, பெருக்கம்—நில விஸ்தீர்ணம், ஜனத்தொகை, ஐசுவரியம், ஆற்றல், சமூகப் பிரச்னைகள், பொருளாதார பக்குவம்—எல்லாம் பன்மடங்கு விருத்தியடைந்தன. தேசத்தின் அரசியல் நிர்வாகப்பிரிவுகள் இறுதி ரூபத்தில் தீர்மானிக்கப்பட்டன; ஒரு டஜன் புதிய ஸ்டேட்டுகள் யூனியனில் சேர்த்துக்கொள்ளப்பட்டன; ஒரு அமெரிக்க சாம்ராஜ்யம் நிறுவப்பெற்றது. நாற்பது வருஷ காலத்தில் ஜனத்தொகை 31 மிலியனிலிருந்து 76 மிலியன் ஆயிற்று; வேலை கொடுத்துச் சோறுபோடத் தயாராயிருக்கும் "தெய்வ அனுக்ரகம் பெற்ற நாட்டில்" 15 மிலியன் ஏழை உழைப்பாளிகள் குடியிறங்கினர். (தென் ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் இருந்து வருவோரின் எண்ணிக்கை விகிதம் அதிகரித்துக் கொண்டே இருந்தது); நியூயார்க், ஷிகாகோ, பிட்ஸ்பர்க், க்ளீவ்லண்ட், டெட்ராயிட் போன்ற நகரங்கள் இரு மடங்காகவும் நான்கு மடங்காகவும் பெருகின. இந்தியர்கள் அவர்களுடைய பழைய வாசப் பிரதேசங்களிலிருந்து அவர்களுக்காக ஒதுக்கப்பட்டப் பிரத்தியேக இடங்களுக்குப் பலவந்தமாக அனுப்பப்பட்டனர்; சுரங்கப்பிரதேசங்களும், மாட்டு வளர்ப்புப் பிரதேசங்களும், வளர்ச்சியும் வீழ்ச்சியும் அனுபவித்தன; மேற்கே வாசஸ்தலங்களும் தோட்டங்களும் உண்டாயின; நூற்றாண்டு முடிவதற்குள் 'எல்லைப் பிரதேசம்' என்னும் சொல் செலாவணியற்றுப் போயிற்று. பெரிய இரும்புக்கனிகள், தாமிரக்கனிகள், எண்ணெய் ஊற்றுக்கள் முதலியன பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன; அவற்றிலிருந்து பெரிய தொழில்கள் பிறந்தன; சிறு வியாபாரங்கள் பெரிதாயின; புதுப் பொருளாதார முறையில் கூட்டுக் கம்பெனிகளும், இதர கம்பெனிகளை அடக்கியாளும் கம்பெனிகளும் மார்க்கெட்டைத் தனி உரிமையுடன்—சுயநலமாக—ஆளுவதற்காக டிரஸ்டுகளும் உண்டாயின. மார்கன் குடும்பத்தாரின் பாங்கு போன்ற பெரிய பாங்குகள் தேசத்தின் பொருளாதார நிலையை ஆக்கவும் அழிக்கவும் சக்தி பெற்றன. வலைவிரித்தாற் போன்ற ரெயில் பாதைகளின் நீளம் 30,000 மைலிலிருந்து சுமார் இரண்டு லக்ஷம் மைல் ஆகிவிட்டது; உத்தேசித்த எல்லையை எட்டக் கொஞ்சம்தான் பாக்கி இருந்தது; உலகத்தில் ஒரு நாட்டிலும் அவ்வளவு பெரிய ரெயில்பாதை அமைப்புக் கிடையாது. போருக்கு முன் தொழிலாளிக்கு க்ஷேம நிறுவனங்கள் சொல்

பமாகவும் செயல் சக்தி குறைந்தும் இருந்தன; இப்பொழுது அவை எண்ணிக்கையிலும் ஆற்றலிலும் பெருகி நாட்டின் பொருள் நிலையில் உறுதியான இடம் பெற்றன; சிறியவையாகவும் மூலைக்கொன்றுகவும் இருந்த தொழிலாளி-முதலாளிச் சச்சரவுகள் இப்பொழுது வலுவான அமைப்புடன் பயங்கர ரூபம் பெற்றன. எங்கோ இருந்த ஒரு சிறு குடியரசு நாடு இப்பொழுது உலக வல்லரசுகளில் ஒன்றுயிற்று. அது கரீபியன் கடலிலும் பசிஃபிக் சமுத்திரத்திலும் விஸ்தரித்தது; புது விற்பனை ஸ்தலங்களைத் தேடும் அதன் தொழில் முதலாளிகளும் லாபமான முதலீட்டை ஆவலுடன் நாடும் பாங்கு முதலாளிகளும் பொருளாதார சாம்ராஜ்யத்திற்கான புதுப் புதுத் தொழில் முறைகளைக் கண்டுபிடித்தார்கள். லிங்கன், லீ காலத்துக் கிராமாந்தர தேசம் வெகு விரைவாக மாக்கின்லி; ரூஸ்வெல்ட் காலத்திற்குள் நகரவாசத் தொழில் சாம்ராஜ்யமாக மாறிற்று; இவ்வளவு வேகமான, அல்லது புரட்சிகரமான மாறுதல்கள் வேறு எந்தத் தலைமுறை காலத்திலும் அமெரிக்கர் பார்த்ததில்லை.

சிக்கலான புதுப் பிரச்னைகள் கிளம்பி அமெரிக்கரைக் சூழப்பின; அவற்றைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு அனுபவம் போதாது; நிதானமாகச் சிந்திக்க அவர்களுக்கு அவகாசமும் கிடையாது. அவற்றுள் உடனடியாகக் கவனிக்கவேண்டியவை: ஐசுவரியப் பங்கீடு; அளவுகடந்த முதலீட்டுத் தொகைகளை ஒழுங்காகப் பயன்படுத்துதல்; ஏற்றத் தாழ்வான பொருள் நிலையில் சமபாவமான அரசியல் வாழ்க்கை அமைத்தல்; பெருவாரியாக வேலையில்லாமையும் தொழிலாளித் துன்பங்களும்; நகரங்களில் ஜன நெருக்கடியும், அயல் நாட்டாருக்குப் பிறக்கும் குழந்தைகளை பேதமின்றி சேர்த்துக் கொள்ளுதலும்; வயல்களின் வரும்படி குறைதலும் குத்தகைத் தொகை உயர்தலும்; இயற்கை வளங்களைக் கவனக்குறைவால் வீணாக்காமல் நீடித்த காலம் பயன்படுத்துதல்; கடல்கடந்த அமெரிக்க ஸ்தலங்களின் ஆட்சிப் பிரச்னை; உலக அரசியல் பிரச்னை; சிறு வாரியாக ஆரம்பித்த அரசியல் நிறுவனங்களைக் கைத்தொழில் அடிப்படை கொண்ட பெரிய தேசத்திற்கு உதவும்படி மாற்றியமைத்தல்.

தென் பகுதியின் மாற்றம்: போரும் தோல்வியும் தென்னாட்டிற்கு மகாப் பிரளயமாக முடிந்தன. அலுத்து வீடு திரும்பிய சிப்பாய்கள் நாடெங்கும் கண்ட பேராழிவு அமெரிக்கச் சரித்திரத்தில் இணையற்றது. வர்ஜீனியா, டென்னெஸி ராஜ்யங்களின் பெரும் பகுதிகள் போரிடும் சேனைகளால் பாழாக்கப்பட்டிருந்தன. ஜ்யார்ஜியாவிலும், தென் கரோலினாவிலும், ஷெர்மன் அறுபது மைல் அகலத்திற்கு நெடுந்தூரம் அறுவடையான வயல் போலாக்கியிருந்தான்; வர்ஜீனியாப் பள்ளத்தாக்கும் துப்பரவாகத் துடைத்து வைக்கப்பட்டிருந்தது; அலபாமா,

மிஸிஸிபி, ஆர்கன்ஸாஸின் வட பகுதிகள் நாசமாகியிருந்தன. ரிச்மண்ட், சார்ல்ஸ்டன், கொலம்பியா, அட்லாண்டா போன்ற கம்பீரமான பட்டணங்கள் குண்டு வீச்சால் தகர்ந்து தீக்கிரையாகியே இருந்தன. பாலங்கள் உடைந்து கிடந்தன; சாலைகள் கவனிப்பில்லாமல் இருந்தன; நூற்றுக் கணக்கான மைல் தூரத்திற்கு ரயில் பாதைகள் விலக்கப்பட்டிருந்தன; ரயில் வண்டிகள் அழிந்திருந்தன; துறைமுக சாதனங்கள் உளுத்துக் கிடந்தன. சாதாரண வாழ்க்கை படுத்துப்போயிருந்தது. தென்னாட்டுக் காகிதப் பணத்திற்கு மதிப்பில்லை; சேமித்து வைக்கப்பட்ட நாணய நகல் அல்லது யூனியன் சேனை தெற்கே கொண்டுவந்த பணந்தான் செலாவணியில் இருந்தது. பாங்குகள் கதவு மூடிவிட்டன; இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் திவாலா ஆகிவிட்டன; தொழில்களும் வியாபாரமும் அழிந்திருந்தன; கிடங்குகளில் இருந்த பருத்தி எரிக்கப்பட்டது, அல்லது ராணுவ அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது.

ஸிவில் அரசாங்கம் அநேகமாக மறைந்துபோயிற்று; வரி வசூல் செய்யவோ, பள்ளிக்கூடங்கள் நடத்தவோ, சாலை மராமத்து செய்யவோ, கிராமாந்தரக் கொள்ளைக்காரர்களைப் பிடித்துத் தண்டிக்கவோ சரியான அதிகாரிகள் கிடையாது. சர்ச்சுகள் தீயில் வெந்துபோயின; மதாபிமானிகள் சிதறிப் போனார்கள்; கல்லூரி மாணியங்கள் நஷ்டமாயின; சோதனைச் சாலைகளும் புஸ்தக சாலைகளும் அழிந்தன; பொதுப் பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் மூடப்பட்டிருந்தன.

விவசாயமும் மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருந்தது—ஆயிரக்கணக்கான தோட்டங்கள் நாதியற்றிருந்தன; வேலிகள் அழிந்து, எங்கும் களைப் பூண்டுகள் நிறைந்து, வாய்க்கால்களின் அணைக்கட்டுகளும் நதிகளின் கரை மேடுகளும் தகர்ந்து, குதிரைகளும் கால்நடைகளும் இறந்து, அல்லது திருடப்பட்டு, கலப்பைகள் துருப்பிடித்து, பயிர்த்தொழில் முறை சீர் அழிந்து, விவசாயம் கடும் சாபத்திற்குள்ளானதுபோல இருந்தது. வயல்களில் உப்பு நீர் மண்டிக்கிடந்ததால் கரோலினா நெல் உற்பத்தி எக்காலத்திற்கும் நாசமாயிற்று; லூஸியானாவின் சர்க்கரை உற்பத்தித் தொழிலும் அழிந்திருந்தது. அதேபோல புகையிலை பருத்தி உற்பத்தியும் குறைந்தன. இக்காரணங்களால் 1865 ஆம் ஆண்டுப் பனிக்காலத்தில் தெற்கே பல பெரிய பகுதிகளில் பஞ்சம் ஏற்பட இருந்தது; ஃபெடரல் சேனை அல்லது புதிதாய் அமைந்த "விடுவிக்கப்பட்டோரின் காரியாலயம்" வெள்ளையருக்கும் கறுப்பு மனிதருக்கும் ஆதரவளித்தது. "இன்று, சாகாமலிருப்பதே வாழ்க்கை எனலாம்" என்று தென் கவி ஒருவன் பாடியது உண்மையே.

யுத்தத்தின் துன்பங்களும் பொறுப்புக்களும் போதா தென்று புனரமைப்பும் அதே சங்கடங்களை விளைவித்தன என லாம். தென்னுட்டின் கடன் போருடன் கரைந்தது; கூடவே, தேச அபிமானமுள்ள தென்னுட்டார் தம் அரசாங்கத்திற்கு அளித்த கடன் உதவியும் போய்விட்டது; ஆனால் முழு தேசக் கடனின் ஒரு பங்கும், தேச அரசாங்கத்தின் வருடாந்தர செல வில் ஒரு பங்கும் தென்னாடு ஏற்கவேண்டி வந்தது; அதோடு கூட பருத்தி வேளாண்மை மேல் கனத்த சுங்க வரியும் விதிக்கப் பட்டது. இதை அவ்வளவாக அநியாயம் அல்லது மிகையானது என்று சொல்ல முடியாவிட்டாலும், ராஜ்ய அரசாங்க, ஸ்தல அரசாங்கங்களின் வரிகளையும் கடன் வசூல்களையும் முற்றிலும் ஒப்புக்கொள்வதற்கில்லை. அரசியல் வேடர்களின் ஆட்சிகாலத் தில் கற்பனைக் கடங்காத வீண் செலவுகளில் பல மிலியன் டாலர்கள் அழிக்கப்பட்டன. சபை அங்கத்தினர்களுக்கு வாச னைத் தைலங்கள், உஸ்கி, எச்சில் உமிழ்வதற்குப் பொன் தகடு போட்ட கிண்ணங்கள்; நேர் முறையாகப் பல மிலியன்கள் கொள்ளையடிக்கப்பட்டன: பல மிலியன்கள் டாலருக்குப் பத்து சென்டு வட்டி கட்டாத, சந்தேகத்திற்கிடமான, ரெயில் பாதை அமைப்புகளிலும் வியாபார யத்தனங்களிலும் நிச்சித் தையாகக் கொட்டப்பட்டன. சில பகுதிகளின் ஐசுவரியம் அரைப் பங்குக்கும் குறைவாக கணித்துவிட்டது; ஆனால் வரி களும் கடன்களுமோ தயை தாட்சண்யமின்றிப் பெருகின. வேறு வழி தெரியாத நூற்றுக் கணக்கான குடியானவர்கள் தங்கள் வயல்களை வரி வசூலிப்பவன் கையில் ஒப்புவித்துவிட்டு, தப்பித்தோம், பிழைத்தோம் என்று சொல்லி வெளியேறினர்.

அப்படியிருந்தும், தோல்வியடைந்த தென் தேசம் அதி சயிக்கத்தக்க ஆற்றலுடன் புனர் அமைப்புக்கான கடினமான காரியத்தை ஆரம்பித்தது. பலநகரங்கள் தரைமட்டப் பாழி லிருந்து கிளம்பின. ரெயில் பாதைகள் மறுபடி போடப்பட் டன; தென் மேற்கே புதுச் சாலைகள் அமைக்கப்பட்டன; பாலங் கள், அணைக்கட்டுகள், நதிக்கரை மேடுகள் முதலியன செப்ப னிடப்பட்டன. நார்ஃபக், சார்ல்ஸ்டன், மோபீல் ஆகிய துறைமுகங்களில் கப்பல்கள் மறுபடி தோன்றின; சிறு வியா பார ஸ்தலங்களும் காலக்ரமத்தில் பாங்குகளும் இன்ஷியூ ரென்ஸ் கம்பெனிகளும் தம்தம் அலுவல்களை ஆரம்பித்தன.

எப்படியோ பழைய தொழிற்சாலைகள் மறுபடி திறக்கப் பட்டன; புதுத் தொழில்களுக்கு முதலீடு சம்பாதிக்கப்பட் டது—பல சமயங்களில் வட்டி விகிதம் நஷ்டமுண்டாக்கக்கூடிய தாக இருந்தது. பைன் மரங்கள் அதிகமாக இருந்த இடங்களில் பலகை உத்திரம் முதலியன அறுக்கும் ஆலைகள் கிளம்பி விருத்தி யடைந்தன. வட கரோலினுவின் புகையிலைத் தொழில் ஸ்தா பிதமாயிற்று. உள்ளூர்ச் செலவுக்காக மாவரைக்கும் ஆலைகள்

உண்டாயின. பருத்திச் சாகுபடிக்கு மிக அவசியமான ரசாயன எருத் தொழில் மறுபடி நிறுவப்பட்டது. டெனெஸியிலும், வட அலபாமாவிலும் வளம் பெற்ற நிலக்கரி, இரும்புக்கனிகள் கண்டுபிடிக்கப்பட்டன; 1870-ல் பருத்திச் சாகுபடி ஸ்தலமாக இருந்த பர்மிங்காம் 20 ஆண்டுகளுக்குள் 50,000 ஜனங்கள் கொண்ட பெரிய பட்டணமாகவும், வேகமாய் விருத்தியடை யும் இரும்புத் தொழிலின் கேந்திர ஸ்தானமாகவும், ஆறு ரெயில் பாதைகளின் சந்திப்பு இடமாகவும் வளர்ந்துவிட்டது. 1890—க்குள் தேசத்தில் உற்பத்தியாகும் மொத்த இரும்புப் பாளத்தில் ஐந்தில் ஒரு பங்கு தக்ஷிண தேசத்தில் தயாராயிற்று. சாட்டனூகா, ட்ர்ஹம், லின்ஸ்டன், ஸேலெம், டான்வில் போன்ற பட்டணங்களிலும் கைத்தொழில்கள் வளர்ந்தன.

1846 முதல் தென் கடற்கரை யோரத்தில் நெசவுத் தொழில் நன்கு வளர்ந்திருந்தது. யுத்தத்தின்போது அதுவும் பூராவும் நசித்துப் போயிருந்தது. 1870-80 ஆகிய இடைக்காலத்தில் அது மறுபடி தலைதூக்க முயன்றது; குறைவானக் கூலி விகிதம், அண்மையில் நீர் சக்தி கிடைத்தல், கச்சாப் பொருள்களும் சுல பமாகக் கிடைத்தல், ஆகிய வசதிகள் உதவியாக நின்றன. வட-தென் கரோலினுவிலும் ஜ்யார்ஜிம் உயர்வான இடங் களில் அநேகமாய் உள்ளூர் முதலீட்டைக் கொண்டே பல சிறு ஆலைகள் கிளம்பின. அப்பகுதியிலிருந்து போட்டி ஏற்படக் கூடும் என்று நியூ இங்கிலாந்து முதலாளிகள் சங்கடப்பட ஆரம் பித்து விட்டார்கள். இத்தனை விருத்திகளோடுகூட, 1840-விரு ந்தே தெற்கே தொழில் துன்பங்களும் ஆரம்பித்துப் பின்வரு ஷங்களில் நிலை பயங்கர ரூபம் பெற்றது.

பழைய 'ஜமீன்தார்—குடியானவ'க் குடும்ப உறவு தக்ஷிண தேச நெசவுத் தொழிலிலும் தென்பட்டது. நிரந்தரமான வேலை யுடன் பார்ப்பதற்கு நல்ல கூலிபோலத் தோன்றியதால் தரித் திர நிலை எட்டிய தோட்டங்களிலிருந்து குடும்பம் குடும்பமாக அண்மையிலுள்ள ஆலை ஊருக்கு ஜனங்கள் சென்றார்கள்; அவர் கள்கூடவே தோட்டப் பாட்டாளி மனப்பான்மையும் ஒட்டிக் கொண்டு சென்றது எனலாம்! 12 மணி, 14 மணி நேரம் வேலை செய்வது நியாயந்தான் என்றும், ஆண் பெண் பாலார் அடங்க லாக முழுக் குடும்பத்திற்கு வேலை கிடைக்கும் என்றும், தாங் களே தீர்மானம் செய்துகொண்டார்கள். ஏதோ ஒரு பட்ட ணத்தின் எல்லையில் முளைத்து ஒழுங்கின்றிப் பரவிய இந்த ஆலைக் கிராமங்கள் தொழிற்சாலை நிர்மாணித்த ஒரு சில முத லாளிகளின் சொந்த சொத்து; அவர்கள் இட்டதே சட்டம். கம் பெனியின் வீடுகளில் உழைப்பாளிகள் வசித்தார்கள், கம்பெனி யின் பள்ளிகளையும் கோவில்களையும் உபயோகித்தார்கள், கம் பெனியின் கடைகளிலிருந்து உணவுப்பொருள்களும் துணிமணி யும் வாங்கினார்கள், கம்பெனி டாக்டர்களால் பிரசவங்கள்

கவனிக்கப்பட்டன, கம்பெனிப்புரோகிதனின் ஆசீர்வாதத்துடன் கம்பெனிக் கல்லறையில் அடக்கமாயினர். அது ஒரு புதுவித மான முதலாளி - பாட்டாளி இணைப்பு; அடிநாட்களில் அது திருப்திகரமாகவே இருந்தது; ஆனால் பிற்காலச் சச்சரவுகளின் வித்து அதில் அடங்கியிருந்தது.

இரும்பு, அறுத்த மரம், புகையிலை, நெசவு முதலான தொழில்கள் வளர்ந்தபோதிலும், தக்ஷிண தேசத்தில் கிராமாந்தர, விவசாய வாழ்க்கையே வளர்ந்தது; 1900-க்கு முன் ஒரு லக்ஷம் ஜனத்தொகை கொண்ட பட்டணம் நியூ ஆர்லீன்ஸ் ஒன்றுதான். அதனுடைய கைத்தொழில்களிலும் நெருங்கிய விவசாய அடிப்படை கொண்டவை: புகையிலைத் தயாரிப்பும் நெசவு உற்பத்தியும் அவைமட்டுக்கும் பெரிய அளவில் இருந்தாலும் மொத்த வருமானத்தில் கைத்தொழில் பொருள் வருமானமும் சிறு பகுதியே. பெரும்பாலோர் தம் தோட்டங்களிலேயே வசித்து, விற்பனைக்கான முக்கியப் பொருளே விளைவித்தனர். ஆனால் விவசாய காரியக்கிரமமும் போரின்போது சிதைந்து போயிற்று; அடிமையொழிப்பு அதை மேலும் பாதித்தது. அதுவும் மாறிய நிலைக்குத் தக்கப் புது முறை ஏற்கவேண்டியிருந்தது.

யுத்தத்தினாலும் மறு அமைப்பினாலும் மிக அதிகமாக நஷ்டப்பட்டவர்கள் பெரிய தோட்ட முதலாளிகள். நீக்ரோ என்ற முதலீடு நஷ்டமாகி, கூலி வேலைக் குடும்பங்கள் தொழிற்சாலைகளால் கவரப்பட்டு, வரிகளும் மேல் செலவுகளும் அதிகமாகி, அவர்கள் செயலற்றுப்போனதால் பெரும்பாலோர் தோட்டங்களைச் சிறு துண்டுகளாக விற்றார்கள், அல்லது வரி வசூல் அதிகாரிகளால் அவை ஏலத்தில் விற்கப்பட்டன. அதன் விளைவாக, நில உடைமையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. நல்ல நிலம் ஏக்கர் மூன்று நான்கு டாலர் வீதம் கிடைத்ததால், ஆயிரக்கணக்கான சிறு குடியானவர்கள் தம் பூமியைப் பெருக்கிக் கொண்டார்கள்; பதினாயிரக் கணக்கில் ஏழை வெள்ளையர்கள், விடுவிக்கப்பட்ட நீக்ரோக்கள், யந்திர ஆசாரிகள், கடைக்காரர்கள் முதலியோர் தம் நிலப்பசியைத் தீர்த்துக்கொண்டார்கள். தோட்டங்களின் சராசரிப் பரப்பு இருபது வருஷத்தில் 335 ஏக்கரிலிருந்து 153 ஆயிற்று. அதேசமயத்தில் ஆர்கன்ஸாஸிலும், டெக்ஸாஸிலும் வளமான புது நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன; ஓக்லஹாமாவும் குடியிறங்குவோரை வரவேற்றது. சிறிது காலம் சிம்மாசனத்திலிருந்து வீழ்த்தப்பட்டிருந்த மாட்சிமை தங்கிய பருத்தி மகாராஜா மறுபடி அரியணையிலமர்ந்து தம் சாம்ராஜ்யத்தை மேலும் வளர்க்கலானார்!

அடிமை முறை போய்விட்டதால் பதினாலுக்கு இன்னொரு பாட்டாளித் திட்டம் நிறுவுவது மிக அவசியமாயிற்று. அவ்வப்போது கூலியாகக் கொடுக்கத் தோட்ட முதலாளிகளிடம்

ரொக்கம் கிடையாது; தோட்டத்தைக் குத்தகைக்கு எடுக்க நீக்ரோக்களிடம் சொத்து கிடையாது. தேவை ஒரு மூன்றாவது வழிக்குத் தாயாயிற்று. போர் முடிவானதும், முதலாளிகள் தம் மாஜி அடிமைகளைக் கூப்பிட்டு சுவாதீனநிலையில் முன்போலவே தோட்டத்தில் தங்கி உழைக்கும்படி யோசனை கூறினார்கள். கூலி கொடுப்பது இயலாத காரியமாகையால், அறுவடையானதும் அவர்களுக்கு ஒரு பங்கு கிடைக்கும். இதுதான் வாரம் அல்லது மாசூல் பங்கு முறையின் ஆரம்பம். காலக்கிரமத்தில் அது ஒழுங்கான உருப்பெற்றது. முதலாளிகள் உழைப்பாளிகளுக்கு வசிக்க குடிசை, கருவிகள், எரு, கோவேறுக் கழுதை முதலியன கொடுத்து, அறுவடையாகும் வரை சாப்பாட்டிற்குக் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார்கள். பாட்டாளி தன் தேக சக்தியைக் கொடுத்து மூன்றில் ஒருபங்கு பெற்றான். அது நல்ல முறையாகவே தோன்றிற்று; அது சௌகர்யமாக இருந்ததால் வெள்ளையர்களும் அதே நிபந்தனைகளுடன் தோட்ட வேலை ஏற்றுக்கொண்டார்கள்.

நெருக்கடியான நிலையில் அது சமய சஞ்சீவியாக உதவிற் றென்றாலும் குடிவாரமுறையில் தீமைகள் பல இருந்தன. விற்பனைப் பயிர்களையே முழுதும் நம்பிய சிறு சம்சாரிகள் அநேகமாய் முதலாளிகளுக்குக் கடன் பட்டே இருந்ததால் தோட்ட முதலாளிக்கோ வியாபாரிக்கோ அடமானம் வைக்கப்பட்ட ஜங்கம சொத்துக்கள்—ஆடுமாடுகள்—போல அவர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் பெற்றுக் கொண்ட பொருள்களுக்கு ஈடாக வைக்க அவர்களிடம் சொத்து இல்லாததால், வளரும் பயிரை அவர்கள் ஈடுகாட்ட வேண்டிவந்தது; அதிலிருந்துதான் இழிவு படுத்தி ஊக்கத்தைக் கொல்லும் "பயிர்-ஒப்படைப்பு" முறை உண்டாயிற்று. தலைதூக்க முடியாத இந்த நிலையில், சம்சாரி தன் வேலையில் சிரத்தை யிழந்து சுறுசுறுப்பாகவும் விஞ்ஞான முறையிலும் சாகுபடி செய்யாமல் இருப்பது இயல்பே; ஆனால் அவன் நிரந்தரமாகக் கடன் கொடுத்தவர் கையில் சிக்கிக் கொண்டு மனக்கசப்பை வளர்க்கிறான். நிச்சயமாக லாபமளிக்கக் கூடிய ஒரு பயிர் பருத்திதான் என்ற எண்ணம் பரவியதால் கடன் கொடுத்தவர் பருத்தி வேளாண்மை மாத்திரமே செய்யப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள்; பயிர்களை மாற்றுவது முடியாமற் போயிற்று; பூமியைக் கெடுக்கும் 'ஒரு-பயிர் முறை' தென்னாட்டின் சாபம் போல ஆயிற்று. ஒரு தலைமுறை காலத்திற்குள் பரவலான நில விநியோகமும் திடமான சுவாதீனக்குடியானவ அமைப்பும் ஒரு பழைய சுகக்கனவு போல மறைந்தன; தெற்கே சில பகுதிகளில் 70, 80 சதவீத சம்சாரிகள் சுவாதீனமற்றிருந்தார்கள்; ஒவ்வொரு தோட்டத்தின் மேலும் சராசரி ஒரு அடமான பந்தமாவது இருந்தது. 1860-ஐக்காட்டிலும் 1900-ல் தக்ஷிணதேசம் பற்றுக்குறை நிலையில் இருந்தது.

பல பகுதிகளில் நில வளம் குறைந்து கொண்டே வந்தது. பிற் காலத்தில் விவசாயக்கல்வியும் ஆரோக்கிய நிலையும் சீரடைந்த பிறகுதான் தக்ஷிணக் கிராம வாழ்க்கை செம்மையாக ஆரம் பித்தது.

சட்ட ரீதியாகப் பூர்ண சுதந்திரம் கிடைத்த பிறகும் உண்மையான விடுதலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்பதை நீக்ரோக்கள் அனுபவத்தால் அறிந்தார்கள். காங்கிரஸ் அவர் களுடைய பொருளாதார க்ஷேமத்திற்காக ஒன்றும் செய்யாமல் அரசியல் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் பயனற்ற காரியத் தில் தன் முயற்சிகளை வீணாக்கிற்று. ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு அவர்கள் போரில் அடிபட்டுச்சரணாகதி அடைந்தவர்கள் போலத் தான் இருந்தார்கள். ஆயிரக்கணக்கானவர் வெளியேறி ஜில்லா ஜில்லாவாக உத்தேச மின்றி அலைந்தார்கள்; அடிமைகாலக் கொடுமைகளால் எந்த ஒரு வருஷத்தில்சிதைந்த குடும்பங்களைக் காட்டிலும் அதிகமாக, விடுதலை கிடைத்த முதல் வருஷத்தில் சிதைந்தன. ஆயிரக் கணக்கானவர்கள் நோயாலோ உணவின் மையாலோ மரித்தார்கள், அல்லது குரூரமாகக் கொல்லப்பட் டார்கள். கடைசியாகச்சற்று அதிகப் பொறுப்புள்ளதென் தேசத் தாரின் முயற்சிகளாலும், ஃபெடரல் அதிகாரிகளின் ஒத்துழைப் பாலும் ஒழுங்கு முறை நிறுவப்பட்டது; தங்களுக்கு வாக்களிக் கப்பட்டிருப்பதாக அவர்கள் நினைத்த "40 ஏக்கரும் ஒரு கோவே றுக் கழுதையும்" கிடைக்காது என்று தெரிந்தவுடன் தாம் நன் கறிந்த ஒரே ஒரு காரியமாகிய விவசாயத்தைச்செய்ய அவர்கள் தீர்மானித்தார்கள்.

சற்றுத் துணிந்தவர்கள் வடக்கேயோ, தொழில் வளரும் தென் நகரங்களுக்கோ சென்றார்கள்; ஆனால் பெரும்பாலானவர் குடி வாரம் செய்து பிழைத்தார்கள்; அந்நிலையில், அவர்கள் அடிமைகள் இல்லை என்ற பாவத்தைத் தவிர, வாழ்க்கைத்தரம் முன்போலவே இருந்தது—வெள்ளையர்களின் தோட்டங்களில் உழுது, விதை நட்டு, பருத்தி பறித்தார்கள், அதே பாதிப்பா ழான குடில்களில் வசித்தார்கள், அதே சோளமாவு, கோஸ் கீரை, உப்பிலிட்ட பன்றியிறைச்சி தின்றார்கள், அதே கிழிந்த, அழுக்கடைந்த கந்தல்களை அணிந்தார்கள்—சிறிதும் முன்னேற வில்லை. தேர்தல்களில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை, மக் களை வெள்ளையரின் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பவில்லை, தாமுண்டு தம் சிறு சமுதாயமுண்டு என்று அடங்கியிருந்தனர்.

இது இவ்வாறிருக்க, மனதிற்கு ஆறுதல் அளிக்கும் அபி விருத்திகளில்ஒன்றுகத்தீரமான நடுத்தர வகுப்புப்பிறந்து வளர்ந் ததைக் குறிப்பிட வேண்டும். சுவாதீனமான சிறு குடியானவர் கள், கடைக்காரர்கள், தரகு வேலை ஒப்பந்த வேலை ஆகிய தொழில்கள்செய்பவர்கள், வியாபாரிகள், பாங்கு முதலாளிகள், தொழில் முதலாளிகள், டாக்டர், எஞ்ஜினீர் போன்ற அறிவு

-அலுவலாளர்கள் முதலியோர் அதில் அடங்கியிருந்தனர். துர் சொப்பனம் போன்ற அடிமை முறையிலிருந்து அவர்கள் தப் பியவர்கள்; காலக்கிரமத்தில் அவர்கள் தோல்வி என்ற மன நோயிலிருந்தும் சொஸ்தமடைந்தார்கள். நிலவின் குளுமையும் மலரின் மயக்கும் மணமும்நிறைந்த கற்பனையான தென்னுட்டை மறந்து நனவு உலகத்தில் வசிக்க அவர்கள் கற்றார்கள்; கெட் டிஸ்பர்க் தோல்வியையும், நிலையற்ற வாழ்வின் துன்பங்களையும் வெறுத்து மனம் கலங்காமல், அந்த வெற்றியும் நம்—அமெரிக்க ரின்—வெற்றியே என்று கருதத் தொடங்கினார்கள். தேசப்பொரு ளாதார நிலையுடன் தென்னுட்டைப் பிணைக்கவும், முறிந்த சமு தாய ஸ்தாபனங்களை மறுபடி நிலைநிறுத்தவும், அவர்கள் ஊக்க மாய் உழைத்தார்கள். கல்லூரிகள் மறுபடி துவங்கின; வர்ஜீனி யாவில் வரவு செலவு ஈடாகாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் 'வாஷிங்க்டன்' கல்லூரியின் தலைமைப்பதவியை ராபர்ட் ஈ. லீ ஏற்றுத் தென் புறம் முழுதுக்கும் ஒரு சிறந்த வழி காட்டினார். ஏற்றத் தாழ்வற்ற கல்வித் திட்டங்களை ஸ்டேட்டுகள் நிறுவின; ஆரம்ப வகுப்புகளில் அனைவருக்கும் இலவசக்கல்வி யளிப்பதாக (ஏட்டளவிலாவது) தீர்மானிக்கப்பட்டது. சர்ச்சுகள் மறுபடி கட்டப்பட்டன; நீக்ரோ பக்த கோஷ்டிகள் வளர்ந்ததால் தொழுவோரின் எண்ணிக்கை முன்னைக்காட்டிலும் அதிகமா யிற்று. சமுதாய சட்ட நிறுவனத்திலும், ஏழைகளுக்கும் அசக் தர்களுக்கும் உதவியளித்தல், தொழில் சட்டத்திற்கான சிறு முயற்சிகள் போன்ற முன்னேற்றங்கள் தென்பட்டன. பொரு ளாதார, கலாசார, அரசியல் துறைகளில் தக்ஷிணம் மறுபடி அமெரிக்க தேசிய அங்கியின் நூலிழைகளில் இழைந்தது.

வட வாழ்க்கையில் புரட்சி:—தக்ஷிண தேசம் மிகவும் சிரமப் பட்டுப் புது முறை வாழ்வுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் உத்தர தேசம் சிறப்பான நிலைமையை மேலும் சிறப்பாக்கிக் கொண்டிருந்தது. வேறு எந்த இனத்திற்குக் கிடைத்ததைக் காட்டிலும் தொழில் தலைவர்களுக்கும் நிதித் தலைவர்களுக்கும் வெற்றியின் லாபங்கள் அதிகமாகக் கிடைத் தன. ஆதியிலிருந்தே, இறக்குமதி வரி விகிதத்தை உயர்த்து வதாகவும், உள் நாட்டில் சீரமைப்புக்கள் செய்வதாகவும், ரெயில் பாதை முதலாளிகளுக்கு நில மானியம் கொடுப்பதாக வும், குடியானவர்களுக்கு இலவச நிலம் கொடுப்பதாகவும் ரிபப் லிகன் கட்சி வாக்களித்திருந்தது. ஸம்டேர் கோட்டைத் தாக்கு தலுக்கு முன்பு, இவற்றுள் கணிசமான எதையும் சட்ட மாக்க முடியவில்லை. தென் ராஜ்யங்கள் பிரிந்துபோன பிறகு காங்கி ரஸ் சபையில் எதிர்ப்பு பாதிக்கக் கூடியதாக இல்லை; முழுக் காரியக் கிரமத்திற்கு சட்டத்தின் ஆதரவு சீக்கிரம் அளிக்கப் போர் உதவிற்று. 1861-ன் "மாரில் டாரிஃப்" எனப்படும் இறக்குமதிவரிச் சட்டம் குறைந்துகொண்டே இருந்த நீர்வை

விகிதத்தை மாற்றி (வெளி நாட்டுப்பொருளை விட அதிக விலை யான உள் நாட்டு உற்பத்திக்குப் பாதுகாப்பு அளிக்கும் அள வுக்கு) உயர்த்திற்று; பிற்கால சட்டங்கள் டாரிஃப் மதில்களை மேலும் உயர்த்தின; போர் முடியும்போது தீர்வைகளின் சரா சரித்தொகை 18 சத விகிதத்திலிருந்து 47 சத விகிதமாகி விட் டது. வட உற்பத்தியாளர்கள் அதேகமாய்த் தகர்க்க முடியாத நிலையில் இருந்தார்கள்; 1913-ல் தான் அரசாங்கம் தீர்வை விகி தத்தைக் கணிசமாகக் குறைப்பது சாத்தியமாயிற்று. வியாபார சம்பந்தமுள்ளவர்களுக்கு மேலும் உற்சாகமளிப்பதற்காக காங் கிரஸ், இரும்பு, நிலக்கரி, கம்பெனியமைப்பு மேல் இருந்த போர்க்கால வரிகளை நீக்கியதோடு வருமான வரியையும் ரத்து செய்தது. ரெயில் பாதை சம்பந்தமான சில சட்டங்களின் மூலம், காங்கிரஸ் முழுக் கண்டத்தைத் தாண்டிச் செல்லும் ரெயில் பாதைகள் அமைப்பவருக்கு 60 மிலியன் டாலருக்கும் அதிகமாக உதவியும் 100 மிலியன் ஏக்கருக்கு அதிகமான பொது நில மானியமும் அளித்தது; ராஜ்யங்களும் ஸ்தல ஸ்தாபனங் களும் கூடத் தாராளமாக உதவி யளித்தன.

இந்த அனுகூல நிலைகளாலும், தீராப்பசியுள்ள ராணுவ இலாக்காவின் தேவைகளாலும், பெருகும் ஜனத்தொகையின் திருப்தியறியா ஆவலாலும் தூண்டப்பட்டு, வடநாட்டு வர்த் தகமும் பொருள் உற்பத்தியும் முன் அனுபவத்தில் வராத அளவு வளர்ந்தது. ராணுவ இலாக்காவின் பல்லாயிரத் தேவை களைப் பூர்த்திசெய்யத் தொழில் முதலாளிகள் ஊக்கமுடன் முன் வந்தனர். பத்து வருஷ காலத்தில் 20,000 மைல் நீளத்திற்கு ரெயில் பாதைகள் போடப்பட்டன; பெரும்பாலும் அவை மேற்கே இருந்தன; அமெரிக்கக் கண்டத்தைக் கடக்கும் (Trans-continental) ரெயில்வண்டிகள் மைதானங்களையும் மலைகளையும் கனவேகத்தில் கடந்தன. நகருக்கு நகர் கோக்கப்பட்ட தந்திக் கம்பிகள் கண்டம் முழுவதும் பரவின; 15 வருஷத்திற்குள் அட்லாண்டிக் சமுத்திரத்திலும் தந்தி 'கேபில்' போடப்பட்ட தால் செய்திகள் மின்னல் வேகத்தில் பறந்தன. ஷிகாகோவி லிருக்கும் 'மாக்கார்மிக்' அறுவடை யந்திரசாலைக்கு நல்ல கிராக்கி இருந்தது; மேற்கு மத்தியநாட்டு விவசாயிகளின் கோரிக்கை வளர்ந்துகொண்டேபோனதால் அவற்றைப் பூர்த்தி செய்ய முடியவில்லை; ஓஹியோஸ்டேட்டிலும் யந்திர தொழிற் சாலைகள் கிளம்பின; நடுநாட்டு எல்லையில் அமர்ந்த தொழில் ஆலயங்கள் முள்வேலிக்கம்பி தயாரித்து மேட்டுப்பூமித் தோட் டங்களுக்கு அனுப்பின. 'மாக்கே' பாதரட்சை தயாரிப்புச்சாலை, ஷிகாகோவிலும் லின்னினுடியிலும் இறைச்சி டப்பாக்கள் தயா ரிக்கும் நிலையங்கள், 'இரட்டை நகர'த்தில் மாவுமில்கள், மில்வாகி, ஸந்த்லூயி பட்டணங்களில் பீர் காய்ச்சும் சாலைகள், பிட்ஸ்பர்க் பிரதேசத்தின் இரும்பு, எஃகு சாலைகள், ஓஹியோ,

பென்ஸில்வேனியாவின் எண்ணெய்ச் சோதனை நிலையங்கள், மேலும் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் இரவும் பகலும் ஓடி மக்களின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய முயன்றன.

போர் முடிந்த பிறகும் தொழில் விறுவிறுப்புக் குறைய வில்லை. முன் எந்த ஐந்தாண்டுக் காலத்தைக் காட்டிலும், போர் முடிவுக்குப் பிந்திய ஐந்தாண்டுகளில் விற்பனைகள் அதிகரித் தன. 1860—1870 காலத்தில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 80 சத வீதமும், உற்பத்தியான பொருள்களின் விலை 100 சத வீதமும் அதிகரித்தன. தொழில்துறைப் புரட்சி செயலற்ற வெறும் பேச்சல்ல, உண்மையான நிகழ்ச்சியே.

தொழில் முதலாளிகளைப்போலவே பாங்கர்களும் முதலீடு செய்த பங்குதாரர்களும் லாபமடைந்தார்கள். 1863—64-ல் விதிக்கப்பட்ட தேசிய பாங்குச் சட்டங்களின்படி காங்கிரஸ் ஜாக்ஸன் கட்சியாருக்குப் பிரியமான சுய ஆதீன பாங்குகளை ஒழித்து, ப்ரைவேட் பாங்கர்களுக்கு அதிக அனுகூலமான ஒரு முறையை ஸ்தாபித்தது. தேச பாங்குகளின் நோட்டுகளுக்கு இடையூறு இல்லாமல் செய்ய, கடுமையான வரிகள் மூலம் ராஜ்ய நோட்டுக்கள் செலாவணியற்றவை ஆக்கப்பட்டன. யுத்த காலத்தில் பல நூறு மிலியன் மதிப்புள்ள நோட்டுகளை ஃபெடரல் அரசாங்கம் வெளியிட்டு, அவற்றிற்கு ஈடாக நாண யம் அளிக்கப்பட மாட்டாது என்று அறிவித்தது; ஆகவே காலக் கிரமத்தில் அவற்றின் மதிப்பு இறங்கிவிட்டது. அவற்றின் பின்புறம் பச்சையாக அச்சிடப்பட்டிருந்ததால் அவற்றிற்குப் "பச்சைக் காகிதங்கள்" என்ற பெயர் பிரபலமாயிற்று. அவற்றை மேலும் அச்சிடுவதில்லை, பெரும் பகுதியை வாபஸ் பெற்று நிறுத்திக்கொள்ளுதல், செலாவணியில் இருப்பவற் றிற்கு நாணய ஈடு அளித்து அவற்றின் மதிப்பை நூறு சென் டுக்கு உயர்த்துதல் என்ற துணிந்த தீர்மானங்களால் காங்கிரஸ் தேசியச் செலாவணியை திடப்படுத்திற்று; ஆனால் கூடவே பணக்குறுக்கம் உண்டாகி கடனாளிகளுக்கு—முக்கியமாக மேற் கத்திக் குடியானவர்களுக்கு—நஷ்டம் உண்டாக்கிற்று.

உத்தேசமாகப் பச்சைக் காகிதங்களும் சர்க்கார் கடன் பாண்டுகளும் வாங்கி வைத்திருந்தவர்கள் திடீரென்று செல்வர் கள் ஆனார்கள். போர் அதிகக் கவலையளித்த நாட்களில் டாலர் நோட்டின் பஜார் மதிப்பு 40 செண்டுவரை இறங்கிற்று; ஆனால் அவற்றைக்கொண்டுகவர்ன்மெண்டு பாண்டு வாங்கப்போனால் அரசாங்கம் 100 செண்டு மதிப்பில் அவற்றை ஏற்றுக்கொண் டது. (400 தங்க டாலர் உள்ளவன் 1,000 பச்சைக் காகிதங்கள் வாங்கி, அவற்றிற்கு அரசாங்கத்தின் டாலர் பாண்டு 1,000 வாங்கலாம்; போரில் கடும் தோல்வியேற்பட்டு, கடன் பணம் திரும்பிவராவிட்டால், முழுதும் நஷ்டம்; கடன் பணம் முற்றி லும் திரும்பினால் 600 டாலர் லாபம்). அரசாங்கம் வட்டியும்

முதலும் தங்க டாலராகத் திருப்பித்தரத் தயாரானபோது, முன்னூட்களில் வியாபார 'சூதாட்டமாக'வோ, தேசாபிமானத் தோடோ பாண்டுகள் வாங்கினவர்கள் நல்ல லாபம் அடைந் தார்கள். கடன் தீர்க்கும்போது நாணயம் விரும்புவோருக்கு— அதாவது அனைவருக்கும்—பொன் நாணயமாகக் கொடுப்பது தான் அரசாங்கத்திற்கழகு. ஆனல் இந்த யோக்கியமான கொள்கையும் சமுதாய வேற்றுமைகளை மிகவும் அதிகப்படுத் திற்று; ஏனென்றால் சிப்பாய்களின் சம்பளம் 50, 60 சதம் மதிப் புள்ள டாலர் நோட்டுமூலமும் கடன் கொடுத்தவர்களுக்கு 100 சதம் மதிப்பு பெற்ற தங்க டாலர் ரூபத்திலும் செலுத்தப் பட்டது. குடியானவர்கள் கடன் வாங்கும்போது நோட்டாக வாங்கி திரும்பத்தரும்போது நாணயமாகச் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. சராசரி முறையில் அதன் பலன் என்ன வெனில் ஆதியில் இருந்ததைப்போல் சுமார் இரு மடங்கான தேசக் கடனை தேசத்தார் அனைவரும் பகிர்ந்துகொள்ளுகிறார்கள் என்றுயிற்று.

இம்மாறுதல்களால் லாபமடைந்தவர்களுள் யுத்தத்தோடு அல்லது மேற்கு நாட்டு விஸ்தாரத்தோடு தொடர்புகொண்ட முதலாளிகளை—ரெயில் பாதை யமைப்பு, சுரங்கவேலை, மர அறுப்பு, இறைச்சித் தயாரிப்பு, இரும்பு, எஃகு, எண்ணெய் வகையறுத் தயாரிப்பு முதலிய முயற்சிகளில் முதலீடு செய்தவர் களை—மிகப்பெரிய அதிர்ஷ்டசாலிகள் எனவேண்டும். யுத்த தேவன் தாராளமாகவும் நிச்சிந்தையோடும் நாட்டின் செல் வத்தை மாற்றிப் பங்கீடு செய்தான்; யோக்கியமான செல்வர் கள் ஆயிரக்கணக்கில் உண்டானார்கள்; நூற்றுக்கணக்கில் அயோக்கியர்களும் தலைநிமிர்ந்து நடந்தார்கள். ராஜ்யத்திலும் மத்தியிலும் அரசாங்கச் சலுகைகள் பணம் மூலம் கிடைத்தன; பணம் சமுதாயத்தில் உயரிய இடம் சம்பாதித்துக் கொடுத் தது—முன் காலத்தில் அறிவுக்கும் பண்புக்கும் இருந்த மதிப்பு இப்பொழுது டாலருக்குக் கிடைத்தது; நியூ யார்க்கிலும் ஷிகாகோவிலும் ராஜவீதிகளில் பணம் மாடமாளிகைகளை எழுப் பிற்று; கல்லூரிகளையும் சர்வகலாசாலைகளையும் ஸ்தாபித்தது; கோயில்களையும் மதப்பிரசார மிஷன்களையும் ஆதரித்தது; சங்கீத சங்கங்களுக்கும் கலைமண்டபங்களுக்கும் துணைநின்றது. தொழில் பிரதேசங்களில் ஐசுவரியம் விசேஷமாகத் திரண்டிருப் பது எதிர்பார்க்கக்கூடியதே; நியூ யார்க், பென்ஸில்வேனியா, மாஸசுஸெட்ஸ் ஆகிய மூன்று ராஜ்யங்கள் மாத்திரமே 1864-ன் மொத்த வருமான வரியில் 60 சதவீதம் செலுத்தின. ஆனல் கிழக்கே, மேற்கே, தெற்கே பல பகுதிகளிலும்கூட, வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

யுத்த காலத்திலும், யுத்தத்திற்குப்பின் தோன்றிய வியா பாரப் பெருக்கத்தாலும் குடியானவர்கள்கூட—தாம் எதிர் பார்த்த அளவு இல்லாவிட்டாலும்—லாபம் அடைந்தார்கள். "உனக்குள்ள வோட்டின் மதிப்பைக்கொண்டு நீயே ஒரு பண்ணையை சம்பாதித்துக்கொள்" என்ற கோஷத்துடன் தேர் தல் பிரசாரம் நடத்திய ரிபப்லிகன் கட்சி ஆளும் பொறுப்பை ஏற்றதும் முன்பு டெமோக்ராடிக் ஜனநிபதி ஏற்க மறுத்த பண் ணைச் சட்டத்தை மறுபடி விதித்தது. அச்சட்டத்தின்படி ஐந்து வருஷ காலம் நிலத்தில் ஊன்றியிருந்து விவசாயம் நடத்த ஒப் புக்கொள்ளுகிறவன் பொது நிலத்தில் 160 ஏக்கர் பெறுவான். நல்லெண்ணம்கொண்ட இந்தச் சட்டத்தின்மூலம் பல லக்ஷக் குடியானவர்கள் மேற்கே தரிசு நிலத்தில் அமர்ந்து, பொருளா தார சமத்துவத்தை வளர்த்தார்கள். அதே சமயத்தில் பெரிய பாகங்கள் ரெயில் கம்பெனிகளுக்கும், வேறு கார்ப்பொ ரேஷன்களுக்கும், நில அபிவிருத்திக் கம்பெனிகளுக்கும், பிற் காலத்தில் கொள்ளை லாபத்தில் விற்க விரும்பும் சூதாட்ட வியாபாரிகளுக்கும் கொடுக்கப்பட்டன. இவற்றில் அதிகபாகம் இறுதியில் குடியானவர் கைக்கே—அதிக விலையில்—சென்றது. அதே சமயத்தில் விதிக்கப்பட்ட இன்னெரு சட்டப்படி பல மிலியன் ஏக்கர் பொதுநிலம் விவசாயக் கல்லூரிகளும் தொழில் முறைக்கல்லூரிகளும் ஸ்தாபிப்பதற்காக மானியமாக வழங்கப் பட்டது.

ஆனல் போர்க்களத்திலும் அதற்குப் பின்னரும் விவசா யம் சர்க்கார் மானியத்தையோ ஊக்கமளிப்பையோ எதிர் பார்த்து வளரவில்லை. துருப்புக்களின் தேவைகள், நகரங் களில் பெருகிவரும் ஜனத்திரள்களின் தேவைகள், மிலியன் கணக்கான அயல் நாட்டாரின் பசி, எல்லாம் சேர்ந்து கோதுமை, சோளம் வகையறு விளைவிப்போர், பால் பண்ணை யர், இறைச்சிக்கான மாட்டுப் பண்ணையர், அனைவரை யும் ஊக்குவித்தது. ரெயில் பாதைகள் மூலம் கன்னி நிலங்களுக்குச் செல்வது சுலபமாயிற்று; ரெயில் வண்டிகளில் ஏற்றியனுப்பப்படும் விவசாய யந்திரங்களையும் இதர சாத னங்களையும் கொண்டு இரு மனிதர் செய்த வயல் வேலையை ஒரு மனிதன், அல்லது ஒரு பையன், செய்வது சாத்திய மாயிற்று. லிங்கன் பதவியேற்றதைத் தொடர்ந்த இருபதாண் டுகளில் தானிய வகைகள், ஆடு, மாடு, பன்றி - இவற்றின் உற்பத்தி இரு மடங்காயிற்று. நியூ இங்கிலாந்திலும் தெற்கே யும் தானிய விளைவு குறைந்ததையும், விருத்தி முக்கியமாகப் பழைய வடமேற்குப் பிரதேசத்திலும் மிஸிஸிப்பிக்கப்பால் மேற்கு நாட்டிலும் ஏற்பட்டது என்பதையும் கவனிக்க வேண் டும். போர்க் காலப் பத்தாண்டில் மிஸூரியின் ஜனத்திரள் அரை மடங்கு பெருகி, ஜனத் தொகையை சற்றேறக் குறைய

இரண்டு மிலியன் ஆக்கிற்று; மிஸௌரிக்கு யூனியனில் ஐந்தாம் இடம் கிடைத்தது. 1867-ல் ராஜ்யமாக ஏற்றுக்கொள்ளபட்ட நெப்ராஸ்காவின் ஜனத்தொகை 1880-ல் ஐந்து லக்ஷத்தை எட்ட இருந்தது. யுத்த காலத்தில் சுயேச்சையாக ஸு இனத்து இந்தியர்கள் நடமாடிக்கொண்டிருந்த இரு டகோடா ராஜ்யங்களில், 15 ஆண்டுகளுக்குப் பிறகு எடுக்கப்பட்ட கணக்குப்படி விவசாயிகளின் எண்ணிக்கை ஐந்து லக்ஷத்திற்கும் அதிகம். கம்பிளி ரோமத் தொழில் வெர்மான்டிலிருந்து ஓஹியோவுக்குச்சென்று விட்டது; மேற்கே பர்வத ராஜ்யங்கள் அத்துறையில் முக்கியத்துவம் பெற விரைந்து கொண்டிருந்தன. கோதுமையும் சோளமும் விளைவிப்பதில் அயோவா, கான்ஸாஸ், நெப்ராஸ்கா, மினெஸோடா ஆகிய ஸ்டேட்டுகள் முன்னேறிக் கொண்டிருந்தன. விவசாயம் வலிமையுடன் மேற்குப்புறமாய்ச் சென்று கொண்டிருந்தது.

இருந்தபோதிலும் செயற்கை முறைப் பொருள் உற்பத்தியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இயற்கை முறை உற்பத்தி குறைவான லாபமளித்தது; கூலி வேலை அதைவிட மட்டமாக இருந்தது; இதே ஏற்றத்தாழ்வு அமெரிக்கப் பொருளாதார நிலையின் ஒரு சூன விசேஷமாக நிலைத்துவிட்டது. நெருக்கடி ஏற்படும்போது குடியானவர்களே முதலில் துன்பம் அனுபவித்தார்கள். அதிக ஆசையின் காரணமாக தொழில் க்ஷேத்திரம் விஸ்தரித்தபோது உற்பத்தியான பொருள்களும் அளவுகடந்து போயின; பெரிய வயல்களை உத்தேசித்து விலை மிக்க விவசாய யந்திரங்கள் வாங்கப்பட்டன; விளை பொருள்களின் விற்பனை விலை குறையும்போது விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டமுண்டாயிற்று. மேற்கே செழிப்பான இடங்களில் வேளாண்மை செய்பவர்களோடு உரம் இழந்த கிழக்கு நாடு போட்டியிட முடியவில்லை; ஆனல் மேற்கு நாட்டார் விற்பனை ஸ்தலங்களிலிருந்து எட்டியிருந்தார்கள்; கட்டணங்கள் விஷயத்தில் ரெயில்வேக் கம்பெனியார் இட்டது சட்டமாக இருந்தது. முன் காலத்தைப் போலவே, குடியானவர்கள் வெய்யிலில் நீண்ட காலம் பாடுபட்டார்கள்; சமுதாய வாழ்க்கை வசதிகள் இல்லாமல் காலம் தள்ளினார்கள்; கடைசியில், ''கையில் மிஞ்சினது சாட்டைக் குச்சி'' தான்.

பெரிய ஜனப் பிரிவுகளின் லாப நஷ்டங்களை ஆராய்ந்தால் மூரட்டுக் கூலியாட்கள்தான் யுத்தத்தால் அதிக லாபமடைய வில்லை; நிலக்கரிச் சுரங்கங்களிலும், இரும்பு உலைக்களங்களிலும், நெசவு சாலைகளிலும், ஜோடு தைக்கும் இடங்களிலும், கப்பல் கட்டுவதிலும், ரெயில்பாதை போடுவதிலும் தினம் 10, 12 மணி நேரம் பாடுபட்டு, நாட்டின் வெற்றிகளுக்கு அவர்களும் காரணமாக இருந்தார்கள்; அவர்களிடையே இருந்து வந்த பலர் சிப்பாய்களாகவும் சேர்ந்து தேசத் தொண்டு புரிந்தார்கள்.

1857-ன் வியாபார கலவரத்தில் சிதறிப்போன பல பாட்டாளி சங்கங்கள் போரிலும் விலையேற்றத்தாலும் தூண்டப்பட்டு மறுபடி உருவாகின. அவை மிக அவசியமானவை. ஊதிய விகிதங்கள் உயர்ந்தன என்றாலும் விலைவாசிகள் அதை விட உயர்ந்துவிட்டன; 1860-ஐக் காட்டிலும் 1865-ல் பாட்டாளிகளின் ஸ்திதி மோசமாக இருந்தது என்பதைத் தீர விசாரித்து நிதானமாகப் பேசும் தன்மையுள்ளவரும் ஒரளவு ஒப்புக்கொள்ள வேண்டி வந்தது. பத்து லட்சத்திற்கும் அதிகமான சிப்பாய்கள் ஊர் திரும்பிப் புது அலுவல்கள் தேடியதாலும், குடியிறக்கம் சட்டென்று அதிகரித்ததாலும், வேலைகளுக்கான போட்டி தீவிரமாயிற்று; தேர்ச்சியுள்ள தொழில் இனத்தார் தங்கள் தொழிலில் அன்னியர்கள் புகாமல் காத்துக்கொள்ளுவதற்கான நடவடிக்கை ஆரம்பித்தனர். ''ஸந்த் க்ரீஸ்பின் வீரர்கள்'' என்ற பாதரட்சை தயாரிப்பாளர் சங்கம் அவ்வழியில் பிறந்தது; ஆனல் யந்திர சக்தியையும் தொழிற் சாலை முறையையும் எதிர்த்து நிற்க முடியாததால், அந்த சங்கம் அற்ப ஆயுளில் இறந்தது. 1870-ல் நிறுவப்பட்ட ''தேசியத் தொழில் சங்கம்'' ''தொழில் வீரர்கள்'' என்பவை பெரியவை; சாலைத் தொழிலாளர், விவசாயத் தொழிலாளர், சீர்திருத்தக் கோஷ்டிகள் முதலிய இனங்களை இணைக்க முயன்றவை; ஆகவே நம் கவனத்திற்குரிய ஸ்தாபனங்கள்.

ஆனல் பாட்டாளிகளின் பெரும்பாலோர் ஒரு ஸ்தாபனத்திலும் சேராமல் பொருளாதார அமைப்பின் மாறுதல்களாலும் வியாபார மந்தம், முதலியவற்றாலும் மிகவும் வருந்தினர். வர்த்தகக் கோஷ்டிகளுக்கு அனுகூலமாகச் சட்டங்கள் விதிப்பதில் ஆவல் காட்டிய அரசாங்கம் பாட்டாளி மக்களை அசட்டை செய்தது. பொதுத் தொழில் நிலையங்களில் தினமும் எட்டு மணி நேரம்தான் வேலை வாங்கப்பட வேண்டும் என்ற சட்டம் 1868-ல் உருவாகியது, உண்மையே; ஆனல் அந்த நல்ல வழியில் பலர் செல்லவில்லை. மேலும், வேறு இடங்களிலிருந்து ஒப்பந்தக் கூலிக்கு—பிற்காலத்தில் பேரம் பேசுவதற்கு இடமில்லாமல் ஆட்களைக் கொண்டுவரலாம் என்ற 1864-ன் சட்டம் பிரதிகூலமான செயலாயிற்று. சிறிது காலத்திற்கெல்லாம் அந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டது; ஆனல் அப்பொழுது ஆரம்பமான கெட்ட பழக்கம் 20 வருஷங்கள் அமுலில் இருந்தது.

அரசியல்: போருக்குப் பின் காலத்து அரசியல் வாழ்க்கையில் முக்கியமான அம்சம் அதன் முக்கியமின்மையே. கிராண்டின் நிர்வாகத்தின் (1869-1877) தனிச் சிறப்பு செயல் திறமையின்மையும் லஞ்ச ஊழலும் எனலாம். இதர காலத்தைக் காட்டிலும் நாட்டின் புனரமைப்புக் காலத்தில் அத்தியாவசியமான தேச நிர்வாகப் பெருந்தன்மை சூனிய நிலையை எட்டி, அல்ப

அரசியல் வாதங்களுக்கு இடங் கொடுத்தது; சுயநல அரசியல் வாதத்தில் கட்சிப் பிரச்னை, சொந்தச் சலுகை, லஞ்சம் முதலியன முக்கிய இடம் பெறுகின்றன.

ரிபப்லிகன் கட்சி மறுபடி அதிகாரம் ஏற்கவேண்டும் என்பதே புனரமைப்பு அரசியல்வாதத்தின் அடிப்படைக்கொள்கை. அந்தக் கட்சி சமீப காலத்தில் உண்டாயிற்று என்பதும் அநேகமாக ஒரு பகுதிக்கே பிரதிநிதி என்பதும் நினைவிருக்கவேண்டும்; போர்க்காலத்தில் அது இட்டதே சட்டமாக இருந்தது; அதிகார வாழ்வில் அது நன்றாய் வேரூன்றிக் கொண்டது. போர் முடிவடைந்து, சிறுகச் சிறுக 1871-க்குள் எல்லாத் தென் ராஜ்யங்களும் யூனியனில் சேர்ந்துவிடவே, அரசாங்கத்தின் எல்லா இலாக்காக்களையும் ரிபப்லிகன் கட்சி தன் பிடிக்குள் வைத்திருக்க முடியுமா என்ற சந்தேகத்திற்கிடமேற்பட்டது. ஏனெனில் அக்காலம் முழுதும் வடக்கேகூட டிமோக்ராட் கட்சியின் எண்ணிக்கையும் செல்வாக்கும் வலுத்தே இருந்தன; தெற்கே போரின் கொடுமையும் புனரமைப்பு என்ற ஊழலும் அவ்வெதிர்க் கட்சியை மிகவும் உறுதியாக்கின. அபேட்சகர்களைப் பற்றியும் கொள்கைகளைப்பற்றியும் அக்கட்சியினர் அனைவரும் ஒரு முடிவுக்கு வரக்கூடுமானால் அவர்களே ரிபப்லிக் கட்சியை ஒதுக்கித் தள்ளி அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொள்ளுவது நடந்திருக்கக் கூடிய காரியமே.

கட்சி அதிகாரம் வகிப்பது என்பது மாத்திரமே முக்கியமான விஷயமல்ல; தேர்தலின்போது வாக்களித்த கொள்கைகளை நிறைவேற்றுவதும் அவசியம். புதிய "டாரிஃப்" மதில், தேசிய பாங்கு இயக்கம், ரெயில்பாதை மானியத் திட்டம், செலாவணியை ஸ்திரப்படுத்துதல், அரசாங்கம் தங்க நாணயம் மூலம் தன் கடன்களை அடைத்தல்—இவை பிற்கால வெற்றி அல்லது தோல்வியை நிர்ணயிப்பவை. இவற்றுள் கடைசி இரண்டு அதிக முக்கியமானவை எனலாம். ஆனால் இந்தப் பொருளாதாரப் பிரச்னைகள் தனியாக நில்லாமல். நீக்ரோக்களின் ஸ்திதி போன்ற, சமுதாயப் பிரச்னைகளோடும், தேச விசுவாசம் காட்டியவர்களுக்குப் பதில் உபகாரம் செய்தல், எதிர்த்து நின்றவர்களைத் தண்டித்தல் போன்ற உணர்ச்சி வெளியீட்டுப் பிரச்னைகளோடும் கலந்து சிக்கலான நிலைமையை உண்டாக்கின.

ரிபப்லிகன் கட்சி அனுசரிக்கவேண்டிய ராஜதந்திர முறை தெளிவானதே. மங்களகரமாக ஆரம்பிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளைக் காப்பாற்றி முன்னேறச் செய்யவேண்டுமானால், அவை அடியோடு பிடுங்கி எறியப்படாத அளவுக்கு கெட்டியாய் வேரூன்றும்வரை அதே கட்சி பதவியில் இருப்பது அவசியம். எதிர்க்கட்சியின் கைஓங்காமல் இருக்கும் பொருட்டு உத்தேசமாகச் சில காரியங்கள் செய்யப்பட்டிருந்தன—கான்ஃபெடரேட் நாயகர்களில் பலருக்கு வாக்குரிமையும் உத்தியோக உரிமையும் மறுக்கப்பட்டிருந்தன; மிகவும் எதிர்த்து நின்றிருந்த தென் ராஜ்யங்களுக்குக் காங்கிரசுக்குப் பிரதிநிதிகள் அனுப்பும் உரிமையும் இல்லாதிருந்தது. ஆனால், இது எக்காலத்திற்குமான நடவடிக்கையல்ல. தெற்கே ரிபப்லிகன் கட்சியை வளர்த்தல் நடக்கக்கூடியதாகவும் நன்மை யளிக்கக்கூடியதுமாகத் தோன்றிற்று. தெற்கே செல்வாக்குள்ள சிலர் மாத்திரமே நடத்தும் ஆட்சியை வெள்ளையர்கள் எதிர்த்தார்கள்; சிலர் ஏழைகள், சலுகைகள் பெறுதவர்கள்; தமக்கு செல்வாக்கு அளிக்கும் வாய்ப்பை அவர்கள் வரவேற்பார்கள்; அவர்களை ஆதாரமாகக் கொண்டுதான் ரிபப்லிக் கட்சி தெற்கே ஆரம்பமாகவேண்டும். ஆனால் அவர்களுடைய எண்ணிக்கை குறைவு; வெற்றியளிக்கக்கூடியதல்ல. நீக்ரோக்களுக்கு வாக்குரிமை அளித்து, அவர்களை ரிபப்லிக் கட்சிக்கு வோட் செய்யும்படி செய்தால் தான் வெற்றி கிடைக்கும். ஆகவே, புனரமைப்புச் சட்டங்கள் மூலமாகவும், அதன் பிறகு நிர்மாணத் திட்டத்தில் திருத்தங்கள் மூலமாகவும் இக்காரியம் செய்யப்பட்டது.

திட்டம் அழகாகத்தான் இருந்தது; ஆனால் நினைத்த காரியம் கை கூடவில்லை. ராணுவ ஸ்தாபன நடவடிக்கைகள் தென்னாட்டின் எதிர்ப்பை வலுப்படுத்தின; அரசியல் சூழ்ச்சியுடன் நீக்ரோவைப் பயன்படுத்தும் முயற்சி இன்னும் அதிக எதிர்ப்பை உண்டாக்கிற்று. ரிபப்லிகன் கொள்கையும் ஜாதி சமத்துவமும்—ஜாதிக் கலப்பும்—ஒன்று என்ற அனுமானத்திற்கு இடம் ஏற்பட்டதால் ஜாதி வேற்றுமையைப் பலப்படுத்த விரும்பும் தென்னாட்டார் சகித்துக்கொண்டிருப்பார்களா? ஆகவே இந்தக் குறுகிய நடவடிக்கைகள் தென்னாட்டில் ரிபப்லிகன் கட்சியை முன்னிலும் பலஹீனப்படுத்தின. ஃபெடரல் ராணுவ அதிகாரம் வாபஸ் வாங்கப்பட்டதும், அக்கட்சியின் ஸ்தாபனங்கள் படுத்துப்போயின; தென்னாட்டு டிமோக்ராட்டுகள் தேர்தலில் நீக்ரோக்கள் பங்கு கொள்ளாததற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அதன் பிறகு அவர்கள் இட்டதே சட்டமாக இருந்தது. 1880-லிருந்து 1928 வரை ஜனாதிபதிப் பதவியை அபேட்சிக்கும் ரிபப்லிகனுக்கு கான்ஃபெடரஸியின் ஒரு ராஜ்யமும் எலெக்டொரல் வோட்டுப் போடவேயில்லை

ராணுவ உதவியாலும் நீக்ரோவின் வாக்குரிமையாலும் நடைபெறுத காரியம் நிர்மாணத் திட்டத்தில் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட ஒரு விதியின் மூலம் நிறைவேறிற்று. புனரமைப்பின் ஆரம்ப காலத்தில், தீவிர வாதிகள் ஜனாதிபதி ஜான்ஸனுடன் சச்சரவு செய்துகொண்டிருந்த நாட்களில், காங்கிரஸின் கூட்டுக் கமிட்டியொன்று பற்பல விஷயங்களடங்கிய ஒரு திருத்தத்தை உருவாக்கிற்று. "தேசப் பிரஜை"யின் இலக்கணம், சுதந்திரத்தின் உரிமைகளின் பாதுகாப்பு, கான்ஃபெடரேட் நாயகர்

களின் வாக்கு மதிப்பின் ரத்து ஃபெடரல் கடன்களுக்கான உறுதிமொழி, கான்ஃபெடரேட் கடன்களின் நிராகரிப்பு ஆகிய விஷயங்கள் அடங்கியதே பிரசித்தமடைந்த அந்தப் பதினான்காம் தீர்மானம். அதன் முதல் விளக்கமாவது:

> ஐக்கிய நாடுகளின் பிரஜைகளின் சலுகைகள் அல்லது உரிமைகளைப் பாதிக்கும்படியான எந்த ஒரு சட்டத்தையும் விதிக்கவோ, அமுலில் கொண்டு வரவோ ஒரு ஸ்டேட்டுக்கும் அதிகாரம் கிடையாது; நீதி மன்ற நடவடிக்கையின் மூலமாக அல்லாமல் ஒரு பிரஜையின் உயிர் நஷ்டமோ, சொத்து நஷ்டமோ ஒரு ஸ்டேட்டும் உண்டாக்கலாகாது; சட்டம் வழங்கும் பாதுகாப்பு-சமத்துவத்தைத் தன்னுடைய அதிகார எல்லைக்குள் ஒருவனுக்கும் மறுக்கலாகாது.

ரிபப்லிகன் கொள்கைகள் செய்யத் தவறியதை மறக்க முடியாத இந்த விதிகள் காலக்கிரமத்தில் செய்தன; பெரிய வியாபாரக் கூட்டு நிறுவனங்களுக்கு அவை அரசாங்க அனுமதி என்னும் கோட்டையாக உதவின. ஏனென்றால், அவசியம் ஏற்பட்டபோது நீதிஸ்தலங்கள் அளித்த விளக்கங்களிலும் தீர்ப்புக்களிலுமிருந்து, வியாபாரிகளின் சொத்தையோ, அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய லாபத்தையோ பாதிக்கக்கூடிய சட்டங்களை ஸ்டேட்டுகள் விதிக்கலாகாது என்பது நிச்சயமாயிற்று. இந்த விளக்கம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டில் தான் பூர்ண ரூபம் பெற்றது; ஜன இயக்கம் (Populism) என்னும் புதுக்கிளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட அது உதவிற்று.

தென்னாட்டை வட நாட்டிற்குத் தாழ்ந்ததாகவும் டிமோக்ராட்டுகளை ரிபப்லிகன்களுக்குத் தாழ்ந்தவர்களாகவும் வைத்திருப்பதே க்ரான்டின் நிர்வாகத்தின் புனரமைப்புத் திட்டங்களின் முக்கியக் கொள்கை. அந்த அளவுக்கு அரசாங்கம் வெற்றி பெற்றது. போர் வெற்றியால் கிடைத்த பெரும் கௌரவமும் க்ரான்டின் கீர்த்தியும் அதற்குக் காரணம்; அடிமை முறையோடோ பிரிவுமனப்பான்மையோடோ சம்பந்தப்பட்ட எந்தக் கட்சியைக் கண்டாலும் ஏற்பட்ட சந்தேகத்தால் அவ்வரசாங்கம் இன்னொரு முறை அதிகாரம் வகிப்பது சாத்தியமாயிற்று; அவ்வரசாங்கத்தால் லாபமடைந்த வியாபார வர்க்கங்களும் மனமார அதற்கு ஆதரவளித்தன. ஆனால் எல்லா சௌகரியங்களும் காலக்கிரமத்தில் கைவிட்டுப் போயின. க்ரான்ட் போர் இயலில் வல்லுநர்; ஆனால் சிவில் நிர்வாகத்திற்குத் தகுதியற்றவர். அயல் நாட்டு விவகாரங்களில் தவிர அவருடைய நிர்வாகம் அபகீர்த்தி யளிப்பதே.

க்ரான்ட் பதவியேற்ற சிறிது காலத்திற்கெல்லாம் பெரிய அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதாக வதந்திகள் கிளம்பின;

வுவற்றை முற்றிலும் பொய் என்று சொல்லமுடியாது. யூனியன் பசிஃபிக் ரெயில்வே ஸ்தாபனம் காங்கிரஸ்காரர்களைக் கொழிப்பாட்டுக்கொண்ட சில அயோக்கியர்களால் ஆரம்பிக்கப்பட்டது. கடற்படை இலாக்கா ஒளிவு மறைவு இல்லாமலே ஸ்டீம் வாங்கிக்கொண்டு கன்டிராக்டுகளை விநியோகம் செய்தது. உள்நாட்டு இலாக்காவில் பணப் பேய்களுக்கு நல்ல வேட்டை. இந்தியர்களின் க்ஷேம நிலைக்கான இலாக்கா இந்தியர்களின் நலத்தை மறந்து அதிக விலை கொடுப்பவர்களுக்கு வியாபார உரிமைகள் அளித்தது. வசூலாகாத வரிகளை வசூலிக்கும் பொறுப்பை நிதி இலாக்கா ஒரு சிலர் கையில் ஒப்புவித்ததால் அவர்கள் சொந்தத்திற்கு நிறையச் சம்பாதித்துக்கொண்டார்கள். நியூயார்க்கிலும், நியூ ஆர்லீன்ஸிலும் சுங்க வரி ஆபீசுகளில் லஞ்ச ஊழல் புற்றுநோய்போலப் பரவி இருந்தது. ஸந்த் லூயியில் கள்ளச்சாராய வியாபாரிகள் அப்காரி வரி செலுத்தாததால் சர்க்காருக்கு மிலியன் கணக்கில் நஷ்டமுண்டாயிற்று. தலைநகரில் கொள்ளையடிக்கும் அரசியல் வாதிகள் டம்பச் செலவிலும், பணத்தை வாரி இறைப்பதிலும் முன்னணியில் நின்றனர். "ரிபப்லிகன் கட்சிக்கு விநாச காலம் நெருங்குகிறுப்போலிருக்கிறது.... இதுவரை இருந்த எல்லா மிக நீசமான அரசியல் கட்சிகளைக் காட்டிலும் இது மோசமானது," என்று ஒரு ரிபப்லிகன் லைனெடர் எழுதியிருக்கிறார்.

போர்க்காலக் குழப்பமும், அதன்பின் தோன்றின பணவீக்கமும், வியாபார சூதாட்டமும் இந்தத் தாழ்மையான நிலைக்குக் காரணங்கள். வடமக்கள் க்ரான்டிடம் கொண்ட அன்பு குறையாவிட்டாலும் நம்பிக்கை முற்றிலும் போய்விட்டது. ஆக்க காரியங்களுக்கான மிகப் பெரிய வாய்ப்புடன் ரிபப்லிகன் கட்சி அதிகாரம் ஏற்றது. நான்கு ஆண்டுகளுக்குள் கட்சியில் பிளவு உண்டாயிற்று; சீர்திருத்தத்தையும் சமரஸ உறவையும் லட்சியமாகக் கொண்ட "மித ரிபப்லிகன் கட்சி" தோன்றிற்று. டிமோக்ராட்டுகள் புதுக்கட்சியுடன் சேர்ந்த போதும் க்ரான்டைப் பதவியிலிருந்து அகற்றக்கூடிய பலம் அவர்களுக்கு வசமில்லை; ஆனால் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு கீழ் சபை டிமோக்ராட்டுகளின் வசமாயிற்று; 1876-ல் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியின் அபேட்சகன் ரிபப்லிகன் அபேட்சகனைக் காட்டிலும் இரண்டரை லட்சம் அதிக வோட்டுகள் பெற்றான். (தேர்தல் சம்பந்தமாக வழக்கு ஏற்பட்டது; ரிபப்லிகன் அபேட்சகன், ஹேய்ஸுக்கு (Hayes) அனுகூலமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டது). அரசியல் ஊழல் முற்றிலும் அடங்கவில்லை என்றாலும், குறைவாகவே இருந்தது; ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு அது மறுபடி தலைவிரித்தாடிற்று.

நிரா
அத்தியடைந்த
மாவது:

பெருவாரி வர்த்தகத்தின் வளர்ச்சி

தொழில் சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரம்:—ஜெஃபெர்ஸன் கண்ட கனவு ஒரு கிராம அடிப்படை கொண்ட நாட்டைப் பற்றியது—சுய ஆதீனமுள்ள குடியானவ மேன் மக்கள் வாழும் தேசம்; இங்கிலாந்திலுள்ள தொழிற்சாலைகளும் அவற்றைச் சார்ந்த அடிமை மனப்பான்மையும், அதேபோல பெரிய நகரங்களின் தாழ்மையான பண்பாடும் இல்லாத ஒரு தேசம்; ஃப்ரான்ஸிலும் இத்தாலியிலுமுள்ள விவசாய அடிமைத்தன்மையும் இல்லாத ஒரு தேசம். "உழைப்பதற்கு நிலம் இருக்கும் வரை, ஆசாரி வேலையோ நெசவு வேலையோ நம் குடிகளுக்கு வேண்டாம்" என்று அவர் எழுதியிருந்தார். விவசாயக் குடியரசு ஸ்தாபித்து விட்டதாக அவர் நம்பிக்கை; லுஸியானாவை வாங்கி விட்டதால் ஆயிரம் ஆயிரம் தலைமுறைக்கும் நிலப்பஞ்சம் ஏற்படாது என்றும் அவர் நம்பினார். (இங்கிலாந்தின் அமைப்பு ஹாமில்டனின் லட்சியம்; அவரைத் தோற்கடித்ததால் அந்த லட்சியம் அமெரிக்காவில் நிறைவேறுமல் செய்து விட்டதாக ஜெஃபெர்ஸன் நினைத்தார்). நாட்டின் திருஷ்டி மலைகளையும், பெரும் மைதானங்களையும் தாண்டி மேற்கே செல்ல வேண்டும்; கடலைத் தாண்டிக் கிழக்கே அல்ல. அமெரிக்கா குடியானவர்களின் சுவர்க்கமாக வழங்கவேண்டும்; வியாபாரிகள், பாங்கர்கள், தொழில் தலைவர்கள் முதலியோரின் பிரத்தியேக வேட்டை ஸ்தலமாக அல்ல...அக்கோஷ்டியினர் தொடர்ந்து அதிகாரம் ஏற்க ஏற்க, அக்கனவு நனவாகுமோ என்றும் தோன்றிற்று. தேசத்தின் எல்லை மேற்கே பசிஃபிக் சமுத்திரத்தை நோக்கியும் தெற்கே ரியோ க்ராண்டியை நோக்கியும் நகர நகர, தொழில் யந்திரத்தைக் காட்டிலும் வேகமாக விவசாயப் பிரதேசம் வளர்ந்தது. 1860-ல் கூட நாடு பெரும்பாலும் கிராமங்களின் சேர்க்கை போலவே தோன்றிற்று; பலர் உள் நாட்டுக் கலகத்தைத் தொழிலுக்கும் விவசாயத்திற்கும் இடையே ஏற்பட்ட சச்சரவாக நினைக்காமல் பருத்தி மகாராஜாவுக்கும் கோதுமை மகாராஜாவுக்கும் இடையே மூண்ட போராகக் கூடக் கருதினார்கள்.

கடைசியில், பொருளாதார விஷயத்தில், ஹாமில்டன் தான் ஜெயித்தான். பாங்கு விஷயத்தில் அவன் அபிப்பிராயந்

தான் ஒப்புக் கொள்ளப்பட்டது; அவன் வகுத்த வியாபார முறையைத் தான் மக்கள் ஏற்றனர்; அவனுடைய "கைத் தொழில் மசோதா"தான் அமெரிக்கருக்கு வேத வாக்காயிற்று. இரட்டைச் சண்டையில் ஹாமில்டன் உயிர் நீத்த ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு ஐக்கிய நாடு உலகத்திலேயே மிகப் பெரிய தொழில் பிரதான தேசமாயிற்று. வேறு எந்த நாட்டைக் காட்டிலும் அதிகமாக அமெரிக்கா நிலக்கரி, இரும்பு, மண் எண்ணெய், ரெயில் பாதை, தொழிற்சாலை நிறுவனம் முதலான பல துறைகளில் முன்னணியில் நின்றது. அறிஞர் ஜெஃபெர்ஸன் இறந்த ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு விவசாய உற்பத்தியின் மொத்த விலையைப் போல் ஐந்து மடங்கு கைத்தொழில் உற்பத்தியின் மதிப்பு உயர்ந்தது. நிதி நிபுணர்களும் தொழில் பிரபுக்களும் வாஷிங்டனில் இட்டது சட்டமாக இருந்தது; நிலச்சுவான்தார் விவசாயக் கூலியாகும் நிலைமையை அடைந்தார்.

அரசாங்க ஆதரவுபெற்ற இந்த வேகமான மாறுதல் அமெரிக்கப் பொருளாதார ஸ்திதிக்குப் பொருத்தமானதே. அமெரிக்கத் தொழில் அபிவிருத்தியின் அடிப்படையான காரணங்கள் ஆறு. வேறு எந்த நாட்டாருக்குக் கிடைக்கக் கூடியதைக் காட்டிலும் (ரஷ்யா மாத்திரம் விதிவிலக்காக இருக்கலாம்) அதிக அளவில் பலவகைப்பட்ட கச்சாப் பொருள்கள் அமெரிக்கருக்குக் கிடைத்தன. அவற்றை உபயோகத்திற்காகும்படி உருவாக்கப் புது விஞ்ஞானத் தத்துவங்களும் புது செயல் முறை யுக்திகளும் கண்டு பிடிக்கும் திறமை அமெரிக்கரிடம் இருந்தது. தண்ணீர் மூலமாகவும் ரெயில் பாதை மூலமாகவும் போக்கு வரவு வசதிகள் அதிகரித்துக் கொண்டே வந்தன. ஜனத் தொகை அதிகரித்து வருவதால் விற்பனைக்கான வாய்ப்புக்களும் அதிகரித்தன; அயல் நாட்டு மார்க்கெட்டுகளும் கிடைத்தன. குடியிறக்கத்தின் காரணமாகப் பாட்டாளி மக்கள் மேலும் மேலும் கிடைத்து வந்தார்கள். ராஜ்யங்களுக்கிடையே அல்லது பகுதிகளுக்கிடையே துன்பப்படுத்தும் "டாரிஃப்" தடுப்புக்கள் இருக்கவில்லை; அயல் நாட்டுப் போட்டியைச் சமாளிக்க டாரிஃப் பாதுகாப்பு இருந்தது; நேர் முகமாகவோ மறைமுகமாகவோ அரசாங்க உதவிகள் அளிக்கப்பட்டு வந்தன. இந்த அடிப்படையான காரணங்களோடு புது யத்தனங்களில் மக்கள் காட்டிய ஊக்கத்தையும், பிற்காலம் பொன் காலம் என்ற அவர்களுடைய இயற்கையான நம்பிக்கையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்; ஆதியிலிருந்தே தோன்றி வளர்ந்த இவ்விருகுணங்கள் அமெரிக்கருக்குத் தனிச்சிறப்பு அளித்தன.

தொழில் புரட்சியின் ஆதாரம் நிலக்கரி, எண்ணெய், இரும்பு, கடைசியாக மின்சாரம்: முடிவு அறியாத அளவில் பல ரகக் கரிகள் கிடைக்கக் கூடிய இடங்கள் பல ஸ்டேட்டுகளில்

இருக்கின்றன; நியூ மெக்ஸிகோவில் கிடைக்கக் கூடியது மாத்திரமே அமெரிக்கத் தொழில் ஆலைகளுக்கு ஒரு நூற்றாண்டுக்குக் காணும். இரண்டாவது பெரிய சக்தி சாதனமாகிய எண்ணெய் விஷயத்திலும் அமெரிக்கா அதே அளவில் அதிர்ஷ்டசாலி. 1900-முதல் ஒரு ஆண்டு தவறாமல் உலகத்தின் இதர இடங்களில் இறைக்கப்பட்ட எண்ணெயைக் காட்டிலும் அமெரிக்கக் கிணறுகளின் இறைவு குறைந்ததே இல்லை. இரும்புக்கனிகளும் ஏராளமாக இருக்கின்றன. 50 வருஷகாலம் சுரங்கங்கள் சுரண்டப்பட்ட பிறகு கணக்கெடுத்துப் பார்த்ததில் இன்னும் இரண்டு நூற்றாண்டுகளாவது அவை பயன்படும் எனத் தோன்றிற்று. வேறெந்த நாட்டைக் காட்டிலும் அதிகமாக நீர்ச்சக்தி ஐக்கிய நாட்டிற்கு இயற்கைத் தேவியின் நிரந்தரமான நன்கொடையாகக் கிடைத்திருக்கிறது; ஜனத் தொகை 300 மிலியனுக்கு அதிகமாகும்போதும் நாட்டின் தொழிற்சாலைத் தேவைகளுக்கு அந்த சக்தி போதுமானதாகும். மிஷிகன் ஸ்டேட்டில் ஆரம்பத்திலிருந்தே தாமிரதாது வெட்டப்பட்டு வந்தது; 1880-க்குப் பிறகு வளமான தாது மான்டானாவிலும் ஆரிஸோனாவிலும் கண்டுபிடிக்கப்பட்டது; 1882-ல் அனகொண்டா சுரங்கத்தில் வேலை துவங்கியதும் மான்டானா முழுதும் ''தாமிர ராஜா''க்களின் போர்க்களமாக மாறிற்று. தொழில்-தனி-உரிமைக்காகமாத்திரமல்ல, அரசியல் முக்கியத்தன்மைக்காகவும் கடும் போர் நடந்தது. 1859-ல் காலராடோவிலும்; அடுத்த பத்தாண்டுகளில் நெவாடாவிலும், மான்டானாவிலும் வளமான வெள்ளித்தாது கண்டு பிடிக்கப்பட்டதால் பொருளாதார அமைப்பு மாறியதோடு நாட்டின் நிதிக்கொள்கையும் மாறிற்று. உள் நாட்டுப் போருக்கு முன்பே மிஸௌரியிலும். இல்லினாயிலும் இருந்த ஈயக்கனிகள் பிரசித்தி பெற்றிருந்தன; ஆனால் எட்டாம் பத்தாண்டில் ஈயம் ஏராளமாகத் தயாரிக்கப்பட்டபோதுதான் குழாய்கள் செய்யவும், அச்சு முத்திரைகள் செய்யவும் அதன் பெருவாரி உபயோகம் சாத்தியமாயிற்று. அதே காலத்தில் செமென்டு விற்பனைப் பொருள் ஆயிற்று. 1887-ல் தான், அதுவரை அரிய பொருளாக இருந்த அலுமினியம், மின்சாரப் பிரயோகத் தயாரிப்பு முறையால் சாமான்யப் பொருள் ஆக ஆரம்பித்தது. 1893-ல் அகில உலகக் கொலம்பியாப் பொருட்காட்சியைப் பார்க்க ஹென்ரி ஆடம்ஸ் சென்றபோது அவன் மின் உற்பத்தி யந்திரத்தைக் கண்டு நிகழும் சரித்திரகாலத்தின் மிக முக்கியமான புதுமை அதுதான்—என்று கூறினான்; அடுத்த சில வருஷங்களில் அமெரிக்க என்ஜினியர்கள் அந்த யந்திரத்தைப் பெரிய அணைக்கட்டுகளுடன் இணைத்து நீராவிக்கிருந்த பெருமையை நீர் அழுத்தச் சக்திக்குக் கொடுக்கலானார்கள்.

புதுத் தத்துவங்கள் அல்லது யுக்திகள் கண்டுபிடித்து உரிமைப் பதிவு செய்வதில், எண்ணிக்கையில் ஆனாலும் சரி,

சாதுர்யத்தில் ஆனாலும் சரி, அமெரிக்கர் இணையற்றவர் எனலாம். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி அல்லது பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஆரம்பமாகிப் பல முக்கியமான யந்திரங்கள் அல்லது புதுச் செய்முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன—பருத்தி மீணை, நீராவிப்படகு, தையல் மெஷின், 'வல்கனைஸ்' செய்து ரப்பருக்கு உறுதியளிக்கும் முறை, அறுவடை யந்திரம். ஆனால் புதிய சாதனங்களைப் பெருவாரியாகத் தயாரிக்கு முன் எஃகுத் தொழில் விருத்தியடைவதும், தொழிற் சாலைகளில் மின்சாரம் பயன்படுவதும் அவசியம்.

புதிதாகக் கண்டறிந்த விஷயங்களில் கவனத்தை மிகவும் கவரும் சிலவற்றைப் பார்த்தால் புது அமெரிக்க அமைப்புக்கு அவை எவ்வாறு உதவின என்பது தெரியும். சாம்யூல் மார்ஸ் (Morse) என்னும் சைத்திரிகன் விஞ்ஞானத்திலும் அக்கறை கொண்டு, மின்சாரத் தந்தி சம்பந்தமான சோதனைகள் நடத்தி வாஷிங்டனிலிருந்து பால்டிமோர் வரைக் கம்பிகள் அமைக்க உபகாரம் செய்யும்படி காங்கிரசைக் கேட்டுக் கொண்டான்; 1856-ல் 'வெஸ்டேர்ன்' யூனியன் கம்பெனி அப் புதுமையைப் பயன்படுத்தி லாபமடையத் தீர்மானித்தது; சீக்கிரத்தில் அதுவும் வேறு கம்பெனிகளும் நாடு முழுதும் தூண்கள் நிறுத்திக் கம்பிகள் இழுப்பதில் ஈடுபட்டன. ஆறாம் பத்தாண்டின் மத்தியில் அட்லாண்டிக் சமுத்திரத்தில் 'கேபிள்' (மின் தடுப்பு உறைகளும் உறுதியான கவசமும் உள்ள கம்பி) போடயத்தனங்கள் துவங்கின; ஆனால் 1866-ல் தான் நியூஃபவுண்டுலண்டிலிருந்து அயர்லண்டுவரை ஒரு கேபிள் வெற்றிகரமாகப் போடப்பட்டது; ஸ்காட்லண்டிலிருந்து குடியிறங்கிய அலெக்ஸாண்டர் க்ராஹம் பெல் டெலிஃபோன் சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடத்தி 1876-ல் ஒரு கருவி தயாரித்தார்; அதன் பெருமை பலருக்குத் தெரிந்ததும் ஒவ்வொரு காரியாலயத்திலும் அது இடம் பெற்றது; ஊர்த் தெருக்களில் பந்தல் போட்டாற்போல் தலைக்குமேல் டெலிஃபோன் கம்பிகள் நிறைந்தன.

நாட்டின் அபிவிருத்தியோடு போக்குவரத்து சாதனங்களும் வளர்ந்தன. ரயில் வண்டி ஓடும்போது எச்சரிக்கைக்காகவும் பாதுகாப்புக்காகவும் 'ஆடோமாடிக் ப்ளாக் ஸிக்னல்' 'ஏர் ப்ரேக்' முதலான உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன; 1900-க்குப் பிறகு எஃகு வண்டிகளும் செய்யப்பட்டன; ஆகவே விபத்துகள் குறைந்தன; 'புல்மன்' (Pullman) படுக்கை வண்டி சுகப்பிரயாணத்திற்கான வசதியளித்தது. ஒன்பதாம் பத்தாண்டில் மின்சார ரயில் வண்டிகளுக்கான சோதனைகள் நடைபெற்றன; பால்டிமோர், பாஸ்டன், ரிச்மண்ட் முதலாக சுமார் 20 ஊர்களில் ட்ராம் வண்டிகள் ஓட ஆரம்பித்தன; கடைசிப் பத்தாண்டில் மோட்டர்கார் தயாரிக்கப்பட்டது.

அதே பத்தாண்டில் பறக்கும் யந்திரங்களைப்பற்றி எஸ். பி. லாங்க்லி மிகத் துணிச்சலான சோதனைகள் நடத்தி அதைப் பரிசோதித்தவரின் ஆயுள் காலத்திலேயே வெற்றியடைந்தார்; 'பறக்கும் யந்திரம்' நாடுகளின் சரித்திரத்தையே மாற்றி விட்டது.

புதுச் சாதனங்கள் வியாபார நிலையங்களின் வேலைகளைத் துரிதப்படுத்தின; பெண் குமாஸ்தாக்களும் 'வெள்ளை வேஷ்டி'த் தொழிலாளர்களும் காரியாலயங்களில் பெரிய எண்ணிக்கையில் இடம் பெற்றனர்; செய்திப் போக்குவரத்து அதிக முக்கியமாயிற்று. காரியாலயங்களிலும் பண்டக சாலைகளிலும் டெலிஃபோன் இல்லாமல் காரியம் நடவாது என்ற நிலை ஏற்பட்டது; அதேபோல டைப்ரைட்டரும்; ஷோல்ஸ், க்லிட்டன் (Sholes, Glidden) என்னும் இரண்டு மில்வாகிக்காரர்களால் முதலில் உண்டாக்கப்பட்ட டைப்ரைட்டர் 1873-ல் விற்பனைக்கு வந்தது. கூட்டல் கழித்தல் யந்திரங்களும், நாணயக் கூட்டல் யந்திரங்களும் கடைக் கணக்கில் பிசகுகளைக் குறைத்தன; விலாசம் அச்சிடும் யந்திரங்கள் பலமுறை எழுதும் துன்பத்தை நீக்கின; விரும்பாத விளம்பரங்களை திரும்பத் திரும்ப அனுப்புவோருக்கும் அவை உதவிப் பொதுமக்களைத் தொல்லைப்படுத்தின! தனித் தனி அட்டைப் பட்டியல் முறைப் புத்தகம் தேடுவோரின் வேலையை சுலபமாக்குவதால் அதை முதலில் புழக்கத்திற்குக் கொண்டுவந்த அமெரிக்க நூல் நிலையங்கள் சிறந்து விளங்கின. 'லேஅவுட் டைப்' அச்சுக்கோவை யந்திரம், ரோட்டரி அச்சு யந்திரம், மின்சார அச்சுப் பதிவு முறை ஆகிய புது வழிகள் பத்திரிகைத் தொழிலிலும், புத்தகத் தொழிலிலும் புரட்சிகரமானவை.

தொழில், வண்டிப் போக்குவரத்து, செய்திப் போக்குவரத்து, அனைத்துக்கும் மிகப் பயன்படும் மின் சக்தி மக்களின் தினசரி வாழ்விலும் நெருங்கிய இடம் பெற்றது. 1878-ல் ஓஹியோவைச் சேர்ந்த ஒரு இளம் என்ஜினியர் கரித்துண்டுகள் கொண்ட வில்-ஜ்வாலை (Carbon arc) விளக்குக் கண்டுபிடித்தான்; முற்போக்கான சில நகரங்கள் தெரு விளக்காக அதை உபயோகித்தன. தாமஸ் ஏ. எடிஸன் கண்டுபிடித்த வெள்ளொளி (Incandescent) கம்பி விளக்கு அதைவிடச் சௌகர்யமாக இருந்தது. மின்சார விளக்கின் எதிர்காலம் மிகப் பிரகாசமானது என்பது தெளிவாயிற்று. 1882-ல் எடிஸன் நியூயார்க்கில் மின்சாரத்தின் உற்பத்திக்கும் விநியோகத்திற்குமான ஏற்பாடுகள் செய்தார். கடைசிப் பத்தாண்டில் எடிஸன் சினிமா சம்பந்தமான ஆதிச் சோதனைகள் நிகழ்த்தினார்; அடுத்த பத்தாண்டில் சினிமா விஞ்ஞான விஷயமாக இராமல் வியாபார விஷயமாயிற்று; அமெரிக்காவின் பேச்சு, நடை உடை பாவனை யெல்லாம் உலகம் முழுதும் பரவிற்று. சமுதாய வாழ்க்கையில்

அதே முக்கியத்தன்மை கொண்ட ரேடியோ ஒலிபரப்பு முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு உபயோகத்திற்கு வந்து, இருபது வருஷங்களுக்குள் வீடுதோறும் புகுந்துவிட்டது. டெலிபோன், மின்சார விளக்கு, சினிமா, ரேடியோ ஆகியவை வாழ்க்கையின் நோக்கங்களை விஸ்தரித்து சுகம் அளிக்கின்றனவா; முடிவு நல்லதோ கெட்டதோ என்று சொல்ல முடியாவிட்டாலும், இவற்றால் மனிதனின் தனி மனப்பான்மை முறிவதோடு, சமுதாயப் பழக்க வழக்கங்கள் ஒருவகைப்படுகின்றன. அந்த விஞ்ஞானத் தத்துவங்களுக்கு வியாபார ரூபம் அளிப்பதற்கு முதலீடு அதிகமாகவும், வியாபாரத் திறமை மிகுதியாகவும் வேண்டியிருப்பதால், பெருவாரி வ்யாபார முயற்சியை ஊக்குவிக்க அவை மிகவும் உதவின.

முதல் அமெரிக்கக் கண்ட கிழக்கு மேற்கு ரெயில்பாதை பூர்த்தி செய்யப்பட்ட 40 வருஷங்களுக்குப் பிறகு பல குறுக்கு நெடுக்குப் பாதைகளும் தயாராகவே, ஆண்டுதோறும் ரெயில் மூலம் 1,000 மிலியன் டன் சரக்குகள் மேலும்கீழும் சென்றன. நீண்ட தளர்ச்சிக்குப் பிறகு வியாபாரக் கப்பல்கள் மறுபடி பலம் பெற்று ஏழு கடல்களிலும் அமெரிக்கக் கொடியைப் பிரபலப் படுத்தின. 'ஸால்ட் ஸந்து மேரீ கனல்' என்னும் படகுப் பாதையில் கனிப்பொருள்களும் தானியங்களுமாக 50 மிலியன் டன்கள் கடத்தப்பட்டன; பனமா வாய்க்கால் அட்லாண்டிக், பசிஃபிக் இரு சமுத்திரங்களுக்கும் மணம் புரிவிக்க இருந்தது. ஐரோப்பிய நெசவுச்சாலைகளின் தறிகள் அமெரிக்கப் பஞ்சுக்காகப் போட்டியிட்டுக் கூவின; அங்குள்ள தொழிலாளர்களோ அமெரிக்க தோதுமைக்காகவும் பன்றி இறைச்சிக்காகவும் ஆசைப்பட்டனர். போர் முடிந்த அரை நூற்றாண்டில் அமெரிக்க இறக்குமதியைவிட ஏற்றுமதியின் மொத்த மதிப்பு 2,250 மிலியன் டாலர் அதிகம்; 1910-க்குள் அமெரிக்காவின் வருஷ ஏற்றுமதி 2,000 மிலியன் டாலரைக் காட்டிலும் அதிகமாயிற்று.

தேவைக்குத்தக்க பாட்டாளிகள் கிடைத்து வந்தனர்; அவர்கள் எதிர்பார்த்த ஊதியமும் குறைவே. தோட்டங்களிலும் கிராமங்களிலிருந்தும், இத்தாலி, ஆஸ்ட்ரியா, போலண்டு தேசங்களின் ஜன நெருக்கமான நகரங்களிலிருந்தும் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக மிலியன் கணக்கில் கூலியாட்கள் தொழில் கேந்திரங்களில் வந்து குவிந்தனர். 1870-லிருந்து 1900-க்குள் கூலி வேலை செய்பவர்களின் மொத்தம் 12 மிலியனிலிருந்து 29 மிலியன் ஆயிற்று; அவர்களுள் தொழிற்சாலை வேலை செய்பவர்களின் மொத்தம் சற்று குறைய மூன்று மிலியனிலிருந்து ஏழு மிலியன் ஆயிற்று. அதைவிட முக்கியமான விஷயம் தொழிலில் ஈடுபட்ட பெண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு—மொத்தத்தில் எட்டுப்பேரில் ஒருஸ்திரீ இருந்தது

போக ஐந்து பேரில் ஒரு ஸ்திரீ என்ற விகிதம் கவனிக்கத்தக்கது. அதே காலத்தில் 10 முதல் 15 வரை வயதான பாலர்களின் எண்ணிக்கை ஒன்றே முக்கால் மில்லியன் ஆயிற்று. தென் ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் பரம ஏழைகளும் பயிற்சியற்றவர்களுமான மக்களிடையே இருந்து மேலும் மேலும் அதிகமான ஆட்கள் அமெரிக்காவுக்குக் கொண்டுவரப் பட்டார்கள்; அவர்களுள் பெரும்பாலோர் கிடைத்த கூலியை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்ளும் நிலையில் இருந்தார்கள்; 1909-ல் கைத்தொழில் துறையில் சராசரி வருடாந்தர ஊதியம் 500 டாலருக்குச் சற்று அதிகமாக இருந்தது. அக்காலத்தில் ஒரு டாலருக்கு ஆறு ராத்தல் இறைச்சி கிடைத்தாலும் இது மிகக் குறைவான சம்பளமே.

தொழிற் வளர்ச்சியின் சொரூபத்தில் இன்னும் ஒரு அம்சம் கவனிக்க வேண்டியிருக்கிறது—அதுதான் அரசாங்கத்தின் கடமை. உள்நாட்டுப் போர் கழிந்து ஒரு தலைமுறை காலத்திற்கு மத்திய சபைகள், ராஜ்ய சபைகள் அனைத்தும் வர்த்தக கோஷ்டிகளின் பிடியில் சிக்கியிருந்தன. யுத்த காலத்தில் அவசரத்திற்காக விதிக்கப்பட்ட டாரிஃப் பாதுகாப்பு நீடிக்கப்பட்டது. இரும்பு, எஃகு, தாமிரம், சலவைக்கல், உரோமவிலை, நெசவு, பீங்கான் ஆகிய தொழில்கள் விசேஷச் சலுகைகள் பெற்றன. ரெயில்வே அமைப்புக்கு மத்திய அரசாங்கம் அளித்த மானியங்களையும் சலுகைகளையும் பார்த்து ராஜ்ய அரசாங்கங்களும் ஸ்தல அரசினர் கழகங்களும்கூட அவ்வாறே செய்ததால் நிலங்கள், பொருள்கள், வரி விலக்குகள், வேறு பல சகாயங்கள் எல்லாம் சேர்ந்து மொத்தத்தில் 750 மில்லியன் டாலர் ரெயில்வேக்களுக்கு நன்கொடையாகக் கிடைத்தது. பொது இடங்களிலிருந்து தனிப்பட்டவர் மரங்கள் வெட்டிக்கொண்டாலோ, நிலத்தைத் தனதாக்கிக்கொண்டாலோ, அங்கு மாட்டு மந்தைகளை மேயவிட்டாலோ, சர்க்கார் அதிகாரிகள் கவனியாதது போலிருந்தார்கள்; இவ்வாறு அபகரித்தே பலர் பெருஞ் செல்வர் ஆனார்கள். தனி முயற்சிகளை ஒழுங்குபடுத்த காங்கிரஸ் அதிகம் விரும்பவில்லை; ராஜ்யங்கள் இயற்றும் தடுப்புச் சட்டங்கள் வழக்குகள் மூலம் நீதிபதிகளின் கவனத்திற்கு வரும்போது அவர்கள் ராஜ்யங்களின் சார்பாகவே பெரும்பாலும் தீர்ப்புக் கூறினார்கள். அரசாங்கத்தின் விதிகளையும் சமுதாயத்தின் சௌகர்யங்களையும் நிராகரித்துத் தனிப்பட்டவன் முரண்டு முன்னேறுவது ஒரு தோஷமாகத் தோன்றுமல் சிறப்பாகத் தோன்றிற்று; இருபதாம் நூற்றாண்டு பிறந்ததும் அவ்வெண்ணம் எதிர்க்கப்பட்டது.

இரும்பும் எஃகும்: அமெரிக்கத் தொழில் அபிவிருத்தியில் மிக முக்கியமான அத்தியாயம் இரும்பையும், எஃகையும் பற்றியது; அந்த வர்ணனையில் மேற்கூறிய அம்சங்களின் பரஸ்பர

மோதுதலைக் காணலாம். காலனிகள் ஆரம்பித்த நாட்களிலிருந்து இரும்புத் தாது வெட்டப்பட்டு வந்தது. 1619—ல் பெர்கெலி என்பவன் வர்ஜீனியாவில் ஒரு இரும்புப் பட்டறை அமைத்தான். கனெக்டிகட் மலைகளில் எதான் ஆலென் ஒரு 'அனல் காற்று உலைக்களம்' (Blast furnace) கட்டினான். ஆரம்ப காலத்து இரும்பு ஆலைகளில் மிக முக்கியமானவை வட ஜெர்ஸியில் இருந்தன; பிற்காலத்தில் பீடர் கூபர் ஒரு பெரிய தொழில் அமைத்தும், ஆப்ராம்ஹெவிட் எஃகுத்தயாரிப்புக்காக திறந்த உலைக்கள முறையை (Open hearth process) முதல் தடவையாக அனுசரித்ததும் அந்த ஸ்டேட்டில்தான். 1800-க்குப் பிறகு அல்லெகெனி மலைக்கு மேற்கே பிட்ஸ்பர்க்கில் இரும்பு ஆலைகள் செழித்தோங்கின; அதிர்ஷ்டவசமாக அப்பிரதேசத்தில் இரும்புத்தாது, நிலக்கரி, சுண்ணாம்புக்கல், விறகு எல்லாம் அருகருகே கிடைத்தன; அவ்விடத்துப் பட்டறைகள் தென் சைன்யத்திற்குப் பீரங்கிக் குண்டுகள் வார்த்துதவின.

எனினும் 1850—லும்கூட நாடு முழுதிலும் தயாரான இரும்புப் பாளங்களின் மொத்த எடை வருஷத்திற்கு அரை மில்லியன் டன்தான்; எஃகு உற்பத்தி மிகவும் சொற்பம். இரும்புத் தாது போதிய அளவு கிடைக்காததாலும், எஃகுத் தயாரிப்பின் செலவு அளவு கடந்து இருந்ததாலும் பெருவாரி முயற்சிகள் ஊக்கமளிக்கவில்லை. அந்த சமயத்தில் இரும்புத் தொழில் வரலாற்றில் புரட்சிகரமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1844-ல் வடக்கு மிஷிகனுக்கும் விஸ்கான்ஸினுக்கும் இடையே எல்லை நிர்ணயிக்கும் ஸர்வேயர்கள் தங்கள் திசை காட்டிக் காந்த ஊசிகள் நிலையற்று அசைவதைக் கவனித்தார்கள். அருகே பெரிய இரும்புப் பிரதேசம் இருப்பது தெளிவாயிற்று. அங்கு இரும்பு மலைகள் இருப்பதாக இந்தியர்கள் கதைகள் சொல்வதுண்டு. 1845-ல் ஒரு இந்தியத் தலைவன் தாமிரக் கனி தேடி சோதனை நடத்தும் ஒரு அமெரிக்கனை ஸுபீரியர் ஏரிக் கரையில் மார்க்கெட் குன்றுத் தொடருக்கு அழைத்துச் சென்று அங்குள்ள கனிப் பொருள் வளத்தைக் காட்டினான்; உடனே நூற்றுக்கணக்கானவர் வெறிபிடித்தவர் போல அம்மலைக் காடுகளில் கூடி, 'இந்த இடம் எனக்கு!' என்று போட்டியிட்டனர். கனமான தாதுப்பொருளை ரெயில் மார்க்கமாக அனுப்புவது சிரமமாக இருந்ததோடு செலவும் அதிகமாயிற்று; நீர்ப்பாதை அவசியமாயிற்று. ஹ்யூரான், ஸுபீரியர், இரீ ஏரிகளைச் சேர்க்கும் ஒரு படகு வாய்க்கால் வெட்டலாம் என்ற யோசனை கிளம்பிற்று; ஆனால் துணிவுள்ள ஹென்ரி க்ளே கூட அந்த எண்ணத்தை ஆதரிக்கவில்லை—"சந்திரலோகத்தில்கூட ஒரு வாய்க்கால் வெட்டலாம்"—என்று ஏளனமாகச் சொல்லிவிட்டான். ஆனால் சார்ல்ஸ் ஹார்வி என்பவனின் ஊக்கமான தலைமையில் தனிப்பட்ட சிலரே அந்தக் காரியத்தைச் செய்து

முடித்தனர். 1855—ல் அது கப்பல் போக்குவரத்துக்கு லாயக்காயிற்று; சீக்கிரத்திலேயே உலக வாய்க்கால்களுக்குள் அதிகப் போக்குவரத்து உள்ளது அதுவென்ற சிறப்பு அதற்குக் கிடைத்தது. பல இடங்களில் கப்பல் துறைகள் கட்டப்பட்டன; மிஷிகன் ஏரிக்கு மேற்கே மெஞ்சுமினி மலைச் சுரங்கங்களிலிருந்தும், மிஷிகன் விஸ்கான்ஸின் எல்லையில் மிக வளமான சுரங்கங்களிலிருந்தும் தாதுப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கவே, பல மிலியன் டன்கள் சரக்குப் படகுகள் மூலம் தொலையிலுள்ள சுத்தப்படுத்தும் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டன.

சில வருஷங்களுக்குள்ளாக ஸுபீரியர் ஏரிக்கு மேற்கே இன்னும் வளமான கனிகள் கிடைத்தன; அந்தப் பிரம்மாண்டமான ஏரியின் விளிம்பே இரும்பால் ஆனதுபோலத் தோன்றிற்று. 1870-ல் ஒரு சர்வேயர் தற்செயலாக வெர்மிலியன் மலைக் கனிகளைக் கண்டு பிடித்தான். 1884—ல் அங்கிருந்து ஏரிகளுக்கு ஒரு ரயில் பாதை போடப்பட்டது; அதன்பிறகு 25 ஆண்டுகளில் அக்கனிகள் 30 மிலியன் டன் தாதுப் பொருள்கள் அளித்தன. இதற்கிடையே டுலுத் பட்டணத்தைச் சேர்ந்த மெர்ரிட் சகோதரர்கள் ஐவர் ஏரிக்கு மேற்கே சோதனைகள் நடத்தி 1890—ல் டுலுத்துக்கு 75 மைல் வடமேற்கே மெஸாபிக் கனியைக் கண்டுபிடித்தார்கள்; உலகத்திலேயே நம்பமுடியாத அளவு வளம்பொருந்திய இரும்புக் கனி அது; ''அக்கனிகளுக்கெல்லாம் பாட்டியம்மா'' என்று மெஸாபியை அன்புடன் சொல்வதுண்டு. இரண்டு வருஷங்களுக்குள் அங்கு பெயரளவுக்கு ஒரு ரெயில் பாதை அமைந்தது. பத்தாண்டுகளுக்குள் 40 மிலியன் டன் மெஸாபி தாதுப்பொருள் பிட்ஸ்பர்க்கிலும் ஷிகாகோவிலுமுள்ள ராட்சச உலைக்களங்களில் போய் விழுந்தன.

வடக்கு மின்னெஸோடாவைச் சேர்ந்த அந்த இரும்புக் கனிகளுக்கு இருந்த சௌகர்யம் உலகத்தில் வேறெந்த இரும்புக் கனிகளுக்கும் கிடையாது; இரும்பு எஃகுத் தொழிலில் அமெரிக்கா முன்னணியில் இருப்பதற்கு அது ஒரு முக்கியக் காரணம். அவை அநேகமாய் முடிவற்றவை என்பதுஒருவிஷயம்; தாது பாறைகளுக்கிடையே பாதாளத்தில் பதிந்திராமல் தரைக்கடியில் சமீபத்தில் குறுணையாக இருந்தது என்பது அதை விட முக்கியமானது. மேலே படிந்திருந்த இலைச்சருகுகளை விலக்கினதும் 64 சத வீதம் இரும்புள்ள—மிக வளமான—தாதுப் பொருள் கிடைப்பது ஆச்சரியமே. அது வேறு கலப்பில்லாமல் சுத்தமாகவும் இருந்தது. நீராவிச் சக்தியால் இயங்கும் பெரிய சுளகு வெட்டிகள் அதைச் சுலபமாக வெட்டி அள்ளிக் குவிக்க முடிந்தது; ''பெரிய ஏரிகளு''க்கு மிகவும் அண்மையில் இருந்ததால் கப்பலேற்றும் செலவு குறைவாகவே ஆயிற்று.

ஆனால் செம்மண் போன்ற தாதுப் பொருளைப் பளிச்சிடும் எஃகாக எப்படி மாற்றுவது? உள்நாட்டுப் போருக்குச் சில

ஆண்டுகளுக்கு முன்னர் கென்டக்கி ஸ்டேட்டில் எட்டிவில் என்னும் சிற்றூரில் உல்லியம் கெல்லி என்றொரு கொல்லன் இருந்தான்; இரும்புக் கூழில் குளிர்ந்த காற்றை ஊதினால் சுத்தமான எஃகுக் கூழ் கிடைக்கும் என்ற மிக விசித்திரமான யுக்தி அவனுக்குத் தோன்றிற்று; அதை அவன் நிரூபித்தும் காட்டினான். சிறிது காலம் கழிந்து ஹென்ரி பெஸ்ஸெமர் என்னும் ஆங்கில என்ஜினியருக்கும் அதே யோசனை தோன்றிற்று. அதை நிரூபித்ததோடு அவன் பிரயோக முறையையும் சீராகத் திட்டமிட்டான். உண்மையில் அது மிக எளிய முறை, இளகிய இரும்பைத் தக்க வடிவமுள்ள—சுரைக்குடுக்கைபோன்ற—ஏனத்தில் ஊற்றி, அதில் காற்றை அழுத்தத்துடன் செலுத்தவேண்டும். கூழிலிருக்கும் கரி, மணல் பொருள் முதலான அன்னியப் பொருள்களுடன் பிராணவாயு சேருகையில் பலபயங்கர ஒலிகள் கூடிய அரக்கப்போர் நடக்கும்; ஏனத்தின் வாயிலிருந்து 40, 50 அடி உயரத்திற்கு சிவப்பாகவும், ஊதாவாகவும், ஆரஞ்சு நிறமாகவும், வெள்ளையாகவும் பளிச்சிடும் ஜ்வாலைகள் கிளம்பி தீக்கப்படும்போது சிறு வயதில் அனல் கக்கும் பாம்புகளைப்பற்றிப் படித்த கற்பனைக் கதைகளெல்லாம் நினைவுக்கு வரும். பத்து நிமிஷத்தில் இந்த ரசாயன யுத்தம் அடங்கும்; சுத்தமான இரும்பை வார்ப்புக்களில் ஊற்றி ஆற வைக்கலாம், அல்லது குறிப்பிட்ட அயல் பொருள்களை குறிப்பிட்ட அளவில் கூழுடன் சேர்த்து குறிப்பிட்ட தன்மைகளுள்ள எஃகைத் தயாரிக்கலாம். பிற்காலத்தில் 'திறந்த உலை' என்ற ஒரு புது முறை அமுலுக்கு வந்தது; ஆனால் சென்ற நூற்றாண்டின் கடைசிக் காலபகுதியில் பெஸ்ஸெமர் முறைதான் சிறந்து விளங்கிற்று.

இரும்புக் கனிப் பொருள், நிலக்கரி, விஞ்ஞான அறிவு மூன்றும் சேர்ந்து எஃகுத்தயாரிப்பைச் சாத்தியமாக்கின; அதை வெற்றிகரமான தொழில் ஆக்குவதற்கு முயற்சி, திறமை, மூலதனம் மூன்றும் தேவை. அது அவ்வாறிருக்க, பிட்ஸ்பர்க்குக்கு கார்னேகி (Cornegie) என்னும் ஸ்காட்லந்தியக் குடும்பத்தார் வந்து சேர்ந்தார்கள். அவர்களுள் ஒருவனை ஆண்ட்ரூ (Andrew) என்னும் பையன் ஒரு பஞ்சாலையில் கூலி வேலையில் அமர்ந்து, நீராவிக்கொதிக்கலமேற்பார்வையாளனை உயர்ந்து, தந்தியடிக்கக் கற்று, தந்திக் காரியாலயத்தில் சேர்ந்து, கடைசியில் பென்ஸில்வேனிய ரயில் பாதையில் வேலையிலமர்ந்தான்; யோக்கியன், சாமர்த்தியசாலி, உழைப்பாளி, விழிப்புள்ளவன், இனிமையாகப் பழகுபவன்; ஆகவே வயதில் பெரியவர்கள் அவனிடம் நம்பிக்கையும் நேசமும் கொண்டனர். அவன் தன் சேமிப்பை முன்யோசனையுடன் நல்ல இரும்பு, எண்ணெய்க் கம்பெனிகளிலும், எக்ஸ்பிரெஸ்கம்பெனிகளிலும், படுக்கும் வசதியுள்ள வண்டிக்கம்பெனிகளிலும் பங்குத்தொகையாகக் கட்டியிருந்ததால் அவனுக்கு முப்பது வயதாவதற்குள் அவனுடைய

வருஷவருமானம் 40,000 டாலர் 50,000 டாலர் என்றாகிவிட்டது. அவனுடைய நீண்ட நோக்கத்திற்கும் துணிந்த தீர்மானத்திற்கும் உதாரணமாக, 1865-ல் அவன் தன் வேறு அலுவல்களை மறந்து இரும்புத் தொழிலில் முழுக் கவனத்தையும் செலுத்தினான். சில வருஷங்களுக்குள் அவன் இரும்புப் பாலங்கள், தண்டவாளங்கள், ரெயில் என்ஜின்கள் முதலியன செய்யும் கம்பெனிகளை நிறுவினான், அல்லது அக்கம்பெனிகளில் பெரிய பங்குதாரானான். முப்பது வயதாயிருக்கும்போது அவன் நியூயார்க்கில் வசிக்கச்சென்று தன் பலகம்பெனிகளுக்கு விற்பனையாளனாகவும் வேறு ரெயில்பாதை அல்லது இரும்புக் கம்பெனிகளுக்குக் கமிஷன் ஏஜெண்டாகவும் உழைக்க ஆரம்பித்தான்.

பெஸ்ஸெமர் முறையைக் கார்னேகி சட்டென ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், ஏற்றபின் அதில் பூர்ண நம்பிக்கை கொண்டான்; 1875-ல் அவன் கட்டிய இரும்பு ஆலை நாட்டிலேயே மிகப்பெரியது. ஒரு வருஷத்திற்குள் இதர அமெரிக்க ஆலைகளின் மொத்தத்தைக் காட்டிலும் அதிக பெஸ்ஸெமர் எஃகு அவன் ஆலை தயாரித்தது. விழிப்புடன் புதிய சீரான முறைகளை அனுசரித்தல், போட்டிக்காரர்களுக்கு இன்னல் ஏற்படும்போது சட்டென்று அவர்களுடைய தொழிலை விலைபேசி வாங்குதல், அல்லது அழித்தல், முக்கியமான ரெயில்பாதை நிர்வாகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளுதல், வியாபார புத்திக்கூர்மையுள்ள கீழ்திகாரிகளின் சகாயம்—இக்காரணங்களால் எஃகுத் தொழிலில் அவன் விரும்பியதே பிறருக்குக் கட்டளையாயிற்று. வருடாவருடம் அவனுடைய சாம்ராஜ்யம் வளர்ந்தது—புது ஆலைகள், நிலக்கரிக்கனிகள், சுட்டகரி தயாரிக்கும் சூளைகள், ஸுபீரியர் ஏரியிலிருந்து இரும்புத் தாது, ''பெரிய ஏரிகளி''ல் கப்பல்கள், இரி ஏரியில் ஒரு துறைமுகப்பட்டணம், ஒரு இணைப்பு ரெயில்பாதை. ஒரே இனத்தைச் சேர்ந்த பல சாலைகள் அல்ல அவனுடைய 'சாம்ராஜ்யம்'; பரஸ்பர சம்பந்தமுள்ள பல வேறு தொழில்களின் சேர்க்கை, அவனுடைய இரும்பு எஃகுத்தொழில். இதர பத்துப் பன்னிரண்டு தொழில்களுடன் தொடர்பு கொண்டது; ரெயில்பாதை ஸ்தாபனங்களோடும் கப்பல் படகு கம்பெனிகளோடும் அது சலுகைகள் கொண்டாடலாம்; வேண்டிய அளவு விஸ்தரிக்க மூலதனம் இருந்தது, சிறந்த தொழிலாளர்கள் இருந்தார்கள், தொழில் நுட்பமறிந்த நிர்வாகிகள் இருந்தார்கள். அமெரிக்காவில் அதற்குமுன் அதுபோன்ற வியாபாரக்கோட்டை எழுந்ததில்லை.

இன்னும் ஒரே ஒரு முக்கிய அம்சம்—தேக உழைப்பு. இங்கும், இரும்புத் தொழில் வளர்ச்சியின் வர்ணனையும் கார்னேகி கம்பெனியின் அனுபவமும் ஒரு அச்சில் வார்த்தவை எனலாம். ஆரம்ப காலத்தில் இரும்புக் கனித் தொழிலாளிகள் ப்ரிட்டன்

தீவில் கார்ன்வால், வேல்ஸ் ஆகிய இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்தார்கள்; அதன் பிறகு ஸ்வீடென் நாட்டாரும் ஃபின்லண்ட் நாட்டாரும் வந்தார்கள்; கடைசியாக ஸ்லாவ்களும் மாக்யார்களும் கூட்டமாக வந்து குவிந்தார்கள்; உலைகளில் வேலை செய்தவர்கள் இடையேயும் இந்த வரிசையைக் காணலாம். அவர்கள் திடகாத்திரமுள்ளவர்கள்—இல்லாவிட்டால் வேலை கிடைத்தால் நரகலோகம்போன்ற உஷ்ணத்திலும் இரைச்சலிலும் விடுமுறை நாளில்லாமல் தினம் 12 மணி நேரம் எப்படி வேலைசெய்வது? பயிற்சிபெறுத பாட்டாளிகள் ஏராளமாகத் தொழில் யூனியன்கள் அதிகமாகத் தலையிடமுடியவில்லை; அப்படியாக அவர்கள் தலையிட்டபோது, அவர்கள் குரூரமாக அடக்கப்பட்டார்கள். கார்னேகியின் தொழில்முறை முற்றிலும் மட்டரகமானது.

தொழில் வளர்ந்து உலகத்தில் முதல் இடம் பெறுவதற்கு வேண்டிய முக்கியமான அம்சங்கள் ஒன்று தவிர பாக்கியெல்லாம் ஒருங்கே கூடியிருந்தன—கச்சாப்பொருள், போக்குவரத்து, விஞ்ஞான அறிவு, ஆராய்ச்சியில் வெற்றி, நிர்வாகத் திறமை, முன்னேக்கிய துணிவு, குறைந்த கூலி விகிதம், கடைசியாக, கட்டடங்களில் இரும்பு சேர்க்கப்படுவதாலும் ரெயில்பாதைகள் அதிகரிப்பதாலும் நிச்சயமான விற்பனை ஸ்தலங்கள். பாக்கி நின்றது—அயல்நாட்டுப் போட்டியிலிருந்து தற்காலிகமானப் பாதுகாப்பு. இரும்பு முதலாளிகள் கோரியபடியே சர்க்கார் இறக்குமதி வரியும் விதித்தது. வெற்றிக்குகந்த இந்த சூழ்நிலையில் அமெரிக்க இரும்பு, எஃகுத்தொழில் முன்னேறிற்று.

கடைசியாக, இன்னொரு வகையிலும் கார்னேகி கம்பெனியின் வரலாறு அமெரிக்கப் பெருவாரி வியாபார வளர்ச்சியின் உதாரணமாக நிற்கிறது. துணிந்து புதுவழி செல்லும் ஸ்காட்லாந்தியன் இரும்புத்தொழிலை வெகுநாள் தன் பிடிக்குள் வைத்திருந்தான்; ஆனால், இயற்கைவளம், போக்குவரத்து, தொழில் முறைகள் எல்லாவற்றிலும் நீடித்துத் தனி உரிமை அனுபவிப்பது முற்றிலும் முடியாத காரியம். மெஸாபி சுரங்கங்களில் மிக மதிப்புள்ளவை ராக்ஃபெல்லர் வசமிருந்தன; ''பெரிய ஏரிகளி''ன் கப்பல்கள் பலவும் அவனுக்கே சொந்தம்; தெற்கே விஸ்தாரமான கனிகள் ''டென்னெஸி கோல் அண்டு அயர்ன் கம்பெனி''யின் ஆதிக்கத்தில் இருந்தன; 'ஃபெடரல்', 'பென்ஸில்வேனியா', 'அமெரிக்கன் ஸ்டீல் அண்டு வைர்' போன்ற புது ஸ்தாபனங்கள் கார்னேகியின் ஏகாதிபத்தியத்திற்கு சவால் விட்டுக் கிளம்பின. போட்டியினால் ரோசமடைந்து, கார்னேகி புது சுரங்கங்கள் பெறுவதாகவும், சரக்குக்கப்பல்கள் இன்னும் சில கட்டுவதாகவும், புதுச்சாலைகள் அமைத்துக் குழாய், முள் கம்பி, தகடு முதலான நூற்றுக்கணக்கான சாமான்கள் தயாரிக்கப்போவதாகவும் மிரட்டினான். தொழில் துறையில் சர்வநாசப்

போர் மூண்டுவிடுமோ என்று தோன்றிற்று; திகிலடைந்த எஃகுத்தொழில் முதலாளிகள் பரஸ்பர க்ஷேமத்திற்காகவும் மொத்த பலத்திற்காகவும் பல பிரிவுகளை இணைத்து கூட்டுக் கம்பெனிகள் நிறுவவேண்டியிருக்குமோ என்று யோசித்தார்கள். கார்னேகிக்கு வயதாகிவிட்டது; வேலையிலிருந்து விலகித் தான தர்மங்களில் தன் சொத்தை விநியோகிக்க அவன் விரும்பினன்; போட்டிக்காரர்களுடன் சண்டையிடுவதைக் காட்டிலும் தானிட்ட விலைக்குத் தன் பங்குகளை விற்கவும் பிரியப்பட்டான். நாட்டின் முக்கியமான இரும்பு எஃகுச் சொத்துக்களுடன் அமைந்த ஒரு புது ஸ்தாபனத்தில் இணைந்துவிடும்படிச் சிலர் கூறிய யோசனையை அவன் ஏற்றுக்கொண்டான். 1901-ல் 1,400 மிலியன் டாலர் மூலதனத்துடன் 'யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன்' நிறுவப்பட்டது; நூறு வருஷங்களுக்கு முன் நாட்டின் மொத்த ஆஸ்தியாக இருந்த தொகையைக்காட்டிலும் பெரியது அது! ஜே. பி. மார்கனின் பாங்கு ஸ்தாபனம் அந்தக் கூட்டமைப்புக்குக் காரணமாக இருந்தது பொருத்தமானதே; மெஸாபி சுரங்கங்களை மிகத்திறமையுடன் விருத்தி செய்த ஜான் டி. ராக்ஃபெல்லர் அவ்விணைப்பால் பெரும் லாபம் அடைந்ததும் நியாயமே.

வியாபார சமஷ்டிகளும் ஏகாதிபத்தியமும்:—முப்பது வருஷங்களாகவே வர்த்தக உலகத்தில் உலவிவந்த ஒரு அரைகுறை யோசனை 'யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷனி'ல் உருப்பெற்றது; அந்த யுக்தி இன்றும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. தனித்தொழில் நிலையங்களை ஒரு சமஷ்டி அல்லது மத்திய ஆட்சியுள்ள வியாபார சாம்ராஜ்யமாகத் திரட்டுவதே அந்த யுக்தி. மிகவும் சக்திவாய்ந்த நிலையிலும்கூட கார்னேகி கம்பெனியின் ஸ்தானம் நாட்டிலுள்ள சுமார் 600 இரும்பு எஃகுத் தொழில்களில் ஒன்று என்பது தெரிந்திருக்க வேண்டும். அவற்றுள் பெரும்பாலானவற்றைத் தன்னுள் கிரகித்துக்கொள்வது அல்லது நஷ்டப்பட்டுக் கடையை மூடும்படிச்செய்வது என்பதே மேற்கூறிய கார்ப்பொரேஷனின் உத்தேசம்; நாட்டின் எஃகு உற்பத்தியில் மூன்றில் இரண்டுபங்கு அதன் பிடிக்குள் வந்தது. ஒரு தலைமுறை காலத்திற்குள் இருநூறு பிரம்மாண்டமான கார்ப்பொரேஷன்கள்நாட்டின் பாதி வியாபாரத்தைநடத்தின; பாக்கிப்பாதி மூன்றுலக்ஷம் சிறிய கம்பெனிகள் வசம் இருந்தது.

லிங்கன் காலத்து அமெரிக்காவில் சிறு வியாபார யத்தனங்களே உண்டு. தனி உரிமை வியாபாரம் இல்லையெனக்கொள்ளலாம்; ஆரம்ப நாட்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்த—பெயரளவுக்கான—ஏகாதிபத்தியக் காலனிகளுக்குப் பிறகு, 'ஆஸ்டர் ஃபர் கம்பெனி', புதிதாய் அமைந்த 'வெஸ்டர்ன் யூனியன்' ஆகிய இரண்டையும் ஓரளவுத் தனியுரிமை வியாபாரம் எனலாம். பல ஊர்களில், முக்கியமாக வடக்கே,

வாழ்க்கை பெரும்பாலும் தன்னடக்கமாக இருந்தது. உள்ளூர் ஆசாரிகளும் இதரத் தொழிலாளர்களும் தேவையான மரச் சாமான்கள், வண்டிகள், பாதரட்சைகள், இறைச்சி முதலான உணவுப் பொருள்கள் முதலியன தயாரித்து விற்றார்கள். கைத்தொழிலும் சுரங்கவேலையும் பரவலாகவும் சிறுவாரியாகவும் இருந்தன; இரண்டாயிரத்திற்கும் அதிகமான பட்டறைகளில் விவசாயக் கருவிகள் தயாராயின; எண்ணெய் சுத்திசெய்யும் சாலைகள் பென்ஸில்வேனியாவில் மாத்திரமே இருநூறுக்கும் அதிகமாக இருந்தன; 'காம்ஸ்டாக்' சுரங்கம் நூறு பங்குதாரர்களின் வசமிருந்தது. 40 வருஷத்தில் இதெல்லாம் மாறிவிட்டன. 'இன்டர் நாஷனல் ஹார்வெஸ்டர் கம்பெனி' அநேகமாய் எல்லா விவசாயக்கருவிகளையும் தயாரித்தது; எண்ணெய் சுத்தம் செய்யும் தொழில் அநேகமாகப் பூராவும் 'ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி'யின் தனி உரிமை ஆயிற்று; இரண்டு மூன்று கார்ப்பொரேஷன்கள் காம்ஸ்டாக் பங்குகள் அனைத்தையும் வாங்கிவிட்டன.

இந்த மாறுதல் உள்நாட்டு யுத்தத்தின்போது ஆரப்பமாகி எட்டாம் பத்தாண்டுக்குப் பிறகு காட்டுத் தீபோல் வளர்ந்தது. போட்டியால் ஒன்றையொன்று அழிக்கும் கம்பெனிகள் ஒன்று கூடினால் தயாரிப்பு விலை குறையும், அதைவிட முக்கியமாக, அவர்கள் நிர்ணயித்ததே பஜார் விலையாகும் என்பது நுட்ப புத்தியுள்ள வியாபாரிகள் உணர்ந்தார்கள்; ஆகவே கார்ப்பொரேஷன்கள் அமைந்தன; அதன் பிறகு உற்பத்தி, விலை, விநியோகம் முதலியவை நிர்ணயிக்கும் போட்டிக்காரர்களின் சதிக்குழு (Pool)கள் தோன்றின; அதன் பிறகு ஒருவகைப்பட்ட யத்தனங்கள் 'ட்ரஸ்ட்' எனத் திரண்டு ஏக போகம் அனுபவித்தன. கார்ப்பொரேஷன் என்றால் ஒரு பெரிய கற்பனை முதலாளி எனலாம்; சட்ட ரீதியான எல்லா லாபங்களும் அவன் அனுபவிப்பான்; ஆனால் நீதி சம்மதமான பொறுப்புகளிலிருந்து, பெரும்பாலும், நழுவிவிடுவான். அது ஒரு சிரஞ்சீவி; பங்குத் தொகை எழுப்பவோ, பாண்டுகள் மேல் கடன் வாங்கவோ அதற்குரிமையுண்டு; அதன் கடன் பொறுப்பு குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கியது—லிமிடெட்; முதல் அனுமதிக்குக் கட்டுப்பட்டு, அது நாட்டில் எங்கும் வியாபாரம் நடத்தலாம்; பல நிலைகளில் கார்ப்பொரேஷனின் இணைப்பை ட்ரஸ்ட் எனலாம்; எல்லாக் கார்ப்பொரேஷன்களின் தனித்தனிப் பங்குகளும் ட்ரஸ்டின் பங்குகள் ஆகும்; ட்ரஸ்டிகள் எல்லாவற்றின் காரியங்களையும் நிர்வகிப்பார்கள், காலக்கிரமத்தில் பெரிய வியாபார, இணைப்புகளுக்கெல்லாம் அப்பெயர் இடப்பட்டது. ட்ரஸ்டுகளின் சௌகரியங்கள் தெரிந்தவையே. பெருவாரியான இணைப்பு, மத்திய நிர்வாகம், நஷ்டமளிக்கும் பகுதிகளை நீக்குதல், வெவ்வேறு பகுதியின்

பேடென்டுகளை எல்லாப் பகுதிகளும் உபயோகித்துப் பயனடைதல், அதிகமான மூலதனத்தைக் கொண்டு வியாபாரத்தைப் பெருக்குதல், அயல்நாட்டு வியாபாரிகளுடன் போட்டியிடுதல், பாட்டாளிகளை நிர்ப்பந்தப்படுத்திக் குறைந்த செலவில் அதிக வேலை செய்விக்க முயலுதல், போக்குவரத்து நிர்வாகிகளிடமிருந்து சலுகைகள் பெறுதல், மத்திய அரசாங்கத்திலும் ராஜ்ய அரசாங்கத்திலும் செல்வாக்குடன் சௌகரியங்கள் செய்துகொள்ளுதல்—இவை ட்ரஸ்டுகள் சுலபமாய் செய்யக்கூடியவை.

வியாபார இணைப்பு எல்லா நாடுகளிலும் உண்டு; ஆனால் மற்ற இடங்களைக் காட்டிலும்—ஜெர்மனி விதிவிலக்காக இருக்கலாம்—ஐக்கிய நாட்டில் அது பலரும் கவனிக்கும்படிப் பிரபலமடைந்தது. லாபகரமான உபயோகத்திற்குத் தயாராயிருந்த இயற்கை வளங்கள் ஓரளவு அதன் காரணமாகும். ஆனால் வேறு காரணங்களும் இருந்தன. பல திக்குகளிலும் ரெயில் பாதைகள் பரவியதால் சுலபமாய் எட்டக்கூடிய விற்பனை ஸ்தலங்கள் பெருகின. அதி முக்கியமான செய்முறைகளைக் காப்பாற்றி பேடென்டு சட்டங்கள் ஒரு சிலருக்குத் தனி வசதிகள் அளித்தன. தாராளமான நில மானியங்களும், நிலச் சட்டங்களுக்குக் கோர்ட்டுகள் பரந்த நோக்குடன் அளித்த விளக்கங்களும், மரம், தாமிரம், நிலக்கரி முதலியவற்றில் பெருவாரி வியாபாரம் நடத்தக்கூடிய தீரர்களுக்கு மிகவும் அனுகூலமாக இருந்தன; சமஷ்டி அரசாங்க முறைப்படி ஒரு கம்பெனி பரந்த நோக்கமுள்ள ஒரு ஸ்டேட்டில் ரெஜிஸ்டர் செய்துகொண்டு எல்லா ஸ்டேட்டுகளிலும் வியாபாரம் செய்வது சாத்தியமாக இருந்தது; டாரிஃப் பாதுகாப்பு அயல் நாட்டுப் போட்டியை பலஹீனப்படுத்திற்று.

இந்த யுக்திகளை ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி முதலில் கையாண்டது. மேற்கு பென்ஸில்வேனியாவில் எண்ணெய் வர்த்தகர்கள் போட்டா போட்டியில் ஒருவர் கழுத்தை ஒருவர் வெட்டிக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு இளம் க்ளீவ்லண்ட் (ஓஹீயோ) காரன், அதிகம் பேசாமல் வைராக்கியத் தோற்றமுள்ளவன். அங்கங்கேயுள்ள எண்ணெய் நிலையங்களை வாங்கி வாங்கி, எல்லாவற்றையும் சேர்த்து ஒற்றைக் கம்பெனி நிறுவினன். அவன் பெயர் ராக்ஃபெல்லர் (அல்லது ராகெஃபெலர் Rockefeller). 'ஸௌத் இம்ப்ரூவ்மெண்ட் கம்பெனி' என்னும் ஒரு அற்பாயுள் கம்பெனியின் நிர்வாக அமைப்பை அவன் பயன்படுத்திக் கொண்டான்; நியூயார்க் சென்ட்ரல் ரெயில்வே, இரீ ரெயில்வே ஆகியவை அளித்த கட்டணச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு, க்ளீவ்லண்டின் எண்ணெய் சுத்தி செய்யும் தொழில் முழுதும் தன் வசப்படுத்திக் கொண்டான். அதன் பிறகு, அதே நோக்கத்துடன் அவன்

நியூயார்க், பிலடெல்ஃபியா, பிட்ஸ்பர்க் ஆகிய இடங்களுக்கும் சென்றான்; மிகத் திறமை வாய்ந்த விற்பனைத் திட்டம் ஒன்றை அவன் நிறுவினன். அதன் பிறகு, எண்ணெயைப் பீப்பாக்களில் எடுத்துச் செல்லாமல் கூடியவரை குழாய்கள் மூலம் வெகு தூரம் அனுப்பும் முறை ஆரம்பமாயிற்று. எண்ணெயைக் கடத்துவதிலும் சுத்தம் செய்து பெட்ரோலியம் தயாரிப்பதிலும் ராக்ஃபெல்லர் ஏகபோக உரிமை அனுபவித்தான் எனலாம். 1882-ல் ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி, முதல் பெரிய ட்ரஸ்ட் என்ற கீர்த்திபெற்றது; ஓஹியோக் கோர்ட்டார்கள் அதைச் சட்ட விரோதமானது என்று கூறித்தார்கள்; உடனே அது உதாரமான சட்டங்களுள்ள நியூ ஜெர்ஸியில் பல கம்பெனிகளை நிர்வகிக்கும் ஹோல்டிங் (Holding) கம்பெனியாக மறு பிறப்புப் பெற்றது. 1900-க்கு முன்பே ராக்ஃபெல்லர் சீர்கெட்டிருந்த எண்ணெய்த் தொழிலைச் சீர்ப்படுத்திப் போட்டிக்காரர்கள் பலரை விலக்கி, விலைகளைக் குறைப்பதோடு நம்பத்தகாத ஆஸ்தியும் சேர்த்து, நாட்டின் மிகப் பெரிய வர்த்தக ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்தான்.

வேறு இணைப்புக் கம்பெனிகளும் தனி உரிமை நிலைகளும் வேகமாய் அவ்வழியைப்பற்றி ட்ரஸ்டுகள் ஏற்படுத்தின. ராக்ஃபெல்லர், கார்னேகி இருவரைப் பின்பற்றிப் போரிடும் தன்மையுள்ள வணிகர்கள் தமக்காகப் பெரிய "ராஜ்யங்கள்" அமைத்துக் கொண்டார்கள். 1904-ல் எடுத்த ஒரு கணக்குப்படி, 7,000 மிலியன் டாலர் மூலதனமுள்ள 319 தொழில் ட்ரஸ்டுகள் சுய ஆதீனமாகத் தொழில் நடத்திய 5,300 ஸ்தாபனங்களை விழுங்கிவிட்டன என்றும், ரெயில்வே, மின்சார விநியோகம் போன்ற பொதுநல வியாபாரங்களில் 2,400 சிறிய யத்தனங்களை 13,000 மிலியன் டாலர் மூலதனம் கொண்ட 127 ட்ரஸ்டுகள் உறிஞ்சிவிட்டன என்றும் தெரிந்தது.

சாமானிய மனிதனின் தினசரி வாழ்க்கை, முக்கியமாக நகர வாசியின் வாழ்க்கை, இந்த மாற்றமைப்பால் மிகவும் பாதிக்கப்பட்டது. அவன் உணவு, உடை, வீட்டின் தட்டுமுட்டுச் சாமான்கள், தொழில் ஆயுதங்கள், போக்குவரத்து சாதனங்கள்—அநேகமாய் எல்லாம் ட்ரஸ்டுகளால் செய்யப்பட்டவை அல்லது செய்விக்கப்பட்டவை. ஒரு தலைமுறைக்கு முன் இருந்ததைக் காட்டிலும் உணவும் வாகனமும் அதிகத்திருப்தியளிக்கலாம். ஆனால் உள்ளூர் வியாபார நிலை பாதிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கும்போதோ—! ஸ்தானிகத் தொழில் வறண்டு போயிற்று, தொழிற்சாலைகள் நசித்தன, அல்லது தொலைவிலுள்ள ஒரு முதலாளியின் வசமாயின, சொத்துகள் கிழக்குப்புற பாங்குகள் அல்லது இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளிடம் அடகு வைக்கப்பட்டன, மக்கள் தம் ஊரிலுள்ள ஒரு

மனிதனுக்காக உழைக்காமல் தொலைவிலுள்ள ஒரு ஸ்தாபனத்திற்காக உழைத்தார்கள். உணர்ச்சியற்ற அந்தக் கார்ப்பொரேஷனின் கொள்கைகளில் உண்டாகக் கூடிய மாறுதல்கள் அவர்கள் வசமில்லை.

லைகத்தொழில், சுரங்க வேலை இவ்விரண்டில் தான் இது போன்ற இணைப்பும் வலுப்படுத்துதலும் நடந்தது என்பதற்கில்லை. வண்டிப் போக்குவரத்திலும், செய்திப்போக்குவரத்திலும் இம்மாற்றமைப்பு மிகவும் கவனிக்கக் கூடியதாற்று. ரெயில்வே அமைப்புக்கள் திறமையுடன் வேலைசெய்யச் சிதறலாகக் கிடந்த பல யத்தனங்களை ஒன்றுக்குவது அவசியம் என்று வாண்டெர்பில்ட் (Vanderbilt) ஆதியிலேயே உணர்ந்தான்; 1860-70-ல் நியூயார்க்நகருக்கும்பஃபலோவுக்கும் இடையேயிருந்த 13, 14 பாதைகளை அவன் ஒன்றுக்கினான்; அடுத்த பத்தாண்டில் ஷிகாகோவுக்கும் டெட்ராயிட்டுக்கும் செல்லும் பாதைகளை அவன் வாங்கியதால் 'நியூயார்க் ஸென்ட்ரல்' என்ற ஒரு வசப்பட்ட அமைப்பு உண்டாயிற்று. வேறு கூட்டமைப்புக்களும்நடந்துகொண்டிருந்தன;சீக்கிரத்தில் பெரும்பாலான பாதைகள் தொலைப் பாதைகளாகவோ, 'ஸிஸ்டம்' களாகவோ மாற்றியமைக்கப்பட்டன; வாண்டர்பில்ட், கோல்ட், ஹாரிமன், ஹில் ஆகியோர் ரெயில்வே அதிபர்களாகவும், மார்கன், பெல்மான்ட் இருவரும் பாங்கு அதிபர்களாகவும் விளங்கினர். இல்லினையி சென்ட்ரல், யூனியன் பஸிஃபிக், ஸதர்ன் பஸிஃபிக் ரெயில்வேக்களையும் மேலும் ஐந்நாறு சில்லறைப் பாதைகளையும் ஒரு திட்டத்தின்கீழ் கொண்டு வந்து நாடு முழுதும் ஒரு ஸ்தாபனமாக்க வேண்டுமென்பது ஹாரிமனின் கனவு; அதில் பெரும்பாகத்தைச் செய்து காட்டி மார்கன் உதவினான்.

இந்த இணைப்பு முறையின் சிகரம் போன்றது ''பணட்ரஸ்ட்''; மார்கன் பாங்கின் அபிவிருத்தி இதற்கொரு உதாரணமாகும். ஜே. பி: மார்கன் என்பவன் பிலடெல்ஃபியாவில் பல ஆண்டுகளாக ஸ்தாபிதமான ட்ரெக்ஸெல் பாங்கின் ஒரு பங்குதார். 1873-ல் தேசியக் கடனுகிய 750 மிலியன் டாலரைப் பற்றிய பிரச்னை கிளம்பியபோது ஜே குக் என்னும் தனவந்தனுக்குச் சமமாக அரசாங்கத்திற்கு சகாயம் புரியும் அளவுக்கு ட்ரெக்ஸெல்-மார்கன் கம்பெனி வலுவடைந்திருந்தது. அதே வருஷம் ஜே குக் உலகம் அதிசயிக்கும் முறையில் மூறிவடைந்ததால் மார்கன் பாங்கு மேலும் திடமடைந்தது; சில வருஷங்கள் கழித்து அது பெரிய அளவில் நியூ யார்க் சென்ட்ரல் பங்குகளை வெளி நாடுகளில் லாபகரமாக விற்றதும் அதன் கீர்த்தி நிடமாய் வேரூன்றிற்று, அந்த ரெயில்வேயோடு ஏற்பட்ட வியாபார சிநேகம் அடுத்த இருபது வருஷங்

களில் பாங்கின் முக்கியமான ஈடுபாடு ரெயில்வேக்களுடன் இருக்கும்படி செய்தது.

1880-90-ல் மார்கன் ரெயில்வேக் கம்பெனிகளுக்குப் பண உதவி செய்தும் அவற்றின் நிர்வாகத்தை ஒழுங்கு படுத்தியும், அந்த முக்கியமான தொழிற்களத்தில் தன் செல்வாக்கை விஸ்தரித்துக்கொண்டு போனான். 1893-ல் நிகழ்ந்த வியாபாரக் குழப்பத்தில் ரெயில்வேக்களில் பாதி முறிவு நிலையடைந்து நிஜவர் கைக்கு வந்துவிட்டன; எங்கு பார்த்தாலும், மார்கன் காப்பாற்றினால்தான் உண்டு—என்ற நம்பிக்கை பரவிற்று. ரெயில்வேத் தொழில் சாதாரணமாக நல்ல லாபம் அளிக்கக் கூடியதாகையாலும், மார்கன் வெளி நாடுகளில் விற்ற பத்திரங்கள் மதிப்பிழந்தால் அபகீர்த்தி ஏற்படுமாகையாலும் மார்கன் உதவி புரிய முன் வந்தான். குழப்ப நிலை நீங்கும்போது ஒரு டஜன் பெரிய ரெயில் ஸ்தாபனங்களில் மார்கனின் ஈடுபாடு மிகவும் வலுத்திருந்தது.

இதன் கருத்து மார்கன் வேறு துறைகளில் அக்கறை கொள்ளவில்லை என்பதல்ல; இந்த நூற்றாண்டின் ஆதியில் மார்கனின் வாக்குக்குக் கட்டுப்படாத பெரிய வர்த்தக நிலையமே நாட்டில் கிடையாது எனலாம். பத்துப் பதினைந்து பெரிய பொதுப் பிரயோஜன வர்த்தக நிலையங்களுக்கும் அவன் உதவி புரிந்தான். பலரக வியாபாரத் துறைகளிலும் சேர்ந்து 341 டைரெக்டர் பதவிகள் மார்கன், ராக்ஃபெல்லர் கோஷ்டியாரின் வசம் இருப்பதாக 1912-ல் காங்கிரஸ் கமிட்டியொன்று கணக்கிட்டது. ''இந்த நாட்டின் மிகப் பெரிய ஏகாதிபத்தியம் பண ஏகாதிபத்தியந்தான்'' என்று வுட்ரோ வில்ஸன் கூறினார்.

இதுபோன்ற இணைப்புகளும் ட்ரஸ்டுகளும் வளர்வதிலிருந்து அறியக்கூடியது என்ன? சொத்தின் சொந்தக்காரன் ஸ்தலத்தில் வசியாமல் தொலையில் வசித்தல் என்னும் தோஷத்தை அவை அதிகப்படுத்தின. எங்கெங்கோ இருந்த பெரிய சுரங்கங்கள், மர அறுவைச்சாலைகள், ரெயில் பாதைகள் முதலியவற்றை நியூ யார்க்கில் காரியாலயம் கொண்ட கார்ப்பொரேஷன்கள் நிர்வகித்தன; கோடிக்கணக்கானவரின் லாப நஷ்டங்கள் ஒருசிலரின் கையில் சிக்கியதால் பெரிய அரசர்களைக் காட்டிலும் அதிக அதிகாரம் அவர்களுக்குக் கிடைத்தது. வடகிழக்கே ஒரு சிறு பகுதியின் கையில் நாட்டின் பொருளாதார நிலை பிடிபட்டதால் முன்பிருந்த கட்சியாட்சி போய்ப் புதிதாய் ஒன்று அமைந்தது. கம்பெனிகளின் பொருள் ஸ்திதியோ கொள்கைகளோ அறியாத, பொறுப்பற்ற, பல்லாயிரப் பங்குதார்கள் ஒருபுறம், நிர்வாகிகள் ஒருபுறம் என்றாகிவிட்டது; மூலதனங்கள் புது வகைகளில் திரண்டதால் அதை நிர்வகிப்பவர்கள் ஸ்டேட் சபைகளில் மாத்திரமல்ல, மத்திய சபைகளிலும் தங்களுக்கனுகூலமாகவே

காரியங்கள் நடத்தி, உள்நாட்டு அரசியல் கொள்கைகளிலும் அயல்நாட்டுக் கொள்கைகளிலும் தலையிட முடிந்தது. ட்ரஸ்டுகள் கழுத்தறுப்புப் போட்டிகளை விலக்கி, திறமையுடன் நிர்வகித்து, அவசியமான சீரமைப்புகளுக்கும் முன்னேக்கமான ஆராய்ச்சிகளுக்கும் பணம் ஒதுக்கி, பெருவாரி உற்பத்தியால் விலைகளைக் குறைத்தன என்பதில் சந்தேகமில்லை—ஆனால் சமுதாய வாழ்க்கைக்குப் பெரிய நஷ்டம் உண்டாக்கியே அவை அவ்வாறு செய்தன.

அரசாங்கம் தலையிடுதல்; நாலாபுறமும் கவனமாய்ப்பார்த்து பெரிய வியாபார யத்தனங்களெல்லாம் சமுதாயத்திற்கல்லாமல் ஒரு சிலருக்கு லாபமளிப்பதை உணர்ந்தவர்கள் குடியரசு நீடித்திருக்குமா என்றும் சந்தேகித்தனர். ரெயில்வேக்கள் பெரும் நிலப் பகுதிகளைப் பதுக்கி வைத்தல், அளவு கடந்த கட்டணம் விதித்தல், ஓரவஞ்சனை காட்டுதல், இவற்றைக் கண்டு ஜனங்கள் மனம் கசந்தனர்; ராக்ஃபெல்லரும் கார்னேகியும் போட்டிக்காரர்களை நசுக்க மிகத் தகாத காரியங்கள் செய்வதையும், பெரிய கார்ப்பொரேஷன்கள் கூலிகளின் சம்பள விகிதத்தைக் குறைப்பதற்காகக் கையாளும் கொடுமைகளையும் விஞ்ஞானப் புதுமைகளின் மூலம் கிடைத்த அதிக லாபத்தையெல்லாம் ட்ரஸ்டுகள் தம் பையில் போட்டுக்கொள்வதையும் கார்ப்பொரேஷன் ஆட்கள் சட்டங்களை தமக்கனுகூலமாக விதித்துக்கொள்வதையும் கார்ப்பொரேஷன் வக்கீல்கள் வரிகளையும் சட்டங்களையும் மீறுவதற்கான தந்திரங்கள் கற்பிப்பதையும் கண்ட பொது மக்கள் இவற்றின் முடிவுதான் என்ன என்று நடுங்கினர்.

தனி உரிமை—பொதுவாகவே சட்டவிரோதமானது; பல ஸ்டேட்டுகள் தம் நிர்மாண விதிகளில் அதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தன. ஆனால் நடைமுறையில் அந்த மறுப்புப் பயன்படவில்லை. ஒன்பதாம் பத்தாண்டில் பல ஸ்டேட்டுகள் கண்டிப்பான சட்டங்கள் இயற்றி மிகவும் துர்நடத்தையுள்ள ட்ரஸ்டுகளைக் கலைக்கவும் செய்தன. ஆனால் ஒரு ஸ்டேட்டில் கலைக்கப்பட்ட ஸ்தாபனம் சட்ட அனுமதியும் தளர்ச்சியுமுள்ள இன்னொரு ஸ்டேட்டில் ரெஜிஸ்டர் செய்துகொண்டு பழைய இடத்திலேயே தொழில் நடத்தலாம் என்ற நிலைமை இருந்தது. ஆகவே இவ்விஷயத்தை ஃபெடெரல் அரசாங்கம்தான் ஒழுங்குபடுத்த முடியும், ஸ்டேட் அரசாங்கத்திற்குச் சக்தியில்லை என்பது தெளிவாயிற்று.

1876-லேயே, கோடீசுவரரும் அறிவாளியுமாகிய பீடர் கூபர் ஜனதிபதிப் பதவிக்காக முயலுகையில் "நாம் சுதந்திர ஸ்தாபனங்களுக்காகப் போராடினோம்; ஆபத்து முற்றிலும் விலகவில்லை; கொஞ்சந்தான் குறைந்திருக்கிறது.....அப்பொழுது பிறவியால் பிரபு குலத்தார் இருந்தார்கள்; இப்

பொழுது செல்வம் உண்டாக்கிய உயர் ஜாதி வளர்ந்துகொண்டிருக்கிறது; அது நம் நாட்டிற்கு ஒரு சாபம் போன்றதாகும்" என்று கூறி எச்சரித்தார். ஒன்றிரண்டு வருஷங்களில் சுபிக்ஷம் நடமாட ஆரம்பித்ததும் அந்தக் கிளர்ச்சி சற்று அடங்கிற்று; ஆனால் அடுத்த சில ஆண்டுகளில் ட்ரஸ்ட் ஆபத்தானது என்ற எண்ணம் மறுபடி பரவிற்று. 1884-ல் தனி உரிமை எதிர்ப்புக் கட்சியொன்று இருந்துவந்தது; ஆனால் தேர்தலில் டிமோக்ராட் கட்சிக்கு வெற்றி கிடைக்கக்கூடும் என்ற பரபரப்பில் மேற்கூறிய கட்சி அதிகப் பேரின் கவனத்தைக் கவரவில்லை. அடுத்த நான்கு ஆண்டுகளில் மேலும் ஐந்தாறு ட்ரஸ்டுகள் தோன்றவே நாடு மறுபடி விழிப்படைந்தது. ஜனதிபதி க்ளீவ்லண்ட் காங்கிரஸ் சபையில் "சட்டம் இட்ட வழியில் ஜாக்கிரதையாகச் சென்று சமுதாயத்திற்கு சேவை செய்ய வேண்டிய கார்ப்பொரேஷன்கள் மக்களின் எஜமானர்கள் ஆகிக் கொண்டிருக்கிறார்கள்" என்று சவலியுடன் சொன்னார். நாட்டின் இரு பெரும் கட்சிகளும் ஏகபோக உரிமையை, எந்த உருவத்தில் ஆனாலும், எதிர்த்தன.

இந்தக் கிளர்ச்சியால் உண்டான முதல் பிரயோஜனமான பலன் ரெயில்வேக்களின் ஒழுங்கமைப்பு. 1870-லிருந்தே மிகவும் துன்பப்பட்டக் குடியானவர்கள் ரெயில்வேக் கம்பெனிகளின் தனி உரிமையை எதிர்த்துக் கூச்சலிட்டு, கட்டணங்கள் அதிகம், கவனிப்பு மிகக் குறைவு, பிற்காலத்தில் லாபத்தில் விற்பதற்காக மிலியன் கணக்கான ஏக்கர் நிலம் தாரிசாகக் கிடக்கிறது என்று குற்றப் பட்டியல் படித்தார்கள். விவசாய சங்கங்களின் வேண்டுகோளின் பேரில் மத்திய மேற்கு ராஜ்யங்கள் கட்டண விதிதங்களுக்கு எல்லையிட்டு, தனிச் சலுகைகள் தவறென்று குறிப்பிட்டு, ஒரே பாதையில் அதிக தூரத்தைக் காட்டிலும் குறைந்த தூரத்திற்கு அதிகம் வசூலிக்கும் விபரீத நிலையைக் கண்டித்துச் சட்டங்கள் விதித்தன. சிலருக்கு இலவசச் சீட்டு அளிக்கப்படுவதும் கண்டிக்கப்பட்டது. ரெயில்வே ஸ்தாபனங்கள் இந்தச் சட்டத்தை உடனே எதிர்த்து, முறையான கோர்ட்டு விசாரணையில்லாமல் தங்களுக்கு நஷ்டம் விளைவிக்கப்பட்டது என்றும் ஸ்டேட்டுகளுக்கிடையே நடைபெறும் வியாபாரத்தின் மேல் காங்கிரஸுக்குள்ள அதிகாரம் பாதிக்கப்பட்டதென்றும் குறை கூறின.

1876-ல் 'மன் × இல்லினாயி' போன்ற வழக்குகளில் முக்கியமான தீர்ப்புகள் கூறிக்கோர்ட்டுகள் ராஜ்யச் சட்டத்தை ஆதரித்தன; பொது நலன் அல்லது உபயோகத்தைப் பாதிக்கும் நிலையை சீர்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திற்குண்டு என்ற காரணம் கூறப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் அதிகார க்ஷேத்திரத்தில் ஸ்டேட் தலையிடுதல் என்ற விஷயத்தைப்பற்றி நீதி ஸ்தலங்கள் நிர்ணயமாக ஒன்றும் சொல்ல முடியவில்லை.

பிற்காலத்துத் தீர்ப்புகள், ஒரு ஸ்டேட்டின் எல்லைக்குள் அடங்கியகாரியத்தைப்பற்றியஅந்தராஜ்யமட்சட்டம் இயற்றலாம், பல ஸ்டேட் விஷயமானால், மத்தியஅரசாங்கம் தான் இயற்ற வேண்டும் என்று கூறின. ஆனால் பெரும்பாலான வியாபாரம் ராஜ்ய எல்லைக்குள் அடங்கவில்லை; ஆகவே காங்கிரஸ் சந்தேகத்திற்கிடமல்லாமல் ஒரு தீர்ப்புக் கூறுவது அவசியமாயிற்று.

1887-ல் காங்கிரஸ் 'ஸ்டேட் - இடை - வியாபார'ச் சட்டம் இயற்றிற்று. முன் கூறிய கெட்ட பழக்கங்களை ஒழித்து ரெயில்வேக்கும் லாபமளிக்க வேண்டும், மக்களுக்கும் நன்மை புரியவேண்டும் என்பது அதன்நோக்கம். கட்டணங்கள் 'நியாயமாக' இருக்கவேண்டும் என்று அது கூறிற்று. தெளிவோ வரையறுப்போ இல்லாத உத்தரவுகள் ஒருபுறமிருக்க, காரியங்கள் அந்தச்சட்டப்படி நடக்கின்றனவா என்று கவனிக்க ஒரு கமிஷன் அமைக்கவும் அதில் ஒரு நிபந்தனை இருந்தது; அது முக்கியமான விஷயம். பிற்காலத்தில் அதே போன்ற பல மேல் பார்வைக் கமிஷன்கள் அமைய இருந்தன; அவை அரசாங்கத்தின் நான்காவது இலாக்கா ஆயின. மேலே கூறிய சட்டம் வெகு காலத்திற்கு செயலாற்றுமளவே இருந்தது; ஆனால் தொடர்ந்து புதுச் சட்டங்கள் வந்தாலும், கமிஷனும் கோர்ட்டுகளும் அதிகக் கண்டிப்புடன் நடந்து கொண்டதாலும் ரெயில்வேக்களின் கெட்ட பழக்கங்களில் மிகக் கேவலமானவை படிப்படியாக அகற்றப்பட்டு வந்தன; கட்டணங்களும், வேலைத் திட்டங்களும் முறையாக இருந்தன.

டிரஸ்டுகளைக் கட்டுப்படுத்துவதைக் காட்டிலும் ரெயில் ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்துவது சுலபமாக இருந்தது. ட்ரஸ்டுகளின் விஸ்தாரமும் சிக்கலான அமைப்பும் அந்தச் சிரமத்திற்குக் காரணமல்ல என்றும் கூறலாம். பெரிய வர்த்தக அமைப்பைக்கண்டு மிரளுவது ஒருபுறமிருக்க, அமெரிக்கர் அதைப் போற்றவும் செய்தார்கள். தனி உரிமை நிலையின் ஆபத்திலிருந்து தப்ப முயலும்போதே, அவர்கள் பெருவாரி உற்பத்தியின் நன்மைகளை அடையவும் வீண் செலவுண்டாக்கும் இரட்டிப்பு வேலையை விலக்கவும் விரும்பினர்கள். அரசாங்கம் வியாபாரத்தை ஒழுங்கு படுத்தவேண்டும் என்ற எண்ணம் ஒருபுறம்; தனி முயற்சிகளின் சிறப்புக்களில் நம்பிக்கை மறுபுறம்—ஒரே அச்சில் வார்க்கப்படாத 'முரட்டுத் தனித்தன்மை' அவர்களுடைய லட்சியங்களில் ஒன்று. ட்ரஸ்டுகளை நிர்தோஷமாக்கவேண்டுமே தவிர அவற்றைத் தகர்க்கக் கூடாது என்பது அவர்களுடைய உண்மையான விருப்பம். அதைத்தான் தியாடர் ரூஸ்வெல்ட் என்னும் ஜனாதிபதியும் (1901—1909) இவ்வாறு சொன்னார்:

> ''கார்ப்பொரேஷன்களை ஒழித்துவிடவேண்டும் என்பதல்ல நம் கருத்து; உண்மையில் இந்தப் பெரிய இணைப்புக்கள் தற்காலத் தொழில்முறை வளர்ச்சிக்கு மிக அவசியம்...நாம் கார்ப்பொரேஷன்களை எதிர்க்கவில்லை; அவற்றில் இடம்பெற்ற தீமைகளை ஒழிக்க முயலுகிறோம்.''

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்—என்ற இந்த மனப்பான்மை பரிகசிக்கப்பட்டது.

'அவ்வளவு வேகமாக வேண்டாம்'—என்பதுதான் நாட்டாரின் மனப்பான்மை. காங்கிரஸ் அதிவேகமாக ஒன்றும் போய்விடவில்லை. ஸ்டேட்டுகள் தனித்தனியாக டிரஸ்ட் விஷயத்தில் ஒன்றும் செய்யமுடியாது என்பது தெரிந்ததும் காங்கிரஸ் நடவடிக்கை எடுப்பது அவசியமாயிற்று. 1890-ஆம் வருஷத்து 'ஷெர்மன் ட்ரஸ்ட் எதிர்ப்பு'ச் சட்டம் இணைப்பு நடவடிக்கைகளையும் தனி உரிமை நிலையையும் தண்டனைக்குள்ளாக்கிற்று. அந்தச் சட்டத்தைக்கொண்டு ஸ்டாண்டர்ட் ஆயில், உஸ்கி ட்ரஸ்ட், சர்க்கரை ட்ரஸ்ட் முதலியவற்றை அரசாங்கம் தைரியமாகத் தாக்கலாம் என்று பலரும் நினைத்தார்கள். ஆனால் அதிகாரிகள் அரை மனதுடன் சில தனி உரிமைஸ்தாபனங்களை முறிக்க முயன்றபோது நீதிஸ்தலங்கள் வியாபாரிகளுக்கு அனுகூலமாகத் தீர்ப்புக் கூறிவிட்டன. அரசாங்கத்தின் பெருந்தோல்வியைத் தொடர்ந்து பத்து ஆண்டுகளில் மிகப்பெரியதும், மிக அபகீர்த்திபெற்றதுமான ட்ரஸ்டுகள் நிறுவப்பட்டன.

யூனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்டீல் என்ற பெரிணைப்பு நிறுவப்பட்டதும் பொதுமக்களின் ஆட்சேபணை புயல்போலக் கிளம்பிற்று. பத்திரிகைகளிலும் மேடைகளிலும் இருந்து எதிர்ப்புப் பிரசாரம் வெள்ளப்பெருக்கெடுத்தது. எண்ணெய் ட்ரஸ்ட், இறைச்சி ட்ரஸ்ட் முதலியவற்றின் ஊழல்கள் வெளியிடப்பட்ட புத்தகங்கள் பல்லாயிரமாக விற்பனையாயின; 'பாமர'ப் பத்திரிகைகளில் தோன்றிய குற்றச்சாட்டுகள் படிப்படியாக உயர்தரப் பத்திரிகைகளிலும் இடம் பெற்றன. இந்த ஊழல் பிரசார நடவடிக்கை மிகப்பரவலாகவும் தீவிரமாகவும் இருந்ததால் அவை பிரசுரமான காலத்தை—இந்நூற்றாண்டின் முதல் பத்து வருஷங்களை—''குப்பை கிளறும் யுகம்'' என்று சொல்லுவதுண்டு.

ட்ரஸ்ட்-எதிர்ப்புச் சட்டங்களைக் கண்டிப்பாக செயல்படுத்தவேண்டும் என்ற கிளர்ச்சியை அசட்டை செய்வதற்கில்லை; தியாடர் ரூஸ்வெல்ட் உற்சாகத்துடன் சம்மதித்தார். ''அந்த சட்டங்களைக் கட்டாயம் பிரயோகிப்போம்; வழக்கு ஏற்பட்டால் அரசாங்கத்திற்கு வெற்றியுண்டாகும்படியே பேச்சுகள் நடத்துவோம்'' என்று அவர் உறுதி கூறினார். மார்கன், ஹாரிமன், ஹில் மூவரும் சம்பந்தப்பட்ட ஒரு ரெயில்வே இணைப்பை முறிக்கும்படி உத்தரவிட்டு

ஜனதிபதி முக்கிய அரசாங்கவக்கீலை அனுப்பினர்; 'வால்' தெரு (Wall Street) பாங்கு தலைவர்கள் வியந்தார்கள். இறைச்சி ட்ரஸ்ட், புகையிலை ட்ரஸ்ட், ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி முதலான நிறுவனங்கள் மீதும் நடவடிக்கை எடுத்து அரசாங்கம் வெற்றிபெற்றது.

ஆனால் திகைப்புண்டாக்கும் இந்த வெற்றிகளால் நிறைவேறிய காரியம் குறைவு. இணைப்பு பிரிக்கப்பட்டாலும், பிரிந்த பாகங்கள் வேறுவிதங்களில் ஒற்றுமையுடன் உறவாடிக்கொண்டுதான் இருந்தன. இணைப்புக்களின் தோஷங்களை தாட்சண்யமின்றி வெளியிடுவதற்காக ரூஸ்வெல்ட் 'கார்ப்பொரேஷன் இலாகா' ஒன்று உண்டாக்கினார்; மற்றப்படி அந்தச் சட்டங்களை வலுப்படுத்த ஒன்றும் செய்யவில்லை. நீதிஸ்தலங்களில் வெற்றி கிடைத்தது; ''பணம் படைத்த பேய்களை''ப் பொது இடங்களில் ஜனதிபதி தூஷித்தார்; ஆனால் ட்ரஸ்டுகள் அழியவில்லை; அவர் பதவியேற்றபோது இருந்ததைக் காட்டிலும் அவர் விலகிப்போகும்போது அவை அதிகம் செழித்திருந்தன. ''இணைப்பு இனி சாசுவதம்; தனித்தன்மை போய்விட்டது—இனி திரும்புவதற்கில்லை'' என்று ராக்ஃபெல்லர் சொன்னது உண்மைதான் போலும்.

அத்தியாயம் 14

பாட்டாளிகளும் குடியிறக்கமும்

பாட்டாளியும் அவன் கூலியும்: நாட்டின் இயற்கை வளங்களால் பயனடைதல், தொழிலை யந்திரமயமாக்குதல், ஏகபோக உரிமையின் எழுச்சி, இவையெல்லாம் அபரிமிதமான செல்வத்தைத் திரட்டி அதிர்ஷ்டசாலிகளான சில வியாபாரிகளுக்கும் நுட்ப புத்தியுள்ள பல பங்குதார்களுக்கும் அளித்தன. ஆனால் உடலை வருத்திப் பொறுமையுடன் உழைக்கும் கூலியாளுக்கு அச்செல்வம் அதிகம் பயன்படவில்லை. பெருவாரி வியாபாரம் வளர்வதில் பாட்டாளியின் உழைப்பு ஒரு முக்கிய அம்சம்; ஆனால் லாபங்களைப் பங்கிடும்போது முதலாளிகள் அவனை மறந்துவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்க்கை வசதிகளும் நன்மைகளும் வழங்கப்படும்போதும் அவன் மறக்கப்பட்டான்; அவன் ஒரு மனிதனாகக் கருதப்பட

வில்லை; உல்லாசப் பொழுதுபோக்குக் 'கிளப்பு'களில் அவனுக்கு அழைப்பு கிடையாது; கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் பண முதலாளியைப் பலவிதங்களில் கௌரவித்தன; ஆனால் தொழில் தலைவர்களை அசட்டை செய்தன. புதுச்செல்வம் உற்பத்தியானபோது அது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இடையே விநியோகிக்கப் பட்டிருக்க வேண்டும்—ஆனால் அதற்கு இன்னும் காலம் வரவில்லை; உழைப்பைக் குறைக்கும் யந்திரங்கள் பிரயோகிக்கப்பட்டதால் வேலை நேரம் குறைந்திருக்க வேண்டும்—ஆனால் அதுவும் எட்டிநின்ற ஒரு லட்சியமாகவே இருந்தது; விஞ்ஞான அறிவு வளர்ந்ததால் வேலைசெய்யும் ஸ்தலம் ஆபத்துக்குறைந்ததாகவும், மனதிற்கு ஹிதமாகவும் இருந்திருக்கவேண்டும்; ஆனால் பாட்டாளிகள் பெரும்பாலும் உஷ்ணமும் இரைச்சலும் மிகுந்து காற்றோட்டமற்ற தொழில் கொட்டங்களிலோ, ஆபத்துமயமான சுரங்கங்களிலோ உழைத்தார்கள்; விபத்துக்களாலும் தொழில்நிலை நோய்களாலும் இறந்தவர்களின் எண்ணிக்கை வருஷாவருஷம் பயங்கரமாக அதிகரித்துக்கொண்டே சென்றது. பெரிய நகரங்களையொட்டிய சேரிகளில் அடைபட்டுக் காலம் கழித்தல், வியாபார மந்தத்தாலும் வேலையின்மையாலும் அவதிப்படுதல், வெளிநாட்டிலிருந்தோ தென்னாட்டிலிருந்தோ வந்துகுவியும் பயிற்சியற்ற மலிந்த கூட்டங்களுடன் போட்டியிடுதல்—இவ்வாறு உழைப்பாளிகளின் கதி விரும்பத்தக்கதாகவே இல்லை. அவர்கள் தங்கள் ஸ்திதியை சீராக்கிக்கொள்வதும் சுலபமல்ல. தொழில் சங்கங்களும் வேலை நிறுத்தங்களும் சந்தேக நோக்குக்கு இடமளித்தன; சட்டசபைகளில் அவர்கள் சார்பில் பேசுபவர் இல்லையெனலாம்.

உண்மையில் அமெரிக்கத் தொழில் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்த சில அபிவிருத்திகள் பாட்டாளியின் முன்னேற்றத்திற்கு ஆபத்தாக முடிந்தன. அவற்றுள் இரண்டைக் குறிப்பிட்டாம்: தொழில் யந்திரமயமாதல், கார்ப்பொரேஷன்களின் எழுச்சி. யந்திரங்கள் பொதுவாக, தொழிலின் தரத்தைக் குறைத்தன. மனிதர்கள் நிரமப்பட்டுப்பெற்ற பயிற்சி முன்போல மதிக்கப்படவில்லை; யந்திரம் தேர்ச்சிபெற்ற மனிதன் செய்த பலவேலைகளை சீக்கிரமாகவும் மலிவாகவும் சிறப்பாகவும் செய்து முடித்தது. ஆசாரி அல்லது சிற்பியின் கற்பனைச் சக்திக் கிடமில்லையாயிற்று; மனிதன் யந்திர முறையில் ஒரு பகுதியானான்; புத்தியை மழுங்கவைக்கும் ஒரே அல்பவேலையை தினமும் பல நூறுமுறை செய்யும் ஒரு கருவியாகிவிட்டான் மனிதன்.

யந்திரங்களால் உண்டாகும் கொடுமைகளில் ஒன்று இது; மேலும், தொழில் பொருளாதார நிலையில், அது மனிதனின் இடத்தை அபகரிக்கவும் கூடும். மூலதனத்தில் பெரும்பகுதியை

யந்திரம் விழுங்குகிறது; அது வாரத்திற்கு ஏழு நாள், தினமும் 24 மணி நேரம் வேலைசெய்யும்; ஆகவே அதன் போக்கை அனுசரித்து மற்றக் காரியதிட்டம் அமையவேண்டியிருந்தது. உலைகள் சூடுதணியாமல் தொடர்ந்து வேலை செய்வதே சிக்கன முறையாதலால் இரும்புத் தொழிலில் மனிதர்கள். பன்னிரண்டு மணி 'ட்யூடி' செய்வது முதலாளிக்குச் சௌகர்யமான ஏற்பாடு; ஆகவே அரை நூற்றாண்டுகாலம் அம்முறை சாஸ்திர விதிபோல அமுலில் இருந்தது. மொத்தத்தில், வேலையின்மைக்கு ஒரு காரணம் யந்திரங்கள் பெற்ற முக்கியத்துவம். நீண்டகாலக் கணக்கில் யந்திரம் அபகரிப்பதைக்காட்டிலும் அதிக வேலையை மனித சமூகத்திற்கு அளித்திருக்கிறது என்பது உண்மையாக இருக்கலாம்; ஆனால், அநேகமாக, பழைய வேலையை இழந்து கஷ்டப்பட்டவர் வேறு, புது வேலைபெற்று சுகப்பட்டவர் வேறு; மேலும், நடுவயது கடந்தவர்கள் ஒரு வேலை போய் இன்னொரு வேலை கிடைக்குமுன் மனமுடையும்படி இன்னல்கள் அநுபவித்திருக்கிறார்கள். பெருவாரியான வேலையின்மை யந்திர யுகத்தின் விளைவு.

அநேக சமயங்களில், பிரம்மாண்டமான கார்ப்பொரேஷன் எஜமான ஸ்தானத்தை வகிப்பதும் பாட்டாளிகளுக்கு பிரதிகூலமாக முடிந்தது. சிறுவாரித் தொழில் நிலையில் சாலை ஊழியர்களுக்கும் சுற்றுப்புற சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. உள்ளூர் எஜமானனிடம் தொழிலாளர்கள் பேரம்பேசி வெற்றி பெறுவதற்குவாய்ப்பு அதிகம்; தொலைவிலுள்ள அசேதன ஸ்தாபனத்திடம் முறையிடுவதன் பயன் குறைவே.

நியூ இங்கிலாந்து மில் முதலாளி ஒருவன் ஸைனெட் கமிட்டியின் விளைவுக்கு விடையளிக்கையில் "கூலிகளோடு நான் பேசுவதில்லை; ஓவர்ஸியர்களோடுதான் என் பேச்சு" என்று ரத்தனச் சுருக்கமாகக் கூறினான்.

ஐக்கிய நாட்டுத் தனிப்பொருத்தம் கொண்ட வேறுசில குணாங்கங்களும் பாட்டாளிகளின் சுகதுக்கங்களைப் பாதித்தன. உள்நாட்டுக்கலகம் முடிந்து 20, 30 வருஷங்களுக்குப் பின் நல்ல நிலங்கள் மலிவாக மக்களுக்குக் கிடைத்தது முதல் காரணம். அதிகப்படியான கூலியாட்களுக்கும் மனம் வெதும்பிய தொழிலாளர்களுக்கும் மேற்கு நாடு புகலிடம் அளித்து நாட்டைக் காப்பாற்றிற்று என்பது மிகைக் கூற்றுகலாம். ஆனால் இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு அந்நாடு இப்பணியாற்றிற்று. உடனடியாக ஜீவனோபாயமில்லாத கிராமத்தாரையும், வெளி நாட்டாரையும், நகரத்தாரையும்கூட அது ஏற்றுக்கொண்டது என்பது தெரிந்த விஷயமே. 1850-க்கும் 1870-க்கும் இடையே குடியிறங்கிய ஐந்து மிலியன் பேர் நாடு முழுதும் பரவாமல் கிழக்குப் பிரதேசத் தொழில் நகரங்களிலேயே தங்கியிருந்தால்

தொழில் ப்ரச்னைகள் இன்னும் அதிகக் குழப்பம் உண்டாக்கியிருக்கும். விவசாயச் செலவு அதிகரித்து மலிவான நிலங்களும் தீர்ந்துபோனபோது அதிகப்படி ஜனங்கள் தொழில் பிரதேசங்களில்தான் தங்கினார்கள். கைத்தொழில் ஏதும் இல்லாவிட்டால் தோட்டம் இருக்கவே இருக்கிறது, 'வந்ததெல்லாம் கொள்ளும் மகாராஜன் கப்பல்'—என்ற நிலை மாறிவிட்டது. யந்திரத்தொழில் முக்கியத்துவம் பெற்ற சமுதாயத்தின் கடுமையான சோதனைகளிலிருந்த தொழிலாளி ஓடிப்போவதற்கில்லை—தொழிலாளி திடமாய் நின்று போரிடவேண்டிவந்தது.

இதரத் தொழில் பிரதான நாடுகளுக்குப் பொருந்தாத இன்னொரு விசேஷநிலை குடியிறக்கம்—தொடர்ந்து தடங்கலில்லாமல் ஜனங்கள் அமெரிக்காவுக்கு வந்துகொண்டே இருந்தார்கள். 1870-லிருந்து 40 வருஷ காலத்தில் இருபது மிலியனுக்கும் அதிகமானவர் ஐக்கியநாட்டில் வந்து இறங்கினார்கள். பெண்கள் சிறுவர்களுள் பலர் வேலை செய்தார்கள்; ஆண்கள்தான் வேலைசெய்தார்கள் என்றே கொண்டாலும், ஒவ்வொரு வருஷமும் பல லக்ஷம்பேர் பாட்டாளிகளாகச் சேர்ந்தார்கள்—என்ன சம்பளமானாலும் சரி, வாசநிலை எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் சரி, தொழில் கூடங்களிலோ, சுரங்கங்களிலோ அவர்கள் வேலைக்காகப் பறந்தனர். வடக்கே தொழில் நாடியவர்கள் அவர்கள் மாத்திரமல்ல. இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் தெற்கேயிருந்து பல்லாயிர திடகாத்திரமான நீக்ரோக்கள், போலண்டு நாட்டார், இத்தாலி நாட்டார், ஹங்கேரி நாட்டாருடன் போட்டிக்கு நின்றனர். ஆனால் வெளியே இருந்தோ தெற்கே இருந்தோ வந்த ஒவ்வொரு புது அலையும் குறைந்த கூலிக்கு ஒப்புக்கொண்டுப் பழைய ஆள் ஒருவனை விலக்கிவிட்டான் என்பதை ஒரு விதியாகக் கொள்ளலாகாது; கிராக்கி காலத்தில் எல்லோருக்கும் வேலையிருந்தது; புதுப்படை பழையவர் சிலரை மேஸ்திரி போன்ற உயர் பதவிக்கு அனுப்பக் காரணமாவதுமுண்டு; எப்பொழுதாவது பழையவர் சிலர் வேலையிழப்பதும் உண்டு. ஆனால், மொத்தத்தில், இந்தப் பெருவாரியான மாற்றங்களால் கூலிவிகிதம் குறைந்துகொண்டிருந்தது, வாழ்க்கைத்தரம் மட்டப்பட்டது, தொழிலாளர் சங்கங்கள் சிதறிப்போயின.

மூன்றாவது விஷயம்:—அதுவும் ஐக்கிய நாட்டுக்கு மாத்திரமே பொருந்துவது—சர்வதேசப் பொருளாதார நிலையும் ராஜ்யங்களின் தனித்தனி அரசியல் திட்டமும் முரண்படுதல். நிலக்கரித்தொழில், நெசவு, இரும்பு, எஃகு, இவ்விஷயங்களில் தொழில் பிரச்னை நாடெங்கும் ஒன்றுபோல இருந்தது; ஆனால், சில வருஷங்களுக்கு முன்வரை, அவற்றைத்தீர்க்கும் பொறுப்பு ராஜ்யங்களின் கையிலிருந்தது. போட்டியின் க்ஷேத்திரம் நாடெங்கும்; ஆனால் வேலை நேரம், சம்பளம் முதலியவற்றை

நிர்ணயிப்பது ராஜ்யம். நியூ இங்கிலாந்தின் நெசவுத்தொழிலிலோ நியூயார்க்கின் 'ரெடி-மேட்' கடைகளிலோ தொழில் சங்கம் அதற்கனுகூலமான முக்கியமான தீர்ப்புகள் பெறலாம்; ஆனால் சட்டம் அவ்வளவு கண்டிப்பாக இல்லாத இன்னொரு ஸ்டேட்டுக்குத் தொழிற்சாலை நகர்ந்தால், அந்தலாபமெல்லாம் ரத்தாகிவிடும். 'நியூ டீல்' என்ற புதுத்திட்டம் வந்தபிறகு அதெல்லாம் மாறிற்று. தொழில் கேந்திரம் முழுவதிலும் தேசிய மேல்பார்வை ஏற்படுவதற்கான புது வழிகளை ஃபெடெரல் அரசாங்கம் கண்டுபிடித்தது.

கடைசியாக—அமெரிக்கப் பொதுமக்களுக்குத் தொழில் சங்கங்களிடம் ஆழ்ந்த சந்தேகம் இருந்துவந்தது; முதலாளிகள் சிரமப்படும்போது அவர்களுக்குண்டான அனுதாபம் பாட்டாளிகளின் குறைகளைக் கேட்கும்போது உண்டாகவில்லை.

பேராசை பிடித்த முதலாளியைக் கண்டிப்பதற்காக என்று கருதப்பட்ட ஷெர்மன் ட்ரஸ்ட் எதிர்ப்புச் சட்டம் முதன் முதலாக, வெற்றிகரமாக, தொழில் சங்கத்திற்கு எதிராக உபயோகிக்கப்பட்டது! அதிலிருந்து அக்காலத்து மன நிலை தெளிவாகும். சமீபகாலம்வரை வியாபாரிகள் இரண்டாவது நியாயமென்றும், தொழிலாளர்கள் சங்கம் கூடுவது தவறென்றும் பல அமெரிக்கர்கள் நினைத்தார்கள்; முதலாளி அரசியலில் பங்கெடுத்துக்கொள்வது சரியென்றும் தொழிலாளி அவ்வாறு செய்வது அமெரிக்கப் பண்புக்குத் துரோகம் என்றும் நினைப்பது அவர்களுக்கு சகஜமாக இருந்தது; முதலாளிக்கு அரசாங்கம் உதவியளிப்பதை ஒப்புக்கொள்ளும் அவர்களுக்கு தொழிலாளிக்கு சகாயமளிக்கப்படுதல் சோஷலிஸம் என்றே, பயத்தால் தாழ்ந்துபோதல் என்றே தோன்றிற்று; பங்குதார் கணிசமான லாபத்தை எதிர்பார்த்தல் நியாயமாகவும் பாட்டாளி கிடைத்ததைக்கொண்டு மகிழ்ச்சியடைந்து கடவுளுக்கு நன்றிசெலுத்தவேண்டும் என்றும், வேலையில்லாமல் திண்டாடுதல் அவனவன் தலைவிதி என்றும் அவர்களுக்குத் தோன்றிற்று. தற்காலத் தொழில் முறைப்பிரச்னைகளைப்பற்றிய அறிவு வளர வளர இந்த மனப்பான்மை மாறிற்று; ஆனால் நீண்ட இடைநேரத்தில் ஒழுங்கான தொழில் சங்கங்கள் முன்னேறுவதற்கான பாதை தடங்கல் மயமாக இருந்தது.

இருந்தபோதிலும் மிகவும் இருண்ட படம் சித்தரிக்கத் தேவையில்லை. பெரும்பாலும், உழைக்கத் தயாராக இருந்த ஒவ்வொருவனுக்கும் வேலை கிடைத்துவந்தது; சம்பள விகிதங்கள் பூர்ண திருப்தியளிக்காவிட்டாலும் ஏதோ ஒரு அளவுக்கு உணவு, உடை, வீடு அளிக்கக்கூடியதாகத்தான் இருந்தன. பல ஐரோப்பிய நாடுகளிலிருப்பதுபோல் கூலிவேலைக்காரர்கள் என்ற ஒரு 'ஜாதி' ஐக்கியநாட்டில் கிடையாது; தொழிலுக்குத் தொழில் மாறவும், சிறு வேலையிலிருந்து பெரிய வேலைக்கு உயரவும் அமெரிக்காவில வாய்ப்பு உண்டு.

பிற்காலத்தில் பல குறுகிய நடவடிக்கைகள் தோன்றின. உதாரணமாக, முதலாளிகள் விரும்பத்தகாதவர்களின் 'கறுப்புப்பட்டியல்' ஒன்று தயாரித்து வைத்துக் கொண்டு 'கலகக்காரர்களு'க்கு வேலை மறுத்து வந்தார்கள். ஆனால் அந்நிலையிலும் தெளிவான ஜாதிப் பிரிவினைகளை ஐக்கிய நாட்டில் காண முடியாது. இலவசப் பொதுக் கல்வி பெற்று பாட்டாளிகளின் பிள்ளைகளும் வியாபாரத்திலோ அறிவுத் துறைகளிலோ உயர்ந்த பதவிக்கு ஏறலாம்; வோட்டுரிமையும் ஒரு பெரிய ஆயுதம்; அதை முறையாக உபயோகித்தால் சட்டசபை அங்கத்தினர்களைத் தமக்கு அனுகூலமாக்கிக் கொள்ளலாம்.

ஒன்று கூடினால் வாழ்வுண்டு: ஐக்கியத்தால் முதலாளிகள் பயனடைவதைக்கண்டு தொழிலாளர்களும் விழித்துக் கொண்டார்கள். ஆதியிலிருந்தே தொழிற் சங்கங்கள் இருந்து வந்தன; ஆனால் அவை பெரும்பாலும் சக்தியற்றவை, உள்ளூர் சச்சரவுகளோடு மாத்திரம் சம்பந்தப்பட்டவை. ஆறும் பத்தாண்டில் சில வலுவான சங்கங்கள் நிறுவப்பட்டன—அச்சுத் தொழில் சங்கம் மிகப் பழையதும் முக்கியமானதுமாகும்; ஆனால் பணியாட்களில் மிகச் சிலரே அவற்றில் கலந்து கொண்டனர்; அவற்றுள் பெரும்பாலானவை புனரமைப்பின் போதும் 1873-ன் கலவரத்தைத் தொடர்ந்த துன்பமயமான மந்த காலத்திலும் கலைந்து போயின.

போருக்குப் பிந்திய வருஷங்களில் மூன்று வகைச் சங்கங்கள் உண்டாயின. தொழிலாளிச் சங்கம் முதல் வகையைச் சேர்ந்தது; 'தொழில் வீரர்கள்' அதன் சிறந்த உதாரணம். பயிற்சி பெற்ற தொழிலாளர் சங்கம் இரண்டாம் வகையைச் சேர்ந்தது; பிற்காலத்தில் அவையெல்லாம் சேர்ந்து 'அமெரிக்கத் தொழில் சமஷ்டி' உண்டாயிற்று. மூன்றாவது வகையில் தீவிர சோஷலிஸ்டுகள் அல்லது புரட்சி கோஷ்டியினர் இருந்தார்கள்; அவர்கள் எண்ணிக்கையில் பின்தங்கினாலும் ஆற்றல் படைத்தவர்கள், இருபது வருஷங்களுக்கு முன்வரை இச்சங்கங்களில் தனியாகவோ மொத்தமாகவோ அமெரிக்கத் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் அங்கத்தினர்களாகச் சேரவில்லை; மேலும் தோட்ட வேலைக்காரர்கள், இடம் விட்டு இடம் செல்பவர்கள், வீட்டுப் பணியாட்கள், 'வெள்ளை வேஷ்டி'க்காரர்கள் முதலியோர் இவற்றில் சேரவில்லை.

ஆதிகாலத்துச் சங்கங்களில் மிக முக்கியமானதும் சுவாரஸ்யமானதும் மேலே கூறிய ''தொழில் வீரர்களின் மிகச் சிறந்த குழு''; விரிந்த சமூக பொருளாதார நோக்கமும் சமத்துவபாவமும் அதன் சிறப்புக்கள். எல்லாத் தொழிலாளர்களும் அதில் அங்கத்தினர் ஆகலாம்—பயிற்சி பெற்றவர், பயிற்சி

பெரும்தவர், குடியானவர்கள், மில் பாட்டாளிகள், சுரங்க ஊழியர்கள், ஆசாரிகள், சிற்பிகள்; ஆனால் சூதாட்டக்காரர்கள், கள்ளுக்கடைக்காரர்கள், பாங்கர்கள், வக்கீல்கள், பங்கு விற்பனையாளர்கள்—ஆகியோருக்கு அதில் இடம் கிடையாது! சூழுவின் லட்சியமாவது: ''பாட்டாளிகள் உற்பத்தி செய்யும் செல்வத்தில் நியாயமான பங்கு அவர்களுக்குக் கிடைக்க வேண்டும்; உரிமைப்படி இன்னும் அதிக அவகாசம் அளிக்கப்பட வேண்டும்; சமுதாய வாழ்க்கை வசதிகள் இன்னும் வேண்டும்;...நல்ல அரசாங்கத்தை அனுபவித்து, பாராட்டி, பாதுகாத்து, என்றைக்கும் நிலைநிறுத்துவதற்கான சக்தி யளிப்பதற்கு வேண்டிய உரிமைகளும் சலுகைகளும் கிடைத்தாக வேண்டும்.'' இந்தச் சிறப்பான உத்தேசங்களைப் பெறுவது வேலை நிறுத்தம் அல்லது முரட்டு வழிகள் மூலமாகக் கூடாது; அரசியல் கிளர்ச்சி, கல்வி, கூட்டுறவுச் சங்கங்கள்—இவற்றின் மூலமாகக் காரிய சித்தி ஆக வேண்டும்...இவ்வாறு, அவர்களுடைய காரிய அட்டவணைத் தீவிரமாக இருந்தாலும் குறிப்பாக இல்லாமல் பரவலாக இருந்தது; எட்டு மணி வேலை, சிறுவர் தொழில் புரிவதை நிறுத்துதல், பொது நன்மை வர்த்தக நிலையங்கள் அரசாங்கத்தின் வசம் இருத்தல், வருமான வரியும்வாரிசுதாரர் வரியும் விதித்தல், நிலச்சீர்திருத்தம். ஆதர்சத் திட்டமும் மரியாதையான வற்புறுத்துதலும் விறுவிறுப்பானப் பொருளாதார மாறுதல் ஒன்றும் செய்ய முடியவில்லை; ஆனால் 1885—ல் அந்த ''வீரர்கள்'' வேலை நிறுத்தம் ஆரம்பித்ததும் அவர்களுக்கு ஓரளவு வெற்றி கிடைத்தது. வெகு வேகமாக அங்கத்தினர்கள் சேர்ந்தார்கள்; ஒரு வருஷத்தில் எண்ணிக்கை ஏழு லட்சம் ஆயிற்று; அந்த சந்தோஷத்தில் எட்டு மணி நேர உழைப்பு என்னும் கொள்கைக்காகப் பொது வேலை நிறுத்தத்தை அவர்கள் ஆதரித்தார்கள். ஷிகாகோவில் ஊக்கமாக ஒரு பெரிய கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது யாரோ ஒரு புரட்சிக்காரன் ஒரு வெடிகுண்டை வீசி எறிந்ததில் பல போலீஸ்காரர்கள் இறந்து போனார்கள். அந்தக் கோரச் செயலுக்கு வீரர்குழு பொறுப்பாளியில்லை என்றாலும் அதுதான் குற்றவாளி என்பது பொது மக்களின் அபிப்ராயம். இதுவும், பல ஸ்ட்ரைக்குகளின் தோல்வியும் குழுவின் அமைப்பில் ஆதி முதற்கொண்டே இருந்த தளர்ச்சியும் அதன் செல்வாக்கைப் பாதித்தன; 1892-ல் அது ''ஜன இயக்க''க் கட்சியுடன் இணைந்ததும் அது அழிந்தேபோயிற்று.

இதற்கிடையே ஒரு புது ஸ்தாபனம் வலுவடைந்து வந்தது; அதன் பெயர் அமெரிக்கன் ஃபெடரேஷன் ஆஃப் லேபர்—அமெரிக்கன் தொழிலாளர் சமஷ்டி. அதன் ஸ்தாபனத்திற்குக் காரணமாக இருந்த ஸாம்யூல் கோம்பர்ஸ் என்னும் சுருட்டுத் தொழிலாளி பிரிட்டிஷ் சீர்திருத்த வாதிகளும், ஜெர்மன், ரஷ்ய ஸோஷலிஸ்டுகளும் எழுதிய நூல்களின் கருத்துக்களை அறிந்தான். கூடவே வாழ்க்கை யனுபவக் கல்வியும் கிடைத்தது: வேலை நிறுத்தம், தரித்திர நிலை, யூனியன்களின் தழுதியின்மை—இவற்றால் மனம் கசந்த இளைஞன் நுட்பமான விவகார அறிவுடன் வகுக்கப்பட்ட கொள்கைகளின் தேவையை உணர்ந்தான். அரசியல் வாதிகள், தீவிர சீர்திருத்தவாதிகள், உலக ஞானம் இல்லாமல் வார்த்தைப் பந்தல் போடுபவர்கள், ஆகியோருடன் உறவு கொண்டாடக் கூடாது, வேலை நிறுத்தத்தின் போதும், வியாபாரம் மந்தப்படும் போதும் உதவுவதற்கு ஏராளமான நிதி சேமிக்கப்பட வேண்டும், தொழிலாளர்களுக்குக் கட்டுப்பாடான பயிற்சி தேவை—என்பதை அவன் அறிந்தான். 1881-ல் அவன் ஐக்கிய நாட்டிலும் கானடாவிலுமுள்ள பலவேறு தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சபை ஒன்று கூட்டினான். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அந்த ஸ்தாபனம் ''அமெரிக்கன் ஃபெடரேஷன் ஆஃப் லேபர்'' (American Federation of Labour) என்ற ரூபம் பெற்றது.

அந்த அமெரிக்கத் தொழிலாளர் சமஷ்டி முன் கூறிய வீரர் குழுவிலிருந்து மாறுபட்டது; அது பிரிட்டிஷ் தொழில் சங்கங்களை அதிகம் ஒத்திருந்தது. அது பாட்டாளி சங்கமல்ல; தொழில் பயிற்சி பெற்றவர்களின் சங்கம்; தொழிலாளர்களுள் உயர்ந்த படிகளில் இருப்பவர்களே அதில் அங்கத்தினர் ஆக முடியும்; அது சுய ஆட்சியுள்ள பல தொழில் யூனியன்களின் சேர்க்கை—அமெரிக்க ஸ்டேட்டுகளைப் போன்ற ஒரு சமஷ்டி. வீரர் குழுவைப்போல வெறும் ஆதர்சக் கனவு காணுமல் அது முற்றிலும் உடனடியான காரியத்தில் கண்ணுகவும், அரசியல் வாய்ப்புக்களைச் சுய நலமாகப்பயன் படுத்திக்கொள்வதாகவும் இருந்தது. குழுவினருக்கு இறுதி லட்சியம் கிடையாது; அன்றுடத் தேவைகளுக்கான அடிப்படையில் அவர்களுடைய காரியத்திட்டம் அமைந்தது. அதிகச் சம்பளம் பெறுவதும் வேலை நேரத்தைக் குறைப்பதுந்தான் அவர்களுடைய முக்கிய உத்தேசங்கள்; மற்றப்படி, சிறுவரிடம் வேலை வாங்குதலைத் தடுத்தல், ஆரோக்கிய விதிகளின் பிரசாரம், ஒப்பந்த-வேலை ஒழிப்பு, கைதி-வேலை ஒழிப்பு, சீனர்களின் குடியிறக்கத்தைத் தடுத்தல் முதலான விஷயங்களிலும் அவர்கள் சிரத்தை காட்டினர்கள். அதன் நீண்ட, வெற்றிகரமான சரித்திரத்தில் தொழில் சமஷ்டி பழைய வழிகளில் பற்றுள்ளதாகவும், சந்தர்ப்ப வாதியாகவும், பிருவுடன் ஒதுங்கி நிற்பதாகவும் இருந்தது. அது அரசியல் சச்சரவுகளில் கலக்கவில்லை, சாத்தியப்பட்ட போதெல்லாம் அது முதலாளியுடன் ஒத்துழைத்தது. கணிசமான சந்தாத் தொகையிலிருந்து திரண்ட சேமிப்பைக் கொண்டு அவசியமான ஸ்ட்ரைக்குகளை ஆதரித்தது; கண்டிப்பான விதிகளுக்குக் கட்டுப்பட்டும் தன் மிதமான கொள்கை

களால் பொது மக்களின் நல்லபிப்ராயத்தை சம்பாதித்துக் கொண்டும், அது துவேஷத்தையும், துன்பநிலைகளையும், போட்டிக்காரர்களின் வஞ்சனைகளையும் சமாளித்தது; கோம்பர்ஸ் கடைசி முறையாக 1924-ல் சமஷ்டியின் தலைமைப் பதவியை ஏற்ற போது சுமார் மூன்று மிலியன் அங்கத்தினர்கள் கொண்ட ஸ்தாபனம் அது என்ற திருப்தி அவனுக்கிருந்தது.

தொழிலாளர் ஸ்தாபனத்தின் மூன்றாவது ரகம் மிகவும் வலுவற்றது. சமூக வாதமும் பொது உடைமை வாதமும் அமெரிக்கச் சரித்திரத்தில் புதிதல்ல; ஆனால் ஆதியில் அவை பெரும்பாலும் (அனுபவ சாத்தியமில்லாத) ஆதர்சவாழ்க்கை என்ற ரூபத்தைப்பெற்றன; 1870-80-ல் ''மால்லி மாகயர்ஸ்'' என்ற ஒரு ரகசியச் சங்கத்தார் தொழில் நிலை மிகவும் கோரமாக இருந்த பென்ஸில்வேனிய நிலக்கரிச் சுரங்கங்களில் மக்களை அக்கிரமமாகக் கலங்கடித்துக் கொண்டிருந்தார்கள்; அரசாங்கம் பலவந்தமாக அவர்களை ஒழிக்க வேண்டியிருந்தது. அதே பத்தாண்டில் அமெரிக்கத் தொழில் நிலையைச் சரியாய் அறியாத சில ஜெர்மன் அறிஞர்கள் அமெரிக்காவில் ஸோஷலிஸம் அமைக்க முயன்றார்கள்; ஆனால் பயனில்லை. காலக்கிரமத்தில் தீவிரவாதிகள் அயல் நாட்டுச் சிக்கல்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டனர்; 1905-ல் ஸ்தாபிதமான ''உலகத் தொழில் ஊழியர்கள்'' (Industrial Workers of the World) என்ற சங்கம், ஃபோரெல் கற்பித்த ''தொழிலாளர்களும் பங்காளிகளே'' என்ற கருத்தை ஓரளவு இரவல் வாங்கியிருந்த போதிலும், அதன் கொள்கைகள் முற்றிலும் அமெரிக்கக் கொள்கைகளே. மேற்கே, மர அறுவைச் சாலைகளிலும், சுரங்கங்களிலும், கிழக்கே நெசவுப்பிரதேசங்களிலும் அதற்கு சிறிதளவு வெற்றி கிடைத்த போதிலும் அதற்கு எண்ணிக்கை பலம் கிடையாது; முதல் உலக யுத்தத்தின்போது அது காட்டிய எதிர்ப்பால்—சில மூல முடுக்குகளில் தவிர—அது அஸ்தமித்துப் போயிற்று.

தொழில் சச்சரவுகள். வேலை நிறுத்தங்களும் முரட்டு நடவடிக்கைகளும் அமெரிக்கத் தொழில் வளர்ச்சியை பங்கப்படுத்தியிருக்கின்றன. ஆதியிலிருந்து ஒவ்வொரு சௌகர்யமும் மல்லுக்கு நின்றதால்தான் கிடைத்திருக்கிறது—சங்கம் அமைக்கும் உரிமை, ஸ்ட்ரைக் செய்யவும் அது கலையாவண்ணம் காவல் இருக்கவும்—'பிக்கெட்' செய்யவும்—உரிமை, வேலை நேரத்தைக் குறைத்தல், சம்பளத்தை உயர்த்துதல், வேலை செய்யுமிடத்தில் ஆபத்தில்லாமை, விபத்தின் பிறகு நஷ்ட ஈடு செய்தல், பண்டக சாலை அட்டூழியங்கள், தொழிற்சாலை யடைப்பு, முதலியவற்றை நீக்குதல், மற்றும் முன் கூறிய குறைகளை விலக்குதல், இவை சமரஸப் பேச்சால் நடைபெறவில்லை. பெரும்பாலும் போர் தொழிற்களத்தில் நிகழ்ந்தது, ஒவ்

வொரு சமயம் அரசியல் களத்தில். இந்த நீடித்த, கடுமையான போரில் தொழிலாளர் பிறர் சகாயமற்று நின்றார்கள்; முதலாளிகளுக்குப் பொதுஜனங்களின் அபிப்பிராயம் பக்கபலமாக இருந்ததோடு, போலீசாரும் கோர்ட்டாரும் ஆதரவளித்தார்கள். இவ்வளவு பலமான எதிர்ப்பின் காரணமாகப் பல ஸ்ட்ரைக்குகள் வீணாயின, அல்லது மத்தியஸ்த ஒப்பந்தத்தில் முடிந்தன; ஆனால் கிடைத்த வெற்றிகளிலிருந்து வேலை நிறுத்தம் ஒரு உபயோகமான ஆயுதம் தான் என்பது நிச்சயமாயிற்று. ஆனால் மனித அறிவின் தோல்வியால்தான் நாட்டுக்கும் நாட்டுக்கும் போர் மூள்கிறது, முதலாளிக்கும் தொழிலாளிக்கும் சச்சரவு ஏற்படுகிறது, என்பது நன்கு நினைவிருக்க வேண்டும்.

1881-க்கும் 1905—க்கும் இடையே 37,000-க்கும் அதிகமான வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன—அவற்றில் சில சிறு இடத்தைப் பாதித்தன, குறுகிய காலத்தில் முடிவு பெற்றன: மற்றும் சில நீடித்து நாடு முழுதையும் பாதித்தன. இவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கவை 1877-ன் ரெயில்வே ஸ்ட்ரைக்; அப்பொழுது தான் அமெரிக்காவில் பெருவாரியான—தொழில் சம்பந்தமான—பலாத்காரச் செயல்கள் நடந்தன; 1886-ல் மாக்கார்மிக் அறுவடையந்திர சாலையில் நடந்த வேலை நிறுத்தம் மிகவும் வருந்தத்தக்க கலகத்தில் போய முடிந்தது; 1892-ன் ஹோம்ஸ்டெட் வேலை நிறுத்தத்தில் மோனென்கேஹலா நதிக்கரையில் நிலையான போரே நடந்தது; 1894-ன் பெரிய புல்மன் கம்பெனி வேலை நிறுத்தம் நாட்டின் பாதி ரெயில்வேப் போக்குவரத்தைக் கெடுத்தது; கொலராடோ நிலக்கரிக் களங்களில் பயங்கரமான போர் மூண்டது; 1902-ன் உயர்தர-நிலக்கரி ஸ்ட்ரைக் நாட்டின் பாதித் தொழில்களைப் படுக்கவைக்குமோ என்ற பயம் உண்டாயிற்று; ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் தலையிட்ட பின்தான் அது ஒரு முடிவுக்கு வந்தது.

1900-த்திற்குள் தொழில் அநேகமாய் எல்லா அடிப்படை உரிமைகளையும் பெற்று விட்டது—நிறுவன உரிமை, வேலை நிறுத்த உரிமை, அனைவரும் கூடிப் பேரம் பேசும் உரிமை; மேலும், தொழில் ஸ்தலத்திலும் வாசஸ்தலத்திலும் சீரமைப்புக்கான கோரிக்கைகளும் ஓரளவு ஏற்கப்பட்டன. ஆனால் பாட்டாளி மக்களின் ஒரு சிறு பகுதிக்கே இந்த லாபங்கள் கிடைத்தன; அதோடு, தொழிலாளர்களின் நிரந்தர உத்தியோகம், பொதுவாகச் சமூகத்தின் க்ஷேமம் இது போன்ற பெரிய பிரச்னைகள் அதிகமாய்த் தொடப்படவில்லை. தொழில் பிரச்னை இதர சமுதாய, பொருளாதாரப் பிரச்னையிலிருந்து விலகிய தனி விஷயமல்ல என்பதும் தொழிலாளிகளின் நல்வாழ்விலும் கவலையற்ற சம்பாத்திய நிலையிலும் சமுதாயம் அக்கறை கொள்வது நியாயமே (தொழிலாளியின் துன்பம் சமுதாயத்தை பாதிக்கும்) என்பதும் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவாகிக் கொண்டு வந்

தன. தொழில் ஸ்தாபனம் சௌகர்ய வாழ்வுக்குத் தேவையான சம்பளம் கொடுக்கா விட்டால் சமுதாயம் ஏதோ ஒரு விதத்தில் அதை ஈடு செய்ய வேண்டிவந்தது. வேலையில்லாதவர்களைச் சமுதாயம் காப்பாற்றுவது அவசியமாயிற்று. தொழில் ஸ்தாபனம் பணியாட்களுக்கு அங்கஹீனம் உண்டாக்கினாலோ, நோய் அல்லது பலஹீனம் உண்டாக்கினாலோ, அவர்களை ஆதரிக்கும் பொறுப்பு சமுதாயத்தைச் சேருகிறது. பெண்களையும் சிறுவரையும் வேலையில் அமர்த்துவது முதலாளி-தொழிலாளிப் பிரச்னை மாத்திரமல்ல; அது பிற்காலத்துப் பிரஜைகளைப் பாதிப்பதால் சமுதாயப் பிரச்னை ஆகிறது. தொழில் போர் என்னும் தமாஷ் எத்தனை நாள் நடக்க முடியும் என்பதும் ஒரு பெரிய கேள்வி; ஏனென்றால் அதில் முதலாளி ஜெயித்தாலும் தொழிலாளி ஜெயித்தாலும் தோல்வியும் நஷ்டமும் சமுதாயத்திற்குத் தான்.

சமூகத் தொண்டர்களும், ப்ராடெஸ்டென்ட் போதகர்களும், அறிவாளிகளும் பாட்டாளிகளின் சீர்திருத்தப் போர்களில் ஆற்றலுடன் உதவி புரிந்தார்கள். பால்யத் தொழிலாளும் சேரி வாசத்தாலும் சமுதாயத்திற்குண்டாகும் நஷ்டத்தைப்பற்றிப் பொது மக்களுக்கு அறிவூட்டவும் தூங்கு மூஞ்சி சட்ட சபைகளைத் தட்டியெழுப்பவும் அவர்கள் ஓய்வின்றி உழைத்தார்கள். ஆனால் பிரச்னை மிகக்கடினமானது. முன்னேற்றமுள்ள ராஜ்யங்கள் தரத்தை உயர்த்தினால், தொழில்கள் தரம் மட்டமான வேறு ஸ்டேட்டுகளுக்கு நகர்வது வழக்கமாயிற்று; லட்சிய சாதனை உள்ளூர்த் தொழிலை வெளியே விரட்டும் படியான விபரீத நிலை ஏற்பட்டது!

ஆயினும், மொத்தத்தில் லாபந்தான் அதிகம். முதல் உலக யுத்தம் முடிவதற்குள் பெரும்பாலான ராஜ்யங்கள் பால்யத் தொழிலைத் தடுத்தன (ஆனால் நடைமுறையில் பல ஊழல்கள் இருந்தன); பெண்களின் வேலை நேரம் எட்டு மணிக்குமேல் இருக்கக்கூடாது என்றும் பல ராஜ்யங்கள் கட்டளையிட்டன. மேலும், விபத்து நேர்ந்தபோது நஷ்ட ஈடு அளிப்பதற்கான விதிகள் நிறுவப்பட்டன; தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டார்கள்; அல்பர்களுடன் கேவலமான ஒப்பந்தம் செய்து கொள்ளுதல், தொழில் சச்சரவுகளின் போது துப்பறியும் ஏஜென்ஸிகளை அல்லது ப்ளாக்லிஸ்ட்டை உபயோகித்தல், முதலிய கேவலமான பழக்கங்களும் தடுக்கப்பட்டன; மற்ற வழிகளிலும் ராஜ்யங்கள் விழிப்புடன் நடந்து கொண்டன. இந்தச் சட்டங்களை விவரமாக வர்ணிப்பது இயலாத காரியம்.

சிறுவர்கள் கஷ்டமான வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதை யொழிக்க ராஜ்ய சட்டங்கள் உண்டு; ஆனால் அவை போதாதவை, சுலபமாய் ஏமாற்றக் கூடியவை. ராஜ்ய சட்டங்கள்

போதாமல் இருந்ததால், காங்கிரஸ் சரியான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை கிளம்பிற்று. 1916-ல் சிறுவர்கள் மூலம் தயாரிக்கப்பட்ட பொருள்கள் ஒரு ஸ்டேட்டிலிருந்து இன்னொரு ஸ்டேட்டுக்கு விற்பனைக்குப் போகக் கூடாது என்று காங்கிரஸ் சட்டம் போட்டது. ஆனால் விஷயம் கோர்ட்டு விசாரணைக்கு வந்தபோது காங்கிரஸ் தன் சக்தியை மீறிச் சட்டம் விதித்ததால் அது செல்லாது என தீர்ப்புக் கூறப்பட்டது. மூன்று வருஷங்கள் கழித்து மேற்படிப் பொருள்களுக்கு அளவு கடந்த வரி போட்டுக் காரியத்தை சாதிக்கக் காங்கிரஸ் மறுபடி முயன்றது. மறுபடியும் கோர்ட்டுகள் முட்டுக்கட்டை போட்டன. 20 ஆண்டுகள் கழித்து சுப்ரீம் கோர்ட்டு முன்பு நடந்ததெல்லாம் பெருந்தவறு என்று ஒப்புக் கொண்டது; ஆனால் தீங்கென்னவோ நேர்ந்து விட்டது. 1920-30-ல் தேசம் செழித் தோங்கிய காலத்திலும் இந்த தோஷம் இருந்து கொண்டே இருந்தது; 1930-ல் கணக்கெடுத்தபோது ஆணும் பெண்ணுமாக 18 வயதுக்குக் குறைந்து வேலையில் இருந்தவர்களின் மொத்தம் இரண்டு மில்லியனுக்கும் அதிகம். அதன் பிறகு நியூடீல் என்னும் புதுத்திட்டம் தர்க்க குதர்க்கங்களைக் களைந்தெறிந்து அநேகமாக அந்தத் தோஷத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

கூட்டுப் பேரம், சட்டம் இவ்விரண்டின் மூலம் தொழில் நிலை மிகவும் சீரடைந்தது. முதலாளிகளும் விசால திருஷ்டி பெற்று தம்மிடமிருந்த குறைகளை நீக்கிக்கொள்ள முயன்றார்கள்.


மூசை உலை: அமெரிக்காவில் பெரும்பாலோர் தங்கள் நாட்டுச் சரித்திரத்தில் குடியிறக்கம் ஆற்றிய பணியை நன்கு புரிந்து மதிப்பிடவில்லை. அவர்கள் குடியிறக்கத்தை ஒரு கடினமான பிரச்னை என்றும், சென்ற 50, 60 ஆண்டுகளில் தான் அது முக்கியத்துவமை பெற்றிருக்கிறது என்றும் நினைக்கிறார்கள். எனினும், செவ்விந்தியரைத் தவிர, எல்லா அமெரிக்க வாசிகளும் அயல் நாட்டிலிருந்து வந்தவர்கள். அல்லது அவர்களுடைய சந்ததிகள்; முன்னோட்களின் உயர்தர சீமான்களும் சீமாட்டிகளும் இக்காலத்துப் போலந்திய பாட்டாளிகளும் நீக்ரோக்களும், அனைவரும், குடியிறங்கியவர்களே. அயல் நாட்டார் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு மூலைகளிலிருந்து வந்தார்கள் என்பது உண்மை; ஆனால் அனைவருக்கும் தம் சொந்த நாட்டிலிருந்து பெயர்க்கப்படுவதும் அயல் நாட்டில் வேரூன்றப்படுவதும் பொது அனுபவமே. அறிவிலிகள், தாழ்ந்தவர்கள் உட்பட, அனைவரும் தம் ஆற்றலையும் பண்பையும் நம்பிக்கையையும் தம்முடன் அழைத்து வந்தனர். அனைவரும் அமெரிக்கா எனப்படும் மூசை உலையில் இளக வைக்கப்படும் பலசரக்குகள்.

அமெரிக்கக் காலனிகளின் ஜனங்கள் என்னும் பெரிய நதியில் வந்து கலந்த பல்வேறு ஓடைகளை நாம் முன்பே ஓரளவு ஆராய்ந்தோம். நாட்டின் ஆரம்பகாலத்தில் பழைய உலகத்திலிருந்து புது உலகத்திற்கு ஜனங்கள் வந்து கொண்டே இருந்தார்கள்; பெரும்பாலோர் சுய இச்சையுடன் வந்தார்கள், 1820-ல் கணக்குப் பதிவு ஆரம்பமானதிலிருந்து சிவில் போரின் ஆரம்பம் வரை அயர்லாந்து, இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து சுமார் ஐந்து மிலியன் ஆட்கள் அமெரிக்கா வந்து சேர்ந்தனர். போர்க்காலத்திலும் புதிதாய்வருவோரின் எண்ணிக்கை அப்படியாகக் குறையவில்லை; போருக்குப் பிறகு வருகை வெள்ளமாகப் பெருகிற்று. ஆகவே, 1870-ல் அமெரிக்காவின் ஜனத்தொகை பல இனங்கள் கலந்ததாயிற்று.

ஆனால் ஜனத் தொகையின் தன்மையில் ஒரு பெரிய மாறுதல் நன்கு கவனிக்கப்பட்டது. தெற்கு ஐரோப்பாவிலோ கிழக்கு ஐரோப்பாவிலோ வசித்தவர் அல்லது முன்பு வசித்தவர்களின் சந்ததிகள் சட்டென்று அதிக எண்ணிக்கையில் அமெரிக்க வாசத்தை நாடினார்கள். ஆதியில் அமெரிக்காவுக்கு அதிகம் பேரை அனுப்பிய பிரிட்டன், ஜெர்மனி, நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளில் ஜன நெருக்கடி சற்று குறைந்ததும், அங்கிருந்து வெளியேறுவோரின் தொகை குறைந்தது. ஆனால் புது இனம் வேகமாக அதிகரித்தது. குடியிறக்கம் இனி வேண்டாம் என்று தீர்மானித்துத் தடுப்பதற்குள் ஆணும் பெண்ணுமாக நான்கரை மிலியனுக்கும் அதிகமான இத்தாலியரும், நான்கு மிலியன் ஆஸ்ட்ரிய—ஹங்கேரிக்காரர்களும், ரஷ்யாவிலும் போலந்திலுமிருந்து மூன்றே கால் மிலியன் ஆட்களும் வந்து சேர்ந்து விட்டார்கள்.

மத சம்பந்தமான கொடுமைகளிலிருந்து தப்பியோடுவோர், பிறர் நிர்ப்பந்தமில்லாமல் இச்சைப்படிக் கடவுளைத் தொழ விரும்புவோர், ராணுவ அலுவலிலிருந்தும் போர்களிலிருந்தும் ஓடிப்போனவர், ஜனநாயக சமுதாயத்தை நாடியவர், தரித்திர நிலையிலிருந்து தப்பிக் கதை கதையாக வர்ணிக்கப்படும் அமெரிக்கச் செல்வத்தில் பங்கு கொள்ள விரும்புவோர், அனைவருக்கும் அமெரிக்கா சுவர்ண பூமியாகத் தோன்றிற்று. ஒவ்வொருவனுடைய தனிக்காரணம் என்னவாக இருந்தாலும், துணிச்சலான புது அனுபவம் எல்லோரையும் கவர்ந்தது; அனைவரும் முன்னேக காட்டிலும் சிறப்பான வாழ்க்கையைப் பற்றிக் கனவுகள் கண்டார்கள்; அவர்களுள் பலர் தமக்காகவும், தம் மக்களுக்காகவும் நல்வாழ்க்கைக்கான ஏற்பாடுகள் செய்யவும் செய்தனர்.

"பழைய" (முதல் இனத்து) குடியிறக்கக்காரர்கள் சுமாராக சமமாக வடக்கேயும் மேற்கேயும் பரவினார்கள்; ஏறக்குறைய பாதிப்பேர் விவசாயத்திலும், பாதிப்பேர் தொழிலிலும்



இறங்கினர்கள். ஆனல் பின்னல் வந்த "புது" இனத்தார் கிழக்கேயும் மத்திய-மேற்கேயும் தொழில் கேந்திரங்களில் கூடினர்கள்; ஏனென்றல், விவசாயம் ஆரம்பிக்கப் பணம் வேண்டும், நல்ல நிலங்களெல்லாம் போய்விட்டன, நகரங்களில் சம்பள வேலைகள் கிடைத்தன, தங்கள் நாட்டாரின் காலனிகள் அமைந்திருந்தன, கத்தோலிக மாதா கோவில்கள் இருந்தன, இத்தியாதி. 1900-க்குள் அயல் நாடுகளில் பிறந்தவர்களில் மூன்றில் இரண்டு பேர் பட்டணங்களில் இருந்தார்கள்; 1920-ல் அந்த விகிதம் நான்கில் மூன்று பேர் என்றாகி விட்டது. சிறிய தொழில் பட்டணங்களில் பெரிய பட்டணங்களைக் காட்டிலும் அயல் நாட்டாரின் விகிதம் அதிகமாக இருந்தது. தெற்கு ஐரோப்பாவிலும் மேற்கு ஐரோப்பாவிலுமிருந்து புதிதாய் வருபவர்கள் சுரங்கங்களிலும் ஆலைகளிலும் வேலை செய்ய அதிகம் பிரியப்பட்டார்கள் என்பதே இதன் கருத்து. 1920-ல் மொத்த ஜனத்தொகையில் எட்டில் ஒருவன் அயல் நாட்டில் பிறந்தவன்; ஆனல் ஆலைத்தொழிலாளர்களுள் மூன்றில் ஒருவரும் சுரங்க வேலைக்காரர்களுள் பாதிக்கு மேலும் அயல் நாட்டார்கள்.

குடியிறங்கியவர்கள் அமெரிக்காவுக்கு என்ன கொடுத்தார்கள்? முக்கியமாக தம்மை—தம் உடல் வலுவை, தம் உழைப்பை, தம் நம்பிக்கையை—அர்ப்பணம் செய்தார்கள். ஸ்வீகரித்த நாட்டுக்கு அவர்கள் மிகவும் கடமைப்பட்டவர்கள்; ஆனல் அந்த நாடும் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட வேண்டியதே. நாட்டின் இயற்கை வளங்கள் துரிதமாகவும் மலிவாகவும் பயன்படுத்தப்பட வேண்டுமானல், அதற்குத் தேவையான, சாராய்ப் பிழிந்தெடுக்கும் மிகக் கடினமான வேலையை அவர்கள் செய்தார்கள். பரந்த புல் வெளிகளில் விவசாயத்திற்காக முதல் வெட்டு அவர்கள் போட்டதே; காட்டிலும் மேட்டிலும் ரயில் பாதைகள் போட்டார்கள்; கனிப்பொருள்களை வெட்டி யெடுத்தார்கள்; விருகூ ராஜர்களை அறுவைக்காக வீழ்த்தினர்கள். பயிற்சியற்ற முரட்டுத் தொழில் மாத்திரமே அவர்கள் செய்தார்கள் என்பதல்ல. அமெரிக்க வாழ்க்கைக்கு அவர்கள் புதுமையும், வர்ணமும், வளமும் அளித்து வளரும் அமெரிக்கக் கலாசாரத்தை சிறப்பித்தார்கள். சங்கீதத்திலும் கலையிலும் உயரிய கற்பனைச்சக்தி அவர்களிடமிருந்து வந்தது. 1930-ல் பெரிய ஆர்கெஸ்ட்ராக்களின் (வாத்திய சம்மேளனங்களின்) நாயகர்கள் அனைவரும் அயல் நாட்டாரே—ஆங்கிலேயச் சந்ததியைச் சேர்ந்த ஒருவன் கூட இல்லை.

குடியிறக்கத்தின் நன்மைகள் ஒரு புறமிருக்கத் தீமைகளும் இருந்தன. வாழ்க்கைத் தரத்தில் மட்டமானவர்களின் போட்டியால் உள்ளூர்த் தொழிலாளர்கள் துன்பப்பட்டார்கள்.

வீடு, ஆரோக்கிய சாதனம், போலீஸ் பந்தோபஸ்து முதலிய பிரச்னைகளுக்கு நகராண்மைக் கழகத்தார் விடை கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. பல மொழிக்காரர்கள் திரள் திரள் என்று கூட்டம் கூடியதால் கல்வி இலாக்காத் தன் கடமைகளை சரிவரச் செய்வது சிரமமாயிற்று. ஆனல் நாளாவட்டத்தில் பிரச்னைகள் அதிகத் துன்பமில்லாமல் தீர்ந்தன; வந்தவர்கள் கரையாப் பொருளாகத் தனித்து நிற்காமல் பாகாக இளகி அமெரிக்க வாழ்க்கை என்னும் பணியாரத்தில் நன்கு கலந்தார்கள்; "புதியவர்கள் அவர்களுடைய விபரீதப் போக்குகளுடன் நம்மை ஏதோ செய்து விடுவார்கள்" என்ற திகில் அநாவசியமாயிற்று. பொதுவாக, குடியிறங்கியவன் பழையதை மறந்துப் புது வாழ்க்கையில் லயித்துவிடக் காட்டும் ஆவல் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. "வாக்களிக்கப்பட்ட நாடு" என்ற நூலில் மேரி ஆன்டின் வர்ணிக்கும் அனுபவம் தனிப்பட்டதல்ல, லக்ஷக்கணக்கானவர் அறிந்ததே.

குடியிறங்கிய முதல் தலைமுறைக்காரர்களைக் காட்டிலும் அவர்களுடைய மக்கள் தான் அதிக பிரச்னைகளுக்குக் காரணமானர்கள்; புதுச் சூழ்நிலைக்கு அவர்கள் ஒத்துப் போவதும் லயித்திருப்பதும் சிரமமாக இருந்தது. பலர் வேரூன்றுமலும் உத்தேசமற்றும் அந்தரத்தில் தொங்கினர்கள். வீட்டிற்குள் அவர்களுடைய உலகம் ஒன்று, வெளியே முற்றிலும் வேறொன்று. பெற்றோரின் காரணமாக அவர்கள் பழைய உலகின் வாசனையை முற்றிலும் மறக்கவில்லை; மாதா கோவில் அதற்கொரு காரணம்; ஆனல் அந்தத் தொடர்பு நேர் முறையானதல்ல, உண்மையானதல்ல. தோற்றமும் பேச்சு முறையும் வித்தியாசப்பட்டதால் பாடசாலை நண்பர்கள் அவர்களை முழு மனதுடன் ஏற்கவில்லை. அநேக சமயங்களில் பழையதை அருவருப்புடன் களைந்தெறிவதற்கும் புதியதை ஏற்பதற்கு மிடையே தாமதம் ஏற்பட்டது; அது தான் கலவரப்படுத்தும் காலம். மேடு பள்ளங்களைத் தட்டி சமப்படுத்தும் தன்மை பள்ளிக் கூடத்திற்கு உண்டு என்றலும் ஒவ்வொரு சமயம் அது பேதங்களை மிகைப்படுத்தியும் காட்டிற்று. ஆகவே "இரண்டாம் தலைமுறை"க்காரர்களிடம் முதல் தலைமுறையைக் காட்டிலும் சமுதாயப் பொருத்தமின்மை, மூர்க்காவேசம், சட்ட விரோதச் செயல்கள் முதலான குறைகள் அதிகமிருந்தன.

1900-க்கு சற்று முன்பின் எல்லையற்ற குடியிறக்கத்தை இனி அனுமதிக்கக் கூடாது என்ற எண்ணம் உலவி வந்தது. அமெரிக்கத் தொழிலாளருக்குப் போட்டி நிலை பிடிக்கவில்லை; ஸ்லாவ் இனத்தாரும் மத்தியதரைக் கடலின் சுற்றுப்புற நாட்டாரும் "அமெரிக்க ஜாதியை" மிகவும் மட்டப்படுத்துகின்றனர் என்றும் கவலை கொண்டனர்; அதிக விவரம் அறியாதப்

பொது மக்களும் ''நாட்டிலிருக்கும் ஜனங்களும் பிரச்னைகளும் நமக்குப் போதும், புதிதாக ஒன்றும் வெற்றிலை பாக்கு வைத்து அழைக்க வேண்டாம்'' என்று நினைத்தார்கள். வெகு நாட்களுக்கு முன்பு 1882-லேயே காங்கிரஸ் சீனர்களின் வருகையை நிறுத்திய நாடு, நோயாளிகள், மூளைக் கோளாறு உள்ளவர்கள், பிரஷ்டர்கள், அரசாங்கத்துரோகிகள், முதலான ''விரும்பத்தகாதவர்களை'' நாட்டில் நுழையாமல் தடுத்தது. இதனால் தரக்குறைவு சிறிதளவு தடைப்பட்டிருக்கலாம், ஆனால் எண்ணிக்கை முன்போலவே இருந்தது; இரண்டையும் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு வழி தேவையாயிற்று. கடைசியில், எழுத்தறிவை ஒரு நிபந்தனையாக்கக் காங்கிரஸ் யோசனை கூறிற்று. பிரிட்டிஷ் தீவுகள், ஜெர்மனி, ஸ்காண்டிநேவியாவில் ஆரம்பக் கல்வி பெறுதவர் இல்லையெனலாம்; இத்தாலி, போலந்து முதலான தேசங்களில் எழுத்து வாசனை யறியாமை ரொம்ப சகஜம்; ஆகவே மேற்கூறிய நிபந்தனையால் 'பழைய' குடிகள் வருவது தடைப்படாது; 'புது'க் குடிகளின் தொகை மிகவும் குறையும்.

க்ளீவ்லண்ட், டாஃப்ட், வில்ஸன் ஆகிய மூன்று ஜனாதிபதிகளும் படிப்பு நிபந்தனையை மறுத்தார்கள்; அது ''வாய்ப்பை சோதிக்கிறதே தவிரத் திறமையைச் சோதிக்கவில்லை'' என்று அவர்கள் காரணம் கூறினார்கள். 1917-ல் காங்கிரசின் விருப்பம் நிறைவேறிற்று, போர் முடிவடைந்து, நாசமடைந்த ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெரும் எண்ணிக்கையில் ஆட்கள் வெளியேற விரும்பக்கூடிய நிலையில், செய்ய வேண்டிய காரியம் வடிகட்டுதல் அல்ல, முழுத் தடுப்பு—என்பது தெளிவாயிற்று வருவோரின் தொகைக்குக் காங்கிரஸ் ஒரு சிறு எல்லையிடத் தொடங்கிற்று, கடைசியில் 1,50,000 என்ற எண் ஒப்புக் கொள்ளப்பட்டது கானடா, மெக்ஸிகோ அல்லது தென் அமெரிக்க ராஜ்யங்களிலிருந்து வருவோருக்கு அந்த நிபந்தனை கிடையாது; ஆனால் தன்—உதவியால் முன்னேறிப் பிற்காலத்திற்கு சேமிக்க முடியாதவர்களை—பிழைப்புக்கு அரசாங்க உதவியை எதிர்பார்க்கக் கூடியவர்களை—அமெரிக்கா ஏற்க மறுக்கலாம் என்று ஒரு நிபந்தனை அவர்களுள் சிலரைத் தடுத்து நிறுத்திற்று.

இவ்வாறு, 1930-க்குள் அமெரிக்கச் சரித்திரத்தில் ஒரு யுகம் முடிவடைந்தது. ஐக்கிய நாடு அப்பொழுதும் ஒரு ''மூலை உலை''யாகத்தான் இருந்துவந்தது; ஆனால் அந்நாட்டிலேயே பல இடங்களில் ஜன நெருக்கம் அதிகமாகி வந்தது; ஆகவே, அயல் நாடுகளின் ஏழைகளையும் துன்பப்படுவோரையும் ''வாக்களித்த நாடு'' திறந்த வாசலுடன் வரவேற்க முடியவில்லை.

அத்தியாயம் 15

மேற்கு நாடுகளின் முழு வளர்ச்சி

மேற்கு நாட்டின் எஞ்சிய பகுதி: தென்னாடு போரின் தீவிர வேதனைகளிலிருந்தும், புனரமைப்பின் குழப்பத்திலிருந்தும் தப்பிப் பிழைத்துக் கொண்டிருந்தது; வடநாடு யந்திரத்தையும் ஆலையையும் அனுசரித்துத் தன் வாழ்க்கையைத் திருத்தியமைத்துக் கொண்டிருந்தது; அதே சமயத்தில் மிஸூரிக் கப்பால் மேற்கே இன்னும் கவனத்திற்குரிய மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. 1860-ல், ஐக்கிய நாடுகளின் மொத்த விஸ்தீர்ணத்தில் அரைப் பங்குள்ள அந்தப் பிரதேசம் பெரும்பாலும் பொட்டல் காடாக இருந்தது. புது ராஜ்யமாகிய கலிஃபோர்னியா நான்கு லக்ஷம் ஜனத் தொகையைக் கொண்டு பெருமைப்பட்டுக் கொண்டிருந்தது; வில்லாமெட் பள்ளத்தாக்கில் சுமார் 50,000 ஆங்கில முன்னோடிகள் இருந்தார்கள்; 'பெரிய உப்பு ஏரி'யைச் சுற்றி வளர்ந்த மார்மன் பொது உடைமைக் காலனியில் 40,000 பேர் இருந்தார்கள்; க்ராண்டி நதியின் மேல் பகுதியில் கரை யாரங்களில் சுமார் 90,000 புவெப்லோ (Pueblo) இந்தியர்களும், மெக்ஸிகர்களும், ஆபத்தான புது அனுபவம் தேடும் வெள்ளையர்களும் சிதறலாக வசித்தார்கள். விஸ்தாரமான பாக்கிப் பிரதேசத்திலெல்லாம் பல இனங்களைச் சேர்ந்த இந்தியர்கள் வசித்தார்கள்; மிகப்பெரிய எருமைக் கூட்டங்கள் அவர்களுக்கு உணவும் உடையும் சுரையும் அடுப்பெரிக்க சாணமும் தாராளமாகக் கொடுத்துக் கொண்டு அங்கு சஞ்சரித்தன. மற்றப்படி அங்கு ப்யூமா என்னும் அமெரிக்க சிங்கமும் கோயோட் என்னும் காட்டு நாயும் நடமாடின.

மூப்பது வருஷங்களில் இதெல்லாம் மாறிற்று. இந்தியர்கள் தோற்கடிக்கப்பட்டு (சந்தேகாஸ்பதமான!) நம் நாகரிகத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். உறுமும் எருமை மந்தைகள் அடியோடு அழிக்கப்பட்டு விட்டன. பொன் தேடித் திரிபவர்கள் மலைச்சரிவுகளெல்லாம் அலைந்து தெளிவான ஓடைகளில்(விநோதமான அவற்றின் பெயர்களே அமெரிக்கச் செவிகளுக்கு கவிதை மயமானவை) பொன் துகளுக்காக அலசிக் கொண்டும், பூமிக்குள் குடைந்து கொண்டும், நிவாடா, மான்டானா, கொலராடோ, டகோடா முதலான இடங்களில்

ஆசைக் காயல் பிடித்த சிறு சமுதாயங்கள் அமைத்தனர், ரெயில் பாதைகள் துணிந்து விவசாயமறியாத பொட்டல்களைக் கடந்து, வானளாவும் ராக்கிஸ் மலைகளில் கணவாய்களைக் கண்டறிந்து பயன்படுத்திப் பசிஃபிக் அட்லாண்டிக் சமுத்திரங்களை இணைத்தன. (இறைச்சிக்காக) மாடு வளர்ப்பவர்கள் இலவசப் புல், ரெயில் பாதைகள், புது மார்க்கெட்டுகள் முதலிய வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு டெக்ஸாஸ் ராஜ்யத்தின் வட பகுதியிலிருந்து மிஸௌரியின் மேட்டுப் பகுதி வரை மிகப் பெரிய புல் தரைகளுக்கு உரிமை கொண்டாடத் தொடங்கினர்கள்; ஆடு வளர்ப்பவர்கள் பள்ளத்தாக்குகளிலும் மலைச்சரிவுகளிலும் அவர்களுடன் போட்டியிட்டார்கள். அதன் பிறகு குடியானவர்கள் மைதானங்களில் படையாகச் சென்று பள்ளத்தாக்குகளையும் ஆக்கிரமித்து 'காலியான இடை வெளி' என்ற வர்ணனையைப் பொய்யாக்கினர்கள். 1890-க்குள் எல்லை என்ற வார்த்தை செலாவணியற்றுப் போயிற்று; ஒன்றையடுத்து ஒன்றாக ஸ்டேட்டுகள் (தட்டில் வார்த்துக் கீறிய பணிகார வில்லைகள் போல் காட்சியளித்து) கீழ் கடல் முதல் மேல் கடல் வரை அமர்ந்தன; கறுப்பு மான்களும் காட்டு நாய்களும் ஓடியாடித் திரிந்த இடத்தில் ஐந்தாறு மிலியன் ஆண்களும் பெண்களும் விவசாயம் செய்தார்கள்.

இந்தப் பிரம்மாண்டமான பூ-பாகத்தில் குடியேற்றம் ஏன் இவ்வளவு தாமதப்பட்டது? ஆரம்பித்த பின் அது மூச்சுத் திணறும் வேகத்தில் ஏன் வளர்ந்தது? இரண்டு நூற்றாண்டுகளாக அமெரிக்கர் மேற்கு நோக்கித் தொடர்ந்து முன்னேறினர்கள். 1850-ல் அவர்கள் சுமார் 95 மேற்கு தீர்க்க ரேகையை (இரண்டு டகோடாக்கள் நெப்ராஸ்கா, கான்ஸாஸ், ஓக்லஹோமா, டெக்ஸாஸ் ஆகியவற்றின் சுமார் கிழக்கு எல்லையை) எட்டினர்கள். அதன் பிறகு ஆங்காங்கே நிலைத்துப் போனவர் போக பாக்கிப்பேர் அடுத்து அடுத்திருந்த மைதானங்களையும் ராக்கிஸ் மலைகளையும் வேகமாகக் கடந்து பசிஃபிக் சமுத்திரக் கரையில் போய்ச் சேர்ந்து அங்கு ஆவலுடன் தங்கினர்கள். நிலப்பாங்கும் வெப்ப-தட்ப நிலையுமே அதற்குக் காரணங்கள். ஐரோப்பியர்கள் காடுகளும் நதிகளும் அடர்ந்த தேசங்களிலிருந்து வந்தவர்கள்; புது உலகத்தில் அடவிகளும் ஆறுகளும் ஏராளமான மழையும் கண்டு அவர்கள் மகிழ்ந்து வேளாண்மை நடத்தினர்கள். ஆனால் இரு நூற்றாண்டின் அனுபவத்திற்கு மாறாக, கடல் போல் பரந்த வறண்ட மைதானங்களைக் கண்டு அவர்கள் திகைத்தார்கள். மழை அபூர்வமாகவும் குறைவாகவும் பெய்தது. ஓடைகள் ஆழமற்றவை, நிச்சயமற்றவை. வீடு கட்டவோ வேலிகள் அமைக்கவோ மரங்கள் இல்லையெனலாம். துவக்க காலத்து முன்னேடிகளெல்லாம் அவ்விடத்தைக் கடந்து

நீர்வளமும் காடுகளும் நிறைந்த பசிஃபிக் கடற்கரைக்கு விரைந்து சென்றதில் ஆச்சரியமில்லை.

புதுச் சூழ் நிலைக்குத் தகுந்த ஆயுதங்கள் கிடைக்கும் வரை குடியானவன் ''பெரிய மைதானங்களை'' வெல்ல முடியாது. அந்த வசதிகள் காலக்ரமத்தில் கிடைத்தன. ரெயில் பாதைகள் போக்கு வரத்துக்கு உதவின; வேலி போட முள் கம்பிகள் கிடைத்தது; ஆழமாகக் குடையப்பட்ட கிணறுகளும் காற்று இறைவு யந்திரங்களும் தண்ணீர் அளித்தன; குடியானவர்களுக்குப் பழக்கமான வேளாண்மைக்குப் போதிய மழை பெய்யாத இடங்களில் கிணற்று நீர்ப்பாசனமும் புன்செய் விவசாயமும் துவங்கப்பட்டன. இந்தப் புது வசதிகளைக் கொண்டு புது வழி காட்டி உயிர் வாழ்ந்து, பயிர் செய்து, நிரந்தரமான வாசஸ்தலங்கள் அமைப்பது சாத்தியமாயிற்று. அந்த அனுபவத்திலிருந்து புது முறை விவசாயம் மாத்திரமல்ல, புது முறை வாழ்க்கை—புது சமுதாய, பொருளாதார, கலாசார ஸ்தாபனங்கள்—கூட உண்டாயின.

மிஸௌரிக்கப்பாலுள்ள பரந்த மேற்குப் பிரதேசம், ஜன வாசமற்றிருந்தாலும், முற்றிலும் தெரியாத இடமல்ல. லூயி, க்லார்க், ஃப்ரீமான்ட் போன்ற மிகத் துணிவுள்ள முன்னேடிகள் அங்கே குறுக்கே நெடுக்கே சஞ்சரித்து ஆராய்ந்திருக்கிறார்கள்; உரோம சர்ம வேடர்களுக்கும் ஏஜெண்டுகளுக்கும் பழக்கமான இடம் அது; சாந்தா ஃபே தடத்தில் சென்ற வர்த்தகர்கள் ஸ்பானியத் தென்மேற்குப் பிரதேசத்திற்கு வழிகாட்டினர்கள்; ப்ராடஸ்டன்ட், மற்றும் கத்தோலிக மதப் பிரசாரகர்கள் இந்தியர்களிடையே பாடுபட்டிருந்தார்கள்; ஆரிகன் தடத்தில் முன்னேடிகளும் மார்மன் தடத்தில் அந்த சம்பிரதாயத்துப் போதகர்களும், கலிஃபோர்னியாத் தடத்தில் அதிர்ஷ்ட வேட்டைக்காரர்களும் சாலை அமைப்புக்கான அடிப்படைப் பணியாற்றியிருந்தார்கள்; புது மனிதர்களையும் வியாபாரிகளையும் காப்பதற்காக ராணுவ இலாகா கோட்டைகள் கட்டியிருந்தது; ரெயில்வேக் கம்பெனிகளின் நில அளவு சோதகர்கள் அப்பிரதேசத்தின் பிளான்கள் வரைந்திருந்தார்கள்; புது யுகம் ஆரம்பித்துக் கொண்டிருக்கையிலேயே ஜனுதிபதி லிங்கன் முதல் அதிதூர—'கண்டம் கடக்கும்'—(Trans Continental) ரெயில் பாதைக்கான மசோதாவில் கையொப்பமிட்டுக் கொண்டிருந்தார்.

1840 முதற் கொண்டே தீர்க்கதரிசிகள் கண்டத்தைக் கிழக்கு மேற்காகக் கடக்கும் ரெயில் பாதைகளின் நலங்களை அறிந்தார்கள்; ஆனால் கலிஃபோர்னியாவுக்குத் திரள்திரளாக மக்கள் போகத் தொடங்கிய பிறகுதான் அதன் அவசியம் குறிப்பாகத் தெரிந்தது. அதன் பிறகு, எந்த ஊர்கள் வழியாகப் பாதை செல்ல வேண்டுமென்பதைப்பற்றிக் காரசாரமாக

வாக்குவாதம் நடந்தது. தென் கலிஃபோர்னியாவையும், டெக்ஸாஸையும் நியூ ஆர்லீன்ஸோடோ, மெம்பிஸோடோ இணைக்கும் பாதையைத் தென்னுட்டார் விரும்பினர்; வட மேற்கை ஸந்த் லுயி-யுடன் அல்லது ஷிகாகோவுடன் இணைக்கும் பாதை வடநாட்டாருக்கு லாபகரமானது. நில அளவுச் சோதனைகள் ஆரம்பமாயின; ஆனால் வாக்கு வாதம் முடிந்த பாடில்லை; கான்ஃபெடெரேட் ஸ்டேட்டுகள் பிரிந்து போன போது தான் வட ராஜ்யத்தார் தம் இச்சைப்படி செய்ய முடிந்தது; 1862-ன் பசிஃபிக் ரெயில்வே சட்டம் இரண்டு ரெயில் வேக் கம்பெனிகளை உண்டாக்கிற்று:—யூனியன் பசிஃபிக், ஸெண்ட்ரல் பசிஃபிக். யூனியன் பஸிஃபிக் அயோவாவிலிருந்து மேற்கு நோக்கிப் பாதை யமைக்க வேண்டுமென்றும், ஸெண்ட் ரல் பசிஃபிக் கலிஃபோர்னியாவிலிருந்து புறப்பட்டு அதை சந்திக்கக் கிழக்கே முன்னேற வேண்டுமென்றும் ஏற்பாடு. இவ்வளவு பிரம்மாண்டமான யத்தனத்தைக் கொண்டு செலுத் துவதற்காக ஃபெடெரல் அரசாங்கம் இரு கம்பெனிகளுக்கும் ஏறக்குறைய 24 மிலியன் ஏக்கர் பொது நிலமும் இறுதியில் 65 மிலியன் டாலர் மொத்தமாகிய கடன்களும் அளித்துதவிற்று.

1869 ஏப்ரல் 10-ஆம் தேதியன்று இரு பகுதிகளும் யூட்டா வில் ப்ரொமான்டரி பாயின்ட் என்னுமிடத்தில் சந்தித்தன; அவ்விரண்டின் 'விவாகச் சடங்கு' தங்க ஆணிகளும் வெள்ளி ஆணிகளும் அறைந்து நடத்தப்பட்டபோது அக்கொண் டாட்டத்தில் நாடு முழுதுமே கலந்து கொண்டது. அது ஒரு மிகப் பெரிய சாதனை— அதிசயமான விடா முயற்சி, சமயோ சித யுக்தி, சாகஸம் எல்லாம் ஒரு வீரகாவியத்திற்கான விஷயம்.

இதற்கிடையே வேறு பெரிய பாதைகளுக்கும் திட்டம் வகுக்கப்பட்டது; அவற்றில் நான்கு பாதைகள் பூர்த்தி செய் யப்பட்டன. காங்கிரசிடம் 40 மிலியன் ஏக்கர் நிலம் மானியம் பெற்று ஜே குக் ஆரம்பித்த வட பசிஃபிக் ரெயில்வே 1883-ல் பூர்த்தியாகி ஸுபீரியர் ஏரியையும் பசிஃபிக்சமுத்திரக்கரையில் ப்யூஜெட் சவுண்டையும் இணைத்தது. சாந்தா ஃபே பாதை கான்ஸாஸிலிருந்து நியூ மெக்ஸிகோவுக்கு, பழைய தடத்தை ஒட்டியே சென்று, அங்கிருந்து பாலைவனத்தைக் கடந்து தென் கலிஃபோர்னியாவுக்குச் சென்றது; தென் பசிஃபிக் ரெயில்வே நியூ ஆர்லீன்ஸிலிருந்து லாஸ் ஏஞ்ஜெல்ஸ், அப்பால் ஸான் ஃப்ரான்ஸிஸ்கோ ஆகிய இடங்களுக்குச் சென்றது. இவ்விரு யத்தனங்களும் கூடப் பெரிய அளவில் சர்க்கார் மானியம் பெற்றன; ஸ்டேட்டுகளிலிருந்தும் ஜில்லாக்களில் இருந்தும் அவை உதவிபெற்றன. இவ்வாறு ஒரு உதவியும் பெறாமல் அமைக்கப்பட்ட ஒரே பெரிய ரெயில்வே 'க்ரேட் நார்த்தர்ன்'. ஸந்த்பால் நகரிலிருந்து ஸியாட்டில் வரை நார்த்

தர்ன் பசிபிக்-குக்கு இணையாக ஓடும் இப்பாதை கானடாவில் பிறந்த ஜே. ஜே. ஹில் என்னும் என்ஜினியரால் நிறுவப்பட் டது. வரவுசெலவுக்கணக்குப்படி மிகச்சிறப்பான முயற்சி அது; பொருளாதார சமுதாயக் கொள்கைகளில் மிகவும் பயன ளிப்பது.

கனி வளமும் கால்நடை வளமும்: மேற்கே வெகு தொலை யில் சிறு வாசஸ்தலங்களை முதலில் உண்டாக்கியவர் சுரங்க வேலையாட்கள். நியூ ஸ்பெயினின் மாடு வளர்ப்பு இடமாக இருந்த கலிஃபோர்னியாவில் பொன் கண்டெடுக்கப்பட்ட துமே அது ஒரு விருத்தியடையக் கூடிய அமெரிக்கன் ஸ்டேட் ஆகிவிட்டது; தோட்டம், கப்பல், ரெயில் பாதை, ஆலைத் தொழில் போன்ற பல்வேறு பொருளாதாரச் செயல்கள் ஆரம்பமாயின. அதே அனுபவமும், காரியத் திட்டமும் எல்லா சுரங்கப் பிரதேசங்களிலும் காணலாம். ஒவ்வொரு இடத்தி லும் சுரங்கம் வெட்டுபவர்கள் புதுக் குடியிருப்புக்கு அஸ்தி வாரம் போட்டு, ஓரளவு பஞ்சாயத்து ஆண்மை ஏற்படுத்தி னார்கள். பொன் வெள்ளி லாபகரமாகக் கிடைப்பது தீர்ந்து போகும்; அல்லது கிழக்குச் சீமை முதலாளிகள் பெருவாரி யத்தனங்கள் துவக்குவார்கள்; முன்னோடிகளின் தாபம் சற்று தணியும்; அப்பொழுது அவர்கள் விவசாயமும் மாட்டுப் பண் ணையும் அளிக்கும் வாய்ப்புக்களை உணருவார்கள், அல்லது ரெயில் அமைப்பில் வேலை தேடிச் செல்வார்கள். சில சிறு சமு தாயங்கள் தொடர்ந்து சுரங்க வேலையே செய்தன; ஆனல் மான்டானை, கொலராடோ, வியோமிங், இடாஹோ, கலிஃபோர்னியா வகையறாவின் உண்மையான செல்வம் அவ் விடத்துப் புல்லிலும் மண்ணிலுந்தான் இருந்தது. கனிவளத் திலும் முதலில் ஆசை காட்டியது பொன் வெள்ளி யென்றாலும் ஏராளமாகக் கிடைத்து என்றைக்கும் அதிக லாபம் அளித் தவை தாமிரம், நிலக்கரி, எண்ணெய் ஆகியவை.


கனி ராஜ்யத்தின் வளர்ச்சி எவ்வளவு வேகமோ அவ் வளவு வேகம் அதன் வீழ்ச்சியும்; ஆனல் அமெரிக்கருக்கு அது ஒரு மறவாத அனுபவம். சுரங்கவெட்டிகளின் அதிசயமான தற்காலிக இருப்பிடம் ஒரு சித்திரக் களஞ்சியம் எனலாம். ஆதியில் அவ்விடத்து வாழ்க்கை மனிதனை மிருகமாக்குவதே. ஆயினும் காலக்ரமத்தில் வீடு வாசல், பாடசாலை, கோயில், நீதிஸ்தலம் முதலியன ஏற்பட்டதும் அவ்வூர்கள் நாகரிக வசதிகளும் ஒழுங்கும் பெற்றன.

சுரங்கப் பிரதேசம் விவசாயத்திற்குகந்தது என்ற செய்தி பரவிற்று; பலர் அங்கு வந்து தங்கினர்கள்; புது வாழ்க்கை முறை பல கதைகளுக்கும், பிற்காலத்தில் சிலிமாக்களுக்கும், விஷயதானம் செய்தது. கூடவே, இந்தியப் பிரச்னையை உட னடியாகத் தீர்க்க வேண்டிய அவசியம் கிளம்பிற்று. அந்த

நாட்டின் அபிவிருத்தியும் ரெயில் பாதையின் அபிவிருத்தியும் ஒன்றையொன்று சார்ந்தவை. கனிகளிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட செல்வத்தில் ஒரு பகுதி கிழக்குச் சீமை முதலாளிகளின் பணப்பெட்டிகளில் போய் விழுந்தது; நாட்டுக்கு 2,000 மிலியன் டாலர் பொன்னும் வெள்ளியும் அளித்து 'பச்சைக் காகிதங்களுக்கு' ஈடுகட்டக் சுரங்கங்கள் உதவின; அதோடு கூடவே 'பணப்பிரச்னை'யை அமெரிக்க அரசியலில் புகுத்தின.

நிவாடா, மான்டானா மலைகளில் கனி வெட்டிகள் குடைந்து கொண்டிருக்கும் அதே சமயத்தில், மேற்கு நாட்டின் சரித்திரத்தில் ஒரு புது அத்தியாயம் வரையப்பட்டு வந்தது. கால்நடை வளத்தைப் பற்றியது அது. தெற்கே ரியோ கிராண்டி நதியிலிருந்து வடக்கே எல்லை வரையிலும், கிழக்கு மேற்கே கான்ஸாஸ், நெப்ராஸ்காவிலிருந்து ராக்கி மலை யடிவாரம் வரையிலும் தொடர்ந்து மரமற்ற புல்தரைகள் இருந்தன. மிலியன் கணக்கான எருமைகள் சுயேச்சையாகத் திரிந்த நாடு அது; இருபது ஆண்டுகளில் அவை அநேகமாக அழிக்கப்பட்டன: அதைவிடப் பன்மடங்கு வளர்ப்பு மாடுகள் மேய்ந்து கொழுக்கும் இடமாயிற்று அது.

ஒரு நூற்றாண்டாகவே ஸ்பானியச் செல்வர்களும் மதப் பிரசாரகர்களும் ரியோ கிராண்டிக் கரையோரங்களிலும் தென் கலிஃபோர்னியப் பள்ளத்தாக்குகளிலும் மாடுகள் வளர்த்து வந்தார்கள்; அவை உள்ளூரில் உணவுக்காகவும் கொழுப்புக்கும் தோலுக்கும் உதவின. ஆனல் ரெயில் பாதைகள் பரவி, குளிர்ச்சி-வண்டிகளின் பிரசாரம் அதிகமான தாலும் ஸாந்த் லுயி, கான்ஸாஸ் நகரம், ஒமாஹா, ஷிகாகோ முதலான இடங்களில் இறைச்சித் தயாரிப்பு நிலையங்கள் கிளம்பியதாலும் மாடுகளின் தரத்தை உயர்த்தி அவற்றை ஓட்டிச் செல்வது லாபகரமாயிற்று. சிவில் போர் முடிந்ததும் ஆரம்பமான இந்த நீண்ட யாத்திரை வருஷாந்தர நிகழ்ச்சியாயிற்று. ரெயில் பாதைகளின் கோடிகளில் அபிலீன், சேயேன் போன்ற மாட்டுத் தொழு ஊர்கள் கிளம்பின: இதற்கிடையே, வடக்கே புல் செழுமையாக இருக்கும் இடங்களில் பனிகாலத்தில் மாட்டுத் தொழுக்கள் அமைக்கலாம் என்று மாட்டுக்காரர்கள் கண்டார்கள்: ஆகவே கொலராடோ, வியோமிங், மான்டானு ஆகிய இடங்களில் கால்நடை ராஜ்யம் பரவிற்று. டெக்ஸாஸில் மாடுகள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும் வியோமிங்தான் மிகவும் ஏற்ற இடம். அங்கு நான்கு தொழில்களோடு கூட இதுவும் ஒன்று என்றிராமல் மாட்டுப் பண்ணை முழுக் கவனத்தையும் கவர்ந்தது; வியோமிங் கால்நடை அபிவிருத்தி சங்கம் பல ஆண்டுகள் செல்வாக்குடன் பணியாற்றிற்று:



ஆரம்பத்தில், சில பசுக்களும் கன்றுகளும் வாங்கிப் பொது இடங்களில் மேய விட்டு எவனும் ஒரு மந்தை சேர்க்க முடியும் என்ற நிலை இருந்தது. ஆனால் சிறிது காலத்தில் பெரிய வியாபாரிகளும் கம்பெனிகளும் பொது மேய்ச்சல் தரைகளை அடைத்துத் தமதாக்கிக் கொண்டோ அல்லது இந்தியரிடமிருந்து குத்தகைக்கு வாங்கிக்கொண்டோ தொழிலில் ஆதிக்கம் செலுத்தினர்கள். கம்பெனிகள் கிழக்கு ராஜ்யத்தார் அல்லது பிரிட்டிஷ் முதலாளிகளுக்குச் சேர்ந்தவை; தண்ணீருக்காக மாடுகள் தேடி வரும் ஊற்றுக்களையும் ஓடைகளையும் சுற்றி அவர்கள் கம்பி வேலிகள் போட்டுப் பிறருக்கு உதவாமல் தடுத்தனர். ஒரு கம்பெனி கொலராடோவில் ஒரு மிலியன் ஏக்கரை வளைத்துப் போட்டது; இன்னொன்று டெக்ஸாஸில் ஜோன்ஸ் ஜில்லா முழுதையும் வளைத்துப் போட்டது; சேயென் இந்தியர் ஒரு மாட்டுக் கம்பெனிக் கூட்டத்திற்கு நான்கு மிலியன் ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு விட்டனர்; "இந்தியர் பிரதேச"த்தில் நாகரிகம் அடைந்து வசித்த சில இனத்தார் ஆறு மிலியன் ஏக்கரை ஒரே ஒரு கம்பெனிக்குக் கொடையாக அளித்து விட்டனர். பெரிய மாட்டுப் பண்ணைக்காரர்கள் போட்டியிடும் சிறு மந்தைக்காரர்களை புல் தரையிலிருந்தும் நீர் ஸ்தலத்திலிருந்தும் விரட்டினர்கள்; ஆடுகள் புல்லை அடியோடு கடித்துக் கொல்லுவதால் ஆட்டுக்காரர்களையும் அவர்கள் தாட்சண்யமின்றி விரட்டியடித்தார்கள்.

குடியானவர்களின் வருகை: மேட்டு இடங்கள் ஆடு மாடு வளர்ப்புக்கு உகந்தவை; ஆகவே குடியானவர்கள் அவ்விடங்களில் தம் தொழில் துவக்குவது தவறுமென்று மாடு வளர்ப்பவர்கள் நினைத்தார்கள். நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே "கான்ஸாஸ், ப்ளாட், ஆர்கன்ஸாஸ் ஆகிய நதிகளும் அவற்றின் பல உபநதிகளும் பாயும் பிரதேசம் ஜன நெருக்கடியைத் தாங்காது, அது விவசாய ஸ்தலமல்ல, மாடு, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு முதலியவற்றை விருத்தி செய்வதுதான் அங்கு அதிகப் பயனளிக்கும் தொழில்" என்ற அபிப்பிராயம் ஆதரவு பெற்றிருந்தது; ஐம்பது வருஷங்களுக்குப் பின்னரும் இந்த எண்ணம் உலவிற்று. மேற்கே பெரும் பகுதிகளில் விவசாயம் லாபமளிப்பதில்லை என்பது ஓரளவு உண்மையே. அதன் பின் ரெயில் பாதைகள் அந்தப் பிரதேசம் முழுதிலும் பரவி, காலனிகள் அமைக்கும் பெருவாரியான முயற்சியில் ஈடுபட்டன. நாற்பது மிலியன் ஏக்கர் கைவசம் வைத்திருந்த வடக்கு பஸிஃபிக் ரெயில்வே மேற்கு நாட்டின் செழுமையை அபாரமாக வர்ணித்து ஐரோப்பாவை ஒரு விளம்பர வெள்ளத்தில் அழுத்திற்று. 'கிரேட் நார்த்தர்ன்' ரெயில்வேயை ஆதர்ச முறையில் நிறுவின ஹில், தன் அபிவிருத்தி திட்டத்திலும் சிறந்த வழிகளை அனுசரித்தான்—

பணமுடையுள்ள குடியானவர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டது; விஞ்ஞான முறையில் விவசாயம் நடத்துவோருக்குப் பண உதவி யளிக்கப்பட்டது; மக்களை நல்வழிப்படுத்தக் கோயில்களும் பள்ளிக்கூடங்களும் கட்டப்பட்டன.

செவ்விந்தியர்களின் எதிர்ப்பு முறிக்கப்பட்டது; தோல்வியடைந்து எஞ்சியவர்கள் பழைய இடங்களிலிருந்து துரத்தப்பட்டார்கள், அல்லது அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வாசஸ்தலங்களில் கொண்டு சேர்க்கப்பட்டார்கள். மைதானத்தின் எல்லையில் ஆங்காங்கே இருந்த தொழிற்சாலைகள் மிலியன் மைல் கணக்கில் முள்வேலிக் கம்பிகளும் ஆயிரக்கணக்கில் கிணறு துளைக்கும் யந்திரங்களும் காற்றடி இறைப்பு யந்திரங்களும் தயாரித்தன. அயல்நாட்டார் எட்டு மிலியன்பேர் தேசத்தில் வந்திறங்கினர்கள்; ஜனத்தொகை 22 மிலியன் அதிகமாயிற்று; பழைய வாசஸ்தலங்களில் ஜன நெருக்கம் அதிகமாயிற்று; பண்ணை விளைபொருள்களுக்கு நாட்டிற்குள் விற்பனை வாய்ப்புக்கள் அதிகரித்தன.

ஒன்பதாம் பத்தாண்டு முடிவடைவதற்குள் பொங்கி எழும் இந்த மானிடக் கடல் ஓய்ந்துவிட்டது; சில இடங்களில் பெருக்கு வடியவும் ஆரம்பித்துவிட்டது. காலத்தின் கொடுமையும் வறட்சியும் ஆவல் நிறைந்த பல குடியானவர்களை மேற்கு கான்ஸாஸ், நெப்ராஸ்கா, டகோடாக்கள் ஆகிய இடங்களிலிருந்து கிழக்கே விரட்டின.

கனிராஜ்யங்களும் கால்நடை ராஜ்யங்களும் மறைந்து போயின; எல்லையும் போயிற்று. இதன் கருத்து சுரங்கங்கள் அற்றுப்போயின, காலியாகிவிட்டன என்றல்ல; கிழக்குச் சீமைக் கார்ப்பொரேஷன்கள் அவற்றை முறையாக நடத்தின. முன்போலவே விசாலமான புல்தரைகளில் மிலியன் கணக்கான மாடுகள் மேய்ந்து திரிந்தன; ஆனால் சுயநல சூழ்ச்சிகளாலும் முரட்டு வாழ்க்கையாலுமல்ல; மாட்டு வளர்ப்பும் ஒரு ஒழுங்கான தொழிலாயிற்று. மேற்கே காலி இடம் இன்னும் இருந்தது; ஆனால் அது பெரும்பாலும் மலைப் பிராந்தியத்தில் வறண்ட இடத்தில் இருந்ததால் நீர்ப்பாசன ஏற்பாடில்லாமல் விவசாயம் பலனளிக்காது. ஆகப் பொருளாதார அமைப்பில் மேற்கு நாடும் மேலும் மேலும் தேசத்தின் இதர பாகங்களைப் போலாயிற்று.

அரசியலிலும் அதே மாறுதலைக் காண்கிறோம். 1864-லேயே நிவாடா ஒரு ஸ்டேட்டாக ஏற்றுக்கொள்ளப்பட்டது-முக்கியமாக, லிங்கன் அதன் எலெக்டொரல் வோட்டுகளை விரும்பியதால். 1867-ல் நெப்ராஸ்கா ஸ்டேட் ஆயிற்று; சுதந்திரப் பிரகடனம் செய்து சரியாய் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, 1876-ல், கொலராடோ 'நூற்றாண்டு ஸ்டேட்டாக' சேர்த்துக்கொள்ளப்பட்டது. அதன் பிறகு பல ஆண்டுகள்

மேற்கே ஜனங்கள் திரள்வதிலும் அரசியல் கட்சிகள் தம் தம் செல்வாக்குக்காக சூழ்ச்சிகள் செய்வதிலும் கழிந்தன. கடைசியில் 1889-1890-ல் 'சுவர்க்க வாசல்' திறக்கப்பட்டு ஒரே மசோதாவின் கீழ் இரு டகோடாக்கள், வியோமிங், மான்டானு, இடாஹோ, வாஷிங்க்டன் ஆகிய ஆறு மேற்குராஜ்யங்கள் உண்டாக்கப்பட்டன. ஜனத்தொகைக் கணக்குப்படி யூட்டா அதற்கு முன்னரே தகுதி பெற்றிருந்தது; ஆனால் அங்குள்ள மார்மன் சம்பிரதாயம் வலுவடைந்து விடுமோ என்ற சந்தேகத்தால் மத்திய அரசாங்கம் தயங்கிக் கொண்டிருந்தது; கடைசியில், சில வருஷங்களுக்குப் பின், யூட்டாவும் ஒரு ஸ்டேட் ஆயிற்று; 1907-ல் ஒக்லஹோமாவும், 1912-ல் நியூ மெக்ஸிகோவும் ஐக்கிய நாடுகளில் சேர்ந்தன. இவ்வாறு தேசத்தின் அரசியல் எல்லைகள் இறுதி ரூபத்தில் அமைந்தன; 'வடமேற்கு அவசரச் சட்டம்' என்ற பெயருடன் 1787-ல் மங்களகரமாக ஆரம்பமான காரியம் முற்றுப் பெற்றது.

அரசியல் அமைப்பில் மேற்குக் குடிநல ராஜ்யங்கள் கிழக்கு ராஜ்யங்களைப் போன்றவையே—மூன்று பகுதிகளில் அதிகார வர்க்கம், இரண்டு பிரிவுகள் கொண்ட சட்டசபைகள், ஸ்தல ஆட்சியில் ஜில்லா ஆண்மை, நகராண்மை, இதே நமூனு எங்கும் ஏற்கப்பட்டது. ஆனால் சில விவரங்களில் இரண்டின் நிர்மாணத் திட்டங்களிலும் வித்தியாசங்கள் காணலாம்; புது ஸ்டேட்டுகளின் ஷரத்துக்கள் அதிக விஸ்தாரமாகவும், சொல் விழிப்போடும், மொத்தத்தில் விரிந்த மனத்தோடும் வரையப்பட்டிருந்தன. பெரும்பாலானவற்றில் பெண்களின் வாக்குரிமைக்கு இடமிருந்தது; ட்ரஸ்டுகளும் தனி உரிமை நிலைகளும் தடுக்கப்பட்டிருந்தன; ரெயில்வே நிர்வாகத்தையும் ஒழுங்குபடுத்த விதிகள் இருந்தன; தொழில்முறைகளிலும் முன்னேக்கமான தரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் அவற்றின் பிராணன் போன்ற அடிப்படைத் தத்துவமும் செயலாற்றும் சக்தியும் ஐக்கிய நாட்டில் எங்கும் வியாபித்தவையே, புதியவையல்ல.

கடைசி எல்லையில் வாழ்க்கை முறை: எல்லை வாழ்க்கையும் ஆபத்து நிறைந்த சிரம ஜீவனமும் இணைபிரியாதவை எனலாம். கடைசி எல்லை விதிவிலக்கல்ல. கிழக்கு நகர வாழ்க்கையையோ, செழிப்பான தோட்ட வாழ்க்கையையோ விட்டு, மேட்டுப்பிரதேசங்களில் தம் அதிர்ஷ்டத்தை சோதிக்கப் புறப்பட்ட ஆண் பெண்களின் அனுபவம் கடுமையானது, பெரும் பாலும் கசப்பும் ஏமாற்றமும் நிறைந்தது. கடினமானது, முடிவற்றது; பலன் மிகக் குறைந்த நிச்சயமற்றது; ஓஹியோ அல்லது மிஸிஸிபி பள்ளத்தாக்குகளில் அப்படியல்ல.

உஷ்ணம் அசுத்தம், வேலைத்தொல்லை—இவற்றைவிடச் சகிக்க முடியாதது எனலாம் அவ்விடத்துத் தனிமை—சமுதாயத்துடன்

தொடர்பற்ற தீவு வாழ்க்கை. நாலுபேருடன் சேர்ந்து அளவளாவுதல், கோயிலுக்குச் சென்று மனநிம்மதி பெறுதல், நோய் நோக்காடு வந்தபோது வைத்தியரிடம் சரண் புகுதல், இவற்றிற்கு அங்கு வசதியில்லை; அநேக தாய்மார்கள் தொடர்ந்து வந்த துன்பங்களால் புத்தி சுவாதீனம் இழந்தார்கள். நல்மனம் படைத்த அயலார்களின் உதவியால் பிரசவம் நடந்தது; ஒவ்வொரு சமயம் அவ்வுதவியும் கிடைக்காமல் போவதுண்டு; சிசு மரணம் மிக அதிகம்; சின்னஞ்சிறுக் கல்லறைகளே அப்பரிதாப நிலைக்கு சாக்ஷி. நோய் கண்டால் ஒரே திகில்தான்—டாக்டர் கிடைப்பதரிது; கிடைத்தாலும் செலவு ஊர்ப்பட்டதாகும். விபத்துக்களும் நல்ல பலி வாங்கின. திக்கற்ற நாட்டுப்புறத்து வைத்தியர்கள் மயக்க மருந்துகளும் நுட்பமான ஆயுதங்களுமில்லாமல் நிகழ்த்திய ரண சிகிச்சைகளே வீரச் செயல்கள் எனலாம்.

எல்லாம் தனி வீடுகள் அல்ல; சில ஊர்களும் ஆங்காங்கே இருந்தன. அங்கு முன் சொன்ன சில அசௌகரியங்கள் சற்று குறைவாக இருந்தாலும், மொத்தத்தில் அதுவும் ஒரு ரசமற்றத் தீவு வாழ்க்கைதான். ஊர் என்பது தற்காலிகமான சிறு 'மூகாம்'—வீடுகளின் சேர்க்கை; இன்று அங்கு ஜீவத்துடிப்பு காணலாம்; நாளை காண முடியுமோ சந்தேகந்தான். லக்ஷ்மியின் கடாக்ஷந்தான் அங்குள்ளவர்களின் லக்ஷ்யம், கனவு; வேறோரிடத்தில் நல்ல சுரங்கம் இருப்பதாகச் செய்திபரவினால் ஒரு விநாடியில் மூட்டை முடிச்சுடன் புறப்பட்டுவிடுவார்கள்.

சாதாரணமாக ஆரம்பமான இந்த ஊர்களில் பல விருத்தியடைந்தன. தெருக்களிலும் நடைபாதைகளிலும் கல் பாவப்பட்டது: மர வீடுகள் போய் கல் செங்கல் வீடுகள் உண்டாயின; புது ஓட்டல், நாடக சங்கீத மண்டபம், பாங்குகள், ஸ்டோர்கள் உயர்தரப் பள்ளி—இவை விருத்தியடைந்து நகரப் பெருமையுடன் விளங்கின. வேறு ஊர்கள் கூனித்து மறைந்தன; கான்ஸாஸ் ராஜ்யத்தில் மாத்திரமே அவசரத்தில் உருவான 2,000 ஸ்தலப் பெயர்கள் பிற்காலத்தில் வரையப்பட்ட தேசப்படங்களில் இடம் பெறவில்லை. புதிய எல்லைப்புற ஊர் வளருமா, அழியுமா என்பது அநேகமாக ரெயில்வே கம்பெனிகளின் நடத்தையையும் அரசியல் போக்கையும் தழுவிய விஷயமாக இருந்தது; மேலும், ஜில்லாவின் தலைநகர அமைப்புக்கான போர்கள் மிகவும் அபகீர்த்தி அளிக்கக் கூடியவை.

பழைய எல்லைகளைப் போலவே இந்தக் கடைசி எல்லையும் சாதாவாழ்க்கையையும் சமபாவத்தையும் வளர்ப்பது. புது சமுதாயங்களுள் பல பெண்களுக்கு ஓரளவு வாக்குரிமை அளித்தன பொதுப் பிரச்னைகளைப் பொது மக்களின் அபிப்பிராயத்திற்கு விட சில புதிய நிர்மாணத் திட்டங்கள் அனுமதித்தன; நீதிபதிகள்

உட்படப் பெரும்பாலான உத்தியோகஸ்தர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எனினும், அரசியல் உறவுகளைக் காட்டிலும் சமுதாய உறவுகளில்தான் சமபாவம் அதிகம் தென்பட்டது. அயலார்களைக் காட்டிலும் அதிக சிறப்பாக உடைகள் அணிபவனும், டம்பமாக நடந்து கொள்பவனும், வீட்டில் பணியாட்களை அமர்த்திக் கர்வப்படுகிறவனும் சந்தேகத்திற்காளானார்கள். பாங்கு முதலாளி, மளிகைக் கடைக்காரன், வக்கீல், குடியானவன், குதிரை லாயக்காரன், எல்லோரும் எளிய ஷர்ட்டு அணிந்து ஊர்ப் பொது இடங்களில் சேர்ந்து சமமாக உட்காருவார்கள்; கோயிலிலும் ஒரே பெஞ்சில் உட்காருவார்கள்; எல்லாக் குழந்தைகளும் பொதுப்பள்ளிக்கூடம் சென்றன; அதிகப் படிப்பு விரும்புவோர் தங்கள் மத சம்பிரதாயக் கல்லூரிகளுக்கோ, போதனை முறைப் பயிற்சிப் பள்ளிகளுக்கோ, ஸ்டேட் சர்வ கலாசாலைக்கோ சென்றனர்; இவை ராஜ்ய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டவை. எல்லைப்புறச் சமுதாயங்களில் பலமனித இனங்கள் கலந்தன—பிரிட்டிஷார், ஜெர்மானியர், நார்வேக்காரர், பொஹீமியாக்காரர், மிகச் சில யூதர்கள், அண்டை ராஜ்யங்களிலுள்ள அமெரிக்கர், ஜாதி வேற்றுமை, மொழி வேற்றுமை, கொள்கை வேற்றுமைகளை அனைவரும் பொறுத்துக் கொண்டனர். பல விஷயங்களில் எல்லா எல்லைப்புற சமுதாயங்களிலும் கடைசி எல்லைப்புறக் கூட்டம் அதிக சமபாவமும் அதிக 'அமெரிக்கத் தன்மை'யும் கொண்டதாக இருந்தது.

அத்தியாயம் 16

குடியானவனும் அவன் பிரச்னைகளும்

விவசாயப் புரட்சி: தொழில் புரட்சியைத் தற்காலச் சரித்திரத்தின் அடிப்படைக் கருத்தாக வெகுகாலமாக மதித்து வருகின்றனர். விவசாயப் புரட்சி அதே அளவு முக்கியத் தன்மை பெற்றது. இரும்பு ஆராய்ச்சியாளர்கள், ரெயில் பாதைகள் அமைத்தவர்கள், என்ஜினியர்கள், தொழில் தலைவர்கள், நிதித்தலைவர் முதலியோரின் வெற்றிகளைக் கண்டு இருதலைமுறை அமெரிக்கர்கள் மோகித்திருந்தார்கள்; ஆனால் பசியுடன் போரிடும் வீரர்களாகிய குடியானவர்களின் வெற்றி

தாழ்ந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல. உண்மையில் தொழில் புரட்சி, விவசாயப் புரட்சி இரண்டும் அந்நியோந்நியச் சார்பு உள்ளவை. யந்திரங்களும் ரயில் பாதைகளும் இல்லாவிட்டால் விவசாயப புரட்சி ஏற்பட்டிருக்க முடியாது; பெரிய நகரங்களின் பண்டகசாலைகளில் தானியப் பிரவாகம் வந்து பாய்ந்திராவிட்டால் தொழில் புரட்சி நிகழ்ந்திராது. பல நூற்றாண்டுகளாக மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு வேண்டிய அளவு உணவு உற்பத்தி செய்யப் பாடுபட்டு வந்திருக்கிறார்கள்; உணவுக் கையிருப்பு ஜனப் பெருக்கத்தைப் பாதித்திருக்கிறது; பல நூற்றாண்டுகளாகப் பஞ்சப்பேய் ஜனங்களை நடுங்க வைத்திருக்கிறது; கிறிஸ்தவ வேத நூலில் குறிப்பிடப்பட்ட நான்கு பேராபத்துகளில் பஞ்சம் ஒன்று; அதுவே அந்நான்கில் மிகப் பயங்கரமானது எனலாம். 19-ஆம் நூற்றாண்டில் மனித வர்க்கத்தின் பெரும் பகுதி உணவுக் குறைவு என்னும் கதிகலக்கும் சாபத்திலிருந்து விடுதலை பெற்றது; அவ்வாறு விடுதலை யளித்த பெருமை பெரும்பாலும் அமெரிக்கக் குடியானவர்களைச் சாரும்.

1860-1900 என்னும் 40 ஆண்டுகளில் ஐக்கிய நாட்டில் மொத்த விவசாய நிலப்பரப்பு இரட்டித்தது; ஒழுங்காக விவசாயம் நடந்த நிலம் மும்மடங்காயிற்று. அதாவது, முன் 200 வருஷங்களில் இருந்ததைக் காட்டிலும் ஒரு தலைமுறை காலத்தில் மூன்று மடங்கு நிலம் கலப்பையின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. மேலும், விளைபொருள்கள் மேற்கூறிய மும்மடங்கைக் காட்டிலும் அதிக விகிதத்தில் பெருகின. இதே கால அவதியில் தேசத்தின் ஜனத்தொகை இரு மடங்குக்கும் அதிகமாயிற்று; பெருக்கத்தின் பெரும்பகுதி நகரங்களுக்குச் சென்றது; குடியானவர்கள் அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு வேண்டிய அளவு தானியங்களும் பருத்தியும், இறைச்சி வகைகளும் ஆட்டு ரோமமும் உற்பத்தி செய்ய உதவியதோடு ஐரோப்பியருக்கு உணவும் உடையும் அளிக்க மேலும் மேலும் அதிகமான பொருள்கள் அனுப்பினர்கள்.

குறிப்பிடத்தக்க இந்தச் சாதனைக்கு அடிப்படையான இரண்டு காரணங்கள் கூறலாம். விவசாயப் பிரதேசம் மேற்கு நோக்கி வளர்ந்தது ஒன்று; யந்திரங்களையும் விஞ்ஞான முறைகளையும் விவசாயத்துடன் இணைத்தது இரண்டாவது காரணம். முதல் விஷயத்தை நாம் ஓரளவு அறிந்துகொண்டிருக்கிறோம். மைதானங்களும் மலைப் பள்ளத்தாக்குகளும் சேர்ந்த புதிய மேற்குப் பிரதேசம் விவசாயப் பிரதானமானது; அதிசயிக்கும் அளவு குறுகிய காலத்தில் அது தேசம் முழுதிலும் விவசாய உற்பத்தியில் முதல் இடம் பெற்றுவிட்டது. கோதுமைப் பிரதேசம் மேற்குப்புறமாக ஓஹியோ படுகையிலிருந்து மிஸௌரி படுகைக்கு நகர்ந்துவிட்டது. சோள வேளாண்மையில்

அவ்வளவு கவனிக்கத்தக்க மாறுதல் இல்லாவிட்டாலும் மேற்கு நோக்கிய நகர்வு இருக்கத்தான் இருந்தது. பருத்தியின் கதையும் அதுவே. புது நூற்றாண்டு பிறக்கும் போது டெக்ஸாஸ் மற்ற ராஜ்யங்களைக் காட்டிலும் மிகவும் முன்னே இருந்தது. நாட்டின் மொத்தத்தில் அநேகமாகப் பாதி யளவு பருத்தி மிஸிஸிபிக்கு மேற்கே விளைந்தது. இதே ஆண்டுகளில் ஆடுமாடுகள் மாபெரும் மந்தைகளாக மைதானங் களிலும் மலைகளிலுமுள்ள புல் தரைகளுக்கு, தடுத்து நிறுத்த முடியாதபடி நகர்ந்தன.

வேளாண்மை இவ்வாறு மேற்கே சென்று விட்டதால் கிழக்கு சீமைக் குடியானவர்களுக்கும், தெற்குச் சீமைக் கப்பல் வியாபாரிகளுக்கும் பெருந்துன்பமாக முடிந்தது. மேற்கு நாட்டின் வளமான தரிசு நிலத்துடன் போட்டியிட முடியாமலும், உயர்ந்த விகிதத்தில் வரிகள், விவசாய சாதனங்களின் மேல் வட்டியும் தேய்வு நஷ்டமும் ஆகிய செலவுகளைத் தாங்க முடியாமலும் குடியானவர்கள் கூஸிணிக்க ஆரம்பித் தார்கள்; இன்றைக்கும் அவர்கள் முற்றிலும் ஆதி நிலைக்கு வரவில்லை: வர்ஜீனியாவில் ஜலம் தேங்கும் ஸ்தலங்களும் நியூ இங்கிலாந்தில் போதிய லாபமளிக்காத லக்ஷக்கணக்கான ஏக்கர்களும் பாழிடங்களாயின; பென்ஸில்வேனியாவிலும் நியூயார்க்கிலும் பெரும் பகுதிகள் மறுபடிக் காடாகி விட்டன. அல்லது விடுமுறை கழிக்க வருவோருக்கு விளையாட்டு ஸ்தலமாயின. சிவில் போரைத் தொடர்ந்த அரை நூற்றாண் டில் இந்தப் பகுதியில் சாகுபடியிலிருந்த நிலம் சுமார் பாதிக் குக் குறைந்தது.

திடீரென்று ஏற்பட்ட அதிக விளைச்சலுக்கு நில விஸ்தாரம் மாத்திரமே போதிய காரணம் ஆகாது; சாகுபடி நிலமும் அந்த வேலையில் ஈடுபட்ட ஆட்களின் எண்ணிக்கை யும் எந்த விகிதத்தில் பெருகினவோ அதைவிட உயர்ந்த விகிதத்தில் விளைச்சல் பெருகிற்று. சாகுபடி முறைகள் திருந்தியிருப்பதே அதற்கு முக்கிய காரணம். தொழில்களில் யந்திரங்கள் ஈடுபட்ட அளவுக்கு வேளாண்மையில் அவை ஈடுபடவில்லை. 1800-ல் சாலைத்தொழிலாளியோ சுரங்கம் வெட்டியோ அவனுடைய தகப்பனும் பாட்டனும் கண்ட றியாத புதுக்கருவிகளை உபயோகித்துப் பயனடைந்தான்; ஆனால் அதே 1800-ல் ஒரு குடியானவன் ஆயிரம் ஆண்டு களுக்கு முன் பழக்கத்திலிருந்த முறையிலேயே தன் தொழிலை நடத்தினான். குடும்பத்தில் ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும் உழைத்தாலும் எட்டு, பத்து ஏக்கருக்கு மேல் ஒரு குடும்பத்தார் சமாளிக்க முடியாது.

அமெரிக்கர் கண்டுபிடித்த முதல் முக்கியமான யந்திர மாகிய பருத்தி மஸீன விவசாயத்தை மிகவும் ஊக்குவித்த

தோடு தென்னாட்டின் பொருளாதார நிலையையே மாற்றிய மைத்து விட்டது. உண்மையில் பருத்தி விளைவுக்கும் மஸீனக்கும் சம்பந்த மில்லை; கொட்டை நீக்கிப் பஞ்செடுக்கத் தான் அது உதவுகிறது. பருத்தி விவசாயத்தில் உழவுக்கும், மண் புரட்டவும், பூச்சி மருந்து தெளிக்கவும் யந்திரங்கள் உபயோகப்படுகின்றனவே தவிர, மற்றக் காரியங்களெல்லாம் கையாலேயே செய்யப்படுகின்றன. மற்ற சாகுபடிகளில் யந்திரப்பிரயோகம் அதிகம்; ஆனால் பெரும்பாலான பிரயோ கங்கள் தாமதமாக ஆரம்பமாயின. இருந்தாலும் விடாமல் சோதனைகள் நடந்துகொண்டே இருந்தன.

விசேஷமாகப் பருத்தி பற்றித்தவிர, விவசாயத் தொழிலின் ஒவ்வொரு பகுதியிலும் குடியானவனுக்கு உப காரமான யந்திரம் தயாரிக்கப்பட்டது. சோளம் நடவும், அறுக்கவும், உமி நீக்கவும் யந்திரங்கள்; பாலிலிருந்து வெண் ணெய் எடுக்க யந்திரங்கள்; எருவைப் பரப்பவும், உருளைக் கிழங்கு நடவும், புல் உலரவைக்கவும், முட்டைகளை அடை காக்கவும் யந்திரங்கள்; ரசாயன எரு போன்ற நூற்றுக் கணக்கான புதுமைகள் ''ஏர் பிடித்தவனின்'' தோழனாக நின்று அவன் சிரமத்தைக் குறைத்துச் செயல் திறமையை அதிகப் படுத்தின.

மேற்கு நாட்டில் மத்திய பாகமும் தொலையான பாகமுந் தான் இந்தப் புது யந்திரங்களை ஆவலோடு வேகமாக ஏற்றன. கிழக்கே, வயல் காடுகள் சிறியவை, பயிர்கள் பலவகைப் பட்டவை. ஆகவே அதிக விலையுள்ள யந்திரங்கள் வாங்குவது நியாயமாகாது; தெற்கே, பருத்தியும் புகையிலையும் யந்திர விவசாயத்திற்கு உகந்தவை அல்ல.

விவசாயம் யந்திரமயமானதால் குடியானவன் நகரங் களின் வளரும் ஜனத்திரளுக்கு உணவு போட்டு, மிஞ்சியதை அயல் நாடுகளுக்கும் அனுப்ப முடிந்தது; அயல் நாட்டுப் பணத் தைக் கொண்டு தொழில் அபிவிருத்தியும் ரெயில்வே அபிவிருத் தியும் செய்வது சுலபமாயிற்று. ஆனால் குடியானவர்கள் சம் பந்தப்பட்டவரை நிலைமை நூற்றுக்கு நூறு திருப்தியளிக்கக் கூடியது என்று சொல்வதற்கில்லை. பலர் தம் சக்திக்கு மீறிப் பெரும் செலவுகள் செய்ய வேண்டி வந்தது; அச்செலவுக்கு ஈடுசெய்யப் புதுமுயற்சிகளில் இறங்கவேண்டி வந்தது; மேலும் அவர்கள் நல்ல விற்பனை நோக்கத்துடன் சாகுபடி நடத்த வேண்டி வந்தது. ஆகவே, சிறிய குடியானவர்களைக் காட்டி லும் பெரிய குடியானவர்களுக்கு ஸ்திதி அனுகூலமாக இருந் தது; அக்காரணத்தால் பெருவாரிப் பண்ணையும் வளர்ந்தது; குடிவாரப் பழக்கமும் வளர்ந்தது. அதற்கு முன்காலத்தில் சிறு பண்ணைகள் தன்னடக்கமாகச் சோபித்து விளங்கின—ஒரு புறம் கோதுமை, சோளம், ஓட் முதலான தானியங்கள், வீட்

டிற்கருகே கறிகாய்த் தோட்டம், கோழிக்கொட்டம், புறப் பரண், புல் தரையில் சில பசுக்கள்; இருபதாம் நூற்றாண்டில் அதெல்லாம் மாறி, பார்வையெட்டும் வரைக் கோதுமை அல்லது பருத்தி என்றாகிவிட்டது; குடியானவன் மளிகைக் கடையில்தான் அரிசி, பருப்பு வாங்க வேண்டும்!

யந்திரம் எவ்வளவு முக்கியமோ அதேகமாய் அவ்வளவு முக்கியம் விஞ்ஞான முறைகள். சாகுபடிக்கு நிலம் குறைவாக இருக்கும் தேசங்களில் குடியானவர்கள் தீவிர முயற்சிகள் செய்து சிறு துண்டு நிலங்களிலிருந்து அதிகப் பலன் அடையப் பார்ப்பார்கள்; ஆதியிலிருந்தே அமெரிக்கர்களுக்கு அந்தக் கவலை இல்லை. பழைய இடத்தை வளம் கெடாமல் காப்பாற்றுவதைக் காட்டிலும் அதன் பூசாரம் குறைந்ததும் புது இடத்திற்குப் போவது அவர்களுக்குப் பிடித்திருந்ததோடு சாத்தியமாகவும் இருந்தது. இருந்தபோதிலும், தெற்கே பூமியின் சாரம் குறைவதைக் கண்டு தோட்ட முதலாளிகள் திகிலடைந்தார்கள்; வாஷிங்க்டன், ஜெஃபெர்ஸன் உள்படப் பல பேர் புதுத் தாவரங்களைப் புகுத்தவும், திட்டப்படி பயிர்களை மாற்றி வரவும், கால்நடை அபிவிருத்தி செய்யவும் முயன்றார்கள். ஆனால் இந்த ஆரம்பகாலச் சீர்திருத்தங்கள் பெரும்பாலும் வீணாயின; அப்பலாச்சியன் மலை கடந்த பெரிய பூ-பாகங்களும் கிடைத்து, பருத்திமேல் யந்திரமும் கண்டு பிடிக்கப்பட்டனர் சுவனமான விவசாயத்தால் நிலத்தை வளப்படுத்துதலைக் காட்டிலும் செழிப்பான தரிசு நிலங்களுக்குச் செல்வதே குடியானவர்களுக்கு லாபகரமானதாயிற்று. சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கத்தான் முடியும்; அதை வளப்படுத்த முடியாது; விவசாய நிலத்தை வளப்படுத்த முடியும்; ஆனால் அமெரிக்கர் சுரங்கத் தொழில் பான்மையுடன் பூமியைத் தொடர்ந்து வளப்படுத்தாமலே விவசாயம் செய்ய விரும்பினர்; எல்லாப் புறப் பொருளாதார இயலின் இணை பிரியா அம்சம் போலும் அது.

ஃபெடெரல் அரசாங்கம் விவசாய அபிவிருத்திக்காகக் குறிப்பாக முதல் முறை பணம் ஒதுக்கி வைத்தது 1839-ல்: ஆனால் 1862-ன் 'மார்ரில்' நிலச் சட்டத்திற்குப் பிறகு தான் அரசாங்கத்திற்கு உண்மையான சிரத்தை உண்டாயிற்று. அச்சட்டப்படி விவசாயக் கல்லூரிகளுக்கும் தொழில்முறைக் கல்லூரிகளுக்கும் சர்க்காரின் மானியம் கிடைக்க இடமிருந்தது. ஒவ்வொரு ராஜ்யத்திலுமிருந்து காங்கிரசுக்குச் சென்ற அங்கத்தினர்களைக் கணக்கிட்டு தலா 30,000 ஏக்கர் வீதம் ராஜ்யத்திற்கு நிலம் அளிப்பதாகச் சட்டம் கூறிற்று. அச்சட்டத்தின்கீழ், ஒன்றன்பின் ஒன்றாக ஸ்டேட்டுகள், சுய ஆதீனமாகவோ ஒரு சர்வகலாசாலையுடன் சேர்ந்தோ, விவசாயக் கல்லூரிகள் அமைத்தன; காலக்கிரமத்தில் விவசாய ஆராய்ச்சி விருத்தியடைந்தது. 1887-ன் 'ஹாட்ச்' சட்டமும் மிக முக்கியமானது; யூனியன் முழுதிலும் விவசாயச் சோதனை நிலையங்கள் ஸ்தாபிப்பதற்காகப் பணம் ஒதுக்கி வைக்க அச்சட்டம் உதவிற்று. அதே சமயத்தில் விவசாய இலாக்காவில் நடக்கும் நேர்முறையான ஆராய்ச்சிகளுக்காகப் பல மிலியன் டாலர் கிடைத்து வந்தது. 1930-க்குள் 7000, 8000 விஞ்ஞானிகள் இந்தப் பல்வேறு சர்க்கார் நிலையங்களுக்காக, மகிழ்ப்பு உண்டாக்கும் வகைகளான ஆராய்ச்சி விஷயங்களில் ஈடுபட்டிருந்தார்கள்; சோதனைச் சாலைகளிலும் தோட்டங்களிலுமிருந்து மிக முக்கியமான தத்துவங்களும் தகவல்களும் வெளிவந்தன.

விவசாயத்திற்குக் கெட்டகாலம்: காலப்போக்கில் அமெரிக்கக் குடியானவன் அதிகத் திறமையோடு நிலத்தை உழுது மேலும் மேலும் அதிகமாக விளைவித்தான். சுறுசுறுப்பு, புத்திசாலித்தனம், வளமான நிலம், யுக்தியுடன் அமைக்கப்பட்ட யந்திரங்கள், ஆவல் காட்டும் மார்க்கெட்டுகள்—இவையெல்லாம் பெற்ற ஒருவன் செழித்தும் சந்தோஷமாகவும் இருக்க வேண்டும். ஆனால் அவன் துன்பம் அனுபவித்து வந்தான்; அந்தத் துன்பங்கள் அதிகரித்தும் வந்தன. மனித சரித்திரத்திலேயே விவசாயிகளுக்குமிக அற்புதமான நூற்றாண்டாகிய காலத்தின் இறுதியில் அமெரிக்கக் குடியானவர்கள்—ஜெஃபெர்ஸன் சொன்னது போல் "கடவுளின் இஷ்டர்களாக" இல்லாமல்—ஒரு பெரிய பொருளாதாரப் பிரச்னை ஆகி விட்டார்கள். இந்த முரண்பாட்டிற்குக் காரணம் என்ன?

விவசாயப் பிரச்னை மிகச் சிக்கலானது...பஹு ரூபியானது—தென்னோட்டுத் தோட்ட முதலாளி, தானியம் விளைவிப்பவன், பன்றி வளர்ப்பவன், அடி-மாட்டுப் பண்ணை முதலாளி, பால் மாட்டுப் பண்ணை முதலாளி, பழத் தோட்டக்காரன், ஆகியோருடைய கஷ்டங்கள் பல ரூபங்களில் தோன்றின. ஒரு சமயம் ரெயில்வேப் பிரச்னை, ஒரு சமயம் பணமுடை, ஒரு சமயம் அரசாங்கத்தின் நில நீதி; சிறு பகுதிகளின் லாப நஷ்டங்கள், கட்சிக் காரியத் திட்டங்கள், அயல் நாட்டு உறவுகள் எல்லாம் பல திக்குகளில் பிடித்து இழுத்தன. இருந்தாலும் சில நிரந்தரமான காரணங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருந்தன. அவற்றுள் முக்கியமானவை—மண்ணின் சார நஷ்டம், இயற்கையின் 'கிறுக்குத்தனம்,' பணப்பயிர்களின் மிகை, தன்-தேவைப் பூர்த்தி முறையின் க்ஷீணம், அரசாங்கப் பாதுகாப்பும் ஆதரவும் போதாமை.

புகையிலையும் பருத்தியும் தொடர்ந்து சாகுபடி செய்ததாலும், தோட்டக் கூலியாட்களுக்கு அறிவில்லாததாலும், தென்னோட்டு பூமி எப்பொழுதோ சார மிழந்து விட்டது. அப்பகுதியின் பழைய இடங்களில் பல மிலியன் ஏக்கர் பூமி புதர்க்

காடாகி விட்டது; மழை அரித்த ஜலதாரைப் பள்ளங்களைச் செப்பனிடாததால் அதிக சாரமுள்ள மேல் மண் பல மிலியன் டன் கணக்கில் நஷ்டமாகிக் கொண்டே வந்தது. மேற்கேயும் மழையரிப்பு, புயல் காற்று இரண்டும் சேர்ந்து மண்ணை அபகரித்து விட்டன. மேட்டுப் பூமிகள் பெரும்பாலும் விவசாயத்திற்குதவாமல் போனதோடு, ஆதியில் இருந்தது போன்ற மேய்ச்சலுக்கும் உதவாமல் போய் விட்டன; அளவு கடந்து சாகுபடி செய்யப்பட்ட இடங்களும் மேய்ச்சலுக்கு விடப்பட்ட இடங்களும் மணற்பாங்காகித் "தூசிக்கிண்ணம்" என்ற அவப்பெயர் பெற்று விட்டன.

அடிக்கடி ஏற்படும் வறட்சியும் சமவெளிகளிலுள்ள குடியானவர்களுக்கு ஆபத்தாயிற்று. 1859-1860-ல் 16 மாத காலம் கான்ஸாஸிலும், நெப்ராஸ்காவிலும் நல்ல மழை கிடையாது; சில சமயங்களில் தொடர்ந்து பல வருஷங்கள் மழையில்லாமல் போனதுமுண்டு.

பூச்சி புழுக்களால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டமும் குறைந்ததல்ல. அவற்றுள் பருத்திப் புழுக்கள் மிகக்கெட்டவை. மெக்ஸிகோவிலிருந்து பரவிய இந்தப் பேருபத்திரவம் 1892-ல் ரியோ க்ராண்டி நதியைத் தாண்டி வருஷத்திற்கு ஏறக்குறைய 50 மைல் வீதம் முன்னேறிப் பருத்திப் பிரதேசம் முழுதிலும் பரவி விட்டது. பல இடங்களில் அது பருத்தி விளைவைப் பாதிக்கும் குறைத்து விட்டது; பலர் பருத்திச் சாகுபடியை நிறுத்தி வேறு சாகுபடி ஆரம்பித்தார்கள்; அலபாமா-வில் ஒரு ஊரிலிருந்த குடியானவர்கள் 'இதுவும் நம் க்ஷேமத்திற்குத் தான்' என்று நினைத்தவர் போல், மாறுதலுக்குக் காரணமாக இருந்த புழுவுக்கு ஒரு நன்றி ஸ்தம்பம் நிறுவினர்கள்! அப்புழுவை ஒழிப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் வீணாயின; பருவத்திற்கு சற்று முன்பே விதை நட்டு, விஷ மருந்துகளை ஏராளமாக உபயோகிப்பதால் ஓரளவு பலன் இருந்தது.

குடியானவனை அழிக்கும் பூச்சிகளில் வெட்டுக்கிளி மிகப் பயங்கரமானது. 1874-ல் முதல் முறையாகத் தோன்றிய அந்தப் படையெடுப்பு திரும்பத்திரும்ப வந்தது. நேர் அனுபவம் இல்லாதவர்களுக்கு அதன் வர்ணனை நம்பிக்கையளிக்காது.

வேறு குறிப்பிட்ட பூண்டுக்கு சத்துருவான வேறு புழு பூச்சிகள் விளைவித்த நஷ்டமும் அப்படிக் குறைந்ததில்லை.

அமெரிக்கக் குடியானவனின் வரவு செலவு நிலை மிக விசித்திரமானது. அவன் விற்பது உலக மார்க்கெட்டில்—ரஷ்யா, ஆர்ஜென்டைன், கானடா, ஆஸ்ட்ரேலியா ஆகிய பிரதேசங்களின் குடியானவர்களுடன் போட்டியிட்டு; அவன் வாங்குவது காப்பு அளிக்கப்பட்ட (விலை அதிகமான) உள் நாட்டு மார்க்கெட்டில். அவன் உண்டாக்கும் கோதுமை, பருத்தி, இறைச்சியின் விலை இங்கிலாந்தில் நிர்ணயிக்கப்பட

டது; அறுவடை யந்திரம், ரசாயன எரு, முள் வேலிக்கம்பி, துணி மணி, பாதரக்ஷை, தட்டு முட்டுச் சாமான் முதலியவற்றிற்கு அவன் கொடுக்கும் விலையை டாரிஃப் பாதுகாப்பு பெற்ற ட்ரஸ்டுகள் நிர்ணயித்தன. அவன் செலவுகள் தாட்சண்யமின்றி வளர்ந்து கொண்டே போயின—தோட்டத்திற்கு வேண்டிய பொருள்கள், போக்குவரத்துச் செலவு, வாங்கிய கடன்களுக்கு வட்டி, அரசாங்க வரிகள் வகையறு. புது நிலமும் யந்திரங்களும் கொண்டு அவன் வருஷா வருஷம் உற்பத்தியை அதிகரித்துக் கொண்டே போனான்; ஆனால் பண ரூபத்தில் அவன் வரும்படி அதிகமாவதில்லை. 1870-1890-ல் விவசாயப் பெருக்கம் மிக அதிகமாக இருந்த காலத்தில் அமெரிக்க விவசாயப் பொருள்களின் மொத்த மதிப்பு 500 மிலியன் டாலர் தான் அதிகமாயிற்று; அதே காலத்தில் சாலைப் பொருள்களின் மதிப்பு 6,000 மிலியன் டாலர். விவசாயப் பொருள்களில் பெரும்பாலானவற்றின் விலைகள் ஏறத்தாழ இறங்கிக் கொண்டுதான் இருந்தன.

குடியானவனின் பொருளாதார இன்னல்களில் மிகவும் துக்கப்படுத்துவது பணத்தின் கிராக்கி எனலாம். உள்ளூர் பாங்கர் அல்லது அடமான ஏஜண்டிடம் கடன் வாங்க அவன் சென்றபோது நூற்றுக்கு எட்டிலிருந்து இருபது விகிதம் வரை வட்டி கொடுக்க வேண்டியிருந்தது. விலைவாசி இறங்கும்போது இந்த நஷ்ட வியாபாரம் இன்னும் கடுமையாகப் பாதித்தது. விவசாயப் பொருளின் விலையைக் காட்டிலும் டாலரின் விலையை மனதில் கொண்டு கணக்கிட்டால் இவ்விஷயம் நன்கு தெளிவாகும். 1870-ல் ஒரு புஷல் கோதுமை அல்லது இரண்டு புஷல் சோளம் அல்லது பத்து ராத்தல் பருத்தியைக் கொடுத்து ஒரு குடியானவன் ஒரு டாலர் பெறலாம். 1890-ல் இரண்டு புஷல் கோதுமை, நான்கு புஷல் சோளம் அல்லது 15 ராத்தல் பருத்தி கொடுத்தால்தான் ஒரு டாலர் கிடைத்தது. 1870-ல் 1000 டாலர் கடன் வாங்கிய ஒரு குடியானவன் 1000 புஷல் கோதுமை கொடுத்துக் கடனைத் தீர்த்திருக்கலாம்; 1890 வரை கடன் திராதிருந்தால், 2000 புஷல் கோதுமை கொடுத்துத் தான் அவன் கடனை ஒழித்திருக்க முடியும்.

பிரதிகூலமான இந்த நிலையில் அமெரிக்கக் குடியானவனின் அடமானக் கடன் விஷம்போல் ஏறியதில் வியப்பொன்றுமில்லை. கடன் கொடுத்தவர் பெரும்பாலோர் கிழக்கு நாட்டார். குடிவார ஏற்பாடும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

விவசாயப் பிரச்னையின் முக்கிய அம்சங்கள் இவை. அரசாங்கத்தைத் தனக்கு அனுகூலமான கருவியாகக் குடியானவன் உபயோகியாதது இந்நோய்க்குக் காரணம் எனலாம். இந்நோயின் விளைவு நாட்டின் ஜனத்தொகையில் பாதி குடியானவர்களாக இருந்தும் அவர்களுள் ஒருவரைக்கூட காங்கிர

சுக்கோ, அல்லது, குறைந்த பக்ஷம் ஸ்டேட் சபைகளுக்கோ, அவர்கள் அனுப்பவில்லை என்பதே எனலாம்; நூற்றாண்டு முடிய இருக்கும்போது ஸெனெடர் பெஃப்ஃபெர், காங்கிரஸ் காரன் ஸிம்ஸன் போன்ற விவசாயிகள் வாஷிங்டனுக்குச் சென்றபோது அவர்கள் விநோத சிருஷ்டிகளாகத் தென்பட்டார்கள். குடியானவர்களின் க்ஷேமத்தைக் காட்டிலும் தொழில் முதலாளிகள், பாங்கர்கள், ரெயில் பாதை முதலாளிகள் முதலியோரின் லாபத்தைப் பெருக்க ஆவலுள்ளவர்களே நாட்டின் சட்டங்களை இயற்றினார்கள்; சட்டசபையும் அம்மனப் போக்கை ஆதரித்தது. காப்பு டாரிஃப் வியாபாரத்தைப் பெருக்கியிருக்கலாம்; ஆனால் அதன் காரணமாகக் குடியானவன் அநேகமாய் ஒவ்வொரு பொருளுக்கும் அதிக விலை கொடுக்க வேண்டியிருந்தது. பாங்கு விதிகளும் கரென்ஸி விதிகளும் பணம் அடிப்படையான வியாபாரங்கள்—கொடுக்கல் வாங்கல், பங்கு வாங்கி விற்றல்—செய்பவர்களுக்கு நன்கொடையாகவும், விவசாயிகளுக்குத் தாங்கமுடியாத சுமையாகவும் பரிணமித்தன. ட்ரஸ்டுகளையும் ரெயில்வேக் கம்பெனிகளையும் கட்டுப்படுத்தும் நல்ல உத்தேசத்துடன் இயற்றப்பட்ட சட்டங்கள்கூட, அவற்றின் சொல் தந்திரத்தாலோ விளக்க மளிப்போரின் சாதுர்யத்தாலோ அம்முதலாளிகளை அதிகம் பாதிக்கவில்லை; விவசாய முக்கியத்துவமுள்ள ராஜ்யங்கள் கண்டிப்பான சட்டங்கள் இயற்றியபோது நீதி ஸ்தலங்களின் தீர்ப்புகளால் அவை செல்லுபடியற்றுப் போயின. குறிப்பாகக் குடியானவனுக்கு உபகாரம் செய்வதற்காக வரையப்பட்ட சட்டங்களும்கூட ஏமாற்றமே அளித்தன—உதாரணமாக, குடிநிலச் சட்டம்; 1890-வரை குடிநில வாசிகளுக்குச் சென்றதைக் காட்டிலும் அதிக நிலம் நேரடியாகவோ, ரெயில்வேக்கள் மூலமோ சூதாடி வியாபாரிகள் மூலமோ விற்கப்பட்டது.

இவ்வாறு, சிவில் போர் முடிவடைந்து 30 ஆண்டுகளுக்குப் பின்னர், கண்டம் முழுதும் அமெரிக்கக் குடியானவன் ''தன் ராஜ்ய''த்தை விஸ்தரித்திருந்தான்; மிகப் புதிய யந்திரங்களும் விஞ்ஞான அறிவும் அவன் முன் கைகட்டி நின்றன; தன் விளைவை அதிகப்படுத்தி மேற்கு உலகம் முழுதுக்கும் அவன் அன்னதாதாவாக விளங்கினான்; ஆனால் ஜமீன்தாராக இருந்த அவன் ஜமீன் கூலியாள் ஆகிக்கொண்டு வந்தான்.

விவசாயிகள் சங்க பலம் தேடுகிறார்கள்: வியாபாரிகள், பாங்கர்கள், தொழிலாளர்கள், அனைவரும் ஒற்றுமையுடன் தம் ஆற்றலை வளர்த்துக் கொண்டார்கள்; குடியானவர்களும் அவ்வழிச்செல்ல வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. ஆனால் அதைவிடக் கடினமான காரியம் வேறில்லை யெனலாம். குடியானவர்கள் லக்ஷக்கணக்கில், தூர தூர இடத்தில், பரஸ்பரப் போட்டியுடன் தொழில் செய்பவர்கள்; தனித்தன்மை,

தன்னம்பிக்கை, பிறருக்குத் தாழ்மை—இவை குடியானவனின் குணங்கள்; மண்ணும் மழையும் அவனுக்கு மிகவும் வேண்டியவை—அவற்றைச் சட்டம் அதிகமாக மாற்ற முடியாது. கடைசியில், ஃபெடெரல் அரசாங்கம் பொறுப்பு ஏற்கும் வரை, விவசாய விளைவைத் திட்டப்படுத்துதல் முடியாமற் போயிற்று.

அதற்கிடையே, ரெயில்வேக் கம்பெனிகள், ட்ரஸ்டுகள், அடமானக் கம்பெனிகள், கமிஷன் ஏஜெண்டுகள் முதலியோரிடமிருந்து குடியானவன் தப்பிப் பிழைக்கவேண்டுமானால் தன்கையே தனக்குதவி என்று அவன் உடனடியாகச் செயலாற்றுவது அவசியமாயிற்று.

தேசம் முழுதும் வியாபித்த முதல் விவசாயச் சங்கத்திற்கு க்ராஞ்ஜ்' (Grange—பண்ணையார் வீடு) அல்லது விவசாயப் போஷகர்கள் என்று பெயர். 1866-ல் ஆலிவர் கெல்லி என்னும் ஒரு அரசாங்கக் குமாஸ்தா போரில் அழிந்த தென்னாட்டில் நெடுந்தூரம் சுற்றிப் பார்த்தான்; குடியானவனின் தரித்திரம், பிற்போக்கு, தனித்த நிலை எல்லாம் கண்டு, அவன் வருந்தி ஒற்றுமையுள்ளப் பொது நடவடிக்கையால்தான் அந்த எளியவன் முன்னுக்கு வரமுடியும் என்று தீர்மானித்தான். சில நண்பர்களோடு சேர்ந்து அவன் மேற்கூறிய சங்கம் ஆரம்பித்தான். அதன் நோக்கங்களாவன—''கல்வி அபிவிருத்தியாலும் சீரான சமூக உறவுகளாலும் ஆண் பெண் அனைவரும் சிறப்பும் உயர்வும் பெறவேண்டும். நம் வீடுகளின் சுக வசதிகளை அதிகரித்துப் பிறர் விரும்பும்படி செய்யவேண்டும். (மனத் தளர்ச்சியால் தாழ்ந்து செயலற்றுப் போகக் கூடாது); நாம் நம் தொழிலில் மேலும் மேலும் ஆர்வம் கொள்ளவேண்டும் (தீராப் பொறி என்று நினைத்துக் கொண்டு அலுத்துக் கொள்ளக் கூடாது)....நம் தோட்டங்களை நம் எல்லாத் தேவைகளும் பூர்த்தியாகும்படி திருத்தியமைக்க வேண்டும்.''—க்ராஞ்ஜ் என்னும் பெயர் ஸ்தலக் கிளை நிலையங்களுக்கு குறிப்பாக அளிக்கப்பட்டது. நியூயார்க்கிலும் பென்ஸில்வேனியாவிலும் சில கிளைச் சங்கங்கள் கிளம்பின; ஆனால் சங்கம் கிழக்கே இருக்கும் வரை, அது அதிகமாக விருத்தியாகவில்லை. 1869-ல் அதன் தலைமைக் காரியாலயம் மத்திய மேற்குநாட்டுக்கு நகர்த்தப்பட்டது; அடுத்த சில வருஷங்களில் ஏற்பட்ட [illegible] நன்மையான காலத்தில் சங்கம் நன்முகப் பரவிற்று. 1873-க்குள் அநேகமாய் ஒவ்வொரு ஸ்டேட்டிலும் க்ராஞ்ஜ் காரியாலயங்கள் இருந்தன; ஏழரை லக்ஷம் அங்கத்தினர்கள் அவற்றில் சேர்ந்தார்கள். மத்திய மேற்கே அதன் வலு மிக அதிகமாக இருந்தாலும் தெற்கேயும் பசிஃபிக் கரையிலுங்கூட அது வளர்ந்தது.

க்ராஞ்ஜ் ஒரு சமுதாயக் கிளப் போலப் பணியாற்றவேண்டும் என்பதே கெல்லியின் முக்கியக் கருத்து. கல்வி வளர்ச்சி, தேசாபிமானக் கொண்டாட்டங்கள், விழாக்கள், இவற்றிற்

109141

காக மாதாந்தரக் கூட்டங்கள் நடைபெற வேண்டும். இதி லெல்லாம் சங்கம் பாராட்டத்தக்க வெற்றி பெற்றது. சங்கத் தின் பத்திரிகைகள் நல்ல பிரசாரம் பெற்றன; சங்கத்தின் புஸ்தக நிலையங்கள் விவசாயப் பிரசுரங்களை விநியோகித்தன; சங்கத்தின் சொற்பொழிவாளர்கள் பள்ளிக்கூடக் கட்டடங் களில் கூட்டம் போட்டுப் பேசினார்கள்.

எந்நோக்குடன் குடியானவர்கள் கூடினாலும் விவகாரப் பேச்சும் அரசியல் பேச்சும் கிளம்புவது அவசியம் எதிர்பார்க் கக் கூடியதே. ஆற்றலுள்ள பேச்சு காரிய ரூபம் பெறுகிறது; சீக்கிரத்தில் பல ஸ்டேட் சங்கங்கள் கூட்டுறவு முறையில் விற் பனை நிலையங்களும் மளிகைக் கடைகளும் பாங்குகளும் அமைத் ததோடு தொழிற்சாலைகளும் அமைத்தன. அவற்றின் நிர்வா கம் எப்பொழுதும் நன்றாக இருந்தது என்று சொல்வதற்கில்லை; முன்பே வேரூன்றிய வியாபார ஸ்தலங்களும் ஆரம்பத்தி லிருந்து அவற்றைக் கடுமையாக எதிர்த்தன. அந்நிலையிலும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் தங்கள் அங்கத்தினர்களுக்கு மிகவும் பயன்பட்டன. கூட்டு முறையில் வாங்கினதால் ஒவ்வொரு அறுவடை யந்திரத்தின் மேலும் 100 டாலர் லாபமிருந்தது. இம்மாதிரிப் போட்டியைச் சமாளிப்பதற்காகவும் சங்கத்தாரின் தேவைகளை நேரடியாகப் பூர்த்தி செய்வதற்காகவும் மான்ட் கோமெரி வார்ட் கம்பெனி தபால் மூலமான வியாபாரத் திட்டம் ஆரம்பித்தது.

சங்கத்தின் விதிகள்படி அரசியல் பேச்சோ செயலோ தடுக்கப்பட்டிருந்தாலும் அங்கத்தினர்கள் அரசியலில் இறங்கு வது இயற்கையே. மத்திய மேற்கு ஸ்டேட்டுகள் பலவற்றில் அவர்கள் தங்கள் அங்கத்தினர்களைச் சட்ட சபைக்குத் தேர்ந் தெடுத்தார்கள்; ரெயில்வேக்களையும் பண்டக சாலைகளையும் திருத்துவதற்கான ''க்ராஞ்ஜ் சட்டங்கள்'' இயற்றப்பட்டன. ஆனல் ஒரு இடத்திலும் சங்கத்தார்கள் தனி அரசியல் கட்சி யாக அமையவில்லை; பிற்காலத்தில்தான் காங்கிரசில் ''விவ சாயத் தொகுப்பு'' ஏற்பட்டது.

சங்கங்களின் பல வியாபார யத்தனங்கள் நஷ்டமளித்த தாலும், அவை இயற்றிய சட்டங்களுக்கு ஆசாபங்கம் ஏற் பட்டதாலும், 1880-க்கு முன் பொதுவாகவே ஓரளவு ஜீவ னிய நிலை உண்டானதாலும், சங்க அமைப்பு செல்வாக்கிழந் தது. பிற்காலத்தில் அது புது உயிர் பெற்றது என்றாலும் ஜனங் கள் சந்திப்பதற்கும் கல்வி வளர்ச்சிக்காகவும் மாத்திரமே. அதற்கிடையே அதிருப்தியடைந்த குடியானவர்கள் ''பச்சைக் காரத''க் கட்சியில் போய்ச் சேர்ந்தார்கள். (போர்க்காலத்து நோட்டின் மதிப்புக் குறைந்ததால் பொருள்களின் விலை ஏறி யது போலாயிற்று; பொருள்களின் விலை குறைய வேண்டும் என்று கிளர்ச்சி செய்வதற்காக ஏற்பட்ட கட்சி அது). அதில்

விவசாயிகள், விவசாயக் கூலியாட்கள், விவகார ஞானமற்ற வறட்டு சீர்திருத்தக்காரர்கள் முதலியோர் இருந்தார்கள். 1880-ன் தேர்தலில், ஜனதிபதி ஸ்தானத்திற்கு அபேட்சகனை அயோவா வாசியும் வயதான க்ராஞ்ஜ் தலைவனுமான ஜேம்ஸ் பி. வீவரை அக்கட்சி நிறுத்திற்று.

உண்மையில் க்ராஞ்ஜ் சங்கம் தேய்ந்து மறைந்ததும், அவ்விடத்திற்கு ''குடியானவர்களின் சேர்க்கைகள்'' என்ற ஸ்தாபனம் வந்துசேர்ந்தது; அமெரிக்கச் சரித்திரத்திலேயே மிக சுவாரஸ்யமான விவசாய ஸ்தாபனங்கள் அவை. 1890-க்கு சற்று முன்னும் பின்னும் உண்டான தளர்ச்சி காலத்தில் ''சேர்க்கைகள்'' அமைக்கப்பட்டன. முன்னைப் பொழுதைக் காட்டிலும் காலம் கெட்டிருந்தது. வருஷக்கணக்காக மழை யில்லாமல் பூமி வறண்டிருந்தது. குடிவாரமும் அடமானமும் தென்னட்டைப் படு துன்பத்தில் அழுத்தின; சோளத்தை மார்க்கெட்டுக்கு அனுப்புவதைக் காட்டிலும் அடுப்பில் எரிப்பது லாபகரமாக இருந்தது. வாஷிங்க்டனிலோ கண் மூடித்தனமான காங்கிரஸ்காரர்கள், பெரு வியாபாரிகளின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்தே பழகிப் போனவர்கள், பல அக்கிரமங்கள் செய்தார்கள்—1890-ன் டாரிஃப் விதிதம் முன் பின் இருந்த விதிதங்களைக் காட்டிலும் உயர்ந்தது; பாங்கு முறை சற்றும் நெளிவு சுளுவு அற்றது: பென்ஷன்களி லும் இதர முறையற்ற கொடைகளிலும் பல நூறு மிலியன் டாலர் செலவிட அவர்கள் தயாராயினர். சர்க்காரின் அட்டூ ழியங்களால் ஊக்குவிக்கப்பட்டு ''சேர்க்கை'' வெகு வேக மாய்ப் பரவிற்று; 1890-ல் பல ''சேர்க்கை''களில் மொத்தம் சுமார் இரண்டு மிலியன் அங்கத்தினர்கள் இருந்தார்கள்.

வடமேற்கிலும் தெற்கேயும் இருந்த சேர்க்கைகள் அநேக அம்சங்களில் க்ராஞ்ஜ் போலவே இருந்தன. அவை நீண்ட நோக்கமுள்ளப் பொருளாதாரத் திட்டங்களும் வகுத் தன. கூட்டுறவு முறையில் வாங்குதல், விற்றல், பண்டக சாலையில் பத்திரப்படுத்தி வைத்தல் முதலிய காரியங்கள் டெக்ஸாஸ் சங்கம் செய்தது; டகோடாவில் சங்கங்கள் பயிர் களை இன்ஷியூர் செய்தன; விவசாயிகள் வியாபாரம் செய்வ தற்கான ''எக்ஸ்சேஞ்ஜு''கள் பல இல்லினுயி நிறுவிற்று. இவற்றுள் சில பல மிலியன் டாலர் லாபமளித்து வெற்றி பெற்றன; மற்றவை பாங்குகளின் எதிர்ப்பையும் ரெயில்வேக் களின் எதிர்ப்பையும் சமாளிக்க முடியாமல் நசித்தன.

சிறிது காலத்திற்குள் ''சேர்க்கை''களிலிருந்துத் தீவிர மானதொரு அரசியல் கட்சி பிறந்தது. சேர்க்கைகள் ஆதியி லிருந்தே அரசியல் சீர்திருத்தத்தைக் கோரின—ரெயில்வேக் கள் அரசாங்கத்தின் வசம் வருதல், பணம் மலிவாதல், தேசிய பாங்குகளை மூடுதல், அயல் நாட்டார் நிலம் கொள்

ளாமை, இறக்குமதிப் பாதுகாப்பு வரியைக் குறைத்தல், குடியானவர்களுக்குச் சுலபமாய்க் கடன் கொடுப்பதற்காக ஸப்ட்ரெஷரிகள் உண்டாக்குதல். கடைசியில் சொன்னது ஒரு சுவாரஸ்யமான யோசனை. அத்திட்டப்படி, ஒவ்வொரு விவசாய ஜில்லாவிலும் ஃபெடெரல் அரசாங்கம் பண்டக சாலைகள் கட்ட வேண்டும்; குடியானவர்கள் தங்கள் விளைவுகளை அங்கு இறுத்தி ரசீது பெறுவார்கள்; பண்டங்களின் மார்க்கெட் விலையில் எண்பது சதவீதம் ரசீதில் குறிப்பிடப்பட்டிருக்கும். அதை வைத்துக் குடியானவனுக்குக் குறைந்த வட்டியில் அரசாங்கம் கடன் கொடுக்க வேண்டும். அப்பொழுது குடியானவன் தன் சரக்கை அவசரப்பட்டு விற்காமல் நல்ல விலை கிடைக்கும் வரைக் காத்திருப்பான். இந்தத் திட்டம் முதலில் விளக்கப்பட்டபோது அது பைத்தியக்கார யோசனை என்றும், ஸோஷலிஸ்டுகளின் சூழ்ச்சியென்றும் பழிக்கப்பட்டது; எனினும் ஒரு தலைமுறை காலத்திற்குள் அதன் முக்கியமான அம்சங்கள் ஃபெடெரல் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன.

1890-க்கும் 1892-க்கும் இடையே ''சேர்க்கை'' ''ஜனக் கட்சி'' (Populist Party) யாக மாறிற்று; அமெரிக்க அரசியல் கட்சிகளில் அது மிக சுவாரஸ்யமானது. அதன் அங்கத்தினர்களும் அதிகாரிகளும் பெரும்பாலும் தென்னாட்டு மேல் நாட்டுக் குடியானவர்கள் என்றாலும் பல பழைய கட்சிகளில் எஞ்சி நின்றோரையும், சொந்த வலுவற்ற சிறுபான்மைக் கட்சிகள் பலவற்றையும் அதுஏற்றுக் கொண்டது—தொழில், வீரர்கள், பச்சைக்காகிதக் கட்சி, யூனியன் தொழில் கட்சிகள் பெண் வாக்குரிமையை ஆதரிப்பவர்கள், ஸோஷலிஸ்டுகள், 'ஒற்றை வரி'க்காரர்கள், வெள்ளி நாணயக்காரர்கள் (பிரமாண நாணயம் தொடர்ந்து வெள்ளியாகவே இருக்க வேண்டும், தங்கம் ஆக்கப்படக் கூடாது என்ற கட்சி), சீர்திருத்தமே தொழிலாகக் கொண்டவர்கள். 'மத்திய எல்லை'யில் அதன் பலம் திரண்டிருந்தது; அதன் நாயகர்கள் அப்பிரதேசத்தாரே.

1890-க்கடுத்த சில ஆண்டுகளில் புல் வெளிகளிலும் பருத்திக் காடுகளிலும் புயல் போல் பாய்ந்த ஜனப் புரட்சியைப் போல் அமெரிக்க அரசியல் அனுபவத்தில் அதற்கு முன் ஒரு நிகழ்ச்சியும் கிடையாது. ''அது ஒரே ஆவேசம், மதப்பிரசாரப் போர், பலியிடும் நோன்பு, ஒவ்வொரு பக்தனின் நாக்கும் ஜ்வாலையாகப் பேசிற்று. அவன் பேசவில்லை, ஒரு சக்தி அவனைப் பேசவைத்தது'' என்று ஒருவன் எழுதிவைத்திருக்கிறான். பகலெல்லாம் வயல்களில் வேலை செய்த பிறகு குடியானவர்கள் வண்டிகளைப் பூட்டிக் குழந்தை குட்டியுடன் சங்க நிலையத்திற்கோ பள்ளிக்கூடத்திற்கோ சென்று, குடியானவத் தலைவர்கள் ஆவேசத்துடன் பிரசங்கிப்பதைக் கேட்டுப் பாராட்டினர்.

''(அமெரிக்க நிதி கேந்திரமாகிய) வால் தெரு நாட்டை விலைக்கு வாங்கி விட்டது. இது இனி 'மக்களுக்காக மக்கள் நடத்தும் மக்களின் ராஜ்யமல்ல; வால் தெருவுக்காக வால் தெருக்காரர் நடத்தும் வால் தெருவின் ராஜ்யமிது,'' என்று மேரிலீஸ் பொழிந்து தள்ளினாள். ''நம் சட்டங்களை இயற்றும் ஸ்தாபனம் அயோக்கியர்களுக்குப் பட்டாடைகளும் யோக்கியர்களுக்குக் கந்தல்களும் அளிக்கிறது,'' என்றும் அவள் போதித்தாள். அக்கிரமங்களைக் கண்டு பொங்கியெழுந்த குடியானவர்கள் புதுச் சுதந்திரப் பிரகடனங்கள் இயற்றினார்கள்.

1890-ன் தேர்தலில் தெற்கேயும் மேற்கேயும் ஒரு டஜன் ஸ்டேட்டுகளில் புதுக் கட்சி சுலபமாக அதிகார நிலை பெற்றது; ஸெனெடர்களாகவும் பிரதிநிதிகளாகவும் அக்கட்சியினர் சுமார் 20 பேர் காங்கிரஸ் மண்டபங்களில் பிரவேசித்துத் தம் நாட்டுப்புற நடை உடை பாவனைகளால் பழைய ரக அங்கத்தினர்களுக்கு அருவருப்பும் மலைப்பும் உண்டாக்கினார்கள். இந்த வெற்றியால் பெருமிதமடைந்து, கட்சி இன்னும் பெரிய வெற்றிகளுக்காகத் திட்டமிட்டது. 1892-ன் சுதந்திர தினத்தன்று ஊக்கமும் வியர்வையும் சொட்டும் ஆயிரம் பிரதிநிதிகள் ஜனாதிபதிப் பதவிக்கான அபேட்சகனைத் தேர்ந்தெடுக்க ஒமாஹா-வில் கூடித் துணிவான முன்னேற்கமுள்ள ஒரு காரியத் திட்டத்திற்காக இக்னேஷியஸ் டானெலி ஆற்றிய ஆவேசம் நிறைந்த விளக்கத்தை ஆதரித்தார்கள்.

> ...அரசியல் துறை, பொருள் துறை, நீதித்துறைகளை அழிவு மார்க்கத்தில் நடத்திச் சென்ற ஒரு நாட்டார் சூழ நாம் நிற்கிறோம்...கோடிக் கணக்கானவரின் உழைப்பின் பலனைத் துணிச்சலுடன் திருடி ஒரு சிலர் கோடீசுவரர் ஆகிறார்கள்....மேலும் அவர்கள் நம் ஜன நாயக தேசத்தையே இகழ்ந்து, சுதந்தரத்திற்கே உலை வைக்கப் பார்க்கிறார்கள். அநீதி மயமான சர்க்கார் என்னும் அந்தத்தாய் இருகைப்பிள்ளைகளைப் பெற்றிருக்கிறாள்—கோடிக் கணக்கில் ஆண்டிகளும் ஒரு சில கோடீசுவரர்களும்.

ஜனக்கட்சி ஒரு மில்லியனுக்கதிகமான வோட்டுகள் சம்பாதித்தது. ஆனால் ஜேம்ஸ் பி. வீவர் தோல்வியடைந்தான்; க்ரோவர் க்ளீவ்லண்ட் ஜனாதிபதியானான். தெற்கேயும் மேற்கேயும் இருந்து புரட்சிக்காற்று கோரமாக வீசிற்று; ஆனால் பழைய கட்சியினர் சிறிதும் பாதிக்கப் படாமல் தம் வழிச் சென்றனர். அவர்களுடைய சஞ்சலமற்ற அசிரத்தையை ஒரு பூகம்பந்தான் கலைக்க முடியும். பூகம்பம் வர வெகு நாள் செல்லவில்லை.

1896. 1892-ல் காலம் கெட்டிருந்தது; செல்லச் செல்ல அது மோசந்தான் ஆயிற்று. க்ளீவ்லண்ட் இரண்டாம் தடவையாகப் பதவியேற்ற உடனேயே ஒரு பெரிய வியாபாரப் புயல் நாட்டைத் தாக்கிற்று. வியாபார ஸ்தலங்கள் மூறிந்தன, பாங்குகள் கதவை மூடின, ரெயில்வேக்கள் ரிசீவர் கையில் போய்ச் சேர்ந்தன, தொழிற்சாலைகள் வேலையை நிறுத்தின, எல்லா விவகாரங்களும் மந்தப்பட்டன, கடன் கொடுத்தவர்கள் அடமானச் சொத்தைப் பறிமுதல் செய்தார்கள். நகரங்களில் வேலை கிடைக்காதவர்கள் 'கஞ்சித் தொட்டிகளின்' முன் நீண்ட வரிசைகளில் நின்றார்கள்; நாட்டுப்புறத்தில் ஆண்டிப்பட்டாளங்களில் ஆயிரக்கணக்கானவர் புதிதாய்ச் சேர்ந்தார்கள்; 1873-ஆம் வருஷத்து வியாபார பீதியைக் காட்டிலும் இது மிகக் கேடானது, மிக அதிக தூரம் வியாபித்து, பன்மடங்கு தீமை செய்யக்கூடியது.

இந்தப் பேராபத்தான நிலையிலும் பொருளாதாரக் குழப்பங்களில் தலையிடுவதில்லை என்னும் பரம்பரைக் கொள்கையை அரசாங்கம் பின்பற்றிற்று. க்ளீவ்லண்ட் ஒரு திறமை வாய்ந்த தலைவர், யோக்கியர், நல்ல மனம் படைத்தவர், லஞ்ச ஊழல்களையும் விசேஷ சலுகைகளையும் எதிர்ப்பதில் துணிந்தவர். முதல் அவதியில் (1885-1889) அவர் நிர்வாகம் மிகச் சிறந்திருந்தது. ஆனால் அவர் மான்செஸ்டர் பொருளாதாரத் தத்துவத்தை அனுசரித்து, ''போக்கில் விட்டுத் திருப்புதலில்'' (Laissez faire) நம்பிக்கையுள்ளவர். இரண்டாம் அவதியிலும் டாரிஃப் விகிதத்தைக் குறைத்தலிலும் நிர்வாகச் சீர்திருத்தங்களிலும் அவர் அதிகக் கவனம் செலுத்தினார்; பொருளாதார நிலையைத் திருத்தும் யோசனைகளை அவர் பெரும்பாலும் மறுத்தார். இரண்டு வருஷங்கள் நிலைமை மேலும் மேலும் மோசமாகி வந்தது. பெரிய புல்மன் வேலை நிறுத்தம், காக்ஸியின் தலைமையில் வேலையில்லாப் படை தலை நகரை நோக்கிச் செல்லுதல், விவசாய விலைவாசிகள் மேலும் குறைதல்—இவை 1894-ன் முக்கிய சம்பவங்கள். பருத்தி, சோளம், கோதுமை விளையும் பிரதேசங்களில் ஒரு கொந்தளிப்பு உண்டாயிற்று. டிமோக்ராட் கட்சியின் தென்பகுதியும் மேற்குப் பகுதியும் பிரிந்துபோவதாகப் பயமுறுத்தின; 1894-ல் க்ளீவ்லண்ட் பணத்தை மலிவாக்கும் (பண்டங்களின் விலைகளை உயர்த்தும்) ஒரு நடவடிக்கைக்குக் குறுக்கே நின்றபோது ''நாம் பிரியும் காலம் வந்துவிட்டது'' என்று பொறுப்பறிந்தவர்களும் சொன்னார்கள். அலுத்துப்போன டிமோக்ராட்டுகள் பலர் ''ஜனக்கட்சி'' யில் சேர்ந்தார்கள்; ஏறக்குறைய ஒன்றரை மிலியன் வோட்டுகள் அவர்கள் கைக்குள் இருந்தன.

1854-1856-ன் ஆபத்தின்போது தளர்ந்துவிட்ட விக் (Whig) ஸ்தாபனம் முறிந்துபோய் ஊக்கமுள்ள இளம் ரிபப்லிகன் கட்சி அதிகாரத்திற்கு வந்ததுபோன்ற நிலை மறுபடி வரும் என்று அநேகர் எதிர்பார்த்தார்கள். ஆனால் மேற்கே கூர்மையான அரசியல் அறிவுள்ள டிமோக்ராட் நாயகர்கள் அதற்குள் கைவிடத் தயாராயில்லை; தென்னாட்டு டிமோக்ராட்டுகள் வெள்ளையரின் மேன்மையில் பரிபூர்ண நம்பிக்கை கொண்டிருந்ததால் மூன்றாவது கட்சிக்கு, அவர்கள் சம்பந்தப்பட்ட வரையில், இடமே இல்லை. ஆகவே, ஜனக்கட்சியுடன் இணைவதற்குப் பதிலாகத் தெற்கேயும் மேற்கேயும் இருந்த தீவிரத் தலைவர்கள் டிமோக்ராட் கட்சியில் தம் செல்வாக்கை அதிக மாக்கிக்கொள்ளத் திட்டமிட்டார்கள். ''அதன் பிறகு போர் ஆரம்பமாயிற்று. முன் காலத்துச் சிலுவைப் போர் வீரர்களின் ஆவலுடன் நம் வெள்ளிப் பிரமாண டிமோக்ராட்டுகள் வெற்றிக்குப் பின் வெற்றியாக அடைந்தார்கள்'', என்று ப்ரையன் அந்த நடவடிக்கையைப் பிற்காலத்தில் வர்ணித்தான்.

விவசாய டிமோக்ராட்டுகள் பணப் பிரச்னையை முக்கிய மாகக் கொண்டு தேர்தல் போர் நடத்தத் தீர்மானித்தார்கள். இது ஒரு தவறு என்பது பலருடைய அபிப்பிராயம்; ஆனால் வேறு எந்தப் பிரச்னையாவது அவ்வளவு அதிகமான வோட்டர்களைக் கவர்ந்திருக்குமா என்பதும், நாடகப் பாணியில் சொற்பொழிவாற்றிக் கேட்போரை மயக்குவதற்கு உகந்திருக்குமா என்பதும் சந்தேகமே. அக்காலத்துச் செலாவணிப் பிரச்னை சிக்கலானது; ஆனால் அதைப் பணவீக்கம், பணமெலிவு, இவற்றின் சாதக பாதகங்கள் என்று சுருக்கிச் சொன்னால் தவறாகாது. பல வருஷங்களாக, நாட்டின் ஜனத்தொகையும் வியாபாரமும் வளர்ந்துகொண்டிருந்த காலத்தில், செலாவணி மொத்தத்தைக் குறைக்கும் கொள்கையை அரசாங்கம் பின் பற்றி வந்தது. 1873-ல், மேற்கே வெள்ளிச் சுரங்கங்களின் விளைவு பணத்தின் மதிப்பைக் குறைக்கும்போ திருந்தபோது, இனி வெள்ளி வாங்குவதில்லை, வெள்ளி நாணயம் முத்திரை யிடுவதில்லை என்று காங்கிரஸ் தீர்மானித்தது; அது ஒரு விசேஷ நடவடிக்கை யல்ல. அதன் பிறகு 1878-லும், மறுபடி 1890-லும் அரசாங்கம் மிக அதிகமாக வெள்ளி வாங்க வேண்டி வந்ததால் ஐக்கிய நாட்டில் சுவர்ணப் பிரமாணச் செலாவணிக்குப் பேராபத்து நேர்ந்தது. தொடர்ந்து பல ஜனாதிபதிகள், பழைமை உபாசகர்களின் ஆதரவு முழுதும் பெற்று, தங்கத்தையே ஆதாரமாகக் கொள்ளத் தீர்மானித்தார்கள், முக்கியமாக, க்ளீவ்லண்ட் ஒரு அரக்கப் போர் நடத்தி வெற்றியடைந்தார். விலைக் குறைவுக்கு இந்தச் செலாவணிக் கொள்கைதான் முக்கிய காரணம் என்று பல

குடியானவர்கள் திடமாய் நம்பினார்கள். ''வெள்ளிக்குப் பழைய ஸ்தானத்தைக் கொடுங்கள், வெட்டியெடுக்கப்பட்ட வெள்ளியெல்லாம் முத்திரையிடுங்கள், உலகத்திலிருக்கும் வெள்ளி, தங்கத்திற்கெல்லாம் தங்கசாலைகளில் இடம் கொடுங்கள், பணத்தின் மதிப்புச் சராசரி நிலை அடையும், விலைகள் ஏறும், சுபிக்ஷம் மறுபடி நிலவும்,''—இதுவே வெள்ளிக் கட்சியின் தர்க்கம்.

நாணயத்தில் நம்பிக்கையுள்ள பழம் போக்காளர்கள் அதை ஒரு நாசகாரத் தர்க்கம் என்று நம்பினார்கள்; பணவீக்கம் ஆரம்பித்து விட்டால் வளர்ந்துகொண்டே போகும், பிறகு அதைத் தடுக்க முடியாது, அரசாங்கமே திவாலாகி விடும்; சுவர்ண ஆதாரமே திடமானது, என்பது அவர்களுடைய அபிப்பிராயம். அது மட்டுமல்ல, பொருளாதார முறை போலவே நீதி முறையிலும் தங்கமே சிறந்தது என்ற நம்பிக்கையை மனதில் வளரவிட்டு, அவர்கள் வெள்ளி டாலரை ''அயோக்கிய'' டாலர் என்றும் அநியாயமாகப் பழித்தனர். மலிந்த பணத்தைப் பற்றிய இந்தச் சண்டை மிகப் பழைய சண்டை; என்றும் புதிய சண்டையுமாகும்.

யுத்த தந்திர முறையில் வெள்ளியைப் பற்றிய யோசனை மிகச் சிறந்தது எனலாம். முறிந்து போகும் நிலையிலிருக்கும் வெள்ளிச் சுரங்க முதலாளிகள் கட்சி நிதிக்குத் தாராளமாகப் பணம் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஜன நெருக்கடி இல்லாத ஐந்தாறு மேற்கு ராஜ்யங்களில் வெள்ளி முதலாளிகளுக்கு அதிகச் செல்வாக்குண்டு; அவை சாதாரணமாக ரிபப்லிகன் சார்பு கொண்டவை; விகிதப்படி இருக்க வேண்டியதற்கதிகமாகவே அவற்றிற்கு எலெக்டொரல் காலேஜில் வோட்டுகளுண்டு; அவை டிமோக்ராடிக் கட்சிக்குப் பயன்பட முடிந்தால் தேர்தலின் போக்கே திரும்பக்கூடும். நாடு முழுவதிலும் கடன்பட்ட பெருங் கூட்டத்தாருக்கும், குடியானவர்களுக்கும் சில பாட்டாளிகளுக்கும் மலிவான பணம் ஆசையளிக்கக் கூடியது. கடைசியாக, மனத் தத்துவ முறையில் வெள்ளிக்கு ஒரு தனி மதிப்புண்டு. பொன் பணக்காரனைச் சேர்ந்தது; வெள்ளி ஏழையின் தோழன். அமெரிக்காவில் வால் தெருவும், இங்கிலாந்தில் லொம்பார்ட் தெருவும் தங்கத்தின் இருப்பிடங்கள்; வெள்ளிக்கேற்பட்ட இடம் புல்வெளிகளும் சிற்றூர்களும்.

ஆனல் தேர்தலுக்கு ஒரு கொள்கை இருந்தால் மாத்திரம் போதுமா? ஒரு அபேட்சகன் வேண்டாமா? நெப்ராஸ்காவைச் சேர்ந்த வில்லியம் ஜென்னிங்ஸ் ப்ரையன் என்பவன் அவர்களுடைய வழிகாட்டியாக வந்து சேர்ந்தான். 1896-ல் சிகாகோ மகாநாட்டிற்கு ஒரு பிரதிநிதியாகச் சென்ற அவன் சொலாவணிப் பிரச்னையைப் பற்றிப் பேசவேண்டியிருந்தது.

ஜூன் 8; புழுக்கமான இரவு; 36 வயதான ப்ரையன் மேடையில் ஏறினான்; அது அவனுக்குக் கீர்த்தி மண்டபத்தில் பிரவேசம் போலாயிற்று. அவன் சொன்னான்:

> நாங்கள் வலுச்சண்டைக்காக வரவில்லை. எங்கள் போர் நாடு ஜயிப்பதற்காக அல்ல; எங்கள் இல்லங்களையும், குடும்பங்களையும், சந்ததிகளையும் காப்பாற்றவே நாங்கள் போர் புரிகிறோம். நாங்கள் அடக்கத்துடன் மனுக்கள் சமர்ப்பித்தோம்; அவை நிராகரிக்கப்பட்டன. நாங்கள் மன்றாடினோம்; எங்கள் வேண்டுகோள் அவமதிக்கப்பட்டது. நாங்கள் மண்டியிட்டுக் கெஞ்சினோம்; நாங்கள் பயந்த ஆபத்து நேர்ந்தபின் அரசாங்கம் எங்களை நோக்கிப் பரிகசித்தது. நாங்கள் இனி பிச்சை கேட்கவில்லை, மன்றாடவில்லை, மனு அனுப்பவில்லை; நாங்கள் அரசாங்கத்திற்குச் சவால் விடுகிறோம்.

இவ்வாறு ப்ளாட் நதியோரத்து ''வாலிபச் சொற்பொழிவாளன்'' பேசினான்; கேட்பவர் ஒவ்வொரு வாக்கியத்தையும் ஆவேசத்துடன் பாராட்டினார்கள். பேச்சின் கிரீடம் போன்ற முடிவுரையைக் கேட்டதும் நயாகரா நதியின் பேரோசை போல் சபைக் கூடம் கம்பித்தது; ஒரு அமெரிக்க சபையிலும் பாராட்டுதல் அவ்வளவு உக்கிரமாக இருந்ததில்லை.

இந்தச் சொற்பொழிவு இல்லாமலேயே ப்ரையன் பெயர்ப் பதிவு பெற்றிருக்கலாம். ஏனென்றால் அவன் நன்கு திட்டம் அமைத்திருந்தான்; மேலும் பலவிதத்திலும் அவன் ஏற்கக் கூடிய அபேட்சகன். ஆகவே பிரசங்கத்திற்குப் பிறகு சந்தேகம் முற்றிலும் நீங்கிற்று. டிமோக்ராட்டுகளின் வெள்ளிச் சின்னம் பூர்ண வெற்றி பெற்றது. அவர்கள் தம் கொள்கையை வெளியிட்டார்கள், அபேட்சகர்களைக் குறிப்பிட்டார்கள், ஜனக் கட்சியைத் தம்முடன் சேரும்படி செய்தார்கள்.

இந்த நடவடிக்கை ப்ரையனுக்கு தேசிய அரசியல் களத்தில் அரங்கேற்றமாகப் பரிணமித்தது; அடுத்த 20 வருஷங்களுக்கு, விட்டு விட்டு, அவன் ஒரு முக்கியமான மனிதனாய் விளங்கினான். சில விஷயங்களில் அவனை ஹென்ரி க்ளேக்குப் பிறகு அதிகக் கவனத்திற்குரிய அரசியல் நாயகன் எனலாம்.

ஜாக்ஸன் நாட்களுக்குப் பிறகு 1896-ன் தேர்தலில்தான் போட்டியிடும் நடவடிக்கைகள் மிகக் காரசாரமாக இருந்தன. முதலில் ப்ரையனின் வேலை அசாத்தியம் போலத் தோன்றிற்று. டிமோக்ராடிக் கட்சியில் மிகப்பெரிய பிளவு ஏற்பட்டிருந்தது; கட்சித் தலைவனான க்ளீவ்லண்ட் ப்ரையனுக்கு எதிரி; கிழக்கே பல கட்சித் தலைவர்கள் அதிலிருந்து விலகி ரிபப்லிகன் கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். மூன்று வருஷ நியாயாதார மந்தத்திற்கு டிமோக்ராட் கட்சி மேல் அநியாயமாக, குற்றம் சாட்டப்பட்டது. சமூகத்தில் கண்ணியமானவை என்று கரு

தப்படும் வர்த்தகம், சர்வகலாசாலைகள், பத்திரிகைகள், செல்வம் முதலிய சக்திகள் ப்ரையனுக் கெதிரே அணிவகுத்து நின்றன. ப்ரையன் அபேட்சகன் என்பது ஒன்றுதான் டிமோக்ராட் கட்சிக்கு சாதகமாக இருந்தது. நாடு முழுவதும் குறுக்கே நெடுக்கே, வெப்பத்திலும் தூசியிலும் அலுப்பைச் சட்டை செய்யாமல் குதிரைவண்டிகளில் பிரயாணம் செய்து, தினமும் எட்டுப் பத்துக் கூட்டங்களில் பேசி, குடியானவர் முன்னும், கூலியாட்கள் முன்னும், மிதவாதிகள் முன்னும், முற்போக்காளர் முன்னும் தன் கொள்கைகளை விளக்கி, அமெரிக்க சரித்திரத்திலேயே மிக விசேஷமான தேர்தல் தயாரிப்பை அவன் நடத்தினான்.

மகத்தான முயற்சி அது; ஆனால் அது போதவில்லை. கடைசியில் வில்லியம் மாக்கின்லி, அரை மிலியன் (ஐந்து லக்ஷம்) அதிக வோட்டுடன் வெற்றியடைந்தான்.

ஆனால் ப்ரையனின் முயற்சி தேர்தல் நடவடிக்கைகளில் ஒரு அற்புதக் கதையாகி விட்டது; ஜனக் கட்சியினர், விவசாய டிமோக்ராட்டுகள் ஆகியோரின் திட்டங்களில் முக்கியமானவை அனைத்தும் காலக்கிரமத்தில் சட்டங்களாயின. அவை அமெரிக்கச் சரித்திரத்தின் போக்கையே மாற்றி அமைத்தன.

அத்தியாயம் 17

சீர்திருத்த யுகம்

சுதந்திரமும் சமத்துவமும் நிலைக்குமா: ப்ரையன் 1896-ன் தேர்தல் நிகழ்ச்சிகளைப் பற்றிப் புஸ்தகமாக எழுதியபோது அதற்கவன் "முதல் யுத்தம்" என்று பெயரிட்டான். தெய்வச் செயலாகத் தோன்றிய தலைப்பு அது. அந்த யுத்தம் விவசாயக் குடியாட்சி சக்திக்குத் தோல்வியளித்தாலும் முன்னேக்கமுள்ள காரியத் திட்டத்திற்குப் பிள்ளையார் சுழியாக ஆயிற்று. அந்த யுத்தம் முடிவடைவதற்குள் குடியானவர்களும் பாட்டாளி மக்களும் ராஜ்யம் ராஜ்யமாகப் படையெடுத்து வெற்றிக்குப் பின் வெற்றியடைந்து, பிற்போக்குக் கோட்டைகளைப் புயல் போல் தாக்கி, தங்கள் கொடியை வெண் வீட்டின் உச்சியில் ஜய பேரிகை கொட்டி நட்டார்கள்;

மேலும் தேசிய அரசாங்கத்தைப் பரம்பரையாக அதற்கேற்பட்ட ஜனநாயகப் பாதையில் அவர்கள் திருப்பினார்கள்.

ப்ரையனின் முதல் யுத்தத்திற்கும் வுட்ரோ வில்ஸனின் இரண்டாம் யுத்தத்திற்கும் இடைக்காலமாகிய இரு பத்தாண்டுகள் ஒரு முன்னேக்க யுகம். அமெரிக்க வாழ்க்கையின் அநேகமாக ஒவ்வொரு பகுதியிலும் புரட்சியும் சீர்திருத்தமும் தென்பட்டன. பழைய அரசியல் தலைவர்கள் நீக்கப்பட்டுப் புது ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள்; அரசியல் யந்திரம் புதுப்பிக்கப்பட்டது; அரசியல் பழக்க வழக்கங்கள் கூர்மையாகச் சோதிக்கப்பட்டு உண்மையான ஜனநாயக லக்ஷியங்களுக்கு முரணானவை நீக்கப்பட்டன. அதே போல, பொருளாதார ஸ்தாபனங்களும் செய்முறைகளும்—தனி மனிதனின் சொத்து, கார்ப்பொரேஷன், ட்ரஸ்ட், பெரிய ஆஸ்தி முதலியன—காரண காரியத் தொடர்பு, நியாயம் முதலான அளவுகோல்களால் அளக்கப் பட்டன; குற்றங்குறைகளை நீக்குவது அவசியமாயிற்று. சமுதாய உறவுகள் மறுபடி பரிசீலிக்கப்பட்டன—நகர வாழ்க்கை, குடியிறக்கம், செல்வத்தில் ஏற்றத்தாழ்வு, வகுப்பு வளர்ச்சி; இவையெல்லாம்கூரான விமர்சனத்திற்கு உள்ளாயின. இந்தக் காலத்தில் அரசியல், தத்துவம், அறிவு, இலக்கியம் முதலான பல துறைகளில் முன்னணிக்கு வந்தவர் அநேகமாய் எல்லோரும் கீர்த்தி பெற்றதற்குச் சீர்திருத்த இயக்கத்துடன் அவர்கள் கொண்ட தொடர்பும் ஒரு காரணம். மக்களால் பாராட்டப்பட்டவரெல்லாம் சீர்திருத்த வாதிகள். தைரியத்தோடும் எதிர்ப்பு நோக்கத்தோடும் அவர்கள் குடியாட்சி என்னும் கோட்டையின் மதில்களைக் காத்து நின்றார்கள்; தேவையானால் புது வெற்றிக்காகத் தாக்குதல் நடத்தவும் தயாரானார்கள். ஐம்பது வருஷங்களாச் அறிவுலகத்தில் இது போன்ற கொந்தளிப்பு இருந்ததில்லை; சீர்திருத்த நோக்கமும் இவ்வளவு முக்கியத்தன்மை பெற்றதில்லை.

சீர்திருத்தம், சீர்திருத்தம் என்னும் இந்த நேர்த்தியான ஆவேசத்தின் கருத்துதான் என்ன? அமெரிக்க வாழ்க்கை என்னும் கடலைக் குழப்பிக்கொண்டிருந்த துஷ்ட சக்தி எது? குடியானவன், பாட்டாளி ஆகியோரின் கஷ்டங்களைப் பற்றி நாம் ஓரளவு அறிந்திருக்கிறோம். ஆனால் வேதனை அளிக்கும் அவை துன்பத்தின் காரணங்களல்ல, துன்பத்தின் அறிகுறிகள்: அவை பொருளாதாரப் பிரச்னைகள் மாத்திரமல்ல, மேலே கூறிய இரு இனத்தாரை பாதிப்பவை மாத்திரமல்ல, அமெரிக்க சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் அவை பாதித்தன.

அமெரிக்க வாழ்க்கை அளித்த வாக்குறுதி நிறைவேறவில்லை, பேச்சோடு நின்றது என்பதுதான் உண்மை. சுதந்திரமும் சமத்துவமும் கொண்ட ஒரு சமூகம், ஒவ்வொரு நடவடிக்கை

யிலும் கவலையோடும் விழிப்போடும் சுதந்திரத்தைக் காக்கும் அரசாங்கம் புது உலகில் உண்டாகும் என்று வாக்களிக்கப்பட்டது. அது ஒரு லட்சியம், ஒரு சொப்பனம், ஆனால் அபினி மயக்கக் கனவு அல்ல; ஜனநாயகத்தை அமைத்த அமெரிக்கத் தீர்க்கதரிசிகள் பொய்க் கற்பனைகள் செய்பவர்களல்ல. சரித்திரத்தில் இதற்கு முன் ஒருபோதும் பிரகிருதி தேவி மானிடர்களுக்கு இவ்வளவு சிறந்த வாய்ப்புகள் அளித்ததில்லை; மனிதர்கள் பூலோக சுவர்க்கம் சிருஷ்டிக்க முடியும் என்ற நம்பிக்கைக்கு இவ்வளவு பலமான காரணங்கள் இதற்கு முன் இருந்ததுமில்லை. ஆரம்பத்தில் அமெரிக்கர் "மனிதவர்க்கத்தை ஆபத்தில் காப்பவர்" என்ற நிலையில் இருந்தனர்.

அந்த நம்பிக்கை நிறைவேறவில்லை; அயல் நாடுகளிலிருந்த அக்காலத்தாரைக் காட்டிலும் அமெரிக்கர் நல்ல ஸ்திதியில் இருந்தார்கள்; ஆனால் அவர்கள் இருக்கக்கூடிய ஸ்திதியைக் காட்டிலும் தாழ்ந்திருந்தார்கள். நாட்டின் ஸ்தூல சாதனைகள் அவசியம் கவனத்தைக் கவரக்கூடியவை; ஆனால் சமுதாய, கலாசார சாதனைகள் ஏமாற்றமளித்தன. ஜனாதிபதி வில்ஸன் தம் முதல் துவக்கப் பிரசங்கத்தில் சொன்னது போல்:

> ...நன்மையோடு தீமையும் வந்திருக்கிறது; நேர்த்தியான தங்கத்தில் மாசு கலந்துவிட்டது. ஐசுவரியத்துடன் மன்னிக்க முடியாத வீணளிக்கும் தன்மையும் கிடைத்திருக்கிறது. நாம் பயன்படுத்தியிருக்கக் கூடியதில் பெரும் பகுதியை ஊதாரித்தனமாய் எறிந்துவிட்டோம்; இயற்கை அளித்திருக்கும் பெருஞ் செல்வங்களை நாம் சேமித்துவைக்க முயலவில்லை... ஜாக்கிரதையாய் இருப்பது கேவலம் என்று நினைத்தோம்; நம் திறமை பாராட்டத்தக்கது என்பதோடு நம் ஊதாரித்தனம் வெட்கப்படவேண்டிய விஷயம். நம் தொழில் உற்பத்தி சாதனைகளைக் கண்டு நாம் பெருமைப்படுகிறோம்; ஆனால் இதுவரை நஷ்டமான மனித வளத்தைப் பற்றி நாம் சிந்திக்கவில்லை—அல்ப ஆயுளில் தீர்க்கப்பட்டவர், அதிக உழைப்பால் முறிக்கப்பட்ட சக்திகள், இத்தனை வருஷங்களாகக் கருணையற்றுச் சுமத்தப்பட்ட பாரங்களைத் தாங்கிய ஆண், பெண், குழந்தைகளின் உடல் வேதனையும் ஆத்மக் கிலேசமும்... இவை சிறு விஷயங்களல்ல... பெரிய அரசாங்கத்தில் புதைந்து கிடக்கும் ரகசியங்களை நாம் பல ஆண்டுகளுக்கு முன்பே கபடமற்ற, பயமற்ற கண்களால் பார்த்துப் பரிசீலனை செய்திருக்கவேண்டும்—செய்யவில்லை. நமக்கு உயிர் போன்ற இந்தப் பெரிய அரசாங்கத்தை சுயநலக்காரர்கள் பலமுறை சொந்த நன்மைக்காக உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்; உபயோகித்தவர்கள் பொது மக்களை மறந்தே அவ்வாறு செய்தார்கள்.

கெட்ட மனிதர்கள் துஷ்டச் செயல்கள் செய்தார்கள் என்பதல்ல இதன் காரணம்; சக்தி வாய்ந்தவர்கள் ஜனநாயக முறையில் நம்பிக்கையிழந்து அதை அழிக்கத் தீர்மானித்தார்கள் என்பதும் காரணமல்ல; ஸ்வதந்திரத்தை வீழ்த்திவிட்டு அது இருந்த இடத்தில் கொடுங்கோலாட்சியை ஸ்தாபித்து விட்டார்கள் என்பதும் காரணமல்ல. இல்லை, காரணங்கள் அதை விட சூக்ஷ்மமானவை. அடிப்படையான துன்பம் மேற்கு நாடு முழுவதற்கும் பொதுவானது. பௌதிக இயலும் விசையமைப்புகளும் சமுதாய இயலையும், அரசியல் யந்திரத்தையும் முந்திக் கொண்டு ஓடிவிட்டன. பதினெட்டாம் நூற்றாண்டின் கிராமாந்தரக் குடியரசு நாட்டுக்குத் தகுந்த பழக்க வழக்கங்களும் கொள்கைகளும் இருபதாம் நூற்றாண்டின் நகரப் பிரதான தேசத்தின் விசேஷத் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை. அரசியல் துறையில் அது உண்மையே; ஏனென்றால் யந்திர அமைப்பு சமூகத்தின் மேல் ஏவி விட்ட சக்திகளை அரசாங்கந்தான் சரியாகக் கண்டிக்க முடியும் என்ற காலம் வரை அரசாங்கத்தினிடம் மக்களுக்கிருந்த பயம் மறையவில்லை. நீதி அல்லது சீலம் என்னும் பிரதேசத்திலும் அது உண்மைதான்; உயிரும் உணர்ச்சியுமற்ற கார்ப்பொரேஷன் வளர்ச்சி பெற்றதால், சொந்தப் பொறுப்பு என்பது போன்ற பழைய கருத்துக்கள் பொருத்தமற்றவை ஆயின. சமுதாய க்ஷேத்திரத்திலும் அது உண்மையே; பலமனித இனங்கள் மேலோட்டமாகக் கலந்த நகர வாழ்க்கையின் தனித் தேவைகளெங்கே, அந்நியோன்னியமான கிராம வாழ்க்கையின் பழக்க வழக்கங்கள் எங்கே!

வேகமான வளர்ச்சியே பற்பல பிரச்னைகளுக்குக் காரணமாயிற்று. இயற்கையின் உத்தேசத்தை மீறி விவசாய க்ஷேத்திரம் வளர்ந்து விட்டது; நகரங்கள் பெருகிய வேகத்தில் எல்லோருக்கும் வீடுகள் தருவதோ, நகரத்தை முறைப்படி பரிபாலிப்பதோ இயலாத காரியமாயிற்று; நியாயமாய் மக்கள் ஏற்கக் கூடியதற்கு அதிகமாகவே தொழிற்சாலைகள் பொருள்களைத் தயாரித்துக் கொட்டின; யாரும் உண்மையாகப் புரிந்து கொள்வதோ, நிர்வகிப்பதோ சாத்தியமில்லாதபடி அவ்வளவு பெரியதாக வியாபாரம் பெருகிவிட்டது; சிலர் இத்தனை பணத்தைக் கொண்டு என்ன செய்வோம் என்று புரியாத அளவுக்குப் பணம் பெற்றுவிட்டார்கள்; அவர்களுடைய சுமையைக் குறைப்பதற்குச் சமுதாயமும் இன்னும் கற்கவில்லை.

இவைதான் அடிப்படையான துன்பங்கள்; ஆனால் அவற்றைப் புரிந்துகொள்ளக் கூடிய புத்திகூர்மை படைத்தவர்கள் சிலரே. சீர்திருத்தக்காரர்கள் பார்த்ததெல்லாம்: தரித்திரம்,

அநீதி, லஞ்ச ஊழல். அவர்கள் கண்ணில் பட்டது: நிலப் பிரச்னை, தொழில் பிரச்னை, ஸ்திரீ முன்னேற்றப் பிரச்னை, செலாவணிப் பிரச்னை. சேரிகளுடன் போரிட அவர்கள் கச்சம் இழுத்து வரிந்தார்கள்; அரசியல் கொட்டத்தைப் பெருக்கித் துடைத்தார்கள்; டிரஸ்டுகளைப் பிளர்ந்தெறிந்து பணப் பேய்களுடன் மல்லுக்கு நின்றார்கள்; கள்ளுப் பிசாசு மீதும், சிறுவர்களை வேலையில் அமர்த்துவோர் மீதும், வியர்வை சொட்ட வேலை வாங்குவோர் மீதும் அவர்கள் போர் தொடுத்தார்கள்; செவ்விந்தியன் சார்பில், நீக்ரோவின் சார்பில், புதுதாய்க் கிடைத்த தீவுகளில் வசிக்கும் ''சிறுமாநிறச் சகோதரர்கள்'' சார்பிலும் அவர்கள் தர்ம யுத்தங்கள் நடத்தினர்கள்! அரசாங்கத்திற்காகப் புது அரசாங்க முறைகள் அவர்கள் கண்டு பிடித்தார்கள்:—சட்டங்களை இயற்ற மக்களே நடவடிக்கை ஆரம்பிக்கும் முறை, மக்கள் அனைவரின் வோட்டு மூலம் சட்டங்களை இயற்றுதல், பெண்களின் வோட்டுரிமை, அடிப்படைத் தேர்தல், லஞ்ச ஒழிப்புச் சட்டங்கள், தகுதியை அறிந்து வெகுமதியும் தண்டனையும் அளிக்கும் ஏற்பாடு...அவர்கள் காடுகளையும் நீர் வசதிகளையும் காத்துதவினர்கள்; நகரங்களை அழகாக்கினர்கள். பரோபகாரச் சங்கங்கள் நூறு நூறுகக் கிளம்பிச் செழித்தன. தற்கால அக்கிரமங்களை வெளியிட்டு நல்ல வாழ்வுக்கான திட்டங்கள் அடங்கிய புத்தகங்களை அச்சிட்டு அச்சிட்டு முத்திராலயங்கள் அலுத்துப் போயின. அக்கிரமங்கள் எங்கு பதுங்கியிருந்தாலும் பத்திரிகை ஆசிரியர்கள் அவற்றை அம்பலப்படுத்தும் கட்டுரைகள் எழுதி நிறையச் சம்பாதித்தார்கள். நாவல் எழுதுபவர்கள் சிருங்காரக் கதைகளையும் ஸ்தல வர்ணனைக் கதைகளையும் நிறுத்திக் கொண்டு. பிரச்னைக் கதைகளும் நீதிப் பிரசங்கங்களும் எழுத ஆரம்பித்தார்கள். கவிகளும் நாசூக்கான விஷயங்களையும் மென்மையான மோஸ்தர்களையும் புறக்கணித்து ''மண்வெட்டி பிடித்த கை''யைப்பற்றிக் கரடு முரடான செய்யுள்கள் சிருஷ்டித்தார்கள். கல்வி ஒரேஷ்டர்கள் தனிமையான சிந்தனைக்கோயில்களிலிருந்துவெளியேறிப் பாமரப் பிரச்னைகளுடன் கைகலந்தார்கள்; மத போதகர்கள் சமுதாய வேதநூலை மறுபடி கண்டுபிடித்து ''புதிய ஏற்பாட்டை (New Testament) யதார்த்தமாக—சொல் கருத்துப்படி—விளக்கிப் பழைய சம்பிரதாய பக்தகணங்களைக் குழப்பினர்கள்.

இதெல்லாம் நூற்றுக்கு நூறு அமெரிக்கப் பரம்பரையை ஒட்டியே இருந்தது. இங்கிலாந்திலிருந்த சூழ்நிலை பிடிக்காமல் அதை எதிர்த்தே ''யாத்திரிகர்'' களும் ப்யூரிடன்களும் நியூ இங்கிலாந்துக்கு வந்தார்கள்; ஆதிகாலக் காலனித் தலைவர்கள் அக்காலத்துக் கொடுமையையும் சகிப்பின்மையையும் எதிர்த்தார்கள்; புரட்சியே நாட்டின் தாய்; அதன் தலைவர்கள் தாய் நாட்டோடு மாத்திரமல்ல, அங்கு ஆட்சிபுரிவோரோடும்

கலகம் செய்தார்கள்; நியூ இங்கிலாந்தின் பெரிய எழுத்தாளர்கள், ஞானிகள், போதகர்கள், சமத்துவத்திற்கும் சுதந்திரத்திற்கும் போராடிய வீரர்கள் ஆராய்தல், சவால் விடுதல், எதிர்த்தல், நிரூபிக்க முயலுதல், நல்லது என்று தெரிந்தபின் திடமாய்ப் பற்றுதல், ஆகிய தொண்டு அமெரிக்க இயல்புடன் புரிந்தனர்.

பழைய சீர்திருத்தக் கிளர்ச்சிகளுக்கும் புதிய முற்போக்கான கிளர்ச்சிக்கும் கொள்கையிலோ வழிகளிலோ அதிக வித்தியாசமில்லை. அக்கொள்கைக்கு சுதந்தரத்திலும் சமத்துவத்திலும் முழு நம்பிக்கையிருந்தது. அந்த 'டிமாக்ரஸி' பாவம் குறைந்ததால் சமூக நோய்கள் உண்டாயின; அந்த பாவத்தை அதிகப்படுத்தினால் எல்லாத் துன்பங்களும் தீரும். அதனால் தான் பெண் வோட்டுரிமை, சட்டம் இயற்ற அனைவருக்கும் உரிமை, ஸெனெட் அங்கத்தினர்களைப் பொதுமக்கள் தேர்ந்தெடுத்தல் போன்ற திருத்தங்களில் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கையிருந்தது. அவை பெரும்பாலும் அரசியல் வழிகள்; மேலும் புதுக் கட்சி ஆரம்பிக்காமல் இருக்கும் கட்சிகள் மூலமே செயலாற்ற அவர்கள் தீர்மானித்தார்கள். ஆனால் பெரிய கட்சிகளின் ஜடத்தன்மையாலும் பழமைப் பற்றுதலாலும் புது இயக்கம் முன் நகருவது சிரமமாயிற்று.

இரண்டு முக்கியமான சீர்திருத்தக் காரியக் கிரமங்கள் இந்நாட்களில் ஒன்றுயின. ஒன்று விவசாயப் பிரதானமான மேற்கு நாட்டில் ஆரம்பமானது—பொருளாதாரப் பிரச்னைகளே அதை அவசியம் கவர்ந்தன என்றாலும் உண்மையான தீவிரவாதமும் அவ்வப்போது பளிச்சென்று நடவடிக்கைகளில் தென்பட்டது. இன்னொரு காரியக்கிரமம் கிழக்கு நாட்டிலும் இங்கிலாந்திலும் உதயமானது; டாரிஃப் சீர்திருத்தம், தகுதியைப் பாராட்டும் முறை, சாம்ராஜ்ய எதிர்ப்பு போன்ற பிரச்னைகள் அதற்கு முக்கியமாகத் தோன்றின.

சமுதாய நியாயத்திற்காகத் தர்மப் போர்: டென்மார்க்கிலிருந்து அமெரிக்கா வந்த ஜேகப் ரீஸ் நியூயார்க் 'ஸன்' பத்திரிகையில் செய்தியாளனாக வேலை பார்ப்பவன்; 1890-ல் அவன் ''மறு பாதி எவ்வாறு வசிக்கிறது'' என்றொரு புஸ்தகம் வெளியிட்டான். நியூயார்க்கின் சேரிகளின் வாழ்க்கை உள்ளது உள்ளபடி—ஜன நெருக்கம், அழுக்கு, நோய், சட்ட விரோதமான செயல்கள், துன்மார்க்க நடத்தைகள், இழிவான நிலை முதலியன—வர்ணிக்கப்பட்டிருந்தது. டிமோக்ரஸி முன் செல்லும்போது 'மறு பாதி' பின்தங்க நேர்ந்ததால் விளைந்த கேடு அது. வேறு நகரங்களிலிருந்த பத்திரிகைச் செய்தியாளர்களும் அதேபோல யாதாஸ்துகள் தயாரித்தார்கள்; அப்பொழுதுதான் கிராமப் பிரச்னை எவ்வளவு தீவிரமானதோ அவ்வளவு தீவிரமானது நகரப் பிரச்னை என்பது தேசத்திற்குப் பளிச்சென்று தெரிந்தது.

லார்ட் ப்ரைஸ் ''அமெரிக்கன் காமன்வெல்த்'' என்ற நூலில் எழுதியதுபோல் நகர அமைப்பில் அமெரிக்க டிமோக்ரஸி தோல்வியடைந்தது. நகரங்களில் மிக அதிகச் செல்வமும் மிகக் கேவலமான தரித்திரமும் கோர தாண்டவமாடின; தனவந்தர்களின் சலவைக்கல் மாளிகைகளை இடித்துக் கொண்டு சேரிகள் கிளம்பின; டம்பச் செலவு நடக்கும் உயர்தர ஓட்டல்களின் வாசலில் பிச்சைக்காரக் கூட்டங்கள். லஞ்ச ஊழல் வெட்கம் மற்ந்து ஒளிவு மறைவு அற்றிருந்தது; பொதுப் பணத்தைக் கொண்டு மனிதனின் இழிவான தன்மைகளைப் பயன்படுத்திப் பல பித்தலாட்டங்கள் நடத்தப்பட்டன. கள்ளுக்கடைகளும், விபசார விடுதிகளும் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் செழித்து வளர்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு லாபமளித்தன; கொள்ளை கொலைக் கூட்டத்தார்கூட, அவர்களைப் பற்றிய தகவல் நன்கு தெரிந்திருந்தும், துஷ்டக் காரியங்கள் செய்து கொண்டே இருந்தார்கள்; போலீஸார் தலையிடவில்லை. ஆரோக்கியமற்ற இடங்களில் பெண்களிடமிருந்து குறைந்த கூலிக்கு அதிக வேலை வாங்கப்பட்டது; சிறு பையன்கள் பத்திரிகை விற்றும், ஜோடு பாலிஷ் செய்தும் பிழைக்க வேண்டியிருந்தது. படாடோபமான நகரங்களில்தான் சுகாதாரப் பிரச்னை, வீட்டுப் பஞ்சம், கல்விப் பிரச்னை, அரசாங்கத்தின் சக்தியின்மை எல்லாம் தீவிர ரூபத்தில் இருந்தன.

வீட்டுப் பிரச்னையைத் தான் சீர்திருத்தவாதிகள் முதலில் தாக்கினார்கள்; ஏனென்றால் சேரிகள் அவற்றில் வசிப்போரை மாத்திரமல்ல, ஊரார் அனைவரையும் பாதிக்கின்றன. சிவில் போருக்குப் பிறகு பலபத்தாண்டுகளாகப் புது வீடுகள் கட்டும் வசதியைக் காட்டிலும் ஜனத்தொகைப் பெருக்கத்தின் விகிதம் அதிக வேகமாகவே ஏறிற்று; ஆகவே காற்றுக்கும் வெளிச்சத்திற்கும் வழியில்லாமல் வலுவற்ற மர வீடுகள் ஐந்தாறு மாடி உயரத்திற்குக் கட்டப்பட்டன; அந்த வாடகை அறை அடுக்குகள் மிக அசுத்தமானவை; விரும்பினால்கூட அவற்றைச் சுத்தம் செய்ய வசதிகள் குறைவு. நோய்களும் கெட்ட நடவடிக்கைகளும் பிறந்து வளர்வதற்கு மிகவும் ஏற்ற இடம். 1890-ல் நியூயார்க் நகரில் மாத்திரமே ஐந்து லக்ஷம் பேர் இந்த ''உப்பரிகைச் சேரிகளில்'' வசித்தார்கள் எனலாம்; நகரத்தின் இதர இடங்களைவிட அங்கு மரண விகிதம் நான்கு மடங்கு. நகரின் கிழக்கே பள்ளமான இடத்திலிருந்த ஒரு வாடகை அறை வீட்டில் 2781 பேர் வசித்தார்கள்; ஆனால் ஸ்நானத் தொட்டி ஒன்றுகூடக் கிடையாது! அதிலிருந்த 1588 அறைகளில் மூன்றில் ஒரு பங்கில் காற்றோட்டமோ, சூரிய வெளிச்சமோ கிடையாது; இன்னொரு மூன்றில் ஒரு பங்கின் கதவுகள் முற்றத்தைப் பார்த்து இருந்தன; சுற்றியும் பல மாடிகள் இருப்பதால்

முற்றம் என்பது தன் கருத்தை இழந்து, இருண்ட உயர்ந்த குகை என ஆயிற்று.

''சேரிப் போர்'' உண்மையில் ஒரு நீண்ட நடவடிக்கை, பல போர் முனைகளில் அது நடத்தப்பட்டது. தீ ஆபத்தையும், நோய் ஆபத்தையும் முன்னிட்டுச் சீர்திருத்தவாதிகள் சற்றுத் தயங்கிய சட்டசபை அங்கத்தினர்களின் மனத்தை மாற்றி மிகக் கேவலமான வாடகையறை அடுக்குகளை சட்ட விரோதமானவை என்று தீர்மானிப்பதற்கும் பாக்கி வீடுகளில் ஓரளவு சுகாதார வசதிகளைப் புகுத்துவதற்கும் ஏற்பாடு செய்தார்கள். தோல்வியறியாத ஸ்திரீ ஊழியர்கள் பத்து வருஷத்திற்குள் சுமார் 100 குடியிருப்புகள் நிறுவினர்; அவை அன்ன வஸ்திரம் அளித்துதவுதல், கல்வியளித்தல், சுகாதாரத்திற்கான ஏற்பாடு செய்தல் போன்ற பல பெருவாரியான யத்தனங்களில் ஈடுபட்டன. சிறுவர் சிறுமியரைத் தெருக்களில் தத்தாரியாய்த் திரியாமலும் துஷ்டர்கள் கையில் சிக்காமலும் காப்பாற்றி, ஆரோக்கியமாகவும் ஒழுங்காகவும் வசிக்க வாய்ப்பு அளிப்பதற்காக நகரங்களில் மிக நெருக்கடியான பகுதிகளில் விளையாட்டு ஸ்தலங்கள் அமைக்கப்பட்டன; ''புதிய-காற்று நிதி''கள் சிறுவர்களைக் கிராம வாசத்திற்காகச் சில நாட்கள் அனுப்பி வைக்க உதவின; பால் வாங்க இயலாதவர்களுக்கு இலவசப் பால் விநியோகிக்கப்பட்டது; வேலைக்குப் போகும் தாய்மார் தங்கள் சிறு குழந்தைகளைக் கவலையற்று விட்டுச் செல்வதற்காக விடுதிகள் (Creche) அமைக்கப்பட்டன; இலவச சேவை புரியும் நர்ஸுகள் அவ்வப்போது நோயாளிகளை அவரவர் இருப்பிடத்தில் சென்று பார்த்து ஆவன செய்தனர்; ஒய்.எம்.சி.ஏ., பால் சாரணர் குழு போன்ற நிறுவனங்கள் இளைஞர்களின் உற்சாகத்தையும் சக்திகளையும் ஆக்க வழிகளில் திருப்பி விட்டன.

உடனடியாகக் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விஷயங்களில் சட்ட விரோதமான செயல்கள், அதிலும் பால்யக் குற்றவாளிகளின் எண்ணிக்கை ஏறுவதைக் குறிப்பிட்டாக வேண்டும்; ஒன்பதாம் பத்தாண்டில் சிறைவாசிகளின் தொகை அரை மடங்கு அதிகமாயிற்று; அவர்களுள் ஐந்தில் ஒருவன் பால்யக் குற்றவாளி. ஐக்கிய நாட்டிற்கு வெகுகாலமாக சிறைவாச சீர்திருத்தத்திலும் சிகிச்சை இயலிலும் சிறந்த அக்கறை காட்டிய பெருமை உண்டு: ஆனால் பரந்த அறிவுள்ள விமர்சகர்களின் உழைப்பு இருந்தும்கூடப்பல ராஜ்யங்களின் சட்டங்கள் நாகரிகமற்றிருந்தன; ஜெயில்களும் ''கல்கத்தா இருட்டறை'' என்ற நிகழ்ச்சியை நினைவூட்டின. சீர்திருத்துவதற்குப் பதிலாக அபராதிகளைத் தண்டிப்பது என்னும் பழங்கால எண்ணம் சீக்கிரத்தில் மாறவில்லை; போலீசாரின் மிருகத்தனம், சித்திரவதை செய்து குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படிக் கட்டாயப்படுத்த

முயலுதல், செல்வர்களுக்கும், செல்வாக்குள்ளவர்களுக்கும் ஒரு சட்டம்,; ஏழைகளுக்கும், நாதியற்றவர்களுக்கும் ஒரு சட்டம் முதலான தோஷங்களும் மறைய மறுத்தன. ஹோமார்க்கெட் உலகத்தில் ''அராஜகர்கள்'' என்று குற்றம் சாட்டப்பட்டவர்களோ இல்லினுய் நீதிபதி ஆல்ட் கெல்ட் விசாரிக்கையில், தனிப்பட்ட மனிதனைக் காட்டிலும் சமூகந்தான் குற்றச் செயலுக்குக் காரணம் என்று வாதித்து அவர்களை விடுவித்தார்; அவர் ராஜ்யத்தின் குற்றத் தண்டனைச் சட்டத்தின் சீர்திருத்தத்திற்காக மிகவும் உழைத்தார்.

ஆனால் இது போன்ற செயல்கள் தற்கால சாந்திகளே தவிர சாசுவதமான சீர்திருத்தங்கள் அல்ல. புதுநூற்றாண்டின் துவக்கத்தில் இரண்டு யோசனைகள் ஏற்கப்பட்டன—சிறைவாச காலத்தைக் குறிப்பிடாமல் நன்னடத்தையுள்ள கைதியைச் சீக்கிரம் விடுவித்தல்; சீர்திருத்த போதனை முறை; இவை கவனிக்கத் தக்கவை. மிகக் கேவல நிலையிலிருந்த சில சிறைச்சாலைகள் ஓரளவு உயர்த்தப்பட்டன; பல கைதிகளை ஒரு சங்கிலியால் இணைக்கும் பழக்கமும் வேறுஸ்தாபனங்களில் கடுமையான வேலை செய்யக் கைதிகளைக் குத்தகைக்கு விடும் பழக்கமும்—தென் மாநிலத்தில் இது மிக சகஜம்—தீர்மானமாக எதிர்க்கப்பட்டன. பால்ய அபராதிகளுக்காகப் பிரத்தியேக விசாரணை ஸ்தலங்களும் ஏற்படுத்தப்பட்டன. கொலராடோவில் டென்வெர் நகரில் பால்ய அபராதி நீதி ஸ்தலத்தில் ஒரு கால் நூற்றாண்டு தலைமை வகித்த நீதிபதி பென் லிண்ட்ஸே (Ben Lindsey) இளைஞர்களுள் குற்றம் செய்யத் தூண்டும் தன்மையைப் பேரளவில் குறைத்ததற்காக நாடு முழுதும் கீர்த்தி பெற்றார்.

சட்ட விரோதமான செயல், ஏழ்மை, இரண்டுக்கும் கள் குடைதான் காரணம் என்று கருதப்பட்டு, ''கள் அரக்கன்'' மேல் தீவிரமான போர் நடத்தப்பட்டது; இறுதியில் நாடு முழுதும் சாராய வகைகளின் உபயோகம் தடுக்கப்பட்டது. குடியாண்மை இயக்கம் ஜனநாயக நாட்டின் ஆதிகாலத்திலேயே ஆரம்பமாயிற்று; சிவில் போருக்கு முன்பே, ஆயிரக்கணக்கானவர் முழு சாராய விலக்குப் பிரதிஜ்ஞை செய்தார்கள்; நியூ இங்கிலாந்தில் பல ஸ்டேட்டுகள் கள் ஒழிப்புக்கான சட்டங்களும் விதித்துப் பார்த்தன. ஆனால் போருக்குப் பிந்திய ஆண்டுகளில் மது வகைகள் குடித்தல் அதிகமாயிற்று; நகரங்களில் விற்பனை நிலையங்களும் அதிகரித்தன; அவற்றுள் சிலவற்றை ''ஏழைகளின் பொழுது போக்கிடம்'' எனலாம்; ஆனால் பெரும் பாலானவை மட்டு மரியாதை இல்லாமலும் குடிப்பதில் ஒரு நாசூக்கு இல்லாமலும் நடத்தப்பட்டன. ஞாயிறன்று கடை மூடும் விதிகள் புறக்கணிக்கப்பட்டன; லைசென்ஸ் கட்டணங்கள் விஷயத்தில் சர்க்கார் ஏமாற்றப்பட்டது; மது உற்பத்தி

யாளர்களும் விற்பனையாளர்களும் மிக மட்டமான அரசியல் வாதிகளைத் தம் கைக்குள் வைத்திருந்தார்கள்.

இந்தக் கேவலமான ஸ்திதியை சீராக்க மதுவிலக்குக் கட்சி யொன்று 1869-லேயே அரசியல் களத்தில் இறங்கிற்று; ஆனால் அது அதிகம் செய்ய முடியவில்லை. ''மாதர் கிறிஸ்தவத் தன்னடக்கச் சங்கம்,'' ''கள்-கடை எதிர்ப்புச் சங்கம்,'' ''சுவிசேஷ'' சர்ச்சுகள் போன்ற ஸ்தாபனங்கள் மதுவிலக்குக் கட்சியை விட அதிகம் செயலாற்ற முடிந்தது. இச்சங்கங்கள் அரசியல் இளர்ச்சியோடு திருப்தியடையாமல் பத்திரிகைகளிலும், கோயில்களிலும், பிரசங்கக்கூடங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் ஓயாத பிரசாரம் நடத்தின.

நூற்றாண்டு முடிவடைவதற்குள் இந்நடவடிக்கைகளால் ஏழு (நாட்டுப்புற) ஸ்டேட்டுகளில் மது வறண்டது; இன்னும் பல ஸ்டேட்டுகள் ''ஸ்தல இச்சை'' என்னும் முறையை அனுசரித்ததில் குறிப்பிட்ட ஊர் அல்லது ஜில்லா தன் எல்லைக்குள் சாராய விற்பனையும் உபயோகமும் இருக்கலாமா, கூடாதா என்பதைச் சட்ட ரீதியாகத் தீர்மானிப்பது சாத்தியமாயிற்று. இந்நூற்றாண்டின் ஆரம்ப வருஷங்களில் மதுவிலக்கு இயக்கம் நன்முயற்சி பரவிற்று; முதல் உலக யுத்தம் ஆரம்பமாகும்போது மூன்றில் இரண்டு பங்கு மக்கள் மது விலக்கப்பட்ட பிரதேசங்களில் வசித்தார்கள். நகரங்கள் மாத்திரமே பிடிவாதமாகத் தம் வழி சென்றன. போர் துவங்கும்போது சிக்கனத்தையும், திறமையையும் சீலத்தையும் உத்தேசித்து, சாராய உற்பத்தியையும் விற்பனையையும் காங்கிரஸ் தடுத்தது; அந்த தற்காலிகச் சட்டம் முடிவடைவதற்குள் அது ஃபெடரல் நிர்மாணச் சட்டத்தில் இடம் பெற்றது. பத்து வருஷத்திற்கு மேல் அது அமுலில் இருந்த பின் 1933-ல் அச்சட்டம் ரத்து செய்யப்பட்டது; ஒரு சிறந்த முயற்சி வீணையிற்று; பிரச்னை மறுபடி ராஜ்யங்களின் கைக்குச் சென்றது.

ராஜ்யங்கள் வழி காட்டுகின்றன: இவ்வெல்லாச் சீர்திருத்த இயக்கங்களின் சரித்திரமும் நிச்சயமான ஒரு நீதியைக் கற்பிக்கின்றன; சட்ட மார்க்கங்களின் மூலமல்லாமல் தனிப்பட்ட மனிதர்களும் ஸ்தாபனங்களும் அதிகம் சாதிக்க முடியாது.

தானதர்மம் தற்கால சாந்தி என்பது தெரிந்ததே; அரசியல் நடவடிக்கையில் நம்பிக்கையற்றதான வீரர்கள்கூட கடைசியில் சட்ட சபைகளில் கை நீட்டி உதவிக்காகச் சென்றனர். சேரித் துப்பரவு, சிறைச்சாலைச் சீர்திருத்தம், சிறுவர் சம்ரட்சணை, மதுவிலக்கு—எல்லாவற்றிற்கும் சட்டத்தின் உதவி வேண்டியிருந்தது. இன்னும் அடிப்படையாக ஏதேனும் வேண்டியிருந்தால், அது ராஜ்யத்தின் மூலமாகத்தான் கிடைக்கக் கூடியதாக இருந்தது.

சீர்திருத்த இயக்கத்தின் பெரிய ஆரம்பப்போர்கள் ராஜ்யங்களில் இடப்பட்டன; பல பிரச்னைகள் மத்திய அரசாங்கத்திற்கு மாற்றப்பட்ட பிறகும்கூட அந்நிலை தொடர்ந்திருந்தது. அமெரிக்க அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி சமுதாய சம்பந்தமான விஷயங்கள் எல்லாம் அநேகமாய் ராஜ்ய நிர்வாக எல்லைக்குள் அடங்கியவை என்பதை அடிக்கடி நினைவுபடுத்துவது அவசியமாகிறது. பாட்டாளிகளின் வேலை நேரமும், கூலிவிகிதமும், தொழிற்சாலைச் சூழ்நிலை, ஸ்திரீகள் பாலர்களின் க்ஷேமநிலை, சிறைச்சாலைகள், சீர்திருத்தப் பாடசாலைகள், தர்ம ஸ்தாபனங்கள், கல்வி, வாக்குரிமை, நகராண்மை—இவ் விஷயங்களெல்லாம் ராஜ்ய அரசாங்கத்தின் பொறுப்புகள், ஃபெடெரல் பொறுப்புகளல்ல. "புதிய வாழ்வுத்திட்டம்" இதையெல்லாம் மாற்றியது உண்மையே; ஆனால் அம்மாறுதல் நியாயமானது என்று காட்ட ஒரு பிரளய கால ஆபத்து வேண்டியிருந்தது; அதற்குக் காரியரூபம் அளிக்க முயலத் துணிந்த நிர்வாகமும் தேவையாக இருந்தது; ஸுப்ரீம் கோர்ட்டின் திடமான எதிர்ப்பை அறிந்தே அக்காரியம் செய்ய வேண்டியிருந்தது.

ஆக, ராஜ்யங்கள் சீர்திருத்தங்களின் சோதனைச்சாலைகள், பிற்காலத்தில் உருவான பலதேசிய சீர்திருத்தங்கள் அங்குதான் முதலில் சோதித்துப் பார்க்கப்பட்டன; அங்குதான் அவை கொள்கையில் நியாயமானவை என்பதும் செய்கையில் போதாதவை என்பதும் தெளிவாயின. மேலும், தேச அரங்கில் தம் திறமையைக் காட்டிய சீரமைப்பு வாதிகளுக்கு ராஜ்யங்கள் தான் பயிற்சிக் களமாக உதவின. தியோடர் ரூஸ்வெல்ட், ஃபாலெட், வில்ஸன், ஃப்ராங்க்லின் டி. ரூஸ்வெல்ட்—எல்லோரும் ஸ்டேட்டுகளில் வேலை பயின்றவர்கள்.

ராஜ்யங்கள் இயற்றிய சீரமைப்புகளின் தன்மை என்ன? அரசியல் விசையைப் பொது மக்களுக்குகந்ததாக ஆக்கப் பல மாறுதல்கள் தேவையாக இருந்தன: மக்களின் முன் முயற்சி, மக்களின் அபிப்பிராயம் தேடுதல், ரகசியத் தேர்தல், நேரடி அடிப்படைத் தேர்தல், ஸெனெட் அங்கத்தினர்களின் நேரடித் தேர்தல், லஞ்ச ஊழல் சட்டங்கள், முனிசிபல் ஸ்வராஜ்யத்திற்கான அனுமதி, பெண் வோட்டுரிமை; மற்றவை பொருளாதாரக் குறிக்கோள் கொண்டவை: ரெயில்வே கட்டுப்பாடு, டிரஸ்டு கட்டுப்பாடு, பொது உபயோக வியாபார முயற்சிகளைப் பற்றிய கமிஷன்கள், வரி சீர்திருத்தங்கள், பாட்டாளியின் வேலை நேரம் முதலான மாறுதல்கள், தொழிலாளர்களின் நஷ்டஈடு, பால்யத் தொழில் தடுப்பு; இன்னும் சில பொதுவான சமுதாய நலனைப் பற்றியவை கல்வி, சுகாதாரம், இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்.

அரசாங்கங்களைக் கைப்பற்றுவதே உடனடியாகச் செய்ய வேண்டிய காரியம். லஞ்ச ஊழலால் ராஜ்ய அரசாங்கங்கள்

அதிகம் நைந்திருந்தனவா, நகராண்மைக் கழகங்களா—என்பது ஒரு நாளுக்கான பிரச்னை. எங்கு பார்த்தாலும் லஞ்சத்திற்கான வாய்ப்புகள் விஸ்தாரமாக இருப்பதோடு ஆசையும் காட்டின; முயற்சி வெற்றியளித்தால் கிடைக்கக் கூடிய வெகுமதிகளுக்கு எல்லையில்லை எனலாம். அதிக மதிப்புள்ள பொதுநல வியாபாரத்திற்கு அனுமதி அளித்தல், ரெயில்வேக் கட்டணங்களும் பொதுநல யத்தனங்களின் கட்டணங்களும் நிர்ணயித்தல், இன்ஷியூரன்ஸ் முறைகளை கட்டுப்படுத்துதல், வரி விதித்தல், வரி வசூலித்தல், அமிதமான சாலைக் காண்டிராக்டுகள், சாராயக் கடையை ஆக்கவோ அழிக்கவோ சக்தி—இவையெல்லாம் ராஜ்ய சட்ட சபைகள் கையிலும் நகர ஆலோசகர் சபைகளின் வசத்திலும் இருந்தன. இக்காரியங்களில் பல நூறு மிலியன் டாலர்கள் ஈடுபட்டிருந்தன; ஆகவே வர்த்தகர்கள் சலுகைகளுக்கும், விலக்குகளுக்கும், காப்புகளுக்கும தாராளமாகப் பணம் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். பணம் கொடுப்பது என்றுல் ஒளிவு மறைவற்ற லஞ்சம் எனக் கொள்ள வேண்டாம்; அரசியல் துறையில் முன்னேற்றம், கட்சி நிதிக்குச் சந்தா, விஷயத்தை "நன்றுய்ப் புரிந்துகொண்டு" தக்க உதவி செய்த அட்டர்னிகளுக்கு லாபகரமாக வழக்குகளை அனுப்புதல்—இவையெல்லாம் பிரதி உபகாரத்தின் பல ரூபங்கள். என்ன ரூபமானலும், உத்தேச காரியம் நிறைவேறிற்று—அதைக் கண்ட சீர்திருத்தவாதிகள் திகைத்தார்கள்.

புது நூற்றுண்டு பிறக்க இருக்கும் காலத்தில், மிஸௌரியில் விசாரணைகள் நடத்திய பெரிய ஜூரி "பன்னிரண்டு வருஷங்களாக ஸ்டேட் சட்ட நிர்ணயம் லஞ்சத்தால்தான் நடந்திருக்கிறது, அதற்குத் தட்டு தடை கிடையாது, அனேவருக்கும் அது சகஜமாகத் தோன்றுகிறது" என்ற முடிவுக்கு வந்தது. யூனியனின் ஒவ்வொரு ஸ்டேட்டைப் பற்றியும் சற்று முன்னே பின்னே அதே முடிவுக்கு வந்தால் அது பொய்யாகாது. நியூ ஹாம்ப்ஷயரிலிருந்து கலிஃபோர்னியா வரை, நியூ மெக்ஸிகோவிலிருந்து மான்டானு வரை, சட்ட சபை அங்கத்தினர்களை ஏலத்தில் எடுக்கலாம். ஒவ்வோரிடத்திலும் கார்ப்பொரேஷனின் ஏஜெண்டுகள் சட்டசபைகளில் ஈடுபாடு வைத்துக்கொண்டு, வெட்கமின்றி லஞ்சம் கொடுத்தோ, அது தவறினால் அதட்டி மிரட்டியோ தம் முதலாளிகளின் காரியங்களைச் சாதித்தார்கள். நியூ ஹாம்ப்ஷயர் என்னும் ராஜ்யத்தில் ரெயில்வேக் கம்பெனிகளுக்கு சர்வ அதிகாரம் இருந்தது; மான்டானுவில் "தாமிர மன்னர்கள்" அட்டூழியம் செய்தார்கள்; ரெயில் பாதை கம்பெனிகளும் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளும் நியூயார்க் சட்டசபையை விலைக்கு வாங்கின. நியூ மெக்ஸிகோ போன்ற சிறிய எல்லை ராஜ்யத்திலும் இரண்டு மூன்று ரெயில்வே முதலாளிகள், நிலக்கரி, தாமிர சுரங்கக்

கம்பெனிகள், மர விபாபாரிகள், நில வியாபாரிகள், பெருவாரியாக மாடு வளர்ப்பவர்கள், எல்லா சுயநல வஞ்சகர்களும் கட்சி கூடி ராஜ்ய அரசாங்கத்தைக் கைப்பிடியில் வைத்திருந்தார்கள். நிலக்கரி கம்பெனிகள் மிக மதிப்புள்ள சுரங்கப் பிரதேசத்தில் பல்லாயிர ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றின; மர அறுவைக் கம்பெனிகள் நாட்டின் வன வளத்தைக் கொள்ளையடித்தன; கால்நடைப் பண்ணையார்கள் பொது இடங்களில் பல்லாயிர ஆடு மாடுகளை மேயவிட்டார்கள்; நாட்டின் சட்டப் புஸ்தகங்களில் தொழிலாளிச் சட்டங்களே கிடையாதோ என்று தோன்றும்படி ரெயில்வேக் கம்பெனிகளும் சுரங்கக் கம்பெனிகளும் தம் இஷ்டப்படி நடந்துகொண்டன; எல்லோரும் உரிய வரிகள் செலுத்தாமலேயே தப்பித்துக் கொண்டார்கள்.

லஞ்ச எதிர்ப்பு நடவடிக்கைகளை விவரமாய் வர்ணிப்பதோ, வெவ்வேறு ஸ்டேட்டின் அரசியல் சீர்திருத்தங்களைப் படிப்படியாகக் கூறுவதோ சொன்னதையே சொல்வதாகவும் குழப்பமுண்டாக்குவதாகவும் ஆகும். யூனியனில் பல இடங்களில் நடப்பில் இருந்த நிலைக்கு உதாரணமாக ஒரு ராஜ்யத்தின் வரலாற்றைச் சொல்வோம்; பல ராஜ்யங்கள் அதைவிட மோசமாக இருந்தன. 1880-ல் விஸ்கான்ஸின் நாகரிகத்தோடும் அறிவு ஒளியோடும் விருத்தியடைந்து வந்த ஸ்டேட் எனலாம்; ஆனல் அதன் அரசாங்கம் மூவர் கூடிய ஒரு குழுவின் கையில் இருந்தது. தலைமைப் பதவிக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் குழு, அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் செய்கைகளைக் கட்டுப்படுத்தும் குழு ஆகிய அரசியல் ஸ்தாபனங்களில் சூத்திரதாரிகளாக இருந்து அவர்கள் ராஜ்யத்தின் அரசியல் வாழ்க்கையையே தம் இஷ்டப்படித் திருப்பினர்கள்.

ஒன்பதாம் பத்தாண்டில் புல்வெளி ராஜ்யங்களில் விறுவிறுப்படைந்த சீர்திருத்த இயக்கங்களால் ஊக்குவிக்கப்பட்டு, ராஜ்ய சர்வகலாசாலையிலிருந்து அப்பொழுதுதான் வெளிவந்த இளம் ராபர்ட் எம். லா ஃபாலெட் அத்தொண்டில் ஈடுபட விரும்பினன். அரசியல் யந்திரத்தின் உதவியில்லாமல் சொந்த முயற்சியாலேயே அவன் காங்கிரஸில் பிரவேசித்துத் தொடர்ந்து நான்கு தடவைகள் மக்களின் நம்பிக்கைக்குத் தகுதியுள்ளவனாய் நடந்துகொண்டு நாணயஸ்தன் என்ற பெயர் வாங்கினன். 1890-ல் டிமோக்ராட் கட்சியினர் பெருவாரியாகக் கட்சி மாறியதில் தோல்வியடைந்து அவன் ராஜ்ய அரசியல் பக்கம் திரும்பினன். மக்கள் அவனை விரும்பினர்; ஆனல் "அரசியல் யந்திரம்" அவனை ஆதரிக்கவில்லை; தொடர்ந்து மூன்று முறை ஜனதிபதிப் பிரச்னை வந்தபோது "யந்திர ஓட்டிகள்" தங்களுக்குட்பட்டு "ஆமாஞ்சாமி" போடுபவர்களையே

அபேட்சகனாக நிறுத்தினர்கள். இந்த அனுபவத்திலிருந்து லா ஃபாலெட்டுக்கு "தேர்தல் குழுக்கள் ஒழியவேண்டும், அடிப்படை மக்களின் மூலமாக நேரடித் தேர்தல் நடைபெற வேண்டும்" என்ற எண்ணம் திடப்பட்டது.

கடைசியாக 1900-ல் அவன் தன் கருத்துக் கிசையாத தேர்தல் குழுவைப் பலவந்தமாகத் தன் பெயரைக் குறிப்பிடும்படி செய்து, மகிழ்ச்சிகரிய ஆதரவுடன் கவர்னர் பதவியைப் பெற்றான். சொற்ப யுத்தகாலம் நீங்கலாக அடுத்த கால்நூற்றாண்டுக்கு அவனும் அவனைத் தொடர்ந்தவர்களும் ராஜ்யத்தில் முக்கியஸ்தர்களாக இருந்து அதைக் குடிநலக் கருத்து நிறைந்ததாகவும், யூனியனுக்குள் மிக முன்னேற்ற முள்ளது, மிகச் சிறப்பாக ஆளப்பட்டது என்னும்படியாகவும் செய்தார்கள். இந்நூற்றாண்டின் முதல் பத்துப் பன்னிரண்டு வருஷங்களில் லா ஃபாலெட் சிருஷ்டித்துப் பிரயோகித்த "விஸ்கான்ஸின்" கருத்து அல்லது லட்சிய மார்க்கம் வெறும் வார்த்தைப் பந்தலல்ல; அது நன்கு இணைந்து விவகாரத்திற்கான திட்டம். முன் குறிப்பிட்ட நேரடியான அடிப்படைத் தேர்தல், மக்களின் முதல் முயற்சி, யோசனைகளை மக்களின் அபிப்பிராயத்திற்குச் சமர்ப்பித்தல், நீதிபதிகள் தவிர மற்ற உத்தியோகஸ்தர்களின் புது நியமனம், தேர்தலின் போது கெட்ட பழக்கங்களின் தடுப்பு, தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துதலும் கணக்குகளைப் பிரசுரிப்பதும், முனிசிபல் சுய ஆட்சி, சிவில் அதிகார வர்க்க சீர்திருத்தம், நிர்வாக விஷயங்களுக்கான யோசனைகள் கூற நிபுணர் குழுக்களை அமைத்தல்—இது போன்ற செய்கைகள் மூலம் குடிநலம் பெருகிற்று. கார்ப்பொரேஷன்கள் மக்களைக் கொள்ளையடிக்காவண்ணம், ரெயில்வேக் கட்டணங்களையும், பொதுநலயத் தனங்களின் கட்டணங்களையும் கட்டுப்படுத்தக் கமிஷன்கள் அமைத்ததோடு லா ஃபாலெட் வரி வசூல் யந்திரத்தையும் முடுக்கிவிட்டு ரெயில்வேக் கம்பெனிகளையும் மர அறுவை கம்பெனிகளையும் பழைய பாக்கிகள் சேர்த்து வரிப்பணம் கக்கும்படி செய்தான்; பாட்டாளிகளின் நலனுக்காக நஷ்டஈடு சட்டங்கள், பாலர் தொழில் தடுப்பு, பெண்கள் வேலை செய்யவேண்டிய நேரத்தைப்பற்றிய ஒரு கட்டுப்பாடு முதலிய திருத்தங்கள் உருவாயின. விவசாய விளைபொருள்களுக்கு ரெயில் கட்டணத்தைக் குறைத்தும், இயற்கையின் கொடைகளைச் சிக்கனமாக உபயோகிக்கக் கற்பித்தும், ஜல சக்தியைப் பயன்படுத்தும் திட்டம் வகுத்தும், சர்வ கலாசாலையைச் சேர்ந்த விவசாய ஆராய்ச்சிச் சாலைகளுக்கும் மாதிரிப் பண்ணைகளுக்கும் பெரிய அளவில் உதவியளித்தும் விவசாயத்தை அவர் ஊக்குவித்தார்.

லா ஃபாலெட் சர்வகலாசாலைக்கு ராஜ்யத்தின் மூளை என்ற பதவியளித்தது மிக சுவாரஸ்யமானதொரு விஷயம்.

சாலியின் தலைவரான வான் ஹைஸ் (Van Hise) கியாதி பெற்ற விஞ்ஞானி; அவர் மிகச் சிறந்த ஆசிரியர்களை ஆகர்ஷித்து உலகத்தின் உயர் கல்வி நிலையங்களுக்கே அபூர்வமான ஒரு குழுவைத் திரட்டினார். அதைவிட முக்கியமானது என்னவென்றால் ராஜ்ய மக்களுக்குச்சேவைபுரிவது விசுவவித்தியாலயத்தின் கடமை என்ற கருத்துக்கு அவர் பிரசாரம் அளித்தார். அதன் பொருளாதார ஆசிரியர்கள் ரெயில்வேக் கமிஷன்களிலும் வரிக் கமிஷன்களிலும் இடம் பெற்றார்கள்; அரசியல் ஆசிரியர்கள் சட்ட சபையின் மசோதாக்களை ஜாக்கிரதையாக வரைந்தார்கள்; சரித்திர ஆசிரியர்கள் ஸ்தல சரித்திரத்தை யொட்டிய ஆராய்ச்சிகள் நடத்தினார்கள்; நிர்மாண இயல் ஆசிரியர்கள் சாலை அமைப்பு முதலான திட்டங்கள் வகுத்தார்கள்; விவசாய ஆசிரியர்கள் குடியானவர்களுக்குக் கால்நடை இயல் கற்பிப்பதோடு, சிறந்த ஆராய்ச்சிகள் பல நடத்தி ராஜ்யத்திற்கும் தேசத்திற்கும் பல கோடி டாலர் லாபமளித்து உதவினார்கள்; மேலும் ஐரோப்பாவில் டென்மார்க்கு முன்னுக்கமுள்ள விவசாய தேசம் என்ற கீர்த்தி ஏற்பட்டதுபோல் புது உலகில் விஸ்கான்ஸினுக்கு நல்ல பெயர் கிடைத்தது.

விவகார முறையான இந்த முன்னேற்றம் முழு நாட்டின் சுவனத்தைக் கவர்ந்தது. சீர்திருத்தப் பிரசாரம் பயனற்ற சித்தாந்தம் அல்ல என்றும் உபாத்தியாயர்களும் விஞ்ஞானிகளும் தினசரிக் காரியங்களுக்கு உதவுவார்கள் என்றும் லாஃபாலெட் நிரூபித்தார். சோஷலிஸ்டு என்ற குற்றச்சாட்டுக்கு இடந்தராமல் பொதுநல வர்த்தகயத்தனங்களைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பதையும், அவ்வாறு கட்டுப்படுத்துவதால் பொது மக்கள் லாபமடைவதோடு அந்த யத்தனங்களும் லாபமடையும் என்பதையும் அவர் செய்து காட்டினார். அரசு இயல் சோதனைச் சாலையாக ராஜ்யம் உதவமுடியும் என்பதைத் தெளிவாக்கி அவர் இதர ராஜ்யங்களுக்கு மாத்திரமல்ல, தேசத்திற்கே வழிகாட்டியானார்.

தியோடர் ரூஸ்வெல்ட்டும் திட்டமும்: விஸ்கான்ஸின் போன்ற ராஜ்யங்களின் சாதனைகள் பாராட்டத்தக்கவையாக இருந்தாலும், பெரும்பாலான சீர்திருத்தப் பிரச்னைகள் சமஷ்டி என்னும் கட்டடத்தின் தனித்தனி அறைகளில் விடைகாண முடியாதவை என்பது தெளிவு. தேசம் முழுதும் ஈடுபடச் செய்யும் இயக்கமே பலனளிக்கும்; அதை வெற்றிகரமாக்க தேச அரசாங்கத்திற்குத் தான் சக்தியுண்டு. சிறிதளவு முன்னுக்கமுள்ள சில சட்டங்களைக்காங்கிரஸ் ஏற்கெனவேஇயற்றியிருந்தது—1883-ல் அதிகாரவர்க்க சட்டம், 1887-ல் ராஜ்யங்களுக்கிடையே வியாபாரம் சம்பந்தமான சட்டம். 1880-ல் ட்ரஸ்ட் எதிர்ப்புச் சட்டம், 1898-ல் ரெயில்வே தொழில் சண்டைப்பஞ்சாயத்துச் சட்டம்—இத்தியாதி. ஆனால் இரண்டு

காரணங்களால் இவையும், இவைபோன்ற சட்டங்களும் பெரும் பாலும் பயனற்றுப் போயின; அவை பிரச்னையைத் தொட்டும் தொடாமலும் விட்டன; அவை கண்டிப்புடன் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. சுருங்கச் சொல்லின், அவை வெறும் சைகைகள்—பொதுமக்களைத் திருப்தி செய்வதற்காக அரைகுறை மனத்துடன் காங்கிரஸ் செய்த ஒரு தந்திரம்.

ஒரு தலைமுறை காலத்திற்கு ஃபெடரல் அரசாங்கம் அநேகமாக ரிபப்லிகன் தலைவர்கள் கையில் இருந்தது; தலையீடாமை என்ற சித்தாந்தத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் அவர்கள்; ஆகவே அவர்கள் மிகப் புதிய சமுதாய, பொருளாதாரக் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கவில்லை. விதிவிலக்கே இல்லாமல் அவர்கள் பெருவாரி வியாபாரத்திற்கு அனுகூலமாக இருந்தார்கள்; சிவில் போர் வீரர்களுக்கும் அவர்கள் கணிசமான பென்ஷன் அளித்தார்கள். அதிகச் செல்வாக்குள்ள கட்சிகள் விரும்பியதெல்லாம் நிறைவேறிற்று எனலாம். ரிபப்லிக் கட்சி ஜனாதிபதிகள்—கிராண்ட், ஹேய்ஸ், கார்ஃபீல்ட், ஆர்தர், ஹாரிஸன், மாக்கின்லி—திறமைசாலிகள், பாராட்டத் தக்கவர்கள்; ஹேய்ஸ், கார்ஃபீல்ட் இருவரும் மிக உதார மனப்போக்குள்ளவர்கள்; ஆனால் மொத்தத்தில் அவர்களுக்கு தூர திருஷ்டியோ கற்பனை யழுத்தமோ கிடையாது. அக்காலத்து ஒரு டிமோக்ராட் ஜனாதிபதி, க்ளீவ்லண்ட், வணங்கா தைரியமும், சீல பலமும், பொது நலனுக்கான சீரமைப்புத் திட்டமும் கொண்டவர். அவர் ஃபெடரல் இலாகாக்களை சீர்திருத்தினார், கார்ப்பொரேஷன்களின் வசத்திலிருந்து ஏராளமான பொது நிலங்களை மறுபடி பெற்றார், பென்ஷன் கொள்கையையும் இதர விசேஷச் சட்டங்களையும் எதிர்த்தார், அதிகார வர்க்கத்திற்கு ஊக்கமளித்தார். காங்கிரஸின் எதிர்ப்பையும் சமாளித்து டாரிஃப் விகிதத்தைக் குறைத்ததோடு வருமான வரிச் சட்டமொன்றும் அத்துடன் இணைத்தார்—ஆனால் அச்சட்டத்தை சுப்ரீம் கோர்ட்டு வெகுதூரிதமாக ரத்து செய்துவிட்டது. ஆனால் க்ளீவ்லண்டின் பதவிக் காலம் தொடர்ந்திருக்கவில்லை; அது இன்னல் மயமாகவும் இருந்தது. பெரிய தொழில்-பிரதான ஸ்டேட்டுகளிலும் சிறிதளவு வாஷிங்க்டனிலும் ப்ளாட் (நியூயார்க்), கே (பென்ஸில்வேனியா), ஹான்னா (ஒஹியோ) (Platt, Quay, Hanna) போன்றவர் கையில் லகான் இருந்தது; ராஜதந்திர அறிவோ வேறு திறமையோ தம்மிடம் இருப்பதாக அவர்கள் சொல்விக் கொள்ளவில்லை; கார்ப்பொரேஷன் முதலாளிகளாகிய அவர்களுடைய எஜமானர்களின் கட்டளைகளை நிறைவேற்றுதல், அச்செயல்களில் உதவிபுரிந்த அரசியல் அங்கத்தினர் அல்லது அதிகாரிகளுக்கு வெகுமதி அளித்தல், அதுதான் அவர்கள் கற்றவித்தை. காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோர் கற்பனைத் திறமை விசேஷமாக இல்லாமல் கட்சிக்காகப் பணியாற்று

பவர்கள்; அவர்கள் வானளாவப் பேசி ''காங்கிரஸ் குறிப்பு'' களை நிரப்பினர்கள்; அக்காலத்தில் பெருமையளித்த ஆடைகள் அணிந்து பல பிரசங்க மேடைகளை அலங்கரித்தார்கள்; ஆனல் அவர்கள் மூலம் உருவான ஒரு சட்டமாவது நாட்டின் சரித்திரத்தைச் சிறிதாவது மாற்றியதா என்பது சந்தேகந்தான்.

லீவர், ப்ரையன் ஆகியோரின் தலைமையில் வளர்ந்த விவசாயப் பிரதேச சக்திகள் இரு கட்சிகளின் பழம் போக்காளர்களை உண்மையாகவே பயமுறுத்தின; பல ராஜ்யங்களில் வரவிருக்கும் கலவரத்தின் அறிகுறிகள் சீர்திருத்தங்களின் அதி அவசியத்தைக் காட்டின. அப்பொழுது ஸ்பானியப் போர் கிளம்பியதால் சீர்திருத்தப் பேச்சு தற்காலிகமாக மறக்கப்பட்டது. 1900-ன் தேர்தல் போர் சாம்ராஜ்யம் என்னும் கற்பனைப் பிரச்னையைப் பிரசார விஷயமாகக் கொண்டதால் சுவரின் மேல் பூனையாக இருந்த மாக்கின்லி மறுபடி ஜனதிபதியானர்; ப்ரையன் இரண்டாம் முறையாக நிராகரிக்கப்பட்டான். ஐசுவரிய நிலையும் பொங்கிக் கொண்டிருந்ததால், ''இப்பொழுது இருக்கும் நிலைதான் சௌகரியமாக இருக்கிறதே, அதைப் போய் வீணாக மாற்றுவானேன்'' என்ற மனப்பான்மை நீடித்திருக்கும் போல் தோன்றிற்று.

அச்சமயத்தில், 1901, செம்டம்பர் 6-ஆம் தேதி, ஒரு ரசியல் துரோகி மாக்கின்லியை சுட்டுக் கொன்றான்; அதைத் தொடர்ந்து அமெரிக்க அரசியல் நோக்கம் முற்றிலும் மாறிற்று. எதிர்பாராத நிலையில் இளம் தியோடர் ரூஸ்வெல்ட் ஜனதிபதியானர்; விசேஷமாக ஊக்குவிக்கும் தன்மையும், ஆற்றலும் முள்ள ஒரு தலைவர் நாட்டுக்குக் கிடைத்தார்; அதே போல முன்னேக்கமுள்ள இயக்கம் தேசிய முக்கியத்துவமுள்ள ஒரு தலைவரைப் பெற்றது. ரூஸ்வெல்ட் செல்வர் குடும்பத்தில் பிறந்து, கிழக்கே செல்வர்களுடன் பழகி, ஹார்வார்ட் சர்வகலாசாலையில் கல்வி கற்றார்; அப்படியிருந்தும் சமமான குடிநலத்தில் முற்றிலும் பிரியமுள்ளவர், சீர்திருத்தத்தில் தீவிர விருப்பமுள்ளவர். அதே சமயத்தில், அவர் யதார்த்த நிலையை அறிந்தவர், கானலைப் பிடிக்க ஓடுபவர் அல்ல, விறுவிறுப்புள்ள தேசியவாதி, ரிபப்லிகள் கட்சியில் நம்பிக்கையுள்ளவர். ஜெஃபெர்சனுக்கு அடுத்தபடியாக அவர் அமெரிக்க ஜனதிபதிகளுக்குள் வியாபகமான அறிவு பெற்றவர்; ஆனல் ஜெஃபெர்சனின் ஆழமோ, சூக்ஷ்மமோ, வேதாந்தமோ, தூரதிருஷ்டியோ அற்றவர். அவர் மாட்டுப் பண்ணை நடத்தியவர், பெரிய காட்டு மிருகங்களை வேட்டையாடியவர், பல நூல்கள் எழுதியவர், நியூயார்க் ஸ்டேட் சபையிலும் நியூயார்க் நகர போலீஸ் நிலையத்திலும், ஃபெடரல் அதிகார வர்க்க நிர்வாகத்திலும் அனுபவம் பெற்றவர், கடற் படையை நடத்தியவர், க்யூபாவில்(Cuba) போர் புரிந்தவர், முதல்தரமான கவர்னர் என்று பெயர்பெற்ற

வர்; பல துறைப் புஸ்தகங்கள் படிப்பவர், எல்லோரிடமும் அக்கறை காட்டுபவர், எல்லா விஷயங்களைப் பற்றியும் அபிப்பிராயம் கூறக் கூடியவர். இயற்கையாகவே அவர் சொல் தொடர் செல்வர், அவருடைய கற்பனைகளை மறப்பது கஷ்டம்; அவருடைய உண்மையான சிரத்தை, உழைப்பு, அலங்கார குணம், இவை அவருடைய உபதேசங்களுக்கு இணையற்ற சக்தியளித்தன. ஆண்ட்ரூ ஜாக்ஸனைப் போல இவருக்கும் சாதாரண மனிதனின் நம்பிக்கையைப் பெறும் அபூர்வ சக்தியுண்டு; அவருடைய சாதாரணச் செயல்களும் தனிச் சிறப்புடன் விளங்கின. மேலும் ஜாக்ஸனைப் போலவே அவரும் காங்கிரஸைக் காட்டிலும்ஜனதிபதியே மக்களுடன் அதிகத் தொடர்பு கொண்டிருப்பதாகவும், காரியம் நடக்க வேண்டுமானல், ஜாக்ஸனுக்கு மாறுக, அவர் சிவில் நிர்வாகத்தில் நிபுணர்கள் இருக்கத்தான் வேண்டுமென்றும் நினைத்தார்.

ஒரு வருஷத்தில் ரூஸ்வெல்ட் அமெரிக்க வாழ்க்கையை பாதிக்கும் மாறுதல்களைப் புரிந்து கொண்டு அவற்றைக் கண்யமான முறையில் சமாளிக்கத் தயாரானர். அவர் தீவிரவாதியல்ல; அவர் அறிவு ஒளி படைத்த பழைமை உபாசகர். அவர் பொருளாதார நிலையில் புரட்சியுண்டாக்க விரும்பவில்லை; அதனுள் புகுந்த கனிகளைப் பிடுங்க விரும்பினர். வர்த்தகத்தைக் காட்டிலும் அரசாங்கம் உயர்ந்தது என்று நிரூபிக்கவும், சாதாரண மனிதனுடன் நியாயமாக நடந்து கொள்ளவும் அவர் தீர்மானித்தார்.

ஜனக்கட்சி இயக்கம் பொது மக்களின் உணர்ச்சிகளுக்கு உருவளித்திருந்தது; ராஜ்யங்களிலும் நகரங்களிலும் முன்னேக்கமான கருத்துகள் பரவிக்கொண்டே இருந்தன; ''குப்பை கிளறும்'' எழுத்தாளர்கள் லஞ்ச ஊழல்களை விவரமாக வர்ணித்துப் புத்தகங்களும், பத்திரிகைக் கட்டுரைகளும் வெகு துணிச்சலுடன் எழுதினர்கள்; வியாபாரத்தில் காணும் துர்ப்பழக்கங்கள், சமுதாயக்கேடுகள், சிறுபான்மையோரைத் தாழ்த்துதல், முதலான —அமெரிக்க வாழ்க்கைக்கு சத்துருவான பல தீமைகளையும் அவர்கள் வர்ணித்தார்கள். குப்பை கிளறுபவர்கள் சீர்திருத்தத்திற்கான ஒரு கருவியாக உதவுவது ஒரு விஷயம்; அந்த வர்ணனைகளில் மக்களுக்கு இருந்த அபாரப் பிரியம் மக்களின் மனம் சீர்திருத்தத்திற்கு அனுகூலமாக இருப்பதைக் காட்டிற்று என்பது இன்னெரு முக்கியமான விஷயம்.

''தொழில் முயற்சியில் அதிக அபிவிருத்தி ஏற்பட்டால் அரசாங்கத்தின் மேல் பார்வையும் அதிகரிக்க வேண்டும்'' என்றார் ரூஸ்வெல்ட். ட்ரஸ்ட் எதிர்ப்புச் சட்டத்தை முடுக்கியது ''அதிகமான மேல் பார்வைக்கு'' ஒரு உதாரணம். முன்னே கூறிய ட்ரஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகளையும், கார்ப்பொரேஷன்களைக் கவனிக்கும் போலீஸ்காரனைப் போன்ற இலாக்கா

வையும் பார்த்த பெரிய முதலாளிகள் இனி சர்க்காரிடம் மரியாதையாய் நடந்து அதன் நல்லபிப்பிராயத்தைப் பெறுவதே நல்லது என்று அறிந்தனர்.

ரூஸ்வெல்டின் ''பெரிய தடி'' ட்ரஸ்டுகளின் முதுகில் மாத்திரம் விழவில்லை. ரெயில்வேக் கம்பெனிகள் சர்க்காரின் மேல் பார்வையில் வந்தது ரூஸ்வெல்ட் நிர்வாகத்தின் முக்கிய மான சாதனைகளில் ஒன்றாகும். விடாமல் உழைத்து அவர் எல்லா எதிர்ப்பையும் சமாளித்து இரண்டு பெரிய கட்டுப் பாட்டுச் சட்டங்கள் இயற்றுவித்தார். 1903-ன் ஒரு சட்டத் தின்படி: பிரசுரித்த கட்டண விகிதமே சட்டப்படி செல்லு படியாகும்; தள்ளுபடி அநீதியானால் ரெயில்வே கம்பெனிக் குக் கிடைக்கும் தண்டனை சரக்கு அனுப்புவோருக்கும் உண்டு. அச்சட்டத்தின் கீழ் ஷிகாகோவிலிருந்த பெரிய இறைச்சி தயா ரிப்பு சாலைகளும் ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியும் தண்டிக் கப்பட்டன. 1906-ல் வந்த ஒரு சட்டம் அதைவிட முக்கிய மானது: ராஜ்யங்களுக்கிடையே வர்த்தகத்தை ஒழுங்கு படுத்துவதற்கான கமிஷனுக்கு உண்மையாகவே அதிகாரம் கிடைத்தது; பண்டகசாலைகள், நித்திரை வசதி வண்டிகள், எக்ஸ்பிரஸ் கம்பெனிகள், எண்ணெய்க் குழாய்ப் பாதைகள் ஆகியவை கமிஷனின் அதிகார எல்லைக்குள் வந்தன; கப்பல் கம்பெனிகளோடும் நிலக்கரி கம்பெனிகளோடும் ரெயில்வேக் கம்பெனிகள் அமைத்துக் கொண்டிருந்த பரஸ்பர சலுகைகள் நீக்கப்பட்டன. ரூஸ்வெல்ட் நிர்வாகம் முடிவடைவதற்குள் தள்ளுபடி சம்பந்தமான அக்கிரமங்கள் அநேகமாக ஒழிந்தன; ரெயில்வேக் கட்டணப் பிரச்னை அநேகமாகத் தீர்ந்து போயிற்று.

தொழில் துறையில் ''பெரிய தடி'' சுவாரஸ்யமான முறையில் சுழற்றப்பட்டதோடு, மனிதர்களின் நோக்கத்தை உயர்த்தவும் அது உதவிற்று. ஜனாதிபதியின் தூண்டுதலின் பேரில் காங்கிரஸ் சில சட்டங்களை இயற்றிற்று: அரசாங்க ஊழியர்களுக்கு நஷ்ட ஈட்டுச் சட்டம்; கொலம்பியா ஜில்லா வுக்கான பால்யத் தொழிலாளர் சட்டதிட்டங்கள்; ரெயில் பாதைகளில் பத்திரத்திற்கான சட்டங்கள். அரசாங்கக்காரியா லயங்களில் தினம் எட்டு மணி வேலை என்னும் விதி மதிக்கப் படாமல் இருந்தது; ரூஸ்வெல்ட் அதைக் கட்டாயப்படுத்தி னார். 1920-ல் நடந்த நிலக்கரி வேலை நிறுத்தத்தில் ரூஸ் வெல்ட் கவனிக்கத்தக்க முறையில் தலையிட்டார். நீடித்த சச்சரவுக்குப் பிறகு, ''ஐக்கிய சுரங்க ஊழியர்கள்'' சில முக் கியமான சௌகர்யங்கள் பெற்றார்கள்; சுரங்க முதலாளிகள் அவற்றை அசட்டை செய்து முன் வழியே செல்ல முயன்ற போது, ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள்.

முதலாளிகள் பஞ்சாயத்தை ஒப்புக் கொள்ள மறுத்த போது நாடு பனிசாலம் முழுதும் கரியின்றித் தவிக்கும் என்று தோன்றிற்று. அத்தருவாயில் ரூஸ்வெல்ட் தலையிட்டு, முதலாளிகள் வழிக்கு வராவிட்டால், சுரங்கங்களை அரசாங் கம் ஏற்றுச் சிப்பாய்கள் மூலம் வேலை நடத்தும் என்று பயமுறுத்தினர். மிரட்டல் பலித்தது; சுரங்க ஊழியர்களுக்குச் சம்பளம் உயர்ந்ததோடு வேலை நேரமும் குறைந்தது.

இவற்றைக்காட்டிலும் அதிகமாகச் சாதாரண அமெரிக்கனை நீடித்துக் கவருவது உணவு, மருந்து ஆகியவற்றின் சுத்த நிலையைப் பற்றிய சட்டம் (1906). வருஷக்கணக்காக இறைச்சி யைப் பக்குவப்படுத்திடப்பாக்களில் அடைப்பவர்களும், இதர உணவுப் பொருள்களும் மருந்து வகைகளும் தயாரிப்பவர்களும் அயோக்கியத்தனமாகக் கலப்புப் பொருள்களை விற்று வந்தார் கள். காங்கிரஸ் தன் கடமை யறிந்து இறைச்சிச் சோதனைச் சட்டமும் சுத்த, உணவு, மருந்துச் சட்டமும் இயற்றியதில் துர்நடத்தைகளில் அதிக ஆபத்தானவை நீக்கப்பட்டன.

ரூஸ்வெல்டின் உள்நாட்டுச் சாதனைகளில் மிக மிக முக்கிய மானது இயற்கை வளங்களின் சேமிப்பைப் பற்றியது. பூமியின் சாரமும் வனவளமும் என்றும் அழியாதவை, ஊதாரித்தனமாக நாம் செலவு செய்து கொண்டே போகலாம் என்ற தவறான எண்ணம் நாட்டாரின் மனதில் வெகு நாட்களாக இருந்தது; நூற்றாண்டு முடிவுக்கு வரும்போது தான்—காடுகளில் முக்கால் பங்கு நீர்ந்து போயின, கனி வளத்தில் பெரும்பகுதி வீணாக் கப்பட்டு விட்டது, ஜல சக்தி தனிப்பட்டவர் லாபத்திற்காக உதவி வருகிறது, மழையிலும் தூசிப்புயலிலும் மண் வீணாகி வருகிறது என்னும் பயங்கரமான உண்மைகள் மக்களுக் குத் தெரிந்தன. ரூஸ்வெல்ட் மேற்கு நாட்டில் வசித்தவர், இயற்கை அழகை ரசிப்பவர், ஆகவே காடுகளைக் காப்பாற்று வதில் அவருக்கு அதிக ஆர்வம் இருந்தது. காங்கிரசுக்கு அவர் அளித்த முதல் செய்தியில் ''ஐக்கிய நாட்டின் உள் துறைப் பிரச்னைகளில் மிக முக்கியமானவை காட்டையும் தண்ணீரை யும் பற்றியவை எனலாம்'' என்றுரைத்து, பரந்த நோக்க முள்ள திட்டங்களைச் சிபாரிசு செய்தார். 1891-ன் காடுகளை ஒதுக்கி வைக்கும் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஒதுக்கி சுமார் 150 மிலியன் ஏக்கரைக் காட்டு ரிஸர்வ் என்று ஒதுக்கி வைத்ததோடு, அலாஸ்காவிலும் வடமேற்குப் பிரதேசத்திலும் இன்னொரு 85 மிலியன் ஏக்கர் நிலத்தில், அதன் கனிவளமும் வனவளமும் ஆராயப்படும்வரை, எவரும் புகக்கூடாது என்றும் உத்தரவிட்டார். அவர் நியமித்தக் காட்டுப் பாதுகாப்பு அதி காரி சுறுசுறுப்பும் பரந்த அறிவும் உள்ளவர். 1902-ன் நில மீட்புச் சட்டத்தின் கீழ்ப் பெரிய நீர்ப்பாசன வேலைகள் செய் யப்பட்டன—அரிஸோனாவில் ரூஸ்வெல்ட் அணைக்கட்டு,

இடாஹோவில் ஆரோ ராக் (Arrowrock) அணைக்கட்டு, ரியோ கிராண்டி நதியில் எலெஃபென்ட் ப்யூட் (Butte) அணைக்கட்டு; இவற்றின் செலவும் மேல் பார்வையும் சமஷ்டி அரசாங்கத்தைச் சேர்ந்தவை. இதெல்லாம் ஒரு ஆரம்பந்தான்; ஆனால் முன் மாதிரியாகச் செய்து காட்டி, பொதுமக்களின் ஆவலையும் தூண்டிவிட்டதால், பிற்காலத்துப் பெரிய காரியங்கள் சுலபமாயின.

1908-க்குள் ரூஸ்வெல்ட் இரண்டு தடவைகள் பதவி வகித்தாகி விட்டது. முதல் முறை மாக்கின்லி விட்டுச்சென்ற ஸ்தானத்திலும், இரண்டாம் முறை சொந்தத் தேர்தலிலும் அவர் கியாதி உச்சநிலையில் இருந்தது; விரும்பினால் அவர் மூன்றும் முறையும் தலைமை வகித்திருக்கலாம். ஆனால் மூன்று முறை ஒருவரே இருக்கக்கூடாது என்ற, எழுத்தில் பதியப்படாத, சம்பிரதாயத்தை சோதனைக்குள்ளாக்க அவர் விரும்பவில்லை; அதற்கெதிராக, தம் கொள்கைகளைக்கொண்டு செலுத்தக்கூடிய அடுத்த ஆள் யார் என்று அவர் யோசித்து வில்லியம் ஹொவேர்ட் டாஃப்ட் (William Howard Taft) என்பவரைத் தேர்ந்தெடுத்தார். டாஃப்ட் நல்ல வித்துவான், திறமைசாலி. ரிபப்லிகன் அபேட்சகர்; தேர்தல்-குழு அப்பெயரை ஒப்புக்கொண்டது; விறுவிறுப்பற்ற ஒரு போட்டியில் ப்ரையன் தோற்றார், டாஃப்ட் ஜெயித்தார்.

டாஃப்ட் சர்க்கிட் கோர்ட்டு நீதிபதியாகவும், ஃபிலிப்பீன் தீவுகளின் கவர்னர்-ஜெனரலாகவும், யுத்தக் காரியதரிசியாகவும் பணியாற்றி அனுபவம் பெற்றவர். அந்த நிர்வாகப் பதவிகள் எல்லாவற்றிலும் அவர் நல்ல பெயர் வாங்கினார் என்றாலும், விசேஷ அரசியல் புத்தியோ அல்லது சக்திவாய்ந்த உதார சிந்தனையோ இருப்பதாக அவர் காட்டிக்கொள்ளவில்லை. ரூஸ்வெல்டின் திட்டங்களைத் தொடர்ந்து நடத்த அவர் உண்மையான ஆவல் கொண்டிருந்தார்; அவருடைய சாதனைகளை அலட்சியம் செய்வதற்கில்லை. ட்ரஸ்டுகளின்மேல் குற்றம் சாட்டி விசாரித்தல் தீவிரப்பட்டது; ராஜ்யாந்தர வியாபாரக் கமிஷன் வலுவாக்கப்பட்டது; தபாலாபீசுகளில் சேமிப்பு பாங்குகளும் பார்சல் முறையும் துவக்கப்பட்டன; சிவில் அதிகார வர்க்கத்தில் திறமை சீர்தூக்கும் முறை விஸ்தரிக்கப்பட்டது; சமஷ்டி நிர்ணயச் சட்டத்தில் இரண்டு திருத்தங்கள் புகுத்தப்பட்டன—1. ஸெனெடர் ஸ்தானத்திற்கு நேர்முறைத் தேர்தல், 2. வருமான வரியை அனுமதித்தல். இந்த முன்னேக்கமான சாதனைகளுக்கு எதிரிடையாக அவருடைய சில கொள்கைகளும் சைகைகளும் முற்றிலும் பழைய போக்கானவை. முக்கியமான உதாரணங்களாவன—இறக்குமதி சுங்க விகிதங்களை உதார மனப்பான்மைக்கு மிகவும் அருவருப்புண்டாகும் அளவுக்கு அவர் உயர்த்தினார்; காட்டு இலாகாவின் தலைவராக ரூஸ்வெல்டால் நியமிக்கப்பட்ட நல்ல அதிகாரியை அவர் நீக்கினார்; அரிஸோனாவை யூனியனில் சேர்த்துக் கொள்ள மறுத்தார்—மக்களின் கோரிக்கை மிகப்பலமாக இருந்தால் நீதிபதிகளைப் பதவியிலிருந்து விலக்கலாம் என்று அந்த ராஜ்யத்தின் நிர்ணயச் சட்டம் அனுமதித்ததே மறுப்புக்குக் காரணம்; பழம் போக்கிலும் பிற்போக்கானவர்களின் ஆதரவை அவர் மேலும் மேலும் நாடினார்.

1910-க்குள் டாஃப்ட் தம் கட்சியில் அகலமான பிளவு உண்டாக்கிவிட்டார்; அங்கத்தினர்கள் கட்சிமாறியதால் காங்கிரஸ் டிமாக்கிராட்டுகளின் வசம் வந்துவிட்டது. தன்பின் வந்தவரை அவருடைய வழிக்கே விட்டு வைக்கும் நல்லெண்ணத்துடன் ரூஸ்வெல்ட் தமக்குப் பிரியமான சிங்க வேட்டையாட ஆஃப்ரிக்கா போய்விட்டார். அவருடைய கட்சி ஆட்கள் அவர் திரும்பி வந்து நாட்டைக் காப்பாற்றினால் நல்லது என்று கோரி,

> டெட்டி ரூஸ்வெல்ட், ஓடிவா!
> மேய்ச்சல் தரையில் ஆட்டை நடத்த,
> சோளக் கொல்லையில் மாட்டைத் தடுக்க,
> நாட்டைத்தேடி ஓடிவா.
> ஆட்டை மேய்க்கும் டாஃப்டுப் பையன்
> குறட்டை விட்டுத் தூங்குறான்

என்னும் பாலர் பாட்டைப் பிரசாரப் படுத்தினார்கள்.

ஐரோப்பாவில் திக் விஜயம் செய்துவிட்டு ரூஸ்வெல்ட் நாடு திரும்பினார்; லா ஃபாலெட் போன்ற உதார ரிபப்லிகன்கள் கோபாவேசத்துடன் நடந்ததையெல்லாம் சொன்னார்கள்; அவரும் கவனமாய்க் கேட்டார். ஆனால் அவர் எச்செயலுக்கும் தயாராகவில்லை. ஆனால் 1911-ல் லா ஃபாலெட் தேர்தல் நடவடிக்கைக்குத் தயாரானான். ஜன ஆதரவு பலமாக இருப்பதைக் கண்டு ரூஸ்வெல்ட் சுறுசுறுப்படைந்து 1912-ன் ஆரம்பத்தில் தானும் மல் யுத்தத்திற்குத் தயார் என்று அறிவித்தார். ரூஸ்வெல்ட், டாஃப்ட் இருவரும் ஆவேசத்துடன் போட்டியிட்டனர்; ரூஸ்வெல்டுக்கு மக்களின் ஆதரவு முற்றிலும் கிடைத்தது; டாஃப்ட் பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றார். விகாகோவில் நடந்த தேர்தல் குழுக் கூட்டத்தில் கட்சியந்திரம் டாஃப்டின் பெயரைக் குறிப்பிட்டது. "இதென்ன பகல் கொள்ளை!" என்று கூவிய ரூஸ்வெல்ட் ஒரு கட்சியிலும் சேராமல் போராடிப் பார்ப்பதாக சவால் விட்டார். சில வாரங்கள் கழித்து, அவரைப் பின்பற்றியவர்களுள் உன்மத்தம் பிடித்த 20,000 பேர் விகாகோவில் கூட்டம் போட்டு "முன்னேக்கக் கட்சி"யை நிறுவி, தம் ஆருயிர்த் தலைவரை அபேட்சகராகக் குறிப்பிட்டார்கள்.

டிமோக்கிராட்டுகள் இதையெல்லாம் கட்டறியாத உற்சாகத்துடன் கவனித்து வந்தார்கள். பல ஆண்டுகளாக ப்ரையனுடன் சேர்ந்து அரசியல் வனவாசம் செய்த அவர்களுக்கு "வாக்களிக்கப்பட்ட பூமி" இலேசாகத் தென்பட ஆரம்பித்தது. தலைமைப் பதவிக்குப் பெயர் குறிப்பிடுதல் உக்ரமாக நடைபெற்றது. பழம் போர்வீரனும் சபாநாயகனுமாகிய (ஸ்பீக்கர்) சாம்ப் க்ளார்க்கை நியமித்தார்கள்; உதாரக் கட்சி நியூ ஜெர்ஸியின் கவர்னரான வுட்ரோ வில்ஸன் என்னும் புதிய மனிதனைப் பாராட்டிக் குறிப்பிட்டனர். கடைசியில் ப்ரையனின் தியாக நடத்தைதான் சிதறிச் சிக்கலாக இருந்த நிலையில் வில்ஸனுக்கு அதிக ஆதரவளித்தது; ஜனாதிபதி பதவிக்காகப் பலமுறை முயன்று ஏமாற்றமடைந்த ப்ரையன், தன் அரசியல் வாழ்வில் மிக மென்மையாக இருந்த அந்த சமயத்தில், வில்ஸனின் பெயரைத் தானும் குறிப்பிட்டு ஆதரவளித்தான்.

அத்தியாயம்-18

அகில உலக சக்தியாக உயர்தல்

விரியும் அடிவானத்தில் தெரியும் புதிய சக்திகள்: சிவில் போருக்குப் பிறகு ஒரு தலைமுறை காலத்து அமெரிக்கச் சரித்திர நிகழ்ச்சிகளை ஆராய்ந்தால், சுவை மிகுந்ததும், அதிர்ச்சியளிப்பதுமானவற்றின் ஒரு வெள்ளப் பெருக்கையே காண்கிறோம்; புனரமைப்பு, விவசாயச்சங்கங்கள், கொள்ளைப் பங்கு முறையின் வீழ்ச்சி, டாரிஃப் யுத்தங்கள், ஜனக்கட்சிக் கிளர்ச்சி, முன்னேக்கத்தின் எழுச்சி—தொழில் துறை சரித்திரத்திலும் பல சம்பவங்கள் நிறைந்திருக்கின்றன—பெரிய ரயில் பாதை யமைப்பு, ட்ரஸ்டுகளின் வளர்ச்சி, புது பெரிய தொழில்களின் ஜனனம், பெருந்தலைவர்களான ராக்ஃபெல்லர், கார்னெகி, மார்கன், ஹில் ஆகியோர் சாதித்த காரியங்கள் இவற்றுடன் ஒப்பிட்டால் அயல்நாட்டுச் செய்திகள் சில துறை விஷயங்களாகத் தோன்றுகின்றன. 1867-ல் அமெரிக்காவின் கண்டிப்பால் ஃபிரெஞ்சுக்காரர் மெக்ஸிகோவிலிருந்து விலகியது முதல், 1898-ல் ஹவானாவுக்கப்பால் 'மேய்ன்' என்னும் கப்பல் மூழ்கடிக்கப்பட்டவரை இரண்டு மூன்று நிகழ்ச்சிகளே

குறிப்பிடத்தக்கவை. கிணற்றுத் தவளை போன்ற ஒரு காங்கிரஸ்காரன் "அயல் நாடுகளைப்பற்றி நமக்கென்ன கவலை?" என்று சொன்னதாகக் கேள்வி.

உண்மையில் அது மிக முக்கியமான விஷயம்; அமெரிக்கரை நேரடியாகப் பாதிக்கும்சில போக்குகள் தயைதாட்சண்யமின்றி உருவாகிக்கொண்டிருந்தன. ஐக்கிய நாடு உலக வல்லரசுகளின் இடையே ஒரு ஸ்தானம் பெற்று வந்தது; நாளுக்கு நாள் ஒன்றையொன்று அதிகம் சாரும் பல நாடுகள் அடங்கிய கூட்டுக் குடும்பத்தில் அமைதி, ஒழுங்கு, ஐசுவரியம் எல்லாம் நிலவியிருப்பதில் அமெரிக்காவுக்கும் அதிக அக்கறையுண்டு; பிற நாடுகளின் வாழ்வு அமெரிக்கரை அதிகச் செழுமையுடன் வாழ்விக்கும்; பிறருடைய அழிவு அமெரிக்காவையும் பாதிக்கும். மேற்கூறிய பரஸ்பர உறவில் பிரிட்டனுடனே உண்டான இணைப்பு விசேஷமானது. மன்ரோ கொள்கை, வியாபார விஸ்தாரம், 1899-க்குப் பிறகு கிழக்குத் தேசங்களில் 'திறந்த வாசல்' கொள்கை-இவற்றின் காரணமாகச் சமுத்திரங்கள் சுதந்திரப் பற்றுதலுள்ள நாட்டாரின் வசம் இருக்க வேண்டுமென்பது அவசியமாயிற்று; மேலும், அமெரிக்கச் சரக்குகள் பிரிட்டனில் அதிகம் விற்றதாலும், இரு நாடுகளுக்கும் குடிநல ஆட்சியை வளர்ப்பதில் சிரத்தை இருந்ததாலும், ஐக்கிய நாடு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை மேலும் மேலும் நெருங்கி வந்தது. அதே சமயத்தில், தென் அமெரிக்க ராஜ்யங்கள் க்ஷேமமாய் விருத்தியடைய வேண்டுமென்பதும் ஐக்கிய நாட்டின் நோக்கம். கச்சாப் பொருள்களும் ஆக்கப்பட்ட பொருள்களும் விற்பனைக்காக ஏங்குவதால் வெளிநாட்டு விற்பனைக் கேந்திரங்களை விருத்தி செய்வதில் அது அதிக அக்கறை காட்டிற்று. வியாபாரக் காரணங்கள், ராஜதந்திரக் காரணங்கள், லட்சிய மனப்பான்மை, ஆற்றலளித்தப் பெருமிதம், இக்காரணங்களால் அது வெளிநாட்டு உறவுகளைத் தளதள வென்று பெருக்க முயன்றது.

ஸ்பானிய அமெரிக்கப் போருக்குப் பல ஆண்டுகள் முன்பே தானும் உலக வல்லரசுகளில் ஒன்று என்று உணர்ந்து ஐக்கிய நாடு அதற்குத்தக்கபடி நடந்துகொள்ள ஆரம்பித்தது. ஆர்தர், க்ளீவ்லெண்ட் ஆகிய ஜனாதிபதிகளின் தலைமையில் அது வலுவுள்ள புது ரகக் கப்பற்படை அமைக்கத் துவங்கிற்று. 1890-க்குள் அந்த "வெள்ளைக் கப்பல் விழுங்கம்" அமெரிக்கருக்கு உள்ளக் கிளர்ச்சி உண்டாக்கிற்று. 1880-ல் ஐக்கிய நாட்டின் மொத்த ஏற்றுமதியின் மதிப்பு 835 மிலியன் டாலருக்கும் அதிகமாகவும், 20 வருஷங்களுக்குப் பின்னர் ஏறக்குறைய 1,400 மிலியன் டாலராகவும் இருந்தது. அயல் நாட்டு விஷயங்களில் தீவிரமான சிரத்தை கொள்ளாமல் ஒரு நாடும் இவ்வளவு சரக்குகளைக் கப்பலேற்றியனுப்ப முடியாது. சிவில்

போருக்குப் பிறகு கொஞ்சகாலம் வரை விஸ்தரிப்புக்கான ஆவல் அநேகமாய் மறைந்திருந்தது. 1867-ல் அலாஸ்காவை விலைக்கு வாங்கியபிறகு பெரும்பாலான அமெரிக்கர் இத்தனைப் பிரதேசம் அமெரிக்கக் கொடியின் கீழ் வந்தது போதும் என்று நினைத்தார்கள்; ஹெய்டி (Haiti) தீவில் ஸான்டோ டாமிங்கோ (Santo Domingo) வை ஐக்கிய நாட்டுடன் சேர்த்துக் கொள்ள கிராண்ட் முயன்றபோது ஸெனெட் அதிக எதிர்ப்புடன் தோல்வியளித்தது. ஆனால் சிறுகச் சிறுக அந்த ஆவல் வளர்ந்தது. ஸமோவா (Samoa) தீவுக்கூட்டத்தை ஜெர்மனி, பேராசையுடன் கவ்வப் பார்த்தபோது, பிரிட்டனின் உரிமையை ஐக்கிய நாடு திடமாய் ஆதரித்தது. மூன்று அரசுகள் அடங்கிய ஒரு சம்ரக்ஷணைக் குழு நிறுவப்பட்டது; நூற்றாண்டின் இறுதியில் பங்கு போடப்பட்டபோது, மிகப் பெரிய இரண்டு தீவுகள் தவிர பாக்கி எல்லாவற்றையும் ஐக்கிய நாடு எடுத்துக் கொண்டது; வெகு நாட்களாக அது விரும்பிய பாகோ பாகோ (Pago Pago) துறைமுகம் அதற்குக் கிடைத்தது. (அமெரிக்கக் கப்பற்படையின் ஒரு பகுதியின் தலைமைக்காரியாலயம் அங்கிருக்கிறது; ஸமோவாத் தீவுகள் நியூஸீலண்டுக்கு சுமார் வடக்கே, தென் பஸிஃபிக் சமுத்திரத்தில் இருக்கின்றன). வட பஸிஃபிக் சமுத்திரத்திலுள்ள ஹவாய்த் தீவுகளில் கரும்புத் தொழில் அமெரிக்கர் வசம் இருந்தது; 1887-ல் இணையற்ற 'பெர்ல்' (Pearl) துறைமுகத்தை ஒரு கடற்படை நிலையமாக உபயோகிக்கும் முழு உரிமையை ஐக்கிய நாடு பெற்றது. ஆறு வருடங்களுக்குப் பிறகு அத்தீவுகளைத் தமதாக்கிக்கொள்ள அமெரிக்கா செய்த முயற்சி அநேகமாய்ப் பலித்தது எனலாம்; அந்த சமயத்தில் க்ளீவ்லண்டு மறுபடி தலைவரானதும், அவ்விஷயத்தில் அனுசரிக்கப்பட்ட முறைகள் தவறுனவை என்பதை உணர்ந்து அவர் அதை நிறுத்தினார்; ஆனால் அதற்குப் பிறகு அத்தீவுகளை அங்கு வசித்த அமெரிக்கர் பரிபாலித்தார்கள்; 1898-ல் அவை அமெரிக்கக் கொடியின் கீழ் வந்தன. இதற்கிடையே, 1889-ல் ஐக்கிய நாடு வாஷிங்டனில் முதல் அகில-அமெரிக்க-மகாநாடு கூட்டித் தென் அமெரிக்க மத்திய அமெரிக்க ராஜ்யங்களில் சுமார் இருபதிலிருந்து பிரதிநிதிகள் வரவழைத்திருந்தது. அமெரிக்கச் செல்வாக்கு வெளியே மேலும் மேலும் அதிக தூரத்திற்குப் பரவிக்கொண்டிருந்தது.

சிவில் போர் கழிந்த பின்—முப்பது வருஷங்களில்—ஐக்கிய நாட்டின் வெளிநாட்டுச் சச்சரவுகள் பெரும்பாலும் இன்னும் ஒரே ஒரு வல்லரசான பிரிட்டனோடு சம்பந்தப்பட்டவை. அவற்றுள் சில மிகவும் கவலையளிப்பவை. ஆனால் அவையெல்லாம் பஞ்சாயத்து மூலம் அல்லது நீதி விசாரணை மூலம் தீர்க்கப்பட்டதும் அதன் பிறகு ஆங்கில-அமெரிக்க உறவு முன்னிலும்

சிறப்படைந்ததும் விசேஷமாக கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள்.

நிதேக பாவத்துடன் தீர்க்கப்பட்ட சச்சரவுகளின் ஜாப்தா மறக்க முடியாதது. உள்நாட்டுக் கலகத்தின்போது வட ராஜ்யத்தார் பிரிட்டனைச் சத்துருவாகக் கருதினார்கள்; பெரும்பாலும் அந்த எண்ணம் ஆதாரமற்றது. கான்ஃபெடெரேட் கட்சியின் யுத்த மனப்பான்மையைப் பிரிட்டிஷார் சரியாகப் புரிந்து கொண்டார்கள்; பிரிட்டிஷ் கடற்படையின் கொள்கை மொத்தத்தில் வடபகுதிக்குத்தான் அதிக அனுகூலமாக இருந்தது. போரால் அதிக நஷ்டமும் கஷ்டமும் அனுபவித்த பருத்தி நெசவு ஜில்லாக்களான லங்காஷையரில்கூட பிரிட்டிஷ் பொது மக்கள் லிங்கனின் கொள்கைகளை ஆதரித்தார்கள். ஆனால் ஆங்கில 'டோரி' கட்சியாரின் விரோதமும், கான்ஃபெடெரேட் கட்சியின் வசமிருந்த பிரிட்டிஷ் கப்பல்கள் அளித்த பெரும் நாசமும் வட பகுதியாரின் மனத்தைக் குதறிக் கொண்டே இருந்தன. கொஞ்சகாலம் வரை வெறி பிடித்த சார்ல்ஸ் ஸம்னர் போன்ற தலைவர்கள் மிகைப்படுத்தி ஈட்டுப் பணம் கேட்டபோது சண்டை வரும் போலிருந்தது. அதிர்ஷ்டவசமாக அமெரிக்க அயல் நாட்டுக் காரியதரிசிகளுள் மிகவும் ஞானவானுகிய ஹாமில்டன் ஃபிஷ் அக்காலத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். 'அலபாமா' வாலும் இதரக் கப்பல்களாலும் விளைவிக்கப்பட்ட நஷ்டங்களின் ஈடுத் தொகையை ஒரு பஞ்சாயத்தின் தீர்ப்புக்கு விடுவதற்கான திட்டமொன்று அவர் தலைமையில் தயாரிக்கப்பட்டது. தற்காலத்தின் முதல் பெரிய சர்வதேச விசாரணைச்சபை ஸ்விட்ஸர்லண்டில் ஜெனீவா நகரில் கூடிற்று; பதினைந்தரை மிலியன் டாலர் நியாயமான நஷ்ட ஈடு என்று அது தீர்மானித்து சச்சரவுக்கு முற்றுப்புள்ளி வைத்தது; மிதமான அந்தத் தொகையை பிரிட்டிஷ் அரசாங்கம் துரிதமாகச் செலுத்திற்று. அதே சந்தர்ப்பத்தில் ஐக்கிய நாட்டிற்கும் கானடாவுக்கு மிடையே இருந்த ஒரு சிறு எல்லைச்சண்டையும் பஞ்சாயத்தாரால் தீர்க்கப்பட்டது—வட மேற்குக் கரையோரத்தில் சில தீவுகளைப்பற்றியது அது. சில வருஷங்களுக்கு பிறகு வடக்கு அட்லான்டிக் சமுத்திரத்தில் மீன் பிடிக்கும் உரிமைகளைப்பற்றிய ஒரு சண்டையும் ஒரு கூட்டுக் கமிஷன் மூலம் தீர்மானிக்கப்பட்டது. 1899-வாக்கில் ஸீல் என்னும் நீர்ப் பிராணியைப்பற்றிக் கனடியர்களுடன் சச்சரவு ஏற்பட்டது; பேரிங் கடலில் அவர்களுக்குப் பங்குண்டா என்பது பிரச்னை. ஸ்டேட் இலாக்கா ஆணவத்துடன் அக்கடல் "திறந்த கடலல்ல" என்றும், அது அமெரிக்க அதிகார எல்லைக்குள் இருக்கிறதென்றும் சாதித்தது. பல தேசத்தார் கொண்ட குழுவின்முன் பிரச்னை சமர்ப்பிக்கப்பட்டதில், தீர்ப்பு பிரிட்டிஷாருக்கு அனுகூலமாக இருந்தது;

வெனிஸுலா எல்லைச்சண்டை சமரஸமாகத் தீர்ந்தவரலாறு மிகவும் குறிப்பிடத்தக்கது; 1895-ன் இறுதி நாட்களில் அது திடீரென்றும் ஆபத்துகரமாகவும் கிளம்பிற்று. டிசம்பர் 16-ஆம்தேதி இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமிடையேமனத் தாங்கலிருப்பதாக இருநாட்டிலும் யாரும் சொப்பனத்தில்கூட நினைக்கவில்லை எனலாம். டிசம்பர் 17-ஆம் தேதி, இரு நாட்டுப் பொதுமக்களும் இடி விழுந்தாற்போல் அதிர்ச்சி யடைந்தார்கள்—பிரிட்டனுடன் போர் உண்டாகக் கூடும் என்ற கருத்துப்பட ஒரு செய்தியை ஜனுதிபதி க்ளீவ்லண்ட் காங்கிரசுக்கு அனுப்பினர். அது எவ்வாறு சாத்தியம்? தென் அமெரிக்காவின் வட பகுதியில் பிரிட்டிஷ் கயானுவுக்கும் அதற்கு மேற்கேயுள்ள வெனிஸுலாவுக்கும் இடையே நிர்ணயிக்கப்படாத எல்லைப் பிரதேசம் இருந்தது. ஒரு தீர்மானத்திற்கு வரத் தன்னுலான உதவி செய்வதாக ஐக்கிய நாடு பலமுறை கூறிற்று. வெனிஸுலாக்காரர்கள் அதிகப் பேராசையுடன் உரிமை கொண்டாடினர்கள்; பிரிட்டிஷார் பிடிவாதமாக அரை நூற்றுண்டுக்கு முன் அளவெடுக்கப்பட்ட ஒரு எல்லைக் கோட்டுக்கு மேற்கேயானல் மாத்திரம் பஞ்சாயத்துக்கு ஒப்புக்கொள்ளுவதாகவும், கோர்ட்டுக்குக் கிழக்கே வெனிஸுலா கண்ணெடுத்துப் பார்க்கக் கூடாதென்றும் கூறினர். பலஹீனமான ஒரு நாட்டாரிடமிருந்து பிரிட்டிஷார் நிலம் பறிக்கப் பார்க்கிறார்கள் என்று பல அமெரிக்கர்கள் சந்தேகப்பட்டார்கள். கடைசியாக, 1895-ன் வேனிற்காலத்தில் வெளி நாட்டு இலாக்கா லண்டனுக்கு எழுதிய கரூரான கடிதத்தில் பிரிட்டன் மன்ரோ கொள்கையை மீறி நடப்பதாகக் குற்றம் சாட்டி, பஞ்சாயத்தைப்பற்றித் தீர்மானமான விடை கேட்டது. 'இன்று இக்கண்டத்தில் ஐக்கிய நாடுதான் அரச பதவியிலிருக்கிறது' என்று கூறிற்று அக்கடிதம், மிகத் தாமதமாக வந்த விடையில், தீர்மானமாக வேண்டியஇடத்திற்கும் மன்ரோ கொள்கைக்கும் சம்பந்தமில்லை யென்று கூறி, அமெரிக்கக் கடிதம் சரித்திர நிகழ்ச்சிகளுக்கு முரணுக இருப்பதை எடுத்துக்காட்டி, தாம் பஞ்சாயத்துக்குத் தயாரில்லை என்று பிரிட்டிஷார் கூறினர்கள். க்ளீவ்லண்டுக்குப் படுகோபம் வந்தது. உண்மையான எல்லையைக் கண்டுபிடிக்க ஒரு ஆராய்ச்சிக் கமிஷன் துரிதமாக வெனிஸுலாவுக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும், அதன் வேலை முடிந்த பிறகு வெனிஸுலாவுக்கு அளிக்கப்பட்ட இடத்தில் பிரிட்டிஷார் கால் வைத்தால் ஐக்கிய நாடு தன் முழுச் சக்தியுடன் அதை எதிர்க்க வேண்டும் என்றும் கோஷித்து அவர் காங்கிரசுக்கு உடனே ஒரு செய்தியனுப்பினர்.

சிறிது காலத்திற்கு எல்லாவித மான பேராபத்துக்களையும் ஜனங்கள் கற்பனை செய்து நடுங்கினர்கள்; அளவுகடந்த சுதேச பக்தியும், அளவு கடந்த பரதேசத் துவேஷமும் (Chauvinism) உள்ள பகுதியாருக்கு ஒரே கொண்டாட்டந்தான். இறுதியில் அந்நிகழ்ச்சி சுபமாக முடிவுபெற்றது. பிரிட்டிஷ் மக்களும் அரசாங்கமும் பாராட்டத்தக்க அடக்கத்துடன் நடந்து கொண்டார்கள்; அதோடு கூட, தற்செயலாக அந்நாட்களில் ஜெர்மன் கெய்ஸர் தென் ஆப்ரிக்க போயர் தலைவன் க்ரூகருக்கு அனுப்பிய (அரசியல்) தந்தி பிரிட்டிஷ் மக்களின் கவனத்தை வேறு திக்கில் இழுத்துச் சென்றது. நியூயார்க் 'வொர்ல்ட்' பத்திரிகை வழிகாட்ட, சக்தி வாய்ந்த அமெரிக்கப் பத்திரிகைகள் க்ளீவ்லண்டின் யோசனையற்ற செயலைக் கண்டித்தன. வியாபார ஸ்தாபனங்களும் மதஸ்தாபனங்களும் எதிர்த்துக் கிளம்பின, அறிவுத்தொழில் வர்க்கங்கள் வருத்தத்துடன் குறை கூறின. அட்லாண்டிக் சமுத்திரத்தின் இருபுறத்திலும் பெருங்கூட்டத்தார் யுத்தம் என்ற எண்ணமே கூடாது என்றார்கள். சிநேகமும் நம்பிக்கையும் காட்டும் கடிதங்கள் இருபுறத்திலிருந்தும் எழுதப்பட்டன. சுமார் 1300 பிரிட்டிஷ் எழுத்தாளர்கள் அமெரிக்க நட்பைக்கோரி 'மஹஸர்' அனுப்பினர்கள்; பார்லிமெண்ட் மெம்பர்களில் 350-க்கும்அதிகமானபேர் எல்லாச் சண்டைகளுக்கும் பஞ்சாயத்துத் தீர்ப்பே நல்லது என்று கூறினர். கடைசியில், 50 வருஷம் அல்லது அதற்கு அதிக காலம்ஒரேநாட்டாரிடமிருந்த ஸ்தலங்களை விலக்கிப் பார்க்கி இடங்களைப் பஞ்சாயத்துக்கு விடுவது என்று பிரிட்டனும் வெனிஸுலாவும் ஒப்புக்கொண்டன; ஐக்கிய நாடு மத்தியஸ்தனுக உதவிற்று. இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இருந்த சந்தேகமும் கசப்பும் நீங்கின; அந்நாடுகளின் பரஸ்பர மதிப்பு உயர்ந்தது; மேல் வாரியான அரசியல் பூசல்களுக்கடியில் இருநாடுகளுக்குமிடையே உள்ள சிநேகபந்தனங்கள் எவ்வளவு கெட்டியானவை என்பதும் தெளிவாயிற்று.

இதெல்லாம் நன்மைக்கே. ஐக்கிய நாட்டின் அயல் தேசக் கொள்கை புதிய, பலமுள்ள சக்திகளின் பிடியில் மேலும் மேலும் சிக்கியிருந்தது. ஒரு பெரிய அரங்கத்தில் அமெரிக்கா தன்திறமையைக் காட்ட வேண்டியிருந்தது; ஆங்கில—அமெரிக்கன் எதிர்ப்பு மறைந்து, ஆங்கில—அமெரிக்கன் ஒற்றுமை தோன்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஸ்பானிய அமெரிக்கப் போர்: பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசிப் புத்து வருஷங்களில் அநேகமாய் எல்லாப்பெரிய தேசங்களும் சாம்ராஜ்யக் கனவு கண்டன. ஆப்ரிக்காவைப் பங்கு போட்டுக்கொள்ளும் காரியம் முடிவடைந்து கொண்டிருந்தது; வல்லரசுகளின் நன்மைக்காக சைனு துண்டு துண்டாகப் பிய்க்கப்படும் போன்ற காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. பொருளாதார நிலை சாம்ராஜ்ய ஆசையின் ஒரு காரணம்; பெருகும் ஜனத்தொகையும், வளரும் தொழிற்சாலைகளும் புது

மார்க்கெட்டுகளை நாடின. சில அரசியல் காரணங்களும் இருந்தன; கடலுக்கப்பாலிருந்த ஆதிக்க நாடுகளில் தம் பலத்தை வளர்த்துக் கொள்ள நாடுகள் போட்டியிட்டன. சில காரணங்கள் கடற்படை சம்பந்தமானவை; கடற்படைத் தளங்கள் சங்கிலி கோத்தாற்போல் பல இருப்பது சௌகர்யமே. தர்மசம்பந்தமான காரணங்களும் இருந்தன—இருள் மூடிய இடங்களில் கிறிஸ்தவ வேதத்தின் ஒளியை எடுத்துச் செல்வது தம் கடமை என்று மதப்பிரசாரகர்கள் நினைத்தார்கள். பிற்போக்கான நாட்டாரை உயர்த்துவது வெள்ளையர்களின் தர்மசேவை என்று சீர்திருத்த வாதிகள் கருதினர்கள். ஒரு சிலருக்கு வெறும் பாவங்களே போதுமான தூண்டுகோலாயிருந்தன; மனவெழுச்சியுண்டாக்கும் பத்திரிகைகள் வெளிப்பிரதேசங்களில் நிகழக்கூடிய வீரச் செயல்களைச் சுவாரஸ்யமாகச் சித்தரித்தன. ஐக்கிய நாட்டில் 1893-ல் உண்டான அரசியல் கிலியும், சாம்ராஜ்ய ஆசையை எதிர்க்கும் க்ளீவ்லண்டு மறுபடி பதவியேற்பதும் மேற்கூறிய எண்ணங்களுக்கு முட்டுக் கட்டை போட்டன. நான்கு வருஷங்களில் தளர்ச்சியும் குறைந்து க்ளீவ்லண்டின் கீர்த்தியும் கரைய ஆரம்பிக்கவே, ஸாம்ராஜ்ய ஸ்தாபன ஆசை மறுபடி வளர்ந்தது. க்யூபாவில் ரத்த மயமான ஒரு கலகம் மூண்டதும் அந்த ஆசைத் தீயில் எண்ணெய் கொட்டியது போலாயிற்று.

க்யூபாவிலிருந்த ஸ்பானிய அரசாங்கம் லஞ்சத்திலும் குரூரத்திலும் தோய்ந்து, கொடுங்கோல் ஆட்சி நடத்திற்று. காலப் போக்கில் தீவின் வருமானத்தில் ஐந்தில் இரண்டு பங்குக்குக் குறையாமல் தாய் நாட்டுக்குக் கடத்தப்பட்டது; தீவின் விளைவுச் சக்திகள் குறைந்துகொண்டே போனதால் மக்கள் மேலும் மேலும் ஏழையானார்கள். உள்ளூர் வாசிகளுக்கு அரசாங்கத்தில் உத்தியோகமே இல்லை யெனலாம்; ஸ்பானிய அதிகாரிகள் அக்கிரமமான சம்பளங்கள் பெற்றதோடு ஒரு திட்டப்படி தொடர்ந்து கொள்ளையடித்துக் கொண்டுமிருந்தார்கள்; தொழில் உற்பத்தி மேலும் வியாபாரத்தின் மேலும் தாங்கவே முடியாது என்பதுபோன்ற வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. விவசாயமும் சுரங்கவேலையும் கூட அநியாயச் சுங்க வரிகளின் கீழ் அழுந்தித் தவித்தன; டாரிஃப் விதிதம் ஸ்பானியவர்த்தகர்களுக்கே தனி உரிமை அளித்ததால் அவர்கள் விரும்பிய விலைக்கு விற்றுச் சாதாரண மக்களைத் தரித்திர நிலையில் வைத்திருந்தார்கள். உயிர், சொத்து எதுவும் பத்திரமில்லை. கோர்ட்டின் உத்தரவு இல்லாமலே க்யூபாக்காரன் எவனையும் கைது செய்யலாம். அவன் தப்பியோட யத்தனித்தால் உடனே அவனைச் சுடலாம். நீதி ஸ்தலங்கள் அரசாங்கத்தின் கட்டளைக் கடங்கி நடந்தன. கோர்ட்டு வழக்கு என்பதற்கு அர்த்தம் பகல் கொள்ளை என்பது போலாயிற்று. பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு

போடப்பட்டிருந்தது. மதஸ்தாபனம் ஸ்பானியப் பூசாரிகள் கையில் சிக்கியிருந்ததால் லஞ்சம் வாங்குதல், திறமையின்மை, பாமரமக்கள்பால் அநுதாபமின்மை ஆகிய குறைகள் மலிந்திருந்தன. பிற்போக்கான அதிகார வர்க்கம் கல்வியை ஈனஸ்திதியில் வைத்திருந்ததால் எழுத்தறியாமை மிக சகஜமாக இருந்தது. தீவு வாசிகளின் செலவில் ஒரு பெரிய பட்டாளம் அங்கு நிறுத்தப்பட்டிருந்தது. கலகம் எக்கணமும் வெடித்துக் கிளம்பத் தயாராயிருந்தது. ஆகவே வியாபாரம் மிக மந்த நிலை அடைந்து, அதே சமயத்தில் அமெரிக்கா சர்க்கரை மேல் டாரிஃப் வரி விதிக்கவே, தவிக்கும் பொது மக்கள் கட்டுக் கடங்காமல் போயினர். ஜோஸே மார்டி என்னும் தேசபக்தன் 1895-ல் தன் கொடியை உயர்த்தினான்; உடனே நாடு முழுதும் தீ பரவிற்று.

க்ளீவ்லண்ட், மாக்கின்லி இருவரும் நடு நிலை வகிக்க மனப்பூர்வமாக விரும்பினாலும், க்யூபாவில் கலகம் நீடித்தால் அமெரிக்கா தலையிட்டே ஆகவேண்டும் என்பது தெளிவாயிற்று. ஐக்கிய நாட்டுக்கு அதிகப் பொருள் நஷ்டம் ஏற்பட்டு வந்தது; சுமார் 50 மிலியன் டாலர் அமெரிக்க மூலதனம் க்யூபாவில் போடப்பட்டிருந்தது; கலகத்திற்கு முன் சுமார் 100 மிலியன் டாலர் வருஷ வியாபாரம் அத்தீவுடன் அமெரிக்கா நடத்திற்று. ஸ்பெயினுடன் ஏற்பட்ட ராஜதந்திரத் தொந்தரவுகளும் உறுத்த ஆரம்பித்தன. க்யூபாக்காரர்கள் ஐக்கிய நாட்டை தளமாக உபயோகிக்கிறார்கள் என்று மாட்ரிட் (ஸ்பெய்ன்) அரசாங்கம் குறை கூறிற்று. ஆனால் அதைத் தவிர்ப்பது தான் கஷ்டம்; ஸ்பானியரின் தடுப்பு நடவடிக்கையும் பல மற்றிருந்தது. அந்நிலைக்கு ஒரு முக்கிய காரணம், க்யூபாவிலிருந்த அமெரிக்கர்களுக்கு சொத்து சுதந்திர நஷ்டத்தோடு மிகப் பலமாக ஒவ்வொரு சமயம் உயிர் நஷ்டமும் ஏற்பட்டது; வாஷிங்டன் கண்டித்து ஸ்பெயினுக்குக் கடிதங்கள் எழுதிற்று. எல்லாவற்றிற்கும் மேல், இருபுறத் தாரின் குரூரச் செயல்களும், ஸ்பானிய அரசாங்கத்தின் மிருகத்தன்மையான கொள்கையும், அமெரிக்கருக்கு மிகக் கோபத்தையும் வருத்தத்தையும் உண்டாக்கின. வலேரியானே வேய்லர் என்னும் ஸ்பானிய தளபதி மிகத் திறமையுள்ளவன், ஆனால் கருணையே அறியாதவன்; கலகத்தை நசுக்குவதற்காக அவன் அனுப்பப்பட்டபின், அப்போர் சரித்திரத்திலேயே மிகப் பயங்கரமானதும் அருவருப்பானதுமாயிற்று. இருசாராரும் நாட்டை அழித்தார்கள்; போர்க் கைதிகளைக் கொன்று போட்டார்கள். சகாயமற்ற சிவில் மக்களும் வேண்டுமென்றே அக்கிரமமாகத் துன்பப்படுத்தப்பட்டனர். 1896-ன் இலையுதிர் காலத்தில் வேய்லர் சில பட்டணங்களை ஆட்களைத் திரட்டி யடைக்கும் கொட்டங்களாக மாற்றிப் பெண்களையும், குழந்தைகளையும், கிழவர்களையும் அவற்றில் அடைத்து

கவனிக்காமல் விட்டுவிட்டான்; அவர்கள் ஈ, கொசுபோல இறந்தனர்.

ஸ்பானிய அரசாங்கம் க்யூபாவுக்குத் துருப்புகள் அனுப்பிக் கொண்டே இருந்ததில் 1898-ன் துவக்கத்தில் இரண்டு லக்ஷம் பேர் அங்கு கூடிவிட்டார்கள். ஐக்கிய நாடு போரில் தலையிடுவதைத் தடுக்க ஐரோப்பிய அரசுகளின் ஒரு குழு அமைப்பது என்று ஸ்பானிய அயல் நாட்டு இலாக்கா ஆரம்பித்தது; ருஷ்யா அந்த யோசனையை அசட்டை செய்தது; பிரிட்டன் வலுவுடன் எதிர்த்தது; ஜெர்மனி, ஆஸ்ட்ரியா - ஹங்கேரி, ஃப்ரான்ஸ் ஆகிய நாடுகள் சிறிதளவு ஊக்கமளித்தன. ஆனால் 1898-க்குள் அந்திய காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. நீர்மானமான நடவடிக்கை வேண்டுமென்று காங்கிரஸ் துள்ளிக் கொண்டிருந்தது. உண்மையான நிலையின் காரணமாகவும், பத்திரிகைகள் போட்ட மனவெழுச்சியுண்டாக்கும் கூச்சல்களின் காரணமாகவும் பொது மக்களின் அபிப்ராயமும் போருக்கு அனுகூலமாக இருந்தது. பெருவாரி வியாபார சம்பந்தமுள்ள ஸெனெடர்கள் ஜனாதிபதி மாக்கின்லியின் நெருங்கிய ஆலோசகர்கள்; ஜனாதிபதியைப்போலவே அவர்களும் போரைத் தவிர்க்க விரும்பினர்கள். ஆனால் அரசியல் காரணங்களும் மக்களின் விருப்பத்திற்கு அளிக்கப்பட்ட மதிப்பும் மாக்கின்லியின் தீர்மானத்தைக் கலைத்தன, அதே சமயத்தில் வாஷிங்டனில் ஸ்பானிய மந்திரியாக இருந்த டுபை ட லோம் (Dupuy de Lome) ஒரு மடத்தனமான காரியம் செய்தான்; மாக்கின்லியை "அரசியல் வாதி ஆகப்பார்ப்பவன்", "பாமர மக்களின் பாராட்டுதலுக்காக ஏங்குபவன்", "ஸ்பெயினுக்கு விசுவாசத் துரோகம் செய்தவன்" என்றெல்லாம் ஏசி அவன் எழுதிய ஒரு கடிதத்தை ஹெர்ஸ்ட் (Hearst) அச்சாலயத்தாரின் கையில் விழவிட்டுவிட்டான். ஒரு வாரம் கழித்து அமெரிக்க யுத்தக் கப்பல் "மேய்ன்" ஹவானு துறைமுகத்தில் வெடிகுண்டுக்கிரையாக்கப்பட்டது. 260 பேர் இறந்தனர். அது பொறுப்பற்ற ஸ்பெய்ன் காரர்கள் செய்த காரியமா, ஸ்பெயினுக் கெதிராகக் கோபத்தீயை மூட்டும் கெட்ட எண்ணத்துடன் க்யூபாக்காரர்கள் செய்தார்களா, நிச்சயமாகத் தெரியாது; ஆனால் அமெரிக்கா யுத்தத்தில் கலப்பது மட்டும் உறுதியாயிற்று. கடைசி நிமிஷத்தில் ஸ்பானிய அரசாங்கம் அவசர அவசரமாகச் சலுகைகள் காட்டிற்று. அவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டிருந்தால் போரில்லாமலே க்யூபாவுக்கு விடுதலையளித்திருக்கலாம். ஆனால் ஏற்கெனவே அதிகத் தாமதம் ஏற்பட்டுவிட்டது, இனித் தாமதிப்பதற்கில்லை என்று நினைத்த மாக்கின்லி ஏப்ரல் 11-ஆம்தேதி காங்கிரசுக்குப் போர் பிரகடனச் செய்தி அனுப்பினார். மற்றது எப்படியிருந்தாலும் அத்தீர்மானம் மக்களின் முழுச் சம்மதத்தையும் பெற்றது.

ஸ்பானிய அமெரிக்கப் போரைப் போல அவ்வளவு சடுதியில் வேறெருரு அமெரிக்கப் போரும் வெற்றி—ஒரு ரகமான கீர்த்தி—அளித்ததில்லை. 1898, மே மாதம் முதல் தேதி ஆரம்பமான சண்டை பத்தே வாரத்தில் முற்றுப்பெற்றது. குறிப்பிடத்தக்கதாக ஒரு தோல்விகூட அமெரிக்கர் அனுபவிக்கவில்லை. மேத் திருநாளன்று (மே முதல் தேதி) உதயத்தில் ட்யூ ஈ (Dewey) ஃபிலிப்பைன்ஸ் தீவுக் கூட்டத்தில் மணிலா விரிகுடாவில் தன் யுத்தக் கப்பல்களைச் செலுத்தி ஸ்பானியக் கப்பல்களை வேண்டிய அளவு அணுகி—எதிரியின் குண்டுவீச்சு தூரத்தைக் காட்டிலும் அமெரிக்கக் கப்பல் பீரங்களின் குண்டுகள் அதிக தூரம் செல்லக் கூடியவையாகையால் அந்த வியூகம் சாத்தியமாயிற்று—தன் பக்கத்தில் ஒரு ஆள் நஷ்டமில்லாமலேயே எதிரிக் கப்பல்களையெல்லாம் வேலைக்குதவாமல் செய்தான். (ஃபிலிப்பைன்ஸ் அப்பொழுது ஸ்பானியர் வசம் இருந்தது). அமெரிக்க மக்களின் மகிழ்ச்சிக்கும் பாராட்டுதலுக்கும் எல்லையே இல்லை. ஒரு கவிட்யூ என்னும் பெயரைக் கொண்டு பல்சொல் அலங்காரத்துடன் ஒரு செய்யுள் இயற்றினான்.

க்யூபாவில் ஸான்டியாகோ துறைமுகத்திற்கருகில் கரையிறக்கப்பட்ட ஒரு சிறு படை வேகமாகப் பல வெற்றிகள் பெற்று, துறைமுகத்தின் மேல் தன் பீரங்கிகளைத் திருப்பிற்று. ஸ்பானியக் கடற்படையைச் சேர்ந்த நான்கு கவசக்கப்பல்கள் துறைமுகத்தில் இருந்தன; அவை அவசர அவசரமாக ஸான்டியாகோ விரிகுடாவிலிருந்து வெளியேறின; ஆனால் சில மணி நேரத்திற்குள் அவையெல்லாம் தகர்க்கப்பட்டன; அந்த நடவடிக்கையில் அமெரிக்கரின் ஆள் நஷ்டம் ஒன்றே ஒன்றுதான். ப்வெர்ட்ட ரீகோ (Puerto Rico) வில் கரையிறங்கிய படை நிலைச் சாப்பாட்டிற்கு உல்லாசமாகச் செல்லுவதுபோல் முன்னேறிற்று.

அமெரிக்க மக்கள் கவலையறியாத தேசாபிமானத்துடன் யுத்தத்தை வரவேற்றனர். வெற்றியையும் கீர்த்தியையும் குறிப்பிடும் பாட்டுகள் எங்கும் பாடப்பட்டன. கட்சிப் பாசங்கள் மறைந்து போயின. ப்ரையன் ஒரு நெப்ராஸ்காப் படையின் கர்னலாக உழைத்தான். வடக்கு தெற்கு என்ற எதிர்ப்பின் கடைசிச் சின்னங்களும் தேசிய உணர்ச்சி என்னும் தீயில் இளகி மறைந்தன. கான்ஃபெடெரேட் குதிரைப்படைத் தலைவனுக்கு கீர்த்திபெற்ற ஜோ ஃவீலர் ஸான்டியாகோவுக்கு முன் போரிடுகையில் யூனியன் கொடிக்காக இடும் ஒரே ஒரு சண்டையும் பதினேந்தாண்டுகள் வெறுமனே உயிர் வாழ்வதும் சமம் ஆகும் என்று உற்சாகத்துடன் சொன்னான். ஸான்டியாகோவின் வீழ்ச்சிச் செய்தி கிடைத்த அன்று பாஸ்டனிலிருந்து ஸான் ஃப்ரான்ஸிஸ்கோ வரை ஊதல்கள் ஒலித்தன, கொடி

கள் அலைவீசின. செய்திப் பத்திரிகைகள் தங்கள் நிருபர்களை க்யூபாவிலும் ஃபிலிப்பைன்ஸிலும் யுத்தகளங்களுக்கனுப்பின; அவர்கள் புதுக் கீர்த்திபெற்ற ஒரு டஜன் தேசியத் தீரர்களை வர்ணித்து எழுதினார்கள். எல்லா சூரர்களைவிடப் பெரிய வர்களாக ஜ்யார்ஜ் ட்யூயும், தியோடர் ரூஸ்வெல்டும் விளங்கினார்கள்; ரூஸ்வெல்ட் தற்காலிகமாகத் திரட்டப்பட்ட குதிரைப் படையை நடத்தி வெற்றிகள் பெற்றார்; இருவருக்கும் வாஷிங்க்டனில் வீடுகள் இனாமாக அளித்து நாடு தன் நன்றியைச் செலுத்திற்று. இதல்லவா யுத்தம்!—என்று பலருக்குத் தோன்றிற்று. ஆள் நஷ்டம் குறைவு, செலவும் அதிகமாகவில்லை. அயல் நாடுகளில் அமெரிக்கரின் கீர்த்தி உயர்ந்தது, போர்க் கொள்ளையும் ஏராளமாகக் கிடைத்தது.

ஆனால் ஊன்றிப்பார்த்தால் விரும்பத்தகாத அம்சங்கள் போர் வரலாற்றில் பல இருந்தன. சத்துருவின் எதிர்ப்பு பரிதபிக்கத் தக்கதாக இருந்தது; சகாயமற்ற எதிரியின் மூலம் கிடைத்த கீர்த்தி அது. ஸ்பானிய கடற்படைக்குத் தளவாடங்கள் போதா; ஆட்களின் மனமும் ஊக்கமற்றிருந்தது; அமெரிக்கத் துருப்புகளே குறிபார்த்துச் சுடுவதில் மிக மட்டமென்றால், ஸ்பானியர்களின் குண்டுகள் அமெரிக்கக் கப்பல்கள் மேல் ஒரு கோடுகூடக் கிழிக்கவில்லையெனலாம். சரியான நாயகர்களும் போக்குவரத்து வசதிகளும் இல்லாததால் தீவிலிருந்த இரண்டு லக்ஷம் கிப்பாய்களில் 12,000 பேர்தான் ஸான்டியாகோவின் பாதுகாப்புக்கு வந்து சேரமுடிந்தது. அமெரிக்க வெற்றிகளுக்குத் துணிச்சலும் விறுவிறுப்பும் ஓரளவு காரணமென்றாலும், எதிரியின் பலஹீனந்தான் முக்கிய காரணமென வேண்டும். அதுமட்டுமல்ல, அந்த வெற்றிகளின் பின்னணி எப்படிப்பட்டது? அதிகாரவர்க்கத்தின் லஞ்ச ஊழல், திறமையின்மை, வருந்தத்தக்க தவறுகள்—சிந்திக்கும் பிரஜைகளுக்கு வெட்கப்படவேண்டிய நிலையாகத் தோன்றிற்று. யுத்த இலாகாவின் நிர்வாகம் சந்தேகத்திற்கிடமில்லாமல் மோசமாக இருந்ததால், அதன் தலைவனை நீக்கிவிட்டு மாக்கின்லி அப்பதவியில் எலிஹு ரூட் என்பவனை நியமித்தார்; ரூட், இலாகாவையும் சேனைகளையும் நன்முய் ஒழுங்குபடுத்தி அவற்றின் திறமையை மிகவும் உயர்த்தினான். பட்டாளங்களில் நோயின் காரணமாக ஏற்பட்ட மரணங்களின் விகிதம் மிக அதிகமாக இருந்ததால், ராணுவ மருத்துவப் பகுதி தன் கடமைகளை சரியாக நிறைவேற்றவில்லை என்று தெரிந்தது; அதோடுகூட மொத்தத்தில், அமெரிக்கச் சுகாதார நிலையும் அதிருப்தியளித்தது; கப்பற்படையில் பீரங்கிப்பயிற்சியும் கவனிக்கவேண்டிய விஷயம். தலைநகரில் அரசியல்வாதிகள் ராணுவ நிர்வாகத்தை ஒரு நோய் போல் பீடித்துச் செயலற்றதாக ஆக்குவதும் தெளிவாயிற்று; அது புது அனுபவமல்ல, எல்லாம் கவனித்தால்

தியோடர் ரூஸ்வெல்ட் அந்தப் போரை "தயாராயில்லாத அமெரிக்காவின் யுத்தம்" என்று வர்ணித்தது பொருத்தமே. தரைச்சேனையின் ஆள்பலம் ஒரு லக்ஷத்திற்கு உயர்த்தப்பட்டது; சாசுவதமான அடிப்படையில் அதிகார வர்க்கம் அமைக்கப்பட்டது; கப்பற்படை விருத்தியாயிற்று; நிலப்படை, நீர்ப்படை இரண்டிலும் பயிற்சிபெற்ற ஆள்பலம் வலுவாக்கப்பட்டது. ஸ்பானிய யுத்தம் எடுத்துக்காட்டிய தோஷங்களைப் படிப்பினையாக ஐக்கியநாடு ஒழுங்கமைப்புகள் செய்து கொண்டதால், 1917-1918-ல் முதல் உலக யுத்தத்தின் பயங்கரமான சோதனைகளுக்கு அது தயாராக இருந்தது.

பாரிஸ் நகரில் கூடிய சில கமிஷனர்கள் மூலம் ஸ்பானிய உடன்படிக்கை தாமதமின்றி உருவாக்கப்பட்டது. விவாதத்திற்கான இரண்டு விஷயங்கள்தாம் இருந்தன. க்யூபாவின் வருமானத்தை ஈடாகக் காட்டி ஸ்பெயின் வாங்கிய கடன்களை க்யூபாதான் பொறுப்பேற்றுச் செலுத்த வேண்டும் என்பது ஒன்று; ஃபிலிப்பைன் தீவுகள் முழுதும், தவறினால் ஒரு பகுதியாவது, ஸ்பானியர் வசமே இருக்கவேண்டும் என்பது இரண்டாவது. ஆனால் இரண்டு விஷயங்களிலும் அமெரிக்கா திடமாக இருந்தது. முற்றிலும் கடன் சுமையற்ற குடியரசு நாடாக க்யூபா மறுபடி பிறந்தது, ஃபிலிப்பைன் தீவுக்கூட்டம் அமெரிக்கருக்குக் கிடைத்தது; ப்வெர்ட்டோரீகோ துறைமுகமும் அவர்களுக்குக் கிடைத்தது. பாஷை, கலாசாரம், அரசியல் கருத்துக்கள், எல்லாம் மாறுபாடான ஜனங்கள் வசிக்கும் கடல் கடந்த பிரதேசங்கள் கிடைத்ததால் அமெரிக்கா ஒரு புது மார்க்கத்தில் செல்வதாகத் தோன்றிற்று. ப்ரையன் கோஷ்டியாரின் தலைமையில் சாம்ராஜ்ய எதிர்ப்பாளர் மிகக் கடுமையாக ஆட்சேபித்தார்கள். ஆனால் உடன்படிக்கை, பெரும்பாலும், பொது மக்களுக்குத் திருப்தியளித்தது என்பது 1900-ன் தேர்தல் மூலம் தெளிவாயிற்று—மாக்கின்லி முன்னிலும் அதிக வோட்டுடன் தலைமைப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார், கடலுக்கப்பால் ஐக்கிய நாடு ஏற்ற பொறுப்புகள், ஓரளவு, தற்காலிகமானவை என்பதும், உள்ளத்தில் அமெரிக்கர் சாம்ராஜ்ய இச்சை கொள்ளவில்லை என்பதும் பிற்காலத்தில் தெரிய வந்தது; காலப்போக்கில் அமெரிக்கா தன் வெளி நாட்டு ஸ்தலங்களை —தானே விரும்பி—குறைத்துக் கொண்டதே தவிர அதிகரித்துக் கொள்ளவில்லை.

ஸ்பானிய அமெரிக்கப் போர் அமெரிக்கச் சரித்திரத்தில் முக்கியமானதொரு நிகழ்ச்சியாகும். தானும் ஒரு உலக வல்லரசு என்பதை நாடு அறிந்தது; தனித்து, தன்-சிந்தனையாக இருக்கும் தன்மை குறைந்து விஸ்தாரமான அயல் நாட்டு விஷயங்களில் அது மேலும் மேலும் முக்கியமான தொண்டாற்றிற்று. தற்செயலாக அல்லாமல் முழுப் பிரக்ஞையுடன் அது

பின்பட்ட மக்களுக்கு புது முறை போதிக்கும் பொறுப்பேற்றது. திறமையும் நல்ல மனமும் படைத்த கவர்னர்கள் ஃபிலிப்பைன்ஸ், க்யூபா, ப்வெர்ட்டரீகோ, (பிறகு காலத்திற்குப்பின்) பனமா ஆகிய இடங்களில் பெருவாரியான புனரமைப்பு, சீர்திருத்தம், அபிவிருத்தி முதலிய காரியங்கள் செய்தார்கள். பகைவரின் தலைகளைச் சேகரித்துப் பெருமைப்படும் முரட்டு ஜாதியாருக்கும் நாகரிக முறைகள் கற்பிக்கப்பட்டன. டாக்டர் வால்டர் ரீடும், மற்ற ராணுவ மருத்துவர்களும் க்யூபாவில் சோதனைகள் நடத்தி மஞ்சள் சுரத்தின் காரணங்களை ஆராய்ந்து தக்க சிகிச்சை முறை கண்டறிந்தார்கள்; போர்ச் செலவு முழுதும் அந்த மகத்தான ஒரு வெற்றிக்கு ஈடாகாது. பல நூற்றாண்டுகளாக அந்தச் சுரம் உஷ்ணப் பிரதேசங்களில் திரள் திரளாக ஜனங்களைக் கொன்றிருக்கிறது; அமெரிக்காவின் தென்கரைத் துறைமுகங்களில் மஞ்சள் சுரம் என்ற திகில் மக்களை எப்பொழுதுமே வாட்டி வந்தது. மன்ரோக் கொள்கைப்படி ஐரோப்பிய அரசுகள் தென் அமெரிக்க, வட அமெரிக்க ராஜ்யங்களில் அரசியல் முறையில் தலையிடக் கூடாது; ஸ்பானியப் போர் வரை பிரிட்டிஷ் கடற்படையின் நடவடிக்கைகள் அக்கொள்கைக்கு அனுகூலமாக இருந்து இரு அமெரிக்காக்களையும் காத்து நின்றது; போருக்குப் பிறகு ஐக்கிய நாடு அப்பொறுப்பைத் தானே ஏற்க விரும்பிற்று. போரின்போது, மத்திய அமெரிக்காவில் பனமா பூசந்தி இருக்குமிடத்தில் ஒரு கப்பல் வாய்க்கால் வெட்டப்பட்டு பசிஃபிக் அட்லான்டிக் சமுத்திரங்களை சேர்க்க முடியுமானால் மிக நன்மையாக இருக்கும் என்ற எண்ணம் உலவிற்று; ஆரிகன் என்னும் யுத்தக் கப்பல் பசிஃபிக் கரையிலிருந்து, தென்-கோடியில் ஹார்ன் முனையைச் சுற்றி க்யூபா வந்து சேர 68 நாட்கள் பிடித்ததால் பனமா வாய்க்கால் இல்லாமல் இனி நாட்டுக்கு க்ஷேமமில்லை என்ற கருத்து குறிப்பாக வலுவடைந்தது. கடைசியாய், போரின் காரணமாக ஆங்கில அமெரிக்க நட்பு வளர்ந்தது, ஜெர்மன் அமெரிக்க உறவில் விறைப்பு ஏற்பட்டது; ஏனென்றால் அமெரிக்க வெற்றிகளைப் பிரிட்டிஷார் தம் வெற்றிகள் போல் கொண்டாடினார்கள்; ஜெர்மனியரோ ஒரு கடற்படைப் பகுதியை மணிலாவுக்கருகே பொருமை நோக்குடன் நிறுத்தி ட்யூயுக்குக் கவலையும் எரிச்சலும் உண்டாக்கினர்.

திறந்த வாசல்: ரூஸ்வெல்டின் ராஜதந்திரம். 'திறந்தவாசல்' கொள்கை என்பது ஸ்பானியப் போருக்குப்பின் உலக விவகாரங்களில் உண்டான புது மனப்பான்மைக்கு ஒரு உதாரணம். 1894-1895-ல் ஜப்பானியரால் தோற்கடிக்கப்பட்ட சைனா ஐரோப்பிய வல்லரசுகளின் இரையாக ஆகி வந்தது; பொருளாதார சலுகைகளும் ஸ்தலங்களும் சம்பாதித்துக் கொள்ள அவை சைனா மீது பாய்ந்தன. மன்சூரியாவை ருஷ்யா தனதாக்கிக்

கொண்டுவிட்டதுஎனலாம் ஜெர்மனி கியோசௌ துறைமுகத்தைக் குத்தகைக்கு எடுத்ததில் ஷான்டுங்க் மாகாணத்தின் பொருளாதார நிலை அதன் வசமாயிற்று; ஃப்ரான்ஸ் பல சலுகைகள் பெற்றது. இந்தப் பகல் கொள்ளையை இங்கிலாந்தும் அமெரிக்காவும் திகிலுடன் பார்த்து நின்றன; சீன வியாபாரம் அவர்களுக்கு மிக அவசியம்; உயர்ந்த வியாபார மதில்கள் கிளப்பப்படுமோ என்று அவர்கள் பயந்தார்கள்.

ஸ்பானிய அமெரிக்கப் போர் துவங்குமுன் சைனாவில் இன்னலற்ற வர்த்தக வாய்ப்புகளைக் காப்பதற்காக ஆங்கில-அமெரிக்கக் கூட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று பிரிட்டன் ஐக்கிய நாட்டிடம் கூறிற்று; ஆனால் அமெரிக்க வெளிநாட்டு இலாக்கா ஊக்கமற்றிருந்தது. அதன் பிறகு 1899-ல் வாஷிங்க்டனுக்கு இன்னொரு எண்ணம் தோன்றிற்று: வெளிநாட்டு வியாபார இலாக்கா ஒரு யாதாஸ்தில் இதரவெளி நாடுகளைக் காட்டிலும் சைனாவில் அமெரிக்கா தன் சரக்குகளைச் சிறப்பாக விற்கமுடியும் என்று குறிக்கப்பட்டிருப்பதை நினைவூட்டி, அமெரிக்க உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் கிழக்கே திடமான கொள்கை தேவை என்று தம் அரசாங்கத்திடம் வற்புறுத்தினர்கள். கிறிஸ்தவ மதத் தொண்டர்களும் சைனா மிகச்சிறந்த பிரசார க்ஷேத்திரம் என்றுரைத்தார்கள். சரியான சமயத்தில் லார்ட் சார்ல்ஸ் பெரெஸ்ஃபோர்ட் எழுதிய ''சைனாவின் சிதறடிப்பு'' உணர்ச்சியை மிகவும் கிளப்பிற்று. நிரைக்குப் பின்னும் பலர் பல வகைகளில் தொண்டாற்றி வந்தார்கள். கடைசியில் செப்டெம்பர் மாதத்தில் அமெரிக்க வெளிநாட்டு செக்ரெடரி, ஜான் ஹே, தம் நலத்திற்காக சைனாவில் ஸ்தலங்கள் சம்பாதித்துக்கொண்ட தேசத்தாருக்கு எழுதி, தம் வட்டாரத்தில் பிரத்தியேகடாரிஃப் சுங்கம், துறைமுகக் கட்டணம் அல்லது ரெயில்வேக் கட்டணம் விதிப்பதில்லை என்று வாக்களிக்கும்படி கேட்டுக்கொண்டார். விடைகள் பலவற்றில் சிற்சில நிபந்தனைகள் ஜோடிக்கப்பட்டிருந்தாலும், ஹே அவ்விடைகளைத் திருப்திகரமான சம்மதம் என்றே கொண்டு 1900-ல் அவ்வாறே விளம்பரம் செய்தார்.

1901-ல் தியோடர் ரூஸ்வெல்ட் ஜனாதிபதியானதும் வெளிநாட்டுக் கொள்கையில் இரண்டு முக்கியப் பகுதிகள் இருந்தன. (முதலில் ஹேயும் அதன் பின்னர் ரூட்டும் அவருடைய வெளிநாட்டுக் காரியதரிசிகள்.) ஒரு பகுதி புதியதாய்க் கிடைத்த தீவுகளையும் பனமாவையும் பற்றியது; ஸ்பானியப்போரின் விளைவு அது; அட்லான்டிக், பசிஃபிக் இருபுறங்களிலிருந்தும் தாக்குதல் ஏற்படலாம் என்ற பயமும் ஒரு காரணம். இன்னொரு பகுதி தவிர்க்கக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றியது: ரூஸ்வெல்ட் தன் சொந்த ஹோதாவில் உலக ராஜதந்திரம் என்னும் வனத்தில் சஞ்சரித்து யுனைடெட் ஸ்டேட்ஸும் ஒரு

உலக வல்லரசு என்று நிரூபித்தார் 1605-ல் அவர் ருஷ்ய ஜப்பானியப் போருக்கு முற்றுப்புள்ளிவைத்து நியூ ஹாம்ப்ஷயரில் போர்ட்ஸ்மத் என்னும் துறைமுகப் பட்டணத்தில் உடன்படிக்கை எழுத உதவினர்; அதற்கு போர்ட்ஸ்மத் உடன்படிக்கை என்று பெயர். 1906-ல் அவர் கட்டளையின் மேல் ஹென்ரி ஃவைட் ஆல்ஜெஸிராஸ் மகாநாட்டில் கலந்து கொண்டார். (தெற்கு ஸ்பெயினிலுள்ள அப்பட்டணத்தில் ஐரோப்பிய அரசுகள் கூடி வடமேற்கு ஆஃப்ரிக்காவிலுள்ள மொராக்கோவின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த முயன்றன.) அவற்றில் அதிகக் கவனம் செலுத்தத் தேவையில்லை. இரண்டும் வெளித்தோற்றத்தில் கவர்ச்சியுள்ளவை; ரூஸ்வெல்ட் சம்பந்தப்பட்ட வரையில் அவை வெற்றியளிப்பவை; ஆனால் இரண்டும் அவசியமற்றவை; ருஷ்யாவும் ஜப்பானும் அமெரிக்கத் துறைமுகமாகிய போர்ட்ஸ்மத் தவிர வேறிடத்திலும் தங்கள் சண்டையைத் தீர்த்துக்கொண்டிருக்கலாம்: வட ஆஃப்ரிக்கத் துறைமுகங்களையும் சலுகைகளையும் பற்றி ஃப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் இடையே நடந்த சரித்திர முக்கியமான சச்சரவில் ஃப்ரான்ஸை ஆதரிப்பதற்காக ஹென்ரி ஃவைட்டை அனுப்பத் தேவையில்லை. இதற்கு மாறாக, ஃபிலிப்பைன்ஸ், கரீபியன் தீவுகள், பனமா—இவை சம்பந்தமான நடவடிக்கைகள் உண்மையிலேயே அமெரிக்கருக்கு முக்கியமானவை.

இவற்றுடன் ஆங்கில அமெரிக்க உறவுகளைப்பற்றி ரூஸ்வெல்டின் கொள்கைகளையும் சேர்த்துக்கொள்ளலாம்; மனிதர்களுக்கு அச்சமயம் அவ்வெண்ணம் இல்லாமற்போனாலும் பிற்காலத்தில் நிகழ்ந்த இரண்டு அரக்கப்போர்களில் ஆங்கிலத்தைத் தாய்மொழியாய்க்கொண்ட இரண்டு பெரிய அரசுகள் சேர்ந்து உழைத்திராவிட்டால் குடிநல ஆட்சி மாத்திரமல்ல உலக நாகரிகமே அஸ்தமித்துப் போயிருக்கும். உலக விவகாரங்கள் என்னும் அவாந்தரப் பிரதேசத்தில் கால் நடுக்கத்துடன் புதியதாய்ப் பிரவேசித்த ஐக்கிய நாட்டுக்கு பிரிட்டிஷ் கடற்படையின் சகாயம் மிகவும் விரும்பத்தக்கது என்பது தெளிவாயிற்று. க்ரேட் ப்ரிட்டனையோ ஜெர்மன் ஆதிக்கம் என்னும் பயங்கர ஆபத்து எப்பக்கம் திரும்பினாலும் பயமுறுத்திக் கொண்டிருந்தது. சர்வதேச வியாபாரத்தில் ஜெர்மனியின் போட்டி; ஆஃப்ரிக்காவில் அதற்கொரு பங்கு வேண்டும்; ஆசியாவில் திறந்த கதவுக் கொள்கைக்கு ஜெர்மனியரின் எதிர்ப்பு; ஐரோப்பாவில் ஜெர்மனியின் முக்கட்சி உடன்படிக்கை; ஜெர்மன் கடற்படை அபிலாஷைகள். மேற்கு இந்தியத் தீவுகளிலோ தென் அமெரிக்காவிலோ ஜெர்மனி இடம் நாடவில்லை என்பது நிச்சயமாய்த் தெரியாது; அங்கு கடற்படைத் தளம் கிடைத்தால் சில தலைவர்களுக்கு இஷ்டந்தான்;

ஆகவே தூரக்கிழக்கில், கரீபியன் கடலில், முக்கியமான கடல் பாதைகளில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் மேலும் மேலும் ஒருமனப்பட்டிருந்தன; அதற்குக் காரணங்கள் சிரமப்பட்டுத் தேடவேண்டாம்; அவ்வொற்றுமைக்குப் பிற்காலத்தில் அட்லாண்டிக் திட்டம் என்றே பெயர் ஏற்பட்டது.

பலமா வாய்க்கால் வெட்டுவதாக ஐக்கியநாடு தீர்மானித்துவிட்டசெய்தி தெரிந்ததும் இன்னல்களை விலக்கும் நிமித்தம் பிரிட்டிஷ் அரசாங்கம் உதார மனத்துடன் பல சலுகைகள் காட்டிற்று. 1850-ல் செய்த ஒரு உடன்படிக்கைப்படி எல்லா வாய்க்கால்களிலும் இரு நாடுகளுக்கும் சம உரிமை இருக்க வேண்டும் என்றும், ஒரு நாடும் ராணுவப் பாதுகாப்புகள் அமைக்கக்கூடாதென்றும் கண்டிருந்தது. அமெரிக்க வெளி நாட்டுக் காரியதரிசியும் வாஷிங்க்டனிலிருந்த பிரிட்டிஷ் ராஜ தூதரும் கலந்தாலோசித்து ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்கள்; அது 1901-ல் இரு அரசாங்கங்களின் சம்மதம் பெற்றது. அந்த ஒப்பந்தப்படி ஐக்கிய நாடு வாய்க்கால் அமைத்து, செப்பனிட்டு, தன்வசம் வைத்து, வரி வசூல் செய்யவேண்டியது; கட்டண விகிதத்தில் வேற்றுமை கூடாது; இங்கிலாந்து பழைய ஒப்பந்த உரிமைகளை விட்டுக்கொடுத்து அமெரிக்காவுக்கு சௌகரியப்படுத்த வேண்டியது; அதற்குப் பதிலாக கொடுக்கவேண்டியது ஒன்றுமில்லை—அமெரிக்கா பிரிட்டனின் இந்த உதார சைகையை மிகவும் பாராட்டிற்று. சிறிதுகாலம் கழித்து, வெனிஸுலாக் கடன் விஷயத்திலும் க்ரேட் பிரிட்டன் தள்ளிக்கொடுத்த விதம் அமெரிக்க அரசாங்கத்திற்குப் பிடித்திருந்தது. ஆனால் வெனிஸுலாவுடன் ஒரு புதுச் சச்சரவு கிளம்பிற்று. அந்நாட்டுப் புது ஜனாதிபதி காஸ்ட்ரோவின் ஆட்சி மிகக் கேவலமாக இருந்தது. அவன் பிரிட்டன், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு ஒரு காரணமாக நஷ்டஈடு செலுத்தக் கடமைப்பட்டிருந்தான். அந்தப் பணம் வசூலாகாததால், 1902-ல் மூன்று நாடுகளும் "ஒத்துழைப்புப் பலாத்காரம்" நடத்தத் தீர்மானித்து, வெனிஸுலாவின் கடற்கரையில் தடுப்பு நடவடிக்கை ஆரம்பித்துச் சில பீரங்கிப் படகுகளைப் பிடித்து இரண்டு கோட்டைகள்மேல் குண்டு வீசின. வெனிஸுலாவுக்குப் பாடம் கற்பிப்பது ஐக்கிய நாட்டிற்கு இஷ்டந்தான்; ஆனால் இவ்வளவு கடுமையான நடவடிக்கைக்கு அது தயாராக இருக்கவில்லை. நடவடிக்கை அமெரிக்க அபிப்பிராயத்தை உறுத்துகிறது என்றறிந்ததும் பிரிட்டன் பின் நகர்ந்தது. அதே சமயம் பிரிட்டிஷ் மக்கள் சபையில் இந்தப் பிரச்னை கிளம்பியதில் ஜெர்மனியுடன் ராணுவக் கூட்டுறவு தவறு என்று சபை தீர்மானித்தது; மந்திரி சபையும் சக்திப் பிரயோகம் வேண்டாம் (வெனிஸுலாவின் கப்பல் போக்குவரத்தைத் தடுத்துத் துன்பப்படுத்தி வழிக்குக் கொண்டுவந்தால்போதும்)

என்று கூறிற்று. அமெரிக்க மக்கள் பிரிட்டிஷாரின் சமரஸ பாவத்தைப் பாராட்டியதோடு ஜெர்மனியாரின் முரட்டுப் போக்கைக் கண்டித்தார்கள். பிற்காலத்தில் ரூஸ்வெல்ட் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போது தான் ட்யூஈயையும் அவன் கப்பற்படையையும் வெனிஸுலாப்பக்கம் அனுப்பத் தயாரானதை அறிந்து ஜெர்மன் கெய்ஸர் நடுங்கிவிட்டான் என்ற கதையை ரசமாகச் சொன்னார்; அதில் மசாலா அதிகமிருந்தாலும் அடிப்படையான காய்கறி முற்றிலும் இல்லாமலில்லை.

இன்னொரு உதாரணம்—இந்நூற்றாண்டின் அடிநாட்களில் கானடா-அலாஸ்கா எல்லைச் சண்டையில் மத்தியஸ்தர்களுள் ஒருவரான பிரிட்டிஷ் நீதிபதி ஐக்கிய நாட்டுக்கு அனுகூலமாகவும் கானடாவுக்கு எரிச்சலுண்டாகும் விதத்திலும் தீர்ப்பளித்தார். "மலைகளின் சிகரங்களைத் தொட்டுக்கொண்டு கடற்கரைக்கு இணையாகச்செல்லும் கோடு எல்லைக்கோடாகும்" என்ற வார்த்தைகளில் சந்தேகத்திற்கிடமிருந்தது; ஆனால் "கடலோரப் பிரதேசத்தின் அகலம் 30 மைல் இருக்குமாறு" என்ற விளக்கம் சந்தேகத்தை நீக்கிற்று. கனடியர்கள் அர்த்தம் செய்துகொண்ட விதத்தில் அவர்களுக்குச் சில துறைமுகங்கள் கிடைக்க இருந்தன.

கடைசியாக, 1906-ல் பிரிட்டிஷ் கடற்படை மூன்று முக்கியப் பகுதிகளாக—மத்தியதரைக் கடல், பிரிட்டிஷ் சானல், கிழக்கு அட்லாண்டிக் என—மாற்றியமைக்கப்பட்டபோது மேற்கு இந்தியத் தீவுகளின் மேல்பார்வைக்காக பெர்ம்யூடாவில் வெகுகாலமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஒரு பகுதி அங்கிருந்து நீக்கப்பட்டது. ஜெர்மனி உண்டாக்கிய பயமே இதற்குக் காரணம் எனினும் கரீபியன் கடல் பிரதேசத்தில் அமெரிக்கா சுயேச்சையாக விடப்பட்டது அதற்கு மகிழ்ச்சியளித்தது; அதன் வசம் அக்காலத்தில் வலுவுள்ள கடற்படை இருந்தது.

அம்மகிழ்ச்சிக்கு ஓரளவு காரணம் பனமா வாய்க்காலுக்கான காரியம் ஆரம்பமாகிவிட்டது என்பது. பிற்காலத்தில் வாய்க்காலைப் பற்றிய பேச்சு வந்தபோது "நான் பனமாவைக் கைப்பற்றிக்கொண்டேன்; வாய்க்கால் அமைப்பதற்கு அந்த ஒரு வழிதான் இருந்தது," என்றார் ரூஸ்வெல்ட். முதல்பாதி எழுத்துக்கெழுத்து உண்மையெனலாம். 1902-ன் ஒரு சட்டத்தின்படி, பனமாவில் ஒரு வாய்க்கால் வெட்டுவதற்காக முயற்சி செய்த ஒரு ஃப்ரெஞ்சுக் கம்பெனியின் உரிமைகளை விலைகொடுத்து வாங்கவும், கொலம்பியா (Colombia) ராஜ்யத்திலிருந்து கடலுக்குக்கடல் நீண்ட ஒரு நிலப்பகுதியை நிரந்தரமாக பெற்றுக்கொள்ளவும், வாய்க்கால் வெட்டும் வேலை துவக்கவும் காங்கிரஸ் ஜனாதிபதிக்கு அதிகாரமளித்தது. [ஸூயஸ் (Suez) வாய்க்காலை வெட்டிய டி லெஸ்

ஸெப்ஸ் (de Lesseps) என்னும் ஃபிரெஞ்சுக்காரன் 1881-ல் பனமா வாய்க்கால் வெட்ட ஆரம்பித்தான். 1889-ல் வேலை நின்றுபோய்விட்டது. கொலம்பியாவுடன் ஒப்பந்தப் பேச்சுகள் ஆரம்பமாயின. பனமாவின் பெரும் மதிப்பை அறிந்த அந்நாடு அல்பப் பணத்திற்காக அதை விற்கத் தயங்கிற்று. வாய்க்கால் ஓடும் வழி நெடுக ஆறுமைல் அகலத்திற்கு அமெரிக்கர் வசம் விட்டுவைப்பதற்காக வாஷிங்டனில் எழுதிய ஒப்பந்தத்தைக் கொலம்பியாவின் ஸெனெட் ஏற்றுக்கொள்ளவில்லை. தம் பிரதிநிதிகளின் கையொப்பத்தைக் கௌரவிக்காத இந்தக் கேவலமான செயல் அமெரிக்கருக்குப் புதிதல்ல; எத்தனையோ முக்கியமான ஒப்பந்தங்களை அமெரிக்க ஸெனெட்டும் நிராகரித்திருக்கிறது! ஆனால் ரூஸ்வெல்ட், இதென்ன அக்கிரமம்! என்று கூச்சலிட்டுக் குறைகூறி கொலம்பிய அரசியல் வாதிகள் பேராசை பிடித்த லஞ்சக்காரர்கள் என்று குற்றம் சாட்டினார். இனித் தாமதித்தால் தன் திட்டங்களில் சில கவிழ்ந்து போகும் என்று பயந்த அவர், டிசம்பரில் காங்கிரஸ் மறுபடி கூடுமுன் வாய்க்கால் ஸ்தலத்தைப் பெற்றுவிடவேண்டும் என்று தீர்மானித்தார். வேறு இரண்டு முக்கியமான விஷயங்களையும் உடனே கவனிக்கவேண்டியிருந்தது. ஒன்று, பழைய யத்தனத்தின்போது 40 மிலியன் டாலர் ஈடுபடுத்திய ஃப்ரெஞ்சுக் கம்பெனி; இரண்டாவது பனமா வாசிகளின் ஆவல். அந்தச் சந்தர்ப்பம் தவறினால் வாய்க்கால் வடக்கே நிகராகுவா (Nicaragua) வில் வெட்டப்பட்டுவிடும் என்று அவர்கள் பயந்தார்கள். அதன் முடிவு என்னவெனில், பனமாக்காரர்கள் புரட்சிக் கலகம் ஆரம்பிப்பார்களோ என்ற சந்தேகம் திடீரென்று ஒரேசமயத்தில் பலருக்குத் தோன்றிற்று! ரூஸ்வெல்டின் நெருங்கிய நண்பன் நடத்திய முக்கியமான பத்திரிகையில் "பனமாக் கலகம் செய்தாலோ?" என்றகட்டுரை வெளியாயிற்று. வாஷிங்டனிலும் அதே பேச்சாக இருந்தது; பனமாக்கரைக்கு போர்க்கப்பல்கள் அனுப்பப்பட்டன. ஃப்ரெஞ்சு ஏஜெண்டுகள் பனமாப் பூசந்தியில் சுறுசுறுப்பாக இருந்தார்கள். 1903-ல் நவம்பர் 3-ஆம்தேதி கொலோன் துறைமுகத்தில்(வாய்க்கால் ஆரம்பிக்க வேண்டிய இடத்தில்) யுத்தக் கப்பல் "நாஷ்வில்" போய்ச் சேர்ந்ததுமே அமெரிக்க வெளிநாட்டுக் காரியாலயம், பனமாவிலிருந்த அமெரிக்கப் பிரதிநிதிக்கு "பூசந்தியில் கலகம் என்று செய்தி கிடைத்திருக்கிறது. தாமதமில்லாமலும் பூர்ணமாகவும் செய்திகள் அனுப்பிக்கொண்டிருக்கவும்" என்று தந்தி அனுப்பிற்று.

பனமாவிலிருந்த அதிகாரி - அவனுக்குத் தெரியாதா, என்ன! - "கலகம் ஆரம்பமாகவில்லை. ராத்திரியில் ஆரம்ப

மாகுமென்று கேள்வி. ஆபத்தான நிலைமை'' - என்று பதில் தந்தி அனுப்பினன்.

ஒன்றிரண்டு மணிநேரம் கழித்து அவன் ''மாலை ஆறு மணிக்குக் கலகம் துவங்கிற்று. ரத்தம் சிந்தவில்லை. தரைப் படை கப்பற்படை அதிகாரிகள் கைது. புது அரசாங்கம் இன்றிரவு அமைக்கப்படும்.''

அமெரிக்கத் துருப்புகள் கரையிறங்கிக் கொலம்பியத் துருப்புகள் கலகத்தை அடக்க முயலாவண்ணம் தடுத்தனர். பனமாவிலிருந்து ஒரு மந்திரி வேகமாக வாஷிங்க்டன் சென்றான்; வேகவேகமாக, புதிய சிறிய ரிபப்லிக் பத்து மிலியன் டாலர் மொத்தத்திலும், குறிப்பிட்ட தொகை வருஷ வாடகையாகவும் பேசி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு, ஐக்கிய நாடு விரும்பிய நிலத்துண்டை வாய்க்காலுக்கு இருபுறமும் ஐந்து மைல் வரை அதற்களித்தது. (கிழக்கே கொலோனில் துவங்கி மேற்கே பனமா வரை வாய்க்காலின் நீளம் 50¾ மைல்; மொத்தச் செலவு 373,600,000 டாலர்.) இந்த ராஜதந்திர நாடகத்தைக் குறிப்பிட்டு பின்னொரு சமயம் ரூஸ்வெல்ட் சொன்னார்—''நான் சம்பிரதாய வழிகளில் செல்வதானால், 200 பக்கத்தில் கண்ணியமான யாதாஸ்து ஒன்று எழுதிக் காங்கிரசுக்குச் சமர்ப்பித்திருக்க வேண்டும்; விவாதம் இன்னும் நடந்து கொண்டிருக்கும். நான் அந்தப் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டு காங்கிரஸைப் பேசவிட்டேன்; பேச்சு நடந்து கொண்டிருக்கும்போது வாய்க்கால் வேலையும் நடந்துகொண்டிருந்தது.'' முற்றிலும் உண்மை. கர்னல் கோதல்ஸின் எஞ்ஜினீரிங் மேதை, வில்லியம் ஸி. கார்கலின் சுகாதார அமைப்பில் மேதை, இவ்விரண்டின் காரணமாக வாய்க்கால் தன் பணியாற்றத் தயாராயிற்று. ஆனால் ரூஸ்வெல்டின் முரட்டு வழி தென் அமெரிக்க வாசிகளுக்கு அதிர்ச்சியும் திகிலும் உண்டாக்கிற்று.

தென் அமெரிக்க (லத்தீன்) ராஜ்யங்களுடன் உறவு மிகச் சிறந்திருக்க வேண்டுமென்பதே தியோடர் ரூஸ்வெல்டின் உண்மையான விருப்பம்; ஆனால் அவருடைய செயல்கள் சிலசமயம் குழப்பமுண்டாக்கின. மூன்றாவது அகில அமெரிக்க மகாநாடு ரியோ ஜனீரோ (Rio Janeiro) வில் கூடிய போது அவர் காரியதரிசி ரூட்-டை தென் அமெரிக்காவில் நட்பை வளர்க்கும் நல்ல எண்ண யாத்திரை நடத்தும்படி அனுப்பினர். லத்தீன் அமெரிக்காவுடன் ஸ்நேகமாக இருப்பதே தம் விருப்பம் என்பதை அவர் தெளிவாக்கினர். மன்ரோ கொள்கை தென் அமெரிக்க ராஜ்யங்களுக்கு முக்கியமான நன்மை புரிவதாகவே அவர் கருதினர். ஆனால் அந்தச் சித்தாந்தத்துடன் அவர் இணைத்த ஒரு உப சித்தாந்தம் அல்லது விளக்கம் சம்பந்தப்பட்டவர்களுக்கு மிகவும் கலக்கமுண்டாக்கி,

விரும்பத்தகாத வகையில் பிரசித்தமடைந்தது. ஒரு தென் அமெரிக்க ராஜ்யம் ஒரு ஐரோப்பிய நாட்டிற்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தாமல் கடன் ஏறிவிட்டாலோ, முறையின்றி நடந்துகொண்டாலோ, அயல் நாட்டாரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தாலோ, அயல்நாட்டு வாசிகளைத் துன்பப்படுத்தினாலோ, அந்த ஐரோப்பிய நாட்டின் கோபத்திற்கும் தென் ராஜ்யத்திற்கும் இடையே நின்று அந்த ராஜ்யத்தைக் காப்பாற்றுவதால், ஐக்கிய நாட்டுக்கு ஒரு தனிப்பொறுப்பு ஏற்படுகிறது; ஆகையால் அந்த ராஜ்யங்களை ஒழுங்காய் நடக்கும்படி செய்வது ஐக்கிய நாட்டின் கடமை என்று ரூஸ்வெல்ட் விளக்கினர். உதாரணமாக, 1904-ல் ஸான்டோ டாமிங்கோ மேற்கூறிய விதத்தில் ஆபத்திலிருந்தபோது, அந்நாடு ஒரு அமெரிக்க நிதி நிர்வாகி மூலமே வரவு செலவு நடத்தவேண்டும் என்று ரூஸ்வெல்ட் ஏற்பாடு செய்தார். அதை மாதிரியாகக்கொண்டு கரீபியன் பிரதேசத்தில் ரக்ஷிக்கப்பட்ட பல சிறு ராஜ்யங்கள் கிளம்பின. அந்த நடவடிக்கையால் அமைதியும் ஒழுங்கும் நிலவின; ஆனல் லத்தீன் அமெரிக்கரின் மனத்தில், இறுதியில் இது கொள்ளையிடும் கொள்கையாக முடியுமோ என்ற திகில் பிறந்தது.

பசிஃபிக் சமுத்திரத்திலும் ரூஸ்வெல்ட் பின்பற்றிய வழி நல்லதும் கெட்டதும் கலந்த பலனளித்தது. ஜப்பானிய அமெரிக்க உறவு கவலையளிக்க ஆரம்பித்தது. ஸான் ஃப்ரான்ஸிஸ்கோ நகரில் பள்ளிக்கூடங்களில் ஜப்பானிய மாணவர்கள் வித்தியாசமாக நடத்தப்பட்டார்கள். ஜனதிபதி அந்த சச்சரவில் தலையிட்டு ஜப்பானியரை சமாதானப்படுத்தி, கல்வி அதிகாரிகளுக்கும் புத்திமதி கூறினர்; மேலும், இனி ஜப்பானியக் கூலியாட்களை வரவழைப்பதில்லை என்ற தீர்மானமும் ஜப்பானியருடன் அவர் வாய் வார்த்தையாகச் செய்துகொண்டார். அதோடுகூட, எச்சரிக்கை செய்து வைப்பதும் நல்லது என்று அவர் நினைத்ததால் அமெரிக்கக் கப்பற்படையை உலகம் சுற்றிவர அனுப்பி, ஜப்பானியத் துறைமுகங்களிலும் தங்கும்படி செய்தார்; அங்கு அமெரிக்கருக்கு மரியாதையான நல்வரவு கிடைத்தது. அவர் அடிக்கடி சொல்வதுண்டு—''இனிமையாகப் பேசு; அதே சமயம் ஒரு மோட்டாத் தடியையும் கைவசம் வைத்திரு.''

காலப்போக்கில், ஐக்கிய நாடு ஒரு உலக சக்தி மாத்திரமல்ல, மூன்று நான்கு மிகப்பெரிய அரசுகளில் அது ஒன்று என்பது மேலும் மேலும் தெளிவாயிற்று. உலக சமாதான விருத்திக்காக ஹாக் நகரில் நடந்த இரண்டு மகாநாடுகளிலும் அது முக்கியமான பங்கெடுத்துக் கொண்டது. உலகம் முழுதிலும் குடிநலக் கொள்கைகளுக்கும் வியாபார சுதந்திரத்திற்

கும் அது ஆதரவளித்தது. ரூஸ்வெல்ட் ஒவ்வொரு சமயம் நோக்கம் அறியாமல் நடந்து கொண்டாலும், டாஃப்ட் அனுசரித்த ராஜதந்திர வழியில் அமெரிக்க வர்த்தகத்தை வளர்த்தாலும், மொத்தத்தில் தென் அமெரிக்காவின் நம்பிக்கையை அது மேலும் மேலும் பெற்றது. நடு நடுவே அல்ப எரிச்சல்கள் வந்து கொண்டே இருந்தாலும் பிரிட்டனையும் பிரிட்டிஷ் ஆதிக்க நாடுகளையும் அது நெருங்கிக்கொண்டே இருந்தது. முதல் உலக யுத்தம் ஆரம்பமானபோது அது ஓரளவு ஒதுங்கியே இருந்தது; ஆனால் ரொம்ப ஒதுங்கியில்லை; சிறிது காலத்தில் அந்தப் பெரிய சுழல் அதையும் உறிஞ்சி இழுத்து விட்டது.

அத்தியாயம் 19

வுட்ரோ வில்ஸனும் உலக யுத்தமும்

வுட்ரோ வில்ஸன்: ஜெஃபர்ஸனுக்குப் பிறகு அமெரிக்க அரசியல் வாழ்வில் பல வகைகளிலும் மிக அதிக கவனத்தைக் கவரக்கூடியவர் வுட்ரோ வில்ஸன். நல்ல வித்துவான், சிந்தனையாளர், பொது வாழ்க்கையின் ஆடம்பரங்களுக்குப் பழக்கமற்றவர், புத்திக்கூர்மையும், உலக ஞானமும், சந்தர்ப்பத்திற்குத் தகுந்த யுக்தியும் படைத்தவர். தீர்க்கதரிசி, லட்சியவாதி, யதார்த்த நிலையை நன்றாகப் புரிந்து கொள்ளக்கூடியவர், சமத்காரமான அரசியல் நாயகர். அரசியலிலும் சர்வதேச விஷயங்களிலும் அவர் நியாயவான். அவருடைய முன்னோர்களிடமும் இந்தச் சிறப்பு இருந்தது. பழங்கால உபசார மரியாதையோடு, வெடுக்கென்று கோபித்து மல்லுக்கு நிற்கும் தன்மை கலந்திருந்தது; நல்ல கொள்கைகளில் ஆவேசம் போன்ற நம்பிக்கையுண்டு; அவற்றை ஆதரிக்கையில் பிடிவாதமான ஆக்ரோஷமும் காட்டுவார். ப்ரையன் போல அவர் பாமர எளிமையுடன் பேசுபவரல்ல; ரூஸ்வெல்ட்டின் நேரடியான துடிதுடிப்பும் கிடையாது; ஆனால் வானைத் தொடும் சொல் வல்லமைக்கும், காவிய சௌந்தரியத்திற்கும் லிங்கனைப் போன்றவர்; அரசியல் நன்கு கற்றவர், அரசாங்க நிர்வாகத்தைப் பற்றிப் பல சிறந்த நூல்கள் எழுதியவர், ஜனாதிபதியின் பதவியைப் பற்றிப் பக்குவமான லட்சியங்கள் கொண்டவர், கட்சி திட்டத்தின் நுட்பங்கள் அறிந்தவர், உலக நாடுகளில் ஐக்கிய நாட்டின் ஸ்தானத்தைத் திட்டமாகப் புரிந்து கொண்டவர், அந்த அறிவுக்கும் கருத்துகளுக்கும் காரிய ரூபமளிக்கத் தயாரானவர். "பரிசுத்தமான திடசித்தம், உயரிய சிந்தனை, பாசமின்மை" என்று காரியதரிசி லேன் குறிப்பிட்டிருக்கிறான்; கூடவே வித்துவத்தின் அகந்தை கொண்டவர்; விட்டுக்கொடுக்க அறியாதவர்; எதிர்ப்பவரிடம் வன்மமுள்ளவர். மனித உறவுகளில் மனிதனை மறந்து கொள்கைக்கு மதிப்பளிப்பவர்; கருத்தளிப்பவனைக்காட்டிலும் கருத்துகளுடன் நட்புக் கொள்பவர்; நிர்வாகத்தில் சொந்த விருப்புக்கு இடம் கொடாதவர்; தான் எதிர்பார்த்த அளவுக்கு உயராத நண்பனை மன்னிக்க அறியாதவர்.

வில்ஸனின் ஜீவியத்தில் பெரும்பாகம் அரசியல் பேராசிரியர், ப்ரின்ஸ்டன் (Princeton) விசுவவித்தியாலயத்தின் அத்யக்ஷகர் என்ற பதவிகளில் வித்தியா பவனங்களின் கம்பீரமான தனிமையில் கழிந்தது. 1910-ல் நியூஜெர்ஸியின் டிமோக்ராட் கட்சி சூத்திரதாரிகள் அவரை வெறும் கௌரவத்துக்காக கவர்னர் ஆக்கினார்கள்; ஆனால் அவர் செயலிலும் கவர்னராகி விட்டார். கோவில்களை அசுத்தப்படுத்தியவர்களை ஏசுநாதர் கோவில்களிலிருந்து விரட்டியதுபோல், வில்ஸன் இரண்டாண்டுகளில் கட்சித் தலைவர்களைக் கலைத்து அரசியல் கோவிலைப் புனிதமாக்கினார்; ஊழல் நிறைந்த நியூஜெர்ஸி லட்சிய மார்க்கத்தில் திரும்பிற்று. இந்த நடவடிக்கைகளில் வில்ஸனுக்குக் கிடைத்த பயிற்சியும் அனுபவமும் பிற்காலத்தில் சிறப்பாக உதவின—துடுக்கான தைரியம், எதிரானியின் எதிர்ப்பைக் கரைக்கும் நிஷ்கபட நடத்தை, கட்சித் தலைவன் என்ற அதிகாரத்தை விட்டுக் கொடாமை, அரசியல் வாதிகளைத் தாண்டி நேரே மக்களுடன் பேசுதல், துரிதமாகவும் கருணையற்றும் தாக்கும் யுத்த தந்திரம், நியூஜெர்ஸியில் நிகழ்ந்த கவனத்தைக் கவரும் சாதனைகளால் வில்ஸனுக்குத் தேசிய முக்கியத்தன்மை கிடைத்தது; ப்ரையன் போன்றவர்களின் ஆதரவு கிடைத்தது; ஜனாதிபதித் தேர்தலுக்குத் தகுதியும் கிடைத்தது. அவருடைய ஒளிவு மறைவற்ற நாணயமும் இணையற்ற தேர்தல் சொற்பொழிவுகளும் ரூஸ்வெல்ட்டைத் தோற்கடிக்கக் கூடிய பெரிய வெற்றியும் அளித்தன.

வில்ஸன் தம் துவக்கப் பிரசங்கத்தில் நடைமுறையில் இருக்கும் குறைகளைப் பட்டியலிட்டு ஆட்சேபித்து, புதுமுறைகளைப்பற்றி வாக்குறுதியளித்தார்: "குடிநலக் கட்சியை நாடு எவ்வாறு உபயோகிக்க இப்பொழுது முயலுகிறது என்பதைப் பற்றி சந்தேகமிராது. தன் திட்டங்களிலும் நோக்கங்களிலும் உண்டாகியிருக்கும் மாறுதலைத் தெளிவுபடுத்த அது உபயோகிக்க முயலும்," என்று கூறி அவர் புதுச் சுதந்திரத்தை

அடைவதற்கான ஆக்கமுறைச் சீர்திருத்தத் திட்டத்தை விவரித்தார்; அது துணிச்சலும் பூர்ணத்துவமும் பெற்றது. மாற்றப்படவேண்டிய குறைகளாவன—தனிப்பட்ட வர்த்தகர்களின் கையாளாகச் சர்க்காரை ஆக்கும் டாரிஃப் விகிதம்; பணத்தை ஒரு சிலர் கையில் திரட்டிக் கொடுப்பதோடு கடன் வசதியைக் குறைக்கும் செலவாணித் திட்டம்; பாட்டாளியின் வாய்ப்புக்களைக் குறைத்து ஸ்வாதீன நிலைகளைக் கட்டுப்படுத்தும் சாஸ்திரத் தொழில் முறை; திறமையற்றதும் கவனிக்கப் படாததுமான விவசாயப் பொருளாதார ஸ்திதி; தனிப்பட்டவரின் லாபத்திற்காக இயற்கை வளங்கள் பயனுக்கப்படுதல்; இவை நீக்க வேண்டியவை. ஆக்கப் பக்ஷத்தில், அரசாங்கம் மனித குலத்தின் சேவையில் தன்னை அர்ப்பணம் செய்துகொள்ளவேண்டும். ஸ்திரீகள், குழந்தைகள், வசதி குறைந்தவர்கள் ஆகியோரின் ஆரோக்கியத்தையும் நலனையும் பாதுகாக்க வேண்டும்.

இந்தச் சீர்திருத்தக் காரியங்களை அமைதியோடும் தீர்க்காலோசனையோடும் முயற்சி வீணாகாத திறமையோடும் நிறைவேற்ற வேண்டும். ஆனால் அது உலகை மறந்த வெறும் விஞ்ஞானப் பரிசீலனையாக மட்டும் உருவாகக் கூடாது.

> "...நாட்டில் ஆழமான கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது; கிளர்ச்சிக்குக் காரணங்கள்—துக்கம் நிறைந்த கம்பீரமான உணர்ச்சிகள், சமூகத் தீமைகளையும் அசட்டை செய்யப்பட்ட லட்சியங்களையும் பற்றிய அறிவு, தீய சக்திகளுக்கு உடந்தையாக இருந்து நெறிபுரண்ட அரசாங்கத்தைக் கண்டு எரிச்சல்—இத்தியாதி நேர்மையும் வாய்ப்பும் கூடிய இந்தப் புது யுகம் நமக்குண்டாக்கும் உணர்ச்சி, நம் ஹிருதயம் என்னும் சங்கீத வாத்தியத்தில் ஸ்வர்க்க லோகத்திலிருந்து—நியாய விசாரணையும் இரக்கமும் முரணுகாத, பற்றற்ற நீதிபதியும் வாஞ்சையுள்ள சகோதரனும் ஒன்றுகக் கூடிய, கடவுள் முனனிலையிலிருந்து—வரும் காற்று கிளப்பும் நாதங்களைப் போலிருக்கிறது. நம் முன்னிருக்கும் வேலை வெறும் அரசியல் நடவடிக்கையல்ல, நம்மை உள்ளும் புறமும் சோதிக்கும் கடினமான கடமை....."

புதுச் சுதந்திரம்—செயல் துறையில்: சொல் அழகோடும் ஆற்றலோடும் இணைக்கப்பட்ட உயரிய ஆதர்சக் கருத்துகள் இவை; எதிர்பாராத வகையில் ஜனாதிபதிப் பதவிக்கு உயர்த்தப்பட்டஇந்தப் பள்ளிக்கூட வாத்தியார் இவற்றிற்குச் சட்ட உருவம் அளிப்பாரா? தாம் சொல்லின் செல்வர் மாத்திரமல்ல, செயல் வர்த்தகர், என்பதை அவர் தாமதமின்றி நிரூபித்தார். விசேஷ சபைக்காக காங்கிரஸ் கூட்டப்பட்டது. ஒரு பழைய பழக்கத்திற்குப் புத்துயிர் அளித்து, வில்ஸன்

நேரிலேயே பேசினார். "டாரிஃப் விகிதங்களை மாற்ற வேண்டும்; தனிச் சலுகை என்ற வாடை சிறிதளவு எந்த நடவடிக்கையில் இருந்தாலும் அதை ஒழித்துவிட வேண்டும்" என்று அவர் கூறினார். இது ஒரு ஆபத்தான சோதனை விஷயம். சிவில் போருக்குப் பிறகுப் பாதுகாப்புச் சுங்கத் திட்டத்தில் விசேஷமான மதபேதம் இருந்ததில்லை; பாதுகாப்புச் சாராரிடமிருந்து க்ளீவ்லண்ட் சிறு மாறுதல்கள்தான் பெற்றிருந்தார்; சூக்ஷ்மமறிந்த ரூஸ்வெல்ட் அந்தப் பக்கம் கண்ணெடுத்துப் பார்க்கவேயில்லை. அலபாமாவிலிருந்து அண்டர்வுட், டென்னஸியிலிருந்து ஹல் ஆகியோர் அவ்விஷயமான மசோதாக்கள் தயாராய் வைத்திருந்தார்கள்; நிர்வாக அதிகாரிகள் சற்றுத் தூண்டியதன பேரில், காங்கிரஸ் தாமதமின்றி அதை ஏற்றது; ஆனால் அது ஸெனட் சபைக்கு வந்த போது, அங்கத்தினர்களின் சுய அபிப்ராயத்தைப் பல சூழ்ச்சிகளாலும் மாற்றப் பாடுபடும் லாபிக்காரர்கள் (Lobbyists) பிணம் தின்னிப் பறவைகள் போல் தலைநகரில் மண்டிப் போனார்கள்; 1894-ன் பெருந்தோல்வியைப் போல் மறுபடி நடைபெறும் என்று கவனிப்பாளர்கள் எதிர்பார்த்தார்கள். அப்பொழுது வில்ஸன் ஒரு பகிரங்கக் கடிதத்தில் லாபியில் நுழைந்து வெளி மனிதர்கள் பிரசாரம் செய்வதைக் காரசாரமாகக் கண்டித்தார். "இது நாட்டிற்கு முக்கியமான, ஆபத்து நிறைந்த விஷயம்—தோட்டம், துரவு, சுரங்கம் முதலிய இடங்களில் உழைப்பவர்கள் சபையின் ரேழி அறைக்கு வர முடிவதில்லை; ஆனால் நுட்பமறிந்த சுயநலக் காரர்கள் செல்வாக்குடன் செயற்கையான அபிப்பிராயம் உண்டாக்கித் தங்கள் சொந்த லாபத்திற்காகப் பொதுமக்களின் நன்மைக்கு விரோதமான காரியங்களைச் செய்விக்கிறார்கள்," என்ற அவருடைய வார்த்தைகள் பயனளித்தன. பதவியேற்ற ஆறு மாதங்கள் கழித்துத் தேர்தல் காலத்து வாக்குறுதிப்படி ஒரு டாரிஃப் சட்டத்தில் கையொப்பமிடும் நிருப்தி வில்ஸனுக்குக் கிடைத்தது; 50 வருஷத்திற்கும் அதிக காலத்தில் அதுவே முதல் உண்மையான வரித்தாழ்வு.

நாட்டு மக்களுக்கு அரசாங்க விஷயங்களில் அக்கறை பிறந்தது; சொல்லும் செயலும் ஒத்திருக்கும் ஒரு நிர்வாகியை அவர்கள் பாராட்டினார்கள். வில்ஸன் தன் கட்சிக்கு ஓய்வே கொடுக்கவில்லை. அது டாரிஃப் விகிதங்களை சிரமப்பட்டு நிர்ணயித்துக் கொண்டிருக்கும் போதே, வில்ஸன் தன் பதவித் துவக்கப் பிரசங்கத்தை நினைவுபடுத்தி "பணத்தை ஒரு சிலர் கையில் சேரவிட்டு, கடன் வசதிகளைக் கட்டுப்படுத்தி, தன் பாண்டுப் பத்திரங்களை 50 வருஷத்திற்கு முன் விற்கும் நிலையில் அரசாங்கத்தை வைத்த பாங்கு அமைப்பும், செலாவணித் திட்டமும் சீர்திருத்தப்பட வேண்டும்" என்றார்;

இதுவும் டாரிஃப் போலவே அரசியல் வெடிமருந்து நிறைந்த யோசனை. நெளிவு சுளிவற்றச் செலாவணித் திட்டத்தின் கீழ் நாடு வெகு நாட்களாகத் துன்பப்பட்டது உண்மையே; நோய் நிர்ணயத்தை அநேகமாய் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்—சிகிச்சை முறையில்தான் மதபேதம் இருந்தது. ரூஸ்வெல்ட்டின் காலத்தில் தற்காலிகச் சட்டங்கள் இருந்தன—அந்நேரத்து ஆபத்தைக் கடக்க வேண்டிய அளவுக்கு நோட்டுகள் வெளியிடத் தேசியப் பாங்குகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது; ஒரு கமிஷன் விசாரணைகள் நடத்தி இதர தேசப் பாங்குகளின் பழக்க வழக்கச் சட்டங்களைப் பற்றி விஸ்தாரமான யாதாஸ்துத் தொடர் வெளியிட்டது. ஆனல் அமெரிக்கப் பாங்கு முறையை ஆதியோடந்தமாகத் தட்டித் துடைத்துச் செப்பனிட்டு மாற்றியமைப்பது எப்பொழுதோ நடந்திருக்க வேண்டிய வேலை. பாங்கு முதலாளிகளெல்லாம் ஒன்றுகூடி நிலைமை மாறுமளிருப்பதற்கான சட்டம் இயற்ற முயன்றார்கள்; எல்லாத் துன்பத்திற்கும் ஆதி காரணம் பணப் பிரச்னை என்று வெகு காலமாகவா தித்து வந்த ப்ரையன் கடன் விஷயம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று திடமாக இருந்தார். வில்ஸனுக்கு செயல்முறை நுட்பங்கள் அதிகமாகத் தெரியாது; ஆனல் ஐக்கிய நாட்டின் முதல் இரண்டு பாங்குகளின் வரலாறுகளைக் கவனமாகப் படித்துப் பயனடைந்தவர்; சுய ஆதீன கஜானு முறையையும் ஆராய்ந்து அறிந்தவர்; ஆகவே அவர் ப்ரையன் வெளியிட்ட கருத்துக்களை ஆமோதித்தார். ''கட்டுப்படுத்தும் பொறுப்பு தனிப்பட்டவர் கையில் இருக்கக் கூடாது; அரசாங்கத்தின் கையில் இருக்க வேண்டும்; வியாபார ஸ்தலங்களுக்கும் தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் பாங்கு உபகரணமாக உதவ வேண்டுமே தவிர எஜமானனுக இருக்கக் கூடாது,'' என்றூர் அவர். நீண்ட விவாதத்தின் பிறகு உண்டான ஃபெடரல் ரிஸர்வ் சட்டம் இத்தேவைகளைப் பூர்த்தி செய்தது. ஒரு மத்திய ஸ்தலத்தில் திரண்டிருந்த அதிகாரத்தை அந்தச்சட்டம் பிரித்து, ஸ்தல முக்கியத்துவம் அளித்தது; கவனியாது விடப்பட்டிருந்த தெற்கு, மேற்கு பிரதேசங்களில் பாங்கு வசதிகள் அதிகரிக்கப்பட்டன; அரசாங்கக் கட்டுப்பாட்டுடன் வெளியிடவிருக்கும் ஃபெடரல் ரிஸெர்வ் நோட்டுகள் செலாவணியின் விறைப்பைச் சற்றுத் தளர்த்தி விடும். மிக அவசியமான சமயத்தில் அந்தத் திட்டம் உருவாயிற்று; அதல்லாமல், முதல் உலக யுத்தத்தின் நெருக்கடிகளை அரசாங்கம் சமாளித்திருக்க முடியாது.

ட்ரஸ்டு கட்டுப்பாடு புது நிர்வாகத்தின் மூன்ருவது பெரிய சட்ட சாதனையாகும். ஷெர்மன் சட்டம் பெரிய முதலாளி-இணைப்புகளைக் கட்டுப்படுத்துவதைக் காட்டிலும்

தொழிலாளர்களுக்குத்தான் சத்துருவாக நின்றது; சாலைத் தொழில், பாங்கு, போக்குவரத்து, இவற்றின் நிர்வாக அதிகாரத்தை ஒரு சிலர் கையில் திரட்டும் யத்தனம் நடந்து கொண்டே இருந்தது என்பது சமீப கால ஆராய்ச்சிகளால் வெளியாயிற்று. டாரிஃப், பாங்கு சீர்திருத்த வேலை ஓரளவு முடிவடைந்ததும் வில்ஸன் மற்ற வாக்குறுதிகளின் பக்கம் திரும்பினர். க்லெய்டன் (Clayton) ட்ரஸ்ட்-எதிர்ப்புச் சட்டம் (1914) பல தூர்-பழக்கங்களுக்கு இலக்கணம் கூறி, (ஏகபோக உரிமைக்கு வழிகாட்டக் கூடிய) விலை பேதங்களைத் தடுத்து, பொது டைரக்டர்கள் மூலம் ''கொக்கி கோக்கப்பட்ட'' பெரிய கார்ப்பொரேஷன் அமைப்பை ஆட்சேபித்ததோடு, ட்ரஸ்ட் எதிர்ப்புச் சட்டத்தை மீறிய குற்றம் கார்ப்பொரேஷன் டைரெக்டர்களைத் தனிப்பட்ட முறையிலும் சாரும் என்று கூறிற்று. அதே சமயத்தில், வியாபார நிர்வாகங்களை ஆராயவும், நீதித் தவருன முறைகளைப் பற்றிய குற்றங்களை விசாரிக்கவும், தீங்கிழைக்கும் பழக்க வழக்கங்களுக்குத் தடை உத்தரவு போடவும் ஒரு ஃபெடரல் வியாபாரக் கமிஷன் நிறுவப்பட்டது.

குடியானவர்களையும் பாட்டாளிகளையும் சட்டசபை மறந்து விடவில்லை. ''ஃபெடெரல் பண்ணைக் கடன் சட்டத்'' தின் மூலம் குடியானவர்களுக்குக் குறைவான வட்டியில் கடன் கிடைப்பது சாத்தியமாயிற்று; ''பண்டகசாலைச் சட்டத்''தின் மூலம், அறுவடைப் பொருள்கள்மேல் கடன் வாங்குவது சுலபமாயிற்று; முன்னுட்களில் ஜனக்கட்சி இட்ட ஒரு திட்டம் அதன் மூலம் பெரும்பாலும் உருவாயிற்று. ''க்லேடன் ட்ரஸ்ட் எதிர்ப்புச் சட்டத்''தின் ஒரு நிபந்தனையின்படி தொழிலாளிச் சச்சரவுகளில் தடை உத்தரவு செல்லாது என்றிருந்தது; ஆனல் நீதிஸ்தலங்கள் அந்த ஷரத்தை ஒப்புக் கொள்ளவில்லை. கைத்தொழிற்சாலைகளில் சிறுவர்களுக்கு வேலை கொடுப்பதை நிறுத்த இரண்டு சட்டங்களைக் காங்கிரஸ் இயற்றிற்று; ஆனல் அவற்றை நீதிஸ்தலத் தீர்ப்புகள் ரத்து செய்துவிட்டன. 1915-ல் அமுலுக்கு வந்த ''லா ஃபாலெட் கடல்-பாட்டாளிச் சட்டம்'' பல ஆண்டுக் கொடுமைகளிலும் துன்பங்களிலுமிருந்து மாலுமிகளைக் காப்பாற்றிற்று; அடுத்த வருஷத்து ''ஆடம்ஸன் சட்டம்'' ரெயில்வே பாட்டாளிகளைப் பற்றியது—அதன்படி ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை என்ற உயர் வரம்பு ஏற்பட்டது.

இவ்வாறு, மூன்று வருஷத்தில், லிங்கனுக்குப் பிறகு வேறு ஒரு ஜனதிபதியும் இயற்றுத அளவுக்கு முக்கியமான சட்டங்கள் வில்ஸன் இயற்றினர். கட்சித் தலைமை வகிக்கும் ஜனதிபதியும் நிர்வாகத் தலைமை வகிக்கும் காங்கிரஸும் சட்ட ரூபமளிக்கக்கூடிய இத்தனை வாய்ப்புகள் இருந்தன என்று

பலர் நினைத்திருக்கக் கூட மாட்டார்கள். ஆபத்தான நிலையில் ஜனநாயக முறை வேகமாகச் செயலாற்றி காரியசித்தி பெற முடியும் என்று அவர் நிரூபித்துவிட்டார்.

குடிநலமிக்க அயல்நாட்டுக் கொள்கை. உள்நாட்டுக் கொள்கைகளைப் போலவே வில்ஸனின் வெளிநாட்டுக் கொள்கைகளும் அவருக்கு முன்னிருந்த ஜனாதிபதியின் கொள்கைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. அயல் நாட்டு விவகாரங்களில் ரூஸ்வெல்ட் உற்சாகத்துடன் ''பெரிய தடி''யைச் சுழற்றித் தம் காரியங்களைச் சாதித்துக்கொண்டார்; டாஃப்ட் பண சக்தியால் அரசியல் செல்வாக்கை அதிகரிக்க (''டாலர் ராஜதந்திரத்தை'' அனுசரிக்க) முயன்றார். இக் கொள்கைகளின் காரணமாக ஐக்கிய நாடு உலக விவகாரங்களில் முக்கியமான இடம் பெற்றது என்பதில் சந்தேகமில்லை; ஆனால் தென் அமெரிக்க ராஜ்யங்களின் மனஸ்தாபம் ஏற்பட்டது; மேலும், தனக்கு உண்மையான சம்பந்தம் இல்லாததும் தற்செயலாக ஏற்பட்டதுமான ராஜதந்திர, வியாபார நடவடிக்கைகளில் ஐக்கிய நாடு ஈடுபட்டது ஆபத்தில் முடியலாம். சைனுவுக்குப் பாங்குகள் கடன் உதவி அளிப்பதாக இருந்த யோசனைக்கான அரசாங்க அங்கீகாரத்தை வாபஸ் வாங்குவது வில்ஸன் பதவி ஏற்றதும் செய்த முதல் காரியங்களில் ஒன்று; ''கடனளிப்பின் ஏரத்துக்களையும் அப்பொறுப்பால் ஏற்படக் கூடிய சிக்கல்களையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை'' என்பதே அவர் கூறிய காரணம். அதே வாரத்தில், தென் அமெரிக்க ராஜ்யங்களுடன் ''நட்பை வளர்த்து அவற்றின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவது'' தன் உத்தேசம் என்று அவர் பிரகடனம் செய்தார்; சிறிது காலத்திற்குப் பிறகு செய்யப்பட்ட ஒரு பிரசங்கத்தில் டாலர் ராஜதந்திரத்தைக் குறிப்பாக எதிர்த்ததோடு, ஐக்கிய நாடு இனி எக்காலத்திலும் போர் வெற்றியால் புதுப் பிரதேசம் சம்பாதிக்காது என்று அவர் வாக்களித்தார். கரீபியன் கடல் வட்டாரத்திலும் மத்திய அமெரிக்கக் குடியரசுகளிலும் பலவற்றின் விவகாரங்களில் ஐக்கிய நாடு ஈடுபடும்படியான சந்தர்ப்பங்கள் எழுந்தன; ஆனால் தம் நிர்வாகக் காலம் முழுதிலும் அந்த ஈடுபாட்டைக் காரணமாகக் கொண்டு லாபம் பெற வில்ஸன் திடமாக மறுத்தார்.

வில்ஸனின் கொள்கை நடைமுறையில் எவ்வளவு கடினமானது என்பதற்கு மெக்ஸிகோ சம்பந்தமான நிகழ்ச்சிகளை உதாரணமாகக் கூறலாம். அதிர்ஷ்டம் கெட்ட அந்த நாடு 35 வருஷ காலம் பொர்ஃபீரியோ டயஸ் என்பவனின் கொடுங்கோல் ஆட்சியால் மிகவும் கஷ்டப்பட்டது; அவன் தன் மக்களைப் பண்ணை அடிமை நிலைக்குத் தாழ்த்தி, அயல் நாட்டு சுரங்க முதலாளிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் நாட்டை விற்று விட்டான். 1911-ல் நடுவகுப்பாரும் அல்பக் குடியானவர்களும் கலகம் செய்து கிளம்பி டயஸைத் துரத்தியடித்து, உதாரக் கட்சியைச்சேர்ந்த ஃப்ரான்ஸிஸ்கோ மாடெரோ-வை ஜனாதிபதியாக்கினர்கள். மெக்ஸிகோ-வுக்கு நன்னாள் பிறந்து விட்டதென்று தோன்றிற்று; ஆனால் இரண்டு வருஷத்திற்குள் விக்டோரியானோ ஹுவெர்டா-வின் கீழ் ஒரு எதிர்ப் புரட்சி கிளம்பி மாடெரோ-வைக் கொன்றுவிட்டது. எண்ணெய், ரயில் பாதை, சுரங்கம், நிலம்—இவற்றில் கொள்ளை லாபம் அடித்த பழைய அயல்நாட்டு முதலாளிகள் டயஸின் கீழ் மறுபடி லாபகரமான நாட்கள் திரும்புவதை அறிந்து மிக மகிழ்ச்சியடைந்தார்கள்; பெரிய அரசுகளில் பெரும்பாலானவை ஹுவெர்டாவை புது ஜனாதிபதியாக ஏற்க விரைந்தன. ஆனால் வில்ஸன் அவ்வாறு செய்யவில்லை. ஹுவெர்டாவை ஒப்புக்கொண்டால் கொலையை மன்னித்ததாகும் என்று அவருக்குத் தோன்றிற்று; சுய லாபத்தையே நோக்கமாகக்கொண்ட அமெரிக்க வர்த்தகர்களின் கெஞ்சுதலுக்கு அவர் செவிசாய்க்கவில்லை. ''ஆளப்படுவோரின் சம்மதத்தை ஆதாரமாகக் கொண்டதே நியாயமான ஆட்சியாகும்; பொது விழிப்பறிவையும் சம்மதத்தையும் சட்டத்தையும் ஆதாரமாகக்கொண்ட ஒழுங்கு நிலை இல்லாமல் சுதந்திரம் சாத்தியமில்லை,'' என்று அவர் விளக்கினர். பிற்காலத்தில் இன்னும் பெரிய ஆபத்தில் இக்கொள்கையையே அவர் லட்சியமாகக்கொண்டதைக் காண்போம். நீதி மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு இயல் நடைமுறைக்கு ஒத்துவராது, முக்கியமான காரியங்கள் தடைபடும் என்று அக்காலத்திலும் பிற்காலத்திலும் பலர் கண்டித்தனர். கொடுஞ்செயல்களின் முடிவுகளை ஒப்புக் கொண்டாலோ, சட்டமின்மையைப் பார்த்தும் பாராதது போலிருந்தாலோ விளைவு எத்தனை நாசகாரியாகும் என்பதை வில்ஸன் உணர்ந்தார்; ஒரு தலைமுறை காலத்திற்குப்பின் ஃப்ராங்லின் டி. ரூஸ்வெல்டும் அதையே உணர்ந்தார்.

இரத்தம் தோய்ந்த ஹுவெர்டாவை ஏற்காதது மட்டுமல்ல; பனமா வாய்க்கால்கட்டணங்களை யொட்டிச் சலுகைகள் பெற்று நன்றி பாராட்டிய பிரிட்டனின் ஆதரவையும் வில்ஸன் பயன்படுத்திக் கொண்டார். மெக்ஸிக உறவு வேகமாகக் கெட்டுக்கொண்டிருந்தது; டாம்பிகோ என்னுமிடத்தில் சில அமெரிக்க மாலுமிகளை ஹுவெர்டா கைது செய்ததும், வில்ஸன் சட்டென்று வீரா க்ரூஸ் துறைமுகத்தில் படைகளை இறக்கினர். யுத்தம் நடந்தே தீரும்போலிருந்தது, ஆனால் வில்ஸன் லகானைத் திறமையுடன் பிடித்திருந்தார். ''மெக்ஸிக மக்கள் நம் நண்பர்கள், போர்மூலம் அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது; தற்கால மெக்ஸிக அரசாங்கத்தைத்தான் அழிக்க வேண்டும்,'' என்னும் பேதத்தை விளக்கிப் போருக்காகப் போராடிய தன் நாட்டாரை அடக்கியதோடு, ஹுவெர்டாவை

மேலும் மேலும் அநீதியில் மூழ்கும்படிச் செய்தார். பிறகு சமயம் பார்த்து அவர் தென் அமெரிக்க ராஜ்யங்களை ஐக்கிய நாட்டுக்கு இணையாகப் பாவித்த பிரசாரத்தைப் பயன்படுத்தி, மெக்ஸிகோவின் நிலையை சீர்படுத்த ஆர்ஜென்டினு, ப்ரேஸில், சிலி ஆகிய தென் அமெரிக்க ராஜ்யங்களின் ஒத்துழைப்பை நாடினார். அவை சம்மதித்து முன்வரவே ஹுவெர்டா நாட்டைவிட்டு ஓடினான்; ''சட்டமுறைக் கட்சி''யின் தலைவனான கரான்ஸா பதவி யேற்றான். அதன் பிறகுங்கூடத் துன்பங்கள் இருந்துகொண்டே இருந்தன; மெக்ஸிகக் கொள்ளைக் கூட்டத் தலைவன், பாஞ்சோ வில்லா, நியூ மெக்ஸிகோவிலுள்ள கொலம்பஸ் மேல் கொள்ளைத் தாக்குதல் நடத்தியபோது, அவனைத் தண்டிப்பதற்காக ஜெனரல் பெர்ஷிங்கின் தலைமையில் வில்ஸன் ஒரு அவசரப் படையை அனுப்பினார். அப்படையெடுப்பால் கரான்ஸாவுக்கு மனத் தாங்கல் உண்டாயிற்று; அமெரிக்கத் ''தீவிர தேசாபிமானிகள்''—தம் நாட்டை மிகவும் உயர்த்தி அயல் நாடுகளைப் பழிப்பவர்கள்—போர் நடந்தாக வேண்டுமென்று கூவினார்கள்; ஆனால் அமைதி கலையவில்லை; தன் துன்பங்களுக்குப் பரிகாரம்தேட மெக்ஸிகோவுக்கு அவகாசம் கிடைத்தது. ''கவனித்துக்கொண்டே பொறுமையுடன் காத்திருக்கும்'' கொள்கையைத் திடசித்தமின்மை, பயங்காளித்தனம் என்று சொல்லிப் பலர் வில்ஸனைக் கண்டித்தார்கள்; ஆனால் அக்கொள்கை இரண்டு காரியங்கள் சாதித்தது—மெக்ஸிக மக்களுக்கு நன்மை ஏற்பட்டது; லத்தீன் அமெரிக்க ராஜ்யங்களின் நம்பிக்கையை ஐக்கிய நாடு சம்பாதித்துக் கொண்டது.

வேறு இரண்டு க்ஷேத்திரங்களிலும் வில்ஸனின் நிர்வாகம் தன் சிரத்தையைக் காட்டிற்று—அமைதி ஸ்தாபனம், உடன்படிக்கை ஒப்பந்தங்களின் புனிதத் தன்மை, தேசவிதேசச் சச்சரவுகளையும் பஞ்சாயத்து மூலம் தீர்க்கமுடியும் என்ற நம்பிக்கை ப்ரயனுக்கு வெகு நாட்களாக உண்டு; அச்சமயம் அவர் வெளிநாட்டு இலாகாவின் தலைவராக இருந்தார், வில்ஸனின் சம்மதத்துடன் அவர் ''தாபம் தணிய'' அவகாசமளிக்கும் நிபந்தனைகள் தயாரித்து, அயல் நாடுகளுடன் உடன்படிக்கைகள்செய்துகொண்டார். நாட்டின்கீர்த்தியைப் பாதிக்கும் பிரச்னைகள் உள்பட எல்லாவற்றையும் சமரஸ மத்தியஸ்தப் பேச்சால் தீர்க்க அவை இடமளித்தன; குறைந்த பக்ஷம் ஒரு வருஷகாலமாவது பஞ்சாயத்துக் குழுவின் முன் இருந்த பிறகுதான் போர் துவக்க வேண்டும் என்பது ஒரு முக்கிய ஷரத்து. 22 நாடுகள் இந்த உடன்படிக்கையை ஒப்புக்கொண்டன; எட்டு ஒப்புக்கொள்ளவில்லை; ஜெர்மனி மிகக் கண்டிப்பாக மறுத்தது; ஜப்பான் ஏற்கெனவே அயல் நாடுகளிடம் கருணையற்று நடந்துகொள்ள ஆரம்பித்து விட்டது. (முடிவில் அது ஐக்கிய நாட்டோடேயே போரிட்டது); 1915-ல் ஜப்பான் அபகீர்த்தியளிக்கும் 21 விஷயங்களை வற்புறுத்தி சைனுவுக்குச் செய்தியனுப்பியபோது, அமெரிக்க வெளிநாட்டு இலாக்கா ஆட்சேபித்து, ''திறந்த கதவு''க் கொள்கைக்கும் ர்வதேசசச் சட்டத்திற்கும் முரணான பாதகச் செயல் அது என்று கூறிற்று.

உலக யுத்தமும் நடுநிலையும்: ஆனால் ஐரோப்பாவில்தான் அமெரிக்க அமைதிக்கு அதிக ஆபத்து விளைய இருந்தது. 1914, ஜூன் 28-ஆம்தேதி ஸெர்பியாநாட்டுத்தசாபிமானிஒருவன்துப்பாக்கிப் பிரயோகம் செய்தான்; அதன் எதிரொலி உலகமெல்லாம் முழங்கிற்று; ஐந்து வாரத்திற்குள் ஐரோப்பிய நாடுகள் மிகப்பெரிய யுத்தத்தில் ஈடுபட்டன. அமெரிக்கர் திகைத்து நம்பமுடியாத நிலையில் இருந்தனர். அமெரிக்கா நடுநிலை வகிக்கும் என்று ஜனாதிபதி வில்ஸன் பிரகடனம் செய்தபோது, அது நாட்டின் ஒருமனப்பட்ட கருத்து; செயலில் மாத்திரமல்ல, எண்ணத்திலும் நடுநிலை வேண்டும் என்று அவர் விளக்கிய போது அமெரிக்க மக்களில் பெரும்பாலோரின் ஆதரவு அவருக்கிருந்தது.

ஆனால் 1939-ன் போரைப்போலவே 1914-ன் போரிலும் அமெரிக்கர், இது நம் விஷயமல்ல என்று உதாசினமாக இருக்க முடியவில்லை; இறுதியில், சிந்தனையிலும் சரி, அரசியல் கொள்கையாகவும் சரி, நடுநிலை வகிப்பது இயலாத காரியமாயிற்று. போர் துவங்கியதிலிருந்தே அமெரிக்கர், பெரும்பாலும், பிரிட்டன், ஃப்ரான்ஸ், பெல்ஜியம் ஆகிய ''நேசதேசத்தாரின்'' நலனையும் வெற்றியையும் விரும்பினர்கள். அவர்களுக்கும் பிரிட்டிஷ் மக்களுக்குமிடையே பண்பு, பரம்பரைத் தொடர்பு, பொது ஸ்தாபனங்கள், பொது மனப்பான்மை முதலான பலவகைப் பரம்பரைப் பந்தங்கள் இருந்து வந்தன; புரட்சியின்போது ஃப்ரெஞ்சுக்காரர் அளித்த உதவியும், பெல்ஜிய ஃப்ரெஞ்சு மக்களின் சூரத்தனமான எதிர்ப்பும் அவர்களுடைய மனத்தில் ஆழப் பதிந்திருந்தன. ஒரு சில சிறு கூட்டத்தார்—பழைய இரத்த பாசத்தை மறக்க இயலாத ஜெர்மன்-அமெரிக்கர், எப்பொழுதுமே பிரிட்டனை வெறுத்து நின்ற ஐரிஷ் அமெரிக்கர் ஆகியோர், மத்திய ஐரோப்பிய அரசுகளிடம்—எதிரியிடம்—அனுதாபம் காட்டினர். பசிஃபிக் சமுத்திரத்திலும், சைனுவிலும், கரீபியன் கடலிலும் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளின் கருணையற்ற செயல்களும், ஜெர்மன் அறிவாளிகளின் இறுமாப்பும், ராஜதந்திரிகளின் விறைப்பும் யுத்தம் ஆரம்பிப்பதற்கு வெகுகாலம் முன்பே அமெரிக்கருக்கு வெறுப்பு உண்டாக்கிவிட்டன. மேலும், சமுதாய அமைப்பிலும் அரசியல் அமைப்பிலும் ஜெர்மானியர் சர்வாதிகாரத்தை விரும்பினர் என்பது தெளிவாயிற்று; ஐரோப்பா

வில் அவர்கள் முக்கியத்துவம் பெற்றுல் இக் கொள்கை பேதத்தின் காரணமாக அவர்களுக்கும், மக்களின் அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்ட அமெரிக்காவுக்கும் இடையே தகராறு உண்டாகும் என்பது திண்ணம்.

நேசதேசத்தாரிடம் அனுதாபம், ஜெர்மன் வெற்றி பயங்கரமானது என்ற எண்ணம், இரண்டு காரணங்களும் இறுதியில் அமெரிக்கக் கொள்கையைத் தீர்மானிக்க உதவின; அரசியல் காரணங்களேயும் அபிமானக் காரணங்களேயும் பொருளாதாரச் சிந்தனைகள் வலுப்படுத்தின. அமெரிக்க மக்கள் பிரிட்டனுக்கும் ஃப்ரான்ஸுக்கும் பெருந்தொகைகள் கடன் கொடுத்திருந்தார்கள். அமெரிக்கத் தொழில் ஸ்தாபனங்கள் ஆங்கில ஃபிரெஞ்சு யுத்தத்தேவைகளுக்குத் தக்கபடிமாற்றியமைத்துக் கொண்டு பீரங்கி, துப்பாக்கி, வெடிகுண்டு மருந்து முதலான தளவாடங்கள் ஏராளமாக ஏற்றுமதி செய்து கொழுத்த லாபம் பெற்றன. அமெரிக்கப் பாங்குகள் நேசதேசத்தாரின் ஏஜெண்டுகளாக இருந்தும், கடன் பணம் எழுப்பியும், கியாரண்டி அளித்தும் உதவின. வியாபார மந்தத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அமெரிக்க விவசாயிகள் இங்கிலாந்துக்கும் ஃப்ரான்ஸுக்கும் கோதுமை, பருத்தி, பன்றியிறைச்சி போன்ற பொருள்களே நல்ல லாபத்தில் விற்றார்கள். மத்திய ஐரோப்பிய நாடுகளுடன் வியாபாரம் மிகக் குறைவாகவே இருந்தது; கடல்களில் பிரிட்டிஷார் உண்டாக்கிய தடைகளால் நடுநிலை நாடுகளுடனும் போக்கு வரத்தும் வியாபாரமும் நின்றிருந்தன.

ஆனால் இப்பொருளாதாரக் காரணங்களைக் கொண்டே வில்ஸனும் அமெரிக்க மக்களும் போரில் சேர்வது அவசியம் என்று தீர்மானிக்கவில்லை; ஜெர்மனியின் "பயங்கரத்தன்மையே" அதற்குக் காரணம். வியாபாரக் கப்பல்களே முழுகடிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் உபயோகிக்கப்பட்டன; அந்நிலையில் கடலில் தத்தளிக்கும் மாலுமிகளையும் பிரயாணிகளையும் யுத்த தர்மப்படிக் காப்பாற்றுவது இயலாத காரியமாயிற்று. 1915-ல் ஆயிரத்து நூறுக்கும் அதிகமான உயிர்களுடன் பிரிட்டிஷ் கப்பல் "லூசிடேனியா" கடலடிக்கு அனுப்பப்பட்டபோது, 128 அமெரிக்கரும் இறந்ததால் பெருந்திகிலும் கடுங்கோபமும் நாட்டைக் கவ்வின. ஜெர்மனி பிழையை ஒப்புக்கொண்டு திருந்துவதாக வாக்களித்தது; வில்ஸன் நாட்டை சாந்தப்படுத்தி வைத்திருந்தார்; ஆனால் அமெரிக்கா போரில் கலக்கத்தான் வேண்டும் என்று நினைக்கும் அமெரிக்கரின் எண்ணிக்கையும் தீவிரமும் அதிகரித்தன. இதற்கிடையே போருக்குச் சீக்கிரம் முடிவு ஏற்பட்டால்தான் அமெரிக்கா போரில் இழுபடாமல் இருக்கும் என்ற ஒரே அபிப்பிராயம் வில்ஸனுக்குத் தோன்றிற்று. 1916 முழுதிலும், போரின்

நோக்கங்கள் என்ன என்று தெளிவாக்கும்படி இரு கட்சியாரையும் வற்புறுத்துவதிலும், போருக்குப் பின் உலக வாழ்க்கையைச் சீராக அமைப்பதற்கான பூர்வாங்கக் காரியங்கள் செய்வதிலும் தீரத்துடன் அவர் உழைத்தார்.

1916-ன் தேர்தலிலும் நாடு வில்ஸனை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தது; "நாட்டைப் போரில் கலக்காமல் காப்பாற்றியதே" அதற்குக் காரணம். ஆனால் அவ்விஷயமாக அவர் வாக்குறுதி ஒன்றும் அளிக்கவில்லை; "எவ்விலை கொடுத்தும் அமைதியை வாங்குவதாக" அவர் கூறவில்லை. உண்மையில் 1916-ன் துவக்கத்திலேயே அவர் தம் மக்களுக்கு அளித்த எச்சரிக்கையை ஜெர்மன் யுத்தத் தலைவர்கள் கவனித்து ஏற்றுக் கொண்டிருந்தால் நலமாயிருந்திருக்கும்;

> இந்நாடு போரில் கலக்காமல் காப்பாற்றப்படும் பொறுப்பை என்னிடம் விட்டிருக்கிறீர்கள் என்பதை நானறிவேன்; இதுவரை காப்பாற்றிவிட்டேன்; தெய்வம் அனுகூலமாக இருந்தால், முடிந்தவரை இனியும் அவ்வாறே செய்வேன் என்று வாக்களிக்கிறேன். ஆனால் நீங்கள் எனக்கு இன்னொரு கடமையும் அளித்திருக்கிறீர்கள்—ஐக்கிய நாட்டின் கௌரவத்திற்குப் பழுதோ ளங்கமோ ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுவதே அக்கடமை. ஆனால் அது என் வசமில்லை. பிறநாடுகளின் நடத்தையைப் பொறுத்தது அது; ஐக்கிய நாட்டின் அரசாங்கத்தைப் பொறுத்ததில்லை.

1917-ன் ஆரம்பத்தில், ஜெர்மனி ஒரு திட்டமிட்டது. ஆறே மாதத்தில் இங்கிலாந்தை உணவில்லாமல் தவிக்கடிக்க முடியும் என்றும் அதற்குள் அமெரிக்க உதவி பயன்படும் அளவுக்கு விருத்தியடையாது என்றும் கணக்கிட்டு, தட்டு தடையின்றி நீர்மூழ்கிக் கப்பல்கள் மறுபடித் தாக்குதல் நடத்தும் என்று ஜெர்மனி விளம்பரம் செய்தது. சில வாரங்களுக்குள் எட்டு அமெரிக்கக் கப்பல்கள் கடலடிக்கு அனுப்பப்பட்டன. ஐக்கிய நாட்டை மெக்ஸிகோவோடும் ஜப்பானோடும் போரில் மாட்டிவைக்க நடந்த ஒரு சதியும் வெளியாகி அமெரிக்கருக்குக் கோபமூட்டிற்று. கௌரவத்தைக் காப்பாற்றுவது, அமைதி கலையாமல் பார்த்துக்கொள்ளுவது, இரண்டும் "முரணை, சாத்தியமற்ற" காரியங்கள் ஆகிவிட்டன; ஏப்ரல் 2-ஆம் தேதி வில்ஸன் போர்ப் பிரகடனம் செய்வதற்குக் காங்கிரஸிட அனுமதி கேட்டார்:

> ..இந்த மகத்தான, சமாதான இதயம் கொண்ட நாட்டைப்போருக்கு—மிகப்பயங்கரமானதும்நாசகாரியுமான யுத்தத்திற்கு—மானிட நாகரிகத்தையே தராசில் வைத்துச் சீர்தூக்கும் சோதனைக்கு இழுத்துச்செல்லு

வது திகிலுண்டாக்கும் செயல். ஆனால் அமைதியைக் காட்டிலும் நியாயத்தின் மதிப்பு அதிகம்; உயிரினும் அரியதாக நாம் கருதும் கொள்கைகளுக்காக—குடிநல ஆட்சிக்காக, அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அரசாங்கத்தில் பங்குகொள்ளும் உரிமைக்காக, சிறு நாடுகளின் உரிமைக்காக, சுதந்திரத்திற்காக, சுதந்திர நாட்டார்கள் ஒன்றுகூடி எல்லா நாடுகளுக்கும் அமைதியும் பத்திரநிலையும் அளித்து, உலகத்திற்கே சுதந்திரம் அளித்து, எங்கும் நியாயத்தை அரியாசனத்தில் அமர்த்துவதற்காக—நாம் போரிடுவோம். அக்கடமைக்காக நாம் நம் உயிரையும் சொத்தையும், அர்ப்பணம் செய்வோம். எக்கொள்கைகள் அமெரிக்காவுக்கு ஜன்மம் அளித்து, அது அரிய பொக்கிஷமாகக் கொள்ளும் சுகமும் அமைதியும் கொடுத்திருக்கின்றனவோ, அக்கொள்கைகளுக்காக தன் ரத்தத்தையும் சக்தியையும் செலவிடும் வாய்ப்பு அமெரிக்காவுக்குக் கிடைத்திருக்கிறது என்ற அபிமானத்துடன் நாம் தம்மையும், நம் சர்வத்தையும் பலியிடுவோம். தெய்வ சகாயமிருந்தால், அமெரிக்கா வேறு வழி செல்லாது.

1916, ஏப்ரல் 6-ஆம் தேதி, (கிறிஸ்தவருக்கு முக்கிய விரத நாளாகிய) நல்-வெள்ளிக்கிழமையன்று ஐக்கியநாடு யுத்தத்தில் புகுந்தது.

போர்: "சக்தி, முழுச்சக்தி, தயக்கம் அல்லது எல்லை அறியாத சக்தி"—இது வில்ஸனின் வாக்குறுதி; நாடு அவர் வாக்கைக் காப்பாற்ற விரைந்தது. அதற்குமுன் அந்த அளவுக்குப் போர் முயற்சியில் அரசாங்கம் அறிவோ திறமையோ காட்டியதில்லை; அமெரிக்கருக்குக் கீர்த்தியளிக்கும் ஆற்றலும் சமயோசித புத்தியும் கற்பனைத் தன்மையும் அதற்குமுன் அதே அளவில் தென்பட்டதில்லை. யுத்தகால ஜனாதிபதிகளில் தலைசிறந்தவர் வில்ஸன் என்பது ருஜுவாயிற்று; யுத்தக் காரியங்களின் ஒவ்வொரு அம்சத்தையும் அவர் கவனித்து வந்தார்; நாட்டிலும் வெளியிலும் மன உறுதி கெடாமலும் அவர் பார்த்துக்கொண்டார்; நாடு போரில் ஈடுபட்டதன் இறுதி லட்சியங்களையும் அவர் மறக்கவில்லை. யுத்தக் காரிய தரிசி, நிதி இலாக்காக் காரியதரிசி, தளவாட உற்பத்தி நிலையத் தலைவர் ஆகியோர் திறமையுடன் அவருக்கு உதவிபுரிந்தார்கள். முன் நடந்த யுத்தங்களில் தேவைப்படாத அளவுக்கு அரசாங்கம் துரிதமாகவும் கண்டிப்பாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டி யிருந்தது; அது தாமதமில்லாமலும் ஆற்றலோடும் அக்காரியங்களைச் செய்தது. அரசாங்கம் சர்வ அதிகாரத்துடன் தொழில் உற்பத்தியையும், தொழிலாளிகளையும்,

விவசாயத்தையும் கட்டுப்படுத்திற்று. ரயில் பாதைகளும் தந்தி வசதிகளும் அரசாங்கத்தின் வசம் வந்தன. உணவுத் தேவையை உத்தேசித்து, விவசாய விளைவு கால்பங்கு அதிகரிக்கப்பட்டது; எரிபொருள் தேவை அதிகமானதால், நூற்றுக்கு நாற்பது பங்கு அதிக நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டது. கடன் மூலமும் வரி மூலமும் அரசாங்கம் சுமார் 36,000 மிலியன் டாலர் சேகரித்து, 10,000 மிலியன் நேச தேசத்தாருக்குக் கொடுத்துப் பாக்கியைத் தன் யுத்த முயற்சியில் செலவிட்டது. எல்லாவற்றிற்கும் மேல், 1917-ன் முற்பகுதியில் முழுத் தோல்வி ஏற்படும்போல் தோன்றிய அட்லாண்டிக் சமுத்திர யுத்தத்தில் ஜயிப்பது அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. முன்பே துறைமுகங்களில் தண்டனையாக நிறுத்தி வைக்கப்பட்ட ஜெர்மன் கப்பல்களைக் கைப்பற்றியதாலும், நடுநிலை நாட்டுக் கப்பல்களை உபயோகத்திற்காக எடுத்துக் கொண்டதாலும், தனிப்பட்டவரின் கப்பல்களை வசப்படுத்தியும், மிகப்பெரிய அளவில் கப்பல் கட்ட ஏற்பாடு செய்ததாலும் அப்போரில் வெற்றி கிடைத்தது: அவ்வொரு வருஷத்தில் மூன்று மிலியன் டன் எடை அளவுக்குக் கப்பல்கள் கட்டப்பட்டன.

கட்டாய ராணுவ சேவைக்கான சட்டம் அங்கீகரிக்கப்பட்டது; போர் முடிவதற்கு முன் 25 மிலியன் ஆட்கள் பதிவு செய்யப்பட்டனர்; அதிலிருந்து நாட்டின் மகத்தான ஆள்பலம் தெரிகிறது. ஆனால் சேனைக்குப் பயிற்சியளித்து, தளவாடங்கள் சப்ளை செய்து, பொங்கும் கடல்போல் முன்னேறும் ஜெர்மன் படைகளை உரியகாலத்தில் தடுத்து நிறுத்த அவற்றை ஃப்ரான்ஸுக்குக் கப்பலேற்றி அனுப்புவது ஐக்கிய நாட்டுக்கு சாத்தியமா?—அதுதான் 1917—1918-ன் பெரிய பிரச்னை.

1917-ன் ஜூன் மாதத்தில் அமெரிக்க சேனையின் முதல் பகுதி ஃப்ரான்ஸில் கரையிறங்கிற்று—ராணுவ சாதனையைக் காட்டிலும் நேசதேசத்திற்குத் தைரியமும் எதிரிக்குக் கவலையும் ஊட்டுவதுதான் அதன் முதல் நோக்கம். ஜூலை 4-ஆம்தேதி, அச்சிறு படை, சிவப்பு, வெள்ளை, நீல நிறங்கள் காற்றில் அலைவீச, ஷான்ஸெலிஸி (Champs Elysees) சாலையில் அணிவகுத்து பவனிசென்று ஃபிரெஞ்சு மக்களை மிகவும் உற்சாகப்படுத்திற்று. ஆனால் உண்மையான அமெரிக்க சேனை தொலைவில் நடக்கிய நாட்டில் பயிற்சி முகாம்களில் இருந்தது.

உதவிச் சேனையின் தேவை மிகக் கடுமையாக இருந்தது; ஏனெனில் 1917-ல் போர் நேசதேசத்தாருக்கு மிகவும் பிரதிகூலமாக இருந்தது. அக்டோபரில் இத்தாலிய சேனை சிதறடிக்கப்பட்டது; ஆஸ்டிரியப் படையின் முன்னேற்றத்தைத் தடுக்கப் புது நேசப்படைகள் விரைந்து செல்லவேண்டி வந்தது. ஒருமாதம் கழித்து, புரட்சியால் சீர்குலைந்திருந்த ருஷ்யர்கள்

சோர்ந்துபோய் சமாதானத்திற்காகக் கெஞ்சினார்கள். ருஷ்ய, பால்கன் போர்முனையிலிருந்த நாற்பது புது ஜெர்மன் சேனைப் பகுதிகள் மேற்கே விரைவாக அனுப்பப்பட்டன. 1918-ன் இளவேனிற் காலத்திற்குள் மேற்குப் போர்முனைகளில் ஜெர்மானியரின் எண்ணிக்கை பலம் மேலோங்கியிருந்தது; தேய்ந்து அலுத்திருந்த பிரிட்டிஷ், ஃப்ரெஞ்சுப் படைகளைச் சூழ்ந்து வெற்றிகரமான இறுதித் தாக்குதலுக்காக ஜெர்மானியர் தயாராய் இருந்தார்கள். 1918 மார்ச்சு மாதம் முதல் பெரிய தாக்குதல் ஆரம்பமாயிற்று; ஒரு வாரத்திற்குள் எதிரிகள் பிரிட்டிஷ் ஐந்தாம் படையைச் சிதறடித்து 90,000 துருப்புகளைக் கைதியாக்கி ஏராளமான பண்டங்களைக் கைப்பற்றினர். ஏப்ரல் மாதம் இன்னொரு பெரிய தாக்குதல் நடந்தது; ஜூன் மாதத்தில் மூன்றாம் தாக்குதலில் ஜெர்மானியர் (ஸேன் நதியின் உபநதியாகிய) மார்ன் நதிவரை வந்து விட்டனர்; நேச தேசத்தார் மார்ஷல் ஃபாச் (Foch) என்னும் அதிகாரியின்கீழ் எல்லாச் சேனைகளையும் கொணர்ந்து, ஜனாதிபதி வில்ஸனுக்கு "கூடிய வேகத்துடன் அமெரிக்கத் துருப்புகளின் வருகையால் நேசதேசச் சேனைகளின் எண்ணிக்கைக் குறை ஈடாகாவிட்டால் போர் தோல்வியில் முடியும் என்று பயப்பட இடமிருக்கிறது" என்று அறிவித்தார்கள்.

ஏற்கனவே அமெரிக்கா அதிக சுறு சுறுப்பாக வேலை செய்து வந்தது; பகீரத யத்தனத்திற்காக ஐக்கிய நாடு தயாராயிற்று. மற்றக் காரியங்களைக் காட்டிலும் கப்பல் போக்கு வரத்து பிராதானியம் பெற்றது; கனத்த காவலுடன் அமெரிக்கத் துருப்புக் கப்பல்கள் வெளிக்கிளம்பின. அக்டோபரில் ஃப்ரான்ஸில் இருந்த அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை பதினேழரை லக்ஷத்திற்கும் அதிகமாயிற்று.

மிகவும் சரியான சமயத்தில்தான் அவர்கள் வந்தார்கள்: சில சில்லறைப் போர்களில் அவர்களுடைய திறமை வெளியாயிற்று. அவர்களைப்பற்றித் தாழ்ந்த அபிப்பிராயம் கொண்டிருந்த ஜெர்மன் ராணுவத் தலைவர்கள், "அமெரிக்கச் சிப்பாய் தைரியமாகவும், வலுவோடும் திறமையோடும் போர் புரிகிறான். காயம் அல்லது மரணத்தைக் கண்டு மனம்கலங்குவதில்லை," என்று ஒப்புக்கொள்ள வேண்டி வந்தது. ஆனால் முக்கியமான பெருவாரித் தாக்குதல்கள் இனிமேல்தான் நடைபெற இருந்தன. ஜூலை 14-ஆம் தேதி நடுநிசியில் வெகு நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட மார்ன் நதித் தாக்குதல் ஆரம்பமாயிற்று: நேச தேசத்தாரின் கடைசி அணிவகுப்பைப் பெயர்த்தெறிந்து ஐம்பதே மைல் தூரத்திலுள்ள பாரிஸ் நகருக்கு வழியைச் சுலபமாக்குவதே அதன் நோக்கம். எதிரிகள் ஜய கோஷத்துடன் நதியைப் பல இடங்களிலும் கடந்தார்கள்; அமெரிக்கன் டிவிஷன்கள் இருந்த இடத்தில் மாத்திரமே அவர்

களுக்குத் தடங்கலும் தோல்வியும் எதிர்பட்டன. ஜெர்மன் தலைவன் ரைன்ஹார்ட் எழுதியதாவது:—"குறிப்பிடப்பட்டிருந்த லட்சியங்கள் அநேகமாய் எல்லாம் கிடைத்தன... முக்கியமாக, வலது புறமிருந்த ஒரு டிவிஷன் தவிர ஏழாம் சேனையின் மற்ற எல்லா டிவிஷன்களும் மிகக் கீர்த்தியளிக்கும் வெற்றிகள் பெற்றன. அந்த ஒரு டிவிஷனின் எதிரே அமெரிக்க சேனைப் பகுதிகள் இருந்தன. அங்கு தான் ஏழாம் சேனைக்குக் கவலை தரும் துன்பங்கள் உண்டாயின. எதிர்பாராத முரட்டு அமெரிக்க எதிர்ப்புக்கு அங்கு பதில் சொல்ல வேண்டி வந்தது. மற்ற டிவிஷன்கள் ஸ்தலத்தையும் ஏராளமான பொருள்களையும் கைப்பற்றி முன்னேறுகையில், வலது கோடிப் பகுதியை மார்ன் நதிக்குத் தெற்கே கொண்டு போக முடியவில்லை; அதுவும் சேர்ந்து ஒரே வியூகமாக நகர்ந்தால்தான் பின் நடவடிக்கைகள் பயனளிக்கும் முறையில் வளரும். நமதுபத்தாவது காலாட்படை டிவிஷனுக்கும் அமெரிக்கப் படைக்கும் நடந்த கடுமையான போரின் பயனாக அந்தத் தடங்கல் ஏற்பட்டது." அவன் வருத்தத்துடன், "அமெரிக்கருக்கு அலுப்பே கிடையாது போலிருக்கிறது" என்று மேலும் எழுதுகிறான். 18-ஆம் தேதிக்குள் ஜெர்மன் தாக்குதலின் சூடு தணிந்து விட்டது; ஃபாச் பதில் தாக்குதல் நடத்தும்படி அமெரிக்கருக்குக் கட்டளையிட்டார். அதை அவர்கள் பெருங்கீர்த்தியுடன் சாதித்து வெற்றியடைந்தார்கள்: அமெரிக்க ஜெனரல் பெர்ஷிங் (Pershing) யுத்தத்தின் போக்கு சந்தேகமின்றி நேசதேசத்தாருக்கு அனுகூலமாகத் திரும்பிவிட்டது என்று எழுதினார்.

செப்டம்பரில் ஸெயின்ட் மிஹீல் போர்முனையில் தாக்குதல் நடந்தது. "நம் டிவிஷன்கள் முன்னேறும் வேகம் எதிரியைத் திணறடிக்கிறது" என்று எழுதினார் பெர்ஷிங். காயங்களும் மரணங்களும் 7,000 வரை ஏறின; ஆனால் அமெரிக்கர் அப்பிரதேசத்தைத் துப்புரவாகத் துடைத்து, 16,000 கைதிகளையும் கைப்பற்றினர். அடுத்த மாதம், ஒரு மில்லியனுக்கும் அதிகமான அமெரிக்கச் சேனை ம்யூஸ்-ஆர்கான் (Meuse-Argonne) தாக்குதலில் முக்கியமான பங்கேற்று, இறுதியில், தகர்க்க முடியாதது என்ற பிரசாரம் பெற்ற ஹிண்டென்பர்க் (Hindenburg) வியூகத்தைப் பிளந்து தள்ளியதோடு, ஜெர்மானியரின் தன்னம்பிக்கையும் தூளாக்கிற்று.

இதற்கிடையே, குடியரசு நாடுகள் போரில் ஈடுபடுவதன் காரணங்களையும் லட்சியங்களையும் வில்ஸன் தெளிவாகவும் அழகாகவும் விளக்கினார். வெற்றி பெறுவதற்காக ஆயுதம் தாங்கிய "படைகள் ஆற்றிய பணிக்கு இணையானது இப்பணி. ஆதியிலிருந்தே அவர் 'நேசதேசத்தார் ஜெர்மன் மக்களுடன் போராடவில்லை. அங்கு ஏகாதிபத்திய சக்தி பெற்றிருக்கும் கொடுங்கோல் ஆட்சியுடன்தான் போராடுகிறார்கள்" என்ற பிரசாரம்

செய்து அந்நாட்டில் பிளவு உண்டாக்க முயன்று வந்தார். யுத்தம் முடிந்து சாமாதான ஒப்பந்தம் நடைபெறும்போது, தோற்ற நாட்டின் ஒரு பகுதியையும் அங்கு வசிப்பவரின் இச்சைக்கு விரோதமாக வென்றவர் கைப்பற்றக்கூடாது, பண நஷ்ட ஈடு வசூலிக்கும்போது அது நியாயமான கணக்காக இருக்கவேண்டும், கடுந்தண்டனையாக இருக்கக்கூடாது என்ற நிபந்தனைகள் அனுசரிக்கப்பட வேண்டும் என்று அவர் முன் கூட்டியே வற்புறுத்தினர். 1918-ல் ஜனவரி மாதத்தில் காங்கிரசுக்கு அனுப்பிய செய்தியில் அவர், நியாயமான சமாதானத்தின் அடிப்படை என்ற பெயரில் 14 ஷரத்துகள் குறிப்பிட்டார்; அவை "வில்ஸனின் 14 குறிப்புக்கள்" என்று சரித்திரத்தில் பிரசித்தி பெற்றன. முக்கியமாக அவையாவன: பகிரங்கமாக இயற்றப்பட்ட பகிரங்க ஒப்பந்தங்கள்; அமைதி காலத்திலும் போர் நாட்களிலும் கடல்களில் சுதந்திரம்; தேசங்களுக்கிடையே பொருளாதார மதில்களை நீக்குதல்; யுத்த தளவாடங்களைக் குறைத்துக் கொள்ளுதல்; காலனிகளின் உரிமைகளைப் பாரபட்சமற்ற பஞ்சாயத்து மூலம் தீர்த்துக் கொள்ளுதல்; ரஷ்யா தன் பண்பாட்டுக் குகந்த ஸ்தாபனங்களுடன் தன் தேசியக் கொள்கையை நிறுவிக் கொள்ளுவதில் ஒத்துழைத்தல்; மக்களின் சுய இச்சை என்னும் கொள்கைப்படி ஐரோப்பிய தேச எல்லைகளின் புனரமைப்பு; "அரசியல் சுய ஆதீனத்தையும்நாட்டின் பத்திரத்தையும் பற்றிப் பரஸ்பரமாக உறுதி யளிப்பதற்காக" "ஒரு சர்வதேச சங்கம்" அமைத்துக் கொள்ளுதல்.

தம் படைகள் பின் துரத்தப்பட்டு, தம் சகாக்கள் அழிவு காலத்தை நெருங்கி, புதிய அமெரிக்கப் படைகள் மேலும் மேலும் வந்து குவிதலைக் கண்ட ஜெர்மன் அரசாங்கம் உடனடியாகச் சமாதானம் செய்து கொண்டால்தான் தம் "தந்தைநாடு" படையெடுப்பிலிருந்து தப்பும் என்று அறிந்ததால் ஆகவே அது வில்ஸனிடம் "14 குறிப்புகள்" என்ற அடிப்படையில் உடனடி படிக்கைக்கு ஏற்பாடு செய்யும்படி வேண்டிக்கொண்டது. ராஜதந்திர ஒளிவு மறைவுப் பேச்சுகள் நடந்து கொண்டிருக்கும் போதே, உள் நாட்டுச் சதிகளும் புரட்சிகளும் ஜெர்மன் ராணுவ பலத்தை மேலும் பாதித்தன. கெய்ஸர் சக்கரவர்த்திப் பதவியைத் தியாகம் செய்து ஓடிப்போனார்; நவம்பர் 11-ஆம் தேதி போர் முடிவடைந்தது.

சர்வதேச சங்கமும் ஏகாந்தக் கொள்கையும்: இதுவரை வில்ஸன் முதல்தரத் திறமையுள்ள அரசியல் தலைவர் என்று பெயரெடுத்தார். ஆனால் போர் முடிந்த பின் தொடர்ந்து பல பிசகுகள் செய்தார். காங்கிரஸ் தேர்தலில் டிமோக்ராட் கட்சியினரைத் தேர்ந்தெடுக்கும்படி அவர் தன் நாட்டாருக்கு யோசனை கூறினார்; இந்த ஒருதலைப்பட்ச

சிபார்சை ரசிக்காத மக்கள் இரு சபைகளுக்கும் ரிபப்லிகன் அங்கத்தினர்களை மெஜாரிடி எண்ணிக்கையில் அனுப்பினர். ஜனாதிபதி வெளி நாடுகளுக்குச் செல்வது கியாதிக் குறைவான காரியம் என்பது பல அமெரிக்கரின் நம்பிக்கை; அவர் அதை அசட்டை செய்து சமாதான மகாநாட்டிற்குத் தாமே செல்வதெனத் தீர்மானித்தார்; கடைசியில், அவருடைய கீர்த்தி ஐரோப்பாவில் குறையத்தான் செய்தது. அவர் தம் சமாதானக் குழுவில் முக்கியமான ரிபப்லிகனையோ, வேறெந்த முதல்தரமான மனிதனையோ நியமிக்கவில்லை. அவர் இந்தச சமய அனுசிதக் காரியங்கள் செய்து கொண்டிருக்கும்போதே, யுத்த அலுப்பு, ஐரோப்பாவைப் பற்றிய புது சம்சயம், பொதுவாக ஏமாற்ற உணர்ச்சி, கட்சி வாதக் கசப்பு ஆகிய பிணிகள் நாட்டைத் தாக்கின. அவர் ஃபிரான்ஸுக்காகக் கப்பலேறும்போது, மாஜி ஜனாதிபதி ரூஸ்வெல்ட், கசப்போடும் இறுமாப்போடும், "தற்சமயம் அமெரிக்க மக்களின் சார்பில் பேச மிஸ்டர் வில்ஸனுக்கு ஒரு அதிகாரமும் இல்லை" என்று "நம் நேயர்களையும் நம் சத்துருக்களையும்" உத்தேசித்து எச்சரிக்கை வெளியிட்டார்.

உடன்படிக்கைக் குழுவினர் — வில்ஸன், லாய்ட் ஜ்யார்ஜ், க்ளெமன்ஸோ (Clemenceau) ஆர்லண்டோ, இன்னும் பல சிறு ராசி அரசியல் வாதிகள் — பாரிஸ் நகரின் வர்ஸேல் அரண்மனையில் துவேஷம், பேராசை, பயம் நிறைந்த சூழ் நிலையில் கூடினர். சத்துருவிடம் துவேஷம், புது காலனிகளுக்காகவும் ஈடு பணத்திற்காகவும் பேராசை, ருஷ்ய பால்ஷெவிக் முதலியவற்றிடையே கூடினர். அங்கு உண்டான உடன்படிக்கை மேலோங்கிய கையால் வரையப்பட்டது. அந்த "வர்ஸேல்ஸ் உடன்படிக்கை" ஜெர்மனியை யுத்தத்திற்குப் பொறுப்பாளியாக்கி, அதன் காலனிகளையெல்லாம் அதனிடமிருந்து பிடுங்கி, அதன் எல்லையோரமெல்லாம் மாற்றமைப்புக்கு வழி செய்து, கடுமையான அபராதங்களும் விதித்தது. வில்ஸனின் சுய இச்சைக் கொள்கைப்படி, ஸைகோஸ்லோவேகியா, யூகோஸ்லாவியா, போலந்து, ஃபின்லந்து முதலான நாடுகள் சிருஷ்டிக்கும் அல்லது சுவீகரிக்கும் வேறு ஒப்பந்தங்களும் நிறைவேறின. இந்த நிபந்தனைகளை ஒப்புக்கொள்வதில் தம் 14 குறிப்புகளில் சிலவற்றை வில்ஸன் விட்டுக் கொடுக்க நேர்ந்தது; சர்வ தேச சங்கத்தின் காரியக்கிரமத்தின் மூலம் இந்தத் தவறுகள் ஒழுங்காக்கப்படும் என்ற திடநம்பிக்கையால்தான் அவர் இவ்வாறு தாழ்ந்துபோனார்.

மிகப் பலத்த எதிர்ப்பைச் சமாளித்து அவர் சர்வதேச சங்கம் என்னும் கருத்துக்கு உடன்படிக்கையில் இடம் பெற்று விட்டார். பல தேச சங்கம் என்னும் கருத்துப் புதிதல்ல;

அதைத் தெளிவாக்குவதில் பல நாடுகளைச் சேர்ந்த பலருக்குப் பங்குண்டு. ஆனல் இறுதியில் உருவாகிய "லீக் ஆஃப் நேஷன்ஸ்" (சர்வதேச சங்கம்) வில்ஸனின் சிருஷ்டியாகும். "நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை விருத்தி செய்து அமைதியும் பத்திரமும் நிறுவச்செய்வது" அதன் நோக்கம், எல்லா நாடுகளும் அதில் சேரலாம்; வல்லரசுகள் கொண்ட ஒருகவுன்சிலும், எல்லா அங்க நாடுகளும் சேர்ந்த பொது அஸெம்பிளியும் அதை நடத்தும். எல்லா அங்கத்தினர்களின் "சுய ஆதீன நிலையையும், நாட்டின் முழுமையையும் மதித்து, வெளியார் தாக்கிக் கெடுக்காமல் காப்பாற்ற" சங்க அங்கத்தினர்களான நாடுகள் வாக்கு அளித்தன. இதுவே பிரசித்தி பெற்ற பத்தாம் நிபந்தனை. மேலும், எல்லாச் சச்சரவுகளையும் பஞ்சாயத்துக்கு விடுவது என்றும், சங்கத்தைப் புறக்கணித்துப் போர் தொடுக்கும் தேசங்கள் மீது பிற நாடுகள் ராணுவ முறையிலும் பொருளாதார முறையிலும் எதிர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது என்றும் அவை சம்மதித்து ஆணையிட்டன. அதுபோக, ராணுவத்தளவாடங்களைக் குறைக்கவும், வல்லரசுகளின் கீழ் வைக்கப்பட்ட சில்லறைக் காலனிகளின் ஆட்சி முறையைப் பற்றியும், சாசுவதமான சர்வதேச நீதி ஸ்தலம் அமைப்பது பற்றியும் சர்வ தேசப் பாட்டாளி இலாக்வைப் பற்றியும் ஷரத்துக்கள் இருந்தன.

வில்ஸன் ஐக்கியநாட்டிற்குத் திரும்பிய போது, வர்ஸெல்ஸ் உடன்படிக்கையைப் பற்றியும் சங்க அமைப்பைப் பற்றியும் விஸ்தாரமாகவும் கடுமையாகவும் எதிர்ப்பு இருந்தது. மனக்கசப்பும் தீவிரக் கட்சிப்பற்றுதலுங் கொண்ட ஸெனெட்டர்லாஜ் போன்ற பல ரிபப்லிகன் பிரதானிகள் டிமோக்ராட்டுகளைத் தோற்கடிக்கவும், வில்ஸனை அவமதிக்கவும் நல்லவாய்ப்புப் பெற்றனர். ஜனாதிபதியைத் தனிப்பட்ட முறையில் துவேஷித்தவரும் இருந்தனர்: ஜெர்மன்-அமெரிக்கர்கள், இத்தாலிய அமெரிக்கர்கள், ஐரிஷ் அமெரிக்கர்கள் ஆகியோருக்கு உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் குறை கூறகாரணங்கள் கிடைத்தன. கடுமையாகப் பழிவாங்கும் விருமுள்ள சிலருக்கு ஜெர்மனி லேசாகத் தப்பித்துக் கொவிட்டது என்று தோன்றிற்று; உதாரக் கட்சியினருக்கு அபண்பற்ற கொடுமையாகத் தென்பட்டது. பழைய செல்லும் பல அமெரிக்கர் ஐரோப்பிய சச்சரவுகளில் சிமலிருப்பதே க்ஷேமம் என்று நினைத்து மனம் கலங்கினர்; ஒரு நூற்றாண்டாக "பழைய உலக" விவகாரங்களிலிருந்து அமெரிக்கா விலகி நின்றதை அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

ஆனல் மக்களில் பெரும்பாலோர் — குறைந்த பசநன்கு படித்தவர்களில் பெரும்பாலோர் — சங்க அமைப்பைஏற்றனர் என்று நினைக்க இடமிருக்கிறது; ஸெனெட்

பாதிக்கும் அதிகமான அங்கத்தினர் உடன்படிக்கையை எப்பொழுதும் அங்கீகரிக்கத்தான் செய்தார்கள்; ஆனல் விதிப்படி மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களின் சம்மதம் அதற்குத் தேவை; வில்ஸன் பத்தாம் நிபந்தனையை சற்று விட்டுக் கொடுப்பதாக இருந்தால் அந்த அளவுக்கு அவருக்கு ஆதரவு கிடைத்திருக்கும். ஆனல் அவர் சம்மதிக்கவில்லை. அவர் ஒரு ஸெனெட் கமிட்டியிடம் "அந்த மகத்தான ஒப்பந்தத்தின் முதுகு எலும்பு போன்றது பத்தாம் நிபந்தனை, அதை நீக்கி விட்டால் சர்வதேச சங்கத்திற்கும், செல்வாக்குள்ள ஒருமொழி வளர்ச்சி மன்றத்திற்கும் அதிக வித்தியாசம் இராது," என்று விளக்கினர். ஆனல் ரிபப்லிகன் எதிர்ப்பு அதை ஏற்பதாக இல்லை; ஆகவே அவர் அப்பிரச்னையில் மக்களின் அபிப்பிராயம் அறியப் புறப்பட்டார். மேற்கு ஸ்டேட்டுகளில் அவர் "தர்மப்பிரசார" யாத்திரை செல்லும் காலத்தில் அவருக்கு நோய் ஏற்பட்டது; செப்டம்பர் 25-ஆம் தேதி அவர் பாரிச வாயுவால் தாக்கப்பட்டு சொஸ்தமடையவே இல்லை. அவர் விதைநட்டு வளர்த்த அரிய விஷயம் நஷ்டமாயிற்று. 1920, மார்ச்சில் ஸெனெட் தன் இறுதி வோட்டு மூலம் உடன்படிக்கையையும், சங்க ஒப்பந்தத்தையும் நிராகரித்தது; ஐக்கிய நாட்டின் அரசியல் வாழ்வு பின் பல ஆண்டுகளுக்கு மலடாயிற்று; மேலும் "தீவு வாழ்க்கையின்" தீமைகளுக்கும் அது உள்ளாயிற்று.

1920-ல் தேர்தல் ரிபப்லிக் கட்சியாருக்குப் பெரும் வெற்றியளித்தது; அவ்வளவு மெஜாரிடி அதற்கு முன் அவர்களுக்குக் கிடைத்ததில்லை; தனித்திருக்கும் தன்மையை அவர்கள் கட்சிக் கொள்கையாகவே கொண்டார்கள். தேக நிலை குலைந்தபோதும் மனநிலை குன்றுத வில்ஸன் ஒதுங்கி நின்று, ஆழ்ந்த ஏமாற்றத்துடன், தான் எதிர் பார்த்த கூட்டு க்ஷேம வாழ்வு சின்ன பின்னமாவதைக் கவனித்தார். "பிறகு அபிப்ராயத்தின் முன் பயந்து நடுங்காமல், ஸ்தோத்திர பஜாரில் விற்பனை போகாமல், பேராபத்தின் முன் திக்கற்று நில்லாமல்" அவர் தம் வாழ்வை நடத்தினர்.

மேலும் அவர், "பழங்கால தைரியத்துடன் வாழ்க்கையோடும், சுத்த கிறிஸ்தவனின் நம்பிக்கையோடு மரணத்தோடும் போராடினர்".

முதல் யுத்தத்தைக் காட்டிலும் பெரிதான இரண்டாம் உலகயுத்தம் வானத்தின் அஸ்திவாரத்தையே குலுக்கிய பிறகுதான் எந்தக் கொள்கைகளுக்காக அவர் சூரத்தனத்துடன் போராடினரோ அவற்றின் சற்குணத்தை மக்கள் அறியலாயினர்.

அத்தியாயம் 20

ஒரு போரிலிருந்து இன்னொரு போருக்கு

சாதாரண நிலையும் தனித்தன்மையும்: வில்ஸன் தோல்வியடைந்தார்; புதுச் சுதந்திரமும், சர்வதேச மனப்பான்மையும் புறக்கணிக்கப்பட்டன, ஆகவே தனிவாழ்வு, பிறர் காரியத்தில் தலையிடாமை இரண்டும் அடுத்த பத்தாண்டின் முக்கியக் கொள்கைகள் ஆயின. உண்மையில் ரிபப்லிக் கட்சி சர்வதேச விஷயத்தில் தெளிவான விளக்கம் ஒன்றும் அளிக்கவில்லை; சாமர்த்தியமாக அப்பிரச்னையைச் சுற்றிக் கனத்த இருள் உண்டாக்கி அதற்குள் அக்கட்சி மறைந்து கொண்டது எனலாம். தனி வாழ்வுக்கு மக்கள் ஆதரவளித்தனர் என்று பல தலைவர்கள் 1920-ன் பெரும் வெற்றியிலிருந்து ஊகித்தனர். மனோபலமற்ற ஜனாதிபதி ஹார்டிங் (Harding) அம்முடிவுக்கு வந்தார் என்பதில் சந்தேகமேயில்லை. தனி வாழ்வில் நம்பிக்கையுள்ளவர்களும் மட்டமானவர்களுமான ஸெனெட்டர்களை அவர் முக்கியமான பதவிகளுக்கு உயர்த்தி, சிறந்தவர்களை அவர்களுடைய சர்வதேச மனப்பான்மையை உத்தேசித்து அசட்டை செய்தார். அதிகாரம் வகித்தும் ரிபப்லிக் கட்சியினர் தனி வாழ்வே அரசாங்கத்தின் கொள்கை யென வெளியிட்டனர்.

ரிபப்லிகன் கட்சியின் சரித்திரத்திலும் தேசத்தின் சரித்திரத்திலும் இது ஒரு புது அனுபவம். மனித வர்க்கத்தின் நம்பிக்கையை ஐக்கியநாடு இதற்கு முன் இவ்வளவு வேசாகப் புறக்கணித்ததில்லை. உலகத்திற்கு வழி காட்டுதல் என்னும் வாக்கைக் காப்பாற்றுவதே அமெரிக்கா தன் பரம்பரை தர்மமாகக் கொண்டிருக்கிறது எனலாம். ரிபப்லிகன் லட்சியமும் தனி வாழ்வுக் கொள்கையும் முரணானவை. கரீபியன் கடல் பிரதேசத்திலும் பஸிஃபிக் பிரதேசங்களிலும் மக்கள் பரவவேண்டும் என்று க்ராண்டும், லிவார்டும் ஊக்குவித்தார்கள். தென் வட அமெரிக்காக்களை ஒன்றுகப் பாவிக்க வேண்டுமென்றே ப்லேய்ன் பிரசாரம் செய்தார். க்ளூபாவின் சார்பில் மாக்கின்லி ஒரு போரிலேயே நாட்டை ஈடுபடுத்தினர்; பஸிஃபிக் பிரதேசத்தில் புதுக்குடியேற்ற நாடுகளும் அவர் சம்பாதித்துக்கொடுத்தார். உலக வல்லரசுகளிடையே அமெரிக்காவுக்கு செல்வாக்குத் தேடினர் தியோடர் ரூஸ்வெல்ட். சாம்ராஜ்ய வாதமும்

சர்வதேச வாதமும் ரிபப்லிக் கட்சியின் பரம்பரைக் கொள்கைகள்.

இப்போழுதோ, கட்சி குறுகிய தேசிய வாதத்தை ஆதரித்துப் பொறுப்பைக் கழிக்கிறது; பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் பிரிட்டன் அந்த நிலையில்தான் இருந்தது. ஆனால் உண்மையான தனி வாழ்வு சாத்தியமில்லை; உலகத்தில் வேறு இடங்களின் நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படாமல் ஐக்கிய நாடு இருக்கமுடியாது. வாஸ்தவத்தில், அக்கட்சி பதவி வகித்த ஆண்டுகளில், அயல் நாடுகளுக்கிடையே இருந்த சில முக்கியமான சிக்கல்களை விடுவிக்க அமெரிக்க அரசாங்கம் சுறு சுறுப்பாக உழைத்தது. கடற் படைத் தளவாடங்களைக் குறைப்பதற்கான மகாநாட்டைக் கூட்டுவதில் ஜனாதிபதி ஹார்டிங் ஈடுபட்டு, சிறிதளவு வெற்றியும் பெற்றார். அவர் பின் வந்த கூலிட்ஜ்(Coolidge)யுத்தம் சட்ட விரோதமான செயல் என்று பிரகடனம் செய்த பாரிஸ் ஒப்பந்தத்திற்கு அறுபத்திரண்டு நாடுகளின் சம்மதத்தைப் பெற்றார். யுத்த நஷ்ட ஈடுக் கணக்கைத் திகையவைக்க யங்க் (Young) திட்டமும் டாயெஸ் (Dawes) திட்டமும் ஐக்கிய நாட்டில் ஆரம்பமானவை. யுத்தக் கடன்கள் செலுத்துவதைச் சிறிது காலம் நிறுத்திவைப்பதான யோசனையை முதலில் அளித்தவர் ஜனாதிபதி ஹூவர்(Hoover). உலக நீதி ஸ்தலத்தில் அமெரிக்காவும் கலந்து கொள்ளவேண்டும் என்று ரிபப்லிகன் ஜனாதிபதிகள் அனைவரும் வற்புறுத்தினர்கள்; ஆனால் அது ஏற்கப்படவில்லை; மேலும் சர்வதேச சங்கத்தின் சில காரியங்களில் அவர்கள் அனைவரும் ஜாடையாகவும் தற்காலிகமாகவும் ஒத்துழைத்தார்கள்.

ஆனால் ராணுவ பலத்தைக் குறைப்பதற்காகவும் அமைதிக்காவும் செய்யப்பட்ட இந்த சைகைகள் ஒருபுறமிருக்க சர்வதேச சங்கத்தின் முக்கிய நடவடிக்கைகளிலிருந்து அமெரிக்கா ஒதுங்கி நின்றதும் பொருளாதார தேசிய வாதத்தின் தொடர்ந்த வளர்ச்சியும் தராசுத்தட்டில் அதிகம் கனத்தன. உண்மையில் பொருளாதாரப் பகுதியில்தான் தனி வாழ்வு பல முக்கியமான விளைவுகளுக்குக் காரணமாயிற்று. அயல் நாட்டுப் போட்டியைக் கண்டு பயம், அயல் நாடுகளில் விற்பனை செய்ய ஆசை, பொருளாதார ஏகாதிபத்தியக் கருத்து—இவ்வாறு, நாடு ஆதரித்த ஒரு நவீன வியாபாரக் கொள்கையால் ஆபத்து அதற்கு மாத்திரமல்ல, உலகத்திற்கே விளைய இருந்தது.

1920-லேயே ரிபப்லிகன் காங்கிரஸ் அவசரமாக ஒரு டாரி ஃப் மசோதா தயாரித்து அயல் நாட்டு இறக்குமதியைத் தடுக்க முயன்றது. ஜனாதிபதி வில்ஸன் அதை அங்கீகரிக்க மறுத்து, அயல் நாட்டுப்போட்டியைக் கண்டு அமெரிக்கா பயப்படவேண்டிய காலம் எப்பொழுதோ அஸ்தமித்து விட்டது, ஐரோப்பிய நாடுகள் அரசாங்கக் கடன்களையோ வியாபாரக் கடன்களையோ

நமக்குத் திருப்பித் தரவேண்டுமென்று நாம் விரும்பினால், அந்நாடுகளிருந்து நாம் சாமான்கள் வாங்கத் தயாராகவேண்டும், உயர்ந்த வியாபார மதில்கள் நிறுத்தும் சமயமல்ல இது என்று புத்தி புகட்டினார். இந்தச் சிறந்த விளக்கத்தை ரிபப்லிகன் கட்சி அசட்டைசெய்தது; கட்சிக்குப் பூர்ண அதிகாரம் கிடைத்ததும் அரசாங்கம் ஒரு புதுச் சட்டத்தால் வரிகளை மிகவும் உயர்த்தி ஐரோப்பியர் அமெரிக்காவில் சாமான் விற்க முடியாமல் செய்தது. எட்டு வருஷங்கள் கழித்து அக்கட்சி பிடிவாதமாக இன்னொரு சட்டத்தின் மூலம் இன்னும் அதிக வரி விதித்தது; அமெரிக்க சரித்திரத்திலேயே அது தான் உயர்ந்த வரி; மதிப்பிற்குரிய நிபுணர்களின் ஆட்சேபங்களை அசட்டை செய்து ஜனாதிபதி ஹூவர் அதற்குக் கையொப்பமிட்டார். அந்தச் சட்டத்தால், ஐரோப்பாவின் தோட்டங்களிலும் தொழிற் சாலைகளிலுமிருந்து சரக்குகள் அமெரிக்காவுக்கு வர முடியவில்லை என்பதோடு, ஐரோப்பிய நாடுகள் பழிவாங்குவதற்காக எதிர் வரிகள் விதித்ததால் அமெரிக்கச் சரக்குகள் ஐரோப்பாவுக்கும் போக முடியவில்லை.

பொருளாதாரப் பிரச்னையின் ஒரு பகுதிதான் இது. கடன் பட்ட நிலையிலிருந்த ஐக்கிய நாடு யுத்த காலத்திலும், அதன் பிறகும் கடன் கொடுத்த நாடாக மாறிற்று. அந்த அவதியில் அரசாங்கம் நேசதேசத்தாருக்கும் சம்பந்தப்பட்ட தேசங்களுக்கும் சுமார் 10,000 மிலியன் டாலர் கடனைக் கொடுத்துதவிற்று. அது போக, மூன்றும் பத்தாண்டில் தனிப்பட்ட அமெரிக்கர் ஐரோப்பிய, ஆசிய தேச அமெரிக்கப் பண மார்க்கெட்டுகளில் பத்துப் பன்னிரண்டு ஆயிர மிலியன் டாலர்கள் முதலீடு செய்திருந்தார்கள். கடன் வாங்கிய நாடுகள் அமெரிக்காவுக்குச் சரக்குகள் அனுப்ப முடியாவிட்டால கடன் எப்படித் தீரும்? (தங்கப்பாளம் அல்லது விற்பனைச் சரக்கு மூலம்தான் கடனைத் தீர்க்க முடியும்). இந்த நியாயமான கேள்விக்கு ரிபப்லிகன் அரசியல் வாதிகள் ஒரு விடையும் அளிக்க முடியவில்லை.

மூன்றும் பத்தாண்டு முழுதிலும் ரிபப்லிகன் கொள்கையில் இந்த முரண்பாடு இருந்தது. அயல் நாட்டுக் கடனைப்பற்றி அரசாங்கம் மிகப் பிடிவாதத்துடன் கண்டிப்பாக இருந்தது. வட்டி விஷயத்தில் சற்று விட்டுக் கொடுத்த அரசாங்கம் முதல் விஷயத்தில் கடுமையாகவே இருந்தது; "கடன் வாங்கிக் கொண்டார்களா, இல்லையா?" என்று ஜனாதிபதி கூலிட்ஜ் அதட்டிக் கேட்டார். ஆனால் அமெரிக்க டாரிஃப் மதிலில் இடைவெளி தெரியாத வரை பணத்தைத் திருப்பிக் கொடுப்பது அசாத்தியம் என்றே சொல்லலாம். உண்மையில் மேலும் கடன் வாங்கித்தான் ஜெர்மனி தவணைக் கட்டணம் செலுத்திற்று; இதர நாடுகள் அமெரிக்கச் சரக்குகளை வாங்கியதும் கூடப் புதுக்கடன் பணத்தால்தான்.

உள்நாட்டு அரசாங்கத்தில், சாமான்னிய அல்லது சராசரி நிலைக்கான சூழ்நிலையை ஹார்டிங் அரசாங்கம் நிறுவிற்று; மார்க்ஹான்னு, மாக்கின்லி ஆகியோரின் காலத்தின்ஸ்திதியைத்தான் ஹார்டிங் சராசரி நிலை என்று கருதினார். தனிப்பட்டவரின் செயல்களில் தலையிடா திருத்தலையே அந்த நிலை என்று நினைப்போருண்டு. உண்மையில் இரண்டு கொள்கைகள் அதில் பொருத்தமாகக் கலந்திருந்தன—ஒன்று, அரசாங்கக் கட்டுப்பாடில்லாத சுதந்திர வியாபார முயற்சி; மற்றது தனியத்தனங்களுக்குத் தாராளமான அரசாங்க உதவி. அரசாங்கம் வர்த்தகத்திலிருந்து விலகிக் கொண்டது; ஆனால் வர்த்தகம் அரசாங்கத்தில் புகுந்து அதன் கொள்கைக்கு உருவளித்தது.

இது குறைகளின் ஜாப்தா; நிறைவுப்பக்க ஜாப்தா திருப்தியளிப்பதாகவே இருந்தது. 1922—1930—ன் இறக்குமதி வரிகள் அயல் நாட்டுப் போட்டியை அநேகமாகத் தடுத்து விட்டன. சோர்வு அறியாத ஹெர்பெர்ட் ஹூவரின் தலைமையில் வர்த்தக இலாக்கா வெளிநாடுகளில் புது விற்பனைக் கேந்திரங்கள் உண்டாக்குவதில் சுறுசுறுப்பாக உழைத்துத் தன் வெற்றிகளைப் பற்றிப் பெருமிதம் அடைந்தது. உள் நாட்டில் ஏறக்குறைய 200 வியாபாரச் சங்கங்களின் அமைப்பில் அவ்விலாக்கா ஒத்துழைத்தது. நாம் மிகவும் தனித்திருந்தது மாறிக் கூட்டுக் காரிய க்ஷேத்திரத்தில் பிரவேசிக்கிறோம், என்று ஹூவர் கூறினார். வர்த்தகக் கடற் படைக்கும், ஐக்கிய நாட்டின் தபால் ஏற்றிச்செல்லும் ஆகாய விமானக் கம்பெனிகளுக்கும் தாராளமாக மானிய மளிக்கப்பட்டது. பொக்கிஷ இலாக்கா அமித லாப வரியை நீக்கியதோடு, வருமான வரியையும், உபரி வரியையும் கணிசமாகக் குறைத்தது; ஆஸ்தி வரிகளும் சிறிது குறைக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள் வியாபாரத்தை மேலும் தூண்டிவிடும் என்பது அரசாங்கத்தின் கருத்து; ஆனால் கூடவே, வர்த்தகச் சூதாட்டம் வளர்ந்தது என்பது வருந்தத்தக்க விஷயம்.

அதே சமயத்தில் தலையிடாமைக் கொள்கையும் அனுசரிக்கப்பட்டது. யுத்த காலத்தில் மிகத்திறமையுடன் அரசாங்கம் நிர்வகித்துவரயில் பாதைகள், பழைய சொந்தக் காரர்களுக்கு, அவர்களுக்கு லாபமான முறையில், திருப்பிக் கொடுக்கப்பட்டன. யுத்தத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வியாபாரக் கடற்படைக் கப்பல்கள் மிக மிகக் குறைந்த விலையில் தனிப்பட்ட கம்பெனிகளுக்கு விற்கப்பட்டன. ட்ரஸ்ட் எதிர்ப்புச் சட்டங்கள் பிரயோகிக்கப்படாமல் இருந்தன; நிர்வாகிகளும் நீதிபதிகளும் பொருளாதாரச் சட்டங்களை ரத்து செய்வது தம் பொறுப்பு என்று கருதாதலால், அவை சட்டப்புஸ்தகத்தில் இருந்து கொண்டே இருந்தன. தனிப்பட்டவரின் யத்தனங்களில் அரசாங்கம் தலையிடக்கூடாது

என்பதற்கு நீர் மின்சக்தி யந்திரங்களை அரசாங்கம் அமைத்து நடத்த வேண்டும் என்ற யோசனையை யொட்டிய சர்ச்சையை உதாரணமாகக் கூறலாம் 1916—ல் வெடியுப்புத் தயாரிப்புச் சாலைகளுக்கு மின்சாரம் கிடைக்கும் பொருட்டு, அரசாங்கம் டென்னெஸி நதியில் அணைகள் போட்டு நீர் மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான அனுமதியை ஜனதிபதி வில்ஸன் யுத்தகால நடவடிக்கையாக அனுமதித்திருந்தார். போர் முடிந்த பிறகு அந்த அணைகளையும் யந்திரங்களையும் என்ன செய்வது என்ற சர்ச்சை மனக்கசப்புடன் வெகு காலம் நீடித்தது. நிதானக் (கன்ஸர்வடிவ்) கட்சியினர் அவற்றைத் தனிப்பட்டவரிடம் ஒப்புவித்து விடவேண்டும் என்றனர்; நெப்ராஸ்காவின் சில முற்போக்காளர்கள் அரசாங்கமே அவற்றைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று வற்புறுத்தினர்.

அரசாங்கமே தொடர்ந்து நடத்த வேண்டும் என்னும் ஒரு மசோதாவை 1928-ல் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது; ஆனால் ஜனதிபதி கூலிட்ஜ் அதை 'வீடோ' செய்து விட்டார். 1931-ல் காங்கிரசின் அதே போன்ற சிபார்சை ஜனதிபதி ஹூவர் 'வீடோ' செய்கையில், அவர் தன் கட்சியின் கொள்கையை இவ்வாறு வர்ணித்தார்:

> ... நம் பிரஜைகளுடன் போட்டியிட்டு அரசாங்கம் ஒரு வியாபாரத்தில் இறங்குவதை நான் திடமாக எதிர்க்கிறேன்.
>
> ... நம் குடிகளுக்குச் சம வாய்ப்புக் கொடுப்பதை அழிக்கிறது; நம் நாகரிகத்தின் அடிப்படை லட்சியங்களையே அது சூன்யமாக்குகிறது ... நம் உத்தியோகஸ்தர்களின் அலுவல் நீதியையும் சம வாய்ப்பையும் வளர்ப்பதாக இராமல் கடைத்தெருவில் பேரம் பேசுவதாக இருக்குமானால், நம் ஸ்தாபனங்கள் என்ன ஆகும், நம் நாட்டின் கதி என்ன என்று சிந்திக்கவே நான் தயங்குகிறேன். அது உதார மார்க்கமல்ல, அழிவு மார்க்கம்.

ஆனால் ஹார்டிங்கும், கூலிட்ஜும் வாய்ப்புச்சமத்துவத்திற்காகக் கண்ணீர் சிந்துவது சற்று பொருத்தக் குறைவாகத் தோன்றுகிறது; அவர்களுடைய நிர்வாகங்கள் பாட்டாளிகளின் நலனிலும் விவசாயிகளின் நலனிலும் தொடர்ந்து உண்மையான சிரத்தை காட்டவில்லை. அவர்களுடைய நிர்வாகங்கள் கைத்தொழில், வாத்தகம், காண்டிராக்ட் போன்ற ''பிஸினெஸ்'' செய்பவரிடந்தான் அதிக அக்கறை காட்டின; மேலும் 'பிஸினெஸ்' என்னும் வார்த்தைக்கு அவர்கள் குறுகிய அர்த்தம்தான் கொடுத்தார்கள். மூன்றும் பத்தாண்டின் சுபிக்ஷநிலை குடியானவர்களுக்கும் பாட்டாளிகளுக்கும் பயன்படவில்லை. 1921-ல் விவசாய விளைபொருள்களின் விலை சட்டென்று ஏறிற்று; ஆனால் அந்நிலை நீடித்திருக்கவில்லை. மூன்று நான்கு வருஷங்களில் விலைகள் மந்தப்பட்டுப் ''புது வாழ்வுத் திட்ட'' சீர்திருத்தங்கள் பயனளிக்கும்வரை தொடர்ந்து க்ஷீணித்தன. 1920—க்கும் 1932—க்கும் இடையே நில வருமானம் பதினேந்தரை பிலியன் டாலரிலிருந்து ஐந்தரை பிலியன் டாலருக்கு இறங்கிற்று. (அமெரிக்காவில் ஒரு பிலியன் ஆயிரம் மிலியனுக்குச் சமம்).

அக்காரணத்தால், நிலங்கள் குடிவாரத்திற்கு விடப்படுவது அதிகரித்தது; கடன் கொடுத்தவன் அடமான நிலங்களைக் கைப்பற்றுவதும் அதிகமாயிற்று

நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தும் ''பிஸினெஸில்'' ஈடுபட்டவரின் விருத்திக்காக அரசாங்க விதிகளையெல்லாம் உபயோகிக்க ஆவலாயிருந்த ஹார்டிங்கும், கூலிட்ஜும் குடியானவர் விஷயத்தில் சிரத்தையற்றிருந்தார்கள். ஓரளவு அக்கறை பிறந்ததும், விவசாயப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக அவர்கள் செய்த முதல் காரியம் என்னவெனில், விவசாய விளை பொருள்களுக்கு டாரிஃப் வரி விதித்தார்கள்! ஐக்கிய நாடு விவசாயப் பொருள்களை இறக்குமதி செய்வதைக் காட்டிலும் ஏற்றுமதி செய்வதுதான் அதிகம் என்பதை நினைவு படுத்திக் கொண்டால் இந் நடவடிக்கை எவ்வளவு அர்த்தமற்றது என்பது தெளிவாகும். அரசாங்க உதவியையும் சாகுபடிக் கட்டுப்பாட்டையும் தழுவிய குறிப்பான யோசனைகள் விவசாய ஸ்தாபனங்களின் ஆதரவு பெற்றிருந்தும் ஜனதிபதிகளால் ''வீடோ'' செய்யப்பட்டன. கடைசியில், விளை பொருள்களை ஒழுங்காக விற்பனை செய்ய அதிகாரமும் நிதியும் பெற்ற விவசாயக் குழு ஒன்றை ஜனதிபதி ஹூவர் நியமித்தார்; அது சிறிதளவு உபகாரமாக இருந்தது என்றாலும், செய்ய வேண்டிய காரியம் இன்னும் ரொம்ப அதிகம்.

ஹார்டிங் காலத்தில் வெட்கக் கேடான நிகழ்ச்சிகளும், ஹூவர் காலத்தில் கட்சியின் உள் சண்டைகளுமே விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவை. ஐக்கிய நாட்டின் அரசாங்கம் இதற்கு முன் இந்த அளவுக்கு வெட்கம் மறந்து சலுகையுள்ள கோஷ்டிகளின் கைப்பொம்மையாக இருந்ததில்லை; இதுவரை ராஜதந்திரிகள் தட்டுத் தடங்கலின்றி அல்ப அரசியல் வாதிகளுக்குத் தாழ்ந்து போனதில்லை. ஓஹியோவின் லெனெட்டர் ஆகிய வாரன் ஜி. ஹார்டிங் நல்ல மனுஷர், ஆனால் மனோதிட மற்றவர்; அவருக்கு எதிராக தோஷப் பிரசாரம் ஒன்றுமில்லை என்னும் காரணத்திற்காகவே ஜனதிபதித் தேர்தலுக்கு அவர் பெயர் குறிப்பிடப்பட்டது; நாடு வில்ஸனின் லட்சிய வாதத்தால் அலுத்திருந்ததால் ஹார்டிங்குக்கு வெற்றியும் கிடைத்து, அவர் பதவி வகித்த

இரண்டரை வருஷ காலத்தில் பெரிய வர்த்தகர்கள் அரசாங்கத்தைக் கோரியபடி பயன் படுத்திக்கொண்டார்கள்; ஜனதிபதி தம் உடல் தேயாமல் சும்மா இருந்தார்; மிகக் கொடிய லஞ்ச ஊழலையும் அவர் சகித்துக் கொண்டிருந்தார்; லட்சிய நோக்கம் புதை பட்டுப் போகும் என்று பலர் நினைத்தது உண்மையாயிற்று. அவருக்குப் பின் வந்த கால்வின் கூலிட்ஜ் முற்றிலும் குறுகிய அரசியல் வாதி, கடு கடுப்பான பிடிவாதக்காரர். கற்பனை யற்றவர், சொற்களிலும் கருத்துக்களிலும் கஞ்சர், மாறுதலை எதிர்ப்பவர், எந்த ரூபத்திலும் விசால நோக்கத்தைக் கண்டால் மிரளுபவர். 1929-ல் ஜனதிபதியான ஹெர்பெர்ட் ஹூவர் இவர்களைக்காட்டிலும் மிக அதிகத் திறமைசாலி; நல்ல நிர்வாகி என்ற பெயர் பெற்றவர்; சர்வதேச மனப்பான்மையுள்ள ராஜதந்திரி; காருண்ய சுபாவம் படைத்தவர். அவருடைய சிறப்புக்கள் பல; ஆயினும் முக்கியமான காரியங்களில் அனுசிதமான முடிவுகள் செய்வதே அவருக்குத் தொழிலாகிவிட்டது; க்ராண்டுக்குப் பிறகு வேறெந்த ஜனதிபதியும் அத்தனை பிழைகள் செய்ததில்லை.

போருக்குப் பிந்திய வருஷங்களில் சமுதாய நிலை: ஆதர்சவாதம் கேட்டுக் கேட்டுக் காது புளித்து, போராலும் அதன் பிந்திய நிகழ்ச்சிகளாலும் ஏமாற்ற மடைந்த அமெரிக்கர் பண தேவதையின் உபாசகர்கள் ஆகிச்சங்கோசமறியாத ஊக்கத்துடன் நிறையச் சம்பாதித்தல், நிறையச் செலவழித்தல் என்பதில் மகிழ்ச்சி கொண்டனர். மாக்கின்லி யுகம் உட்பட இதற்கு முன் ஒரு காலத்திலும் அமெரிக்க சமுதாயம் இவ்வளவு ஸ்தூல வாழ்க்கையை நாடியதில்லை; பஜார் லட்சியத்திற்கும் யந்திர லட்சியத்திற்கும் இந்த அளவு தாழ்ந்து போனதில்லை. பெருவாரி முயற்சி, காருண்யமற்ற திறமை—இவற்றையே மக்கள் பாராட்டினார்கள்; பெரிய எஞ்ஜினியர், பெரிய பங்கு வர்த்தகன் அல்லது விற்பனையாளன், விளம்பரக்காரன், அதிகச் சம்பாத்தியமுள்ள சினிமா நடிகன், அல்லது நடிகை—இவர்களே ஜனங்களின் லக்ஷிய வீரர்கள்; ஜனத் தொகை 17 மிலியன் உயர்ந்தது; ஐசுவரியம் அதைவிட அதிக விகிதத்தில் பெருகிற்று; பண விநியோகத்தில் ஏற்றத் தாழ்வு இருந்தாலும் போதிய அளவு பணம் புழக்கத்தில் இருப்பதாகத் தோன்றிற்று; ஏராளமாகப் பணம் புரளும் "புதுயுக"த்தைப் பற்றி மக்கள் சகஜமாகப் பேசினார்கள்; வேலை தவறுமல் கோழிக்கறி சமையல். குடும்பத்திற்கு இரண்டு மோட்டார்கார்—என்று சொல்லிப் பெருமிதப்பட்டார்கள். நகரங்கள் முன்னிலும் விஸ்தாரமானவை, கட்டடங்கள் உயர்ந்தவை, சாலைகள் நீண்டவை, சொத்துக்கள் கொழுத்தவை, மோட்டார் வண்டிகள் அதிக வேகமானவை, கல்லூரிகள் பெரியவை, நடுநிசி உல்லாசக் கிளப்புகள் பகட்டானவை, அநீதிச் செயல்கள் அதிக

மானவை, கார்ப்பொரேஷன்கள் சக்தி வாய்ந்தவை, அமெரிக்க அனுபவம் புது எல்லைகளை எட்டிற்று; வான் நோக்கிச் செல்லும் புள்ளி விவரங்கள் மக்களின் க்ஷேமத்தை அதிகரித்தாலும் அதிகரிக்காவிட்டாலும் அவர்களுக்கு மட்டற்ற திருப்தியளித்தது.

ஒரு சராசரி நிலையை அனுசரித்து வாழ்வதே அக்காலத்தில் போற்றப்பட்டது; அந் நிலையிலிருந்து விலகுபவர்களை மக்களால் சகிக்க முடியவில்லை.

சகிப்பின்மை என்னும் நோய் யுத்த காலத்தில் ஆரம்பமாயிற்று; போருக்குப் பிறகு அது நூதனமான பயங்கர ரூபங்களில் துளிர்த்தது. குருட்டுத்தனமாகப் பிறரைப் பழித்துத் தன்னை உயர்த்திப் பேசுவதே தேசாபிமானம் எனக் கருதப்பட்டது; நாட்டின் தனி வாழ்வு ஒரு அரசியல் சோதனையாக நில்லாமல், நீதி, அறிவு மார்க்கங்களில் செல்பவரின் லக்ஷ்யமாயிற்று. அயல் நாட்டாரையும் அயலாரின் கொள்கைகளையும் பலர் வெறுத்தனர். தீவிர நோக்கம் கொண்டவராகச் சந்தேகிக்கப்பட்ட வெளிநாட்டார் நாடு கடத்தப்பட்டனர்; ஸோஷலிஸ்ட் மனப்பான்மை யுள்ளவர் சட்டசபைகளிலிருந்து நீக்கப்பட்டனர். அரசியல், பொருளாதார ஸ்தாபனங்களுக்கு மக்களின் விசுவாசத்தைக் கட்டாயமாய்ப் பெற ராஜ்யங்கள் சட்டங்களியற்றின. பல மிலியன் அங்கத்தினர் இருப்பதாகப் பெருமை கூறிக்கொண்ட "கூ க்ளுக்ஸ் க்ளான்" (Ku Klux Klan) சங்கம் ஆரியர் உயர்ந்தவர் என்ற கருத்தைக் குறிக்கோளாகக் கொண்டது; பத்து வருஷங்கழித்து ஐரோப்பிய சர்வாதிகாரிகள் அதே வழி சென்றனர்; முகமூடி யணிந்த அச்சங்கத்தார் கத்தோலிக்கர்களையும் நீக்ரோக்களையும், யூதர்களையும் மிரட்டித் துன்பப்படுத்தினர். அமெரிக்க வர்த்தகர்களின் செயல்களைக் கண்டிப்பவர்களும் தாக்கப்பட்டனர்; எது நீதி, எது அநீதி என்ற பகுத்தறிவின்றி பாட்டாளி சங்கத் தலைவர்கள், உதாரப் போக்குள்ள பொருளாதார நிபுணர்கள், சோஷலிஸ்டுகள், சமாதானப் பிரியர்கள், வியாபார முறைகளைக் கண்டிக்கும் "கலகக்காரர்கள்" அனைவரும் அதன் கோபத்திற்குள்ளானார்கள். அபகீர்த்திக்குக் காரணமான இரண்டு பெரிய வழக்குகளில்—கலிஃபோர்னியாவில் மூனி, பில்லங்ஸ் என்பவர் மீது நடந்த வழக்கிலும், மாஸசுஸெட்ஸில் ஸாக்கோ, வான்ஸெட்டி ஆகியோர் மீது நடந்த வழக்கிலும்—வருந்தத்தக்க நியாயப் பிசகு நடந்து விட்டதாகத் தெரிகிறது; இரண்டிலும், நிரூபிக்கப்பட்ட குற்றங்களைக் காட்டிலும் அவர்களுடைய தீவிரமான கருத்துகளின் காரணமாகத்தான் அவர்களுக்குத் தண்டனை கிடைத்தது.

ஆனால் சகிப்பின்மை என்னும் தோஷத்தை மிகைப்படுத்துவதும் முற்றிலும் சரியல்ல. அதன் அடிப்படைக் காரணம்

குடிநல ஆட்சியை எதிர்ப்பதல்ல, அவ்வாட்சியின்பால் தவறான பக்தி என்பது நினைவிருப்பது நல்லது. அந்தக்காலம் முழுதிலும் அதற்கு ஆட்சேபமும் வலுத்திருந்தது, சகிப்பற்ற செயல்களை யாரேனும் கண்டிக்கத்தான் செய்தார்கள்; அநீதிக் கிரையானவன் எவ்வளவு பாமரனாக இருந்தாலும் செல்வாக்குள்ள சிலர் அவனை ஆதரித்து எதிர்வாதம் செய்யத் தயாராய் இருந்தார்கள். அக்காலம் முழுதிலும் நீதி ஸ்தலங்கள் குடிகளின் தனிப்பட்ட சுதந்திரங்களையும் உரிமைகளையும் கறாராகக் காத்து நின்றன. ஹோம்ஸ் (Oliver Wendell Holmes) வகையைச் சேர்ந்த பெரிய நீதிபதிகளின் காலம் அது.

அந்தத் தலைமுறையில் சமுதாய அபிவிருத்திக்கு அனுகூலமான மிக முக்கியமான காரணங்கள் நகர வளர்ச்சியும் தொழில் செய்முறைகளில் ஏற்பட்ட துரிதமான மாறுதல்களுமாம். 1930-க்குள் நாட்டு மக்களில் பாதிக்கும் அதிகமானவர் பட்டணங்களிலும் நகரங்களிலும் வசித்தார்கள்; அவர்களுள் பெரும் பகுதியினர் பெரிய பிரதான நகரங்களிலும் அவற்றின் அருகாமையிலும் இருந்தார்கள். தொழில், வர்த்தகம், உல்லாசப் பொழுது போக்கு, கல்வி, இலக்கியம், கலை—இவற்றின் கேந்திரஸ்தானங்கள் நகரங்களே. நகர வாழ்வு முறைகள் நாட்டுப் புறங்களிலும் பரவின. சினிமா, ரேடியோ, மோட்டார்கள், ஒரு மூலஸ்தானத்திலிருந்துப் பல பத்திரிகைகளுக்கு ரசமான விஷயங்கள் விநியோகித்தல், நாடு பரந்த விளம்பரம், இது போன்ற பல அபிவிருத்திகளின் காரணமாக தொலைவிலுள்ள ஊர்களின் தனிச் சிறப்புகள் மறைந்து, ஒரு அச்சில் வார்த்தது போன்ற வாழ்க்கை முறை அனுஷ்டானத்திற்கு வந்தது.

இவ்வாறு, ஓரச்சு வாழ்க்கைக்கான மிக முக்கிய காரணங்கள் மோட்டார் கார், ரேடியோ, மேலும் சினிமா. சமுதாய வாழ்க்கையில் அவை மிக முக்கிய இடம் பெற்றன. அம் மூன்றிலும் மோட்டார் கார் மிகப் பழையதும், சில அம்சங்களில் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கதுமாகும்: மோட்டார் வண்டி வந்ததால் தனிமை போய்விட்டது; வாழ்க்கை துரிதப்பட்டது; ஓய்வு நேரத்தைக் கழிக்கப் புதுச் வழிகள் தோன்றின; இளைஞர்களுக்கு ஒரு புதுச் சுதந்திரம் கிடைத்தது; பெரிய புதுத் தொழில்கள் உண்டாயின; மிலியன் கணக்கானவர்களுக்கு வேலை கிடைத்தது; நாடு முழுதும் புதுச் சாலைகள் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது; ரயில்வேக் கம்பெனிகளுக்கு கவலையுண்டாகும் அளவுக்குப் போட்டி ஏற்பட்டது; சிவில் போரில் எவ்வளவு உயிர்ச் சேதமும் அங்க ஹீனமும் உண்டாயிற்றோ அவ்வளவும் வருஷாவருஷம் மோட்டார் வண்டியின் காரணமாக உண்டாயிற்று! சில வருஷங்களுள் அது பணக்காரனின் உல்லாச சாதனமாக இராமல் ஒவ்வொருவனுடைய

தேவைப் பொருளாக—முக்கியமான தேவைப் பொருளாக ஆயிற்று.

சுமாராக சமீப காலத்தில் தோன்றிய சினிமாவும் ரேடியோவும் அநேகமாய் அதே அளவுக்கு முக்கியமானவையே. மேலும், 1927-ல் பேசும் படம் வந்த பிறகு தான் அது மிக முக்கியமான தொழில்களில் ஒன்றாயிற்று. சினிமாக்களைப் பார்த்துதான் வளரும் தலைமுறை வாழ்க்கை சம்பந்தமான பல தகவல்களும் அபிப்பிராயங்களும் கற்றது; சாதாரணமாக அவை சிருங்கார ரசமானவை; பல சமயங்களில் அவை பல தவறான வழி காட்டுபவை; விரசமான அனுபவ உலகிலிருந்து சுவாரஸ்யமான கற்பனை உலகுக்குத் தப்பியோடிச் சிறிது நேரம் தன்னை மறந்திருக்க சினிமா பலருக்கு உதவிற்று; அங்கு சிஷ்ட பரிபாலனமும் துஷ்ட நிக்கிரகமும் நிச்சயம்! பெண்களெல்லாம் கட்டழகிகள், ஆண்களெல்லாம் சுந்தர வீர புருஷர்கள்; அங்கு செல்வம் ஆனந்த வாழ்வுக்கும், ஏழமை போதுமென்ற மனதிற்கும் வழி காட்டின. நேர்முகமாகவும் மறைமுகமாகவும் சினிமா மனித வாழ்க்கையைக் கணக்கிட முடியாத அளவு பாதித்தது. ஆடை அலங்காரங்களில், வீட்டுச் சாமான்களில் அழகிய ஜோடனையில் அவை முன் மாதிரியாக விளங்கின: ஜனரஞ்சகமான பாடல்கள் அங்கு உதித்தன; நாகரிகப் பழக்க வழக்கங்களை அது கற்பித்தது; நல்ல படிப்பினைகளும் ஊட்டிற்று; மக்கள் போற்றும் கதா நாயகர்களும் கதாநாயகிகளும் சினிமா ஸ்டூடியோவில் ஜனித்தார்கள். அவர்களுடைய செல்வாக்கு உலகெல்லாம் பரவிற்று; அமெரிக்க சாம்ராஜ்ய வாதத்தின் மிக ஆற்றலுடைய கருவியாக அவர்கள் பணியாற்றினார்கள் என்றும் சொல்லலாம். பிரிட்டிஷ் தீவுகளில், ருஷ்யாவில், மலேயாவில், ஆர்ஜென்டினாவில், உலகத்தின், பல நாடுகளில், ஆவலுடன் சினிமா பார்ப்பவர்களுக்கு அவை அமெரிக்க வாழ்க்கையைச் சித்தரித்தன—அது ஒவ்வொரு சமயம் கேலிச் சித்திரமாகவும் முடிந்தது.

ரேடியோ அதே அளவுக்கு உல்லாசப் பொழுது போக்குக்கும், கல்வியூட்டவும், ஒரு நிலை வாழ்வு முறைப் பிரசாரத்திற்கும் ஏற்ற சாதனமாக உதவிற்று. சாமான்ய அமெரிக்க மனத்தை அறிய வேறு எந்த ஆராய்ச்சியைக் காட்டிலும் ரேடியோ "நிகழ்ச்சி" அட்டவணையின் பரிசீலனை அதிகமாக உதவும். இரண்டு க்ஷேத்திரங்களில் ரேடியோ வெறும் பொழுது போக்கல்லாத யத்தனங்களில் ஈடுபட்டது. அது—தொட்டும் தொடாமலும் என்றிருந்தாலும்—கல்விப் பிரசாரம் செய்தது; மேலும் செய்தி விநியோகமும், அரசியல் பிரசாரமும் செய்தது. அநேகமாக எல்லா அமெரிக்க ரேடியோ நிலையங்களும் வரி வசூலால் வருமானம் பெறுமல், விளம்பர வருமானத்தை நம்பி, தனி யத்தனங்களாக வளர்ந்திருப்பது கவனிக்கத்தக்கது.

சர்க்கார் கட்டுப்பாடு இல்லாமல் ரேடியோ சுய ஆதினமாக வளர்ந்ததால் மக்களுக்கு லாபமா நஷ்டமா, அமெரிக்க மக்களுக்கு சூக்ஷ்மமான பெரிய நஷ்டம் விளைந்து வருகிறதா, என்பதுபற்றி அபிப்பிராய பேதம் உண்டு.

கடுமையான மந்த காலம்: டாஃப்டுக்குப் பிறகு வேறெந்த ஜனதிபதிக்கும் இல்லாத அளவு அனுகூலமான நிலையில் ஹெர்பெர்ட் ஹூவர் பதவி யேற்றார். நாடு இவ்வளவு செழிப்பாகவோ, சமுதாய நிலை இவ்வளவு ஆரோக்கியமாகவோ இதற்கு முன் இருந்ததில்லை என்றே தோன்றிற்று. பங்கு விலைகள் வான் நோக்கி உயர்ந்தன; மாதா மாதம் பல நூறு மிலியன் டாலருக்குப் புதுப் பங்குகள் போட்டாபோட்டியில் வாங்கப்பட்டன; சூன்யம் என்னும் மரத்திலிருந்து கொள்ளை லாபம் என்னும் பழங்கள் பறித்தல்என்னும் அற்புதமான புது விளையாட்டில் பங்குதார்கள் கலந்து கொண்டார்கள். மோட்டார் வண்டிகள், பனிப்பெட்டிகள், மின்சாரத் துப்புரவு யந்திரங்கள், ரேடியோக்கள், எண்ணெய் அடுப்புகள் முதலியன எவ்வளவு வேகமாகத் தயாராஞலும், வாங்குவோரின ஆவல்திருப்தியடையவில்லை. ரயில்பாதைகள் தம்பொறுப்பைத் தாங்க முடியாமல் திணறின. பெரிய நகரங்களின் சுற்றுப்புறங்களிலும், தெற்கேயும் மேற்கேயுமுள்ள புதியதொழில் பட்டணங்களிலும் லக்ஷக்கணக்கான புது வீடுகள்—பழைய மோஸ்தர்கள், புதிய மோஸ்தர்கள், எளியவை. கலேச்சிக்கல் நிறைந்தவை—கிளம்பின. கல்லூரிகளிலும் சினிமாக் கூடங்களிலும் கூட்டம் அமளிபட்டது; ஆண்களுக்கு விளையாட்டுச் சாதனங்களும், பெண்களுக்கு அலங்காரப் பொருள்களும் தயாரிப்பது பெருவாரித் தொழிலாயிற்று; சாமான்யமாக இருந்த விளம்பரத் தொழில் விஞ்ஞானம், கலே என்னும் தரத்திற்கு உயர்ந்தது. ஒவ்வொரு நாளும் விஞ்ஞான அறிவிலோ செயல் முறையிலோ தோன்றிய ஒரு புது, அற்புத முன்னேற்றம்—"எதிர்காலம் இன்னும் சிறந்திருக்கப்போகிறது" என்று உறுதி கூறியது. அது புது யுகம்; குடியானவர்களும் விசேஷப் பயிற்சியற்ற பாட்டாளிகளும் அந்த நன்மைகளில் பங்கு பெருவிட்டால் தயங்கவேண்டாம், அவர்களுக்கும் நல்ல காலம் பிறக்கும். அந்தப் புது யுகத்தை ஹூவர் துவக்கி வைப்பதும் மிகப் பொருத்தமே—அவர் கீர்த்திபெற்ற எஞ்ஜினியர், காருண்யமுள்ளவர், வர்த்தக இலாக்காக் காரியதரிசியாக இருந்த போது நன்கு உழைத்து வர்த்தக நாகரிகத்தைப் புரிந்து கொண்டவர் என்று பெயர் பெற்றவர். "உலக சரித்திரத்திலேயே இதுவரை இருந்திராத அளவுக்கு, தரித்திரத்துடன் போராடி வெற்றியை அணுகுவதில், அமெரிக்கராகிய நாம் முன்னணியில் நிற்கிறோம்" என்று அவர் பெருமையுடன் கூறினர்; அந்த "இறுதி வெற்றியை" ஹூவரே கொண்டாடுவார்

என்று அநேகமாய் எல்லோரும் எதிர் பார்த்தார்கள். ஆனல் விதி குரூரமாக இருந்தது.

1929 அக்டோபர் மாதம் எதிர்பாராத அதிர்ச்சியளிக்கும் நாடகம் போல வர்த்தக உலகத்தில் இடி விழுந்தது. 24-ம் தேதி, 12 மிலியனுக்கும் அதிகமான பங்குகள் தலைகால் தெரியாமல் கை மாறின; 29-ம் தேதி பேராபத்து வந்தது. அமெரிகன் டெலெஃபோன் அண்டு டெலெகிராஃப், ஜெனரல் எலெக்ட்ரிக், ஜெனரல் மோட்டார்ஸ் போன்ற சஞ்சலமறியாத பங்குகளும் ஒரே வாரத்தில் 100-200 சதங்கள் விழுந்து போயின. மாத முடிவுக்குள் ஏட்டுக் கணக்குப்படி நாட்டின் மொத்த நஷ்டம் 15 பிலியன் டாலருக்கும் அதிகம்; ஆண்டு முடிவதற்குள் இத் தொகை—அதாவது, நாட்டு முதலீட்டின் சுருக்கம்—கற்பனைக் கடங்காத 40 பிலியன் டாலர் ஆகிவிட்டது. மிலியன் கணக்கில் பங்குதார்கள் தம் ஆயுட்காலச்சேமிப்பை இழந்தார்கள். ஆனல் வியாபார மந்தத்தின் சுழல் அலே அதோடு நிற்கவில்லே. வியாபார ஸ்தலங்கள் மூடிக்கிடந்தன; தொழிற் சாலேகள் வேலே நிறுத்தின; பாங்குகள் முறிந்தன; வேலேயற்ற பல மிலியன் ஆட்கள் வேலே தேடித் தெருக்களில் வீணில் அலேந்தனர். பல லக்ஷக் குடும்பங்கள் வீடுவாசலே இழந்தன; வரி வசூல் படுத்துப்போனதால் நகர ஸ்தாபனங்கள் தம் சிப்பந்திகளுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லே; கட்டட வேலே நின்றே போயிற்று எனலாம்; ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த அயல் நாட்டு வியாபாரம், அனுபவத்தில் வராத அளவு குறைந்தது.

வர்த்தக வட்டாரத்தில் ஏற்பட்ட இந்த கிலிக்கும், அதைத் தொடர்ந்த மந்த காலத்திற்கும் காரணங்கள் என்ன? வியாபாரத்தில் உயர்வு தாழ்வு ஏற்படுவது சகஜந்தான் என்னும் விடை திருப்தியளிக்கவில்லே; தனிப்பட்டவர் ஒரு யத்தனத்தில் அளவு கடந்து ஈடுபட்டு, அரசாங்கம் தலேயிட்டுக் கட்டுப்படுத்தாவிட்டால் தீமை ஏற்படும் என்பது உண்மையாஞலும் அது முழுக்காரணம் ஆகாது. 1929-ன் வியாபார முறிவுக்குத் தெளிவான சில காரணங்கள் கூறலாம். மொத்த உற்பத்தி நாடு இயற்கையாக ஏற்கக் கூடியதைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. இதற்கு முக்கிய காரணமாவது, நாட்டு மொத்த வருமானத்தில் மிகப் பெரிய பகுதி எண்ணிக்கையில் குறைவான நபர்களிடையே பிரிந்திருந்தது: அவர்கள் அத்தொகையை சேமித்து வைத்தார்கள் அல்லது மறுபடி முதலீடாக உபயோகித்தார்கள்; போதுமான அளவு பணம் பாட்டாளிகள், குடியானவர், குமாஸ்தாக்கள் போன்றவர் இடையே விநியோகம் ஆகவில்லே; இயற்கை முறையில், தயாரான அன்றுடத்தேவைப் பொருள்களைத் தொடர்ந்து பெரிய எண்ணிக்கையில் வாங்க வேண்டியவர்கள்

அவர்களே. அடுத்ததாக, டாரிஃப் கொள்கைகளாலும் யுத்தக் கடன் கொள்கைகளாலும் அயல் நாட்டு பஜார்கள் அமெரிக்க சரக்குகளுக்கு அநேகமாய் உதவாமல் போயின; நான்காம் பத்தாண்டின் உலகம் பரவிய மந்த தசையில் அந்தப் பஜார் முற்றிலும் முறிந்தது. மூன்றுவது காரணம், சிரமமின்றிக் கடன்களிப்பதற்கான கொள்கைகள் இருந்ததால் கடன் சொத்து மிதம் மீறிப் போய்விட்டது; தவணைத் திட்டத்தில் சாமான் வாங்குவதும், அளவுகடந்த சூதாட்டப் பங்கு வியாபாரமும் பெருகின. அரசாங்கக் கடனும் தனிப்பட்டவரின் கடனும் சேர்ந்து மொத்தம் 100 பிலியனுக்கும் 150 பிலியன் டாலருக்கும் இடையே இருந்தது; பேராசை வியாபாரம் சொத்துக்களின் மதிப்பையும் பங்குகளின் மதிப்பையும் பொய்யான நிலைக்கு உயர்த்தி விட்டது. கடைசியாகத் தொடர்ந்த விவசாய மந்தம், தொடர்ந்த வேலையின்மை, செல்வமும் சக்தியும் இடை விடாமல் பல பெரிய கார்ப்பரேஷன்களில் திரளுதல் ஆகிய காரணங்களால், மோசப் பொருளாதாரம் நோய்வாய்ப்பட்டதாயிற்று.

காரணங்கள் எப்படியிருந்தாலும் ஒன்று நிச்சயம்—நாடு தன் சரித்திரத்திலேயே மிகக் கொடிய மந்த தசையில் சிக்கியிருந்தது. சென்ற நூற்றாண்டில் நான்கைந்து முறை மந்த தசை கலவரப்படுத்தியதுண்டு. ஆனால் 1929-ன் பேராபத்து அநேகமாய்ப் பத்து வருஷங்கள் தன் ஆதிக்கத்தைச் செலுத்திற்று. கால நீட்சியிலும் சரி, பெருவாரி மக்களின் துன்பத்திலும் சரி, அது இணையற்றது. இன்னொரு விதத்திலும் அது முன் அனுபவங்களுக்கு மாறுபட்டது—அது உற்பத்திக் குறைவால் அல்லாமல் உற்பத்தி மிகையால் ஏற்பட்ட சங்கடம். செல்வமும் பொருள்களும் விநியோகமாகும் முறை முறிந்து போனதற்கு அது பெரிய அத்தாட்சி.

மந்த தசை இயற்கைக் காரணங்களாலல்லாமல் செயற்கைக் காரணங்களால் உண்டானதால் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது அவசியமாயிற்று. ஆனால் அது உடனே அமுலாக்கப்படவில்லை. பல மிலியன் ஜனங்களைப் போலவே ஜனாதிபதி ஹூவரும், எல்லாம் சரியாகப் போய்விடும் என்று நினைத்தார்; அரசாங்கத்தின் பொறுப்பை அவர் முற்றிலும் மறுக்காவிட்டாலும், தனிப்பட்ட தர்மஸ்தாபனங்களும் ஸ்தல அரசாங்கங்களுமே உபகாரத்தைத் தரவேண்டுமென்று அவர் கருதினார். "பசிப் பிணியிலிருந்தும் குளிரிலிருந்தும் காப்பது நாட்டின் கடமை; அவ்வகையில் உண்மையாகவே கஷ்டப்படுவோரை நாம் கவனிப்போம்," என்று அவர் சொன்னார்; ஆனால் வேலையற்றவருக்கோ உணவற்றவருக்கோ மத்திய அரசாங்கம் உதவி புரிவதற்கான யோசனைகளை அவர் பிடிவாதமாகத் திரஸ்கரித்தார். அரசாங்கம் சிறு சிறு

சிகிச்சை முறைகளைக் கையாண்டு கொண்டே இருந்தது—சாலைகள், பொதுக் கட்டடங்கள், விமான நிலையங்கள் முதலியன கட்டுவதற்கான ஒரு திட்டம்; குடியானவர்களுக்குக் கடன் கொடுப்பதற்காக 300 மிலியன் டாலர் ஒதுக்கி வைத்தல்; பாங்குகள் ரெயில்வேக் கம்பெனிகள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள், தொழிற்சாலைகள் முதலியவற்றிற்குக் கடன் கொடுத்துதவுவதற்காக இரண்டு பிலியன் டாலர், இத்தியாதி. துரதிர்ஷ்ட வசமாக இந்தச் செயல்கள் போதவில்லை; நிலைமை மேலும் மேலும் மோசமாகி வந்தது. தேசத்தின் பொருளாதார நிலை முற்றிலும் சிதறிப்போகும் என்று தோன்றிற்று. மக்களிடையே விரும்பத்தகாத எண்ணங்கள் வளர்ந்தன.

முரட்டு நாசகாரச் செயல் அல்லது புரட்சி, அமெரிக்கரின் இயற்கையான குணமல்ல; இந்த ஆபத்து நேரத்தில் தலைமையை மாற்றினால் நல்லதென்று அவர்களுக்குத் தோன்றிற்று. ஸைனெட் அங்கத்தினர்களில் முன்னேக்கமுள்ள ரிபப்லிகன் கோஷ்டியொன்று ஹூவரின் கொள்கைகளை ஆட்சேபித்து வந்தது; ஆனால் சுக்காலைத் தன் வசமாக்கிக் கொள்ள அதற்கு பலம் காணுது. ஆகவே நாடு சம்ரக்ஷணைக்காக டிமோக்ராட்டுகள் பக்கம் திரும்புவது அவசியமாயிற்று. 1930-ல் அக்கட்சியினர் காங்கிரஸ் தேர்தலில் நல்ல வெற்றி பெற்றார்கள்; 1932-ல் ஜனாதிபதிப் பதவியை ஏற்கவும் அவர்கள் தயாரானார்கள். ரிபப்லிக் கட்சியின் சூத்திரதாரிகள் கற்கவேண்டிய பாடத்தைக் கற்காதவராய் இறுமாப்புடன் ஹூவர் பெயரையே குறிப்பிட்டார்கள்; அவரும் முன்போலவே "முரட்டுத் தனித்தன்மை" என்ற மந்திரத்தையே உச்சரித்து அதுவே நாட்டைக் காக்கும் என்றார். டிமோக்ராட்டுகள் ஃப்ராங்க்லின் டி. ரூஸ்வெல்டின் பெயரைக் குறிப்பிட்டார்கள்; அவர் ததும்பும் ஊக்கமும் மனிதரைக் கவரும் சக்தியும் படைத்தவர்; நியூயார்க் ஸ்டேட்டின் கவர்னர் பதவி வகித்து, சமயோசித புத்தி, தைரியம், கருணையுள்ள தலைமை, நுட்பமான அரசியல் அறிவு ஆகிய சிறப்புகளுக்காகப் பெயர் பெற்றவர். விரு "புது வாழ்வுத்திட்டம்" வகுப்பதாக அவர் வாக்களித்தார். நவம்பர் மாதம் நடந்த தேர்தலில் ரூஸ்வெல்ட் ஏழு மிலியன் மக்கள் வோட்டு அதிகமாகப் பெற்று வெற்றியுடன் வெள்ளை மாளிகைக்கு விஜயம் செய்தார்.

ஃப்ராங்க்லின் டி. ரூஸ்வெல்டும் புது வாழ்வுத் திட்டமும்: அமெரிக்கக் குடிநலவாழ்வில் மிகவும் தைரிய மூட்டி மக்களை மகிழ்விக்கும் விஷயம் என்ன வெனில், பேராபத்தான சமயத்திலெல்லாம் அது எப்படியோ பெரிய நாயகர்களை சம்பாதித்துக் கொண்டது. ஃப்ராங்க்லின் ரூஸ்வெல்ட் முதல் முறை ஜனாதிபதியானபோது, அவருடைய பெருமை முற்றிலும் தெரியாது என்று சொல்லுவதற்கில்லை; அதே சமயத்தில், குடி

நல வாழ்வு, தேசியம் இரண்டிற்கும் லிங்கனுக்கு இணையான பிரதிநிதி அவர் என்பதையும், புது உலக வாழ்வுக்கு வழி காட்டுவதில் வில்ஸனுக்கு இணையானவர் என்பதையும் அவரை ஆதரித்தவர்கள் அறிந்தார்களோ, என்பது சந்தேகம். திறமையோடு உழைப்பவர், பிறருடன் இனிமையாகப் பழகுபவர் என்ற கியாதி அவர் நியூயார்க்கில் கவர்னராக இருந்த போது உண்டு; ஆனால் அதற்கு முன் அரசியல் துறையில் வெகுகாலம் பயிற்சி பெற்றவர் அவர். செல்வர், சிறப்பான குடும்பத்தைச் சேர்ந்தவர், ஹார்வேர்ட் சர்வகலாசாலைப் பட்டதாரி--தம் உறவினரான தியோடர் ரூஸ்வெல்ட் காட்டிய வழியைப் பின்பற்ற எண்ணி அவர் அரசியலில் அதிகச் சிரத்தை கொண்டார். பயிற்சிக் காலத்திலேயே அவருடைய இரண்டு குணங்கள் மக்களின் கவனத்தைக் கவர்ந்தன—முன்னேக்கமான கொள்கைகளில் நம்பிக்கை, பல துறைகளில் இருப்பவரின் நம்பிக்கையைச் சம்பாதிக்கும் இயற்கை யாற்றல். அவர் நியூயார்க் ஸ்டேட் சபையில் உத்தியோகம் பார்த்தவர்; வில்ஸனின் அரசாங்கத்தில் கடற்படை இலாக்காவின் உதவிக் காரியதரிசியாக இருந்தவர்; 1920-ல் உப ஜனாதிபதிப் பதவிக்காக முயற்சி செய்தவர். அதன் பிறகு சிறு பிள்ளைவாதம்--போலியோ— அவரைத் தாக்கிற்று. சிறுகச் சிறுக அவர் ஆரோக்கியம் பெற முயன்றார்; படுக்கையில் கிடக்கும் நாட்களில் அவர் அமெரிக்க அரசியல் சரித்திரம் படிப்பதோடு, கடிதங்கள் மூலமும் நேரில் சந்தித்தும் விசுவாசமான பல நண்பர்களைச் சம்பாதித்துக் கொண்டார்.

அனுபவமும் அறிவும் தவிர வேறு சிறந்த குணங்களும் புது ஜனாதிபதியிடம் இருந்தன. பொது மக்களிடம் அவர் கொண்ட இயற்கையான ஆழ்ந்த நம்பிக்கை அவரை ப்ரையனுக்கு இணையாக்கின; குடிநல வாழ்வில் காரண சம்மதமான ஆழ்ந்த நம்பிக்கை கொள்வதில் அவர் வில்ஸனுக்கு இணையானவர். அவருடைய அரசியல் அறிவு நுட்பமானது; தலைமை வகித்தல் என்னும் கலையை அவர் அறிந்தவர். மேதையின் கூர்மை விசேஷமாக இல்லாவிட்டாலும், பெரிய பிரச்னைகளின் ஜீவாதாரத்தை அவர் இயற்கையாக உணர்ந்தார். வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்ளும் திறமையோடு, முக்கிய உத்தேசத்தை மாறவிடாமல் விடாப்பிடியாகத் தொடரும் தன்மையும் அவரிடம் உண்டு; முக்கியமற்ற அம்சங்களில் விட்டுக் கொடுத்து எதிராளியைத் திருப்திப்படுத்துவார். என்றாலும் முக்கியமான விஷயத்தில் சலுகை காட்டுவது மிக அபூர்வம்; விஞ்ஞான முறையும் கலை அம்சமும் கலந்தது அரசியல் என்பது அவருக்குத் தெரியும்; திட்டங்கள் மூலமாகவே சமுதாயத்தை மாற்றமுடியும் என்ற தப்பெண்ணம் அவருக்குக் கிடையாது; விஞ்ஞானியின் சூத்திரங்களும், என்ஜினியரின்

கணக்குகளும் ராஜதந்திரத்திற்குப் போதா. மனித இயல்பு அறியமுடியாத போக்குகள் உடையது, என்பதை அவர் நன்கறிந்தவர். அமெரிக்காவின் பிறப்பையும் வளர்ச்சியையும் தெரிந்தவர் தன் காலத்து உலகத்தையும் புரிந்து கொண்டவர்; நாளைய உலகத்தின அமைப்பைப் பற்றியும் சிந்தித்தவர் அரசியல் வாதிகளிடம் நம்பிக்கை கொண்டவர் என்பதற்காக அவர் நிபுணர்களிடம் அவநம்பிக்கை கொள்ளவில்லை; பொதுமக்களின் அபிப்பிராயங்களை அவர் உணர்ந்திருந்தாலும் அதை மாற்றியமைக்கவோ எதிர்க்கவோ அவர் தயங்கவில்லை. சிலசமயம் அவர் மிகப்பெரிய விஷயத்தை அல்ப விஷயம்போல் பாவித்து அவரை நம்பினேருக்குக் கவலையுண்டாக்குவார்; ஆனால் பலவகைப்பட்ட துறைகளில் அவருக்குச் சிரத்தையுண்டு; அலுப்பே அறியாதவர் அவர்; அவருடைய பொங்கும் உற்சாகம் பிறரையும் பற்றிக்கொள்ளும்; இந்தக் குணங்கள் அண்மையிலுள்ளோர் மூலமாக, கடைசியில், நாடெங்கும் எட்டின. இந்தப் பெரிய ஆக்க குணங்கள் அவருடைய குறைகளுக்கு நன்கு ஈடுகட்டின. மேலோட்டமான கவனம், பயங்கரமான பிரச்னைகளை அசட்டை செய்தல், பெரிய பணச் செலவைப்பற்றிய எச்சரிக்கையை முற்றிலும் அல்ப விஷயமாகப் பாவித்தல், அவரை எதிர்த்தவர் மேல் மிகக்கேவலமாகப் பழிவாங்குதல்—இவை அவருடைய தோஷங்கள்.

ரூஸ்வெல்டின் துவக்கச் சொற்பொழிவில் வருங்காலத்தைப் பற்றி அளித்த வாக்குறுதி; வில்ஸனின் முதல் துவக்கச் சொற்பொழிவைப்போன்ற கொல்வன்மை யில்லாவிட்டாலும், அது கருத்தில் அதே அளவு குறிப்பிடத்தக்கதே. அடிப்படையில் நாடு நல்ல நிலையில் இருக்கிறது என்று உறுதிகூறி, அவர் "நம் காலடியில் ஏராளமான பொருள்கள் இருக்கின்றன; ஆனால் நாம் அவற்றைத் தாராளமாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை," என்று விளக்கினார். வியாபாரிகளும் சுயநலக் காரர்களுமே குற்றவாளிகள். யேசு கிறிஸ்து கோவிலிலிருந்த புல்லுருவிகளை விரட்டியடித்ததுபோல் இவர்களையும் விலக்கியாகிவிட்டது; இனிப் புது அமைப்பே பாக்கி நிற்கும் காரியம். அந்தப் பணிக்கு ஜனாதிபதி தன்னை அர்ப்பணம் செய்துகொண்டார். ஏழமையும் குறையும் விலகுதல், விவசாயமும் செயற்கைப்பொருள் உற்பத்தியும் சமமாக இருத்தல், பாங்குகளின் மேல்பார்வை, அயல்நாட்டுப் பொருளாதார உறவுகளை மாற்றியமைத்தல், அயலார்களுடன் அன்புடன் பழகுதல்; வல்லரசுக்குத் தகுந்த முறையில் சர்வதேசப் பொறுப்புகளை ஏற்றல். "துன்பமயமான உலகத்தில் துன்பப்படும் நாட்டிற்குத் தேவையான யோசனைகூற நான் தயாராயிருக்கிறேன். அந்த யோசனைகளுக்கு.....அரசாங்க விதிகள் அனுமதிக்கும்

அளவில் நான் சீக்கிரமாகக் காங்கிரஸின் அனுமதிபெற முயலுகிறேன். (காங்கிரஸ் சம்மதிக்கத் தவறினால்) ஆபத்து காலத்திற்கான ஒரு சாதனத்தை என் கையில் தரும்படி நான் காங்கிரஸிடம் கேட்கிறேன். வெளிநாட்டுப் பகைவன் நம்மேல் படையெடுத்தால் காங்கிரஸ் எனக்கு அளிக்கக்கூடிய நிர்வாக அதிகாரத்தைக் கோருகிறேன். தற்காலத்து ஆபத்தோடும் அவ்வாறுதான் போர்புரியவேண்டும்,'' என்று அவர் தைரியமாகச் சொல்லி, இவ்வாறு முடித்தார் :-

> .....சிரமமான நாட்கள் நம் முன் இருக்கின்றன; தேசத்தின் ஒற்றுமை நமக்கு அளிக்கும் தைரியத்தோடும்; விலையற்ற பழைய நீதிமுறைகளைத் தேடும் தெள்ளிய விழிப்போடும் நாம் போரில் இறங்குவோம்; முதியவர்களும் இளைஞர்களும் பின்வாங்காமல் செய்யும் கடமையால் கிடைக்கும் புனிதமான திருப்தியுடன் இத்துன்பத்தை ஒழிக்கப் பார்ப்போம். பூர்ணமான, சாசுவதமான தேசிய வாழ்வு நமக்குண்டு என்ற உறுதியை நாம் நாடுவோம். அடிப்படையான குடிநல வாழ்வுக்கு நல்ல எதிர்காலமுண்டு என்ற நம்பிக்கையை நாம் இழக்கவில்லை.

ஒரு புதிய வாழ்வுத் திட்டத்தைப்பற்றிய எச்சரிக்கையாக விளங்கிற்று அந்த ஆரம்பப்பிரசங்கம். வெகு நாட்களுக்கு முன்பே வந்திருக்கவேண்டியது அந்தத் திட்டம். பத்து வருஷங்களுக்கும் அதிகமாக அரசியல் வாதிகள் தெரிந்தே ஒழுங்கற்ற ஆட்டம் ஆடியிருக்கிறார்கள்: லாபம் பெரும்பாலும் வர்த்தகர்களின் பைகளுக்குச் சென்றிருக்கிறது. ஆட்டம் இனி விதிப்படியே நடக்கும். வஞ்சனைக்கு இடமிராது என்று ரூஸ்வெல்ட் எச்சரித்தார். சமகாலத்தவர் பலருக்கு புதுத் திட்டம் புரட்சிகரமாகத் தோன்றிற்று. உண்மையில் அது முற்றிலும் பழைய வழி. ஜெஃபெர்ஸனின் குடியரசும் வில்ஸனின் குடியரசும் எப்படிப் பழைய கருத்துகளை ஆதரவாகக் கொண்டிருந்தனவோ அப்படியேதான் இதுவும். அமெரிக்கக் குடியரசின் முக்கிய அம்சங்களை—நிர்மாணத் திட்டத்தின்கீழ் சமலாப நஷ்டத்தை, சொத்துக்களினும் மனிதர்களினும் பத்திரத்தை, சுதந்திரத்தை—வலதுசாரி, இடதுசாரித் தாக்குதல்களினின்று காப்பாற்றுவதே அதன் லக்ஷியம்.

புதுத்திட்டம் பிறந்தது குடிநலக் கருத்திலிருந்து; அது பணியாற்றியது விகாசமுறையில். பதினேந்து வருஷமாகச் சட்ட சபைகள் தடைப்பட்டிருந்ததால், இப்பொழுது சீர்திருத்தச் சட்டங்கள் ஒரு பெருக்காக வெளிவந்தன; இதுவும் ஒரு விரும்பத்தகாத ஆற்றல் வெளியீடோ என்று தோன்றலாம்; ஆனால் பிரவாகம் நிலைக்கு வந்தபிறகு பார்த்தால் தண்ணீர் பழைய படுகைகளில்தான் பாய்கிறது. புதுத்திட்டத்தின் இயற்கை வளச் சேமிப்புக் கொள்கை தியோடர் ரூஸ்வெல்டால் ஆரம்பிக்கப்பட்டது; ரெயில்வேக் கம்பெனியின் கட்டுப்பாடும் ட்ரஸ்ட் கட்டுப்பாடும் 50 வருஷங்களுக்கு முன் ஆரம்பமானவை; பாங்கு சீர்திருத்தங்களும் செலாவணிச் சீர்திருத்தங்களும் வில்ஸனால் ஆரம்பிக்கப்பட்டவை; ஜனக் கட்சியினர் விவசாய உதவியில் ஈடுபட்டிருந்தனர்; பாட்டாளிகளுக்கான சட்டங்கள் விதிக்க விஸ்கான்ஸின், ஆரிகன் போன்ற ஸ்டேட்டுகள் வழிகாட்டின. ஒரே குழப்பத்தையுண்டாக்கிய நீதி ஸ்தலச் சீர்திருத்தங்களும்கூட லிங்கன், தியோடர் ரூஸ்வெல்ட் ஆகியோர் காட்டிய வழியே சென்றன. அயல்நாட்டு உறவுகள், நாட்டின் பத்திரத்தை உறுதியாக்குதல், கடல்களில் சுதந்திரம், சட்டத்திற்கும் அமைதிக்கும் ஆதரவு, மேற்கு உலகில் குடிநல ஆட்சியைக் காத்தல், என்ற பரம்பரைக் கொள்கைகளின் தொடர்ச்சியே ''புதுத் திட்டம்''.

புதுத் திட்டத்தின் சாதனைகள் 1933 மார்ச்சு 4-ஆம் தேதி ஃப்ராங்க்லின் ரூஸ்வெல்ட் பதவியேற்றபோது நாட்டின் பொருளாதாரம் மிகக் கேவலமான நிலையை எட்டி ஒரு சிகிச்சைக்கும் கட்டுப்படாதோ என்று தோன்றிற்று. சாகசத் தோடும் சுறுசுறுப்பாகவும் செயலில் இறங்கி ரூஸ்வெல்ட், தன் முதல் பதவிக் காலத்திற்குள் பலரகப்பட்ட பல முக்கியமான சட்டங்கள் நிறைவேற்றினார்; அவருடைய முன்னோர் எவரும் அவ்வளவு சாதித்தது கிடையாது. கஷ்டப்படும் வர்த்தகர்களுக்குப் பணஉதவி கடனாக அளிக்கப்பட்டது. அத்தொகைகளின் மொத்தம் சொற்பகாலத்தில் பல பிலியன் டாலர் ஆயிற்று. பொது நிர்மாணக் காரியங்களுக்கான விஸ்தாரத் திட்டம் இடுவதோடு, பணப் புழக்கத்தை அதிகரிக்கவும், வேலையற்றவருக்கு வேலையளிக்கவும், வீடுகட்டுதல், ஸ்தல அபிவிருத்திக்காகச் சாலைகள், பாலங்கள் முதலியன அமைத்தல் போன்ற காரியங்களுக்காகவும் கடனும் கொடுக்கப்பட்டது. வேலையற்றவருக்கு உபகாரமாக விஸ்தாரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன; 1940-க்குள் நேர்முறை உபகாரமாக ஏறக்குறைய 16 பிலியன் டாலரும், முன்கூறிய பொது வேலைகளில் ஏழு பிலியனும் செலவிடப்பட்டன. இயற்கை வளங்களைச் சேதமில்லாமல் உபயோகிப்பதற்கான தொலைநோக்குள்ள காரியக்கிரமமும் வகுக்கப்பட்டது; அதன் மூலம் மூன்று மிலியன் இளைஞர்களுக்கு வேலை கிடைத்தது. ரயில்வேக் கம்பெனிகளுக்கு உதவியளிக்கும் வகையில் திவாலாகிப்போகும் வசதிகள் லாபகரமாக ஒன்று சேர்க்கப்படுவதோடு, வெகு நாட்களுக்கு முன்பே நடந்திருக்கவேண்டிய சீர்திருத்தங்களுக்காகப் பணம் கொடுக்கப்பட்டது. எழுத்தாளர்களுக்கும், நாடக சாலைகளுக்கும், சங்கீத கோஷ்டிகளுக்கும், பொதுக்கூட்டங்களை அழகுபடுத்தும் ஓவியர்களுக்கும் சிற்பிகளுக்கும் பண ஆதரவு

அளிக்கப்பட்டதால் நாட்டின் கலாசார வாழ்வு செழித்தது. அதேபோல விவசாயத்திலும் கைத்தொழிலிலும் தொலை நோக்கமுள்ள சீர்திருத்தங்கள் உடனடியான உபகாரமளிப்பன வாகவும் இருந்தன.

துரிதமாகப் பல பெரிய காரியங்கள் செய்யும்போது தவறுகள் ஏற்படுவது இயல்பே; அவற்றுள் சில ஆபத்தானவை. ''தேசியப் புனர்வாழ்வு நிர்வாகம்'' என்னும் திட்டத்தை சுப்ரீம் கோர்ட்டு கண்டித்து ரத்து செய்தது; ஆனால் அதற்கு முன்பே அந்தத் திட்டம் மரித்துவிட்டது. விலைகளின் உயர்வுக்காக டாலரின் மதிப்பு குறைக்கப்பட்டது; ஆனால் அந்தக் கொள்கை அதிகமாக நிறைவேறவில்லை. வீண் முறைகளில் பணம் செலவிடப்பட்டது; தேசியக் கடன் வேகமாக ஏறிற்று. அரசாங்க நிர்வாகத்தில் உள் சண்டைகள் மலிந்திருந்தன. ஆனால் மொத்தத்தில் நன்மையே அதிகமெனலாம்.

பாங்கு, நீர்சக்தி, விவசாயம், தேர்ச்சியற்ற உழைப்பு, சமுதாய க்ஷேமம், அரசியல்—இவற்றையொட்டிய சட்டங்கள் சாசுவதமான சீர்திருத்தங்களுக்குக் காரணமாயின. புதுத் திட்டம் பாங்குகளை பெயரளவில் மூடும்படி செய்து, கண்டிப்பான மேல்பார்வையோடும் டிபாசிட்டுகளுக்கு அரசாங்க உத்தரவாதமளித்தும் அவற்றைத் திறந்தது. மேலெழுந்த வாரியாகக் கட்டுப்பாட்டுடன், பணவீக்கம் உண்டாக்கிசரக்குகளின் விலைவிகிதங்களை உயர்த்துவதற்காக, அது செலாவணியில் சுவர்ண அடிப்படையைக் கைவிட்டு டாலரின் மதிப்பைக் குறைத்தது. பங்குகள், பாண்டுகள், கடன் பத்திரங்கள் முதலியவற்றின் விற்பனையை அது கட்டுப்படுத்தியதோடு, நாட்டின் எலெக்ட்ரிக் சப்ளைக் கம்பெனிகளைத் தம் பிடிக்குள் வைத்துக்கொண்டு சில உள் ஆட்களின் லாபத்திற்காக பங்கு விலை விளையாட்டுகளை ஆடின. ''ஹோல்டிங்கம்பெனி''களை புதுத் திட்டம் கலைத்துவிட்டது. (பங்குதாரின் நோக்கமோ, நிர்வாகியின் நோக்கமோ இல்லாமல், சரக்குகளின் வியாபகத்தையும் விலைவாசிகளையும் தன் உத்தேசப்படிக் கட்டுப்படுத்துவதே ஹோல்டிங் கம்பெனிகளின் கேவலமான குறிக்கோள்.) போட்டி வியாபாரத்தால் உண்டாகும் சேதத்தைத் தடுப்பதற்காக நியாயமான வர்த்தகப் பழக்கங்களை வளர்க்கும் விதிகளை அது இயற்றிற்று. அதிக வருமானமுள்ளவர்களுக்கும் கார்ப்பொரேஷன்களுக்கும் அது உயரிய விகிதத்தில் வரி விதித்தது; வரி செலுத்தாமல் ஏமாற்றுபவரைப் பிடிக்க அது வழிகள் கண்டுபிடித்தது; ஸ்டேட் அரசாங்க மத்திய அரசாங்கங்களுக்கிடையே வரி விதிக்கும் விஷயமாக இருந்த சுழப்பத்தையும் முரண்பாடுகளையும் அது விலக்கிற்று, நாட்டின் ஒரு பெரிய நீர்ப்பாசனப் பகுதியின் வளங்களை விருத்தி செய்ய 'டென்னெஸி பள்ளத்தாக்கு நிர்வாகத்தை' அது

நிறுவிற்று; அரசாங்கம் நிர்மாணித்த அணைக்கட்டுகளும் நீர் மின்சக்தி யந்திரங்களும் அதற்குதவின; பொருளாதார விவசாயப் புனரமைப்புக்கான விஸ்தாரமான திட்டமும் வகுக்கப்பட்டது; அந்த யத்தனம் பெரும் வெற்றியளித்ததால் சற்றுச்சிறு அளவில் பல ''நதிப் பள்ளத்தாக்கு நிர்வாகங்கள்'' தொலைமேற்கே துவங்கப்பட்டன.

புது வாழ்வுத்திட்டச் சீர்திருத்தத்தில் நான்கு பெரிய க்ஷேத்திரங்கள் முக்கியமாகக் கவனிக்கத் தகுகவை: விவசாயம், தேக உழைப்பு, சமுதாய க்ஷேமம், நிர்வாகம். விவசாயத் துறையில் சரக்குகளின் விலை விகிதங்களை உலக யுத்தத்திற்கு முன்னிருந்த மட்டத்திற்கு உயர்த்துதல், தேவையான அளவே உற்பத்தி செய்து, உபரிப்பொருளால உண்டாகும் தீமையை ஒழித்தல், நிலத்தை வளமாக வைத்திருக்க ஊக்குவித்தல், விவசாயக் கடன் விநியோகத்தைச் சுலபமாக்குதல், குத்தகைக் குடியானவர்களையும் மட்டமான நிலங்களில் சாகுபடி செய்பவர்களையும் கைதூக்கி விடுதல், வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் விவசாய விளைபொருள்களுக்குப் புது விற்பனை க்ஷேத்திரங்கள் கண்டுபிடித்தல்—ஆகியவை முக்கிய உத்தேசங்கள். இவையெல்லாம் பெரும்பாலும் காரிய ரூபம் பெற்றன. 1933-ல் ''விவசாயத் திருத்துப்பாடு சட்டம்'' இயற்றப்பட்டது; சர்க்காரிடமிருந்து நஷ்டஈடு பெற்றுக் கொண்டுசில முக்கியமான பொருள்களைக் குறைவாகச்சாகுபடி செய்வதே அச்சட்டத்தின் நோக்கம். மூன்று வருஷம் கழித்து சுப்ரீம் கோர்ட்டு அது முறையற்றது என்று தீர்மானித்தது. அப்பொழுது காங்கிரஸ் அதைவிட நல்ல சட்டமொன்று இயற்றிற்று. அதன்படி, வயலின் ஒருபகுதியில் ''நிலத்தின் வளத்தை ரக்ஷிக்கும்'' பயிர்களைச் சாகுபடிசெய்யும் குடியானவர்களுக்கு மானியம் செலுத்த அரசாங்கம் முன்வந்தது. 1940-க்குள்ளாக ஏறக்குறைய ஆறு மிலியன் குடியானவர்கள் அந்தச் சட்டத்தைப்பயன்படுத்திக்கொண்டு சராசரி தலா நூறு டாலருக்கும் அதிகமாகப் பெற்றார்கள். உபரிப் பொருள்கள் மேல் கடன் கொடுக்கவும் பண்டகசாலைகள் அமைக்கவும் புதுச்சட்டம் இடம் கொடுத்தது: கோதுமை வேளாண்மையில் நஷ்டம் பாதிக்காமல் இன்ஷியூர் செய்வதும் சாத்தியமாயிற்று. ஆகவே பருத்தி போன்ற பணப்பயிர்கள் குறைந்தன; புது பஜார்கள் கிடைத்ததால் விலைகள் உயர்ந்தன; 1939-ன் நில வருமானம் 1932-ல் இருந்ததைப்போல் இருமடங்காயிற்று. ''விவசாயக் கடன் இலாக்கா''வின் மூலம் குடியானவர்கள் சொற்ப வட்டியில் கடன் உதவி பெற்றார்கள்; விவசாயக் குத்தகைக்காரர்களை நிலச்சுவான்தார்களாக ஆக்கவும், விவசாயத்தில் நல்ல பயனும் பெறுமல் விட்டொழிக்கவும் முடியாமல் சிரமப்படுபவர்களின் ஸ்திதியை உயர்த்தவும் ''விவ

சாய கேஷம இலாக்கா'' பொறுப்பேற்றுக் கொண்டது.

தொழில் க்ஷேத்திரத்தில் சரித்திரப் பிரசித்தியான பல சட்டங்கள் 'புதுத்திட்டம்' ஒரு தொடராக இயற்றிற்று. 1933-ன் ''தேசிய மீட்சிச் சட்டத்''தின் நோக்கங்களாவன— வேலை விஸ்தாரம், உழைப்பு நேரத்தைக் குறைத்தல், ஊதியத்தை உயர்த்துதல், சிறுவர் கூலி வேலையை ஒழித்தல், பாட்டாளிகள் கூடிப் பேரம் பேசும் உரிமையை ஆதரித்தல், மிகக் கேவலமான ஒப்பந்தங்களைச் சட்ட விரோதமாகக் கருதுதல். 1935-ல் சுப்ரீம் கோர்ட்டு அச்சட்டத்தை ஒப்புக்கொள்ள மறுத்தது. ஆனால் அவ்வாண்டிலும் மூன்றுண்டுகள் கழித்தும் உருவான இரண்டு பெரிய அடிப்படையான சட்டங்கள் பாட்டாளிகளின் நிலைமையை முன்னிலும் சீராக்கின; தமக்கிஷ்டமான சங்கம் நிறுவி அதன்மூலம் பாட்டாளிகள் பேரம் பேசலாம், சங்கத்தின் அங்கத்தினன் என்பதற்காக ஒருவனையும் முதலாளி துன்பப்படுத்தலாகாது, தொழில் சச்சரவுகளைத் தீர்ப்பதற்காகப் ''பாட்டாளி உறவு இலாக்கா'' ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பன 1935-ன் வாக்னர் (Wagner) சட்டத்தால் கிடைத்த நன்மைகள். அதைப் பலர் ஆக்ரோஷத்துடன் எதிர்த்தனர்; ஆனால் அது உழைப்பாளிகளுக்கு முன்னில்லாத அளவு நன்மையளித்தது. அதன் ஆதரவில் பழைய சங்கங்கள் புது உயிர்பெற்றன; ''தொழில் அமைப்புக் காங்கிரஸ்'' என்னும் புதிய, வலுவுள்ள ஸ்தாபனம் உண்டாயிற்று. அந்த ஸ்தாபனம் பழைய ''தொழில் வீரர்கள்'' சங்கங்களை மறுபடி உயிர்ப்பித்ததோடு. இதுவரை யூனியனுக்கு இடமளிக்காத எஃகு, நெசவு, மோட்டார்கார் போன்ற தொழில்களில் உழைப்பாளி யூனியன்கள் உண்டாக உதவிற்று. 1938-ன் சட்டம்—''நியாயமான உழைப்பு நிபந்தனை நிர்ணயச் சட்டம்''—உழைப்பு நேரத்திற்கு மேல் வரம்பும், ஊதிய விகிதத்திற்குக் கீழ் வரம்பும் நிர்மானித்தது. வாரத்திற்கு 40 மணிக்கு அதிகமில்லாத வேலை, மணிக்கு 40 செண்டுக்குக் குறையாத கூலி என்பனவே அவ்வெல்லைகள்; மேலும் யந்திரத் தொழிற்சாலைகளில் சிறுவர்களை அமர்த்துதல் சட்டவிரோதம் என்னும் நிர்மானமாயிற்று

வேலையற்றவர், வயது முதிர்ந்தவர், நோயாலோ அங்க ஹீனத்தாலோ வேலைக்குத் தகுதியற்றவர் ஆகியோரை ரக்ஷிக்கும் முக்கியமான சட்டமும் அடிப்படையானது. இதுவரை இதுபோன்ற விஷயங்கள் ராஜ்யங்களின் பொறுப்பாக விடப்பட்டிருந்தன. சில ஸ்டேட்டுகள் நல்ல திட்டங்கள் வகுத்திருந்தன; ஆனால் நாடு முழுதும் வியாபித்த இப்பெரும் பிரச்னைகள் ஸ்டேட்டுகளின் சக்திக்குள் அடங்காதவை என்பது தெளிவாயிற்று. ஜனதிபதியின் வற்புறுத்துதலின் பேரில், 1935-ல் காங்கிரஸ் தொடர்ந்து சில ''சமுதாய க்ஷேம

சட்டங்கள்'' செய்தது. அவற்றின் மூலம் கிழவர்களுக்கும், வேலையில்லாமல் திண்டாடுபவருக்கும், குருடர்களுக்கும், சகாயமற்ற தாய்மாருக்கும், அங்கச்சேத மடைந்த பாலர்களுக்கும் பண உதவி கிடைத்தது. பொது ஆரோக்கிய ஸ்தாபனங்களுக்கும் பணம் ஒதுக்கி வைக்கப்பட்டது. இத்திட்டங்களுக்கு வேண்டிய நிதியில் ஒரு பங்கு முதலாளிகளிடமிருந்தும், ஒரு பங்கு தொழிலாளிகளிடமிருந்தும் வருவதாக ஏற்பாடு; நிர்வாகம் ராஜ்யங்களுக்கும், மேல் பார்வை மத்திய அரசாங்கத்திற்கும் விடப்பட்டிருந்தது. ஆதியில் பல இடங்களில் பலர் எதிர்த்து நின்றார்கள் எனினும் காலக்கிரமத்தில் இந்த சமுதாய க்ஷேமதிட்டம் அநேகமாய்ப் பரிபூர்ண ஆதரவு பெற்றது; பின் வருஷங்களில் அதன் கிரியை சக்தி விஸ்தரிக்கப் பெற்றதோடு அதன் ஷரத்துக்களும் தளர்த்தித் தாராளமாக்கப்பட்டன.

கடைசியாக, அரசாங்க நிர்வாகத்தில் முக்கியமானதும் தீர்க்கதரிசன முள்ளதுமான சீர்திருத்தங்கள் ரூஸ்வெல்ட் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. நிர்வாகம் விதி அல்லது ஒழுங்கு இல்லாமல் தான்தோன்றித்தனமாய் உருவாகிக் கொண்டே வந்ததால் அது திறமையற்றும் ஊதாரித்தனமாகவும் வளர்ந்து விட்டது; அது ஓரளவு சீராக்கப்பட்டது; ஆனால் செய்ய வேண்டிய பாக்கி நிரம்ப இருந்தது. 1883-ன் மூல சட்டத்திற்கு பிறகு, ஹாட்ச் (Hatch) சட்டத்தை மிக முக்கியமான சிவில் ஸெர்விஸ் சட்டமெனலாம்; அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ''தீங்கிழைக்கும் அரசியல் காரியங்களில்'' ஈடுபடுவதை அது கண்டித்ததோடு, அரசியல் கட்சிகளின் ஊழல்களையும் மிகைச் செயல்களையும் அது தாக்கிற்று. இதற்கிடையே, புதுத் திட்ட நடவடிக்கைகளை அறவே புறக்கணிக்கும் தொடர்ச்சியான சுப்ரீம் கோர்ட்டுத் தீர்மானங்களைக் கண்டு கவலையுற்ற ஜனதிபதி 1937-ல் நீதிஸ்தலங்களைச் ''சீர்திருத்த'' ஒரு திட்டமிட்டார். மிகவும் வயது முதிர்ந்த நீதிபதிகளை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி செய்து நீதி மன்றங்களில் புது இளம் மனப்பான்மையைப் புகுத்துவதே அவர் கையாண்ட வழி; சட்டங்களுக்கு விளக்கம் கூறுகையில் நீதி ஸ்தலங்கள் நெளிவு சுளிவுடன் பணியாற்றவேண்டும், அரசாங்கத்திற்கு முட்டுக்கட்டை போட்டுத் தடங்கல் ஏற்படுத்தக் கூடாது, ஆதிகாலத்துப் பெரிய நீதிபதிகளின் ஆக்க வழியில் செல்லவேண்டும் என்பதே அவர் கருத்து. ரூஸ்வெல்ட் குறிப்பாகக் கூறிய யோசனை கடுமையாகக் கண்டிக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டது, ஆனால் அதற்கிடையே கோர்ட்டு அதிகாரிகள் மாறிக் கொண்டே வந்தார்கள்; அரசாங்கத்தின் சமமானதும் சுதந்திரமானதுமான இதர கிளைகளின் நிர்மானங்களுக்கும் பரந்த நோக்கத்

துடன் மதிப்பளித்து அவர்கள் அரசாங்கத்தைச் செயலற்ற தாக்கிய பழைய முடிவுகளை மாற்றினர்கள். நீதி மன்றங்களைக்கண்டித்து ரூஸ்வெல்ட் துவக்கிய வாத விவாதம் அதிகக் குழப்பத்திற்கும் மனக் கசப்புக்கும் காரணமானலுப் கடைசியில் நன்மையளித்தது எனலாம்; அமெரிக்க நிர்மாணத் திட்டத்தின் உண்மையான தன்மையை மக்கள் அறிவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது; அமெரிக்கக் குடிநல ஆதர்சத்தை அனுசரித்துச் செல்லும்படி கோர்ட்டுகளும் வற்புறுத்தப் பட்டன.

யுத்தத்தின் நிழல் : வில்ஸனுக்கு ஏற்பட்டது போலவே ரூஸ்வெல்டின் உள்நாட்டுத் திட்டங்களும், அயல் நாட்டு விவகாரங்களின் கொந்தளிப்பால் கலைத்துத் தடுக்கப்பட்டன; அவருடைய இரண்டாம் பதவிக்காலம் நன்றாய்ப் படிவதற்குள் உள் நாட்டைக் காட்டிலும் வெளி நாட்டுப் பிரச்னைகள் அதிக கவனத்தைக் கவரும் என்பது தெளிவாயிற்று. வில்ஸன் ஆவலுடன் அஸ்திவாரம் போட்ட கூட்டுக் க்ஷேபத் திட்டம் மூன்றும் பத்தாண்டிலேயே உடைய ஆரம்பித்து, தொடர்ந்து அடுத்த பத்தாண்டிலும் துண்டு துண்டாகிக் கொண்டு வந்தது. இந்த முறிவுக்கு ஐக்கிய நாடும் சிறிது பொறுப்பேற்கத்தான் வேண்டும். அது அதிக நம்பிக்கையுடன் பின்பற்றிய தனிமைக் கொள்கை சர்வதேச சங்கத்தைப் பலஹீனப்படுத்திற்று; உலக வல்லரசுகளில் மிகப் பெரியதும் அதிகச் சுதந்திரமானதுமான நாட்டின் நீதிமார்க்க ஆதரவும் விவகார மார்க்க ஆதரவும் அதற்குக் கிட்டாமல் போய்விட்டது; அமெரிக்காவின் டாரிஃப் கொள்கைகள் உலகப் பொருளாதாரச் சிதைவுக்கு ஓரளவு காரணமாயின; தூரக் கிழக்கிலிருந்து ஐக்கிய நாடு விலகிக் கொண்டதால் ஜப்பானிய ஆக்கிரமிப்பை ஊக்கப் படுத்துவது போலாயிற்று; ராணுவத் தளவாடக் குறைவுக்காகக் கிளர்ச்சி செய்வது உண்மையான நிலையை மறந்து குடிநல நாடுகளின் தற்காப்பைப் பங்கப் படுத்துவது போலாயிற்று.

1939-ல் துவங்கிய இரண்டாம் உலக யுத்தம் உண்மையில் பதினேந்தாண்டுகளுக்கு முன்பே வேர் விட்டது எனலாம். சாம்ராஜ்ய விஸ்தாரத்தைச் சர்வதேச சங்கம் முற்றிலும் தடுத்து விட்டது என்று உணர்ந்த ஜப்பான், கிழக்கே பிரிட்டனும் ஐக்கிய நாடும் பெற்றிருந்த செல்வாக்கை நினைத்து மனம் புழுங்கிற்று. முதல் உலக யுத்தத்தில் நேசதேசத்தாருடன் தாமதமாய்ச் சேர்ந்துகொண்ட இத்தாலி வெற்றிக் கொள்ளையில் தான் பெற்ற பங்கு குறைவானது என்று அதிருப்தியடைந்தது; அந்நாட்டின் புதுத் தலைவனான வீம்பு வாத வீரன், பெனிட்டோ முஸ்ஸோலினி, பெருமைக்காக ஏங்கித் துடித்தான். தோல்வியால் வெதும்பிய ஜெர்மனி வெர்ஸேல்ஸ் உடன்

படிக்கையின் நிபந்தனைகளிலிருந்து வெளியேறத் துடித்துக் கொண்டிருந்தது. பொருளாதார மந்த நிலை, வளரும் ஜன நெருக்கம், சமுதாயக் குழப்பம், நீதிச் சிதைவு, இவையெல்லாம் புது நாயகர்களுக்கு—அமைதியான புனர் அமைப்பின் ஆமை நடையைக்கண்டு பொறுமை யிழந்தும், பழைய கொள்கைகளில் நம்பிக்கையிழந்தும், புதுவாழ்க்கைத் தத்துவங்களைத் தேடும் சமுதாயத் தலைவர்களுக்கு வழி கோலின. ஜப்பானுக்கோ புது அரசியல் கொள்கைக்குத் தேவையில்லை; பழைய கொள்கைகளைக் கொண்டு செலுத்த ஆயுதங்கள்தான் வேண்டும். இத்தாலி ஃபாஸிஸ்ட் கொள்கையை ஏற்றுக் கொண்டது. ஒரு பத்தாண்டு குழம்பிக் கிடந்தபின், ஜெர்மனி அடால்ஃப் ஹிட்லர் காட்டிய வழி சென்றது; அவன் ஆவேசம் நிறைந்த ஆஸ்ட்ரியப் போர் வீரன்; புரட்சிகரமான தேசியச் சோஷலிஸ்ட் கட்சியை அமைத்து, அவன் ஜெர்மன் அரசாங்கத்தைத் தன் வசமாக்கிக் கொண்டான். 1930-க்குப் பிறகு ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் சர்வாதிகார அரசாங்கங்கள் அமைத்துக் கொண்டு, வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையையும், அதன் பின் வந்த உடன்படிக்கைகளையும் மாத்திரமல்ல. சர்வதேசச்சட்டத்தையும் ஒழுங்கையுமே முற்றிலும் அவமதித்து நிராகரிக்கத் தயாராயின.

அதன் பிறகு நிகழ்ச்சிகள் மூச்சுவிட அவகாசம் தராமல் வேகமாய் நகர்ந்தன. சர்வாதிகார அரசுகளில் ஒவ்வொன்றும் ஆக்கிரமிப்புக்குத் தயாராயிற்று. ஒவ்வொன்றும் ராணுவ சக்தியை வலுப்படுத்திக்கொண்டு, பலஹீனமான அக்கம் பக்கத்து நாடுகளைப் பயமுறுத்தி, சாம்ராஜ்ய யத்தனங்களை ஆரம்பித்தது. அந்த யத்தனங்களுக்கு நியாயம் போலத் தோன்றும் காரணங்கள் கூறப்பட்டன; நடவடிக்கைகளில் பிரயோகமான தந்திர முறைகள் ஆக்கிரமிப்பாளர்களைக் குற்றச் சாட்டிலிருந்து காப்பாற்றிப் பெருமைபடுத்தின; குடிநல அரசுகளின் எதிர்ப்பை அதிகம் வளர்க்காமல் சாமர்த்தியமாக நடந்து கொண்டன அந்த மூன்று நாடுகள். 1931-ல் ஜப்பான் மஞ்சூரியா மீது படையெடுத்து, மஞ்சுகுவோவில் பொம்மையாட்ட அரசு ஏற்படுத்தி, வடக்கே ஸைபீரிய ரஷ்யாவையும், தெற்கே சைனாவையும் பயமுறுத்தி நின்றது. மத்திய தரைக் கடலில் ஏற்கெனவே டோடேகனீஸ் (Dodecanese) தீவுகளில் கிரேக்கர்களை அடக்கித் தன் நிலையைப் பலப்படுத்திக் கொண்டும், ஃப்யூமெ (Fiume) துறைமுகத்தைக் கைப்பற்றிக் கொண்டும், லிப்யாவில் தன் எல்லையை விஸ்தரித்துக்கொண்டும் இருந்த இத்தாலி, ரோம சாம்ராஜ்யத்தை மறுபடி ஸ்தாபிக்கக் கருதி 1935-36-ல் ஆஃப்ரிக்காவிலுள்ள ஈதியோபியாவைத் தாக்கித் தன் வசப்படுத்திக் கொண்டது; பிற்போக்கான தேசமானலும் அது லாபம்

அளிக்கக் கூடியது. ஜெர்மனி வெர்ஸேல்ஸ் முச்சலிக்கையை அசட்டை செய்து ரைன்லன்ட் (Rhineland) பிரதேசத்தை மறுபடி ஆக்கிரமித்ததோடு, ராணுவத் தளவாடங்களையும் பெருவாரியாகப் பெருக்கிக் கொண்டது. சர்வதேச சங்கம் ஆட்சேபித்தது; ராஜதந்திரிகள் "இதென்ன அக்கிரமம்!" என்றார்கள்; குடிநலத் தலைவர்கள் மேடைகளில் பேசினார்கள்; ஆனால் ஒரு தேசமோ, தேசக் குழுவோ சர்வாதிகாரப் பேராசையைத் தடுத்து நிறுத்த பிரயோஜனமாக ஒன்றும் செய்யவில்லை!

அமெரிக்காவில் பெரும்பாலோர் இந்நடவடிக்கைகளை ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அசிரத்தையுடன் பார்த்து நின்றார்கள். பழைய சாம்ராஜ்யப் போட்டியில் இன்னொரு தோற்றம் இது என்றே அவர்கள் உறுதியாய் நினைத்தார்கள். பெரும்பாலான ஆங்கிலேயரைப்போலவே அவர்களும் உலகத்தின் மீது ஏவப்பட்டிருக்கும் இப்புதுச் சக்திகளின் புரட்சித் தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை. இதர தற்கால சரித்திர நிகழ்ச்சிகளைக் காட்டிலும் அதிக ஆபத்தான, துரித மாய்த் தாக்கும், தீமை இது—என்பதை அவர்கள் உணரவில்லை. தங்களுக்கும் அப்போராபத்துக்கும் சம்பந்தமில்லை, இரண்டு பெரிய சமுத்திரங்கள் நங்களைக் காக்கின்றன, தம் தேவைகளைத் தம் நாடே பூர்த்தி செய்யும், தாம் செல்வர்கள், சக்திவான்கள், என்று நினைத்து அவர்கள் தம்மைத் தாமே பாராட்டிக் கொண்டார்கள்.

தம் நாட்டையும் உலக முழுதையும் பயமுறுத்திய துஷ்ட சக்தியின் தன்மையைப் புரிந்து கொள்ளுதல் பெரும்பாலான அமெரிக்கருக்குச் சிரமம். அது தீய ராணுவ சக்தியல்ல. ஐக்கிய நாடு ஆபத்தான பல போர்களைக் கண்டிருக்கிறது; அவற்றிலிருந்து வெற்றியுடன் வெளியேறியிருக்கிறது. இதுவோ ஒரு நூதன விஷயம், புத்திக்கெட்டாத விஷயம். அமெரிக்கர் சுக ஜீவிகள், தோல்வியோ அசைரியமோ அறியாதவர்கள்; அறிஞர் ஸான்டயானா குறிப்பிட்டதுபோல் அசுரத்தனம் என்னும் கருத்தே அமெரிக்கச் சிந்தனைக்குப் புதியது. தங்கள் வாழ்க்கை லட்சியங்களையும் மதிப்புகளையும் பொய்யெனக் கூறி அவற்றுடன் போரிடும் ஒரு புதுச் சிந்தனை மார்க்கம் பிறந்திருக்கிறதென்று அவர்களால் நம்ப முடியவில்லை.

தனி மனிதன்தான் அமெரிக்க, ஆங்கில அரசியல் சித்தாந்தத்தின் அடிப்படை. தனி மனிதனே அரசாங்கத்தின் ஆணிவேர். சமுதாயத்தில் அவனுக்கு உரிமைகளும் சுதந்திரங்களும் உண்டு—தன் இஷ்டப்படிக் கடவுளைத் தொழ, பேச, எழுத, விரும்பிய தொழிலை தன் வழியில் நடத்த, அரசாங்கத்தின் தலையிடுதல் இல்லாமல் தன் இச்சைப்படி மணக்க, குடும்

பத்தை வளர்க்க அவனுக்கு உரிமை உண்டு. நம் சிந்தனையில், அரசாங்கத்தில், வியாபாரத்தில், சமுதாய நோக்கம் எவ்வளவு இடம் பெறுமூலும், சுதந்திர மனிதனை உண்டாக்கி அவனை ரக்ஷிப்பதே நம் அரசாங்கத்தின், பொருளாதார நிலையின், இறுதிலட்சியம்—என்பது இன்றும் உண்மையே.

இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் 'மொத்த-சமுதாயக் கொள்கை' மேற்கூறிய தனி-மனிதப் பிராதான்யத்திற்கு நேர் முரணானது. அக்கொள்கைப்படி, மனிதன் தன் இருப்பை இழந்து ராஜ்யம் அல்லது ஜாதி என்னும் பெரிய யந்திரத்தின் ஒரு சிறு பகுதி போலாகிறான். ஃபாஸிஸ்ட் அல்லது நாஜி முறைகளில் தனி மனிதனுக்கு மதிப்பில்லை; அவனுடைய சுதந்திரங்கள், உரிமைகள், சொத்துடைமை, ஆசாபாசம், நட்பு, எல்லாம் பூஜ்யத்திற்கு சமானம்.

மொத்த-சமுதாயக் கொள்கை அல்லது ஏகாதிபத்தியத்தில் அசல் தன்மை தெளிவானதும் அமெரிக்கர் மேலும் மேலும் பயங்கொண்டனர்; மூன்று ஏகாதிபத்திய நாடுகளும் பலாத்காரச் செயல்களை மறுபடி துவக்கவே, அமெரிக்கரின் திகில் துங்கோபமாக மாறிற்று; 1936-1938-ல் ஸ்பெய்ன் தேசம், ஜெர்மன் இத்தாலியக் கொள்கைகளுக்குப் பலியாயிற்று. ஸ்பானிய ரிபப்லிகன் ஆட்சியைக் கவிழ்க்க ஹிட்லரும் முஸோலினியும் தேசியக்கட்சிக்குச் சேனைகளும் விமானங்களும் உதவினர்; குடிநல அரசுகள் செயலற்றுப் பார்த்து நின்றன. வெற்றியடைந்த அயல்நாட்டுப்படைகள் மாட்ரிட் நகரின் கோட்டைக் கதவுகளைத் தகர்த்துக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் ஜப்பான் 'சீன நிகழ்ச்சி' எனப்பட்ட போரைத் திடீரென்று துவக்கிற்று! அப்போர் பல ஆண்டுகள் நீடித்து உலகப்போரின் ஒரு பகுதியாயிற்று. 1938-ல் ஹிட்லர் பலவந்தமாக ஆஸ்ட்ரியாவை ஜெர்மன் அரசாங்கத்தின் கீழ்க் கொண்டு வந்தான்; "பெரிய ஜெர்மனி" உண்டாகிக்கொண்டிருந்தது. அடுத்தது ஸெகோஸ்லொவேகியாவின் முறை; ஆஸ்ட்ரியா விழுங்கப்பட்ட அதிர்ச்சியிலிருந்து குடியரசு நாடுகள் விழித்தெழுமுன் ஹிட்லர் ஸெகோஸ்லொவேகியாவின் பகுதியான ஸூடெடன் பிரதேசம் தனக்கு அளிக்கப்படவேண்டும் என்று அதட்டிக் கேட்டான். அச்சிறு குடியரசுப் பிரதேசத்தை உண்டாக்கியதில் பிரிட்டனுக்கும் ஐக்கிய நாட்டுக்கும் பங்குண்டு. பிரிட்டன், ஃப்ரான்ஸ், இரு நாட்டுத் தலைவர்களும் திகிலடைந்து அவ்விஷயத்தைப்பற்றிப் பஞ்சாயத்துக் கூடவேண்டுமென்றார்கள். அந்த யோசனை புறக்கணிக்கப்படவே, பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சேம்பர்லேன் ம்யூனிஃ (Munich) நகருக்குப் பறந்து சென்று, ஸெகோஸ்லொவேகியாவை ஜெர்மன் யுத்த தந்திரிகள் கையில் ஒப்படைத்து வந்தார். நாடு திரும்பியதும்

''நம் காலத்தில் போர் மூளாத ஏற்பாடு செய்துவிட்டேன்'' என்றார் அவர்; ஆனால் வின்ஸ்டன் சர்ச்சில், ''யுத்தம் வேண்டுமா, அபகீர்த்தி வேண்டுமா, என்ற கேள்விக்கு பிரிட்டனும், ஃப்ரான்ஸும் 'அபகீர்த்தி' என்று விடையளித்தன. ஆனால் யுத்தமும் வந்தே தீரும்,'' என்று வியாக்கியானம் செய்தார்.

அச்சமயம் அமெரிக்கர் நடந்துகொண்ட விதம் வருந்தத் தக்கது, பிற்கால அமெரிக்கர் தலை தாழ்ந்து வெட்கப்படக் கூடியது. முன் யுத்தத்தால் யதார்த்த நிலையை அறிந்து, புதுப் போரில் சிக்கிக்கொள்ளப் பயந்து, போரில் சேருவதும் சேராததும் தங்கள் இஷ்டத்தையே பொறுத்த விஷயம் என்ற நம்பிக்கையுடன், அவர்கள் அமைதிக்காக எந்த விலையும் கொடுக்கத் தயாராயினர். எந்த உரிமைகளைக் காப்பதற்காக அவர்களுடைய முன்னோர்கள் இருமுறை போராடினார்களோ அவற்றுள் பலவற்றை அவர்கள் சட்டென்னக் கைவிட்டார்கள்; தாக்குபவர், தாக்கப்பட்டவர், சண்டையில் கலந்த எவராலும் ஒரு சந்தர்ப்பத்திலும் அமெரிக்காவின் பக்கம் உதவிக்காகக்கண்ணெடுத்தும் பார்க்கவேண்டாம், அமெரிக்கா நடுநிலை வகிக்கும் என்று அவர்கள் உலகுக்கு அறிவித்தார்கள். 1935—1937-ன் நடுநிலைச் சட்டத்தில் இக்கருத்துக்கள் அடங்கி யிருந்தன. அதன்படி, போரில் கலந்த நாட்டுடன் அமெரிக்கா வியாபாரமோ கடன் உறவோ வைத்துக் கொள்ளாது.

ஜனாதிபதி ரூஸ்வெல்டும், அயல் நாட்டுக் காரியதரிசி கார்டெல் ஹல்-லும் (Cordell Hull) அந்தச் சட்டத்தை எதிர்த்தார்கள். ஆனால் ஜனாதிபதி அதில் அங்கீகாரக் கையொப்பமிட்டார். அது தவறான காரியம். அதன் பிறகு உலக நிலைமை மோசமாக ஆக, அவர் உண்மை ஸ்திதியை அமெரிக்கர் உணரும்படிச் செய்யவும், நீதிமார்க்கமாகவும், பொருள் மூலமும் அமெரிக்கரை வலுப்படுத்தி அசுர சக்திகளைத் தோற்கடிக்கும்படி செய்யவும் பாடுபட்டார். 1937-ல் ஷிகாகோ நகரில் பேசுகையில் அவர், பலாத்கார தேசங்களுடன் நெருங்கிய பழக்கம் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற யோசனை கூறினார். அதைப் பலர் அரசியல் சூழ்ச்சி என்று குறைகூறித் தாக்கினர். ஜப்பானியரின் சீன ஆக்கிரமிப்பை அவர் கண்டித்தார். லத்தீன் அமெரிக்க ராஜ்யங்களோடும், கனடாவோடும் அவர் நட்பை பலப்படுத்தினர்; ராணுவத் தளவாடங்களுக்காக அதிக நிதி ஒதுக்கப்படவேண்டும் என்று காங்கிரஸிடம் வற்புறுத்தினர். ''வலியவன் வாள் முனையால் நிறுவிய அமைதியும் நீடித்திராது, எளியவன் பயந்து தாழ்மையால் பெற்ற அமைதியும் நிலைத்திராது,'' என்று அவர் சர்வாதிகாரிகளை எச்சரித்து ராணுவத் பலத்தைக் கண்டு தான் நடுங்கப்போவதில்லை என்றார். ஏகாதிபத்தியக் கொள்கை ஓங்க ஓங்க, அமெரிக்காவின் மனம் அதற்கெதிராகக் கல்லாயிற்று.

யுத்தம்: ம்யூனிக் நகரில் நடந்த சமாதானப் பேச்சுக்களால் பிரிட்டன் கௌரவம் இழந்தது; அதன் பிறகு ஸைகோஸ்லொவேகியாவின் அழிவு மிகக் கோபமூட்டக் கூடியதாயிற்று. இனி சாந்திப் பிரசாரத்திற்குச் செலாவணியில்லை என்பது தெளிவாயிற்று; ஆகவே பிரிட்டன் தளவாடப்பெருக்கில் தீவிரமாக ஈடுபட்டது. ஆனால் பிரிட்டனும், அமெரிக்காவும் ஜெர்மனிக்கு இணையாக ராணுவ பலம் பெறும்வரை காத்திருப்பவன் அல்ல ஹிட்லர். 1939-ன் முற்பாதியில் அவன் போலந்தை நோக்கி உறுமிக்கொண்டே இருந்தான்; டான்ஸிக் துறைமுகப் பிரதேசமும், போலந்திலிருந்து பால்டிக் கடல் செல்வதற்கான ''போலிஷ் இடைப்பாதையும்'' (Polish Corridor) தனக்களிக்கப்பட வேண்டுமென்று அவன் அதட்டிக் கேட்டான். (டான்ஸிக் பிரதேசம் போலந்து, ரஷ்யா, ப்ரஷ்யா-ஜெர்மனி ஆகப் பல கைகள் மாறி, முதல் உலக யுத்தத்தின்போது ப்ரஷ்யாவின் வசம் இருந்தது; அதன் பிறகு அது சுதந்திரம் பெற்றுச் சர்வதேச சங்கத்தின் சம்ரக்ஷணையின் கீழ் வந்தது. அதன் அயல் நாட்டு உறவுகளை போலந்து கவனிப்பதென ஏற்பாடாயிற்று...போலிஷ் இடைப் பாதை ஜெர்மனியின் பெரும் பாகத்தைக் கிழக்கு ப்ரஷ்யாவிலிருந்து பிரித்து வைத்தது). கூடவே, ஹிட்லர் நடுவேனிற் காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் மிக வலிமையுள்ள ரஷ்யாவுடன் நேச ஒப்பந்தம் செய்து கொண்டான்; ஆகவே அவன் சக்தி மிகவும் வளர்ந்தது. மேலும், போலந்துடன் பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கும்போதே அவன் அந்நாட்டைத் தாக்கினான். செப்டம்பர் முதல் தேதியன்று அவன் படைகள் எல்லையைக் கடந்தன; அவன் விமானங்கள் போலிஷ் நகரங்கள் மீது அழிவும் நாசமும் சக்கின. இரண்டு நாட்கள் கழித்து, பிரிட்டனும் ஃப்ரான்ஸும் தம் வாக்கைக் காப்பாற்றி ஜெர்மனிமேல் போர் தொடுப்பதாகப் பிரகடனம் செய்தன.

இரண்டே வாரங்களில் போலந்து ஜெர்மனியின் காலடியில் வந்து விட்டது; அந்த அதிர்ஷ்டம் கெட்ட நாட்டின் வீழ்ச்சியைப் பூரணமாக்க ரஷ்யா கிழக்கே இருந்து முன்னேறிற்று. அதன் பிறகு வெகுகாலம் போர் தீர்மானமற்றிருந்தது. நுட்பமறியாத அமெரிக்கர் அதை ஒரு பைத்தியக்காரச் சண்டை என்றனர். மறு ஆண்டு வசந்த காலத்திற்குள் ஹிட்லர் அடுத்த நடவடிக்கைக்குத் தயாரானான். எச்சரிக்கையில்லாமல் அவன் படைகள் டென்மார்க்கிலும் அதற்கப்பால் நார்வேயிலும் பிரவேசித்தன. தீரர்களான நார்வேக்காரருக்கு உதவியனுப்பப் பிரிட்டன் செய்த முயற்சி வீணாயிற்று; ஏறக்குறைய ஐந்து வாரத்தில் நார்வே-ஸ்வீடனில் வளங்களனைத்தும் ஜெர்மனியின் வசமாயின. மே 10-ஆம் தேதி ஜெர்மனி மேற்கே திரும்பி நடுநிலை வகித்த ஹாலந்தையும்

பெல்ஜியத்தையும் தாக்கி, ஃப்ரான்ஸ் மீதும் பாய்ந்தது. அந்த 'மின்னல் தாக்குதல்' நடந்த சுமார் ஐந்து வாரத்தில் ஹாலந்து தோல்வியுற்றது. பெல்ஜிய சேனை ஜெர்மனிக்குக் கீழ்ப்படிந்தது. ஃப்ரான்ஸுங்கூட வீழ்ச்சியடைந்தது. அவசர உதவிக்காக அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் படை தனித்துப் பேராபத்தில் நின்று, நம்பமுடியாத சூரத்தனத்தாலும் துரித நடவடிக்கைகளாலுந்தான் தாய்நாடு திரும்ப முடிந்தது.

பிரிட்டன் தனியாய் நின்றது. ஆனால் அது ''மியூனிக் சம்பவ'' காலத்து பிரிட்டனல்ல; நார்வே நடவடிக்கையில் ஏமாற்றமடைந்த பிரிட்டனல்ல. ஆயிரம் ஆண்டுகளாக அயல் நாட்டுச்சேனையின் கால் தூசி படாதநாடு என்ற நினைப்புள்ள பிரிட்டன் அது. ''உலகமே ஆயுதம் தாங்கி எதிர்த்து வந்தாலும் மண்ணைக் கவ்வ வைப்போம்'' என்று ஷேக்ஸ்பியர் சுயப்பிரதாபத்துடன் பாடினார்; அந்தக் கீர்த்தியை வின்ஸ்டன் சர்ச்சில், சுதந்திரத்தை நிலைநிறுத்தி, நாட்டைக் காக்கும் பொறுப்பேற்ற பெரிய தலைவர், நினைவூட்டினார். அவர் கூறியதாவது :


> எத்தனை ஆண்டுகள் ஆனாலும், தனியாகவேநிற்கவேண்டி வந்தாலும், போர் என்னும் புயலில் நாம் வெற்றியுடன் படகை ஓட்டுவோம். கொடுங்கோன்மையின் அக்கிரமங்கள் மடிந்த பின்னரும் நாம் உயிர் வாழ்வோம், முற்காலத்தைப்போலவே நம் தாயகத் தீவைக் காப்பாற்ற நமக்குச் சக்தியுண்டு என்பதை நிரூபிப்போம். ஐரோப்பாவின் பெரும் பகுதிகளும், பழைய, கீர்த்தி வாய்ந்த பல ராஜ்யங்களும் நாஜிகளின் கொடுமையான தந்திரங்களுக்குத் தாழ்ந்தே போன போதிலும், நாம் தளர மாட்டோம், தோற்க மாட்டோம், கடைசி வரைப் போராடுவோம். ஃப்ரான்ஸில் நாம் போர் புரிவோம், கடல்களிலும் சமுத்திரங்களிலும் சண்டை பிடிப்போம், தளராத நம்பிக்கையோடும், வளரும் பலத்தோடும் நாம் ஆகாயத்தில் மல்லுக்கு நிற்போம், செலவைக் கருதாமல் நாம் நம் தீவை ரக்ஷிப்போம், கடற்கரைகளில், இறங்கு துறைகளில், வயல்களில், வீதிகளில், மலைகளில் நாம் சண்டை பிடிப்போம், நாம் தணியமாட்டோம்; என்நம்பிக்கையையும் பொய்யாக்கி இந்தத் தீவு அல்லது இதன் பெரும் பகுதி சத்துருவின் கைவசம் வந்து நாடு பசியால் தவித்தாலும், கடல் கடந்த நம் சாம்ராஜ்யம் பிரிட்டிஷ் கடற்படையால் காக்கப்பட்டு போரை நடத்திக் கொண்டே இருக்கும்; நல்ல காலம் பிறந்து, மகா சக்தி நிறைந்த புது உலகம் முன்வந்து பழைய உலகை அரக்கனின் பிடியிலிருந்து விடுவிக்கும் வரை நாம் போர் புரிந்த வண்ணமிருப்போம்.

''நல்ல காலம் பிறந்து'' — அது எப்பொழுது பிறக்கும்? போலந்து மேல் நடந்த நீதியற்ற தாக்குதலின் காரணமாக ஐக்கியநாடுமுழுதிலும், அடிமையுகத்திற்குப்பிறகு எப்போதும் இல்லாத அளவுக்கு, பெரிய தர்க்க வாதக் காற்று அடித்தது; காங்கிரஸ் மண்டபங்களில் மாத்திரமல்ல, ஒவ்வொரு பத்திரிகையிலும், ஒவ்வொரு பிரசங்க மண்டபத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் இதே பேச்சாக இருந்தது. நடுநிலைச் சட்டத்தை வாபஸ் வாங்குவதற்காக ரூஸ்வெல்ட் மிகவும் முயன்றார்; நீடித்த வாத விவாதத்தின் பிறகு, ரொக்கத்திற்கு ராணுவ தளவாடங்களை விற்கும் அளவுக்கான சட்டத்தைக் காங்கிரஸ் அரைமனதுடன் ஒப்புக் கொண்டது; போரில் கலந்த குடிநல நாடுகளுக்கு அமெரிக்கப் பொருள்கள் விற்பனையாவது சாத்தியமாயிற்று. ஃப்ரான்ஸ் வீழ்ச்சியடைந்ததும், ஜெர்மன் ராணுவ சக்தியின் மகிமை அமெரிக்கருக்குத் தெரியவந்தது. அந்த ஆண்டின் நடு ஆறு மாதங்களில் பிரிட்டன் மீது நடந்த விமானக் குண்டு வீச்சைக் கண்டு—பிரிட்டனுக்குத் தோல்வி ஏற்படக்கூடாது; பிரிட்டன் விழுந்தால், சரித்திரம் அறிந்திராத மிகப் பயங்கரமான ராணுவக் கூட்டுப் பலத்துடன் அமெரிக்கா தனியாகப் போராட வேண்டி வரலாம்—என்ற உணர்ச்சி அமெரிக்கருக்கு உண்டாயிற்று.

இந்தப் பயங்கர எண்ணம் தோன்றவே, காங்கிரஸ் ராணுவ உபகரணங்களுக்காக நம்பமுடியாத பெருந்தொகைகளைச் செலவிட அனுமதித்தது; புது உலகிலுள்ள எல்லாக் குடியரசு நாடுகளின் கூட்டு சம்ரக்ஷணைக்கான ஒரு ஒப்பந்தம் லத்தீன் அமெரிக்க ராஜ்யங்களுடன் செய்து கொள்ளப்பட்டது: ஐக்கிய நாடும் கனடாவும் கூட்டாகப் பாதுகாப்பு இலாகா அமைத்துக் கொண்டன; சுமார் பத்து லக்ஷம் பேருக்குப்பட்டாளப் பயிற்சியளிப்பதற்கான அமைதிகாலப் படைத் திரட்சித்திட்டம் துவக்கப் பட்டது. இவற்றைக் காட்டிலும் முக்கியமாக, ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் ரகசமானதொரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்—அமெரிக்கா ஐம்பது நாசகாரிக் கப்பல்கள் பிரிட்டனுக்குக் கொடுக்க வேண்டியது; நியூஃபௌண்ட்லண்டிலிருந்து பிரிட்டிஷ் கயானாவரை பிரிட்டிஷ் துறைமுகத்தளங்கள் பலவற்றின் உபயோகம் அமெரிக்காவுக்குக் கிடைக்க வேண்டியது என்பவை அதன் ஷரத்துக்கள். ரூஸ்வெல்ட் மகிழ்ச்சியுடன், ''லூஸியானாவை வாங்கியதற்கு அடுத்தபடியாக தேசத் தற்காப்புக்கான மிக முக்கிய நடவடிக்கை இது'' என்று கூறினார்; நாடு பின்பற்ற வேண்டிய பாதையை ரூஸ்வெல்ட் சித்தரித்திருந்தார்; ஆனால் அவர் நாட்டை அவ்வழியிலேயே செலுத்த முடியுமா? 1940-ன் வேனிற்காலத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னேற்பாடு செய்ய வேண்டிய காலம் வந்தது; ஆபத்து மயமான வருஷங்களில் மக்களைச் சிறந்த வழியில்



இரண்டாவது உலகமகா யுத்தத்தில் ஐக்கிய ராஜ்யங்கள். உலகம் கடந்த சப்பான் பாதைகளில் கடன் தத்தகை களங்களும் ராணுவ முகாம்களும் யுத்த கேந்திரங்களும்.



அழைத்துச் செல்வது அந்த ஜனாதிபதியின் கடமையாகும். இரண்டு முறைக்குமேல் ஒரு ஜனாதிபதி பதவி வகிக்கலாகாது என்ற சம்பிரதாயத்தைத் தைரியமாய்க் கைவிட்டு, டிமோகிராட்டுகள் மறுபடியும் ஃப்ராங்க்ளின் ரூஸ்வெல்டின் பெயரைக் குறிப்பிட்டார்கள். குழம்பிய சூழ்நிலையில் கூடிய ரிபப்லிகன்கள் வெண்டெல் வில்கீ என்னும் புது அரசியல் வாதியைக் குறிப்பிட்டனர். உள்நாடு சம்பந்தப் பட்டவரை வில்கீ புதுத் திட்டத்தைத் தாக்கினார்; ஆனால் பிரிட்டனுக்கு உதவியளிக்கும் முக்கியமான விஷயத்தில் அவர் ஜனாதிபதியைப் பாராட்டினார்; படைதிரட்டுதல், போர்க்கப்பல்கள் கொடுத்துத் தளம் பெறுதல் ஆகிய செய்கைகளை அவர் ஆதரித்தார்; தான் தேர்தலில் ஜயித்தால், ஜனாதிபதி காட்டியகாங்கிரஸ் பின்பற்றிய வழியிலிருந்து தான் திரும்புவதில்லை என்றும் அவர் உறுதி கூறினார். அவர் மகத்தான ராஜதந்திரி என்பது தெளிவாயிற்று.

நவம்பர் மாதம் நடந்த தேர்தலில் ரூஸ்வெல்ட் மறுபடி பதவியேற்றார்; மக்களின் ஆதரவு தனக்குண்டு என்ற நிச்சயத்தில்அவர் தன்கொள்கைகளை ஊக்கமாகப் பிரசாரம்செய்தார். நடுநிலைச் சட்டத்தின் எஞ்சிய முட்டுக்கட்டைகளையும் சமாளிக்க வேண்டுமென்பது அவருடைய அவா; ஜனவரி மாதம் காங்கிரஸ் கூடியபோது அவர் தம் ''கடன் குத்தகை' மசோதாவைச் சபையின் முன்வைத்தார். எந்த நாட்டின் தற்காப்பு ஐக்கிய நாட்டின் க்ஷேமத்திற்கானதோ அந்நாட்டுக்கு ராணுவ தளவாடங்களோ வசதிகளோ ஐக்கிய நாடு கடனாகவோ குத்தகையாகவோ கொடுக்கலாம் என்பது மசோதாவின் உத்தேசம். நீடித்த தர்க்கத்தின் பிறகு, அது ஒப்புக் கொள்ளப்பட்டது; அதனுடைய சமயோசிதமான நிபந்தனைகளின்படி ஆகாய விமானங்கள், டாங்குகள் (Tanks), கச்சாப் பொருள்கள், உணவுப் பண்டங்கள் முதலியன தொடர்ந்து பிரிட்டனுக்கும் அதன் நேச தேசங்களுக்கும் செல்ல ஆரம்பித்தன. இந்த நடவடிக்கை நடுநிலைக் கொள்கைக்கு முரணானது என்பதில் சந்தேகமில்லை; ஆனால் ஜெர்மனியைத் தோற்கடிப்பதைத் தன் நோக்கமாகக் கொண்டபின்ஐக்கியநாடுசர்வதேசச் சட்டத்தின் நுணுக்கங்களை அசட்டை செய்யத் தயாராயிற்று. நடுநிலைக்கு முரணான வேறு செயல்களும் தொடர்ந்து நடந்தன: (ஜெர்மன்-இத்தாலிய) அச்சு நாடுகளின் கப்பல்களைக் கைப்பற்றுதல், அமெரிக்காவில் தங்கி நின்ற அச்சு நாட்டு நிதிகளைப் போர் முடியும் வரைக் கட்டி வைத்தல், கைப்பற்றிய கப்பல்களைப் பிரிட்டனுக்குக் கொடுத்தல், முதலில் க்ரீன்லண்டையும், பிறகு ஐஸ்லண்டையும் ஆக்கிரமித்தல். ''கடன்—குத்தகை'' வசதியைப் புதுக் கூட்டாளியான ரஷ்யாவுக்கும் அளித்தல், இறுதியில், அமெரிக்கக் கப்பல்களை ஜெர்மன் நீர்மூழ்கிகள் பலமுறை

தாக்கியதன் பின், எதிரி நீர்மூழ்கிகளைக் கண்டதுமே சுடும்படி ஜனாதிபதியின் உத்தரவு.

இவை முக்கியமான ஸ்தூல உதவிகள்; போர் புரியும் குடிநல நாடுகள் பெற்ற சூக்ஷ்ம உதவி - குடியரசுகளின் யுத்த லக்ஷ்யங்கள் என்ன என்னும் விளம்பரம் - முக்கியத்தன்மையில் குறைந்ததல்ல. ஆகஸ்டு 14-ம் தேதி ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் நடு அட்லாண்டிக் சமுத்திரத்தில் சந்தித்து ''அட்லாண்டிக் ஒப்பந்தம்'' தயாரித்தார்கள்; ''பிற்காலச் சிறந்த உலகத்திற்கான அவர்களுடைய நம்பிக்கைகள்'' அந்தப் பட்டயத்தின் சில கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. அந்தக் கொள்கைகளாவன: பலவந்தமான நிலப் பேராசை கூடாது; சம்பந்தப்பட்ட மக்களின் விருப்பத்திற் கெதிராக ஸ்தலப் பரிவர்த்தனை கூடாது; தமக்கு வேண்டிய ஆட்சி முறையைத் தேர்ந்து கொள்ள சகலருக்கும் உரிமையுண்டு; வியாபார வசதிகளையும் கச்சாப் பொருள்களையும் எல்லா நாடுகளும் பெற்று அனுபவிக்கலாம்; தேசங்களுக்கிடையே பொருளாதாரக் கூட்டு நடவடிக்கை இருக்க வேண்டும். கடல்களின் உபயோகம் அனைவருக்கும் பொதுவானது; சர்வதேச உறவுகளில் பலாத்காரத்தை விட்டு விட வேண்டும்.....வில்ஸனின் பதினான்கு குறிப்புகளைப் புதிய எளிய உடையில் இங்கு காணலாம்

சிறுகச் சிறுக நகர்ந்து அமெரிக்கா போரில் கலந்தே விடும் என்று தோன்றிற்று; ஆனால் அதற்கு வெகு காலம் பிடிக்கும் என்று நினைக்கவும் இடமிருந்தது. அந்த நாடு தீர்மானம் என்னவோ செய்து விட்டது; ஆனால் போர் என்பது நிச்சயமற்ற நடவடிக்கையாகையால், அதன் சோதனைகளுக்கு உட்படத் துணியவில்லை. இதற்கிடையே தூரக்கிழக்கில் நிலைமை விறுவிறுப்படைந்து வந்தது. ஜப்பான் ஏற்கெனவே அச்சு நாடுகளுடன் சேர்ந்து விட்டது; பிரஸ்தாப சமயத்தில் பிரிட்டனும் அமெரிக்காவும் ஐரோப்பியப் போரில் ஈடுபட்டிருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு, ஜப்பான் தன் ''புது வாழ்க்கைத் திட்ட''த்தைத் துணிந்து ஸ்தாபித்துக் கொண்டிருந்தது. பசிஃபிக் மகா சமுத்திரத்திலும் கிழக்குப் பிரதேசம் முழுதிலும் ஜப்பானியர் சர்வாதிகாரம் நடத்துவதே அத்திட்டத்தின் முக்கிய அம்சம். சமாதான முறைகள் வீணாகவே, பிரிட்டனும் ஐக்கிய நாடும் ஜப்பானுடன் சற்றுக் கண்டிப்பாக நடந்துகொள்ளத் தீர்மானித்தன. அதுவும் அதே அளவு வீணாயிற்று. போர் முறையில் ஆவல் கொண்டவர்கள் ஜப்பானில் அதிகாரம் செலுத்தினார்கள்; வெற்றியின் ருசி கண்டவர்கள் அவர்கள்; இன்னும் பெரிய வெற்றிகளை அவர்கள் நிச்சயமாய் எதிர்பார்த்தார்கள். 1941, நவம்பர் மாதம், ரஷ்யர்கள் சூரத்தனமாய் மாஸ்கோ, லெனின்க்ராட் நகரங்களுக்கு முன் போர் புரிந்து கொண்டும், பிரிட்டிஷார் அட்லாண்டிக் யுத்தத்தில்

ஈடுபட்டும் இருக்கையில், ஜப்பானியர் ஃப்ரெஞ்சு இந்தோ—சைனுவில் தம் துருப்புக்களைக் கொண்டு கொட்டி, தாய்லந்து எல்லையில் விமானத் தளங்கள் கட்டிக்கொண்டிருந்தனர். டிசம்பர் 6-ஆம் தேதி, நிலைமை மிகக் கவலையளிப்பதை உத்தேசித்து, சாந்தி ஸ்தாபனத்திற்கான ஒரு முடிவுக்கு வர ஒத்துழைக்கும்படி ஜனுதிபதி ரூஸ்வெல்ட் ஜப்பானியச் சக்கரவர்த்திக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு வேண்டுகோள் அனுப்பினர்.

அந்தச் செய்தி சக்கரவர்த்தியின் காதுவரைப் போகவில்லை என்றே நினைக்கலாம். ஏனென்றால், தற்காலச் சரித்திரத்திலேயே மிகத் துணிந்த அரசியல் சூதாட்டத்திற்கு ஜப்பானிய அதிகாரிகள் தயாராகநின்றனர். டிசம்பர் 7-ஆம் தேதி ஹவாஈ, குவாம், மிட்வே, வேக், ஃபிலிப்பைன்ஸ் ஆகிய தீவுகளிலிருந்த அமெரிக்கத் தளங்களை அழித்து நிர்மூலமாக்கும் கோபாவேசத்துடன் ஜப்பான் தாக்கிற்று.

அத்தியாயம் 21

இரண்டாம் உலக மகா யுத்தம்

எதிர்காலத்தின் பயங்கரத் தோற்றம்: குடிநல ஸ்தாபனங்கள் வளர்வதா, அழிவதா என்பதை நிர்ணயிக்கும் போரில் உலக சரித்திரத்திலேயே மிக அரக்கத்தன்மை வாய்ந்த யுத்தத்தில், பல ஆபத்தான கட்டங்கள் இருந்தன; அவற்றுள் பெர்ல் (Pearl) துறைமுகத் தாக்குதலை வின்ஸ்டன் சர்ச்சில் மிகக் கவலையளித்த நிகழ்ச்சி என்று குறிப்பிட்டார். பெர்ல் துறைமுகத்திலும் ஃபிலிப்பைன் தீவுகளிலும் ஜப்பானியர் பகட்டான வெற்றியடைந்தார்கள் என்பது உண்மையே; ஆனால் யுத்த தந்திரத்தின் ஒரு அடிப்படைப்போதனையை அசட்டை செய்தே அவர்கள் அமெரிக்க ஸ்தலங்களைத் தாக்கினார்கள் என்பது தெளிவு; அதாவது, எதிரியான அரசனைத் தாக்கினால், கொல்லும்படி தாக்க வேண்டும், வெறுங்காய முண்டாகும்படி தாக்கக் கூடாது. பெர்ல் துறைமுகத் தாக்குதலால் ஐக்கிய நாட்டுப் பசிஃபிக் கடற்படை சேதமடைந்தது; ஆனால் ஐக்கிய நாடு சேதப்படவில்லை. அதற்கெதிராக, வேறெருரு செயலாலும் எதிர்பாராத அளவுக்கு ஐக்கிய நாடு ஒன்றுக இணைந்தது. தன் எல்லா வசதிகளையும் ஆற்றல்களையும் யுத்த தேவனுக்கு அர்ப்பணம் செய்தது; அதன் எல்லையற்ற உற்பத்தி சாதனங்களை மேலும் முடுக்கி விட்டது; வெற்றி கிட்டும் வரைப் போர் புரிய வேண்டும் என்னும் அசைவற்ற தீர்மானத்தை மக்களின் மனத்தில் கிளப்பி விட்டது. பெர்ல் தாக்குதல் நடந்து ஆறு மாதத்

திற்குள் அமெரிக்கக் கடல்-ஆகாயக் கூட்டுப் படை எதிரியை மிட்வே தீவுகளுக்கருகில் தாக்கி, ஜப்பானியர் பெற்ற முதல் பெரிய தோல்விக்குக் காரணமாயிற்று; ஒரு வருஷத்திற்குள் ஜப்பானியரின் கருத்துப்படி நிர்மூலமாகியிருக்கவேண்டிய நாடு பூகோளத்தின் எதிர் எதிர்ப் புறங்களில் - ஸாலொமன் தீவுகளிலும் வட ஆஃப்ரிக்காவின் கரை யோரங்களிலும் - வெற்றிகரமான தாக்குதல்கள் நடத்திக் கொண்டிருந்தது.

அப்படியிருந்தும், 1941 டிசம்பரில் ஸ்திதி ஆபத்து மயமாகவும் எதிர்காலம் அவநம்பிக்கையாகவும் தோன்றிற்று. எல்லாப் போர் முனைகளிலும் நன்கு அடிபட்ட நேசதேசத்தார் தற்காப்பிலேயே நோக்கமாக இருந்தார்கள்; அச்சு வல்லரசுகள் எதிர்த்து வெற்றி பெற்றன. ஸ்பெய்ன். போர்த்துகல் தவிர இதர மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஹிட்லரின் கைக்குள் இருந்தன; அவனுடைய ஆற்றல் படைத்த சேனைகள் ரஷ்யாவில் பல நூறுமைல் தூரம் முன்னேறி விட்டன; ரஷ்யாவின் வீழ்ச்சி எந்நொடியும் எதிர்பார்க்கக் கூடியதாக இருந்தது. மத்திய தரைக் கடல் இத்தாலியின் ஆதிக்கத்திலிருந்தது; இத்தாலிய சேனைகள் வட ஆஃப்ரிக்காவில் பரவி முன்னேறி எகிப்துக்கும் ஸூயெஸ் வாய்க்காலுக்கும் ஆபத்து உண்டாக்க இருந்தன சைனுவின் பெரும்பகுதியை ஜப்பானியர் தம் வசமாக்கிக் கொண்டு விட்டனர்; அவர்கள் மலேயா மீது பாய்ந்து, டச் கிழக்கிந்தியத் தீவுகளைக் கடந்து, ஃபிலிப்பைன் தீவுகளைக் கைப்பற்றி, இந்தியாவையும், ஆஸ்ட்ரேலியாவையும் அலாஷியன் தீவுகளையும் அலாஸ்காவையும் தாக்கத் தயாராயிருந்தனர்.

பழைய உலகத்தில், பிரிட்டனும் ரஷ்யாவும் மாத்திரமே அச்சு நாடுகளை எதிர்த்து நின்றன. இடைவிடாமல் வானத்திலிருந்து தாக்கப்பட்டும், உணவுப்பஞ்சம் என்னும் பயத்தால் பாதிக்கப்பட்டும், காயப்பட்டு, ரத்தம் பெருகி, பிரிட்டன் தவித்துக் கொண்டிருந்தது; சேனைகள் சிதறடிக்கப்பட்டு, நகரங்களும் தொழிற்சாலைகளும் தகர்க்கப்பட்டு, நாடு அழிக்கப்பட்டு, முழங்கால் மண்டியிடும் நிலையை எட்டியது ரஷ்யா; காகசஸ் (Caucasus) மலை அல்லது வட ஆஃப்ரிக்கா வழியாகக் கிழக்கு நோக்கிப் பாய இருந்தது ஜெர்மனி; சைனுவையும் பர்மாவையும் தகர்த்துக்கொண்டு மேற்கு நோக்கி ஜப்பான் பாய்ந்து சென்று ஜெர்மனியை இந்தியாவில் சந்தித்து, உலகத்தின் முக்கால் பங்கைத் தம் காலடியில் கொண்டுவருதல், என்பது அச்சுநாட்டாரின் திட்டம். அது சாத்தியம் மட்டுமல்ல, அநேகமாக அதுவே நடைபெறும் என்று 1941-ன் இறுதியில் தோன்றிற்று.

இருந்தபோதிலும், தற்காலிகத் துன்பங்களை மறந்து நீண்ட நோக்குடன் பார்த்தால், நிலைமை அவ்வளவு இருள்

மூடியதல்ல. ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் (United Nations) சுமார் 40 நாடுகள் இருக்கின்றன; அவற்றுள் மிகப்பெரியவை அதிக ஜனத்தொகை கொண்டவை, அதிக ஆற்றலுள்ளவை— அமெரிக்க ஐக்கியநாடு, பிரிட்டன், ரஷ்யா, சைனு, இந்தியா, பிரிட்டிஷ் டொமினியன்கள் — அடங்கியிருக்கின்றன. நேச தேசத்தாருக்கு ஆள் பலம் மட்டுமல்ல. தொழில் உற்பத்தி சக்தியும் அதிகம்; மேலும் விஞ்ஞானத் தேர்ச்சியும் புதுப் பொருள்கள் இயற்றும் திறமையும் அவர்களுக்கதிகம் என்பது நிரூபணம் பெற்றுவிட்டது. இறுதி வெற்றி நிச்சயமாய்ப் பெறுவதற்கு அவர்களுக்குத் தேவையானதெல்லாம் அவ காசந்தான். அச்சு நாடுகள் இப்போருக்காகப் பத்து ஆண்டு களாகவே தயாராகி வந்தன; சைனு, ஸ்பெயின், ஆஃபிரிக்கா, ஆகிய இடங்களில் பாதிக்காலம் பயிற்சியும் பெற்று வந்தன. எல்லா இடங்களிலும் முதல் யத்தனம் அவர்களுடையதே; அதனல் கிடைத்த சௌகரியங்கள் அவர்களுக்கு உதவிவந்தன. அவகாசம் மாத்திரம் கிடைக்குமானல் நேசதேசத்தார் தங் கள் ஏராளமான வளங்களையும் வசதிகளையும் பயன்படுத்தி எதிரியைத் தாக்க உபயோகிக்கலாம். ஆனல் அவர்களுக்கு அவ காசம் அளிக்கப்படுமா?

இரண்டு அம்சங்களில் அச்சுநாடுகளைக் காட்டிலும் நேச தேசத்தாருக்குக் குறிப்பிடத்தக்க அனுகூலங்கள் இருந்தன. முதலாவது, அவர்கள் பெயரளவுக்கு மாத்திரமல்ல, உண்மை யிலேயே ஐக்கியமாக இருந்தார்கள். அவர்கள் தம் பொருள் களையும் ராணுவ, விஞ்ஞான அறிவையும் கொண்டு கொடுக்கல் வாங்கல் மாத்திரம் செய்யவில்லை, பயன்படும்படி இணைக்க வும் செய்தார்கள். நேசதேசத்தாரின் இரண்டாவது அனு கூலம் என்னவெனில்-தலைமைவகிப்பு. இந்தப் பெரிய ஆபத்துக் காலத்தில் பிரிட்டனிலும் ஐக்கிய நாட்டிலும் பொறுப்புக் கேற்ற கண்ணியமான நாயகர்கள் கிடைத்தார்கள். இங்கி லாந்து அறிந்த மிகப்பெரிய போர்த்தலைவர்களுள் வின்ஸ்டன் சர்ச்சில் ஒருவர்; யுத்தகால ஜனதிபதிகளுக்குள் மிகத்திறமை சாலி ஃப்ராங்க்லின் டி ரூஸ்வெல்ட் என்பதும் தெளிவாயிற்று. இருவரும் தம்தம் நாட்டில் மாத்திரமல்ல, உலகத்தின் நாகரிக மறிந்த நாடுகளிலெல்லாம் ஆதரவும் பாராட்டுதலும் பெற் றவர்கள்.

மூன்ருவது அனுகூலம் ஒன்று இருந்தது; வருஷங்கள் கழியக் கழிய அதன் விசேஷத்தன்மை தெளிவாயிற்று. அச்சு நாட்டுத் தலைவர்கள் உபயோகித்த ஆயுதங்கள்: கொடுமை; அடக்குமுறை, அடிமையாக்குதல்; பிரிந்து செல்பவர்களுக்கு மரணமோ கொடூரமான சிறைவாசமோ காத்திருந்தது. ஆனல் ஆங் கிலம் பேசும் நாடுகள் எல்லாவற்றிலுமோ அமைதி காலத் திலும் சுதந்திரம் வளர்ந்தது; சமநல நிகழ்ச்சிகள் தடைபட

வில்லை; விமர்சகர்கள் ஆதரவு பெற்றனர்; புதுவழி செல் பவர்களும் சுயவழி செல்பவர்களும் விசேஷமாக மதிக்கப்பட் டனர். அச்சு நாட்டுத் தலைவர்கள் தாம் வென்ற தேசங்களின் குடிகளால் வெறுக்கப்பட்டனர். நேசதேசத் தலைவர்களுக்கு அவர்கள் விடுவித்த குடிகளின் ஒத்துழைப்பு கிடைத்தது; சித்தாந்தங்களும் யுத்த தந்திரங்களும் வெளிப் படையாகத் தர்க்கிக்கப்பட்டதால் மதிப்பிடமுடியாத நன்மை ஏற்பட்டது.

ராணுவத் தயாரிப்பும், தளவாட உற்பத்தியும்: ஐக்கிய நாடு முன்பு நடந்த யுத்தங்களுக்குத் தயாராயிருந்ததைக் காட்டி லும் அதிகமாகவே இந்தச் சமயத்தில் தயாராக இருந்தது. அட்லாண்டிக், பசிஃபிக் இரு சமுத்திரங்களிலும் படைகள் இருக்கவேண்டும் என்ற உத்தரவு பிறந்ததும், தளவாடத் தயாரிப்பு ஆரம்பமாகி விட்டது; ஐரோப்பாவில் போர் துவங்கியதும் அமெரிக்கத் தொழிற்சாலைகளில் பல யுத்த சாதனத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தன. பிரிட்டிஷாரிட மிருந்து தளங்கள் பெற்றதாலும், அதன்பிறகு க்ரீன்லண் டையும், ஐஸ்லண்டையும் ஆக்ரமித்ததாலும் விமானங்களும் கப்பல்களும் ஐரோப்பாவை நோக்கிச்செல்ல வேண்டிய தூரம் பாதியாகிவிட்டது. கடன்-குத்தகை ஏற்பாடு பிராணுதாரமான உணவும் யுத்த சாதனங்களும் நேசதேசத்தாருக்குக் கொடுத்த தோடு அமெரிக்கத் தொழிற்சாலைகளைப் போர்த் தேவைகளுக் குத் தக்கபடி மாற்றியமைத்துவிட்டது; அமைதிக்காலதுருப்புப் பதிவுத் திட்டம் 15 லக்ஷ சிப்பாய்களும் அதிகாரிகளும் பயிற்சி பெற உதவிற்று. ஏற்கெனவே ஐக்கியநாடும் பிரிட்டனும் விஞ்ஞான ரகசியங்களும் செய்முறை நுணுக்கங்களும் பரிவர்த் தனை செய்துகொண்டு ராடார் (Radar) ஆராய்ச்சி, அணு ஆராய்ச்சி முதலியவற்றில் ஒத்துழைப்புடன் ஈடுபட்டிருந்தன.

முதல் உலக யுத்தத்தில் ஐக்கியநாடு சுமார் இரண்டு மிலி யன் துருப்புக்களைக் கப்பலேற்றி ஃப்ரான்ஸுக்கு அனுப்பிற்று. ஆனல் அப்பொழுது யுத்த சாதனங்கள் பெரும்பாலும் பிரிட் டனலும் ஃப்ரான்ஸாலும் வழங்கப்பட்டன. இரண்டாம் உலக யுத்தத்தில் அதைப்போல் இரண்டு மடங்குக்கும் அதிக மான ஆட்களை உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள போர்முனை களுக்கு அனுப்பவேண்டி வந்தது. பல பிரதேசங்கள் சத்துரு வசம் இருந்தன. அப்படைகளுக்கு புறப்படும்போதும் பிற் காலத்திலும் தொடர்ந்து தேவைப்படி ஆயுதங்களும் மற்ற உபகரணங்களும் அனுப்பவேண்டி யிருந்தது. அதுமட்டுமல்ல. பிரிட்டன், ரஷ்யா, சைனு, சுதந்திர ஃப்ரான்ஸ், மேலும் இதர இடங்களில் ராணுவத் தேவைகளையும் சிவிலியன் தேவை களையும் அமெரிக்கா பூர்த்தி செய்யவேண்டி வந்தது. இதெல் லாம் செய்ய ஆள் பலமும் சாதனங்களும் இருந்தால் மாத்

திரம் போதாது, தூரதேசத்திற்குப் போய்வர வியாபாரக் கப்பல்தொடர் தேவை; முகாம்கள், சாலைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், சுகாதார வசதிகள் முதலியன அமைக்க என்ஜினியர்களும் பொருள்களும் தேவை; புது நோய்கள் பல தாக்கும்போது துரைப்புக்களின் சிகிச்சைக்கும், பெருவாரியான நோய்கள் பரவாமல் தடுக்கவும் மருத்துவப் படை மிகவும் தேவை; எல்லாவற்றிற்கும் மேல், ஏழு கடல்களிலும் ஆதிக்கம் செலுத்த வலுத்த கடற்படையும், சத்துருவின் பிரதேசத்தில் போரைக் கொண்டுசெல்ல ஆற்றலுள்ள ஆகாயப் படையும் மிக அவசியம்.

எதிரி நாடுகளின் மொத்தப் பொருளுற்பத்தி சக்தியைக் காட்டிலும் அமெரிக்காவின் சக்தி அதிகம் என்பது சந்தோஷப்பட வேண்டிய விஷயம்; ஆகவே மேற்கூறிய பகாசுரப் பசியை அது பூர்த்தி செய்ய முடிந்தது. "குடியரசு உலகுக்கெல்லாம் ஆயுத சாலை"யாக இருந்துதவும்படி ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தம் நாட்டை வேண்டிக்கொண்டார்; நாடும் பொறுப்பேற்று அவ்வாறே செய்தது. மக்களனைவரின் அளவற்ற ஆற்றல் முழுதும் போர் சாதனத் தயாரிப்பில் ஈடுபடுத்தப்பட்டது; தொழிற்சாலை உற்பத்தி, விவசாயம், சுரங்க வேலை, போக்குவரத்து, செய்திப் பிரசாரம், நிதி, விஞ்ஞானம் கல்வி, எல்லாச் செயல் துறைகளும் ஓரளவு அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. பெரிய புதிய பொருள் உற்பத்திசாலைகள்—முக்கியமாக மாக்னீசியமும், செயற்கை ரப்பரும் தயாரிப்பவை—மந்திர வித்தை போல நிறுவப்பட்டன; விமானங்களும் கப்பல்களும் கட்டும் தளங்கள் பன்மடங்கு விஸ்தரிக்கப்பட்டன. பசிபிக் போருக்கு அண்மையிலுள்ள தூர மேற்கு பிரதேசத்தில் தொழிற்சாலைகள் இணையற்றுப் பெருகின; ஜனத்தொகையும் அவ்வாறே பெருகிற்று. யுத்தக் காரியங்களுக்கான தொழில் ஸ்தலங்களில் ஃபெடரல் பணம் பிரவாகமாகப் பாய்ந்தது; அவசரக் கப்பல் தயாரிப்புத் தளங்கள், ரப்பரும் அலுமினியமும் தயாரிக்கும் தொழிற்சாலைகள், இதர பல சிறிய ஸ்தாபனங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் சொத்துக்கள் ஆயின. சர்வகலாசாலைகளிலும் தொழிற்சாலைகளிலும் இருந்த ஆராய்ச்சி நிலையங்கள் அரசாங்கத்தின் கட்டளை பெற்று நூற்றுக்கணக்கான செய்முறை நுணுக்கங்களைக் கற்றறிந்து புதுக் கருவிகள் கண்டு பிடித்த தோடுராடார், லோஞர் போன்ற துப்பறியும் சாதனங்கள் சம்பந்தமாகவும் புதுவகை வெடிவத்தியைப் பற்றியும், அணு வெடியைப் பற்றியும் முக்கியமான சோதனைகள் நடத்தின.

1940 ஜூலை முதல் 1945 ஆகஸ்டில் ஜப்பான் தோல்வியடைந்த வரை, தன் தேவையைப் பூர்த்தி செய்வதோடு பிரிட்டனின் தேவையையும், ஓரளவு ரஷ்யாவின் தேவையை

யும் பூர்த்தி செய்யும் அளவுக்கு ஆகாய விமானங்கள், டாங்குகள், ஜீப்புகள் (Jeeps) ட்ரக்குகள், போர்க்கள டெலிபோன்கள், ரப்பர் டயர்கள், ராடார் செட்டுகள், கரையிறக்கத்திற்கு உதவும் அலுமினியம் விரிப்புகள், இன்னும் ஆயிரம் வகைப் பொருள்களை அமெரிக்கா தயாரித்தது. போர் முடிவதற்குள் கடன்-குத்தகைக் கணக்குப்படி ஐக்கிய நாடுகள் அனுப்பிய உணவுப் பொருள்கள், போர்த் தளவாடங்கள் ஆகியவற்றின் மொத்த மதிப்பு 50 பிலியன் டாலர்; அதற்கெதிராக அது பெற்றுக்கொண்டது சுமார் எட்டு பிலியன்—அது பெரும் பாலும் சம்பளம், வாடகை வசதி என்ற ரூபத்தில் இருந்தது.

இவற்றுள் மிகப் பகட்டான சாதனைகள், சந்தேகமன்னியில், விமானத் தயாரிப்பும் கப்பல் தயாரிப்பும். "அமெரிக்கர்களாவது விமானங்கள் கட்டுவதாவது! சுகவாழ்வுக்கான மின்சாரக் குளிர்ச்சிப் பெட்டிகளும் கூவரப் பிளேடுகளும் செய்யத் தான் அவர்களுக்குத் தெரியும்!" என்று ஜெர்மன் பிரசாரகன் ஜெர்மன் கோயரிங் பரிகாசம் செய்தான்; அவனுடைய இதர ஜோசியக் கூற்றுக்களைப் போலவே இதுவும் பொய்யாயிற்று.

1942-ல் 48,000, 1943-ல் 86,000, 1944-ல் 96,000-க்கும் அதிகமான விமானங்களை தயாராயின. எண்ணிக்கையில் மாத்திரமல்ல, பரிமாணத்திலும் வேகத்திலும் உள்ளடங்கிய வசதிகளிலும் வருஷா வருஷம் அபிவிருத்தி இருந்து வந்தது. அவற்றுள் மிக முக்கியமானவை ராட்சச வெடி விமானங்கள்—பறக்கும் கோட்டை (B.17, Flying Fortress), லிபரேடார் (B.24, Liberator) மகா கோட்டை, (B 29, Super Fortress), கீழ் நோக்கிப் பாயும் வெடி விமானங்கள், போக்கு வரத்து விமானங்கள் (C-47). 1944-க்குள் அமெரிக்க உற்பத்தியும் பிரிட்டிஷ் உற்பத்தியும் சேர்ந்து, ஐரோப்பாவிலும் பசிபிக் சமுத்திரத்திலும் நேச தேசத்தாரின் கை ஓங்கியிருந்தது. அந்த ஆண்டு முடிவுக்குள் விமான உற்பத்தித் தொழில் நாட்டின் மிகப் பெரிய ஒற்றைத் தொழிலாக விளங்கிற்று; இரண்டரை மிலியனுக்கும் அதிகமானவர் அதில் ஈடுபட்டிருந்தனர்; 20 மிலியன் டாலர் மதிப்புள்ள விமானங்கள் உண்டாக்கப்பட்டன.

வெற்றிக்கு மிக முக்கியமாக இருந்த கப்பல் கட்டும் காரியக் கிரமமும் அதே அளவு குறிப்பிடத்தக்கது. 1941, 1942 முழுதிலும் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் அட்லாண்டிக் சமுத்திரத்தில் சஞ்சரித்து அமெரிக்கக் கப்பல்களையும் பிரிட்டிஷ் கப்பல்களையும் தாக்கித் தகர்த்து வந்தன. பிரிட்டனை எவரும் அணுகவொட்டாமல் செய்து, அமெரிக்கக் கப்பல்கள் பழைய உலகுக்கு வராமல் தடுப்பதே ஹிட்லரின் அபிலாஷை; அது முற்றிலும் பூர்த்தியாகுமோ என்ற பயம் கூடச்சிலகாலம் உலவி வந்தது. 1942 முடியும்போதுதான கப்பல் நஷ்டத்தை ஈடுசெய்யும் அளவுக்கு உற்பத்தி பெருகிற்று. போர் தாக்குதல்

நடந்த பின் இரண்டு வருஷங்களில் 27 மிலியன் டன் மொத்த எடையில் பலரகப்பட்ட 2700 கப்பல்கள் அமெரிக்கத் துறைகளில் கட்டப்பட்டன. பிரிட்டிஷ் துறைகளும் கணிசமாகக் கட்டின; அட்லாண்டிக் போரிலும் நேச தேசக் கை ஓங்கிற்று; ஆகவே கடல்கள் அவர்கள் ஆதிக்கத்தில் வருவதும், பிரிட்டன் உயிர் வாழ்வதும், ஐரோப்பா மேல் படையெடுப்பு நடப்பதும் சாத்தியமாயின.

முதலாளிகளைப் போலவே தொழிலாளிகளும் போரை வெல்வதற்குக் காரணமாக இருந்தார்கள். பெர்ல் துறைமுகம் தாக்கப்பட்ட உடனேயே ஜனதிபதி நிர்வாகிகளையும் தொழிலாளிகளையும் கொண்டசபை கூட்டி, போர் முடியும்வரை வேலை நிறுத்தமோ, தொழிற் சாலை யடைப்போ நடைபெறாது என்ற வாக்குறுதி பெற்றார்; லீலைவாசிகளும் உயரக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் பெரிய தொழில் ஸ்தாபனங்கள் இரண்டும் (A. F. of L. ; C. I. O.) அவ்வாறு ஒப்புக்கொண்டன.

குடியானவர்களும் போர் வருஷங்களில் ஆவலுடன் உழைத்து அபரிமிதமாக விளைவித்தார்கள்; அவர்களுடைய ஆடு மாடுகளும் பன்றிகளும் கோழிகளும் பாராட்டத்தக்க முறையில் பெருகின. கூலியாட்களும் விவசாய யந்திரங்களும் குறைவாக இருந்தும், விவசாய உற்பத்தி முன்னிருந்த உயர் வரம்புகளைக் கடந்து சென்றது.

யுத்தப் பொருள் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்துவதால் சிவிலியன் பொருளாதார நிலை பாதிக்கப்படுவது சகஜமே: ஆனல் போரில் ஈடுபட்ட வேறு எந்தப் பெரிய தேசமக்களைக் காட்டிலும் அமெரிக்க மக்களின் அசௌகரியங்களும் கஷ்டங்களும் குறைவே.

பசிபிக் சமுத்திரத்தில் தற்காப்பு: பெர்ல் துறைமுகத்தில் பெருஞ் சேதம்; ஃபிலிப்பைன் தீவுகளிலிருந்த அமெரிக்க விமானப் படையின் பெரும் பகுதியின் அழிவு, தீவுகள் ஜப்பானியர் கைவசம் செல்லுதல்; பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள் 'ரிபல்ஸ்' (Repulse), 'ப்ரின்ஸ் ஆஃப் வேல்ஸ்' (Prince of Wales) இரண்டும் மூழ்கடிக்கப்படுதல் - இவையெல்லாம் சேர்ந்த மிகப் பெரிய விபத்து பயத்தை மூட்டியது. ஆனல் இன்னும் பெரிய விபத்துகள் வர இருந்தன. இரண்டே மாதத்தில் ஜப்பான் ஒரே பாய்ச்சலாக இந்தோ - சைனவையும், தாய்லந்தையும், மலாயா தீபகற்பத்தையும் கடந்து பலமான தற்காப்புள்ள சிங்கப்பூரைக் கைப்பற்றி, சுமாத்ரா, ஜாவா, போர்நியோ, ஸெலெபெஸ், டைமோர் ஆகிய தீவுகளை அடக்கி, நியூ கினிக்குக் கிழக்கே ரபாஉல் துறைமுகத்தை வசமாக்கி, ஸாலொமன் தீவுகளையும் ஆக்கிரமித்து, ஆஸ்ட்ரேலியாவுக்குத் திகில் உண்டாக்கிற்று. வேறு ஜப்பானியப் படைகள் பர்மாவைப் பிளந்து முன்னேறி, சைனவைத் தனிப்படுத்தி,

இந்திய எல்லையை எட்டின. இவ்வாறு 1942-ன் கோடைக்கு முன் ஆசியாவின் பெரும்பாகம் கோடிக்கணக்கான ஜனங்களுடன் அவர்கள் வசம் வந்தது; மேற்குப் பசிபிக்கில் அவர்கள் ஆதிக்கம் செலுத்தினர்கள்; மேலும், இந்தோனேசியாவின் கற்பனைக்கடங்காத எண்ணெய், ரப்பர், வெள்ளீயம் முதலான வளங்களும் அவர்களுக்குக் கிடைத்தன. உலக சரித்திரத்திலேயே வேறு ஒரு நாடும் இவ்வளவு சொற்பச் செலவில் இவ்வளவு மகத்தான வெற்றிகள் பெற்றதில்லை.

அப்படியிருந்தும், அமெரிக்க, பிரிட்டிஷ் ஆஸ்ட்ரேலியப் படைகள் சிதறியே கிடக்காமல் மறுபடி கூடின. பசிபிக் போர்ப்படை கடலடிக்கு அனுப்பப்பட்டாலும், இரண்டு கப்பல்களைத் தவிரப் பாக்கியெல்லாம் ஜல மட்டத்திற்குக் கொண்டு வந்து செப்பனிட்டு மறுபடி உபயோகிக்கப்பட்டன; நாசகாரிக் கப்பல்கள் பலவும் பெரிய விமானந்தாங்கிக் கப்பல்கள் மூன்றும் இதைவற்றே இருந்தன. இவற்றை நடு நாயகமாகக் கொண்டு கடல் சக்தி மறுபடி சேர்க்கப்பட்டது; புது விமானப் பலமும் ஹவாஈ தீவிலும் ஆஸ்ட்ரேலியாவிலும், நேச தேசத்தார் வசமிருந்த வேறு தீவுகளிலும் சேர்க்கப்பட்டது. இலங்கைத் தீவு மேல் நடந்த ஜப்பானிய விமானத் தாக்குதலைப் பயனற்றதாகச் செய்தும், பர்மா எல்லையில் பாதுகாப்பைப் பலப்படுத்தியும் பிட்டடிஷ் மத்தியக் கோட்டை போன்ற இந்தியா காப்பாற்றப்பட்டது. அமெரிக்கத் தளகர்த்தர், மாக் ஆர்தர், கார்ரெகிடாரிலிருந்து தப்பி வெளியேறி ஆஸ்ட்ரேலியாவில் தம் தலைமைக் காரியாலயம் அமைத்துக் கொண்டு வர இருக்கும் எதிர்த் தாக்குதலுக்காகத் தரைப் படையும்விமானப் படையும் திரட்ட ஆரம்பித்தார்.

போதுமான ஆள் பலமும் பொருள் பலமும் சேரும் வரை எதிர் நடவடிக்கை நடத்தாமல் கைவசமிருப்பதை மாத்திரம் காப்பாற்றிக் கொண்டு பொறுத்திருப்பதே அச்சமயத்திற் கேற்ற அமெரிக்க யுத்த தந்திரம்; அதன் பிறகு கடலிலும் ஆகாயத்திலுமிருந்து நியூ கினியின் வடக்குக் கரையோரமாகத் தாக்குதல் நடத்தி, ஹால்மஹேரா, தென் ஃபிலிப்பைன் தீவுகள் கில்பெர்ட், மார்ஷல், மாரியானு, போனின் தீவுக் கூட்டங்கள் வழியாகப் படிப்படியாக முன்னேறி, ஜப்பான் மேல் விமானத் தாக்குதல் நடத்தி விட்டுப் பத்திரமாய்த் திரும்பும் அளவுக்கு தளங்கள் அமைக்கப் பெற வேண்டும். ஆனல் அந்த நடவடிக்கைகளுக்கு வேண்டிய தரை, கடல், விமான பலம் சேகரிக்க ஒரு வருஷமாகும் என்று கணக்கிடப்பட்டது.

இதற்கிடையே ஜப்பானியர், அவர்களுடைய கடற்படை அதிகாரி ஒருவன் சொன்னது போல், 'வெற்றி நோயால்' பீடிக்கப்பட்டு பசிபிக் பிரதேசத்தில் எஞ்சி நின்ற நேச

தேச சக்தியையும் சிதறடிக்க விரும்பினர்; 1942, மே மாதம், ஆஸ்ட்ரேலியாவை அடுத்து படக்கேயிருக்கும் பவளக் கடலில் இருந்த அமெரிக்கக் கப்பல்களைத் அவர்கள் தாக்கினர்கள். அதை ஒரு மிக விசேஷமான போர் என்று சொல்ல வேண்டும். ''கப்பல்கள் ஒன்றின் மேல் ஒன்று மோதிக் குண்டு வீசாதசண்டை இது; கடற் போரின் சரித்திரத்திலேயே இப்படிப்பட்ட முதல் நிகழ்ச்சி இதுவே'' என்று கடற்படை அதிகாரி கிங் குறிப்பிட்டிருக்கிறார். பிற்காலத்தில் அதுவே சகஜ மாயிற்று. போர் முழுதும் விமானம் தாங்கிகளை—வாஹினி களை—தளமாகக் கொண்ட விமானங்கள் நடத்தின. லெக்ஸிங் டன் என்னும் அமெரிக்க வாஹினியையும், ஒரு நாசகாரிக் கப் பலையும், ஒரு எண்ணெய் எரிக் கப்பலையும் ஜப்பானியர் மூழ் கடித்தனர்; அமெரிக்க விமானங்கள் இரண்டு ஜப்பானிய வாஹினிகளைச் சேதப்படுத்தி, ஒரு வாகினியையும் வேறு சில கப்பல்களையும் மூழ்கடித்தன. சில வாரங்கள் கழித்து (ஜூன் 4-6) தீர்மானமான மிட்வே (Midway) போர் நடந்தது. மிட்வே ஹவாய்க்கு 1500 மைல் மேற்கேயுள்ள ஒரு சிறு பவளத் தீவு; அங்கு அமெரிக்க ஆகாயக் கடற்படைத் தளம் ஒன்றிருந்தது. ஜூன்4-ஆம்தேதி, 50 துருப்புக் கப்பல்களும், நான்கு வாஹினி கள் உட்பட 30 யுத்தக் கப்பல்களும் கொண்ட ஒரு ஜப்பானி யப்படை மிட்வேயை நோக்கி வருவதை அமெரிக்க விமானி கள் கவனித்தார்கள். ஜப்பானிய விமானங்கள் மிட்வேயை நோக்கி முழக்கத்துடன் வரவே, வாஹினி தளங்கொண்ட அமெரிக்க விமானங்கள் எதிர்த்துச் சென்று நான்கு ஜப் பானிய வாஹினிகளையும், இரண்டு கனத்த க்ரூஸர்களையும், மூன்று நாசகாரிக் கப்பல்களையும் மூழ்கடித்து, மூன்று போர்க் கப்பல்களைச் சேதப்படுத்தின. மறு நாள் ஜப்பானியர் பயந் தோடுகையில் அமெரிக்க விமானங்கள் மேலும் பெரிய நஷ்டம் உண்டாக்கின. ஜப்பானுக்கு அதுவே முதல் பெரிய கடற் தோல்வி; பின்னால் வரவேண்டியவற்றிற்கு அறிகுறியுங்கூட; மேலும், பசிஃபிக் போர் அவர்களுக்குப் பிரதிகூலமாகத் திரும்பியதற்கும் அது சூசகம். ஐக்கிய நாடு தாக்குதலுக்கு இன்னும் தயாராகவில்லை; ஆனால் ஜப்பானின் எதிர்ப்பு மந்தப் படும் என்பது ஒரு லாபம்.

அந்நிலையிலும் ஜப்பானியர் பிரதிகூல ஸ்திதியை ஒப்புக் கொள்ள விரும்பவில்லை. அவர்கள் ஸாலொமன் தீவுகள் வரை வந்து அங்குள்ள துலாகித் தீவிலும், க்வாடல்கனல் தீவிலும் விமானத் தளங்கள் கட்ட ஆரம்பித்தார்கள். ஒரு சிறு அமெ ரிக்கப் படை க்வாடல்கனலில் கரையிறங்கி, விமான நிலையத் தைப் பிடித்து கொண்டது. அதிலிருந்து ஆறு மாதம் க்வாடல்-கனல் போர்நடந்தது; அமெரிக்க ராணுவச் சரித்திரத்தில் மிகக்

கடுமையான நடவடிக்கை இதுவே; மறக்க முடியாதது; தொடர்ந்து பல பெரிய கடற் சண்டைகளும், பயங்கரமான தரைச் சண்டைகளும் அநேகமாய் நாள் தவறாமல் விமானப் போர்களும் நடந்தன. முடிவான போர் 1942, நவம்பர் மாத மத்தியில் நிகழ்ந்தது; அந்த க்வாடல்கனல் கடற் போரில் ஜப்பானியர் இரண்டு யுத்தக் கப்பல்களும், ஒரு க்ரூஸர் கப் பலும், இரண்டு நாசகாரிக் கப்பல்களும், பத்துத் துருப்புக் கப் பல்களும இழந்தனர். கனத்த போர் இன்னும் இரண்டு மாதங் கள் நடந்தது; 1943 பிப்ரவரியில் ஜப்பானியர் க்வாடல்கனல் பிரதேசத்திலிருந்து விலகினர்; அதன் பிறகு தென் பசிஃபிக் பிராந்தியத்தில் அமெரிக்கரின் கை வலுவடைந்தது.

இதற்கிடையே கப்பல் கட்டுதலும் மராமத்து செய்தலும் அமெரிக்காவில் பாராட்டத்தக்க முறையில் விருத்தியடைந் தன; ஆகவே, 1943-ன் ஆரம்பத்தில் ஐக்கிய நாடு பசிஃபிக் சமுத்திரத்தில் ஆதிக்கம் பெற்றது. (ஜப்பானுக்கு வட கிழக்கே, ஆசியாவுக்கும் வட அமெரிக்காவில் அலாஸ்காவுக் கும் இடையே உள்ள அல்யூஷன் தீவுத் தொடரில் ஆட்டு தீவிலிருந்தும் கிஸ்கா தீவிலிருந்தும் ஜப்பானியர் வெளியேற் றப் பட்டது அந்த சக்தியின் ஒரு அறிகுறி; இந்த வெற்றி களின் காரணமாக ஜப்பானியர் வடமேற்கு மூலையிலிருக்கும் அலாஸ்கா வழியாக வட அமெரிக்காவைத் தாக்கக்கூடும் என்ற பயம் நீங்கிற்று. அடுத்த அறிகுறி பிஸ்மார்க் கடற் போரில் கிடைத்த வெற்றி (மார்ச்சு 2, 1943); அப்போரில் ஜப்பானியத் துருப்புக் காவல் கப்பல்கள் அனைத்தும் அழிந்த தோடு, மிகத் திறமையுள்ள சேஞ்திபதியாகிய யாமமோடோ என்பவரும் உயிர் துறந்தார். மூன்றாவது வெற்றிகரமான நட வடிக்கை ஸாலொமன் தீவுகளின் நடுப்பகுதியில் பெருவாரிப் படையெடுப்பும், ரபாஉல் மீது நடந்த கடுமையான தாக்குதல் களும் ஆகும். இவை யெல்லாம் பூர்வாங்க நடவடிக்கைகள்; ஃபிலிப்பைன் தீவுகளை மறுபடி வெல்லவும் ஜப்பானுக்கு அண்மையிலுள்ள ஈவஜீமா, ஓகினாவா தீவுகளைக் கைப் பற்றவும் நடைபெற இருக்கும் பெருவாரிச் சண்டைகளில் அவை உதவும்.

அட்லாண்டிக் யுத்தம்: இவ்வாறு, பிரிட்டிஷ் டச்சு ஆதிக்க நாடுகளின் சகாயத்தாலும், மனிதரால் முடியுமா எனக் கூடிய பெரிய முயற்சியாலும் அமெரிக்கர் பசிஃபிக் பிரதேசத்தில் ஆபத்து முன்னேறுமல் தடுத்து, பிற்கால வெற்றிக்கும் வசதி கள் செய்து வைத்தார்கள். இதற்கிடையே, ஐரோப்பியப் போர்முனைகளிலும் யுத்தம் அனுகூலமாகவே நடந்து வந்தது. ஜெர்மனியைத் தோற்கடிக்கும்வரை ஜப்பான் விவகாரத்தை ஒரு நிலையில் நிறுத்தி வைத்துக்கொள்ளுவது என்ற அடிப்படை யான தீர்மானம் முன்பே குறிப்பிடப்பட்டது. ஆனால் ஜெர்

மனியருடன் அல்லது இத்தாலியருடன் ஐக்கிய நாடு அல்லது பிரிட்டன் கைகலக்கு முன், போக்கு வரத்துச் சாதனம் என்னும் பெரிய பிரச்னைக்கு விடை கண்டுபிடித்தாக வேண்டும். அமெரிக்காவிலிருந்து ஜெர்மனியைத் தாக்கமுடியாது என்பது தெரிந்த விஷயம். பிரிட்டனிலிருந்தும் எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்க முடியாது; ஏனென்றால் அதற்குமுன், அத்தீவை சத்துரு புகமுடியாத ராணுவத் தளமாக மாற்றுவதோடு, உணவுப் பொருள்கள், கப்பல்கள், விமானங்கள், இதரப் பொருள்களெல்லாம் இடையூறின்றித் தொடர்ந்து அங்கு வந்து சேர்ந்துகொண்டே யிருக்கவேண்டும். ஆகவே, அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து சத்துருவை விலக்குவது முதல் காரியமாகும்.

ஜெர்மன் நீர்மூழ்கிகள் தங்கள் எதிரிகள் மேல் ஓநாய்க் கூட்டம்போல் பாய்ந்தன. முதலில் அவை வட அட்லாண்டிக்கில் இருந்தன; செல்லச் செல்ல அவை தெற்கு அட்லாண்டிக்கிலும், அட்லாண்டிக் கரையோரங்களிலும் கரீபியன் கடலிலும்கூடச்சஞ்சரித்தன. அவற்றை அழிப்பது மிகக் கஷ்டமான வேலை. அவற்றை ஃப்ரெஞ்சு, ஜெர்மன், நார்வேக் கரையோரங்களிலேயே அணைத்துவைக்க பிரிட்டன் முயன்றது. ப்ரெஸ்ட், ப்ரெமர்ஹேவன், சந்த் நஸார் முதலான இடங்களிலுள்ள நீர்மூழ்கித் துறைகளைத் தாக்கித் தகர்க்கவும் பிரிட்டிஷார் முயன்றனர்; ஆனால் அதிக வெற்றி கிடைக்கவில்லை. 1941-42 முழுதிலும் பல கப்பல்கள் அவற்றிற் கிரையாயின; அது திகிலுண்டாக்கக் கூடிய நஷ்டம்; அது போதாதென்று, பிரிட்டனை அணுகும் கடல் பாதைகளிலெல்லாம் வெடிக்கும் கண்ணிகள் பரவலாகப் போடப்பட்டிருந்தன. 1940-ன் முடிவுக்குள் மொத்தம் சுமார் ஐந்து மிலியன் டன் எடையுள்ள கப்பல்கள் நஷ்டமாயின; 1941-ல் இன்னொரு நான்கு மிலியன் டன் அமெரிக்கப் போரில் சேர்ந்ததும் எதிரி நீர்மூழ்கிகளுக்கு—'யூ-படகு'களுக்கு (U-Boats) ஆபத்து அதிகரித்தது; ஆனால் அவற்றிற்குக் கிடைக்கக்கூடிய இரையும் அதிகமாயிற்று. 1942-ன் முதல் நான்கு மாதங்களில் வட அட்லாண்டிக்கில் மாத்திரம் யூ-படகுகள் 82 கப்பல்களைக் கடலடிக்கு அனுப்பின; அவற்றின் மொத்த எடை அரை மிலியன் டன். அதன் பிறகு அவை கரீபியன் கடலுக்கும் மெக்ஸிகோ வளைகுடாவுக்கும் சென்று மொத்தம் சுமார் முக்கால் மிலியன் டன் எடையுள்ள 142 கப்பல்களை நஷ்டமாக்கின. இந்த ஆறுமாத காலத்தில் நேச தேசத்தார் 20 யூ-படகுகளையே மூழ்கடிக்க முடிந்தது. ஒரு மாத உற்பத்தியைக் காட்டிலும் குறைவானது அத்தொகை.

ஜெர்மன் படையெடுப்பு ஆரம்பமானதிலிருந்தே, ரஷ்யா ஐக்கியநாட்டிடமிருந்தும், பிரிட்டனிடமிருந்தும்உதவிக்காகப்

படுகூச்சல் போட்டுக்கொண்டிருந்தது; தாமே துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் அவ்விரு நாடுகளும் தம்மாலான வரை ரஷ்யாவின் தேவையைப் பூர்த்தி செய்தன. 1943 ல் பாரசிக வளைகுடாப் பாதை கிட்டும் வரை ரஷ்யாவுக்குச் செல்லவேண்டிய எல்லா யுத்தப் பொருள்களையும் வட துருவக் கடல் வழியாக மூர்மன்ஸ்க், ஆர்ச்சேஞ்ஜல் என்னும் துறைமுகங்களுக்கு அனுப்பவேண்டி யிருந்தது. நார்வேயிலிருந்த ஜெர்மன் விமானங்களும், நார்வேக்கு வடக்கே கடலில் இருந்த ஜெர்மன் க்ரூஸர்களும் நீர்மூழ்கிகளும் அக்கப்பல்களை எழுமறித்துத் தாக்கத் தயாராயிருந்தன. 1942 ல் மிக ஆபத்தான அவ்வழி சென்ற நேசக் கப்பல்களில் கால் பங்குக்கும் அதிகமானவை நஷ்டமாயின. அப்படி யிருந்தும் உறைபனி, மூடுபனி, நாஜித் தாக்குதல்கள் எல்லாம் பொறுத்துக்கொண்டு 19 கப்பல் கூட்டங்கள் அவ் வருஷம் வட ரஷ்யத் துறைமுகங்களை அடைந்தன.

சிறுகச் சிறுக, நீர்மட்டக் கப்பல்களுக்கும் நீர்மூழ்கிகளுக்கும் இடையே நடந்த பயங்கரமான ஊஞ்சலாட்டத்தில், நேசதேசத்தாரின் கை வலுக்க ஆரம்பித்தது. ஆபத்தான கடல்களில் அவர்கள் பாதுகாப்புக் கப்பல் கூட்டங்கள் ஸ்தாபித்தார்கள்; பரவலான பல தளங்களிலிருந்து விமானங்கள் சுற்றித் திரிந்து காவல் புரிந்தன. எதிரொலியின் மூலம் உளவறியும் ஸோனர் (Sonar) என்னும் கருவியைக்கொண்டு யூ-படகுகள் கண்டுபிடிக்கப்பட்டு, பாதாள வெடிகுண்டுகளின் மூலம் தகர்க்கப்பட்டன. கடற்கண்ணி வெடிகளை வலைபோட்டுச் சேகரிக்கும் வேலை ஆயிரத்திற்கும் அதிகமான கப்பல்கள் செய்தன; கடற் கண்ணிகளையும் நீர்மூழ்கிகளையும் கண்டறியக் கூர்தீட்டிய கருவிகள் உபயோகிக்கப் பட்டன. இவ்வாறும் இதர யுக்திகளாலும் கப்பல் நஷ்டம் மிகவும் குறைக்கப்பட்டது; 1943ன் மத்தியிலிருந்து நேசதேசத்தார் சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு யூ-படகு வீதம் மூழ்கடிக்கலாயினர்.

ஆபத்துகள் முற்றிலும் நீங்கிவிடவில்லை; இன்னும் பல இருந்தன. ஜெர்மன் தொழில் நகரங்கள் மேல் விடாமல் கனத்த வெடிகுண்டுகள் வீசியுங்கூட நீர்மூழ்கிக் கப்பல் தயாரிப்புத் தொடர்ந்து அதிகரித்தே வந்தது; 1944-ல் 387 கப்பல்கள் என்ற உயர் வரம்பை எட்டிற்று. ஹிட்லரின் விஞ்ஞானிகள் 'ஷ்நோர்கல்' (Schnorkel) என்னும் புது மின்சார யூ-படகுக்கான முயற்சிகள் விறுவிறுப்புடன் செய்து கொண்டிருந்தார்கள்; அது மணிக்கு 17 'நாட்' (ஒரு 'நாட்' = 6080 அடி) செல்லக்கூடியது; அது நீரின் கீழ் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்க முடியும். அதிர்ஷ்ட வசமாக, போரின் இறுதிக் காலம் நெருங்கும் வரை அந்த முயற்சி பூர்ணமாகப் பக்குவப்படவில்லை. 1943-ன் நடுவேனிற் காலத்திற்குள் நேச தேசத்தார் அட்லாண்டிக் போரில் வென்று விட்டனர்;

ஐரோப்பா கண்டத்தில் பெருவாரியான எதிர்ப்பு நடவடிக்கைக்கு அவர்கள் தயாராஞர்கள்.

வட ஆப்பிரிக்காவும் இத்தாலியும்: ஜூன் 1942-ல் பசிஃபிக் கடற்படை ஜப்பானியரை மிட்வேயில் தோற்கடித்துக்கொண்டும், நேசக் கப்பல் கூட்டங்கள் ஆபத்தான அட்லாண்டிக்கில் எதிரியுடன் மல்லுக்கு நின்று மூன்னேறிக்கொண்டுமிருக்கையில் ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் ராணுவக் கூட்டு அதிகாரிகளுடன் வாஷிங்டனில் ஆலோசனைக்காக சந்தித்தார்கள்; ஹிட்லரின் வீழ்ச்சிக்கு என்ன வழி என்பது அவர்கள் முன் இருந்த பிரச்னை. 1942-ல் அல்லது குறைந்த பக்ஷம் 1943-ல் ஐரோப்பாவில் இன்னெரு போர்முனையை உண்டாக்கவேண்டும் என்பது அமெரிக்காவின் விருப்பம். பிரிட்டிஷார் தம் தீவை சத்துரு நுழைய முடியாமல் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள்; அதே சமயம், ஐரோப்பா என்னும் கல்கோட்டையை அரை குறைத் தயாரிப்புடன் தாக்கினால் பேராபத்து விளையும் என்றும் அவர்கள் கருதினர்கள். ஆகவே அவர்கள் ஆகாய ஆதிக்கம் முற்றிலும் கிடைக்கும் வரையிலும், தேவையான தளவாடங்கள் சேமிக்கப்படும் வரையிலும் இரண்டாம் போர்முனைப் பிரச்னையைக் கிளப்பாமலிருப்பது உசிதமென்று அபிப்பிராயப் பட்டார்கள். இவ்விரண்டு யோசனைகளையும் மதித்து நடுவழி செல்லும் நோக்குடன் வட ஆப்பிரிக்காவின் கடற்கரையில் ஒரு போர் முனை துவக்குதல் என்ற தீர்மானம் செய்யப்பட்டது.

என்ன விருந்தாலும் அது துணிகரமான முடிவே. அந்தப் பெரிய நடவடிக்கையை விவரமாய்த் திட்டமிட்டு நிறைவேற்ற நான்கு மாதங்கள்தான் இருந்தன; துருப்புக்களுக்கு இருதளப் போருக்கான பயிற்சி யளிக்கவேண்டும், தளவாடங்கள் சேமிக்கவேண்டும், நூற்றுக் கணக்கான கப்பல்கள் சம்பாதித்து, தக்க பாதுகாப்புடன் ஆபத்தான கடல்களில் அவற்றைச் செலுத்தவேண்டும், சுதந்திர ஃப்ரான்ஸோடும், விஷி (Vichy)யிலிருந்த ஃப்ரெஞ்சு அரசாங்கத்தோடும், ஃப்ராங்கோவின் ஸ்பானிய அரசாங்கத்தோடும் நாசூக்கான ராஜதந்திர விஷயங்கள் பேசியாக வேண்டும். இன்னெரு சிரமமான விஷயம் என்னவெனில், குறிப்பிட்ட சமயத்தில் குறிப்பிட்ட ஒரு காரியம் நடைபெறத் தவறினால் மொத்த முயற்சிக்கே பெரும் நஷ்டம் விளையும்; உதாரணமாக, இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பல துறைமுகங்களிலிருந்து புறப்படும் துருப்புக்களடங்கிய யுத்த தளவாடக் கப்பல்கள், பல ஆயிரம் மைல் ஆபத்தான கடல்களில் பிரயாணம் செய்து, ஒரே சமயத்தில் வந்து சேரவேண்டும்; அந்தச் சமயம் எகிப்தில் எட்டாம் சேனையை நடத்தும் ஜெனரல் அலெக்ஸாண்டரின் காரிய அட்டவணைக்கும் இணைந்திருக்க வேண்டும்.

ஆபத்துகள் பயங்கரமானவை என்றாலும் கிடைக்கக்கூடிய பரிசுகளும் கவர்ச்சியுள்ளவை. அந்தத் திட்டம் வெற்றியளித்தால், பல நன்மைகள் உண்டாகும்—ஸ்பெயின் அச்சு நாடுகளுடன் சேர்ந்து போரில் இறங்குவது தடைபடும்; தாய் நாட்டிலும் ஆஃப்ரிக்காவிலுமுள்ள சுதந்திர ஃப்ரெஞ்சுப் படைகள் ஒன்றுகூடும்; எங்கும் ஹிட்லரை எதிர்க்கும் கோஷ்டிகளுக்கு ஊக்கமும் ஆற்றலும் உண்டாகும்; மத்தியதரைக் கடலில் ஆதிக்கம் ஏற்படுவதால், அண்மைக் கிழக்கு நாடுகளுக்குப் போக்குவரத்து சுலபமாகும்; வட ஆஃப்ரிக்காவிலிருந்து அச்சு நாட்டுப் படைகள் வெளியேறும்; இத்தாலி மேலும், அதிக எதிர்ப்பு இல்லாத தென் ஐரோப்பிய நாடுகள் மேலும் படையெடுக்கத் ''தாவும் பலகை'' கிடைக்கும்.

'ஆபரேஷன் டார்ச்' என்ற சங்கேதப் பெயர்கொண்ட அந்த நடவடிக்கை ஜெனரல் ட்வைட் டி. ஐஸன்ஹோவரின் தலைமைக்கு ஒப்படைக்கப்பட்டது; அந்தச் சமயம் அவர் ஐரோப்பியக் களங்களில் அமெரிக்கச் சேனைகளுக்கு அதிபதியாக இருந்தார். ஆரம்ப உத்தரவு கிடைத்ததும் அந்த மிகச் சிக்கலான நடவடிக்கை, ஒரு அம்சத்தில் தவிர, முடுக்கி விடப்பட்ட வீசைபோல் ஓடிற்று—ஃப்ரெஞ்சு ஒத்துழைப்பு விஷயத்தில் தான் ஏமாற்றம் ஏற்பட்டது. நவம்பர் ஏழாம் தேதி நடுநிசிக்குள் மூன்று பெரிய நேசதேசக் கடற்படைகள் காஸாப்லாங்கா, ஓரான், ஆல்ஜியர்ஸ் ஆகிய துறைமுகங்களின் வாசலில் நின்றன; மறுநாள் காலை கப்பல்களும் விமானங்களும் கரையோரக் கொத்தளங்கள் மேல் குண்டு வீச, நேசத்துருப்புகள் கரையிறங்கின. சுதந்திரம் விரும்பும் ஃப்ரெஞ்சு மக்களிடமிருந்து சந்தோஷமான வரவேற்பு எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் பீரங்கியும் துப்பாக்கியுமே நல்வரவு கூறின. கிழக்கே, ஆல்ஜியர்ஸில் கரையிறக்கம் சுமாராகச் சுலபமாக இருந்தது; ஓரானில் விறுவிறுப்பான போர்புரிய வேண்டியிருந்தது; காஸாப்லாங்காவிலே, துறைமுகத்தைக் காத்துப் போராடிய ஃப்ரெஞ்சுக் கப்பல்களில் பெரும்பகுதியை அட்மிரல் ஹ்யுவிட் கடலடிக்கு அனுப்பிய பிறகே எதிர்ப்பு அடங்கிற்று. ராணுவ நிலையின் நல்லகாலம் எனும்படி, வட ஆஃப்ரிக்காவிலிருந்த உயர்தர விஷி அரசாங்க அதிகாரி, டார்லன், நவம்பர் 11-ஆம் தேதி தாக்குதலை நிறுத்தும்படி உத்தரவிட்டுத் தன் படைகளை நேசதேசத்தார் வசம் ஒப்புவித்தான். அதன் பிறகு தளகர்த்தர் ஹென்ரி கிராடைத் (Giraud) தலைவர் ஆக்கும் யோசனை கிளம்பிற்று; ஆனால் அது சரிப்பட்டு வரவில்லை; கடைசியில் சார்ல்ஸ் டி கோல் (Gaulle) என்னும் வீரர், ஹிட்லரை எதிர்த்து முதல் கொடி தாங்கியவர், வட ஃப்ரெஞ்சு ஆஃப்ரிக்காவின் தற்கால அரசாங்கத்தின் தலைவர் என்றும்

சுதந்திர ஃப்ரெஞ்சுக் கட்சியினர் எங்கிருந்தாலும் அவர்களுடைய பிரதிநிதி என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டார்.

படையெடுப்பு ஜெர்மனியருக்குத் திகைப்பளித்தது; ஆனால் அவர்கள் வேகமாகவும் காரியசித்தியோடும் பதில் நடவடிக்கை ஆரம்பித்தார்கள். அவர்கள் தாமதமின்றி விஷி ஃப்ரான்ஸ் முழுதையும் வசப்படுத்திக்கொண்டனர்; ஆனால் டூலான் துறைமுகத்திலிருந்த ஃப்ரெஞ்சுக் கப்பல்களை ஃப்ரெஞ்சு அதிகாரிகள் சேதப்படுத்தி மூழ்கடித்ததால் ஜெர்மானியருக்குப் பெரும் ஏமாற்றம் உண்டாயிற்று. ஜெர்மானியர் ட்யூனீசியாவுக்கு 20,000 துருப்புக்கள் ஆகாயமார்க்கமாக அனுப்பி, ட்யூனிஸ், பிஸெர்டே ஆகிய பெரிய துறைமுகப் பட்டணங்களைப் பிடித்துக்கொண்டு உள் நாட்டில் விமான தளங்கள் அமைத்து நேசதேசத்தாரின் முன்னேற்றத்தை நிறுத்தத் தயாராயினர்; பாலைவன மணல் அவ்வளவு மலிவல்ல, சுலபமாய்க் கிடைப்பதல்ல.

அதன் பிறகு ட்யூனீசியாவை நோக்கிப் பந்தய ஓட்டம் ஆரம்பமாயிற்று. ஏற்கெனவே பிரிட்டிஷ் எட்டாம் சேனையை எகிப்திலிருந்து ட்யூனிஸ் பட்டணத்திற்கும், அப்பாலும் நடத்திச் செல்லும், பிரசித்திபெற்ற நடவடிக்கையை மாண்ட்கோமெரி ஆரம்பித்து விட்டார். எல் அலாமீன் என்னுமிடத்தில் (அக்டோபர் 23-நவம்பர் 3, 1942) மிக முக்கியமான சண்டைகள் நடந்தன; நாஜி சேனாதிபதி ரோமெலின் கீழிருந்த ஜெர்மன் இத்தாலியக் கலப்புப் படையை மாண்ட்கோமெரி முறியடித்து எஞ்சிய துருப்புக்களை மேற்கே விரட்டிச் சென்றார். அதே சமயம் ஆல்ஜியர்ஸிலிருந்து கிழக்கே ட்யூனிஸை நோக்கிக் கரடு முரடான தேசத்தில் ஐஸன்ஹோவர் 500 மைல் முன்னேறினர். நவம்பர் கடைசிக்குள் அவர் மாட்யூர் என்னுமிடம் அடைந்தார்; அங்கிருந்து ட்யூனிஸ் 55 மைல்தான். ஆனால் அவர் அகலக்கால் வைத்துவிட்டார். போக்கு வரத்து வசதிகள் போதிய அளவு இல்லை; வான நிலை பிரதிகூலமாயிற்று. நல்ல விமான நிலையங்களெல்லாம் ஜெர்மனியர் வசமிருந்தன. அச்சுநாட்டுப் படைகள் தம் ஸ்தலங்களில் நிலைத்திருந்தன; அதன் பிறகு, 1943 பிப்ரவரியில் கெஸ்ஸரைன் கணவாயில் அவை எதிர்த் தாக்குதல் நடத்தி அமெரிக்கத் துருப்புகளைக் குழப்பிப் பின்னல் தள்ளி நேச சேனையைத் துண்டாக்கும் தருவாயிலிருந்தன. அச்சமயம் நேச உதவிப் படைகள் துரிதமாய் வந்து சேர்ந்தன; பலத்த விமானப் படையும் வந்து உதவி புரிந்தது; நேசப்படைகள் மறுபடி கூடி செயலாற்றத் தொடங்கின.

இதற்கிடையே, ட்யூனீசியா மாகாணத்தில் அமைந்திருந்த மாரெத் லைன் (Mareth Line) என்னும் பலமான தற்

காப்புஸ்தலத்தில் ரோமெல் போருக்காகக் காலூன்றி நின்றார்; மாண்ட்கோமெரி மிகவும் பாராட்டத் தக்க முறையில் அவரை முன்னும் பின்னும் தாக்கி, கொத்தளங்களிலிருந்து வெளியேற்றி கேப்ஸ் வளைகுடா ஓரமாக ஸ்ஃபாக்ஸ் என்னுமிடத்திற்குத் திணறியோடும்படி செய்தார். அதே சமயம், அமெரிக்க, பிரிட்டிஷ், ஃப்ரெஞ்சுப் படைகள் அங்கு வந்து பாய்ந்தன. மே 7-ஆம் தேதி ட்யூனிஸ், பிஸெர்டே, இரு துறைமுகப் பட்டணங்களும் வீழ்ந்தன; ஆறு நாட்கள் கழித்து, திக் பிரமை பிடித்த கால் மில்லியன் ஜெர்மன் இத்தாலியச் சிப்பாய்கள் கேப் பான் (நல்லமூனை) என்னுமிடத்தில் சரணடைந்தார்கள். வட ஆஃப்ரிக்கா பூர்ணமாய் வசமாக்கப்பட்டது; ஐரோப்பா செல்லும் பாதை தடங்கலற்றிருந்தது.

இந்த நடவடிக்கையின் மங்களகரமான முடிவு நேசதேச நாயகர்கள் எதிர்பார்த்ததே. வெற்றியை நன்கு பயன்படுத்திக்கொள்ள அவர்கள் ஏற்பாடு செய்தாகிவிட்டது. 1943 ஜனவரியில் ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் அவர்களுடைய பிரதானிகளும் காஸாப்லாங்காவில் சந்தித்துப் பல முக்கியமான திட்டங்கள் வகுத்தார்கள். போர் துவங்கியதிலிருந்து முதல் முறையாக அப்பொழுதுதான் நல்லகாலம் தென்பட்டது.

மகா படையெடுப்பு : 1943-ல் நேசதேச யுத்த அதிபர்கள் பலமுறை சந்தித்து மந்திராலோசனை நடத்தி, பிற்கால யுத்தத்தின் பொது யுக்திகளையும், முக்கியமாக ஐரோப்பியப் படையெடுப்பைப்பற்றிய விவரங்களையும் தீர்மானித்திருந்தார்கள். அயல்நாட்டு மந்திரிகள் மாஸ்கோவில் கூடியதில், ரஷ்யா முதல் கடவையாக பொது ஆலோசனை க்ஷேத்திரத்தில் வெற்றிகரமாகக் கொண்டு வரப்பட்டது. அந்த மந்திரி மண்டலி ஐரோப்பிய ஆலோசகர் குழு என்ற ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி, அதன் தலைமைக் காரியாலயம் லண்டனில் இருப்பதாகத் தீர்மானித்தது; சர்வதேச க்ஷேத்திரத்தில் கூட்டு நடவடிக்கைக்கான சிபார்சுகளும் திட்டங்களும் செய்வது அதன் கடமையாகும். மேலும், போருக்குப் பிறகு அமைதி நீடித்திருப்பதற்காக ஒரு சர்வதேச சங்கம் அமைப்பதாகவும் அந்த அமைச்சர் குழு விளம்பரம் செய்தது. ஆலோசனைக் கூட்டங்களில் மிக முக்கியமானவை வருஷக்கடைசியில் டெஹெரன் (பாரசீகம்), கெய்ரோ (எகிப்து) ஆகிய இடங்களில் நடந்தன. டெஹெரன் சபையில் சர்ச்சிலும் ஸ்டாலினும் பிரதான யுத்த தந்திரங்களைப்பற்றி ஆலோசித்து, மறுவருஷம் ரஷ்யப் படைகளும் ஆங்கில அமெரிக்கப் படைகளும் ஒரே லட்சியம் கொண்ட பெரிய நடவடிக்கைகள் திட்டப்படித் தொடர்ந்து நிகழ்த்தவேண்டும் என்று தீர்மானித்தனர். சபையில் பங்கெடுத்த கெய்ரோ

போரைப்பற்றியும் தூரக்கிழக்குப் பிரச்னைகளின் முடிவைப் பற்றியும் யோசனைகள் நடந்தன.

ஆக, "ஆபரேஷன் ஓவர்லார்ட்" என்ற சங்கேதப் பெயர் கொண்ட நார்மண்டிப் படையெடுப்பு மொத்தமாகவும் விவரமாகவும் ஒரு வருஷத்திற்கு முன்னிருந்தே நிச்சயிக்கப்பட்டு வந்தது. ஆள் பலமும் பொருள் பலமும் ஐக்கிய நாட்டிலிருந்து மிக அதிக விகிதத்தில் கிடைக்குமாதலால், ஒரு அமெரிக்கச் சேனாதிபதியே சர்வ அதிபதியாக இருக்கவேண்டும் என்பது ஒரு தீர்மானம். ஐஸன்ஹோவர் அப்பதவிக்கு நியாயமாகவே தகுதியுள்ளவர். ஆஃப்ரிக்கா, சிசிலி, இத்தாலி ஆகிய இடங்களில் சிறப்பான வெற்றியடைந்தவர், மேலும் நேசதேசங்கள் அனைத்திலும் ராணுவத் தலைவர்களும் சிவில் தலைவர்களும் அவரிடம் நட்புக் கொண்டு அவரை கௌரவித்தார்கள். ஜனவரி மாதத்தில் ஐஸன்ஹோவர் தம் தலைமைக் காரியாலயத்தை லண்டனுக்கு மாற்றிக்கொண்டு படையெடுப்புக்கான விவரங்கள் தயாரிக்க ஆரம்பித்தார்.

அவர் செய்யவேண்டிய வேலை மிகமிகக் கஷ்டமானது; எந்த ஒரு தனி நாட்டிற்கோ, நாடுகளின் சேர்க்கைக்கோ இது போன்ற அனுபவம் ஏற்பட்டதில்லை. 1940, 1941-லேயே ஹிட்லர் இங்கிலீஷ் சானல் (Channel) என்னும் கடல் பகுதியைக் கடந்து இங்கிலாந்தைக் கைப்பற்ற முடியவில்லை; அக்காலத்தில் அவனுடைய ஆள்பலமும் விமான பலமும் அபரிமிதமாக இருந்தன; பிரிட்டிஷ் தற்காப்பு அரண்கள் பெயரளவுக்கே இருந்தன. அக்கடலை நேசதேசப் படைகள் இப்பொழுது கடக்க வேண்டும். ஃப்ரெஞ்சு கடற்கரையோர அரண்களை மிகவும் பலப்படுத்திக்கொள்ள ஹிட்லருக்கு நான்குவருஷ அவகாசமிருந்தது. அந்த அரண்களை நேசதேசத்தார் தகர்த்துக்கொண்டு, சத்துருப் பிரதேசத்தில் கரையிறங்கி பெருஞ் சேனையைப் பரிபாலித்து, விருத்திசெய்து, ஏராளமான தரைப் பலமும் கடற் பலமும், வரம்பற்றதுபோன்ற தளவாடங்களும் இதரப் பொருள்களும் தொடர்ந்து கிடைத்துக்கொண்டே இருக்கவேண்டும்.

இன்னொரு முக்கியமான வசதியும் வேண்டும்—ஆகாயத்தில் ஆதிக்கம். சானல் பிரதேசத்தில் மட்டுமல்ல, ஃப்ரெஞ்சுக் கடற்கரையோரத்தில் மாத்திரமல்ல, கிழக்கே பெர்லின், வியன்னை வரை ஐரோப்பா வெல்லாம் சஞ்சரிக்க ஆகாயப் படைப்பலம் வேண்டும். வெற்றியில் சிறிதளவு நம்பிக்கையேனும் வைத்துப் படையெடுப்புக் காரியத்தில் இறங்குமுன் நேசதேசத்தார் ஜெர்மன் தொழிற்சாலைகளை நொறுக்கித் தள்ளுவதும், ஜெர்மன் போக்குவரத்துச் சாதனங்களை உடைத்துத் தகர்ப்பதும், ஜெர்மன் விமானங்களைப் பறக்கவிடாமல் தரையில் நிறுத்துவதும் அவசியம். 1943-லும் 1944-ன் ஆரம்ப மாதங்

களிலும் இதுவே அவர்களுடைய முக்கியக் கவலையாகவும் முக்கிய ராணுவ சாதனையாகவும் இருந்தது. பிரிட்டிஷார் பெருவாரியாக ஒரு வீடு பாக்கியில்லாமல் அழிக்கும் முறையையும், அமெரிக்கர் குறிப்பிட்ட இலக்கை அழிக்கும் முறையையும், மேகங்களின் ஊடே குண்டு வீசும் முறையையும் கற்று அனுசரித்தனர். பகல் தவறாமல் அமெரிக்கப் பறக்கும் கோட்டைகளும், இரவு தவறாமல் இதர விமானங்களும் ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ஜெர்மன் ஆதிக்கத்திலுள்ள ஃப்ரான்ஸ் ஆகிய தேசங்களின் மேல்பறந்து பெரிய நகரங்களைத் தூளாக்கி, தொழிற்சாலைகள், ரயில் பாதைகள், படகு வாய்க்கால்கள், யூ-படகுத் துறைகள், இன்னும் பல பல இலக்குகளை அழித்துப் போர்ப் பணியாற்றின. ஜெர்மனியின் ஒவ்வொரு பெரிய நகரமும் ஓரளவேனும் பாழாக்கப்பட்டது எனலாம். போர் முடிவதற்குள் ஹாம்பர்க், ப்ரெமென், கொலோன், ஃப்ர்ராங்ஃபர்ட், எஸ்ஸென் போன்ற பல நகரங்கள் அநேகமாய் நிர்மூலமாக்கப்பட்டன.

போரின் முதல் இரண்டு ஆண்டுகளில் பிரிட்டன்மேல் ஜெர்மனி நடத்திய குண்டு வீச்சை அறிந்த மக்கள் திகைத்தனர்; ஆனால் ஜெர்மனி பெற்ற தண்டனையுடன் ஒப்பிட்டால் அது குள்ளனும் அரக்கனும் போலாகும். 1940-ல் இங்கிலாந்திலுள்ள காவென்ட்ரி (Coventry) மேல் ஜெர்மன் விமானங்கள் நடத்திய பெரிய தாக்குதலில் 200 டன் வெடிகுண்டுகள் போடப்பட்டன; அதை அளவு கோலாகக் கொண்டால், பெர்லின் 363 காவென்ட்ரி-களுக்கும், கொலோன் 269-க்கும் ஹாம்பர்க் 200-க்கும் சமம் எனலாம்.

இந்தச் சாதனை மிகப் பெரியதுதான்; ஆனால் ஆகாயத்திலிருந்தே ஜெர்மனி முறியடிக்கப்பட்டது என்றோ விமான சக்தி மாத்திரமே போரை வென்றிருக்க முடியும் என்றோ நினைத்திருந்தால் அது தவறாகும். முன் எந்த வருஷத்தைக் காட்டிலும் ஜெர்மன் ராணுவப் பொருள் உற்பத்தி 1944-ல் அதிகமாக இருந்தது; அந்த வருஷம் விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், வெடிப் பொருள்கள் அனைத்தும் அதிகமாகத் தயாரிக்கப்பட்டன. ஆனால் இரண்டு அம்சங்களில் ஆகாயப் போர் நிச்சயமான பலன்கள் அளித்தது—மண் எண்ணெயும் விமானப் பெட்ரோலும் அழிக்கப்பட்டதாலும் ருமேனியாவின் எண்ணெய்க் கிணறுகள் கைப்பற்றப்பட்டதாலும், ஜெர்மன் விமானங்கள் பல தரையிலேயே தங்கவேண்டி வந்தது; வட ஃப்ரான்ஸிலும் மேற்கு ஜெர்மனியிலும் போக்குவரத்துச் சாதனங்கள் தகர்க்கப்பட்டதால் படையெடுப்புச் சமயத்தில் இருக்கக்கூடிய எதிரிகளின் துருப்பு நடமாட்டம் அநேகமாகச் சூன்ய நிலையடைந்தது. ஆகவே 1944-ன் வசந்த காலத்திற்குள் படையெடுப்புக்கான திட்டங்கள் விவரமாகப் பூர்த்தியாயின. சந்தேகமான

வான நிலைக்கு மாத்திரம் சற்று இடம் விட்டு ஜூன் 5-ஆம் தேதியை டி (D) நாள்—படையெடுப்பு முகூர்த்தம் என்பதற்கு சங்கேதப் பெயர்-என்று தேதியை நிச்சயித்திருந்தார்கள். கரையிறக்கத்திற்கு நார்மண்டியைத் தேர்ந்தெடுத்ததற்கு தொலைவு, கடலின் ஏற்றம் இறக்கம், நில அமைப்பு, கரையோர அரண்கள் முதலியன காரணங்கள்; கிழக்குப்பகுதியில் பிரிட்டிஷ் படைகளும் மேற்குப் பக்கத்தில் அமெரிக்கரும் இறங்குவதாக ஏற்பாடு. முப்படையிலும் நேசத் துருப்புக்களின் மொத்தம் சுமார் மூன்று மிலியன் பேர். 4000 போர்க்கப்பல்கள் கொண்ட ஒரு கூட்டமும், பல ரகமான படகுகள் எண்ணற்றவையும் துருப்புக்களைக் கடத்தவும், மேலும் மேலாகச் சேரும் பொருள்களைக் கடத்திச் செல்லவும் தயாராயிருந்தன. ஜெர்மன் விமானங்களைத் தலையிலிருந்து கிளம்பாமல் தடுத்து, கரையிறங்கும் துருப்புக்களுக்குக் "குடை பிடிக்க" 11,000 நேச விமானங்கள் தயாராயிருந்தன. புதுவகை ஆயுதங்கள், கரையிறக்கத்திற்கான விசேஷப் படகுகள், செயற்கைத் துறைகள், கரைசேருதலை வெற்றிகரமாக்கும் இன்னும் பற்பல சாதனங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

சீதோஷ்ண நிலை பிரதிகூலமாகி முழுத் திட்டத்தையும் கவிழ்த்து விடுமோ என்ற பயம் தோன்றிற்று; ஆனால் ஜனரல் ஹோவர் அதிர்ஷ்டத்தை நம்பித் துணிந்து, 'ஐந்தாம் தேதியே புறப்பாடு' என்று உத்தரவிட்டார். அன்றிரவு பெல்ஜியத்திலிருந்து பிரிட்டனி மாகாணம் வரை வடஃப்ரான்ஸை நேச விமானங்கள் புடைத்தன; ஒரு போலிக் கப்பல் படை ஜெர்மனியை ஏமாற்றுவதற்காக பாஸ் டி கலே என்னும் இடத்தை நோக்கிப் புறப்பட்டது; மூன்று டிவிஷன்கள் விமானமேறிச் சென்று நார்மண்டிக் கரையில் ஜெர்மன் அரண்களின் பின்புறம் பாரஷூட் மூலம் தரையிறங்கின. ஜூன் 6-ஆம் தேதி அதிகாலையில் படையெடுப்பு கப்பற்படை ஃப்ரெஞ்சுக் கரையை அணுகவே ஜலமட்டத்திற்கடியிலிருந்த பல பயங்கரத் தடங்கல்களைச் சமாளித்துக்கொண்டு துருப்புக்கள் ஈசல் புற்றுகள் போல் கரை சேர்ந்தனர்.

பாஸ் டி கலே பிரதேசத்தில் பெரிய தாக்குதல் எதிர் பார்த்த ஜெர்மானியர் அதிர்ச்சியடைந்தனர். நார்மண்டி நடவடிக்கையைப் போலி நடவடிக்கை என்று சிறிது காலம் வரை தவறாக நினைத்த அவர்கள் உண்மை தெரிந்ததும் சிக்கிரமே எதிர்ப்புக் காரியங்களை ஆரம்பித்தார்கள். ஆனால் ஆகாயத்தில் நேச தேசக் கை ஓங்கியிருந்ததால் ஜெர்மன் விமானங்கள் தலையிட முடியவில்லை; மேலும் பாரிஸ் வரை ரயில் பாதைகளும் பாலங்களும் தகர்க்கப்பட்டு இருந்ததால் ஜெர்மன் தளகர்த்தன் வான் ரூன்ஸ்டெட (Von Runstedt) நேச தேசக் கரையோர அரண் அமைப்பைத் தடுக்க உதவிப் படைகளைத் துரிதமாக

அனுப்பமுடியவில்லை. கரையிறக்க தினமே நேசதேசத்தார் அட்லாண்டிக் மதிலைத் தகர்த்துக் கொண்டு, மொத்தம் 1,20,000 பேரைப் பத்திரமாய்க் கரையிறக்கி, பாரஷூட் மூலம் இறங்கிய வீரத்துருப்புக்களுடன் சேர்ந்து கொள்வதற்காக உள்நாட்டை நோக்கி முன்னேறினர். ஒரு வாரத்திற்குள் மூன்று லக்ஷம் ஆட்களுக்கும் ஒரு லக்ஷம் டன் சப்ளைகளுக்கும் அதிகமாக ஃப்ரான்ஸில் வந்து சேர்ந்தன; கரையோரத்தில் 70 மைல் நீளமும் ஐந்து முதல் 15 மைல் வரை அகலமுமுள்ள பிரதேசம் நேசதேசத்தாரின் ஆதிக்கத்தில் இருந்தது. அந்நிலையில் அமெரிக்கர் மேற்கே வேகமாய் முன்னேறி, கோடென்டின் தீபகற்பத்தை ஊடுருவி, ஜூன் 26-க்குள் ஷேர்பூர் (Cherbourg) என்னும் பெரிய துறைமுகப் பட்டணத்தைக் கைப்பற்றினர்.

அந்த மாதத்தில் நேசதேசத்தார் நார்மண்டிப் போரில் ஜயித்தனர். கிழக்கே பிரிட்டிஷ் துருப்புக்கள் முக்கியத்துவமுள்ள கேயென் என்னும் பட்டணத்தைப் பிடித்தனர்; மேற்கே அமெரிக்கர் தென்னூட்டின் வாசல் போன்ற லெயின்ட்-லோவைப் பிடித்தனர். மாத முடிவுக்குள் ஒரு மில்லியன் நேசத்துருப்புக்கள் ஃப்ரான்ஸில் இருந்தனர்; பெரிய செயற்கைத் துறைமுகங்கள் நிர்மாணித்ததால் சப்ளைப் பிரச்னைப் பெரும்பாலும் தீர்ந்தது; ராணுவ மோட்டார் டிவிஷன்கள் அமைந்திருக்கும் முகாம்களுக்கு எண்ணெய் வகைகள் குழாய்கள் மூலம் அனுப்பப்பட்டன. ஆகவே, எண்ணிக்கையில் சத்துருவை மீறி விட்டதாலும், வாயு மண்டலத்தில் சந்தேகமற்ற ஆதிக்கம் கிடைத்து விட்டதாலும்; ஆங்கில-அமெரிக்கர் ஜெர்மன் அரண்களைத் தகர்த்து முன்னேறி வட பிரான்ஸ் முழுதிலும் விசிறிபோல் பரவலாக வியாபிக்கத் தயாராயினர்.

ஜூலை 25-ஆம் தேதி, நார்மண்டிப் போர் முடிவடைந்து ஃப்ரான்ஸுக்கான போர் துவங்கிற்று. தடுப்பதற்கற்ற ஆவேசத்துடன் ஜனரல் பாட்டனின் (Patton) மூன்றும் சேனை எதிரி அரண்சேனை ஊடுருவிப் பாய்ந்து ஜெர்மன் எதிர்த்தாக்குதலையும் தூள் தூள் ஆக்கிற்று. அதன் பிறகு, அடிபட்டுச் சிதறிய ஜெர்மன் சேனை ஸீக்ஃப்ரீட் அரண் (Siegfried Line) நோக்கித் தலைகால் தெரியாமல் ஓடுகையில் அமெரிக்கச் சேனையின் ஒரு பிரிவு, பிரிட்டானி மாகாணத்தில் ஒரு சில துறைமுகப் பட்டணங்கள் தவிரப் பாக்கி இடமெல்லாம் தனதாக்கிக் கொண்டது; இன்னொரு பிரிவு லவ்வார் (Loire) நதியோரமாகக் கிழக்குப் புறமாய் பாரிஸ் நகர் நோக்கிச் சென்றது; அதே சமயம் பிரிட்டிஷ், கனடியப் படைகள் வடக்குக் கரையோரமாக பெல்ஜியத்திற்கும் ஹாலந்துக்கும் வேகமாய்ச்

சென்றன. ஆகஸ்டு 23-ஆம் தேதி பாரிஸ் விடுவிக்கப்பட்டது; சில நாட்கள் கழித்துப் பிரிட்டிஷார் ப்ருஸ்ஸல்ஸ் நகரையும் பெரிய துறைமுகப்பட்டணமாகிய ஆன்ட்வெர்ப்பையும் பிடித்தனர்; செப்டம்பர் 11-ஆம் தேதிக்குள் லக்ஸான்பர்க்கை விடுவித்து, அமெரிக்கச் சேனை ஆஃகென் என்னு மிடத்தில் ஜெர்மன் எல்லைக்குள் புகுந்து விட்டது. இதற்கிடையே, இன்னொரு படையெடுப்புச் சேனை ஃப்ரான்ஸின் தெற்குக் கரையில் இறங்கி வலுவற்ற ஜெர்மன் எதிர்ப்பை அடக்கி, ''சுதந்திர ஃப்ரெஞ்சு'' மக்களின் உதவியுடன் பெரிய துறைமுகப்பட்டணங்களாகிய டூலான், மார்ஸேல்ஸ் இரண்டையும் வசப்படுத்தி, ரோன் நதியோரமாக ஸ்விட்ஸெர்லந்து எல்லையை நோக்கி வடக்கே பாய்ந்தது. செப்டம்பர் பாதிக்குள் ஃப்ரான்ஸ் முழுதும் சத்துரு வசமிருந்து மீட்கப்பட்டது. யுத்த சரித்திரத்திலேயே மிகச்சிறந்த வெற்றிகளுள் ஒன்று அது.

கோடை காலத்திலும் தொடர்ந்த சில மாதங்களிலும் எல்லாப் போர் முனைகளிலும் ஜெர்மானியர் பின்வாங்கினர். மேற்குப்புற நேசப் படைகளுக்கு இணையாகவே தானும் தாக்குதல் நடத்துவதாக ஸ்டாலின் வாக்களித்திருந்தார்; அமெரிக்கர் தடைகளை இடித்துத் தள்ளி ஷேர்பூரை அணுகிக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் 1000 மைல் அகலமான போர்முனையில் அவர் குவியலான எதிர்ப்பை ஆரம்பித்தார். வடக்கே தொலைவில் ஃபின்லந்து படையெடுக்கப்பட்டுப் போரிலிருந்து நீக்கப்பட்டது; மத்திய அரங்கில் உக்ரேனிலும் போலந்திலும் இன்னல்களைத் தூளாக்கிக் கொண்டு வார்ஸா நகர் வாயில் வரை ரஷ்யர்கள் பாய்ந்தார்கள்; தெற்கே ருமேனியா மேல் வெள்ளப் பெருக்குப் போல் புரண்டு சென்று யூகோஸ்லாவியாவிலும் ஹங்கேரியிலும் அவர்கள் பிரவேசித்தார்கள். இத்தாலியிலும் ஜெர்மானியர் திணறிக்கொண்டிருந்தார்கள். ரோம் நகர வீழ்ச்சிக்குப் பிறகு நகரம் நகரமாக விழுங்கிக் கொண்டு நேசச் சேனைகள் லொம்பார்டியை நோக்கி வடக்கே சென்றன; செப்டம்பருக்குள் அவை காவியப் பிரசித்தி பெற்ற போ (Po) நதிப் பள்ளத் தாக்கை அடைந்தன. பசிஃபிக் சமுத்திரத்தில் மாக் ஆர்தர் ஃபிலிப்பைன் தீவுகளில் மறுபடி வந்து சேர்ந்தார்; ஜப்பானியர் முன் என்றும் அனுபவித்திராத பெருந்தோல்வியை அடைந்தனர். வட ஆஃப்ரிக்க வெற்றிகளை முதல் அத்தியாயத்தின் முடிவு என்றால் இந்த வெற்றித் தொடரை கடைசி அத்தியாயத்தின் ஆரம்பமெனக் கூறலாம்.

ஐரோப்பாவில் வெற்றி: 1944 செப்டம்பருக்குள் நேசச் சேனைகள் அதிக வேகமாகவும் அதிக விஸ்தாரமாகவும் சென்றுவிட்டதால் சப்ளை ஏற்பாடுகள் பின்தங்கிவிடும் என்ற பயம் உண்டாயிற்று. ஆகவே, கிடைத்த லாபத்தை வலுப்

படுத்தவும், தம் சக்திகளை ஒழுங்குபடுத்தவும், இறக்கு மதியை சுதாரித்துப் பண்டங்கள் சேகரிக்கவும், விமான நிலையங்கள், சாலைகள், பாலங்கள் முதலியன மராமத்து செய்யவும், புதிதாய்க் கட்டவும், ரைன் நதியைத் தாண்டி ஜெர்மனியில் பிரவேசிக்கும் நடவடிக்கைக்குத் தயாரித்துக் கொள்ளவும் அவகாசம் வேண்டியிருந்தது. வருங்காலப் போரே மிகக் கடுமையான அனுபவம் என்பது எதிர்பார்க்கப்பட்டு நிரூபணமும் பெற்றது. ஜெர்மானியர் தம் நாட்டை வீர ஆவேசத்துடன் ரக்ஷிக்க முயன்றார்கள். மிகவும் பலமான ஸீக்ஃப்ரீட் அரண் ஹாலந்திலிருந்து ஸ்விஸ் எல்லை வரை நீண்டிருந்தது; அதற்கப்பால் விசாலமான ரைன் நதியிருந்தது. நேசசேனைத் தார் அவ்வரணைத் தரைப்போர் முறையில் தாக்கிக் கொண்டிராமல் விமானம் மூலம் கடந்து ஹாலந்தில் ஆர்ன்ஹெம், நீமெகென் என்னும் இடங்களில் பாரஷூட் மூலம் பெருவாரித் தரையிறக்கம் நடத்த ஏற்பாடாயிற்று; ஆனால் அது மயிரிழைத் தவறால் தோல்வியளித்தது; சத்துரு சேனைகள் மந்தகதியில் நான் இழுக்க, நீ யிழுக்க என்று காலத்தைக் கழிக்க வேண்டி வந்தது. அவ்வாண்டு— 1944— இலையுதிர் காலத்தில் பெல்ஜியம் லக்ஸன்பர்க், ஆல்ஸேஸ், லொரேய்ன் ஆகிய இடங்களிலுள்ள மலைகளிலும் காடுகளிலும் நடந்த சண்டைகள் எண்பது வருஷங்களுக்கு முன் வர்ஜீனிய வனந்தரங்களில் நடந்த சண்டைகளை அமெரிக்கருக்கு நினைவூட்டின; மிகவும் கடுமையான போர்கள், அமெரிக்க அனுபவத்திலேயே மிக முரட்டுத்தனமானவை, பொருள் நஷ்டமும் ஆள் நஷ்டமும் அதிகமாக உண்டாக்கியவை, தொடர்ந்து நடந்தன—நேசக் கப்பல்களுக்கு ஆன்ட்வெர்ப்பில் இடமளித்த ஷெல்ட் நதி முகத்துவாரப் போர் (பிரிட்டிஷாரும் கனடியரும் அதில் அதிகமாக ஈடுபட்டிருந்தனர்); அடுத்த பிப்ரவரி மாதம் வரை வெற்றியளிக்காத ஹீர்ட்கென் வனத்துக் காட்டுமிராண்டிப் போர் (ஆஃகென் பட்டணத்தையும் ரெர் நதியின் அணைகளையும் பற்றுவதற்கான நடவடிக்கை அது); ஸார் பிரதேசத்திற்காகவும் பெரிய கோட்டையுள்ள மெட்ஸ் நகருக்காகவும் நடந்த போர்; ஸ்ட்ராஸ்பர்க், ஆல்ஸேஸ் ஆகிய இடங்களுக்காக மூண்ட போர். டிசம்பர் பாதிக்குள் ஐஸன்ஹொவரின் சேனைகள் இவற்றுள் அநேகமாய் எல்லாம் ஜெயித்து ரைன் நதிப்பக்கம் பாயத் தயாராய் நின்றன.

அதன் பிறகு ஏற்பட்ட ஒரு தடை சிறிது காலம் மிகவும் கவலையளித்தது. தன் உயிரிய தளகர்த்தர்களின் ஆலோசனைக்கு முரணாக, ஹிட்லர் நம்பிக்கை முற்றும் இழந்தவனாய், தன் எஞ்சிய சக்திகளனைத்தும் பாய்ச்சிகையாகத் திரட்டி மேற்கு நோக்கி உருட்டினான். நேசப் படைகளைப் பிளந்துகொண்டு தன் யுத்த சக்தியை சானல் கரை வரையும், முடியுமானால் பாரிஸ் நகருக்

குக் கூட, கொண்டு செல்லுதல் என்பது அவன் திட்டம். டிசம்பர் 15-ஆம் தேதி, ஆர்டேன்ஸ் பனி மலைகளில், 50 மைல் பரவிய போர் முனையில் அம்முயற்சி ஆரம்பமாகி, ஆரம்பத்தில் திடுக்கிடும்படி வெற்றியும் அடைந்தது. ஆழமற்றிருந்த அமெரிக்கப் பாதுகாப்பு வியூகங்களை ஜெர்மானியர் பத்தே நாளில் கடந்து, பாஸ்டோன் ராணுவ முகாமைச் சூழ்ந்து, ம்யூஸ் (Meuse) நதிப்பக்கமாக 50 மைல் வேகமாய் முன்னேறினர். முழு முறிவு ஏற்பட்டு விடுமோ என்ற திகில் ஒரு சமயம் வலுத்திருந்தது. ஆனால் அமெரிக்கர் வேகமாக நிலைமையைச் சுதாரித்தனர். சிதறிய வியூகங்களின் இரு புறங்களிலும் இருந்த படைகள் திடமாய் நின்றன; பாஸ்டோனில் முற்றுகையிடப்பட்ட படை, விமானம் மூலம் இறக்கப்பட்ட உதவித் துருப்புக்களுடன் சேர்ந்துகொண்டு வெகு தீர்மானமாக முற்றுகையை எதிர்த்ததால், ஜெர்மன் காரிய அட்டவணை முழுதும் தவறிப்போயிற்று; பாஸ்டோன் வீரர்கள் பெரும் புகழ் சம்பாதித்துக் கொண்டார்கள். ஜெர்மன் முன்னேற்றம் முதலில் நடை பட்டது; பிறகு அது முறிக்கப்பட்டுப் பின் தள்ளப்பட்டது. ஜனவரி மத்திக்குள் ஜெர்மானியர் தாம் அடைந்த லாபமெல்லாம் இழந்ததோடு, துர்யோசனையான சூதாட்டத்தில் 1,20,000 ஆட்களையும் நூற்றுக்கணக்கான டாங்குகளையும் விமானங்களையும் பறிகொடுத்தனர்.

அதன்பிறகு, ரஷ்யர்கள் பெரும் பனிக்காலத் தாக்குதலை—தங்களை வெற்றியுடன் வியன்னாவிலும், பெர்லினிலும் கொண்டு சேர்க்க இருக்கும் நடவடிக்கையை - ஆரம்பிக்கும் அந்தச் சமயத்தில் மேற்கு நேசப்படைகள் ரைன் நதியை வேகமாய்க் கடந்து ஹிட்லரை அழுத்தி அணைக்கத் தயாராயின. ஜெர்மானியர் தம் பின்னால் பாலங்களை வெடிகுண்டுக்கு இரையாக்கிக் கொண்டே ரைன் நதியைக் கடந்து சென்றனர்; ஆனால் காவலாளர்களின் கவனக் குறைவால் ஒரு பாலம் சேதப்படாமல் இருந்தது; ஒரு அமெரிக்க படைப்பகுதி அதை யறிந்து அப்பாலத்தைக் கைப்பற்றியது. சில நாட்களுக்குள் ஐந்து அமெரிக்க டிவிஷன்கள் ஆற்றைக் கடந்து வடக்கேயும் தெற்கேயுமாக விசிறிபோல் விரிந்தன. இரண்டு வாரங்கள் கழித்து, யுத்தத்தின் மிகப்பெரிய விமானக் குண்டு வீச்சு ஜெர்மானியருக்கு நிர்பிரமை யுண்டாக்கிக் கொண்டிருக்கையில், நேசத்துருப்புக்கள் ரைன் நதியைத்தாவி சீலிவ் பட்டணத்திலிருந்து மான்ஹைம் அடைந்தனர். ஆற்றின் அக்கரையில் போய் சேர்ந்ததுமே அவர்கள் பந்தய ஓட்ட வேகத்தில் ஜெர்மன் அணிவகுப்புகளைப் பல இடங்களில் துளைத்துகொண்டு சென்றனர்; ஒரு கவசவாகன டிவிஷன் ஒரே நாளில் 90 மைல் சென்றது. அமெரிக்க முதல் சேனையும் ஒன்பதாம் சேனையும் ரூர் பிரதேசத்தைச் சுற்றி ஒரு பெரிய

சுருக்கு அமைத்து மூன்று லக்ஷம் சத்துருக்களைப் பொறியில் சிக்கவைத்தன. பாட்டனின் (Patton) மூன்றும் சேனை காஸ்ஸலையும் எல்பெ நதியையும் நோக்கிப் பாய்ந்தன. தெற்கே, பாட்சின் (Patch) ஏழாம் சேனை பவேரியா வழியாக ஸெகோஸ்லொவேகியாவின் எல்லைக்கு வேகமாய்ச் சென்றது; வடக்கே மான்ட்கோமெரியின் பிரிட்டிஷ் கனடியத் துருப்புக்கள் கரையோரமாகவே ப்ரெமென், ஹாம்பர்க் வழியாக பால்டிக் கடலுக்கு விரைந்தன.

அதுவே முடிவு. கிழக்கேயும், தெற்கேயும் இருந்து ரஷ்யர்களும், மேற்கே இருந்து ஆங்கில அமெரிக்கரும் நெருக்கினர்; இத்தாலியில் ஜெர்மானியர் ஆயுதங்களைக் கீழே வீசிப்போட்டனர்; ஜெர்மன் யுத்தசக்தி தூள் தூளாகச் சிதற ஆரம்பித்தது. ஏப்ரல் 25-ம் தேதி, ரஷ்யர்களும் அமெரிக்கர்களும் எல்பெ நதிக் கரையில் சந்தித்தனர்; 2000 மைல்களுக்கப்பால் நார்மண்டி கடற்கரையிலும் நீபர் (Dneiper) ஆற்றோரத்திலும் இருந்து புறப்பட்ட இருசேனைகள் ஜெர்மனியை இரு துண்டுகளாக்கின. ஆவேசங்கொண்ட ஜெர்மன் தேச ரக்ஷகர்கள் பெர்லின் நகரில் கடைசிவரையிலும் சண்டையிட்டனர்; நகரத்தின் வீழ்ச்சி நிச்சயம் என்று தெளிவாகத் தெரிந்ததும் ஹிட்லர் தற்கொலை செய்துகொண்டான். அதற்கு முன்பே முஸ்ஸோலினியை வெறிக் கோபங்கொண்ட இத்தாலியர் கொன்றுவிட்டனர். மே ஏழாம் தேதி ஜெர்மன் சேனைகளின் எஞ்சிய பகுதி நிபந்தனையின்றி சரண் புகுந்தது. இவ்வாறு ஆயிரம் ஆண்டு வாழ இருந்த ஜெர்மன் அரசாங்கம் இடிந்து பாழாயிற்று.

இந்த வெற்றிக்கு அஸ்திவாரம் போட்டவர்களில் ஒருவர் தம் திட்டங்களின் சிறப்பு நிரூபிக்கப்பட்டதையோ, தம் லக்ஷ்யத்தின் வெற்றியையோ காணக் கொடுத்து வைக்கவில்லை. ஃப்ராங்க்லின் டி. ரூஸ்வெல்ட் ஏப்ரல் 12-ம் தேதியே இறந்துபோய்விட்டார்.

நேசப்படைகள் சண்டையிட்டு நார்மண்டியில் முன்னேறிக் கொண்டிருக்கும் காலத்திலேயே வர இருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்காக இரு முக்கிய அமெரிக்கக் கட்சிகளும் பெயர்களைக் குறிப்பிட்டன. வேறு யோசனைக்கே இடமில்லாதவராக, டிமோக்ராட்டுகள் மும்முறை கட்சிக்கு வெற்றியளித்து இப்பொழுது நாட்டுக்கு வெற்றியளித்துக் கொண்டிருக்கும் ரூஸ்வெல்டின் பெயரைக் குறிப்பிட்டனர். ரிபப்லிக் கட்சியினர் வெண்டெல் வில்கியை நிராகரித்தனர். உள்நாட்டு விஷயங்களில் அவன் புது வாழ்வுத் திட்டத்தில் நம்பிக்கை கொண்டிருந்தான்; வெளிநாட்டு விவகாரங்களில் அவன் சர்வதேசவாதி; மொத்தத்தில் அவன் அரசியல் அநாதை. ஆகவே அவர்கள் நியூ யார்க் கவர்னராகிய தாமஸ் ஈ. ட்யூயி பக்கம்

திரும்பினர்; அவன் கட்சி முறைப்படி செல்பவன், உள் நாட்டு விவகாரங்களில் லேசாக உதாரவாதி, நிகழ்ச்சிகளின் அழுத்தத்தால் சர்வதேசவாதியாக மாறவேண்டி வந்தவன். எல்லா வகைகளிலும் ரூஸ்வெல்டுக்கு ட்ரூமனைக் காட்டிலும் அதிக வோட்டுகள் கிடைத்தன.

நான்காவது ஆரம்பப் பிரகடனத்தில் ரூஸ்வெல்டு வெற்றிக்கு மாத்திரமல்ல, வெற்றி கிடைத்தபின் திடமான சர்வதேச ஸ்தாபன நிர்மாணத்திற்கும் தன்னை அர்ப்பணம் செய்துகொண்டார். அவர் சொன்னதாவது:

> ...அமைதியுடன் தனித்து வாழமுடியாது என்பதை நாம் கற்றுக் கொண்டோம்; தொலைவிலுள்ள இதர நாடுகளின் க்ஷேமத்தோடு நம் க்ஷேமம் இணைந்திருக்கிறது. (ஆபத்துக் காலத்தில் மண்ணில் தலையைப் புதைத்துத் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும்) நீக்கோழி போலவோ, (தானும் உண்ணுமல் மாட்டையும் உண்ணவிடாமல் குரைத்துக் கொண்டு) தொழுவத்தில் சுருண்டுப் படுத்திருக்கும் நாயைப் போலவோ இராமல் மனிதர்களைப்போல வாழவேண்டும் என்பதை நாம் அறிந்து கொண்டோம். உலகப் பிரஜைகளாக, மனித வர்க்கத்தின் அங்கத்தினர்களாக இருக்க நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம்....

வெற்றி நெருங்க நெருங்க, அமைதி, சர்வதேச நீதி என்னும் பெரிய பிரச்னைகளின் பக்கம் மேலும் மேலும் அவர் சிந்தனை திரும்பிற்று; அப்பிரச்னைகளின் விடை அறிய முடிவதில் அவருடைய சக்திகள் மேலும் மேலும் ஈடுபடுத்தப் பட்டன. 1945-பிப்ரவரியில் யுத்தத்தைப் பற்றியும் யுத்தத்தின் பிற்காலக் காரியங்களைப்பற்றியும் ஸ்டாலின், சர்ச்சில், மற்றும் ராணுவ அராணுவ ஆலோசகர்களுடன் கலந்து பேச அவர் வெகு வெகு தொலையிலுள்ள க்ரிமியாவிலிருக்கும் யால்டா (Yalta) வுக்குப் பிரயாணம் சென்றார். ஐரோப்பாவில் போர் முடிவை நெருங்கி வருகிறது என்பது தெளிவு; ஜப்பானின் முழுத் தோல்வியைக்காண இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகள் பிடிக்கலாம் என்று எதிர் பார்க்கப்பட்டாலும், இறுதித் தோல்வியைப் பற்றி எவருக்கும் சந்தேகமில்லை. ஆகவே, யால்டா சந்திப்பில் பெரும்பாலான பேச்சு பசிஃபிக் போரில் ரஷ்யா கலந்து கொள்ளுதல் போன்ற ராணுவ சமாசாரங்களைப்பற்றி இருந்தாலும், போருக்குப் பிந்திய உலகத் திற்கான திட்டத்தைப் பற்றியும் ஆலோசனைகள் நடைபெற்றன. ஆகவே ஜனாதிபதியும் அவருடைய ஆலோசகர்களும் யால்டாவிலிருந்து திரும்பியபோது அவர்களுக்கு—ஹாரி ஹாப்கின்ஸின் கூற்றுப்படி:

> ...பல்லாண்டுகளாகச் சர்ச்சை செய்து மனமாரக் கோரிய புது நாளின் உதயகாலம் இது. அமைதிக்கான முயற்சியில் முதல் போரில் வெற்றி கிடைத்துவிட்டது என்ற பூர்ண நம்பிக்கை நமக்கு ஏற்பட்டது—"நமக்கு" என்றால் நாகரிக மனித உலகம் முழுதுக்கும் என்று அர்த்தம்...

என்ற திட எண்ணம் உண்டாயிற்று.

ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தல் நடந்துகொண்டிருக்கும் போதே எதிர்க் கட்சி பிரசாரகர்கள் ரூஸ்வெல்ட் ஒரு அழுத்துபோன கிழவன் என்று குறை கூறினர்கள். அது உண்மையான வர்ணனையே; யுத்தம் அவருடைய சக்திகளை யெல்லாம் உறிஞ்சிவிட்டது; பொங்கும் தன்மையுள்ள அவருடைய உற்சாகத்தையும் கவலைகள் அழித்தின. யால்டாவிலிருந்து திரும்பும்போது அவர் நோயுற்றவர் என்பதில் சந்தேகமில்லை; போலியோ நோயாளிகளுக்கு சகஜமாக ஏற்பட்ட நாற்காலி வண்டியில் அமர்ந்தவாரே அவர், முதல் தடவையாக, காங்கிரசுக்குத் தம் யாதாஸ்தை சமர்ப்பித்தார். அதன் பிறகு அவர் ஜியார்ஜியாவில் வார்ம் ஸ்ப்ரிங்க்ஸ் என்னுமூரிலுள்ள தம் குளிர்குறைவான இல்லத்திற்கு சென்று, ஓய்வெடுத்துக் கொண்டு, ஸான் ஃப்ரான்ஸிஸ்கோவில் ஐக்கியதேச மகாநாட்டின் முதல் கூட்டத்தின் திறப்பு விழாவுக்கு ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தார். ஏப்ரல் 12-ம் தேதி ஜெஃபர்ஸன் திருநாளுக்காக சொற்பொழிவு தயாரித்துக் கொண்டிருக்கும்போது மூளையில் ரத்த நாளம் வெடித்து, அதன் காரணமாக அவர் இறந்தார். அவர் எழுதிய இறுதி வார்த்தைகள் அவருடைய வாழ்க்கை லக்ஷ்யத்தைக் கூறும் சூத்திரமாகும்—"நம் நாளைய சாதனைகளுக்கு நம் இன்றைய சந்தேகங்கள்தான், சஞ்சலபுத்திதான், குறுக்கே நின்று எல்லையிடுகின்றன. திடமான், செயலாற்றலுள்ள நம்பிக்கையோடு நாம் முன்செல்வோமாக."

பசிஃபிக் கேந்திரத்தில் வெற்றி : க்வாடல்டக்கனலை மறுபடியும் நேசதேச நாடுகள் ஜயித்தல் என்று கொள்வதைக் காட்டிலும் ஜப்பானிய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோட வசதியளிக்கும் நடவடிக்கை என்று கொள்வதே சரியாகும். ரபாஉல் மேல் தீவிரக் குண்டுவீச்சு நடத்த தளங்கள் பெறவும், 1943 நவம்பரில் நடைபெறத் திட்டமிடப்பட்டிருக்கும் பெருவாரி எதிர்ப்புக்கு வழியைத் துப்புரவாக்கவும் இவ்வெற்றி உதவிற்று. அந்த எதிர்ப்பின் இரு பகுதிகள் உண்டு. நியூகினி கரையோரமாக ஹால்மஹெராவையும் மத்திய ஃபிலிப்பீன் தீவுகளையும் மாக்ஆர்தர் தாக்குவது ஒன்று; ஏனி வைத்தாற்போன்ற தீவுகளில் முன்னேறி ஜப்பானைத் தாக்கக்கூடிய தூரம் வரை அட்மிரல் நிமிட்ஸ் (Nimitz)

முன் செல்லுதல் மற்றொன்று. இரண்டும் தரைப் படை, கடற் படைக் கூட்டு நடவடிக்கைகள்; ஆனல் முன்சொன்னதில் தரைப்படையின் பொறுப்பு அதிகமாகவும், இரண்டாவ தில் கடற்படையின் பொறுப்பு அதிகமாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. பர்மா, பர்மா சாலே, சைனு என்னும் மார்க்கமாக ஜப்பானே அணுகுவது மூன்றுவது யோசனே. ஆனல் போக்குவரத்தும், சப்ளைப் பிரச்னையும் மிகக் கடினமாக இருப்பதோடு சீன தேசாபிமானிகளிட மிருந்து அதிக ஒத்துழைப்பு கிடைப்பதாகவும் இல்லே; கடைசியில் பர்மாவிலிருந்து சத்துருக்கள் அப்புறப்படுத் தப்பட்டார்கள் எனினும் அந்நடவடிக்கை போரின் முடி வைப் பாதிக்கவில்லே.

1943 நவம்பர் முதல் தேதி திட்டப்படி வட ஸாலொமன் தீவுகளில் ஒன்றுகிய பூகெய்ன்வில் தீவின் மேல் இருப்படைத் தாக்குதலுடன் நடவடிக்கை ஆரம்பமாயிற்று. இந்த இடியை எதிர்பார்த்த ஜப்பானியர் நன்கு எதிர்த்து இடித்தார்கள்; ஆனல் அவர்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் தோற்கடிக்கப் பட்டார்கள். பூகெய்ன்வில்லிலிருந்து அமெரிக்கர் ரபா உலுக்குக் கிழக்கேயும் மேற்கேயும் உள்ள தீவுகளுக்கு நகர்ந்து இடைவிடாத குண்டு வீச்சால் அந்த அரணைச் செயலற்றதாக்கினர்கள். இவ்வாறு பக்கங்களில் பாதுகாப்பு பெற்று மக் ஆர்தர் நியூகினிக் கரையோரமாக ''பச்சைக் குதிரை'' தாவி முன்னேறினர்; கடல் இடைவெளிகளில் அட்மிரல் நிமிட்ஸ் ஓகினவா (Okinava) தீவை நோக்கிப் புறப்பட்டார்.

அமெரிக்கக் கடற்படையும், கடற்படை சம்பந்தமான விமானப்படையும், கவன்த்தைக் கவரும் அளவு அதிகரித்து, ஜப்பானேக் காட்டிலும் மாத்திரமல்ல, போரில் ஈடுபட்ட எல்லாக் கடற்படைகளின் மொத்தத்தைக் காட்டிலும் அதிக வலிமை அடைந்து விட்டதால்தான் அமெரிக்கா ஜப்பான் மேல் படையெடுக்க முடிந்தது. உண்மையில், அட்மிரல் ஹால்ஸேயின் கீர்த்திவாய்ந்த படை ஒன்றே முழு ஜப் பானியக் கடற்படையைக் காட்டிலும் அதிக ஆற்றலுள்ளது. மிகவும் உக்ரமான பல தாக்குதல்களேத் தொடர்ந்து நடத்த இந்த மகாபலம் பெற்ற படை சித்தமாக இருந்தது. தென் பசிபிக்கிலும் மத்திய பசிபிக்கிலும் சிதறலாக இருந்த பலப் பல்பவளத் தீவுகளில் ஒவ்வொன்றையும் ஜப்பானிய ரிடமிருந்து பற்றிக்கொள்ளுதல் என்பது நிமிட்ஸின் உத் தேசமல்ல. ஒவ்வொரு பெரிய தீவுக் கூட்டத்திலும் முக்கிய மான தீவைக் கைப்பற்றுவதுதான் அப்போது ஏற்கப்பட்ட யுத்த தந்திரம்; அத்தீவுகளில் விமான தளங்கள் அமைக்க வேண்டும்; பிறகு பல நூறு மைல் ஜப்பானுக்கு அண்மையில் இருக்கும் இன்னொரு தீவுக்குச் சென்று அங்கு தளம் நிறுவ

வேண்டும்; தொலேவிலுள்ள தீவுக் கொத்தளங்களிலிருக்கும் ஜப்பானியப் படைகள் கவனிப்பாரின்றி கொடியிலேயே வாடும் கனிகள் போலாம். காலக்ரமத்தில் தென் ஃபிலிப்பைன்ஸில் மிண்டனுவோ, சைனுவுக்கருல் ஃபார்மோஸா போன்ற தீவு களேயும்கூட அசட்டைசெய்து முன்னேறுவது சாத்திய மாயிற்று. ஆதியில் தவறுதலாக அகலக்கால்வைத்த ஜப்பா னியர் தம் சக்தியை வீண் செலவு செய்து முன்னிலும் பெரும் பிழை செய்தார்கள்.

கில்பெர்ட் தீவுக்கூட்டத்தில் தாராவா மேல் முதல் அடி விழுந்தது. மிகவும் ரத்தம் சிந்தித்தான் அவ்வரணேப் பிடிக்க முடிந்தது; இரண்டு மாதங்கள் கழித்து, பல நூறு மைல் வடக்கேயுள்ள மார்ஷல் தீவுகளுக்குப் படை நகர்ந்தது. கோர ஆவேசத்துடன் 8000 ஜப்பானியர் பாதுகாத்த க்வாஜலீன் தீவு முதல் இலக்கு. 1944, ஜனவரி 31-ஆம் தேதி சுப்பல்படைச் சிப் பாய்கள் கரையிறங்கினர்; மூன்றேநாளில் பகைவர் துடைத் துத் தள்ளப்பட்டுத் தீவு பிடிக்கப்பட்டது. பிறகு அமெரிக்கப் படை 350 மைல் மேற்கே சென்று எனெவெடாக் தீவிலிருந்த பகைவரை இருந்த இடம் தெரியாமல் செய்தது.

இப்பொழுது ஐந்தாவது இருவகைச் சேனே மேற்கே 1200 மைல் தூரத்திலும் டோக்கியோவிலிருந்து 1500 மைல் தூரமே யுள்ள மாரியானு தீவுக்கூட்டத்தை நோக்கி முன்சென்றது. அங்கு முக்கியமான இலக்குகள் ஆற்றிலுள்ள விமான தளமாக வும் கடற்படை தளமாகவும் மாற்றியமைக்கப்பட்ட ஸாய் பான் தீவும் 1921 டிசம்பரில் அமெரிக்காவிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப்பட்ட குவாம் தீவுமாகும். மிகக்கடுமையான போர் புரிந்து ஸாய்பானேப் பிடிக்க மூன்று வாரங்கள் ஆயின; மரண மோ காயமோ அடைந்த அமெரிக்கர் 15,000; குவாமும் அநேக மாக அதே அளவு எதிர்த்து நின்றது. ஆகஸ்டுக்குள் மாரி யானுத் தீவுகள் அமெரிக்கர் வசம் வந்தன; சிறிது காலத்தில் பி-29 எனப்படும் அரக்க விமானங்கள் அங்கிருந்து கிளம்பி ஜப்பானியத் தாயகத் தீவுகளேத் தாக்க ஆரம்பித்தன.

தென் பசிஃபிக்கிலும் மத்திய பசிஃபிக்கிலும் கிடைத்த வெற்றிகளால் ஃபிலிப்பைன் தீவுகளே நேரடியாக எதிர்ப்பது சுலபமாயிற்று. தீவிலிருந்து தீவுக்குத் தாவும் அமெரிக்க முறை மிக வெற்றியளித்ததால் ஜெனரல் மாக் ஆர்தர் மிண்டனுவோ தீவை அசட்டை செய்து தீவுக்கூட்டத்தின் இரு தயத்தையே இடிக்கத் தீர்மானித்தார். 1944 அக்டோபர் 20-ஆம் தேதி 600 கலங்கள் கொண்ட பெரும்படை லக்ஷம் துருப்புகளுக்கும் அதிகமாக ஏற்றிக்கொண்டு லெய்டே (Leyte) வளேகுடாவில் பிரவேசித்தது. மாக் ஆர்தர் நீர் தெறிக்க நடந்துக் கரையேறி-''ஃபிலிப்பைன்ஸ் மக்களே, நான் திரும்பி வந்து விட்டேன். ...என் கொடியின்கீழ் கூடுங்கள்''

என்றழைத்தார். அவர்கள் அவ்வாறே செய்தனர். சொற்ப காலத்தில் இரண்டு லக்ஷம் துருப்புக்கள் அத்தீவுகளில் கூடினர்; அதுவரை ஜப்பானிய ஆதிக்கத்தை வெறுத்து நிலையற்ற போரால் அவர்களைத் துன்புறுத்திவந்த ஃபிலிப்பினோக்கள் விசுவாசத்துடன் அமெரிக்கருடன் சேர்ந்து கொண்டனர்.

அதை அலக்ஷியம் செய்யமுடியாத ஜப்பானியர் வேறு வழியில்லாமல் தம் முழு பலத்தையும் கொண்டு அமெரிக்கரை எதிர்த்தார்கள். அக்டோபர் 23, 24, 25-ஆம் தேதிகளில் நடந்த லெய்டே வளைகுடாப்போர் அந்த யுத்தத்தின் கடைசி கடற் சண்டை; மிக முக்கியமானதுங்கூட. உண்மையில் அதை மூன்று போர்கள் எனவேண்டும்; மூன்றிலும் அமெரிக்கர் வெற்றியடைந்தனர். அப்பொழுது வாங்கின அடியிலிருந்து ஜப்பானியக் கடற்படை தலைதூக்கவில்லை; அதன் பிறகு அதன் அவ்வப்போதைய எதிர்ப்பெல்லாம் பெயரளவுக்குத்தான். மாக் ஆர்தர் வேகமாக லெய்டேயை வசப்படுத்தி, லூஸானுக்குச் சென்றார்; 1945-ல் மாணிலா விழுந்தது; ஏப்ரல் மாதத்திற்குள் எல்லாத் தீவுகளும் விடுவிக்கப்பட்டன.

இங்கு மாக் ஆர்தர் ஃபிலிப்பைன்ஸை ஜயித்துக்கொண்டிருக்கும்போதே, அமெரிக்கக் கடற்படை காலே எட்டி வைத்து ஜப்பானை நெருங்கிக்கொண்டிருந்தது. ஈவ ஜீமா (Ivo Jima) என்னும் சிறு தீவு டோக்யோவிலிருந்து எண்ணூறே மைல் தூரத்தில் இருக்கிறது. ஒரு மாத காலம் விமானங்கள் அதை நாள் தவறாமல் குண்டு வீசித் தகர்த்தன; ஆறு போர்க் கப்பல்கள் ஒரு வாரம் கரையோரக் கொத்தளங்களைத் தூளாக்கின. கடைசியில் பிப்ரவரி 19-ஆம் தேதி கப்பல் சிப்பாய்கள் புயல்போல் கரையேறினர். ஜப்பானியப் பாதுகாப்பாளரை நிர்மூலமாக்க ஒரு மாதம் பிடித்தது; அமெரிக்கரின் நஷ்டம் 5,000; ஆனால் மார்ச்சு மத்திக்குள் அமெரிக்க விமானங்கள் அங்குள்ள தளங்களிலிருந்து டோக்யோவை நோக்கிப் புறப்பட்டன; அப்பொழுது நடந்த அக்கினி வெடிகுண்டு வீச்சால் நிகழ்ந்த நஷ்டத்தை ஹாம்பர்க்நகருக்குப் பிரிட்டிஷ்தாக்குதல்களால் உண்டான நஷ்டத்திற்கு ஒப்பிடவேண்டும். அதற்கடுத்த தீவுக் கூட்டம், ரியு கியுஸ் (Ryu Kyus), ஜப்பானியத் தாயகத் தீவுகளில் தென்கோடியிலிருப்பது. அதில் ஒரு தீவாகிய ஓகினவாவுக்கு அமெரிக்கப் படைகள் அடுத்தபடியாக நகர்ந்தன. வேறுவழி தெரியாமல் திணறிய ஜப்பானியர் தற்கொலை விமானத் தாக்குதல் ஆரம்பித்தனர். அவை அமெரிக்கக் கப்பல்களுக்குப் பெருஞ் சேதம விளைவித்தாலும் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அத்தீவுகள் இயற்கையான குகைகள் நிறைந்தவை. பாதுகாப்பாளர் குகைக்குக் குகை சண்டையிட்டு மூன்று மாதங்கள் எதிர்த்து

நின்றனர். ஜூன் மாதக் கடைசியில்தான் அமெரிக்கருக்கு முழு வெற்றி கிடைத்தது.

அதற்குள் ஐரோப்பியப் போர் முடிவடைந்து விட்டது; ஜப்பானின் தோல்வி நெருங்கிக்கொண்டிருந்தது. ஜப்பானிய வியாபாரக் கப்பல்களை அமெரிக்க நீர்மூழ்கிகள் அநேகமாய் ஒழித்துவிட்டன; எதிரிகளுடைய பொருள் நிலை சீர்கெட்டிருந்தது; அமெரிக்க விமானங்கள் ஜப்பானியத் துறைமுகங்கள் மேல் பறந்து எஞ்சி நின்ற கப்பல்களை மூழ்கடித்தன; அமெரிக்கக் கப்பற்படை கரையில் மேலுங்கீழும்நினைத்த இடத்திற்குப் போகமுடிந்தது; டோக்யோ தீய்ந்துபோன ஒரு பாழிடம்; பெரிய தொழில் நகரங்களில் பெரும்பாலானவற்றை அக்கினி வெடிகள் நாசமாக்கிவிட்டன. ஜப்பானிய ராணுவ நாயகர்களுக்குத் தாம் தோற்கடிக்கப்பட்டது தெரியும்; ஆனல் மக்களிடம் உண்மையை அறிவிக்க அவர்களுக்கு பயம்; கடைசிவரைப் போர்தான். என்ற தீர்மானத்தைக் கூறி பயமுறுத்தினல், உட்படிக்கையின்போது நேச தேசத்தாரிடமிருந்து சில சலுகைகள் கிடைக்கலாம் என்று அவர்கள் நம்பினர்கள்.

ஆனல் நேசதேசத்தார் சமரசப் பேச்சுக்குத் தயாராக இல்லை. தங்களுடைய சக்தி முழுவதும் ஜப்பானுக்கு எதிராகக் கொண்டு நிறுத்தும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்திருந்தது; ரஷ்யாவும் பசிஃபிக் போரில் பிரவேசிக்க இருப்பது அவர்களுக்குத் தெரியும்.

ஜூலை மாதத்தில் முதல் அணுகுண்டு நியூ மெக்ஸிகோ பாலைவனத்தில் சோதனைக்காக வெடித்தாகி விட்டது; அந்த இறுதி ஆயுதம் ஜப்பான்மேல் விழத் தயாராக இருந்தது. அதைப் பிரயோகித்தது அவசியமா இல்லையா என்பது வெகு காலம் வரை தர்க்கிக்கப்படும். ஆனல் ஜெர்மனியில் பாட்ஸ்டாம் நகரில் நேசதேசத் தலைவர்கள் கூடி ஜப்பானை நோக்கி, "தாழ்ந்துபோ, அல்லது அழிந்துபோ" என்று அறைகூவிய போது இந்தச் சிந்தனைகளெல்லாம் பின்னணியில் இருந்தன. ஜப்பானிய அரசாங்கம் அந்த எச்சரிக்கையை அசட்டை செய்தது. அதன்பின் ஆகஸ்டு 6-ஆம் தேதி ஒரு தனி பி-29 விமானம் ஹிரோஷிமா என்னும் தொழில் நகரத்தின்மேல் பறந்து ஒரு அணுகுண்டு போட்டது; மூன்று நாட்கள் கழித்து இரண்டாவது குண்டு நாகஸாகி மேல் போடப்பட்டது இரு நகரங்களும் நிர்மூலமாயின; மரணத்தாலும் காயத்தாலும் ஆள் நஷ்டம் ஒரு லக்ஷத்திற்கும் அதிகம். பூர்ண நாசம் என்ற திகில் மனதில் தோன்றியதும் ஜப்பான் ஆகஸ்டு 14-ஆம் தேதி தலை வணங்கி, செப்டெம்பர் 2-ஆம் தேதி மிஸௌரி என்னும் அமெரிக்கக் கப்பலில் சந்தித்து நிபந்தனையின்றி சரண் நாடிய

தாகக் கையொப்ப மிட்டது. இவ்வாறு எல்லாவற்றிலும் மிகவும் பயங்கரமான யுத்தம் முடிவு பெற்றது.

அது அவ்வாறு பிரளய காலத் தீயில் முடிவுபெற்றதும் பொருத்தமே—இன்னொரு யுத்தம் நடந்தால் மானிட வர்க்கம் முற்றிலும் அழிந்துபோகும் என்பதை அது தெளிவாக்கிற்று. முதல் உலக யுத்தமே போர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் போர் என்று நாகரிகமானவர் அனைவரும் நம்பினர். அந்த நம்பிக்கை பொய்யானது ஒரு துக்ககரமான விஷயம். குழம்பிய இருபது ஆண்டுகளுக்குப் பிறகு தீய மனமும் பேராசையும் கொண்டவர்கள் பலாத்காரத்தாலும் திகில் உண்டாக்கியும் தம்தம் உத்தேசங்களை நிறைவேற்றிக்கொள்ளத் துணிந்தார்கள். அவர்கள் அநேகமாக வெற்றியும் பெற்றார்கள். எனினும் இறுதியில் அவர்கள் பேராபத்து உண்டாக்கித் தோல்வியுற்றனர்; கத்தியைப் பிடித்தவர் கத்தியால் அழிவர்—என்பதை அவர்கள் மறுபடி நிரூபித்தார்கள். ராணுவ முறையில் அத்தோல்வியின் காரணங்கள் எதுவாக இருந்தாலும், அடிப்படையான காரணம் தெளிவானதே: மானிட நம்பிக்கையையும் மானிட வாழ்க்கையின் மதிப்புக்களையும் நிராகரித்து, உலகத்தில் மனிதத் தன்மையைப் பாராட்டும் சக்திகளுக்கெல்லாம் பகைவரானதால் அச்சு நாடுகள் தோல்வியடைந்தன. மனிதனின் நற்குணங்களிலும் அறிவிலும் பெருமையிலும் நம்பிக்கையுள்ளவர்களே இறுதியில் ஜயித்தார்கள்.

போர் கிலேசமும் துன்பமும் நிறைந்திருந்தது; ஆனால் உலகத்தின் சுதந்திர மக்களுக்கு இறுதியில் வெற்றியளித்த ரூஸ்வெல்ட் தம் போர்ப்பிரகடனச் செய்தியில் சொன்னார்: "நாம் தேடும் லக்ஷியம் கோரமான யுத்தகளத்திற்கு அப்பாலுள்ளது, மிக உயர்வானது. நாம் பலாத்கார முறையைக் கையாளவேண்டி வந்தால்.....அந்தச் சக்தி உடனடியாகத் தீமையை எதிர்ப்பதோடு நிரந்தரமான நன்மையையும் வலுப்படுத்துவதாக இருக்கவேண்டும் என்பது நம் தீர்மானம்."

இரண்டாம் உலக யுத்தம் "உடனடியான தீமையை" நசுக்கிக் கொன்றது என்பதில் சந்தேகமில்லை. "இறுதி நன்மை" உண்டாக்கிற்று என்பதை வருங்காலமே தீர்மானிக்க முடியும்.

விருப்பமுள்ளவர் நன்மையைத் தேட முடியும் என்பதற்கான சூழ்நிலையை அது உண்டாக்கிற்று என்பது உண்மை. அமெரிக்க மக்களோ மற்றவர்களோ அறிந்திராத அளவு பொறுப்பை அவர்கள்மேல் அது கொண்டு சுமத்திற்று. போரால் நைந்த உலகில் புனரமைப்பு உண்டாக்குதலும், மேற்குப்புறக் கிறிஸ்தவ நாடுகளில் நாகரிகத்தை மறுபடி ஸ்தாபித்தலும், உலகச் சுயாதீன மக்களை ஆதரித்து குடிநல

வாழ்வை வலுப்படுத்தலும், நிரந்தர சாந்திக்கு உறுதிகூறக் கூடிய சர்வதேச ஸ்தாபனத்தின் நிறுவனமும், பெரும்பாலும் அமெரிக்கரின் பொறுப்பாயிற்று. மேற்கு உலகத்தின் புனரமைப்புக்கு அவர்கள் தாராளமாகச் சகாய மளித்தார்கள்; உலகத்தின் மூலை முடுக்குகளில் அவர்கள் சுதந்திரத்தையும் குடிநல அரசையும் ஆதரித்தார்கள்; ஐக்கிய தேச ஸ்தாபனத்தை உண்டாக்கி பலப்படுத்துவதில் அவர்கள் முன்னணியில் நின்றார்கள். இவ்வளவிருந்தும் போரும் போர் வதந்திகளும் உலகத்தைக் கலக்கின; அடிவானம் இருள் மூடியிருந்தது.

அத்தியாயம் 22

கெடுபிடிப் போர்

ஹாரி ட்ரூமன்:—வெள்ளை மாளிகையில் ரூஸ்வெல்டின் ஆசனத்தை ஏற்றவர் ஒரு க்ஷணம் தம் பொறுப்புக்களின் சுமையின் கீழ் தயங்கினர்; ஆனால் ஒரு க்ஷணந்தான். ஹாரி எஸ். ட்ரூமனின் வெளித் தோற்றத்தில் விசேஷ குணம் அல்லது கனத்தின் அறிகுறி தென்படாவிட்டாலும் துரிதமான தீர்மானம், தன்னம்பிக்கை, திடசித்தம் ஆகிய சிறப்புகள் அவரிடமுண்டு. மிஸிஸிபிக்கு மேற்கே இருந்து வந்த இரண்டாம் ஜனாதிபதி அவர்; கிராமாந்தரப் பின்னணியுடன் அவர் உயர்தரப் பள்ளிப் படிப்பு பெற்றவர். பலவகைப்பட்ட வாழ்க்கை அனுபவம் அவருக்குண்டு: பாங்கு குமாஸ்தா, குடியானவன், முதல் உலக யுத்தத்தில் ஃப்ரான்ஸில் பீரங்கிப் படை அதிகாரி, துணி வியாபாரி, கான்ஸாஸ் நகர அரசியல் வாதி, ஜில்லா நிர்வாக அதிகாரி. கடைசியில் ஐக்கிய நாட்டு ஸெனெட்டர். ஸெனெட் சபையில் அவர் "புதுத்திட்ட"த்தை ஆதரித்தார், விவசாயச்சட்டங்களிலும், உழைப்பாளிச் சட்டங்களிலும் அதிக அக்கறை காட்டினர், தம் இரண்டாம் பதவி காலத்தில் ராணுவச் செலவுகளைப் பரிசீலிக்கும் விசேஷக் கமிட்டியின் தலைமையைத் திறமையுடன் வகித்துத் தேசிய முக்கியத்துவம் பெற்றார். உப ஜனாதிபதியாக அவருடைய பெயர் குறிப்பிடப்பட்டபோது பல டிமோக்ரிட்டுகள் ஏமாற்றமடைந்தனர்.

-மேற்

ட்ரூமனுக்கு தேசத் தலைமை வகிக்க மாத்திரமல்ல, சர்வ தேசத் தலைமை வகிக்கவும் விசேஷத் திறமையுண்டு என்பதை நிகழ்ச்சிகள் நிரூபித்தன. உண்மையைக் கூறுமிடத்து அவர் அற்ப விஷயங்களில் பெரும் பிழைகள் செய்தார் – தகுதியற்ற சிலருக்கு உத்தியோகமளித்தல், நம்பிக்கைத் துரோகம் செய்யப்பட்ட பின்னரும் பழைய நண்பர்களை ஆதரித்தல், முன் தயாரிப்பில்லாமல் பொறுப்பற்று அபிப்ராயங்கள் கூறுதல், அவருடைய சொற்பொழிவில் அழகோ ஆற்றலோ இல்லாமை, எழுத்தில் மென்மையோ ஜோடனையோ இல்லாமை; ஆனால் அரசியல் சம்பாஷனை அல்லது தர்க்க குதர்க்கத்தில் அவர் பிரகாசித்தார். நிகழ்காலப் பிரச்னைகளில் ஒரு சிக்கலுமே இல்லையென அவர் பாவித்தார்; சகாக்களை ஆதரிக்கும் ஆவலில் அவர் நியாயத்தை மறந்தார். ஆனால் அவர் தெளிவும் தீர்மானமும் உள்ள மனம் படைத்தவர்; வேறுபல ஜனாதிபதிகளைக் காட்டிலும் அவர் அதிகக் கல்வி பெற்றவர். விஸ்தாரமாகப் படித்தவர், விசேஷமாக அமெரிக்கச் சரித்திரத்தில். நல்ல ஞாபகமுள்ளவர். குடிநல வாழ்வில் ஆவேசமான பற்று களைப் பணியாற்றவேண்டும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையில் வில்ஸனுக்கும், எஃப்.டி. ரூஸ்வெல்டுக்கும் அவர் இணையானவர். அவரைப்போல் உழைப்புள்ள ஜனாதிபதிகள் மிகச் சிலரே; தினம் 16 மணியாக அவர் உழைத்த நாட்கள் பல உண்டு. செயல், தலைமைவகிப்பு, இவற்றில் தெய்வ விசுவாசமுள்ளவர் அவர்; பார்ப்பதற்குச் சாதுவாக இருந்தாலும் ஆபத்து சமயத்தில் அவர் நொடியில் தீர்மானம் செய்து ரஜோகுணத்துடன் மல்லுக்கு நிற்கக் கிளம்புவார்.

ஏப்ரல் 1945-ல் அவர் பதவியேற்றபோது ஐரோப்பாவில் போர் அநேகமாய் ஓய்ந்துவிட்டது; ஆசியாவில் அமைதி ஏற்பட நான்கே மாதங்கள் இருந்தன. ஆனால் போருக்குப் பிந்திய சிக்கலான பிரச்னைக் கொத்துக்கள் தெளிவற்று, உருவற்றுக் கண்முன் தொங்கின. தற்காலிகமாக அவற்றின் தரம் குறைகமதிப்பிடப் பட்டுவிட்டதால், அவற்றின் கடினத்தன்மை அதிகரித்தது. முதல் உலக யுத்தத்திற்குப் பின் நடந்தது போலவே, உலக விவகாரங்களில் ஒரு புது யுகம் தோன்றியதாக அமெரிக்கர் சிந்தனையின்றிப் பேசினர், கூட்டு க்ஷேம ஏற்பாடுகளில் அதிக நம்பிக்கை வைத்தனர். துருப்புக்களை வாபஸ் வாங்கிக் கொள்ளுவதிலும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதிலும் முன்யோசனையற்ற அவசரபுத்தியைக் காட்டினர். இனி அமெரிக்கர் தம் நாட்டு விஷயங்களை மாத்திரமே கவனித்தால் போதும் என்று பலர் நினைத்தனர். ஏமாற்றம் அவர்களுக்கு அதிர்ச்சியளிக்கக் காத்திருந்தது.

ட்ரூமனுக்குக் கூடச் சிறிதுகாலம் யோசனையற்ற இந்த நன்னம்பிக்கை உண்டு. போர்நிலை கழிந்து சாமான்ய நிலை துவங்கிவிட்டது என்ற ஆலோசனைக்கிணங்கி "கடன் குத்தகை" ஏற்பாட்டின்படிச் சரக்குகள் அனுப்புவதை அவர் திடீரென்று நிறுத்துவதற்கு உத்தரவு போட்டார்; அதனால் சில நேச தேசங்களுக்கு அசௌகரியமும் அதிக வருத்தமும் உண்டாயின. வர்த்தகப் பிற்போக்காளரின் கூச்சலுக்குச் செவி கொடுத்து அவர் விலை கட்டுப்பாட்டில் பெரும் பகுதியை ரத்து செய்தார். அவர் திடீரென்று அதி ஆவலுடன் பட்டாளங் களைக் கலைத்ததில் ஐரோப்பாவில் துருப்புக்கள் தங்கியிருக்க வேண்டிய சில இடங்களில் பாதுகாப்பு இல்லாமற் போய்விட்டது. இவை வருந்தத் தக்கவை. மகிழ்ச்சியளிக்கும் காரியம் ஐக்கிய தேச சங்கத்தைப் பற்றியது. அதை சாசுவதமான சர்வதேச ஒத்துழைப்பு ஸ்தாபனமாக நிறுவுவதில் அவர் பாடுபட்டார். ஐ.நா. அல்லது "யூ. என்." னிலிருந்து(United Nations) அமெரிக்கா அதிகமாக எதிர்பார்த்தது தவறு என்று கூறுவோருக்கு நன்மையளிக்கும் சக்தியை—முன்பு சர்வதேச சங்கத்திற்கு அளிக்க மறுத்த சக்தியை—அமெரிக்கா சங்கத்திற்கு அளிக்க உதவிற்று என்பது நினைவிருக்கவேண்டும். வில்ஸன் காலத்திற்குப் பிறகு நாடு ஒரு பாடம் கற்றது.

ஐக்கிய தேசங்கள்: ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய அச்சு நாடுகளுக்கு விரோதமாக உண்டான தேச சேர்க்கையில் 60 தேசங்கள் வரைக் கலந்து கொண்டிருக்கும்போதே (அக்டோபர் 1943-ல்) ஐக்கிய நாடு பிரிட்டன், ரஷ்யா (பிற்பாடு தேசியச் சைனா) ஆகிய நாடுகளின் அயல்நாட்டு மந்திரிகள் அந்தச் சேர்க்கையை ஒரு சாசுவதமான ஸ்தாபனமாக மாற்றிவிட ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அமெரிக்கக் காங்கிரஸ் அந்த நடவடிக்கையைப் பலமாக ஆதரித்தது; அதன் பிறகு 1944-ன் மத்தியில் நிபுணர்கள் வாஷிங்டனில் டம்பார்டன் ஓக்ஸ் என்னுமிடத்தில் கூடி "யூ. என்." ஒப்பந்தத்தின் அடிப்படை ஷரத்துக்களைத் தீர்மானித்தார்கள். பல அம்சங்களில் அது பழைய சர்வதேச சங்கத்தை எளிதாக்கி வலிமைப்படுத்தியதாகும். அதன் பலபகுதிகள் உண்டு; பாதுகாப்பளிக்கும் குழு (Security Council) ஆமையான உலக ஒற்றுமையைக் காக்கும் முக்கியப் பொறுப்பை ஏற்கும்; முறையீடுகளைப்பற்றி வாதிக்க ஒரு பொது "சபை" (Assembly) இருக்கும்; "உலக நீதி ஸ்தலம்" (World Court) முறையான வழக்கு ரூபம் பெற்ற பிரச்னைகளைத் தீர்க்கும்; ஒரு "பொதுச் செயலாளர்" (Secretary General) தம்பிப்பந்தி களுடன் பல நிர்வாகக் காரியங்களையும் கவனிப்பார். ஆலோசகர் குழுவில் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, ஃப்ரான்ஸ், சைனா ஆகிய ஐந்து சாசுவத அங்கத்தினர்களும், சபையால்

இரண்டிரண்டு வருஷ அவதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு அங்கத்தினர்களும் இருப்பார்கள். குழுவின் சாசுவத அங்கத்தினருக்கு தீர்மானத்திற்கு வரும் விஷயத்தை ரத்து செய்யும் ''வீடோ'' (Veto) உரிமையுண்டு.

ட்ரூமன் நிர்வாக காலத்தின் முதல் பெரிய நிகழ்ச்சி மேற்கூறிய ஷரத்துக்களைப் பற்றி வாதிப்பதற்காக ஸான் ஃப்ரான்ஸிஸ்கோவில் 1945 ஏப்ரல் 25-ஆம் தேதியிலிருந்து துவங்கிய ''சர்வ தேச ஸ்தாபனத்தைப் பற்றிய யூ. என். மகாநாடு.'' அங்கு கூடிய 48 தேசங்களின் பிரதிநிதிகள் மூன்று முக்கிய கோஷ்டிகளாகப் பிரிந்தனர்: (1) ரஷ்யா, (2) மேற்கத்தி வல்ல ரசுகள், (3) ஆஸ்டிரேலியாவின் தலைமையில் சில சிறிய மேற்கு நாடுகள். ரஷ்யா பொதுவாக எதிர் வாதத்தில் பிரியங்காட்டி ''வீடோ'' வின் பிரயோகத்தை அதிகரித்து முரடர்களை யூ. என். கண்டிக்கக் கூடிய சக்தியைக் குறைக்க முயன்றது; உலகத்தைக் குழப்பிப் பிரிப்பதற்கே அச்சங்கத்தை உபயோகிக்க அது கருதிற்று. ரஷ்ய அயல் நாட்டு மந்திரி, மொலொடோவ், ஆர்ஜென்டினுவின் பிரவேசத்தைப் பிடிவாதமாக எதிர்த்தார்; ஆனல் அது வீணுயிற்று. ஆன்டனி ஈடன் பிரிட்டனின் முக்கியப் பிரதிநிதி; ஸ்டெட்டினஸ், ஸ்டாஸ்ஸன், வாண்டென்பெர்க் ஆகியோர் அமெரிக்கப் பிரதிநிதிகளில் முக்கியமானவர்கள்; அவர்கள் மூலம் மேற்கு வல்லரசுகள் அமைதிக்காக உழைக்கும் அந்த ஸ்தாபனத்தை பலப்படுத்தவும் மக்களுக்கு நம்பிக்கையுண்டாகும்படி செய்யவும் பாடுபட்டன. சிறு நாடுகள் அந்த ஸ்தாபனத்திற்கு இன்னும் அதிகச் சக்தியூட்ட விரும்பின; ஆஸ்டிரேலிய அயல் நாட்டு மந்திரி, ஹெர்பர்ட் இவாட், சிறு நாடுகளின் வீர நண்பன். மகாநாடு கடைசியாக நாடுகளுக்கிடையே கிளம்பிய ஸ்தூலமான பிரச்னைகளை சாசுவத அங்கத்தினர் 'வீடோ' செய்யலாமே ஒழியப்பூர்வாங்கமான முறையைப்பற்றிய பேச்சையே 'வீடோ' செய்து விடக்கூடாது என்ற தீர்மானத்திற்கு வந்தது. இந்தத் தீர்மானத்தினுல் உலக அபிப்ராயம் வாதிக்கப்பட்டு பக்கபலம் தேடுவதற்கான செல்வாக்கு பெரும் அளவுக்கு யூ. என். சபை வலுவடைந்தது.

அந்தத் தீர்மானங்களை ஸெனெட் துரிதமாகவும் திடமாகவும் ஏற்றுக் கொண்டது; ஒப்பந்தத்தை அங்கீகரித்த வோட்டுகள் 89, எதிர்த்தவை 2. இது மக்களின் மனப்பான்மையை நன்கு பிரதிபலித்தது; ஐக்கிய தேச ஸ்தாபனம் தன் நிரந்தரமான காரியாலயத்தை நியூயார்க் நகரில் ஈஸ்ட் நதியோரம் கட்டத் தீர்மானித்ததும் அமெரிக்காவின் சிரத்தையும் அங்கீகாரமும் முன்னிலும் அதிகமாயின. யூ. என். ஸைப் டல அமெரிக்கர் உலக ஸ்தாபனம் என்று கருதாமல் அமெரிக்க ஸ்தாபனம் என்றே கருதுகிறார்கள் என்ற குறைபாடு கிளம்பும்

காலமும் வந்தது. தனித்தன்மை என்னும் கொள்கை முற்றிலும் ஒழியாவிட்டாலும் அது தற்காப்பு ஷரத்துகளுடன் உலவிற்று. கடைசியில், ''போர் எங்கு துவங்கினுலும் உலகம் முழுதை யும் துன்பப்படுத்துகிறது, அமைதியைத் துண்டு போட்டுப் பாகம் பிரித்துக் கொள்வதற்கில்லை'' என்பதை நாடு புரிந்து கொண்டது.

நியாயமான வாழ்க்கைத் திட்டம்: 1945 வேனிற்காலத்தில் ட்ரூமன் தம் கவனத்தை உள் நாட்டின் பக்கம் திருப்பியதும் அவர் தேசத்தை முற்போக்கான பாதையில் நடத்தத் தீர்மானித்தார். போருக்குப் பிறகு தேசக்கடன் மிக அதிகமாக இருந்தது; ஆனல் அதோடுகூடப் பொருள் உற்பத்தி சக்தி மிகவும் வளர்ந்திருந்தது. பெருவாரி உற்பத்திச் செய்முறைகள், புது விஞ்ஞான அறிவு, நிர்மாண இயலின் முன்னேற்றம், எல்லாம் சேர்ந்து வருஷா வருஷம் புது அற்புதங்களைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தன. 1944-45-ல் யுத்தம் உச்ச நிலையிலிருக்கும் போது தொழிற்சாலை உற்பத்தி, விவசாய உற்பத்தி, போக்குவரத்து, எல்லாமே பழைய உயர் வரம்புகளை மிகவும் முந்திவிட்டன. 1929-ல் இருந்ததைப் போல் இரண்டரை மடங்கு பொருளுற்பத்தி வளர்ந்துவிட்டது என்று மதிப்பிடப்பட்டது. உணவுப் பஞ்சமும் இதரப் பொருள் பஞ்சமும் நிறைந்த உலகம் அமெரிக்க உற்பத்தி அனைத்தையும் உறிஞ்சி ஏற்கத் தயாராயிருந்தால், பட்டாளங்கள் கலைக்கப்பட்டதும் வேலையில்லாதவரின் எண்ணிக்கை மிக வளருமோ என்ற பயம் ஆதாரமற்றதாயிற்று. ஆனல் 1950-ன் தேச வருமானம் 275 பில்லியன் டாலர்; வியாபார மந்தம் அதிகமாயிருந்தபோது அத்தொகை 40 பில்லியன் டாலர்; ஆகவே வேகமாய் அதிகரிக்கும் பொருளுற்பத்தி நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளப்படுமா, சமுதாய சமநலம் வழங்குமா, என்ற பிரச்னைகள் கிளம்பின.

ரூஸ்வெல்டின் சீடரான ட்ரூமன் புதுத் திட்டத்தை அமுலில் வைத்திருக்க விரும்பினர். அகல வைத்த காலைக் குறுக்கவேண்டும், நிலையை மிதமாகவும் வலுவாகவும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கட்சியினருக்கு அவர் 1945-செப்டெம்பரில் துடுக்காக விடையளித்து. ''நியாயமுறைத் திட்டம்'' எனப்பட்ட தம் காரியக்கிரமத்தை காங்கிரசின் முன் சமர்ப்பித்தார். அதன் கருத்துக்களாவன—தேவையேற்பட்டால் அனைவருக்கும் வேலை கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுதல்; சம்பள விகிதங்களின் கீழ் வரம்பை உயர்த்துதல்; சமுதாய க்ஷேமத் திட்டத்தை விஸ்தரித்தல்; சேரிகளை ஒழித்து நல்ல வீடுகள் கட்டுவிக்க மத்திய அரசாங்கம், உதவி புரிதல்; விவசாய விலைவாசிகளின் கீழ் வரம்பை உயர்த்துதல்; டென்னெஸி நதி நிர்வாகம் போல மிஸௌரி, கொலம்பியா, மற்றும் வேறு நதிகளுக்கான திட்டங்கள் அமைத்தல்,

ரூஸ்வெல்டின் திட்டத்திலிருந்தபடி பாட்டாளிகளையும் குடியானவர்களையும் நேசமாக இருக்கச் செய்து நாட்டில் ஆற்றலுள்ள சமுதாய, பொருளாதாரக் குடியரசு நிலைக்கச் செய்தல் அவருடைய அவா. ஆனால் பல நன்பங்கள் கிளம்பின. கூலி விகிதங்கள் ஏறிக்கொண்டும், விவசாய விலைகள் குறைந்து கொண்டும் போனதால் என்றுமே அதிக ஒற்றுமையில்லாத பாட்டாளிகளும் குடியானவர்களும் தம் தம் வழி சென்றனர். வியாபாரத்திலும் உயர் தொழில்களிலுமிருந்த பிற்போக்காளர் அரசாங்கக் கட்டுப்பாடுகள் மிதமாயிருக்கவேண்டும், வரிகள் குறையவேண்டும் என்று விரும்பினர். தெற்கு ராஜ்யங்களில் நடமாட்டத்திலிருந்த தலைவரியையும் ''தான்தோன்றி தண்டனைப்'' பழக்கத்தையும் (lynching) தடுக்கும்சட்டங்களுக்காக ட்ரூமன் ஃபெடெரல் சபையை அணுகினர்; நீக்ரோக்களுக்கு நியாயமான பங்கு வேலைகள் அளிக்க உதவின யுத்தகாலக் கமிட்டியை அவர் கலைக்காமல் நிறுத்திக் கொள்ள விரும்பினர்; இவற்றைக்கண்டு தென் ராஜ்ய வெள்ளையர் வெகுண்டனர். ரிபப்லிகன் பிற்போக்காளர்களும் தென் டிமோக்ராட்டிக் பிற்போக்காளர்களும் ஒரு இரும்பு மதில்போல் காங்கிரசில் ட்ரூமனை எதிர்த்து நின்றனர்.

''நியாயத்திட்ட''த்தால் உண்டான உடனடியான நன்மை என்னவென்றால் ''புதுத்திட்ட''த்தால் அதுவரை ஏற்பட்ட பலன்கள் நஷ்டமாகிவிடாமல் காப்பாற்றப்பட்டன எனலாம். முற்போக்காளர்களுக்கு அது ஒரு குறிக்கோளாக உதவி, அரசாங்கம் பின்செல்லாமல் இருக்கும்படி எச்சரிக்கை செய்ய உதவிற்று. காலக்கிரமத்தில் ட்ரூமனின் கருத்துகள் அநேகமாய் எல்லாம் சட்டங்களாயின. ஆனால் அதற்குள் பத்தாண்டு போராடி முன்னும் பின்னும் ஊஞ்சலாட வேண்டி வந்தது; இரு கட்சி தலைவர்களும் அவ்வப்போது பொறுப்பேற்கவேண்டி இருந்தது. மொத்தத்தில் சிவில் போருக்குப் பிறகும், முதல் உலக யுத்தத்திற்குப் பிறகும் நாடு எதிர்ப்போக்கான நிலைகளை அனுபவித்தது போல் இம்முறை ஏற்படவில்லை என்பது முக்கியமான விஷயம்.

சமாதான யத்தனங்கள்: சாந்திமயமான உலகத்தை ஸ்தாபிப்பது மிகக் கஷ்டமான காரியம், அநேகமாக அசாத்தியமானது, என்பதைப் பொது ஜனங்கள் உணர்ந்ததைக் காட்டிலும் சீக்கிரமாக உயரிய அரசாங்க அதிகாரிகள் அறிந்தார்கள். ஸ்டாலினின் நிர்வாகத்தின் முரட்டு யோசனைகளை ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மரணத்திற்கு சிறிது முன்பு தெரிந்து கொண்டார். ரஷ்யாவில் முகாம் கொண்ட ராஜ தூதர் ஹாரிமனும், இதர அமெரிக்க அதிகாரிகளும் தாமதமின்றி ட்ரூமனை எச்சரிக்கை செய்தார்கள். 1945-ல் ஜூலை 17 முதல் ஆகஸ்டு 2 வரை பாட்ஸ்டாமில் நடந்த முக்கூட்டுச் சபைக்கு

ஜனாதிபதி நேரில் சென்று நடைமுறையை நன்கு கவனித்தார். முக்கியமான பிரச்னைகளில் கிழக்கு, மேற்கு வல்லரசுகள் முன்பின்போக முடியாத ஸ்திதியை அடைந்தன; ஒரு அயல் நாட்டு மந்திரிக் குழுவினிடம் சமாதான ஸ்தாபன வேலையை ஒப்படைத்துவிட்டுச் சபை அந்நேரத்திற்குக் கலைந்தது; அக்குழுவில் ஐக்கிய நாடு, பிரிட்டன், ஃப்ரான்ஸ், ரஷ்யா, சைனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இருந்தனர். தென் மேற்கு ஜெர்மனியில் சுமார் 40,000 சதுர மைல் கொண்ட பிரதேசத்தில் அமெரிக்கப் படைகள் இருந்தன; கிழக்கு ஜெர்மனியில் 46,500 சதுர மைல் ரஷ்யாவின் வசமிருந்தது; 42,700 சதுர மைலை பிரிட்டிஷாரும் 16,700 சதுர மைலை ஃபிரஞ்சுக்காரரும் கண் காணித்தனர். ரஷ்யன் மாநிலத்திலிருந்த பெர்லின் நகரமும் அந்நான்கு அரசுகளின் மேல் பார்வையில் இருந்தது. ஆஸ்ட்ரியாவும் நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. நேசப் படைகளின் பிரதான சேனாதிபதியான ஜெனரல் டக்ளஸ் மாக் ஆர்தரின் கீழ் ஜப்பான் இருந்தது. சுதந்திரத்திற்கான வாக்களிப்புப் பெற்ற கொரியா இரண்டாகப் பிரிக்கப்பட்டு வடபாதி ரஷ்யர் வசமும், தென் பாதி ஐக்கிய நாட்டின் வசமுமாக இருந்தது.

ரஷ்யா தன் எல்லையோரத்தில் கூடிய தூரம் வரை தன்னை ஆச்ரயித்துக் கீழ்ப்படியும் சிறு நாடுகளை ஏற்படுத்திக்கொள்ள திட்டமிடுகிறது என்றும், டார்டனெல்ஸ் கடலையும் மத்தியதரைக் கடலையும் சுலபாய் அடைய வசதி தேடுகிறது என்றும், ருர் (Ruhr) பிரதேசத்தையும் அங்குள்ள பெரிய தொழில் வசதிகளையும் நிர்வகிக்கும் வேலையில் பங்கு கொள்ள விரும்புகிறது என்றும், ஃப்ரான்ஸ், இத்தாலி முதலான பலஹீனமடைந்த தேசங்களில் அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் மூலம் அரசாங்கங்களைச் செயலற்றவை ஆக்கவோ, முடியுமானால் வசப்படுத்தவோ முயலும் என்றும் தெளிவாயிற்று. பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி எர்னஸ்ட் பெவின் போலவே அமெரிக்க அயல் நாட்டுக் காரிய தரிசி பர்ன்ஸும் சோவியத் அரசாங்கத்துடன் ஒரு இடைக்கால ஒப்பந்தத்திற்காக முயன்றார். சொல்லப் போனால் அவர் அளவு கடந்து உதாரமாக நடந்து கொண்டார். ஆனால் விட்டுக் கொடுத்தல், நடு மார்க்கம், என்பது ரஷ்யர் அகராதியில் இல்லாத சொற்கள்; கிடைக்கக் கூடியதை எல்லாம் மாஸ்கோ பற்றிக் கொண்டது; பதிலுக்கு சிறிதும் சலுகை காட்டவில்லை மேற்கு வல்லரசுகள் போலந்தை உண்மையிலேயே சுயாதீனமான குடியரசாக ஆக்க விரும்பின; ஆனால் ரஷ்யா மிக அக்கிரமமாக நடந்து கொண்டது. பழைய போலந்தில் ஏறக்குறைய 78,000 சதுர மைல் இடத்தைத் தன் நாட்டோடு சேர்த்துக் கொள்வதுடன் திருப்தியடையாமல், யுத்தகாலத்தில் லண்டனில் போலந்தியர்

நடத்திய ''நாடு கடத்தப்பட்ட அரசாங்கத்''தின் பிரதிநிதிகளை ரஷ்யர், போலந்து தம் ராணுவ ஆக்ரமிப்பில் இருக்கும் சமயம், கொன்று தீர்த்தனர்; ஸோவியத் முறையில் அவர்கள் போலந்திய நிர்மாணம் அமைத்தார்கள்; தங்களுக்குக் கீழ்ப் படிந்திருக்கும் கம்யூனிஸ்ட் ஆட்சியும் அவர்கள் ஸ்தாபித்தார்கள். மேற்கு வல்லரசுகள் பெருவாரியாக ராணுவ சக்திகளைக் குறைத்துக் கொண்டிருக்கையில் 1946-ன் ஆரம்பத்தில் ரஷ்யா தன் போர் புரியும் சக்தியை அதிகப்படுத்திக் கொண்டது.

ரஷ்ய ஆபத்தைச் சமாளிக்க ஐக்கிய நாடு தன் மனப்பான்மையைக் கடினமாக்கிக் கொண்டது. 1945-ன் இலையுதிர்காலத்தில் லண்டனில் நடந்த கூட்டத்திலும், டிசம்பர் மாதம் மாஸ்கோவில் நடந்த கூட்டத்திலும், அடுத்தாண்டு மேயிலிருந்து அக்டோபர் வரை பாரிஸில் நடந்த சபைகளிலும், அமெரிக்கப் பிரதிநிதிகள் மேலும் மேலும் பிடிவாதமாக நடந்து கொண்டார்கள். ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா சம்பந்தமாகச் செய்யப்பட்ட உடன்படிக்கைகளை ஸ்டாலின் உடனே —அமெரிக்க பிரிட்டிஷ் ஆட்சேபங்களைப் புறக்கணித்து— அந்நாடுகளைத் தன் வசம் ஆக்கிக் கொள்ளுவதற்காக துஷ்பிரயோகம் செய்தான். ஃபின்லண்டு விடுதலை யளிக்கப்பட்டது; ஆனால் சிறிது காலத்தில் அது ரஷ்யாவுடன் பத்து வருஷ பரஸ்பர சகாய ஒப்பந்தத்தில் கையொப்பமிடும்படி கட்டாயப்படுத்தப்பட்டது. இத்தாலி 1946-ல் குடியரசு ஆயிற்று; அதன் பிறகு அது பின் காலனிகளையெல்லாம் இழக்கும் நிபந்தனையுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது; அந்நாடு மாத்திரமே மேற்கு கோஷ்டியினரின் வழிச் சென்றது. சுதந்திரப் பிரதேசமாகிய ட்ரீஸ்டே-யில் யூ. என். ன் அதிகார எல்லையின் கீழ் அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகள் நிறுத்தப்பட்டனர். பிரிட்டிஷ் மாவட்டத்திலுள்ள ரூர் பிரதேசத்திலும் நிர்வாக விஷயங்களில் ரஷ்யர் தலையிடாதபடி ஆங்கில-அமெரிக்கர் பார்த்துக் கொண்டனர். ஆஸ்ட்ரியாவுக்கு விடுதலையளிக்கும் ஒரு ஒப்பந்தத்தையும் ரஷ்யா ஒப்புக் கொள்ளவில்லை; ஆக்ரமிப்புப் பிரதேசத்திலிருந்து செல்வம் சுரண்டவும், கிழக்கு ஐரோப்பாவிலும் பால்கனிலும் சப்ளைப் பாதைகளில் குறுக்குக்களை நிறுத்த ஒரு சாக்காகக் கொள்ளவும் மாஸ்கோ விரும்பிற்று.

இந்நாடுகள் அனைத்துக்கும் அபிப்பிராய பேதமே இல்லாத ஒரு விஷயம் மிக உயரிய நாஜி தலைவர்களின் தண்டனையைப் பற்றியது. குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட்டு, 22 போர்த் தலைவர்கள் 1945 நவம்பரில் நூரெம்பர்க் பட்டணத்தில் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டனர். இரு தரப்பிலும் நன்கு விவாதிக்கப்பட்டு, மறு ஆண்டு அக்டோபர் முதல் தேதியன்று

11 பேர் மரண தண்டனை பெற்றனர். ஹெர்மன் கோயரிங் தன் சிறை அறையில் விஷம் உண்டு இறந்தான்; அயல் நாட்டு மந்திரி ஜோகிம் வான் ரிப்பென்ட்ராப் உள்படப் பத்துபேர் தூக்கிலிடப்பட்டனர். இந்தப் புது விதமான சர்வதேச நடவடிக்கை நியாயமா உசிதமா என்பது பற்றி ஐக்கிய நாட்டில் கருத்து வேற்றுமை மிகவும் இருந்தது. நாஜிகள் இயற்றிய குற்றங்கள் வர்ணிக்க முடியாத அளவு கோரச் செயல்கள்; ஆனாலும் அவர்களுடைய தண்டனை ஒரு ஜெர்மன் நீதிக் குழுவுக்கு விட்டிருக்கப்படலாம். அதுவும் தவிர, ரஷ்யர்களின் குற்றங்கள் எவ்வகையில் கொடுமையில் குறைந்தவை? 1939-ல் ரிப்பென்ட்ராப் மொலொடோவ் இருவரும் சேர்ந்து முடித்த ஒப்பந்தமே இரண்டாம் உலக யுத்தத்தின் காரணம்; உடனே வீம்புள்ள இரு தோழர்களும் போலந்து மேல் படையெடுத்து அதை அழித்தார்கள். பிடிபட்ட 7000 போலந்திய ஆபீசர்களின் கல்நெஞ்சான கொலையை ரஷ்யர்கள் ஹிட்லர்மேல் சுமத்தினர்கள்; அநேகமாக அது ஸ்டாலினின் செயல் என்றே சொல்லலாம்.

அமெரிக்காவின் திடமான நடத்தை : ரஷ்யாவைப் பற்றிய அமெரிக்க மனப்பான்மை முதலில் நிதானமாகவும், பிறகு வேகமாகவும் மாறிற்று. ஸ்டாலினின் மோச நடத்தையால் அதிகக் கோபமடைந்த ட்ரூமன் 1945-லேயே ''ஸோவியட்களுக்கு இடம் கொடுத்துக் கொண்டே போவதை நிறுத்த வேண்டும்'' என்று கூறினர்; ஆனால் அமெரிக்க மக்களின் மனம் நிதானித்துச் சென்றது. 1946 மார்ச்சு மாதத்தில் மிஸௌரியில் ஃபுல்டன் பட்டணத்தில் வின்ஸ்டன் சர்ச்சில் பேசிய போது ரஷ்ய அக்ரிமங்களைக் கண்டித்ததோடு, மேற்கு நாடுகள் அப்போக்கை எதிர்க்க வேண்டும் என்றும் வற்புறுத்தினர். பல அமெரிக்கருக்கு அது அதிர்ச்சியளித்தது; ஆனால் மேடையில் ட்ரூமனும், இதர இடங்களில் பல தலைவர்களும் பாராட்டினர்கள். ஏப்ரல் 30-ஆம் தேதி ''சர்வதேச எதிர் நடவடிக்கை'' ஒரு புதுப்போருக்கு ஏற்பாடு செய்கிறது என்று குற்றம் சாட்டி ஸ்டாலின் சர்ச்சிலுக்கு விடையளித்தான். ஆனால் ஆகஸ்டு 12-ஆம் தேதி அவன் டார்டனெல்ஸ் கடலின் நிர்வாகத்தில் தனக்கும் ஒரு பங்கு வேண்டுமென்று துருக்கி தேசத்திற்குக் கடிதம் எழுதியதிலிருந்து அவனுடைய உண்மையான எண்ணம் சிறிது தெரிந்தது. பாரிஸ் நகரில் நான்கு பெரிய வல்லரசுகளின் அயல் நாட்டு மந்திரிகளின் ஆலோசனை சபையில் பர்ன்ஸ் கோடை காலம் முழுதும் அவதிப்பட்டு ஆகஸ்டு 15-ஆம் தேதி ''ரஷ்யர்கள் அமெரிக்கக் கொள்கையைத் திரும்பத் திரும்ப நிந்தித்து துஷ்பிரசாரம் செய்கிறார்கள்'' என்று வாய் விட்டுக் குற்றம் சாட்டி விட்டார்.

அப்பொழுது ஒரு எதிர் பாராத சம்பவம் நிகழ்ந்தது. ஒரு புறம் பர்ன்ஸ் மொலொடோவோடு மல்லுக்கு நின்று கொண்டிருந்தார்; யூகோஸ்லாவியா ஆயுத மற்ற மூன்று அமெரிக்க விமானங்களை சுட்டு வீழ்த்தியதற்காக கம்யூனிஸ்ட் ஸகானுக் கடங்கிய அந்நாட்டு அரசாங்கத்துடன் அமெரிக்கா கோபமாக இருந்தது; மறுபுறம் "ரஷ்யருடன் கறாராக நடந்து கொள்ளுதல்" என்னும் போக்கைக் காரசாரமாகக் கண்டித்து அமெரிக்கக் காரியதரிசி வாலஸ் செப்டம்பர் 12-ஆம் தேதி ஒரு முக்கியமான கூட்டத்தில் பேசினார். அச்சொற் பொழிவின் விஷயம் எழுத்தில் ஜனாதிபதியிடம் காட்டப்பட்ட போது, ட்ரூமன் சரியாக வாசிக்காமல் சரி என்று ஒப்புக் கொண்டார்; அது யோசனையற்ற காரியம். நீதி தவறி முதுகுப் புறம் தாக்கப்பட்டதாகக் கருதிய பர்ன்ஸ் கோபமடைந்து வாலஸ் ராஜிநாமா செய்யா விட்டால் தான் செய்வதாக எச்சரிக்கை செய்தார். உடனே ட்ரூமன் அயல் நாட்டுக் கொள்கைகளில் "அடிப்படையான முரண்பாடு" இருப்பதாகக் குறை கூறி வாலஸை பதவியிலிருந்து நீக்கினார். பொது அபிப்பிராயம் ட்ரூமனை ஆதரித்தது. ஆனால் பர்ன்ஸுக்கும் ஜனாதிபதிக்கு மிடையே மனத்தாங்கல் இருந்து கொண்டே இருந்தது. அவர்கள் தேவையான அளவு மனம் விட்டுப் பேசிக் கொள்ள வில்லை; 1947-ன் துவக்கத்தில் பர்ன்ஸ் தன் நேக நிலை சரியில்லை என்று கூறி ராஜிநாமா செய்தார்; ஜெனரல் ஜியார்ஜ் மார்ஷல் அந்த ஸ்தானத்திற்கு வந்தார்; உண்மையிலேயே அவர் அக்காலத்து மிகப் பெரிய மனிதர்களுள் ஒருவர்.

பாரிஸ் மகாநாடு ஜெர்மனியையும் ஆஸ்ட்ரியாவையும் பற்றி ஒரு முடிவுக்கும் வராததால் ரஷ்யாவின் சக்தி மிக அதிகமாக இருந்தது; கிழக்கு ஐரோப்பா முழுதும் அதன் வசம் இருப்பதோடு மேற்கு ஐரோப்பாவுக்கும் அது ஆபத்து கரமாக இருந்தது. அவ்வாண்டு இலையுதிர் காலத்தின்போது ஃபிரான்ஸ் ஒருபுது நிர்மாணத்தை ஏற்றுக்கொண்டது; நவம்பரில் புது தேச சபையின் தேர்தலில் ஃபிரெஞ்சு கம்யூனிஸ்டுகள் மற்றக் கட்சியினரைக் காட்டிலும் அதிக ஸ்தானங்கள் பெற்றனும் சுதந்திர நாடுகளுக்கு ஒரு அதிர்ச்சி உண்டாயிற்று. ஆனால் முக்கியமான கவலை ஜெர்மனியைப் பற்றியது. யுத்த நஷ்டஈடு என்ற பெயரில் ஜெர்மனியிலிருந்து தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களைப் பெருவாரியாகப் பற்றிக்கொள்ளுதல், ஜெர்மனியின் புனரமைப்பைத் தடுப்பது அல்லது தாமதப்படுத்துவது. வேண்டுமென்றே தரித்திரம், சீர்கேடு, மனத் தளர்ச்சி முதலிய தீய நிலைகளை வளர்த்தல், மக்களை கம்யூனிஸம் பக்கம் திருப்பச் செய்தல், இதுவே ரஷ்யக் கொள்கை. அதற்கு முற்றிலும் மாறுக, ஜெர்மனியின் பொருளுற்பத்தி நன்மையளிக்கும் முறையில் வளரவேண்டும்,

ஐசுவரிய நிலை மறுபடி அமையவேண்டும், ஒழுங்கு ஸ்திரப்பட வேண்டும், குடிநல அரசியல் முறையில் மக்கள் பயிற்சிபெற வேண்டும் என்பதே ஆங்கில-அமெரிக்கக் கொள்கை. மேற்கு ஜெர்மனியின் ஜனத்தொகை சுமார் 45 மிலியன்; கிழக்கு ஜெர்மனியின் தொகை சுமார் 17 மிலியன். தொடர்ந்து பெரிய எண்ணிக்கையில் அகதிகள் கிழக்கே இருந்து வந்ததால் மேற்குப் பகுதியின் ஜனத்தொகை பெருகிக்கொண்டே இருந்தது. சாமான்ய நிலையில் நாடு முழுதிற்கும் வேண்டிய உணவுப்பொருள்கள் கிழக்கு ஜெர்மனியிலிருந்து கிடைத்திருக்கும்; ஆனால் ரஷ்யர்கள் அந்த வெளியேற்றத்தை அனுமதிக்கவில்லை. ஆகவே மேற்கு வல்லரசுகள் தம் வசமிருந்த பல்வேறு பிரதேசங்களுக்காக ஏராளமான உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யவேண்டி வந்தது; அமெரிக்காவும் பிரிட்டனும் அதிக பொறுப்பு ஏற்கவேண்டி வந்தது. அதன் சாராம்சம் என்ன வெனில், அவ்விரு நாடுகள் தம் பகுதிகளில்—நாட்டின் மூன்றில் இரண்டு பங்கில்—பணமும் பொருளும் வேகமாய்க் கொணர்ந்து கொட்டிக் கொண்டிருக்கையில், ரஷ்யா தன் மூன்றில் ஒரு பங்குப் பகுதியிலிருந்து உள்ளதையெல்லாம் வாரிச் சுருட்டிக்கொண்டிருந்தது.

இது சகிக்க இயலாத நிலை பெர்லினிலிருந்த ஆங்கில-அமெரிக்க ரஷ்யக் கட்டுப்பாடுக் குழுவில் பிரதிநிதிகளுக்கிடையே விடாத சச்சரவு இருந்து கொண்டிருந்தது. ஐக்கிய நாடுகளின் சார்பில் ஜெனரல் க்ளே (Clay) பெருந்தன்மையோடும் நல்லெண்ணத்தோடும் நிர்வாகம் நடத்தி ஜெர்மனியின் மதிப்பையும் பிரிட்டிஷ் சகாக்களின் பாராட்டுதலையும் பெற்றார். 1946 டிசம்பர் 2-ஆம் தேதி, ஐக்கிய நாடும் பிரிட்டனும் தம் இரு பகுதிகளையும் பொருளாதாரக் காரியங்களுக்காக இணைக்க ஒப்பந்தம் செய்துகொண்டன; அவ்வாறாக "பை-ஸோனியா"வின் (Bizonia: இரட்டைப் பிரதேசம்) பரப்பு சுமார் 80,000 சதுர மைல்; அங்கு வாழ்க்கை வசதிகள் முன்னிலும் சீராடைந்தன. இதனால் ரஷ்யர்களுக்குக் கலக்கமும் அவமானமும் உண்டாயின. ஆங்கில-அமெரிக்கர் ஜெர்மன் தொழிற்சாலை மேலிருந்த கட்டுப்பாடுகளைச் சிறுகச்சிறுகத் தளர்த்தியதும், கம்யூனிஸ்ட் வசமிருந்த நாடுகளுக்கு சாமான் அனுப்புதலுக்குத் தடை பேற்படுத்தியதும், பொதுவாக ஜெர்மன் புனரமைப்பை ஊக்குவித்ததும் ரஷ்யர்களுக்குப் பிடியாத காரியங்கள். ஹிட்லரின் எழுச்சிக்குப் பிறகு முதல் முறையாக, 1946-ல், அமெரிக்க பிரிட்டிஷ் மேல்பார்வையில் சுயாதீனமான முனிசிபல் தேர்தல்கள் நடைபெற்றன.

1947-ன் ஆரம்பத்தில் ஜெர்மனியைப் பற்றிய பிளவு பூர்ணமாகவும் பகிரங்கமாகவும் ஆயிற்று. மார்ச் 10-ஆம் தேதி அயல் நாட்டு மந்திரிகளின் ஆலோசனைக் குழு மாஸ்கோவில்

கூடி ஆஸ்ட்ரிய-ஜெர்மானிய அமைதி ஒப்பந்தத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தது. ஆறு வாரங்கள் காரசாரமாகப் பேசிய பிறகு முக்கியமான ஒரு விஷயத்திலும் ஒற்றுமை ஏற்படாத ஸ்திதியில் கூட்டம் ஒத்திப்போடப் பட்டது. மார்ஷல், பெவின், பிடால்ட் ஆகிய மூவரும் விட்டுக்கொடுக்காமல் ஒரே தீர்மானமாய் இருந்தார்கள்; மொலொடோவும் அவ்வாறே செய்தான். எல்லாப் பிரச்னைகளையும் சமரஸப் பேச்சால் தீர்க்க முடியும் என்று ஸ்டாலின் தன்னிடம் கூறியதாக மார்ஷல் அமெரிக்க மக்களிடம் தெரிவித்தபோது அவர்கள் பசிஃபிக்கிலிருந்து அட்லாண்டிக் கரை வரை பகபகவென எதிரொலிக்கச் சிரித்தார்கள்; ஸ்டாலினைப் பொதுமக்கள் அவமதித்து விட்டனர். ஜெர்மன் பிரச்னை தற்காலிகமாக ஒத்திப் போடப்பட்டது; அது மரணப் பிடி என்று ஒப்புக்கொள்ளப் பட்டது. உடனடியாகக் கவனம் க்ரீஸ், துருக்கி நாடுகள் பக்கம் திரும்பிற்று

தற்காப்புப் பிரச்னைகள்: அமெரிக்கத் தளவாடங்களை அதிகப் படுத்த வேண்டி வரும் என்று இந்த 'சூடாத போர்' காட்டிற்று. அது தெளிவாவதற்கு முன்னரே, தற்காப்புத் திட்டத்தையும் நிர்வாகத்தையும் திறமைப்படுத்த வேண்டும் என்ற கவலை அமெரிக்கருக்கு மிகவும் இருந்தது. படைகளையும் அதிகாரிகளையும் ஒரு நிர்வாகத்தின் கீழ்கொண்டு வேண்டிய பெருந் தேவையைப் போர் தெளிவாக்கி விட்டது. இந்த உத்தேசத்திற்கான பிரசாரத்தை ட்ரூமன் நிர்வாகம் ஆதரித்தது; காங்கிரசும் கடைசியாக ஒப்புக்கொண்டது.

1947 ஜூலை 26-ஆம் தேதி, தரைப்படை, கடற்படை, விமானப்படை மூன்றையும் ஒரு புதிய தற்காப்பு இலாக்காவின் கீழ் வைப்பதற்கான சட்டத்திற்கு ட்ரூமன் கையொப்பமிட்டார்; ஜேம்ஸ் ஃபாரெஸ்டால் (Jamse Forrestal) அதன் முதல் தலைவர். ஐக்கியப்பாடு கவனத்தோடும் விஸ்தாரமான பொது முறையிலும் திட்டமிடப் பட்டிருந்தது. ஒவ்வொரு அங்கத்திற்கும் ஒரு செயலாளர் உண்டு; ஆனால் அவருக்கு மந்திரிக் குழுவில் இடம் கிடையாது. அயல் நாட்டு நிலைமைய ஆராய்ந்து யோசனை கூறுவதற்கு "தேசத் தற்காப்புக் குழு" ஸ்தாபிக்கப்பட்டது; ஜனதிபதி, அயல் நாட்டுக் காரியதரிசிகள், "தேசப் பாதுகாப்புப் போர்டின்" தலைவர் ஆகியோர் அதன் அங்கத்தினர்கள். அந்த போர்டு அமைதி காலத்தில் அதிக அலுவலற்று இருந்தாலும் யுத்த காலத்தில் அதிக முக்கியத்துவம் பெறும்; அது நாட்டின் வளங்கள், வசதிகள், பொருளுற்பத்தி முதலிய விஷயங்களைப்பற்றிய தகவல்கள் சேகரித்து ஆராய்ந்து சீர்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். நீர் நிலப் படைகள் கவனித்து வந்த தளவாட உற்பத்தி வேலைகளை தனியாக அமைக்கப்பட்ட ஒரு "தளவாட போர்டு"

(Munitions Board) கவனித்துக்கொள்ளும். விஞ்ஞான ஆராய்ச்சியை நிர்வகிக்க ஒரு "ஆராய்ச்சி அபிவிருத்தி போர்டு" ஏற்பட்டது. கடைசியாக, ஒரு "மத்தியச் செய்தி ஸ்தாபனம்" இதர நாடுகளின் தளவாட, பட்டாளத் தகவல்கள் அறிந்து வகைப்படுத்தி அரசாங்கத்திற்கு அளிக்க வேண்டும். பெரும்பாலும் ரகசியமாகச் செயலாற்றும் அந்த ஸ்தாபனம் ஒரு முக்கியமான அங்கமாயிற்று.

ஒற்றுமைக்கான திட்டங்கள் இயற்றுவது சுலபம், செயலாற்றுவது கடினம் என்பது தெளிவாயிற்று; அது வருந்தத்தக்க விஷயம். பல எதிர்ப்புகளைச் சமாளித்துப் பூர்வாங்கவேலை செய்த ஃபாரெஸ்டால் ஒரு சிற்றடக்கமான தற்காப்பு இலாக்காவைக் கற்பனை செய்திருந்தார்; முப்படைகளின் நட்பு நிறைந்த ஒத்துழைப்பு அதற்குக் கிடைக்கும் என்று அவர் எதிர்பார்த்தார். அதற்கு முரணாக, புது இலாக்கா கட்டுக் கடங்காமல் பெரிதாக இருந்தது; செலவுப்பண அனுமதியைப் பற்றியும், சக்திகளைப் பற்றியும் மூன்று ராணுவ அங்கங்களும் தாயாதிப் பொறுமையுடன் சண்டையிட்டன. இன்னொரு யுத்தம் ஏற்பட்டால் விமானங்கள், போர்க் கப்பல்கள், அணுசக்தி ஆயுதங்கள், ஒவ்வொன்றின் கடமையும் முக்கியத்துவமும் எவ்வாறிருக்கும் என்பது பற்றி நிபுணர்களிடையே குறிப்பான அபிப்பிராயபேதம் இருந்தது. அவர்களுடைய குறுகிய நோக்குக்கே அது சான்று.

பல இன்னல்களுடன் போராடி தற்காப்பு இலாக்காவை நிறுவுவதிலும், முப்படைகளின் சச்சரவுகளைத் தீர்ப்பதிலும், செலவுகளுக்குக் காங்கிரசிடமிருந்து மன்றாடி வாங்குவதிலும் நியாயமற்ற அரசியல் விரோதிகளின் எதிர்ப்புக்கு சமாதானம் கூறுவதிலும் ஃபாரஸ்டால் தம் தேக நிலையைப் பாழாக்கிக் கொண்டார். பாவம், வேலையிலிருந்து விலகிய சிறிது காலத்திற்கெல்லாம் அவர் இறந்தும் போனார். கடமையறிந்த ராஜதந்திரி, அபூர்வப் பண்புள்ளவர், மென்மையான உணர்ச்சி உடல் பெற்றவர், போருக்குப்பின் பணியாற்றியவர்களில் அவர் பாராட்டத்தக்க தீரர். அவருடைய உத்தியோகத்தை ஏற்ற லூயி ஜான்ஸன், மேற்கு வர்ஜீனியாக்காரர், அதிக ஊக்கமும் ஆற்றலும் உள்ளவர், ஆனால் பிறர் உள்ளம் அறியும் சக்தியோ சமயோசித நடத்தையோ அற்றவர். ட்ரூமனின் சம்மதத்துடன் அவர் சிக்கன வழியில் சென்றார்; ஆனால் 'சூடற்ற போர்த் தீவிரம்' அடைய அது ஆபத்தான வழி என்பது தெரிந்தது. காங்கிரஸோடும், அயல் நாட்டு இலாக்காவோடும், ராணுவக் காரியாலயங்களோடும் அவர் சண்டை பிடித்துக்கொண்டார். ஃபாரெஸ்டால் காலத்தில் அனுமதிக்கப்பட்ட பெரிய விமானம் தாங்கி கட்டப்படுவதை அவர் நிறுத்தினார். அவரால் தீமை ஏற்படும் என்று

தெரிந்ததும் விரைவில் அவரை விலக்கி விட்டனர்; நாட்டின் சரியான ராணுவக் கொள்கை விடைபெறுத பிரச்னையாகவே இருந்தது; ஆபத்து பயங்கர நிலை எட்டும்போது, அரசாங்கம் முப்படைகளையும் அதிகச் செலவில் பெருக்கிற்று; அது அறிவாளி செய்யும் காரியமா என்பது சந்தேகமே.

தேச நோக்கத்திலும் சர்வதேச நோக்கத்திலும் அணுச்சக்தியும் அணு ஆயுதங்களும் மிக முக்கியமான பிரச்னையைக் கிளப்புகின்றன. அநேகமாக ஒரேகாலத்தில் ஐக்கிய தேச ஸ்தாபனமும் காங்கிரசும் அப்பிரச்னைக்கு விடைகாண ஆரம்பித்தன. பத்து அங்கத்தினர் கொண்ட "அணுச்சக்தி கமிஷன்" ஒன்றை யு. என். க்ஷேம நிலைக்குழு நிறுவற்று; அதில் ஐக்கிய நாட்டின் பிரதிநிதி வாரன் ஆஸ்டின், இங்கிலாந்தின் பிரதிநிதி ஸர் அலெக்ஸாண்டர் காடொகன், ரஷ்யாவின் பிரதிநிதி ஆண்ட்ரை க்ரொமைகோ. 1946-ல் உலகம் முழுதும் அணுச்சக்தி ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான விஸ்தாரமான திட்டம் ஒன்று பெர்னார்ட் பரூச் தயாரித்து அக்கமிஷனின் முன் சமர்ப்பித்தார். அக்காலத்தில் அவ்வாயுதங்கள் ஐக்கிய நாட்டின் இடம் மாத்திரமே இருந்ததால் ஒரு அமெரிக்கன் தயாரித்த அந்தத் திட்டம் அபார உதாரத் தன்மையைக் காட்டிற்று. அது அளித்த யோசனைகளாவன; அந்த க்ஷேத்திரத்தை முழுதும் கட்டுப்படுத்தும் சர்வதேச அணுச்சக்தி ஸ்தாபனம் ஒன்று நிறுவப்படவேண்டும்; எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படக்கூடும் என்ற சந்தேகமளிக்கும் அணுச்சக்தி நிலையங்களை அந்த ஸ்தாபனமே நடத்தவேண்டும்; இதர அணுச் சக்திச் சாலைகளைச் சோதித்து, லைசென்ஸ் அளித்து, அதன் காரியங்களைக் கட்டுப்படுத்த அணுச்சக்தி ஆராய்ச்சியை அது கட்டுப்படுத்தவேண்டும்; அணுச்சக்தியின் ஆக்க முறையான உபயோகங்களுக்கு அது ஊக்கமளிக்கவேண்டும். க்ரொமைகோ சம்மதியாமல் விலகி நிற்க, யு. என். கமிஷன் அத்திட்டத்தை ஒப்புக்கொண்டது.

ஒரு மாதம் கழித்து, ஜூலை 1946-ல், மாக்மஹோன் அணுச்சக்திச் சட்டத்தை காங்கிரஸ் ஒப்புக் கொண்டது; ஐந்து பேர் கொண்ட அணுச்சக்தி கமிஷன் நிறுவப்பட்டது. அது ஒரு சுயாதீனமான ஸ்தாபனம். அணுச்சக்தி ஆயுதங்களின் தயாரிப்பை மேல்பார்வையிடுதல் நீர்மூழ்கி என்ஜினையும் ஆற்றலளிக்கும் யந்திரங்களையும் ஓட்டுதல், வைத்தியம் விவசாயம் முதலியவற்றில் பிரயோகம் போன்ற உபயோகங்களை ஊக்கப்படுத்துதல்—இவை அந்த ஸ்தாபனத்தின் கடமைகள். அவ்வாண்டு கோடையில் ஐக்கிய நாடு தன் நான்காம் அணுகுண்டைப் பசிபிக் சமுத்திரத்தில் பிகினி என்னும் பவளத் தீவிலும், ஐந்தாவதை அங்கு தண்ணீருக்கடியிலும் வெடிக்க வைத்து, முன்

சோதிக்கப்பட்ட குண்டுகளைக் காட்டிலும் அவ்விரண்டும் அதிக நாச சக்தி பெற்றவை என்பதைக் கண்டுகொண்டது.

இவ்வளவிருந்தும் ரஷ்யா பரூச் திட்டத்தையோ, அதன் நியாயமான திருத்தத்தையோ ஒப்புக் கொள்ள மறுத்தது. ஸோவியத் தலைவர்கள் ஒரு ஆபத்தையும் எதிர்பாராதது ஒரு காரணம். ஐக்கிய நாடு தன் வெடிகுண்டுகளை வலுச்சண்டையில் முரட்டுத்தனமாக உபயோகியாது என்று அவர்களுக்குத் தெரியும்; மேலும் அவர்களுடைய அணு ஆயுதங்களும் வெற்றிகரமாகத் தயாராகும் சமயம் அது. பரூச்சின் இரண்டு யோசனைகளை ரஷ்யா ஏற்க இயலாது என்பது இன்னொரு காரணம். ஸோவியத் யூனியன் முழுதிலும் அணு ஆராய்ச்சி நிலையங்களைத் தடங்கலின்றி சோதிப்பது என்றால், சர்ச்சில் இரும்புத் திரை என்று பெயரிட்ட மறைவை நீக்கிவிட்டது போலாகும்; ரஷ்யா மறைத்து வைக்க விரும்பும் ரகசியங்களையும் அக்கிரமங்களையும் உலகம் பார்க்க நேரிடும். சிறிதுகாலம் சென்று ரஷ்யா தன் சொந்தத் திட்டம் ஒன்று தயாரித்தபோது, இந்த பயங்கரமான ஆயுதங்கள் மேல் பொதுவாகத் தடையுத்தரவு போடவேண்டும் என்றும், அவ்வப்போது சிறிதளவு சோதனை மாத்திரம் நடக்கலாம் என்றும் அதில் கண்டிருந்தது.

ரஷ்யச் சக்திக்கு எதிர் நடவடிக்கை : டார்டனெல்ஸ் கடலின் நிர்வாகத்தில் தனக்கும் பங்கு வேண்டுமென்று ரஷ்யா துருக்கியிடம் கேட்ட அதே சமயத்தில் க்ரீஸ் நாட்டின் சுதந்திரத்திற்கும் ரஷ்யா மறைமுகமாக உலைவைக்கப் பார்த்தது. க்ரீஸிலிருந்து ஜெர்மானியர் 1944-ல் வெளியேற்றப்பட்டபோது கிரேக்க அரசனும் மந்திரிகளும் மறுபடி தம் கடமைகளை ஏற்றனர். ஆனால் கலகக் கட்சியினரின் இடையே தீங்கிழைக்கும் உள்நாட்டுப் போர் ஏற்பட்டு தேசத்தின் பெரும் பாகத்தில் சீர்குலைந்தது. பல்கேரியா, அல்பேனியா, யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளின் கம்யூனிஸ்டுகள் அதில் கலந்துகொண்டு, எல்லையைக் கடந்து சண்டை பிடித்து விட்டுத் தம் நாடு திரும்புவதும், ஏதன்ஸ் நகர-கிரேக்க-அரசாங்கத்திற்கு எதிராக துரோகிகளுக்குத் தேவையான பண்டங்கள் சப்ளை செய்வதும் ஆயிரக்கணக்கான குழந்தைகளைத் திருடுவதும் போன்ற அக்கிரமங்கள் செய்தார்கள். க்ரீஸில் ஒழுங்கமைப்பின் பொறுப்பேற்ற பிரிட்டிஷார் நிதி நிலையும் ராணுவ நிலையும் தம் சக்திக்கடந்து போவதை அறிந்தார்கள். 1947-ன் ஆரம்ப மாதங்களில் அவர்கள் தம் பட்டாளங்களை வாபஸ் பெற்றுப் பணஉதவியையும் நிறுத்தவேண்டிவரும் என்று அமெரிக்க அரசாங்கத்திற்கு அறிவித்தார்கள். நிரந்தரமற்ற கம்யூனிஸ்ட் சிப்பாய்கள் மிகப் பயங்கர முறைகளைக் கையாண்டு நாட்டை வசப்படுத்துவார்கள் என்ற பேராபத்து கவலையுண்டாக்கிற்று. ரஷ்யா தொடர்ந்து துருக்கியை அழுத்திக்கொண்டிருந்தாலும்

ஈரானே (பெர்ஸியாவை) பயமுறுத்திக்கொண்டே இருந்தாலும்—ஈரானின் வடகோடி மாகாணமாகிய ஆஸெர்பெய்ஜான் ஸோவியத் பிரதேசத்தை யொட்டியுள்ளது—க்ரீஸின் வீழ்ச்சிக்குப் பிறகு ரஷ்யர் மத்தியக் கிழக்கில் பெருவாரியாக முன்னேறக் கூடும்.

இந்தப் பேராபத்தை உணர்ந்ததும் ட்ரூமன் மிகவும் பொறுப்புடன் நடந்து கொண்டார். காங்கிரசின் கூட்டுசபைமுன் அவர் க்ரீஸ் நாட்டுக்கு கம்யூனிஸ்டு ஆதரவு கொண்ட கலகக்காரர் ஆபத்து என்று விளக்கி, அப்பிரதேசம் முழுதிலும் ஒழுங்கும் சுதந்திரமும் நிலைத்திருப்பதற்கு க்ரீஸும் துருக்கியும் சிதறிப் போகாமல் பிழைத்திருப்பது அவசியம் என்றும், பெரும் போரால் உண்டாகக் கூடிய நஷ்டத்தைக் காட்டிலும் அமெரிக்க உதவியின் செலவு மிகக் குறைவே ஆகும் என்றும் வாதித்தார். அப்பொழுது அவர் "ட்ரூமன் கொள்கை" (Truman Doctrine) என்னும் கருதிதை வெளியிட்டார்; அதாவது கம்யூனிஸ்ட், ஃபாசிஸ்டு போன்ற கொள்கையுள்ள சிறு கூட்டங்கள் வலுவில் இடும் சண்டையை எதிர்த்து சுதந்திரத்திற்காகப் போராடும் நாடுகளுக்கு அமெரிக்கா ராணுவ உதவியும், பொருளாதார உதவியும் அளிக்கும். "தரித்திரமும் துன்பமும் ஃபாசிஸ்ட் போன்ற மரங்களின் வித்துக்கள். நல் வாழ்க்கைக்கான நம்பிக்கையை மக்கள் இழந்தால் அம்மரங்கள் பூர்ண வளர்ச்சி பெறுகின்றன. அந்த நம்பிக்கை சாகாமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும்," என்று அவர் விவரித்தார். க்ரீஸுக்கு 300 மிலியன் டாலரும் துருக்கிக்கு 100 மிலியன் டாலரும் அனுமதித்த சட்டம் ராணுவ ஆலோசகர்களையும் பொருளாதார ஆலோசகர்களையும் இரு நாடுகளுக்கும் அனுப்ப ஜனதிபதியை அனுமதித்தது.

சந்தேகமின்றி இத்தலையிடுதல் க்ரீஸைக் காப்பாற்றி துருக்கிக்கு உதவி புரிந்தது. பிற்போக்கும் சுயநலமுமுள்ள கிரேக்க ஆண்மைக் கட்சியினரை மிக அவசியமான சீர்திருத்தங்கள் செய்யும்படி அமெரிக்கா கட்டாயப்படுத்திற்று; துருக்கி அரசாங்கம் க்ரீஸைக் காட்டிலும் அதிக விழிப்புடனும் விசுவாசத்தோடும் ஒத்துழைத்தது. "சமீபக் கிழக்கில் சுதந்திரத்தின் ஒரு அரணைத் துருக்கி வாழ்ந்தது. அதேபோல, 1948 மே மாதம் 14–15 தேதிகளில் பிரிட்டிஷார் பாலஸ்தீனத்திலிருந்து விலகிக்கொண்டபோது, இஸ்ரேல் ரிபப்லிக் என்னும் புது நாடு ஏற்பட்டதும் இன்னொரு அரண் கிளம்ப அமெரிக்கா உதவிற்று. அந்தப் புது தேசத்தை ட்ரூமனின் அரசாங்கம் உடனேயே ஏற்றுக்கொண்டு, தொடர்ந்து இஸ்ரேலியர்களுக்கும் அராபியர்களுக்கும் இடையே உண்டான கடுமையான சச்சரவில் இஸ்ரேலியர் பக்கம் நியாயம் இருப்பதாகக் கூறி ஆதரவளித்தது. அரசாங்கம் வார்த்தையோடு நின்றுலும்

அமெரிக்க யூதர்கள் பணம், தளவாடங்கள், ராணுவ உதவி எல்லாம் அளித்தனர். சமாதானம் ஏற்பட்டபோது, ஒரு தேசம் என்று சொல்லிக் கொண்டு சௌகர்யமாய் வாழ்வதற்கான விஸ்தாரமான இடம் இஸ்ரேலுக்குக் கிடைத்தது. யுகோஸ்லாவியா ஸோவியத் கடிவாளத்திலிருந்து கலகம் செய்து விலகியபோது, பால்கன் பிரதேசத்திலும் சமீபக் கிழக்கிலும் நிலைமை மேலும் உறுதியாயிற்று. யுகோஸ்லாவியாவின் சர்வாதிகாரி, மார்ஷல் ஜோசஃப் ப்ராஸ் (அதாவது டிடோ). ஸ்டாலினுடன் வெற்றிகாமாகச் சண்டை பிடித்துக் கொண்ட காரணத்தால் அல்பேனியாவிலிருந்து ஆஃப்கானிஸ்தான் வரை கம்யூனிஸ்ட் பயம் விலகிற்று.

ஆனல் ட்ரூமன் கொள்கையும், க்ரீஸும் துருக்கியும் பெற்ற உதவியும் போதாது; அவற்றின் விஸ்தாரம் குறைவு. கட்டாயத்தின் பேரில் பிரிட்டிஷார் அப்பிரதேசத்திலிருந்து விலகவேண்டி வந்ததே ஐரோப்பாவின் சீர்கெட்ட நிலையைக் காட்டுகிறது. ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் நடுநாயகமாகவும், உலக வல்லரசுகளில் ஒன்றுகவும், மிகத்திடமாகவும், தொழில் சக்தியும் வாய்ப்புக்களும் நிறைந்தும் இருக்கும் நாடு பிரிட்டன். ஆனல் இத்தாலியும் ஃப்ரான்ஸும் போரால் அழிக்கப்பட்டவை. உள்நாட்டுக் கலகத்தில் சிதறடிக்கப்பட்டவை, பெருமையும் ஆன்ம பலமும் பெரும்பாலும் இழக்க நேரிட்டவை. ஹாலந்து, டென்மார்க், பெல்ஜியம், நார்வே போன்ற வேறு நாடுகள் ஆட்கள், மூலதனம், யந்திரங்கள், கலாசார ஸ்தாபனங்கள், தன்னம்பிக்கை, எல்லாவகையிலும் நஷ்டப்பட்டவை. பாழடைந்த நகரங்களையும் தூள்தூளான தொழிற்சாலைகளையும் மறுபடி கட்டுவது அவர்கள் சக்தியிலடங்காத காரியங்கள். அவர்களுக்குப் பணம் தேவை—எல்லாப் பணமும் அமெரிக்காவிடம் இருந்தது எனலாம்; அவர்களுக்கு நம்பிக்கையும் தைரியமும் தேவை. ஜெர்மனியும் ஆஸ்ட்ரியாவுங்கூட அதம நிலையிலிருந்து உயர்த்தப்படவேண்டும். துரிதமாகவும் நிச்சயமாகவும் மேல்நாட்டு நாகரிகத்தை ஒரு தேசந்தான் காப்பாற்ற முடியும்—ஆனல் அது அபூர்வ தீர்க்க தரிசனமும் உதார பாவமும் கொண்டிருக்க வேண்டும்.

மார்ஷல் திட்டம்: அதிர்ஷ்டவசமாக இந்தப் பெருங்குணங்கள், உலக மறுமலர்ச்சிக்கான சாராம்சங்கள், மனிதரிடையே இருந்தன. நேசதேசங்கள் ஒரு மகத்தான பொது யத்தனத்திற்காகத் தங்கள் வசதிகளைக் கூட்டிப்பிரித்த "கடன்-குத்தகை"த் திட்டத்தை ஐக்கிய நாடு மறந்துவிடவில்லை; தரித்திரம், உணவின்மையால் உண்டான தளர்ச்சி, இறுதி முறிவு ஆகியவற்றை நீக்கும் ஒரு புதுப் போருக்காக அதே நடவடிக்கையை மறுபடி அனுசரிக்க வேண்டும். ஆதர்ச

முறையில் பேசினால், அது ஐக்கிய தேச சங்கம் புரியவேண்டிய தொண்டு. ஆனால் ரஷ்யா ஒவ்வொரு நல்ல யோசனையையும் வீடோ செய்து, விடாத பிரசாரப் பேச்சால் சிந்தனையைக் குழப்பி, உலகத்தை அமைதி நிலைக்கும் ஐசுவரிய நிலைக்கும் எடுத்துச் செல்லமுடியாதபடி அந்த ஸ்தாபனத்தை அங்கஹீனப்படுத்தியிருந்தது.

இந்தத் தடவை காரியதரிசி மார்ஷல் கொள்கையை வெளியிட்டார். 1947, ஜூன் 5-ஆம் தேதி ஹார்வேர்ட் சர்வகலாசாலையில் பேசுகையில் ஐரோப்பியக் கூட்டுறவு மறுவாழ்வுத் திட்டத்திற்கு ஐக்கியநாடு பெரும் அளவில் உதவிபுரியும் என்று அவர் வாக்களித்தார்; அத்திட்டம் ''ஐரோப்பியப் புனருத்தாரணக் காரிய திட்டம்'' (European Recovery Program —E. R. P.) அல்லது ஈ. ஆர். பி. என்ற பெயர் பெற்றது. அதன்படி, தனம் மாத்திரமல்ல, யந்திரங்கள், செய்முறைப் படங்கள், கச்சாப்பொருள்கள், அமெரிக்க நிபுணர்களின் அறிவு ஆகிய எல்லா வசதிகளும் அளிக்கப்படும். ஐரோப்பிய தேசங்கள் இதேபோல கடன், விசேஷ வசதிகள், துரிதமான வியாபாரப் போக்குவரத்து முதலியவற்றின் மூலம் பரஸ்பர உதவிபுரிந்து கொள்ளவேண்டும். சுயாதீன உலகம் முழுதிலும் டாரிஃப் வரிகளை அடியோடு நீக்கவேண்டும் அல்லது கணிசமாகக் குறைக்கவேண்டும். இந்தத் திட்டத்தினால் இன்னும் கனவாக இருக்கும் ''ஐரோப்பிய ஐக்கிய நாடுகள்'' என்னும் ஒற்றை தேசம் சிறிதளவேனும் உருப்பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆரம்பயத்தனமும் ஆற்றலும் பெரும்பாலும் ஐரோப்பாவிலிருந்து தான் வரவேண்டும் என்பதை மார்ஷல் தெளிவாக்கினார்.

ஐரோப்பா அனுசரணையுடன் நடந்து கொள்ளுமா? அமெரிக்காவின் செலவைக் கட்டுப்படுத்த விரும்பும் காங்கிரஸ் மார்ஷலின் வாக்கைக் காப்பாற்றுமா?

முதல் கேள்விக்கு விடை சட்டெனக் கிடைத்தது. பிரிட்டிஷ், ஃப்ரெஞ்ச் அயல்நாட்டுக் காரியதரிசிகள் ரஷ்யா உட்பட எல்லா ஐரோப்பிய நாடுகளையும் பாரிஸ் நகரில் ஒரு மகாநாட்டிற்கு ஒருமுகப்பட்ட புனருத்தாரணத் திட்டத்தைப் பற்றிப் பேசக் கூப்பிட்டார்கள். ரஷ்யா அழைப்பை மறுத்ததுமல்லாமல் தனக்குக் கீழ்ப்பட்ட எட்டு நாடுகளுக்கும் தன்னைப் பின்பற்றி மறுக்கும்படி கட்டளையிட்டது. ஐஸ்லண்டிலிருந்து துருக்கிவரை 16 தேசங்கள் அதில் கலந்து கொண்டன. 1947 செப்டம்பர் 22-ஆம் தேதி மறு அமைப்புக் கானக் கூட்டுறவுத் திட்டம் ஒன்றை அவை அங்கீகரித்தன; அதற்காக அடுத்த நான்காண்டுகளில் சுமார் 22 பிலியன் டாலர் செலவாகுமென்று கணக்கிடப்பட்டது. பணத்தில் ஒரு பகுதி ''புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச பாங்கி''லிருந்தும், சிறிதளவு பலவேறு நாடுகளிடமிருந்தும், பெரும்பாலும் ஐக்கிய நாட்டிலிருந்தும் வரவேண்டும். ''உடனடியாகவும் வேண்டுமானால் பிற்காலத்திலும் பல்வேறு வகைகளில் பரஸ்பர உதவிபுரிந்து கொள்ளுவதாக'' அந்த 16 நாடுகளும் உறுதி கூறின. நான்கு வருஷங்கள் இல்லாமல் அக்காரியங்கள் பூர்த்தி செய்யமுடியாது; ஆனால் பூர்த்தியானபின், ஐரோப்பா போருக்கு முன் இருந்ததைக் காட்டிலும் பொருளாதார்த் துறையில் மிகவும் முன்னேறியிருக்கும்.

காங்கிரஸ் அவ்வளவு விறுவிறுப்புடன் வேலை செய்யவில்லை. 1948-ன் ஆரம்பத்தில் கூடி அது இரண்டு மாதம் சும்மா இருந்தது. அதன்பிறகு ஸெகோஸ்லோவேகியாவில் கம்யூனிஸ்டுகள் ஆதிக்கத்திற்கு வந்ததும் காங்கிரஸ் சுறுசுறுப்படைந்தது. 1948 ஏப்ரல் 3-ஆம் தேதி, முதல் வருஷசெலவுக்காக 6,098, மிலியன் டாலர் அனுமதித்த ''பொருளாதாரக் கூட்டுறவுச் சட்டத்''தில் ட்ரூமன் கையொப்பமிட்டு ''சுதந்திர உலகுக்கு சவால் விடுவோருக்கு இதுவே விடை'' என்றார். காரியத்திட்டம் ஆரம்பிக்க ஒரு பிலியன் டாலர் எடுத்து வைக்கும்படி அவர் உடனே உத்தரவிட்டு மோட்டார் வண்டி உற்பத்தியாளனும் ரிபப்லிகனுமான பால் ஜி. ஹாஃப்மன் என்பவனைப் ''பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாக''த்தின் தலைவனாக நியமித்தார்.

ஐரோப்பாவில் பொருளாதாரக் கூட்டுறவு திருப்திகரமாக விருத்தியடைந்து, புனரமைப்புச் சீராக வளர்ந்தது. 1951-ல் அந்த நிர்வாகம் நான்கு வருஷக் காரியக் கிரமத்தை முடித்தபோது ஐக்கியநாடு கடனாகவோ நன்கொடையாகவோ 12 பிலியன் டாலர் கொடுத்தாகிவிட்டது; ஐரோப்பா தன்னைத்தானே கவனித்துக்கொள்ளும் நிலையை அடைந்தது. அமெரிக்க ஐரோப்பிய உறவுகளில் ஒரு புதுக் கட்டம் ஏற்பட்டது; புதிதாகப் பணமும் பொருளும் பெரிய அளவில் கொடுக்கப்பட்டன. 1950-ன் மத்தியில் மார்ஷல் திட்ட தேசங்கள் 1936-38-ல் இருந்ததைக் காட்டிலும் கால்பங்கு அதிகமாகக் கைத்தொழில் பொருள்கள் உண்டாக்கிக் கொண்டிருந்தன; 1951 முடியும்போது அரை மடங்கு அதிகமாக இருந்தது. உண்மையில், மேற்கு ஐரோப்பியத் தொழிற்சாலைகளும் தோட்டங்களும் அதற்குமுன் அவ்வளவு விளைவித்ததே கிடையாது. ஐக்கிய நாட்டிலும் வேறு சில தேசங்களிலும் டாரிஃப் விகிதம் அனுகூலமாக இருந்ததால் ஜனநெருக்கடியுள்ள அந்தப் பிரதேசம் தேவையான அளவு பொருள்களை விற்று நல்ல வாழ்க்கைத்தரத்தை அடைந்து அதை உயர்த்தவும் முடிந்தது. எல்லா தேசங்களும் தம் தொழில் உற்பத்தியை வருஷத்திற்கு ஏழு முதல் ஒன்பது சதவீதம் வரை

உயர்த்திக் கொண்டிருந்தன. துரதிர்ஷ்டவசமாக பின்னல் இழுக்கும் ஒரு சந்தர்ப்பமும் ஏற்பட்டது. மேற்கு நாடுகள் எல்லாம் மறுபடி போருக்குத் தயாராக இருப்பது அவசிய மாயிற்று; தளவாட உற்பத்தியால் ஏற்பட்ட உயிரிய வரிகளும் பணவீக்கமும் தொடர்ந்த முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக இருந்தன.

எந்தக் கூட்டு நடவடிக்கையிலும் ஒருபுறத்தார் பெரும் பாலும் கொடுத்துக்கொண்டும் இன்னொரு புறத்தார் பெரும் பாலும் பெற்றுக்கொண்டுமிருந்தால் மனத்தாங்கல் ஏற் படாமலிருப்பது துர்லபம். ஐரோப்பியர் போதிய அளவு நன்றி செலுத்தவில்லை என்று பல அமெரிக்கர் நினைத்தனர்; அமெரிக்கர் அளவு கடந்து நன்றியறிவிப்பை எதிர்பார்க்கிறார் கள் என்று பல ஐரோப்பியர் நினைத்தனர். சீர்திருத்தம், உழைப்பு, புதுமுறையான யத்தனம் என்பனவற்றைக் குறித்து, அமெரிக்க ஆலோசகர்கள் இடித்துக்கொண்டே இருப்பதை சில ஐரோப்பியர் ரசிக்கவில்லை; கொஞ்சம் தவ ருக இருந்தாலும் பழைய வழிகளை அவர்கள் விரும்பினார்கள். ஒற்றுமையை நோக்கி ஐரோப்பா மிகக் கொஞ்சமே முன்னேறி யிருக்கிறது என்று சில அமெரிக்கர் அதிருப்தியடைந்தனர். ஜெர்மானியரிடம் ஃப்ரெஞ்சுக்காரர் இவ்வளவு சந்தேகப்பட வேண்டாம் என்று தோன்றிற்று. சில ஐரோப்பிய நாடு களில் ஜாதிப்பற்றுதல் சமுதாய நீதியையும் பொருளாதார நிறைவையும் பாதித்தது. சுருங்கச்சொன்னால், மனக்கிலேசங் களும், ஆட்சேபங்களும், கசப்பும் தோன்றின.

புது ரஷ்ய அக்கிரமங்கள்: ஐரோப்பாவைச் செயலற்ற தாகச் சின்னபின்னமாக்கலாம் என்ற ரஷ்ய நம்பிக்கைக்கு மார்ஷல் திட்டம் முற்றிலும் ஆபத்தானது என்பதை ஸ்டாலின் அறிந்தான். தன் ஏமாற்றத்தையும் அதிருப்தியை யும் மாஸ்கோ பலவிதங்களில் காட்டிற்று. அக்டோபர் 1947-ல் தன் கீழ்ப்பட்ட தேசங்களுக்கு யோசனை கூறி வழி காட்டவும், அயல் நாடுகளிலிருக்கும் கம்யூனிஸ்டுகளைக் கட்டுப் படுத்தி நடத்தவும் பிரசாரத்தை ஊக்கப்படுத்தவும் ரஷ்யா "கம்யூனிஸ்ட் செய்திக் காரியாலயம்" ஒன்றை ஆரம்பித்தது. சில மாதங்கள் கழித்து ஸைகோஸ்லோவேகியாவை மிக இறு மாப்புடன் கைப்பற்றினபோது மேற்கு வல்லரசுகள் உடனே ஆட்சேபித்தன. ஸோவியத் போதனையின் பேரில் கம்யூனிஸ்ட் கோஷ்டிகள் ஃப்ரான்ஸை வேலை நிறுத்தம் மூலமும், இத்தா லியைக் கலகங்கள் மூலமும் செயலற்றதாக்க முயன்றன. 1948 ஏப்ரல் முதல் தேதி, சோவியத் யூனியன் தன் உயர்ந்த துருப்புச்சீட்டை விளையாடி வெட்டுவதாகக் கருதி, மேற்கு பெர்லினிலிருந்து அமெரிக்க, ஃபிரெஞ்சு, பிரிட்டிஷ் மாவட்டங் களாகிய மேற்கு ஜெர்மனிக்கு ரஷ்யப் பகுதி வழியாகச்

செல்லும் ரயில் பாதையிலும் சாலைகளிலும் கடுமையான தடையுத்தரவுகள் போட்டது. அந்தத் தடங்கலால் தம் வசம் பெர்லின் முழுதும் வந்துவிடும், அதைத் தலைநகராகக் கொண்டு வலுவுள்ள ஜெர்மன் கம்யூனிஸ்ட் தேசம் உண்டாக் கலாம் என்று ரஷ்யர் எதிர்பார்த்தனர். மேற்குப் புறத்தார் சில ஒப்பந்தங்களுக்கு முரணுகச் சென்றனர் என்ற காரணம் கூறப்பட்டது. உண்மையில் பொருளாதார அரசியல் நிலை களில் ஜெர்மனியைப் பழைய அந்தஸ்துக்கு உயர்த்தி புனர் நிர்வாகம் பெற்ற ஐரோப்பாவில் அந்நாட்டை ஒரு முக்கிய மான பகுதியாகச் செய்ய மேற்குப்புறத்தார் முயன்றதே ரஷ்யருக்குக் கவலையளித்தது.

அமெரிக்கரோ பிரிட்டிஷாரோ தாழ்ந்து போவதாக ஒரு க்ஷணமும் நினைக்கவில்லை. இருவரும் உடனே விமானப் போக்கு வரத்து மூலம் சாலைத்தடுப்பைப் பயனற்றதாக்க ஆரம்பித்தனர். தம் படைகள் பெர்லின் விட்டு நகரா என்று விளம்பரம் செய்து, புது விமான தளங்கள் பல கட்டி பெர்லினின் உதவிக்காகச் சரக்கு விமானக் கப்பல்கள் பலவற்றை அனுப்பி னர். இலையுதிர்காலத்திற்குள் ஏற்பட்ட அபிவிருத்தியால் சுமார் ஓராயிர அமெரிக்க-ஆங்கில விமானங்கள் ஒரு நாளைக்கு 3,000 டன் சரக்குக்குக் குறையாமல் ஏற்றிக்கொண்டு மூன்று நிமிஷ அவகாசத்தில் ஒரு விமானம் வீதம் பெர்லின் விமான தளங்களில் வந்திறங்கின; உணவுப்பொருள்கள் மாத்திரமல்ல, எரிபொருள்களும் சேமிக்கப்பட்டன. இறுதி யில் இவ்வேலை அதற்கென ஏற்படுத்தப்பட்ட ஒரு படைக்கு ஒப்புவிக்கப்பட்டது; ஒரு அமெரிக்க அதிகாரி அதன் தலைவ ராகவும் ஒரு பிரிட்டிஷ் அதிகாரி உபதலைவராகவும் நியமிக்கப் பட்டனர். கோபமூட்டி, தவறான காரியம் செய்விக்கும்படி யான தந்திரங்களை ரஷ்யர் கையாண்டபோது துரதிர்ஷ்டவச மான ஒரு சிறு செயல் பெரிய போரைக் கிளப்பிவிடலாம் என்ற பயம் உலவிவந்தது. அப்பொழுது பிரிட்டிஷார் தம் விமானங் களுக்குப் போர் விமானப் பாதுகாப்பு அளிக்கப்போவதாக விளம்பரம் செய்தனர். வீரத்தனமானதும் பெருந்தன்மையு முள்ள நேசதேச யத்தனங்களை ஜெர்மானியர் மிகவும் பாராட்டினர்; டிசம்பர் மாதம் கம்யூனிஸ்ட் மிரட்டல்களை அசட்டை செய்து அவர்கள் நடத்திய தேர்தலில் 13,30,000 பேர் கலந்து கொண்டு கம்யூனிஸ்டுகளுக்கு விரோதமான சோஷல் டிமோகிராட்டுக் கட்சிக்கு நூற்றில் 65 வோட்டுகள் அளித்தனர்.

உண்மையில் மேற்கு ஐரோப்பா முழுதிலும் ஸோவியத் துக்கு எதிரான உணர்ச்சி வளர்ந்தது. கடைசியில் ரஷ்ய அரசாங்கம் சாலைத்தடுப்பை நிறுத்திக்கொண்டு, ரூர் பிரதேச நிர்வாகத்தில் மறுபடி பங்கு கேட்டது; மறுபடியும் அது மறுக்-

கப்பட்டது. 1949 ஆகஸ்டில் நடந்த மேற்கு ஜெர்மன் தேர்தல்களில் கோன்ராட் அடினுரின் கீழ் (Konrad Adenauer) மிதவாத அரசாங்கம் அமைந்தது. அதே ஆண்டு மேற்கு நேச தேசத்தார் ராணுவ மேல் பார்வையை வாபஸ் பெற்று, சிவிலியன் உயர்தரக் கமிஷன் அமைத்தனர்.

தேசியச் சைனுவின் முறிவு: 1949 செப்டெம்பரில் ட்ரூமன் ஒரு மிக முக்கியமான பிரகடனத்தை வெளியிட்டார்: "யூ. எஸ். எஸ். ஆரில் ஒரு அணுகுண்டு வெடித்திருக்கிறது...என்பதற்கு எமக்கு அத்தாட்சி கிடைத்திருக்கிறது." வெடிகுண்டுகள் செய்து குவிப்பதற்குச் சிறிது காலம் பிடிக்கலாம் என்றாலும் ரஷ்யர்கள் ஐக்கிய நாட்டுடன் சமமாக முன்னேறிக் கொண்டிருப்பது தெரிந்தது. அதே வருஷம் தூரக்கிழக்கில் அதே அளவு முக்கியமான காரியம் ஒன்று நிகழ்ந்தது. சைனுவிலிருந்த கம்யூனிஸ்ட் படையினர் ஆச்சரியமளிக்கும் வேகத்துடன் பரவலாக முன்னேறி 20 வருஷங்களாக நடந்து வந்த சிவில் போருக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

வருட ஆரம்பத்தில் சியாங்கே ஷேக்கின் கீழிருந்த க்வோமின்தாங்க் (Kuomintang) தேசியப் படைகளின் வசம் சீன மாநிலத்தின் சுமார் பாதிப் பிரதேசமும் பாதி ஜனத்திரளும் இருந்தன. ஆனால் லஞ்ச ஊழலும் பலஹீனமும் சியாங்கின் ஆட்சியைப் பாழாக்கியிருந்தன. ஏப்ரல் 24-ஆம் தேதி கம்யூனிஸ்ட் படைகள் சியாங்கின் தலைநகராகிய நாங்கிங்கைப் பற்றிக் கொண்டு இதர முக்கியப்பட்டணங்களாகிய கான்டன், சூங்கிங், ஷாங்காய் முதலியவற்றைப் பிடிக்க முன்னேறின. வழியில், சியாங்குக்கு கொடுக்கப்பட்ட அமெரிக்க ஆயுதங்கள் ஏராளமாக எதிரிகள் கையில் விழுந்தன. அமெரிக்க அரசாங்கத்திற்கும் சியாங்குக்கும் இடையே வளர்ந்த உறவுகளின் வரலாறு மிகச் சிக்கலானது. யுத்த காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி, தேசியக் கட்சி இரண்டிலுமுள்ள மிதவாதிகளை ஒரு புதுக்கட்சியாகச் சேர்த்து ஒரு வலுவுள்ள மத்திய அரசாங்கமாக ஆக்க அமெரிக்கர் முயன்றனர். ஜப்பான் தோற்ற பிறகும் ட்ரூமன் அந்த உத்தேசத்தைத் தொடர்ந்து ஆதரித்தார். ஜ்யார்ஜ் மார்ஷல் சைனுவுக்குச் சென்று இரு கட்சிகளிடையே சொற்ப காலப் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் செய்வித்து சமரஸ அரசாங்கம் அமைக்கத் தன்னாலான அளவு முயன்றார். காலக் கேட்டால், சியாங்கோ, மாவ் ஸே-டுங்கின் (Mao Tse-tung) கீழ் எதிர்க்கட்சியினரோ சமரஸத்தை விரும்பவில்லை; ட்ரூமன் அரசாங்கம் இரு தலைவரிடமும் மோகம் தீர்ந்து நம்பிக்கை யிழந்தது. சிவில் போர் முழு வெற்றியில் முடிந்தாலும் சரி, முழுக் குழப்பத்தில் முடிந்தாலும் சரி, இறுதி வெற்றி தம் முடையது தான், நாடு தம் வசந்தான் வரும் என்று கம்யூனிஸ்டுகள் நம்பினர். சியாங்க், தன் அரசாங்கம் எவ்வளவு

மோசமாக இருந்தாலும் தன் யுத்த தந்திரம் எவ்வளவு கலி வற்றிருந்தாலும், தன் சார்பில் ஐக்கியநாடு மனப்பூர்வமான யத்தனம் செய்தாகவேண்டுமென்று நம்பினான். சீனச் சேற்றில் பல பிலியன் டாலரையும் பல மிலியன் ஆட்களையும் கொண்டு கொட்ட அமெரிக்க மக்கள் சம்மதிக்கமாட்டார்கள் என்பதை அவன் உணரவில்லை.

மாவ்-ன் நன்கு பயிற்சி பெற்ற படைகள் தேசம் முழுதும் கைப்பற்றுவதையும் சியாங்கின் எஞ்சிய சேனை டைவான்—ஃபார்மோஸா (Taiwan - Formosa) தீவுக்கு ஓடுவதையும் ஐக்கிய நாடு செயலற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. போருக்குப் பின்காலத்தில் சைனுவுக்கு உதவியாக அளிக்கப்பட்டு அரசாங்கத்தால் மொத்தம் இரண்டு பிலியன் டாலர் என்று மதிக்கப்பட்ட தொகையை—உண்மையில் தொகை சற்று குறைவாக இருக்கலாம்—வாஷிங்டன் நஷ்டக்கணக்கில் பதிய வேண்டி வந்தது. ஜயம் பெற்ற மாவ் பீபிங்கில் ஒரு ஆலோசனைசபை அல்லது நிர்மாண சபை கூட்டினான்; உண்மையான வாத விவாதமில்லாமல் ஏற்கெனவே கம்யூனிஸ்ட் தலைவர்களால் தயாரிக்கப்பட்டிருந்த ஒரு நிர்மாணத் திட்டத்தை அந்தச் சபை அங்கீகரித்தது. "சீன மக்கள் குடியரசு" இவ்வாறே முதன் முதலாகப் பிறந்தது—குடி அரசுக்கு இகழ்ச்சி, மதஸ்தாபனத் துவேஷம், மேற்கு நாட்டார்—முக்கியமாக அமெரிக்கர்—மேல் அதிக வெறுப்பு, இவை அவ்வரசாங்கத்தின் குணாதிசயங்கள். 1948-ன் இறுதியில் மாவ் நெருங்கிய நட்புக்குச் சமமான பொருளாதார அரசியல் ஒப்பந்தங்களை முடிக்க மாஸ்கோ சென்றான்; 450 மிலியன் மக்கள் கம்யூனிஸ்ட் ஜனத்தொகையை அதிகரித்தனர் என்பதை உலகம் ஒப்புக் கொள்ள வேண்டி வந்தது; யு. என்.-னில் சைனுவின் ஸ்தானத்தில் தேசியக் கட்சி அமர்ந்தது; ஆனால் சைனு தேசம் கம்யூனிஸ்டுகளின் கைக்குள் அடங்கியிருந்தது.

அமெரிக்க அயல்நாட்டு இலாக்கா கண்ட முடிவு சியாங்கான் பெரிய குற்றவாளி என்பது. சீனர்களுக்கிடையே சீர்திருத்தத்திற்கும் புது அமைப்புக்குமான பெரிய ஆவல் உருவாகிக் கொண்டிருப்பதை நாணயமற்ற, உபயோகமற்ற தேசியக் கட்சியினர் அசட்டை செய்தார்கள்; கம்யூனிஸ்டுகள் சாமர்த்தியமாக அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். முன் சச்சரவுகளை மறந்து ஆதிக்கத்திற்கு வந்த அரசாங்கத்தை அங்கீகரித்து கௌரவிப்பது பிரிட்டிஷ் வழி; பிரிட்டன் பீபிங்குக்கு ஒரு ராஜ தூதனை அனுப்பிற்று; ஆனால் அவன் அசட்டை செய்யப்பட்டான். புதிய சீன அரசாங்கத்தைப் போக்கில் விட்டுத் திருப்பினால் அது மாஸ்கோவின் கடிவாளத்தை ஏற்காமல் சுயாதீனமாக நல்ல முறையில் வளரும் என்பது பிரிட்டிஷ் நோக்கம். ஆனால் ஐக்கிய நாடு சியாங்கின் கோஷ்டி

சீனமக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்றும் யு. என். சபையில் சைனுவின் ஸ்தானத்தில் உட்காரத் தகுதியுள்ளவர் என்றும் பாவித்துக் கொண்டே இருந்தது. தென்கிழக்கு ஆசியாவில் சிறு நாடுகளின் சுதந்திரத்தை மாவ் தாக்கினால் அமெரிக்கா எதிர்த்து நிற்கும் என்று அய்ல்நாட்டு இலாகா எச்சரிக்கை செய்தது; ஆனால் மாவ் அமெரிக்காவை இறுமாப்புடன் அசட்டை செய்தான்.

இவையெல்லாம் போருக்குப் பின்காலத்தில் சரித்திரத்தில் மிகத் துக்ககரமான அத்தியாயங்கள். பல தலைமுறைகளாக ஐக்கிய நாடு சைனுவின் முக்கியமான மேல்நாட்டு நண்பனாக இருந்து வந்தது. ஜான் ஹோவின் காலத்தில் சைனு சின்னபின்னமாகாமல் அமெரிக்கா காப்பாற்றிற்று. கல்லூரிகளும் ஆஸ்பத்திரிகளும் கட்டிக் கொடுத்தது; மாணவர்களுக்குப் பயிற்சியளித்தது; ஆரோக்கியக் காரியக் கிரமங்கள் கொண்டு உதவிற்று. அவ்வளவு நல்ல உறவு அடியோடு மறக்கப்பட்டு சூன்யமாவது வருந்தத்தக்கது. உடனடியாக, ரஷ்யா அணுவெடிகுண்டு தயாரிக்கும் அதே சமயத்தில் ஸோவியத்தின் சக்தி திடீரென்று அதிகரிக்கப்பட்டு விட்டது. தற்காப்பு அரண்கள் வலுப்படுத்தப்பட வேண்டும், மேற்கேயும் பசிஃபிக்கிலும் புதுநடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். என்பது தெளிவு.

நாடோ (NATO) வின் ஜனனம்: அதிர்ஷ்ட வசமாக, சக்திகளை ஒருவகைப்படுத்தப் பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கே ஏற்கெனவே எடுக்கப்பட்டிருந்தன. மாவின் வெற்றிகரமான படையெடுப்புக்கும், 1949 மே மாதம் பாரிஸில் ''பெரும் நால்வரின்'' சபை முறிவதற்கும் வெகு நாள் முன்பே எர்னஸ்ட் பெவினும், சில பெனெலக்ஸ் (Benelux-Belgium, Netherlands Luxembourg) தலைவர்களும் அடக்கமான தற்காப்பு ஐக்கிய சங்கத்தைப்பற்றிப் பேசியிருந்தனர். ஐக்கிய நாடு, கானடா, இன்னும் சில நாடுகள் இந்த நடவடிக்கைகளில் சேர்த்துக்கொள்ளப் பட்டிருந்தன. 1949 ஏப்ரல் 4-ல் ஐக்கிய நாடு, பிரிட்டன், ஃப்ரான்ஸ், இன்னும் ஒன்பது தேசங்களின் அயல் நாட்டு மந்திரிகள் ''வட அட்லாண்டிக் உடன்படிக்கை ஸ்தாபனம்'' (The North Atlantic Treaty Organisation–NATO) அமைப்பதற்கான மறக்க முடியாத ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ''இவற்றுள் ஒரு நாட்டின்மேல் நடக்கும் தாக்குதலை எல்லோர்மீதும் நடத்தப்பட்டதாகக் கருத அங்க நாடுகள் ஒப்புக்கொள்கின்றன'' என்று விளம்பரம் செய்தது. அந்தமாதிரி எதிர்ப்பு ஏற்பட்டால் பன்னிரண்டு நாடுகளும் ஒன்றுகூடி ''வட அட்லாண்டிக் பிரதேசத்தின் பத்திர நிலையைக் காக்கவும் மறுபடி நிறுவவும்'' செயலாற்றும்.

ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் மிக அதிகமாகத் தொழில் அபிவிருத்தி நாடுகளில் வசிக்கும் 350 மிலியன் ஜனங்களை நாடோ ஐக்கியப்படுத்திற்று; அவர்கள் பொது நட்புடன் புதுப்படைகள் எழுப்பி, பொதுவான ஆயுதங்களைத் தேர்ந்தெடுத்து, பொதுவான சேனைத்தலைவர்களைப் பொறுக்கிக் கொண்டு, முரட்டுத்தனத்தை முரட்டுத்தனத்தால் எதிர்ப்பார்கள். ஐக்கிய நாடு இதற்குமுன் ஒருபோதும் இவ்வளவு கார முறையிலும் ஸ்துல ரூபத்திலும் தன் ஆட்சி ஆற்றலை விட்டுக்கொடுத்ததில்லை. தன்னுடைய எல்லை எட்டிக்கடல் கடந்து இருப்பதையும், ஸோவியத் கொடுங்கோன்மைக்கும் சுதந்திர நாடுகளுக்கும் இடையே உள்ள கோடுதான் தன் எல்லை என்பதையும், ஐக்கிய நாடு இவ்வளவு தெளிவாக அறிந்ததில்லை. மக்கள் இந்த ஒப்பந்தத்தை மிகமிக ஆர்வத்துடன் ஏற்றனர்; ஸெனெட் ஆவலோடும் துரிதமாகவும், நிபந்தனைகளால் கட்டுப்படுத்தாமல், 82 அனுகூல வோட், 13 பிரதிகூல வோட் என்று அதை ஸ்வீகரித்ததே அதற்கு அத்தாட்சி. அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமே, ட்ரூமனின் அரசாங்கம் ''ராணுவ உதவிக் காரியத்திட்டம்'' அமைப்பதாக யோசனைகூறி அடுத்த ஒரு வருஷத்தில் 1450 மிலியன் டாலர் செலவிட அனுமதித்தது; இதர 'நாடோ' அங்கத்தினர்களுக்கும், நாடோ-வில் சேரவிருக்கும் க்ரீஸுக்கும் துருக்கிக்கும், ரஷ்யர்களால் பயமுறுத்தப்படும் ஈரான் தேசத்திற்கும் கொரியாவுக்கும் ஃபிலிப்பைன்ஸுக்கும் ஆயுதங்களும் ஆலோசனையும் அனுப்பதற்காக அப்பணம் உதவும் என ஏற்பாடு; அத்தொகை மிகப்பெரியது என்று சிலர் நினைத்தார்கள்; ஸெனெட்டர் டாஃப்ட் உள்பட சிலர் 'நாடோ' தன் பாதுகாப்புக்குழுத்திட்டங்களை உருவாக்கும் வரை அத்தொகைகளை நிறுத்தி வைத்துக்கொள்ளவேண்டும் என்று கருதினர். ஆனால் சர்க்கார் மசோதா சட்டமாயிற்று.

ஜான்ஹோவர் நாடோவின் சேனுதிபதி: மிகவும் சரியான சமயத்தில் இக்காரியங்கள் செய்யப்பட்டன என்பது தெளிவாயிற்று. மூன்றும் உலக யுத்தம் என்ற ஆபத்து கற்பனையல்ல, பொய்ப் பிரசாரமல்ல, உண்மையானது, பயங்கரமானது என்பது கொரியா நிகழ்ச்சிகளிலிருந்து ருஜுவாயிற்று. மேற்கு நாடுகள் பலஹீனமாக இருந்திருந்தால் ஸ்டாலினின் தாக்குதல் அநேகமாய் நிச்சயம் எனக் கொள்ளலாம். ரஷ்யாவில் ஐந்து மிலியனுக்கும் அதிகமான ஆயுதம் தரித்த துருப்புக்கள் இருந்தன; 15,000 விமானங்களும் 30,000 டாங்குகளும் இருந்தன. யூ. எஸ். எஸ். ஆர். வேகமாக 175 டிவிஷன்கள் திரட்டலாம்; அதற்குக் கீழ்ப்பட்ட நாடுகள் பல டஜன் சேர்க்கலாம். அதன் 'ஸ்னர்கல்' நீர்மூழ்கிகள் துறையைத் தேடாமல் வெகு நாட்கள் பிரயாணம் செய்துகொண்டே இருக்க முடியும். குறிப்பிடும் வழி செல்லக்கூடிய ரஷ்ய சஸ்திரங்கள்

கிழக்கு ஜெர்மன் அல்லது ஸெகோஸ்லொவேகிய தளங்களிலிருந்து சுடப்பட்டால் மேற்கு ஐரோப்பிய நகர் எதையும் எட்டமுடியும். ரஷ்யத் தலைவர்கள் பிற்காலத்தில் வெளியிட்ட செய்திகளிலிருந்து ஸ்டாலின் எவ்வளவு பொறுப்பற்றவன், கருணையறியாதவன், பொய்யன் என்பது தெளிவாகிறது. அமெரிக்க அணுச்சக்தியின் பயம் அவனைத் தடுத்திராவிட்டால் அவனுடைய படைகள் ஐரோப்பா முழுவதிலும், வடக்கே சானலிலிருந்து (channel) தெற்கே ஜிப்ரால்டர்வரை ஆதிக்கம் செலுத்தியிருக்கும்.

1950-ல் நாடோ உறுதியும் பிடிப்பும் பெற்றதோடு, ராணுவச்சக்தி பெறவும் ஆரம்பித்தது. வருஷ ஆரம்பத்தில் அதன் ஆலோசனைக் குழு கூட்டுப் பாதுகாப்புக்கான திட்டங்களை அங்கீகரித்தது. அமெரிக்க ஆயுதங்கள் தாங்கிய முதல் கப்பல்கள் ஐரோப்பாவில் ஏப்ரல் மாதம் வந்து சேர்ந்தன. பிரிட்டன் தன் விமான பலத்தையும் டாங்கு பலத்தையும் அதிகரித்துக்கொண்டு அடுத்த வருஷ ஆரம்பத்தில் 7,00,000 துருப்புக்களைத் தயாராக வைத்திருப்பதாக வாக்களித்தது. ஃப்ரெஞ்சு அரசாங்கம் மூன்று வருஷ ராணுவத்திட்டம் போட்டு, தேவையேற்பட்டதும் 20 டிவிஷன் எழுப்பும் நிலையை எட்டலாம் என நம்பிற்று. நாடோ சேனையில் ஐக்கிய நாட்டின் பங்கு ஆறு டிவிஷன் என்று நிர்மானமாயிற்று. அவற்றுள் இரண்டு ஏற்கெனவே ஐரோப்பாவில் இருந்தன. ஒரு அமெரிக்க ராணுவகோஷ்டி துருக்கிக்குச் சென்று, ஆறு லக்ஷம் துருப்புக்களுக்குப் பயிற்சியளித்து உபகரணங்கள் கொடுப்பது பற்றி உயர்தர ஆலோசனை கூறிற்று. கடைசியாக டிசம்பரில் ஜெனரல் ஐஸன்ஹோவர் 'நாடோ'வின் தரை நடவடிக்கைகளின் பிரதான சேனதிபதியாக இருக்கச் சம்மதித்து, ஷேர் பூரில் வந்திறங்கினார்; மக்கள் உற்சாகமான முழக்கத்துடன் அவரை வரவேற்றனர். பாரிஸுக்கருகில் தலைமைக் காரியாலயம் அமைத்துக்கொண்டு அவர் தமக்கேற்பட்ட ஆற்றலோடும் அறிவோடும் நன்னம்பிக்கையோடும் தம் காரியங்களைத் துவக்கினார்.

அந்தச் சமயத்தில் அயல்நாட்டு இலாக்காவின் தலைவர் டீன் ஜி. அச்சிஸன் (Dean G. Acheson); அவர் சமீபத்தில் அப்பதவி வகித்தவர்களுள் மிகத் திறமைசாலிகளில் ஒருவர். 1951-ல் ஒட்டாவா நகரில் துருக்கியையும் க்ரீஸையும் 'நாடோ' ஆலோசனைக் குழு ஏற்றுக்கொண்டபோது அவர்தான் ஐக்கிய நாட்டின் பிரதிநிதியாக இருந்தார். ஐஸன்ஹோவர் அந்தக் கூட்டத்திற்கு அனுப்பிய செய்தியில், ரஷ்ய மிரட்டலை எதிர்க்க வேகமான தயாரிப்புகள் மிக அவசியம் என்றும் பெயர் குறிப்பிடப்படாத சில நாடோ அங்கத்தினர்கள் துருப்புக்களைப் பெருக்கவேண்டும், தளவாட தொழிற்சாலைகளை அதிகரிக்க வேண்டும், அடுத்த வருஷத்தில் ஆயுத உற்பத்தி மூன்றில் ஒரு

பங்கு அதிகமாகவேண்டும் என்றும் எழுதியிருந்தார். அமெரிக்க ஸெனெட்டில் இதே விஷயத்தை ராபர்ட் டாஃப்ட் இன்னும் சூட்டுடன் சொன்னான்; சில ஐரோப்பிய நாடுகள் இதெல்லாம் கேட்டு வெகுண்டன. உள்நாட்டு நிலையில் முறிவு ஏற்படாமல் தம் நாடு இன்னும் அதிகத் தியாகம் செய்யமுடியாது என்று நிதி மந்திரிகளும், பொருளாதார நிபுணர்களும் வற்புறுத்தினர்கள்; ஸோவியத் ஆபத்துக்குப் பயப்படுவது போலவே, நாடு திவாலா ஆகாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார்கள் அவர்கள்.

மேற்கு ஐரோப்பாவின் முன்னேற்றத்திலும் ரகஸ்யமாகவும் மேற்கு ஜெர்மனிக்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு என்பது இதற்குள் தெளிவாயிற்று. இயற்கையாகவே ஒழுங்குப் பயிற்சியும் சுறுசுறுப்புமுள்ள ஜெர்மன் மக்கள் புதிய செய்முறைகளும் கற்று குறிப்பிடத்தக்கப் பொருளாதார மறு எழுச்சியை அனுபவித்தனர். மேற்கு நாடுகளுக்கு அவர்களுடைய இரும்பும் உருக்கும், பயிற்சிபெற்ற ஆள்பலமும், துருப்புக்களும் தேவையாக இருந்தன. ஆனால் அந்த லாபங்கள் இலவசமாகக் கிடையா என்பதை 'நாடோ' அறிந்ததே; மேற்கு ஜெர்மனியின் அரசியல் சுதந்திரமே அவற்றின் விலை; ராணுவப் பற்றுதலுள்ள ஜெர்மனிக்கு மறுபடி ராணுவ பலம் பெற சகாயம் செய்தல், ஃப்ரான்ஸைப் போலவே 'நாடோ'வுக்கும் பயமுண்டாக்கிற்று. ஆனால் 1951-ல் உலகம் இருந்த நிலையில் இரண்டு ஆபத்துகளில் இது பரவாயில்லை என்று தோன்றிற்று. ஆகவே ஜெர்மனியை, சில நிபந்தனைகளுடன், மறுபடி சுதந்திர நாடாக்க அமெரிக்கா, பிரிட்டன், ஃப்ரான்ஸ் ஆகிய நாடுகள் கோடையில் தீர்மானித்தன. கோன்ராட் அடினுர் தலைமை வகித்த பான் (Bonn) நிபப்ளிக்குடன் இதைப்பற்றிப் பேச அவர்கள் தீர்மானித்தனர். ஆனால் மேற்கு பெர்லின் அவர்கள் வசமே இருக்கும், துருப்புக்கள் இருந்துகொண்டுதானிருக்கும், ஜெர்மன் ஐக்கியத்தைப்பற்றி ரஷ்யாவுடன் அம்மூன்று அரசுகளே பேச்சு வார்த்தை நடத்தும், மேற்குத் தேசங்களுக்குத் தீங்கிழைக்கக் கூடிய அடிப்படைக் கொள்கைகளை 'வீடோ' செய்யும் உரிமை அவர்களுக்குண்டு, கம்யூனிஸ்ட் அல்லது ஃபாஸிஸ்ட் துரோகச் செயல்களைத் தடுப்பதற்காகத் தலையிட அவர்களுக்கு உரிமையுண்டு..... பிரேரேபிக்கப்பட்ட இந்த நிபந்தனைகளைப் பல ஜெர்மானியர் ஆட்சேபித்தனர்.

அதேசமயத்தில் அம்மூன்று அரசுகளும் தம் பரஸ்பர க்ஷேமத்திற்காக ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள நினைத்தன. அதன்படி, ஜெர்மனி ஒரு கணிசமான படை எழுப்ப அனுமதி பெறும்; ஆனால் அது ஒரு தேசப்படையாக இராமல் சர்வதேசப் படையின் ஒரு பகுதியாகச் செயலாற்றும். அதாவது, அது ஃப்ரெஞ்சு, இத்தாலியன், ஜெர்மன், பெனெலக்ஸ் துருப்புக்களுள்ள பல

நாட்டுச் சேனையில் சேர்த்துக்கொள்ளப்படும். இந்த ஐரோப்பிய சேனை 'நாடோ' தேசங்களின் வெவ்வேறு தேசங்களின் சேனைகளோடு சேர்ந்து ஐஸன்ஹோவர் அல்லது அவருக்குப் பின் பதவியேற்பவரின் கீழ் பணியாற்றும். இவ்வேற்பாட்டின் படி ஜெர்மன் அக்கிரமங்கள் என்ற பயம் அதிகமாயில்லாமல் ஜெர்மன் சிப்பாய்களின் உதவியை மேற்கு நாடுகள் பெறும். முக்கியமாக ஃபிரெஞ்சுக்காரருக்குத்தான் இந்தச் சாதுர்யமான யோசனை தோன்றிற்று. 1951 ன் முடிவில் ஃப்ரான்ஸோ ஜெர்மனியோ இந்தத் திட்டத்தைப் பூர்ணமாக ஒப்புக் கொள்ளும் என்ற நிச்சயமிருக்கவில்லை. ஆனல் மேற்கு ஜெர்மனி சீக்கிரத்தில் அநேகமாக முழுச்சுதந்திரம் பெறும், சொந்த அரசாங்கம் நடத்தும், ஐஸன்ஹோவர் விரும்பியபடி ஜெர்மன் டிவிஷன்களுக்காகத் திட்டங்கள் போடப்படும் என்பது முற்றிலும் தெளிவாயிற்று. ஆட்சேபிக்கக்கூடிய உரிமை முழுவதையும் ரஷ்யா இழந்துவிட்டது.

ஆசியப் போர் முனை: யுத்தத்தின்போது சில அமெரிக்க கோஷ்டியினர் அட்லாண்டிக் போர் முனையைக் காட்டிலும் பசிஃபிக் போர்முனை அதிக முக்கியமானது என்று வற்புறுத்திச் சொன்னர்கள்; போர் முடிந்த பிறகும் சிலர் அவ்வாறே நினைத்தனர். சியாங்க் சீன மாநிலத்தை இழந்து, இந்தியாவும் பிரிட்டனும் மாவ்-ன் அரசாங்கத்தை அங்கீகரித்தபோது ஐக்கிய நாட்டில் கோபதாபமான விவாதங்கள் நடந்தன. அநேக அமெரிக்கர் பிரிட்டிஷ் இந்தியத் தீர்மானத்தை சரியெனக் கருதிக் கம்யூனிஸ்டு சைனு யூ.என்.னில் இடம்பெற வேண்டும் என்றனர். சைனுவின் பழைய நட்பை மறுபடி பெற பீபிங்குக்கு ஐக்கிய நாடு ஒரு ராஜதூதனை அனுப்ப வேண்டுமென்றும் பழங்காலச் சத்துருக்களான சீனர்களுக்கும் ரஷ்யர்களுக்குமிடையே பிளவு ஏற்படுத்தவேண்டும் என்றும்கூட பல அமெரிக்கர் அபிப்பிராயப்பட்டனர். காரியதரிசி ஆசெஸன் அவ்வகையைச் சேர்ந்தவர். ஆனல் காங்கிரசிலும் அமெரிக்க மக்களிலும் பெரும்பகுதியினர் மாவ் அரசாங்கத்தைக் கடுமையாக வெறுத்தனர்.

ட்ரூமன் அரசாங்கம் சிறிதுகாலம் நடுநிலைமையாகச் சென்றது. கம்யூனிஸ்ட் சைனுவை ஏற்க அது முன்வரவில்லை; அதே சமயத்தில் ஃபார்மோஸாவிலிருக்கும் சியாங்கைத் தாக்குதலிலிருந்து காப்பாற்ற அமெரிக்கக் கடல்சக்தி அல்லது விமான சக்தியை உபயோகிக்கவும் அது மறுத்தது (1950 ஜனவரி). அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அத்தீவு அவசியமில்லை என்று உயரிய ராணுவ அதிகாரிகள் கூறிவிட்டனர். இதற்கிடையே, வேறு இடங்களில் அமெரிக்காவின் நிலைமையைப் பலப்படுத்த அரசாங்கம் முயன்றது

வாக்களித்த தினத்தில், 1946 ஜூலை 4-ஆம் தேதியன்று, ஃபிலிப்பைன்ஸுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டது; புனரமைப்புக்காக ஐக்கிய நாடு பணம் (600 மிலியன் டாலருக்கும் அதிகம்), பண்டங்கள், நிபுணர்களின் உதவி எல்லாம் தாராளமாகக் கொடுத்தது. பதிலுக்கு, ஆறு வருஷத்திறகு ஃபிலிப்பைன்ஸ் ஐக்கிய நாட்டுடன் தடையற்ற வியாபாரத்திற்கு சம்மதித்து, ராணுவ தளங்களுக்கான 99 வருஷ ஒப்பந்தமும் செய்து கொண்டது.

ஜெயிக்கப்பட்ட ஜப்பான் அறிவு வழிகாட்டிய மிதமான கண்டிப்புடன் நடத்தப்பட்டது. அமெரிக்காவின் கடுமையற்ற, ஆனல் திடமான, பிடியிலிருந்து அந்நாட்டை நழுவவிடுவதாக ஐக்கிய நாட்டுக்கு உத்தேசமில்லை; அப்பொறுப்பு நேசதேசங்களின் சர்வசேனுதிபதியாகிய ஜெனரல் டக்ளஸ் மாக் ஆர்தரிடம் விடப்பட்டிருந்தது. அவர் வாஷிங்டன் சர்க்காருடன் இணைந்திருக்கவேண்டும், அது காட்டிய வழி செல்லவேண்டுமென்பது ஏற்பாடாக இருந்தாலும் அவருடைய அதிகார தோரணை, ஜப்பானியரின் மிக அதிக நன்மதிப்பு, உண்மையாக புத்தி கூர்மை ஆகிய காரணங்களால் அவருக்கு அதிக சுவாதந்திரியம் இருந்தது. அவருடைய ஹாஸ்ய பாவமற்ற தன் மதிப்பு, தனித்திருத்தல், தம் வேலையில் ஒரே சிந்தனையுடன் புதைந்துபோதல் ஆகிய குணங்கள் பல அமெரிக்கர்களுக்கு அருவருப்பளித்தன; ஆனல் ஜப்பானியருக்கு அவை பாராட்டத்தக்க தன்மைகளாகத் தோன்றின. அதிகாரம் வகித்தல், உயர்ந்த தோரணை, மிதமான பேச்சு, தன் வேலைக்குத் தன்னை அர்ப்பணம் செய்துகொள்ளுதல் ஆகிய குணங்களை அவர்கள் மிகவும் மதிப்பவர்கள்.

மாக் ஆர்தர் துவக்கி வைத்து விஸ்தரித்த செயல்முறைகளை அனுசரித்துச் செல்வதில் ஜப்பானியருக்கு அதிக சிரமமில்லை. அவர் தம்மையும் தம் சிப்பந்திகளையும் பின்னணியில் வைத்துக்கொண்டதால் இது மேலும் சுலபமாயிற்று. அவ்வதார புருஷர் என்று கருதப்பட்ட மிகாடோ (சக்கரவர்த்தி) யின் தெய்விக அம்சங்கள் இப்பொழுது நீக்கப்பட்டு விட்டன என்றாலும் அவர் தொடர்ந்து சக்கரவர்த்தியாகவே இருந்தார். ஜப்பானிய அரசாங்கம் மாக் ஆர்தரின் கட்டளைகள் அல்லது அவர் மூலம் வரும் தீர்மானங்களுக்கு அடங்கியிருக்க வேண்டியிருந்தாலும் அவ்வரசாங்கம் பழைய ரூபத்திலேயே நடத்தப்பட்டு வந்தது. தன் சர்வோன்னதப் பதவியைப் பகட்டாகக் காட்டிக்கொள்ளாத மாக் ஆர்தர் தன் நாட்டாரையும் தம் வெற்றியை விளம்பரப்படுத்திக்கொண்டே இருக்க விடவில்லை. சில ஜப்பானியர் ஹிரோஷிமா நிகழ்ச்சியால் எவ்வளவு மனம் கசந்தாலும், நாஜிகள் ரஷ்யாவில் செய்த அக்கிரமங்

களில் ஆயிரத்தில் ஒரு பங்கோ, ரஷ்யர்கள் ஜெர்மனியில் பதி லுக்குச் செய்த அக்கிரமங்களில் ஆயிரத்தில் ஒரு பங்கோகூட அமெரிக்கச் சிப்பாய்கள் செய்யாததற்காக அவர்கள் நன்றி பாராட்டினார்கள்; தங்களுடைய சொந்தச் சிப்பாய்களே நாங் கிங், மலாயா, ஃபிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களில் நடந்து கொண்டதுடன் ஒப்பிட்டால் அமெரிக்கச் சிப்பாய்கள் பாராட் டத் தக்க கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டார்கள் என்பதை அவர்கள் அறிந்தார்கள்.

அமெரிக்கக் கொள்கைகளில் முக்கியமானவற்றையும் ஜப்பானியர் ஆட்சேபமின்றி ஏற்றனர். அந்நாட்டு ஸ்தாபனங் களை சற்றுக் குடிநல அச்சில் மாற்றி வார்க்கவேண்டும் என்பது அமெரிக்க அரசாங்கத்தின் எண்ணம்; மாக் ஆர்தரின் எண் ணம். ராணுவக் கலைவு பூர்ணமாக நடந்தது. கோட்டை களிலிருந்து யுத்த சாதனங்கள் விலக்கப்பட்டன; போர்க் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; துருப்புக்கள் சிவில் வாழ்க் கைக்குத் திருப்பியனுப்பப்பட்டனர் யுத்தக் குற்றவாளி களின் விசாரணையில் முன்னாள் பிரதம மந்திரி டோஜோ உட் பட ஒருசில மேலதிகாரிகளும் சில நூறு சிறு அதிகாரிகளும் மரண தண்டனை யடைந்தனர். மிகப்பெரிய ஜப்பானியக் கூட்டு வியாபாரங்கள் (Cartels) அல்லது ஏகபோக வியா பாரங்கள் (தற்காலிகமாக) நிறுத்தப்பட்டன. பெரிய ஜமீன்கள் குடியானவர்களிடையே பிரித்துக் கொடுக்கப்பட் டன. கல்வி முறை சீராக்கப்பட்டு, குடியரசு முறைகளைக் கற்பித்தல் ஒரு கட்டாய பாடமாக்கப்பட்டது. தொழில் சங்கங்களுக்கு செழிப்பாக வேரூன்ற வாய்ப்பளிக்கப்பட்டது. ஸ்திரீகளின் அந்தஸ்து மேற்கு நாடுகள் போல் உயர்த்தப்பட் டது. அதே சமயம், மாக் ஆர்தர் சுயமுயற்சிக்கு முழு வாய்ப்புக் கொடுத்துச் சம உரிமைக் கொள்கைகளிலிருந்து ஜாக்கிரதையாக விலகி நின்றார்; இயற்கையில் அவர் புரா தன மார்க்கத்தில் நம்பிக்கையுள்ளவர். கிழக்கு நாட்டுக் குணாதிசயங்களில் பலவற்றை அவர் மிகவும் மதித்தார்; ஆனால், ஜப்பானியர் அடிமைத்தனமாக மேலோர் காட் டிய ஒரே வழியில் மிகவும் சென்று விட்டனர், தன் வழி செல்ல அவர்களுக்குப் பயிற்சி வேண்டும் என்னும் பல அமெரிக்கரின் எண்ணம் அவருக்கும் உண்டு.

யுத்தகால நஷ்டங்களையும் மீறி ஜப்பானிய ஜனத்தொகை 1950-ல் 90 மிலியன் ஆகிவிட்டது; கொரியா, மஞ்சூரியா போன்ற இடங்கள் கைவிட்டுப் போய்விட்டதால், நாட்டின் மிதமான வளங்களை உத்தேசித்து இது கவலையளிக்கும் எண் ணிக்கை. அமெரிக்கத் துருப்புக்களுக்கான செலவும், துருப் புக்கள் செய்யும் செலவும் சேர்ந்து பண நடமாட்டத் தைப் பெருக்கி தீவின் தரித்திர நிலையில் உதவிற்று. ஆனால்

ஜப்பான் கம்யூனிஸ்டின் அரக்க வாய்க்குள் விழாமல் இருக்கவேண்டுமானால் நாடு மறுபடி சுபிக்ஷ நிலை அடைய வேண்டும். ஆகவே அமெரிக்க அதிகாரிகள் சீர்திருத்தத்தில் குறைவாகவும் புனரமைப்பில் அதிகமாகவும் கவனம் செலுத்தவேண்டி வந்தது. ஜரோப்பாவில் பொருளா தாரக் கூட்டுறவு ஸ்தாபனம் அமைத்ததுபோல் இங்கும் 1949-ல் ''பொருளாதார ஸ்திரத்துவக் காரியத் திட்டம்'' ஆரம் பிக்கப்பட்டது; அது உண்மையில் வெகு பயனளித்தது. போட் டியால் விளையும் கேடுகளை அடக்கப் பெரிய வியாபார நிலையங் களின் எழுச்சி மறுபடி அனுமதிக்கப்பட்டது. மேல் நாட்டு வாழ்க்கைத்தரம் ஜப்பானின் சக்திக்கு எட்டாததாகை யால் உழைப்பாளித் தலைவர்களின் உயர்ந்த வேண்டு கோட்களுக்கு ஒரு எல்லையிடப்பட்டது. முன்பு ஜப்பான் நெசவுப்பொருள்கள், பீங்கான்கள் முதலியன விற்றுவந்த மார்க்கெட்டுகள் இப்பொழுது கைமாறி விட்டதால் அமெ ரிக்க ஆலோசகர்கள் கனப்பொருள் உற்பத்தி செய்ய அவர் களுக்கு உதவிபுரிந்தனர்; ஆகவே ஜப்பானில் செய்யப்பட்ட யந்திரங்கள் ஆசிய விற்பனை ஸ்தலங்களுக்கு ஏற்றுமதியாக ஆவலுடன் வாங்கப்பட்டன. 1950 பிறக்கும்போது அவர் களுடைய பொருளுற்பத்தி 1930-ன் உற்பத்தியைவிட ஐந்தில் ஒரு பங்கே குறைவாக இருந்தது; அந்தக் குறைவும் விரைவில் மறைந்து வந்தது.

பசிஃபிக் பிரதேசத்தில் ஜப்பானைச் சுதந்திர பாவத்தின் ஒரு கற்கோட்டையாக ஆக்கிவிடமுடியும் என்று ஐக்கிய நாட் டார் நம்பினர். முன்பு ஜெர்மனியைப்பற்றிச் சொன்னது போலவே, ஜப்பானைப் பழைய சுபிக்ஷநிலைக்கு உயர்த்தி ராணுவ சக்தியும் அளித்தால் ஆபத்து நேர இடமுண்டு. இவ்விஷயத் தைப்பற்றி அமெரிக்கரைக் காட்டிலும் ஜப்பானிய அக்கிரமங் களால் கஷ்டப்பட்ட சிறு நாடுகள் அதிகம் கலங்கின. சுதந் திர ஆட்சி பெற்றபின் ஜப்பான் கம்யூனிஸ்ட் சைனாவோடோ ரஷ்யாவோடோ சேர்ந்தால் அதிக லாபகரம் என்று தீர்மானித் தால் என்ன செய்வது? நியாய உணர்ச்சியற்ற தலைவர்கள் இருபுறத்திலுமிருந்து சலுகைகள் பெற்று வலுவடைந்து மறுபடி திக் விஜயத்திற்குப் புறப்பட்டால் என்ன செய்வது? ஜப்பானை நல்ல வழியில் கொண்டுவர ஐக்கியநாடு தன்னு லானதைச் செய்தது; பிரதம மந்திரி யோஷீடா போன்ற தலைவர்களின் பிரதி உபகார உணர்ச்சி நம்பிக்கையளிப்பதாக இருந்தது; கண்ணை மூடிக்கொண்டு உதவிசெய்வதைத் தவிர வேறு வழியில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

கொரியா: ஆசியாவின் பொதுக் கொந்தளிப்பிலும் புரட்சிகரமான மாறுதல்களிலும் கவனம் செலுத்திய பெரும் பாலான அமெரிக்கர் 1950 வரை கொரியா என்னும் அந்தச்

சிறு பிரதேசத்தை அவ்வளவாகச் சட்டை செய்யவில்லை. திருஷ்டி கோசரத்திலிருந்த பகட்டான காட்சிகளில் அவர்கள் லயித்திருந்தார்கள். ஆட்லி (Attlee) யின் தொழிற்கட்சி அரசாங்கத்தால் பூர்ண சுதந்திரம் அளிக்கப்பட்ட இந்தியா குறிப்பிடத்தக்க வேகத்தோடும், வெற்றியோடும் ஒரு தேசமாக ஸ்தாபிதம் பெற்று வந்தது. பிரதம மந்திரி நேருவின் தலைமையில், அப்புதிய ரிபப்லிக் தன் அரசியல் பிரச்னைகளில் பெரும்பாலானவற்றிற்கும் சமுதாய, பொருளாதாரப் பிரச்னைகளில் பலவற்றிற்கும் விடை கண்டுபிடித்துவிட்டது. பாகிஸ்தானும் இலங்கையுங்கூட சுதந்திரம் பெற்று, இந்தியாவைப்போல், பிரிட்டிஷ் தேச இணைப்பில் அங்கத்தினர்களாகவே இருந்தன. பர்மா தன் சுதந்திரத்தை அவ்வளவு லாபகரமாக அனுபவிக்கவில்லை. டட்ச் இந்தோனேசியா நெதர்லண்ட்ஸோடு சம அந்தஸ்துடன் டட்ச் ஆட்சியின் கீழ் சுதந்திர நாடாக்கப்பட்டது; ஆனல் அது அத்துடன் திருப்தியடையாமல் பூர்ண சுதந்திரத்திற்காகப் போராடிக்கொண்டிருந்தது. ஃப்ரெஞ்ச் இந்தோ சைனு உள்நாட்டு விவகாரங்களில் சுயாதீனமாய் இருந்தது; ஆனல் கம்யூனிஸ்டுகளால் ஓரளவு தூண்டிவிடப்பட்ட சிவில் போரால் துன்புறுத்தப்பட்டு அதன் பிற்காலம் கவலையளிக்கிறது. அந்த மகா கண்டம் முழுதும் கடுகடுப்பான கிளர்ச்சியில் சிக்கியிருந்தது. மேற்கே லிபியாவிலிருந்து கிழக்கே ஸெலெபிஸ் தீவுவரை ஒரு பிலியன் குடிகள் காலனி ஆட்சியின் கொடுமை, வர்ண பேதச் சண்டை, தரித்திரம், துன்பம் முதலியவற்றுடன் பல நிலைகளில் போராடிக்கொண்டிருந்தனர்.

ஒரு சிறிய, மலைப்பாங்கான, பாதிப்பாதி தரிசான ஆசிய தீபகற்பமாகிய கொரியா குறிப்பாக வருந்தத்தக்க நிலையிலிருந்தது. அது முப்பத்தெட்டாவது அக்ஷாம்ச ரேகையில் (38° N. Lat.) செயற்கையாகப் பிரிக்கப்பட்டு, வடபாகம் ரஷ்யர் வசமும், தென்பாகம் அமெரிக்கர் வசமுமாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. ரஷ்யர்கள், ஜெர்மனியில் செய்ததுபோல் சுயேச்சையான தேர்தலுக்கு சம்மதியாததால் நாட்டை ஒன்று சேர்க்கும் யத்தனங்கள் வீணாயின. அமெரிக்கர் வசமிருந்த பாதியில் பெரும்பாலான ஜனத்தொகையும் வேளாண்மையும் இருந்தன; ரஷ்யரின் பாதியில் தொழிற்சாலைகளில் பெரும் பகுதி இருந்தது. ஐக்கிய நாட்டின் மனுவின்பேரில் ஐக்கிய தேச சங்கம் துன்பங்களை அடக்கக் கடைசி முயற்சி செய்தது. ஒரு அரசாங்கம் ஸ்தாபிக்கும் பொருட்டு அது ஒரு கமிஷனை அனுப்பிற்று. ரஷ்யர்கள் அந்தக் கமிஷனைத் தம் மாவட்டத்தில் வராமல் தடுத்தார்கள். அதன்பிறகு கமிஷனர்கள் தம்மாலானது செய்தார்கள்; தென் கொரியாவில் தேர்தல்கள் நடத்தி, விதானம் தயாரிக்கப்படுவதை மேல்பார்வையிட்டு, கொரியாவில் சிங்க்மன் ரீ (Syngman Rhee) யின் தலைமையில் ஒரு அரசாங்கம் அமைக்கச் சகாயமாக இருந்தார்கள்; ரீ திறமையுள்ளவர், வயதானவர், பிடிவாதமுள்ளவர், புராதன மார்க்கத்தில் பற்றுள்ளவர். 1948—49-ல் ரஷ்யர்களும் அமெரிக்கர்களும் தம் துருப்புக்களை வாபஸ் பெற்றனர்; ஆனல் ராணுவப் பொருள்களையும் ராணுவ ஆலோசகர்களையும் அவர்கள் விட்டுச்சென்றனர். யாலு நதிக்கப்பால் தமக்கு சௌகர்யமான இடத்தில் அமர்ந்து ஸோவியத் உத்தியோகஸ்தர்களும் ராணுவ அதிகாரிகளும் பூர்ண ரகசியத்துடன் தங்கள் விருப்பப்படி சதியாலோசனைகள் நடத்தலாம்.

1950-ன் ஆரம்பத்தில் திடீரெனச் சண்டை கிளம்பலாம் என்று வாஷிங்டனிலுள்ள அரசியல் கவனிப்பாளர் மிகவும் பயந்தார்கள் என்பதை ஜனதிபதி ரூஸ்வெல்ட் தம் ஜீவியக் குறிப்புகளில் எழுதியிருக்கிறார். பலதலைப் பாம்பு போன்ற ரஷ்யா ஒரு டஜன் இடங்களில் கொத்துவதற்குப் படம் விரித்திருந்தது என்பதை அவர்கள் அறிந்தார்கள்: ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, பால்கன் நாடுகள், க்ரீஸ், துருக்கி, ஈரான் இவ்வாறு காம்சட்கா வரை பல இடங்கள் ஆபத்திலிருந்தன. நாளை எவ்வாறு விடியுமோ என்று யாருக்கும் தெரியாது. "நாடோ" (Nato) பூர்ண வலிவடையும் வரை கம்யூனிஸ்டுகள் காத்திருக்க விரும்பவில்லை என்பது தெளிவு. மிகவும் கவலையளித்த இடங்கள் ஐரோப்பாவிலும் சமீபக் கிழக்கிலும் இருந்தன. ஜப்பானுக்கும் ஃபிலிப்பைன்ஸுக்கும் அப்பால் உள்ள இடங்களைப்பற்றிக் கவலையில்லை என்று சேனைப் பிரதானிகள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆனல் முன் கூற்று ஒன்றும் சாத்தியமில்லை. ஜூன் 26-ஆம் தேதி, ஒரு செய்தி நாட்டிற்கு அதிர்ச்சியளித்தது; வடகொரியச் சேனை ரஷ்ய விமானங்களின், ரஷ்ய டாங்குகளின், ரஷ்யரிடம் பயிற்சி பெற்ற அதிகாரிகளின் சகாயத்துடன் 38-வது அக்ஷாம்ச ரேகையைக் கடந்து தெற்கே (ஸேவூல் அல்லது) ஸியோல் (Seoul) நகரம் வரை வந்துவிட்டனர்.

ஆனல் கொரியாப் போரைப்பற்றிச் சொல்லுமுன் நாம் ட்ரூமன் ஆட்சிக் காலத்து உள்நாட்டு விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

அத்தியாயம் 23

போருக்குப் பிற்காலப் பிரச்னைகள் 1946-1952

சுபிட்சமும் பண வீக்கமும்: யுத்தம் முடிவடைந்ததும் அமெரிக்காவில் நீடித்த அதிக சுபிக்ஷமான காலம் ஆரம்பித்தது. வெற்றிக்குப்பின் முதல் மூன்று வருஷங்களில் உத்தியோகம், வருமானம், லாபம் எல்லாமே அதிசய உயர் நிலையை எட்டின. அரசாங்கம், குடும்பங்கள், அயல் நாடுகள், எங்கும் அமெரிக்கப் பொருள்களுக்குத் தேவை இருந்தது; பெரும்பாலும் தேவைக்குத் தக்க உற்பத்தி இல்லை. 1949-ன் ஆரம்பத்தில் தோன்றிய சிறு மந்த நிலை வளரவில்லை. யுத்தம் முடிவதற்கு முன் ஹென்ரி வாலஸ் "60 மிலியன் வேலை வாய்ப்புகள்" என்று ஒரு புஸ்தகம் எழுதியிருந்தான்; போர் முடிந்தவுடன் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும், அரசாங்கம் முன் கூட்டியே தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது அதன் கருத்து; பலர் அதை யோசனையற்ற துணிச்சல் என்று நினைத்தார்கள். ஆனல் ஊக்குவிக்கும் முயற்சிகள் இல்லாமலே சம்பள வேலைக்காரர்களின் எண்ணிக்கை 60 மிலியனுக்கும் அதிகமாகவே இருந்தது.

ஆனல் வருந்தத்தக்கது என்னவெனில் சுபிட்சத்துடன் விலை உயர்வும் பண வீக்கமும் உண்டாயின; மக்களின் பெரும் பகுதிகளில் கஷ்டதசை ஏற்பட்டது. 1947-ன் ஆரம்பத்தில் ஜனதிபதி ட்ரூமன் காங்கிரசுக்கு சமர்ப்பித்த பொருளாதார ரிப்போர்ட்டில் உற்சாகமளிக்கும் பல அம்சங்களைக் குறிப்பிட்டார்: முன்னிலும் சிறந்த, பெரிய தொழிற்சாலைகள், அதிக எண்ணிக்கையில் சிறந்த பயிற்சி பெற்ற பாட்டாளிப் படை, தொழில் வளர்ச்சிக்கான ஏராளமான மூலதனம், பொருள்களுக்காக ஏங்கிக் காத்திருக்கும் பெருந்திரள்கள். ஆனல், அதற்கெதிராக, விலைஉயர்வால் வாங்க சக்தியற்றவரின் எண்ணிக்கை, முக்கியமான பாட்டாளி கோஷ்டிகளின் அதிருப்தியும் அதனல் வேலை நிறுத்தம் ஏற்படக்கூடிய பயமும் முதலீடு குறையக் கூடிய நிலைமையும் வருந்தத்தக்கவை. 1947-ன் இலையுதிர்காலத்தில் சிகாகோவில் கோதுமை புஷல் மூன்று டாலருக்கும் அதிகமாக விற்றது; ஒரு தலைமுறை காலத்தில் விலை அவ்வளவு உயர்ந்ததில்லை; நவம்பர் மாதத்தில் விலைவாசிக் குறி எண் 1935-1939-டன் ஒப்பிட்டு 165 சத

வீதம் அதிகம் என்று தொழிலாளிப் புள்ளி விவர இலாக்கா அறிவித்தது. வருஷத்திற்கு 3½ மிலியனுக்கும் அதிகமான ஜனங்கள் இருந்ததால் ஜனத்தொகை மிக அதிகமாகப் பெருகிற்று; ஆகவே சப்ளை குறைவு, விலை உயர்வு என்ற சங்கடநிலை அதிகக் கடுமையாகி வந்தது.

காங்கிரசுக்கும் ஜனதிபதிக்கும் எதிர்ப்பு: டிமோக்ராட் கட்சியின் வெற்றியால் ரூஸ்வெல்ட்டின் வாரிசுதாராக ட்ரூமன் ஜனதிபதியானர்; ஆனல் அந்தப் பரம்பரையால் அவருக்கு அதிக நன்மை உண்டாகவில்லை. ரிபப்லிகன்களும் தென்னோட்டுப் பிற்போக்காளர்களும் ஒன்றுகூடி நியாயத்திட்டயோசனைகளுக்குக் கல் மதிலாக நின்றார்கள். 1946-ல் இலையுதிர்காலத்தில் நிலைமை மாறிற்று. சுறுசுறுப்பாகவும் அதிகப் பணச் செலவோடும் ரிபப்லிகன்கள் பிரசாரம் நடத்தி, "இவ்வளவு போதுமா, இன்னும் வேண்டுமா?" என்ற 'சுலோக'த்தைக் கிளப்பி லெனெட்டில் மறுகட்சியின் 45-க்கு எதிராக 51 இடங்களும், சபையில் 188-க்கு எதிராக 246 இடங்களும் சம்பாதித்துத் தம் கட்சியைப் பலப்படுத்திக் கொண்டனர். புதிய 80-வது காங்கிரசில் கன்ஸெர்வடிவ் கட்சியினர் ட்ரூமனின் 'வீடோ'வை 'வீடோ' செய்து சட்டம் இயற்றுவது சாத்தியமாயிற்று. அவர்கள் உடனே, 1947-ல், பொதுவாக டாஃப்ட்-ஹார்ட்லி சட்டம் (Taft-Hartley Act) எனப்படும் "தொழிலாளி" நிர்வாகி உறவுகள் சட்ட"மொன்று இயற்றினர்கள்; அதில் சில விரும்பத்தக்க நிபந்தனைகளோடுகூட தொழிலாளர் சங்கங்கள் ஏற்க முடியாத சிலவும் இருந்தன; குறிப்பிட்ட யூனியனின் அங்கத்தினரைத் தான் வேலையில் வைத்துக் கொள்ளலாம் (Closed-shop) என்ற ஒப்பந்தத்திற்குத் தடை; வேலை நிறுத்தத்திற்கும் வேலை மறுப்புக்கும் கட்டுப்பாடுகள். வில்லியம் க்ரீன், ஜான் எல். லுயி போன்ற முக்கியமான தொழிலாளித் தலைவர்கள் தாமதமின்றி சட்டத்தின் ரத்து அல்லது பெருவாரி மாறுதலுக்காகப் போர் தொடுக்கப்படும் என்று அறைகூவினர்கள். ஒரு ஜனதிபதியும் இரண்டு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்கலாகாது என்ற திருத்தத்தை தேச நிர்மாணத் திட்டத்தில் சேர்க்க காங்கிரஸ் ஸ்டேட்டுகளின் அபிப்ராயத்தையும் நாடிற்று. இது ரூஸ்வெல்ட்டின் மேல் குறை கூறுவதோடு அமெரிக்க மக்களின் அரசியல் உணர்விலும் அவநம்பிக்கை காட்டுவதாகும்; மேலும், ட்ரூமன் மூன்றும் முறைத் தேர்தலுக்கு நிற்பது நீதியில்லை என்று அறிவிப்பதுமாகும் (ஆனல் அச்சமயம் பதவியிலிருப்பவரை அவ்விதி கட்டுப்படுத்தாது). அத்திருத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டு 1951-ல் 22-வது திருத்தம் என்று பதிவாயிற்று.

பண வீக்கத்தால் கலக்கமடைந்த ட்ரூமன் கீழ்க் கண்ட காரியங்களுக்காச் சட்டமியற்றும்படி கேட்டுக்

கொண்டார்—பற்றுக்குறைப் பொருள்களை ரேஷன் செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம்; மிகத்தேவையான இடங்களில் விலையிலும் கூலிவிகிதத்திலும் உச்ச வரம்பு நிர்ணயித்தல்; ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துதல் பண்டங்களில் சூதாட்ட வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்; போக்குவரத்துச் சாதனங்களைப் பங்கீடு செய்தல், வாடகைகள் ஏறுமுகம் தடுத்தல், இதுபோன்ற மற்ற நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுதல். குடியரசின் தலைவர்கள் அரசாங்கத்திற்கு இவ்வளவு அதிக அதிகாரம் கொடுக்க விரும்பாமல், ஜனாதிபதி பொருளாதார நிலைமையைப் பயன்படுத்தி அரசியல் துறையில் வலுவடையப் பார்ப்பதற்குக் கூறினார்கள். உண்மையில், இருபுறத்திலும் சுயநல அரசியல் லீலைகள் நிறைய இருந்தன. மகோதா சட்டமாகும்போது அது பயனளிக்காத அளவு சாதுவாகப் போய்விட்டது. விலைகளையும் சம்பளங்களையும் கட்டுப்படுத்தவோ பண்டங்களைப் பங்கீடு செய்யவோ ஜனாதிபதிக்கு அதிகாரம் கொடுக்காமல், வியாபாரிகள், தொழிலாளிகள், விவசாயிகள் முதலியோர் தமக்குள் பணவீக்கம் ஏற்படாத முறையில் சுய ஒப்பந்தங்கள் செய்துகொள்ள அது அனுமதித்தது. ''இது போதவே போதாது, வருத்தமாயிருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டே ட்ரூமன் கையொப்பமிட்டார்; அவர் வருந்தியது சரியே. பணவீக்கம் இருந்து கொண்டே இருந்தது.

உண்மையில் ட்ரூமன் ஆரம்பித்துக் கொடுத்த பல யோசனைகளை 80-ஆம் காங்கிரஸ்மறுத்தது. ''நியாயமான உத்தியோகப் பழக்க வழக்கச் சட்டம்'', குறைந்தபட்ச கூலி வரம்பை மணிக்கு 45 செண்டிலிருந்து 65-க்கு உயர்த்துதல், துணிந்த வீடு நிர்மாணத் திட்டம், சமுதாய க்ஷேம நிலையின் விஸ்தாரம், ஐரோப்பாவில் நாடு கடத்தப்பட்டவருக்கு அமெரிக்காவில் இடமளித்தல் — இவை யெல்லாவற்றையும் காங்கிரஸ் எதிர்த்தது, புதிய ''ஜனாதிபதி வார்சுச் சட்ட''த்தை அரசாங்கம் விரும்பியபடி அது ஏற்றுக்கொண்டது. ஜனாதிபதி, உபஜனாதிபதி இருவரும் இறந்துபோனால், அப்பதவி செனெட்டின் தற்காலத் தலைவரான 'ஸ்பீகர்' வகிக்கவேண்டும், அடுத்தபடியாக காபினெட் அங்கத்தினர்களின் முறை வரும், அவர்களுள் வரிசைக் கிரமம் இலாகாக்களின் ஆரம்ப வருஷத்தை—அவற்றின்வயதை—பொறுத்ததுஎன்பதுஅச்சட்டம். வரிகளைக் குறைப்பது பற்றி காங்கிரசுக்கும் ட்ரூமனுக்கு மிடையே விறுவிறுப்பான அபிப்பிராயபேதம் இருந்தது; வாக்காளர்களின் நட்பைப் பெற இரு சபைகளும் வரிச்சுமையைச் சுமார் நான்கு பில்லியன் டாலர் வரைக் குறைக்கச்சட்டங்கள் இயற்றின; ஜனாதிபதி இரு முறை அதை சமயம் அனுகூலமில்லையென்றும், அமைப்பில் பிழைகள் இருக்கின்றனவென்றும் 'வீடோ' 'செய்து பார்த்தார்.

தேசச் செலவு தொடர்ந்து மிக அதிமாக இருந்தது; அந்தமாதிரி சமயத்தில் வரிகளைக் குறைப்பது மிகவும் அனுசிதம். சுபிட்ச நிலை இருந்ததும்கூட தேசக் கடனைக் குறைக்க முடியாமலிருப்பது அக்காலத்து முரண்பாடு. கடன் ஏறிக்கொண்டே சென்று, 1949 டிசம்பரில், 257 பில்லியன் டாலர் என்னும் உச்ச வரம்பை எட்டிற்று. வருஷா வருஷம் வருமானத்தை விடச் செலவு மிகுந்திருப்பது சகஜமாகிவிட்டது. 1949-ன் இறுதியில் 'கடன் வாங்குவதை நிறுத்த வேண்டும்; என்று ட்ரூமன் கூறினார். ''அரசாங்கத்தின் செலவுக்கு உள்நாட்டிலேயே பணம் திரட்டவேண்டும்'' என்று பத்திரிகை நிருபர்களிடம் அவர் கூறினார். ஆனால் அயல்நாடுகள் இருந்த நிலையில் அதிகச் செலவிலிருந்து தப்ப வழியில்லாமலிருந்தது.

ட்ரூமனும் தேச விசுவாசமும்: முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு ராஜவிசுவாசம், ஒத்துழைப்பு, நூற்றுக்கு நூறு அமெரிக்கத்துவம், போன்ற கருத்துக்களுடன் தீவிரப் பிரசாரம் நடந்து, பல தேசாபிமானிகளும் உதாரவாதிகளும் அநியாயமாகத் துன்பத்திற்காளானார்கள். அதே இயற்கை நிகழ்ச்சி இப்பொழுது முன்னிலும் தீவிரமாக உருவெடுத்தது. ஐக்கிய நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியினரின் எண்ணிக்கை 75,000-க்கும் குறைவு; அது குறைந்து கொண்டும் வந்தது; அப்படியிருந்தும் அக்கொள்கையைச் சட்டவிரோதமானதாகக் கருதவேண்டும் என்று கூச்சல் கிளம்பிற்று. தேசத்துரோகி என்ற குற்றச்சாட்டு ஏற்பட்டுவிட்டால் முழு ஆராய்ச்சி நடைபெறவேண்டும், முக்கியமாகச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், பத்திரிகைத் தொழிலாளர்கள், உல்லாசப் பொழுது போக்குக்கான தொழில்கள் நடத்துபவர்களிடம், அதிகக் கண்டிப்பாக இருக்கவேண்டும்—என்று கூறப்பட்டது. இந்தக் கிளர்ச்சியால் அடிப்படையான சிவில் உரிமைகளுக்குப் பங்கம் விளையுமாகையால் நாட்டின் அறிவாளித் தலைவர்கள் அதை எதிர்க்க முயன்றார்கள்.

எண்பதாவது காங்கிரஸின் ''அமெரிக்கத்துவமற்ற செயல்கள் பற்றிய கமிட்டி''யும், ட்ரூமனின் விசேஷ ''சிவில் உரிமைகள் கமிட்டி''யும் நேர்முரணான முடிவுகளைக் கண்டன; இரண்டு கமிட்டிகளும் 1947-ல் ரிப்போர்ட்டுகள் சமர்ப்பித்தன. முன்சொன்ன கமிட்டி பல கம்யூனிஸ்டுப் போர்முனைகளைக் கண்டுபிடித்துவெளியாக்கியதாகக்கூறிப் பல உதாரணங்கள் அளித்தது; மிகத் திறமையுடன் எழுதப்பட்ட ஜனாதிபதிக் கமிட்டியின் ரிபோர்ட்டில், தேசப்பாதுகாப்பு என்ற பெயரில் ஒன்றன்பின் ஒன்றாய் அடிப்படையாகச் சிவில் உரிமைகள் தாக்கப்படுவது விவரிக்கப்பட்டிருந்தது. நாடு முழுவதும் அது

நடந்துவந்தது. ''பல்வேறு சமயங்களில் அநேகமாக ஒவ்வொரு பகுதியிலும் வெட்கக்கேடான தலையிடுதலால் சில பேரின் உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன,'' என்று அது வர்ணித்தது. மிகத் தெளிவாய்த் தெரிந்த கொடுமைகளை ஜாப்தா இட்டு அந்தக் கமிட்டி திருத்த நடவடிக்கைகளையும் சிபார்சு செய்தது.

1946-ன் இலையுதிர்காலத்தில் ட்ரூமன் ஒரு உத்தரவின் மூலம் ''உத்தியோகஸ்தனின் ராஜ விசுவாசத்தை அறிய ஜனதிபதியின் தற்காலிகக் கமிஷன்'' என்னும் விசாரணைக்குழு உண்டாக்கி, ஒரு காரியத்திட்டம் வகுக்கும்படி உத்தரவிட்டார். அடுத்தாண்டு ஒரு விஸ்தாரமான செயல்முறை அமுலுக்கு வந்தது.

அரசாங்கக் காரியாலயங்களைப் பாதுகாப்பதற்கான இந்தத் திட்டத்தில் தற்காலிக நன்மைகளுமிருந்தன, மிகக் கொடிய தீமைகளுமிருந்தன. சர்க்காரில் உத்தியோகம் வகிப்பது ஒரு உரிமையல்ல, அது ஒரு சலுகை என்ற கொள்கை அதன் அடிப்படையாக இருந்தது. ''ஒருவன் தேசத்துரோகி என்று நம்பச் சுமாரான காரணங்களிருந்தால்'' அவனுக்கு உத்தியோகம் மறுக்கலாம் அல்லது உத்தியோகத்திலிருந்து நீக்கலாம் என்ற கருத்தை அது ஏற்றது. ஆனால் ஒருவன் குற்றவாளியல்ல என்ற தீர்ப்புக் கூறப்பட்டாலும்கூட அவனுடைய விசாரணை விவரங்களெல்லாம் ஃபீஸ் கட்டுகளில் இருந்து கொண்டே இருக்கும். ஒரு பதவியிலிருந்து இன்னொரு பதவிக்கு அவன் போகும்போதெல்லாம் அந்தக் கட்டு ஆராயப்படும்; அவன்தன் நிலைமையை மறுபடி தெளிவாக்கிக்கொள்ள வேண்டும். ''இது அமெரிக்க நியாயபாவத்திற்கு முரணானது'' என்று ட்ரூமன் எழுதினார்.

ட்ரூமன் மறுபடி தேர்ந்தெடுக்கப்படுதல்: எண்பதாவது காங்கிரசுடன் ஜனதிபதியின் போராட்டம் முற்போக்கான வட்டாரங்களிலும் பாட்டாளிகளிடையேயும் அனுதாப உணர்ச்சியைக் கிளப்பிற்று. 1948-ன் வசந்த காலத்தில் அவர் நாட்டிற்சுற்றுப்பிரயாணம் செய்து காங்கிரசின் செயல்களைக் கண்டித்துப் பேசியபோது, மக்கள் தம் சம்மதத்தைத் தெரிவித்தனர். அப்படியிருந்தும் நடைபெற இருக்கும் ஜனதிபதித் தேர்தலில் டிமோக்ராடிக் கட்சிக்கு வெற்றி சம்பாவனை மிகக் குறைவென்றே பலரும் தீர்மானித்தனர். அதற்கொரு காரணம் ஹென்ரி ஏ. வாலனின் போட்டி. அவன் டிமோக்ராட் அல்லது ரிபப்லிக் அபேட்சகனாக நில்லாமல் இரு கட்சிகளையும் தாக்கிப் பேசினான்; ஆனால் டிமோக்ராட் வோட்டுகள் அவனுக்குப் பல கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நீக்ரோக்களுக்கு சிவில் உரிமைகள் அளிப்பதற்கான ட்ரூமன் திட்டம் தென் ராஜ்ய டிமோக்ராட்டுகளைக் கோபப்படுத்தியிருப்பது இன்னொரு

காரணம். டிமோக்ராட் கட்சி ட்வைட் ஐஸன்ஹோவரின் பெயரைக் குறிப்பிடுவதென ஒரு வலுத்த கிளர்ச்சி வளர்ந்தது; அந்நிலையில் ட்ரூமன் விலகி நின்றிருப்பார். சேஞ்சி பதியின் கட்சி எது என்று யாருக்கும் தெரியாது. ஆனால் அவர் இரு கட்சியின் அழைப்பையும் திடமாக மறுத்ததும் டிமோக்ராட்டிகள் ட்ரூமனை நாடுவதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை.

ஜூலை மாதத்தில் டிமோக்ராட் கட்சியின் பெயர் குறிப்பிடும் சபை ஃபிலடெல்ஃபியாவில் கூடிக் குறிப்பிடத்தக்க எதிர்ப்பும் சிறிதளவு உற்சாகமுமில்லாமல் ட்ரூமனை ஆதரித்தது. ட்ரூமன் மாத்திரமே சளைக்காத போர் மனப்பான்மையைக் காட்டினார்.

ரிபப்லிக் கட்சியினரும் அதே நகரில் கூடி ஏற்கெனவே தாமஸ் ஈ. ட்யூயி என்பவரை மறுமுறை குறிப்பிட்டுக் கட்சியின் எல்லா அம்சங்களின் ஆதரவையும் அவருக்காகப் பெற்றிருந்தனர். ஒரு சமயம் ஸெனெட்டர் ராபர்ட் ஏ. டாஃப்ட், முன்னாள் ஜனதிபதி டாஃப்டின் குமாரர், ''வாஷிங்டனிலேயே மிகக் கூரிய புத்தியுள்ளவர், ஆனால் தீர்மானத்திற்கு வருவதில் தான் தாமதம்'' என்ற விருது பெற்றவர், ட்யூயியைத் தோற்கடித்து விடுவாரோ என்றும் தோன்றிற்று.

ட்ரூமனின் வெற்றிக்கு மேலும் பிரதிகூலமாக, விடாப்பிடியான தென்னூட்டு டிமோக்ராட்டுகள் அபூர்ணமான சிறு சபை கூட்டி தென் கரோலினாவின் கவர்னரான தர்மாண்டின் பெயரையும், மிஸிஸிபியின் கவர்னரான ரைட்-டின் பெயரையும் குறிப்பிட்டார்கள். கல்ஃப் ஸ்டேட் என்னெய் முதலாளிகளுக்கு ட்ரூமன்மேல் கோபமுண்டு; அப்பிரதேசத்தின் கடலோரத்து ஏற்றவற்ற நிலங்களை ராஜ்ய நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவருவதற்கான மசோதாவை அவர் 'வீடோ' செய்துவிட்டார். ஆகவே அவர்கள் ட்ரூமனின் எதிரிகளுடன் சேர்ந்துகொண்டார்கள். ரிபப்லிகன் கட்சிக்கு அபார வெற்றி கிடைக்கும் என்றே தோன்றிற்று. பெரும்பாலான வாக்காளர் ராமன், ராவணன், யார் ஆண்டாலென்ன என்றிருந்தனர். அப்படியிருந்தும் ஜனதிபதி மனம் தளரவில்லை; வெகுதூரங்களுக்குச் சென்று, மக்களின் மொழியில் பேசி, 80-ஆம் காங்கிரஸின் குறைகளைக் கண்டித்துப் பேசினார்.

தேர்தல் நடந்த மறுநாள் தலைகீழான செய்தி ஒன்று கேட்டு நாடு திகைத்தது. ட்ரூமன் ஜெயித்துவிட்டார்; 24 மில்லியனுக்கதிகமான மக்கள் வோட், 303 எலெக்டோரல் வோட்; ட்யூயி பெற்றது 22 மில்லியனுக்குக் குறைவான மக்கள் வோட், 189 எலெக்டோரல் வோட். நூற்றில் அறுபது வாக்காளர் தான் வோட் செய்தார்கள். ரிபப்லிகன் கட்சியினர் பலர் பந்தாடப் போய்விட்டார்கள் என்று சிலர் காரணம் கூறினர்.

மொத்தத்தில் நாடு டிமோக்ராட் லட்சியத்தை ஆதரிக்கிறது என்பது காங்கிரஸ் தேர்தலில் இருந்தும் தெரிந்தது. புது ஸெனெட்டில் 54 டிமோக்ராட்டுக்கு 42 ரிபப்லிகன் என்றும், புதுச் சபையில் 263 டிமோக்ராட்டுக்கு 161 ரிபப்லிகன் என்றும் எண்ணிக்கை நிலைமை இருந்தது. ஆனால் ட்ரூமன் நிச்சிந்தை யாக இருப்பதற்கில்லை. சில்லறைக் கட்சிகள் ரிபப்லிகன் கட்சி யுடன் சேர்ந்துகொண்டால் கூட்டுக் கட்சியின் வோட்டுகள் அதிகமாகும்.

நியாயத் திட்டம் மறைகிறது: தேர்தல் முடிந்த உடன் 81-ஆம் காங்கிரஸ் கூடிற்று; ட்ரூமனைவிடச் சற்று அதிக சமயோசித தந்திரமும் கற்பனைச் சக்தியும் கொண்ட ஒரு ஜனநிபதி அந்தக் காங்கிரஸில் சில நல்ல காரியங்கள் சாதித்திருக்கலாம். 1949 ஜனவரியில் அவர் தம் ''நியாயம் வழங்கும்'' திட்டத்தை மறு படி காங்கிரஸ் முன் கொண்டுவந்தார்; அது ''புதுத் திட்ட''த் தின் தொடர்ச்சியும் விஸ்தாரமுமாகும்; அவருக்குச் சரியான ஆதரவு கிடைக்கவில்லை. பெரும்பாலான ஜனநிபதிகளுக்கு முதல் முறையைக் காட்டிலும் இரண்டாம் தடவையில் எதிர்ப் பும் சிரமமும் அதிகம். 1949-1952-ல் காங்கிரஸில் ட்ரூமனின் செல்வாக்கு மிகவும் குறைந்தது.

வெள்ளை கறுப்பு ஜாதியார் என்ற விஷயத்தில் தென்ராஜ்ய அங்கத்தினர் அவருடைய சிபார்சுகளைப் பிடிவாதமாக எதிர்த்தனர். பள்ளிக்கூடங்களுக்கு மத்திய அரசாங்கம் சகாய மளிப்பது பற்றிய யோசனை முன்புபோலவே மரணப்பிடியில் முடிந்தது. 1950 ஏப்ரலில் காங்கிரஸ்கிரக நிர்மாணச் சட்டம் இயற்றிற்று; சேரிகளை ஒழித்துச் சொற்ப விலை வீடுகள் கட்டு விப்பதில் 1½ மிலியன் டாலர் செலவுசெய்ய அது அனுமதித் தது. நிர்மாண இயலிலும் வேறு விஞ்ஞானத் துறைகளிலும் அடிப்படையான ஆராய்ச்சி செய்யத் தேசியக் காரியத் திட்டம் இயற்றுவதற்காக ''தேசிய விஞ்ஞான ஸ்தாபனம்'' உண்டாக் கப்பட்டது; அது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. 1949-ல் காங்கிரஸ் பாட்டாளிகளின் குறைந்தபட்சச் சம்பள விகிதத்தை மணிக்கு 40 செண்டிலிருந்து 75 செண்டு ஆக்கிற்று. எல்லாவற்றிலும் முக்கியமாக, 'சமுதாய க்ஷேமநிலை'ச் சட்டத்தை விஸ்தரித்த தில் 35 மிலியனுக்குப் பயன்பட்ட சட்டம் சுமார் 45 மிலிய னுக்குப் பயன்படலாயிற்று (1950). ஆனால் டென்னெஸித் திட் டம்போல வேறு நதிகளிலும் செய்யவேண்டும் என்று ட்ரூ மன் கூறியதையும், அதுபோன்ற வேறு சில விஷயங்களையும் காங்கிரஸ் ஏற்கவில்லை.

இதற்கிடையே, பணவீக்கத் தோஷங்கள் தட்டுதடையில் லாமல் செழித்தன. ''பாதுகாப்பு உற்பத்தி'' சட்டத்தின் (1950) கீழ் ஒரு ''பொருளாதார ஸ்திரத்துவ நிர்வாகம்'' அமைக்கப்பட்டது. அதன் முதல் தலைவர் தொழில்

உற்பத்தியாளர்களையும், விற்பனையாளர்களையும் குறிப்பிட்ட பொருள்களுக்கு விலைக் கட்டுப்பாடு செய்யும்படிக் கேட்டுக் கொண்டார். அவ்வேண்டுகோள் பயனளியாமல் போனதும், இரண்டாவது தலைவர் பல பொருள்களின் விலைகளையும் கட்டுப் படுத்த முயன்றார். அதுவும் வீண் யத்தனமாயிற்று. குறிப் பாக, கொரியாப் போர் துவங்கியதும் விலை உயர் தல், அதை எட்டிப்பிடிக்கச் சம்பளங்கள் உயர்தல், அதிகப் பணப் புழக்கத்தால் விலை இன்னும் ஏறுதல் .... என்ற விளை யாட்டு விறுவிறுப்புடன் நடந்தது. நிரந்தரமான மாதச் சம் பளக்காரர்கள், வலுவுள்ள யூனியன்களால் காப்பாற்றப்படா தவர்கள், குடியானவர்கள், கூலி விகிதத்தை உயர்த்திக் கொள்ள முடியாதவர்கள் முதலியோர் மிகவும் கஷ்டப்பட் டார்கள்.

''பணவீக்கம் லகான் கடிவாளம் இல்லாமல் சுயேச்சை யாக ஓட்த்தொடங்கினால் அமெரிக்கா திவாலா ஆகிவிடும். ஸ்டாலினின் கனவு பலித்துவிடும்; ஒரு குண்டு சுடாமல் அவன் நம் நாட்டைப் பற்றிக்கொள்ளுவான்''—என்று பாதுகாப்பு இலாக்கா அதிகாரி வில்ஸன் சொன்னான். 1951 ஜனவரியில் அரசாங்கம் விலைவாசிகளையும் கூலி விகிதங்களையும் கட்டுப் படுத்த உத்தரவுகளிட்டது; ஆனால் விதிவிலக்குகள் அதிகமாக இருந்ததால் உத்தரவு நீடித்துப் பயன்படவில்லை. பணப் பெருக்கத்தின் சரியான பரிகாரம் வரி உயர்வு, தனி வருமான வரி, கூட்டு வருமானவரி, இரண்டின் உயர்வு. அது அவ் வாண்டு ஆரம்பமாயிற்று.

மறுபடியும் கம்யூனிஸமும் பாதுகாப்பும்: ட்ரூமனின் தேர்தல் நடந்த உடனேயே கவனத்தைக் கவரும் பல நிகழ்ச்சிகள் நாட் டின் கம்யூனிஸ்ட் செயல்களில் மக்களின் கவனத்தைப் பதிய வைத்தன; கம்யூனிஸ்ட்-எதிர்ப்பு ஹிஸ்டீரியாவாக முடிந்து விடுமோ என்று பயப்படும்படி மக்களிடையே உத்வேகம் பொங்கிற்று. கம்யூனிஸ்ட் கட்சியின் ''பாலிட்ப்யூரோ'' வாகிய 11 தலைவர்கள் ஸ்மித் சட்டத்தை மீறியதற்காக 1949-ல் விசாரிக்கப்பட்டனர். விசாரணையில் சில கேள்விகள் எழுந்தன; கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சதியா? அது மாஸ்கோவி லிருந்து உத்தரவுபெற்று நடந்ததா? அது பலாத்காரமாக அர சாங்கத்தைக் கவிழ்க்க உபதேசம் செய்ததா? பாரபட்சமில்லா மலும் கண்ணியமாகவும் தலைமை வகித்த நீதிபதி ஹரால்ட் மெடினு சாட்சியங்களை வெகு திறமையுடன் திரட்டி ஒழுங்கு படுத்தி ஸ்மித் சட்டத்தின்படி ஒரு முடிவுக்கு வரும்படி கூறி னார். (ஸ்மித் சட்டம் முறையானதா என்ற கேள்வி எழுந் தது; முறையானது என்று பிறகு தீர்மானமாயிற்று). பதி னெரு பேரும் குற்றவாளிகள் என்று ஜூரி தீர்மானிக்க, அவர் கள் சிறைச்சாலை சென்றனர்.

கம்யூனிஸ்டு ஈடுபாடு உண்டு என்ற குற்றச்சாட்டின்மேல் பல அயல் நாட்டாரை அரசாங்கம் நாடு கடத்திற்று. பள்ளிக் கூட உபாத்தியாயர்கள், சர்வகலாசாலை ஆசிரியர்கள் உட்பட உத்தியோகஸ்தர்கள் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்ய வேண்டுவதைப் பற்றிய மசோதாக்கள்மேல் பல ஸ்டேட்டு களில் ஆலோசனை நடந்தது; சிலவற்றில் அவை சட்டமாயின. நியூயார்க்கில் ஃபைன்பெர்க் சட்டம் பலத்த ஆட்சேபத்தைக் கிளப்பியதில் அது ரத்து செய்யப்பட்டது; அதன்படி, சதி யாலோசனைச் சங்கம் என்று ஒரு குறிப்பிட்ட இலாக்காவால் தீர்மானிக்கப்பட்ட சங்கத்தில் உபாத்தியாயர்கள் சேர்ந்திருந் தால் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

கொரியாப் போரால் ஆவேச உணர்ச்சிகள் எழுப்பப்படும் போது, உள்நாட்டுப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் தேவைக்குத்தக்க அளவு இராமல் அளவுகடந்துபோகும், அப் பொழுது கம்யூனிஸ்ட் வேலைகாரர்களும் சதிகாரர்களும் செய்யக்கூடிய தீங்கைக் காட்டிலும் அதிகத் தீங்கு விளையும் என்று பல அமெரிக்கர் பயந்தனர். திகில், சந்தேகம், அடக்கி வைத்தல் என்னும் சூழ்நிலை நாட்டைக் கவ்விவருவதாக அவர் கள் நம்பினர்கள். நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் பேச்சு, பிரசுரம், பொதுக்கூட்டம் போடுதல், அபிப்பிராய பேதம், இவற்றின் சுதந்திரம் வருந்தத்தக்க அளவு சுருங்கு கிறது என்று அவர்கள் கருதினர்கள். நியாயமறிந்த பொதுத் தலைவர்கள் ''சேர்க்கைக் குற்றம்'' என்பது நீதியற்ற, தர்க்கப் படி ஏற்றுக்கொள்ளமுடியாத குற்றச்சாட்டு என்று எடுத் துரைத்தார்கள். சதிச் சங்கங்களின் நியாய முறையான பட்டியல் தயாரிப்பது கடினம் என்றும் அவர்கள் கூறினர்கள். தேசத் துரோகிகளைப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் அரசாங்கக் காரியாலயங்களிலுமிருந்து வெளியேற்றும் பெரு வாரி முயற்சி அநேக சாது மக்களை அழித்துத் தந்திரசாலியான குற்றவாளிகளைத் தப்பவிட்டுவிடும் என்ற ஆபத்தும் இருந்தது. பொதுமக்களின் வெறித் துவேஷத்திற்கு இடங்கொடாம லிருக்க அரசாங்கம் கூடியவரை முயன்றது. ஆனல் காங்கிரஸ் ஜாக்கிரதைக் குறைவாக நடந்துகொண்டது.

பாமரக்கூட்டத் தலைவன் ஒருவனுக்கு இந்நிலைமை ஒரு நல்ல வாய்ப்பு அளித்தது; 1950-ல் விஸ்கான்ஸினைச் சேர்ந்த ஸெனெட்டர் ஜோஸஃப் ஆர். மக்கார்த்தி அவ்வாய்ப்பைத் தீங்கிழைக்கும் திறமையுடன் பயன்படுத்திக் கொண்டான். உரத்த வசைச் சொற்பொழிவில் வல்லவன், நீதியற்றவன், மனச்சாட்சியைக் கொன்றவன், மகா தந்திரக்காரன்— கற்பனைக் குற்றங்கள் சாட்டுவதாலும், துணிந்த தாக்குதல் களாலும், வஞ்சனையான எதிர்ப்பாலும், மக்களின் அறியா மையையும், யோசனையற்ற துவேஷத்தையும் பயன்படுத்திக்

கொள்ளுவதாலும் தேசிய முக்கியத்துவம் பெறலாம், பதவியும் சக்தியுங்கூடப் பெறலாம், என்பதை அவன் அறிந்தான். சண் டைக்கிசைந்த அவன் முகம், கரகரப்பான குரல், பெரியபொய் யின் பிரசார சக்தியின் உபயோகம், இவையெல்லாம் டெலி விஷன்பேசும்படம் பார்ப்பவர்களுக்குச் சகஜமாயின. பத்திரிகை களில் தலைப்புவரி பெறும்படியான செய்திகள் வெளியிடுவதில் அவனுக்கு இயற்கைச் சக்தி இருந்தது. அச்சிஸனின் தலைமை யில் நடக்கும் அயல்நாட்டு அரசியல் இலாக்காவில் கம்யூனிஸ்ட் என்று வெளிப்படையாகத் தெரிந்த 205 பேர் வேலை செய்கி ரூர்கள் என்றும் ஜான் ஹாப்கின்ஸ் சர்வகலாசாலைப் பேரா சிரியரும்யுத்தச்செய்திக்காரியாலயத்தில் பசிஃபிக் நடவடிக்கை கள் பகுதியில் முன்னுள் உப-டைரெக்டருமான ஓவன் லாட்டி மோர் ''ஐக்கிய நாட்டிலுள்ள ரஷ்ய வேலைகாரர்களின் தலை வன்'' என்றும் குற்றம்சாட்டி அவன் முதலில் பத்திரிகைகளில் பகட்டான இடம் பெற்றான். அயல்நாட்டு இலாக்காவில் ஒரு கம்யூனிஸ்டும் அகப்படவில்லை. ஒரு தனி ஸெனெட் ஸப் கமிட்டி வெகுகாலம் விசாரித்துக் கடைசியில் லாட்டிமோரைக் குற்றவாளியல்ல என்று தீர்மானித்தது. ஜஸன்ஹோவர் நிர் வாக காலத்தில் அவ்வாசிரியர்மேல் சாட்டப்பட்ட குற்றங்க ளெல்லாம் பழிவாங்கும் மனப்பான்மையுடன் விசாரிக்கப் பட்டுக் கடைசியில் கோர்ட்டுகளால் தள்ளுபடி செய்யப்பட் டன. ஆனல் ஹிஸ்-ன் தண்டனையையும் க்லாஸ் ஃபுக்ஸ் என்னும் பிரிட்டிஷ் விஞ்ஞானி ரஷ்யர்களுக்கு அணுச்சக்தி சம் பந்தமான இரகசியங்களை வெளியிட்டு விட்டான் என்ற செய்தி யையும் ஓட்டி மக்கார்த்தி ஸெனெட்டில் நிகழ்த்திய வசை முழக்கங்கள் பலபேரை ஏமாற்றின. காங்கிரஸ் ரிபப்லிகன் கட்சியின் வசம் ஆகுமானல் அவன் இன்னும் பெரிய காரியங் களைச் சாதிக்கத் தயாரானன்.

மக்கார்த்தி தன் கரிபூசும் காரியத்தை ஸெனெட் மண் டபத்திற்குள் செய்யும்வரை அவன்மேல் நிந்தனைக்காக வழக் குத் தொடுப்பதற்கில்லை. சில கூற்றுக்கள் எல்லைகடந்த அக் கிரமங்களாதலால் அவை அவன் மேலே திரும்பிப் பாய்ந்தன. உதாரணமாக, 1951-ல் அவன் ஐக்கிய நாட்டில் ஒரு மிகப் பெரிய கம்யூனிஸ்ட் சதியைப் பாதுகாப்பு இலாக்காக் காரிய தரிசி ஜ்யார்ஜ் மார்ஷல் தெரிந்து சகித்துக்கொண்டிருப்ப தாகக் கூறித் தாக்கினன். நாணயஸ்தரும் உயர்ந்த பண்புள்ள வருமான ராஜ தூதர்களையும் பத்திரிகை ஆசிரியர்களையும் ஸெனெட்டின் சக அங்கத்தினர்களையும் கூட அவன் சந்திக் கிழுத்தான். 1950-ல் ஒரு ஸெனெட் சப்-கமிட்டி அவன் சாட் டிய முக்கியமான குற்றங்கள் ''ஏமாற்றுபவை, வஞ்சனை யானவை'' என்று முடிவு செய்தது. அதுபோல, அவனுடைய பொய்கள் வெளியான போதெல்லாம் தன் எதிரிகள்

உண்மையை மறைத்துக் கம்யூனிஸத்தைத் தாக்கினர்கள் என்று அவன் துணிந்து சொன்னான். அவனுடைய வசை புராணங்கள் அரசாங்கத்தின் காம்பீரியத்தையும் செயலாற்றலையும் பல ஹீனப்படுத்திற்று. அதைவிடப் பெரிய தீங்கு: அவன் எழுப்பும் கூச்சலால் அயல் நாடுகளில் ஐக்கிய நாட்டிற்குக் கணக்கிட முடியாத ஹானி ஏற்பட்டு வந்தது; ஃபாசிஸ்ட் இயக்கம் பரவித் தான் வருகிறதோ, சிறு தீயுமில்லாமல் இத்தனை புகையிராது என்று அவை நினைத்தன.

பரவலான திகில் உணர்ச்சியால் மாக்-கார்ரன்-நிக்ஸன் மசோதா ஜனாதிபதியின் மறுப்பை மறுத்து 1950-ல் சட்டமாயிற்று. அச்சட்டத்தின்படி, கம்யூனிஸ்ட் வகைச் சங்கங்களின் அங்கத்தினர் எல்லாம் பெயர்ப் பதிவு செய்து கொள்ளவேண்டும், தேசப் பாதுகாப்பு சம்பந்தமான காரியாலயங்களில் அவர்களுக்கு உத்தியோகம் கிடைக்காது. யுத்த காலத்தில் கம்யூனிஸ்டுகளும் இதரச் சதிகாரர்களும் கைது செய்யப்படுவார்கள். கம்யூனிஸ்ட், ஃபாஸிஸ்ட் சங்கங்களில் ஒருவன் எப்பொழுதேனும் சேர்ந்திருந்தாலும் அவன் ஐக்கிய நாட்டில் இடம்பெற மாட்டான். ஒருசமயம் ஃபாசிஸ்டு கோஷ்டிகளுடன் சேர்ந்திருந்த பிரபலமான ஜெர்மானியர், ஹங்கேரிக்காரர், இத்தாலியர் முதலிய பலபேரும் விதியிலிருந்து விலக்கப்பட்டனர். நாஜி ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடின பலரும் கூடச் சட்டத்தால் பாதிக்கப்படவில்லை.

மொத்தத்தில், ட்ரூமன் நிர்வாகம் முடிவடையும் காலத்தில் யுத்தகால இன்னல்களாலும் புதுவாழ்வுத் திட்ட நாட்களின் எதிர்க்கிரியையினாலும் அதிக நிதானமும் பிற்போக்குமான காலம் வரக்கூடும் என்ற ஆபத்து இருந்து வந்தது. "எது எப்படிப் போனாலும் வழக்கம்போல் நம் காரியம் நமக்கு" என்ற அரசாங்கக் கொள்கையும், சுயாதீன உலகம் முழுதுக்கும் அமெரிக்கப் பொருளாதார சுபிட்சம் மிக அவசியம் என்ற சரியான உணர்வும் மேற்சொன்ன மனப்பான்மையை வளர்த்தன. அவ்வப்போது ஏற்படும் தப்புக்காக அரசாங்கத்தை அளவு மீறிக் கண்டிப்பதும் அதே நிலைக்குக் கொண்டுவிடும். 1950-51-ல் அரசாங்க வரவும் செலவும் சமமாயின. "ஆபத்து மயமான யுகம்" என்று ஐஸன்ஹோவர் வர்ணித்த இந்தக் காலத்தில் உதாரத் தன்மைகளுக்கு ஆபத்தில்லாமலிருந்தால், எல்லாம் க்ஷேமமாக இருக்கும்.

உள்நாட்டு விவகாரங்களிலிருந்து நாம் மறுபடி அதிக இருளான அயல்நாட்டின் பக்கம் திரும்பவேண்டும்.

அத்தியாயம் 24

கொரியா யுத்தம் : ஐஸன்ஹோவர் ஜனாதிபதி

ட்ரூமன் சுதந்திர உலகைத் திரட்டுகிறார்: கம்யூனிஸ்டுகள் தென் கொரியாவின் மேல் படையெடுத்தபோது, அவர்கள் ஆசியாவில் ஆதிக்கம் நடத்தலாம் என்பதை நிரூபித்துக் காட்டக் காலம் வந்துவிட்டது என்றே சந்தேகமின்றி நம்பினார்கள். மாவ் சைனாவில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான்; அவன் உதவி பெற்று ஃப்ரெஞ்ச் இந்தோ சைனாவை விழுங்க முடியும் என்று வியட்மின் நம்பிற்று; பிரிட்டிஷ் மலாய்சியாவில் ஒரு கடுமையான நிலையற்ற (கொரில்லா) சண்டைக்குக் கம்யூனிஸ்ட் சதிகாரர்கள் வழிகாட்டிக் கொண்டிருந்தார்கள். கம்யூனிஸ்ட் தூண்டுதல் பெற்ற ஹக் இனத்தார் இன்னும் ஃபிலிப்பைன்ஸில் பயங்கர சத்துருக்களாகவே இருந்தார்கள். இளவேனிற்காலம் முழுதும் ஃபூசோவ் துறைமுகத்திலும், இதர துறைமுகங்களிலும் ஃபார்மோஸாவைத் தாக்குவதற்காக எல்லாவிதமான படகுகளையும் கப்பல்களையும் சைனா திரட்டிக் கொண்டிருந்தது. கம்யூனிஸ்டுகள் கொரியாவை வென்று, தென்கிழக்கு ஆசியாவில் மேற்கு நாட்டாரின் செல்வாக்கை ஒழித்து, சியாங்-கே-ஷேக்கை அழிக்க முடியுமானால், அவர்கள் ஆசிய மக்கள் அனைவரையும் திகிலில் நிறுத்திவைக்க முடியும்.

ஜக்கிய நாடு இவ்விஷயத்தில் தலையிட முயற்சிகூடச் செய்யாது என்று ஸ்டாலின் நம்பினான் போலும். அமெரிக்கக் கண்டம் 7,000 மைல் தூரத்திலிருந்தது. உடனடியாகப் போருக்குச் சில டிவிஷன்களே தயாராக இருந்தன. ஆசியாவில் துருப்புகளை நிறுத்தத் தீர்மானித்தால் மேற்கு ஐரோப்பாவைப் பலஹீனப்படுத்தும் என்பவை அந்த நம்பிக்கையின் காரணங்கள். அமெரிக்காவின் தற்காப்பு எல்லையை வர்ணித்தபோது காரியதரிசி அச்சிஸன் கூடத் தென் கொரியாவைச் சேர்க்கவில்லை; ஆசிய அக்கப்போரில் அமெரிக்கச் சேனையை ஈடுபடுத்த விரும்புபவனின் மூளையை வைத்தியசோதனைக்கு அனுப்பவேண்டும் என்று மாக் ஆர்தரும் கூறியிருந்தார்.

நல்லகாலம், ட்ரூமன், அச்சிஸன், அவர்களுடைய ஆலோசகர்கள் அனைவரும் தாமதமற்ற காரியக் கிரமத்தின் நீதிமார்க்க மதிப்பைச் சரியாய் உணர்ந்தனர். அவர்கள் தாமதித்



திருந்தால், ஐரோப்பாவில் திகில் புயலாகப் பரவியிருக்கும் 1950, ஜூன் 27-ஆம் தேதி, தென் கொரியாவின் உதவிக்கு அமெரிக்க விமானப்படையும் கடல்படையும் அனுப்புவதாகவும், ஃபார்மோஸாவை ஏழாம் கடற்படை ரக்ஷிக்கும் என்றும் ஜனாதிபதி விளம்பரம் செய்தார். அதே நாள் சற்றுக் கழித்து யூ. என். பாதுகாப்புக் குழு கம்யூனிஸ்ட் தாக்குதலை உதறித் தள்ளும்படி அங்க நாடுகளிடம் கூறிற்று. அதன்மேல் ட்ரூமன் போர்முனைக்குச் செல்லும்படி அமெரிக்கத் துருப்புக்களுக்குக் கட்டளையிட்டார்; அவ்விஷயத்தை காங்கிரசின் முன் கொண்டு வர அவகாசமிருக்கவில்லை; அதற்கு அவசியமும் இல்லை. சுதந்திர உலகின்மேல் நடக்கும் தாக்குதலை எதிர்த்தாகவேண்டும், யூ.என்.னின் கட்டளையை மதிப்பது அவசியம் என்று அமெரிக்க மக்கள் கண்டனர்.

வேறு குடியரசு நாடுகளும் வேகமாய்ச் செயலாற்றின. ஜூலை மாத ஆரம்ப நாட்களில் பிரிட்டன், ஆஸ்ட்ரேலியா, நியூஸீலண்ட், நெதர்லண்ட்ஸ் ஆகிய நாடுகள் துருப்புகள் அனுப்ப ஆரம்பித்தன. கானடாவும் சீக்கிரம் அவ்வாறே செய்தது. அதிகத் தாமதமின்றி ஃப்ரான்ஸ், துருக்கி, தாய்லண்ட், ஃபிலிப்பைன்ஸ், ப்ரேஸீல் ஆகிய தேசங்களும் அவ்வாறே செய்தன. ஜூலை 7-ஆம் தேதி பாதுகாப்புக் குழு ஒன்றைத் தலைமைக்கு ஏற்பாடு செய்யும்படி ஐக்கிய நாட்டிடம் சொன்னபோது, வாஷிங்டன் அரசாங்கம் உடனே ஜெனரல் மாக் ஆர்தரை நியமித்தது. அமெரிக்கா சிப்பாய்ப் பதிவு செய்ய ஆரம்பித்தது. போர்-ஆசை பிடித்த முரடனை எதிர்க்க உலகச் சரித்திரத்திலேயே முதல் தடவையாக ஏற்பட்ட பல இனங்கள் கூடிய உலக சேனையின் மேல் சில நாட்களில் யூ. என். கொடி பறந்தது. ஆரம்பத்தில் தென்கொரியர்களின் எண்ணிக்கையே மிக அதிகமாக இருந்தது; எண்ணிக்கையில் அடுத்தபடியான அமெரிக்கர் ஆயுத சாதனங்களிலும் செயலாற்றலிலும் மிகச் சிறந்தவர்; பிரிட்டிஷார், கனடியர், ஆஸ்ட்ரேலியர், மற்றவர் சேர்ந்து சீக்கிரத்தில் ஒரு காமன்வெல்தின் டிவிஷன் அமைந்தது; மற்றத் தேசங்களும் நல்ல உதவிபுரிந்தன. இந்தியாகூட ஒரு சிகிச்சைப் பகுதி அனுப்பிற்று. பாதுகாப்புக் குழுவில் ரஷ்யா இல்லாததால் "வீடோ" வின் பயமில்லாமல் இந்தத் துரிதமான ராணுவக் கட்டளை சாத்தியமாயிற்று. பழைய சர்வதேச சங்கம் ஒருபோதும் பெற்றிராத மகிமை யூ. என்னுக்கு உடனே கிடைத்துவிட்டது.

பின்வாங்குதலும் முன்னேற்றமும்: அநேகமாக ஆறு வாரங்கள் வரை இந்த ஐக்கியப் படை தீபகற்பத்தின் தென்புறமாகத் தொடர்ந்து படிப்படியாகத் தள்ளப்பட்டு வந்ததால் அதன் அணிகள் கூடி வலுவடையுமுன் அது கடலுக்குள் தள்ளப்பட்டு விடுமோ என்று கவனிப்பாளர்கள் பயந்தார்கள். படை

யெடுப்பாளர்கள் ஆவேசம் போன்ற சாகசம் காட்டினார்கள். அவர்களுள் பெரும்பாலோர் இரண்டாம் உலக யுத்தத்தில் சீன, ஜப்பானிய, ரஷ்ய சேனைகளில் கலந்து போரிட்டு முதிர்ந்த அனுபவம் பெற்றவர்கள்; அவர்களிடமிருந்த சோவியத் யுத்த சாதனங்கள், குறிப்பாக டாங்குகள், மிகச் சிறந்தவை; ஜப்பானியரிடமிருந்து அவர்கள் இராத் தாக்குதல் பற்றியும் ஒருவர் இருவராகப் பதுங்கி எதிரிப் பிரதேசத்தில் புகுந்து போர் தொடரும் தந்திரமும் (Infiltration) கற்றிருந்தார்கள்; அதை எதிர்ப்பது கடினமாக இருந்தது. எல்லாவற்றிலும் முக்கியமாக அவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகம். நெருங்கிக் கை கலந்து போர் நடக்கும்போது என்ன செய்வதென்று தெரியாமல் குழப்பமாக இருந்தது. ''யார் யாரைச் சூழ்ந்திருக்கிறார்கள் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்'' என்று ஒரு அமெரிக்க அதிகாரி அருவருப்புடன் கூவினார். ஜப்பானில் போர் அனுபவம் பெற்ற அமெரிக்க வீரர்கள் இருந்ததனாலும், தூரக்கிழக்குக் கடல்களில் பெரிய கடற்படைப் பகுதிகள் கைவசமாக இருந்ததனாலும், உதவிச் சேனையை சீக்கிரம் கொண்டு இறக்குவது சாத்தியமாயிற்று; ஆனால் அது போதவில்லை. 3,000 முதல் 5,000 அடி வரை உயரமுள்ள கரடுமுரடான மலைகளிலும் துர்நாற்றம் வீசும் நஞ்செய் வயல்களிலும் செடிகொடிகள் சடையாய்ப் பின்னிய பள்ளத்தாக்குகளிலும் முக்கியசேனை ஜப்பானுக்கு மிக அண்மையிலுள்ள முனைப்புறமாகப் பின்வாங்கிச்சென்றது.

ஆனால் ஜெனரல் வால்டன் வாக்கரின் தாமதப் போர்த் தந்திரம் பலித்தது. செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் அவருடைய சேனை 100 மைல் நீளம் 60 மைல் அகலமான நீண்ட சதுரம் எனக்கூடிய பிரதேசத்தில் அடைபட்டது; ப்யூஸான் துறைமுகம் மூலம் அங்கு சப்ளைகள் வந்திறங்கின. அதிகத் துருப்புக்களும் கடற்படைப் பகுதிகளும் வந்து சேரும்வரை அவருடைய எட்டாம் சேனைத் திடமாய் நின்றது. அதிக நிச்சயமற்ற கணக்குப்படி காயத்தாலும் மரணத்தாலும் பாதிக்கப்பட்ட அமெரிக்கர் ஏறக்குறைய 7,000 பேர்; வட கொரியர்களின் நஷ்டம் இன்னும் அதிகம். போதுமான ஆள்பலமும் ஆயுதபலமும் வந்து சேர்ந்தபிறகு முக்கியசேனை செப்டெம்பர் 15-ஆம்தேதி திடீரென்று எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பித்தது:

வடக்கே வெகு தூரத்தில், ஸோல் நகருக்கருகே, மேற்குக் கரையில், இன்சான் துறைமுகத்தில் தாக்குதல் நடத்துவதாக மாக் ஆர்தர் திட்டமிட்டிருந்தார். 260 கப்பல்களுக்கும் அதிகமான பெரும்படை ஜப்பானியத் துறைமுகங்களில் சேர்க்கப்பட்டிருந்தது. அமெரிக்க, பிரிட்டிஷ், ஆஸ்ட்

ரேலிய விமானிகள் சத்துருவை அதிக ஆற்றலுள்ள வெடிகுண்டுகளாலும், எரி குண்டுகளாலும், பெட்ரோலியம் ஜெல்லி அடைத்த ''நாபாம்'' (Napalm) சரித்திரங்களாலும் தகர்க்க ஆரம்பித்தனர். அமெரிக்க, பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள் கரையோரங்களில் வெடிகுண்டுகளைக் கொட்டின. முதல் கப்பல் துருப்பு (Marine) டிவிஷன் அதிகாரியில் வோல்மித் தீவை வசப்படுத்திக்கொண்டு, பாழாக்கப்பட்ட இன்சானில் முன்னேறி, ஸோல் நோக்கி வேகமாய்ச் சென்று ஏழாம் தரைப்படை டிவிஷனுடன் கலந்துகொண்டது. அதே சமயம், ப்யூஸான் பிரதேசத்திலிருந்த ஜெனரல் வாக்கரின் படை வடகொரியரை எதிர்த்து முன்னேறிற்று; தென் கொரியப் படைகள் கிழக்குக்கரையில் வந்து சேர்ந்து நாட்டின் உட்புறம் நோக்கி நகர்ந்தன. நார்வோக்கியிலிருந்து 11,000 மைல் தூரம் வந்த மிஸௌரி என்னும் யுத்தக் கப்பல் தன் சக்திவாய்ந்த பீரங்கிகளைப் பிரயோகித்தது. சிறிதுநேரம் தாமதித்தாலும் தம் போக்குவரத்து வசதிகள் முற்றிலும் சிதைந்துபோகும் என்ற பயம் சத்துருக்களுக்குத் தோன்றிற்று. அவர்கள் தலைகால் தெரியாமல் ஓடினார்கள். வட கொரியப் போர்முனைகள் எல்லாம் சிதறி அழிந்ததில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

செப்டெம்பர் 26-ஆம் தேதி பிற்பகல் யியோல் யு. என். னின் வசம் வந்தது; தன் பழைய தலைநகரில் ஜனதிபதி ரீ தம் அரசாங்கத்தை மறுபடி அமைக்க முடிந்தது; தென் கொரியப் படைகளும் யு. என். படைகளும் படையெடுத்த வரை எல்லைக்கப்பால் விரட்டிச் சென்றனர். ஆயுதங்களைக் கீழே போடும்படி சத்துருக்களுக்கு மாக் ஆர்தர் கட்டளையிட்டார். அவர்கள் சட்டை செய்யவில்லை; ஆனால் கம்யூனிஸ்ட் அக்கிரமம் பயனற்றதாக்கப்பட்டது என்பது உலகத்திற்கு மறுபடி தெளிவாயிற்று:

இப்பொழுது ஒரு முக்கியமான கேள்வி கிளம்பிற்று. யு. என். படைகள் 38-வது இணைக்கோட்டில் நின்றுவிட வேண்டுமா, அல்லது வடகொரியா முழுவதையும் வசப்படுத்தி நாட்டை ஒன்றுக்கும்வரை போர் புரிந்து கொண்டே இருக்கவேண்டுமா? மேற்கு நாடுகளுக்கிடையே அபிப்ராயம் பேதப்பட்டது. கொரியாவுக்கு வடக்கே மஞ்சூரிய, ஸைபீரிய எல்லையாகிய யாலு நதிவரை சத்துருவைத் துரத்தாவிட்டால் அவர்கள் மறுபடி மலைகளில் கூடிப் புதுப்படை திரட்டி ரஷ்யரிடமிருந்து அதிக டாங்குகளும் விமானங்களும் பெற்று மறுபடி சண்டை துவக்குவார்கள் என்று மாக் ஆர்தருக்கு நிச்சயமாகத் தோன்றிற்று. இணைக்கோட்டுக் கப்பாலும் போரை நடத்த அயல்நாட்டு இலாக்கா சம்மதித்தது. யு. என். படையினர் வேகமாய் முன்சென்று வடகொரியாத்

தலைநகராகிய பியாங்கியாங்-கைக் கைப்பற்றி அக்டோபர் முடிவதற்குள் வட எல்லைப் பிரதேசத்தை அடைந்தனர். ஓரிடத்தில் அவர்கள் யாலு நதியையும் தொட்டனர். முதல் அமெரிக்கப் படைகள் நகர்ந்த பிறகு ய. என்.-னின் பொது சபை அச்செயலை அங்கீகரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றிற்று; பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி, எர்னெஸ்ட் பெவின், கொரியா முழுதும் சுதந்திர ஆட்சி அளிக்கப்படவேண்டு மென்று கூறினர்.

ஆனல், வேகமாய் முன்னேறுகையில் ட்ரூமன் அர சாங்கமோ இதர ய. என். தேசங்களோ எதிர்பார்த்ததைவிட அதிக தூரம் மாக் ஆர்தர் சென்று விட்டார் என்பது தெளிவு. சீன மானிலத்தின்மேல் படையெடுக்க ஐக்கியநாடு தனக்கு உதவிபுரியுமென்று சியாங்-கே-ஷேக் ஒரு நம்பிக்கையை வளர்த்துக் கொண்டது சிக்கலான ஒரு நிலைமையை உண்டாக்கிவிட்டது. மாக் ஆர்தர் அவனுக்கு அவ்வாறு தைரியமூட்டினரா, சைனுவுடன் அவர் போரை எதிர்பார்த் தாரா, அல்லது விரும்பினரா என்பவை பூராவும் தெளிவு படுத்தப்படவேண்டிய கேள்விகள். அது எப்படி இருந்தாலும் மாக் ஆர்தரின் புது நடவடிக்கைகள் ஆரம்பித்த சிறிது காலத் திலிருந்து சீனக் கம்யூனிஸ்டுகள் போர் மனப்பான்மை கொண் டனர். சீன அயல்நாட்டு மந்திரி சௌ என்-லாய், இந்திய ராஜ் தூதரிடம் தென் கொரியப் படைகள் தவிர வேறு படை கள் பழைய எல்லையைக் கடந்தால் வடகொரியரின் உதவிக் காக சைனு துருப்புகள் அனுப்பும் என்று கூறினன். மாஸ்கோ, ஸ்டாக்ஹோம் ஆகிய இடங்களிலிருந்தும் அதே போன்ற செய்திகள் கிடைத்தன.

ஜனதிபதி ட்ரூமன் மிகக் கவலையடைந்து அக்டோபர் 15-ஆம் தேதி வேக் (Wake) தீவில் தன்னை சந்தித்துப் பேசும்படி மாக் ஆர்தருக்கு உத்தரவிட்டார். இருவரும் ஒரு மணிநேரம் தனிமையில் பேசினர். கொரியாவில் வெற்றி கிடைத்துவிட் டது என்றும், சீன கம்யூனிஸ்டுகள் சண்டை ஆரம்பிக்க மாட்டார்கள் என்றும், அடுத்த ஜனவரியில் ஒரு டிவிஷனைக் கொரியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு அனுப்பமுடியும் என்றும் மாக் ஆர்தர் உறுதி கூறினர். கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன் எட்டாம் சேனையை ஜப்பானுக்கு அழைத்துக்கொண்டு விடலாம் என்றுகூட அவர் எதிர்பார்த்தார். அப்படியாகச் சீனர்கள் தலையிட்டாலும், அவர்கள் 60,000 பேருக்கு அதிக மாகக் கொரியாவில் கொண்டு இறக்கமுடியாது என்றும் விமான பலம் இல்லாத நிலையில் அவர்கள் கொலை செய்யப் படுவார்கள் என்றும் அவர் கூறினர்.

கம்யூனிஸ்ட் சீனத்தாக்குதல்: சீனர்கள் தலையிடத்தான் செய்தார்கள்; அதுவும் பெரிய அளவில். அப்படிப்பட்ட

யுத்தத்தை ஐக்கிய நாடோ ய. என்.-னே விரும்பவில்லை. ஜெனரல் ப்ராட்லி சொன்னதுபோல் அது தவறான இடத்தில், தவறான காலத்தில், தவறான போராகும். ஆனல் அதைத் தவிர்க்க முடியுமா?

அந்த கனத்த சீனப்படைகளை வடகொரியாவின் உதவிக் காகக் கிளம்பிய சில்லறைச் சுயம் சேவகர்கள் என்று சைனு வர்ணித்துதான் போரில் இறங்கவில்லை என்று பொய் விளக்கம் அளித்து—அதே பிரசாரத்தைத் தொடர்ந்து செய்தது. ஐரோப்பிய புனர் நிர்மாணத்திற்கு அமெரிக்க உதவி செல் வதைத் தடைப்படுத்தும் தந்திரம்தான் இந்தச் சீனத் தாக்குதல் என்பது தெளிவு. உலக சமாதானம் என்னும் மண்டபத்திற்கு ஐரோப்பாதான் சாவி என்று ட்ரூமன் கருதி னர்; மேற்கு அரசாங்கத்திலிருந்து அமெரிக்க யத்தனத்தை வேறு பக்கம் திருப்புவதாக அவருக்கு உத்தேசமில்லை. பீபிங் அரசாங்கத்தின் மேல் ஒப்பந்த முறிவு அல்லது ராணுவ அந்தி என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டாமல் ய. என். ஜாக் கிரதையாக நடந்து கொண்டது.

சீன யத்தனத்தின் போர் வலிமை, போர்முனைத் திசை, உத்தேசம் முதலியவைகளை அறியும் ஆவலுடன் மாக் ஆர்தர் நவம்பர் 24-ஆம் தேதி ஒரு பொதுத் தாக்குதல் நடத்தும்படி எட்டாம் சேனைக்குக் கட்டளையிட்டார். பொங்கும் கடல் போல் வந்து மோதும் சீனப்படைகள் அமெரிக்கச் சேனையை இரு பகுதிகளாகப் பிரித்துப் பெரு நஷ்டத்துடன் வெகுதூரம் பின் வாங்கும்படி செய்தன.

1950 முடியும்போது ய. என். படையினர் ஸியோலுக்கும் 38-வது இணைரேகைக்கும் இடையே அதிக திருப்தியளிக்காத வரி சையில் அணிவகுத்திருந்தார்கள். ஒரு பகுதியும் முற்றிலும் அழியவில்லை என்றாலும் பல மிகவும் சிதைந்திருந்தன; சில பாதி நஷ்டப்பட்டிருந்தன. ஜெனரல் வாக்கர் கொல்லப்பட்டு விட்டதால், லெஃப்டினன்ட் ஜெனரல் ரிஜ்வேயை (Lt. Gen. Mathew B. Ridgway) போர்க்கள அதிபதியாக மாக் ஆர்தர் நியமித்திருந்தார்; அவர் கீழ் இருந்த படையினர் மொத்தம் மூன்றரை லக்ஷம். சத்துருப்படைகளின் உத்தேச மொத்தம் சுமார் ஐந்து லக்ஷம்; யாலு நதிக்கு வடக்கே கைவச இருப்பு எவ்வளவோ. ய. என். சேனையின் துப்பாக்கி பீரங்கிகளின் சக்தியும் விமான பலமும் அதிகமாக இருந்ததே ஒரு ஆறுதலாக இருந்தது; ஐக்கிய சேனையில் கொல்லப்படும் ஒரு சிப்பாய்க்கு ஈடாக சத்துருவின் ஐந்து சிப்பாய்கள் வீதம் பழி வாங்க முடிந்தது; சத்துருவின் போக்கு வரத்து வசதிகளை முறிப்பதும் சாத்தியமாயிற்று.

சீனப் பாய்ச்சல் தடுக்கப்பட்டது: 1951-ன் ஆரம்ப மாதங் களில் தொடர்ந்து பல கம்யூனிஸ்ட் எதிர்ப்புகள் நடந்தன;

யு. என். சேனை எதிரிகளின் வேகத்தைக் குறைக்கவும், அவர்களுடைய இரத்தச் சேற்றிலேயே அவர்களை அழுத்தவும், அவர்களுடைய முன்னேற்றத்தை நிச்சயமாக நிறுத்தவும் உக்கிரமாக முயன்று வெற்றியும் பெற்றது. சிறிது காலத்திற்குப் பிறகு ரிஜ்வே எதிர்த் தாக்குதல் ஆரம்பித்து, யு. என். சேனையை மறுபடி ஸியோலுக்கு வடக்கே எடுத்துச் சென்று, நடு ஏப்ரலுக்குள் 38-வது இணை ரேகைக்குப் பத்துப் பன்னிரண்டு மைல் அப்பால் சென்று, ''இரும்பு முக்கோண''த்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்தான்; அவ்விடந்தான் கொரிய கம்யூனிஸ்ட் சக்தியின் மூலஸ்தானம்.

அமெரிக்கச் சரித்திரத்திலேயே மிகக் குரூரமானது அந்தப் பனிக்காலப்போர். கடுமையான குளிர், கண் திறக்கவிடாத புயல்; செங்குத்தான குன்றுகளுடன் கரடு முரடான நிலம், நய வஞ்சகமான சதுப்பு ஸ்தலங்கள், பாலம் போடாத காட்டாறுகள்; சத்துருவின் கோர ஆவேசம், தம் இனத்தாரின் பிணை அம்பாரங்களின் பின் மறைந்து நின்று தொடர்ந்து போரிடுதல்; ரஷ்ய டாங்குகளின் அபார சக்தி, ரஷ்ய ஜெட் விமானங்கள் அமெரிக்க பி-29 வெடி விமானங்களைப் பிரம்மாண்டத் தீப் பந்தங்களாக வீழ்த்துதல்; பிரிட்டிஷ் க்லஸ்டர் பட்டாளத்திற்கு ஏற்பட்டதுபோல் நிர்மூலமாக்கும் மூர்க்கத் தனமான சண்டைகள்; ஜெர்மன், ஜப்பானியக் கைதிகள் ரஷ்யரிடம் அனுபவித்த மனிதத் தன்மையற்ற நடத்தையைக் காட்டிலும் அதிக துன்பங்கள் யு. என். கைதிகளுக்காகக் காத்திருக்கின்றன என்ற நியாயமான பயம்—இவையெல்லாம் சேர்ந்து அப்போரை மிகப் பயங்கரமான சோதனையாக்கின. ஆனால் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களின் கை மேலோங்கியே இருந்தது; சில நாட்களில் ஆயிரம் தடவைகளுக்கும் அதிகமாகப் பறந்து அவை எதிரியை வெடி குண்டாலும், நாபாம் குண்டாலும், யந்திரத் துப்பாக்கித் தோட்டாக்களாலும் கடுமையாகத் தாக்கின.

ஏப்ரல், மே மாதங்களில் இரண்டு கோரமான கம்யூனிஸ்ட் எதிர்த் தாக்குதல்கள் நடந்து இரண்டு லக்ஷ ஆள் நஷ்டத்துடன் புகைந்து போயின. ஜூனில் பலமான யு. என். பதில் தாக்குதல் ஆரம்பித்து, தொடர்ந்து முன்னேறியதில் எட்டாம் சேனை 38-வது இணைரேகையைக் கடந்து ''முக்கோண''த்தின் பெரும் பகுதியை மறுபடி பெற்று, அநேகமாய்த் தாக்க முடியாது என்ற நிலையில் அணி வகுத்தது. அதன் பிறகு போர் அலுத்து நின்றது.

வடகொரியப் பட்டணங்கள் பாழடைந்தும், தொழில்கள் அழிந்தும் இருந்தன. இப்போரைப்பற்றி நம்பக் கூடிய புள்ளி விவரங்கள் கிடைக்க வெகு காலம் பிடிக்கும்; கம்யூனிஸ்ட் தரப்பில் கிடைக்கவே கிடைக்காது எனலாம். இறந்தவர், காயமானவர், காணாமற்போனவர் ஆக மொத்தம் யு. என். சேனையின் ஆள் நஷ்டம் நான்கு லக்ஷம் என்று மதிப்பிடப்பட்டது (தென் கொரியர் 2,60,000; அமெரிக்கர் 1,35,000, இதர நாடுகள் 12,000); செஞ்சேனை நஷ்டம் நான்கு மடங்கு—பட்டது (தென் கொரியர் 2,60,000; அமெரிக்கர் 1,35,000, குறைந்தபக்ஷம் 15,00,000. சுருங்கச் சொன்னால் சரித்திரத்திலேயே மிகவும் ரத்தப் பிரளயமான போர்களில் ஒன்று அது. வியாபக நோய்களும் செஞ்சேனையைப் படாத பாடு படுத்தின. ஐனல் வலுச்சண்டைக் காரர்களிடமிருந்து சிறு நாடுகளைக் காப்பதில் தன் லட்சியத்தையும் திறமையையும் யு. என். தெளிவுபடுத்திவிட்டது என்பது ஒரு திருப்தி.

மாக் ஆர்தரின் பதவியிறக்கம்: தாக்குதல், எதிர்த்தாக்குதல் என்னும் இந்த நாடகம் நடந்துகொண்டிருக்கும் அதே சமயத்தில், ட்ரூமன் மாக் ஆர்தர் இருவர் இடையே அதிர்ச்சியளிக்கும் வாத விவாதம் வளர்ந்து உச்ச நிலையை எட்டிக் கொண்டிருந்தது. விபரீத மனப்போக்குள்ள மாக்லெல்லன் என்பவனுடன் விங்கன் பட்ட தர்ம சங்கடமான துன்பங்களை அது நினைவூட்டிற்று. அரசாங்கத்தின் தலைவனுக்குப் பரவலான பல நிகழ்ச்சிப்போக்குகளை இணைக்கும் பொறுப்பு உண்டு; சேனைத் தலைவனுக்கு உடனடியான ராணுவ நோக்கங்கள் தானுண்டு. நிலைமையை ஒரு எல்லைக்குள் நிறுத்திவைக்க முயலும் தேசத் தலைவனுக்கும், அரசியல் வாதிகளின் மூலம் அரசாங்கத்தின் போக்கைத் தன் பக்கம் திருப்ப முயலும் சேனைத்தலைவனுக்கும் இடையே சச்சரவு விளைவது இயல்பு.

தன் படைகள் தோல்வியடைந்தபோது மாக் ஆர்தரின் மனம் மிகவும் புண்பட்டது. தான் செய்யக்கூடிய மூன்று காரியங்கள்தான் இருப்பதாக அவர் தம் மேல் அதிகாரிக்கு அறிவித்தார்: 1. கொரியாவில் மாத்திரம் சீனர்களைத் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டே இருப்பது; 2. (சீனர்கள் சம்மதித்தால்) 38-வது இணை ரேகையைப் போர் நிறுத்த எல்லையாக ஏற்பது; 3. வசதியான எல்லா இடத்திலும் சீனர்கள் மேல் விறுவிறுப்பாகப் போர் தொடுப்பது. அவர் விரும்பியது மூன்றாவது வழி. சீனத் துறைமுகங்களில் தடைகள் உண்டாக்கி, சைனமேல் வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடத்தி, சியாங்-கே-ஷேக்கின் சேனையைக் கொண்டு தென் சைனமேல் படையெடுப்பு நடத்துதல் அவருக்கு கிஷ்டமான காரியக் கிரமம். ஐக்கிய நாடு அவ்வாறு செய்தால் பெருவாரிப்போர் துவங்கலாம் என்பது தெரிந்ததே. ரஷ்யா சைனவுக்கு உதவுவது உடன்படிக்கைப்படி கடமையாகும். மூன்றாம் உலக யுத்தத்தைத் துவக்கக் கூடிய எந்தக் காரியமும் செய்ய ட்ரூமன் விரும்பவில்லை. 1950 டிசம்பர் 15-ஆம் தேதி அவர் அமெரிக்க மக்களுக்கு அளித்த செய்தியில், ''நம் லட்சியம் யுத்தமல்ல, அமைதி. உலகெங்கும் நம் நாடு சர்வதேச

நியாய பாவத்திற்கும் ஒழுங்கு முறை, நீதி என்னும் கொள்கை களை அடிப்படையாகக் கொண்ட உலகத்திற்கும் பிரதிநிதியாக நிற்கிறது'', என்றார். லரம்பில் அடங்கிய போர், சைனு சம்பந்தப்பட்டவரை பிரகடனமற்ற போர்—என்பது அவ ருடைய சூத்திரம்; ராணுவப் பிரதானிகள் அவ்விலக்கணத்தை முற்றிலும் ஆதரித்தனர்.

ஆனல் மாக் ஆர்தர் அரசாங்கத்தின் கொள்கையை ஏற்க வில்லை. மார்ச்சில் யுத்தத்தின் போக்கு மாறிக்கொண்டிருக் கும்போது ட்ரூமன் ஒரு புது நடவடிக்கைக்குத் தயாரானர்: தென் கொரியாவிலிருந்து படையெடுப்பாளர் பெரும்பாலும் வெளியேற்றப்பட்டு விட்டதால் சண்டையை நிறுத்தி ஒப்பந் தம் பேச இதுவே தருணம் என்று விளம்பரம் செய்ய அவர் தீர்மானித்தார். விளம்பரத்தின் வாசகம் அநேகமாகத் தயாராகிவிட்டது என்று மாக் ஆர்தருக்கு முறைப்படி செய்தி யனுப்பப்பட்டது. அயல் நாட்டு இலாக்கா, பாதுகாப்பு இலாக்கா, ராணுவப் பிரதானிகள் அனைவரும் வாசகத்தை நல்ல முறையில் திருத்தி அமைக்க ட்ரூமனுக்கு சகாயம் புரிந் தனர். ஜனதிபதி அதை வெளியிட இருக்கும் தருணத்தில் அவர் எடுத்த சிரமமெல்லாம் வீணுக்கப்பட்டது: மார்ச் 24-ஆம் தேதி மாக் ஆர்தர் தம் சொந்த விளக்கம் ஒன்று வெளி யிட்டார்; அது ஜனதிபதியின் விளம்பரத்திற்கு மிகவும் முரணுக இருந்ததால இரண்டும் வெளியானல் ஜனங்களுக்கு மிகவும் குழப்பமேற்பட்டிருக்கும். ஜெனரல் அழுத்திக் கூறியதாவது; கம்யூனிஸ்ட் சைனு தோற்கடிக்கப்பட்டுவிட்டது; போரைத் தொடர்ந்து நடத்த அதனிடம் வசதிகள் இல்லை; யு. என். ஒரு புதிய பெரிய முயற்சியில் இறங்கி '' சைனுவின் கரையோரங் களிலும் உள்நாட்டு தளங்களிலும் ராணுவ நடவடிக்கைகள் துவக்கி தாக்குதல் நடத்தினல் அந்நாடு அநேகமாய் உடனே முறிவடையும்.... சுருங்கச்சொல்லின் அவர் பயமும் காட்டிச் சைனுவைப் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு அழைக்கவும் செய்தார்.

சேனுதிபதியை வேலையிலிருந்து நீக்குவது என்று ட்ரூமன் தீர்மானித்திருக்கையில் ஏப்ரல் 5-ஆம் தேதி ஒரு புதுச்சம்பவம் நடந்தது. கம்யூனிஸ்ட் சைனுவை துரிதமாகவும் கண்டிப்பா கவும் தண்டிப்பதன் அவசியத்தைப்பற்றிய தம் கருத்துக்களைக் கொண்டு மாக் ஆர்தர் தம் நண்பர் ஒருவருக்கு எழுதிய ஒரு அந்தரங்கக் கடிதம் வெளியாகி அதைக் காங்கிரசில் ரிபப்லிகன் தலைவரான ஜோசஃப் மார்டின் சபா மண்டபத்தில் வாசித்துக் காட்டிவிட்டார். ஐரோப்பாவின் அதிக முக்கியத் தன்மையைப் பற்றிப் பேசுவது முட்டாள்தனம் என்று அதில் மாக் ஆர்தர் எழுதியிருந்தார். '' இங்கே நாங்கள் ஐரோப்பாவின் சண்டையை கத்தி-துப்பாக்கியால் நடத்துகிறோம், அங்கு ராஜ

தந்திரிகள் வார்த்தைகளால் சண்டைபிடிக்கிறார்கள்; ஆசியா வில் கம்யூனிஸம் ஜயித்து நாம் தோற்றால் ஐரோப்பாவின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது; நாம் ஜயித்தால் ஐரோப்பா அநேகமாக யுத்தத்தை நாடாது; சுதந்திரமும் காப்பாற்றப் படும். ... வெற்றியின் பீடத்தில் வைக்கக்கூடிய வேறு பதில் சாமான் ஒன்றும் கிடையாது என்பதை ஜனங்கள் நினைவில் வைத்துக்கொள்வார்களாக,'' என்று அவர் எழுதியிருந்தார்.

ட்ரூமன் செய்யக்கூடியது ஒரு காரியந்தான்: தன்னுடைய ராணுவ அராணுவ ஆலோசகர்களின் முழுச் சம்மதத்துடன் அவர் 1951 ஏப்ரல் 11-ஆம் தேதிகீழ்ப்படிதலற்ற பிடிவாத மான சேனுதிபதியைப் பதவியிலிருந்து நீக்கியதாக அறிவித் தார். மாக் ஆர்தரின் மகத்தான கீர்த்தி, ட்ரூமனுக்கு விரோதமான ரிபப்லிகன் கோஷ்டிகளுடன் அவருடைய தொடர்பு, அரசியல் உயர்வில் அவருக்கு அபிலாஷை உண்டு என்ற வதந்தி—எல்லாம் சேர்ந்ததில் அந்நிகழ்ச்சிக்கு இரட் டிப்பு முக்கியத்துவம் உண்டாயிற்று. பதினன்கு ஆண்டுகளில் முதன் முறையாகத் தாய்நாடு திரும்பிய அவருக்கு ஸான் ஃப்ரான்ஸிஸ்கோவில் அபார முழக்கதுடன் வரவேற்பு கிடைத் தது. ஏப்ரல் 19-ம் தேதி அவர் காங்கிரசின் கூட்டு சபையில் பேசினர்; நாடு ரேடியோவில் செவிகொடுத்துக் கேட்டது; மறு நாள் அவர் ஒரு முக்கியமான தெருவில் வரும்போது மிகுந்த கணக்கானவர் ஜயகோஷம் எழுப்பினர். சிறிது காலம் அவருடைய அரசியல் நட்சத்திரம் உச்ச நிலைக்கு ஏறிக் கொண்டிருந்தது.

மே மாதத்தில் ஸெனெட் கமிட்டி, சபைக் கமிட்டி இரண்டும் சேர்த்து நடத்தின கூட்டு விசாரணையில் உணர்ச்சி களின் வெப்பம் தணிந்து, கூரிய அறிவின் குளிர்ந்த ஒளி ஜனதிபதியின் முடிவுக்கு ஆதரவளித்தது; காலம் செல்லச் செல்ல, சந்தர்ப்பத்தின் அவசியம், அனுபவ புத்தி, இரண்டை யும் அடிப்படையாகக் கொண்டது அத்தீர்மானம் என்பது மேலும் மேலும் தெளிவாயிற்று.

புதுத் தனிவாழ்வு முறை: மாக் ஆர்தரைப்பற்றிய அசா தாரண வாத்விவாதம் அரசாங்கத்தின் கொள்கையை அசைக்க வில்லை என்பதோடு அதை வலுப்படுத்திற்று என்றும் சொல்ல லாம். அரசாங்கம் விளக்கங்கள் அளிக்கும்போது, ''ஆபத் தான நிலைகளைத் தவிர்க்க முயலுவது ஒரு புறமிருக்க, கம்யூ னிஸ்டுகளின் அக்கிரமங்கள் கட்டாயம் கண்டிக்கப்படும்'' என்பது தெளிவாக்கப்பட்டு வந்தது ஒரு காரணம். அமெ ரிக்கர் பொறுத்துப் பொறுத்துப் பொறுமை யிழக்கும் ஸ்திதியை அடைந்தனர். போர் நீடித்துக் கொண்டே போனல் அரசாங்கம் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு ரஷ்யா வுக்கு இடம் கொடுப்பதைக் காட்டிலும் இன்னெரு உலக

யுத்தத்தை வரவேற்கும். அந்த மனநிலையைப் பொது மக்கள் அங்கீகரித்தனர். ஆனல் காங்கிரஸில் நடந்த விசாரணைக ளின் பயனக ஒரு புது வகையான தனி வாழ்வு முறை வெளியாயிற்று.

"தனக்கு அரசியல் அபிலாஷைகள் ஒன்றும் கிடையாது" என்று ஆட்சேபித்து, மாக் ஆர்தர் தனக்குத் தீவிரமான அரசியல் அபிப்ராயங்கள் உண்டு என்பதை வெளிப்படையாகக் கூறினர். அமெரிக்காவின் நன்மை தீமைகளை மாத்திரம் கணக்கிடும் கொள்கை மாத்திரமே நமக்கு வேண்டியது என்று அவர் விளக்கினர். அவர் அபிப்பிராயப்படி மேற்கே அமெரிக்காவுக்கு நேசதேசங்களின் அவசியம் அதிகமாக இல்லை; அமெரிக்கர் தம் பலத்தையே நம்பித் துணிந்து காரி யங்கள் செய்ய வேண்டும். தேசத்தலைமைக்கு அடுத்த ரீபப்லி கன் அபேட்சகராக ஜெனரல் ஐஸன்ஹோவரைக் காட்டி லும் ஸெனெடர் ராபர்ட் டாஃப்ட் அதிகம் சிறந்தவர் என்பதையும் அவர் தெளிவாக்கினர்; ஏனெனில் பாதிப் பாதித் தனி வாழ்வு முறையைக் கோரும் கோஷ்டியின் தலைவர் டாஃப்ட். ஐஸன்ஹோவரின் பெயர் வரும்போது அவர் ஒவ்வொரு சமயமும் மிகவும் குத்திப்பேசினர்.

ஆனல் தனி வாழ்வு முறை ஆபத்துகரமோ என்னும் காலம் கடந்துவிட்டது. ஐஸன்ஹோவர் காங்கிரஸின் இரு சபைகள் முன்னும் பேசி, "நாடோ"வுக்காகத் தான் செய் திருப்பதை வர்ணித்து வட அட்லாண்டிக் பிரதேசம் அமெ ரிக்காவின் முக்கியப் பொறுப்பு என்று வாதித்தார். மேற்கு ஐரோப்பாவின் பயிற்சிபெற்ற உழைப்பாளிகளின் எண்ணிக்கை உலகத்திலேயே மிக அதிகமானது; அதைக் கலைத்து வீண் உபயோகம் செய்யக்கூடாது. ஐரோப்பிய மனதர்மம் சீராகிக் கொண்டிருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். ஏப்ரல் மாதம் ஸெனெட் வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தை சரித்திரத்தி லேயே ஒரு முக்கிய மார்க்கப் பிரிவு என்று வரவேற்று, மேற் குப் பாதுகாப்புக்காக அமெரிக்கா ஐரோப்பாவில் "தேவையை யும் நியாயத்தையும் மனதில் கொண்டு நம் படைகள் எத்தனை இருக்கவேண்டுமோ அத்தனை'யைக் கொண்டுநிறுத்த வேண்டும் என்று விளம்பரம் செய்தது; 21 பிரதிகூல வோட்டுகளுக்கு எதிராக 69 அனுகூல வோட்டுகள் அளித்தது.

அரசாங்கம் காலதாமதமின்றித் தன் நாட்டுக்காக மறுபடி போர் ஆயுதங்கள் தயாரித்துக்கொள்ளவும் ஐரோப்பாவுக் கும் அம்முயற்சியில் உதவி புரியவும் உற்சாகத்துடன் ஆரம் பித்தது. சந்தேகமின்றி ராணுவத்திற்கு உதவக்கூடிய புதுத் தொழிற்சாலைகள் அமைப்பவருக்கு வரி விலக்களித்து உற் சாகப்படுத்துவதோடு தேவையானல் அரசாங்கக் கடன் கிடைப்பதாகவும் ஏற்பட்டிருந்தது. மக்களின் தினசரி வாழ்

வுக்கு வேண்டிய பொருளுற்பத்தி பங்கப்படக் கூடாது; ஆனல் அதிகப்படியாகத் துப்பாக்கிகள், பீரங்கிகள், விமானங்கள், டாங்குகள் முதலான ஆயுதங்களும் சாதனங்களும் ஏராள மாகத் தயாரிக்கப்படவேண்டும். சீதளப்போர் பல பத்தாண்டு களோ தலைமுறைகளோ நீடித்திருக்கலாம் என்பது தெளிவு. அவசியம் ஏற்பட்டால் ரஷ்யாவைக் காட்டிலும் அமெரிக்கா அதிகத் தயாரிப்புடன் இருக்கும். ஆனல் அந்தச் சுமை இரு வகைகளில் மிகவும் பலமாக அழுத்திற்று. ராணுவ வேலைக்கும் பயிற்சிக்கும் ஒதுக்கப்படும் 35 லக்ஷம் பேர் சிவிலியன் காரியங் களுக்கு உதவமாட்டார்கள்; வருஷா வருஷம் நாற்பது முதல் அறுபது பிலியன் டாலர் வரை ராணுவச் செலவாகும். அதிக செலவு, அதிக வரி என்னும்போது பணப்பெருக்கம் ஏற்பட்டு அமைதியைக் கலைக்கும்.

அப்படியிருந்தும் ராணுவச்செலவு, பணவீக்கம், நிறைவு மூன்றும் இணைந்திருப்பது மாக் ஆர்தரின் புதுத் தனி வாழ்வு முறையின் தோல்விக்குக் காரணமாயிற்று என்பதில் சந்தேக மில்லை; ஹூவர், மத்திய மேற்கு ஸெனெட்டர்கள் சிலர், மேற்கு ஸெனெட்டர்கள் சிலர் ஆகியோரும் அம்முறையை ஆதரிப்பவர்கள். அதைவிட முக்கியமாக, ரூஸ்வெல்ட், ட்ரூ மன், மார்ஷல், ஐஸன்ஹோவர் ஆகியோரின் தலைமையில் கற் பிக்கப்பட்ட கொள்கைகளிலிருந்து இம்மியளவும் விலகக் கூடாது என்று உலக நிலைமை எச்சரிக்கை செய்தது. ஐக்கிய நாட்டுக்கும் இதர "நாடோ" நாடுகளுக்கும் இடையே பிளவு ஏற்பட்டால் அது இரு பகுதிகளுக்கும் பேராபத்தாகும்.

கொரியாப் போர் நிறுத்த ஒப்பந்தம்: 1951 ஜூன் மாதத் திற்குள் கொரியப் போர் அசையா நிலையை எட்டிவிட்டது; ஆகவே ரஷ்யா போர் நிறுத்தத்தைப்பற்றிப் பேசத் தயாரா யிருக்கிறது என்று யு. என்-னின் ஸோவியத் பிரதிநிதி கூறிய போது கொலைக்களங்களுக்குக் காரணமான அப் போரை நிறுத்த வழி உண்டாயிற்று. ஜூலை ஆரம்பத்தில் யு. என்-னின் ராணுவத் தலைவர்களும் கம்யூனிஸ்ட் தலைவர் களும் ஆலோசனைகள் ஆரம்பித்தார்கள்; அந்தப் பேச்சு வீண் கால விரயமாக்கப்பட்டு அலுப்புண்டாக்கிற்று. குறிப்பாக, கைதிகளைப் பற்றிய பிரச்னையில்தான் முடிவைக் காணுதல் இய லாத காரியமாயிற்று. கம்யூனிஸ்டுகளிடம் சிக்கிய யு. என். கைதிகள் பெரும்பாலோர் இறந்துவிட்டனர் அல்லது கொல் லப்பட்டு விட்டனர்; யு. என்-னிடம் சிக்கிய கம்யூனிஸ்ட் கைதிகள் பொதுவாக வட கொரியாவுக்கோ சைனுவுக்கோ திரும்பிச் செல்ல விரும்பவில்லை. பேசிப்பேசி முடிவான அமை தியை ஒத்திப்போடுவது ரஷ்யாவுக்கு சௌகரியமாக இருந்தது. அதுதான் முக்கியமான துன்பம். விட்டு விட்டுப் போர் நடந்து கொண்டே இருந்தால் யு. என். சேனை கொரியாவில் மாட்டிக்

கொண்டிருக்கும்; ''நாடோ''வின் ஐரோப்பியப் புனர் ராணுவ நிர்மாண முயற்சி தாமதப்படும். சைனு ரஷ்யாவை ஆச்ரயித்திருத்தல் அதிகமாகும்; போர்க்களம் சீனத்துருப்புக்களுக்கும் ரஷ்ய விமானிகளுக்கும் பயிற்சிக்களமாக உதவும்.

தூரக் கிழக்கில் அரைகுறைச் சமாதானம் அல்லது போலிச் சமாதானம் செய்து கொள்ளுதல் ஐக்கிய நாட்டுக்கோ யு. என்-னுக்கோ இஷ்டமில்லை. கொரியாவின் விஷயம் தனி, இந்தோ சைனு அல்லது மலாய்சியாவின் விஷயம் தனி என்று நினைப்பதற்கில்லை; பின்சொன்ன நாடுகளில் கம்யூனிஸ்ட் கலகக்காரர்களுக்கு ரஷ்யாவும் சைனுவும் பணமும் பண்டமும் ஆலோசகர்களும் அனுப்பிவந்தன. வட கொரியாவிலிருந்து மாவ் தன் சேனையை நீக்கித் தென் கிழக்கு ஆசியாவில் கொண்டு நிறுத்தினால் சுதந்திர உலகுக்கு லாபம் ஒன்றுமில்லை. மாஸ்கோ ஐரோப்பாவில் சமாதான காலக் கலவரத்தை நடத்திக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் கிழக்கே அதன் கைவச நாடுகள் துன்பப்படுத்தும் சச்சரவுகள் கிளப்பிக்கொண்டே இருக்கட்டும்என்பதே ரஷ்யாவின் நோக்கமாகத் தோன்றிற்று. ''போர்முனை மாறிப் பயனில்லை, மனமாற்றம் தென்படுகிறதா'' என்று யு.என்-னின் உடன்படிக்கைப் பேச்சாளர்கள் தேடிப்பார்த்தார்கள். கொரியப் போர் பெரும்பாலும் பயனற்றிருந்ததால் ஐக்கிய நாட்டிலும் பிரிட்டனிலும் இதர மேற்கு நாடுகளிலும் போர்-அலுப்பு வளர்ந்தது; ஆனால் அதைவிட அதிக அலுப்புச் சைனுவில் இருப்பதாகவும் நினைக்க இடமிருந்தது.

அது வளர்ந்து கொண்டிருக்கும்போதே, ஸ்டாலினின் மரணமும், அதைத் தொடர்ந்து மாலென்கோஃப், பேரியா இருவருக்கிடையே அரசியல் ஆற்றலுக்காகப் போட்டியும் ஒரு புது ஸ்திதியை உண்டாக்கின. 1953-ன் ஆதி வாரங்களில் சைனுவும் லோவியத் யூனியனும் சற்று இளகிய சமரஸ பாவத்தைக் காட்டின. பான்முன்ஜாம் (Panmunjom) என்னுமிடத்தில் ஆரம்பமாகி முறிந்துபோன பேச்சுகள் மறுபடி துவக்கப்பட்டன. பிடிவாதமுள்ள விருத்த தேசாபிமானி. ப்ரெஸிடெண்ட் லிங்க்மன் ரீ, தெற்கே தங்க விரும்பிய 20,000 வட கொரியக் கைதிகளை ''தப்பியோட'' ஏற்பாடு செய்ததாலும், தன் ஆட்சியின்கீழ் கொரியா முழுதும் ஒன்றுக இருக்கவேண்டும் என்று கறாராகக் கூறியதாலும் சிக்கல்கள் ஏற்பட்டன. ஆனால் கடைசியாக, கட்டாயமாக இல்லாமல் சுயேச்சையாக விரும்பும் கைதிகளைத் தம் நாட்டிற்குத் திருப்பியனுப்புதல் என்னும் அளவுக்கு கம்யூனிஸ்டுகள் இணங்கினார்கள். 1953, ஜூன் 27-ஆம் தேதி, சமாதானப் பத்திரம் கையொப்பங்கள் பெற்றது. போர் முடிவடைந்தது.

ஹைட்ரொஜன் வெடிகுண்டு. போரின் கடைசிக் கட்டங்களில் ஐக்கியநாடு அணு வெடிகுண்டுச் சோதனைகளில் முன்னிலும் பெரிய சோதனையை நடத்திற்று என்பது மட்டுமல்ல, 1952 நவம்பர் முதல் தேதி எனிவெடாக் (Eniwetok) பவளத் தீவில் உலக சரித்திரத்தின் முதல் ஹைட்ரொஜன் வெடிகுண்டையும் வெடிக்கச் செய்தது. அவ்வெடியால் உண்டான பிரகாசம் பத்து மடங்கு சூரியப் பிரகாசத்தைக் காட்டிலும் அதிகம்; இரண்டுமைல் நீளமும் 1,000 அடி உயரமும் கொண்ட அந்த ஜ்வாலை வெடிகுண்டுச்சோதனை நடத்திய தீவை இருந்த இடம் தெரியாமல் எரித்து விட்டது. நியூ யார்க் ''டைம்ஸ்'' பத்திரிகையில் லாரென்ஸ் எழுதியதாவது: ''20 மிலியன் டன் 'டி. என். டி.' (TNT) வெடி மருந்தின் சக்திக்குச் சமமான அந்தக் குண்டு வெடிப்பதால், அதிக உஷ்ணப் புயல் வேகத்தால் 300 சதுரமைல் ஸ்தலமும், பரவும் தீயினால் 1,200 சதுரமைல் ஸ்தலமும் முற்றிலும் அழிந்து போகும். அதே குண்டு கோபால்ட் (Cobalt) ஓட்டிற் குள் வைக்கப்பட்டிருந்தால் அது உண்டாக்கக் கூடிய ரேடியோக் கதிர் வீச்சு ஐந்து மிலியன் பவுண்டு ரேடியத்தின் ஆற்றலுக்குச் சமமாக இருந்து, பல ஆயிரச் சதுரமைல் பரப்பில் மரணமும் நாசமும் உண்டாக்கும்.''

சுருக்கமாக, ஒரு ஹைட்ரொஜன் குண்டு லண்டன், மாஸ்கோ அல்லது நியூ யார்கை அநேகமாகப் பாக்கியில்லாமல் துடைத்துப் பொட்டலாக்க முடியும். அந்தப் புது ஆயுதத்தின் சூக்ஷ்மத்தை உலகம் சிறிது சிறிதாகப் புரிந்து கொண்டது. அணு வெடிகுண்டு பயங்கரமான மரணத் தூதனுகை இருந்தாலும் அது போன்ற சஸ்திரங்களைக் கொண்டு இரு புறத்தாரும் சிறிது காலம் போர் நடத்தலாம். ஆனால், கொல்லும் சக்தியுள்ள அணு மேகங்களைக் காற்று இங்குமங்கும் பரப்பிக் கொண்டே இருக்குமாதலால், ஹைட்ரொஜன் குண்டு தாக்கப்படுவோன் தாக்குவோன் இருவருக்கும் அநேக மாய்ச் சம அளவில் ஆபத்தானது; அது உபயோகிக்கப்படும் போர் மனித வர்க்கத்தையே உலகிலிருந்து அழிக்க முடியும். மனிதன் கற்பனைக்கடங்காத நாசம் விளைவிக்கும் ஒரு போர் ஆயுதத்தைக் கண்டுபிடித்தே விட்டான்; பைத்தியம் பிடித்தவர்கள்தான் அதைத் தடை அல்லது கட்டுப்பாடு இல்லாமல் உபயோகிக்க முயலுவார்கள். ஒரு புது யுகம் பிறந்து விட்டது.

ஐஸன்ஹோவர் × ஸ்டீவன்ஸன்: போரையும் பாதுகாப்பையுமே பற்றிப் பேசிக்கொண்டிருந்த மக்களுக்கு 1952-ன் தேர்தல் ஒரு மாறுதலாக இருந்தது. கொள்கைகள், சம்பந்தப்பட்ட மனிதர்கள், இருவகையிலும் அது கவர்ச்சியுள்ளதாகத் தோன்றிற்று. குறை கூறும் ஒரு கோஷ்டி அரசாங்

கத்தின் நிர்வாகத்தரம் குறைந்ததற்கும் லஞ்ச ஊழலுக்கும், உயர்ந்த வரிகளுக்கும் பொறுப்பற்ற செலவுக்கும், பணப் பெருக்கத்திற்கும் அரசாங்க இலாக்காக்கள் வியாபாரத்தில் தலையிடுவதற்கும் சதிகாரர்களை தண்டியாமல் சகித்திருப்ப தற்கும், எல்லாவற்றிற்கும் மேல் தேவைக்கதிகமாகக் கொரியப் போரை வளர்த்ததற்கும் டிமோக்ராடிக் கட்சி மேல் குற்றம் சாட்டிற்று. அதற்கெதிராக இன்னொரு கூட்டம் ரிபப்லிக் கட்சியைத் தாக்கி, பிற்போக்காளர், தனிமையை நாடுபவர் கள், எண்பதாவது காங்கிரசை ஒரு நல்ல காரியமும் செய்ய விடாமல் முட்டுக்கட்டை போட்டவர்கள், 'ஹார்டிங், கூலிட்ஜ், ஹூவர் ஆகியவரின் நிர்வாகத்தின் வண்டவாளம் தெரியாதா' என்று சொல்லிப் பழைய குப்பைகளை யெல்லாம் கிளறிற்று.

இரு கட்சிகளையும் உள் பிரிவுகள் உளைத்தன. ஆகவே மார்ச்சு மாதத்தில் ட்ரூமன் தான் மறுபடி தேர்தலில் நிற்கப்போவதில்லை என்று அறிவித்ததும் அக்கட்சி யினர் சந்தோஷப்பட்டனர். ரிபப்லிகன் கட்சியில் இளம் முற்போக்கு மண்டலி புதுத்திட்டத்தின் முக்கியமான அம்சங்கள் ஏற்கப்படத்தான் வேண்டும் என்றும், யு. என்., ''நாடோ'', அயலாருக்கு உதவி புரியும் திட்டங்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட வரையில் சர்வதேச மனப்பான் மையை ஆதரிக்கத்தான் வேண்டும் என்றும் கருதிற்று; விருத்த மண்டலி அதை எதிர்த்தது. இளம் மண்டலி ஐஸன்ஹோவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது; ட்யூயி போன்ற அரசியல்வாதிகள் அவர் குடைக் கீழ் வந்தனர்.

ஆதியிலிருந்து ஐஸன்ஹோவர் தம் கட்சியில் மிகப் பெரிய சக்தியாக விளங்கினர். மக்கள் விரும்பினால் தான் தேர்தலுக்கு நிற்கத் தயார் என்றும், அரசியல் வாழ்வுக்காக ''நாடோ''ப் பதவியை ராஜிநாமா செய்வதாகவும் அவர் பிப்ரவரியில் கூறியபோது மக்கள் உற்சாகப்பட்டனர். சந் தேகமின்றி அவர் நாட்டில் பொதுஜன ஆதரவு பெற்றவர். அரசியல் துறையில் அவருடைய காரியஸ்தர்கள் அனுபவமும் திறமையும் இல்லாதவர்கள்; சரித்திரமும் அரசு இயலும் அவர் சொற்பமே அறிந்தவர்; அமெரிக்கப் பொருளாதாரம், அரசாங்க முறை, சமுதாயப் பிரச்னைகள் ஆகியவற்றிலும் அவர் அறிவு குறைவே. ஆனால் அவருடைய திறமை, கிரகண சக்தி, மனச்சாட்சிப்படி நடத்தல், அயல் நாட்டு அனுபவம்— முதலியவற்றில் மக்களுக்கு அபார நம்பிக்கை இருந்தது. போட்டிக்கு நிற்க விரும்பிய மற்றவர்களை மக்கள் அதிகம் பொருட்படுத்தவே இல்லை.

ஜூலை ஆரம்பத்தில் சிகாகோவில் ரிபப்லிகன் கூட்டம் கூடியபோது கவர்னர் ட்யூயி ஐஸன்ஹோவரின் கட்சிப்பலத்தை ஒழுங்குபடுத்தினர்; இறுதியில் 'ஐக்' தான் ஜெயிப்பார்

என்ற நம்பிக்கையில் 'சுவர்ப் பூனைகள்' எல்லாம் தீர்மான மாய் அவர் பக்கம் சேர்ந்தன; ஆரவார முழக்கத்துடன் முதல் பால்லட்டில் (ballot) சேஞதிபதியின் பெயர் குறிப்பிடப்பட்டது; ஸெனெடர் நிக்ஸன் (Richard Nixon) உப-ஜனதிபதிப் பதவிக்கு அபேட்சகர் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

டிமோக்ராட்டுகளில் முக்கியமான மனிதர் இல்லினாய் கவர்னர் ஸ்டீவன்ஸன் (Adlai E. Stevenson); ஏற்கெனவே கட்சி யில் ஒரு பிரபலஸ்தர் என்பது அவருக்கு ஒரு சௌகர்யம். மத்திய அரசாங்கத்தில் பல பதவிகள் வகித்தும் யு. என். பிரதிநிதியாகவும் நல்ல அனுபவம் பெற்றவர். இல்லினாய் ஸ்டேட்டில் நன்கு நிர்வாகம் நடத்தி மக்களின் பாராட்டு தலை அவர் பெற்றிருந்தார். நகைச்சுவையுடன் பேசு பவர், பண்புள்ளவர், இனிமையாகப் பழகுபவர், ஆவ லும் ஆற்றலுமுள்ளவர், உத்தமப் புருஷகுணங்கள் படைத் தவர். தேர்தலுக்கு நிற்கும்படி ட்ரூமன் அவரைக் கேட்டுக் கொண்டார்; மூன்றாவது பால்லட்டில் ஹாரிமன் தன் நியூயார்க் பிரதிநிதிகளை அவர் பக்கம் மாற்றியபோது அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்விடத்திற்கு ஸ்டீவன்ஸன் விரைந்து சென்று அங்கீகாரச் சொற்பொழிவாற்றினர்; அது டெலிவிஷன் மூலம் நாடெங்கும் பரவிற்று; அப்பிரசங்கத்தின் கருத்து, சொல்வன்மை, சொல் சக்தி எல்லாம் கேட்டவர் மனதில் ஆழப்பதிந்தன.

அதன்பின் நடந்த பிரசார நடவடிக்கையில் விறுவிறுப்போ விசேஷ அம்சமோ தென்படவில்லை. அபேட்சகர்கள் இருவரும் நீண்ட பிரயாணங்கள் பல நிகழ்த்தி, சொற்பொழிவுகளாற்றி, ஆகஸ்டு, செப்டம்பருக்குள் நன்றாய் அலுத்துப்போனார்கள்.

டெலிவிஷனை அதிகமாக உபயோகித்த முதல் தேர்தல் பிரசாரம் இது. அதேபோல பெருவாரியாக விளம்பரக் கம்பெனிகளும், மக்கள் தொடர்புக் கம்பெனிகளும் வாட கைக்கமர்த்தப்பட்ட முதல்தர தேர்தலும் இதுவே. இவற் றின் பலனுக வோட்டுகள் மடமடவென்று சரிந்தன.— ரிபப்லிகன் கட்சிப் பக்கமல்ல, ஐஸன்ஹோவர் பக்கம், 34 மிலியன் மக்கள் வோட்டுகள், 442 எலெக்டொரெல் வோட்டு கள், 39 ஸ்டேட்டுகளின் ஆதரவு எல்லாம் அவருக்குக் கிடைத் தன. ஸ்டீவன்ஸனுக்குக் கிடைத்த மக்கள் வோட்டுகள் 2,73,00,000, எலெக்டொரல் வோட்டுகள் 89.

புது நிர்வாகம்: புதிய அரசாங்கம் நிதானமாகவும் ஒழுங்கு முறையில் பிரியமுள்ளதாகவும் தீவிர அரசியல் கட்சிவாதம் இல் லாமலும் இருக்குமென்பது தெளிவு. அயல்நாட்டு விஷயங்களில் ட்ரூமன் நிர்வாகத்தைப் போலவே இதுவும் அறிவு ஒளி-கொண் டிருக்கும் என்பதும் தெரிந்ததே. ''பரஸ்பர க்ஷேம நிலை டைரெக்டர்'' (Mutual Security Director) பதவி ஹரால்ட்

ஸ்டாஸ்ஸனுக்குக் கிடைத்தது; மேற்கு நாடுகளுக்கிடையே திடமானநட்பு வளரவேண்டுவதன்முக்கியத்துவத்தைப் பற்றி அவர் ஜஸன்ஹோவரையும் டல்லெஸையும்போலவே அபிப்பிராயம் கொண்டவர். ஜஸன்ஹோவர் பதவியேற்கும்போது நாட்டில் சம்ருத்தியும் தொழில் வளர்ச்சியும் பூர்ணமாக இருந்தன; அவ்வாறு நீடித்திருக்கச் செய்வதே அவர் உத்தேசம். சுதந்திர உலகின் ஸ்திரத்துவம் பெரும்பாலும் ஐக்கிய நாட்டின் பொருளாதார ஸ்திரத்துவத்தை ஒத்திருந்தது.

அத்தியாயம் 25

ஜஸன்ஹோவர் நிர்வாகம்

கொள்கைகளின் தன்மை : இருபது வருஷ காலத்தில் முதன்முறையாக ரிபப்லிகன் கட்சி தலைமைப் பதவியிலிருந்தது. இருள் நிறைந்த உள்ளத்துடன் ஹூவர் வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறியதற்கும் இப்பொதுத் தலைவர் அங்கு பிரவேசிக்கத் தயாராய் நிற்பதற்கும் இடையே உள்நாட்டு விவகாரங்களிலும் உலக விவகாரங்களிலும் ஒரு புரட்சி ஏற்பட்டு விட்டது.

ஜஸன்ஹோவரைப் போல அவ்வளவு அதிகமாக வெளி நாடுகளில் சுற்றி அவற்றின் பரிஸ்திதிகளைப் பார்த்த அமெரிக்கரோ, கம்யூனிஸ்டுத் தாக்குதலுக்கு எதிராகச் சுதந்திர நாடுகளை இணைக்கவேண்டியதன் அவசியத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டவர்களோ சொற்பம். அவருடைய பதவித் துவக்க சொற்பொழிவு—"உலக விவகாரங்களில் தலைமை வகிக்கும் பொறுப்பு" அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றும், அந்நாடு "குழப்பமில்லாமல் நம்பிக்கையோடு" அக்கடமையைச் செலுத்தும் என்றும் அறிவித்தது. நாட்டின் செலவிலோ வரிகளிலோ குறைவு எதிர்பார்க்க வேண்டாம், அதற்கெதிராக இன்னும் அதிகத் தியாகங்களுக்காகத் தயாராய் இருக்கவேண்டும் என்று குடிகளை எச்சரித்து, அவர் மேற்கு ஐரோப்பாவுக்கு சகாயமனுப்புதல் தொடர்ந்து நடக்கும் என்று உறுதி கூறினார்; வியாபார அபிவிருத்தியை உத்தேசித்து இறக்குமதிச் சுங்கங்களைக் குறைக்க ஐக்கிய நாடு தயாராக இருப்பதாகவும் அவர் அறிவித்தார். ஐரோப்பிய தேசங்களை உத்தேசித்துச் செலவுச் சுமையில் தம் பங்கை அவை ஏற்க வேண்டும் என்றும், பொருளுற்பத்தியை வளர்ப்பதிலும் தங்கள் ராணுவ பலத்தை அதிகரித்துக்கொள்ளுவதிலும் அவை சுறுசுறுப்புடன் முன் செல்ல வேண்டுமென்றும் அவர் கூறினார்.

உள்நாட்டு விஷயங்களில் தம் அடிப்படையான கருத்துக்களை அவர் காங்கிரசுக்களித்த தம் முதல் நீண்ட பிரசங்கத்தில் குறிப்பிட்டார். சர்க்கார் அதிகாரிகள் மக்களின் வாழ்க்கையில் அதிகம் தலையிடக்கூடாது என்பது அவருடைய விருப்பம். பேராபத்தான நெருக்கடியில் தவிர அவர் வர்த்தக விஷயங்களில் தலையிடாமல் அவற்றை இயற்கையான பொருளாதார விதிகளின் லீலைக்கே விட்டு விடுவார். "பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்தி தனியத்தனங்களில் மக்களின் மனோதர்மத்திற்கு இடமளித்து ஊக்குவிப்பதே" அரசாங்கம் செய்யக்கூடிய முக்கியமான காரியம். வரியைக் குறைப்பதைக் காட்டிலும் கடனைக் குறைப்பது அதிக முக்கியம். பொதுவாகப் பணப்பெருக்கத்தை கடனுக்கு எல்லையிடுவதன்மூலம் குறைக்கவேண்டுமே தவிர சம்பளவிகிதத்திற்கும் விலைவாசிக்கும் வரம்புகள் அமைத்தல்ல. தொழில் துறையில் நிர்வாகிகளும் யூனியன்களும் பேரம் பேசும்போது அரசாங்கம் அதில் கலந்து கொள்ளாது; உற்பத்தி நிறுத்தத்தால் தேசத்தின் க்ஷேமம் பங்கப்படுவதாக இருந்தால் மாத்திரம் அரசாங்கம்நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதுஅவசியமாகும். விவசாயத்துறையில், விலைகளை ஒரே விதிப்படி உயர்த்தி நிறுத்தும் சட்டம் 1954-ல் காலாவதியானதும் நெளிவு சுளிவுள்ள ஆதரவுகள் தேவைப்படலாம் என்று அவர் கருதினர். சமீபத்தில் இயற்றப்பட்டவருந்தத்தக்க 'மாக்காரன்' சட்டம் திருத்தப்படவேண்டும் என்பதும், சமுதாயக்ஷேமநிலை ஏற்பாடு இன்னும் விஸ்தாரமடைய வேண்டுமென்பதும், அவருடைய அபிப்பிராயங்கள். மனத்தாங்கலுண்டாக்கும் தேச விசுவாசப் பிரச்னை சம்பந்தப்பட்டவரை துரோகிகளுக்கு அரசாங்கத்தில் இடம் கொடாமலிருப்பதும் முக்கியமாக நிர்வாக அதிகாரிகளின் பொறுப்பு; காங்கிரசுடையது அல்ல என்ற கருத்தில் ட்ரூமனைப் பின்பற்றினர்.

மொத்தத்தில், கொள்கைகளில் மிதமான உதாரவாதி, அல்லது அவர் சுருக்கமாகச் சொன்னது போல், நவீன முறையைச் சேர்ந்த "ஆற்றலுள்ள உதாரவாதத்தில்" (Dynamic liberalism) அவருக்கு நம்பிக்கையுண்டு.

83-வது காங்கிரசின் முதல் பிரசங்க காலத்தில் ஜஸன்ஹோவர் கேட்டுக்கொண்ட சில காரியங்கள் நடந்தன; சுகாதாரம், சமுதாயநலம், கல்வி ஆகியவற்றைக் கவனிக்க ஒரு இலாக்கா துவக்கப்பட்டது. "புனரமைப்பு நிதிக் கார்ப்போரேஷனைக்" கலைத்து விட்டு அதற்குப் பதிலாக 1,50,000 டாலருக்குள் அடங்கிய கடன்கள் அளிக்க "சிறு வியாபார நிர்வாகம்" நிறுவப்பட்டது. சுங்கவரி வசூல் முறை சுலப

மாக்கப்பட்டது. விவசாயப்பொருள்களின் விலை நிதானிக்கும் திட்டத்தின் ஆயுள் ஒரு வருஷம் நீட்டப்பட்டது; அதேபோல "பரஸ்பர வியாபார ஒப்பந்தச் சட்டமும்" ஒரு வருஷ ஆயுள் நீட்சி பெற்றது - கார்டெல் ஹல் இயற்றிய அச்சட்டம் தேச அந்நியோந்நிய வியாபாரத்தை ஊக்குவிக்க மிகவும்உதவிற்று. அயல் நாடுகளின் உதவிக்காக நான்கரை பிலியன் டாலருக்கான அனுமதியும் அவர் காங்கிரசிடமிருந்து பெற்றார்; ஆனல் வலுத்த ஆட்சேபங்களுக்கு அவர் சமாதானம் சொல்ல வேண்டியிருந்தது; பழைய அனுமதிகளில் செலவாகாத பாக்கித் தொகைகள் சேர்த்து 6,600 மிலியன் டாலர் அக் கணக்கில் கைவசமிருந்தது.

ஜனதிபதி கோரிய வேறு சில காரியங்கள் நடைபெற வில்லை: உதாரணமாக, ஹவாய் தீவுக் கூட்டத்தை ஒரு ஸ்டேட் ஆக்குதல் [அது இப்பொழுது ஸ்டேட் ஆகிவிட்டது], டாஃப்ட் ஹார்ட்லி சட்டத்தைத் திருத்துதல். ஆனல் நிதான மாகச் செல்ல அவருக்கு ஆட்சேபமில்லை. விவசாயக் கொள்கை போன்ற அதிக வாதவிவாதமும் சூடும் உண்டாக்கும் விஷயங்களில் ஒரு வருஷ ஆராய்ச்சிக்குப் பிறகுதான் இறுதி யோசனைகள் கூறவேண்டும் என்று அவர் நம்பினர். தியோடர் ரூஸ்வெல்டும், வில்ஸனும் செய்தது போல் காங்கிரசை மிகவும் தூர்க் குச்சியால் குத்த அவருக்கு விருப்ப மில்லை. அவர்பால் நாட்டின் நன்மதிப்பும் அன்பும் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கும்போதே, அவருக்குச் சுறுசுறுப்பு போதாது, துணிந்து தலைமை வகிக்க அவர் தயங்குகிறார் என்ற குறைக் கூற்றும் சீக்கிரம் கிளம்பிற்று.

கொரியாப் போரை நிறுத்துதல்: தேர்தல் பிரசார காலத்தில் அவர் கொடுமையான கொரியாப் போரை நிறுத்துவதாக உறுதி கூறினர். ஸ்டாலின் இறந்ததாலும் சைனு சண்டை பிடித்து சனிப்படைந்து விட்டதாலும் அக்காரியம் சுலப மாயிற்று. ஆனல் நிர்வாக முறையில் சில கடூரான நடவடிக்கைகள் நடந்த பிறகுதான் போர் நிறுத்தம் அறிவிக்க முடிந்தது. இந்தியப் பிரதம மந்திரி நேரு மூலம் அமெரிக்க அரசாங்கம் கம்யூனிஸ்டுகளுக்கு சண்டை சீக்கிரம் முடிவடையாவிட்டால் யு.எஸ். படைகள் சீன சப்ளை போக்கு வரத்தை வெடிகுண்டால் பங்கப்படுத்தும் என்று அறிவித்தது. 1953 ஜூலை 27-ஆம் தேதி நடந்த சமாதானம் யுத்தக் கைதிகளைப் பற்றிய யு. என்.னின் முக்கியமான ஷரத்துக்களை ஒப்புக் கொண்டது. உடனே ஒரு அரசியல் மகாநாடு கூடும், ஒப்பந்தம் கையெழுத்திடப்படும், சாசுவதமான அமைதி உண்டாகும் என்ற எண்ணங்கள் கானல் நீராக முடிந்தன, போர் முடிவடைந்தது, ஆனல் ஒப்பந்தம் உருவாகவில்லை. கொரியாவும் ஒற்றுமை பெறவில்லை.

1954-ல் கொரியாவையும், இந்தோ சைனுவையும் பற்றிப் பேச 19 தேசங்களின் மகாநாடு ஜெனிவாவில் கூடியபோது சுதந்திர உலகுக்கு லாபத்தைக் காட்டிலும் நஷ்டந்தான் அதிகம் விளைந்தது. கொரியாப் பிரச்னை பரண்மேல் வைக்கப் பட்டுவிட்டது; ஏனென்றால் சுதந்திரத் தேர்தல் நடைபெற வேண்டுமென்று மேற்கு நாடுகள் கண்டிப்பாகக் கேட்டன. அதுதான் கம்யூனிஸ்டுகளுக்கு மகாபாதகம் போன்றது. அந்நிலையில் ஒரு முடிவும் சாத்தியமில்லை. இந்தோ சைனுவின் கடலோரப் பிரதேசம் (வியட்-நாம்) நடுவே பிரிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கலகக்காரர்களிடம் ஃப்ரெஞ்சுத் துருப்புக்கள் திரும்பத் திரும்பத் தோல்வியடைந்த இடமாகிய வடபகுதி வியட்-மின்னில், அதாவது கம்யூனிஸ்டுகள் கையில், வைக்கப் பட்டது. தென்பகுதி தற்காலிகமாகச் சுதந்திர நாடாக்கப் பட்டது. அந்தப் பிரதேசத்தின் அல்லது தென் கிழக்கு ஆசியாவின் முடிவு என்ன ஆகுமென்று யாருக்கும் தெரியாது; வட வியட்நாமில் இருந்த 12 மிலியன் மக்கள் கம்யூனிஸ்ட் நுகத்தடியின்கீழ் வந்துவிட்டார்கள் என்பது ஒன்றுதான் நிச்சய மாகத் தெரிந்த விஷயம். பல அமெரிக்கர் மிகவும் மனம் கலங்கினர்; காரியதரிசி டல்லெஸ் உடனே அப்பிரதேசத்திலுள்ள சுதந்திர நாட்டாரை மணிலாவில் மகாநாடு கூட்டுவித்தார்; அங்கு தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை ஸ்தாபனம் 'ஸீடோ' (South East Asia Treaty Organization—SEATO) உருவாயிற்று. அது நாடோ போன்ற ஒரு ஸ்தாபனம் என்பது கருத்து; ஆனல் அதற்கேற்ற பலம் அதற்குக் கிடையாது.

புதுத் தலைவர்களின் கீழ் ஸோவியத் யூனியன் உலக அமைதிக்காக ஒரு விறுவிறுப்பான நடவடிக்கை ஆரம்பித்தது. அது மனப்பூர்வமான செயல் இல்லை என்பது தெரிந்தது; ஆனல் எந்தப் பக்கம் சேரலாம் என்று தீர்மானிக்கமுடியாது சில நடுநிலை நாடுகள் அப்பிரசாரத்தால் பிரபாவிக்கப்பட்டன; 1953 ஜூன் 17-ஆம் தேதி கிழக்கு ஜெர்மன் பாட்டாளிகள் கிளப்பிய கலகமும், கம்யூனிஸ்ட் தலைவர்களிடையே ஏற்பட்ட பூசல்களும் அப்புது யோசனைகளுக்குக் காரணங்களாக இருந்திருக்கலாம். மேற்கு நாடுகள் அந்த யோசனையை ஏற்கத் தயாராயின. 1953-ன் பின் மாதங்களில் ஐக்கிய நாடு, பிரிட்டன், ஃப்ரான்ஸ் ஆகிய நாடுகள் ரஷ்யாவிடம் பல நாட்டுத் தலைவர்கள் கூட்டம் சீக்கிரம் நடைபெறலாம் என்றன. ரஷ்யா அவ்வார்த்தையை நிராகரித்ததும், ஐஸன்ஹோவர் எடுத்த முயற்சியை வீணுக்காமல் டிசம்பரில் யு.என்.சபையில் அழுத்தமாகப் பேசி பரூச்சிட்டம் கைவிடப்பட்டபின் முதன் முறையாக அணுச்சக்திப் பிரச்னையைப் பற்றிய முக்கிய யுக்தி ஒன்று கூறினர். சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் எல்லாம் தம் வசமிருக்கும் யுரேனியத்தையும் பிளவுக்குரிய (Fissionable) உலோகம்

எல்லாவற்றையும் ஒன்று திரட்டி யு. என்.-னின் மேல்பார்வையில் விட்டுவைக்கவேண்டும் என்பது அவர் யோசனை. அந்தப் பொருள்கள் மருத்துவம், விவசாயம், நிர்மாண இயல் முதலியன சம்பந்தமான ஆக்க ஆராய்ச்சிகளுக்கும் உலகத்தில் நிலக்கரியோ நீர் சக்தியோ இல்லாத பிரதேசங்களில் ஏராளமான சக்தி உற்பத்தி செய்யவும் உபயோகப்படவேண்டும் என்றார் அவர். ரஷ்யா முதலில் ஆவல் காட்டவில்லை; அதன் பிறகு அந்த யோசனையை ஆராயத் தொடங்கியபோதும் காரிய ரூபமாக எதுவும் செய்ய அது விரும்பவில்லை.

காங்கிரசின் காரியசித்தி : அதிகமாக சிரமப்படாவிட்டாலும் பொறுமையுடன் முயற்சியெடுத்து, ஐஸன்ஹோவர் மிகவும் விரும்பிய காரியங்களில் சிலவற்றை அரசாங்கம் நிதானமாக நிறைவேற்றிற்று; ஆகவே ஆற்றலுள்ள சில காரியக்கிரமங்கள் நாட்டில் துவக்கியதாக அவர் 1954 முடியுமுன் திருப்திகொள்ள முடிந்தது. ஃபெடெரல் வரித்திட்டம் முழுதையும் செம்மைப்படுத்தியது அவ்வருஷத்தின் மிக முக்கிய சாதனை; ஹோயின் காலத்திற்குப் பிறகு அதுவே முதல் வரிச்சட்டச் சீர்திருத்தம். யந்திரங்களின் தேய்மான நஷ்டம் கணிப்பதில் நெளிவும் சலுகைகளும் அதிகமிருந்ததால் வர்த்தக உலகுக்கு அது ஊக்கமளித்தது. தொழிற்சாலைகள் தொழில் சம்பந்த ஆராய்ச்சியில் செலவு செய்வதையும் அது லகுவாக்கிற்று; வேறு பலவிதங்களிலும் அது வரிச்சுமையை நியாயமாக ஏற்கக்கூடிய முறையில் பிரித்தது. அடிப்படை விவசாயப் பொருள்களின் விலை நிர்ணயத்தை நெளிவாக்கிப் பெரிய வியாபகமான வெற்றியடைந்ததாக ஜனாதிபதி சந்தோஷப் பட்டார். பழைய திட்டத்திலிருந்து ஒரு புதுத் திட்டத்திற்கும் படிப்படியாகவும் மிதமாகவும் மாறுதல் என்பதே அரசாங்கத்தின் கொள்கை. அரசாங்கக் கிடங்குகளில் சேமிக்கப்பட்ட அதிகப்படி விளைபொருள்களில் சேதாரம் அதிகமாக இருப்பதால், சேமிப்பின் பரிமாணத்தைக் குறைத்துக்கொள்வதும் ஒரு உத்தேசம். ஆனால் விவசாயிகளின் அதிருப்தி வளர்ந்து கொண்டுதானிருந்தது; அடிப்படையாகப் பார்த்தால் விவசாயப் பிரச்னை தீரவில்லை.

கட்டுப்படுத்தும் செயல்களை மத்திய அரசாங்கம் ஸ்டேட்டுகளுக்கு விட்டுவிட வேண்டும், பொருளாதாரத் துறையில் அரசாங்கத்தின் ஈடுபாட்டைக் காட்டிலும் தனிப்பட்டவரின் ஈடுபாடே சிறந்தது என்பவை ஜனாதிபதியின் நோக்கங்கள். டெக்ஸாஸ், லுஸியானா, கலிஃபோர்னியாக் கடலோரங்களில் சமுத்திர ஏற்றவற்றப் பிரதேசங்களில் எடுக்கப்படும் சுரங்க எண்ணெய் ஃபெடரல் சொத்து என்ற கருத்தை ரத்து செய்து அவர் அவ்வளத்தை அம்முயற்சியில் ஈடுபட்டவருக்கு விட்டுவிட்டார்; அது அவருடைய, மேற்கூறிய, நோக்கத்

திற்கு ஒரு சான்று. அது மட்டுமல்ல, டென்னெஸி பள்ளத்தாக்குத் திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டுவந்த மானியத்தைக் குறைத்தார்; நீர் மின்சக்தி உற்பத்தியையும் விநியோகத்தையும் தனிப்பட்டவருக்கு விட்டார்; பெரும் புல்தரைகளை மறுபடி மக்கள் கையில் விட்டுவிட்டார்; எண்ணெய்ச் சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் இயற்கை எரிவாயுவையும் ஃபெடெரல் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தார். ஸோஷலிஸம் "ஊர்ந்து ஊர்ந்து" முன்னேறி நாட்டைக் கவ்விவிடுமோ என்று அரசாங்கம் சந்தேகப்படுவதும் "தனிப்பட்டவர்களின் முயற்சிகளில்", அதற்கிருந்த ஆர்வமும் இச் செய்கைகளிலிருந்து தெரிகின்றன.

சமுதாய க்ஷேமநிலைச் சட்டங்களை விஸ்தரித்து அதிக நன்மைகள் அளிக்கும்படி செய்யும் காரியக்கிரமத்தில் காங்கிரஸின் இரு கட்சிகளும் ஜனாதிபதியை ஆதரித்தன. ஸந்த் லாரென்ஸ் நதிமூலம் "பெரிய ஏரிகளை"க் கடலுடன் இணைக்கும் வாய்க்கால் வெட்டுவதில் கானடாவுடன் ஒத்துழைப்பதைப் பற்றிய தீர்மானத்தையும் இரண்டு கட்சிகளும் ஏற்றன (1954, மே). அது வெகு நாட்களுக்கு முன்பே நடந்திருக்கவேண்டிய லாபகரமான யத்தனம். பஃபலோ நகரத்தார் போன்ற சிலர் சுயநலத்தால் அதை எதிர்த்தனர்; ஆனால் கடைசி நிமிஷத்தில் அவர்கள் அனுகூலமாயினர். அதுவுந் தவிர, கானடா அக்காரியத்தைத் தனியாகக்கூட முடித்துவிடத் தயாராக இருந்தது; ஆனால் அந்தக் கால்வாய்ப் போக்குவரத்துப் பாதை பலநாடுகளின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் என்று ஐக்கிய நாடு விரும்பிற்று. தேச நிர்மாணச் சட்டத்தின்படி, அயல்நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்ய ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை ஆபத்தான அளவுக்குத் தடைப்படுத்த முயன்ற ஒரு திருத்தம் (Bricker Amendment) வாதிக்கப்பட்டபோது இரு கட்சிகளும் — உண்மையில் டிமோக்ராட் கட்சி அதிக ஊக்கத்துடன் — அதை எதிர்த்து ஜனாதிபதிக்குச் சகாயமாக இருந்தன.

மேலும் இரு கட்சிகளும் தற்காலிகமாக மிக ஆற்றலுடன் ஒரு மனப்பட்டதால்தான் 1954-ல் மக்கார்த்தி முற்றிலும் நசுக்கப்பட்டான். ராஜ விசுவாச ஆராய்ச்சிகளுக்கான ஸெனெட் சப்கமிட்டியின் தலைவனாக இருந்ததால் அவனுடைய செல்வாக்கு மிகவும் வளர்ந்துவிட்டது. மேலும் மேலும் இறுமாப்படைந்து அவன் ஒரு சேனாபதியையும் தேசாபிமானமுள்ள, ஆனால் இங்கிதமறியாத, ராணுவக் காரியதரிசியையும் ஒரு அல்ப விஷயத்தைப்பற்றி — ஒரு பட்டாள பல்வைத்தியனின் ராஜ விசுவாசத்தைப் பற்றி — யோசனையின்றி அவதூறுகப் பேசிவிட்டான். ராணுவ இலாக்காவதிலுக்கு ஒரு குற்றச் சாட்டுப் பட்டியல் தயாரித்துத்

தாக்கியது; அதை விசாரிக்க இன்னொரு ஸெனெட்கமிட்டி நியமிக்கப்பட்டது. நாடு டெலிவிஷன் செட்டுகளில் விசாரணையை ஆவலுடன் கவனித்தது; மக்கார்த்திமேல் அருவருப்பு வளர்ந்தது. அதன் பலனாக இன்னொரு விஷேக் கமிட்டி நியமனம் பெற்று மக்கார்த்தி கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டும் என்று முடிவு கூறிற்று. குழப்பமும் அவமானமும் அடைந்த மக்கார்த்தி பொது வாழ்விலிருந்து அநேகமாக மறைந்து போனான். அவன் செல்வாக்கு அநேகமாக அழிந்தது.

இதரத் துறைகளிலும் பழைய அரசியல் நோயின் வேகம் தணியத் தொடங்கிற்று. முற்போக்குக்குத் தடங்கலான கிளர்ச்சிகளில், பெரும்பாலும், பரம்பரையான சுதந்திரத்திற்கு ஆபத்து பதுங்கியிருப்பதை "அமெரிக்கச் சிவில் சுதந்திர யூனியன்", "ரிபப்லிக்குக்காக நிதி" போன்ற ஸ்தாபனங்கள் மக்கள் சட்டென ஏற்கும் முறையில் பிரசாரப்படுத்தின. ஆற்றலுள்ள பல தீர்மானங்கள் மூலம் உரிமைச் சட்டம் (Bill of Rights) நியாயமானதே என்று சுப்ரீம் கோர்ட்டு மறுபடி அடித்துக் கூறியதோடு, காங்கிரஸ் கமிட்டிகளின் அதிக்கிரமங்களைத் தடுத்தது; பாஸ்போர்ட் பெறுவதில் பிரஜைகளின் உரிமையைத் தெளிவாக்கி ஆதரித்தது; தேசப் பாதுகாப்பு சம்பந்தமான விசாரணைகளிலும் சட்டநியமங்கள் அனுசரிக்கப் படவேண்டும் என்று கூறிற்று. சட்டத்தின் மூலமோ பயமுறுத்தியோ செய்திகளைத் தணிக்கை செய்வதைத் தவறென்றும் கூறிற்று.

ஜெனிவாவில் ஐஸன்ஹோவர்: அவர் நோய் நிலை: கடுமையான உலகப் பிரச்னைகள் தளராது இருந்ததால் ஒவ்வொரு நெருக்கடியையும் ஐக்கிய நாடு தன் சக்திக்குத் தக்கபடி தீர்க்கவேண்டி வந்தது. 1954-ல் பசிஃபிக்சமுத்திரத்தில் இரண்டு ஜலவாயு குண்டுகளை வெற்றிகரமாக வெடிக்கச் செய்ததால் இனி நமக்கு ஆபத்தில்லை என்று நாடு கவலையற்றிருக்க முடியவில்லை; தம்மிடமும் ஜலவாயு குண்டு இருப்பதாக ரஷ்யர்கள் அறிவித்துவிட்டார்கள். மேற்கு ஐரோப்பாவின் தற்காப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்த ஐஸன்ஹோவரின் அரசாங்கம் தன்னாலியன்றதைச் செய்தது. ஃப்ரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, ஹாலந்து, லக்ஸான்பூர், பெல்ஜியம் ஆகிய ஆறு நாடுகளின் ராணுவ பலத்தை ஒரே சேனையாகத் திரட்டி "ஐரோப்பியத் தற்காப்பு இணைப்பு" என்னும் ஒப்பந்தம் நிறுவுவதற்கான யத்தனம் கைகூடும் நிலையிலிருந்தது. 1954-ன் வேனிற்காலத்தில் அது சீக்கிரம் ஏற்கப்படும் என்று காரியதரிசி டல்லெஸ் நம்பியிருந்தார். அப்பொழுது ஃப்ரெஞ்சு ராஜ்ய சபை ஒப்பந்தத்திற்கு ஆட்சேபித்து, ஐஸன்ஹோவர் கூறியது போல், பெரிய நஷ்டத்தை விளைவித்தது. அந்த இணைப்பு

ஏற்படாமல் முறியவேண்டுமென்பதே ஸோவியத் யூனியனின் பேரவா. இப்பொழுது அவர்களுக்குக் கிடைத்த மகிழ்ச்சி அமெரிக்கருக்குக் கசப்பான ஏமாற்றம் உண்டாக்கிற்று. ஆனால் பிரிட்டிஷ் அயல்நாட்டுக் காரியதரிசியான ஆன்டனி ஈடனின் யத்தனத்தால் "ஐரோப்பிய சங்கம்" என்னும் பதில் ஸ்தாபனம் உருவாயிற்று; கடல் கடந்து நெருக்கடியான தேவை ஏற்பட்டால் தவிரக் கணிசமான படைகளை ஐரோப்பாவில் நிறுத்தி வைப்பதாகப் பிரிட்டன் வாக்களித்தது.

அந்தச் சங்கத்தின் மேல் பார்வையில் மேற்கு ஜெர்மனியின் ராணுவ மறு பிறப்பு ஆரம்பமாயிற்று. "நாடோ" பிரதானியின் தலைமையில், அரை மிலியன் வரைத் துருப்புக்களைச் சேர்க்க அந்நாட்டுக்கு அனுமதி கிடைத்தது. அவ்வெண்ணிக்கையில் பாதி இருந்தாலும் ஐரோப்பாவிலிருக்கும் அமெரிக்க, பிரிட்டிஷ் டிவிஷன்களும், இத்தாலிய, ஃப்ரெஞ்சு டெனெலக்ஸ் துருப்புக்களும் சேரும்போது ஒரு பலமான சேனை கிடைக்கும். 1955 ஏப்ரலில் அப்புது ஏற்பாடு பூர்ணமாயிற்று.

அடுத்தாண்டு ஜூலை மாதம் ஜெனிவாவில் முக்கியமான, மேற்குப்புறத் தலைவர்களும், ஸோவியத் தலைவர்களும் கொண்ட அதி விசேஷமான கூட்டம் ஒன்று நடைபெற்றது:—ஐஸன்ஹோவர், பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகிவிட்ட, ஈடன், டல்லெஸ், ஃபாரே, ரஷ்யப் பிரதமர் புல்கனின், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் க்ருஷேவ், பாதுகாப்பு மந்திரி ஜ்யார்ஜி ஷூகோவ் (Zhukov). ஒற்றுமை ஏற்படக்கூடிய கருத்துக்களை—அனைவரும் கூடினர். மேல் கட்டடம் கட்டக்கூடிய ஆதாரங்களை தேடிப்பிடிப்பதே அவர்களுடைய உத்தேசம். ராணுவச் சக்திகளைக் குறைத்தல், ஜெர்மனியை ஒன்றுக்குதல், இவ்விரண்டும் முக்கியப் பிரச்னைகள். ஐஸன்ஹோவர், "அமெரிக்கா தன் வாழ்க்கை வழியைப் பிறர் மேல் சுமத்த விரும்பவில்லை; ஆகையால் நாம் பொறுமையுடன் கவனிப்போம்," என்று கூறினர். சிக்கிரத்தில் அவரே அக்கூட்டத்தின் முக்கிய மனிதர் ஆகிவிட்டார். அவர் பெரிய மனிதர்; இருந்தாலும் அச்சமயம் இருந்த அளவு தகுதியும் ஆற்றலும் பெருந்தன்மையுமுள்ளவராக அவர் அதன் முன் காட்சியளித்ததில்லை. அவருடைய மனப்பூர்வமான சமாதானக் கொள்கை ரஷ்யத் தலைவர்களையும் பிரபாவித்தது. அதிர்ச்சியளிக்கும் ஒரு யோசனையை அவர் கூறினர்: அணுச்சக்தி, கருச்சக்தி ஆயுதங்களைக் கைவிடஒப்புக்கொள்ளும் வல்லரசுகள் தரையிலிருந்தும் வானத்திலிருந்தும் அணு ஆராய்ச்சி நிலையங்களின் சோதனைக்குச் சம்மதிக்கவேண்டும் என்பதே அவர் அளித்த யுக்தி. அந்தக் கூட்டம் பொது விஷயங்களைப் பற்றித்தான் பேசிற்று, குறிப்பாக, ஒரு பிரச்னையிலும் ஆழச்செல்லவில்லை; ஆனால் சிறிது காலத்திற்கு உலகத்தின் அரசியல் சூழ்நிலை சீரடைந்த

V73
N60

தாகத் தோன்றிற்று. கிழக்கு உலகிலும் மேற்கு உலகிலும் மனிதர்கள் ''ஜெனிவா மனப்பான்மையை''ப் பாராட்டினர்; ஆனல் அந்தாண்டின் இலேயுதிர் காலத்தில் கூடிய 'பெரிய நான்கு' அயல் நாட்டு மந்திரிகளின் அனுபவத்திலிருந்து கூட்டத்தால் விசேஷமாக ஒன்றும் சாதிக்க முடியவில்லே என்பது தெரிந்தது. ஜெர்மன் பிரச்னே, ராணுவபலத்தைக் குறைத்துக் கொள்ளுதல், கிழக்கு மேற்குத் தொடர்பு போன்ற விஷயங்களில் ஸோவியத் நாயகர்கள் முன்போலவே கிணற்றில் போட்ட கல்லாக இருந்தார்கள்.

இதற்கிடையே ஜனதிபதிக்குத் திடீரென்று வந்த நோய் ஐக்கிய நாட்டில் பெருங்கவலே யுண்டாக்கிற்று. ஓய்வுடன் வேலே செய்ய அவர் டென்வர் சென்றிருந்தார். செப்டெம்பர் மாதப் பிற்பகுதியில் இரத்த ஓட்டத் தடையால் மார் படைப்பு உண்டாயிற்று. உடனே சிறந்த சிகிச்சை நடந்து, அவர் சிறுகச் சிறுகச் சொஸ்தமடைந்தார்; இரண்டு மாதங்கள் கழித்து அவர் பெரும்பாலும் முன்போலவே காரியங்களில் ஈடுபட்டார்.

சமுதாய அபிவிருத்தி : நாட்டின் செல்வமும் ஜனத்தொகையும் அதிகரிப்பதோடு சமுதாய பலமும் கலாசார ஆற்றலும் வளர்ந்தன. 1956வரை கல்லூரிகளிலும் சர்வகலாசாலேகளிலும் பதிவானவரின் எண்ணிக்கை மூன்று மிலியனுக்கும் அதிகமாயிற்று; அது வேகமாக அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது ... டெலிவிஷன் மக்கள் உள்ளத்தை அநேகமாய்க் கொள்ளேகொண்டு விட்டது—ரேடியோ பின் இடம் பெற்றது; சினிமாவின் மோகமும் சிதைவுண்டது... தொழிலாளர் சங்கங்களின் சக்தியும் வளமும் பெருகின; அவற்றின் கூேம நிதி பெருங்குவியலாகக் குவிந்துவிட்டது. 1952-ல் ஜ்யார்ஜ் மீனி என்னும் முன்னுள் ஈயத் தொழில்காரன் A. F. of L. என்னும் தொழிலாளர் சங்கத்தின் தலேவராக வில்லியம் க்ரீனின் ஆசனத்தில் அமர்ந்தான்; C. I. O. சங்கத்தில் மர்ரேயின் இடத்தில் வால்டர் ரூதர் வந்து சேர்ந்தான். ஃபிலிப் A.F. of L., C.I.O என்னும் இரு தொழிலாளர் சங்கங்களும் 1955-ல் சுமார் 15 மிலியன் அங்கத்தினர்களுடன் ஒன்ருக இணேந்தன. அவ்வாண்டு ஜூன் மாதத்தில் ஐக்கிய மோட்டார்த் தொழிலாளிகள் ஃபோர்ட் மோட்டார் கம்பெனியிலும் ஜெனரல் மோட்டார்ஸிலும் இருந்து நிலேயான வருஷ ஆதாயம் எனப்பட்ட சலுகை பெற்ருர்கள்; அவ்வர்ணேயில் பிசகிருந்தாலும், தொழிலாளர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைப்பதற்கான மார்க்கத்தில் அவர்கள் நெடுந்தூரம் முன்னேறினர்கள்.

புதிய சமுதாய அபிவிருத்திகளில் மிக முக்கியமானது நீக்ரோக்களேப்பற்றியது—அவர்கள் அதை விடுதலேப் பிரகடனத்திற்குப்பின் வந்த மிகப்பெரிய முன்னேற்றமாகப்பாராட்டினர்கள். 1954 மே 17-ஆம் தேதி, சுப்ரீம் கோர்ட்டில், பிரதம நீதிபதி எர்ல் வாரனும் அவருடைய சக-நீதிபதிகளும் ஏகமனதாகத் தீர்ப்பாக பொதுப் பள்ளிக்கூடங்களில் ஜாதிப்பிரிவினே நின்று போகவேண்டும் என்று கூறினர். அதாவது. ''பதினன்காவது திருத்தத்''தைத் திருப்தி செய்வதற்காக இருந்த ''தனியான ஆனல் சமானமான'' பள்ளிக்கூட வசதிகள் நீக்ரோக்களுக்கு அளித்தல் என்ற விதி இனிச் செல்லாது. இந்தத் தீர்ப்பின் பலன் பள்ளிக்கூடங்களோடு நில்லாமல் அமெரிக்க வாழ்க்கையின் பல துறைகளுக்கும் பரவும் என்பது தெரிந்த விஷயமே. எல்லேயோரமெல்லாம், பால்டிமோரிலிருந்து கான்ஸாஸ் நகர் வரை, அதிகாரிகள் அத்தீர்ப்புப்படி நடக்க விரைந்தனர். தெற்கே, தொலேவில் அத்தீர்ப்புக்குச் செயல் உருவம் அளித்தல் அவ்வளவு சுலபமாகவோ சீக்கிரமாகவோ நடைபெறுது; அது பல இடங்களில் நிதானமாவே இருக்கும்; அவ்வேலேயின் மேற்பார்வையைக் கோர்ட்டு ஆழ்ந்த யோசனேயுடன் கீழ் அதிகாரஸ்தாபனங்களின் கையில் விட்டுவிட்டது. சுதந்திரத்திற்கும் நியாய பாவத்திற்கும் தன்னேத் திரும்பத் திரும்பப் பலமுறை அர்ப்பணம் செய்துகொள்ளும் அமெரிக்க நாட்டில் நீக்ரோக்களும் வெள்ளேயர்களும் சரிநிகர் சமானமாக நிற்கும் காலம் நெருங்குகிறது.



முத்துப் பதிப்பகத்தின் முத்தன்ன நூற்கள்

புத்தம் புதிய கலைகள்—பஞ்சப்
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.
சொல்லவும் கூடுவதில்லை—அதைச்
சொல்லும் நிறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான்—ஹா !
இந்த வசையெனக் கெய்திட லாமோ
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.

என்று மகா கவி பாரதியார் மூலம் தமிழன்னை நம்மைக் கேட்கிறாள். இத் தமிழன்னையின் வேண்டுகோளுக்கிணங்கத் தமிழ் வளர்ந்து வளம்பெறப் பாரதியாரும்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியில் பெயர்த்தல் வேண்டும்

என உத்தரவிட்டுள்ளார். இவ்வுத்தரவைத் தலைமேற் கொண்டு முத்துப் பதிப்பகத்தார் (Pearl Publications) உலக நூல்களைத் தமிழாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தமிழர்கள் யாவரும் இம்முயற்சியை வரவேற்பார்களென்பதில் சந்தேகமில்லை.

அடுத்தபடி பாரதியாரே,

இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்

என்று கூறுகிறார். இவ்வாறான புது நூல்களை வெளியிடுவதற்கு முன்னணியாக இப்பதிப்பகத்தார் இப்போது மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டு வருகின்றனர். இவைகளிலிருந்து உலக மேதைகளின் உயர்ந்த கருத்துக்களை யெல்லாம் தமிழ் மொழியில் ஒருங்கே காணலாம்.

முத்து முத்தான கருத்துக்கள்,
முத்து முத்தான கற்பனைகள்,
முத்து முத்தான வார்த்தைகள்,
முத்து முத்தான வளமைகள்.

எமது நூல்கள்

P. T. 26 குழந்தை வளர்ப்பு—டாக்டர் பெஞ்சமின் ஸ்போக்—மொழிபெயர்ப்பு: டாக்டர் ஆர். விசாலாக்ஷி நெடுஞ்செழியன், எம். பி. பி. எஸ்., டி. எம். எச். எச்., எம். பி. எச். (ஜான் ஹாப்கின்ஸ்) குழந்தைப் பராமரிப்பைப் பற்றிய எல்லா விஷயங்களும் அடங்கிய உலகத்திலேயே மிக உயர்ந்ததான ஒரு நூல் 624 பக்கங்கள்—விலை ஒரு ரூபாய்.

P. T. 27 ஐந்தும் மூன்றும் அல்ல—ஹெலன் மாக் இன்னிஸ்—மொழிபெயர்ப்பு—மாயாவி—அதி ருசிகரமான திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த நவீனம்.
400 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P. T. 28 மாடிப்படி மர்மம்—மேரி ராபர்ட்ஸ் ரைன்ஹார்ட்—மொழிபெயர்ப்பு: "இளங்கோவன்"—கையிலெடுத்தால் படித்து முடிக்கும்வரை மனத்தை வசீகரிக்கும், மயிர்க் கூச்செறியும் மர்மங்கள் நிறைந்த துப்பறியும் ஒரு நவீனம்.
212 பக்கங்கள்—விலை 50 நயே பைசே.

P. T. 30. புகழ் பெற்ற ஏழைகள்-சாரா. கே. போல்டன்-மொழி பெயர்ப்பு—குண்டூசி கோபால்—ஏழைகளாயிருந்து புகழ் பெற்ற மேதைகளின் வாழ்க்கைச் சரித்திரங்கள்—திலகர், ஆஸாத், பட்டேல் முதலியோரின் வரலாறுகளுடன் கூடியது.
240 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

முன்பே வெளிவந்துள்ள நூல்கள்

P. T. 1. சங்கியாலியும் சர்வாதிகாரியும்—ஆர்தர் கோய்ஸ்லர்—மொழி பெயர்ப்பு: எஸ். டி. எஸ். யோகி. கம்யூனிஸ்ட் தத்துவங்களை அலசி ஆராய்ந்த சிந்தனைக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். 251 பக்கங்கள்—விலை 50 நயே பைசே.

P. T. 2. அரசியல் கட்டுரைகள்—தாமஸ் பெய்ன்—மொழி பெயர்ப்பு: ரா. நாராயணன், பி. ஏ., பி. எல். உலக அரசியல் மேதைகளில் ஒருவரான தாமஸ் பெய்ன் அவர்களது அருமையான அறிவுரைகள். 272 பக்கங்கள்—விலை 50 நயே பைசே.

P. T. 3. மகத்தான மாறுதல்—ஃபிரெடெரிக் லீவிஸ் ஆலன்—மொழிபெயர்ப்பு: வி. பாலசுப்ரமண்யம், பி. ஏ., பி. எல். 1900 முதல் 1950 வரையிலான அமெரிக்கப் பொருளாதார, சமூக வாழ்க்கை வளங்களை நன்கு சித்தரிக்கும் ஒரு நூல்.
360 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P. T. 4. இந்தியா என் வீடே—இந்தியா பௌல்ஸ்—மொழிபெயர்ப்பு: எம். எஸ். சிவஸ்வாமி. இந்தியாவைச் சொந்த வீடாக நேசித்த அமெரிக்க ஸ்தானிகராய் இந்தியாவிலிருந்த செஸ்டர் பௌல்ஸின் மகளது அன்புமயமான பாராட்டு நூல். 280 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P. T. 5. **போரே நீ போ**—எர்னெஸ்ட் ஹெமிங்வே—மொழிபெயர்ப்பு: எம். எஸ். சிவஸ்வாமி. பிரசித்தி பெற்ற அமெரிக்க எழுத்தாளர் எர்னெஸ்ட் ஹெமிங்வே, முதல் யுத்த அரங்கத்தையே பின்னணியாகக் கொண்டு எழுதிய ருசிகரமான நாவல். 336 பக்கங்கள்—விலை ஒரு ரூபாய்.

P. T. 6. **சுதந்திரப் பாலம்**—ஜேம்ஸ் ஏ. மிச்சினர்—மொழிபெயர்ப்பு: ரா. நாராயணன், பி. ஏ., பி. எல். ரஷ்யக் கம்யூனிஸ்டுகளால் ஹங்கேரிக் கம்யூனிஸ்டுகள் பட்டபாடுகளை இந்நூல் ஆதாரபூர்வமாக விளக்குகிறது.
302 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P. T. 7. **பிலிப்பைன்ஸ் தேசத்து நிலச் சீர்திருத்தங்கள்**—ஆல்வின் எச். ஸ்காப்—மொழிபெயர்ப்பு: "தாரகன்." 1946-ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் கம்யூனிஸ்டு பயங்கரத்தை ஜனநாயக முறையில் அரசாங்கம் சமாளித்த உண்மை வரலாறுகளை விவரிக்கிறது இந்நூல்.
192 பக்கங்கள்—விலை 50 நயே பைசே.

P. T. 8. **மணமகள் வருகிறாள்**—ஸ்டீபன் கிரேன்—அமெரிக்க சிறந்த சிறு கதை எழுத்தாளர் ஸ்டீபன் கிரேன் எழுதிய ஒன்பது சிறு கதைகள்.
272 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P. T. 9. **வீதியில் ஒரு விடுதி**—காட்ப்ரே ப்ளண்டன்—மொழிபெயர்ப்பு: "மாயாவி". 1942-43 ஆண்டுகளின் மாஸ்கோ வாழ்க்கையைப் பற்றிய மகத்தான கற்பனைச் சித்திரம்.
472 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P. T. 10. **பிரபஞ்சமும் டாக்டர் ஐன்ஸ்டினும்**—லிங்கன் பார்னெட்—மொழிபெயர்ப்பு: என். சுப்ரமணியம், எம். ஏ., பி. டி. டாக்டர் ஐன்ஸ்டினுடைய ஒப்புமை விஞ்ஞானத்தைப் பண்டிதர்கள் மட்டுமின்றிப் பாமரர்களும் படித்துணரத் தக்க எளிய வகையில் தெளிவாக்கும் ஒரு அவசியமான நூல்.
160 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P. T. 11. **இரும்புப் பெட்டி**—ஹோவர்ட் ஸ்விக்கெட்—மொழி பெயர்ப்பு: வி. ஸ்ரீநிவாஸன். இது ஒரு மர்மப் பெட்டியைப் பற்றிய ஒரு மர்ம நவீனம்.
368 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P. T. 12. **சமாதானத்தின் புதிய பரிமாணங்கள்**—மொழி பெயர்ப்பு: ரா. நாராயணன். முன்னாள் அமெரிக்க ஸ்தானிகராக இந்தியாவில் பணியாற்றிய செஸ்டர் பௌல்ஸ் எழுதியுள்ள மகத்தான புத்தகம். 480 பக்கங்கள்—விலை ஒரு ரூபாய்.

P. T. 13. **என் கதை**—ஹெலன் கெல்லர்—மொழி பெயர்ப்பு: க. நா. சுப்ரமண்யம். கண்ணும் காதுமற்றும் விடா முயற்சியால் பெருமைபெற்ற ஒரு மாதரசியின் சுயசரிதை.
150 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.